ஆத்ம சோதனை

கவியோகி

சுத்தானந்த பாரதியார்

சுத்த நிலையம்

சென்னை.

ATMA SODANAI

[SELF—EXPERIMENTS]

OF

Kavi Yogi Shuddhananda Bharati

Rs. SIX 6.00

The book can be had from
The SHUDDHA NILAYAM
11/12, 2nd Line Beach, MADRAS.

PUDUYUGA NILAYAM
PONDICHERRY.

Senguntha Mithran Press, 33, Armenian Street, Madras-1.

6-1

முகவுரை

தேவஜீவன சங்க குருதேவர் சுவாமி சிவானந்த ஸரஸ்வதியார் திருவாக்கு

சுத்தானந்த ஜோதி வாழ்க! யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் ஆத்ம சோதனையைப் பெருமகிழ்ச்சியுடன் ஆவலாக வரவேற்கிறேன். குழந்தையுள்ளம் படைத்த இந்த ஆனந்தத் தவமுனிவரின் இந்த அன்புப் பணி வாழ்க! ஒரு யோகியின் வாழ்க்கை வரலாறு தெய்வத் தன்மையை நோக்கி மேலோங்கும் ஆத்மாவின் வரலாருகும் அது உட்போரை எதிர்த்து வென்று சித்திபெற்ற ஜீவனின் சரிதையாகும். இதில் எத்தனையோ ஆத்மிக ரகசியங்களும் சாதன மார்க்கங்களும் தெளிவாக விளங்கும். துன்புறும் மனித சமுதாயத்திற்கு இந்த நூல் சமய சஞ்சிவியாகும். இது சிறந்த உலக சேவையும் ஜீவ கைங்கரியமும் ஆகும். தெய்வ ஒளி கண்ட ஆசிரியரின் உணர்ச்சிப் படலங்களும், ஆவேச வாக்குகளும், வீறுபெற்ற ஆத்ம சக்தியும் விளக்கமாகும் இந்த மாபெரு நூல் அரிய யோக சாசனமாகும். மனித சமுதாயத்திடமிருக்கும் பரம கருணையால் இந்த யோகி வெளியிட்ட ஆத்ம ரகசியங்கள் கணக்கற்ற ஆத்மாக்கள் ஈடேற வழிகாட்டியாகும். இந்த வழியில் சுத்தானந்தர் தயானந்தராகவும் விளங்குகிருர்.

யோகி சுத்தானந்தஜீ பாரத மாதாவின் அரிய மணிப் புதல்வர், அருட்பெரியார், புனித முனிவர், ஏல்லா யோக மார்க்கங்களையும் சாதனம் செய்து ஒருமை கண்ட புலவர், பூரணர். அவர் பிறவி ஞானி, ஆன்மயோகி. பூர்வ ஜன்மத்தில் விட்டகுறையால் தொட்டுக் கொண்டு பிள்ளைப் பருவத்திலேயே ஆத்ம சாதனம் செய்தார். தியானமும் பக்தியும் தெய்வாராதனமும் இளம் சுத்தானந்தரின் இயல்பான வேலை. அவர் ஹடராஜயோக சாதனங்களால் ஒள்ளிய உடல்நலம் பெற்ருர். மனேலயமடைந்தார். ஆத்மானுபவங்களை எளிதாக அடைந்தார். இந்த யோகதீரர் உள்ளமெல்லாம் தெய்வ பக்திப் பெருக்கமே. உணர்வெல்லாம் பரமாத்ம பாவனையே. அத்துடன் அவர் வரம்பெற்ற அறிஞர், பழைய மகான்களைப்போல் அவருள்ளிருந்து அருளாவேசக் கவிகள் பொங்கிப் பெருகி வந்தன. அவர் பாரதமாதாவின் பரம பக்தர். பாரதசக்தி உபாசனையாலே அவர் அகிலாண்டேச்வரி பராசக்தியின் அருளைப் பெற்ருர். பாரத சக்தி மயமாகி, அதனுல் எழுச்சி கொண்டு, பல சாதனங்களைச் செய்து, அதன் திருவருளால் இப்போது அவர் அனுபவிக்கும் தூய பேரின்ப

நிலையைப் பெற்ருர். இந்த உண்மை யோகி தாம் பெற்ற இன்பத்தைத் தமக்கே பதுக்கி வைத்துக்கொள்ளவில்லை. அதை எல்லாருடனும் அனுபவிக்கிருர். அனைவருமே பொய்மையினின்று மெய்ம்மைக்கும், இருளினின்று ஒளிக்கும், துன்பச் சாவினின்றி இன்பமான அமரத் தன்மைக்கும் உயரவேண்டுமென்று விரும்புகிருர். அந்த விருப்பமே பூரணனந்த சுத்த சித்திக்கு ஒளியும் வழியும் காட்டும் இந்த ஆத்மசோதனையாக மலர்ந்தது.

ஜீவக்கடல் குண தொந்தப் புயல்களால் இருண்டு கொந்தளிக்கும் இந்தக்காலத்தில், ஆத்மசோதனை சமயோபகாரமான கலங்கரை விளக்குப்போல் கதிர் வீசுகிறது. நல்ல சமயத்திற் கிடைத்த இந்த அருள் விளக்கால் ஆர்வங்கொண்ட அன்பர் நல்வழியறிந்து தெய்வத்துறை சேர்வார்களாக! இந்த ஆத்ம ப்ரகாசம், தடுமாறும் ஆத்மாக்களை அமைதியின்பக்கரை சேர்க்குமாக! இந்த மஹா க்ரந்தத்தை அன்பும் நன்றியும் கொண்டு மனிதசமுதாயம் மகிழ்ந்து ஏற்கவேண்டும். இதில் விளக்கமான சுத்தானந்த ஜோதி வாழ்க! எல்லாரும் இன்புறுக! அமைதி பெறுக, அமரத்தன்மை பொலிக.

சிவானந்த ஆசிரமம்
ரிஷிகேசம்
11—5—50

சுவாமி சிவானந்தர்.

PREFACE

BY

(SWAMI SIVANANDA SARASWATIJI

(President Divine Life Society)

Hail Pure Bliss-Light! It is with immense joy that I welcome eagerly this self-revelatory autobiographical work which enshrines the pure labour of Love of this child of pure Bliss-the saintly Yogi Sri ShuddhanandaJi Bharatiar. A record of a saint's life is verily the record of man's ascent to Divinity. To reveal the inner process of this ascent is to put into the hands of suffering Mankind, the most precious life-giving secrets of successful inner struggle and blissful Attainment. This is the greates Vishwa-Seva. Such a unique work forms a peerless documen throbbing with life-transforming impulses, fully alive with inspiration and vital with the vibrant spirituality of the Englightened author's shining personality. His Love and Compassion it is that has made him offer up his entire experiences to the light of day so that countless seekers may benefit out of them. There by he reveals himself as being Dayananda besides being the embodiment of Purity-Bliss (Shuddhananda) that he is.

Yogi Sri Suddhanandaji is a rare gem amongst the sons of Bharatha Matha as he is in every way an inspired saint and ideal example of versatile personality perfecting itself through a beautiful synthesis of Yoga Saddhanas. Pure P oorva-Samskaras asserted themselves in the form of precocious spirituality right from his childhood and marked him out as a saint-in-the-making. Worship and meditation were inborn traits in the boy-Yogi Suddhananda. The practice of Hatha Yoga and Raja Yoga exercises. kept his precious physical instrument and the controlled mind in excellent condition for the reception of later spiritual experiences Devotion filled the heart of this budding Saint and made his feelings throb with supreme Bhava. This combined with a gifted intellect, to drew out of young Shuddhananda inspired streams of exquisite poetical outpourings worthy of the old

Masters. A passionate votary at the shrine of Bharatha Matha, he went on from her worship to the adoration and experience of the Universal Divine Mother Herself. Through Her Shakthi he was inspired, by That he aspired, through the same Shakthi he plunged in Sadhana, and She it is that lovingly bestowed on Yogi Shuddhananda the well-merited fruit of Pure Bliss that he now tastes in joy. But this true saint would not keep to himself his spiriual Bliss He gives it to all. He would have all rise up from the unreal to the Real, from darkness to the Light and from sorrow and death to Bliss and Immortality. Thus has come about the preparation of the invaluable work-ATMA SODHANAI-to throw a flood of light upon the Path to Perfection, Sainthood and Bliss.

ATMA—SODHANAI comes now at this critial time like a sudden light ray from a beacon tower flashing upon the dark storm-tossed waters of an ocean agitated by numerous conflicting forces. May all seekers take heart and guide themselves smoothly to the Divine Destination through this timely light! Let this spiritual radiance guide the struggling souls to peace and bliss. Humanity should hail this great work with delight, devotion and utmost gratitude.

Hail to Sri Suddhananda, the Bliss-Light now self-revealed!

May Joy, Peace and Immortality be unto all!

Swami Sivananda.

ஓம்

ஆத்ம சோதனை

(யோகி சுத்தானந்தரின் அனுபவ மாலை)

★

௧. பிறந்தேன்

1. காலப் புரட்சி

ஆறு அமைதியாக ஓடுகிறது; உயிரையும் பயிரையும் ஊட்டி, ஓங்கார நாதத்துடன் கடலிற் கலக்கிறது. இந்த அமைதியருவி இன்று ஊழி வெள்ளமாகக் கிளம்புகிறது. இடியும் புயலும் மழையும் கொட்டி, அதன் உக்கிர வேகத்தைப் பெருக்குகின்றன. அந்த வேகத்தில் வெள்ளம் புரண்டு, அமைதியான கிராமங்களை அடித்துச் செல்லுகிறது. வெள்ளத்திற்குத் தப்பிச் சிலர் வேறிடம் வசிக்கவேண்டி வருகிறது. இயற்கையில் நடக்கும் இந்தப் புரட்சிபோலவே மக்கள் வாழ்விலும் ஊழிப் புரட்சி நடக்கிறது.

நேற்றுவரையில் வேதம் சிவசங்கரர் குடும்பம் சீரும் சிறப்பும் செல்வமும் கல்வியுமாக வாழ்ந்தது. ஐதராபாது நவாபுகூட சங்கரையாவின் கீதா உபந்யாசங்களைக் கேட்டுச் சன்மானம் அளித்தார். ஸ்ரீமத் பாகவதம், அத்யாத்ம ராமாயணம், கீதை, உபநிஷத்து, மகா பாரதம் இவற்றில் அவர் கரைகண்ட புலவர். தெலுங்கு, உருது, வடமொழி தென்மொழி ஆகிய நான்கிலும் பண்டிதர். கல்வியை உள்ளமாகவும், ஒழுக்கத்தை உயிராகவும், சுதந்தரத்தை உடலாகவுங் கொண்டு, அவர் வம்சபரம்பரையாக ஐதராபாதில் வாழ்ந்தார். சங்கரையா வெறும் புத்தகப் பூச்சியில்லை; உலகறிந்த கலைஞர்; காலமறிந்த சீலர்; சமர்த்தகுரு ராமதாஸின் தாஸபோதத்தில் மோகங்கொண்ட கர்மயோகி. இந்தியாவிடமும் இந்து தருமத்திடமும் பற்று மிக்க தேசபக்தர். அன்னியரும் பிற மதங்களும் நாட்டிற் புகுந்து அடிக்கும் கொட்டத்தைத் தடுக்க மனம் துடித்தவர். அவர் நினைத்திருந்தால் பெரிய சர்க்கார் உத்தியோகம் கிடைத்திருக்கும். அவருக்குத் தகசில் தார் உத்யோகம் பெரிதன்று, தர்மோபதேசமே பெரிது. அவர் மழைக்

காலங்களில் ஐதராபாதிலேயிருந்து இதோப் பிரசாரம் நடத்தினர். வேனிற்காலங்களில் கிராமம் கிராமமாகச் சென்று தர்மோபதேசம் செய்தார். நாளைக் கவலை அவருக்கு இருந்ததில்லை. ஆஸ்திக ஜனங்கள் தாமாகவே அவருக்கு வேண்டிய பொருளாதாரத்தைத் தட்டில்லாமல் உதவினர்கள்.

வந்ததைக்கொண்டு அவர் சிந்தை மகிழ்ந்து வாழ்வை தார்மிக சேவையிலேயே நிவேதித்தார். அமைதி...அகமகிழ்வு...

ஆனல், இந்த உலகில் அமைதியும் மகிழ்வும் நிலையா? திடீர் என்று கிளம்பியது காலப் புரட்சி. அந்தக்காலம் இந்தியா முழுதும் ஏகக் குழப்பமாயிருந்தது. மராடியர் எழுந்து முகல் அரியணையை உலுக்கிவிட்டனர். நாதிர்ஷாவின் தாக்குதலால் ஆட்டம் கொடுத்த அந்த அரியணை, மராடியரின் பூகம்பப் புரட்சியால் நிலை குலைந்தது. அதைச்சார்ந்த சுபாக்களும், நவாபிகளும் கட்டுமீறித் தனிக்காட்டு தர்பார்களாயின. முகம்மதுஷா முகல்கொடியைப் பிடித்து நின்ருன். ஆனல் புயல் கொடிமரத்தையே தள்ளிவிட்டது. ஆற்காட்டு நவாபிடம் கப்பம் வாங்கி, ஐதராபாது நைஜாம் டில்லிக்குக் கப்பம் செலுத்த வேண்டும். ஆற்காட்டில் ஏகக் குழப்பம், குளறுபடி. தெற்கே மறவரும் நாயக்கரும் ஆட்சி செய்தனர்.

நாயக்கர் ஆட்சி அணைந்துகொண்டிருந்தது. மதுரையிலும் திருச்சியிலும் ஆண்ட மங்கம்மாள் பேரன் விஜயரங்க சொக்கநாதன், பாசறையில் மனம் உடைந்து இறந்தான். மராடியரும துருக்கரும் ஊரை வளைத்துக்கொண்டனர். இந்தச்சமயம் அவன் மனைவி மீனுட்சி ராணியானுள். இவளுக்குப் போட்டியாக பங்காரு திருமலை கிளம்பினன். உட்போர் வலுத்தது. ஊடே சந்தா சாகெபு புகுந்து, இரண்டு பக்கமும் கொள்ளையடித்து, ஊரைப்பிடித்து ராணியைச் சிறையில் போட்டான். நாயக்கர் ஆட்சி அவளுடன் முடிந்தது. சந்தாசாகெபு ஆற்காட்டு நவாபு தோஸ்தராலியின் மாப்பிள்ளை. மாப்பிள்ளை அத்துமீறி, தெற்கே தன் கொடியை நாட்டத் தலைப்பட்டான். சிவகங்கையில்மட்டும் அவன் பாய்ச்சல் பலிக்கவில்லை; திருச்சி மதுரை தஞ்சை ஜில்லாக்களைக் கொஞ்சகாலம் ஆட்டிவைத்தான். மாமனருக்குப் பொருமை கொதித்தது. தெற்கிருந்து கப்பம் வரவில்லையாதலால், ஆற்காட்டு நவாபு நைஜாமுக்குப் பணம் அனுப்பவில்லை, நைஜாம் குமுறினன்: மராடியரைத் தூண்டிவிட்டான். பாஜிராவ் சேனை புயல்போல வந்து, ஆற்காட்டு நவாபை ஒழித்தது. அவன் மகன் ஸப்தராலி கப்பம் கட்டிப் பிழைத்தான். மராடியர் திருச்சிராப்பள்ளியைத் தாக்கி, சந்தாசாகெபைச் சிறைபிடித்துக் கொண்டு போய், சதராவில் வைத்தனர். இங்கே ஸப்தராலியை ஒரு விருந்தில் கொலைசெய்து, முர்தாஸா நவாபானன். அவனையும் சதிகாரர் கொல்ல முயன்றனர்; பேர்வழி பெண்வேஷம் போட்டுக்கொண்டு தப்பினன்,

*1744*ல், நைஜாமுல்மல்க் தெற்கேவந்து, தனக்கு இணங்கிய அன்வாருதீனை ஆற்காட்டு நவாபாக்கிச் சென்றான். அப்போது புதுச்சேரி-பிரெஞ்சுக்காரர், அரசியல் சதுரங்கத்தில் பகடை யுருட்டினர். ஆங்கிலேயர் இவர்களுக்கு எதிராகப் போட்டி போட்டனர்.

1748-ல், நைஜாம் உல்மல்க் இறந்தான். நாஜிர் ஜங், முஜ்பர் ஜங்—ஆகிய இருவரும் அரியணைக்குப் போட்டிபோட்டுப் பெரும்போர் செய்தனர். சதாராவில் சிறையுண்ட சந்தாசாகெபு மீண்டான். பிரெஞ்சுக்காரர் உதவியால் அவன் ஐதராபாது குழப்பத்தில் நுழைந்து, முஜபர்ஜங்கை நவாபாக்கினான். முஜபர்ஜங் இதற்காக சந்தாசாகெபை ஆற்காட்டு நவாபாக்கினான். சந்தா தெற்கே சூறுவளிபோல் வந்து, அன்வாருதீனை ஆம்பூரில் கொன்று, தானே நவாபாகி ஆற்காட்டில் அரசாண்டான். அன்வாருதீன் மகன் முகம்மதலி திருச்சிக்கு ஓடிச்சென்று, ஆங்கிலேயரைச் சரண் புகுந்தான். அப்போதுதான் கிளைவ் கிளம்பி ஆற்காட்டை முற்றுகையிட்டு, நம்மவர் கருணைத்துணையால் சந்தாசாகெபையும் பிரெஞ்சுக்காரரையும் முறியடித்து, யூனியன் ஜாக்கைப் பலமாக இந்திய மண்ணில் ஊன்றினான். இந்த அன்னியக்கொடியை அசைக்க, சிவகங்கை மறவரும் திருநெல்வேலி நாயக்கரும் புரட்சிசெய்தனர். வடக்கிலும் அமைதியில்லை, தெற்கிலும் சண்டமாருதப் புயல்.

2. குதிரைக்காரர் வீடு

இந்தச்சமயம் ஐதராபாதில் இரத்தச் சூறுவளி வீசியது. பல இந்துக்கள் சொத்து சுகங்களை இழந்தனர். பலாத்கார மதமாற்றம், கற்பழிவு கொள்ளை, சூறை, அடிதடி, குத்து வெட்டு கொலை எல்லாம் பயங்கரமாகக் கிளம்பின. இந்த அதிர்ச்சியில் வேதம் சங்கரய்யா வீடு திக்கிரையானது. உற்றார் பெற்றார் மடிந்தனர். அவருக்கும் இதோ ஆபத்து வருகிறது. சங்கரையா பைராகிகளுடன் தப்பிச் சென்று, காசி நகரை யடைந்தார், அங்கே சிலகாலம் தங்கி, மகான்களிடம் ஞானசாதனம் செய்து, பிறகு தெற்கே கிளம்பினார். நெல்லூரில் வைதிகர் வீட்டில் தங்கியிருந்தபோது, அவர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த மறுமலர்ச்சி அந்த வீட்டுக் கன்னிகையின் புன்னகையில் அரும்பியது. வேதம் சங்கரரின் அறிவு ஒழுக்கம் கல்வி அழகு இவற்றைக்கண்ட கன்னிகை, அவர்மேல் காதலுற்றாள். பெற்றோர் மனம் குளிர்ந்தது. தசப்பொருத்தமும் சரியாயிருந்தது; கலியாணமானது. இந்த வைதிகருக்கு மைசூரில் செல்வாக்கு உண்டு. அவரிடம் சிபார்சுச் சீட்டுப் பெற்று வேதம், மனைவியுடன் மைசூரை அடைந்தார். ஸ்ரீரங்கப்பட்டணத்தில் அவருக்கு வீடு சௌகரியங்களும் நல்ல ஆதரவும் கிடைத்தன, அங்கே ரங்கநாதர் சந்நிதியில் பாகவத ராமாயண பாரதாதி கிரந்தங்கள் படித்து, தர்மப்பிரசாரம் செய்தார்

வேதம். இவருக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு ரங்கநாதன் என்று பெயரிட்டுக் கல்வியும் செல்வமும் நிரம்பத்தந்து சென்றார் சங்கரையா.

வேதம் ரங்கநாதர் வடமொழி, தென்மொழி, தெலுங்கு, கன்னடம், உருது பார்ஸி முதலிய பலமொழிப் புலவர். அரசியல் நிபுணர், சோதிடப்புலி. அவர் திப்புசுல்தானின் மந்திரி பூர்ணையாவின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். அவரே ரங்கநாதனுக்குக் கலியாணமும் செய்துவைத்துத் தக்க உத்தியோகமும் தந்தார். முதன்மையாக திருவாங்கூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, புதுச்சேரி முதலிய இடங்களுக்குத் தூதுசெல்லும் வேலை இவருடையதாயிருந்தது. ஆங்கிலேயரை எப்படியாவது நாட்டைவிட்டு ஓட்ட வேண்டுமென்று போர்புரிந்த திப்பு சுல்தானுக்கு இவர் தேசபக்தியினால் ஊழியம் செய்தார். சமுஸ்கிரத வித்வான்போல் பல சமஸ்தானங்களுக்குச் சென்று, உளவறிந்தும் வந்தார். இவரைப் பூர்ணையா ஒருநாள் முக்கியமான காரியத்திற்ககாக திண்டுக்கல்லுக்கு அனுப்பினார். செல்லுமுன் நாட்டு நிலையை அறிந்து, ரங்கநாதர் ஏராளமான பொருளையும் தமது மனைவி மக்களையும் குதிரைமேல் கொண்டு சென்றார். 1799ம் ஆண்டு ஸ்ரீரங்கபட்டணத்தில் திப்பு சுல்தான் வீழ்ச்சியடைந்தான். கோட்டை வாசலில் அவன் உடல் உருண்டது. ஆங்கிலேயர் ஜயபேரி கொட்டி, மைசூரில் புகுந்து, பழைய கிருஷ்ணராஜ உடையாரை அரியணையேற்றி அமுல் செலுத்தினர். திப்புவென்ற நாடெல்லாம் வெள்ளையர்வசப்பட்டன. திப்புவுக்கு உதவி செய்தவர் பாடு திண்டாட்டமானது. ஒற்றர் தொல்லை வலுத்தது. இந்தத் தொல்லையினின்று தப்பவே திண்டுக்கல்லிலிருந்து குதிரைமேல் ஏறி, ரங்கநாதர் குடும்பத்துடன் சிவகங்கை ஜமீனுக்கு வந்து, பனையூர் என்ற கிராமத்தில் தங்கினர். ஏனெனில், சிவகங்கையிலேதான் கடைசி சுதந்தரப்போர் நடந்துகொண்டிருந்தது. அரங்கநாதர் குதிரைமேல் ஏறி வந்ததால் அவர் வீட்டுக்கே குதிரைக்காரர் வீடு என்று பெயரானது—குர்ரம் ரங்கநாதுடு தாம் கொண்டுவந்த செல்வத்தால் பனையூரில் பெரிய நிலம் வாங்கி, வீடுகட்டி அந்தஸ்தாக வாழ்ந்தார்.

அவருக்கு ஒரே பெண்—அரங்கம்மாள். அவளுக்கு பங்காரு ஜோடுல ரங்கம்மா என்று பெயர் வந்தது—அவள் தங்கம்போலப் பளபளக்கும் ஜோடு போட்டுத்தான் நடப்பது. இந்தப் பெண்ணை நல்ல இடத்தில் விவாகம் செய்து, தந்தை காலஞ்சென்றார். இவள் மகன் அழகிரி சாஸ்திரி சகலாகம பண்டிதர், இசைப்புலவர், யோகி, பரோபகாரி. தமது பிதுரார்ஜிதத்தை அவர் தானதருமங்களுக்கு வாரிவிட்டார். மூன்றுகாலமும் அவர் சிவபூஜை செய்தார். மூன்றுமுறை காசியாத்திரை சென்றார். அங்கே பல மகான்களைத் தரிசித்து, யோக ரகசியங்களை அறிந்தார்.

அழகிரி சாஸ்திரி ஒருநாள் நாசிகா க்ஷேத்திரத்தில் ஜபம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு முனிவர், தம்மிடம் இருந்த பெரிய பார்த்திபலிங்கத்தைத் தந்து, 'இந்தச் சாம்பமூர்த்தியைப் பரம்பரையாக வீட்டில் வைத்து வணங்கு; சிவபக்தியால் உனக்கு எல்லா நன்மையும் உண்டாகும்' என்றருளி ஓம் சிவம் மந்திரமும் உபதேசித்துச் சென்ருர். அந்தச் சாம்பமூர்த்தியை பக்தியுடன் கொண்டுவந்து, குலதெய்வமாக வைத்து இந்திராக்ஷி சிவகவசத்துடன் மந்திரார்ச்சனை செய்தார் அழகிரி. சாம்பமூர்த்தியுடன் வெங்கடேசப் பெருமாளையும் அவர் வழிபட்டார்.

அவர் மகன் சாம்பமூர்த்தி பரமசாது, தருமசீலர், இந்தக் குலத்தினர் பிறரிடம் உத்யோகம் பார்க்கவில்லை. தாராளமான செலவுகளால் பிதுரார்ஜிதமெல்லாம் கரைந்துபோனது; என் பாட்டனர் அரங்கசாமி காலத்தில் உத்யோகம் பார்த்தே குடும்பம் பிழைக்கவேண்டியிருந்தது.

என் பாட்டனர் அரங்கர் பலசாலி, கிரந்தம்—தமிழ்—தெலுங்குப் புலவர். அவர் கையால் கிரந்தத்திலும் தெலுங்கிலும் எழுதிய ராமாயண ஏட்டை நான் பார்த்திருக்கிறேன். அந்த ஏடுகளுடன் இருந்த பழைய ஏடுகளிலிருந்துதான் மேற்சொன்ன முன்னேர் வரலாறும் கிடைத்தது. திப்பு சுல்தான் காலத்து அரசாங்க ஏடுகள் சில வீட்டில் இருந்தன.

அரங்கர் திருப்பூவனத்தில் பேஷ்கார் வேலை பார்த்துவந்தார். அவர் மனைவி மீனுக்ஷியம்மாள் ஓர் அபூர்வப் பிறவி—நல்ல அழகி, கலை சொட்டும் சுமுகி, நிர்வாகத்திறமையில் இணையற்றவள்; பாட்டு, பாட்டு அப்படிப் பாட்டு: சதா பாடுவாள்; இனிமையான கதைகள் சொல்லுவாள். என் கதைச் செல்வத்திற்கு அவளே சுரங்கமாயிருந்தாள்.

இந்தப் புனித தம்பதிகளுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. முதல்வன் சுந்தரராஜன், அடுத்தவன் எந்தை ஜடாதரர், அடுத்தது ரங்கம் என்ற செல்வி, கடைக்குட்டி புஷ்பவனம். இவர்களில் எந்தையின் குடும்பமே நின்று நிலவுகிறது.

3. தாத்தாவும் பாட்டியும்

குழந்தைப் பருவம்; சூழ்நிலையை அதிசயமாகப் பார்க்கிறேன். உலகின் வக்கிர விநோதங்களெல்லாம் என் கண்ணில் புகுந்து, மனதைக் கிளறிவிடுகின்றன. என் வீட்டிலேயே சிலர் சிரிக்கிருர்கள்; சிலர் அழுகிருர்கள். அழுதவர் சிரிக்கிருர்கள்; சிரித்தவர் அழுகிருர்கள். இன்று நேசம் பாராட்டுவோர் நாளையே வெருகுச் சண்டை போடுகிருர்கள். இந்த விநோதங்களை நாடகம்போலக் காண்கிறேன்.

ஒரு சமயம் வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடந்தது. எனது தாய் பயபக்தியுடன் சுமங்கலிகளுக்கெல்லாம் மங்களஸ்நானம் செய்வித்து, புதிய புடவை ரவிக்கை தந்து, தலைநிரம்ப குண்டு மல்லிகையும் மருக்கொழுந்தும் வைத்து, விருந்திற்கு அழைக்கிறாள். அந்தணர் வேதகானம் செய்கிறார். எனது நினைவு என் அருமைப் பாட்டியிடம் சென்றது. நான் ஒரு கொத்துப் பூவையும் கொஞ்சம் மஞ்சளையும் எடுத்துக்கொண்டு பாட்டியிடம் ஓடினேன். நான் "பாட்டி, பாட்டி எல்லாரும் பூவச்சிக்கிறு...இந்தா நீயும் வச்சுக்கோ. நீயும் மஞ்சள் பூசிக்கோ குங்குவம் வச்சுக்கோ"...என்று பூவை அவள் மொட்டைத் தலையில் போட்டேன்...கிட்ட இருந்தவர்கள் "அட அசடே" என்று சிரித்தார்கள். பாட்டி முகம் சிவந்தது. கண் கலங்கியது. பாட்டி, "செல்லம்! நீ போ ; நிலாவில் எல்லாக் கதையும் சொல்கிறேன்." என்றாள். நான் "என் அருமைப் பாட்டியை யார் இப்படி மொட்டை யடித்தது ?'. என்று ஆத்திரங்கொண்டேன்.

இரவு சாப்பாடானது. பாட்டி நிலா முற்றத்தில் ஒரு பெரிய பலகையில் உட்கார்ந்து, "பாலகோபாலனு முத்துரா க்ருஷ்ணா..." என்று கணீர்—குரலெடுத்துப் பாடினாள். நான் ஆவலாக ஓடி வந்தேன். "பாட்டி...சொல்லு; நீ ஏன் மஞ்சள் பூசிக்கவில்லை; பூ வைக்கவில்லை ?" என்றேன்.

பாட்டி:—அவர் காலமானபிறகு எனக்கு என்ன மஞ்சளும் குங்குமமும் வேண்டியிருக்கு...

நான்:—அவர்...யார் ? அவர் போனால் உனக்கென்ன ?

பாட்டி:—அவர்தாம் உன் தாத்தா; ஆள் மாநிறம், வைரக் கட்டை; திடசாலி; சந்தி ஜபம் நியமங்களில் அனுப்பிசகமாட்டார். காலையில் நான்குமணிக்கே எழுந்து, வேதகானம் செய்வார். குளத்திற்குச் சென்று மூலை மடித்து வேட்டி துவைத்து, தேய்த்துக் குளிப்பார். சூரியோதயமாகுமட்டும் காயத்திரி ஜபம் செய்வார். உடனே சூரிய நமஸ்காரம் செய்வார். பிறகு லௌகிக அலுவல்களைப் பார்ப்பார். மணி பனிரண்டு அடித்ததும், மறுபடியும் உடம்பு சுத்திசெய்து கொண்டு, கீதை பாராயணம் செய்வார் : பிறகு சூரியனைப் பார்த்துவிட்டு வந்து சிவபூஜைசெய்வார், சாம்பமூர்த்திக்கும் வேங்கடேசப் பெருமானுக்கும் அபிஷேகம் செய்து, அர்ச்சனை நிவேதனங்கள் செய்து, தீப தூபம் காட்டிய பிறகுதான் வீட்டில் சுமார் ஒரு மணிக்கு இலை போடுவார்கள். சாப்பிடும்போது ஒரு பேச்சும் இராது. ஒரு பருக்கை சிந்தாது, கவனமாகச் சாப்பிடுவார். சாப்பிட்டதும் 'கேசவா நாராயணா மாதவா' என்று ஆசமன்யம் செய்வார். சிறிது நேரம் நல்ல சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே அமைதியாயிருப்பார். பிறகு பாரதம் பாகவதம் படிப்பார். மூன்று மணிக்கு மறுபடியும் வேலைக்குக் கிளம்பி, ஐந்தரை மணிக்கு வருவார். கடைகண்ணிகளுக்

குச் சென்றுவருவார். உடனே மறுபடி குளித்து உடுத்து, சந்திஜபம் செய்துவந்து இந்திராக்ஷி, சிவகவசம், ஸஹஸ்ரநாமம் ஜபித்து, விபூதி மந்திரித்து எல்லாருக்கும் இடுவார். பிறகு கோவிலுக்குச் சென்று வந்து சாப்பிடுவார். சாப்பாடானதும், எல்லாரும் புராணம் கேட்போம். பதினேரு மணிக்குத்தான் உறங்குவோம். "சிவா ராம" என்பது தவிர, வீட்டில் வேறு உரத்த பேச்சிராது.

நான்:—தாத்தா உன் மேல் பிரியமாயிருந்தாரா? உங்களுக்கு துக்கமே கிடையாதா?

பாட்டி:—வீடு என்றுல் எல்லாந்தானிருக்கும்... ஆனல் அவர் தங்கக் கம்பி. என்மேல் உயிர்; தலை கால் வலித்தால் அவரே வைத்தியம் பார்ப்பார். ஏகாதசி உபவாசம் அவசியம் இருப்பார். அவர் காய்ச்சல் என்று படுத்து நான் அறியேன்.

நான்:—அப்படியானல் அவரை ஏன் எமன் கொண்டு போனன்?

பாட்டி:—நான் இப்படி அலங்கோலமாகி, துக்கப்பட விதியிருந்தது.

நான்:—விதின்னு என்ன பாட்டி?

பாட்டி:—ஒருநாள் திடீரென்று மார்படைத்து அவர் போனர். அதுதான் விதி.

நான்:—விதி எல்லாருக்கும் உண்டா? எல்லாரும் அப்படிப் போகவேண்டுமா?

பாட்டி:—எல்லாரும் அப்படித்தானப்பா ஒருநாள் கூட்டை விட்டுப் பறக்கவேண்டும்... இருக்குமட்டும் ஈகை லாபம்.

ஒரு நிமிஷம் மௌனம்... உடனே பாட்டி கம்பீரமான குரலெடுத்து "பொய்யேடப்புடு வெண்டராது ஒக புச்சின வக்கைன..." என்ற ராமதாஸ் கீர்த்தனத்தை உருக்கமாகப் பாடினள்... அதன் பொருளாவது: "ஐயா! உலகில் பொருளைப் புதைத்துப் புதைத்து வைக்கிறீர்கள். உடலை உதறி எமலோகம் போகும்போது, ஒரு புழுத்த பாக்குக்கூடக் கூடவராதே... ஏழை எளியவர்களுக்குக் கொடுக்காமல் சேர்த்துப்பூட்டுவது வீண் மாய்ம். கண்ணை மூடிய பிறகு சொந்தமும் சுற்றமும் அன்னியமாய் விடுமே. தன் வினையே " தன்னைத் தொடருகிறது."

நான்:—இருக்குமட்டும் என்ன செய்வது, பாட்டி?...

பாட்டி:—இருக்குமட்டும் பக்தி செய், பரோபகாரம் செய்.

நான்:—பக்தி, பரோபகாரம்... ஆம். பாட்டி, பக்தி என்றுல்?...

பாட்டி:—கடவுளை எப்போதும் நினைப்பதுதான் பக்தி...

"ராமஸ்மரணமு சேயக போதே நருலகு கதிலேது"...என்ற பாட்டை உருக்கமாகப் பாடினுள் பாட்டி. அந்தப் பாட்டின் கருத்து:

ஆத்மா ராமனே, பரந்தாமனே அடிக்கடி நினே. அதுவே கதி. மனிதா, நாட்கள் போய்க்கொண்டிருக்கின்றன. உலக விவகாரத்தில் சிக்கி மடியாதே. சொத்திருந்தால் தாயாதிகள் போர் வரும். அண்ணன் தம்பிச் சண்டை பெருகும். உடன் பிறந்தவர், சுற்றம் மனேவி, மக்கள் அன்பு சுயநல அன்பு. பசையிருக்குமட்டும் சுருட்டிக் கொண்டுபோவார்கள். பிறகு வசைமாரி அடுக்குவார்கள். மனேவியோ எப்போதும் "அதில்லே, இதில்லே, அணிமணியில்லே, ஆசாபாசம் இல்லே" என்று பிணங்குவாள். பெற்ற மகனே "கிழவா அங்குமில் இங்குவராதே" என்று அதிகாரம் செய்வான். உடம்போ நோயின் பிண்டம். தெம்பிருக்குமட்டும் எல்லாரும் உறவுகொண்டாடுவார்கள். உடம்பு படுத்தால், ஆட்களேச் சோதிக்கலாம், உடம்பு முதுமை யடைந்தாலோ வேட்டிகூடத் துவைக்க முடியாது. சாப்பிட்ட கையைக்கூடத் தொன்னேயில் கழுவி, மல்லாக்க வேண்டியதுதான். உடம்பு அப்படித் தள்ளாடிப் போகும். அந்த நிலே வருமுன்பே தெய்வபக்தி செய், மனமே. உள்ளதைக்கொண்டு பரோபகாரம் செய்"...இந்தப் பாட்டைப் பாட்டி பாடிக்கொண்டிருந்தபோது திண்ணேயில் இசை கிளம்பியது..."செல்லம் வா வா!" இது ஹரி தீர்த்தமையர் குரல்...

4. அவனே பெரியவனும்.

ஹரிதீர்த்தம் என் அத்தை கணவர். மீனுட்சிபாட்டிக்கு ஒரேபெண்ணுன அரங்கநாயகி அருமையாக வளர்ந்தாள். அடக்கம், அழகு, அமரிக்கை, பொறுமை, பதிபக்தி, தெய்வசிந்தனே கொண்ட உத்தமி அரங்கநாயகி. இருவருக்கு மங்களம் என்ற ஒரே பெண் குழந்தை. ஹரிதீர்த்தமையர் புதுக்கோட்டை தொண்டைமானின் சமஸ்தான வித்வான். பிடில், சாரங்கி, வீணே அனேத்திலும் நிபுணர். பல பேருக்கு இசைப்பயிற்சி யளித்தவர். அவருக்கு அரண்மனேயில் செல்வாக்குண்டு. அவர் மகள் மங்களம் அரண்மனே அந்தப் அந்தப்புரத்தில் நாச்சியார்களுடனேயே வளர்ந்தாள். அன்று அவள் பாடினுள் தந்தை சாரங்கி வாசித்தார். "யாருக்குப் பொன்னம்பல க்ருபை இருக்குதோ அவனே பெரியவனும்" என்ற பாட்டு என் உள்ளத்தைக் கவர்ந்து மனதிற் பதிந்தது. பிறகு தியாகையரின் "நிதிசால சுகமா" என்ற பாட்டை வாசித்தார் வித்துவான். அதுவும் என் ஆத்ம சோதனேயைக் கிளறிவிட்டது. கச்சேறி முடியும் சமயம் நான் "பணம் இருந்தால் அவன் பெரியவன் ஆவானே"? என்ற வரியை முணுமுணுத்தேன். "மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை பொல்லாது; யாருக்குப் பொன்னம்பல க்ருபை இருக்குமோ

அவனே பெரியவனும்''...என்று உரக்கப்பாடினேன்...''அடட பாடுடா'' என்று மாமாவும் பிடில் வாசித்து என்னை ஊக்கினார்... பாட்டு எனக்கு மறந்துபோனது...''ஊருக்குள் பணம் காசு உன்டென இருந்தென்ன பேர்புகழ் நில்லாது பேராசை பொல்லாது',... என்று சொந்தமாக வார்த்தைகளை போட்டு நிரப்பி, என் வழியில் அந்தப்பாட்டைப் பாடினேன். மாமா ''அட கவனமா?...அப்படிச் சொல்லுடா''...என்று மகிழ்ந்தார். அவரிடம் அந்தப் பச்சிளம் வயதில் ஸ்வரவரிசைகள் கொஞ்சம் கற்றேன். மாமா ஊருக்குப்போன பிறகு பாட்டிதான் எனக்கு ஆசிரியை. அவளிடம் எனக்கு அசாத்யப் பிரியம்...அவளுக்கும் என்னிடம் அப்படியே. என்னை இட்டுக்கொண்டு அவள் கோயிலுக்கு அடிக்கடி செல்வாள். சுவாமி சந்நிதியிலிருந்து கொண்டு கதைகள் சொல்வாள், ஞானோபதேசம் செய்வாள், பாடுவாள்.

பெரியப்பா சுந்தரராஜன் சிவபக்தர்; ஜப சாதகர்: ''சுத்தப்ரம்ம பாரத்பரராம்'' என்ற பாட்டை அவர் வாய் பாடிக்கொண்டேயிருக்கும். அவர் மாநிறம்; ஆள் வாட்டசாட்டமாயிருப்பார். சுகவாசி. காரிய நிர்வாகத்தில் சமர்த்தர். அவருக்கு மனைவி தவறிப் போனாள். பிறகு மணம் புரியவில்லை. சோழபுரத்தில் எங்களுக்கு நிலம் உண்டு. அதைப் பார்த்துக் கொண்டு, சோழபுரம் சத்திரத்தில் அகுதார் வேலையும் பார்த்து, கோயில் நிர்வாகத்திலும் உதவிக்கொண்டிருந்தார் சுந்தரராஜர். அவருக்கு இசை, நாட்டியம் என்றால் பிரியம். இதற்காகவே அவர் ஒரு நடிகையை வைத்திருந்தார், நான் அடிக்கடி சோழபுரம் செல்லும்போது, அவள் ஆடல் பாடலை ரசிப்பேன். நானும் என் பாணியில் 'தத் த தை தா' என்று ஆடல் பாடல் நடத்துவதுண்டு. பெரியப்பா ''அடிசக்கை அப்படிப் போடுடா'' என்று என்னைத் தட்டிக் கொடுப்பார். குடும்பத்திற்கு அவரால் எந்த உதவியும் இல்லை. அடிக்கடி பெட்டி வண்டியை ஓட்டிக் கொண்டு வருவார், சாப்பிடுவார், செல்வார். அவர் முதுகில் பிளவை கண்டு இறந்தார். பிளவையை அறுத்துச் சத்திரம் வைக்கும் பயங்கரத்தைக் கண்டேன். உடலின் பொய்யுறவை அறிந்தேன். அவ்வளவு உற்சாகக் கலாரசிகராயிருந்த பெரியப்பா, ஒருநாள் இறந்தார். அவர் சொத்தில் பாக்கி ஒரு கடுக்கன் ஜோடி...ஒரு கூண்டுக் கிளி...இரண்டே, கூண்டுக்கிளி 'ராம ராம, ரங்க ரங்க' என்று பேசும். என் பாட்டி அதைக் கொஞ்சிக்குலாவிக் கொண்டே தன் கதையெல்லாம் அதனிடம் சொல்லுவாள். ஒருநாள்,

பிறப்பு வந்ததடீ—கிளியே
பேச்சு வலுத்ததடீ
மறப்பு வந்ததடீ—எல்லாம்
மாயமாய்ப் போச்சுதடீ

என்று பாடிக் கொண்டிருந்தாள். "பாட்டி, என் பிறப்பு எப்படி வந்தது?" என்றொரு கேள்வியைப் போட்டு வைத்தேன்...பாட்டி தனது திருக்கல்யாண வைபவத்தில் தொடங்கி, என் அப்பா அம்மா கலியாணத்திற்குத் தாவினாள். "ஜடாதரன் தங்கமான பிள்ளை... என் குழந்தைகளில் மாணிக்கம்"...என்று வம்சாவளியைத் தொடங்கினாள்.

5. அப்பா

அரங்கர் திருப்பூவனத்தில் இருந்தபோது, அந்த ஊர் சுவாமி யான ஜடாதரரை பக்தி செய்து ஜபித்தார்; அந்தச் சமயம் பிறந்த பிள்ளைக்கு ஜடாதரன் என்று பெயரிட்டார். எந்தை ஜடாதரர் தாயாரைப் போன்று கட்டழகா யிருப்பார். அவர் ஸ்ரீ ரமண மகர்ஷியைப் போலவே களை நிரம்பினவர்.—நல்ல உயரம், சரியான பருமன். மலர்ந்த முகம். கள்ளம் கபடற்ற தோற்றம். அந்த அகன்ற மார்பில் கருணை விளையாடும். புன்னகை ததும்பும் வாயில் திவ்ய நாமம் ஒலிக்கும். உள்ளம் சிவசிவ ராமராம என்றே துடிக்கும். எந்தை புண்ணிய புருஷர், பரமசாது, யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டார், அவர் மகாமானி. இல்லாததை விரும்பமாட்டார். இருப்பதை ஒளிக்கமாட்டார், எதற்கும் "அவன் சித்தம் ஆகட்டும்" என்பார். சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிப்பார். அவர் ஆசாரசீலர், சத்தியவான். தமிழிலும் வடமொழியிலும் பாடல்களை அள்ளிக் கொட்டி, எங்களுக்கு அரிய நீதிக்கதைகளைச் சொல்லுவார். நீதி சதகம், வேமனபத்யம், தாயுமானுர் பாடல், பட்டினத்தார் பாடல், வில்லி பாரதம், கம்பன், திருக்குறள், ஔவை பாடல், பொம்மன போதன பாகவதம், பாஸ்கர ராமாயாணம், இராமதாஸ் சரித்திரம், ஸௌந்தர்ய லஹரி, இந்திராக்ஷி சிவகவசம், ஸஹஸ்ரநாமம், புருஷஸூக்தம், சண்டி ஸப்தஸதி, பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ஸ்காந்த புராணம் முதலியவற்றில் அவருக்குப் பயிற்சி யுண்டு. அந்தக் காலம் நடந்த சரித்திரக் கதைகளும் அனுபவக் கதைகளும் ஏராளமாகச் சொல்லுவார், அவர் திருவாராதனமும், ஆலய தரிசனமும், சந்தி ஜபமும் இல்லாமல் உணவு கொள்ள மாட்டார்.

ஸ்ரீஜயந்தி, ஸ்கந்தசஷ்டி, கார்த்திகை, அமாவாசை, ஏகாதசி, ஸ்ரீராம ஜயந்தி, சிவன்ராத்திரி, பிரதோஷ நாட்களில் அவர், வீட்டி லிருக்கும் குலதெய்வத்திற்கு ஆராதனை செய்யத் தொடங்கினால், வீடு முழுதும் தெய்வக்களை வீசும். குழந்தைப் பருவத்தில் அவர் செய்யும் பூஜை புரஸ்காரங்களை நான் உள்ளாழ்ந்து கவனித்துக் கொண்டே மெய்ம்மறந்திருந்தேன். வீட்டில் யாருக்காவது நோய் வந்தால், இந்திராக்ஷிஜபம் செய்து விபூதி மந்திரித்து வைப்பார்.

நோய் குணமாகும். மந்திர ஜபமகிமையை அவரிடம் கண்டேன். இளமை முதலே எந்தை மாசற்ற ஒழுக்கமுடையவர். பெரியாரைக் கண்டால் அவர் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வார். அவர்களுக்கு முன், மேல்ஆடையை இடுப்பில் கட்டிக் கொண்டு கை குவித்து வணக்க ஒடுக்கமாக நிற்பார். தந்தையிடம் பரமபக்தியுடன் நடந்தார். தாயாரைத் தாயன்புடன் பேணினுர். தாயார் சாப்பிட்ட பிறகுதான் அவர் சாப்பிடுவார். வாலிபஜடாதரன் அழகும் குணமும் ஒரு செல்வர் கண்ணைக் கவர்ந்தன. அவரே வக்கில் மஹாதேவர்.

6. தாய் வழி

மதுரை தானப்ப முதலித் தெருவில் பெரிய மாளிகையிருக்கிறது. அதுதான் எனது தாய்வீடு. தாயின் முன்னோர் விஜய நகரிலிருந்து விசுவநாத நாயக்கருடன் வந்தவர்கள். அவர்கள் பரம்பரையாக நீதிபதிகளாயிருந்து நாயக்க மன்னருக்கு உதவினர். அரசி மங்கம்மாளுக்கும் தளவாய் நாசையாவுக்கும் இந்தக் குடும்பத்திடம் அபிமானம் அதிகம். இந்த மரபில் நான் நன்ருய் அறிந்தவள் பங்காருப்பாட்டி, தொண்ணூறு வயதுக் கிழவி ; இளம் பெண்களுடன் போட்டிப் போட்டுக் காரியம் செய்வாள். ஆட்டும் குளிர் காலத்திலும் வைகையில் நீராடி வந்து, சிவபூஜை செய்வாள். "பாட்டி! மதுரையில் சந்தாசாகெபு வந்து என்ன பண்ணினுன்?" என்ருல் போதும் ; மங்கம்மா காலம் முதல் கோவையாகச் சரித்திரம் சொல்லுவாள். தான் கண்டதை மிக்க ரசமாக வர்ணிப்பாள். கும்பினிக்காரன் அடித்த கொட்டத்தை ஆத்திரமாகச் சொல்லுவாள். அந்த வயதில் அவளே எனக்குத் தேசாபிமானம் தூண்டியவள்.

இந்தப் பாட்டிக்கு இரண்டு மணிப்பிள்ளைகள் பிறந்தனர்: ஒருவர் மஹாதேவர். மற்ருெருவர் மணி (பூர்ணனந்தர்). மகாதேவர் நல்ல படிப்பாளி ; பிரபல வக்கீல் ; வாலிபத்தில் இவர் மலையாளம் சென்று மந்திரசித்தி பெற்ருர். தேள் பாம்பு பேய் பிசாசுகளுக்கு மந்திரம் போட்டால், உடனே பலிக்கும்.

ஒரு செல்வர் மகனுக்குக் கலியாணம் ; மறுநாள் மாப்பிள்ளை வெளியே சென்றவன் திரும்பி வரவில்லை. எல்லாரும் ஆவலாகத் தேடினர். மாப்பிள்ளை ஒரு புதர் அருகே விறைத்துக் கிடந்தான். உடம்பெல்லாம் நீலம் பூத்திருந்தது. மணவீடு பிணவிடானது. எனது பாட்டனர் மகாதேவர் "பயப்படாதீர்கள்" என்று எல்லாரையும் சமாதானப்படுத்தினர். இரண்டு தாம்பாளத்தில் பால் கொணரச் செய்தார். மந்திரம் ஜபித்தார் ; ஐந்தே நிமிஷம் ; புதரிலிருந்து பாம்பு சரசரவென்று வந்தது...பாம்பிடம் "கடித்த வாயில் கடித்து இதில் உமிழ்" என்ருர். பாம்பு அப்படியே செய்தது...மாப்பிள்ளை

உறங்கினவன் போல் விழித்தெழுந்தான். மந்திரவாதி "நாகா இந்தப் பாலைக் குடித்துப் போ" என்றார்; பாம்பு அப்படியே குடித்து விட்டு மின்போல் மறைந்தது. மஹாதேவையரை ஊரெல்லாம் வாழ்த்தியது. இப்படியே இவர் பல விஷக்கடிகளையும் நோய்களையும் தீர்த்திருக்கிறார். இவர் பச்சிலை வைத்திய நிபுணர். இவர் வக்கீல் தொழிலில் வந்ததைக் கொண்டு, குடும்பத்தைக் காத்தார். வைத்திய மாந்திரிகங்களால் பொது ஜனங்களுக்கு உதவினர். இவர் நீண்ட காலம் பிரமாச்சாரியா யிருந்து, பிறகு வேணியம்மாளை மணந்தார்.

இவர் தம்பி மணி பிறவித் துறவி. அவர் நைஷ்டிக பிரமாசாரியாகி அத்வைத சாஸ்திரங்களையும் கற்று, காசிக்குச் சென்று, சந்யாசம் பெற்று, பூர்ணானந்தரானார். அவர் பல துறவிகளுடன் இருந்து யோகம் பயின்றார். இறுதி காலத்தில் மதுரைக்கு வந்து, மாமா தோட்டத்தில் வசித்தார். அந்தக் காலமே நானும் அவருக்கு இளந்தொண்டனானேன்.

மஹாதேவையருக்கு இரண்டு ஆண்மக்கள், மூன்று பெண் மக்கள் பிறந்தனர். மூத்தவர் ம. ராமசாமி ஐயர் ஆங்கிலப் புலவர், சட்ட நிபுணர், மதுரை தானப்ப முதலித்தெருவில் பிரபல வக்கீலாய் இருந்தார். இவர் கீதையிலும் உபநிஷத்திலும் சிவபூஜையிலும் பற்றுதல் உடையவர். ஒரு மகன், இரண்டு பெண்களை ஈன்ற பிறகு, இவர் பிரமசரியம் பூண்டு, மாடியிலேயே படிப்பும் ஜபதபமுமாகக் காலங் கழித்தார். யாருடனும் அனாவசியமாகப் பேசமாட்டார். இவரைக் கண்டால் வீட்டில் எல்லோருக்கும் பயம். இவர் ஓர் அதட்டுப் போட்டால், வீடு கிடுகிடுக்கும். காலப்படி இவர் காரியங்களைச் செய்வார். நான்கு மணிக்கே எழுந்து தியானம் செய்துவிட்டு, ஐந்து மணிக்கு வெளியே சென்று காற்றாட உலாவி வருவார். உடனே குளிப்பார். பாராயணம் செய்வார்; பூஜை நடத்துவார். காலையில் சாப்பிடமாட்டார், பத்து மணிக்கெல்லாம் ஒரு மணிச் சத்தம் கேட்கும். பெண்கள் உடனே சுறுசுறுப்பாக இலை போட்டுப் பரிமாறுவர். சாப்பிடும்போது இவர் பேசமாட்டார். வீட்டில் ஒரு சத்தம் இராது. இவர் மிதமாகவே உண்பார்; இவர் எழுந்து மாடிக்குச் சென்று அரை மணி நேரம் கழித்தே, வீட்டில் பேச்சுச் சத்தம் கேட்கும். இவர் வாழை மட்டையிலிருந்து மெல்லிய நார் இழுத்து, எங்களுக்கு உரிய கோச்சடை கிராமத்தில் தறிப்போட்டு நார்ப்பட்டு நெய்தார். காந்தியம் வந்த பிறகு அவர் கதரையே அணிந்தார். காந்தியிடம் அதுவே அவருக்கு மிகவும் பிடித்தது. இவரால் நான் அரிய பயன் அடைந்தேன்.

இவருக்கு அடுத்தவர் சுப்பிரமணியர்: ஆள் ஆஜானுபாகு; அபார மூளை. பணம் காசு சேர்ப்பதில் பெரிய கை. இவர் செட்டி வீட்டில் பெட்டியடி வேலையில் தொடங்கி, படிப்படியாக உயர்ந்து, தேவ

கோட்டை ஜமீந்தார் அள. அரு.வின் ஏஜெண்டானுர். இவர் அறிவு இயற்கை யறிவு. இவர் தாமே ஆங்கிலம் கற்ருர். பெரிய மோஸ்தரில் இவர் பேசுவார். மணி ஐயர், பாஷ்யம் அய்யங்கார் முதலியோரும் இவரது சட்ட அறிவை வியந்திருக்கிருர்கள். எடுத்த காரியத்தில் இவர் வெற்றி பெற்றே தீருவார்.

மஹாதேவையருக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன—காமாட்சி, பாலாம்பாள், மீனுட்சி. பின் இருவரும் நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்டு மூத்தண்ணுவுடன் சம்பந்தமும் செய்து கொண்டனர் என் அன்னையின் குடும்பம் தனித்தே வளர்ந்தது.

7. எனது தாய்

என் அன்னை காமாட்சி குடும்ப ஞானி. துறவியான பூர்ணுனந்தருக்கு இவளே பணிவிடை செய்தாள். தகப்பனுர் இவளுக்குப் பஞ்சாக்ஷரி மந்திரமும், விஷகடியைத் தீர்க்கும் மந்திரமும், பச்சிலை வைத்தியமும், அநேக அநுட்பாடல்களும் கற்பித்தார். பூர்ணுனந்தர் பக்தி சாதனமும் ஜப சாதனமும் பயிற்றி ஆசீர்வதித்தார். அம்மாளுக்கு வீட்டுக் கருத்து அதிகம். வீட்டில் பெரிய சமாராதனைகள் நடக்கும். அம்மாள் ஒண்டியாக ஆராதனை நிவேதனங்களுக்கு வேண்டியதெல்லாம் தயாரித்து, எல்லாரையும் மகிழ்விப்பாள். அவள் செய்யும் காரியம் அப்பழுக்கற்றதாயிருக்கும்.

இந்த அரிய பெண்ணுக்கு மகாதேவையர் மாப்பிள்ளை தேடினுர். எதிர்பாராமல் அரங்கசாமி ஐயர் தமது பிள்ளை ஜடாதரனுடன் வந்து சேர்ந்தார். அந்தக் காலம் பிள்ளை வீட்டுக்காரரே கன்யா தட்சிணை தர வேண்டும். வரதட்சிணை அந்தக்காலம் இல்லை. மகாதேவையர் 'எனக்கு எந்தத் தட்சிணையும் தேவையில்லை; மாப்பிள்ளை அழகன், குணம் தங்கம். பெண்ணுக்குப் பிடித்திருக்கிறது, ஜாதகம்பொருந்தியிருக்கிறது, என்று மறுவாரமே முகூர்த்தக்கால் நாட்டி, மேளம் கொட்டினுர். கன்னிகை அழகை, தாய் பணத்தை, தந்தை அறிவை, பந்துக்கள் குலத்தை, மற்றவர் விருந்தை விரும்புவார்கள். காமாக்ஷி—ஜடாதர விவாகத்தில் எல்லாம் பொருந்தி யிருந்தன. மாப்பிள்ளைக்கு மாமனுரிடம் பரம பக்தி. அவர் தந்த டர்கிக் குல்லாவை இவர் இறுதிமட்டும் வைத்துக் காப்பாற்றினுர். அதை நான் அடிக்கடி போட்டுக் கண்ணுடி பார்ப்பதுண்டு. ஏனென்ருல் நான் தாத்தா போலிக்கை. இறுதி காலத்தில் தாத்தா குடும்பப் பொறுப்பைப் பிள்ளைகளிடமே விட்டுவிட்டு, ஞான மார்க்கத்தில் திரும்பினுர். தந்தை வழிப் பாட்டனுர் அரங்கசாமி ஐயரும் இறுதி காலத்தைச் சிவபக்தியிலேயே கழித்தார். இவர் சாகுமுன் எந்தையை அழைத்து இவ்வாறு உபதேசித்தார்:

"ஐடாதரம்! குலமதிப்பு உன்னால் உயர வேண்டும். நமது குலதனம் தெய்வ பக்தியே. அதை வளர். சத்தியத்தைக் காப்பாற்று. எவரிடமும் எதையும் யாசிக்காதே. பாடுபட்டுப் பிழை. உள்ளதைக் கொண்டு மானமாக வாழ். உலகச் செல்வம் வந்து செல்லும். உனக்கு நான் சிவபக்தியையே குலதனமாக வைத்துச் செல்லுகிறேன்!"

எந்தை தமது தகப்பனார் உபதேசத்தை வேதமாகக் கொண்டு நடந்தார்.

8. இல்லற நல்லறம்

எனது பெற்றோர் வாழ்க்கை எனக்கு அனுபவ நீதி நூலாக விளங்கியது.

தாயார் வழி, செல்வஞ் செழித்தது; எந்தை வீடு எளிமையே உருவானது; வறுமை எங்களை அடிக்கடி சோதித்தது. இருப்பதை உகப்போம்; இல்லாததை மறப்போம். தாது வருஷப் பஞ்சத்தில் கூட என் பெற்றோர் "இறைவன் படியளப்பான், நமக்கென்ன கவலை" என்றே நம்மியிருந்தனர். அப்படியே சில சம்பவங்களும் நடந்தன. தகப்பனார் சிவகங்கை தேவஸ்தானத்திலும், இளையாற்றங்குடி நித்ய கல்யாணியம்மான் கோயில் தேவஸ்தானத்திலும் ஒரு வேலை தேடிக் கொண்டார். நான் அவர் வாழ்வின் ஒவ்வோர் அணுவையும் கவனித்து வியந்திருக்கிறேன். அவர் சம்பளத்தை சுவாமி சந்நிதி முன் வைத்து, சூடன் தீபாராதனை செய்து, "நீ தந்த இந்தத் தொகையைக் கொண்டு என் குடும்பம் பிழைத்து, உனக்கே ஆளாக வாழச் செய்" என்று வேண்டிக் கொண்டு, அம்மாளிடம் கொண்டு வந்து தருவார்.

தகப்பனார் கொண்டுவரும் சொற்பத் தொகையைக் கொண்டு செட்டுக்கட்டாகச் சாமான்களை வாங்கிச் சீராகக் குடித்தனம் செய்வாள் என் அன்னை. மாத முடிவில் அவளுடைய கஜானாவான அடுக்குள் புறையில் இரண்டொரு ரூபா சேர்ந்திருக்கும். சமயத்தில் "இந்தாரும்" என்று தருவாள். சிக்கனமாயினும் அவள் தனது செயலுக்கேற்றபடி பிறருக்கு உதவி செய்வாள்.

தமது மந்திர வைத்தியத் திறமையால் காமாக்ஷியம்மாள் ஊருக்கு உதவி செய்தாள். குழந்தை வைத்தியத்தில் அவள் தேர்ந்தவள். கணை, மந்தம், காய்ச்சல், வீக்கம் இவற்றிற்கெல்லாம் மந்திரிப்பாள்; பச்சிலை தருவாள். எங்கள் தெருவில் ஒரு குழந்தைக்கு வயிற்றில் கட்டி விழுந்தது; உணவே செல்லவில்லை. என்ன தந்தாலும் வாயிலெடுத்தது. மார்பு எலும்பானது. வயிறு மட்டும் ஊதிப் போனது. எனது தாயிடம் குழந்தையைக் காட்டினார்கள். தாய்

உடனே குடல் சுத்தியாகும்படி மந்திரித்து உருவி விட்டாள். மறு நாளே குணம் கண்டது. பிறகு ஓர் எண்ணெய் வடித்துத் தந்தாள். குழந்தை நன்ருகத் தேர்ந்தது.

ஒருநாள் ஒருவருக்குத் தேள் கடித்து அலறித் தவித்தார். இரவு ஒரு மணி; என் அன்னையை வந்து அழைத்தார்கள். பகலெல்லாம் தாத்தா சிராத்தத்திற்காக உழைத்து அலுத்துப் படுத்திருந்தாள் அன்னை. அழைப்பு வந்ததும், உடனே எழுந்து சுத்தம் செய்து கொண்டு, பஞ்சாக்ஷரி ஜபித்துப் புறப்பட்டாள். தேள் கடிக்கு மந்திரித்து விபூதி தடவினுள். உடனே நெறியிறங்கி, கொட்டுவாய்க் கடிகூடத் தீர்ந்து விட்டது. இப்படி எத்தனையோ உதவிகளை அவள் செய்யக் கண்டிருக்கிறேன்.

தெருவில் பிச்சைக்காரன் வருவான்; பணக்கார வீடுகளில் ஒன்றும் கிடைக்காது: என் அன்னை "வாப்பா இங்கே" என்று அழைத்து, வீட்டில் உள்ள பழைய சோற்றை போட்டு, கடித்துக் கொள்ள ஒரு மிளகாயும் தந்து "இருந்து சாப்பிடு" என்று உபசரிப்பாள். தொழிலாளர், வீட்டுக்கு வேலை செய்ய வந்தால், அவர்களுக்கு அவசியம் வயிறு குளிரச் சோறு போட்டுக் கூலி தருவாள். வேகும் வெயிலில் விறகுக்காரன் வருவான். சுமையை இறக்கச் சொல்லி, அவன் கேட்கும் கூலியை நிதானித்து, நியாயமான கூலி தந்து, அவனுக்கு 'அப்பா! இந்தா குடி' என்று நீராகாரம் அல்லது மோர் தந்து அனுப்புவாள். விருந்தினர் வந்தால், எந்தை சமை என்று சொல்லத் தேவையில்லை, அவர்கள் திண்ணையில் உட்காருவதைக் கண்டதுமே அடுப்புமூட்டி விரைவில் உணவாக்கி, முகமலர்ச்சியுடன் அப்பாவை எட்டிப் பார்ப்பாள் அன்னை. அவர் உடனே "சாப்பிட்டு மறுகாரியம் பார்க்காலாமே" என்று வந்தவரை உள்ளே அழைத்து வருவார்.

குழந்தைகள் மேல் அவளுக்கு உயிர். வீட்டுத் திண்ணையில் அவர்களுக்கு வீடு கட்டி விளையாட வசதி செய்து தருவாள். மண் செப்புகள் செய்து தருவாள்.

இவ்வாறு அன்பும் அறமும் விளங்கிய வீட்டில் ஒரு குறை இருந்தது—பிள்ளை யில்லாக் குறைதான். நான்கு குழந்தைகள் பிறந்து இறந்தன. அந்தத் துயரம் பெற்ருேரை வாட்டியது; இருவரும் சித்தத்தைச் சிவனிடம் வைத்து. ஜபதபங்களில் காலம் கழித்தனர். கடுமையான விரதங் காத்தனர். விரதாதிகளாலும் தூய வாழ்வாலும் கருப்பையிலிருந்த சில கோளாறுகள் நீங்கின. அந்தக் காலம் எங்கள் துறவித் தாத்தா வடக்கிருந்து வந்தார். அந்தத் துறவி "அம்மா! நீ வேங்கடாசலபதியை தியானித்து பக்தி செய்; நல்ல குழந்தை உண்டாகும்" என்ருர், அம்மாள் அப்படியே செய்தாள்,

ஆண் குழந்தை பிறந்தது; பெற்றோர் அதற்கு வெங்கடராமன் என்று பெயரிட்டு மிகச் செல்லமாக வளர்த்தனர். அதற்குப் பிறகு அரங்கசாமி என்ற மணிப்பிள்ளை; மூன்றாவது ஒரு பெண், அரங்கநாயகி

இந்தக் குழந்தைகள் சுகமாயிருந்தாலே போதும் என்று பெற்றோர் கடுமையான விரதங்களை மேற்கொண்டனர். ஆனால், ஆத்ம சோதனைக்கு ஒரு குழந்தை வேண்டுமே......!

குறிப்பு :—“ஆத்ம சோதனை”யில் எனது தாயின் பெருமையை எழுதிக் கொண்டிருந்தபோது நண்பருடன் “என் அன்னை உடலை விட்டுக் கிளம்புகிறாள்” என்று பேசிக் கொண்டிருந்தேன். உடனே தந்தி வந்தது—“அன்னை இறந்தாள்” 15—2—49. அவள் எண்பது வயது வாழ்ந்தாள். என் அண்ணா அரங்சாமிக்கு ரூ. எண்பது அனுப்பி சுத்தானந்த சமாஜத்தில் அம்மா எலும்புகளைப் போட்டு ஒரு மாங்கன்று நடச்சொன்னேன். ஏனெனில் எனது தாய் நல்ல தெருவில் ஒட்டுமாமரம்போல் மலர்ந்து கனிந்து பரோபகாரத்துடன் வாழ்ந்தாள். அம் மாவைக் கண்டால் அம்மாவைக் காண்பேன்.

9. பிறந்தேன்!

கடைசிக் கரு; தாயார் உடல் நலிந்தது, மெலிந்தது. மனம் மட்டும் வேங்கடேசப் பெருமானையே நினைந்தது. அந்தக் காலம் எங்கள் வீட்டில் சிலர் திருப்பதி சென்று வந்தனர். பஜனை ஆராதனைகள் நடந்தன. “இனிப் பிள்ளை வேண்டாம் என்று மனம் சலித்த பிறகு, இந்தப் பிரசவம் ஏன் வந்தது?” என்று தாயார் நொந்தாள். ‘இவள் பிள்ளையாண்டு பிழைக்கமாட்டாள்’ என்று வேணிப்பாட்டி பயந்தாள். “இந்த நோஞ்சல் வயிற்றில் பிறக்கும் பிள்ளை எத்தனை நாள் இருக்கப் போகிறது?” என்று பலர் கையை உதறி விட்டனர். அம்மாளுக்கும் நோய் தாங்க முடியவில்லை. கருவைக் கரைத்து விடலாம் என்று நினைத்து, மருந்தைத் தயாராக வைத்துக் கொண்டு படுத்தாள். பிறகு நடந்ததை அம்மாள் எங்களிடம் சொன்னாள்.

“தூக்கமே வராத எனக்கு அன்று என்னையறியாமல் உறக்கம் வந்தது. கருவை கரைக்கும் மருந்து சாப்பிட வேண்டிய வேளை தவறி விட்டது. மணி நான்கு; திருப்பதிப் பெருமாள் என் கனவில் வந்தார். ஒரு தங்க மணியும் மலரும் தந்தார். ‘பயப்படாதே மணிக் குழந்தை பிறக்கிறது, என் குழந்தை அது’ என்று மறைந்தார். சட்டென்று எழுந்தேன். அதே சமயம் அவருக்கும் அப்படியே கனவுண்டானது”......

பரம பக்தர்கள் உள்ளம் கடவுளன்பில் ஆழ்ந்திருக்கும்போது இறைவன் உறுதியாக அபயமளிக்கிறான். இதை எனது வாழ்விலேயே

பலமுறை பார்த்திருக்கிறேன். மலர் ஞானமலர்ச்சியை, மணி அருள் வாக்கைக் குறிக்கும் என்பது என் துறவிப் பாட்டன் விளக்கம். எனது வாழ்விற்கும் இந்தக் கனவிற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதை அனுபவத்தில் நான் அறிந்தேன்.

மறுநாள் அம்மாளுக்குத் தைரியம் உண்டானது. "பெருமாள் காப்பார்" என்று எந்தை ஜபத்தில் ஆழ்ந்தார். பாட்டி பக்தி கீதங்கள் பாடிக் கொண்டிருந்தாள். தாயார் தாயுமானுர் பாடலைப் பாடி மனதை உன்னத நிலையில் வைத்திருந்தார்.

ஏவிளம்பி, சித்திரை, புதன், உதயாதி பதினொரு நாழிகை, சுக்ல பக்ஷ தசமி, 3—1, ஏகாதசி 55—27. தாயார் பிரசவ வேதனையுடன் "ஹே பரமாத்மா!" என்று அலறுகிறுள். வழக்கமாக ஏகாதசி யன்று நடக்கும் விரத வைராக்கியம் அன்று பிரசவ வைராக்கியத் துடன் சேர்ந்து பலமாக நடக்கிறது. பாட்டி "இந்தப் பிள்ளை பிறந்து தாய் வேறு குழந்தை வேருனல் திருப்பதி சந்நிதிக்கு வந்து மொட்டை போடுகிறேன்?" என்று வேண்டிக் கொண்டு பணம் முடிக்கிறுள்.

கீச் கீச் கீச்! ஒரு புதிய ஜீவன்! "இதோ உலகிற்கு வந்து விட்டேன், என் வினையைச் செய்ய வந்து விட்டேன், விட்ட குறையை முடிக்க வந்து விட்டேன்." என்பது போல் மூன்று கீச்சுக்குரல் கேட்டது. பிறகு குழந்தை கீச்சிடவில்லை, அழவுமில்லை; புன்னகைத்தது. தாயார் மயக்கம் போட்டு விழுந்தாள். வேணிப் பாட்டி குழந்தையை அப்புறம் எடுத்தெறிந்து, தாயைக் கவனித்தாள். குழந்தையும் பிறர் தயவை எதிர்பாராமல் இருந்தபடி இருந்தது. வெளியே பஞ்சாக்ஷரி ஜபித்துக் கொண்டிருந்த மீனுக்ஷிப்பாட்டி ஓடி வந்து, குழந்தையைச் சுத்தம் செய்தாள். ஆனுல், யாரும் செவ்வெண்ணெய் புகட்டவில்லை. தாய்ப்பாலும் இல்லை, தொண்டைக் குழியும் தோண்டவில்லை.

தகப்பனுர் 'இதோ' என்று புட்டிப்பாலை நீட்டினுர். அதைத் தான் எனக்குக் கொடுத்தார்கள். பலன் என்ன? என் உடம்பு குச்சி போல் மெலிந்ததுதான். பிற்காலம் யோக பலத்தினுல் எனது காரியத்திற்கேற்ற சக்திக்கனலை வளர்த்து நோயில்லா வாழ் வெய்தினேன்.

பெற்ருேருக்கு எச்சரிக்கை! தாய்ப்பால் நல்லது; அல்லது ஆட்டுப்பால் பசும்பால் ஊட்டுங்கள். டப்பாப்பாலை ஒருநாளும் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டாம். பால் வாங்க முடியாவிட்டால் புழுங்கல் நொய்யும் கெப்பைமாவும் போட்டு நீர்க்கக் கஞ்சியாக்கிப் புகட்டலாம்.

10. ஜாதகபலன்

தகப்பனருக்குச் சோதிடம் வரும். அவர் கடைக்குட்டியின் லக்னத்தைக் கணித்து ராசி அம்ச சக்கரங்களைப் போட்டார். மாமா, பக்கத்து வீட்டு சாஸ்திரிகள் எல்லோரும் ஜாதகத்தை அலசிப் பார்த்துப் பலன் எழுதினர்கள். அவர்கள் எழுதிய ஜாதகம் இது தான். இது சூரியன் உச்சமான ஜாதகம்.

	சூரியன் சுக்ரன் புதன்		
	ராசி		ல/செ கே/மா
ராகு			வியா
	சனி		சந்

			ராகு
	அம்சம்		செ-வியா சனி
சந்திரன்			சுக்ரன்
சூரியன் புதன் கேது			ல-

"இது யோகி ஜாதகம்; இந்தப் பிள்ளை துறவியாகப்போவான்", என்று ஒரு ஞானி சொன்னர். "அப்படியில்லை; இவன் நன்ருகப் படித்து நன்ருகச் சம்பாதிப்பான்; ஜாம் ஜாம் என்று மந்திரி உத் யோகம் செய்வான்...நல்ல இடத்தில் கலியாணமாகும், வியாழ திசையில்" என்று தகப்பனரும் இன்னும் சிலரும் கூறினர்.

ஒரு பரமயோகி எனது வாழ்வின் பலனை உள்ளே ஆழ்ந்து பார்த்துச் சொன்னர். "பதினெட்டு வயது வரையில் கடுமையான சோதனைகள் வரும், வாழ்க்கை உலக வெறுப்பை யூட்டும். அது தவத்தைத் தீவிரமாக்கும். இருபத்திரண்டு மட்டும் உயர்ந்த கலை வளர்ச்சியும் கவித்திறமையும் பெருகும். இருபத்திரண்டாம் வயதில் ஆத்ம சாட்சாத்காரமும் யோக சித்தியும் உண்டாகும். பிறகு பல மகான்களின் நட்புறவும் புகழும் உண்டாகும். இருபத்தாரும் வயதில் தீவிரமான நிஷ்டையும் சகஸ்ரார சித்தியும் உண்டாகும். பிறகு நீ மௌனமாகவே இருபதாண்டுகள் இருந்து, அரிய ஞானக் கலையை உலகிற்குத் தருவாய். அதன் பிறகு நீ விரும்பினல் உலகப் புகழ் பெறுவாய். இன்றேல் நீ இமயமலைக்குச் சென்று அங்கே யோகசங்கம் நாட்டி, ஆத்ம சித்தியால் மௌனமாகப் பல தொண்டுகள் செய்வாய். உன் உடல் மறைவை யாரும் அறியமாட்டார்கள்..." என்ருர், நூற்றுக்கு ஐம்பது அவர் சொல் பலித்து வருகிறது.

ஆயினும், தசப்பொருத்தம் என்று செய்த திருமணங்கள் வெருகுச் சண்டையில் முடிவதைக் கண்டிருக்கிறேன். ஆயுள் நூறு என்று கொடுத்த பெண் வாபஸ் வரக் கண்டிருக்கிறேன். குணம் தங்கக் கம்பி என்ற இடத்தில், பேய் பிடித்துப் பிதற்றுவதைக் கண்டிருக் கிறேன். ஆதலால் ஜாதகப் பொருத்தம்மட்டும் போதாது. மனப் பொருத்தம் இருக்கவேண்டும், மனோதைரியம் வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும். உதாரணமாக எனது லக்னம் கடகம்; நட்சத்திரம் உத்திரம். உத்திரத்தில் பிள்ளையும், ஊர் ஓரத்தில் செய்யும் என்பர். நான் ஊர் ஓரத்தில் கூட இல்லாமல் இப்படி நாடெல்லாம் ஞானப்பித்தனாகத் திரிந்ததேன்? ஸ்ரீ ராமனுக்கும் கடகலக்னம் எனக்கும் கடகம் என்றால் நான் ராவண சம்ஹாரம் செய்ய முடியுமா? மனதில் பத்துத் தலைகளுடன் அட்டூழியம் செய்யும் காமக்குரோதாதிகளைத்தான் வைராக்கியக் கோதண்டத்தால் வதைக்க முடியும்.

என் அருமைச் சகோதர சகோதரிகளே! ஜாதகம் சாதகமாயிரா விட்டால் கலங்காதீர்கள். மனோதைரியத்தால் நல்ல காரியங்களைத் துணிந்து செய்யுங்கள்.

11. என் பெயர் எது?

ஜாதகர்மத்திற்குப் பிறகு நாமகர்மம் வருகிறது. என் பெயர்கள் பல; எல்லாம் காரணப் பெயர்கள். இயற்கையில் எதற்கும் பெயர் இல்லை. வண்ணான் வேட்டிக்குக் குறிபோடுவதுபோல் நாமும் ஒரு பெயர் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. வேங்கடப் பெருமாள் கனவில் வந்தார்! மணி தந்தார் அல்லவா? அதனால் எந்தை எனக்கு வேங்கட(சுப்பிர)மணி என்று பெயரிட்டார். வேங்கட சுப்பிரமணியன் பள்ளிக்கூட ஆஜர் புத்தகத்துடன் சரி...இந்தப் பெயரே மறைந்து போனது. நான் செல்லப்பிள்ளையாக வளர்ந்தேன் என்பர்...உண்மை அது இல்லை. ஆனால், எனக்குச் செல்லையா என்று குடும்பத்தில் பெயர் வழங்கியது. எனக்கு ஏழுவயதில் திருப்பதி மொட்டை போட் டார்கள்; மொட்டையடிப்பதில் எனக்கும் அளவற்ற இன்பம். தலை வழித்துக்கொண்டு வா என்று பணம் தந்தால் வழுக்கை மொட்டை யடித்துக் கொண்டு வந்து வசவு வாங்குவேன். என் மொட்டைக் காத லால் எனக்கு போடி, மொட்டை, திருப்பதி மொட்டை என்றுபெயர் வழங்கியது. சதா திருப்பதிக் காதல் என்னைப் பற்றிக்கொண்டது. ஆதலால் என்னைச் சிலர் கொண்ட (ஏழுமலை) என்று அழைத்தனர். இந்தப் பெயர்களையெல்லாம் மறதிக் குழியில் தள்ளி, எனக்கேற்ற பெயரைத் தந்தவர் ஒரு யோகசித்தர்...அதுவே சுத்தானந்தன் என்ற பெயர். அந்த மகானின் அருள் உள்ளத்தில் உதித்த அந்தப் பெயரே எனது ஆதர்சம். சுத்தமே கடவுள், சுத்தப்பிரமம். பரம

சுத்தவஸ்துவான கடவுளே இன்பம், ஆனந்தம்: தூய பரம்பொருளின் அன்பிலும் அறிவிலும் ஐக்கியத்திலும் இன்புறுவோன் சுத்தானந்தன். அத்தகைய தூய இன்ப நிலைபெற்று இன்பத் தூயனாகவே நான் எனது வாழ்வை அர்ப்பணித்தேன். பாரதி என்பது எனது துறவுப் பெயர்; நான் பரமஹம்ஸ ஸந்யாசியானேன், தீட்சாகுரு எனக்கு சுத்தானந்த பாரதி என்று பெயரளித்தார். பாரதி என்பது எனது கவிதைப் பெயரன்று. மேலும் எங்கள் வீட்டுப் பெயர் பாரதிவாரு; நான் உபாசிக்கும் வாக் தேவியும் பாரதி. ஆதலால், சுத்தானந்தத் துடன் பாரதியும் சேர்ந்தது. இந்தப் பெயரைக் கேட்கும்போது நான் என்னை நினைப்பதில்லை: என்னுள் அதுவான தூய பரம்பொருளை யும் அதன் அருளான பாரத சக்தியையும் நினைப்பது வழக்கம். அதனாலேதான் நான் கடவுளை சுத்த சக்தியாக உபாசித்தேன்.

மற்றொரு மகான் என்னை சத்யார்கா என்றார். சத்தியக்கதிர் என்பது எனக்கு மனச் சாட்சிதான். ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திற்கு வந்த பிறகு நான் தெய்வக்காதலில் முதிர்ந்தேன். கடவுளை எனது காதலனாகவே கண்டேன். என்னை ராதா என்று கருதி கடவுளைக் கண்ணன் என்று அன்பு செய்தேன். அதனால் அவன் அருளால் ராதானந்தா ஆனேன். ராதானந்த பாபுவும் ஆனேன். இவற்றைத் தவிர நான் அத்வைத சாதனம் செய்தபோது, ஆத்மானந்தன் என்று பெயர்பெற்றேன். சிவானந்தன், சக்திச் சுடர் என்ற பெயர்களும் உண்டு. பள்ளிப் பருவத்தில் நான் யோகம் பயின்றதால் என்னை யோகி, ஞானப்பைத்தியம் என்று தோழர் கேலிசெய்வதுண்டு. எந்தாய் என்னை யோகி என்றே அழைக்கவேண்டும் என்றாள். எல்லாம் வடிகட்டிப் பார்த்தபிறகு சுத்தானந்தன் என்பதே எனக்குப் பிடித் தது. யோகி, பாரதி என்பன என் ஆதர்சங்களை எப்போதும் நினைப் பூட்டவேயொழிய, பட்டம் வைத்துப் படாடோபம் செய்ய அன்று. ஒருகாலத்தில் நான் இந்தப் பெயரைக்கூட வழங்காமல் கடிதங்களின் அடியில் தங்கள் அன்புள்ள ○ சுன்னம் என்று போட்டுக்கொண்டிருந் தேன். ஏனெனில், எல்லாம் முடிவில் அந்த வட்டத்தில், சோம வட்டத்தில், அடங்கிவிடுகின்றன அல்லவா?

போதும் பிறந்த கதை, இனி வளர்ந்த கதையைக் கேளுங்கள்!

II வளர்ந்தேன்

12. சிவகங்கையின் வீரப்புகழ்

சிவகங்கை எனது ஜீவகங்கை. இது வீர மறவரின் புரட்சிக் கோட்டை. தமிழ்ப் புலமையின் சங்கமாளிகை. சோழனால் நாடு கடத்தப்பெற்ற கம்பர், சிவகங்கை மறவர் பாதுகாப்பில் கவிச்சக்கர

வர்த்தியாக வாழ்ந்தார். சிவகங்கைக்கு நாலுமைல் தூரத்தில் உள்ள நாட்டரசன் கோட்டை அந்தப் பாட்டரசன் கோட்டையே. கம்பர் சமாதி இன்று அங்கே விளங்குகிறது. வேம்பத்தூர் பிச்சுவையர், கவிகுஞ்சரி பாரதியார், வில்லியப்பக்கவிராயர், இராமலிங்கப் புலவர், தெய்வசிகாமணிப்புலர் போன்ற அறிஞர் சிவகங்கையில் விளங்கினர். இராமதாஸ்பாகவதர், தசரத ராமபாகவதர், நரசிம்ம பாகவதர் போன்ற கதாநிதிகள் இங்கே வாழ்ந்தனர். இராமேசுரம் செல்லும் பெரியார்கள் அனைவரும் அந்தக் காலம் சிவகங்கை சத்திரத்தில் தங்கியே செல்வர். சிறுவயதில் எனக்கு வழிகாட்டிய பலபெரியோர் களை நான் இந்தச் சத்திரத்தில் சந்தித்தேன்.

பதினெட்டு வயதுவரையில் நான் சிவகங்கையிலேயே வளர்ந் தேன். அதன் காற்றும் கதிரும் நீரும் மண்ணும் ஒளியும், பாட்டும் மனிதர் இயல்பும் எனக்குக் கலைக்களஞ்சியமாக உதவின. இரண்டு வயது முதல் நான் கண்டது கேட்டதெல்லாம் எனக்கு நினைவிருக் கிறது.

சங்ககாலம் முதல் மதுரைக்கும் தொண்டிக்கும் சிவகங்கை ரஸ்தா வழியாகப் போக்குவரத்து நடக்கிறது. நான் அடிக்கடி இந்த வழியே கால்நடையாகவும் கட்டைவண்டியிலும் சென்றதுண்டு...வண்டி கொடிகளில் இறங்கி 'படக்' என்று மண்டை முட்டினாலும் பரவா யில்லை; "சந்தைவண்டி குட்டுக்குச் சந்தனத் தேவன் தெம்மாங்கு மருந்து" என்பதுண்டு. வண்டிக்காரர், மதுரை வண்டியூர் தெப்பக் குளத்தில், மாட்டைப் பூட்டுவார்; மனலூரில் தெம்மாங்கு தொடங் கும்...செம்பனூர் வந்ததும் கண்மயங்கும்; தெம்மாங்கு மட்டும் உறங் காது...நூறு வண்டிகள் சேர்ந்து புறப்படும்போது, பத்து இருபது வண்டிகளிலிருந்து தெம்மாங்கு வந்துகொண்டேயிருக்கும்...

தண்டை சிலம்பு சலசலக்க
சந்தனம் வாராண்டீ கலகலக்க
எல்லாரும் ஏறும் வண்டி
ஏழைக்கேற்ற கட்டை வண்டி
சந்தனம் ஏறும் வண்டி
சரியான பொட்டி வண்டி (தண்)

எல்லாரும் கட்டும் வேட்டி
ஏழைக்கேற்ற கம்பி வேட்டி
சந்தனம் கட்டும் வேட்டி
சரியான சரிகை வேட்டி (தண்)

இப்படியே சந்தனத்தேவன் புகழைப் பல குரல்கள் பாடும். சிவ கங்கைக்கு வண்டிகள் வரும். அப்போது வண்டிக்காரர் தெம்மாங்கு எங்கள் வீட்டிற்குக் கேட்கும் :

சிங்க மறவர் வாழும் சிவகங்கைச் சீமையிலே
தங்கம் போல் வாழ்வோமடீ தாழ்வொன்றும் இல்லையடீ
தன்னனே தன்னனே தளுக்குத் தங்கம்.
மானோடும் காட்டினிடுல மாம்பழத் தோட்டத்திலே
தேனோடும் தென்றல்வந்து சிலுசிலென வீசுதடீ.
தேரோடும் வீதிகளும் சிவபெருமாள் சந்நிதியும்
காரோடும் வீடுகளும் கண்குளிரக் காண்போமடீ.
சத்தரமும் சாவடியும் தாமரை வாவிகளும்,
முத்துநகை வீசுகின்ற முகமலரும் காணுதடீ.
கத்திவிளையாட்டுகளும் கம்புவிளை யாட்டுகளும்
குத்துவிளை யாட்டுகளுங் கூத்துடனே காண்போமடீ.

இப்படிப் போக்குவண்டிக்காரர் கூடச் சிவகங்கையின் பெருமையை நாடெங்கும் பாடினர். சிவகங்கை மறவர் அறநிலம். தென்னிந்திய சரித்திரத்துடன் அதன் விதியும் மதியும் கதியும் பின்னப்பட்டிருந் தன. முன்னே சிவகங்கை சேதுசமஸ்தானத்தின் பங்காயிருந்தது. விசுவநாத நாயக்கர் காலத்தில், தளவாய் ஆரியநாத முதலியார், பாண்டி நாட்டை எழுபத்திரண்டு பாளையங்களாக வகுத்துப் பலப்படுத்தினர். சேதுயாத்திரை போகும் பிரயாணிகளைக் காக்கவும், அங்கே அமைதி நாட்டவும் இராமநாதபுரம் மறவர் தலைவனைச் சேதுபதியாக்கினர். முத்துவீரப்ப நாய்க்கர் காலத்தில், சேதுராஜ்யம் எழுந்தது. சிவகங்கை புதுக்கோட்டை எல்லாம் இராமநாதபுரம் சேதுசமஸ்தானத் திற் சேர்ந்திருந்தன. தொண்டைமான், சேதுபதிக்கு வாட்பணிபுரிந் தான். ஒரு தரம் தஞ்சைப் பகைவன் யானையைத் தந்திரமாக ஓட்டிக் கொண்டு இராமநாதபுரத்திற்கு வந்தான். உட்கலகங்களை அடக்கத் துணைசெய்தான். அதற்காகவே சேதுபதி அவனுக்குப் புதுக்கோட்டை யைத் தந்தான். நாயக்க மன்னரும் தொண்டமானின் போர்த்தொண் டிற்காக சில நிலங்களைத்தந்தனர். எல்லாம் சேர்ந்து புதுக்கோட்டை சமஸ்தானமானது. தொண்டைமானின் தங்கை கதலியை கிழவன் சேதுபதி மணம்புரிந்தான்.

சிவகங்கை மறவரும் சேதுபதிக்கு வலதுகைபோல் உதவினர். நவராத்திரியின்போது தமது வீரவரிசைகளைக் காட்டினர். புலி சிங்கத்தைக்கூடப் பொருது வெல்லும் ஆற்றல் படைத்த இந்த வீரர் வீரத்தை மெச்சாத மன்னரில்லை. எங்கே கலகம் கிளம்பினாலும் மறவர் அதை அடக்கத் துணைசெய்து, சேதுபதிக்கு வெற்றியளித்தனர்.

நாலு கோட்டை சசிவர்ண பெரிய உடையாத்தேவர் வீராதிவீரர். அவர் இராமநாதபுரத்தில் எழுந்த உட்கலகத்தை அடக்கி, குமார முத்துவிஜயரகுநாத சேதுபதியை அரியணையில் வைத்து முடிசூட்டினார். அன்று பல வீரச்செயல்களைக் காட்டினார். சேதுபதி மிக்க மகிழ்ச்சியடைந்து, தேவருக்கு அகிலாண்டேச்வரியை மணம் புரிந்து, தமது அரசில் ஐந்தில் இரண்டு பங்கும் சாசனம் செய்து அளித்தார். இந்தப் பங்குதான் (கி. பி, 1730-ல்) சிவகங்கை ஜமீனாக எழுந்தது. சிவகங்கை தென் எல்லையில் இன்னும் அகிலாண்டேச்வரி சத்திரம் உள்ளது. சிறுவயதில் பெரிய உடையாத் தேவருக்கு ஒரு முனிவர் ஆசியும் கிடைத்தது. சசிவர்ண பெரிய உடையாத் தேவர் இருபதாண்டுகள் சிவ கங்கையை ஆண்டு, அதை உருவாக்கி, மகன் முத்துவடுகநாதத் தேவரிடம் தந்து சென்றார். இவர் (1750—1772) இருபத்திரண்டாண்டுகள் வீரவாழ்வு வாழ்ந்தார். அந்தக் காலச் சரித்திர நிகழ்ச்சிகளில் இவர் பெயர் விளங்குகிறது.

இச்சமயம் மதுரை நாயக்கர் ஆட்சி அஸ்தமித்துக்கொண்டிருந்தது. மங்கம்மாள் பேரன் விஜயரங்க சொக்கநாதன் திருச்சிப் பாசறையில் இறந்தான். மராடியரும் நவாபும் ஊரைவளைத்துக் கொண்டனர். நாயக்கரின் இளம் விதவை மீனாட்சி ஆட்சிபுரிந்தாள். அவளைச்சுற்றி ஒற்றரும் சதிகாரரும் சூழ்ச்சி செய்தனர். அவள் சிவகிரிப் பாளையக்காரனை பங்காரு திருமலையின் மகன் விஜய குமாரனைத் தத்தெடுத்துக்கொண்டாள்; வந்தது கேடு. 'பெண்பிள்ளை நாட்டை ஆளுவதாவது, பட்டம் என் மகனுக்கே...நானே ஆளுவேன்' என்று கிளர்ச்சி செய்தான் பங்காரு. அவன் சிவகங்கை மறவர் உதவியை நாடினான். மறவர் மறுபடியும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் நாட்டித் தமிழ்ப் பண்பையும், தமிழர் சுதந்தரத்தையும் காக்க முனைந்தனர். மீனாட்சி பக்கம் அவன் தமயன் பெருமாள் நாய்க்கன் இருந்து பங்காருவை எதிர்த்தான். உட்போர் வலுத்தது; வெளிப்பகைவர் புகுந்தனர்.

இந்தக்காலம் மராதியர் தாக்குதலாலும் நாதிர்ஷா படையெடுத்ததாலும், தில்லிபாதுஷாவின் அரியணை ஆடிப்போனது. சுல்தான் முகமதுஷா நாட்டைப் பல சுபாக்களாக வகுத்து, சுபாக்களை நவாபிகளாக வகுத்து, அதற்குத் தலைவர்களை நியமித்து, முறையாக ஆளப் பார்த்தான். ஆனால், தனிக்காட்டு ரசாக்கள் கிளம்பிக் கலகம் விளைத்தனர். ஆற்காட்டு நவாபு தோஸ்தாலி ஐதராபாது சுபேதாருக்குக் கப்பம் சரியாகக் கட்டவில்லை; சுபேதார் தில்லி பாதுஷாவுக்குக் கப்பம் கட்டமுடியாது கொட்டாவி விட்டான். ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்தனர். தோஸ்தாலி தன்மகன் ஸப்தராலியையும் மாப்பிள்ளை சந்தாசாகிபையும் கிஸ்தி வசூலுக்காகத் தெற்கே அனுப்பினான்; மறவரிடம் சல்லி பெயரவில்லை. பங்காருதிருமலை முப்பதுலட்சம்

ரூபா தந்து, சந்தாசாகெபின் படையுதவியைப் பெற்றான். சாகெபு திருமலையைத் தூக்கி அரியணைமேல் வைத்தான். மீனாட்சி ஒருகோடி ரூபா தந்து சந்தாசாகெபை வசப்படுத்தினாள். அந்தப் பேர்வழி பங்காருவை அம்மையநாயக்கனூரில் முறியடித்து, மீனாட்சியை அரியணை யேற்றினான். பங்காரு சிவகங்கைக்கு ஓடிப்போய்ச் சூழ்ச்சி செய்தான். உட்கலகம் எழுந்தது. சந்தாசாகெபு திடீரென்று புகுந்து மீனாட்சியைச் சிறையிட்டு மதுரையைக் கைப்பற்றினான்--எல்லாம் துரோகிகளின் நாசவேலையால்! மீனாட்சி சிறையில் நஞ்சை உண்டு இறந்தாள். நாயக்கர் ஆட்சி அத்துடன் ஒய்ந்தது. உள்நாட்டில் குழப்பம் வலுத்தது. சிவகங்கை மறவர் இனித் தென்னிந்தியாவில் அன்னியர் கொடி ஆடாது காக்கத்தலைப்பட்டனர். கிஸ்திக்கு வந்த நவாபு படைகளைத் திருப்பி ஓட்டினர்.

ஐதராபாதில் 1748ல், குழப்பம் வலுத்தது. அந்தக் குழப்பம் ஆற்காட்டையும் பிடித்தது. ஊடே புகுந்த வெள்ளையர்கை மேலோங்கியது. பிரெஞ்சு தூப்ளேயும், ஆங்கில கிளைவும் தென்னாட்டில் கொடிபோடப் போட்டியிட்டனர். சந்தாசாகெபு பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து, ஐதராபாதில் முஜபர் ஜங்கை நவாபாக்கினான்; தெற்கே அன்வாருதீனை ஆம்பூரில் வீழ்த்தி, தானே ஆற்காட்டு நவாபானான். அன்வாருதீன் மகன் முகம்மதலி திருச்சிக்கு ஓடி, கிளைவைச் சரணடைந்தான். கிளைவ் ஆற்காட்டை முற்றுகையிட்டு, நம்மவர் அருந்துணையால் கைப்பற்றி, பிரிட்டிஷ் கொடியை நாட்டினான். சந்தாசாகெபு பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்து முயன்றும், பயனில்லை; அவனுக்கு சிவகங்கை மறவரும் துணை நின்றனர்; புதுக்கோட்டை தொண்டைமான் பிரிட்டிஷ்பக்கமே நின்றான். முத்துவடுகநாதத் தேவர் வீரர்களை புதுச்சேரிக்கு அனுப்பித் தற்காலப் போர்க்கலையில் தேர்ச்சி பெறச்செய்தார். திருச்சியில் புகுந்த சந்தாசாகெபை துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். ஆங்கிலேயர் கொன்றனர்.

கிளைவ் முகம்மதலியை ஆற்காட்டு நவாபாக்கினான். நவாபு கிஸ்தி வசூலுக்கு அண்ணா மகபூத்கானை அனுப்பினான். மறவரிடம் பலிக்கவில்லை. கும்பினிக்காரரிடமே அந்த வேலையை விட்டான். அவர்கள் யூசப்கான் என்ற தமிழ் முஸல்மானை நியமித்தார்கள். படைச்செலவுதான் மிச்சம். பாஞ்சாலம் குறிச்சி, சிவகிரி, சிவகங்கை, ராமநாதபுரம் வீரர் கும்பினிக் கொடியை மதிக்கவேயில்லை; சுதந்திரக் கொடியை நாட்டி ஆண்டனர். "நாயக்கர் அரசை நாமே வகிக்கிறோம் நமக்கே கப்பம் கட்டும்" என்று முனைந்தான் மராடிய துளஜாஜி; "சை! அவனுக்குக் கப்பமா...எனக்கே" என்று வந்தான் நவாபு...கும்பினிக்காரர் "நாம் கொடி நாட்டினோம், எமக்கே கப்பம்" என்றனர். மூவரும் மறவர் சீமையைப் படையெடுத்து நிர்த்தூளி செய்தனர். சிவகங்கைக்குப் பெருவாரியான போர்ச்செலவு; அதனால்

அது கடனுளியானது. என்றுலும், வீரக்கடமையில் சிறிதும் குன்ற வில்லை. 1772ல்—தொண்டைமான்—நவாபு—கும்பினிப் படைகளுடன் ஜோஸப் ஸ்மித் சிவகங்கையைத் தாக்கினுன். இக்காலம் மூன்று வீரர் அன்னியரை விரட்டியடிக்கச் சுதந்தரக் கொடி பிடித்துப் போர் முனையில் குதித்தனர்—முத்துவடுகுநாதத்தேவர், பெரிய மருது, சின்ன மருது. இவர்கள் அசகாய சூரர்கள். பெரியமருது "இந்தக் கும்பினிப்படையை இப்படி முறியடிப்பேன்" என்று கும்பினி ரூபாயைக் கையால் வளைத்து முறித்தான். சின்னம்ருது போர் அரங்கை அமைத்து நடத்தினுன். அவன் வைத்த குறி தவருது.

கும்பினிப்படை சிவகங்கை அரண்மனையை வளைத்துக்கொண்டது உடனே சின்னமருது முத்துவடுகுநாதத்தேவரை ஒரு தனி வழியே காளையார்கோவில் கோட்டைக்குள் கொண்டு சேர்த்து, அங்கே கடும் போர் தொடங்கினுன். ஒரு குண்டுணிச்சுப்பன் பகைவருக்குப் பாதை காட்டிக்கொடுத்து துரோகம் செய்தான். அதனுல் பகைவர் காளையார் கோவிலில் புகுந்தனர். ஒரு துளி ரத்தம் இருக்குமட்டும் போர்செய்து, சுதந்தரக் கொடியைப் பிடித்துக்கொண்டே முத்துவடுகு தியாகபலியானுன். அந்தக் கொடியை மருது சகோதரர் தாங்கிப் பிடித்தனர். அவர்கள் சிவகங்கை அரண்மனையைக் காக்க ஓடிவந்தனர். அங்கே கும்பினிப்படை கொட்டமடித்து, ராணி வேலுநாச்சியாரைப் பிடிக்க அந்தப்புரத்திற்குள் பாய்ந்தது. சின்னமருது எப்படியோ உள்ளே புகுந்து பெருந்திரளான செல்வத்துடன் ராணியையும் மூடு பல்லக்கில் அழைத்துக்கொண்டு 2000 மறவருடன் பூச்சிநாய்க்கன்பாளையம் போய்ச் சேர்ந்தான். குண்டுணிகள் துப்புச்சொல்லவே கும்பினிப் படைகள் பூச்சிநாய்க்கன் ஊரை வளைத்துத் தேடின. அங்கே ராணியில்லை...பிறகு எங்கே?

வேலு நாச்சியார்

திண்டுக்கல்லில் ஐதராலி முகாம் போட்டு, ஆங்கிலேயரை ஓட்டவே போர்முரசு கொட்டினுன். அவன் சிவகங்கைப் புரட்சிக்காரரை வரவேற்ருன். வேலு நாச்சியாரின் வீரத்தைப் புகழந்தான். அவளும் போர்க்கலை கற்ருள். சின்னமருது மாறுவேடம் பூண்டு அரியலூர், உடையார்பாளையம், சிவகிரி, பாஞ்சாலம்குறிச்சி, சிவகங்கை முதலிய பல இடங்களுக்குச் சென்று புரட்சி வீரரைத் தூண்டினுன். ஆயுதங்களைச் சேர்த்தான். அவன் கையில் இருபதினுயிரம் வீரர் தயாரானுர். ஏராளமான ஆயுதங்கள் சேர்ந்தன—துப்பாக்கி, வளைறிக்கம்பு, வில், வாள், ஈட்டி முதலியன. இச்சமயம் மைசூர் யுத்தம் வலுத்தது. திப்பு சுல்தான் அங்கே ஆங்கிலேயருக்குப் பலமான வேலை வைத்தான். ஆதலால் பகைவர் சிவகங்கைப்பக்கம் மிதப்பாயிருந்தனர். இதுவே சமயம் என்று மருது சகோதரர் மெல்லப் புகுந்து, சிவகங்கை

மறவரைத் தாண்டிவிட்டு வந்து, வேலு நாச்சியாருடன் சிவகங்கையில் புகுந்தனர்; விஜயதசமியன்று சிவகங்கையை வென்று முரசு கொட்டி வேலுநாச்சியாருக்கு முடி சூட்டினர்.

மருது சகோதரர்

1790ம் ஆண்டு வேலு நாச்சியார் இறந்தார்; அவள் மகள் வெள்ளாச்சி மூன்றுண்டும் அவள் கணவன் வங்கம் பெரிய உடையாத் தேவர் எட்டாண்டுகளும் ஆண்டனர். வங்கம் தேவர் தொண்டியில் பெரிய கப்பல் வணிகத்தை நடத்தினர். இதற்குள் மருது சகோதரர் கை வலுத்தது. அவர்கள் மந்திரிகளாயிருந்து பிறகு செங்கோல் நடத்தத் தொடங்கி, மருதுபாண்டியராயினர்; தஞ்சை, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரமெல்லாம் சுதந்தரக்கொடி நாட்டி ஆள நீளக்கனவு கண்டனர். அதற்கேற்ற படையும் திரட்டி, கும்பினிக் காரரைக் குறி வைத்தனர். இவர்கள் ஆற்றலும் தோற்றமும் கண்டு வெள்ளைத் துரைமார் சள்ளைப்பட்டனர். மருது சகோதரர் சிவபக்தர். தினம் சிவபூஜை செய்து,

> கேடுசெய்யும் துஷ்டர்கள் கெட்டொழிந்து போகவே
> நாடு கூடி வாழவே நல்லசிவம் அருள்கவே

என்று தோத்திரம் செய்வாராம். பிறகு தான தருமங்கள் செய்வார்கள். நாளெல்லாம் வீரப் பயிற்சிதான். தீட்டிய வீரத்திற்கு நீட்டிய போர் வருகிறது.

பாஞ்சாலம் குறிச்சிப் போர்

திருநெல்வேலி கம்பள நாயக்கரும் சிவகிரி மறவரும் கும்பினிக்காரருடன் போர் தொடுத்தனர். கறுத்தையா கட்டபொம்மு, சிவத்தையா குமாரசாமி, துரைசிங்கம் ஊமையன் ஆகிய மூவரும் பஞ்சாலம் குறிச்சியில் விடுதலைக்கொடி நாட்டி ஆண்டனர். ஐநூறடி நீளம் முன்னூறடி அகலம் உள்ள பெரிய கோட்டை கட்டி ஏராளமான ஆயுதங்களைக் கொண்டு சேர்த்து, இவர்கள் பலமான போர் புரிந்தார்கள்.

மேஜர்களும் கர்னல்களும் நயமாகவும் பயமாகவும் இவர்களிடம் கிஸ்தி வசூலிக்கப் பார்த்தனர். "இதோ கிஸ்தி" என்று ஒரு சாக்கு வரும்; கலெக்டர் ஜாக்குஸன் ஆவலாக அவிழ்ப்பார்; சாக்கில் கூழாங் கல்லே காணும்! ஒருமுறை இவர்களை இராமனுதபுரம் கோர்ட்டில் கொண்டுவந்து ரிமாண்டில் வைத்தார் கலெக்டர். உடனே பாஞ்சாலம் குறிச்சிக்கோட்டையைக் காலிபண்ணி சாமான்களை ஏலம் போட்டார். கோர்ட்டு விசாரணை நடக்கிறது. ஊமையன் சாடை காட்டினன், வெளிக்குப் போவதுபோல் சென்று கட்டபொம்மு ஒரே தாவில் காவல் துரையைக்கரும்புபோல் வெட்டினன். 'ஹா ஹா சுடுசுடு' என்று அலறினன் கலெக்டர். அதற்குள் பகதூர் வெள்ளையன் கட்டபொம்முவை

அத்தாயகமாகத் தூக்கிக்கொண்டு ஓடி மறைந்தான். ஐயோ என்று வெண்ணெய்வெட்டிச் சிப்பாய்கள் அலறி ஓடினர். பெரியமருதின் மற வீரர் அங்கே துணைசெய்தனர். கட்டபொம்மு சகோதரர் பாஞ்சாலம் குறிச்சிக்கு மீண்டு, ஏராளமான ஆட்களைக்கொண்டு ஒரேநாளில் கோட்டையைப் புதுக்கிக் கொடிபோட்டு ஆண்டனர். மேஜர் பானர் மான், அந்தக் கோட்டையை பலமான பீரங்கிப்படையால் தாக்கினான். கட்டபொம்மு கும்பினிப்படையை வெட்டிச் சுட்டுச் சுட்டுத் தள்ளி னான். கும்பினிப்படைகளும் பலமாகச் சுட்டுக் கோட்டையை இடித்து உள்ளே புகுந்தன. எங்கே கட்டபொம்மு...!

ஊமையன் சண்டை

ஆள் நாகலாபுரத்தில் மறவர் படை சேர்த்துப் புரட்சி ஜோடித் தான். துரோகிகள் துணையால் பானர்மான் நாகலாபுரத்தை வளைத் தான்- கட்டபொம்மு சிவகங்கைக்கு ஓடி மருது சகோதரருடன் சேர்ந்து கொண்டான். புதுக்கோட்டை விஜயரகுநாதத் தொண்டைமான் சிவகங்கைக் காட்டை வளைத்து, கட்டபொம்முவைப் பிடித்துக்கொடுத் தான்! 16—10—1799ல், கயத்தாற்றில் பானர்மான் கட்டபொம்மு வைத் தூக்கிலிட்டான். பொம்மு துரோகக் கும்பலை முறைத்துப் பார்த்து, ஊமையனுக்கு சாடைகாட்டி, சுதந்தரப் புன்னகையுடன் இறந்தான். பானர்மான் உடனே ஊமையன் முதலிய எழுவரைப் பிடித்து பாளையங்கோட்டையில் சிறையிட்டான். பாஞ்சாலம் குறிச்சி வீரரும் மருதநாட்டு மறவரும் சும்மா இருப்பார்களா? சிறையிலிருந்தே ஊமைத்துரை பெரிய புரட்சிப் படை சேர்த்தான். எல்லோரும் விறகு விற்பவர், பயறு அவித்து விற்பவர், புல் விற்பவர்போல் சிறையைச் சுற்றிக் கூடினர். சந்தைகளில் திரிந்தனர். வெள்ளையர் கூடிக் குடித் துக் கும்மாளம்போடும் ஒருநாள் சிறையில் கலகம்! கதவுகள் படார் என்று தகர்ந்தன. விறகுக் கட்டுகளிலிருந்து பளபள வாட்கள் புறப் பட்டன...புல்லிலிருந்து துப்பாக்கிகளும் ஈட்டிகளும் நீட்டின. ஊமை யன் சிறைக்காவலரை வெட்டிச் சாய்த்தான். சகாக்களுடன் ஒரே தாவில் ஓடித் தப்பினான். அவன் வீரர் வாட்களை வீசிக்கொண்டே பகைவரை வீழ்த்திப் பாஞ்சாலங் குறிச்சி சேர்ந்தனர், தரைமட்ட மான கோட்டையை மீண்டும் வானளாவ எழுப்பிக் கொடிபோட் டான் ஊமைத்துரை. ஊழித்தீப்போல் வந்தான் மேஜர் பானர்மான். ஆழி வெள்ளம்போல் பாய்ந்தான் ஊமையன்; மெக்காலே வந்த வழியே ஓடிப்போய் திருச்சிப் பட்டாளங்களுக்குச் செய்தியனுப்பி னான். அதற்குள் ஊமையன் கொடி, தூத்துக்குடிவரையில் பறந்தது. வந்தான் மேஜர் ஷெப்பேட். ஓட்டைப்பிடாரத்தில் ஊமையன் படை அவனை எதிர்த்து முறியடித்தது. ஷெப்பேடுக்கு இந்தச் சிங்கத்தின் வீரம் தெரிந்தது; ஓடிப்போனான்: இரண்டு மாதங்கள் அமைதி; வந்தான் அஞ்ஞுதுரை; அசுரப்போர் புரிந்து படுகொலை செய்து

கோட்டையைத் தகர்த்து உள்ளே புகுந்து "பிடி ஊமையை' என்ருன். ஊமையைக் காணேம்...பிணக்குவியலைப் புரட்டினுன், காணவில்லை. கும்பினிக்காரருக்குத் துணைசெய்த எட்டையபுரம் துருப்புகள் வீடு வீடாகத் தேடின. ஒரு வீட்டில் வேப்பிலை செருகியிருந்தது. "ஐயோ! என் அருமைமகன் அம்மைகண்டு மாண்டானையா"...என்று ஒரு தாய் மாரடித்து அலறினுள். "ஐயோ தொத்துகோய்" என்று அஞ்சி அஞ்ஞு ஆட்கள் அந்தத் தெருவை விட்டே அகன்றனர். அந்த வீட்டிலிருந்து ஒரு பிணம் புறப்பட்டது...நல்ல இருட்டு; சுடுகாட்டுக்கு வந்ததும், பாடையிலிருந்து பிணம் எழுந்தது... குதிரைமேல் ஏறி விட்டது. சவாரி......பிணம் யார்?......ஊமைத்துரைதான்!.. நூறுமைல் அதிவேகமாகக் கடந்து சிவகங்கைக்குப் போய்விட்டான். அங்கே மருது சோதரர் மேளதாள ஊர்வலத்துடன் அவனை உபசரித்து "செய்வோம் சுதந்தரப் போர்" என்றனர்.

சிவகங்கைப் போர்

சிவகங்கை மருதுப் புரட்சி சரித்திரப் புகழ் பெற்றது. சிறுவயலில் மருது, திருமயத்தில் ஊமையன் படைவீடமைத்துக்கொண்டு, வெள்ளையரைத் தூங்கவிடாமல் அடித்தனர். புதுக்கோட்டைத் தொண்டைமான் வெள்ளையருக்கு எல்லா உதவியும் செய்தான். இன்றேல் புரட்சிக்காரரைப் பிடித்திருக்கவே முடியாது. இரவில் இளநீர் (தலைகள்) வெட்டிக் குவித்துப் பகலில் காட்டுப்புதர்களில் மறைந்தனர் வீரர். அங்கே கைவைத்தால் படார் என்று வெடி; ஆளைத் தூக்கியடிக்கும். மருதின் ஒற்றர் ஆலமரங்கள்மேல் அமர்ந்து பகைவரை உளவு பார்ப்பர். பகைப்படை வந்தால், ஒரு சீழ்க்கை போதும்...எல்லோரும் வளைத்துக்கொண்டு பகைவரைத் தீர்த்துக் கட்டுவர். எதிரி சேனை பலம்; துரோகிகள் சூழ்ச்சியும் பலம்; முடிவில் சிறுவயலில் மருதுபாண்டியரைப் பிடித்து திருப்புத்தூரில் தூக்கிட்டனர். ஊமையனை வஞ்சனையாக விருந்திற்கு அழைத்துக் காட்டிக்கொடுத்தார் ஒற்றர். கும்பினிக்காரர் அவனையும் சிவத்தையாவையும் பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிட்டனர். 79-புரட்சி வீரரை பிரின்ஸ் ஆவ்வேல்ஸ் தீவிற்கு அனுப்பினர். இத்துடன் ஒரு சண்டமாருதம் ஓய்ந்தது. நாலுகோட்டை மறவர் ஆட்சியும் ஓய்ந்தது.

கும்பினிக்காரர் படமாத்தூர் மறவர் தலைவரான கௌரி வல்லப பெரிய உடையாத்தேவரை சிவகங்கை ஜமீன்தாரராக நியமித்தனர். கர்னல் அஞ்ஞு துரை புதுக்கோட்டைப் படைகளுடன் வந்து முடிசூட்டு விழா சிறப்பாக நடத்தினுன். சிவகங்கை அன்றுமுதல் இஸ்திமிரார் ஜமீன் ஆனது.

கௌரிவல்லபத்தேவர் கலாரசிகர், தாராளமான ஈகைச்செல்வர். இவர் தர்பாரில் புலமையும் நீதியும் விள்ங்கின. கவி குஞ்சர பாரதி

யார், வேம்பத்தூர் பிச்சுவையர், வில்லியப்பக் கவிராயர். எனது தமிழாசிரியர் தெய்வசிகாமணிப் புலவர், பெரிய வைத்தினாதர், சின்ன வைத்தினாதர் முதலிய பல புலவர் தேவர் சபையை அலங்கரித்தனர்.

லெஸ்ஸிகள் ஆட்சி

பிற்காலம் சிவகங்கை கடனுக்கு உள்ளானது. ஸ்ட்ரானக் என்ற ஆங்கிலேயர் சில லகாரங்கள் தந்து அதைக் குத்தகைக்கு வாங்கிப் பெருத்த லாபம் அடித்தார். லெஸ்ஸிகள் என்ற வெள்ளைக்காரர் ஜமீன்களை நிர்வகித்தனர். அவர்கள் செய்த பெரும் செயல் சிவகங்கைக்குப் பெரியாற்று நீரைக் கொண்டுவந்ததே. சிவகங்கையில் பெரிய அரண்மனையிலும் அதைச் சூழ்ந்த சிறிய அரண்மனைகளிலும், அரச குடும்பத்தார் வசித்தனர். அவருள் டில்லிபாசாத் தேவரை நன்கு அறிவேன்—கம்பீரமான வீரர். அவர் அந்தக்கால வீரர் கதைகளை உருக்கமாகச் சொல்லுவார். அவர் மகன் துரைசிங்கத்தேவர் நான் அங்கிருந்தபோதே ஜமீன்தார் ஆனார். மைனராயிருந்தார். அவர் மகனாரே இன்று ஜமீன்தாரா யிருக்கிறார். துரைசிங்கத்தேவர் கல்விக்கும், சாரணீய்த்திற்கும் விளையாடல்களுக்கும் அரிய தொண்டு செய்தார். அவர்காலத்தில் பெரிய மைதானங்கள் விளையாட்டிடங்களாயின· மாணவர் விடுதிகள் எழுந்தன. அவர் மகனார் இன்று துரைசிங்கம் கல்லூரி நாட்டி அரிய அறிவுப்பணி செய்கிறார்.

13. ஊர் சுற்றி

ஊரைச் சுற்றுவோம்; எங்கள் வீட்டைப் பாருங்கள்,

எங்கள் வீடு புனிதமாக அமைந்தது. அடுத்த வீடு வக்கீல் வீடு, என் வீட்டிலும் அண்ணா ஐ, வேங்கடராமையர் வக்கீலே. மூன்றாவது வீடு ருக்வேத கனபாடிகள் வீடு. அங்கிருந்து வேதகானமும் உபநிஷத்தும் வந்துகொண்டேயிருக்கும். கிழக்குப்புறம் சாமவேத கனபாடிகள் வீடு.........அங்கிருந்து ''ஹா உஹா உஹா ஊ'' என்று சாமகானம் செவிகுளிர வரும், மகா மேதாவியான அவர் பிள்ளை சுந்தரச்ரௌதிகளும், பாகவதம், ராமாயணம், ஸ்காந்தம் முதலிய புராணங்களை தினம் படிப்பார். நான் தவறாமல் கேட்பேன், அது பெரிய அறிவுப் பயிற்சியாயிருந்தது. எங்கள் வீட்டிற்கு இருபது முப்பதடி தள்ளி, பெரிய சிவன்கோயில் விசுவநாதர் ஆலயம். அங்கே மேளவாத்யம், வேதாத்யயனம், தேவார திருவாசக பாராயணம் எல்லாம் நடக்கும். நான் எல்லாக் கால பூஜைகளுக்கும் தவறாது சென்று நடராஜா சந்நிதியிலும், விசாலாட்சி சந்நிதியில் உள்ள வில்வமரத்தடியிலும் அமைதியாக தியானம்செய்து, பாட்டெழுதுவது வழக்கம். ஐந்தாண்டுவரையில் வீட்டில் காணாதுபோனால் சிவன் கோயிலிலே தான் என்னைக் காணலாம். எனக்குக் கோயில் அப்படி இன்பமளித்தது. எங்கள் தெருவின் இருமுனைகளிலும் பஜனை மடங்கள்,

கிழக்கே திருவாவடுதுறை பஜனை மடம். அதில், முன்னே ராமகிருஷ்ண மடமும் இருந்தது. அங்கே ஒரு புத்தகசாலையும் உண்டு. பதினைந்து வயதிற்குப்பிறகு நான் அந்த மடத்திலேதான் பெரும்பாலும் வசித்தேன். சுந்தரமூர்த்தி பாகவதரும் நரசிம்மபாகவதரும் அமோகமாக பஜனை செய்தார்கள். அந்த பஜனையில் நானும் கலந்துகொண்டு பாடுவேன், கடம் வாசிப்பேன், வாய்த்தாளம் போடுவேன், தீபப் பிரதட்சிணம் செய்வேன். வேதாந்த பாடங்கள் படித்து விளக்குவேன். அந்த மடத்தில் அடிக்கடி துறவிகள் வருவார்கள். உபசரிப்பேன். ஞான ரகசியங்களையும் யோக ரகசியங்களையும் கற்பேன். தெருவின் மேற்குக் கோடியில் ராஜாக்கள் வசித்தனர்—பெரிய வஸ்தாதுகள். அவருள் பிடில் ராமசாமி ராஜு, பெரிய வித்வான். இவர் எனக்கும் இசை பயிற்றினார். அவர் கிருஷ்ணமராஜா பஜனை மடத்தில் வாசித்தார்; அந்த பஜனையில் அவசியம் சேர்ந்து, நானும் ராஜாக்களுடன் பாடுவேன். தீபப் பிரதட்சிணம் செய்வேன்.

ராஜாக்கள் தெருவைத் தாண்டினால் வேளாளர் தெரு, அங்கே தேவார திருவாசகங்கள் முழங்கும். செவிகுளிரக் கேட்டுருகுவேன். எங்கள் தெரு தெப்பக்குளத்தெரு, பெரிய தெப்பக்குளம் அங்கே ஊருக்கு உதவியாயிருக்கிறது. அந்தத் தெப்பக்குளப் படித்துறைதான் எனக்குக் கதாநிலையம், நாடகசாலை, உலகறிவு மன்றம்...அங்கே ஆண் பெண்கள் அடிக்கும் வம்பு தும்புகளெல்லாம் என் கதைகளில் கதம்பமாகச் சேர்ந்துவரும். அந்தத் தெப்பக்குளத்தை இரண்டாக்குவோம் குட்டிப்பயல்கள். நாராயண அண்ணா ஒரு அதட்டுப்போட்டு இழுத்து, கரையில் எறியுமட்டும் நடுத் தெப்பக்குளத்தில் துளைந்து மூழ்கி மண்ணெடுப்போம். நான் குளித்து அங்கே சந்தியாமடத்தில் ஜபம் செய்யத் தவறமாட்டேன். குளத்தங்கரையில் ராஜா சத்திரம்; அங்கேதான் சங்கராசாரியார் மத்வாசாரியார் முதலிய பெரிய துறவிகளும் குருமார்களும் இறங்குவார்கள். சாப்பாடு பலமாகக்கிடைக்கும். அந்தக்காலங்களில் வீட்டை எட்டியே பாராமல், அங்கேயே பிரசங்கம் கேட்டு பூஜை பார்த்து பெரியோருக்குத் தொண்டு செய்துகொண்டிருப்பதும் உண்டு.

எங்கள் தெப்பக்குளத் தெருவிற்கு அடுத்தது இரட்டைத்தெரு. அதன் கிழக்குக்கோடி சிவாலயம், மேற்குக்கோடி பெருமாள் கோயில்—எதிரெதிரே. உள்ளூர் கனதனவான்களெல்லாரும் அந்தத் தெருவிலேதான் இருக்கிறார்கள். சிவன் கோவிலை அடுத்து வடமர் வீதி இன்னும் தள்ளி நடுத்தெருவில் பெரிய வக்கீல்கள் உத்தியோகஸ்தர்கள். பெருமாள் கோவில் தெருவில் வைணவர் சுமார்த்தர் கலந்து வசித்தனர்: இடையே ஒரு சந்தையுண்டு. மளிகைக்கடைகளும் உண்டு. இந்தத்தெருவில் வேத பாடசாலை இருந்தது; வேத ஒலி கேட்கும். அதைத் தாண்டி சிவகடாக்ஷம் பாகவதர் மடம் இருந்

தது. அதில் ஸ்ரீராமநவமி உற்சவம் நடக்கும். நடுத்தெருவில் கதை புராணம் நடக்கும். பெருமாள்கோயில் தெருவிலே என் வணக்கத்திற்குரிய ராமதாஸ் பாகவதர் மடத்தில் அடிக்கடி கதை, கச்சேரி, பஜனைகள் நடந்துகொண்டேயிருக்கும். இராமதாஸ் பாகவதர் பிள்ளை தசரதராம பாகவதரின் ராமாயண காலக்ஷேபம் வெகு இனிமையாயிருக்கும். பஞ்சாபகேச பாகவதர், முத்தையா பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், லக்ஷ்மணாசாரியார், மதுரை சேஷ பாகவதர், காரைக்குடி வீணை சகோதரர், கிரீச பாகவதர், கோடீசையர் முதலிய மகனீயர்களெல்லாரும் அங்கே வந்து பாடுவார்கள், காலக்ஷேபம் செய்வார்கள். பெருமாள் கோயில் திருநாட்களிலும் மார்கழி மாதத்திலும் திருவாய்மொழி முழங்கும்.

மூன்றாவது தெரு சிறியது. அதில் சில சோதிடர் இருந்தனர். அவர்கள் வீட்டு வழியே சகுனம் பாராமலே நாங்கள் உடையார் ஊருணிக்குச் சென்று நீந்துவதுண்டு. அந்த உடையார் ஊருணித் தெருவில் வெளியிடங்கள் உண்டு. அங்கே நாங்கள் பலீன் சடுகுடு ஆடுவதுண்டு. ஊருணியின் கிழக்கே ஒரு பரதேசி மடம் இருந்தது. பஞ்சைப் பரதேசிகளும் அன்னக்காவடிகளுமே அங்கே கூடுவதுண்டு. அதில் ஒரு பெரிய கிணறுண்டு; தோட்டமுண்டு. அங்கே சிலநாட்கள் குளித்து, பண்டாரங்களுடன் தாயுமானார் பாடலும் கைவல்யமும் பாடுவதில் எனக்கு மகிழ்ச்சி. அந்தப் பண்டாரங்களுள் சித்திபெற்ற மகான்களைக் கண்டிருக்கிறேன். அவருள் ஒருவரே எனது தியான குருவான மாங்குடிச்சாமியார். அவருடன் இரவில் தியானித்துவந்தேன். நான் அப்படி தியானித்த இடத்திலேதான் இப்போது சுத்தானந்த சமாஜம் அமைந்திருக்கிறது—அதே இடத்தில். அதற்கருகே அரசமரம். அங்கே முனியாண்டி ஓடுவதாக ஊரில் பயம். ஊருணிக்குச் சற்று தூரத்தில் பிரமஞான சபை காணும். அங்கே நான் குளிக்கவும் பத்திரிகை படிக்கவும் நூலாராயவும் மாடியில் தியானிக்கவும் செல்வதுண்டு. பெரியவர்கள் வந்தால் அங்கே தங்குவார்கள். அவர்களைச் சென்று காண்பேன். எனது ஞானத் தாயகங்களில் இந்த இடம் ஒன்று.

அதனருகே மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, முனிஸிப்கோர்ட்டு, ஸப்கோர்ட், ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், மாணவர் ஹாஸ்டல், பெண்கள் பள்ளிக்கூடம், பிரயாணிகள் பங்காளா, கோகலே ஹால் முதலிய பல கட்டிடங்கள் உண்டு. அருகே செட்டி ஊருணி—நீர் அமுதமாயிருக்கும்; அதன் கரையில் ஹனுமார்கோயில். இந்த ஹனுமாரை விழுந்து கும்பிடாமல் நான் எந்தப் பாடமும் தொடங்கியதில்லை. என் ராமஜபம் இங்கேதான் சித்திபெற்றது. எல்லாரும் மாருதிக்கு வடைமாலை சாத்துவார்கள், நான் பாமாலை சாத்தினேன்.

ஹனுமார்கோயில் தோட்டத்தில் நெல்லிக்காய் அடித்துச் சாப்பிட்டு, ஊருணித்தண்ணீர் குடித்து உட்கார்ந்தால், பாடம் வெகு சுறுசுறுப்பாக ஓடும். ஆசிரியர் பிரம்பினின்று தப்பிப்பிழைக்க இந்த ஹனுமாரைத்தான் நாங்கள் உபாசனை செய்வோம். ஊருணிக்குக் கிழக்கெல்லாம் பெரிய மைதானம். கற்றாழைகள் நிரம்பியிருக்கும். அவற்றுள் எங்களுக்கென்று ஒற்றையடிப்பாதை, மறைவிடம் எல்லாம் தேடிவைப்பொம். பள்ளிக்கூடத்துடன் சண்டைபோடப் பாசறைகூட அமைப்போம்.

அரசர் பள்ளிக்கூடம் எடுப்பான கட்டிடம். நான் படித்த கதையில் அதைப்பற்றிச் சொல்லுகிறேன். பள்ளிக்கூடத்திற்கு எதிரே பெரிய சந்தை; அதுதான் எனது சமுதாய நூல். நான் சந்தைச் சாமான் வாங்கிவருவேன். அப்போது நமது பொதுஜன வாழ்வையும் அங்கே ஊன்றிப் பார்ப்பதுண்டு. அடுத்தாற்போல் வைத்திம்பிள்ளை மடம். இங்கிருந்த துறவிகளுடன் நான் காஞ்சிரம் காட்டில் சுற்றுவேன். அப்படி நான் செல்லும்போது, "அதோ பாருங்க ஸார்! யோகி சுடுகாட்டிற்குப் போகிறான்" என்று என் அருமைத் தோழர் கோள் சொல்லிக்கொடுப்பார்கள். அந்த அகண்ட மைதானத்திலேதான் புட்பால், கிரிகெட், ஹாகி, குரோகே பலின்சடுகுடு, கபாத்து எல்லாம் நடக்கும். அதன் அருகே உள்ள மாஜிட்ரேட் கச்சேரியில் கன்ஸ்டேபிள்கள் "லெப்ட் ரைட்" போடுவார்கள். சிலவேளை சுடுகாட்டுக் கருகே டார்ஜெட் வைத்து, "டம் டம்" என்று துப்பாக்கி சுடுவார்கள். நான் கொஞ்சகாலம் இந்த விளையாட்டுகளில் கலந்து, அமளி செய்தேன். ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி ஒருமைல் தூரத்தில் உள்ள அந்த அடர்ந்த மாந்தோப்பிலேதான் எனக்கு உயிர். அங்கே தான் எனது ஞானகுரு வந்து சாதனம் பயிற்றினார். அங்கேதான் நான் அந்தராத்ம சோதனம் பெற்றேன்.

பள்ளிக்கூடத்திற்கு மேற்கே ஒரு பெரிய பொட்டல். மாலை மணியடித்ததும் சிலநாட்கள் அதன் வழியே ஆத்தா ஊருணி என்ற அழகான தாமரைக்குளத்திற்கு ஆவலாக ஓடுவேன். அங்கேதான் எனது தமிழாசிரியர் தெய்வசிகாமணி ஐயர் வந்திருப்பார். அந்த ஊருணிக்கரையில் பெரிய அரசமரம் உண்டு. அதுதான் எனது கலாநிலயம். அதிகாலையில் தாமரைக்குளத்திற்கு வந்து குளித்து, அந்த அரசடியில் சூரியோதயத்தைப் பார்த்து ஜபம் செய்வேன். சிலநாட்கள் எங்கள் வீட்டு வேட்டி துணிகளையெல்லாம் சுமந்துவந்து ஆத்தா ஊருணியில் உவர்மண் போட்டுத் துவைத்து வெளுத்து உலர்த்திக் கொண்டு போவேன். "பலே வண்ணான்" என்று எனக்குப் பட்டம் கிடைக்கும். ஆத்தா ஊருணியின் கிழக்கே பெரிய கண்மாய். அதைச் சுற்றிப் பசு வயல்கள். அவற்றினூடு ஏகாந்தமாகப் பாடித் திரிவது என் இன்பம். சிலநாட்கள் அங்கிருந்து நாட்டரசன் கோட்டைவரையில் சென்று, கம்பர் சமாதியில் இராமாயணம் படித்து வருவதும்உண்டு.

ஆத்தாஊருணியிலிருந்து திரும்பும்போது, ஆவாரங்காட்டிற்குச் செல்வேன். அங்கே ஆவாரங்காட்டு துரை என்னை அன்புடன் ஏற்பார். அவர் தாயார் பழைய வீரர் கதைகளையெல்லாம் அருமையாகச் சொல்லுவார். அங்கே பல துறவிகளும் வைத்தியர்களும் வருவார்கள். அவர்களால் எனக்கு வைத்தியத்திலும் ரசவாதத்திலும் பரிசயம் ஏற்பட்டது. அதற்குச் சிறிது தள்ளி மற்றோர் அரண்மனையுண்டு. அங்கே குஸ்தி சிலம்பம் விளறிவீசல் எல்லாம் நடக்கும். நானும் கையைக்காலைக் கொஞ்சம் வளைத்துப்பார்த்து வருவேன். அங்கிருந்து சென்று மேளக்கார மாயண்டியைப் பார்ப்பேன். தவுல் சோணை தகதக தாகிடதகஜம் என்று வெளுத்துவாங்குவான். நான் பாடத் தொடங்குவேன். மாயாண்டி எனது குரலைப் பயிற்றுவார். அங்கிருந்து மாந்தோப்புகளூடு தர்மராஜாகோயிலுக்கு வருவேன். இது தனியான இடம். கடவுளும் நானுமே; வேறு யாரும் வந்து தொல்லை செய்யமாட்டார்கள். இங்கே அமைதியாக அமர்ந்து பாட்டெழுதுவேன், அல்லது ஜபதபங்களைச் செய்வேன். அங்கிருந்து தோப்புகள் வழியே வந்தால், பெரிய அரண்மனை காட்சியளிக்கும்.

கௌரி வல்லபத்தேவர் அரண்மனைதான் சிவகங்கையின் அழகை எடுத்துக் காட்டுவது. அதுவே எங்கள் ஊரின் வீரக்கோயில்; சரித்திர மாளிகை அங்கே அந்தக்காலம் வீரவேலைகள் பலமாக நடந்தன. அங்கே ஆயுதச்சாலை, தர்பார் ஹால் மணிக்கூண்டு, வித்வத் ஸபை முதலியவையெல்லாம் ஆவேசமளிக்கும் இடங்கள். பெரிய அரண்மனையில் காலைமாலை அடிக்கும் நகரா எங்கள் வீட்டிற்குக் கேட்கும். அப்போதெல்லாம் "முரசே! உன் ஒலியில் உரிமை வீறு இல்லையே!" என்றி வருந்துவேன். அரண்மனை முழுதும் நான் சுற்றிப் பார்க்கப் பல சந்தர்ப்பங்கள் வாய்ந்தன. ஏனெனில் வேலுத்துரை எனது பள்ளித்தோழர்,

அரண்மனை மதிலைச்சுற்றி நாற்புறமும் சிறிய அரண்மனைகள் உண்டு. குழந்தை மகாராசா அரண்மனை, பெரியசாமித்தேவர் அரண்மணை, சிங்கத்தேவர் அரண்மனை முதலியன. அவையெல்லாம் புலமை நிலையங்கள். பெரியசாமித்தேவர் மாளிகைத்—திண்ணையில் புலவர் கூடி உரையாடுவார்கள். அந்தத் தமிழ் விருந்தை நான் அள்ளி அள்ளிப் பருகுவதுண்டு. என் து இலக்கியங்களும் அங்கே அரங்கேறியதுண்டு. குழந்தை மகாராசா அரண்மனைக்கருகேதான் நாடகக் கொட்டகை. நாடகப் பைத்தியம் பிடித்த எனக்கு எப்படியாவது நடிகர் நட்புக் கிடைக்கும். நல்ல நாடகங்களைப் பார்ப்பதுடன் நானும் பெரிய நடிகனாகவேண்டுமென்று கனவு காண்பேன். கனவில் நான் ஒரு ஜகன் மோகன மனோரஞ்சித நடனானந்தினி ஆய்விடுவதும் உண்டு.

அரண்மனைக்குத் தெற்கே மானாமதுரை ரஸ்தாவை நோக்குவோம்...எங்கும் கடைகள்...வாணிகப் பெருக்கம். அந்தப்பக்கமே

நவாபு படையும் கும்பினிப் படைகளும் வந்து கொள்ளையடித்தன. அப்போது மதம் மாறிய தமிழர் இன்னும் லப்பைகளாக இருக்கிறார்கள். பள்ளிவாசலிலிருந்து "லா இலாஹி" வரும். அந்தப் பள்ளி வாசலுக்கு வெள்ளிக்கிழமை நண்பர் மதார்ஸாவுடன் சென்று பாதியா ஓதக் கேட்பேன். பெரும்பாலும் நாடகக் குத்தகைக்காரர் மதார்ஸா உறவினரே; நானும் மதார்ஸாவுடன் கொட்டகைக்குள் நுழைந்தால் யாரும் தடைசெய்யமாட்டார்கள். தமிழ் இஸ்லாமியர் வாழை வியாபாரம், பலசரக்குக்கடை, தகரக்கடை, கசாப்புக்கடை, பாசிக்கடை, ஊசிக்கடைகள் வைத்து நல்ல பொருட்செழிப்படைந்தனர். கடையில் அவர்களுடன் சீறாப் புராணமும் மஸ்தான் பாடலும் இருக்கும்.

கடைவீதியின் கும்பலைத் தாண்டி மேற்கே நீளச் சென்றால் எல்லாரும் தொழிலாளர். சிலர் பொற்கலம் செய்பவர்கள்; சிலர் மளிகை வாணிகர், எங்கள் ஆசிரியர் சொக்கலிங்கம் ஆசாரியார் முதல் எனது பள்ளித்தோழர் ஆறுமுகம் செட்டியார் வரையில் பலரை எனக்குத் தெரியும். மேலும் அந்தத் தெருவிலேதான் தமிழ் ஆசிரியர் கணபதியா பிள்ளை வசித்தார். எனது நாடகங்களையும் பாடல்களையும் அவரிடம் படித்துக்காட்ட அங்கே செல்வதுண்டு. இந்தத் தெருவிலிருந்து திரும்பும் வழியில் தேவாரம் திருப்புகழ் திருவாசகம் சித்தர் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும். இடையே சில கிறிஸ்துவர் வீடுகள் உண்டு; அங்கே ஒரு ஆரம்பப் பாடசாலை இருந்தது. அப்பாடசாலையில் இடைக்காட்டூர் பாதிரி வந்து சுவிசேஷம் போதித்தார். அவரே எனக்கு முதலில் மத்தாயு சுவிசேஷம் தந்து "தம்பி! இதுதான் சத்திய வேதம், படி" என்றார்.

இப்படியே நான் ஊரைச்சுற்றிக் கலைத்தேன் உண்ணும் வண்டு போலத் திரிந்தேன். இப்படித் திரிந்தும் என்மனம் அமைதியடையவில்லை. அது எதையோ தேடித்திரிந்தது இன்னதென்று எனக்கே தெரியாது. இறைவன் திருவருளே அதையும் படிப்படியாகக் காட்டி நடத்தியது.

14. அந்தத் தாலாட்டு

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிருக் கவ்வுயிராய்
அங்கங் கிருப்பது நீ அன்றோ பராபரமே.
நீயின்றி நானார்? நினைவார்? என் நெஞ்சகமார்?
தாயின்றிச் சூலும்உண்டோ சாற்றாய் பராபரமே.
அல்லும் பகலும் அறிவாகி நிற்பவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே,
எந்தெந்த நாளும் எனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே.

ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மானநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே.
நெஞ்சமே கோயில் ; நினைவே சுகந்தம் ; அன்பே
மஞ்சனநீர் ; பூசைகொள்ள வாராய் பராபரமே'
ஆனந்த மானநின்னை அன்றியோன்றை யுன்னுத
மோனந் தமியேற்த முத்தி பராபரமே.
எங்கணுநீ என்றால், இருந்தபடி யெய்தாமல்
அங்குமிங்கு மென்றலைய லாமோ பராபரமே.
எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.
தன்னை யறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையோரு பற்றுமுண்டோ சேராய் பராபரமே.

பராபரக்கண்ணி...அற்புதமான தமிழ் உபநிஷத்து...இதைப் பாடி அம்மா தாலாட்டுகிறாள்...குழந்தை அந்தத் தாலாட்டிலே சொக்கிப் போகிறது. குழந்தை உறங்குகிறதென்று தாயார் தொட்டிலை விட்டு அப்புறம் செல்லுகிறாள். குழந்தை "பலா பலமே! பலா பலமே! உம் உம்" என்று கத்திக்கொண்டு கீழே இறங்கி அம்மாளிடம் ஓடு கிறது. தாயார் அதன் குறிப்பறிந்து, தகப்பனாரிடம் கொஞ்சம் தூளியை ஆட்டச்சொல்லி, வீட்டு வேலைகளைக் கவனிக்கிறாள். தகப்ப னார் பாடுகிறார்:

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டெரித்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்.
உள்ளம் அறியா தொளிந்திருந்த நாயகனைக்
கள்ளமனம் தெளிந்து காண்பதினி எக்காலம்.
எங்கும் பரவடிவாய் என்வடிவே நின்வடிவாம்
கங்குல்பகல் இன்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்

குழந்தை தாலாட்டில் சொக்கி அயரும்—'சரி தூங்குகிறது' என்று தந்தை சொல்வார். ஐந்து நிமிஷம் நிம்மதி; பிறகு...உம் உம் என்று கீழே குதித்து "பலாபலமே பாடு" என்று அம்மாளிடம் சப்பாணி கொட்டிச் செல்லும் "குழந்தை...அப்பா அம்மா தூங்கவேண்டாமா... நான் பார்த்துக்கொள்ளுகிறேன் வாடா செல்லம்" என்று பாட்டி எடுத்துக்கொள்வாள். பாட்டி வந்தால் தொட்டில் தூளி எல்லாம் மறப்பான் குழந்தை...அவள் மடிமேல் அமர்ந்து பாட்டுக் கேட்பான். பாட்டி சுவரில் சாய்ந்துகொண்டு குழந்தையை மடிமேல் வைத்துக் கொண்டே

ஜோஜோ ரகுகுல திலகா
ஜோதிஸ்வரூபா ஆதிசேஷசயனு

என்று கம்பீரமாகப் பாடுவாள். குழந்தையும் ஜோஜோ என்று ராக மிழுக்கும், "நாத சமுத்திரத்தில் குண்டலிப்பாம்பின்மேல் பள்ளி கொண்ட ஓங்காரஸ்வரூபனே! என் களங்கமற்ற உள்ளத்தில் பள்ளி கொள்வாய்" என்று அவள் பாடும்போது, பச்சைக்குழந்தைக்கும் ஞானம் உதிக்கும். குழந்தை அயர்ந்து தூங்கிவிடும்.

காலை நான்கு மணி; தாயார், பாட்டி, எல்லாரும்,

மேலுகோ பூதேவி மேலுகோ ஸ்ரீதேவி
மேலுகோ ஸாம்ராஜ்யம் இச்சு லக்ஷ்மி

என்று தொடங்குவார்கள். பாட்டி "ரங்கநாயக ராஜீவ லோசன ரமண தெல்லவாரெ லேரா" என்று பாடுவாள். தகப்பனார் "ஜயஜய கருணப்தே ஸ்ரீ மஹாதேவ சம்போ" என்று உருக்கமாகப் பிரார்த்தனை செய்வார்...சிவானந்தலஹரி, முகுந்தமாலை, பகவத்கீதை, புருஷசூக்தம், உபநிஷத்துக்கள், கைவல்யம் இவை வீட்டில் முழங்கும்...பக்கத்து வீடுகளில் வேதபாராயணம் நடக்கும். கோயில் மேளம் பௌளிராகம் முழக்கும்...குழந்தை இந்த நாத வேதத்தில் பரவசங்கொண்டு, தன்னால் எழுந்து கூத்தாடும்...

15. தன்னையறியவேணும்

தொட்டில் பருவம் தாண்டி நடக்கவந்த நாள்முதல், நான் வீட்டுக்குள் வசிக்க விரும்பியதில்லை. திண்ணையில் அமர்ந்து, சூரியோதயத்தையும் கோயில் கோபுரத்தையும் நந்தவன மலர்களையுமே பார்ப்பேன். தெருவில் ஓடிச்சென்று, கோயிலுக்குள் போவேன். நடராஜா சந்நிதியில் உட்கார்ந்து ஏதேதோ உளறிக்கொண்டிருப்பேன். அந்தி வானத்தைக் கண்கொட்டாமல் பார்ப்பேன். மதிநிலாவில் மகிழ்வேன். வீட்டில் பாடினால் கேட்பேன். கோயில் மேளம் கேட்டால் ஓடிப் போய்க்கேட்பேன். பிச்சைக்காரரையும் பண்டாரங்களையும் கூர்ந்து கவனிப்பேன்.

என் அக்காள் தோழிகளுடன் நிலாப்பூச்சி விளையாடுகிறாள். தெருக்கோடியில் இனிய பாட்டுக்கேட்டது...இரண்டு பண்டாரங்கள் பாடிவந்தனர்,

எல்லாம் இருந்தாலும்—பசுவே
ஈசன் அருளில்லையேல்
இல்லாத் தன்மை என்றே—பசுவே
எண்ணிப் பணிவாயே...

நான் "இருங்கோ மாமா" என்று உள்ளே போன போது, அம்மா எனக்குச் சாதம் ஊட்டக் கிண்ணத்தில் கொண்டுவந்தாள். நான் "அம்மா! அந்த மாமா! சாதம் போடு" என்றேன். அம்மாள் கிண்ணியை திண்ணையில் வைத்து உள்ளே பழையது கொண்டுவரச் சென்றாள். அதற்குள் நான் கிண்ணிமுழுதும் பண்டாரங்களிடம் தந்து, "பாடுங்கோ பாடுங்கோ" என்றேன். அம்மா அவசரமாக ஓடிவந்தாள். பண்டாரங்கள் "அம்மா! இது ஞானக் குழந்தை" என்றனர். கிண்ணத்தை அம்மாளிடம் தந்தனர். அம்மாள் தான் கொண்டுவந்த பழஞ்சோற்றையும் போட்டுப் புன்னகைத்தாள். "பாடுங்கோ பாடுங்கோ" என்று நான் துள்ளினேன். அம்மாளும் "சித்தர் பாட்டுப்பாடுங்கோ! குழந்தை கேட்கட்டும்" என்றாள். பண்டாரங்கள் கம்பீரமாகப் பாடினார்கள்.

ஒன்றைப் பிடித்தார்க்கே—பசுவே
உண்மை வசப்படுமே
நின்ற நிலையினிலே—பசுவே
நேர்மை யறிவாயே
தன்னை அறியவேணும்—பசுவே
காணாமல் காணவேணும்
பின்னை அறிவதெல்லாம்—பசுவே
பேயறி' வாகுமடீ...

இவை எனக்கு உபதேசமந்திரங்களாயின...பண்டாரங்கள் "இந்தக் குழந்தை நல்லாயிருக்கவேண்டும்" என்று சென்றனர். சில ஆண்டுகளுக்குப்பிறகு இவருள் ஒரு பண்டாரம் என்னை அடையாளம் தெரிந்து, உடையார் ஊருணிக்கருகே இருந்த பண்டார மடத்திற்கு அழைத்துச்சென்றார். அங்கே தாயுமானார் நடந்தது. "தம்பீ! இதுதான் வேதம்...நல்லாப்படிச்சுக்கோ...

தேடும் திரவியமும் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வருந்துணையோ கூறாய் பராபரமே.
ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்க்கே
நாடும் பொருளான நட்பே பராபரமே.
தன்னை அறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே...

தாயுமானார் வாக்கு எனக்குக் கருணையொளி தந்தது.

16. ஜீவகாருண்யம்

எந்த உயிரையும் தொந்தரவு செய்வதை நான் சகியேன். வீட்டில் நெய்க்கற்சட்டியில் எறும்பு மொய்க்கும். ஒருநாள் வேனிற்

பாட்டி எறும்புகளைக் காலில்போட்டுத் தேய்த்ததைக் கண்டேன். "ஐயோ எறும்பு செத்துப்போச்சே" என்று அலறினேன். "எறும்பு செத்தால் உனக்கென்னடா?" என்ருள் பாட்டி. "உன் உயிர் உனக்கு வெல்லம். அதன் உயிர் அதற்கு அருமை" என்றேன். "பின்னே என்னடா செய்வது எறும்பு வந்தால்?" "நீ சாமான்களைப் பாதுகாக்கவேண்டும். ஒரு தாம்பாள நீரில் கற்சட்டியை வை; எறும்பு ஏருது." ஒரு நாள் நெய்ச்சாடியை மூடாமல் வைத்திருந்தார்கள். எறும்பு அதன்மேல் ஏறிக்கொண்டிருந்தது. நான் ஜாடியை எடுத்தேன். என்கையில் சில எறும்புகள் மொய்த்துக்கடித்தன. பொறுமையுடன், ஜாடியைக் கீழேதட்டி...ஒரு காகிதத்தில் சர்க்கரை வைத்து, அதில் எறும்புகளை மொய்க்கச்செய்தேன். அதை மெல்ல எடுத்து ஒரு புற்றில் கொண்டுவிடப் போனேன், அந்தச் சமயம் என் முத்தண்ணு "ஏண்டாபயலே! நெய்யா திருடுகிருய்?" என்று வந்து மிரட்டினுன். "இல்லை அண்ணு!" என்று விஷயத்தைச் சொன்னேன். "இனிமேல் நெய் திருடாதே போ"...என்று தலையில் ஒரு தட்டுத்தட்டிவிட்டான்...பொறுத்துக்கொண்டேன்.

ரதசப்தமியன்று தாயாருடன் நானும் மடியில் குறுணை தவிடு இரண்டும் சேர்த்துக் கட்டிக்கொண்டு, தேர்வீதி வழியாகச் சென்று, எறும்புப்புத்துகளுக்குப் போடுவேன். தேர் நிலைக்கு வந்த பிறகும் வீட்டுக்கொல்லையில், கொடுக்காப்புளி மரத்தடியில் எறும்புகளைத் தேடிக் குறுணைபோட்டுத்தான் சாப்பிடுவேன். நான் போடும் குறுணையை எறும்புகள் உண்பது கண்டு லக்ஷஜனபோஜனம் பண்ணியதுபோல் மகிழ்வேன். எறும்புகளின் சுறுசுறுப்பைக் கவனிப்பேன். அவை சாரியாகச் செல்லும்போது எதிரே வரும் எறும்புகளைக் கண்டுோட்டி நட்பாடிச் செல்லும். மழைக்காலத்திற்கு வேண்டியதை வெயிற்காலத்திலேயே பொந்தில் சேர்த்து வைக்கும்.

நானும் சிக்கனமாக வாழப் பழகுவேன். எதிலும் சிறிது மிச்சம் பிடிப்பேன். கொல்லையில் ஒரு தேன்கூடு இருந்தது, தேனிக்கள் பூக்களில் அமர்ந்து தேன் எடுத்துவருவதும், கூட்டில் சேர்ப்பதும் உண்பதும், ராணித்தேனியை மதித்து நடப்பதும், முடிவில் சேர்த்த தேனைப் பிறர் உண்ணவிடுவதும் கண்டேன், ஒருநாள் கூட்டில் என்ன இருக்கிறதென்று பார்க்க மெல்ல விரலை விட்டேன். சுரீர் என்றது. தேனி என்னைக் கொட்டியது. புஸ் என்று பல தேனிக்கள் கிளம்பி வட்டமிட்டன. இதைத் தந்தை பார்த்தார். "அடடா! தேன் கூட்டைக் கிளறிஞுயா?...தேனி கொட்டியதா?" என்ருர். உண்மையைச் சொன்னேன். மஞ்சளும் உப்பும் அரைத்துப் போட்டுவிட்டு, தேன் கூட்டிற்கு அடியில் தீ மூட்டினுர் தந்தை...தேனிக்கள் பொலபொலவென்று கிளம்பி, சோககீதம் பாடிக்கொண்டே சென்றன, தந்தை ஒரு ஏனத்தில் தேனைப் பிடித்தார். எல்லாரும் தேனைப்

பருகினர். நான் தொடவில்லை. "அத்தனை தேனீக்களை விரட்டியடித்த பாபம் நம்மை விடுமா? அப்படி நம்மை யாராவது தீவைத்து வீட்டை விட்டு விரட்டினால் எப்படியிருக்கும்?" என்று பரிந்து பேசினேன். "எதிலும் கொஞ்சம் பாபமும் இருக்கும். பகவானுக்கு நிவேதித்தால் சரியாய்விடும்" என்றார் தந்தை. பகவானுக்கு நமது புண்ணியத்தையே நிவேதிக்கவேண்டும்; பாபத்தை அனுபவித்தே தீரவேண்டும்" என்றேன்.

அம்மா பொறி வைப்பாள். எலி சிக்கிக்கொள்ளும். அப்பா காலையில் திருபள்ளி எழுச்சி பாடியதும், கம்பைத் தூக்கிக்கொண்டு எலியைக் கொல்ல வருவார். நான் அதற்கு முன்பே கவனமாக எழுந்து பொறியைக் கொல்லைக்குக் கொண்டுபோய், எலி வாலில் நூலைக்கட்டித் தூக்கி ஊருக்கப்பால் கொண்டு கற்றாழையில் விட்டு வருவேன். "போ! உன் அரசில் நீ இரு. வீடுகளுக்கு வராதே" என்று சொல்லுவேன். கட்டிலில் முகட்டுப்பூச்சி கண்டால் எடுத்து. காகிதத்தில் மடித்துக்கொண்டுபோய் கற்றாழையில் விட்டு வருவேன், அதை நசுக்க மனம் வராது. என் அருமைத்தோழர் பன்றி நாய் ஓணான் தட்டாரப்பூச்சி வண்ணாத்திப்பூச்சி பல்லி இவற்றை இமிசிப்பர். நாய்வேட்டை நாணு, பன்றிவேட்டை ராமு என்று அவர்களுக்குப் பட்டப்பெயருண்டு. பொடிடப்பி சீனு, ஓந்தி கண்ணில் பொடிதூவி 'பாரடா வர்ணச்சித்திரம்' என்று காட்டுவான். ஓந்திகண் சுழலும்; உடம்பு நிறம் பெயரும். அவன் வண்டுகளை நூலில் கட்டி சுழற்றுவான். இதையெல்லாம் நான் தடுப்பேன். "அடே! நம்மைப்போல் அதுவும் உயிரடா...வருந்தினால் பாபம்" என்பேன்..."யோகி, இங்கே வராதே! போ கோயிலுக்கு" என்பர் தோழர். நான் தெய்வசந்நிதி சென்று 'உலகில் கொலை ஒழியவேண்டும், என்று கடவுளை வணங்கி முறையிடுவேன். எனக்கு வீட்டிலோ தெருவிலோ என்ன இடர் ஏற்பட்டாலும், யார் திட்டினாலும், குட்டினாலும் நேராகக் கோயிலுக்குச் சென்று நடராஜா சந்நிதியில் முறையிடுவதே பழக்கமாய்விட்டது. இன்றும் எனக்கு வரும் இடர்களை வாய்விட்டுச் சொல்லாமல் பரமாத்மனிடமே முறையிடுவதுண்டு. ஆசிரியர் என்னை அடித்தால் பொறுப்பேன். ஆனால் மற்றப் பையன்களை அடித்தால் அழுவேன். சில மனிதரின் மிருகத்தனம் முகத்திலும் கண்ணிலும் காணும். நாய் நரி புலி பாம்புபோலிருக்கும். அத்தகைய முகங்களைக் காணவும் அஞ்சுவேன். பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் வழியே ஆட்டை அறுத்துப்பெட்டியில் சுமந்து செல்வர். எதிரேயுள்ள சந்தையிலேதான் அறுப்புச்சாவடி. அதைக்கண்டால் என் குடல் நடுங்கும்; சாப்பாடே வேண்டியிராது.

> கொல்லா விரதம் ஒன்றே கொண்டவரே நல்லோர் மற்று
> அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

என்ற திருவாக்கைப் பாடி உலகிலிருந்து கொலை புலை ஒழிய பிரார்த்

றிப்பேன். புலால் உண்ணும் தோழர் மூச்சு வீச்சமடிக்கும், வாய் பிணநாற்ற மடிக்கும். நான் அவர்களைவிட்டுத் தள்ளி அமர்வேன். அல்லது வேப்பமரத்தடிக்குச் சென்று பிராணயாமம் செய்துவருவேன்.

ஒருதரம் எங்கள் வீட்டில் பூனை குட்டிபோட்டது. என் அண்ணு குட்டியைத் தூக்கிக் குறவனிடம் தரப்போனர். நான் அழுது கதறி, "அவன் கொன்றுவிடுவான்" என்று குறுக்கே விழுந்தேன். குட்டியைப் பறித்துக்கொண்டு கொல்லையில் வைத்து வளர்த்துவந்தேன். அந்தக் குட்டி என் பின்னே தாவி வந்தது; நான் மகிழ்ந்தேன்.

தாயார் பாடும் தோசாரத்தில்,

தம்பித் தமயனுக்குச் சண்டையது வந்தக்கால்
பொம்மிக் குதித்தெழுந்து போர்செய்வார் க்ஷத்ரியர்

என்று வரும். அதைப் பாடிக்கொண்டே முத்தண்ணு சாதுவான சின்னண்ணுவை அடிப்பான், வைவான் அதைக்கண்டு நான் ஊடே விழுந்து அழுவேன். இருவரையும் விலக்குவேன். எனக்கும் அடி விழும். இந்தக் காட்சி எனக்கு வைராக்கிய மளித்தது...மாமா சேவகர்களை அதிகார தோரணையில் மிரட்டும்போது, செல்வச் செருக்கை வெறுப்பேன். எல்லாரையும் என்போல் கருதும் மனப்பான்மையை நான் போற்றி வளர்த்தேன். பண்டிதர்கள் வாய்ச்சண்டை முற்றி நாய்ச்சண்டை போடுவதைக் கண்டு, படிப்பையே வெறுப்பேன். என் ஒரேலட்சியம் கடவுள், ஒரே பயிற்சி அன்பு, ஒரே செயல் கருணை. இவையே எனது பையற் பருவத்தின் சாதனங்கள்.

17. சாமி விளையாட்டு

மூன்று வயதில் நான் விளையாடத் தொடங்கினேன். என் அக்காள் செப்பு வைத்து பொம்மை வீடுகட்டித் திண்ணையில் விளையாடுவாள், அவள் தோழிகள் கலியாணம் கார்த்திகை நடத்துவார்கள். நலங்கு பத்யம் பாடுவார்கள். சிலசமயம் என்னை மாப்பிள்ளையாகவும் உட்கார வைப்பார்கள். நான் அவர்கள் சமைக்கும் மணற்சோற்றை, எங்கள் வீட்டுப் பூஜா மூர்த்திக்கு நிவேதித்துக்கொண்டு வருவேன். பிறகு கோவில் கட்டுவேன். இரண்டு செங்கல்களைக் கோணமாக வைத்தால் எனது கோயில் கட்டியாயிற்று. அதில் ஒரு கூழாங்கல்லை லிங்கமாக வைப்பேன்; அல்லது பூஜைப் பெட்டியிலிருந்து ஒரு விக்ரகத்தை எடுத்துவந்து திருவிழா நடத்துவேன். பூவரசங் காய்களைக் கொண்டு ஈர்க்குச்சிகளில் இணைத்துத் தேர் கட்டியாகும். அதில் சாமியை வைத்து இழுத்துச் செல்வோம். பூவரசம் இலைக்குழல் அல்லது பரங்கித்தண்டால் குழல் செய்து மேளவாத்தியம் நடக்கும். தகரத் தவுல் ஜமாய்க்கும். எங்கள் தேரும் சப்பரமும் தெருவழியே சென்று, கோயில் நடராஜா சந்நிதிமுன் நிற்கும். "நடராஜா

நடராஜா நர்த்தனசுந்தர நடராஜா! சிவசிவ சிவசிவ வந்தருளே சிந்தையில் இன்பம் தந்தருளே'' என்று நான் பாடி ஆடுவேன். எல்லாத் தோழரும் என்னுடன் பாடுவர், ஆடுவர். கணபதிக் குருக்கள் சந்தோஷமாகத் திருநீறு தருவார், சிலசமயம் தேங்காய்மூடியும் கிடைக்கும்...'' பாருங்கோ, சாமிவைத்து விளையாடினால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது'' என்பேன். கோவிலில் என்னென்ன செய்கிறார்களோ அதெல்லாம் விளையாட்டாகச் செய்து, சாமிவைத்து விளையாடுதலே என் இன்ப ஆடல், வேறு விளையாட்டு எனக்குப் பிடிப்பதில்லை. இந்த ஆடல்களுக்கிடையே பாடல்களும் கிளம்பும்.

* * * * * *

அப்பா சாம்பமூர்த்தி பூஜையும் பெருமாள் பூஜையும் செய்வார். இந்திராக்ஷி சிவகவசம், ஸஹஸ்ரநாமம் புருஷசூக்தம் சொல்வார். நானும் ஏதேதோ உளறிக் கொட்டிக்கொண்டு திருவாராதனத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேன். அப்பா பூஜை முடிந்ததும் என் பூஜை தொடங்கும்...நாளெல்லாம் பூஜைதான். பூஜைப்பெட்டி திறக்கமுடியுமானால் அதிலுள்ள பெருமாள்களெல்லாம் திண்ணைக்கு வந்துவிடும். பூட்டியிருந்தால் அம்மிக்குழவி கல்வம் திருப்பதி பொம்மை எல்லாம் எனது பூஜாமூர்த்திகளாகும். அண்டா ஜலத்தை எடுத்து எடுத்து ஊற்றி, கிழிந்த துண்டுகளை உடுத்தி, அப்பா பூஜையின் நிர்மால்யங்களையெல்லாம் வாரிக் கட்டிவந்து 'ஓம் அப்பா ஓம் அம்மா' என்று ஏதாவது சொல்லிக்கொண்டே அர்ச்சிப்பேன். எனக்குத் தரும் சீடை முறுக்கெல்லாம் நிவேதிப்பேன். தோழருக்கும் பிரசாதம் தருவேன். என் பிரசாதத்தை விரும்பி வாங்கும் பெரியவர் என் பாட்டியே. நான் சீடை தந்தால், அதைப் பொடிபண்ணியாவது அவள் சாப்பிடுவாள்.

* * * * *

சிலவேளை எனக்கு உலகமே பிடிக்காது. குடும்பக் காட்சிகளும் நடுத் தெருக் காட்சிகளும் உலகவெறுப்பைத் தரும். பேசாமல் மௌனமாகக் கோயிலுக்கு ஓடிப்போய், நடராஜா சந்நிதியில் அமர்வேன். அல்லது விசாலாக்ஷி சந்நிதியில் யானை வாகனங்களுக்கு அடியில் ஒளிந்துகொண்டு; உள்ளே லயித்திருப்பேன். என் முத்தண்ணு வந்து ''தவசு பண்ணுகிறுயோ'' என்று காதைப்பிடித்து இழுத்து வருவான்.

18. கோபுரவஸ்து

ஆறு வயதிற்குப்பிறகு நான் தனியாகக் கோயில் கோபுரத்தில் ஏறி, அங்கே உட்கார்ந்துகொள்வதுண்டு. அதுதான் எனது சாந்திநிகேதனம். அங்கிருந்து சிவசந்நிதி விளக்கு தெரியும். சூரியோதயம், அஸ்தமனம் இரண்டும் காணலாம். கோவில் நடப்புகளையும் காணலாம். கோபுரவஸ்து என்று தோழர் கேலி செய்ததையும் மதியாது, நான் கோபுரவாசியானேன்.

சிவன்கோயிலில் எப்போதும் ஹர ஹர ஹர ஹர மகாதேவ சிவபார்வதிரமணு சதாசிவா" என்ற மந்திரநாதம் ஒலிக்கும். அதை ஒளிப்பவன் ஒரு குருடன், பரமபக்தன். கண் தெரியாவிட்டாலும் அழகான மாலைகள் தொடுப்பான். கோயில் தோட்டத்தில் வேலை செய்வான். மணியடிப்பான். கோயிலில் மேளதாளங்கள் முழங்கும்; தேவார திருவாசகங்கள் முழங்கும். அனைத்திற்கும்மேல் அவனுடைய ஹரஹர மகாதேவ மந்திரம் விறுவிறுப்பாக முழங்கும். படித்த சிலர், கேலி செய்வர் "நியூஸன்ஸ்" என்பர். 'இதனால் உனக்குக் கண் வருமா?' என்பர். 'ஐயா மானிடப் பிறவியின் பயன் சிவபக்திதான். சிவன் கண் கொடுத்தால் உலகைக் காண்பேன். இன்றேல் உள்ளே அவனைக் காண்பேன் என்பான் அந்த பக்தன். ஆச்சரியம்! ஒருநாள் அவனுக்கு ஒருகண் நன்றாகத் தெரிந்தது. பிறகு இரண்டு கண்களும் தெரிந்தன. ஊரார் அவனை ஹரஹர மகாதேவா என்றழைப்பர். நான் கண்ணப்பரே என்று அழைப்பதுண்டு. அவன் கண்தெரிந்த பிறகு தெருத்தெருவாக வந்து, பிரதோஷம் ரதசப்தமி முதலிய புண்ணிய நாட்களில் கோயில் கைங்கரியத்திற்காக அரிசி வசூலித்தான். நான் கைநிரம்ப அள்ளிப் போட்டேன். எனது தோழர்களையும் அப்படியே அரிசி போடச் செய்தேன். கடவுளை நம்பின கண்ணப்பனுக்கு வெளிக கண் திறந்தது. எனக்கு சிவபக்தியால் உட்கண் திறக்கும் என்று நம்பினேன்.

வீட்டில் அப்பா அம்மா அண்ணு பாடும் தோத்திரங்களில் எனக்கு வந்ததெல்லாம் பாடிக்கொண்டு, சும்மா கோயிலை வலம்வந்து தொழுவது, தனியே பேசாமல் அமர்ந்திருப்பது, யாராவது பாடினால் கேட்பது—இவை எனக்கு இன்பமளித்தன.

இப்படியே பெருமாள் கோவிலுக்கும் சென்றேன். அங்கே சாதாரண நாட்களில் கூட்டமிராது. தனிமை கிடைக்கும். பிரசாதம் நிரம்பக் கிடைக்கும். மார்கழி மாதம் அங்கே சென்று திருவாய்மொழி கேட்பது பிரசாதம் சாப்பிடுவது தனியே உட்காருவது—இவை எனது வேலை. சிவன்கோயில் கோபுரத்திலிருந்து பெருமாள் கோயில் கோபுரத்தை பார்ப்பேன். அதுவும் பெருமாளாகவே தோன்றும்.

19. பாரத விளையாட்டு

நான் பயன்பெற்ற மற்றொரு கோயில் திரௌபதியம்மன் கோயில். எந்தை அந்தக்காலம் திருச்சுழி தி. அ. சு. அண்ணாமலை செட்டியார் காரியமாக அலுவல் செய்தார். அவர் அலுவற்கூடம் இந்தக் கோயிலுக்கு எதிரேதான் இருந்தது. நான் செட்டியார் விடுதி மாடியில் ஏறிச் சுற்றிப் பார்ப்பேன். ஒருநாள் விடுதிக்கு எதிரே

கொத்தர்கள் தரையில் ஒரு பெரிய மண்சிலையைச் செய்துகொண்டிருந்தனர்—சுமார் நாற்பதடி நீளம் பதினைந்தடி அகலம் ஐந்தடி உயரத்தில் உருவம் படுத்துக்கொண்டிருந்தது. அப்பாவைக் கேட்டேன். அப்பா பாரதக் கதையைத் தொடங்கினார். "கண்ணன் கருணையால் பாண்டவர் கௌரவக் கொடியரை வென்றார்கள். திரௌபதி துரியோதனன் தொடை ரத்தத்தைத் தடவிக் கூந்தல் முடித்துத் தனது சபதத்தை நிறைவேற்றினாள். அந்தச் சம்பவத்தையே திரௌபதியம்மன் கோயிலில் திருநாளாக நடத்துவார்கள். கடைசிநாள் தீக்குழி இறங்குவார்கள். அந்தப் பெரிய உருதான் ஆரவான். கோயில் முன்னே பாரதம் சொல்வார்கள்; நீயும் கேட்கலாம்" என்றதும் எனக்கு உற்சாகம் தாங்கவில்லை.

திருநாள் முழுதும் அம்மன் கோயிலிலேதான் வாசம். அங்கே பாண்டவர் பாஞ்சாலி, கண்ணன் உருக்கள் அழகாக அலங்கரித்திருக்கும். அவற்றை விழுந்து விழுந்து கும்பிடுவேன். பிறகு வேடம் கட்டும் இடத்திற்குச் செல்வேன். அங்கே வில்லும் ஈட்டியும் விளறிக் கம்பும் வாளும் கதையும் இருக்கும்; பாரதம் முழுதும் பதினெட்டு நாளும் வேடம் கட்டி நடிக்கும் ஆட்களைப் பார்ப்பேன். "மாமா எனக்கும் வேஷம்போடுங்கோ" என்பேன். "பொடிப்பயலே! அந்த வர்ணம் குழை, இந்த வில்லைப்பிடி...அங்கே போ இங்கே வா" என்று காத்தமுத்து ஏவும் வேலையெல்லாம் ஊக்கமாகச் செய்வேன். பிற்பகல் இரண்டு மணிக்கு பாரதம் பிள்ளையின் டமாரக்குரல் கேட்கும்... "பூம் பூம் என்று கண்ணன் சங்கொலித்தான்; டாண் டாண் டாண் என்று விஜயன் வில்லை நாணேற்றி டங்காரம் செய்து, விர் விர் விர் என்று அம்புவிட்டான், தடதடதடவென்று சேனைகள் நடந்தன. கடகடகடவென்று தேர்கள் பறந்தன. சரசரசரவென்று அம்புகள் பொருதின. மடமடமடவென்று எதிரிகள் வீழ்ந்தனர். "அடடடடா துரியோதனா இந்த அக்ரமம் ஆகாதடா!" என்றான் விதுரன். "போடா போடா வேதாந்தப் பூச்சியே! போ காசியாத்திரை" என்று விதுரனைத் துரத்திவிட்டு, போர்க்களத்தில் பாய்ந்தானையா துரியோதனன்," இவ்வாறு போர் முரசு கொட்டும் அடுக்குத் தமிழை அள்ளிப் பருகினேன். பாரதம் பிள்ளை நடைதான் எனக்கு உண்மையான தமிழாகத் தோன்றும். அவர் சொல்லும் பாரதத்தைக் கேட்டு வந்து, நான் என் அம்மாளுக்கும் நண்பருக்கும் அதே ராக நடையில் பாரதம் சொல்லுவேன். அந்த இளம்வயதில் எதைக்கேட்டாலும் மனதில் அரக்கு முத்திரைபோல் ஒட்டிக்கொள்ளும். என்மனம் ஒலிப் பதிவுச் சுருள்போல் வேலைசெய்யும். பாரதக் கதை முடிந்ததும், திரௌபதியம்மன் கோயில் பூசாரிகளும் அன்பரும், அன்று நடந்த கதையை வேடம்போட்டு நடிப்பார்கள். வேடம் கட்டும்போது, நானும் கூட இருப்பேன், நானும் பாண்டவசேனையில் ஒரு வீரனாக நிற்பேன். வேடம் கட்டிக்கொண்டு, பதினெட்டுவகை வாத்தியங்

களும் முழங்க, வில் கதை, வாள் ஈட்டி ஏந்தி, எல்லாரும் ஊரைச் சுற்றிச்கொண்டு, பெரிய அரண்மனைக்குச் செல்வார்கள்.

முத்தண்ணு கண்டால் காதைப்பிடித்துத் திருகி, தவடையில் இரண்டு தந்து, வீட்டிற்கு இழுத்துச்சென்று வாய்ப்பாடு மொந்தை யுருப் போடச் சொல்லுவான். ஆதலால் வீட்டைத் தப்பி வீதி சுற்று வேன். நான் சிவன் கோயிலுக்குள் விருட்டென்று பாய்ந்து ஓடி, கௌரிப் பிள்ளையார் கோயிலுக்கருகில் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டு, அரண்மனைக்குள் புகுவேன்.

அரண்மனையில் டில்லி பாசா துரை எல்லாரையும் அழைத்து, மைதானத்தில் வீரவிளையாட்டுக் காண்பார். குஸ்தி சிலம்பம் வாள் வீச்சு, வில், ஈட்டி, பாலா, ஸிந்துலா கதை விளையாட்டுகள் நடக்கும்; மால்கம்பமும் நடக்கும், பிறகு அரண்மனையைச் சுற்றிக்கொண்டு. எல்லாரும் கோயிலுக்கு வருவார்கள்' உடனே அங்கே பாரதப் போர்ப் படலங்களை அப்படியே நடித்துக் காட்டுவார்கள். விஜயன் பாசு பதாஸ்திரம் பெறத் தவம்புரிந்த காட்சி வெகு நன்றுயிருக்கும். மால் கம்பம் நாட்டி உச்சியில் தவபிடம் அமைத்து, அங்கே அர்ஜுனன் யோகம் செய்வதும், கம்பத்தில் ஏறி துஷ்டர்கள் தவத்தைக் கலைக்க முயல்வதும் அவர்களை விஜயன் கீழே வீழ்த்துவதும், சிவ பார்வதி வேடர் வந்து பக்தனைச் சோதிப்பதும், வில்லடி வாங்குவதும் முடிவில் பாசுபதம் தருவதும் கண்ணுக்கு மெய்யாகக் காட்டப்படும். மாடுபிடி சண்டை விராடபருவம் இரண்டும் அரிய காட்சிகள். அப்போது பாண்டவர் வனவாச நாடகம் நடந்தது. அதில் பீமசேனுக நடித்த கொட்டாப் புளி பைல்வானை மறக்கவே முடியாது. அவன் என்னை "அம்பிப் பயலே! இதோ பார்" என்று காலைவாரி எடுத்து கர்லாக்கட்டை சுற்றுவான். பக்கத்தில் இடுக்கிக்கொண்டு ஓடுவான். திரௌபதை வேடம் கட்டும் பஞ்சாட்சரம் பெண்போலவே பேசுவான். நானும் "வாடியம்மா ஐவர் நாயகி" என்பேன். ஆடல் பாடல் நடிப்பெல்லாம் அணுவிடாமல் கவனித்து, நான் எனது தோழருடன் சேர்ந்து பாரத நாடகம் நடத்தித் தெருவை இரண்டாக்குவேன். பாரதத்தைப்போல் வேறெந்தக்கதையும் எனக்கு அப்படி மனதிற் பதியவில்லை. பிற்காலம் பாரத நாடகம் எழுதியதற்குச் சிறுவயதில் கண்டவை துணை நின்றன. உலகில் அண்ணன் – தம்பி வாழ்வும் பாரதப்போராகவே இருக்கக் கண்டேன். எங்கள் தெருவிலேயே பாகச் சண்டைகளைக் கண்டேன்- குண்டுணிகள் மூட்டும் குட்டிக் கலகங்களையும் பெரிய கலகங்களையும் கண்டேன். உலகம் இவ்வளவுதான் என்று எனக்குத் தெரிந்தது. துறவிற்கும் கலைக்கும் பாரதம் எனக்கு வழி காட்டுகிறது.

அம்மன் கோயிலில் அந்தக்காலம் பொம்மலாட்டங்களும் நாடகங் களும் நடந்தன. எல்லாம் தவருமல் பார்த்தேன். என்னை மிகவும் கவர்ந்தது அரிச்சந்திர நாடகம். அரிச்சந்திரனை நட்சத்ரேயன்

கிட்டி போடும்போது "அம்மா" என்று அலறிவிட்டேன். மயான காண்டக் காட்சியில் லோகிதாசன் பாம்பு சடித்து இறப்பதும், சந்திரமதி அழுவதும், அரிச்சந்திரத் தோட்டி பிணக்கூலி கேட்பதும் என் உள்ளத்தை உருக்கின, உண்மைக்காகத் தியாகம் செய்யும் உணர்ச்சி எனக்கு அதனால் உண்டானது. மனச்சாட்சி ஒப்பியதை நான் தைரியமாகச் செய்ய அரிச்சந்திர நாடகம் ஒரு தூண்டுகோலா யிருந்தது. நல்லதங்காள், நளதமயந்தி, ரதிமன்மதர், பிரகலாதன், இலங்காதகனம், சூரசம்ஹாரம் முதலிய பல நாடகங்களை நான் தக்க பெரியார் நடிக்கக் கண்டேன். முதன்மையாக அந்தக்காலம் சிவசாமி என்ற நாடகப் புலவர் இருந்தார்—கலாநிபுணர், சிவபக்தர், எந்த வேடம் போட்டாலும் பொருத்தமாக நடிப்பவர், இனிய பாடகர்—அவரே எனக்கு நாடகாவேசந் தூண்டினார். நாடகக் கதை பிறகு.

20. பஜனை மோகம்

கோயில்களால் எனக்கு ஏற்பட்ட பக்தி, பஜனைகளால் அமோகமாக வளர்ந்தது. இந்தக் காலமெல்லாம் நான் ஏராளமான பாடல்களைக் கேட்டு, சுயமாகக்கூடப் பாட்டுக் கட்டி வந்தேன். எங்கள் தெருவில் முதன்முதல் பொன்வேலி ராமலிங்கையர் பஜனைக்கூடம் இருந்தது. வீடு கூரைவீடு; உள்ளே புகுந்தால் நரசிம்ம படம்; ராம படம்; தம்பூரா மிருதங்கம் பிடில் ஜாலராக்கள் காணும். பெண்கள் நிவேதனம் தயாரிப்பதில் சுறுசுறுப்பா யிருப்பார்கள். ஐயருக்கு இரண்டு குமாரர்கள்—மூத்தவர் நரசிம்ம பாகவதர், பாட்டு கதைகளில் நிபுணர்-எனது ஆப்த நண்பர். தம்பி இராமச்சந்திரன் மத்தளம் வாசிப்பான். சாயங்காலமானால் குடும்பம் பஜனையில் ஈடுபட்டு, திவ்யநாம சங்கீர்த்தனம் செய்யும். ஆதலால் கிண்கிணு ஜல்ஜல் என்று ஜாலரா கேட்டதுமே நான் ஓடிப்போவேன். எங்கேடா பயலே ஓடுகிறாய் என்று யாராவது வழிமறித்தால், "ஹே ராம் ராம்" என்று ஆவேசமாகக் கூவிக்கொண்டே ஓடுவேன். 'ஜயஜானகிரமண ஜயவிபீஷண சரண்' முதல் "நீநாம ரூபமுலகு' வரையில் கவனமாகக் கேட்பேன்.

"ராமா க்ருஷ்ணு கோவிந்தா" என்று தீபப்ரதட்சிணம் தொடங்கும். என் கால் நிற்காது; நானும் கூத்தாடத்தொடங்குவேன். ஐயர் என்னை நடுவில் கூத்தாடவிட்டு, சுற்றிலும் பக்தர்களுடன் நடனமாடுவார். எனக்கு இயற்கையாகத் தாளஞானம் ஏற்பட்டது. வாய்த் தாளம் போடுவேன். ஜாலரா போடுவேன். சும்மா இருக்கமாட்டேன். பஜனைதான் எனது இசையறிவைத் தூண்டியது. ஏராளமான தியாகராஜ, ராமதாஸ, புரந்தர, தீட்சித, சாமா கீர்த்தனங்களை பஜனைகளில் கேட்டிருக்கிறேன். ஐயர் ஒருநாள் விஷம் தீண்டி மயங்கி விழுந்தார். அவர் தமயனர்—வைத்தியம் ராமுடு ஐயர்—எவ்வளவோ முயன்றும், எனது தந்தை முயன்றும், விதி மூய்ந்தது. அவர் பெரிய பஜனை மடத்

திற்கு அஸ்திவாரம் போட்டு, பேஸ்மட்டம் எழுந்தது. அதற்கு ஏராள மாகக் கடன் வாங்கினர். அத்தனை கடனையும் நரசிம்ம பாகவதர் நிலத்தை விற்று அடைத்தார். வீட்டையும் விற்ருர். அந்த இடத்தில் சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு நான் பஜனை நடத்திவந்தேன். அந்த இடத்தை ஒருவர் வாங்கி ஏகாதசிக் கட்டளை வைத்தார். அங்கும் நான் ஓராண்டு நிம்மதியாக வசித்தேன்.

நரசிம்ம பாகவதர் உள்ளூர் பண்டாபீஸில் குமாஸ்தாவாக இருந்து கொண்டு, 'பஜனை புராண காலக்ஷேபம், கதா காலக்ஷேபம் எல்லாம் நடத்திவந்தார். அவர் சிவகடாட்சம் பாகவதர் வீட்டிலேதான் குடி யிருந்தார். அங்கும் ஸ்ரீராமநவமி சிவராத்திரி நாட்களில் பஜனை கதை கச்சேரி நடக்கும். நான் போவேன். பிற்காலம் எங்கள் தெருக் கோடியில் திருவாவடுதுறை மடம் ஏற்பட்டது. அங்கே இராம கிருஷ்ண விவேகானந்த சங்கமும் ஒரு நல்ல வேதாந்த புத்தகசாலையும் உண்டு. அங்கே நாங்கள் அமோகமாக பஜனை நடத்தினேம். இந்த பஜனைக்கு உயிராயிருந்தவர்கள் சுந்தரமூர்த்தி பாகவதரும், நரசிம்ம பாகவதருமே. இந்த மடமே எனது தவநிலையமானது; விபரம் பிறகு வரும்.

சிறுவயதில் என்னை வசீகரித்த மற்ருெரு பஜனை மடம் கிருஷ்ணம ராஜு மடம். இது எங்கள் தெருக்கோடியில் ராஜாத் தெருவில் இருந்தது. தினம் கிருஷ்ணபஜனையுடன் சனிக்கிழமைகளில் தீபப் பிரதட்சிணம் நடக்கும். இங்கேதான் பிடில் வித்வான் ராமசாமிராஜு இருந்தார். ராமசாமிராஜு "பாடு பாடு" என்று ஊக்குவார். அவர் ஏராளமான கீர்த்தனங்கள் வாசித்துக் கேட்டிருக்கிறேன். அந்த மடத்துப் பிரசாதத்தை நான் சாப்பிடுவேன்; ஒருநாள் வீட்டில் கொண்டுவந்து "பெருமாள் பிரசாதம் என்று பாட்டிக்குக் கொடுத் தேன். பாட்டி விழுங்கிவிட்டாள். பிறகு "எந்தப் பெருமாள் பிர சாதம்" என்று கேட்டாள். பாட்டி கிருஷ்ணமராஜு மடத்து பிரசாதம் என்றதும். "அட ஐயையோ...மடையா...அதை பிராம்மணுள் சாப் பிடலாமா?" என்று சினந்தாள். பிறகு வாயை அலம்பிக்கொண்டே என்னை உர் என்று பார்த்தாள். "என் பாட்டி கண்ணப்பன் எச்சிலைச் சிவபெருமான் தின்ருரே, உனக்கென்ன வந்தது? பரமபக்தர் பிரசா தத்திற்கு என்ன குறை! தொண்டைக்குள் போனல் செறிக்காதா?" என்று கேட்டேன். அன்றுதான் நமது நாட்டைப் பிடித்த சாதிவேறு பாடு எனக்குப் புலனுனது. அதை ஒழிக்க உறுதி பூண்டேன்.

பெருமாள் கோயில் தெரு ராமதாஸ் மடம் எனது குருபீடம் போலும். ஒருநாள் ராமதாஸ் பாகவதர் நந்தனர் சரித்திரம் பண்ணக் கேட்டேன். அவர் கோபாலகிருஷ்ண பாரதியாரை நேரே பார்த்தவர். சரித்திரம் என் உள்ளத்தைத் தொட்டது. மறுநாள் அவரிடம்சென்று நமஸ்கரித்து "குருப்யோநம: எனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கவேண்

டும்." என்று நயந்தேன்: அவர் மிகவும் அன்புடன் மறுநாட்காலை ஐந்துமணிக்கு வரச்சொன்னார். நான் நான்கு மணிக்கே உடையார் ஊருணியில் குளித்து, கரையிலிருந்த தோட்டத்தில் பவளமல்லிகைப்பூ எடுத்தேன். அப்போது நான் கால்தவறி ஒரு பாம்பை மிதித்துவிட்டேன். பாம்பு என் காலில் சுற்றிக்கொண்டது. "ஓம் சுத்த சக்தி! என்னைக் காப்பாற்று ஓம் சுத்த சக்தி" என்று ஜபித்தேன்...ஆச்சரியம்! பாம்பு காலைவிட்டுக் கழன்று புதருள் ஓடி மறைந்தது. 'பகவான் நம்மை ஏதோ ஒரு காரியத்திற்கே காப்பாற்றினார்" என்று நினைத்தேன். கொஞ்சம் சமிதும் பொறுக்கிக்கொண்டு, ஸ்ரீ ராமதாஸிடம் வணக்கமாக வந்து நின்றேன். அவரும் குளித்து பட்டணிந்து, ஸ்ரீ கோதண்டராம படத்தின்முன் அமர்ந்து "வா அம்பி" என்றார். நான் பவளமல்லிகை மலரை அவர் 'காலில் அர்ச்சித்து சமிதை காணிக்கையாக வைத்து, நமஸ்கரித்து "மந்திர சித்தி, அனுக்ரகிக்க வேண்டும். குருப்யோ நம;" என்று வணங்கினேன். பாகவதர் "எல்லாம் சித்தியாகும்; ஸ்ரீ ராமகிருபை உண்டாகும். உனக்குப் பூணூல் போட்டாயிற்று" என்று கேட்டார். 'இல்லை: ஆனால் மந்திரங்களெல்லாம் பாடம். அண்ணா சந்திபண்ணும்போது நான் கவனித்துப் பாடம் பண்ணினேன். மேலும் எனக்குள் ஓம் சுத்தசத்தி என்ற மந்திரம் உதித்தது. அதையே ஜபித்து வருகிறேன்"...என்று விபரங்களைச் சொன்னேன். பாகவதர் 'நல்லதுதான். ஸ்ரீ ராம மகிமையைக் கேள்' என்று பத்ராசலம் ராமதாஸ் கதையை உருக்கமாகச் சொன்னார். நான் "அந்தா ராமமயம்" என்ற தன்யாசிராக கிர்த்தனத்தைப் பாடினேன். பாகவதர் மிகவும் மெச்சி

"ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்"

என்ற சுலோகத்தையும் "ஓம் ராம்" என்ற மந்திரத்தையும் சொல்லி வைத்தார். அவர் கையால் ஒரு ஜபமாலை பெற்று, நான் ஹனுமார் கோயிலில் அமர்ந்து, பதினாயிரக்கணக்காக சுத்தசக்தி ஜபத்துடன் பிரணவ ராமஜபமும் உருவேற்றினேன். மந்திர சக்தி எனக்கு ஒருமையும் அமைதியும் தந்தது. ராமதாஸ் மடத்தில் பிரபல பாகவதர்கள் வந்து கதை செய்தார்கள்—மதுரை சேஷ பாகவதர், முத்தையா பாகவதர், பஞ்சாபிகேச பாகவதர், லக்ஷ்மணாசாரியார், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், நரசிம்மபாகவதர் ஆகியோர் கதைகள் வெகு இனிமையாயிருக்கும். பாகவதர் பிள்ளை தசரதராம பாகவதரின் ராமாயணக் கதைகள் அமுதமாயிருக்கும்—அனைத்தையும் கேட்டுக் கேட்டு எனக்குப் பல நிரூபணங்கள் பாடமானதுடன் கதை செய்யும் பந்தாவும் தெரிந்தது. என்னையும் ஒரு பாகவதராக மதித்து, எனது சகாக்களின் முன், அல்லது தனிமையில் கதை செய்தேன்...பக்திப் பரவசமே முதன்மை...

இந்தக்கதைகளுக்கு உதவியாக கொட்டகுடியில் தேசிகாசாரியார் வாசித்துவந்த ராமாயணமும், எங்கள் தெருவில் சுந்தரசிரௌதிகள் முழங்கிய பாரதபாகவத ஸ்காந்த புராணங்களும் உதவின. நான் கண்டது கேட்டதெல்லாம் இரவில் அமைதியாகச் சிந்திப்பது வழக்கம். இவ்வாறே எனக்கென்று ஒரு கல்வியறிவு உள்ளே வளர்ந்து வந்தது.

21. 'படிக்கப்போறேன்'

பள்ளிக்கூடத்தைப்பற்றி எனக்கு உற்சாகம் உண்டாகவேயில்லை. எனது தமயன்மார்கள் புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு பெரிய பள்ளிக்கூடம் சென்று வருவார்கள். அவர்கள் புத்தகங்களை அப்படி இப்படித் திருப்புவேன், அக்கா பெண் பாடசாலைக்குச் சென்று வந்து "கொக்குக்கு நரி செய்த விருந்தைக் கூடிப் பாடுவோம்" என்று அபிநயப் பாடலைத் தொடங்குவாள். அவள் அரிச்சுவடியால் எழுத்துக் கற்றேன். காலை பத்துமணிக்கும், மாலை ஐந்துமணிக்கும், மாணவர் கூட்டம் கூட்டமாக எங்கள் வீட்டு முன் செல்வதைக் காண்பேன். இவர்கள் எங்கே போய் என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று புறப்பட்டேன். சும்மாவா? என் அண்ணாவின் பெர்ஸிவல் அகராதியைத் தூக்கிக் கொண்டு நானும் படிக்கக் கிளம்பினேன். "அட படவா! எங்கே போறாய்?" என்றொரு சத்தம் கேட்டது. சுப்பராமையரின் தொண்டைதான் அது..."பெரிய பள்ளிக்கூடம் போறேன்" என்று நடந்தேன். "அட படவா! அங்கே போய் என்ன செய்வாய்" என்றார் அவர். "அண்ணாவுடன் படிக்கப் போறேன்" என்றேன். "அடராஸ்கல், அண்ணாவா? நீ ஜே. வேங்கடராமன் தம்பியா? அதனாலேதான் இப்படிப் பேசுகிறாய்...வா" என்று கூட்டிச் சென்று, என் அண்ணாவிடம் கொண்டு விட்டார்.

அண்ணா "சீ அதிகப்ரசங்கி! இங்கேன் வந்தாய்?...என் டிக்ஷ்னரியைத் தூக்கி வந்தாயா? கொடுக்கட்டுமா அறை? பேசாமல் இங்கே உட்கார்; ஒரு மணிக்கு உன்னைக் கூட்டிச் செல்கிறேன்" என்று 144 போட்டு, என்னைப் படமாத்தூர் கிருஷ்ணசாமி ஐயங்கார் வகுப்பிற்கு முன், ஒரு வேப்ப மரத்தடியில் அமர்த்திச் சென்றான். அப்போது "என்னடா எலிகுன்ஸ்! பிரம்படி வாங்கவா வந்தாய்?" என்று வந்தான் ராமு. "இல்லை, படிக்கத்தான் வந்தேன்" என்றேன். "குண்டியாட்டி வாத்தியார் முண்டுலே போடுவார். சொரிவத்தி வாத்தியார் திட்டுவார், காக்காவாத்தியார் கட்டைப்பிரம்பால் விளாசுவார்—இதுதான் படிப்பு. பார்...வேடிக்கையை" என்று என்னை அழைத்துக் கொண்டு எல்லா வகுப்புகளையும் காட்டி "இவரே ஆந்தை வாத்தியார், இவர் சொரிவத்தி, இவர் காக்கா, இவர் உலக்கைத்தடி" என்று ஆசிரியர்களைக் காட்டிச் கொண்டே சென்று, பிறகு தன் வகுப்புக்குள் நுழைந்தான்.

நான் வெளியிலிருந்து எல்லாம் பார்த்தேன். பள்ளிக்கூடம் சுறு சுறுப்பாக நடந்தது. என் ரங்கண்ணு வகுப்பு வாசலில் நின்று பார்த்தேன். அண்ணு ஆங்கிலக்கவி ஒப்பித்தான்...பிறகு முத்தண்ணு வகுப்பை எட்டிப் பார்த்தேன். அண்ணு ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். இன்னெரு வகுப்பில் ஆசிரியர் "தடிக் கழுதை களா! உங்களைக் கட்டி மாரடிப்பதைவிட சந்யாசம் வாங்கிக் கொண்டு போகலாம்...மக்குகள்!" என்று சினந்தார். அவர் கண்ணும் பல்லும் பயங்கரமா யிருந்தன. நான் மேல்வகுப்புகளைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பும்போது, சில பையன்கள் ஒரு அண்டா முன் தண்ணீர் குடித்துக் கொண்டே சண்டையிட்டனர். "எனக்கும் தண்ணீர் கொடுங்கோ" என்று கையை நீட்டினேன். இந்தச் சமயம் "ஏண்டா பயல்களா, என்ன சத்தம்? ஸ்ஸ்" என்ெருரு கம்பீரமான ஆள் அதோ நின்றார்.

"டே ஹெட்மாஸ்டர்!" கப்சுப்! எடுத்தனர் ஓட்டம்! அவரே தலைமை ஆசிரியர். நானும் தண்ணீர் குடிக்காமலே அவர்களுடன் ஓட்டமெடுத்துக் கீழ் வகுப்புக்களைச் சுற்றிப் பார்த்தேன்.

ஒரு வகுப்பில் ஆசிரியர் வாய்க்கு வந்தபடி கெட்டவசவுடன் பையன்களை அடித்துக் கொண்டிருந்தார். "ஐயோ ஐயோ" என்று ஒரு சிறுபையன் துடித்தழுவதைக் கண்டேன். மற்ெருரு பையன் பெஞ்சி மேல் நின்றான். இன்னெருவன் பெஞ்சி மேல் நின்றபடி சிலேட்டுக் குச்சியைக் கீழே போட்டுப் போட்டு எடுத்து, காலுக்கு ஓய்வு தந்தான். இன்னெரு வகுப்பில் ஒரு பையன் நெற்றியில் சுண்ணம் போட்டார் ஆசிரியர்; எல்லாரும் சிரித்தார்கள்; அவனும் சிரித்தான். "சிரிக்கிறாயா கழுதை" என்று அவனை நாலடி பிரம்பால் வைத்து பெஞ்சி மேல் ஏற்றினார் ஆசிரியர். அவன் அழுதான்.

நான் பயம்பிடித்து, கடைசி வகுப்புக்குச் சென்றேன். அதற்கு அந்தக் காலம் அரைக்கிளாஸ் என்று பெயர். அங்கே கொட்டாப் புளி வாத்தியார் "கவனமாய் எழுதுங்கோ" என்று பிரம்பைச் சுழற்றிக் கொண்டிருந்தார். சுவரில் அரிச்சுவடி அட்டை பெரிதாகத் தொங்கியது. நான் அக்காவின் 'அம்மி அரிவாள்' புத்தகம் பார்த்து எழுத்தெல்லாம் கற்றிருந்தேன். இப்போது அட்டை பார்த்து எழுத எளிதாயிருந்தது. நான் தைரியமாக வகுப்புக்குள் நுழைந்தேன். ஏனென்றால், எல்லாரும் என்னைப் போலக் குழந்தைகள். நான் புகுந்ததும், ஸார் ஸார் புதுப்பையன்!' என்று குழந்தைகள் சத்த மிட்டார்கள். 'யாரடா புதுப்பையன்?' என்று வாத்தியார் என்னைப் பார்த்தார். "என் அண்ணு ஜே. வெங்கடராமன்: நான் படிக்க வந்திருக்கிறேன். நானும் எழுதுவேன்" என்றேன்.

அவர்:—அட நீ ஜடாதரன் பிள்ளையா? அப்படிச் சொல்லுடா— என்று அன்புடன் தட்டிக் கொடுத்து, ஒரு சிலேட்டும் பென்ஸிலும்

தந்தார். நான் கவனமாக எழுதி, முன்னால் கொண்டு காட்டினேன். ''யாரடா மிந்திரிக்கொட்டை'' என்று பின்னால் ஒரு தடிப்பையன் முணுமுணுத்தான். ஆசிரியர் பையன்களை உயிரெழுத்துக்களை மட்டுமே எழுதச் சொல்லியிருந்தார். நான் உயிரெழுத்து மெய்யழுத்துடன் இலக்கமும் எழுதிக் காட்டியதும் ''நீ கெட்டிக்காரன்'' என்று பத்து மார்க்குப் போட்டு ''பள்ளிக்கூடத்தில் சேர்; உன் அப்பாவிடம் சொல்லுகிறேன்'' என்றார். மற்றப் பையன்கள் ஆ எ இ ஐ ஔ முதலிய எழுத்துக்கள் எழுதுவதற்குள் பெரும் பாடாய்விட்டது. தடியா மடயா என்ற வசவுகளிடையே ஒருவாறு எல்லாரும் வெளியே ஒண்ணுக்குச் சென்றனர். நான் அங்குமிங்கும் சிறிது சுற்றி, பெரிய வகுப்புகளின் என் அண்ணாவைத் தேடி வந்தேன்.

22. கண்ணோட்டினார்

இனிய பாட்டுக் கேட்டது. ஓடினேன். நாராய்! நாராய்! செங்கால் நாராய் என்ற சத்திமுற்றப் புலவர் பாட்டை ஆரபி ராகத்தில் பாடிக் கொண்டிருந்தார் தெய்வசிகாமணி ஐயர். அவரை நான் தெருக்களில் பார்த்திருக்கிறேன். அவர் பிரசங்கமும் ஒருதரம் கேட்டிருக்கிறேன். அவர் ஞானி, புலவர் என்பதை அறிவேன். மற்ற ஆசிரியர்போல் சட்டை, பாகையில்லாமல், மேலே அங்கவஸ்திரம் மட்டும் அலட்சியமாகப் போட்டுக் கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்த, அவரைக் கண்டதும் என் உள்ளத்தில் பயபக்தி எழுந்தது. வகுப்புக்கு வெளியே ஒரு சுவரோரம் பத்மாசனத்தில் அடக்கமாக அமர்ந்து, அவர் முகத்தையே பார்த்தேன். முகத்தில் யோகக்களை, கண்களில் கருணையொளி, உதட்டில் நல்ல புன்னகை. பெருந்தன்மையான பேச்சு...வசவு திட்டு இல்லை. நகைச்சுவை அதிகம். மற்ற ஆசிரியருக்கும் அவருக்கும் எவ்வளவோ வேற்றுமை. அவர் வகுப்பு முடியுமட்டும் நான் அசையாமல் அமர்ந்திருந்தேன். ஐயரும் என்பால் கண்ணோட்டினார். மணி யடித்ததும் அவர் வெளியே வந்தார்; நான் எழுந்து நின்றேன்.

''நீ யாரம்பி?'' என்றார். ''நான் ஜே வெங்கடராமன் தம்பி; படிக்க வந்தேன்...உங்கள் வகுப்பில் என்னைச் சேர்த்துக்கோங்கோ... உங்களைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு''...என்றேன். அவர் என் முதுகில் தட்டிக்கொடுத்து...இந்த வகுப்பில் நுழைய நீ ஏழு வருஷம் படிக்க வேண்டும்'' என்றார், ''நீங்கள் சேர்த்துக் கொள்ளுங்கோ நான் எல்லாம் நிமிஷம் படித்து விடுகிறேன். கொட்டாப்புளி வாத்தியார்கூட என்னை கெட்டிக்காரன் என்றார்'' என்றேன். ''அது யாரடா கொட்டாப்புளி? அப்படி ஒரு புளி உண்டா?'' என்றார். சொன்னேன். ''இனி அப்படிப் பெரியவாளைக் கேலி பண்ணாதே; அவர் பெயர் நரசிம்மையர்?'' என்றார். பிறகு என்னைக் கையுடன்

அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு எதிரே யிருந்த வைத்தியம் பிள்ளை மடத்திற்கு வந்தார்.

அங்கே சிவபடம் இருந்தது. நான் அதை வணங்கினேன். அங்கிருந்த வைத்தியம் பிள்ளையிடம் "இந்தப் பையன் புத்திசாலி... நல்ல நிலைக்கு வருவான்"...என்றார். பிள்ளை "அப்பேன்! உனக்கு அரிச்சுவடி வருமா?" என்றார். "வருமே" என்றேன். "அப்புறம் என்ன வரும்?" "பராபரக்கண்ணி, நந்தனார் பாட்டு, அருட்பா, தேவாரம், திருவாசகம் எல்லாம் வரும்"...வந்ததை மடமட வென்று ஒப்பித்தேன். தெய்வசிகாமணி ஐயருக்கு என்மேல் அன்பு தளிர்த்தது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.
தொட்டனைத்து ஊறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

என்ற இரண்டு குறள்களையும் திருப்பித் திருப்பிச் சொல்லச் செய்து, நான் எளிதாக அறியும்படி விளக்கி, "தம்பீ அறிவு இந்த இடத்தில் (மண்டையில்) உள்ளது." "நீ நல்ல நூல்களைப்படி; அறிவாளி களுடன் பழகு; ஊற்றைத் தோண்டத் தோண்டத் தண்ணீர் சலசல என்று வருகிறதல்லவா? அதுபோல் அறிவும் உன் உள்ளிருந்தே பெருகி வரும்.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

ஆத்தா ஊருணியிலே தாமரை மலர்வதைப் பார். நீர் மட்டத்திற்குத் தக்கபடி மலர் நீண்டு வளரும். உன் உள்ளத்தில் உள்ள ஊக்கத்திற்குத் தக்கபடி அறிவும் வளரும்..." என்றார். பிறகு அவர் வீட்டுக்குச் சென்றார். நான் "மாமா நமஸ்காரம்" என்று வீட்டை நோக்கி நடந்தேன். தாமரைக்குளம் என் உள்ளே வேலை செய்தது: ஐயர் சொல்லிய குறள்கள் என் வாழ்வில் ஊறின. அன்று முதல் நான் உள்ளத்தில் ஊக்கிய அறிவால் கல்வி பயின்றேன்.

23. நானே கற்றேன்

பள்ளிக்கூடம் என்றால் உபாத்தியாயர், வாத்தியார் என்றால் பிரம்படி-என்று அஞ்சினேன். ஆனால் என்னுள் ஏதோ ஒன்று "பயப்படாதே, தைரியமாகப் படி" என்றது. "இதென்ன பிரமாதம்? நானே படித்துக் கொள்ளுகிறேன்"...என்று தொடங்கினேன். எனக்குத்தான் எழுத்துத் தெரியுமே. அக்காளின் முதற் பாட புத்தகத்தில் படத்துடன் வார்த்தைகள் உண்டு. எழுத்துக் கூட்டிப்

படித்தேன். பிறகு பாராபரக்கண்ணியை வைத்துக் கொண்டேன். அது எனக்குப் பாடம்; ஆதலால் எழுத்தெழுத்தாக எழுதி எழுதிப் பழகினேன். என் பள்ளிக்கூடம் எது தெரியுமா?...நடராஜா சந்நிதியும் கோயில் கோபுரமுமே. வீட்டில் பழையது சாப்பிடுவேன். ...சிலேட்டு பென்ஸில் பராபரக்கண்ணி எடுத்துக் கொண்டு தனியே அங்கே செல்வேன்...கோபுரத்தில் குளிர்ந்த காற்று வீசும்...யாரும் வரமாட்டார்கள். பராபரக்கண்ணியைத் திருப்பித் திருப்பி எழுதியதில் எழுத்துப் பிடிப்பட்டது. பிறகு தாயுமானார் பாடல்களை முதலிலிருந்து ராகம் போட்டுப் படித்தேன். தட்டினால் சிவசந்நிதியைப் பார்த்து; "அப்பனே! நீதான் குரு! எனக்கு அறிவைத்தா" என்பேன். பத்துப் பதினைந்து நாட்களில் தமிழ் நன்றாகப் படிக்க முடிந்தது. உடனே என் அண்ணா புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினேன்.

பெரியண்ணா "அதிகப்ரசங்கி! உனக்கென்னடா தெரியும்?" என்பான். "தெரிந்தமட்டும் படிக்கிறேன் கேள்" என்று உரத்துப் படிப்பேன். அவனே வியப்பான். இப்படி எழுத்துக் கற்ற பிறகு, எண் கற்க வேண்டுமே. அந்தக் காலம் குன்றக்குடி வாத்தியார் எண் சுவடிப்புலவர். அவர் எங்கள் வீட்டுக்கருகே கொல்லைப்புறத்திலே தான் பள்ளிக்கூடம் வைத்திருந்தார். ஒரு நாள் அங்கே சென்றேன். ஐயோ பாவம்! என்னைப் போன்ற சிறுவர் கண்ணீர் வடித்துநின்றனர். இருவர் கோதண்டத்தில் ஏறி நின்றனர். சிலருக்கு நல்ல பிரம்படி; சிலர் அழுது கொண்டே எண்சுவடி குழிமாற்று முறை வைத்தனர். நான் எண்சுவடியில் ஓரேனெண்ணு மட்டும் தெரிந்து கொண்டு ஓடிவந்து விட்டேன். அப்பாவிடம் சொன்னேன், அவர் எனக்கு எண்சுவடி வாய்ப்பாடு சொல்லித் தந்தார். ஆனால் எனக்குக் கணக்கு ஏறவில்லை, அம்மாள் "இவனை ரங்கையங்கார் பள்ளிக்கூடத்தில் போடுவோம்" என்றாள். விஜயதசமி நாள் பார்த்திருந்தது; அதற்கு முன்பே நான் அந்தப் பள்ளிக் கூடத்திற்கு ஓடிச் சென்றேன். ஏன்? அங்கே எனது நண்பர் சிலர் இருந்தனர்.

இரட்டைத் தெரு ரங்கையங்கார் பள்ளிக்கூடம் எனக்கு முன்பே தெரியும். நவராத்திரியில் அவர் மாணவருடன் கிலுக்கெடுத்து, பணக்காரர் வீடுகளுக்கு வந்து கோலாட்டம் நடத்துவார், எனது நண்பர் அனந்து, ராமு, ரங்கு, மணி இவர்களுடன் நானும் தனியாகக் கோலாட்டம் பழகுவேன். ஐயங்கார் கலைநிரம்பியவர்; அவருக்குச் சோதிடம் மாந்திரிகம் வைத்தியம் தெரியும். நன்றாகப் பாடம் சொல்லித்தருவார். அடிக்கமாட்டார். வையமாட்டார். அதனால்தான் அவரிடம் சென்றேன்.

விஜயதசமியன்று பெற்ருேரும் அண்ணன்மாரும் என்னை ஐயங்கார் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஐயங்காருக்குப் புதிய பத்தாறு தந்தனர். காப்பரிசி பருப்புத் தேங்காய் நிவேதித்தனர். வெல்லத்தால் பிள்ளையார் பிடித்துவைத்து அக்ஷதை தூவி வழிப்பட்டபிறகு, ஐயங்கார் அக்ஷராப்யாசம் தொடங்கினுர். "ஹரிஓம் நமோத்து சித்தம்" என்று சொல்லச் சொன்னுர் ஆசிரியர். நான் ஹரி ஓம் நமசிவாய சித்தம் என்றேன். சிவநாமமும் இருக்கட்டும் என்று எல்லாரும் சிரித்தார்கள். ஆசிரியர் "அ ஆ" என்று என் கையைப்பிடித்து எழுதினுர். நான் "இதெல்லாம் எனக்குத்தெரியும் ஐயா...அ ஆ இ ஈ என்று எல்லா எழுத்துக்களையும் எழுதியபிறகு, "எங்கண்ணுபோலவே இங்கிலீஷ் படிக்கணும்; சொல்லித்தாருங்கோ" என்றேன். ஐயங்கார் தமக்குத் தெரிந்த A B C D சொல்லிவைத்தார். பிறகு காப்பரிசி பருப்புத்தேங்காய் எல்லாம் அங்கிருந்த மாணவருக்குத் தந்தை அன்புடன் தந்தார் நான் பூஜைபண்ணின வெல்லப் பிள்ளையாரை எடுத்துக் சாப்பிட்டுவிட்டேன்! "அடாடா" என்ருர் ஆசிரியர். மாணவரோ "வெல்லப் பிள்ளையார் விழுங்கிடோய்" என்று என்னைக் கேலி செய்தனர்.

24. இங்கிலீஷ் படி

மறுநாள் முதல், காலை பழையது சாப்பிட்டு, நான் ஐயங்கார் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். முப்பத்தைந்து பையன்கள் அங்கே படித்தார்கள். அன்றுநடந்த கோலாட்டத்தில் நானும் பங்குகொண்டு ஆவேசமாகக் குதித்தேன். "ஸ்ரீராம சந்திரனே ஸ்ரீலோலசுந்தரனே ஸ்ரீமந் நாராயணனே ராம் ராம் ராம்" என்பது முதல் பாட்டு. பிறகு "சுத்தபிரம்ம பராத்பராம்". இப்படி பக்திரசப் பாடல்களையே அவர் சொல்லிவைத்தார். என்னிடம் அவருக்குத் தனிப்பிரியம். எனக்கும் அவரிடம் பற்றுதலுண்டு. நான் எழுதப் படிக்க அதிவிரைவில் கற்றேன். பிறகு பெத்த பாலசிட்சை, நீதிசதகம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி இவை பாடாமாயின; எல்லாம் மூன்றே மாதம். பிறகு மிந்திரி லக்கம் குழிமாற்று வட்டிக்கணக்கு கடைக் கணக்கு தொடங்கின.

என் மூத்த அண்ணு என்னை ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு இழுத்துச் சென்ருன். நான் இடக்குப் பண்ணினேன். முன்னே கண்ட பிரம்படிக் காட்சி என்முன் நின்றது. வகுப்பில் அமர்ந்தேன். மறுநாள் "அண்ணு! நான் இங்கிலீஷ் பள்ளிக்குப் போகமாட்டேன்" என்றேன். "மாட்டாயா? போடா!" ஒரு கல்தா...பத்தடி முன் சென்றேன்...பிறகு ஒரு கல்தா இருபதடி...திரும்பிப்பார்த்தேன்... "பார்க்கிருயா படவா?" மற்றொரு தள்ளு...முன்னே ஓடினேன்; அண்ணு தனது நண்பருடன் பேசிநின்ருன். நான் அதிவேகமாக வைத்தியம் பிள்ளை மடத்திற்குள் நுழைந்தேன். கொல்லை வழியே

சந்தைக்குள் புகுந்தேன். அன்று சந்தைக்கூட்டம். கூட்டத்தோடு விழுந்தடித்து ஓடி, நேராக ரங்கையங்கார் பள்ளிக்கூடத்திற்கு வந்து, எனது நண்பன் ராமுவிடம் கதையைச் சொன்னேன். அவன் "என் வீட்டில் இரு" என்றான். "வேண்டாம். ஊர் சுற்றுவோமடா... ஆத்தா ஊருணிக்குச் செல்வோம்" என்று புறப்பட்டோம்.

வழியில் மேளக்கார மாயாண்டியின் வாத்தியம் கேட்டுச் சிறிது மண்டை உருட்டினோம். பிறகு ராமு ஆவாரங்காட்டுத் துரையிடம் என்னை அழைத்துச்சென்றான். அங்கே சில துறவிகள் இருந்தனர். அவர்கள் சித்தர் பாடல் பாடக்கேட்டேன். நானும் பராபரக் கண்ணி பாடினேன். அதைக் கேட்ட ஒரு பாட்டி என்மேல் பிரியங் கொண்டு "கதை சொல்லுகிறேன் கேள்" என்று தொடங்கினாள்

வேலுநாச்சியார் பெரியமருது சின்னமருது கதைகளை வெகு இனிமையாகச் சொன்னாள். எனக்குத் தேசாபிமானம் பிறந்தது. "நான் அன்னியரிடம் அடிமை வேலை செய்ய இங்கிலீஷ் ஏன் கற்க வேண்டும்? தமிழனான நான் தமிழே கற்பேன்..." என்ற உறுதியுடன் தாமரைக் குளத்திற்குச் சென்றேன். அதன் வனப்பும் தனிமையும் இயற்கையழகும் என்னை வசீகரித்தன. ஒவ்வொரு தாமரையும் புன்னகையுடன் என்னை வரவேற்றது. நான் நன்றாக நீந்திக் குளித்து, நெடுநேரம் தாமரைக் காட்சியிலும் பசு வயல்களிலும், சொக்கி நின்று வீடு திரும்பும்போது, தெய்வசிகாமணிப் புலவர் அங்கே தோன்றினார். "நமஸ்காரம்" என்றேன். அவர் "இங்கெங்கே வந்தாய் அம்பி?" என்று அன்பாகக் கேட்டார். "என்னை இங்கிலீஷ் பள்ளிக் கூடத்திற்கு அண்ணா இழுத்துச் செல்கிறான். தமிழனுக்குத் தமிழ் போதாதா? நான் ஓடி வந்துவிட்டேன்" என்றேன். "அப்படிச் சொல்லாதே தம்பி! நீ தமிழ் நன்றாகப் படி. காலத்திற்குத் தக்க கல்வி வேண்டும்... இங்கிலீஷ் படி" என்று உபதேசித்தார். "நானாக வீட்டில் படித்தாலென்ன? பள்ளிக்கூடத்திற்குப் போய் சம்பளமும் தந்து பிரம்படியும் வாங்குவானேன்" என்றேன். நன்றாகப் படித்தால் அடி விழாது, நீ வா; நான் உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன். தைரியமாயிரு." என்றார் புலவர். அவரிடம் எனக்கு அளவற்ற பக்தி யுண்டு; ஆதலால் அண்ணா கெல்தா கொடுக்காமல், நானே பள்ளிக் கூடம் சென்றேன். ஆங்கிலப் படிப்பின் கதை பிறகு சொல்லுகிறேன். இப்போது என் வாழ்வில் வந்த மாறுதலைக் கேளுங்கள். மதுரைக்குச் செல்வோம்.

25. மதுரையில்

நந்தனுக்குத் தில்லை எப்படியோ அப்படி எனக்கு மதுரை. தாயார் அடிக்கடி மதுரை செல்வார். நானும் கூடப்போவேன். எதற்கு? காமாக்ஷியுடன் சென்று மீனாக்ஷியைக் காணவே. மதுரை

மீனாக்ஷியம்மனையே என் உண்மைத் தாயாகக் கருதினேன். மாமா வீட்டுக்குள் மூட்டைகளை இறக்கியதுமே, நேராக நான் கோயிலுக்கு ஓடுவேன். பொற்றாமரையில் குளிப்பேன். சூடன் வாங்கிக்கொண்டு நேரே மீனாக்ஷி சந்நிதிக்குள் புகுவேன். யாரும் இல்லாவிட்டால் கர்ப்பக் கிரகத்திற்குள்ளேயே சென்று "அம்மா பரதேவி! நான் உன் குழந்தை; ஓம் சுத்தசக்தி ஓம்' என்று தேவி பாதத்தை அணைந்துகொண்டு பரவசமாகி இன்பக் கண்ணீர் விட்டு நிற்பேன்...அந்தச் சைதன்ய விக்ரகமும் என்னுள்ளிருந்து "வா மகனே! நன்றாயிரு', என்பதுபோலிருக்கும். சூடனை நானே கொளுத்தி, இந்தச் சூடச்சுடர் போல் நான் உன்னுடன் கலக்கவேண்டும் என்பேன். பிறகு அங்கிருக்கும் குங்குமத்தை எடுத்து இட்டுக்கொண்டு, வெளியே வந்து, வெளி மண்டபக் கிளிகளிடம் "மீனாக்ஷி மீனாக்ஷி!" என்பேன். கிளிகள் "மீனாட்சி மீனாட்சி" என்று வழக்கப்படி கீச்சிடும். எனக்குப் பரம சந்தோஷமாயிருக்கும். "என் மனக்கூண்டிலிருந்து அந்தராத்மக்கிளி இப்படியே ஓம் சுத்தசக்தி நாமத்தைக் கூவுக" என்று வேண்டிக்கொண்டு, மறுபடி அம்மனைத் தரிசித்து, சுந்தரேசர் பிராகாரத்தைச் சுற்றி லிங்க தரிசனம் செய்தபிறகு, அங்கே இருள் மூலையில் உள்ள வன்னிமரத்தடியில் அமர்வேன். ஒருகாலம் அந்த மரம் தளிர்த்துச் செழித்துப் பூத்துக் கனித்தது. இப்போது விறகுக் கட்டைக்கே லாயக்கு. காலம் உலகை அப்படி மாற்றுகிறது பிறந்து முதிர்ந்து வளர்ந்து உலர்ந்து மடிந்து மண்ணாகும் நம் உடலும் அப்படித்தான். உள்ளபோதே பிறவிப்பயனைப் பெறவேண்டும், என்ற எண்ணம் இயல்பாக உண்டாகும்.

அந்தக்காலம் கோயிலில் தேவார திருவாசகங்கள் முழங்கும். அன்பர் பாடுவர். பொற்றாமரைக் கரையில் திருவிளையாடல் புராணம் பெரிய புராணம் முதலியவை நடக்கும். இவை எனக்குச் சிறந்த செவி விருந்தாகும். அருட்பாடல்களை ஆர்வமுடன் உள்ளுருகக் கேட்பேன், நினைவிலிருக்கும் அடிகளைத் திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டே கோயிலைச் சுற்றுவேன். மதுரைப் பொன்னுச்சாமியின் நாதசுரம், கண்ணன் குழல்போல் என் உள்ளத்தை வசிகரிக்கும். அவனது கிரவாணியும் பைரவியும் தோடியும் இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன. நாதசுர அலைகள் எனது இசைப் பண்பைத் தூண்டிவிடும். நானும் காமாசோமா என்று பாட்டிழுப்பேன். பல ராகங்களின் லட்சணம் எனக்கு இயம்பாகத் தெரிந்தது. மாமா வீட்டில் எத்தனையோ வைபவங்கள் உண்டு; துக்கங்களும் உண்டு. இரண்டிலும் கலந்து கொள்ளாமல், நான் அறிவும் அனுபவ உண்மையும் தேடித்திரிவேன். அந்தக்காலம் திருமலைஎன்ற ஊழியன், எங்கள் வீட்டில் இருந்தான். அவன் "மங்கம்மாள் காலத்தில் என் முன்னோர் பெரிய வேலையில் இருந்தார்கள்; வாள் பிடித்தார்கள். இன்று அவர்கள் சந்ததியான நான் உண்ண உடுக்க இப்படி அடிமைத்தொழில் செய்கிறேன்" என்

பான். அவன் நாயக்கர் காலத்துக் கதைகளையெல்லாம் வெகு இனிமையாகச் சொல்லுவான். அந்த வீட்டில் பெரிய மாமாவே என்னை அறிந்தவர். அவர் அன்புடன் என்னை அருகே அமர்த்தி..."செல்வம்! நீ புக்கர்வாஷிங்டன்போல் நமது சமுதாயத்திற்கு உதவி செய்யவேண்டும். ஆப்ரஹாம் லிங்கன், ஃபாரடே, நியூடன், மாக்ஸ்வெல் போன்று அரிய செயல்களைச் செய்யவேண்டும். எடிஸன் பத்திரிகைப் பையனாயிருந்து மின்சாரம் கற்று, முன்னேறி இப்போது கிராமபோன்களும் மின்சார விளக்குகளும் செய்து குபேரனானான். அப்படி நீயும் நாட்டுக்குத் தொண்டு செய். பார், நமது நாடு வறுமையால் வருந்துகிறது. மடமையால் இருண்டுள்ளது. நல்ல கல்வியும் தொழிலும் எங்கும் வளரவேண்டும். பார். நான் இந்த வயதிலும் ஓயாமல் படிக்கிறேன். நார்ப்பட்டு நெய்கிறேன். நீ நன்றாகப் படி, சிந்தி, நினைவை உயர்த்து. நினைவு உயர்ந்தால் வாழ்க்கை உயரும்." இந்தமாதிரி அவர் உபதேசித்துப் பல அரிய நூல்களின் கருத்தை விளக்குவார். "அதைத் துடை; இதை அடுக்கு; போ சந்தைக்கு; கொண்டா அதை" என்று என்னைச் சக்கையாக வேலையும் வாங்குவார்.

26. பேயாட்டம்

இவற்றிற்கிடையே எனக்கு உலக வெறுப்பை உண்டுபண்ணிய நிகழ்ச்சிகள் பல. சிவகங்கை எனக்கு ஞானத்தை அளித்தது, மதுரை வைராக்கியத்தைத் தூண்டியது. சின்னமாமா பெரிய அந்தஸ்தில் நல்ல செல்வாக்கில் வாழ்ந்தார். எனினும் அவருக்கு அமைதி கிடையாது, மகிழ்ச்சி மருந்துக்கும் இல்லை. அவருக்கு ஒரே ஆறுதல் கிராமபோன். கிராமபோன் வைக்கும்போது என்னையும் அழைப்பார். நான் தாயி, பவானி, கோதாவரி, நாகரத்னம், தனகோடி, சண்முகவடிவு முதலியோர் பாடக்கேட்டு, அவர்கள் குரல்களை அபிநயிப்பேன்: சில விகடத் தட்டுகளும் வைப்பார் மாமா "நீ இந்தமாதிரி விகடம் செய்வாயா" என்பார். "பாரும் நானே" என்பேன். மறுநாள் என் கச்சேரி நடக்கும். நாய்குலைத்தல், பூனையின் மியாமியா, கிளிப்பேச்சு, ரயில் வண்டி, கப்பல், மட்டக்குதிரை ஓட்டம், குடுகுடுப்பாண்டி. பெருமாள் மாடு—எல்லாம் அபிநயித்தபிறகு, பலர் நடையைய அபிநயிப்பேன், குரல்களை அபிநயிப்பேன், நடனமாடுவேன். மாமி-நாட்டுப்பெண் சண்டை, கணவன் மனைவி தர்க்கம், தலையணைமந்திரப் படலம்...எல்லாம் நடத்தி, முடிவில் அவர் பெண்போல் நடப்பேன், பேசுவேன்... பெண்களில் சிலர் சிரிப்பர்: சிலர் என்னைக் கரிப்பர்; பின்னவர்கள் முகம் எனக்கு பயங்கரமாயிருக்கும். எனக்கும் ஆபத்துவரும்.

நான் மூன்று வயதுக் குழந்தையாயிருந்தபோது, என்னைத் தூளி கட்டிப்போட்டு, அம்மாள் கோயிலுக்குச் சென்றாள். திரும்பி வந்தபோது, என் வாய் நிரப்பச் சுண்ணாம்பு...நல்லவேளையாகக் கண் தப்பி

யது. ஆளைத் தெரியும். சொல்லமுடியவில்லை. அம்மாள் பொறுமையாக என் வாயைக் கழுவி, நெய்யைத் தடவினாள். என் வாய் தொண்டையெல்லாம் வெந்துபோயின. நீண்டகாலம் இதன் பயனால் நான் வாய்ப்புண்ணோடு வருந்தினேன். இப்படி எனக்குப் பல ஆபத்துக்கள் வந்ததுண்டு.

மாமா பெண்ணுக்குப் பேய் பிடித்ததாகப் புரளிபண்ணி, கூடத்தில் கோலம்போட்டுக் கும்பம் வைத்து, பெண் தலையை விரித்து உட்காரச்செய்தனர். மந்திரவாதி தேவுடையர் "ஓம் ரணசண்டி பத்ர காளிமகாசாஸ்தா...பூதப்ரேத பிசாச வைரி...ஹம்படேஸ்வாஹா" என்று நீண்டநேரம் சண்டி மந்திரமும் ஹனுமார் மந்திரமும் சொல்லி, பயங்கரமாக விபூதி தூவினார். பிறகு அவர் போடும் அரட்டில் பெண் தலை சுழன்றது...உடனே உடுக்கடித்து "தலையை சுழற்றிச் சுழற்றி ஆடடிசல்லி"...என்று பாடினர். ஆட்டம் பாட்டங்கள் அமளிபட்டன. பேய் "ஹாஹா" என்று அட்டகாசம் செய்தது. நீ எந்த மரத்துப் பேய்?...புளியமரத்துப் பேய்...என்ன தந்தால் போவாய்?...புடவை ரவிக்கை தந்தால்...இருநூறு முந்நூறு தந்தால் போவாயா?" என்று பேயைத் தூண்டிவிட்டு, மந்திரவாதி வேண்டியதைக் கைப் பற்றிச் சென்றான். மறுபடியும் பேய் வந்துவிட்டது.

என் பெரியண்ணா தமாஷ் பேர்வழி. அவன் எங்களையெல்லாம் பேயாடச்செய்வான். நான் பாடுவேன் ஆடுவேன் ' "நான் மாமரத்துப் பேய். நல்ல பெங்களூர் ஒட்டு மாம்பழம் தினம் ஒன்று தந்தால் போய்விடுகிறேன்" என்பேன். பேய் பிடித்த பெண் ',ஏண்டா கட்டையிலே போறவனே! உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று சினந்து சீறுவாள். "சூ மூடப்பேயே! அச்சமில்லை" என்போம். பெரிய மாமாவிடம் "மாமா? உங்கள் பிரம்பினால் இரண்டு அடி தந்தால் பேய் அலறி ஓடும்" என்பேன். "இதெல்லாம் மூடர் கூத்து; நீ அஞ்சாதே" என்பார்...இரண்டு நாட்கள் பட்டினி போடுக இடம் மாற்றுக. நிம்மதியாயிருக்கச் செய்க. மனக்குறைகளை அறிந்து தீர்க்க மாமியார், நாத்தனார் மாமனார் கணவன் முதலியோர் அன்பாயிருக்கச்செய்க. பொறுமைக்கு இடந்தருமல் பழகுக; பேய் வராது. மனப்பேயே பேய். மற்றொரு பேயில்லை உறுதி. இந்தப் பெண்ணின் கணவனும் ஒருமாதிரி உம்மென்றிருப்பான். வாசலுக்கும் கொல்லைக்கும் தாண்டுகால் போட்டு நடப்பான். சும்மா ஸௌந்தர்ய லஹரியை ஓப்பிப்பான். அதனால் ஏதோ தவறாகி இப்படிப் பேய் பிடித்ததென்று மந்திரவாதிகள் அவனுக்கும் கோலம்போட்டு ஆட்டம் நடத்தினர். முன் பிறவியில் அவன் யாரையோ கொலை செய்தானாம்; அதனால் உம்மணாமூஞ்சி பிடித்ததாம்...என்றார்கள். வாண்டுப் பயலான நான் அவனுக்குப் பின்னால் தாண்டுகால் போடுவேன். "மாமா என்னுடன் பேசு" என்று கேட்பேன்; என்னை அவர் தனியாக அழைத்துச்

சென்று, பிரியமாகப் பேசி, ஸௌந்தர்யலஹரி சொல்லி வைப்பார். அவர் தேவி உபாசகர். மணவாழ்வை அவர் விரும்பவேயில்லை. வாய்த்த மனைவியும் வக்கிரம்...அதனாலேதான் அவர் யாருடனும் பேசாமல் அப்படியிருந்தார்.

* * * * *

பெரிய மாமாவின் முதல் பெண் செல்லம்மாள் புத்திசாலி. அவள் கணவன் ஒரு சமுஸ்கிரத வித்வான். திருப்புத்தூரில் வேலை. அவன் ஞானி; ஒரு பெண் பிறந்ததும் குருவைத் தேடி ஆத்மஞான சாதனம் செய்தான். அவன் எப்போதும் ஸத்குரோபாஹி என்று மேலே நோக்கிக் கும்பிடுவான். நான் அவனைக் காணும்போதெல்லாம் "ஸத்குரோபாஹி" என்று ஆகாசத்தைப் பார்ப்பேன். அவன் அடிக்கடி குரு த்யானம் செய்வான். விவேக சூடாமணி படிப்பான். நான் அதைக் கேட்டுக்கொண்டிருப்பேன். மற்றவர்களும் மனைவியும் "ஐயையோ யாரோ இவர் மனதைக் கெடுத்துவிட்டார்கள்; பைத்தியம் பிடித்து விட்டது" என்று கூச்சலிட்டுக் கண்டித்தனர் பலிக்கவில்லை. ஒருநாள் அவர் குருவுக்கு முறையிடும்போது, "போ பைத்தியமே" என்று அடித்து விரட்டினர். "சத்குரோபாஹி" என்று ஆள் தெருவில் ஓடினான்; நான் துரத்திச் சென்றேன். மீனாக்ஷி கோயிலுக்குள் புகுந்தான். நானும் சென்றேன். பொற்றாமரைக்கருகே "செல்லையா! இது பைத்திய உலகம். காமகாஞ்சனப் பித்தர் ஞானிகளை அவமதிக்கிறார்கள். நீ இந்த உலகை நம்பாதே. உனக்கும் சத்குரு கடாக்ஷம் கிடைக்கும். பரமாத்மனைப் பக்திசெய்...போபோ..." என்று மறைந்தான். பிறகு ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருநாள் அவன் இறந்துபோனதாக தகவல் வந்தது. வீடெல்லாம் சோகக் காடானது. மங்கலமுகம் முக்காடுபோட்டு மூலை காத்தது. இவையெல்லாம் எனது வைராக்கியத்தைத் தீட்டிவிட்டன. "நீயும் இந்தமாதிரியெல்லாம் திரிகிறாய். உனக்கும் பைத்தியம் பிடிக்கப் போகிறது" என்று எச்சரித்தனர். பைத்தியம் பிடித்துவிட்டதாகவும் சிலர் அஞ்சினர். ஆம். எனது ஞானப்பைத்தியம் முதிர்ந்தே வந்தது. உலக நாடகத்தை இன்னும் தெளிவாகக் காட்ட, சாவின் காட்சிகள் புறப்பட்டன

27. உடல் நிலையா?

ஒருநாள் மாமா பெண்ணின் பிணத்தைக் கழுவிக் குளிப்பாட்டிக் கட்டையில் வைக்கக் கண்டேன். ஆயிரக் கணக்காகச் செலவிட்டுப் பார்த்தும் இந்தப் பெண் ஏன் இறந்தாள்? மணிமந்திர மருந்துகளும் உயிரை உடலில் பிடித்துவைக்க முடியவில்லையே...என்ற சிந்தனையை இந்தச் சாவு கிளறிவிட்டது. மனைவி, இறந்தபின் மாமா மாப்பிள்ளை நடைப்பிணமானான். அவனைத் தேடுவாரில்லை. அவனும் எங்கோபோய்

மண்டையைப் போட்டான். உறவினர் அன்பும் சலுகையும் சுயநலம் என்பதை அறிந்தேன். மாமா வீட்டில் என்னுடன் எப்போதும் விளையாடும் பெண் சின்னி. அவள் என் சின்னம்மா மீனாக்ஷி மகள். அவள் தந்தை அப்பாசாமி போலீஸ்இன்ஸ்பெக்டர்; அவள் என்னைவிட இரண்டு வயதுமூத்தவள்; என்றாலும் நான் சொன்னபடியே நடப்பாள். இருவருக்கும் கோயிலுக்குப்போவது, சாமி விளையாடுவது, வீட்டில் நடக்கும் விநோதங்களை நையாண்டி செய்வது இவையே வேலை. அம்மா எந்தப் பட்சணம் தந்தாலும், அவள் எனக்குத் தந்தே உண்பாள். பெண்மையின் அன்புரிமை முழுதையும் அவளிடம் கண்டேன். அத்தகைய இளந்திரு ஒருநாள் நோயுற்று இறந்தாள். "ஒரு பாவமும் செய்யாத இந்த இளங்கொழுந்து வாடி உதிர்வானேன்? இந்தப் பெண் உடல் இதோ! இதனுள் பேசியது எது? விளையாடினது எது? நான் எதை அன்பு செய்தேன், உடலையா? நான் விரும்பிய அவள் உள்ளத்தில் துடித்த உயிர் எங்கே?" என்ற ஆராய்ச்சியில் புகுந்தேன். "இரவு பகலாய் இதே வேலை..."மண்டுமாதிரி சும்மா உட்கார்ந்திருக்கிறாய்" என்று இடியும் வாங்கினேன். கோயில் வன்னிமரத்தடியில் அமர்ந்து விவேக விசாரம் செய்வதே எனக்கு இன்பமளித்தது. என் உடலும் நிலையில்லை; இதுவும் ஒருநாள் விழும். நான் என்பது உயிரில் கலந்த சுத்தான்மா...அதனாலேதான் நான் ஆடுவது பாடுவது, நினைப்பது, சுவைப்பது, மொழிவது எல்லாம் என்றறிந்தேன். சின்னி சாவுக்குச் சின்னம்மா துடித்ததைக்கண்டு நானும் உளந் துடித்தேன்.

பங்காருப்பாட்டி இறந்தாள். அவள் சாவிற்கு யாரும் அழவில்லை. எல்லாரும் விளையாட்டாகச் சிரித்துக் குதித்தனர். நான் மற்றப் பேரர்களுடன் நெய்ப்பந்தம் பிடித்துக்கொண்டே மயானத்திற்குச் சென்று, அவள் உடல் சாம்பலானதைக் கண்டேன். புரோகிதர்கள் மந்திரம் சொல்லும்போதே சம்புடத்தை நிரப்பியதும், தட்சிணை தந்த பேர்வழி, பணத்தை ஒளித்து மடியை நிரப்பியதையும் கண்டேன். உலகின் கூத்தை அறிந்தேன். உடல் ஒன்றே. இளம் உடலானால் அழுதல், முதிய உடலானால் சிரித்தல்; இரண்டிலும் உயிர் ஒன்றே. கருமாதிகளில் மனம் வெறுத்துப்போனது,

எனது மற்றொரு சித்தி பாலாம்பாள்; அவள் கணவன் நோயாகி இறந்தார். அவர் வாடகை வீட்டில் வசித்தார். நோயால் அந்த உடல் துடிப்பதைக் கண்டேன். உயிர் போவதைக் கண்டேன். அருகேதான் இருந்தேன். அந்தச்சமயம் வைத்தியன் வந்து பணத்தைக் கறந்து போனான். எமன் உயிரைக் கறந்து சென்றான். பத்தாநாள் மொட்டையடித்து முகவாசி போட்டு, சின்னம்மாளை மூலையிலடைத்துப் பலகாரம் போட்டார்கள். ஆ! அந்த அழுகைக் காட்சி என்னைப் படுத்திய பாடு சொல்லி முடியாது. ஒருவர் இறக்க, அவர் மனைவிக்கு இந்தக் கோலமேன்? அந்தக் கோலம் சிலருக்கு மகிழ்ச்சியளித்ததுதான்

விந்தை! தண்ணீர் தடவிக் கண்ணீர் வடித்த ஒருத்தி "என் மனம் குளிர்ந்தது" என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். சில ஆண்டுகளுக்குப் பிறகு பாலம்மாளின் சிறிய பெண்ணுக்கு விவாகமானது...அதுவும் கணவனை யிழந்து மூலை காத்த கொடுமையைச் சகிக்க முடியவில்லை, நான் ஊரைச்சுற்றிச் சில வீடுகளைப் பார்த்தேன்...துயரக் கோலங்களே கண்டேன். ஒரு செல்வக்காளை; மனைவியிருக்கிறாள் கிளிபோல. இந்தப் பாவி ஒரு விலைமகள் வலையில் சிக்கி, மனைவியைக் கொடுமை செய்தான். அவள் கண்ணீர் அவனை அழித்தது. கைமெலிந்து உடல் நலிந்து ஆள் மண்டையைப் போட்டான். அந்த இளம்பெண்ணை, ஐயோ, மொட்டையடித்து மூலையிலடைத்தனர் உறவினர். "ஐயா! அந்த அயோக்கியப்பதர் இருக்கும்போதும் இவள் நரகவேதனைப்பட்டாள், அவன் ஒழிந்தும் நரகவேதனையா? ஏன் அவள் மறுமணம் புரிந்து வாழக்கூடாது?" என்று கேட்டதற்கு அவள் பெற்றோர் என் மேல் சீறி விழுந்தனர். எனக்கு உலகம் துன்பச் சாக்காடாகத் தோன்றியது. "உடல் நிலையா? நாமும் ஒருநாள் உடலை உதறிச் செல்ல வேண்டியதுதானே...இருக்குமட்டும் இறைவனிடமே நெஞ்சம் வைப்போம்" என்ற உறுதி மேலிட்டது. அதன் பயன் விபரீதமானது. நான் பள்ளிப் படிப்பைக் கவனிப்பதில்லை; வீட்டில் வசவு, பள்ளிக்கூடத்தில் பிரம்படி.

28. உள்ளே தேடு

ஸந்யாசி தாத்தா காசியிலிருந்து வந்து, மாமா தோட்டத்தில் அமர்ந்தார். நான் அவருக்குப் பணிவிடை செய்தேன். அவர் எனக்கு ஹடயோக ஆஸனங்கள் பிராணாயாமம் எல்லாம் கற்பித்தார். பிறகு தம்முடன் கண்ணை மூடிக்கொண்டு தியானிக்கச் சொன்னார். தியானத்தினிடையே வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நான் படும் பாடும் துயரும் வந்து தடை செய்தன, துறவி என் உள்ளம் அறிந்து "ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்டார்.

நான்: சுவாமி! அப்பா கடுகடுக்கிறார்.

அவர்: இன்னொர் அப்பா இங்கே யிருக்கிறார்; அவர் கடுகடுக்க மாட்டார். அவரைத் தேடு.

நான்: சுவாமி! அம்மா சினக்கிறாள்.

அவர்: இன்னொர் அம்மா இங்கே இருக்கிறாள்; அன்பு மயம்; தேடு.

நான்: உபாத்தியாயர் அடிக்கிறார்.

அவர்: இதோ இங்கே இருக்கிறார் உண்மையான உபாத்தியாயர். தேடு, எல்லா அறிவும் தன்னால் வரும்.

நான்: எண்ணும் எழுத்தும் படிக்காமல் வருமா?

அவர்: இங்கே பரமாத்தா—பரிசுத்தமான வஸ்து உள்ளது; அதையே எண்ணு; அதுதான் எண்; அதை வழுத்து; எழுத்தும் சொல்லும் வரும். உனக்குக் கவிதை வரும்...

இந்த அரிய உபதேசத்தால் எனக்கும் பரமாத்மப் பைத்தியமே பிடித்துவிட்டது. அக்காலம் மீனுக்ஷிகோயில் பொற்ருமரைக் கரையில் ஒருவர் மாணிக்கவாசகர் சரித்திரமும் திருவாசகமும் படித்துப்பொருள் விளக்கிக்கொண்டிருந்தார். கருத்துடன் கேட்டேன். குருந்தமரத்தடியில் குரு மந்திரம் பெற்று, அனைத்தையும் துறந்த மாணிக்கவாசகர் போல், நானும் சிவகுருவை அறியத் துடித்தேன். பரதேசிக் கூட்டங்களிலெல்லாம் தேடித் திரிந்தேன். அப்போது சமய சஞ்சீவிபோல் ஒரு துறவியைக் கண்டேன். பொற்ருமரையின் தென்மேற்குக் கரையில் ஒரு பிள்ளையாரும், அதன் பக்கத்தில் திருநீற்றுக்கலயமும் இருக்கும். அதனருகே ஒரு சாது பத்மாஸனத்தில் ஊன்றி தியானித்தார். நான் அவரை வணங்கி அமர்ந்து, கண்ணை மூடிக்கொண்டிருந்தேன். அன்று அம்பலத்தாடி கிராமத்திலிருந்து ஏராளமான மாங்கனிகள் வந்திருந்தன. நான் பாட்டியிடம் கேட்டு, ஐந்தாறு கனிகளை எடுத்து ஒரு துண்டில் கட்டிக்கொண்டு வந்திருந்தேன். சாது கண் திறந்ததுமே மாங்கனிகளை முன்னே வைத்து, "சாமி சாப்பிடட்டும்." என்றேன். சாது புன்னகைத்தார். "கனிந்த உள்ளம் தந்த கனிந்த கனிகளை உண்போம், வா தம்பி" என்று என்னை அந்திப்பொட்டல் பக்கம் அழைத்துச் சென்ருர். தனியிடத்தில் கனியுண்டோம். குழாயில் கைகழுவி நீர் பருகினேம். பிறகு என்னை அவர் பேச்சியம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்ருர். அங்கே பெரிய ஆலமரம் உண்டு. அதன் அடியில் தனியாக அமர்ந்தோம்.

நான்: சுவாமீ! மாணிக்கவாசகர்போல் இருக்கமுடியுமா?

சாது: சிவனருள் இறங்கினல் இருக்கலாம். அவனருளாலே அவன் தாள் வணங்கி—என்கிருர் பெருமான்,

நான்: அவனருளை நானும் அடையமுடியுமா? எப்படி?

சாது: சேய்போலிரு; தாய்போல் வரும். நான் என்னுதே, அவன் எனச் சொல்; அருள் கூடும்.

நான், சுவாமி! மேலே வானைப் பார்த்தால் அதனடியில் நிற்கும் நான் ஒரு தூசிபோலத் தோன்றுகிறது. பரிசுத்தமான விண்ணிலிருந்து காற்று, கதிர், மழை ஆகிய சக்திகள் வந்து, உலகைக் காக்கின்றன. ஆதலால் நான் வானைப்பார்த்து 'ஓம் சுத்த சக்தி' என்று கடவுளைக் கருதி வருகிறேன். சரிதானு?

சாது: ஓம் சுத்த சக்தி—சுத்தப் பிரம்மம், தூயசிவம், பராசக்தி இரண்டும் ஓங்காரத்தில் இணைந்த மந்திரம்...ஒருமையுடன் ஜபி. சுத்த சிவம் விஞ்ஞான கலருக்கு உள்ளிருந்து அருளும்.

நான்: சாமி! விஞ்ஞான கலர் என்றால்?

சாது: தம்பி! மனமாயமற்று, இறைவனையே நம்பி அனைத்தையும் துறந்த அன்புச் சுடர்களே விஞ்ஞான கலர். அப்படியிரு தம்பி... ஓம் சிவம்...

மறுநாள் இத்துறவி பழநிக்குச் சென்றார். திருவருளில் உறுதி கொண்டேன். ஜபமும் தியானமும் தீவிரமாகச் செய்தேன். துறவித் தாத்தா என் வைராக்கியத்தைத் தூண்டிவிட்டார்.

29. போ உன் அம்மாகிட்ட

கோடை விடுமுறை. அம்மாளும் நானும் மதுரைக்கு வந்தோம். மாமா என்னை என்றுமில்லாத பிரியமுடன் பேணினார்: ஒருநாள் முழுதும் அம்மாளுடன் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். தத்து நத்து என்று என் காதில் விழுந்தது. ஆம், என்னை மாமா தெத்தெடுத்து, பெரிய அந்தஸ்திற்குக் கொண்டுவர நினைத்தார். இதை நான் யூகித்தே கோயிலுக்குச் சென்று, அம்பிகை முன் நின்று "அம்மா நான் உன் குழந்தை, பணம் எதற்கு? உன் அருளே வேண்டும், என்னைக் காப்பாற்று" என்று வணங்கி வந்தேன். அப்போது சுந்தரேசர் பிராகாரத்தில் "மற்றுப்பற்றெனக்கின்றி நின் திருப் பாதமேமனம் பாவித்தேன்" என்று பாசுரம் நடந்தது. தமிழ் வேதம் என் உள்ளத்தைத் தொட்டது...

ஐந்தாறு நாட்கள் இப்படியே சென்றன. புதன்கிழமை மாலை: அம்மா "வாடா செல்லம்" என்று எனக்கு மகமல்பட்டில் செய்த நிஜார், சட்டை மாட்டினாள். மாமா பட்டுக்குல்லாய் போட்டு என்னைத் தமது நிதிச்சாலைக்கு அழைத்துச் சென்றார். முதலில் கிராமபோன் வைத்தார். "இனியேது எனக்குனருள் வருமோ எனக்கருதி ஏங்குதே நெஞ்சம் ஐயோ" என்ற தாயுமானார் பாடல் என் மனதைத் திறந்தது. "இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லையே!" என்று நானும் சேர்ந்து பாடினேன். "படவா! நீ இந்த மாதிரி பாட முடியுமோ?" என்றார் மாமா. "திருவருள் இருந்தால் பாடுவேன்" என்றேன். பிறகு "மாதர் பிறை கண்ணியானை...கண்டறியாதன கண்டேன்" என்ற தேவாரம். நானும் "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று பாடினேன்..."செல்லம்! கண்டறியாதன எல்லாம் காட்டு கிறேன் பார்" என்றார்.

பெட்டகம் திறந்தது. செடிப்பவுன்களும் மோகராக்களும் நவமணிகளும் குவிந்து கிடந்தன. வெள்ளி தங்கச் சாமான்கள் பல, பள பள பள...

மாமா:—பார் கண்டறியாதன...

நான் :—இதுதானு பூ...இதெல்லாம் உனக்கு ஏது மாமா ?

மாமா :—எல்லாம் என் சொத்துடா...செல்லம்,

நான் :—உன்னதா ? இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்ப ரென்று எண்ணவோ திடமில்லையே...இப்போதுதானே இதைக் கேட்டோம்

மாமா:—அதிகப்ரசங்கி ! வேதாந்தம் வேண்டாம் ! கேள் செல்லம்; இந்த பங்களா உனக்கு வேண்டுமா ?

நான் :—ஆகாச பங்களா போதுமே.

மாமா :—அதிகப்ரசங்கி பவுன், மோகரா, நகை, வெள்ளி, தங்கம் எல்லாம் பார்...

நான் :—இதெல்லாம் எதற்கு மாமா? யாருக்காக வைத்திருக் கிருய் ?

மாமா :—உனக்குத்தானடா.........செல்வம், இந்த மாளிகை, பணம் எல்லாம் உனக்குத் தருகிறேன்...எனக்குப் பிள்ளையாயிருக் கிருயா ?

சிறிது நேரம் திகைத்து நின்றேன்...நான் மட்டும் 'சரி' என்று தலை அசைத்திருந்தால், போதும். மறுநாளே தத்தெடுத்திருப்பார். என் விதியே மாறியிருக்கும் நான் பாரிஸ்டராகி மாடியில் சுருட்டு விட்டுக் கொண்டிருப்பேன். ஆனல் யோகியாயிருக்க முடியாது. எனக்கு இன்னது சொல்வதென்றே தெரியவில்லை. அப்போது வாசலில் ஓர் அந்திப் பிச்சைக்காரன் வந்தான், 'அம்மா பிச்சை !...பசி பொறுக்க முடியவில்லை' அம்மா:..ஏழைக்கிரங்கும் அம்மா'...என்னும் பிச்சைக் காரன் குரல் என் மனதில் ஒரு புரட்சியை உண்டாக்கியது.

மாமா ;—என்னடா செல்லம் சும்மா விழிக்கிருய் ? பார் எவ் வளவு பவுன் ! எல்லாம் உனக்கு ; எனக்குப் பிள்ளையாயிரு...ஆகட் டுமா...சொல்.

நான் :—மாமா ! நான் அம்மா பராசக்தி, மதுரை மீனுக்ஷிபிள்ளை. உனக்கேன் பிள்ளையாவேன் ?

மாமா :—ஹா என்னடா சொன்னுய் ?...செல்லம் ! நீ என் பிள்ளை ; உனக்கு இந்த பங்களா சொத்து சுகமெல்லாம் தருகிறேன்.

நான் :—இவ்வளவு சொத்து எதற்கு மாமா ?...

மாமா :—எதற்கா......நன்ருய்ச் சாப்பிட்டு சுகமாக அட்டணக் கால் போட்டுக் கொண்டிருக்கலாம்...

நான் :—மாமா ! நாம் சும்மா சாப்பிட்டிருக்கவா வந்தோம்... நான் சாப்பாட்டு ராமனில்லை ; நான் ஒன்று சொல்கிறேன். இதெல்

லாம் என் அம்மா தந்த சொத்து. அதோ ஏழை அலறுகிறான்! ஏழைக்குத்தா, புண்ணியமுண்டு.

மாமா :—சை! அதிகப்ரசங்கி! குட்டிவேதாந்தி! சொன்னதைக் கேள். இரு என் பிள்ளையாக...சொத்தை அனுபவி...

நான் :—இதோ அனுபவிக்கிறேன் மாமா...

நான் பெட்டகத்தில் குவிந்த பவுன்களில் கைபோட்டு அள்ளினேன். 'இதெல்லாம் அந்தப் பிச்சைக்காரனுக்கு' என்று ஓட அடியெடுத்தேன். மாமா கண் சிவந்தது..."படவா அதிகப்ரசங்கி... சி சி!" என்று கையிலிருந்ததைப் பிடுங்கிப் பெட்டகத்தில் போட்டார். டப்பென்று அதை மூடிப் பூட்டினார். நான் வெளியே வந்துவிட்டேன். அவரும் கஜானாவைப் பூட்டிவிட்டு வந்தார். அப்போது என் தாய் காமாக்ஷி வந்து "செல்லையா மாமாபிள்ளையாயிரு...இந்த பங்களா சொத்தெல்லாம் உனக்கே"...என்று கொஞ்சலாகச் சொன்னாள்.

நான் :—ஏனம்மா உனக்கும் இப்படி புத்தி போனது. நான் அம்பிகை பிள்ளை.

மாமா :—அப்படியானால் அம்பிகைதான் உனக்குச் சோறு போடுகிறாளோ...?

நான் :—தடையில்லாமல்; எனக்கு உனக்கு ஈ எறும்புக்கும் என் அம்மா சுத்திசக்திதான் சோறு போடுகிறாள்.

மாமா :—அப்படியானால் போ உன் அம்மாகிட்ட...இன்றிரவு எப்படிச் சாப்பிடுகிறாயோ பார்க்கிறேன். போ உன் அம்பிகையிடம்...

கட்டளை பிறந்து விட்டது. நான் மௌனமானேன். பேசாமல் மாடியில் ஏறி, கோயில் கோபுரத்தையே பார்த்திருந்தேன். அது 'உன் அம்மா இங்கே இருக்கிறாள் வா' என்று அழைப்பதுபோல் இருந்தது. நான் மெல்லக் கொல்லைபுறமாக நழுவி, ஆவேசமாக அம்மன் சந்நிதிக்கே ஓடினேன். உலகையே மறந்தேன்.

30. அடைக்கலம்

கூட்டமில்லை. பட்டரும் இல்லை. அம்மா முன் நின்றேன். "ஓம் சுத்தசக்தி நீயே என் அம்மா...நான் உன் பிள்ளை. என்னைக் காப்பாற்று தாயே" என்றதே நினைவிருக்கிறது, பிறகு அம்பிகை பாதத்தில் விழுந்தேன். பாதத்தைத் தொட்டேன்...நின்றேன்... செல்ல முடியவில்லை. அப்படியே சந்நிதானத்தில் சாய்ந்தேன். உடலை மறந்தேன். விம்மி விம்மி அழுதேன். இதயம் பட் பட் என்று

குதிரை ஓட்டம்போல் அடித்துக்கொண்டது. நரம்புகளில் எறும்பூர்வதுபோல் ஓர் மின்சார விறுவிறுப்பு : மனதில் புதிய எக்களிப்பு; உள்ளத்தில் பனிக்கட்டி வைத்ததுபோல் ஓர் குளிர்ந்த இன்பம், கடும் கோடையில் வேர்த்து விறுவிறுத்தவனுக்கு, தேனும் பாலும் இளநீரும் கலந்து கொடுத்தால் எப்படியிருக்கும் ? அத்துடன் தெளிந்த பாலாற்றில் நீந்தினல் எப்படியிருக்கும்? அப்படிப்பட்ட அனுபவம் அந்த நிமிஷத்தில் உண்டானது. நாவில் ஒரு சுழற்சி யெழுந்தது. மூளையில் புருவ நடுவிலிருந்து உச்சி மூளையூடே ஒரு தீபம் எரிவதுபோல் ஒளி பொலிந்தது. ஐந்து நிமிஷம் அதே அனுபவம்! பிறகு சட்டென்று எழுந்தேன். என்னை யாளுடைய சுத்தசக்தி முகத்தைப் பார்த்தேன் ; புன்வகை பூத்திருந்தது, அபயக்கரம் 'அஞ்சாதே மகனே' என்பதுபோலிருந்தது. என்முன் விளங்கியது அப்போது சிலையாகத் தோன்றவில்லை. என் குழந்தை யுள்ளத்தில் உருக்கொண்ட சுத்தசக்தி வடிவாகவேயிருந்தது. நான் "அம்மா அம்மா அம்மா" என்றேன். பிறகு "அம்மா பரதேவி தயாபரியே" என்றேன்...அதைத் தொடர்ந்து வந்தது பாட்டு :

அம்மா பரதேவி தயா பரியே!
சும்மா உலகின் சுமையாக இரேன்!
எம் மாத் திரமுன் பணியிங் குளதோ
அம்மாத் திரம்வைத்து, அடிசேர்த் தருள்வாய்.

பரதேவீ, நான் உனக்காகவே உன் பணிக்கே வாழ்வேன். எம்மட்டில் உன் பணியுள்ளதோ அந்தமட்டில் இந்த வினையுலகில் வாழ்வி. காரியம் முடிந்ததுமே என்னை உன் திருவடியில் சேர்த்துக்கொள். ஓம் சுத்த சக்தி என்று வணங்கி, நேராக எனது தியானபீடமான வன்னி மரத்தை நோக்கினேன்.

நான் வெளியே வந்தபிறகுதான் கூட்டமும் வந்தது. அதுவும் வியப்பே. நாலைந்து பேர்கள் மட்டும் என்னைக் குறிப்பாகப் பார்த்தார்கள்; நான் ஒரே நோக்காக வன்னி மரத்தடியில் அமர்ந்தேன்.

31. பிரசாதம்

எத்தனை மணி என்று தெரியாது. கணகணவென்று சந்நிதி மணி யடித்தது ; வண்டும் சங்கும் அருவியும் சேர்ந்து பாடுவதுபோன்ற நித்திய கானனந்தம் என்னுள் இசைத்தது. அந்தி தீபாராதனையாகிறது. தேவார திருவாசகங்கள் முழங்குகின்றன. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற தேவாரநாதம் காது குளிர வருகிறது. உள்ளே ஒரு பிரார்த்தனை. "அப்பனே அம்மையே" நானும் இந்த மாதிரி அருட்பாடலால் உன்னை ஆராதனை செய்ய அருள் ! பிஞ்சுக்கவி ஒன்று எழுந்தது.

பிறந்ததும் உனக்கே, வளர்ந்ததும் உனக்கே
பிதற்றிடும் கவியும் உனக்கேதான்.
துறந்ததும் உனக்கே கரைந்ததும் உனக்கே
சுத்த சுதந்தரச் சுடரே ஓம்!
நிரந்தரமான பரஞ்சுட ரொளியே!
நிலவிடும் ஞான விளக்காகும்
வரந்தரு வாயென் மனதினில் வளரும்
வானமுதே அருளுருவே ஓம்...

அருளுருவே ''ஓம் சுத்தசக்தி', என்று நான் வாய்விட்டுச் சொன்ன போது ''யாரது'' என்று சத்தம் கேட்டது. நான் இருந்த இடம் இருள் மூலை; நான்தான் என்றேன்- யார் நீ?...என்று வந்தார் தேவேந்திரபட்டர். அவரை எனக்குத் தெரியும், என்னை அவர் அறிவார்...அட நீயாடா...இந்தா பிரசாதம்'' என்று இனிய சக்கரைப் பொங்கல் தந்தார். என்ன வியப்பு! என் அம்மா எனக்கு அன்னமும் அளித்தாள். ஆச்சரியம்! அன்று யாரோ கட்டளை நடத்தி விநியோகம் செய்வித்தார். அதை எல்லாருக்கும் தந்தபிறகு பிராகாரத்திற்கும் கொண்டுவந்த பட்டர், என்னையும் கண்டு தந்தார். அதுவே உண்மை; என்றாலும் பராசக்தியே என் உட்பசி தீர்த்ததாக உணர்ந்தேன், அன்று முதல் நான் யாரிடமும் கையேந்தியதில்லை. பசி என்று பறந்ததில்லை. உணவு என்னைத் தேடிவந்தாலே உண்பது; எனது உட்புறப் பசிகளையும் என்னையும் என் வாழ்வையும் சுத்தசக்திக்கே பூரண சரணாகதியாக்கினேன். பிறகு நடந்ததெல்லாம் திருவருளிச்சை தவிர எனது முயற்சியே இல்லை. வந்ததும் போனதும் சுத்தசக்தி யிச்சை. நான் இருந்தபடியே குழந்தை யாயிருக்கிறேன்.

என் வாழ்வு புதுமை பெற்றது. நான் மாறிப் பிறந்தேன். தாயார்மட்டும் என்னை அறிந்துகொண்டாள். மாமா இரண்டாந் தாரம் மணந்து கொண்டார். லக்ஷ்மி பிறந்தாள். அவள் ஜாதகத்தையும் என் ஜாதகத்தையும் மாமா சும்மா பார்த்துப் பார்த்துச் சிந்தித்தார், மற்றொரு நிகழ்ச்சி என் ஞான தாகத்தைத் தூண்டியது.

32. ஆனந்தக் களிப்பு

நான் யார்? எதற்காகப் பிறந்தேன்? வந்த வினையென்ன? செல் கதி என்ன?...என்பதை அறிந்தேன். அன்று முதல் என் வாழ்க்கை உள்முகமானது. எனது வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறத்தக்க கலைகளையே வளர்த்தேன். அதற்கேற்ற சாதனங்களையே தேடினேன். யோகமே எனது தொழிலானது. அதற்குச் சாதனமாகவே கலையும் கவிதையும் பணியும் உதவின. நான் உலக மாயத்

தில் ஆழ்ந்திவிடாதபடி, அடிக்கடி உலகியல்பை இயற்கையிறைவன் ஆயிரம் நாடகங்களாக என்முன் காட்டினான். உறவினர் பாகச் சண்டையும், மாமி மருமிச் சண்டையும், பொருமைச் சூழ்ச்சிகளும் என்முன் நாடகமாக நடித்தன. நேற்று "தம்பி வாடா" என்றவன் இன்று 'தடியா போடா' என்கிறான். பொய்யும் கோளும் புனைப்பும் சினப்பும் மனித வாழ்வைப் பாழ் செய்கின்றன. வறுமை மடமை பிணி மூடத்தனம் அடிமைமனப்பான்மை அச்சம் அநீதிகளால் உலகம் நரகமாகிறது. ஏதாவது செய்து பொருளைச் சேர்ப்பது, உண்பது உறங்குவது, வம்படிப்பது, சண்டையிடுவது இவையே மக்கள் வேலையாயின. ஒருநாள் இரவு நான் ஒரு மூலையில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்தேன். வம்பர் "மகாயோகி, சாமியார்" என்று கையாண்டியில் தொடங்கி, "இந்தப்பயல் பரதேசியாகப்போகிறான்..." என்று என்னைப் புண்படுத்தினர். நான் கோயிலுக்கு ஓடினேன். 'துன்பந் தொலைந்து இன்பம் பெருகத் துணைசெய் என்னம்மா' என்று பாடி, அம்பிகையைத் தொழுது நின்றேன். "அம்மா உலகம் புளித்தது, கசந்தது. இங்கே எனக்கு என்ன வேலை?...நானார்? என்ன செய்யவந்த நான் என்ன செய்கிறேன்? மீண்டும் மன இருள் மதியை மறைக்கிறதே; ஞானவழி காட்டியருள் தாயே...' என்று வணங்கிய போது, வெளியே பொற்றாமரைப் பக்கமிருந்து இனிய பாட்டு வந்தது; சுத்தசக்தியே வழி காட்டுகிறாள்...என்று ஓடினேன், பண்டாரங்கள் கப் 'றை தட்டிக்கொண்டு பாடினர்:

சங்கரா! சங்கரா! சம்போ

பாராதி பூதம்நீ அல்லை—உன்னிப்
பார் இந்திரியம் கரணம்நீ அல்லை
ஆராய் உணர்வுநீ என்றான்—ஐயன்
அன்பாய் அளித்தசொல் ஆனந்தம் தோழீ!

சங்கரா! சங்கரா! சம்போ!

ஆங்கென்றும் ஈங்கென்றும் உண்டோ—சச்சி
தானந்த ஜோதி அகண்ட வடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டால்—பின்னர்
ஒன்றேன் றிரண்டேன் றுரைத்திட லாமோ?

இறைவன் அன்பருக் கன்பான மெய்யன்; ஆனந்த அருட் குரு நாதன். இதயமத்தியில் அருளுணர்வால் அவனைக் காண். பிறகு பரமசுகமாய் வாழ்வாய்" என்ற வேதப்பொருள் என் மனதைக் கொஞ்சியது. மகான் தாயுமானார் பாடல்...என்ன இனிய வேதம்! ஆனந்தக்களிப்பு கவலையை அறுத்தெறிந்து, வாழ்விற்கும் பேரின்ப அமைதி தந்தது. பராபரக் கண்ணியுடன் தொட்டிலாடிய என் குழந்தைப்பருவம் ஆனந்

தக்களிப்புடன் முடிந்தது...இப்போது வயது எட்டு. இனி நான் படித்த கதையைச் சொல்லுகிறேன்.

ந. படித்தேன்

33. இந்தப் படிப்பு

1835-ல் மெக்காலே சட்டம் போட்டான்; உத்யோகத்திற்கு ஆங்கிலம் அவசியமானது; நாடு அடிமை நரகமானது. 1857-ல் இந்தியா சுதந்தரப்போர் புரிந்தது; துரோகிகள் துணையும், துப்பாக்கிக் கனலும் கொண்டு அதை அடக்கி, அடிமை விலங்கை இன்னும் பலமாக இறுக்கினர் ஆங்கிலர்; 1904-ல் கர்சாவின் இரும்பாட்சி அட்டகாசம் செய்தது. சர்வகலாசாலைச்சட்டம் வந்தது. படிப்பு அடிமைத் தடிப்பானது. அதன் விலை மலையானது; பலன் ஏமாற்றமே. மாமனூர் தயவால் சிலர் டாக்டர் வக்கீல் எஞ்சினியர் ஆனூர். கஞ்சிப்படிப்பும் கலியாணப்படிப்பும், வயிற்றுக்கு நடிப்பாயின. பெற்ரூர் வீடு நிலங்களை அடகுவைத்து, கடன்பட்டு, மெய்வருந்திப் படிக்கவைத்து இலவுகாத்த கிளிபோல் ஏமாந்தனர். இங்கும் அங்கும் ஒரு மணிஐயரோ, மாதவராவோ இருந்தனர். பெரும்பாலானவர் வாழ்வின் புதிர்முன் கையைப்பிசைந்து கண்ணீர் விட்டுத் திகைத்தனர். ஒரு பி. ஏ. புலம்புகிருன் கேளுங்கள்:

ஐயாநான் பி. ஏ. அலங்கார மாப்பிள்ளை
கையிலே பிள்ளை; கவலைக்குப் பஞ்ச மில்லை.
ஆமை நடையினிலே ஆங்கிலத்தைக் கற்றறிந்தேன்.
ஊமைக் கனவினிலே ஓடிவிளை யாடுகிறேன்.
தாயைத் தவிக்கவிட்டுத் தாசியினைப் பூசிக்கும்
பேயை எனக்குவமை பேசிடினும் போதாதே.
கான மயிலாடக் கண்டாடும் கோழியைப்போல்
நானழகு செய்துகொண்டு நாகரீகம் காட்டுகிறேன்.
மாமி பழிக்க மனைவி இடித்துரைக்கக்
காமி தவம்புரிந்த கதையான தேன்கதியே.
வற்றி வறண்டு வயிறு பிழைத்திடநான்
கற்ற கலையறிவும் காற்றிலே போனதையா.
கீதை குறளறியேன் கிப்பன் நடையறிவேன்
சீதைக்கு ராமன் சிற்றப்பன் என்றிடுவேன்.
சாமெட்ரி யானறிவேன்; சந்தைக் கணக்கறியேன்
பூமிநூல் கற்றேன்; புழக்கடையின் மண்ணறியேன்

கூலிவே லைசெய்து குப்பன் பிழைக்கின்றான்
காலர்டை கட்டிநான் கையைப் பிசைகின்றனே.

நான் பதினாயிரம் மாணவரைப் பார்த்திருக்கிறேன்; நூறுபேர் ஏதோ நல்லநிலையில் இருக்கிறார்கள். நூறு ஆசிரியரைப் பார்த்திருக்கிறேன்; பத்துப்பேர் கடமைகாக்கிறார்கள்; பலர் கடனைக்கழிக்கிறார்கள். படிக்கும் நாட்களைக் கணக்கிடுவோம்: சனி ஞாயிறு, கோடை விடுமுறை கிறிஸ்துமஸ் விடுமுறை, பொங்கல், தீபாவளி, தசரா, தேர் திருநாள், பண்டிகை என்று ஏராளமான ஓய்வுநாட்கள் வருகின்றன. படிக்கும் நாட்கள் சுமார் 120; நாளுக்கு 5 மணி நேரமே பள்ளிக்கூடம்; ஆண்டுக்கு மொத்தம் அறுநூறு மணி நேரம்; அதாவது 25 நாட்கள். இதில் ஆங்கிலமே பெரும்பாலும் கற்பர்; கணக்கு, சரித்திரம், பூகோளம், ஸயன்ஸ் பாடங்களுக்கெல்லாம்போன மிச்சம் தாய்மொழிக்குக் கிடைக்கும். அந்தக்காலப் படிப்பெல்லாம் பொட்டைப்பாட சர்கஸ் தான். அதுவும் வாழ்க்கையில் புகுந்ததும் மறந்துபோகும். நூல்கள் பெயரே நினைவிருக்கும். ஆங்கிலம் பேச எழுதவரும்; பதினைந்தாம் பட்டாளத்தில் சேர்ந்து பேனா ஓட்டலாம். வேலையில்லாத் திண்டாட்டம் வரவர அதிகமானது, படித்த ஜம்பம் சாய்வுநாற்காலியில் ஓட்டிக்கொண்டிருக்கும்; மளமள வென்று கைப்பாடுபட்டுப் பிழைக்காது, கண்டகண்ட புத்தகங்களைக் கரோஸைன் வெளிச்சத்தில் படித்துக் கண்ணாடி போட்டதே லாபம். என்னுடன் படித்துப் பெரிய பட்டங்கள் பெற்ற சில மாணவருக்கு மூளை கூடப் பிசகியது. ஒரு எம். ஏ. ஊரெல்லாம் அல்ஜீப்ரா, தெருவெல்லாம் யூக்ளிடாகத் திரிந்தார். ஒரு பி. ஏ. தன்னைப் படிக்கவைத்த காருவடைப் பாட்டியுடன் வடைபோடத்தொடங்கி, காப்பிக்கடை வைத்தான். மற்றொருவன் அப்பாவுடன் அரிசிக்கடைவைத்தான். ஏராளமான பேர் குமாஸ்தா வேலைக்கு அலைந்தனர். ஒரு பேர்வழி மட்டும் அப்பாவுக்கே வக்கீல் குமாஸ்தாவாகி நன்றாகச் சம்பாதித்தான். ஓய்வுநேரங்களில் நாவல்களைப் படித்துக் கதை எழுதினான். பிறகு ஸினிமாவுலகிற் புகுந்து பணம் குவித்தான். நாலு வகுப்புப் படித்துவிட்டுப் பலசரக்குக் கடைவைத்த பேர்வழி, மளிகை முதலாளியாகிச் செழித்தான். பட்டம்பெற்றவர்கள் நூறு ரூபா சம்பாதித்தும் வாடகை வீடும் வயித்தியச் செலவுமாக வாழ்ந்தனர். ஏழெட்டு வகுப்புகள் படித்து, ஒரு தொழிலில் இறங்கிச் சுறுசுறுப்பாக முன்னேறியவர் பலர். எனது நண்பன் ஒருவன் ஈயடிச்சான் காப்பி வேலை புளித்துப்போய், ஒரு சேப்டிரேசர் வைத்துப் பிழைக்கவும் துணிந்தான். ஒருவன் காபி ஓட்டல் வைத்துப் பட்டதாரிகளின் மாதச் சம்பளத்தில் பாதியை வசூலித்துக்கொண்டான். இப்படிப் படிப்பிற்கும் பிழைப்பிற்கும் எட்டாக்கையாயிருந்தது. என் தமயனார்கள் மேதாவிமாணவர்களே. வேங்கடராமன் தமிழிலும் ஆங்கிலத்திலும்

புலவன். இசைப்புலவன். அதுபடி இதுபடி என்று என்னை ஏவி இலக்கியப்பயிற்சிதந்தான். அவன் ஹரிகதை செய்திருந்தால் புகழ் பெற்றிருப்பான். அவன் வக்கீல் தேறி, வரும்படியில்லாமல் திண்ணையில் பத்திரிகை படித்துக்கொண்டு, வீட்டு வருத்தமே தெரியாதிருந்ததைக் கண்டேன். அரங்கசாமி ஸயன்ஸ் நிபுணன், மேடைப் புலவன், நல்ல பேச்சாளி; அவன் வக்கீலாயிருந்தால் செழித்திருப்பான். ஆனால் பள்ளிக் கூட ஆசிரியரானான். குடும்பவாழ்வில் அவனுக்கு நிகழ்ந்ததெல்லாம் கண்டேன். அவனும் பொருளாதாரச் செழிப்படையவில்லை. இதைக் கண்டு நான் எனக்கென்றே ஒரு கல்விமுறையை வகுத்துக்கொண்டு தன்னுதவியுடன் வாழ்ந்தேன். என் வாழ்க்கை பள்ளிக்கூடத்தில் உருவாகவில்லை: அதற்கு வெளியேதான் தன் இயல்பிற்கேற்ற அழகை அடைந்தது. பட்டப்படிப்பு மட்டப்படிப்பு. என் இயற்கைக் கல்வியைப்பற்றியே இங்கே பேசுவேன். அதுதான் என் ஆத்ம சோதனைக்குத்தக்கது; இனிவரும் மாணவருக்கும் வழிகாட்ட வல்லது.

34. தன்னுதவி

எனக்கு நானே உதவி. எந்தை படும் பாட்டைக்கண்டு என் உள்ளம் உருகும். அவருக்கு நான் இயன்றதெல்லாம் புரிவேன். அவர் நடந்துசென்றும் கோயில் பிரசாதம் உண்டும் பணம் மிச்சம் வைத்து, எங்கள் படிப்பிற்குக் கொட்டினார். ஒருநாள் மதுரைக்குச் சென்றபோது செம்பனூரில் திருடர் வழிமறித்தனர். தந்தை தமது மடிசஞ்சியை அவர்களிடம் தந்து, சிவமே துணை என்று நின்றார். திருடர் பையிலிருந்த விபூதியைக் கொஞ்சம் தரச்சொல்லி இட்டுக் கொண்டு "சாமி சாது, போய்வாருங்கள்" என்றனர். அப்பா இடுப் புப்பையில் கட்டியிருந்த ஆயிரம் ரூபா தப்பியது. ஒருதரம் நானும் அவரும் இளையாற்றங்குடிக்குச் சென்றோம். சேவல் பட்டிக்கருகே அவருக்கு மயக்கம் வந்து படுத்துவிட்டார். நான் அங்குமிங்கம் துணை தேடினேன். ஒரு செட்டியார் வண்டி எதிர்பாராமல் வந்தது. அதில் அப்பாவை ஏற்றிச்சென்றேன். நித்யகல்யாணி சந்நிதிக்கு வந்ததும் மயக்கம் தெளிந்தது.

ஒன்றும் கவலையில்லை உள்ளமே நன்றாக
நின்று நிலைத்து நினைத்திடுவாய்—என்றுமே
நேயரைக் காக்கும் நித்திய கல்யாணி
தாயைப் புகுவாய் சரண்.

மூலக் கனலே முதிய உலகாளும்
காலக் கனலே கதிரம்மை—நீலகண்டன்

பாகத் தமர்ந்த பரம சிவக்கனலே
யோகத் தமர்வாயென் னுள்.

என்று பாமாலை சூட்டினேன். அப்பா மடப்பள்ளியில் பிரசாதம் வாங்கிவந்தார். இருவரும் குளத்துப்படியில் அமர்ந்து உண்டோம். "அப்பா, எங்களை இப்படிக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றும் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்?" என்றேன். அப்பா ஆவேசம் வந்ததுபோல் "நானு காக்கிறேன். பரமசிவன் காக்கிறுன். மேலேபார்; அந்த ஆகாசம் இல்லாவிட்டால் பூமி வாழுமா? மண்ணுக்கு வான்போல் கண்ணுக்குக் கதிர்போல், உயிருக்குச் சிவம்" என்றார்...ஒரு பாட்டு வந்தது:

மண்ணுக்கு வான்போல், வளர்உயிர்க்கு மாருதம்போல்
கண்ணுக் கொளிபோலக் காப்பாற்றும்—எண்ணில்லா
அண்டங்களைப்படைத்தான் ஆண்டான் அருளிறைவன்
உண்டின்பம் உண்டிங் குணர்.

இந்த நம்பிக்கையே என்வாழ்வின் ஆணிவேர். அக்காலம் கீழச் சேவற் பட்டியில் உபதேசம் நடந்தது. பெரிய கூட்டம்; பெரிய செலவு ஒரு நண்பரிடம், "இந்தச் செலவெல்லாம் கல்விக்கானுல் ஆயிரம் மாணவர் படிப்பார்களே என்றேன். அதைக் கேட்டுக் கொண்டு வந்தார்." கானுடுகாத்தான் ராவ்பகதுர் ராமசாமி செட்டியார். "சரியான பேச்சு" என்றுர். இருவரும் ஆங்கிலத்தில் பேசினேம். என்மேல் அவருக்குப்பிரியம். அவர் வைத்திருந்த ஜார்ஜ் எலியட் நாவலை நான் தெளிவாகப் படித்தேன். "கெட்டிக்காரராயிருக்கிறீரே; சிதம்பரத்திற்கு வாரும்...படிக்கலாம்" என்றுர். அவர் தம்பி அண்ணுமலை செட்டியார் ஒரு தூணில் சாய்ந்து திறக்குறள் படித்துக்கொண்டிருந்தார். அவர்களை என் கல்விக்கு உதவி கேட்க வாய் வரவில்லை. 'உழைத்துப்படி' என்றது மனச்சாட்சி. இளையாற்றங்குடி உத்தியோகஸ்தர் சிவகங்கைக்கு வந்தால், எங்கள் வீட்டிலே தான் சாப்பிட்டிருப்பார்கள். ஆனுல் நாங்கள் அங்கே போனுல், யாரும் வீட்டிற்கு அழைக்கமாட்டார்கள். அப்பா "அதனுல் என்ன, பூமி அழைத்தா மேகம் பொழிகிறது." என்பார். அப்பாவின் எழுத்து வேலையில் நான் உதவி செய்வேன். எழுத்துக்கூலி என் செலவிற்குச் சரிக்கட்டும். நான் நாட்டரசங்கோட்டை காளையார்கோயில் திருநாட்களுக்குச் செல்வேன், பஜனை பாடுவேன், சமாராதனைகளில் நீர் கேட்பேன்...கவிபாடுவேன், பிரபல வித்வான்களிடம் என் குரலையும் காட்டுவேன். படிப்புச் செலவு கைக்குவரும். ஊரில் பைண்டு செய்வேன். சில மாணவருக்குப் பாடம் சொல்லுவேன். நண்பர் வீட்டில் உண்பேன். என் காலட்சேபம் தட்டில்லாமல் நடந்தேறும். தகப்பனுரைப் பணம்கேட்க நாணுவேன். ஒருநரம் என் புத்தகத்தை

ஒரு நண்பன் திருடிக்கொண்டான். நான் புதுப்புத்தகம் கேட்க நாணி, பாடங்களை எழுதி எழுதிப்படித்தேன். மற்ருெருதரம் என் கலர்ப்பெட்டி போய்விட்டது. வைத்திலிங்கத்திற்கு ஆறு புத்தகங்கள் பைண்டு செய்துதந்து தேவையான வர்ணங்களைமட்டும் வாங்கி, நானே பிலிசெய்து சித்திரவாத்தியாரை மகிழ்வித்தேன். என் ஆடைகளை நான் உவர்மண்போட்டே வெளுத்தணிவேன். "பலே வண்ணுன்; என் வேட்டியும் வெளுத்துவா" என்று முத்தண்ணு ஒரு துணிமூட்டை தருவான். நான் ஒய்வு நாளில் வெளுத்து, உலர்த்திக்கொண்டு வருவேன். இரவில் மண்ணெண்ணெய் விளக்கில் படிப்பது கண்ணைக் கெடுக்கும். நான் பிள்ளையார் கோயில் விளக்கில் நிம்மதியாகப் படித்து வந்தேன். அல்லது நண்பர் வீடுகளில் படிப்பது வழக்கம். அண்ணு—சாமி ஐயர் பேரன் கே. எஸ். வேங்கடராமன், குட்டி ஜோசியர் பேரன் ஜ. ராமசாமி ஆகிய இருவர் வீட்டிலும் நான் இரவில் படித்துவந்தேன். இளையாற்றங்குடி தேவஸ்தான காரியங்களுக்கு அப்பா வாடகை அறை பிடித்தார். தனியாக இருந்து அங்கே நூலாராய்ச்சி செய்தேன். பசித்தாலே வீட்டை எட்டிப்பார்ப்பேன். நான் வந்ததும் அம்மா எளிய உணவு தருவாள். பேசாமல் சாப்பிட்டுப் பறவைபோல் ஓடிப் போவேன். அம்மா தனியாக ஆறுபேருள்ள குடும்பத்தைத் தாங்கும் அன்பு என் உள்ளத்தைத் தொடும். நான் பரான்னம் சாப்பிடுவதை அவள் தடுப்பாள். "பகவான் கொடுத்ததை உண்டு வாழ்வோம்" என்பாள்; யார் வீட்டிலும் ஜலபானம் செய்யமாட்டாள். பிறர் பொருளுக்கு ஆசைப்படமாட்டாள். ஒருதரம் சுந்தரம்பிள்ளை கடையில் சாமான் வாங்கிப் பணந்தந்து, பாக்கி கேட்டேன்; அவன் அவசரத்தில் காலணு அதிகமாகத் தந்துவிட்டான். அம்மாளிடம் 'காலணு லாபம்' என்று நிகழ்ந்ததைச் சொன்னேன். "சை பாவம், தொழிலாளியை ஏமாற்றக்கூடாது" என்று தானே அந்தக் காலணுவைச் சுந்தரம் பிள்ளையிடம் தந்துவந்தாள். நான் காலை மாலை குளித்து வந்ததுமே தாயார் திருவடியில் மலர்தூவி வலம்வந்து, ஓம் சுத்தசக்தி என்று வணங்குவேன். தகப்பனுரையும் காலையில் வணங்குவேன். பிறகு அக்காள் அத்தை, பிறகு பெண்களையெல்லாம் வணங்கி வந்தேன். இது வாலிபவேகத்தை அடக்கத் துணையானது. என் சக்தி உபாசனைக்கு அனுபல்லவிபோல் முத்தண்ணு "பங்காரு நீ கலியாணம் பண்ணிக்காதே" என்று அடிக்கடி சொல்லுவான். ஆனுல் அவனே கலியாண நுகத்தடியில் அகப்பட்டுக்கொண்டான். சோழவந்தானில் அவன் கலியாணம் நடந்தது. கலியாணக் கூத்தும் கோலமும் கண்டேன். அண்ணுவின் நகைச்சுவை வேடிக்கையாயிருந்தது. ஒரு நாள் சோழவந்தான் ஆற்றாடே நாகமலைக்கு நடந்து சென்றேன். போகப்போக மலை தொலைவானது. ஒரு தோப்பில் தங்கினேன். அங்கே ஒரு பரதேசி பாடிக்கொண்டிருந்தார்—

சட்டாத காளையைக் கட்டவேணும்—ஆசை
வெட்டவேணும் வாசி கட்டவேணும்
எட்டாத கொம்பை வளைக்கவேணும்—காயம்
என்றைக் கிருக்குமோ வாலைப்பெண்ணே;

இந்த வாலைப்பெண் கும்மி என் உள்ளத்தில் துறவைத் தூண்டியது. பரதேசியுடன் அளவளாவி நாகமலை போவதாகச் சொன்னேன். "தம்பி அது இன்னும் வெகுதொலை...திரும்பு ஊருக்கு." என்றான். நான் "அதோ சிவலிங்கம்போல் தெரிகிறதே வழுவழுப்பாய்" என்றேன். "இங்கிருந்து பார்த்தால் வழுவழுப்பு; கிட்டப்போனால் கரடுமுரடு...அப்பனே கலியாண பந்தமும் இப்படித்தான்...கட்டும்போது கெட்டிமேளம்; கலக்கும்போது கவலைக்கோலம்" என்றார். ஊர் திரும்பும்போது பரதேசி குதம்பைச்சித்தர் பாடல் பாடிவந்தார்.

என் முத்தண்ணு லக்னோகாங்கரசுக்குச் சென்று வந்து, திலகரையும் மாளவியாவையும் வர்ணிக்கப் புகுந்தான். நானும் தீவிரமான தியாகமும் தேசசேவையுமாக வாழ பிரமசரியம் மேற்கொண்டேன். ரங்கண்ணு வாழ்வைப் பார்த்தேன். அக்கா ரங்கநாயகியின் இல்லறத்தைக் கண்டேன்...வறுமையுடன் போராடும் காதலரைக் கண்டேன்... என் வாழ்வை உள்ளே திருப்பி யோக மார்க்கத்திற் சென்றேன். ஆதலால் என் சக்தி நூற்றுக்கு நூறு சுத்தாத்ம சித்தியாக விளங்கியது. எனக்குப் பொறுப்பாளி நானே. வேறெவரையும் எம் மனச்சாட்சியில் குறுக்கிட விட்டதில்லை. உள்ளத்தானையே நம்பினேன். அவனே என்னை உருவாக்கி ஆட்கொண்டான். இதனிடையே ஆசிரியவுலகைச் சுற்றியறிவோம்.

35. ஆசிரிய வுலகம்

அந்தக்காலம் மாணவர் ஆசிரியரைக்கண்டு அஞ்சினர். ஆசிரியர் என்றால் பிரம்படி, வசவு, அறை, கிள்ளு, மார்க் ரிசிட்டர் இவை எமதூதர்போல் எதிரே நிற்கும். பரீட்சை எமராஜாபோல வரும். கனவில்கூட பரீட்சையை நினைத்து உளறிக்கொள்வேன். பள்ளிக்கூடத்திற்கு வெளியே மளமளவென்று படிப்பேன், கவி பாடுவேன், ஞானம்பேசுவேன் பள்ளிச்சிறைக்குள் நுழைந்தால், என் வாய் அடைத்துவிடும், எழுதத்தோன்றாது. சில ஆசிரியர் கெட்ட பேச்செல்லாம் சொல்லிச் சிறுவரை வைவதும் அடிப்பதும் பெஞ்சிமேல் நிறுத்துவதும், நெற்றியில் சுன்னம்போட்டு அவமானப்படுத்துவதும் கண்டு மனம் புழுங்கினேன்.

1. நான் என்போக்கில் சுதந்தரமாயிருந்தேன். இரண்டாம் வகுப்பிலேயே ஆங்கிலம் பேசினேன். என் அண்ணாக்கள் பேசவும், மேடைமேல் நடிக்கவும், படிக்கவும் கேட்டு, எனக்கும் ஆங்கிலம்

வந்தது. ஒரு நாள் ஒன்பது மணிக்கெல்லாம் வகுப்பிற்கு வந்து, ஒரு கூடையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு டோனி லம்ப்கின்போல் நடித்தேன். குஷியாக ஆங்கிலத்தில் பாடினேன். தோழர் தமாஷாகச் சிரித்தனர். மணியடித்ததுகூடத் தெரியவில்லை. ஆசிரியர் திடீரென்று நட்சத்ரேயன்போல் வந்து, என் முதுகில் இரண்டு வைத்தார். ''ஒட்டைக்கப்பல் துரை...உனக்கு வால்தான் இல்லை'' என்று வைதார். ''துரைக்கு வால் உண்டோ, ஸார்'' என்று கேட்டேன். உர்ர் என்று பார்த்து, என்னை அறைய எழுந்தார்; அவர் கச்சம் ஒரு ஆணியில் மாட்டிக்கொண்டு அவிழ்ந்தது...'' ஸார் ஸார் வால் வால்'' என்று நாங்கள் கத்தினோம்...வேடிக்கைதான்!.

2. ஒரு வைதிகப்பழம்; பிரப்பம் பழத்தில் புலி. அவரை யாராவது தொட்டால் ''அட பறப்பலே'' என்பார். கண்டபடி வைவார். பிள்ளைகளும் அவர் அந்தப் பக்கம் திரும்பும்போது '' அட பறப்பலே'' என்று சத்தமிடுவார்கள். இந்த வார்த்தையே எனக்குப் பிடிக்காது. ஏனெனில் தமுக்கடிக்கிற முனியாண்டி என் சிநேகிதன். சாதிமத பேதம் என் கிட்ட வரக்கூடாது.

ஒரு நாள் டிக்டேஷன் எழுதியபோது, இடையிடையே வாத்தியார் சொன்ன வசவுகளையும் சேர்த்து எழுதிவிட்டேன். என்னைப் படிக்கச் சொன்னார்: பரதாழ்வார் ராமனிடம் வணக்கமாக [அடபறப்பலே சக்கிலியப்பலே] அண்ணா, அயோத்திக்கு வா [உன் புத்தியிலே லத்தி வச்சிருக்கா] என்றார் இப்படிப் படிக்கவே வகுப்பு முழுதும் சிரிப்பானது...கட்டைப்பிரம்பின் தர்பார் நடக்கவில்லை. ''படவா உன்னை இதெல்லாமா எழுதச் சொன்னேன்'' என்றார் ஆசிரியர்: உங்கள் திருவாய் மொழிதானே ஐயா என்றேன், ''அதிகப்ரசங்கி உன் வாயிலே என்ன வச்சிருக்கு...'' என்று சினந்தார். ஐயா வாயிலே நாக்கு நாக்கிலே வாக்கு என்றேன்:

3. ஒரு ஷோக் வாத்தியார் பாட்டும் சிட்டுமாயிருப்பார். நான் அவர் வீட்டில் விகடம் செய்வேன், அவருக்கு நாடகத்தில் அரசியாக நடிக்க விருப்பம். நடித்தும்பார்ப்பார். நான் பலேபேஷ் என்பேன், ஒருநாள் வகுப்பில் உறங்கி ''பிராணநாதா'' என்று கனவில் உளறினார். நான் '' எழுந்திருடீ பிராணசகீ '' என்று மெல்லச்சென்னேன். சிறுவர் கொல் என்று சிரித்தனர். அவர் திடுக்கிட்டெழுந்து, ஒரு டப்பி பொடி உறுஞ்சி, கொஞ்சம் காவடிச்சிந்துபாடி, பொருட்பாடம் தொடங்கினார்.

ஒரு நாள் அவர் சிட்டுக்கட்டு வாங்கிவரப் பணம் தந்தார். நான் கொல்லை வழியே சென்று, பணத்தை அம்மாமியிடம் கொடுத்துச் சென்றேன், அம்மாமி ''இப்படித்தானா காசை வீணாக்குவது?. உமக்கென்ன ஜட்ஜ் வேலையா? இருபது ரூபாக்காசு...அதிலே நான்

குடும்பம் நடத்தி, மூன்று வேளை பொங்கிப் போடவேண்டும்...'' என்று டோஸ் கொடுத்தாள். ஷோக் வாத்தியார் மறுநாள் என்னை உர்ரென்று பார்த்தார். நான் ''மன்னியுங்கள் ஸார், சீட்டு பொடி எல்லாம் கெட்டபழக்கம்'' என்றேன்.

4. பொட்டைப்பாட வாத்தியாரிடம் நான் வாங்கிய வசவு கணக்கில்லை. ஒருநாள் ஆங்கில இலக்கணம் குருட்டுப்பாடம் பண்ண மறந்துபோனேன். எழுது நாலு தடவை என்று வெளியே தள்ளினர் மகானுபாவர். நான் இதற்காகவே கார்பன் காகிதங்கள் வைத்திருந்தேன். ஒரே தடவையில் நான்கு காப்பி எழுதிவிட்டேன். என்னுடன் தண்டனை வாங்கிய தோழருக்கும் அப்படியே எழுதித் தந்தேன். அவர்கள் யுக்தியைத் தெரிந்துகொண்டு, ஆபீஸ் குப்பைகளிலெல்லாம் கார்பன் காகிதம் பொருக்கி வந்தனர். இந்த யுக்தி ஆசிரியருக்குத் தெரிந்துபோனது. ஒருநாள் இம்போசிஷன் வழக்கம்போல் எழுதி விட்டு மாமரக் கிளிகளுக்குக் கடலைபோட்டு,

கூண்டில்லாது வாழ
வேண்டும் பச்சைக் கிளியே

என்று பாடிக்கொண்டிருந்தேன். என் முதுகில் விழுந்தது கட்டைப் பிரம்பு...''போ கழுதை பெஞ்சுமேல் நில்; பாடம் ஒப்பி'' என்று உள்ளே தள்ளினர் ஆசிரியர். நான் என் கோஷ்டியுடன் பாடத்தை ஹோ என்று அலறினேன். தலைமை ஆசிரியர் ஓடிவந்து வினவினர். ''ஐயா என் மண்டையில் பொட்டைப்பாடம் ஏறவில்லை. எல்லாம் அது மயமாயிருக்கிறதே'' என்றேன். தலைவர் அமைதியாகப் பாடத்தை விளக்கினர். உடனே நானும் ஒப்பித்தேன். ''முதலில் நன்றாக விளக்குங்கள்...குருட்டுப்பாடம் பயனில்லை''...என்று சென்றார் தலைவர். ஆசிரியர் கடுகடுத்தார் சிடுசிடுத்தார் டியூஷன் பையன்களுக்குச் சலுகை காட்டினர். நான் அவர் கொடுங்கோல் பொறுக்காமல், ஏ டிவிஷனுக்குப் போய் விட்டேன், தலைவரே என்னை அனுப்பினர்.

5. ஸ்ரீநிவாசராவ் நல்லாசிரியர்; அறுபது வயதானாலும் அன்பும் அமைதியும் ஊக்கமும் கொண்டவர். ஆசாரசீலர். அவர் வகுப்பில் கலைமகள் படம் உண்டு. அதற்கு வணக்கம் பாடியே நான் அமர்வேன். நான் தமிழ் வகுப்பில் சுயமாகப் பாட்டுக்கட்டியே ஒப்பித்தேன். ராயர் 'நீ கவிதான். இருந்தாலும் வகுப்பில் தேறப் பாடமும் பண்ண வேண்டும்'...என்று அன்பாகச் சொன்னர். அவர் ஒருவரே எனது பிஞ்சுக்கவிகளை ரசித்தவர்.

6. ஒரு முரட்டுப் புலி; ஆந்தைக்கண், கழுகு மூக்கு; இரக்கம் பூஜ்யம். அடி மிதி அறை வசவு எல்லாம் அமளியாக நடக்கும்; அவர் வகுப்புக்குப் போகுமுன் அனுமாரை வேண்டிக்கொண்டே செல்வேன். பாடமெல்லாம் குருட்டுப்பாடம். நெஸ்பீல்டு இலக்கணம் ஒப்பிக்கா

விட்டால் சாப்பிட விடமாட்டார். பசியுடன் பெஞ்சுமேல் நின்று நெஞ்கில் குத்திக் குத்திப் பாடம் பண்ணவேண்டும். ஒரு நாள் நான் அந்தத் தண்டனைக்குள்ளாகி ஒரு பாட்டெழுதினேன் :

சிந்தைக் கினிய சிறுகிளியை இக்கூட்டில்
பந்தப் படுத்திப் பலமான—மோந்தையுருத்
தள்ளப் புலியின்கை தந்ததென்ன விந்தையம்மா
உள்ளமிரங் காய்சக்தி ஓம்.

முரட்டு வாத்தியார் பசக்கென்று பார்த்தார் "நீ என்ன ராமலிங்கமோ.. அவர் செத்தாரை எழுப்பப்பாடி செத்தே போனன்" என்று தொடங்கி, அருட்பாவையும் பழித்தார். நான் "ஐயா ராமலிங்கசுவாமிகள் அருட்பாபாடி செத்தாரை எழுப்பினலும், தங்களிடம் எல்லாரையும் கொண்டுவந்தால், அவர் வாக்கு பொய்யாகிவிடும்...பிழைத்தாரும் சாவார்" என்றேன். "ஹூம் என்ன சொன்னுய்? நான் உங்களைச் சாகடிக்கிறேனு?" என்று உருமினூர், "நீங்களா ! கடிக்கிறதேயில்லையே" என்றேன். அவர் சுவை அு என்று நினைத்து, அப்படிச் சொல் என்ருர். வகுப்பு முழுதும் சிரித்தது.

இவரைத்தான் நாங்கள் மிகவும் கேலி செய்வோம். வகுப்பில் பெத்த குப்புடுவைத் தூண்டிவிடுவோம். "பெத்தன்னு ஹூம் !" என்ருல் போதும் ; அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒப்பித்து விடுவான். கேள்விக்குமட்டும் பதில் வராது. இன்ஸ்பெக்டர் வாட்ஸ் வந்தார். ஜமெட்ரி வகுப்பு ; உருண்டைபற்றிப் பாடம் ; சோதகர் ஆங்கிலத்தில் "இதென்ன ?" என்று கேட்டார். பெத்தன்னு "இதுதான் சாமட்டி" என்ருன். இது எதுபோல் இருக்கிறது. தேங்காய்போல்...தேங்காய் என்ன வடிவம்?. பிடித்தது. நெல்ஸன்ஸ் ரீடரில் உள்ள தென்னை மரப்பாடம் முழுதும் மூச்சுவிடாமல் பெத்தன்னு ஒப்பித்தான்... நாங்கள் சிரிப்பை அடக்கமுடியவில்லை. "போதுமடா திவசமந்திரம்" என்று நான் மெல்லச் சொன்னேன். சோதகர் உண்மையை அறிந்து, குருட்டுப் பாடத்தின் தீமையை ஆசிரியருக்கு விளக்கி, பள்ளிக் குறிப்பிலும் எழுதிவிட்டார். யார் சாபமோ இந்த முரட்டு வாத்தியார் உடல் வீங்கி இறந்துபோனுர். சுடுகாடுவரையில் அவர் பாடையுடன் சென்று, எங்களை அடித்த கையும் புலி முகமும் எரிந்து சாம்பலாவதைக் கண்டோம்.

7. இனிய வாத்தியார்—சொக்கலிங்கம் ஆசாரி. அவர் வகுப்பிற்கு வந்ததுமே, வேல் முருகா, என்பார். நாங்கள் "ஸார் ஸார் ஒரு திருப்புகழ்" என்பேர்ம். "ஆமடா வடுவா, பாடம் நடக்கட்டும்" என்பார். "ஸார் ஸார் முருகன் அருளால் நடக்கும்...தனன தன தனனதன...உம்" என்போம். அவர் "குமரகுருபர முருகா" என்று திருப்புகழ் பாடுவார். நாங்கள் பெஞ்சில் தாளம் போடுவோம். பிறகு பாடம் நடக்கும்.

சந்தேகம் வந்தால் வெப்ஸ்டர் அகராதியைச் சுமந்துவரச்சொல்லுவார். "அட்டடா வடுவா! இவன் மூளை என்ன மூளையோ, இத்தனைவார்த்தைகளும் அதில் எப்படி நுழைந்ததோ" என்று வியப்பார். பிறகு பொருள் பார்ப்பார். இவர் மதியம் காப்பி சாப்பிடமாட்டார். மலை வாழைப்பழமே உட்கொண்டு தண்ணீர் குடிப்பார். நானே பழம் வாங்கி வருவேன். இவரால் நானும் கனி யுணவில் விருப்பங்கொண்டேன். இவர் அடிக்கடி குடும்பத் தொல்லைகளால் ஓய்வெடுத்துக் கொள்வார். அப்போது ஆதிமூலம் பிள்ளை வருவார் அவர் கேம்ப்ரிட்ஜ் ஸீனியர் தேறினவர், கணக்கில் புலி, அண்ணு நண்பர். வீட்டுக்கு வரும்போதெல்லாம் நான் இவருக்கு நீர்மோர் தருவேன். "தம்பி சாதிபேதம் பாராதே. தமிழர் ஒரு குலம்" என்பார். எனது தமிழ்க் கவிதைகளை இவர் கேட்டு மெச்சினர். இவர் எனக்கு ஆங்கில யாப்பிலக்கணம் கற்பித்தார். அப்போதே ஆங்கிலக் கவிகள் இயற்றத் தொடங்கினேன். இந்த ஆசிரியர் அகாலமரணமடைந்ததும், அவர் தந்தை காத்தையா பிள்ளை ஒரே மகனை இழந்து, அழுது தவித்ததும், உடலின் பொய்யுறவை விளக்கி, எனது வைராக்கியத்தைத் தீட்டி விட்டன.

8. திடீரென்று எனக்குப் படிப்பில் அக்கரை வந்துவிட்டது. ஆங்கிலத்தில் முதல். கணக்கில்கூட சோடையில்லை. நைஸ் வாத்தியாருக்கு நான் செல்லப்பிள்ளையானேன். அவருக்கு நானே டிபன் கொண்டுவந்தேன். அம்மாமி என்மேல் பிரியம். சிலசமயம் வகுப்பில் கோபாவேச நாடகம் நடக்கும். பிரம்படியும் உண்டு. நான் அம்மாமியிடம் எல்லாம் சொல்லுவேன். "குழந்தைகளை அடிக்காதேங்கோ" என்று அம்மாமி கண்டிப்பாள். மறுநாள் மனைவி சொன்னபடியே அன்பாயிருப்பார். ஆதலால் எங்கள் குறைகளை நாங்கள் அந்தப்புரத்தில் அரங்கேற்றி, இந்தப்புறத்தில் பலனைக் காண்போம்.

10. பெரிய வகுப்புகளில் நான் ஆங்கிலமே பேசி எழுதி அதிலேயே சிந்தித்தேன். மாணவர் சங்கக் காரியதரிசியானேன். வாரக்கூட்டங்களில் பேசினேன். என் குறும்புகளெல்லாம் அடங்கி யோகசாதனமும் கலையுமாக வாழ்ந்தேன். ஆசிரியர்களும் மணிக்கு டக்கென்று வந்து, தளுக்காகப் பாடத்தை நடத்திவிட்டு டிக்கென்று செல்வார்கள். கேலி நையாண்டிகளுக்கு இடமிராது. அதிலும் கே. பாலசுப்ரமணியர் வகுப்பில் ஒரு வீண்பேச்சிராது. தினம் இரண்டுபக்கம் பாடம், வாரம் ஒரு பாட்டு நடக்கும். புத்தகசாலையில் அரிய நூல்களை எடுத்துப் படித்தோம். எங்களுக்கு உயர்ந்த ஆங்கில இலக்கியங்கள் பாடம். சொல்லித்தருபவரோ மாயவரம் கி. ஸ்ரீநிவாசர். ஆள் ஒடிசல் வக்ரம், உச்சக்குடுமியை அவர் நகாசு செய்யும்போது சிரிப்போம். மார்க்குப் பேரேட்டில் குண்டலமாலையாயிருக்கும்; சுன்னம்போடுவதில் நிகரற்றவர்: ஆனால் நல்ல படிப்பாளி. என்னிடம் வேதாந்தப்பற்று

தல் கொண்டவர். ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் என் பாராயண நூல்கள். அவற்றை அவர் படிக்கும்போதே சங்கர வேதாந்தத்தை விளக்குவார். இவர் பேச்சில் இலக்கியம் உண்டு. அவர் மற்ற ஆசிரியர்களை இலக்கியமாக மட்டம் தட்டுவார். அவருள் முதன்மையானவர் டிங்டிங் மாஸ்டர்.

11. பி. ஏ.யில் ஆறுதரம் கோட்டடித்த பெருமை டிங்டிங்கைச் சேர்ந்தது. அவர் கெஸ்பீல்டை உருத்தள்ளினவர். கணக்கு சரித்திரம் இரண்டிலும் கைவிரசு காட்டுவார். ஆனால் பத்து வார்த்தை மளமளவென்று பேச வராது, அடிக்கடி டிங் டிங் போடுவார். நாங்களும் டிங் டிங் என்போம். "இம்பெர்டினெண்ட் (அதிகப்ரசங்கி) டிங் டிங்" என்பார். இவர் சின்ன விஷயத்திற்கு அண்டங்கிழியக் கத்துவார்' அரசர் கலாசாலையில் இவர் சத்தமே பெரிதாயிருக்கும். இவர் சாபம் வைக்கத்தொடங்கினால் கட்டிடம் அதிரும், செல்வப்பிள்ளைகள் இவருக்குச் செல்லப்பிள்ளைகள். மற்றவர்களை "இங்கேனடா வந்து பிராணனை வாங்குகிறாய். தொலைடா சனியனே செங்கல் தூக்க" என்பார். என்னை "உன் அண்ணாவுக்கு குமாஸ்தா வேலை பார்க்கப் போடா" என்பார். "இல்லை சார் நான் டாக்டர்வேலை பார்ப்பேன்" என்பேன். இவர் சாபத்தால் நான் யாருக்குமே குமாஸ்தா வேலை பார்க்காமல் கடவுள் காத்தார். அவர் பேசினாலோ வாய்ப் பன்னீர் தெறிக்கும். ஆதலால் நான் பின் பெஞ்சுகளில் அடைக்கலம் புகுவேன். அங்கேகூட அந்த வெங்காயவடை நாற்றம் குப்பென்று அடிக்கும். புத்தகத்தில் கணக்குகளைக் குறித்துத்தந்து, இவர் பத்திரிகை மறைவில் தூங்குவார். மாணவர் காப்பியடிப்பர்; செல்லப் பிள்ளைகள் கோளேற்றுவர்; அவர்களை முரட்டுப்பிள்ளைகள் மிரட்டுவார்கள். வகுப்பு ரகளையாகும். டக்கென்று "டிங் டிங்! என்னடா போட்டே" என்று தடபுடல் செய்வார். நான் தெரிந்ததைப் போட்டுவிட்டுத் தியானத்தில் ஆழ்வேன். ஒருநாள் ஆழ்ந்து தியானித்தேன். டிங் டிங் பிதாகரன் விதியை வதவதவென்று சும்மா பேசிக் காதைச் சுற்றி மூக்கைத் தொட்டுக்கொண்டிருந்தார். திடீரென்று "என்னடா போர்டில்" என்று என்னருகே வந்தார். "முக்கோணம் ஸார்" என்றேன். "உன் மூஞ்சியிலே முக்கோணம்," என்று என் கன்னத்தில் அறைந்தார். நான் "மூலாதாரத்தில் முக்கோணம் ஐயா" என்றேன். "அட கழுதே மூதேவி! இது பைதகோரஸ் தீரண்டா." என்று கடுகடுத்தார். "இந்தப் பைத்திய கோரசுக்கு இத்தனை தடபுடல் ஏன் ஐயா: நேர் முக்கோணத்தில், இரண்டு சின்னப்பக்கங்களின் சதுரம் பெரியபக்கச் சதுரத்திற்குச் சமம்" என்றேன். "அட உனக்குக்கூடவா தெரிகிறது" என்றார். அந்த அறை என்னைத் தட்டி எழுப்பியது. காலை நான்குமணி முதல் ஆறுமணி வரையில் கணக்கில் ஏகாக்ரப் பட்டேன். வகுப்பில் சூடிகையாயிருந்தேன். "டிங் டிங் தேவலையே" என்றார் ஆசிரியர். என் பட்டாவிலும் "கணக்கில் நல்ல தேர்ச்சி

பெற்ருன்'' என்றெழுதினர். நான் சேஷு ஐயர், ராதா கிருஷ்ணையர், ஹாறும் ஸ்டீவன்சும், பியர்பாயிண்ட் முதலிய கணித நூல்களைக் கற்றுத் தேர்ந்தேன்.

இந்த டிங் டிங் வாத்தியாருக்கும் ஸ்ரீநிவாசருக்கும் போட்டா போட்டியும் வாக்குவாதமும் நடக்கும். இவர் பத்து வார்த்தைக்கு நாலு டிங் டிங் போடுவர். அதற்குள் ஸ்ரீநிவாசர் மேற்கோளுடன் ஆங்கில மழை பொழிவார். அவர் பேச்சின் ரஸபாகங்களைக் குறிக்கவே நான் ஷார்ட் ஹாண்ட் கற்றேன். ஸ்ரீநிவாசரின் குடும்ப வாழ்க்கை அமைதியாயில்லை. அவர் அருமைப் பையன் உடையார் ஊருணியில் விழுந்து இறந்தான். ஐயருக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. ''அவன் போனன்; நான் போவேன்; நீயும் போவாய். இருக்குமட்டும் பற்றில்லாதிரு'' என்று எனக்கு உபதேசித்தார். முடிவில் அவரும் போனர். அவர் பாடையுடன் நாங்களும் போய்வந்தோம்.

12. அகராதி வாத்தியார் ஒரு தனிரகம்—கலியாணத்திற்குத் தந்த மஞ்சள் கோட்டையே இன்னும் அவர் போடுகிருர். வீட்டில் துண்டுதான் கட்டுவார். மனைவிக்குச் சிக்கனம் சொல்லித்தருவார். ஒரு முட்டை நெய் அதிகமாய்விட்டால் வள்ளென்பார். அடியிலும் இறங்குவார். நிலைமை தாங்கமுடியாவிட்டால் மனைவி வீட்டுக்கு விலக்கம் என்று கொல்லைப்புறம் ஒடுவாள். இவர் வீட்டில் பெரிய பெரிய நூல்களிலிருந்து குறிப்பெழுதிவந்து, அகராதி வார்த்தைகளை எங்கள் தலையில் உருட்டிவிடுவார். கோபம்வந்தால் மண்டையில் அடித்துக்கொண்டு உச்சுக்குடுமியிலுள்ள பத்து மயிர்களில் இரண்டைப் பிய்த்தெறிந்து, அகாதி நடையில் திட்டுவார். இவர் சரித்திர போதனை, இவருக்கே புரியும். இன்ஸ்பெக்டர் கிரீன் ''மாக்னு கார்டா என்ருல் என்ன'' என்று கேட்டார். பசக்கென்று ஒருவன், ''அது பெரிய லண்டன் வண்டி'' என்ருன். சிரித்தோம். இன்ஸ்பெக்டர் சென்ற பிறகு, அவர் நட்சத்ரேய தர்பார் நடத்தினர். இவரை மாணவர் குறிவைத்துக் கோட்டா செய்வர். ஒருசமயம் இவர் பாட்டுக்கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்தார். பையன்கள் பட் பட் என்று மலைப்பிஞ்சுகளைச் சுண்டிவிட்டனர். பிடித்தது பீடை; மறுநாள் மாணவரை அழைத்து அடிகொடுத்து, சத்தியம் செய்யச்சொன்ஞர். நான்மட்டும் துணிபோட்டுத் தாண்டினேன். ஆனல் யாரும் மலைப்பிஞ்சு லீலையை ஒப்பவில்லை. அவர் அந்தச் சிறு கல்லைப் பத்திரமாக வைத்து, அதைக் காணும்போதெல்லாம் மாணவர்மேல் குமுறிக் கொண்டிருந்தார். ஒரு நிலாநாள்; ஒற்றைத்தெருவில் இரண்டு கழுதைகள் காதலித்துக் கூடிக் குழைந்தன. இரண்டையும் அகராதி வாத்தியார் வீட்டுக்குள் ஒட்டினேம். அவை வாழ் வாழ் என்று நீட்டன. ''ஸார் ஸார் வீட்டில் விருந்தாளி'' என்ருேம். கழுதைகள், காள் காள் என்றன. 'பலே பேஷ் பாட்டு! ஸார் கச்சேரி எப்படி?'' என்று கோட்டாசெய்து ஒடினேம்.

13. அந்தக்காலமே நான் வீர சாவர்கரின் இந்திய சுதந்தர யுத்தம் (Indian War of Independence) படித்து தேச பக்தி வெறி பிடித்திருந்தேன். பரீட்சையில் 1857 கலகத்திற்குக் காரணமென்ன? அதை வர்ணிக்கவும்...என்ற கேள்வி வந்தது. நான் சாவர்கர் நூலைக் கொண்டு, ஆறுபக்கம் அழகான ஆங்கிலத்தில் வீராவேசமாக எழுதினேன். நானா, தாந்தியா, அகமத்மௌல்வி, குமார்சிங், ராணி லக்ஷ்மி பாய்களின் வீரத்தைப் படம் பிடித்துக் காட்டி, ஆங்கிலேயரின் கொடுமையைக் கண்டித்தேன். மறுநாள் "வாடா இங்கே" என்றார் அகராதி வாத்தியார். வணக்கமாகச் சென்றேன். "அட நீ என்ன பின் சந்திரபாலோ!" என்று முகத்தைப் பார்த்தார். "நானும் அவர்போல் பாரதமாதா புதல்வன்" என்றேன். "அதிகப்ரசங்கி! இப்படி எழுதினால் குடி கெடும், ஜெயிலுக்குப்போவாய்!" என்றார். "ஐயா நான் சிறைக்கு அஞ்சவில்லை. துரோகிகளுக்கே அஞ்சுகிறேன். தாந்தியாவைக் காட்டிக்கொடுத்தது ஒரு துரோகி. நான் எழுதியதில் தப்பில்லை. சுதந்தர யுத்தத்திற்கு தாம்ஸன் ஆதாரமில்லை; சாவர்கரே எனக்கு ஆதாரம். அது யூனியன் ஜாக்கை வீழ்த்தி, நமது தேசக்கொடியை நாட்ட எழுந்த வீராவேசப்புயல். அதன் சம்பவங்கள் நமது இரத்தத்தில் எழுதப்பெற்றவை" என்றேன். ஆசிரியர் "நீ மாணவனாயிருக்கு மட்டும் நான் சொல்லிவைத்தபடியே எழுதவேண்டுமடா ஹூம்" என்று முறைத்தார். நான் "வந்தேமாதரம்" என்று திரும்பினேன்.

15. பூகோள ஆசிரியர் நல்ல வேதாந்தி. நான் அந்தப் பாடத்தில் முதல்தரமாயிருந்தேன். பூகோளப் படங்கள் வரைவது எனது பொழுதுபோக்கு. என்னைக்கொண்டே ஆசிரியர் பல படங்கள் எழுதி இன்ஸ்பெக்டர் திருக்கண் படும்படி வகுப்பில் மாட்டிவைத்தார். இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். ஆசிரியர் பூகோளப் படங்களைக் காட்டி, மும்முரமாக உலகை வாயால் அளக்கிறார். இடையே "பூகோள சாஸ்திரத்தின் கருத்தென்ன?" என்று கேள்வி போட்டார். "பரீட்சை தேறுவதுதான் ஸார்" என்றான் ஒரு மாணவன். "அப்படியில்லையடா உலகையறிந்தால் நாம் பல நாடுகளுக்குச் செல்லலாம், வியாபாரம் நடத்தலாம். அறிவை வளர்க்கலாம். காணும் உலகின் அற்புதங்களை அறியலாம்" என்றார் ஆசிரியர். இன்ஸ்பெக்டர் சென்றபிறகு, வேதாந்த விசாரணை பலமாக நடந்தது. "ஸார் காணும் உலகம் மாயமே. இந்தப்பாடமும் பள்ளிக்கூடத்தை விட்டால் மறந்துபோகும் மாயமே. பேசாமல் ஆத்ம விசாரம் செய்வதைவிட்டு, உலக விசாரத்தில் காலம் வீணாவானேன்" என்றான் ஒருவன். ஆசிரியர் "அதுவும் சரிதான் ஞானிகளுக்கு உலகம் மாயையே..." என்றார். நான் "ஐயா நாம் இருக்குமட்டும் உலகம் உண்மையே. அது நம்முன் இருந்தது, பின்னும் இருக்கும். எல்லாம் மாயைதானே என்று மாணவன் படிக்காதிருப்பதா? மனிதன் வேலைசெய்து பிழைக்காதிருப்பதா?

தோட்டத்தில் உள்ளவரை, அதைப் பண்படுத்தவேண்டியதும் அவசியம். உண்டு இல்லை என்ற சண்டை ஏன்? உள்ளவரையில் உண்மையாகப் பாடுபடுவோம்'' என்றேன். “அதுவும் சரிதான்...அப்படி. யினைத்தாலே நமது பாடமும் நடக்கும்'' என்ருர் ஆசிரியர்.

16. சித்திர வகுப்பில் ஏகச் சத்தம்; ஆசிரிய சாகெபு ஒரு பூனை முகமோ எலி முகமோ போட்டுவிட்டு, எழுதுங்கள் என்று தமது கடைக் கணக்கைப் பார்த்துக்கொண்டிருப்பார். பேனு ரப்பர் கலர் பெட்டி டிராயிங் கோட்டு வியாபாரத்தைப்பற்றியே அவருக்குக் கவலை. ஐந்து நிமிஷத்தில் கோடிழுத்துவிட்டுப் பையன்கள் சேட்டை செய்யத் தொடங்குவார்கள். ஆபாசப் படங்கள் பொடுவார்கள். நான்மட்டும் தனியாக சரஸ்வதி கண்ணன் நடராசா உருவங்களைப் போட்டுப்போட்டு மகிழ்வேன். இதனுல் ஏகாக்ரம் வரும். ஒருநாள் குழலூதும் கண்ணன் படம் போட்டு, அடியில் ஒரு கவியும் எழுதினேன். சாகெபு பார்த்தார். “நான் பூனை போடச்சொன்னுல் இதை ஏன் போட்டாய்?'' என்று வினுவினுர். நான் பூனைப்படமும் காட்டி “ஐயா நேரம் வீணுகாமல் கண்ணனைப்போட்டு தியானிக்கிறேன்'' என்றேன். “நீ நாயும் பூனையும் எலியுந்தான் போடவேண்டும். இன்றேல் டிராயிங் பரீட்சை தேருது'' என்ருர். பிறகு எப்படியோ எனக்கும் அவருக்கும் நேசம் உண்டானது. என்னைக்கொண்டு சில அரிய படங்களை எழுதி, இன்ஸ்பெக்டர் கண்ணையும் மகிழ்வித்தார். எல்லாம் வெளிமயக்கே இறைவா...!

17. டிரில் வகுப்பை ''தைதா ததிங்கிணதோம்'' என்போம். இன்ஸ்பெக்டர் வரும் பருவத்திலேதான் டிரில் ஒத்திகை நடக்கும். அன்றுதான் வஸ்தாத் பகதூர் முறுக்காக மிலிடரி உடுப்புடன் வருவார். மற்ற நாட்களில் ஏனே தானே என்றுதான் டிரில் நடக்கும். பணக்காரப் பிள்ளைகள் தலைவலி கால்வலி என்று பேரய்விடுவார்கள். இரண்டணு தந்தால் தலைவலி லீவ் அமுர்தாஞ்சனம் இல்லாமலே கிடைத்துவிடும். கைகாலைநீட்டிமடக்கி, அரைமணிநேரம் பாவைக்கூத்தாட்டி விடுவார் வஸ்தாது. சில சமயம் எங்களைக் குனியவைத்துவிட்டு அவர் வேறு கவனமாயிருப்பார். எங்களுக்குக் கால் கடுக்கும் இடுப்பு வலிக்கும். இப்படி ஒருநாள் மூன்று நிமிஷம் குனியவைத்தார். என்னுல் பொறுக்கமுடியவில்லை. எனது கோஷ்டிக்குக் கண் காட்டி “நிமிர்'' என்றேன். எல்லாரும் நிமிர்ந்தனர். ‘உட்கார்'' என்றேன். உட்கார்ந்தனர். வாஸ்தாத் “டே அதிகப்ரசங்கி, நீதான் நானே'' என்று மிரட்டினுர். “நீர் நானுனுல் இப்படி இடுப்பு வலிக்கக் குனியவைக்கமாட்டேன் ஸார்'' என்றேன். ''எல்லாரும் குனியும்போது உனக்கென்னடா'' என்ருர். கேளுங்கோஸார் இவனை என்று பெத்தன்னுவைச் சுட்டினேன். அவன் “அப்பா காலும் இடுப்பும் கடுக்கக்கடுக்க'' என்று ஆரம்பித்தான். ஆசிரியர் மறுநாள் முதல் கவனமாயிருந்தார். நான்

காற்பந்து, மட்டைப்பந்து, கட்டைப்பந்து, எறிபந்துகள் விளையாடினேன். இவற்றைவிடத் தோட்டவேலை, நீச்சு, பிராணுயாமம், ஆஸனங்களிலேயே எனக்கு நல்ல தேகப்பயிற்சி கிடைத்தது. மூச்சை விழுக்கும் படாடோபங்களில் நான் ஈடுபடுவதில்லை. என் மூச்சு யோகத்திலும் அருட்பணியிலுமே செல்லவேண்டும்.

36. நாராயணசாமி ஐயர்

மற்றவர்கள் ஒரு மாதிரி; எனக்கு மிகவும் பிடித்தவர் கலாசாலைத் தலைவர். சி. ம. நாராயணசாமி ஐயரே. நல்ல எடுப்பான ஆள், நல்ல உயரம் பருமன், சுத்தமான ஆடை, அடக்கமான பேச்சு, இனியநடை, அறிவு ஆற்றல், நிர்வாகத்திறமை எல்லாம் அவரிடம் சேர்ந்து விளங்கின. நன்குகப் படிக்கும் மாணவருக்கு அவர் வேண்டிய உதவி செய்தார். நான் வகுப்புகளில் இனும் வாங்கும்போதெல்லாம் அரிய இலக்கியங்களைத் தேர்ந்து அளித்தார். அவர் ஆங்கிலம் தெள்ளிய நீரோடைபோலிருக்கும். மரபறிந்து மொழிவார். கட்டுச்செட்டாகப் பேசுவார். அரைமணி என்றால், அதற்குள் எடுத்த விஷயத்தைக் கச்சிதமாக முடிப்பார். அவரே அரசர் கலாசாலையாயிருந்தார். சிறு வகுப்புகளில் ஆசிரியர் வராவிட்டால், தாமே வந்து போதிப்பார். அவர் வந்தால் மாணவருக்குக் கொண்டாட்டம். நான் அவர் முன்னிலைக்கு வணக்கமுடன் செல்வேன். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும், என் உள்ளத்தில் ஒலிப்பதிவாகும். ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, பிரௌனிங், பைரன், கார்லைல், லாம்ப், அடிஸன். பர்க், நியூமன், ஸ்டீல், டிக்வன்ஸி, ரஸ்கின் முதலிய பேராசிரியர் திருவாக்குகளை, அவர் விளக்கும்போது அரிய மேற்கோள்களைச் சொல்லுவார். நான் குறித்துக்கொண்டு பாடம் செய்வேன். ஐயர் இனிமையாகப் பாடம் சொல்லுவார். உச்சரிப்பு மிகத் தெளிவாயிருக்கும். அவருக்கு பெசண்டு கோகலே தாதாபாய் திலகர் ஆகிய தேசபக்தரிடம் அன்பதிகம். இவர்கள் வாக்குகளையும் எங்களுக்கு விளக்கி, தேசபக்தி செய்யத் தூண்டுவார். கோகலே இறந்த நாள் நாங்கள் அனுதாபக்கூட்டம் போட்டோம். ஐயர் தலைவர்; நான் பேசினேன்; திலகர் சுதேசக்கனல்; அடிமைத்தளையைச் சுட்டெரிக்கும் காலாக்னி. கோகலே காலத்திற்கேற்றபடி மிதமாகச் செல்லும் அறிஞர், இவரே காந்தியின் உள்ளத்தைக் கவர்ந்த தலைவர்...காந்தியின் சத்தியாக்கிரகமே நமக்குப் புது வழிகாட்டுகிறது. திலகருக்குப் பிறகு காந்தியே நம் தலைவர். அவரை உருவாக்கிய கோகலேயை நாம் போற்றுவோம்'' என்றேன். ஐயர் இதை ஆமோதித்து அரைமணி நேரம் பேசினுர்.

19. இவரைப்போல் என் உள்ளத்தைக் கவர்ந்த கல்லூரிப் பேராசிரியர் சிலரே கல்லூரிகளில் அந்தக் காலம் அதிக கலாட்டா

கிடையாது. பள்ளிச்சேட்டைகளெல்லாம் கீழ்வகுப்புகளிலேதான் விநோதமாக நடக்கும். கல்லூரிகளில் மாணவருக்கும் பொறுப் புணர்ச்சி ஏற்படுகிறது. புலவரும் தமது கடமையும் தாமுமா யிருப்பர். மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைவர் ஜம்ப்ரோ எளிய நடையும் அன்புள்ளமும், அரிய போதனு சக்தியும் நிர்வாகத் திறமை யும் உடைய மேதாவி. மதுரைக் கல்லூரித் தலைவர் ராஜாராம், மில்டன் புலவர். மில்டன் காவியத்தை ராகம்போட்டுப் படித்து விளக்குவார். ஷேக்ஸ்பியரை அவர் படிப்பதே நடிப்பதுபோலிருக்கும். ரைடாங்கிள் கணபதி ஐயர் கணக்குப்புலி. தெருவில் நடக்கும்போது கூட அவர் மூளை ஏதாவது கணக்குப்போடும். சின்னசாமி ஐயர் பெரும் ஆங்கிலப் புலவர். புத்தகமும் கையுமாயிருப்பார். நன்ரு கப் பிரசங்கம் செய்வார். தமிழ் கோபாலகிருஷ்ணையர் பெரிய மேதாவி. விவேகானந்தரைப் பார்த்தவர். பாஸ்கர சேதுபதியின் நண்பர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அவர் அரிய பணிகள் செய்தார், அவரிடம் பாடம் கேட்பதே இன்பம். கம்பன் என்ருல் ஷேக்ஸ்பியரை யும் சேர்த்து ஆராய்வார். அவர் ஒரு கலாநிதி. திருச்சி எஸ். பி ஜி. கல்லூரி கார்டினர் மகாமேதாவி. ஷேக்ஸ்பியரில் பெரும் புலமையும் திறமையும் பெற்றவர். ஸி. ஆர். ஸ்ரீநிவாசையங்கார் ஆரியம் ஆங்கிலம் தமிழ் ஆகிய மும்மொழிப்புலவர்; இசைப்புலவர். கீர்த்தனுசாரியார். கீதைக்கும் ராமாயணத்திற்கும் அஷ்டபதிக்கும் விளக்கம் எழுதிய உரையாசிரியர். அவர் எனது பாடல்களையும் கேட்டு ஊக்க மளித்தார். பி. டி. சீனிவசையங்கார் சரித்திரத்திலும் ஆங்கிலத்திலும் பெரும்புலவர். அவரைப் பிறகு சந்திப்போம். பெட்ராம் அன்பும் அறிவும் திருவும் செறிந்த புலவர்மணி. இப்படிப் பல புலவர்களை நான் அறிந்து பயன்பெற்றேன். அதனுல் என் ஆங்கில அறிவு சாணை யேறிப்பொலிந்தது. இனித் தமிழுக்கு வருகிறேன்.

37. பயப்படாதிரு மனமே

பாடபுத்தகம் அர்த்த புத்தகம் இரண்டும் ஜோடிகள்—இரண் டையும் இணைப்பவர் ஆசிரியர். போடு பொட்டைப் பாடம்; ஒப்பி ஒரு பக்கம் என்று ஃஜார் உத்தரவு போட்டால் யார் மீறமுடியும்? ஏனெனில் அவருக்கே அர்த்த புத்தகம் பார்த்தாலே பாட்டு விளங்கும். இதுதான் அந்தக் காலத் தமிழன் நிலைமை. உயர்வகுப்புக்களுக்குப் பண்டிதர் இருப்பார். கீழ் வகுப்புகளில் அடிப்படை சரியாயிராது. ஆதலால் தமிழனுக்குத் தமிழ் தடவலாகவே யிருக்கும். இதை நான் நான்காம் வகுப்பிலேயே கண்டேன். தமிழைத் தனி முயற்சியால் வளர்த்தேன். எனது கவிப் புலமைக்குப் பல இலக்கிய ஊட்டங் கொடுத்தேன். அர்த்தப் புத்தகம் பார்த்து என் சகாக்கள் படிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. குருட்டுப் பாடத்தால் மொழியறிவு வளர

வில்லை. நற்றாமரைக்கயத்து நல்லன்னம் சேர்ந்தாற்போல் என்ற பாட்டில், தாமரைக்கயத்து என்பதற்கு, தாம்பக்கயிறு என்றொரு பையன் பொருள் சொல்லி அடிபட்டான். காமுறு என்பதற்கு முருங்கைக்காய் என்று ஒரு சிறுவன் பெஞ்சுமேல் நின்றான். பழைய தமிழ் தற்காலத் தமிழருக்கு கிரீக்லத்தீன் போலிருக்கிறது. நான் ஒரு புதிய சூழ்ச்சி செய்தேன். பழைய பாக்களை எளிய நடையில் புதிய தாக எழுதி, என் சகாக்களுக்கும் பாடம் பண்ணிவைத்தேன். உதாரணங்கள் :

தண்ணீர் விட்டால் இளநீர் காய்க்கும்
நல்லது செய்தால் நல்லது விளையும்
நல்லவர்க் குதவி கல்மேல் எழுத்து
பொல்லவர்க் குதவி புனலில் எழுத்து
மண்குடம் உடைந்தால் மண்ணுக்கும் உதாவது
பொன்குடம் உடைந்தால் பொன்னே யாகும்
நீரளவு தாமரை ; நூலளவு நுண்ணறிவு.
வான்கோழி ஆடினால் வனமயி லாகுமா ?
போலிகள் பாடினால் புலவரா வாரா?

இப்படி ஒருவகைப் பாடல். சுயமாகப் பல பாடல்கள், மாந்தர் இயல்புபற்றிய கவிதைகள்; எல்லாம் எனது சங்கீத சாகரத்தில் எழுதி யெழுதி வைத்திருந்தேன். நான் எங்கே போனாலும் சாகரமும் கையி லிருக்கும். அதைத் தலையணைக்கீழ் வைத்துக் கொண்டே உறங்கு வேன். ஒருநாள் நான் பாஞ்சாலி சபதம் பார்த்து வந்து, கவி யெழுத உட்கார்ந்தேன். பள்ளிப் பாடம் படிக்கவில்லை, சந்தனமென்குறடு என்ற பாட்டு உருத்தள்ள வேண்டும். ஆசிரியர் "எங்கே ஒப்பி" என்றார். நான் அதன் பொருளை வைத்துப் புதுக்கவி புனைந்து பாடினேன். சங்கராபரணத்தில் நீள இழுத்தேன் :

சந்தனக் கட்டை தனைஅறைத்துத் தேய்ந்தாலும்,
கந்தம்எப் போதும் கமகமக்கும்—சொந்தத்
தனங்கெட்டுப் போனாலும் தருமமிகு வேந்தர்
மனங்கெட்டுப் போகார் மதி.

"கமகமவா...துரையே, ஏறு பெஞ்சுமேலே ! கமகம,' என்று ஆசிரியர் கன்னத்தைக் கிள்ளி, திருப்பிரம்பால் திட்டி, எழுது ஐந்துதரம் என்றார். நான் என் புதுக்கவியை எழுதிக் கொண்டிருந்தேன். "இதென்ன..." என்று படித்துப் பார்த்தார்..." சங்கீத சாகரமா..." "தன்னானைப்பாட்டா...வாவா" என்று என் அண்ணாவிடம் சொல்லி விட்டார். 'இப்படி விட்டால் இந்தப்பயல் நாடகத்தில் சேர்ந்து கெட்டுப் போவான்" என்று அப்பாகிட்டக் கோளேற்றினார். ஒரு

நாள் காலையில் கவியெழுதத் தலையணையைத் தூக்கிப் பார்த்தேன்; சங்கீதசாகரம் காணவில்லை. தயங்கினேன், மயங்கினேன், மணி யிழந்த நாகம்போல் தேடினேன், ஓடினேன், அழுதேன், தொழுதேன், அலறினேன்...அண்ணு மனம் இளகவில்லை. "உன் கவி வென்னீ ரடுப்புக்கே லாயக்கு" என்று மட்டும் சிரித்தான். தெரிந்து கொண் டேன். மறுநாட்காலையில் கொல்லைக் குப்பையிலிருந்து ஒரு துணுக்குக் கிடைத்தது...அதில் "பயப்படாதிரு மனமே" என்ற பல்லவி யிருந்தது. சங்கீத சாகரத்தில் மிச்சம் அதுதான். அதைப் பூர்த்தி செய்து அன்று முதல் சுத்தசக்தியருளால் ஏராளமான பாடல்கள் எழுதிப் பாதுகாத்து வந்தேன். ஆயினும் அங்கங்கே கொடுத்து மறைந்தவை பல. மிச்சந்தான் இப்போது வெளிவருவன. திருவருளே எனக்கு அபயமளித்துக் காத்தது. இன்றேல் மனிதவுலகின் கொடுமையால் என் கலைப் பயிர் வாடி வடிவற்றுப் போயிருக்கும். அத்திருவருளே எனக்குச் சமய சஞ்சீவியான பெரியாரையும் தந்து வழிகாட்டியது.

38. புலவர் சிகாமணி

பழைய தமிழ் படிக்க ஒரு ஆசிரியர் வேண்டும்; அன்பான ஆசிரியர் வந்தார்—தெய்வசிகாமணிப் புலவர். இவரை நான் வட்ட மிட்டுத் திரிந்தேன். இவர் எங்கே பாடம் சொன்னாலும் அங்கே ஒண்டியிருந்து கேட்டேன். ஒருநாள் செட்டி ஊருணி கிணற்றில் குளித்து அனுமார் தரிசனம் செய்துகொண்டு வந்தேன். ஐயர் "வா அம்பி" என்று காப்பிக் கடைக்குள் அழைத்துச் சென்று இரண்டு இட்டலி தந்தார். "தமிழ் வாணியின் பிரசாதம்" என்று உண்டேன். பிறகு அவர் பின் சென்றேன். ஒற்றைத் தெருவிலிருந்த வீட்டுத் திண்ணையில் அமர்த்தி, அவர் உள்ளே சென்று, திருக்குறளும் கம்ப னும் கொண்டு வந்தார்.

புலவர்: சரி, நீ ஏன் பின்னாலேயே வருகிறாய்? ஒற்றன்போல்!

நான்: நானா வருகிறேன்; தமிழ்க் காந்தம் இழுக்கிறது.

புலவர்: கம்பனும் திருக்குறளுமே உலகை வசீகரிக்கும் தமிழ்க் காந்தம்; படி; இந்தா குறள்;

நூலைப் பிரித்தேன்.

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியர் கண்ணும் உள

என்ற குறள் வந்தது. ஐயர் தெளிவாக விளக்கி "நீ அருட்செல்வமே தேடு" என்றார். பிறகு குறள் முதல் அதிகாரம் படித்தேன். பிறகு கம்பனில் "உலகம் யாவையும்" நடந்தது.

"இனித் தினம் ஐந்தரை மணிக்குத் தாமரைக் குளத்திற்கு வா, படிக்கலாம்" என்ருர், சென்றேன், பயின்றேன், பயனடைந்தேன்.

தமிழ்க் காதலால் நான் பல அரிய தொல்லிலக்கியங்களைப் படித்தேன். விளங்காத இடங்களைக் குறித்து வைத்துப் புலவரிடம் கேட்டேன். நானே இயற்கையமைதியில் தனியாகப் படிப்பது இன்பம் அளித்தது. கம்பன் முழுதும் அப்படியே படித்தேன். நாட்டரசங்கோட்டை கம்பர் சமாதிலிருந்தும் சில நாட்கள் படித்ததுண்டு. திருக்குறளைப் பாராயணம் செய்தேன். கீதையும் தாயுமானுரும் குறளும் எப்போதும் என்னுடன் இருக்கும். சங்க இலக்கியங்களும் படித்தேன். ஆனல் சும்மா தலைவன் தலைவி காதல் வருணனையே படிப்பது பிடிக்கவில்லை. அகப்பொருளைவிடப் பதிநூல்களே எனக்கு விருப்பம். ஆங்கிலக் கவிதைகளையே நான் மிகவும் படித்து ரசித்தேன். என்னுடன் சுவைக்க வக்கீல் சேஷையா காலையில் தாமரைக் குளத்திற்கு வருவார். அங்கே கிழக்கே கண்மாய்க் கரையிலிருந்த ஆலமரத்தடியே எனது தவப்பள்ளி. தியானமும் கல்வியும் அங்கே தழைத்தன. சுற்றியுள்ள பசுவயல்களைக் கண்டாலே இன்பமுண்டாகும். படிக்கும்போது என்னுள் யாரோ விளக்குவது போல் உணர்வேன், படித்துத் தியானிக்கும்போது கவிதை மலரும், கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ளே உறவுகோலும் பக்தி மின்சாரமே கவிதை. நான் கடவுளுக்கே பாடினேன். தாயிடம் சேய்போல், கடவுளிடம் கவிதையால் பேசினேன். உலகம் அதை அறிந்து மெச்ச விரும்பியதில்லை. இன்றுலகம் என்னை அறிந்ததும் இறைவன் இச்சையே. ஒருநாள் சந்தியாமடச் சுவர்மேல்,

> தெய்வ ஒளிதனையே தேடு ; பிறவெல்லாம்
> கைநழுவும் காலத்திற் காண்.

என்று எழுதினேன். தெய்வசிகாமணி பார்த்தார். "நன்ருயிருக்கிறதே; கொண்டா நீ எழுதியதெல்லாம்" என்ருர். "எல்லாம் நடராஜா சந்நிதியில் படித்துக் கிழித்து எறிந்தேன்" என்றேன். "இனிப் பாடியதும் எனக்குக் காட்டு; எல்லாம் சேர்த்துவை...பிற்காலம் பயனுகும்" என்ருர் புலவர். அவர் மெச்சிய கவிகள் சில பாரத சக்தி சிவகிரிப் படலத்தில் உள்ளன. இந்தக் கவியை அவர் போற்றினுர் :

> கலையென்றும் காட்சியென்றும் கனதன போகம் என்றும்
> புலையுடல் இன்பம் தேடிப் பொய்யிலே வாழ்ந்து, மாதர்
> வலையிலே வீழந்து, வஞ்ச மனமழியாது, தூய
> நிலையிலே நின்று தெய்வ நிலைபெறச் செய்எந் தாயே.

கணபதியா பிள்ளை இவர் சீடர். அவரிடமும் நான் தமிழ்ப் படித்தேன். அவர் எனது கவிதைகளையும் நாடகங்களையும் பார்வையிட்

டார். இவர் நல்ல புலமையும், இனியநடையும், அருவிபோல் பேச்சும் அழகான தோற்றமும் உடைய அறிஞர். இவரைப் பார்க்க யாழ்ப் பாணம் கதிரைவேற் புலவர் வந்தார், அவரே எனக்கு ஆறுமுக நாவலரைப்பற்றி விரிவாகச் சொன்னவர். நாவலர் பெருமான் வர லாற்றை எழுத அன்று கேட்டதெல்லாம் உதவின. அருட்பா மருட்பா வாதம்பற்றிப் பேச்சு நடந்தது. நான் பாவலர் பாவலர் நாவலர் நாவலர்; அவர் சிவத்தைப் பாடினர் இவர் சிவத்தைப் பேசினர் என்றேன். அகராதிப் புலவர் அதுவுஞ்சரி என்றார். அவர் நீர் வீழ்ச்சிபோலத் தமிழ்ப் பேசினர்.

எங்களூருக்குச் சசிராம பாகவதர் வந்தார். செட்டி சத்திரத்தில் இருபது நாட்கள் ஆவேசமாக ஞானமிர்தம் பொழிந்தார் பாகவதர். ஆசுகவிகள் தடதடத்தன. வேதாந்தக் கருத்துக்கள் சலசலத்தன. அவர் சொற்பொழிவு எனக்குப் புதிய திறனைத் தந்தது. அந்த வேகத் தில் நான் ஆங்கிலமும் பேசப் பயின்றேன்.

சசி சென்றதும் விலக்ஷணனந்தர் வந்தார். அப்போது எங்கள் தெருக்கோடியில் இராமகிருஷ்ண மடம் எழுந்தது. அதில் என்னுடன் சுவாமிகள் ஒருமாதம் தங்கினர். அங்கே ஞானவாசிட்டம் படித் தோம். கீதை ஆராய்ந்தோம். தியானித்தோம். அக்காலம் நான் அரசியலில் ஈடுபட்டதால் சுவாமிகளுடன் இந்திய சுதந்தரம்பற்றிப் பேசினேன். "நம் சுதந்தரமே நாட்டின் சுதந்தரம்" என்பார் சுவாமி கள். அறிஞர் கோதண்டராமர், எஞ்சினியர் குப்புசாமி, பாகவதர் சுந்தரமூர்த்தி நரசிம்மம், தெய்வசிகாமணிப் புலவர் ஆகிய பக்தர்கள் மடத்தில் கூடி, ஸத்கிரந்தங்களைப் படிப்போம். கோதண்டராமர் விவேகானந்தர் வாக்குகளை மொழிபெயர்த்து வீடுவீடாகத் தந்து மடத்திற்குப் பொருள் திரட்டுவார். அவருடன் நானும் சென்று சேவை செய்வேன். குப்புசாமி ஐயர் நல்ல புதிய ராட்டினங்கள் செய்து எங்களை நூற்கச் செய்தார். அங்கே கூடினவர் எல்லாரும் ஆத்ம விசாரிகளே; யாருக்கும் வீட்டுக்கவலை கிடையாது. விலக்ஷண னந்தர் எங்களை நிர்விசார கோஷ்டி என்றார்.

39. உரிமை உள்ளே

விலக்ஷணனந்தரும் நானும் ஆசுகவிகள் புனைவதுண்டு. அவர் எளிதாகப் பாடுவார். ஒருநாள் தேச சுதந்தரத்தைப்பற்றிப் பேசிய பிறகு, நான் இந்தப் பாட்டைப் பாடினேன்:

அடிமைச் சங்கிலியை—மனமே
அணியெனப் பூண்டாய்
கொடிய வெஞ்சிறையைச்—செல்வக்
கோட்டையென நினைத்தாய்

கரடிக் குட்டியினை—மனமே
கம்பளி என்றெடுத்தாய்
சரடெனப்பூண்டாய்—மனமே
சாரப் பாம்பினையே.
அன்னிய மாயத்தினை—மனமே
அஞ்சிப் பயந்துவிட்டாய்
மின்னிய கண்ணாடிச்சில்—வைரமென்று
விலை கொடுத்துவிட்டாய்.
உண்ண மனையிருக்க—மனமே
ஓட்டலை நாடுகின்றாய்
எண்ணவுள் ளன்பிருக்க—மனமே
எங்கெனீ தேடுகின்றாய்?

இதைப் பாடும்போதே ஒரு பேர்வழி மெள்ள உள்ளே வந்தான். சுவாமிகள் சட்டென்று அப்புறம் சென்றார். பேர்வழி "சாமி இங்கே என்ன செய்யுது" என்று பேசும்போதே ஸி; ஐ. டி. அண்ணாத்தை என்றறிந்தேன். ஏனெனில் உள்ளூர் மாஜிஸ்ரேட் மாப்பிள்ளை என் நண்பர் அவரும் ஒற்றிலாகா ஊழியர். என்னிடம் எல்லாம் சொல்லியிருக்கிறார். நான் பேர்வழியைத் தனியே அழைத்துச்சென்று "எத்தனை நாளாகச் சாமியைச் சுற்றுகிறாய்....விஷயமென்ன?" என்று வினாவினேன். "அவரை நல்லாத் தெரியுமே—ஸ்ரீநிவாச ஐயங்கார்; ஒரு பெண் உண்டு...தேவாரம் அனுமந்தப்பட்டி எல்லாம் தேடி இங்கே வந்தேன்...இது அரசியல் சாமி" என்றான்.

இரவில் விலக்ஷணானந்தர் என்னை அழைத்துக்கொண்டு மேலூர் பக்கம் சென்றார். அங்கொரு போக்கு வண்டியில் ஏற்றிவிட்டேன். அப்போது "திலகர் பேசினார்; காந்தி செய்வார். நாமும் தேச சேவை ஆத்ம சக்தியுடன் செய்வோம்...நீயும் செய்" என்று தட்டிக்கொடுத்துச் சென்றார். பிறகு விலக்ஷணானந்தரைக் குளித்தலையில் கண்டேன்... அவர் மேல்மாயிலில் அடங்கிய செய்தி எட்டியதும்...மிகவும் விசனித்தேன். தமிழ்நாட்டு ரத்னம் விலக்ஷணர். அவர் ராமதீர்த்தர்போன்ற துறவி, ஞானி...

40. என்னுடலைப் பூண்பாய்

என் வைராக்கியத்தைத் திட்ட இறைவன் ஒரு கொடிய காட்சியை என்முன் காட்டுவது வழக்கம். இரவு எட்டுமணி; மடத்தில் திவ்ய நாமசங்கீர்த்தனம் நடந்தது; கீதை ஐந்தாம் அத்தியாயம் படித்தோம். தெய்வசிகாமணிப் புலவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். நான் "காற்றும் கதிரும்போலப் பற்றற்று நல்வினை செய்தால் பழுதில்லை,

முள்ளைக்கொண்டு முள்ளை எடுப்பதுபோல், வினையால் வினை விடுதலை பெறலாம்'' என்றேன்.

ஐயர்: அது சரியப்பா ஞானிக்குந் தியானிக்கும் உள்ளே தான் வினை; கர்மிக்கு வெளியே வினை. பழுத்தது காயாகுமா? சுதந்தரம் பந்தமுறுமா? வினையுடலை நம்பி வாழ்ந்தது வீணானது. கற்றேன். கேட்டேன், சொற்றேன்,...என்ன பெற்றேன்? உடல் மடல்; பூத்தது காயாகி, கனியாகி திருவருளுக்கு நிவேதனமாகவேண்டும். இரு வினைச் சுருள் ஒழிந்து திரு அருள் பொலியவேண்டும். உடலின் பொருள் உள்ளம்; அதன்பொருள் ஆத்மா; அதன்பொருள் பரமன்; விளக்கின் பொருள் சுடர். ஆராய்; அது நீ, அதுவாயிரு நீயாயிரு...

நான்: நினைத்து நினைத்து நினைப்பற்று நெஞ்சே
நினைப்பற்றி நீயாகி நில்

ஐயர்: "இதுதானப்பா முழு உண்மை. இதுபோதும்; எனைப்பற்றி நானுயிருந்தால், வினை பற்றுமா?'' என்றெழுந்து வெளியே சென்றார். இருட்டில் மறைந்தார்.

மறுநாள் நான் தாமரைக்குளத்திற்குச் செல்லும் வழியில் பெருத்த கூட்டம். பார்த்தேன்; எனது அருமைப் புலவர் உடல் குளத்தில் மிதந்தது...மண்டையில் வெட்டுக்காயம். முகம்மட்டும் களை சொட்டியது. இனியென்ன? உடலைத் தூக்கிச்சென்று எரித்தார்கள். கருமாதி நடந்தது. என்னுடலும் இப்படிப் போகுமுன் அதன் பயனைப் பெறவேண்டும்; நான் நானாகவேண்டும் என்றுணர்ந்தேன். ஐயரின் இறுதி மொழிகளை நினைந்தேன். ஐயரின் சஞ்சயனச் சாம்பலை அள்ளிப் பூசிக்கொண்டு, ஒரு பாமாலை சூட்டினேன்:

தெய்வத் தமிழைத் தேடி எனக்களிக்கத்
தெய்வ சிகாமணியாய்ச் சீவித்தாய்—ஐயநீ
மின்னுடலை நீத்தாய்; மிளிர்ஞானச் சோதியுடன்
என்னுடலைப் பூண்பாய் இனி.

அன்றுமுதல் நான் தமிழ்த்தவம் தொடங்கினேன். இறைவன் என் குறைகளை நீக்கி, முன் செலுத்தி, என்னையும் தன்னையும் உலகையும் விளக்கி, ஆட்கொண்ட ஆத்ம சோதனைகளை இனிச் சொல்லுகிறேன்...

௬. பார்த்தேன்

41. நாடகப்பைத்தியம்

"டர் டர் டம் டம்! நடேசாய மங்களம்! இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்.. இன்று குழந்தை மகராசா அரண்மனைக்கடுத்த கொட்டகையில், சதாரம் சரித்திரம்;

ஜகன்மோகன நாடகஸம்ராட் பரமேச்வரையர் சதாரமாக நடிக்கிறார் கண்கொள்ளாக்காட்சி! எல்லாரும் வாருங்கோ வந்து பாருங்கோ. களிகூறுங்கோ!! டர் டர் டம் டம்!".

இப்படித் தெருப்பாலத்திலிருந்து அறிவித்துப் பறைசாற்றிச் செல்வான் கம்பெனி வேலு. வர்ண நோட்டீஸ் வாங்கிக்கொண்டு நான் வீட்டிற்கு ஓடி "நடேசாயமங்களம்..." போடுவேன். முத்தண்ணு நாடகத்திற்குப் போவான். வீட்டில் வந்து சும்மா பாடுவான். என்னை அழைத்துச் செல்லமாட்டான். "சின்னப்பயல் நாடகம் பார்க்கக்கூடாது" என்று குட்டுவைப்பான். அதனுல் எனக்கு நாடக நினைவு அதிகமாகும். நாடகம் என்ருல் இந்திரபோகம் என்று நினைத்தேன்: ஒருநாள் தலையணைமேல் போர்வையைப் போர்த்துவிட்டு, ஓடினேன். சுற்றிப்பார்த்தேன். தட்டி இடுக்குவழியே சிலர் பார்த்தனர். நானும் பார்த்தேன்; "கல்யாண் பாலகா! யாதுவரம் வேண்டுகிருய்" என்று பிள்ளையார் கேட்கிருர். கோமாளி "விநாயகரே உமக்கும் எனக்கும் தொந்தி ஒரே அளவு...உமது தொந்தி நிரம்பிவிடுகிறது. எனது தொந்தி போடப்போடக் காலியாகிறது. உமது கையிலுள்ள கொழுக் கட்டையில் பாதியாவது தந்தால்..." என்கிருன், கடகடவென்று சிரித்தேன். கடைசிக் கட்டத்தில் கதவைத் திறந்தார்கள். எல்லாரும் உள்ளே பாய்ந்தோம்...ஆஹா...இதுவே தெய்வலோகம்...என்று மயங்கினேன். "இந்திர சபாநாடகம்" அன்று நடந்தது.

ஒருநாள் மாலை பரமேசையரையே தைரியமாகச் சென்று பார்த்தேன்: பேசினேன்: "மாமா நான் நாடகம் பார்க்கவேணும், நானும் அதில் சேர்கிறேன்" என்றேன். "பாடத் தெரியுமா?" என்று கேட்டார் ஐயர். பாடினேன். அபிநயம் பிடித்தேன். பிறகு விகடம் செய்தேன். "பயலிடம் சரக்கு பலமாயிருக்கே...சரி வா" என்று அழைத்துச் சென்ருர் ஐயர். அன்று நல்லதங்காள் நாடகம். நடிப்பு உருக்கம், உருக்கம்! கண்ணீர் கண்ணீர்! வறுமையின் கொடுமையைக் கண்டு அழுதேன். விம்மினேன். நல்லதங்காள் கிணற்றில் விழும்போது ஏழு மக்களையும் தள்ளுகிருள். ஒரு பையன் வரமுடியவில்லை. நீ விழு என்று முன்னே தள்ளினர். நடிகர். நான் "அம்மா பசிக்கிறதே...செத்துப்போறேன்" என்று அழுதேன். பரமேசநல்லதங்கை என்னை அட்டைக்கிணற்றில் தள்ளினுள். நான் அண்டம் கிழிய அலறினேன். நல்லதங்காள் "மகா கொடிய பாவியானேனே" என்று முகாரியில் பாடினுள்.

எனக்கு நாடகப் பைத்தியம் பலமாகப் பிடித்தது. பல நாடகங்கள் பார்த்தேன். சுந்தரராவ், ராஜாராவ், கோபால்ராவ், கோவிந்தசாமி, ஜகநாத நாயுடு, பாலாமணி, பரமேசர், கலியாணராமர், கோகர் ஜான் முதலியவர்களை மதுரையில் பார்த்தேன். நான் கடைசியாகப் பார்த்த நடிகமணிகள் பொன்னம்பலம் ஆசாரி, பாலாம்பாள், அம்பு

ஜாஷி, ஜானகிராம், சிங்காரவேலு ஆகியோர். இவர்களுக்கு மதுரகவி முருகதாஸ் பாஸ்கரதாஸ் முதலியோர் பாட்டுப் போட்டனர். பொன்னம்பலம் என் பாட்டை மெச்சினர். அவர் கம்பெனியில் நானும் சேர முயன்றேன், ஒரு நடிகரிடம் நடனம் கற்றேன். சில நடிகரிடம் பாடல்கள் எழுதிப் பாடினேன்.

ஒருநாள் மானாமதுரைக்கு ஓடிப்போய் நடிப்பதென்று தீர்மானித்தேன். நடிக நண்பருடன் நம்பிபுரம் கிருஷ்ணய்யர் ஓட்டலில் இதைப் பற்றிப் பேசியபோது "இதற்குத்தான் உங்கப்பா படிக்க வைத்தாரோ; இருபயலே" என்று நாணுவையர் கோளேற்றினர். வீட்டில் வசவு கிடைத்தது. முத்தண்ணு "வெளியேறு சொல்லுகிறேன்" என்று 144 போட்டான். நாடகப் பாட்டு நோட்டு மறைந்தது. ஆசை மறையவில்லை. ஒருநாள் நாடகக் கூட்டத்துடன் ஓடிப்போவதென்றே தீர்மானித்தேன்.

ஜானகிராமையர் விகடகவி. அவர் வீட்டில் பாலபார்ட் சிங்காரவேலு என் நண்பன். உள்ளே போனேன். ஐயர் வைப்பாட்டி "இந்தப் பாவிப்பார்ப்பான் இப்படிப் பண்ணினுனே" என்று திட்டிக் கொண்டிருந்தாள். சிங்காருவை விசாரித்தேன். கதை கதையாகச் சொல்லி, "நீ நாடகத்தில் சேராதே கெடுவாய். வேண்டுமானல் என்னுடன் வா காட்டுகிறேன்" என்று ஓரிடம் இட்டுச் சென்றான். அங்கே இரவில் சீதையாக நடித்தப் பெண் குடித்துவிட்டு, ராவணனாக நடித்தவன் மடியில் படுத்திருந்தாள். இராமன் இராவணனுக்குச் சாராயம் ஊற்றித் தந்தான். அனுமான் சுருட்டில் இந்திரசித்து சுருட்டுப் பற்றவைத்தான். இன்னேர் இடத்தில் சூதாட்டம், சீட்டாட்டம்...ஒருவன் மட்டும் ஏதோ படித்துக் கொண்டிருந்தான். அவனிடம் "இதெல்லாம் என்ன கூத்து, இரவு நளாயணி பகல் தேவடியாள்! நேற்று அரிச்சந்திரன் இன்று குடிக்காரனு யிருப்பதென்ன?" என்று கேட்டேன். அவன் தனியாக அழைத்துச் சென்று, "அம்பீ! சனியன் பிடித்திருந்தால் இங்கே வா...உருப்பட வேண்டுமானல் போ வீட்டுக்கு" என்று ஒரு பட்டைப்பொடி உறுஞ்சி, தன் அனுபவங்களை பயங்கரமாக வர்ணித்தான். அகடவிகட வித்வான் மணியாகிய அவன் அகத்துக்காரியையும் இரண்டு பெண்களையும் அலறவிட்டு, இங்கே ஒரு கறுப்பாயி மாயத்தில் விழுந்து, மாதச் சம்பளத்தையும் அவள் மடியில் கொட்டி, நீரிழிவையும் விலைக்கு வாங்கினுன். என்று கேட்டதும் எடுத்தேன் ஓட்டம். மனச்சாட்சி சவுக்கடி தந்தது. பூந்தேன் உண்ணும் தேனீக்குக் கள்ளுப் பானையில் என்ன வேலை?...

ஆனல் பள்ளிக்கூட நாடகங்களில் அமளியாக நடித்தேன். மாணவர் சங்க காரியதரிசியான நான், வாரக் கூட்டங்களில் ஆங்கிலத்திலும் தமிழிலும் சில காட்சிகளைத் தேர்ந்து நடித்துக் காட்டுவதுண்டு. புரட்சிப் பேச்சே எனக்குப் பிரியம். சமூக சீர்திருத்தம், பொருளா

தாரச் செழிப்பு, தொழில் வளர்ச்சி, தேச சுதந்தரம், தேச பக்தர் வரலாறு, உலகக் கவிகள் வரலாறு, விஞ்ஞான விளக்கம் முதலிய வற்றைக் குறித்துப் பேசுவேன். ஒருமுறை "கிராம்வெல்—நெபோலி யின் இருவருள் யார் சுதந்தர வீரர்?" என்ற விவாதம் நடந்தது; பெஜவாடா ராமசாமி ஐயர் தலைமை வகித்தார். அவர் ஆங்கிலப்புலி, நான் கிராம்வெல் தியாகி, சுதந்தர தீரன்; தேசத்திற்கே தன்னை ஈந்தான். நெப்போலியன் போர் வெறி பிடித்தவன்; நாட்டை வாளுக்குப் பலி வைத்தவன்—கிராம்வெல் குடியரசை அமைத்தான். நெப்போலியன் தானே அரசனாகி, பதவி யிழந்து, முடியரசு தலைத் தூக்கச் செய்தான்—என்று பேசினேன். பெஜவாடா என் பக்கமே பேசினார். ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் ஒத்தெல்லோ மாக்பெத் யூலியகேசரிகளிலிருந்து உருக்கமான காட்சிகளை நடிப்பதில் எனக்கு உற்சாகம் அதிகம். இன்றும் ஷேக்ஸ்பியரே எனது பொழுதுபோக்கு. தீபாவளி, பொங்கல், வேனில் விடுமுறை, பள்ளிவிழா நாட்களில் அவசியம் நாடகங்கள் போடுவோம். எனக்கு முதன்மையான வேடம் கிடைக்கும். கோல்ட்ஸ்மித்தின் She stoops to conquer, மோலி யரின் Flying Doctor, Miser, Tartuffe பறக்கும் டாக்டா, கருமி, ஆஷடாபூதி, ஷெரிடனின் ரைவல்ஸ்—காதல் போட்டி, ஷேக்ஸ்பியரின் வேனிஸ் வர்த்தகன், யூலியகேசரி, ஹாம்லெட், ஐந்தாம் என்றி ஆகிய வற்றில் நான் பங்கு கொண்டேன். தமிழில் போஜ சரித்திரம், லீலாவதி சுலோசனா, மனோகரன், மீராபாய், சந்திரஹாஸன் முதலிய வற்றில் முதன்மை பெற்றேன். பெரும்பாலும் பெண் வேடமே கட்டியதால் என்னியல்பில் பெண்மை புகுந்தது. சௌந்தரராசன், சிதம்பரம், முத்து, ஷண்முக சுந்தரம், மணி, மீனாட்சிசுந்தரம், சதா சிவம், சேது, ஐ. ராமசாமி ஆகியோர் என்னுடன் நடித்தவர். மோலி யர் நாடகத்தில் மட்டும் நான் ஆணாக நடித்தேன். என் அண்ணாவே சில நாடகங்களைப் பழக்கினார். கணபதியா பிள்ளை தமிழ் நாடகங்களைப் பயிற்றியதுண்டு. நானே உலகைப் பார்த்துப் பார்த்து நாடகங்கள் எழுதி நடித்தேன்.

42. மாணவர் போக்கு

நடிப்பு படிப்பைக் கெடுப்பதும் உண்டு; அதைவிட நடத்தை யைக் கெடுப்பதுண்டு. மனிதன் சொக்கத் தங்கமில்லை, சுரங்கத் தங்கம்; பிறவியில் எத்தனையோ வக்கிரங்கள் அவனிடம் புகும். அவற்றைக் கல்வியறிவாலும் ஒழுக்கத்தாலும் திருத்த வேண்டும். அக்கால கல்விக்கும் சன்மார்க்கத்திற்கும் வெகு தூரம். சாஸரின் பாத்மனைவிக் கதைப் படித்தால் உருப்படியாவதேது? மேடையில் காதல் நாடகம் போட்டால், காதலன் காதலி உணர்ச்சி இளம் உள்ளத்தைப் பற்றிக்கொள்ளுகிறது. இருட்டுச் சேட்டைகள் தொடங்குகின்றன. மாணவரிடையே பிரமசரிய உணர்ச்சி மருந்துக்

கும் இல்லை. பள்ளிக்கூடத்தில்கூடப் பரிபாஷைகளால் ஆபாசக் குறிப்புக்களும் கேலிகளும் நடக்கும். வெளியே அதே வேலை. பெரிய கோஷ்டி ஒன்று கிளம்பும். நாங்கள் வாண்டுப்பயல்கள். "டே பெரிய வாள் பேச்சைச் சின்னப்பயல் கேட்கக்கூடாது, போடா" என்பர். எல்லாரும் காளையார் கோயில் திருநாளைக்குப் போவோம், திருநாளில் சாப்பிட வேண்டியது சதுர்கச்சேரிகளில் தாசிகளைப் பார்த்து மனதைக் கெடுக்க வேண்டியது. அதே பேச்சு சேட்டைகளுடன் நடை கெடவேண்டியது. இவையே பெரிய கோஷ்டியின் வேலை. சிறு பையன்களையும் இவர்கள் கெடுப்பது வழக்கம். ஒருநாள் இரவு பஜனை செய்து கோயில் மண்டபத்தில் படுத்திருந்தேன்; ஒரு தடியன் அருகே படுத்தான்; நான் அயர்ந்து தூங்கியபோது என் ஒரே வேட்டியைப் பறித்துக் கொண்டு போனான். காலையில் கோவணாண்டி யானேன். நண்பர் கைக்கொட்டிக் கேலி செய்து "யோகி, போடா ஆண்டி மடத்திற்கு" என்றனர். யாரும் என் மானங்காக்கவில்லை. "கடவுளே துணை...இதுவும் அவன் செயல்" என்று நான் சுப்பையா சாமியார் மடத்திற்குச் சென்றேன். அன்று பௌர்ணமி; அங்கே துறவிகள் மொட்டையடித்துக் கொண்டனர். நானும் தலையை நீட்டி னேன். வழுக்கை மொட்டையானேன். பிறகு ஒரு செட்டியார் துறவிகளுக்கு ஆடை தந்தார். எனக்கும் ஒரு காஷாயத் துண்டு கிடைத்தது; உடுத்திக் கொண்டு சுப்பையா சாமியாரை வணங்கி னேன்; சாமியாரானேன். அப்படியே மடத்தில் தாயுமானர் கைவல் யம் படித்துக் கொண்டிருக்க விரும்பினேன். ஆனால் குட்டிச்சாமி வேடம் இரண்டே நாள். தகப்பனார் திருநாளுக்கு வந்தார்; நான் சுப்பையா சாமியாரின் வேதாந்தப் பிரசங்கத்தில் சொக்கி யிருந்த போது பார்த்தார். திடுக்கிட்டார். என்னை வெளியே இழுத்து வந்தார்; கேட்டார்; காரணம் சொன்னேன். மடிசஞ்சியிலிருந்து ஒரு வேட்டியை எடுத்துத் தந்தார். காவியைக் களைந்து வெள்ளையணிந் தேன். சுப்பையா சாமியார் "இன்னும் போக வேண்டும்...அதற்குத் திருவருள் கூட்டும்போது ஆகும்" என்றார். பிற்காலம் திருவாரூரிலும் சென்னையிலும் என்னைத் துறவுக்கோலத்தில் பார்த்துப் பழைய கதையை நினைவுறுத்தினர் சுவாமிகள்.

மாணவர் சிலர் என்னை வாடியம்மா என்று அழைத்து, மையல் காட்டுவதுண்டு. நாடகமேடையை விட்டிறங்கியதும் காதலர் என்னை வட்டமிடுவர். சதாரத்திற்கும் கள்ளனுக்கும் தர்க்கம் நடப்பதுபோல் நிகழ்ச்சி நடக்கும். கடவுள் ஒன்று மட்டும் எனக்கு அனுகூலமாக்கி னார். பெண் வேடமே போட்டு நானும் அம்மாவானதால், எனக்குப் பெண்களிடம் காதல் உண்டாகவில்லை. பெண்ணைப் பெண் காதலிப்பதில்லை.

பெற்றோருக்கும் மாணவருக்கும் எச்சரிக்கை: சிறுவரை நாடகத் திற்கு அனுப்பினால், ஆட்டம் முடிந்ததும் கையுடன் வீட்டிற்கு

அழைத்து வருக; ஒத்திகைக்கும் தனியே அனுப்பற்க. விளக்கெண்ணெய்க்குச் சோம்பி, சிறுவரைப் பிறபிள்ளைகள் வீட்டில் படிக்க அனுப்பவே கூடாது; இரவில் தோழர் வீட்டில் படுக்கவிடக் கூடாது. இரண்டு மாணவர் சேர்ந்து படுக்கவிடக் கூடாது; தனியே இருட்சேட்டை செய்யாது கவனிக்க வேண்டும். முகக்குழியும் புள்ளியும் கண் குழியும் பார்த்து, இளைஞருக்கு வெளிப்படையாக தாதுவின் பெருமையைச் சொல்லி, அதை வீணாக்காமல் பாதுகாக்கச் செய்க. காம இச்சை இயல்பு; அதை அடக்கி வெல்ல மனதைப் பயிற்ற வேண்டும். பிரமசரிய விதிகளை மாணவர்கள் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும்.

43. தற்காலப் படிப்பு

ஒருதரம் மாணவர் கூட்டத்திற்குத் தலைமையாசிரியரே தலைமை வகித்தார். என்னருமை நண்பன் ஜி. சுந்தரம் "தற்காலப் படிப்பு எதற்கென்றே தெரியவில்லையே. ஆங்கிலம் எழுதப் பேசக் கற்று வயிற்றைக் கழுவ இந்தப் படிப்பு மெகாலேயால் வந்தது. ஆனால் அதற்கும் திண்டாட்டமானதே. வேலையில்லை, தொழில்திறனுமில்லை. தேக பலமும் இல்லையே இந்தக் கல்வியால் என்ன பயன்?" என்று வினாசினான். நான் அரைமணி நேரம் பேசினேன்:

"ஆங்கிலம் உலக மொழி; நம்மவருக்கும் அது வேண்டும். அதில் கலையறிவு மிகுதி. தற்காலக் கலைகளையும் ஸயன்சுகளையும் ஆங்கிலத்தால் நாம் அறிகிறோம். ஆனால் நமது ஆங்கிலம் ஈயடிச்சான் காப்பிக்கே லாயக்கு. ஏதோ சிலர் டாக்டர் வக்கீல் ஆசிரியர் எஞ்ஜினியர் ஆகிறார்கள். பெரும்பாலோர் கைப்பணத்தைக் கொட்டிப் பிள்ளையார் தொப்புளில் புனுகுவாசனை பார்த்த கதையானார்கள். இந்தக் கல்வி முறையால் வந்த தீமைகள் அபரிமிதம். நன்றாக வளரவேண்டிய உடம்பு, பிரமசரியமில்லாமல், பயிற்சியில்லாமல், இருட்சேட்டைகளால் குறுகிவற்றிச் சீவனற்றுப் போகிறது. பொட்டைப் பாடம் மூளையை அனாவசியமாக வறட்டுகிறது. சன்மார்க்கமில்லை; சாதனமில்லை ஒழுக்கம் வழ வழா. சுவர்களைப் பார்த்தால் மாணவர் மனத்துடிப்பு தெரியும். ஆசிரியர் சிலரும் பொடி, சுருட்டு, புகையிலை சீட்டு சேட்டைகளில் மாணவருக்கு அப்பனாயிருக்கிறார்கள். மாணவரை வருத்தும் மற்றோர் எமன் பரீட்சை. சூடிகையான மாணவர்கள்கூடப் பரீட்சை என்றால் நடுங்குகிறார்கள். பரீட்சையை அடியோடொழித்து, ஒரு தொழிலை அடிப்படையாகக் கொண்டு, கல்வி புகட்டினால் நல்லது. பொதுக்கல்வியுடன் தொழிற்கல்வி வேண்டும். கற்றவரெல்லாம் மேற்கல்விக்குச் செல்ல வேண்டும். சோதனை வாதனையாகும். குழி பறித்த மாணவர்கள் மனமிடிந்து செயலற்றுப் போகிறார்கள். சாதாரணமாக அறிவு மிக்க ஒரு மாணவன் பரீட்சைக்கூடத்தில் மனம் பதறி, பேனா ஓடாமல் கேள்வித்தாள்முன் திகைக்கிறான். ஒவ்வொரு

நிமிஷமும் பட்பட் என்று அவன் உள்ளத்தில் ராஸ்கோப் கடிகாரம் போல் அடிக்கிறது. சோதகர் மணியடித்ததும் வெளியே வருகிறான். நிம்மதியில்லை...இரவும் பகலும் பழமோ காயோ என்று பதைக்கிறான். பூ வைத்தும் பார்க்கிறான். தேறுவிட்டால் உயிரை விடக்கூடத் துணிகிறான். இந்தப் பரீட்சை எமன் ஒழிக! மாணவர் அச்சமின்றி நேர்மையாகப் படிக்க, பிரமசரியக் கல்விமுறை வேண்டும்."

தலைவர் "எல்லாம் நியாயந்தான்; படிப்பு அறிவை ஆற்றலை, ஒழுக்கத்தை கலையை தொழிலை நாட்டுரிமையை வளர்க்கத்தான் வேண்டும். பள்ளிக்கூடத்தில் அக்கரையாகப் படித்து முன்னேறியவர் பலர். மணி ஐயர், முத்துசாமி ஐயர், மாதவராவ், சேஷையர் முதலியோர் சிறந்த அறிவாளர். அவர்கள் போல் நீங்களும் மேதாவிகளாயிருங்கள். பரீட்சை வேண்டும். ஆனால் மாணவர் கேள்வித் தாள்களைத் திருடக்கூடாது" என்று முடித்தார்.

என் அருமை நண்பர் நான் பரீட்சையை மறுத்து பேசியதற்காக மெச்சினர். ஆறேழுபேர் கூடி ஏதோ பேசக் கேட்டேன். அவருள் ஒருவன் "இந்த எட்டுமாஸ்டர் பரீட்சை வைக்கட்டும், நாமும் வெடி வைப்போம்" என்றான்.

44. கார்டினர் வந்தார்

மாணவர் சங்க ஆண்டு விழா; நானும் மீனாட்சி சுந்தரமும் அதை விமரிசையாக நடத்த முனைந்தோம். இருவரும் வக்கீல் வீடுகளில் படியேறி வாதாடி, முன்னூறு ரூபா வசூலித்தோம். தாம்தூம் செலவு நடந்தது. நான் நாடகப் பணியிலும் கூட்ட நிகழ்ச்சிகளிலும் ஆழ்ந்தேன். மனோகரன் நாடகம் போடுவது, வசூலானதை அப்போது நடந்த ஐரோப்பிய யுத்தத்திற்குத் தருவது என்று முதலில் ஏற்பாடு செய்தோம். சர்க்கார் உத்தியோகஸ்தரும் எங்களுடன் உழைத்தனர். திருவிழாத் தலைவராக திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரித்தலைவர் ஆலென் கார்டினரை வரவழைத்தோம். கார்டினர் உடனே சம்மதித்தார். அவரிடம் படித்த எனது தோழர் ஈ. வி. ராமசாமி முதலியோர் அமோகமான வரவேற்பு ஜோடித்தனர். மனோகரன் நாடகம் இன்னொரு சமயம் வைக்கலாம், இப்போது இங்கிலீஷ் நாடகம் தயாரிப்போம் என்று நண்பர் முனைந்தனர். ஒரேவாரம் உள்ளது. ஷேக்ஸ்பியர் தயாரிக்க ஆறுமாதமாகும். மோலியரின் கட்டாயக் கலியாணம் (Forced Marriage) நடிக்க முனைந்தோம். நான் அதில் வேதாந்தி வேடம் போட்டேன். மணி ஸ்கானரல்...சேதுராமன் கிழட்டுக்காதலன், ஏ. நாராயணன் காதலிவேடங் கட்டினான். நான் சில உருக்கமான சம்பாஷணைகளையும் பாடல்களையும் தயாரித்தேன். எம். கே. ஸ்ரீநிவாசையர் கல்விச் சீர்திருத்தம்பற்றிப் பேச ஒப்பினார். ஒருவாரம் நாங்கள் கலாசாலையிலேயே தங்கினோம். சிலருக்குச் சாப்பாடும் அங்கேயே வந்தது.

இந்தக்காலம் சில நண்பர் எங்களுக்கு இரவில் உதவிசெய்ய வந்து, இரண்டு மணிக்கு ஏதோ கிறீச் கிறீச்சென்று செய்துகொண்டிருந்தனர். ஒருநாள் இரண்டு நண்பர் இரவெல்லாம் சிரித்துக் கொம்மாளமிட்டனர். ஸினிமாத்திரைக்குப்பின் நடக்கும் காட்சிகள் எல்லாம் அங்கே நடந்தன. நான்மட்டும் கவனமாக மாடிமேல் ஏறி, சமூஸ்கிரத வகுப்பில் படுத்துக்கொண்டேன். அப்போது எதிரேயிருந்த சவுக்கமரத்தில் யாரோ ஏறும் சத்தம் கேட்டது. காலையில் பார்த்தேன் : ஜன்னலுக்கும் மரத்திற்கும் கயிறு கட்டியிருந்தது...இது இப்படி யிருக்கட்டும்...ஆண்டு விழாவுக்குச் செல்வோம்.

வந்தார் கார்டினர். மானுமதுரையிலிருந்து பெட்டி வண்டியில் அழைத்துவந்தோம்; இடவசதி செய்தோம், கார்டினர் எங்களுடன் ஒட்டுறவாயிருந்தார். கம்பீரமான ஆள். நல்ல தெள்ளிய பேச்சாளர் அவர் ரொட்டி வெண்ணெய் பிஸ்கோத்து காப்பி, கனிகளையே உண்டார். மதுமாமிசம் தொடவில்லை. ஏனோ நண்பர் சாராயப்புட்டி வாங்கி வைத்தனர். மறுநாள் அந்தப் புட்டி காலி...யார் குடித்தது...? பொதுப்பணம் வீணனதே என்று எனக்குத் திடுக்கிட்டது; உலகை அறிந்தேன்.

கார்டினர் எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டிற்கு வந்தார். இலந்தங்குடி ராமசாமி உபசரித்தான். அரைமணிநேரம் இந்துக்களின் பழக்க வழக்கங்களைக் கண்டார். "உங்கள் வீட்டு வாழ்க்கை தெய்வச்சுவை பெற்றது; ஆத்மப் பொலிவுடையது'' என்று மகிழ்ந்தார். பள்ளிக்கூடக் கொட்டகையில் வரவேற்புபசாரம் நடந்தது. நான் விருந்துரை செய்தேன். எல்லாரும் தேநீர் பருகினர். பிறகு நாடக மன்றத்தில் பொதுக்கூட்டம்; நான் முதலில் விவேகானந்தரின் சந்யாசி கீதத்தைப் பாடினேன். பிறகு கார்டினர் எங்களுக்கு நன்றி கூறி, மாணவர் ஒழுக்கம்பற்றிப் பேசினர், உடனே ஸயன்ஸ் ஸ்ரீநிவாசையர் ஒருமணி சண்டமாருதம் பொழிந்தார். இடையே நான் ஹாம்லெட்டிலிருந்து ஒரு பகுதி நடித்தேன். கார்டினர் ஒன்றரைமணிநேரம் தமது வெண்கலக் குரலால் தற்காலப்படிப்பு என்பதுபற்றிப் பேசினர். "தற்காலம் படிப்பில் குறைகள் உண்டு. ஆனால் அது இந்தியாவுக்கு ஒரு புதிய வாழ்வைத் தந்தது. உலகுடன் கலந்து பேச ஒரு பாஷையைத் தந்தது. நீங்கள் அத்துடன் உங்கள் நாட்டுக்குரிய ஆத்மகலையையும் வளர்க்கவேண்டும். மேற்கும் கிழக்கும் மூளையும் உள்ளமும்போல் கூடவேண்டும். அதுதான் சக்திபெற்ற புது வாழ்வைத்தரும்'' என்றார். "வெறும் புத்தகப்பூச்சியால் பயனில்லை. ஆளாக்குவதே அறிவு. கலை தொழில் ஒழுக்கம் உறுதி அழகு அன்பு ஆத்மசக்தி இவையெல்லாம் பொருந்தி, மாணவனை ஆத்மதீரனாக்குவதே உண்மைக்கல்வி; அத்தகைய தீரராக விளங்குங்கள்'' என்று பேசினர். இரவில் நாடகம் அமோகமாக நடந்தது. எங்களுக்கெல்லாம் லெஸ்லி துரைகள் உடுப்புகள் தந்துதவினர். நான் தாசா சில்கில் தமான் ஷர்டு கோட்டு

போட்டு ஸ்டாகிங்ஸ் பூட்ஸ்மாட்டி, ஒரு கௌன்மாட்டி, தலையிலும் டாக்டர் தொப்பிவைத்து, மேடையேறியதும், துறுதுறுவென்று நடந்து குறுகுறுவென்று பார்த்து ஒருதரம் புத்தகத்தைத் திருப்பி மூளையைத் தேய்த்துக்கொண்டு "பட்பட்" என்று சொற்களைத் தெறித்தேன்... கரகோஷம் பலமானது. எல்லாரும் மிக்க நன்முக நடித்தனர். கார்டினர் மிகவும் போற்றினர். முடிவில் அவருக்கு மாலைசூட்டி மரியாதைசெய்து, இரவிலேயே வண்டியேற்றி அனுப்பினேம். கார்டினர் "நீ சூடிகையாயிருக்கிருய்; வா எஸ். பி. ஜீக்கு" என்ருர். என் விதி எங்கெங்கோ என்னை இழுத்துச்சென்றது.

45. பக்கா திருட்டு

ஆண்டு விழாவுக்குப் பிறகு சில பேர்வழிகள் தினம் பள்ளிக்கூடத்தை வட்டமிட்டனர். காவல் கருப்பனைத் தில்லானுப் பாடச் சொல்லி இரண்டணு தந்தனர். சரி.பரீட்சை வந்தது. ஸ்ரீநிவாசையர் குண்டலப்பிரியர்; ஆதலால் கணக்குக் கேள்விகளை கடினமாக்கி எங்களைத் திகைக்கவைத்தார். நான் நான்கே கணக்குகள் போட்டேன். ஆறுபேர் அதி விரைவாகக் கேள்விகளை முடித்துக் கிளம்பினர். அதே மாதிரி ஆங்கிலமும் வெகு விரைவாக எழுதினர். தலைவர் சந்தேகித்தார், கேட்க முடியவில்லை. மறுநாள் சரித்திரக் கேள்வித்தாளை எண்ணினர். இரண்டு குறைந்திருந்தன. சந்தேகம் வலுத்தது.

மாணவர் எந்தக் காலத்திலும் கேள்வி திருடுவதில் சமர்த்தர். முன்னெல்லாம் ஸ்ரீகலா அச்சகத்தில் கேள்வித்தாள் அடிப்பர். பையன்கள் அச்சுத் தொழிலாளரைத் தாஜாப்பண்ணி தட்சிணை நீட்டுவர். கம்பாசிடர் புகையிலை போடுவதுபோல் கேள்வித்தாளை வாயில் சுருட்டிப் போட்டு குறித்த இடத்தில் உமிழ்வான். மாணவர் சரியான நேரம் குறித்துவந்து, அதை எடுத்துச்சென்று கழுவிப் பார்ப்பார்கள். உடனே கூட்டாளிகள்கூடி மளமளவென்று எழுதிக்கொண்டு,காகிதத்தைக் கொளுத்திவிட்டு, விடை தயாரிப்பார்கள். இது நீண்டகாலமாக நடந்த திருட்டு. ஒருநாள் இதைக் கண்டுகொண்ட தலைவர் அச்சை நிறுத்தி, ஸைக்ளோஸ்டைல் அடித்துக் கேள்வித்தாள் தந்தார். அதற்கும் திருடர் வந்தனர். ஸைக்லோஸ்டைல் அடித்தபிறகு காகிதத்தை பசுங்கிலிதான் எரிப்பான். அவனுக்குச் சாடைகாட்டி ஒரு வெள்ளிப்பணத்தையும் சுண்டினல் போதும் இன்னெரு காகிதம் கரியாகும். கேள்வி யெழுதிய ஸைக்ளோஸ்டைல் காகிதம் கேள்வித் திருடர் கைக்கு வந்துவிடும். இதையறிந்த தலைவர், தாமே பக்கத்தில் இருந்து என் அண்ணுவைக் காப்பியெடுக்கச்செய்து, அங்கேயே மூலப் பிரதியைக் கொளுத்தச் செய்தார். களவாணிகள் சமர்த்துப் பலிக்கவில்லை. ஆனல் எப்படியாவது கேள்வி திருடவேண்டும். அதற்கு பலத்த சதியும் யுக்தியும் நடந்தன, அம்மட்டோ? புத்தகச்சாலையி

லிருந்து பல அரிய நூல்கள் மறைந்தன. ஏழை நரசிம்மையர் பதறி னார், கதறினார். தலைவர் இந்தத் திருட்டைக் கண்டுபிடிக்க ஆசிரியர்க ளுடன் யோசித்தார்...புலன் கிடைக்கவில்லை.

ஒருநாள் ஒரு ஏழைப் பையன் கெனில்வர்த் நாவல் படித்துக் கொண்டிருந்தான். நான் அதை மெல்லப் பார்த்தேன். புத்தகாலய முத்திரை யிருந்தது. ஒருநாள் இன்னொரு பெரிய நூலை மற்றொரு பேர்வழி படம் பார்த்துக் கொண்டிருந்தான். பார்த்தேன். அதுவும் பள்ளிக்கூடப் புத்தகமே, சந்தேகம் வலுத்தது. என் அண்ணா தலைவர் ஹாலிலேயே தமது ஸயன்ஸ் கருவிகளையும் வைத்திருந்தார்.

ஒருநாள் அவர் பீரோக்கடியிலே எதையோ தேடியபோது ஒரு புதிய சாவி கிடைத்தது. தலைவரிடம் காட்டினார். சாவி அவர் ஹால் பூட்டு பெட்டிப்பூட்டு புத்தகசாலைப்பூட்டு மூன்றையும் திறந்தது. உடனே கொல்லாசாரியை அண்ணா விசாரித்தார். இரகசியமாக மூன்று மாணவர் வந்து அதைச் செய்யச் சொன்னதாகத் தகவல் கிடைத்தது. மூவரில் ஒருவன் சிக்கிக்கொண்டான்—புத்தகமும் கையு மாய். அவனை "நீ உள்ளது சொன்னால் பிழைத்தாய்" என்றார் தலைவர். பையன் அழுதான்...பிறகு குட்டெல்லாம் கக்கிவிட்டான், இதையறிந்த மற்றிருவரும் என்னிடம் வந்தனர். கதையெல்லாம் சொல்லி, "உன் அண்ணாவிடம் சொல்லி எங்களைக் காக்கவேண்டும்..." என்றனர். அண்ணா அவர்களைத் தனியே அழைத்துச்சென்று நடந்த தெல்லாம் எழுதி வாங்கினார்.

மறுநாட்காலை எங்கள் வீட்டுத் திண்ணையில் சுமார் ஐம்பது அரிய புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தது. எல்லாம் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவை. அண்ணா மேலாக இருந்த நாவலைப் பிரித்தார். பத்து ரூபா நோட்டும் கடிதமும் இருந்தன. "தயவுசெய்து இந்தக் களவை அமுக்கிவிடுங்கள். ரூபா பத்து..." இவ்வளவே எழுத்து. அண்ணா எல்லாம் தலைவரிடம் காட்டினார். தலைவர் எட்டுப் பேர்வழிகளை அழைத்து விசாரித்தார். ஒரு தடிகுண்டன் மிகவும் பெருமையுடன் சொன்னான்: "ஸார் இதெல்லாம் எங்கள் குற்றமில்லை. பரீட்சை எமனே எங்களைத் திருடராக்கினான். நீங்கள் எங்களைச் சோதிக்கிறீர் கள், நாங்கள் உங்களைச் சோதிக்கிறோம். நானே சவுக்குமரத்தில் கயிறுகட்டினேன். அதன்வழியே மாடியில் திறந்துவைத்த ஜன்னலில் தாவினேன். கீழே இறங்கினேன். கள்ளச் சாவியால் புத்தகசாலை யைத் திறந்தேன். அந்த ஜன்னல்வழியே எங்கள் கூட்டாளிகள் உள்ளே வந்தனர். உடனே மெழுகுதிரி யேற்றிக் கொண்டு உங்கள் அறையைத் திறந்தோம். பெட்டியைத் திறந்தோம். கேள்விப்பைகளை தண்ணீர் தடவித் தடவி உடைத்தோம். வகைக்கு இரண்டொருதாள் எடுத்துக் கொண்டோம். உடனே கோந்து போட்டு ஒட்டிவைத்தோம். அதற்குள் என் சகாக்கள்

இருவரும், புத்தகசாலையில் கைவைத்து மூட்டை கட்டி வெளியே குதித்தனர். நாங்களும் காரியத்தை நடத்தி உடனே பெட்டியைப் பூட்டினோம். ஏதோ சத்தம் கேட்டது. சாவியை அப்படியே ஒரு பிரோக்கு அடியில் வீசிவிட்டு, வெளியே குதித்து, சந்துகள் வழியே ஓடி வீடுகளுக்குச் சென்றோம். மறுநாளே கேள்விகளுக்கெல்லாம் தக்க விடைகளை எழுதி வைத்தோம். பரிட்சையும் தேறினோம்...இனி என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்றான்.

கருணையுள்ள தலைவர் என்ன செய்தார்? பெரிய வகுப்பு மாணவரையெல்லாம் ஹாலில்கூட்டி, எட்டுப்பேர்வழிகளையும் அவர்கள் முன்னே நிறுத்தினர், "இந்தக் கனவான்கள் இரவில் புகுந்து, கேள்வித் தாள்களையும் புத்தகங்களையும் திருடினார்கள். மாணவர் இந்தமாதிரி திருடுதல் பள்ளிக்கூடத்திற்கே அவமானம்" என்று அவர்கள் கையில் நவ்வாலடி கொடுத்தார். இரண்டுபேரை மட்டும் பட்டாவைத் தந்து வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினர். அந்தப் பையன்கள் நன்றாகப் படித்து முன்னேறினார்கள். ஒருவன் பி. ஏ. தேறி ஆசிரியனானான். மற்றொருவன் கோயமுத்தூரில் படித்து விவசாயப் புலவனாகி உத்யோகம் பார்த்தான். மற்றெல்லாரும் என்னுடன் படித்து நல்ல நிலைக்கு வந்தனர். அவர்கள் கனவிலும் திருடமாட்டார்கள். இந்த விஷமம் பரிட்சையின் பயங்கரத்தால் வந்தது. இன்றும் கேள்வித் திருடர் சுயேச்சாதிகாரம் செலுத்துகிறார்கள். பரிட்சை, கேள்வி என்றிருக்குமட்டும் திருடரும் இருப்பார்கள்.

46. சிலர் ....

என்னுடன் படித்தவர்களில் சுமார் இருபது பேர் நல்ல நிலைக்கு வந்தனர் என்றறிகிறேன். என்னுயிர்த் தோழன் ஜி. சுந்தரம் சரித்திர ஆங்கிலப் புலவன், குணவான், தேசபக்தன், இனிய பேச்சாளி; உயர்ந்த விஷயங்களை இருவரும் பேசினோம். எனது இளங்கவிகளை அவனிடமே படித்தேன். ஆங்கிலத்தில் அக்காவம் கவி பாடினேன், சுந்தரம் இதோபதேசத்திலிருந்து சுலோகங்களைச் சொல்வான். இருவரும் நீண்ட தூரம் நடந்து. அரிய இலக்கியங்களைப் படித்து வருவோம். இவரும் நானும் ஆசிரியராகி தேசப்பணியும் கதர்ப்பணியும் புரிந்ததைப்பிறகு அறியலாம். அண்ணாசாமி ஐயர் பேரன். கே. எஸ். வேங்கடராமன் எனக்கு இனிய நண்பன்; சென்னையில் வழக்காளனாகிச் சமீபத்தில் காலம் சென்றான். அவனுடன் அவன் மாளிகையில் படிப்பதுண்டு. அதே மாதிரி எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டு ஈ. வி. ராமசாமியும் சென்னையில் செல்வாக்குள்ள வக்கிலாயிருக்கிறார். அவர் அண்ணா விசுவநாதன் டாக்டர். ஸப்ஜட்ஜ் கோபால்ராவ் பிள்ளை ராமச்சந்திரன் என்னுடன் ஆங்கில இலக்கியங்களைப் படித்தான். அவனும் டாக்டரா யிருக்கிறான். எஸ். சோம

சுந்தரனர் B.A. L.T., நிரம்பத் தமிழறிவும் தமிழுணர்வும் கொண்டவர். எங்கள் மாணவர் சங்கத்தில் அழகாகப் பேசுவார். அவரும் ஆசிரியரா யிருக்கிருர். காத்தவராயன் சேர்வை பேரன் எஸ். கே. மீனட்சிசுந்தரம் எனது நாடகத் தோழன். அவனும் போலீஸ் இன்ஸ்பெக்டரா யிருந்து ஓய்வு பெற்ருன். ஜே. ராமசாமியை நான் மறக்க முடியாது. குட்டிஜோசியர் பேரன் என்ருல் எங்கள் ஊரில் தனி மதிப்புண்டு. ஆள் என்னைப்போல் நான்கு மடங்கு; நல்ல குணம்; நட்புரிமை யுண்டு; அவன் வீட்டில் நான் நான்கு மாதங்கள் படித்தேன். இன்று சுத்தானந்த சமாஜத்திற்கு ஸ்ரீ ராமசாமி அரிய சேவை செய்து வருகிருர், நாங்கள் ராமாடு என்னும் குஷிப்பேர்வழி ராமலிங்கத்தை எப்படி மறப்பது? புட்பால் சாம்பியன், வசிகரமான புன்னகைச் செல்வன்.; நாங்களெல்லாம் நாட்டரசன் கோட்டைக்கும் காளையார் கோயிலுக்கும் சென்று திருநாள் கும்மாளம் போட்டதை மறக்க முடியாது. இராமலிங்கன் பி. ஏ. அமெரிக்கன் கல்லூரியின் ஆசிரியரானுர். ஸ்ரீ அனந்த வைத்தியநாதன் மகா மேதாவி. காசத்துடன் போராடிக் கொண்டே வகுப்பில் முதன்மை வகித்தார். இன்று ரசாயனப் புலவராக அண்ணுமலை நகரிலும் விவேகானந்தர் கல்லூரியிலும் தொழில் நடத்திய வைத்தியநாதனை அன்றே அறிந்தேன். சினிமா ஏ. நாராயணன் என் அருமைத் தோழன். சிறுவயதிலிருந்தே நாங்கள் நாடகத்திலும் பயாஸ்கோப்பிலும் அக்கரை கொண்டோம். இன்று உயிருடன் இருந்தால், அவன்மூலம் எனது படக்கனவுகளை நிறைவேற்றி யிருக்கலாம். இப்படி அங்குமிங்கும் எனது நண்பர் சிதறிக்கிடக்கின்றனர். சில அரிய நண்பர் கால வெள்ளத்தில் மறைந்தனர். ஏதோ நானும் பூத்துக்காய்த்து பழுத்து என் ஆத்மசோதனைகளையும் எழுதி வைத்தேன். பள்ளிக்கூடச் சித்திரங்களைப் பார்த்தோம். இனி என் காமிராவைச் சமுதாயத்தை நோக்கித் திருப்புகிறேன்,

47. ஏழை படும்பாடு

உலகம் மேடை; வாழ்க்கை நாடகம். நான் காண்பவன்; காட்சி மானிட இயல்பு. சுற்றிலும் இன்பதுன்ப உணர்ச்சி நவரஸக்கோலங் கொண்டு நடிக்கிறது. குழந்தை பிறந்தால் இன்பம்; கற்கண்டு வழங்குதல். அதற்கு நோய்நொடி வந்தால், அது சும்மா அழுதால் துன்பம்; இறந்தால் அழுகை. படித்துப் பட்டம் பெற்ருல் இன்பம்: வேலையில்லாமல் வறுமையால் திண்டாடினுல் துன்பம், கவலை. மணம் புரியும்போது இன்பம்; மாறுபட்டுச் சண்டைப் போடும்போது துன்பம். இப்படி உலகு சுழல்கிறது. இன்பமே எந்நாளும் துன்பமில்லை; உண்மை; உள்ளத்தில் பொங்கும் இன்பத்தை அறியாமலே உலகம் மனவிகாரங் கொண்டு துன்பப்படுகிறது. ஆசை ஆணவம், சுயநலத் திமிர், கோள், பொருமை, சோம்பல், வறுமை,

கருமித்தனம், மனச்சாட்சியை மதியாது நடத்தல்—இவை துன்பத்திற்குக் காரணங்களாம். அறிவாளி நூல்களில் அறிவு தேடுவதுபோல், நான் உலகில் அறிவைத் தேடினேன். எனது அறிவுநூல் தெருவிலும் சந்தையிக்கடையிலும், தேர் திருநாட்களிலும், குடும்பப் போர்க்களத்திலும், மாந்தர் கூட்டத்திலும் அடுக்கடுக்காகக் காணும். அதன் முதற்படலம் வறுமைக் காட்சிகளே, பாருங்கள் :

வேகாத வெய்யில் ; இடுப்பில் குழந்தை ; தலையில் விறகுக்கட்டு ; "ஐயா விறகு கட்டு! எட்டணா" என்று கெஞ்சுகிறாள் வேலாயி. கல்நெஞ்சச் செல்வன் "நாலணா; சம்மதமானால் போடு" என்கிறான். கூட இரண்டணாவுக்கு மன்றாடுகிறாள் ஏழை; "அட அநியாயமே" என்று ஐந்தணாவுக்குப் போடுகிறாள். செல்வன் காசை விட்டெறிகிறான். பேதை எடுத்துச் செல்கிறாள். குழந்தை அழுகிறது; கேப்பை வாங்கிக் கஞ்சி குடிக்கவேண்டும். இதே விறகு மண்டியில் இருந்தால் பத்தணா என்றால், பத்தணா தந்து வண்டி வாடகை கொடுத்து அதே செல்வன் கொண்டு போவான். க்யூ நடந்தும் வாங்கி வருவான், ஏழைகளிடம் ஓரணாவுக்கு மல்லாடுகிறான். கீரைகாரி வருகிறாள். அரிசி போட்டு வாங்குகிறார்கள். இன்னும் கொஞ்சம் என்று கூடையில் கை போட்டுக்கூட எடுக்கின்றனர் கல்நெஞ்சர். தயிர்க்காரி வீரம்மா வருகிறாள். ஓரணா மோர் வாங்குவோர் இன்னும் விடு என்பதுடன், என் பேரன் கையில் கொஞ்சம் தயிர்க்கட்டி வை என்பர். தயிர்க்காரி சுவரில் கோடுபோட்டு மாத முடிவில் பணம் கேட்டால், அடுத்த மாதம் என்பர் ; சண்டை போடுவர். இந்த மாதிரி அற்பத்தனங்களைக் கண்டு என் உள்ளம் குமுறும். வயிறு பிழைக்க எத்தனை மாயங்கள்!

48. பிச்சையுலகம்

திண்ணையில் உட்கார்ந்து தெருவைக் காண்கிறேன். வாழ்க்கைச் சினிமா நடக்கிறது: "நல்ல குறி சொல்லடீ, ஜக்கம்மா மந்திரக்காளி" என்று குடுகுடுப்பாண்டி வருகிறான். ஒரு வேட்டி போட்டால், ஐயாவுக்கு யோகம் பிறக்குது என்கிறான் ; இன்றேல் "பாவி ஐயோனு போறான்" என்று குடுகுடுப்புடன் செல்கிறான். பகல் வேஷம் முத்தும் ரத்னமும் வருகின்றனர். நாளுக்கு ஒரு வேஷம். காசி யாத்திரி, சாமியார், மடத்தாய், நரிக்குறவன், ஒட்டன், குறத்தி, வள்ளி, கிழட்டு முருகன், கைம்பெண், சண்டைப்பிடாரி, கண்ணன் ராதை வேடங்கள் கட்டி வீடு வீடாக நடிக்கின்றனர். வேடங்கள் பல; ஆள் ஒன்று; உடல்கள் நாமரூபங்கள் பல; ஆத்மா ஒன்று என்ற உண்மையை அப்போது நினைப்பேன். ஒரு கருமி பணமே தரவில்லை. முத்து கைம்பெண்ணாகி, "ஐயோ அண்ணா உனக்கு இப்படி தரித்திரம் வந்ததே" என்று கட்டியழுதாள். ஊர் சிரித்தது. "இந்தாடி தொலை" என்று ஒரு ரூபா தந்தான் கருமி.

"ஹே ஜக்கம்மா மந்திரக்காளி உஷ்" என்று ஜாலவித்தைக்காரன் வருகிறான். செப்படி வித்தை செய்கிறான். பீதாம்பரையரும் ஸ்ரீநிவாசாசாரியரும் ஜால வித்தை காட்டினால் பணம் குவிகிறது. அவர்கள் பாம்பும் நரியும் வரவழைப்பர்; காகிதப் பூமாலை காட்டுவர்; ஆளை மயக்கி ஆகாச வித்தை காட்டுவர். வெள்ளைச்சட்டைகளிலிருந்து அவர்களுக்கு இனாம்கள் பறந்துவரும். அதே வித்தைகளைக் கழைக் கூத்தாடி அற்புதமாகக் காட்டுவான். கூடையில் தன் மனைவியை வைத்து மூடி, அதைக் கத்தியால் குத்துவான். மனைவி தெருக்கோடியி லிருந்து ஓடி வருவாள். கூடையை விட்டு எப்படிக் கிளம்பி எப்படி வந்தாளோ அறியோம். பட்டப்பகலில் நடுத்தெருவில் மாஞ்செடி முளைக்கும்; அதில் ஒரு காயும் இருக்கும். ஒரு குவளையில் மண்ணைப் போட்டு மூடி "ஜேய் ஜக்மம்மா" என்று திறந்து பவுனைக் கொட்டு வர். தலைமேல் ஐந்தாறு பானைகளை அடுக்கிக் கொண்டு, கிளை உச்சியில் கட்டியிருக்கும் கயிற்றில் நடப்பர். பாம்பு நரி, கிளிகளை வரவழைப்பர். அவர்களுக்கு மக்கள் காலணா அரையணா பைசா வீசுவர். நான்கு மணிநேரம் ஆடினால் நான்கு ரூபா பெயர்வது அரிது. பெருமாள் மாடு வரும். "மாமியார் வீட்டுக்குப் போடா ரங்கா" என்றால் சந்தோஷமாய்ப் போகும்; "உன் பெண்சாதியை ராவணன் கொண்டு போனாண்டா ரங்கா." என்றால், சீறிச் சினந்து முட்டக் கிளம் பும். மாட்டுக்குக்கூட அப்படித் தன்னுணர்ச்சியுள்ளது. பாம்பாட்டி மகுடி ஊதுகிறான். புன்னாகவராளி கேட்டுப் பாம்பு கூடையிலிருந்து தலைதூக்கியாடுகிறது. கூடை திறந்ததும் சுதந்தரம் கிடைத்ததென்று மகிழ்கிறது. பிச்சை கிடைத்ததும் பாம்பாட்டி அதைக் கூடையில் மூடிச் செல்கிறான். சிலர் மலைப்பாம்பைத் தோளில் போட்டுவந்து ஆட்டம் காட்டுகின்றனர்; சிலர் கரடி விளையாட்டுக் காட்டுவர். குரங் காட்டியின் வேலை அற்புதமே. அந்தக்காலம் பத்துப் பனிரண்டு குரங்குகளைக் கொண்டு தெருத்தெருவாக அரிச்சந்திர நாடகமும் ராம நாடகமும் ஆட்டுவார்கள்; பாட்டுக்கும் கொட்டுக்கும் குறிப்புக்கும் தக்கபடி குரங்குகள் நடிப்பது விந்தையே. இப்படி ஸர்கஸ் கொட் டகையில் நடித்தால் பெட்டி நிரம்பும். தெருவில் நடித்தால் வயிறு நிரம்பும்; அவ்வளவுதான். சிலர் நாய் நரி புலிகளையும் கொண்டுவந்து வித்தை காட்டுவதுண்டு. விலங்குகள் தலைவன் கோலுக்கு இப்படிப் பணிந்து நடக்கின்றன. "மனக்குரங்கும், ஆசைப்புலியும் பொறாமைப் பாம்பும், வஞ்ச நரியும் அடங்காச் சேட்டைகள் செய்கின்றனவே." என்றெண்ணுவேன். வருவான் கல்லுளிமங்கம்." "ஐயையையை" என்று பன்றிக்குரலெடுத்துக் கத்தியால் கையை அறுத்துக்கொள் வான். இரத்தம் வரும். பயந்துபோய் அரிசி போட்டுவிடுவார்கள். அதுவும் ஒரு மூலிகை வேலைதான். "ஏழுமலைக்கு ஹரோஹரா" என்று திருப்பதிப்பந்தம் வரும். ஏழுமலையானுக்கு உண்டியல் வசூ லாகும். பணம் வயிற்றுப்பானையில் போகும், சந்தையிலும் திருவிழா

விலும் நொண்டி நடம் ஊமை குருடு என்று துண்டு விரித்துக் காசு தட்டும் ஏழைகளைக்காண்பேன். கைகால் திடமாய் வேலைசெய்யமுடிந்தவர்கள் காவியும் கப்பறையுமாக வந்து, தனதந்தி நாதந்தி பாடிப் பிச்சையெடுப்பர். அன்னக்காவடி யெடுப்பர். "சங்கரா சங்கரா சம்போ" என்று கூட்டப் பரதேசிகள் இரவில் பாடிச் சோறு கேட்பர். முருகனுக்குக் காவடியெடுத்து "வேல்முருகா." என்று கை நீட்டுவர், லாடர்கள "ஜயசீதாராம்" என்று வருவர். யாத்திரை, பூணூல். கலியாணம், யாகம். திருப்பணி, உற்சவம் என்று யாசகம் கேட்பர் சிலர். கந்தையணிந்த பெண்கள் கணவன் கைவிட்டதாகப் பிச்சை கேட்பர். கைம்பெண்கள் ஏழை அனாதை என்று இரப்பர். இப்படிப் பிச்சையுலகம் பலவகை. சிலர் பிச்சை வாங்கி வாங்கி நல்ல சொத்துச் சேர்ப்பதும் உண்டு. சத்திரம் சாவடி பூரி தட்சிணை என்று பிச்சையெடுத்து, வீடு நிலம் ரொக்கம் வைத்திருப்பவரும் உண்டு. இந்தப் பிச்சையுலகமே ஒழிந்து, தொழில் உலகம் வளரவேண்டும். உழைப்பும் பிழைப்பும் ஒன்று சேரவேண்டும். இது என் இளஞ்சிந்தனை. உழைக்கும் ஏழைகளைக் காண்போம்:

49 பாட்டாளிகள்.

சாலை மரத்தடியில் குப்பாயி இடியாப்பம் சுட்டு, புட்டு வைத்து, மொச்சைய வித்து, தோசை வார்த்து நாலு குழந்தைகளைக் காக்கிறாள். சிலர் திண்ணைகளில் வடை பணிகாரங்கள் செய்து குவித்து ஊசிப் போகுமட்டும் விற்பர். எதிரே ஒரு காப்பிக்கடை வந்தால், இங்கே விற்காது. சிலர் சந்தையில் மா பலா வாழைக்கனிகளை வாங்கி, மரத்தடியில் விற்றுக் குடும்பத்தைக் காப்பர். எங்கள் பள்ளிக்கூடத்திற்கெதிரே, ஆலமரத்தடியில் நெடுங்காலமாக ஒரு மாம்பழக் கிழவி இருந்தாள். பழம் விற்றே பெரிய குடும்பத்தைக் காத்தாள். கடன் வாங்கி அவளை ஏமாற்றும் பையன்களும் உண்டு. நான் அவர்களைக் கண்டு பிடித்துப் பணம் வசூலித்துத் தருவதுண்டு. பால் தயிர் நெய் விற்றுப் பிழைக்கும் பெண்கள் வாழ்வை நான் பார்த்திருக்கிறேன். நான்கு மணிக்கே எழுந்து வீடு கூட்டி மெழுகிக் கோலம் போட்டு, பாத்திரம் தேய்த்து, மாடுகளுக்குத் தீவனம் வைத்து, தயிர் கடைந்து, நெய் உருக்கி ஏழைப்பெண் கூடையில் தயிர் நெய் வைத்துக் கிளம்பி, ஊரைச் சுற்றி விற்று, ஒருமணிக்குத் திரும்புவாள். பிறகு அடுப்புமூட்டிச் சமைத்து கணவனுக்கும் மக்களுக்கும் கஞ்சி கொடுத்து, வீட்டு வேலைகளைச்செய்து சிரமப்படுவாள். மாட்டுக்குப் புல் செதுக்கி வருவாள். அடுப்புக்குச் சுள்ளி பொறுக்கி வருவாள். மாலையில் குளித்து வந்து சுடுகஞ்சி தந்து, இளைப்பாறுவாள். காற்றுமழை வந்தால் திண்டாட்டந்தான்.

என் வீட்டு உருப்படிகளை வாங்க வண்ணாரக்கருப்பன் வீட்டுக்குச் செல்வேன். வெள்ளை வெளுக்கும் திருமேனிகளின் குடில்களைப்

பார்ப்பேன். ஒருடஜன் கழுதைகள் அங்கே மேயும். வேட்டி துணி வைக்க ஒரு செங்கல்வீடுண்டு. வசிப்பது மண்வீட்டில்; குடிப்பது கேப்பைக் கூழே; அணிவது ஊர் வேட்டி; சிலர் செல்வரின் சரிகை வேட்டிகளை இரவில் அணிந்துவருவர். காலையில் கழுதைமேல் சுமை யேற்றிச் சென்றால், ஆடைகளைத் தோய்த்து உலர்த்தி மாலையிலே தான் திரும்புவர். மனைவியர் மதியம் கஞ்சிக் கலயங்கொண்டு செல்வர். சிலர் விறகுவெட்டக்கோடரியேந்தி வருவர்; சிலர் சுவரெடுக்க வருவர்; சிலர் குடை பூட்டு பழுதுபார்க்க, சிலர் அம்மிபொளிய, ஈயம்பூச— இப்படி எத்தனையோ சிறுசிறு தொழில்செய்து பிழைக்கும் ஏழைகளின் வாழ்க்கையைக் காண்பேன். ஏழையாகிய நான் ஏழையாகிய அவர்கள் துயரை அறிந்து கண்ணீர்விடுவதுண்டு.

50. பாபத் தொழில்கள்

எத்துக்கடையும் திருட்டும் செய்து பிழைக்கும் மானங்கெட்ட வர்களைக் கண்டேன். ஒரு மாயாவி பள்ளிக்கூடத்திற்கு வருவான், கடுக்கன் காப்பு போட்ட செல்லப்பிள்ளைகளைக் கொஞ்சுவான்; மாம் பழம் தருவான். இப்படி நான்கு சிறுவரை வசப்படுத்தி மாப்பிள்ளைத் தேவர் ஊருணிக் காட்டிற்கு அழைத்துச்சென்று, காப்பு கடுக்கன் எல்லாம் கழற்றிக்கொண்டு மறைந்தான். போலிசில் எழுதியும் பய னில்லை. எங்கள் வீட்டில் நாலைந்துதரம் திருடர் வந்தனர். சத்தம் போட்டோம். ஓடிப்போனார்கள். ஒருவன்மட்டும் "ஏண்டா கத்தறே. உன்வீட்டில் நாய்கூடப் புகாது" என்று கத்திக்கொண்டே ஓடினான். ஒரு பகல்திருடன் என் அண்ணா ஆடையைத் திருடிக்கொண்டு செல்லும் போது, நான் பிடித்துவிட்டேன். அண்ணா உடனே போலிசில் அவனை ஒப்பித்தான். அப்போது "ஐயையா போலீஸ் வேண்டாம். ஏதோ வயிற்றுக்கொடுமையால் திருடினேன்: இனி இல்லையென்று" கெஞ்சி னான். எனக்கு அவன்மேல் இரக்கமும் நாட்டின் வறுமைமேல் ஆத்திர மும் வந்தன. பாவம் மூன்று மாதம் சிறைபட்டான் அந்த ஏழை. ஆறு மாதம் கழித்து துணி திரும்பிவந்தது. அந்தக்காலம் கள்ளர் பயம் அதிகம். நள்ளிரவில் நாங்கள் ரோந்து சுற்றுவோம். சிவ நாமம் பாடிக்கொண்டே அப்பாவுடன் விழித்திருப்போம். அப்படி யிருந்தும் ஊரில் நாலைந்துதிருட்டுகள் நடக்கும். பீட் கன்ஸ்டேபிள் கள் டடடே என்று சத்தமிட்டு இப்புறம் வந்ததும், அப்புறம் திருட்டு நடக்கும். மாடுகள் களவுபோகும். ரூபாய்க்கு ஐந்துபடிவிற்ற அந்தக் காலத்தில் இப்படிக் களவென்றால், ஒருபடிக்குச் சிங்கியடிக்கும் இந்தக் காலத்தில் சொல்லுவானேன்! வறுமைதான் திருட்டுருட்டுகளுக்குக் காரணம். துரைக்கண்ணு என்ற பக்காத்திருடன் பிடிபட்டபோது "நானா திருடன்; வறுமையே திருடன்" என்று சொன்னான்.

வறுமையால் பெண்கள் கற்பிழப்பதைக் கண்ணாரக் கண்டேன். ஒருநாள் நாங்கள் பந்து விளையாடும் மைதானக்கரையில், ஒரு பாலத்

தின் கீழே, சந்தைக்குச் சாமான் வாங்கவந்த குமரிப்பெண்ணை ஓர் ஆண் தழுவிக்கொண்டான். சுட்டிப்பயல்கள் பெருஞ் சத்தமிட்டுக் கல்லெறிந்தனர். ஆண் சுடுகாட்டுப்பக்கம் ஓடி மறைந்தான். பெண்ணை நாங்கள் வளைத்துக்கொண்டோம். பையன்களின் கேலியை அடக்கி "அம்மா நீ ஏன் இந்த இழிவான காரியத்திற்கு இணங்கினாய்? அவன் எவ்வளவு தருவதாகச் சொன்னான்?" என்று கேட்டேன். "ஆத்தாளுக்குக் காய்ச்சல். வயிற்றுக்கொடுமை; அந்தப்பாவி இரண்டணா தருவதாகச் சொன்னான்." என்று அழுதாள் பேதை. நான் எனது நண்பன் வைத்திலிங்கத்திடம் இரண்டணா வாங்கிக்கொடுத்து, அவளை அனுப்பினேன்; மூன்று புத்தகங்கள் பைண்டுசெய்து கொடுத்து அந்தக் கடனைத் தீர்த்தேன். வறுமைக் கொடுமையாலும் வீட்டுக் கொடுமையாலும் மானத்தை விற்ற பெண்களைக்கண்டு பரிதபித்தேன். இதைவிட அநியாயம், பாலியவிவாகம் செய்து, வினைத் தெரியமுன்பே கணவனையிழந்து மூலை காக்கும் குமரிகளின் வாழ்க்கை! இருட்டுடன் குளத்தில் முழுகிவந்து, மாடுமாதிரி வீட்டுவேலைசெய்து, பலகாரம் சாப்பிட்டிருக்கவேண்டும். மொட்டையும் முக்காடுமாயிருக்கவேண்டும். யார் முகமும் பார்க்கக்கூடாது. அவள் எதிரே வந்தால் "அடி மொட்டச்சி அபசகுனமே!" என்று சீறுவர். இந்த நரக வேதனைப்படும் சிறு பெண்களின் பெற்றோரைக்கண்டு மறுமணத்திற்கு ஏற்பாடு செய்யச்சொல்லி, நான்பட்ட வசவு கொஞ்சமன்று. எங்கள் தெருவிலேயே அழகான இளம்பெண் ஒருத்தி, பத்து வயதில் கணவனை இழந்தாள். பதினாறு வயதில் தலையை வழித்து முக்காடு போட்டனர். முக்காடு மோகத்தை மூடுமா? தன் அக்கா தங்கைகள் குடித்தனம் செய்து மலரும் மஞ்சளுமாயிருப்பதைக்கண்டு ஏங்கினாள் குமரி. வயதின் ஆசைகள் தாங்காமல் வலைவீசத் தொடங்கிப் பல வாலிபரைக் கூடினாள். முடிவில் வீட்டு குமாஸ்தாவுடன் மதுரைக்கு ஓடினாள். அங்கே தக்க செல்வரைச் சார்ந்து இரண்டு மக்களைப்பெற்று, செல்வமும் சேர்த்தாள். நான் காங்கிரஸ் பிரசாரத்திற்குச் சென்றபோது அதே பெண்ணை ஒரு மிராசுதாரிடம் கண்டேன். அவள் மக்களுக்கு நல்ல இடத்தில் கலியாணமாகிக் குடும்பம் வளர்ந்தது. இன்னொரு யுவதி களவொழுக்கத்தால் கருத்தரித்தாள், அவள் குழந்தை குப்பைத் தொட்டியில் தவழ்ந்து குறவன் கையிற் சிக்கியது. அவள் கழுத்து கயிற்றில் தொங்கியது. இன்னொருத்தி கணவன் கொடுமை தாங்காமல் ஒரு சாகேபுடன் வடக்கே ஓடிப்போனாள். அவன் தகரக்கடை வைத்தான். இருவரும் குடும்பம் நடத்தினர். இப்படியே கலியாண வாழ்வில் பல பரிதாபக் காட்சிகளைக் கண்டேன். வரதட்சிணைக் கொடுமையால், ஏழைகள் இளம்பெண்களைக் கிழடு கட்டைகளுக்குத் தள்ளுகின்றனர். வயதின் தூண்டுதலால் அந்தக் குமரிகள் வழி தவறிப் போகிறார்கள். கிழட்டு மாப்பிள்ளை பெண்ணைத் தள்ளி வைக்கிறான். கள்ளக்காதலனும் கைவிடுகிறான். வயிற்றில் பத்துமாதம்;

பெண்ணின் பரிதாபம் என்னே? ஒரு பாதிரி காலில் விழுந்து மதம் மாறுகிறாள். பிறகு சுகப் பிரசவமாகி மறுமணமாகி வாழ்கிறாள். இப்படிச் சிலபேரைப் பார்த்தேன். தசப்பொருத்தமும் பார்த்துக் கட்டியதாலி சாந்தி கழிவதற்குள் அறுகிறது. பொருத்தம் பார்த்து மணந்தவர் வெருகுச் சண்டைபோடக்கண்டேன்.

ஒரு மாமியார் பெரும் பிடாரி. துண்டுக்குடித்தனம் வைத்தாலே அனுப்புவேன் என்று மகளை அழைத்துச்சென்றாள். மாப்பிள்ளை பெற்றோரை அலட்சியம்செய்து துண்டாகப்போனான்; கடனாளியானான். காசம் வந்தது. நரகவேதனைப்பட்டான். ஒரு நாட்டுப் பெண்; செல்லமாக வளர்ந்தவள். மாமியார் அவளுக்குப் புடவை கூடத் துவைத்துப்போட்டாள். அவள்மட்டும் "எனக்குச் சோறுகூடப் போடுவதில்லை. இந்தத் தரித்திரங்கள்" என்று பொய் எழுதிவந்தாள். "அஷ்ட தரித்திரக் கும்பலுக்குப் பெண் கொடுத்தோமே" என்று சம்பந்தி சண்டை போட்டார். சம்பந்திகள் சண்டை, தம்பதிகள் வாழ்வைக் குலைத்தன. மாப்பிள்ளை பெண்ணைத் தள்ளிவைத்தான். மறுமணம் புரிந்தான். அவள் பக்கம் பார்த்தாள். பயன், அவமானம் தற்கொலை. இன்னொரு நாட்டுப்பெண் திடீரென்று பேயாடத் தொடங்கினாள், எல்லாரையும் "வெட்டுவேன் குத்துவேன்" என்று அட்டகாசம் செய்தாள். 'கிணற்றில் விழுவேன்" என்று போனாள். கணவன் தைரியசாலி. "விழு" என்றான். "ஐயோ! என்னைக் கிணற்றில் தள்ளுகிறான்" என்று ராக்ஷஸி கூச்சலிட்டாள். மாமியார் பேய்போல் வந்தாள். "இங்கே கத்தாதே கூட்டிப்போ, பெண்ணை" என்றான் மாப்பிள்ளை. அப்படியே செய்தாள் மாமியார்; ஆனால் பெண்ணை நிர்வகிக்க முடியவில்லை, வறுமை. பேய்நோய் எல்லாம் மறைந்தன. மறுபடி பெண்ணைக் கூட்டிவந்து கெஞ்சிக் கதறி மாப்பிள்ளையிடம் விட்டாள். மாப்பிள்ளை "முன்பேன் ரகளை பண்ணினாய்" என்று கேட்டான். "துண்டுக் குடித்தனத்திற்காக நாங்கள் பண்ணும் ரகளைதான்" என்றாள் பெண். மற்றொரு யுவதி பணக்கார வீட்டில் வாழ்க்கைப்பட்டாள், ஆனால் கணவன் அப்பாசு, மூலநோய்க்காரன். அந்தப் பெண் பொறுமையிழந்து, ஆசைமிறி விட்டுச்சேவகனை வைத்துக்கொண்டாள். பெண் பிறந்தது, சேவகன் முகம் தத்ரூபம். ஊரார் உடனே கண்டுகொண்டனர். அந்தப் பாவிப்பெண் சேவகனுக்கு நஞ்சு வைத்தாள். இளம்மனைவி அலறித்தவிக்க, சேவகன் இறந்த காட்சி என் கண்முன் நிற்கிறது. ஒரு மாப்பிள்ளை டாக்டருக்குப் படிக்கிறான். "மாமியார் இரண்டாயிரம் தந்தாலே பெண்ணைக் கூட்டிக்கொள்வேன்" என்று பிடிவாதம் செய்தான். ஆனால் ஆள் இரகசியமாக மனைவியைக் கூடினான். அவள் கருத்தரித்தாள். பிறகென்ன செய்வது?...கூட்டிக்கொள்ளாவிட்டால் தன் பெயருக்கு இழுக்கு. பேசாமல் தானே மனைவியை அழைத்துக்கொண்டான். ஒரு கட்டழகி;

அவளைக் கிழவனுக்குக் கொண்டு தள்ளினர். அவன் நோயாளி, காசம், நீரிழிவு பல்வலி தலைவலிக்குச் சிகிச்சை செய்ததே அவள் கண்ட இன்பம். ஒரு ஹக்கீம் அவருக்கு வைத்தியம் பார்த்தான். அவனை இளம்மனைவி வசப்படுத்திக்கொண்டாள். அதே முகச்சாடையாகப் பெண் பிறந்தது. தனக்குப் பெண் பிறந்ததில் கிழவன் பெருமகிழ்ச்சியடைந்து புண்யாவாசனத்திற்குப் பணம் அள்ளிவிட்டான். இருவருக்கும் சண்டை வரும்போது இரகசியத்தை ஏசிக்காட்டுவர்.

ஆண் கொடுமையும் பார்த்தேன். புகழ்பெற்ற மேடைப்புலி ஒருவன்; கிளிபோல மனைவியைத் தள்ளிவைத்தான். மாமனார் பதினையாயிரம் ரூபா செலவிட்டுக் கலியாணம் செய்து பாபரானார். பெண்ணை வெளியே தள்ளிக் கதவை அடைத்துவிட்டான் பாவி. இரக்கமுள்ள கனவான் தந்தியடித்து, தந்தைவந்து அழைத்துச் சென்றார். ஆயுள் முழுதும் அந்தப்பெண் கண்ணீரும் துயருமானாள். அவன் வேசிகளைக் கூடி நோயாளியாகி, முடிவில் ஒரு பெண்ணை மணந்தான். ஒரு மகள் பிறந்தாள், பிறகு நீரிழிவும் மூலமும் நெஞ்சுவலியும் முற்றி இறந்தான். மற்றொருவன் மூன்று பிள்ளை பெற்றபிறகும் இளம்விதவையை வைத்துக்கொண்டு, மனைவியைக் கொடுமை செய்தான். அனுபவிப்பது விதவை, வீட்டு உழைப்பெல்லாம் மனைவி. எப்படியிருக்கிறது கதை? விதவையால் வந்தது வெட்டை; வெட்டை முற்றிக் கட்டையிலேறினான் பாவி.

எங்கும் அறியாமை; சுகவழி தெரியாமை; வீடெல்லாம் கலகக்காடு: அசுத்த நாற்றம்: சாக்கடை நாற்றம். சமயலறைகளைப்பார்த்தால் சாப்பாடு வேண்டியிருக்காது. பெண்கள் சௌகரியமாகப் புடவை துவைத்துக் குளிக்கக்கூட நல்ல இடமில்லை. மண்டிநீரில் எல்லாரும் காக்காய் முழுக்குப் போட்டு, அதையே உலையில் கொதிக்கவிட்டுச் சமைக்கிறார்கள். காற்றோட்டமேயில்லாமல் சிறிய முழைகளில் அடைகிறார்கள். தொத்துநோய்கள் வளர்கின்றன.

நமது சமுதாய வாழ்வைக் கண்டு கண்டு, எண்ணி எண்ணி மனம் நொந்தேன். உலகம் இனிமையாயில்லை. ஜனசமுதாயத்தைவிடத் தனிமையே இனிமையாயிருந்தது. எங்கள்வீடும் அடுத்தவீடும் வக்கில் வீடுகள். உலக விவகாரங்கள் அங்கே காப்பறையடிக்கும். உலகைத் தெருத்திண்ணையில் கண்டேன். என்னைக் காணத் தனியே சென்றேன், உலகை அறிந்தேன்; பிறகு என்னை அறிந்தேன்.

ரு. அறிந்தேன்

51. கனவும் கவலையும்

உலகைப் பலவிதமாகக் கண்ட நான், என்னைக் காண உள்ளே திரும்பினேன். என்னையா? நான் யார்? எப்படி இருக்கிறேன்? எப்படி

யிருக்க வேண்டும்? எங்கே இருக்கிறேன்? எங்கே இருக்க வேண்டும்? என்று சதா சிந்தித்தேன். என்னிடம் எத்தனை குறைகள்! மனிதன் பிறக்கும் போதே சொக்கத் தங்கமாவதில்லை. அவன் சுத்தாத்மத் தங்கமே; அதைப் பல களிம்புகள் மூடிக்கொண்டிருக்கின்றன. வைராக்கியத்தால் உடைத்து, அன்பால் உருக்கி உருக்கித் துருசு நீக்கி, அருளில் புடம் வைத்தால், மனம் மாசற்ற சுத்தானந்தமாகும். வாழ்வு தேங்காய் போன்றது. அதில் நார் மூடிக்கொண்டிருக்கிறது—மனமாசான நார். அதை உரித்தால் ஆணவமான ஓடு மூடிக்கொண்டிருக்கிறது. ஆணவ ஓட்டை உடைத்தால் உள்ளே அருளான இளநீர் உண்டு; ஆத்ம ஞானமான தூய பருப்புண்டு. இந்தத் தேங்காயைத் திருத்த சித்த உறுதியான வாள் வேண்டும். சித்தமோ கனவுகளில் அலைகிறது. நான் கொடிய கனவுலகில் சுழன்று திரிந்தேன். நவரசநாடகக் கனவுகள் எனது மனதையும் உயிரையும் ஆட்டி வைத்தன. கவலைப் புயல் என் அமைதியைக் கெடுத்தது. மனக்காட்டில் பாம்புகள் சீறும், ஆணவப் புலிகள் பாயும்; மதயானைகள் மோதும்; நரிகள் ' கோள்'' என்று ஊளையிடும்; ஆங்கார நாய்கள் குலைக்கும்; பொறாமைப் பேய்கள் மிரட்டும். திடீரென்று காட்டிருள் மூடும்; கடும்புயலில் தவிப்பேன்; திருடர் அடித்து என் செல்வத்தைப் பறிப்பர். நான் கதறுவேன். அபயக்கரம் தோன்றும். நடராஜாவின் ஜோதி வடிவம், ஆகாசத்திற்கும் பூமிக்கும் பரந்து விளங்கும்; நான் "அப்பனே அபயந்தா'' என்று குஞ்சிதபாதத்தைப் பிடித்துக் கொள்வேன். பாதம் என்னைக் கருடன்போல் தூக்கிக்கொண்டு விண்ணில் ஏறும். அங்கிருந்து நாற்புறமும் பறப்பேன். உலகைக் காண்பேன். கீழே விழுவேன். திடுக்கிட்டெழுவேன். சிலநாள் கனவில் "கவலைப் படாதே'' என்று சோதி புருஷன் வருவான்...நான் கவலைதீர இதுவே வழி என்று துறவு பூண்பேன். அதற்கு வேட்டியைப் பறட்டென்று கிழிப்பேன். "அட பைத்தியமே, இதென்னடா'' என்று கிட்ட உறங்குவோர் எழுப்புவர்...நினைவு வரும். எனக்கு மிகவும் பயங்கரமான கனவு பரிட்சைக் கனவுதான். கணக்குப் பரிட்சையில் குழி பறிப்பதாகக் கனவு கண்டதும், திடுக்கிட்டெழுவேன். இரவில் மட்டுமன்று; பகலில் வகுப்பில் என்னை மறப்பேன். ஏதோ சூனியத்தில் மனம் லயிக்கும். ஞானக்கனவுகள் காண்பேன்...ஆசிரியர் "கட்டை மாதிரி உட்கார்ந்திருக்கிறாயா'' என்றொரு பலமான குட்டுப் போடுவார். அப்போதுதான் உணர்ச்சி வரும்; கண் பார்க்கும். இந்தக் கனவு ஜாக்கிரத்தில் ஸுஷுப்தி; இது தாரணைக்கு ஒருபடி என்பதைப் பிற்காலம் அறிந்தேன். பிற்கால வாழ்வையும் கனவில் கண்டேன். தற்கால வாழ்வுதான் கவலைப்படலமாயிருந்தது.

ஒருநாள் கவலை பொறுக்க முடியவில்லை. ஆசிரியர் பிரம்பும், அப்பா வசவும், அண்ணு அறையும், அக்கா கேலியும் கவலையை வளர்த்தன. ஒரு புளியமரத்தடியில் "கவலை நீங்க ஒரு கருணை

யில்லையோ ?" என்று பாடிக் கொண்டிருந்தேன். படார் என்று என் மண்டையில் ஒரு கல் வந்து விழுந்தது. இரத்தம் கசிந்தது; "அடடா புளியங்காய் எறிந்தேன்...உன் மண்டையில் பட்டதே. வா ஆஸ்பத்திரிக்கு" என்று இழுத்தான் எனது நண்பன். நான் கையைத் திமிறிக்கொண்டு வலியை பொறுத்துக் கொண்டு துக்கம் தாங்காமல், மாந்தோப்பை நோக்கி ஓடினேன். நான் வைத்தியசாலைக்குப் போவதில்லை.

52. ஞான குரு

மாந்தோப்பே என் சாந்தி நிகேதனம். அது சுடுகாட்டிற்கு எதிரேயுள்ளது. அதைச் சூழ்ந்து ஏரி; ஏரி வரப்பில் பாலம்; நான் பாலத்தின்மேல் உட்கார்ந்தேன். மண்டை இரத்தம் முகத்தில் வடிகிறது; கண்ணீர் அதைக் கரைத்துக்கொண்டு சொட்டுச் சொட்டாக ஏரி நீரில் விழுகிறது. கண்ணீரில் கரைந்த புண்ணீர்த் துளிகளின் பிரதிபிம்பத்தை நான் பார்க்கிறேன்.

கவலை நீங்கக் கருணையைக் கூவினேன்
விழுந்தது பெருங்கல் வேடிகுண்டு போலே.
உடைந்தது மண்டை, உதிர்ந்தது ரத்தம்.
கனவுக் கண்ணீர் கவலைப்புண்ணீர்
சொட்டும் ஏரியிற் சோக நிழலைக்
காண்கிறேன்; சொரூபம் காணக் காட்டி
அன்பு கூறி ஆறுதல் அளிக்கும்
ஒருவன் இல்லையோ உலகில் !
அபயம் அருளும் அருட்கரம் எங்கே.?

என்று ஏங்கினேன். விம்மி விம்மி அழுதேன். அப்படியே ஏரியில் விழுந்து இறக்கலாம் என்றே நினைத்தேன். என்னையும் வெறுத்தேன், உலகையும் வெறுத்தேன். கடவுள் இருந்தால் அவனை பஜித்த என் மேல் கல் விழுவானேன்? என்றும் சந்தேகித்தேன். மண்டை பிளந்து இறந்திருந்தால், அதோ சுடுகாட்டில் என் உடலை எரிப்பார். உடல் போன பிறகு நான் எங்கே? உடல் நானில்லையே? இந்த உடலில் இப்போது சிந்திப்பது எது? அதுதான் நான்...என்று உள்ளாராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தபோது, இருவர் தோப்பில் மாம்பழம் சாப்பிட்டுக் கைகழுவ வந்தனர்; ஒருவர் என் பின்னின்று, "என்னைப் பார்" என்றார். பார்த்தேன்...உடனே ஒரு இன்ப விறுவிறுப்பு. கவலை பறந்தது: அமைதி பிறந்தது. "சாமி வணக்கம்..." என்றேன் அவர் "குழந்தே, உம்முகம் ஏன் கண்ணீரும் இரத்தமுமாயிருக்கிறது...அடடா யார் கல் எறிந்தது? இதோ வா கழுவி விடுகிறேன்..," என்று பரிவு செய்தார்.

நான் சாதுவாக அவர் நடத்தியபடி சென்றேன். அவர் எனது புண்ணைக் கழுவி, முகத்தைக் கழுவி கரிசலாங்கண்ணி இலையைக் கசக்கிச் சாறுபிழிந்து, புண்ணில் வைத்துத் தமது துண்டைக் கிழித்துக் காயம் கட்டினார். அன்பையே உலகில் கண்டிராத எனக்கு அந்த அன்பு தெய்விகமாகப்பட்டது. தெய்வமே எனது முறையைக் கேட்டுக் குறை தீர்க்க வந்ததாக பயபக்தியுடன் எண்ணினேன். அவர் எனக்கு ஒரு பெரிய மாம்பழம் தந்தார்; உண்டேன்; புதிய மனிதரானேன். பிறகு அங்கே யிருந்த ஐயனார் கோயிலில் அமர்ந்து பேசினோம்.

ஞானி :—குழந்தாய் ஏன் அழுகிறாய்...? உனக்கு என்ன குறை ?

நான் :—மனக்குறைதான் சாமி. ஏதாவது கனவு, கவலை, துக்கம் என்னை வாட்டுகிறது...

ஞானி :—கவலைப்படாதே; நான் இருக்கிறேன். கவலையே வராமல் மருந்து தருகிறேன்...

நான் :—மனம் எப்போதும் அலைகிறது; பயங்கரமான கனவுகள் இரவில் வருகின்றன. பகலில் பள்ளிக்கூடத்திலும் அடி; வீட்டிலும் வசவு. நான் ஏன் பிறந்தேன்? இப்படியே தற்கொலையாகி அந்தச் சுடுகாட்டுச் சாம்பலாகி, ஒரு செடிக்கு உரமானாலும் நல்லது. சாமி, கவலை தீருமா ?

ஞானி :—அப்பனே, ஏரியைப் பார். அலை வீசுகிறது; அதில் சூரியபிம்பம் அலைகிறது பார்...எதனால் ?

நான் :—தண்ணீர் அலைவதால் சூரியபிம்பமும் அலைகிறது.

ஞானி :—ஆகாசத்தைப் பார்; எவ்வளவு அற்புத சிருஷ்டி! அதில் சூரியனைப் பார்; அது இங்குமங்கும் அலைகிறதா ?

நான் :—இல்லை. சாமி தெரிந்தது; நான் ஆகாச சூரியன்; உலகம் இந்த ஏரி. அதில் சித்தத்திரைகள் வீசுகின்றன. எனது நிழலான மனம் அதில் அலைகிறது.

ஞானி :—சபாஷ்! அதுதான் ஞானம்! பார்; ஜலபிம்பம் அலைந்தால் ஆகாச சூரியனுக்கு அலையுண்டா? பெரும் புயல் காற்றடித்தாலும் அதை அணைக்க முடியுமா? உன் சுத்தாக்ம சூரியனை எந்தக் கவலை அணைக்க முடியும் ?

நான்:—நான் சுத்தாத்ம சூரியனா? எனக்குக் கவலை கிடையாதா? துன்பம் இல்லையா? நான் ஆனந்தனா ?

ஞானி :—குழந்தாய் நீ சுத்தன்; ஆனந்தன், சுத்தானந்தன்... பார் ஆகாசத்தை; அதுதான் சுத்தப்பிரம்மாகாரம்; கோடி கோடி நட்சத்திரங்கள் அதில் சுழல்கின்றன; அவற்றுள் இந்த உலகம் ஒரு தூசி போலும். அதில் நாம் எந்தமட்டு ?

நான் :—அறிந்தேன் சாமி. அகண்டாகாசத்தில் ஒரு தூசி இந்த உலகம். எத்தனையோ அண்டங்களை ஆளும் இறைவன் உள்ளான். அவன் எங்கும் யாதுமாயிருக்கிறான். அவனுக்கு ஒப்புயர்வில்லை...நான் எப்போதும் அவனைத்தான் நினைக்கிறேன். அவனைச் சுத்தனாகவும் அவன் அருளையே சக்தியாகவும் தியானித்து வருகிறேன். சூரியவானே தியானப் பொருள். ஆகாசம் அரு, சூரியன் உரு, தாங்கள் குரு... ஓம் சுத்தசக்தி.

ஞானி :—இதுதான் தத்துவம் குழந்தாய். கடவுளைப் பரம சுத்த சுயம்பிரகாசமாக தியானிப்பதுதான் காயத்திரியின் பொருள். வேத ரிஷிகள் அப்படியே தியானித்தனர். சுத்தசக்தி மந்திரம் வேத சாரமாகும். நீ அந்த மந்திர சித்தியால் சுத்தானந்தனாக விளங்கு. இனிக் கவலையில்லை. காற்றைப்போல் உலாவு. பார் அதோ ருத்ரபூமி. அங்கேதான் உடலெல்லாம் வரவேண்டும்.

இப்படிப் பேசிக்கொண்டே சுடுகாட்டிற்குப் போனோம். வழியில் ஒரு பாம்புப் புற்று புற்றுமேல் தலையை நீட்டிய பாம்பு எங்கள் சத்தம் கேட்டதும் உள்ளே போய் விட்டது. அதை நான் காட்டினேன்.

நான் :—சாமி கரையான் புற்றில் பாம்பு புகுந்து வசிக்கிறது. புற்றைவிட்டு வெளியே வந்தால் அதற்குக் கல்லெறியும் சாவுமேகதி...

ஞானி ;—அதுபோலத்தானப்பா மனமும்; மனம் உள்ளத்தில் அடங்கி ஆத்மாவுடன் லயித்து விட்டால் கவலையில்லை, கட்டில்லை, கனவில்லை. மனம் ஓட்டைப்புலன்கள் வழியே வெளிக்கிளம்பிச் சேட்டைபண்ணினால், காமம், குரோதம், அகம்பாவம் எல்லாம் அதைச் சுற்றும்; கர்மமாகிய கல்லெறி தவறாது.

நான் :—ஆஹா சரியான அறிவு; மனப்பாம்பு கிளம்பாது அடக்க உபாயம் வேண்டுமே.

ஞானி :—இதோ நினையப்பா; . ஆணவம் தணியும். பார் இது சுடுகாடு. அதோ அங்கே இந்த ஊர் அரசர்களின் சமாதுகள் உள்ளன. பாராண்டவர் மண்ணானார். இங்கே எத்தனையோ செல்வர், அழகர், புலவர் உடம்பெல்லாம் சாம்பலாகக் குவிந்து கிடக்கிறது. இதோ இந்த மண்டை - ஓடு. இதற்குள் ஒரு மூளை யிருந்தது. அஃது எத்தனை எண்ணங்களை எண்ணி யிருக்கும்? அந்த மூளை எங்கே? ஓடுதான் மிச்சம்,

நான் :—சாமி என் உடம்பும் ஒருநாள் இப்படித்தானே சாம்பலாகும். ஆதலால் நான் இந்த அழியும் உடம்பில்லையே.

ஞானி :—சொன்னேனே. நீ சுத்தானந்தன், சுத்தானந்தன். ஒரு காரியத்திற்காக இந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டிருக்

கிருய். காரியம் ஆனதும் உடல் பாம்புச்சட்டைப் போல் கழலும். இந்தச் சட்டையில் அழுக்குப் படியாமல் சுத்தமாயிரு. மனதில் அழுக்குப் படியாமல் சுதந்தரமாயிரு. ஆத்மா சித்தத்துடன் அலைந்து விகாரங்களைக் கிளப்பாமல் சமத்துவமாயிரு.

நான் :—சுத்தம், சுதந்தரம், சமத்துவம்—மூன்றும் சுத்தான்மாவின் உடல் உயிர் அந்தக்கரணம் போலும். இந்த நிலை அடையச் சாதனம் என்ன ?

ஞானி :—தம்பீ, நாங்கள் சோழபுரம் திருநாளுக்குச் செல்கிறோம். அங்கே வா, பாடசாலையில் இரு. இரவு ஏழரை மணிக்குக் காணலாம். பிறகு எல்லாம் சொல்வோம்

நான் விடை பெற்றுக் கொண்டு வீடு சென்றேன். ஏன் இவ்வளவு நாழிகை என்று கடுகடுத்தனர் வீட்டார். நான் பதில் சொல்லாமல் சாப்பிட்டேன். "சோழபுரம் திருநாளுக்குப் போகிறேன்" என்று அம்மாவிடம் சொல்லிக் கிளம்பினேன். வேறெந்த நினைப்பும் இல்லை.

53. தியான சாதனம்

சோழபுரம் பாடசாலை; அத்யயனம் நடக்கிறது. நான் திண்ணையில் ஞானியை ஆவலாக எதிர்பார்த்தேன். அவர் அன்புடன் வந்தார். "கேள் வேதவாக்கை : சுத்தான்ம சொரூபத்தை அறிவதே அறிவு. அறிந்தவனே மேலோன். இதய குகையில் அது சைதன்ய ஜோதியாக உள்ளது..." என்று உபதேசித்தார். பிறகு மௌனம்; இருவரும் உள்ளாழ்ந்து வேத நாதத்தைப் பருகினோம். மணியடித்தது ; "போ உள்ளே சாப்பிட்டு வா" என்றார் ஞானி. அவர் உள்ளே போக முடியாது. பரதேசிகளுக்கு உருட்டிப் போடும் போதே அவரும் சாப்பிட முடியும். என் ஞானப்பசியைத் தீர்த்த மகானைவிட்டு நான் சாப்பிடமாட்டேன். சத்தரம் அகுதார் எனக்குத் தெரிந்த நாராயணையர். அவரிடம் மெதுவாக "ஒரு சித்த புருஷர் வந்திருக்கிறார். உள்ளே வந்து சாப்பிடமாட்டார் : எனக்கும் அவருக்கும் சேர்த்து அன்னம் தாருங்கள், புண்ணியமுண்டு" என்று மன்றாடினேன். அவர் ஒரு சமையற்காரரிடம் உத்தரவிட்டார். நானே ஒரு இலையில் குழம்பும் சாதம், ஒன்றில் மோரும் சாதம். கத்திரிக்காய்க்கறி ஊறுகாய் எல்லாம் எடுத்துக் கொண்டு வந்தேன். இருவரும் குளத்தங் கரைக்குச் சென்றோம். தனியிடத்தில் உண்டோம். பிறகு கோபுரத்தில் ஏறினோம். அப்போதுதான் கும்பாபிஷேகம் நடந்திருந்தது. மேலே ஏறப் பனைமரப்படிகள் அமைத்திருந்தார்கள். அங்கே யாரும் இல்லை. தவத்திற்குச் சரியான இடம். பலகையில் மூவரும் அமர்ந்தோம். கூட இருந்தவர் ஒன்றும் பேசவில்லை, நல்ல பக்தர்.

ஞானி எனது கையைப் பிடித்தார்; "கண்ணை மூடிக்கொள்; இதயத் துடிப்பையே எண்ணு; ஓம் சுத்தசக்தி என்று நினை. மற்ற நினைப்பை விலக்கியிரு..." என்றார். மின்சார விறுவிறுப்பு! ஒருமணி நேரம் அமைதி! பிறகு "குழந்தாய், விட்ட குறை ஒட்டிக்கொண்டது. உள்ளே யோகசக்தி உள்ளது. அதைத் தூண்டியாயிற்று. பராசக்தி அருள் செய்தாள். முன் பிறவியில் நீ இமயமலையில் யோகம் செய்தாய். மறுபடி அங்கே செல்வாய். அதற்குள் நீ செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. கவலைப்படாதே. இந்த உலகம் ஆசை பொறாமைக்காடு உன்னை அது வருத்தும்; அஞ்சாதே. சோதனைகள் வரும்; கலங்காதே. வருவது நலத்திற்கே. நாரும் செங்கற்பொடியும் போட்டுத் தேய்த்தால் பற்றுப்போகும்; சில பாத்திரங்கள் புளியில் ஊறப்போட்டுத் தேய்த்தால் வெளுக்கும். சிலவற்றைப் புடம் வைத்தால் பளபளக்கும். அந்தக் கரணத்தில் ஜன்மவாசனை உள்ளது; கன்மக்களிம்புள்ளது. திருவருள் தாய் அவற்றை விலக்குவாள். எது வந்தாலும் மனிதரிடம் முறையிடாதே. ஜபதபத்தால், பாமாலையால், இறைவனிடமே முறையிடு. மனிதனை மனிதன் அறியமாட்டான். உலகில் கோள், பொய், பொறாமை சுயநலங்களின் அட்டூழியம் அதிகம். அசுரத் தன்மை உலகை ஆளுகிறது. தெய்வத் திருவருள் உன்னை ஆளட்டும்.

நான்:—சுவாமி, இதுதான் என் கொள்கை. சுத்தசக்தியிடம் என்னை அடைக்கலம் வைத்து விட்டேன். என் ஆர்வமெல்லாம் யோக சித்தியே. பள்ளிப் படிப்பு எனக்கு வேண்டாம். உள்ளப் படிப்பே போதும்.

ஞானி:—படி படி; அதனால் பலனுண்டு. காலத்திற்கேற்ற படிப்பிலும் நீ முன்னேறுவாய். ஆனால் உனக்கே உரிய புலமையைத் தாண்டி அருட்கவியாக விளங்கு. அப்பர் நம்மாழ்வார் போன்ற கவி யோகியாக விளங்கு.

நான்:—சுவாமி, திருவருள் இச்சை விளங்கட்டும். எப்போதும் சுத்தசைதன்யத்திலேயே லயித்திருக்க வழி சொல்லுங்கள். அந்தக் கரணம் சுத்தமாக வேண்டும். மனம் அலையாமல் அடங்க வேண்டும்; சித்தம் சிவமயமாக வேண்டும். அகங்காரம் அடியோடு இறைவன் அருட்கனலில் வெந்து திருநீறாகவேண்டும்.

ஞானி:—அதற்குத்தான் யோகம்; இராசயோகம் பழகு முதலில்; பிறகு சுத்தயோகம் வரும்.

இப்போது சுவாமி புறப்பட்டது. மேளதாளம் சதுர் பஜனை எல்லாம் நாத அலைகளை அள்ளி வீசின. ஞானி "அங்கே பாராதே இங்கே பார்" என்று என் உள்ளத்தில் தட்டினார்.

நான்:—உண்மை; நெஞ்சமே கோயில்; அதிலிருக்கும் சாமி வெளிப்பட்டால் ஓங்கார கீதம் பரநாதப்பறை சிற்சபை நடனம் எல்லாம் உணரலாம்.

ஞானி திடீரென்று எழுந்தார், "தம்பி, நீ பாடசாலையில் போய் உணர்வுடன் படுத்துக் காலை நான்கு மணிக்கு விழித்திரு, வருவோம்" என்று மேற்கே சென்றார். நான் சுவாமி பார்த்துப் பாடசாலையில் இளைப்பாறினேன். குண்டலசக்தி விறுவிறுப்பாகச் சுழன்று தியானத்தைத் தீவிரப்படுத்தியது.

51. இராஜ யோகம்

மறுநாள் நான்கு மணிக்கே ஞானி வந்தார். மூவரும் மேற்கே தாமரைக்குளத்திற்குச் சென்று நீராடி, தியானித்தோம். ஞானி ராஜ யோகம் உபதேசித்தார். நான் பல கேள்விகள் கேட்டேன். சரியான பதில் சொன்னார். சில யோக ரகசியங்களை நூலில் எழுத முடியாது. அனுபவித்தாலேதான் அவை விளங்கும். இங்கே என் மனச்சாட்சியின் உபதேசத்தைச் சொல்லுகிறேன்.

தனக்குத்தானே ராஜா ஆதல் ராஜயோகம்; உள்ளே ஆத்ம ஸ்வராஜ்யத்தைக்காணவே யோகம்; அதாவது நீ யாருக்கும் அடிமைப்படாதே; தலைநிமிர்ந்து நட. கடவுளையே உள்ளக் கோயிலில் தியானத்தால் வணங்கு. வேறு வணக்கம் தேவையில்லை. யாருக்கும் தீமை செய்யாதே. பிறர் தீமைசெய்தால் திருவருளுக்கே முறையிடு. நீ எதிர் செய்யாதே, சொல்லாதே. எவர் பொருளையும் திருடாதே, ஆசையை அடக்கு. இல்லாததை மற. இருப்பதை உக. மனச்சாட்சிக்கு எதிர் செய்யாதே. அதுதான் மெய்வழி. மனச்சாட்சிக்கு விரோதமே பொய்வழி. பிறர் புண்படும் உண்மையைக்கூடப் பேசாதே. மௌனமாயிரு. நாக்கை அடக்கு. பேச்சைவிட மௌனம் பெரிது. காம நினைவிற்கு இடந்தராதே. பெண்களை மலர்போலப் பார். பராசக்தி எனக் கும்பிடு. உடலைப் பாராதே. அணியைப் பாராதே. பஞ்சபூதக் கூண்டிலிருக்கும் பரமாத்மக் கிளியைப் பார். உன்னிடம் எதுவோ அதுவே அனைவரிடமும். பிறரிடம் எதையும் எதிர்பாராதே. பிச்சை வாங்காதே. உழைத்துப் பிழை. உள்ளும் புறமும் சுத்தமாயிரு, ஆனந்தமாயிரு. எதற்கும் வருந்தாதே. நாவையும் குறியையும்அடக்கு; பசிக்குப் புசி; தூய கனி கடலை பால் தேன் உண். நீயாகப் பாபம் செய்யாதே. கவலையை வரவழைத்துக்கொள்ளாதே. பந்தவினைகளில் சிக்காதே. தாமாக வரும் இடர்களை உன் ஆத்மசோதனையென்றெண்ணி, பிரார்த்தனையாலும் ஜபதபத்தாலும் வெல். தளராதே; தயங்காதே. மகிழ்ச்சிகொள்; கடமையை உரிமையாகச்செய். அருள்வாக்குகளையே படி; கலைபல கல். கற்றதை எளிய நடையில் உலகிற்குச் சொல்லி, அறிவைப் பரப்பு. ஞானி சொன்னவை: "இடுப்பும் முதுகும் நிமிர்ந்து,

எளிதான ஆசனத்தில் உட்காரு. பத்மம், சித்தம், கோமுகி, சிம்மம், சுகம் சவம் ஆகியவற்றில் ஓர் ஆசனம் போதும். உடற் பயிற்சிக்காக உனக்குத் தெரிந்த சிரம், சர்வாங்கம், ஹலம், மச்சம், பத்தபத்மம் நாவம் ஆகிய ஆசனங்களைச் செய்யலாம். பிராணுயாமம் செய்யும்போது பத்மாஸனம் நல்லது. நீ செய்யும் 8:32:16 மாத்திரை அளவு போதும். மூச்சு அளவுப்படி செல்லப் பழகு. நாளடைவில் கேவலகும்பகம் சித்திக்கும். பிறகு மூக்கைப் பிடிக்கத் தேவையில்லை. யம நியம ஆசன ப்ராணுயாமங்கள் நான்கும் புறச்சாதனங்களே. இனி அகச் சாதனங்கள் நான்குண்டு: மனதை புலன்கள் வழிச் செல்லாது உள் முகப்படுத்தலே பிரத்யாகாரம்; உட்குவிதல். மனதை உள்ளத்தில் நன்ருக நிலைநாட்டலே தாரணை. இப்படி மனம் அடங்கி உனது சுத்தானமசொருபத்தை நினைத்தலே தியானம். அதில் லயித்தலே சமாதி. நெற்றிக்கு நடுவே தியானத்தை ஊன்றி, ஓங்காரத்தின் வழியே சிதாகாசத்திற்கு ஏறி, அங்கே பரமாத்ம தத்துவத்தைக் கூடலே ஐக்கிய சமாதி. அந்த ஐக்கியத்தினுல் நான் என்பது அற்று, எல்லாம் சுத்தசக்தி யிறைவன் என்றுணரலாம். இதுதான் சுத்த யோக சித்தி. இது படிப்படியாக விளக்கமாகும், வைராக்கியமாயிரு.''

இதுதான் உபதேசச் சுருக்கம். இதுதான் என் வாழ்விற்கு அந்த ஞானியளித்த மணிவாசகம். இது என் இரத்தத்தில் ஊறிய கருத்து. அதை அவர் செயலாகத் தூண்டினுர். நான்கு நாட்கள் அவர் எனக்குச் சாதனம் பயிற்றி, தியான நிலையைச் சகசமாக்கினுர். இதய குகையில் என்னை இருத்தி அவர் "இன்னொருதடவை சந்திப்போம்'' என்று வடக்கே சென்ருர். மீண்டும் அவரைச் சந்தித்ததை உரிய இடத்திற் சொல்லுகிறேன்.

உலகில் இப்படி மிகச் சில சித்தபுருஷர் இருக்கிருர்கள். நான் இருவரையே பார்த்திருக்கிறேன். பத்திரிகை அறிந்த பெரியார் பலர். அவர்களை அணுகக்கூட முடியாது. சுற்றிலும் உள்ள அடியார் கோட்டையைத் தாண்டிப்போகவும் முடியாது. சென்ருலும் தொண்டு செய்வதே கண்ட பலன். சாதன ரகசியங்களைச் சொல்லவேமாட்டார்கள். அல்லது அவர்களைப்பற்றியே பேசச் சொல்வார்கள். பணம் வசூலிக்கச்சொல்லுவார்கள்.

ஊர் பெயர் தெரியாத இந்த ஞானசித்தர் மகா தேஜஸ்வி; அவர் உடல் மகா குண்டலியின் ஊற்று. அவர் ஓரிடத்தில் நிலைப்பதில்லை. என் பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அவர் அருள் கிடைத்தது. அவர் எனக்குச் சொன்னதற்குமேல் யாரும் சொன்னதில்லை. அவர் அன்பைப்போல் யாங்கும் கண்டதில்லை. அவர் அநேகமாக சேஷாத்திரி சுவாமிகள்போல் இருப்பார். அவருக்கு ரசவாதம் தெரியும். அதற்குரிய சுத்தச்சூரி இலை இருக்குமிடம் அவருக்கே தெரியும். ஒரு மலை மேல் வாலை வைத்துத் தங்கம்செய்து, விற்று, அதைக்கொண்டு தாது

செலவுகளைச்செய்து கவலையற்றிருப்பார். காற்றுப்போல் சுதந்தரர். ஸஹஜஙிஷ்டர். பக்குவிகளைத் தேடிவந்து பக்குவத்திற் கேற்றபடி பேசிச் செல்வார். பாரதசக்தி சாதனகாண்டம் சிவகிரிப்படலத்தை இவருக்கு அர்ப்பணித்தேன். சுத்த பரமாத்மனுக்கே என் வாழ்க்கை நித்திய சரணுகதியானது. எனது உள்ளுணர்வைத் தூண்டிய பெரியார் பலர். அவர்களை வணங்குகிறேன்,

55. பச்சைப் பெண்ணே

எங்கள் ஊரில் ஒரு பைத்தியம்; கனுந்தம் அத்யயனம் செய்த வேங்கடராமசாஸ்திரிகள்; உலகைக்கண்டு இடி இடியென்று சிரிப்பார். "பச்சைப்பெண்ணே ஏலோ, பவளப்பெண்ணே ஏலேலோ, படிகப்பெண்ணே ஏலேலோ" என்று கூவிச்செல்வார், அந்தக்காலம் இரட்டைத்தெருவில் வேத பாடசாலை இருந்தது. அங்கேதான் அவர் படுப்பார். நானும் அங்கே செல்வேன். "பைத்தியம், பைத்தியத்திடம் போகுது டோய்" என்று என்னைத் தோழர் கேலி செய்வர். உள்ளே வேத பாராயணம் நடக்கும். அவர் எனக்கு வேதப்பொருளை விளக்குவார், ஒருநாள் இருவரும் தாமரைக்குளத்திற்குப் போனேம், அங்கேதான் அவர் பச்சைப்பெண் ரகசியம் சொன்னுர். சுத்த பராசக்தி உலகை ஆளுகிருள். அவள் பச்சைப்பெண்ணுன பார்வதி அல்லது காளியாகவும், பவளப்பெண்ணுன திருமகளாகவும், படிகப்பெண்ணுன கலைமகளாகவும் இருந்து, அன்பரை ஏற்று அருள்புரிகிருள். இதுதான் அவர் பாட்டுக்குப் பொருள். அவர் எனக்கு மஹாகுண்டலி சக்தி மந்திரம் உபதேசித்தார். "ஓம் ஹ்ரீம் ஓம் சுத்தசக்தி ஓம்." என்ற மந்திரத்தையே நான் பிராணுயாமத்திற்கு மாத்திரையாக வைத்துக் கொண்டேன்.

ஐஸா கர்ணுபாய்

நான் தாமரைக்குளத்திலிருந்து வரும்போது, தர்மர்கோயில் தோப்பில் ஒரு மஸ்தான் சாகெபு உலாவித் திரிவார். மஸ்தான் பாடல்களை இனிமையாகப் பாடுவார். புட்கள் அவர் கையில் வந்து உட்காரும். பட்டாணிபோட்டுத் தடவிக்கொடுப்பார். ஒருநாள் அவர் கையில் ஒருகிளி உட்கார்ந்தது. அதற்கு "ராம் ரஹீம்" என்று சொல்லப் பயிற்றினுர். அவர் சொன்னபடி அது சொன்னது. நான் அதிசயமாகப் பார்த்தேன். "பாய் ஐஸாகர்ணு...பார் ஆண்டவன் பெயரை இந்தக் கிளி சுத்தமாய்ச் சொல்லுது...நீயும் சொல் பச்சா...சொல் அல்லா, அல்லாஹு அக்பர். பிஸ்மில்லா..." என்று பறவையைக் கொண்டு அரிய உபதேசம் செய்தார். அதையே கவிக்கனவில் புள்ளுருக்கொண்டு வந்தேன் என்ற பாட்டாகப் பாடினேன். பறவை போல் லாகவமாக நடந்து கட்டின்றி வாழ்ந்து, திருநாமம் பாடி, இன்

புற எனக்கு விருப்பம். இந்த சாகெபுக்கு நான் வீட்டுப் பணிகாரங் களைக் கொண்டு கொடுப்பேன். இரவில் ஒரு சமாதில் அமர்ந்து, அவர் பாடுவார் கேட்பேன்.

56 அறிந்தவனுக்கு அச்சமில்லை

இப்போது சுத்தானந்த சமாஜம் இருக்குமிடம், முன்பு பரதேசி மடமாயிருந்தது. அங்கே நல்ல கிணறுண்டு, அதில் குளித்து அரளிப் பூப்பறித்து வந்து நான் சிவபூஜை செய்துவந்தேன். அந்த மடத்தில் நல்ல ஞானிகளும் வருவதுண்டு. அவர்கள் அன்னக்காவடி எடுத் துண்டு, ஞான நூல்களைப் படித்தார்கள். தாயுமானுர் கைவல்யம் மெய்கண்டார் ஆகியவை அங்கே முழங்கின. ஒருசமயம் நான் குளித்தபோது, ஒரு பெரியார் என்னையே பார்த்தார். அவர் தியான சித்தர் என்பதை அறிந்தேன். அனுட்டானங்களை முடித்து, நான் அவரை வணங்கினேன், 'அறிந்தவனுக்கு அச்சமில்லை" என்ருர். வியந்தேன். நான் பேயைவிட அஞ்சியது கணக்குப் பரிட்சையை.

நான்: *சாமி! அறிந்தவன்? எதை அறிந்தவன்? தன்னை அறிந் தவன். என்னை நான் அறிந்தேன். என்ருலும் கணக்கு வாத்தியா ருக்குப் பதிற்சொல்ல அறியாமல் அஞ்சுகிறேன். இன்று பரிட்சை.*

அவர்: *அதனுல் என்னடா?...ஏன் அஞ்சுகிருய்? ஆனந்தமா யிரப்பா...*

நான்: *பரிட்சையில் குழி பறித்தால் தலையைத் தொங்கப்போட வேண்டுமே. ஆனந்தம் எப்படி வரும்?*

அவர்: டே உன்னைப் பரிட்சை செய்துகொள். நீ வந்த காரியம் என்ன? செய்யும் காரியமென்ன? உன் ஞானத்தை இதிலெல்லாம் பறிகொடுக்காதே?

இந்த உபதேசம் தைரியமளித்தது. வகுப்பில் மக்காயிருந்த நான் பரிட்சைக் காகிதத்தில் ஐந்திற்கிரண்டு பழுதில்லாமல் எழுதிவிட் டேன். ஆசிரியரே வியந்தார். மறுநாள், மாலை சாமியாரைப் பார்க்க வந்தேன். அவர் புளியமரத்தடியில் தியானித்தார். நானும் பக்கத் தில் அமர்ந்து கண்ணை மூடினேன். யோகக் காந்தம் விறுவிறுத்தது. அவர் சரியான சித்தர் என்பதை அறிந்தேன். இரவு எட்டு மணிக்கு அவர் என்னை முனியாண்டி கோயில் அரசமரத்திற்கு அழைத்துச் சென்ருர். "நான் இங்கே ஐந்துநாள் இருப்பேன். உனக்குப் பக்கு வம் உள்ளது. இந்த மரத்தடியில் தியானிப்போம்." என்ருர்.

"சாமி, இங்கே முனியாண்டி ஓட்டம் உண்டே" என்றேன். 'அறிந்தவருக்கு அச்சமில்லை என்றேனே. முனி என்ருல் இந்த உலக மாயத்தை முனிந்து துறத்தல். ஆண்டி என்ருல் தன்னை வைராக்கி

யத்தான் அடக்கியாண்டவன். நானே முனியாண்டி...நீயும் முனியாண்டிதான்...வா'' என்றார். ஐந்துநாட்கள் அவருடன் தியானித்தேன். ஆறும்நாள் அவர் புளியமரத்தடியில் சமாதியில் விழுந்தார். அவர் இறந்துபோனதாகப் பலர் தீர்மானித்தார்கள். இரவு பதினொரு மணிவரையில் அங்கே கூட்டம். நானும் பனிரண்டு வரையில் இருந்து சென்றேன். மறுநாட் காலை அவர் இடைக்காட்டூரைப் பார்க்கச் சென்றார். அவர் என் அச்சத்தைப் போக்கினார். நான் தியானித்த இடத்தில் இன்று சுத்தானந்த சமாஜம் உள்ளது.

57. சங்கராசாரியார்

யானை குதிரை ஒட்டகை பல்லக்கு பரிவாரங்களுடன் வந்தார் சிங்கேரி சங்கரர் ஸ்ரீ நரசிம்ம பாரதிகள். அவர் வருமுன்பே ஸ்ரீமுகம் கொண்டு ஒரு சாஸ்திரிகள் சிவன் கோயிலில் சங்கரவிஜயம் படித்தார். ஆசாரியரிடம் பக்தி பூண்டேன். ஊர்வலம் நடந்தது. பல்லக்குடன்கூட ஜபம் செய்துகொண்டே சென்றேன். அவர் திருநோக்கம் அடிக்கடி என்மேல் விழுந்தது. பிரமஞான சங்கத்தில் சுவாமிகள் இறங்கிப் பூஜை நடத்தினார். நான் அங்கேயே நாள்முழுதும் இருந்தேன், வேம்பத்தூர் பிச்சுவையரும் இருந்தார். அவர் சிலேடைப்புலி.நாங்கள் சாப்பிடும்போதும், அரட்டையடிக்கும்போதும், அவர் வெண்பாக்கள் பாடினார், ஒருதரம் செட்டி சத்திரத்தில் சமாராதனை நடந்தது. ஆசாரியாரின் ஸர்வாதிகாரியே பந்தி விசாரணை செய்தார். பிச்சு ஐயர் என் அருகே அமர்ந்தார். அவருக்குத் தாகம். பாயஸம் வந்தது. சர்வாதிகாரி, "பாயஸம் எப்படி?'' என்று கேட்டார். ஐயர் ''எல்லாம் சோருசோராயிருக்கு நீரு கேட்காததுதான் பாக்கி'' என்றார். அதிகாரி திகைத்தார். ''இது மிந்திரிப்பருப்புப் பாயசம் இதில் சோறு ஏது'' என்றார், நான் "அண்ணா அவருக்குத் தாகம்; நீரு கொட்றி'' என்று கன்னடத்திற் சொன்னேன். தண்ணீர் வந்ததும் ஐயர் ஒரு வெண்பா முழக்கி, பாயசம் ஜோர் ஜோராயிருக்கிறது. எல்லாம் வெகு ஜோர்! தண்ணீர் கேட்காததுதான் பாக்கி'' என்ற பொருளைச் சொன்னதும், எல்லாரும், ''சபாஷ் சிலேடைப்புலி'' என்றனர்! அன்று மாலை சர்வாதிகாரி ஐயரை ஆசாரியாருக்கு அறிமுகம் செய்தபோது, நானும் பக்கத்தில் இருந்தேன். ஆசாரியர் என்னைப் புன்னகையுடன் பார்த்தார். ஐயர் "இவன் பாலகவி'' என்று காட்டினார். ஐயர் ஆசாரியார்மேல் நான்கு அரிய வெண்பாக்கள் பாடினார். மறுநாள்முதல் நான் அதிகாலையிலேயே தும்பைப் பூப் பறித்து மாலை கோத்து, ஸர்வாதிகாரிமூலம் ஆசாரியாருக்கு அனுப்பினேன். ஆசாரியர் தீர்த்தம் தரும்போது ''இந்தப் பையனே தும்பை மாலை தருகிறான்'' என்றார் சர்வாதிகாரி. 'பாலகவி பாரதி'' என்றார் ஆசாரியார். ஆசாரியார் பூஜையின்போது சிலர் பாடுவதுண்டு. நானும் அவர்களுடன் சேர்ந்துகொள்வேன். மாலை நான்குமுதல் ஐந்தரைமட்

டும் அவர் வேதாந்தப் பிரசங்கம் செய்தார். அவர் முன்னால் அமர்ந்து பக்தியுடன் கேட்டேன். எல்லாம் எனக்கு உபதேசித்ததுபோல் இருந்தது. தத்வமஸி என்ற மகா வாக்கியத்தின் பொருள் எனக்குத் தெளிவானது. அது நீ ஆகிறாய். சீவன் சிவமாகிறது. அது சுத்த பரமாத்மா. நீ சுத்தாத்மா. இரண்டிற்கும் இடையே மனமாயம் உள்ளது. அதை நானில்லை என்று நீக்கினால், உனக்கும் இறைவனுக்கும் உள்ளுறவும், தியானத்தால் உட்கலப்பும், சமாதியால் உள்ளொருமையும் உண்டாகும். பருத்தி ஒன்று; நூல் ஒன்று. நெய்தால் புடவை வேட்டி துண்டு துப்பட்டி என்று பல தினுசுகளாகக் காட்சியளிக்கிறது. ஊடும்பாவும் ஒரே நூலே. அதுபோலவே பரப்பிரம்மம் ஒன்று. அதுவே எல்லாமும். தோற்றவிகாரத்தால் அது பலவாகக் காண்கிறது. ஆத்ம திருஷ்டியுண்டானால் அது எதுவோ, அதுவே நீ நான் உலகம் உயிர் பயிர் எல்லாம். இந்தச் சுத்த சமரச பாவனை வந்தால், உலகில் அன்பும் அமைதியும் ஒற்றுமையும் ஆத்மசாந்தியும் உண்டாகும்.

இந்த உபதேசம் என் உள்ளத்தில் பதிந்தது. காயத்திரி மந்திரத்தை அவர் எனக்கு அழகாக விளக்கினார். நரசிம்ம பாரதியார் வேதவித்து, தேஜஸ்வி, பரமபக்தர், ஞானி. அவருக்குப்பின் வந்த ஆசாரியாரையும் சோழபுரத்தில் பார்த்திருக்கிறேன். கம்பீரமான துறவி, ரத்னகாந்திமான், அனுஷ்டாதா.

நான் பிற்காலம் தரிசித்த சங்கராசாரியார் கும்பகோணம் காமகோடி பீடாதிபதி. முதலில் அவரைத் திருப்பெருந்துறையில் பார்த்தேன். பிரம்மதேஜஸே கால்கொண்டு நடந்ததுபோலிருந்தது. அவர் நடந்துவந்த வழிநெடுக வேத பாராயணமே. அவர் அங்கே வியாச பூஜை செய்தார். பிறகு சிவகங்கைக்கு வந்தார். நானும் எனது முத்தண்ணாவும் சென்று கண்டோம். நான் அவர்மேல் இரண்டு விருத்தங்கள் பாடி வணங்கினேன். அவர் ஆரியம் தமிழ் தெலுங்கு கன்னடம் எல்லாம் பேசினார். பேச்செல்லாம் ஞானமே, அனுபவ ஞானம். தேசநடப்பெல்லாம் தினந்தினம் அவர் கவனிக்கிறார். விவேகானந்தர் போலப்பேசுகிறார். நான் அக்காலம் ஹரிஜனசேவையில் ஈடுபட்டிருந்தேன். இந்துமதச் சீர்திருத்தத்தைப்பற்றியே பேசினேன். ஹிந்து தர்மப் பிரசாரகர்களைத் தயாரித்து ஊர் ஊராக அனுப்பவேண்டும் என்றேன். அவர் காலமாறுதல்களையும் தர்மாசரணத்தையும் சமத்துவத்தை எப்படி அனுஷ்டிக்கவேண்டும் என்பதையும் அழகாக விளக்கினார். வேததர்ம சங்கம் ஏற்படுத்தி தயானந்தர்போலச் சேவை செய்ய வேண்டும் என்ற விண்ணப்பத்துடன் எழுந்தேன். சுவாமிகள் தேங்காயும் மாலையும் தந்து "விஜயீபவ" என்றார். நமஸ்காரம்செய்து வெளியே வந்தேன்.

மைசூர் சிவகங்கை சுவாமிகள் வந்தார். அப்போதுதான் எனக்குப் பூணூல்போட்டார்கள்.உபாத்தியாயரை மந்திரத்திற்கு அர்த்தம் கேட்டேன். "அட! அதிகப்ரசங்கி அப்படிக் கேட்காதே" என்றார். நான் வழக்கம்போல் பிரம்மஞான சபைக்குச் சென்றேன். அங்கே மதுரை பி. ஆர். நாராயணையர் வந்திருந்தார். அவரிடம் முறையிட்டேன். அவர் அன்புடன் "நான் அர்த்தம் சொல்லித்தருகிறேன்; செய்சந்தி; படி இதை" என்றொரு புத்தகம் தந்தார். அதைப் படித்தேன், மந்திரங்களைத் தமிழாக்கினேன். கருத்துடன் செய்தேன். இந்தப் புத்தகத்தை எழுதியவர் சிவகங்கை சுவாமிகள். அவரைத் தரிசித்து வணங்கினேன். சுவாமிகள் ஸந்த்யா உபாஸனையைப்பற்றித் தினம் இரண்டுமணிநேரம் பிரசங்கம் செய்தார். காயத்திரி மகாமந்திரத்தின் பொருளை அறிந்து அனுபவித்து, பிராணாயாமத்துடன் செய்து பலன் பெற்றேன். இதேமாதிரி மாத்வாசாரியார், ஜீயர்கள், அண்ணங்கார் சுவாமிகள் வந்தனர். அவர்கள் பிரசங்கங்களைக்கேட்டு துவைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களை அறிந்தேன். காளையார் கோவிலுக்குச் சென்றபோதெல்லாம் சுப்பையா சுவாமிகளிடம் மெய்கண்டாரும் ஸூதஸம்ஹிதையும் கேட்டு சுத்தாத்வைதத்தில் பற்றுக்கொண்டேன். அத்வைத உணர்ச்சி முற்றி விபரீதமானதும் உண்டு. ஒருநாள் வகுப்பில் கூட்டல் போட்டபோது "ஒண்ணும் ஒண்ணும் ஒண்ணு உலகமெல்லாம் மண்ணு" என்றேன். விழுந்தது பளார் என்று பிரம்படி. "சுத்தாத்மா ஒன்று, பரமாத்மா ஒன்று; சமாதியில் கூடினால் இரண்டும் ஒன்றுதானே ஸார்" என்றேன். "வேதாந்தமோ! போ ஆண்டிமடத்துக்கு" என்று இன்னொரு பூசை விழுந்தது. பிறகுதான் இது இங்லிஷ் பள்ளிக்கூடம் என்ற நினைப்பு வந்தது.

ஒருநாள் க்ஷவரக்காசு தந்தார் அப்பா. வழியில் பரதேசிமடம். பட்டினத்தார் பாடல் கேட்டேன். மொட்டை போட்டுக்கொண்டு கோயில் கோபுரத்தில் ஏறி பராபரக்கண்ணி பாடிக்கொண்டிருந்தேன். அப்பா ஊரெல்லாம் தேடி கோயிலுக்கும் வந்தார். "அப்பா இதோ" என்றேன். "வா கீழே" என்றார். வந்தேன்! என் மொட்டைக் கோலத்திற்கு ஒரு அறை விழுந்தது. "இதிலென்ன குற்றம்; எனது நண்பர் மதார்சாவும் மொட்டைதானே" என்றேன். பிறகு கிராப்பு வளர்த்துக் குடுமி வளர்த்தேன்.

58. பெசண்டம்மை தரிசனம்

சிரஸ்தார் சங்கரையர் புகழ்பெற்ற பொதுநலப் பெரியார். அவரே தெருத்தெருவாகப் பிரசங்கம் செய்து வசூல்பண்ணி பல தர்ம ஸ்தாபனங்களை அமைத்தார். அவரே அரசர் உயர்பள்ளிக்கூடம் நாட்டினார். பண்டாபீஸ் வைத்தார். பிரம்மஞான சபை எழுப்பினார். அவரே தமது மாப்பிள்ளையைக்கொண்டு ஊரில் ஸ்ரீகலா அச்சகம்

நாட்டினார். புத்தகசாலையும் ஏற்பாடு செய்தார். எங்களூர் லெஸ்லி களுக்கும் அவர் உயிராயிருந்தார். அவரிடம் எனக்கு மதிப்பு அதிகம். அவருடைய அரிய நண்பர் ஏ. ரங்கசாமி ஐயரும், பழுத்த தியாஸபர், நான் சுத்தசக்தி மந்திரத்துடன் பராசக்தி தரிசனம் செய்ய ஆவல் கொண்டேன். ஒருநாள் என் ஆவலை ஸ்ரீ ரங்கசாமி ஐயரிடம் சொன்னேன். அவர் சங்கரையரைப் பார்த்து 'பாரும் ஐயா! இவனுக்குப் பராசக்தியைப் பார்க்கவேண்டுமாம்.' என்றார். "அதற்கென்ன அடுத்தமாசம் பராசக்தி வருவாள் பாரேன், அம்பி" என்றார் சங்கரர். "அமாடா அம்பி, அடுத்தமாசம் மகாசக்தி லோகமாதா வருகிறாள். பார்" என்றார். ஆவலாக நாட்களை எண்ணிக் கொண்டிருந்ததேன்.

வந்தாள் பெசண்டம்மை. கம்பீரமான அம்மை. எனக்கு மயிர்க் குச்செறிந்தது. "அம்பி பராசக்தி, விழு காலில்" என்றார் ஐயர். நான் ஓம் சுத்தசக்தி என்று பணிந்தேன். பிறகு "தாயே எனக்கொரு மந்திரம் உபதேசிக்கவேண்டும்" என்றேன். ஐயர் என்னைப்பற்றிச் சொன்னார். பெசண்டம்மை மில்டனிலிருந்து இரண்டுவரிகள் சொல்லித் திருப்பிச் சொல்லச்சொன்னாள்; "மனமே மனிதன்: மனம் விண்ணை நரகாக்கும், நரகை விண்ணாக்கும். மனதை உள்ளத்தில் நிலை நிறுத்து. யாருக்கும் அடிமையாகாதே. சுவர்க்கத்தில் அடிமையாயிருப்பதைவிட நரகத்தில் சுதந்தரமாயிருப்பது மேல். அடிமையே நரகம். சுதந்தரமாயிரு..." என்று விளக்கினாள்.

பிற்காலம் மில்டன் படிக்கத் தூண்டியவை இந்த வரிகளே. மேலும் காயத்திரியின் பொருளை அம்மையார் விஞ்ஞான ரீதியாக விளக்கினார். அம்மையாரைத் தாய்போலவே நான் கருதினேன். அவர் நூல்களையெல்லாம் ஆவலாகப் படித்தேன். பிற்காலம் இரண்டுமுறை பெசண்டம்மையாரை அடையாற்றிலே பார்த்தேன். பெசண்டை நினைக்கும்போது எனக்கு மனோதைரியம் அதிகரிக்கும்.

59. பாகவத உலகம்

அந்தக்கால வித்வான்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஸ்ரீ ராமஜயந்தி, கிருஷ்ணஜயந்தி, சிவன்ராத்திரி, நவராத்திரி, தேர் திருநாட்களில், கதை, கச்சேரி, பிரசங்கம் நடக்கும். உள்ளூரிலும் சுற்றி பத்துமைல் உள்ள ஊர்களிலும் நடக்கும், நல்ல கதைகளுக்கும் கச்சேரிகளுக்கும் எனது கோஷ்டியுடன் கிளம்புவேன். ஒரு கைக் குறிப்பில் நான் கேட்ட புதிய கதை பாட்டு, மெட்டு, இசை நுட்பம் அனைத்தையும் குறித்து வைத்து, ஊருக்கு வந்து நான் தனியே விசிகை நடத்திப் பார்ப்பேன். இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்காரின் குரலும் கலையும் உருவும் திருவும் என்னை வசிகரிக்கும். கரகரப்ப்ரியா கேட்டால் அவர் நினைப்பே வரும். பட்டணம் சுப்பிர மணிய ஐயரின் கலையுருவே ஐயங்கார். அக்காலம் அரியக்குடி ராமா

நுஜ ஐயங்கார் தமது குருவுடன் பின்னிருந்து பாடிக்கொண்டிருந்தார், கோனேரிராஜபுரம் வைத்தாவின் கல்யாணியை யார் மறக்க முடியும்? சஞ்சீவிராவின் கையில் சரபசாஸ்திரியின் பூங்குழல் காம்போதி ஊதும் போது மெய்மறப்பேன். தனத்தின் வீணுகானம் என்னைக் கந்தர்வ லோகத்திற்குக் கொண்டு செல்லும். திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் பிடில் என் நரம்புகளில் வில்லோட்டும். சுப்பையர் ஜலதரங்கம் காதில் கிண்கிணிக்கும். தட்சிணுமூர்த்தி மிருதங்கம் என் இதயத் துடிப்பில் ததிங்கிணதோம் போடும். திருவாலூர் ஞானத்தின் ஜதிகள் என் முன் நர்த்தனம் செய்யும். எனக்கு அளவற்ற இன்பத்தைத் தந்தது கதா காலக்ஷேபமே. அந்தக் காலம் அதற்கே கூட்டம், அதற்கே அதிகச் செல்வாக்கு இருந்தது.

மகராஷ்ட்ரத்தில் ஏகநாதர், நாமதேவர் துகாராம், முதலியோர் அபங்கம், ஸாகி, தண்டி ஆகிய மெட்டுக்களில் பகவத் பக்தி கீர்த்தனங்களைச் செய்தளித்தனர். பக்க வாத்யங்களுடன் அவற்றைப் பாடியே புலவர்களும், கோஸ்வாமிகளும் தெய்வ பக்தியையும் தர்மசக்தியையும் பரப்பினர். தஞ்சையில் மராடியர் ஆண்ட காலத்தில், இவர்கள் தென்னுடெங்கும் கதா காலக்ஷேபம் செய்தார்கள். இங்கே ஆழ்வார்-நாயன்மார்-மாணிக்கவாசகர்-பாடல்களுடன், அஷ்டபதி தரங்கம் முதலியன பாடி, சாமிசாஸ்திரி போன்ருேர் பஜனை செய்தனர். இரண்டையும் இணைத்து ஹரிகதா காலக்ஷேபத்தால் தார்மிக சேவை செய்ய எழுந்தார் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர். எனக்கு நான்கு வயதிருந்தபோது இவர் மதுரையில் கதை பண்ணிஞர். எந்தை இவரைப் பற்றி ரஸமான கதைகள் சொல்லுவார். தஞ்சை மந்திரியும் கலைச் செல்வருமான பெரியண்ணு இவரை முன்னுக்குக் கொண்டு வந்தார். கதை, பாட்டு, நடனம் அனைத்திலும் தஞ்சாவூர் கிருஷ்ணையர் கலாநிதியாக விளங்கிஞர். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராடி ஆகிய பாஷைகளில், நிருபணங்களை அமைத்துக்கொண்டு, கச்சிதமாகக் கதை செய்தார் பாகவதர். அவரே கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனுர் கீர்த்தனங்களுக்கு மெட்டமைத்துப் பரப்பினுர். பிடில் சுரகெத்து வாத்தியங்களிலும் அவர் கைதேர்ந்தவர். இவர் பேச்சும் பாட்டும் உணர்ச்சி எழுப்பும். நந்தனுர், ராமதாஸ், துருவன், திரௌபதை, பிரகலாதன், கண்ணன், ராமன் கதைகளை இவர் செய்யும்போது, அந்தந்தக் கதா பாத்திரங்களாய்விடுவார், பிரகலாத சரித்திரத்தில் சிலருக்கு நரசிம்மபரவசம் வந்துவிடும். கிருஷ்ண ஜயந்தியில் "கம்ஸன் தேவகி மைந்தனை இப்படி வீசி வெட்டிஞன்" என்னும்போது 'வேண்டாம் வேண்டாம் சிசுஹத்தி!' என்று இவர் கையைப் பிடித்துக் கெஞ்சுவர். நந்தனுர் கதை எத்தனை தடவை கேட்டாலும் சலிக்காது.

கிருஷ்ண பாகவதர் பந்தாவைத்தான் மற்ற பாகவதர்கள் பின்பற்றிஞர்கள். நான் பலரை பார்த்திருக்கிறேன். அவருள் திருப்பழனம்

பஞ்சாபிகேச பாகவதர் நல்ல பக்கஜமாவுடன் வசீகரமாக இனிமை யாகக் கதை நடத்தினர். இவரது ராமாயணக் கதைகள் முழுதும் கேட்டுப் பயன்பெற்றேன். தஞ்சாவூர் பஞ்சாபிகேச பாகவதர் கிருஷ்ண பாகவதரிடம் கலைகற்ற புலவர். அவர் ஸ்தானத்திலிருந்து கதை செய்தார். இவருடைய பிரஹலாத சரித்திரம் வெகு உருக்கமா யிருக்கும். இவர் பிரபல வித்வான்களுக்கெல்லாம் பிடில் வாசித்தார். இவர் புஷ்பவனம் கச்சேரிக்குப் பிடில் வாசித்தபோது கேட்டிருக் கிறேன். மாங்குடி சிதம்பர பாகவதரின் கம்பீர பர்வதாகாரமும் உரத்த சொல்லும், கனத்த பாட்டும், விஷயஞானமும் என்னைக் கவர்ந்தன. இவர் ஆங்கிலமும், ஆரியமும் நன்ருகத் தெரிந்தவர். பெரிய படிப்பாளி. ஆதலால் இவர் கதை, புலவர் விருந்தாயிருந்தது. இவர் செய்த பாகவதக் கதைகளையும் தியாகப்ரம்ம விஜயத்தையும் நான் கேட்டுப் பயன்பெற்றேன். கீதை லக்ஷிமணுசாரியார் மகா பண்டிதர். கிருஷ்ண பாகவதர் கதைகளைக் கேட்டுத் தாமும் கதை செய்யத் தொடங்கியவர். அவர் கதையில் நிரம்ப சமுஸ்கிருத சுலோ கங்கள் வரும். அவர் பாரத பாகவத ராமாயணபாரங்கதர். எளிய நடையினர். தெளிவாகப் பேசி தர்மோபதேசம் செய்பவர். இவர் கீதோபதேசத்தைக் கதையாகச் செய்து கேட்டுப் பயன்பெற்றேன். ருக்மணி கல்யாணம், குசேலோபாக்யானம் சீதா கல்யாணம், கிருஷ்ண ஜனனம் ஆகிய கதைகளில் இவருக்கு நல்ல பெயர். ஒருதரம் இவர் எங்கள் ஊர் மாத்துவத் தெருவில் ஒரு திண்ணையிலிருந்து ஸ்ரீமத் பாக வதம் முழுதும் ஹரிகதையாகச் செய்து வந்தார். பத்துநாள் கதை நடந்தது. திருவையாற்றில் அவரைக் கண்டு பேசினேன். கீதை ஆறும் அத்தியாகம் படித்தோம். சூலமங்கலம் வைத்திநாத பாகவதர் கிருஷ்ணையர் பாணியைப் பின்பற்றி நாயன்மார், சிவனடியார் சரித்திரங் களைச் செய்தார். இவர் செய்த பட்டினத்தார் சரித்திரத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். காயகசிகாமணி முத்தையா பாகவதரின் தமிழ் என்னை வசீகரித்தது. ஆள் அழகர்; ராஜ கம்பீரமான சுகபோகி: மார்ச் சாந்தனமும், ஜவ்வாதுப் பொட்டும், கஸ்தூரி தாம்பூலமும், பட்டும் ஜரிகையும், தோடாவும், மோதிரமும், மந்தஹாஸமுமாயிருப்பார். இவர் கதை தனிச் சோபையுடையது. சிலேடைகள், அடுக்குச்சொற் கள், ஹாஸ்யச் சித்திரங்கள், இனிய கர்நாடக ஹிந்துஸ்தானி மெட்டுக் கள்–இவை இவர் கதைகளின் சிறப்புக்களாகும். கௌஸல்யா கல்யா ணம், வள்ளி திருமணம், லவகுச, சுலோசனுஸதி முதலிய கதைகளைக் கேட்டு மகிழ்ந்தேன். இவர் கதைகளில் சுயம் கற்பனைகளும் கலைச் சுவையும் அதிகம். இவர், மாமா லக்ஷ்மணசூரியிடம் சமுஸ்கிரதமும், சபேசரிடம் சங்கீதமும் கற்ருர். மைசூரிலும் திருவாங்கூரிலும் இசைத் தலைமை வகித்தார். சாமுண்டீச்வரிகீர்த்தனங்கள் செய்தார். ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களுக்கு மெட்டமைத்துப் பிரபலப் படுத்தினர். இவரைக் கரூரில், பெத்தாச்சி செட்டியார் நடத்திய

பசுபதீசர் திருநாளில், கண்டு பேசினேன். எங்களூரிலும் அடிக்கடி இவர் கதை நடந்தது. பழநி சுப்பிரமணிய பாகவதரின் ராமதாஸ் சரித்திரம் ஸ்ரீரங்கத்திற் கேட்டேன். சூலமங்கலம் சௌந்தரராஜ பாகவதரின் ஹனுமத்ப்ரபாவமும், பாலக்காட்டு அனந்தராம பாகவதரின் பாதுகா பட்டாபிஷேகமும், சங்கீத நயமும், கண்டு வியந்தேன். கதையுலகில் ஒரு புரட்சியை உண்டாக்கிய பெண்மணி ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய். கிருஷ்ணையர் பத்ததியை நன்கறிந்த டி. பி. கிருஷ்ணாசாரியார் இந்தக் கலாரத்னத்திற்கே தமது வாழ்வை அர்ப்பணித்து, தமது புலமையைக் கொண்டு, அவரை உருச்செய்து, காலக்ஷேபமணியாக்கினார். ஸரஸ்வதிபாயின் எந்தக் கதையைக் கேட்டாலும் ரஸமாயிருக்கும்; நல்ல குரல், இசைப் புலமை, அருவிப் பேச்சு, நவரஸவிலாஸம் சமுஸ்கிரத மேதை எல்லாம் சேர்ந்த இவர் கதைகளைக் கேட்டவர் மறக்கவே முடியாது. நந்தனார், 'வத்ஸலா கல்யாணம், ராமதாஸ் சரித்திரங்களைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். கிருஷ்ண பாகவதர் பரம்பரையில் இவர் ஒருவரே இப்போது பிரசித்தியாக விளங்குகிறார். தமது கலையைச் சரியான பிரதிநிதிக்கு இவர் பயிற்றினால் காலக்ஷேப வித்தையால் நாடு பலனடையும். இவ்வாறு பல கதைகளைக் கேட்டுக் கேட்டு என் கலையும் வளர்ந்தது. நானும் கதா காலக்ஷேபங்கள் நடத்தியே வாழலாம் என்று முனைந்தேன். ஆனால் என் வாழ்வை இறைவன் வேறு பக்கம் திருப்பி விட்டான். அவன் திருப்பியபடிதானே நான் செல்ல வேண்டும். "தவம் உன் கடமை...செய்!" இதுதான் கட்டளை.

ரா. துறந்தேன்

60. என் ஆர்வம்

தவத்தின் உயிர் காமஜயம். ஆண் பெண் கலப்பால் ஆண்பெண். ஆணுக்கும் பெண்ணுக்கும் கவர்ச்சி இயல்பு. இது இயற்கவர்ச்சி. உலகை வளர்க்க மாயா சக்தியால் வந்தது காதல் என்னும் வசீகர உணர்ச்சி. அந்த உணர்ச்சியை நிறைமுறையாகப் பூர்த்தி செய்து, இல்லறம் காத்தலே இயற்கையின் கட்டளை. அறம்பொருள் இரண்டும் இல்லற இன்பத்திற்கு உறுதுணையாகும். இதே காதலைக் கடவுளிடம் திருப்பி அருட்கனலாக்கிப் பேரின்பம் பெறலாம். மாணிக்க வாசகரும் ஆண்டாளும் அப்படிச் செய்தனர். இந்த ஆசைதான் என்னை உந்தியது. என் ஒவ்வொரு மூச்சையும் தெய்வார்ப்பணமாக்கி, ஆத்ம சித்தியும் ஸர்வாத்ம சித்தியும் பெறவேண்டும். இந்தப் பிறவியிலேயே நான் கர்மயோகத்தால் வந்தவினையை முடித்து, ஞானசித்தி பெற்று, இனி எந்தப் பிறவியும் வராத சுத்த நிலை பெற்று, பரம்பொருளிற் கலந்து போகவேண்டும். இதுவே என் ஆதர்சம். நான் காரண

சரீர ஆராய்ச்சி செய்தேன். அதற்கு நீண்ட காலமாகச் சிதாகாச ஓங்கார சாதனம் செய்தேன். அதனால் இந்த ஊனுடல் இன்றியே உள்ளுடலால், (சைதன்ய தேகத்தால்) காற்றிற் கலந்த எலெக்ட்ரன் அணுக்கள் போலே, உலகெங்கும் பரவிப் பல காரியங்களை சூக்ஷ்ம சக்தியால் சாதிக்கலாம், என்ற அனுபவம் பிறந்தது. சுத்தயோகி உள்ளபடியிருந்தே உலகெங்கும் சக்திக்கதிர்களைப் பரப்பி அரிய காரியங்களைச் செய்யலாம். ஆனால் அகம்பாவத்தால் அவன் எதுவும் செய்யமாட்டான். அவனுக்குச் சங்கற்ப விகற்பங்களோ அகந்தை மமதைகளோ இல்லை. சுத்தாத்ம சைதன்யனுகிய அவன் உடல் பொருள் ஆவி மனம் உள்ளம் சித்தம் விருப்பம், செயல் பயன் அனைத்தையும், அந்தர்யாமியான இறைவனுக்கே அர்ப்பணிக்கிருன். அவனது ஜீவப் படகை ஜகதீசன் நடத்துகிருன். அவனிச்சை சுக்கானைத் திருப்புகிறது. அவன் வைத்த இடத்தில் இருப்பான்; அழைத்த இடத்திற்குச் செல்வான். இந்த மாதிரி சுத்தசித்தி பெறவே என் உள்ளம் துடித்தது. அதற்கு நான் செய்த சாதனங்கள் பல. அவற்றுள் பரமேச்வரனைத் தவிர மற்றெதிலும் காதல் கொள்ளாத கற்பொழுக்கம் ஒன்று.

61. பெண் வணக்கம்

நான் என்னையே சிவகாமியாகவும் ராதையாகவும் பாவித்துக் கொண்டேன். இறைவனையே எனது பிராணநாதனுகக் கருதித் தேடினேன், பாடினேன், கூடினேன். கற்புள்ள மனைவிபோல் என் ஆத்மக் கணவனையே நேசித்தேன். அவனிச்சையன்றி எதையும் செய்ய மறுத்தேன். வேறு பெண்ணிடமோ ஆணிடமோ என் காதலைத் திருப்ப மறுத்தேன். இதுதான் எனக்குக் காமஜயம் அளித்தது. ஆனல் அந்த ஜயம் பெறுவது எளிதன்று.

காமஜயத்திற்கு நான் செய்த முதல் சாதனம், பெண் வணக்கம். முதலில் எனது தாயாரையே சக்தியாக உபாசித்தேன். காலை அனுஷ்டானங்கள் ஆனதுமே, மலர் கொண்டுவந்து, தாயார் திருவடியில் அர்ச்சித்து, பிரதட்சிணம் செய்து, சாஷ்டாங்கநமஸ்காரம் பண்ணி, "அம்மா எனக்கு அந்தக் கரணசுத்தி தா. உன்னைப்போல் பெண்ணைப் பார்க்கும் பரிசுத்த அன்பைத் தா. என்னை உலகமாயம் மயக்கி, மதிகெடுக்காது ஞான வைராக்கியம் தா" என்று பிரார்த்தனை செய்வேன். பிறகு இந்த மாதிரி தியானமாலை சூட்டுவேன்:

மத்த மாமத யானையைப் போலே
மது அருந்திய மர்க்கடம் போலே
பித்த ணுகிய பேய்மகன் போலே
பெரும்புயலிற் படகினைப் போலே

கொத்தராவின் கொடுஞ்சினம் போலே
 கூரை பற்றிய கொள்ளியைப் போலே
சித்தராக்ஷஸன் செய்கொடுங் கோலைத்
 தீர்த்துன் சேயினைக் காத்தருள் அம்மே.

சிந்தை யைச்சித ருது நிறுத்திச்
 சிறுபு லனைத் திருப்பி யடக்கிப்
பந்த னைகளைப் பாழ்படப் போக்கிப்
 பாசமான விலங்கை யறுத்தே,
சந்த தமுந் தவநிலை தேர்ந்தே
 சத்தி வீறு தழைத்திட நாளும்
விந்தை ஓசுடன் தேசென மாற்றி
 வெற்றி மேல்வெற்றி பெற்றிடச் செய்வாய்.

உன்பணிக் குருக் கொண்ட வுடலும்
 ஊத்தைச் சேற்றிற் புரண்டில டாமோ ?
தென்பு றுத்தித் திருக்கன லாக்கித்
 தெய்வ ஜீவன மெய்திடச் செய்வாய்
பொன் பவளம் பொலிநகை மாதர்
 பொங்கதே னைக்கரம் பற்றிய போதும்
அன்பு மிக்கநல் அன்னையென் றெண்ணும்
 ஆத்ம சித்தி யளித்திடு வாயே.

உடலே லாம்உன் உயிர்மணிக் கோயில்
 உயி ரேலாமுன் உருவளர் மூச்சு
கடலே லாமுன் கருணையின் வெள்ளம்
 காரே லாமுன் அருட்பொழி வாமே
இடமே லாமுன் இதயவி சாலம்
 இயற்கை யுன்பசு மாளிகை யின்பம்
சுடர்மேன் பாவையர் உன்மயத் தூயர்
 சுத்தசக்தி சுதந்தரத் தாயே.

இப்படித் தாய் வழிபாடு செய்யச்செய்ய, என் கனவில் சூரியோதயம், மலையருவி, திருத்தலங்கள், மகான்களின் காட்சி, நடராஜா, மீனாட்சி, காமாட்சி, முருகன் ஆகிய கடவுட் காட்சிகள் வந்தன. தாயாரை வழிபட்ட நான் அக்காளை நமஸ்கரிக்கத் தொடங்கினேன். அவள் "போடா பைத்தியம்" என்றாலும் வணங்கியே தீர்வேன். பிறகு எங்கள் வீட்டுக்கு வந்த பெண்களைப் பராசக்தி என்று வணங்கி

னேன். இந்தப் பெண் வணக்கம், சித்தசித்தியைத் தந்து, மன விகாரத்தை நீக்கியது. முடிவில் எனக்குப் பெண் கொடுக்க வந்தனர் இருவர். "ஓம் பராசக்தி சரண்" என்று காலில் விழுந்தேன். இன்றும் பெண்களைக் கண்டால் ஜகன்மாதாவாகவே நினைக்கிறேன். பெண் அழகை அர்ச்சனை மலர் அழகுபோலவே காண்கிறேன்.

62. அனுஷ்டானங்கள்

இந்திரியம் பிடரியிலிருந்து ஒரு நரம்பு வழியே வந்து இறங்கி வெளியாகிறது. அந்த நரம்பைப் பழக்கவேண்டும். இந்திரியம் கீழே வந்ததும், குண்டலி சக்தியால் சூக்ஷ்மத் தன்மையடைந்து ஆதார சக்கரங்களின் வழியே மேலேறி ஓஜஸாக மாறவேண்டும். இந்தச் சாதனத்தை நான் கடுந்தவ விரதங்களால் சாதித்தேன். எனது தவத்தைக் கண்டு தாயார் தகப்பனார் அலறுவர். முதலில் உறக்கத்தைச் சுருக்கினேன். இரவு பனிரண்டு மணிவரைக்கும் எழுத்தும் படிப்புமாயிருப்பேன். பிறகு சாய்வு நாற்காலியில் சாய்ந்து, கண்ணை மூடித் தியானிப்பேன். படுக்கை போட்டுப் படுத்ததேயில்லை. தலையணையைக் கண்டதுமில்லை. மெய் மறக்குமட்டும் பிராணாயாம ஜபம் செய்வேன். பிறகு தியான நிலை கூடும். அதில் லயிப்பேன். இது தான் என் உறக்கம். இதனால் நாளடைவில் அறிதுயில் பழக்கமானது. அந்நிலையில் அந்தக் கரணத்தை உலகெங்கும் செலுத்திப் பல நடப்புகளை அறியவும் முடிந்தது. மூலாதாரக் கொதிப்பால் இந்திரியம் மேலிருந்து கீழே வந்து வெளியாகிறது. ஆதலால் நான் மூலாதாரத்தைச் சூடேறாமல் சமநிலையில் வைத்துக்கொண்டேன். அதற்கு தினம் இரண்டு மூன்று வேளை குளித்தல். தொட்டி ஸ்நானம், வில்வப் பழமும் ஆவரங்குழையும் தேய்த்துக் குளித்தல், எலுமிச்சம் பழம் தேய்த்தல், நன்றாக நீந்தல் முதலிய பழக்கங்களைக்கொண்டேன். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதேயில்லை. அடுத்தபடியாகக் காற்றாட வாழப் பழகினேன். உள்ளே யிருக்கும்போது கோவணமே அணிவது; யாராவது வரும்போது ஒரு நீண்ட ஜிப்பா அல்லது துண்டு; வெளியே செல்லும்போது அலுவலுக்கேற்ற அணி. இரவில் காற்றோட்டமாக, துண்டைக் கட்டிக்கொண்டு சரப்பிராணாயாமம் செய்வேன். இதனால் உடம்பின் அணுவணுவும் பிராணசக்தி பரவி சுத்தமாயிருந்தது. காலை மூன்றரைக்கு எழுந்து, பல் விளக்கித் தண்ணீர் அருந்தி, வெளியில் ஓடிக்கொண்டே ஓம் சுத்தசக்தி ஜபம் நடத்துவேன். பிறகு பிராணாயாமம், தியானம். குளிக்கும்போது கசரத் பஸ்கி அவசியம் செய்வேன். இரவிலும் யோகாசனம் செய்தே இளைப்பாறுவேன்.

இவற்றுடன் நான் ஆகார நியமம் பூண்டேன். பசித்தே உண்பது: பத்துவயதிலேயே நான் உப்பு புளி மிளகாயில்லாமல் உண்ணத் தொடங்கினேன். இருபதாம் வயது முதல் பால் பழம் கடலையே

உணவு. சமைத்த உணவு அரிதாகவே உண்பது. இளநீரானால் வேறொன்றும் தேவையில்லை. வாழைக்கையை உண்டு நீர் குடித்தலே போதும். என் வயிறு நான் சொன்னபடி கேட்கும். ஏகாதசி உபவாசம் இருப்பதுடன், குடல் சுத்தியாகாத நாளும் சும்மா போட்டுவிடுவேன். இந்த உணவு விரதமும் உண்ணுவிரதமும் மிகக் கடுமையானவை. உள்ளே நாக்கு அரிக்கும். மனம் திருட்டுத் தினிக்கு அலையும். நாக்கை அடக்க நான் வெகு பாடுபட்டேன். தினம் வேப்பிலை அல்லது வில்வத்தழை சாப்பிட்டுவந்தேன். சில நாள் வில்வத்தையே உணவாகவும் கொண்டேன். பல மூலிகைகளை உண்டேன். பரான்னம் உண்பதை நிறுத்தினேன். நானே உழைத்து வந்ததை உண்டேன். தமிழ்க் குருகுலத்தில் உழுதுண்டு, நாற்று நெய்து அணிந்தேன். நல்ல வேலைகளில் ஈடுபட்டால் மன விகாரமே உண்டாகாது. நான் காத்த மற்றொரு பெரிய விரதம் அகண்ட மௌனமே. என் ஆயுளில் முக்கால்வாசி நாள், நான் மௌனமாகவே கழித்தேன். பனிரண்டு வயது முதல் மௌன விரதம் தீவிரப் பட்டது. தினம் மூன்றுமணிநேரமே பேச்சு. 1922க்குப் பிறகு வாரம் இரண்டு நாள் பூர்ண மௌனம். 1928-ம் ஆண்டிலிருந்து இருபத் தோராண்டுகள் பேசவேயில்லை; நிறைவான மௌனங்காத்தேன். இக்காலமே நான் செய்யவேண்டிய இலக்கியப்பணிகளெல்லாம் மளமளவென்று நிறைவேறின. இந்த மௌனத்தால் இந்திரியஜயம் நிறைவானது. 1927-ல் இருந்து இந்திரியம் சூக்ஷமசக்தியாக மாறி விட்டது. எத்தனையோ பெண்கள் இங்கே வருகிறார்கள். எல்லாரையும் பராசக்தி யன்னையாகவே காண்கிறேன்.

63. மாமா !

எனது பிரமசரியத்தைக்கலைக்க முயன்றோர் பலர். என் சின்ன மாமா என்னுடன் தர்க்கம் செய்தார் (அவருக்கு ஒரே பெண்).

மாமா: மனிதனாகப் பிறந்தால் படித்து சம்பாதித்து பணக்காரனாகி ஜோராக அட்டணக்கால்போட்டு வாழவேண்டும்.

நான் : மனிதன் தன்னையறிந்து உலகையறிந்து கடவுளை யறிந்து பேரின்பம் பெறவேண்டும். ஞானமே உயர்வு.

மாமா : இதெல்லாம் வேதாந்தப்பிதற்றல். பணக்காரன் வேதாந்தம் பேசினால் கேட்பார்கள். சுண்டைக்காய்ப் பயல்களெல்லாம் பேசினால், போடா வெங்கம் என்பர்.

நான் : மாமா, இராமதீர்த்தரும் விவேகானந்தரும் கபீரும் வள்ளுவரும் ஏழைகளே. அவர்கள் பேச்சை உலகெல்லாம் கேட்கிறதே. நான் சிறுவனே. என் கையில் பிடித்த விளக்கு வெளிச்சம் தராதோ ? உலகசேவையே என் வாழ்வு.

மாமா : நீ என்ன உலகசேவை செய்வாய்? வக்கீலாயிருந்தாலே அது முடியும். திலகர், மணி ஐயர் எல்லாரும் வக்கீல்கள். நீயும் வக்கீலானால்...

நான் : நான் புனிதமான உபாத்தியாயராகி அறிவைத்தந்து தேசசேவை செய்வேன் என் ஆயுள் முழுதும் கல்விப்பணிக்கே அர்ப்பணம்.

மாமா : பணம் முதலில்; பிறகு அர்ப்பணம் தர்ப்பணம் எல்லாம். பயலே வக்கீலாகி கலியாணமாகி, வீடுவாசல் என்ற கருத்துட னிரு...டா.

இப்படி அவர் வாதாடுவார். நான் ராமகிருஷ்ண விவேகானந்த ரையும் திலகரையும் பெசண்டையும் பற்றிப் பேசுவேன். வேதாந்தம் படிப்பேன், என் ஜாதகத்தை அவர் கருத்துடன் பார்ப்பார். வியாழ தசையில் கலியாணம் என்பார். நான் கலியாணத்தரகர் முத்யாலு கையில் ஒரு கடிதம் கொடுத்தேன்: "ஜீவசக்தி தேவசக்தியாகும், யோகசக்திக்கே வாழ்வேன். மனமே மனைவி. உலகே வீடு...பொது நலமே குடும்ப நிர்வாகம்...தியானமே வேலை. வேறு சிந்தையில்லை." என்று அதில் எழுதினேன். மகள் கலியாணத்திற்குப் பிறகு மாமா வீக்கம் கண்டு நரக வேதனைப்பட்டு, நாக்குத்துறுத்தி இறந்தார் அப்போது என்னைப்பார்த்து "நீயே சுகி" என்றார். ஆஜானுபாகுவான அந்த உடலை எரித்தனர்.

சேர்த்தீர் புதைத்தீர் திருமகளை யேதாரை
வார்த்தீர் உயிர் நீத்தீர் மாமாவே-ஆர்த்த புவிச்
சீரெங்கே செல்வச் செருக்கெங்கே சாசுவதம்
யாரிங்கே நீறிங்கே யே

என்று அவர் சாம்பலுக்குப் பாடினேன்.

64. தப்பினேன்

என்னை மணம்புரிய ஒரு பெண் துடித்தாள். பெற்றோர் வந்த னர். என்னை டாக்டருக்குப் படிக்க வைக்கலாம், கையில் இவ்வளவு, பையில் இவ்வளவு, காதில் இவ்வளவு, என்றெல்லாம் பேசினர். பெண் ஆர்மோனியத்துடன் பாடியது. நானும் தாயுமானார் பாடலிற் பிடித் தேன். வந்தவர் விடைபெற்றுக்கொண்டனர். பிற்காலம் அதே பெண்ணைச் சந்தித்தேன். தன் துயரையெல்லாம் சொல்லிக் கண்ணீர் வடித்து என்னைக் கலியாணம் செய்திருந்தால் பேரின்பமாயிருக்கும்' என்றாள். நான் "பரதேவீ அப்படி நினைக்காதே...நீ எனது தாய்" என்று வணங்கிச் சென்றேன். இருவர் எனக்குப் பெண் கொடுக்கப்

போட்டியிட்டனர். ஒருவர் சொத்துக்காரர். மற்றவர் சாது. இருவரும் திருப்பரங்கிரி சந்நிதியில் சந்தித்தனர் ஒருநாள். நான் முருகனை

வள்ளிதெய் வானைகளின் வாகான காதலனே
வெள்ளிமலை யப்பன் வீறுகொண்ட—பிள்ளையே
வேலா மயிலா வினைதீர் அசுரகுல
காலாஇக் கட்டின்றிக் கா.

என்றுபாடினேன். சாது புரிந்துகொண்டார். செல்வர் "இது டாமேஜ் வேதாந்தப் பூச்சி" என்று சென்றார். நான் உத்யோகத்தில் இருந்தபோது ஒரு பிடிவாதக்காரர் வற்புறுத்தினார். ஒரு நாள் அவர் வீட்டில் தங்க நேர்ந்தது. மாடியில் என்னைவைத்து, நான் தப்பி ஓடாமல் கதவைக் கீழே தாழிட்டார். மனச்சாட்சி ஓடு என்றது. ஆம், நான் இரவு பதினொருமணிக்கு அடுத்த மொட்டைமாடியில் தாவி, நல்ல வேளையாக அங்கிருந்த படிகளில் இறங்கி, திண்ணைக்கு வந்து நேரே ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயிலும் எனக்குக் கிடைத்தது அற்புதமே! இன்னொருவர் சாதகக் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு 'தசப் பொருத்தம்' என்று வந்தார். "மனப்பொருத்தம் இல்லையே ஹஸ்க்! என்றொரு தும்மல் போட்டேன். சகுனமில்லை என்று போய்விட்டார். அவருக்கு நானே ஒரு வரன் பார்த்துத்தந்தேன். இன்னொருவர் தஞ்சையிலிருந்து அவசரக் கடிதம் எழுதினார். "எனக்கு ஐந்தாமடத்திலே சனி..." என்றெழுதிவிட்டேன். இப்படிப்பல முற்றுகைகள் எனது பிரமசரியக் கோட்டையைத் தகர்க்க வந்தன. கடைசியாக வந்தது; பலமானது. தாயின் பாசம் சகோதரவாஞ்சை அனைத்துடனும் கூடிவந்தது. அப்போது நான் தக்க சம்பளத்தில் இருந்தேன். பெண் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் செல்லப்புதல்வி. அண்ணா நீண்ட கடிதம் எழுதினார். "பெரிய இடத்துப் பெண்; நல்ல சொத்து; சீர்செனத்திகள் ஏராளம், மனசு தாராளம். எல்லாம் தீர்மானமாகி அப்பளாயிடுகிறார்கள். நீ உடனே ஒப்புக்கொள். குடும்பம் கவலை தராது. நாம் பள்ளிப் பிள்ளைகளை அடக்கி ஆளவில்லையா? அப்படிக் குடும்பத்தையும் ஆளலாம். நீ இணங்காவிட்டால், நாங்கள் தலைகுனிய நேரிடும்...உம் உடனே..." என்று ஜரூர் கடிதம் தாக்கிது கொடுத்தது.

சந்திபண்ணி தியானத்திலிருந்தேன். வானத்தில் சந்திரன் அழகாக உதித்தது. ஒரு மேகமும் அதைத் துரத்திப்பிடித்தது. பிறகு படலம் படலமாக மேகங்கள் படர்ந்தன. எனக்கும் ஓர் ஆவேசக்கடிதம் உதித்தது. அதுதான் என் வாழ்க்கைக்கண்ணாடி. ஆங்கிலத்திலும் ஒரு கடிதம் எழுதினேன்.

65. உண்மை விளக்கம்

இங்கே எனது தமிழ்க் கடிதத்தையும் ஆங்கிலக் கடிதத்தையும் சேர்த்து நயமான பகுதிகளைத் தருகிறேன்.

ஓம் சுத்தசக்தி;

வணக்கம். அண்ணலின் அனுபவத்திரட்டு வந்தது. இதைவிடத் தெளிவாகவும் மரியாதையாகவும் சொல்ல வேண்டியதை யாரும் சொல்ல முடியாது. இல்லறக் களத்தில் பயங்கரப் போர் புரிந்த அனுபவ வீரர் மொழிகள் என்னை ஒரு நொடி கலக்கின. அந்தி வேளை; சந்தி முடித்துத் தியானத்தில் அமர்ந்தேன். நீல வானில் முழுமதி எழுந்தது. அமைதியொளி பரப்பியது என் உள்ளத் தாமரை போல் சந்திரன் அமுத நிலாவளித்தது. அதோ ஒரு மேகம்; சந்திரன் மேல் பொருமை கொண்டு வந்தது. அது விலகும் என்று நினைத்தேன். மேகக் கூட்டங்கள் தொடர்ந்து வந்தன. கருமுகிற் காட்டில் முழுமதி சிக்கிக்கொண்டது. குடும்ப மேகமும் இப்படியே சுத்தனந்த வாழ்வைக் கவரும்; அதன் உயர்ந்த நோக்கங்களும் ஆதர்சங்களும் கறுப் படிப்பில் மறையும். முதலில் மேளதாளத்துடன் வரும் பந்தம், என் சுதந்தரத்தைக் சிறைக் கைதியாக்கும்...என்பதைப் பகீரென்று நினைத்தேன்.

அழகெனக் காட்டி அடிமை தருவ
முழுவதும் போக்க முயல்

என்ற உண்மை உதித்தது. குடும்பத்தின் சோகக் கண்ணீரில் அன்னை தத்தளித்தாள். தாங்கள் பல துயர்களை அனுபவித்தீர்கள். உலகின் மேடு பள்ளங்களையும் துன்பக் கணவாய்களையும் கண்டுதான் என் மனம் சமநிலையடைந்து, நைஷ்டிக பிரமசரியம் பூண்டது இனிப் பணம்பெற்ற விலங்கை மாட்டிக்கொள்ளவா? முழுகும் கப்பலில் ஏறவா? என் வாழ்வின் போக்கை அறிந்த யாவரும் அம்மி மிதிக்கச் சொல்லமாட்டார்கள். நான் பிறந்த கதை வளர்ந்த கதை, எல்லாம் தங்களுக்குத் தெரியும். மாமாவின் பொன் வலைக்குத் தப்பி நான் அம்பிகையைச் சரணடைந்ததும், எனக்கு உதித்த வாக்கையும் உலகம் அறியும். உலகின் சுமையாக நான் வாழேன். இங்கே எம்மட்டும் பணி உள்ளதோ, அம்மட்டுமே வாழ்ந்து, சுத்த சக்தியுடன் ஐக்கியம் ஆகவேண்டும்—இதுதான் என் ஜீவநதியின் பெருநோக்கம். அந்த நோக்கம் நிறைவேறவேண்டும். நான் எதற்காக உலகிற் பிறந்தேன் என்பதைச் சிறு வயதிலேயே அறிந்தேன். என்னைச் சுத்தானந்த ஞக்கிய பரமஞானி, என் வாழ்விற்கு ஒரு வாய்க்கால் வகுத்திருக்கிறார். அதன் வழியாகவே நான் செல்லமுடியும். இன்றேல் தண்டவாளம் தவறிய ரயிலைப்போல் என் வாழ்க்கை குடம்சாயும்.

உலக மகான்கள் பிரமசரிய பலத்தினாலேதான் சிறந்த திருவினைகளைச் செய்து முடித்தார்கள். திருநாவுக்கரசர், ஏசுநாதர், மகாவீரர் போன்றோர் பிரமசாரிகள். புத்தரும், காந்தியும் பிரமசரிய பலத்தினாலேதான், உலகிற்கு வழிகாட்டி, அரிய தியாகங்களைச் செய்தனர்,

புத்தர் சுகபோக மாளிகையில் மற்ற மனிதரைப்போல் வாழ்ந்திருந்தால், இன்று ஐம்பதுகோடி மக்களின் உள்ளத்தில், கோயில்கொண்டிருப்பாரா? போதி மரத்தடியில் தியானித்த புத்தரையே நாம் போற்றுகிறோம். ஆசையை உதறித் தள்ளிய முனிவரே வணக்கத்திற்கு அருகர்.

'சந்ததியில்லாவிட்டால் மோட்சமில்லை' என்கிறீர்கள். நான் அதை நம்பவில்லை. எனக்கு எந்தப் பிள்ளையும் திவசம் தர்ப்பணம் செய்யத் தேவையில்லை. என் உடம்பு புரோகிதச் சடங்கிற்குக் கிடைக்காது. என் கதிமோட்சத்திற்கு நானே பொறுப்பாளி. என் வாழ்வில் தீமையே இல்லாமல் கவனமாயிருந்தால் கவலையேது? என் வாழ்வெல்லாம் சுத்தயோகமே; என் மூச்செல்லாம் அருட்பணியே. ஆயிரம் ஞானக் குழந்தைகள் என் பெயரைச் சொல்லுவார்கள். நாவும் பேனாவும், பொதுநலத் தொண்டும், சன்மார்க்க சக்தியும், யோகசித்தியும், என்னைச் சிரஞ்ஜீவியாக்கும். உங்கள் பெயர்களெல்லாம் என் பெயரால் உலகில் வழங்கும். அத்தகைய மகத்தான சேவையை நான் மேற்கொண்டு, அதற்காகவே என் வாழ்வைப் பண்படுத்தி வருகிறேன். நான் கடுந்தவம் புரிந்து பண்படுத்திய வாழ்வை, குடும்பப் பாறையில் போட்டு உடைக்கமாட்டேன். வறுமை, மடமை அடிமை நோய்களே உலகின் துயர்களுக்குக் காரணம். இவற்றிற்கு மருந்து கண்டு பிடித்துள்ளேன். கோடானுகோடி மக்களுக்கு அந்த மருந்தை அன்புடன் தரும் பணியே என் இன்பம். உலகில் 150 கோடியில், இரண்டொருவர் என்னைப் பைத்தியம் என்றால் பரவாயில்லை. தந்தையின் கடமை கல்வியளிப்பது. தாயின் கடமை உடலை வளர்ப்பது. மகன் கடமை அறிவும் திருவும் பெருகிப் புகழ்பட வாழ்வது. மகன் தந்தைக்கு அடிமையில்லை. தந்தை மகனுக்கு ஆண்டையில்லை. ஆண்டை யடிமைக்கொள்கையை நான் ஒப்புவதில்லை. ஆண்டவன் ஒருவனே 'ஆத்மராஜன்; அவனுக்கே நான் ஆள்; மனச்சாட்சியே அவன் சட்டம். அதன்படி நடப்பதே கடமை. என் மனச்சாட்சி 'பந்தத்தில் மாட்டிக்கொள்ளாதே' என்கிறது. அதன் கட்டளையை நிறைவேற்றலே என் இன்பம். அதன்பால் வரும் இடர்களையெல்லாம் எற்றியெறியத் துணிந்துவிட்டேன்.

பிரஹலாதன் தந்தை சொல்லைக் கடந்தே தன் உண்மையை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. அந்தப் பிரஹலாதன் சென்ற பாவத்தில் நான் செல்லுகிறேன்.

தந்தையின் கடமை மகனை அறிவாளி யாக்குவதே. இதை நம் அருமைத் தந்தையார் நன்கு செய்துவிட்டாரென்பதோடு திருப்தியடையட்டும். கல்யாணம் என்பது என் வாழ்வை ஒட்டியது. மகனுடைய கடமை தந்தைக்கு உலகின் புகழைச் சம்பாதிக்க வேண்டியது.

மகன் தந்தைக்கு அடிமையல்லன். மனிதனுக்கு மனிதன் அடிமையல்லன். இயற்கையன்னை ஒவ்வொருவனுக்கும் ஒரு தனிப்புலமை தந்திருக்கிருள். அதைத் தன்னறிவால், கடவுட் கலப்பால் அருட் புலமையாக்கிப் பாராலயத்திற்குப் பயனுக்குவதே வாழ்வின் உயர்ந்த நோக்கம்.

இராமகிருஷ்ணருக்கு அமைந்தது போன்று எல்லோருக்கும் பத்தினி அமையாது. எல்லாரும் சாரதாதேவியாக முடியாது. அநேக மாகக் கவிகளுக்கும் பெரியோருக்கும் சோக்ரதனுக்கு அமைந்தது போன்றே மனைவியர் கிடைக்கின்றனர். சுகதுக்கங்களைத் தன் கணவனோடு வீரப்பெருமையுடன் தாங்கும் மனைவியைக் கார்ல்மார்க்ஸ் எய்தினர். கார்ல்மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றியே லெனின் உலகிலுள்ள வறுமையுடன் போராடினர். கார்ல் மார்க்ஸ் தம் சீரிய கொள்கைகளால் புல்லரிடம் அதிகக் கஷ்டப்பட்டு தேசந்தேசமாய்த் துரத்தப்பட்டார். அவர் ஒரு தரம் இலண்டனில் தமது குடும்பத்துடன், இருக்க இடமும் குடிக்கக் கஞ்சியுமில்லாதிருந்தபோது, "நாதா தங்களோடிருப்பதே என் இன்பம், தங்களைப் பின்பற்றி ஏழைகள் பசியாறுவதே என் விருந்து" என்ருள் பத்தினி. அத்தகைய உத்தமிகளைப் போன்று எத்தனைப் பேர்களை நமது ஜாதியிற் காணலாம்? தென்குமரி முதல் கிருஷ்ணு நதிவரையில் ஊர் ஊராக நடந்து என் கண்கள் சோதித்திருக்கின்றன.

இல்வாழ்க்கைக்கு நான் விரோதியல்லன். இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் விண்ணின்பம் பெறலாம். ஆனல் வள்ளுவர் மனைவிபோல் வாய்ப்பதரிது. இல்லறம் ஈசனருளாலமைந்த நல்லறம் என்பது என் கொள்கை. ஆயினும் எனது சுறுசுறுப்பான நேரம் முழுதும், ஆன்ம பரிபூரணத்திலும் அருட்பணியிலும் செல்லுகின்றன. வேறு எவ்விஷயத்திலும் ஒரு மூச்சைக்கூட நான் வீணுக்கமுடியாது. தங்கள் நோக்கம் எனது அன்பைப் பொடித்துச் சித்திரவதை செய்துவிடும். ஆண்-பெண்-ணுறவையே அத்யாத்ம யோகமாக்க வேண்டுமென்பது எனது விருப்பம். அப்படிப்பட்ட தூய எண்ணம் நம் பெண்களுக்கும் மாமியார்களுக்கும் உதிப்பதாகக்காணேம். என் முழு அன்பையும் அருளையும் விள்ளாமல், அகண்டமான யோக சாதனத்தில் செலுத்தவேண்டும். இதுவே என் உறுதி. மற்ருேர் வாழ்க்கைக்கும் என் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். அதனின்றே என் வாழ்வில் ஏதோ இரகசியமிருக்கிறதென்று தாங்கள் அறிய வேண்டாவோ? வெங்காயம் மலிந்தால் தேசிகர் சாப்பிடுவாரோ? நான் ஆசையாணவத்தை வென்ற சுத்தாத்ம வீரனுவேன்.

வீரமகனெருவனை அம்மாள் பெற்ருள். அதனுல் உலகெல்லாம் க்ஷேமமடைந்தது, என்ற சொல்லே, நமது குடும்பத்திற்கு மச்சாவதாரனே டிணைக்கப்பட்ட மனுப்படகு. பயங்காளித்தனமாக இரவில்

பதுங்கி நான் காட்டிற்கு ஓடமாட்டேன். தைரியமாக உங்களுக்கு உறுதி புகட்டவே இதெல்லாம் சொன்னேன்.

எத்தனை மாயை சுற்றினும் இடையூறுகள் மலைமலையாக வரினும், சுத்தமான வாழ்வினாலே, அவற்றோடு சத்தியப் போர் செய்கிறேன். எனக்கு இறைவி கொடுத்த கட்டளையை நிறைவேற்ற எத்தனை முறை வேண்டுமானாலும் சிலுவையேறத் துணிந்துள்ளேன்.

சகல செலவுகளுக்கும் தந்து, பெண் தருகிறீர்களென்பது, வயிறு வெடிக்க அமுதுண்டவனை 'இதோ தாடி மாம்பழம்; போனால் வராது' என்பது போலிருக்கிறது, எனக்கு நமது ஜாதியென்றும் மற்றொரு ஜாதியென்றும் பேதமில்லை என் கொள்கை சுத்த சன்மார்க்கம். தூய்மை எவனிட முள்ளதோ, அவன் என்னவன். என்னைச் சுற்றி எல்லா ஜாதியாரும் எல்லா வகுப்பாளரும் எல்லா மதத்தினரும் ஓர் அருட் குலமாக வாழவேண்டும். உலகம் கோயில் அதில் உயிர்களைத் திருமேனி கொண்ட அருளாண்டவன் விளங்குகிறான். என் வாழ்வு அவனுக்கே வேள்வி.

உலகமென்பது உயர்ந்தோரிடமே, உயர்ந்தோரென்போர் உள்ளதையறிந்தோர்; உள்ளது கடவுள். தெய்வத் தன்மை பொருந்திய மக்களே அமரர், மற்றோர் அவர் நிழலே. ஆதலின் நீங்கள் என் உயர்ந்த கொள்கைகளைப் போற்றினால், உயர்ந்தோர் முன், ஏறுபோல் நடக்கலாம். தலை குனிய வேண்டியதில்லை; பயப்படாதீர்கள். இதனால் நமது குலம் கெட்டுப்போக மாட்டாது. என்னை உலகிற்கே உத்தம மணியாக்க வேண்டுமா; அல்லது சம்சாரப் பாறையிலடித்துக் கந்தைத்துணியாக்கவேண்டுமா? நான் சுயேச்சை 'யடைவது நன்றோ? அல்லது என் வாழ்வுச் சட்டியுடைந்து என் இன்பமெல்லாம் ஜலதாரையில் கொட்டுவது நன்றோ? நான் பற்றற்று உலகிற்கு நற்றுணையாவது அறமோ, அல்லது பந்தப்பட்டு, பட்டுநூற் புழுப்போலிருப்பது நலமோ? நீங்கள் எனக்கு விடுதலை தருவீர்களா, கெடுதலைத் தருவீர்களா?

இப்போது எனது மாத வருமானத்தில் ரூ. 50. மீதியே. பத்து ரூபாவுக்கு மேல் செலவில்லை. இன்னும் இரண்டு வருஷம் வேலை பார்த்தால், என் வயிற்றுக் கவலை நீங்கும்படியான வரும்படி சம்பாதித்து, இந்த அடிமை உத்தியோகங்களை யெல்லாம் உதறிவிடலாம். பிறகு என் உயிர் யோக சக்தியை வளர்க்கலாம். அவரவர்க்குத் தேவையான உணவுடைக்கேற்ற செல்வத்தை உழைப்பால் ஈட்டவேண்டும். எவரையும் சார்ந்திருக்கக்கூடாது. நான் முதலில் என் வறுமையைப் போக்கிக்கொண்டு பிறர் வறுமை தீரப் பாடுபட வேண்டும் என்று எனக்குத் தோன்றியுள்ளது. அதனாலேதான் ரூ. 5000. சேர்க்கிறேன். அது முற்றும் அருட் பணிக்கே. எனக்கு மாதம் ரூ. 10. போதும்.

நெடுநாளாக இயற்கை உணவுதான் உண்கிறேன். அதி சீக்கிரத்தில் தீவிரமான ஆத்மசாதனத்தை மேற்கொள்ளப்போகிறேன். தவசக்தியால் பணிபுரிய வேண்டும். பரதேவியின் அருளிச்சை நம் மூலம் செயல் புரியவேண்டும். நாம் பூரண சரணுகதியுடன் அவளது அருட் கருவியாய் இருக்கவேண்டும். இதுவே என் இரகசியம்.

கிரகஸ்தாசிரமத்தைப்பற்றி எனக்குத் தெரியாத விஷயமுமில்லை. பிஞ்சு வயதிலேயே அதன் குணதோந்த நாடகத்தை அன்னை என்னைச் சுற்றிலும் விளக்கினுள். தாங்கள் இல்லற தர்மத்திற்கு உதாரணமாயிருங்கள். நான் துறவறத்திற்கு உதாரணமாயிருக்கிறேன். ஆனல் எனது துறவுவேறு, அது உலகைவிட்டு ஒடுவதன்று; பெண்டிரைக் கண்டபடி வெறுப்பதன்று. மன அகந்தையை ஒழிப்பதே துறவு. எனக்கு வெளி வேஷத்தில் நம்பிக்கையில்லை.

மனத்தில் அருள்மல்கி மாணுலக முய்யும்
தனைத்துறந்த தொண்டே தவம்.

என்பது என் கொள்கை. என் உணவிற்குத் தக்க பணம் வேண்டு மென்பது என் முடிபு. எல்லாரும் நூற்கவும் நெய்யவும் உழவும் வீடு கட்டவும் வேண்டு மென்பது என் அவா. உலகிற்குப் புதிய தியாக வாழ்வைக் காட்டுவது என் சித்தாந்தம். சுத்தம் சுதந்தரம் ஸமத்வம் —ஆகிய மூன்றும் என் சுருதிவாக்கியம்.

இப்படிப்பட்ட உயர்வினின்று நான் உங்கள் பயத்தினுல் வீழ்ந் தால், என் வாழ்வு எதற்காயிற்று!

ரிஷிகள் பத்தினிகளோடு வாழ்ந்ததைப்பற்றிச் சிறிது சொல்லு கிறேன். கௌமுதி செய்த பெரியார் தம் புத்தகத்தையே தம் மனைவிக்கு அரும்புதல்வி யாக்கினுர். தாங்கள் சிறந்த அறிவாளி, நாலுந் தெரிந்தவர். நம்மைப்போல் நாக்கிற்கும் கண்ணுக்கும் இடங் கொடுத்து, ரிஷி பத்தினிகள் உண்டு உமிழ்ந்து உறங்கித் தம் வீரியத்தை இஷ்டப்படி செலவு செய்து வந்தார்களா? புத்திர சந்தானம் வேண்டுமென்று விரும்பிய நன்னுள் ஒன்றிலேயே, ரிஷிகள் மனைவியருடன் புணர்ந்தார்கள். அதன் பயனுயுள்ளவனே சீமந்த புத்திரன். ரிஷிபத்தினி தவக்கனல் சக்திச்சுடர். கண்ட அடிமைத் தனத்திற்கும், டில்லி தர்பார் புடவை, இரயில்வே அடுக்கு பம்பாய் வளை இவற்றிற்கும் இடம்கொடுத்த செல்வப் புதல்விகளா ரிஷி பத்தினி களாவர்! அதுவும் படிப்பில்லாத நமது ஜாதியிலா! நான் சுற்றிய வரையில் இல்லை. ஏற்கெனவே குழந்தைகளுக்குத் தொண்டை மாமியாரோடு ஐந்து கட்டை பேசுகிறது. அதை மறுபடி ஹார்மோனி யத்தில் உழைத்து ஆறு கட்டை சுதியுடன் வரும் சீமாட்டிகளா அனசூயா போல்வார்! ஒரு வேளை சோக்ரதன் மனைவி போலாவார். மாமனுர் வீட்டிலிருந்து பகவத்கீதை படித்தால், மாப்பிள்ளை சந்நியாசி

யாகிவிடுவான் என்ற கர்லமா என்னைப் பந்தத்தினின்றும் விடுவிக்கும்? ஹஸ்தாமலகரைப்பற்றி யோசியுங்கள். சதாசிவப் பிரம்மத்தை நினையுங்கள். தேகப்பற்றில்லாது ஆத்மலாபத்திற்குரிய உலோபாமுத்திரைகள் எத்தனை பேர்? உலோபாமுத்திரை இந்தக் காலத்துப் பெண்ணாயிருந்தால் அகத்தியரைக் குள்ளன் என்று தள்ளி வைத்திருப்பாள். கற்ருமைக்கு முள்பிடுங்க எனக்கு அவகாசமில்லை. சீர்திருத்தம் ஆன்மாவினின்று இயல்பாக வரவேண்டும். பிறந்த வீடு சுவர்க்கம், புகுந்த வீடு துன்பம், என்று வம்படிக்கும் பெண்களை நாம் எங்கும் காண்கிறோம். நூற்றுக்குத் தொண்ணூற்றுறுபேர் உண்டு உறங்கிக் குட்டிபோட்டு மாண்டுபோவதே வாழ்வென மயங்கி நிற்கின்றனர்.

நான் செலவிற்காவது எதற்காவது பயப்படவில்லை. மனிதனுக்குள்ள தெய்வத் தன்மை வீரத் தன்மை இரண்டையும் உலகிற்குக் காட்டவேண்டுமென்பதே எனது துணிபு. உலகில் நான் கண்டவரில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் மாயா சக்கரத்தால் ஆளப் படுகிறார்கள்.

ஒரு மாணவனுக்கும் மனைவிக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. இங்கு (பீடனிடம்) பிரியமாகப் பேசினால் பலனுண்டு. அங்கோ மற்றொரு வடம் கடிகாரச் சங்கிலிக்கு அடிபோட அதுவே சமயமாகும். அடுத்த அகத்து சேஷி சொல்வாளே என்று நான் அடிமைப்பட முடியுமா? அடுத்த வீட்டில் அழுதால் எங்கள் வீட்டுக்காரியம் நிற்குமா? ஊன்சுவைக்கும் துயிற் சுவைக்கும் அடிமையில்லாதவன் செயலே சித்திபெறும். ஆதலின் என்னைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டா. உங்களுக்கு வேண்டிய கடமைகளெல்லாம் நான் திருப்தியாகச் செய்வேன்; தாழ்ந்து சொல்லுகிறேன்,

ஆகையால் இதைக் கண்டவுடனே என் மேல் தயவு கூர்ந்து அழகையரிடம் சென்று "தம்பி சில உயர்ந்த கொள்கைகளை யுடையான்; ஏதோ விவாகத்தைக் குறித்து எங்களைச் சம்பந்தப்பட வேண்டா என்று சொல்லிவிட்டான். உங்களிடமும் வந்தனத்துடன் பெற்றோருக்காக மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுகிறான். வேண்டுமாயின் வேறு மாப்பிள்ளை தயாரிப்பான். சிரமத்திற்காக மன்னித்துக்கொள்ளவும். எல்லாம் கடவுள் செயல்" என்று சொல்லி என் கருத்தில் உயருங்கள்; அனைத்தும் வாழ்க......!

66. பெற்றோருக்கு

பெரியண்ணா ஆங்கிலத்தில் கடுமையான ஒரு டோஸ் கொடுத்தான். அதற்கு ஆங்கிலத்தில் நானும் சுடச்சுடக் கொடுத்தேன்: "அண்ணா, உங்களுக்கெல்லாம் பெண்ணைப் பார்த்தால் பெண்சாதியாகத் தோன்றுகிறது. எனக்கோ பராசக்தி மாதாவாகத் தோன்று

கிறது. தாயை எப்படி மணப்பது? நான் பெண்ணின் மென்முலைச் சுகத்திற்குப் பிறக்கவில்லை. கலையும் கடவுளும் லோக சேவையுமாக வாழவே பிறந்தேன். எந்த வழியே வந்தேனே அந்த வழியே இனி வரமாட்டேன், அதில் புகமாட்டேன். அதற்கான யோகசித்தி பெறுவதே என் முயற்சி. என் சந்ததி அற்றுவிடுமென்று பயப்படு கிறீர்கள்? பாருங்கள் ஆயிரம் ஞானச் சிரஞ்சீஜீவிகள் பிறக்கிருர்கள்; உலகெலாம் தவழ்கிருர்கள்......''

பெண் கொடுக்க வந்தவருக்கும் ஒரு கடிதம் எழுதினேன். ''மாமா. தங்கள் அன்பும் பண்பும் வாழ்க! தாங்கள் எனக்குத் தரும் செல்வத்தை மகிழ்ச்சியுடன் ஏற்பேன். ஆனால் என் மனம் இன்னொரு செல்வத்தைத் தேடிக்கொண்டது. அருட்செல்வமே செல்வம். தங்கள் பூங்கொடிக்கேற்ற கொழு கொம்பு நானில்லை. தியாகத்திற்குத் தியாகம் யோகத்திற்கு யோகம் தாவிச்செல்லும் என்னுடன் அவள் நடக்க முடியாது. ஆதலால் குடும்பக் கருத்துள்ள வாலிபனைப் பார்த்து, பெண்ணை மகிழச்செய்க.''

இனித் தந்தை வந்தார்; நான் மௌன விரதம் கொண்டநாள்: பேசவில்லை. மறுநாள் ஆவேசமாகப் பேசி இரண்டு வெண்பாக்கள் பாடினேன்:

மொத்துண்டு சம்சார மோகக் கடற்புயலில்
எத்துண்டு வாழல் இனிதாமோ—சோத்துண்டு
பட்டுண்டு பந்தத்திற் பட்டாலோ தங்கக்கைக்
குட்டுண்டு சோகக் குலம்.
குடும்பக் கலகத்திற் குண்டடிகள் வாங்கி
இடும்பைப் படுவதுன் இச்சையோ-கடும்புயலிற்
சிக்காது சுத்தசக்தி சேவைக் கெழுந்தமனம்
எக்காலும் பேரின்ப மே—

தகப்பனர் எனது நிலையை அறிந்துகொண்டார். அவர் எனக்குச் செலவிட்ட தொகையை தந்து ஆசியும் பெற்றேன். ஆனல் தாயாரைச் சமாதானம் செய்தல் சிறிது கடினமாயிருந்தது. எனது கவிவாணி வைராக்கிய கீதங்களை அள்ளி வீசியது. குடும்பவிநோதம் என்ற பாடலைப் பாடினேன். தாயாரும் ''எங்காவது நன்ருயிரு.'' என்ருள். ஐந்து நாட்கள் தனியறையில் மௌனமாயிருந்து தியானித்தேன். ஆருநாள் நள்ளிரவில் கால் நடையாக வெளியேறினேன். பிறகு நான் நானே. கட்டில்லை கவலையில்லை. என் வாழ்க்கைப் பறவை மனச்சாட்சி விட்டபடி உலகிற் பறந்து சென்றது. இத்துடன் எனது பந்தவாழ்க்கை முற்றிற்று. இனிச் சுயேச்சையான பொது நல வாழ்க்கைதான்.

ஆனந்த வானில் அமைதியாய்ச் செல்லும்
அறிவுப்பறவையைப் பார்-அது
கானக வேடனின் கண்ணியிற் சிக்கிக்
கவலையுண் டேங்கிடுமோ ?
ஈசனைக் கூடிநல் லின்புறும் சித்தமும்
இன்னலை நாடிடுமோ ?—பந்த
பாச மவிழ்த்தபின் பந்துக் குதையுண்டோ ?
பரிதிக்குச் சட்ட முண்டோ ?

எ. உழைத்தேன்

67. வந்தேமாதரம்

சிதம்பரம்பிள்ளை வந்தேமாதர முரசு கொட்டினார். சுதேசிக் கப்பல் விட்டார். கப்பல் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் சென்ற நாள், நாங்கள் விழாக் கொண்டாடினோம். வாண்டுப் பயல்கள் கனைக்கு நோட்டைக் கப்பலாக்கித் தெப்பக்குளத்தில் விட்டு "சிதம்பரம்பிள்ளை கப்பலுக்கு ஏலோலோ வந்தேமாதரம்" என்று ஆர்த்தோம். சுதேசிக் கப்பலுக்காக எங்கள் ஊரில் பணம் திரட்டினார்கள். வீடு வீடாகப் பிடியரிசிக்கலயம் வைத்தார்கள். அரிசி களையும்போது அதில் கொஞ்சம் போடுவது; வாரந்தோறும் அதைத் திரட்டி ஏலம் போட்டுப் பணம் சேர்த்துச் சிதம்பரம் பிள்ளைக்கு அனுப்புவது என்ற ஏற்பாடு நடந்தது. பிடியரிசிக்கலயத் தொண்டில் நானும் தீவிரமாக ஈடுபட்டேன். இதுதான் எனது முதல் தேச சேவை. இக்காலமே நான் திலகரையும் அறிந்தேன். முத்தண்ணா திலகர் படத்திற்குப் பூஜை செய்தார். நானே மாலை தொடுத்துப்போட்டு வந்தேமாதரம் பாடி வணங்கினேன். கோவிலில் கடவுளுக்குத் தோத்திரம் பாடுவதுபோல் நாம் ஏன் பாரதக் கோயிலில் விளக்கும் மாதா பாரதசக்தியை வணங்கக்கூடாது, என்றோர் ஆவேசம் பிறந்தது. முதல் பாட்டு எழுந்தது :-

உலக சேவை செய்வோம்—நாம்
உண்மைகொண்டு வெல்வோம்
விலகத் தீமை, நன்மை விளங்க
வீரசக்தி வளப்போம்.

அச்சமற்று நிற்போம்—நாம்
அமர ஞானம் சற்போம்.

உச்சமான தியாகப்புகழில்
உரிமைக் கொடியை நடுவோம்

இந்த நாடு நமதே—நாம்
இந்தியாவின் அரசர்
வந்தேமாதரம் என்றன்பு
மந்திரங்கள் இசைப்போம்.

அடிமையென்ற வார்த்தை—இனி
அகில மெங்கும் இல்லை.
கொடுமையைக் குமைத்து வெற்றி
கொட்டி வீர முரைத்தோம்.

ஒன்று சேர்ந்து பணிவோம்—நம்
உலகத் தாயின் அருளை—
என்றும் சுத்தசத்தி யன்னை
இன்பமெல்லாந் தருவாள்.

நான் மதுரையில் மணி ஐயர் பங்களாவில் சிதம்பரம் பிள்ளையைப் பார்த்தேன். நல்ல உயரம்; முறுக்கு மீசை, உரத்த பேச்சு. "இனி அன்னியர் வாலாட்டவா" என்று அவர் சொன்னது நினைப்பிருக்கிறது. அவருக்குச் சிறுவர் கூடி, வந்தேமாதரம் போட்டோம். அவரும் வந்தேமாதரம் என்றார். அவர் தொண்டர், தென்னாடெங்கும் சென்று கப்பல்நிதி வசூலித்தனர். சுதேசக் கிளர்ச்சியைத் தூண்டினர். எங்கள் ஊருக்கும் ஒருவர் வந்தார்.

68. "வந்தேமாதரமா?"

அந்தக் காலம் ஆங்கிலப் பேச்சுக்கே மதிப்பு. கூட்டத்தில் பத்துப் பதினைந்துபேருக்கு ஆங்கிலம் தெரியும் இருநூறு பேர் கூடுவர். தேசாபிமானத்தையும் சுதேசியத்தையும்பற்றி மதுரை தேசபக்தர் அகராதி நடையில் ஆங்கிலம் பொழிவார். ஆங்கில தாஸர் ஆஹாகாரம் செய்வர். மற்றவர் ஆட்டு மந்தைபோல் கேட்டுச் செல்வர். பயன் ஒன்றுமிராது. பிரசங்கி மாலை மரியாதைகளுடன் வண்டியேறுவார். இந்தப் போலித்தனத்தை ஒழித்து, நல்ல தமிழில் பேசினவர் சிதம்பரம் பிள்ளையும் சுப்பிரமணியசிவாவுமே. இவர்கள் தூதர் வந்தார்: செட்டி சத்தரத் திண்ணையில் இறங்கினார். பள்ளிக்கூடம் போகும்போது பார்த்தேன். ஒரு மஞ்சள் நோடீஸ் தந்து "அம்பி இதைப் பள்ளிக்கூடப் பையன்களுக்கெல்லாம் காட்டு" என்றார். "நான் ஊரெல்லாம் தருகிறேன் மாமா... வந்தேமாதரம் என்றால் எனக்குப் பிரியம்" என்றேன். அந்த இடத்தி

லேயே அதை உரக்கப் படித்தேன்: "இந்தியா நமது தேசம்; அதை நாமே ஆளவேண்டும். இப்போது பறங்கியர் நம்மை அடிமைசெய்து ஆளுகிறார்கள். நாடு சுதந்தரம்பெற நாம் சுதேச விரதம் பூண வேண்டும். அதற்கு அன்னிய ஆடைகளை விலக்கிச் சுதேசி ஆடையே அணியவேண்டும். தமிழர் தமிழே பேசவேண்டும். நாம் ஒற்றுமை யாயிருந்து, விடுதலைப்போர் புரிவோம். இதற்குச் சிதம்பரம் பிள்ளை முன்னிற்கிறார். திலகர் தலைமை வகிக்கிறார். அவர்களைப் பின்பற்றி தேசசேவை செய்ய முன்வாருங்கள். வந்தேமாதரம்." நான் படித்த போது அபசகுனவாத்தியார் குறுகுறுவென்று பார்த்துக்கொண்டே வான்கோழி நடைபோட்டுச் சென்றார். தேசபக்தர் என்னுடன் பள்ளிக்கூடத்தை நோக்கிவந்தார். குடியானத்தெருப் பாலத்தில் நின்று வந்தேமாதரம் போட்டுப் பேசினார். நான் கேளுங்கள் என்றேன். யார் கேட்பது? பத்துப்பேர் மஞ்சள் நோடீஸ் வாங்கிக் கொண்டு "இந்த வம்பு நமக்கேனையா?" என்று சென்றனர். நான் "மாமா ஆலமரத்தடியில் பேசினால் கூட்டம் வரும்" என்றேன். பள்ளிக்கூடத்திற்கு எதிரே பெரிய ஆலமரம். அதனடியில் நின்று அவர் பேசினார். இருபது பேர் கேட்டனர். நான் வந்தேமாதரம் போட்டேன். பள்ளிமணியடித்தது. எல்லாரும் பரபரப்புடன் ஓடினோம். நான் மஞ்சள் நோடீஸ் பத்து வாங்கிக்கொண்டு "சாயங் காலம் வருகிறேன்; ஊரெல்லாம் வந்தேமாதரம் போடுவோம்" என்று ஓடினேன்.

வகுப்பிற் பரபரப்பு. என்னைக் கண்டதும் ஆசிரியர் ஒரே பாய்ச்சலில் என் காதைப் பிடித்து "ஹூம் வந்தேமாதரமா? ஜெயிலுக்குப் போகவேணுமா? அதிகப்ரசங்கி...நீட்டு கையை..." என்று ஒரு பிரப்பம் பழம் தந்தார். நான் "வந்தேமாதரம் வந்தே மாதரம்" என்றே வாங்கிக்கொண்டேன். "அந்த ஆளுடன் பேசக் கூடாது. அவர் நோடீஸை வாங்கக்கூடாது..." என்று கண்டித்தார் ஆசிரியர். "ஐயா இந்த நாடு நம்மதுதானே. அதை வெள்ளைக் காரன் ஏன் ஆளவேண்டும்? என்னும்போதே, அவர் என் வாயைப் பொத்தி எனக்குத் தவடைசுத்தி பண்ணினார். வந்தேமாதர ஜபத் துடன் பொறுத்தேன்.

69. தமிழில் ஓட்டினோம்!

மறுநாளே என் கோஷ்டிகளுடன் ஊரெல்லாம் வந்தேமாதரம் கூவினேன். தகர ஜாலராவைத் தட்டிக்கொண்டு "தேசசேவை தெய்வசேவை செய்ய வாருங்கோ" என்று பாடினேன். வீடு சுவர் களில் எல்லாம் வந்தேமாதரம் எழுதினோம். போலீஸ்காரன் பின்னால் வந்தேமாதரம் சொல்லி ஓடுவது ஒரு விளையாட்டு. வெள் ளைத் துரைகள் எங்களைக் கண்டால் "பண்டிமட்ராம் சொல்லாடே" என்பர். நாங்கள் "ஜயஜய வந்தேமாதரம்!" என்போம். அவர்

களுக்குக் கோபம்வரும். சிரிப்போம். அப்போதுதான் பாரதியாரின் "வந்தேமாதரம் என்போம்" என்ற பாடல், எங்களுக்குச் சமய சஞ்சீவியாகக் கிடைத்தது,

சத்தியமூர்த்தி எங்களூர் மாப்பிள்ளை. அவர் ஈ. எஸ். ராமசாமி ஐயர் மகள் கோமதியை மணந்தார். அன்று பள்ளிக்கூடத்தில் எங்களுக்குப் பிரசங்கம்செய்து "மாணவர் தேசபக்தியை வளர்க்கவேண்டும்" என்றார். நாங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டோம். இரவில் எங்களுக்கு தேச சரித்திரம் சொன்னார். அவர் தலைதீபாவளிக்கு மாமனார் வீட்டுக்கு வந்தார். அன்றிரவு நாங்கள் எதிரேயுள்ள சிவன்கோயில் முகப்பில் வந்தேமாதரம் எழுதி ஒட்டினோம்—ஆங்கிலத்தில் Bande Mataram (பந்டேமாடரம்) என்று எழுதியிருந்தோம்; ஆங்கில மோகம் அப்படி ஏறிப் போயிருந்தது. திண்ணையில் இருந்த சத்யமூர்த்தி எங்கள் கூப்பாடைக்கேட்டு வந்து "என்னடா பயல்களா" என்று பார்த்தார். நாங்கள் "வந்தேமாதரம் அண்ணா" என்றோம். அது சரிதான். நீங்கள் அதைத் தமிழில் எழுதக்கூடாதா? என்றதும் நாங்கள் வெட்கித் தலைகுனிந்தோம். நான் உடனே வீட்டுக்கு ஓடி, தமிழில் வந்தேமாதரம் எழுதிக்கொண்டு வந்தேன். "சபாஷ் அதை ஒட்டுங்கள்" என்றார் சத்தியமூர்த்தி. ஏணி வைத்து ஏறி ஆங்கிலத்தைக் கிழித்துவிட்டு, தமிழ் வந்தேமாதரம் ஒட்டிக் கைகொட்டி எழு ஆனைவெடி சுட்டோம். தீபாவளியன்று மாலை ஆறு மணிக்கு ஸத்யமூர்த்தி எங்கள் பள்ளிக்கூட மைதானத்திற்கு வந்தார். எங்களுக்கு பிபின்சந்திரபால் அரவிந்தகோஷ் சரித்திரங்களைச் சொன்னார். ஸ்ரீ அரவிந்தரிடம் நான் அன்புகொண்டேன்.

அந்தக்காலம் அரவிந்தரின் வந்தேமாதரம் எங்கள் ஊருக்கு ஒரே பிரதிவந்தது. ஒரு வக்கீல் அதை வரவழைத்தார். அவரிடம் நான் தினம் சென்று வந்தேமாதரம் கேட்டேன். பிறகு புதுச்சேரியிலிருந்து கவிக்குயில் பாரதியாரின் இந்தியா வந்தது. அதை இரண்டு தரம் படிப்பதுண்டு. சுதேசமித்திரனையும் நான் தொடர்ந்து படித்தேன். இதனால் தேசபக்தி வளர்ந்தது.

நான் முதலில் தீவிரமாகப் பங்குகொண்டது திலகர் இயக்கம்; பிறகு பெசண்டின் சுயாட்சிக் கிளர்ச்சியில் பேசத் தொடங்கினேன். அக்காலமே நான் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக தத்துவத்தையும் ஆராய்ந்தேன்.

70. ஓம் ரூல் கிளர்ச்சியில்

பிரம்மஞான சபையில் வாசகசாலை ஏற்பட்டது. பெசண்டம்மையின் நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் எல்லாம் அங்கிருந்தன. ஓய்விருந்தபோதெல்லாம் நான் அங்கேயிருந்து படித்

தேன். அப்போதுதான் எங்களூர் வக்கீல்களும் தமிழ் பேசத்தொடங்கினர். ஒரு ஆங்கில வார்த்தை கலந்தால் ஒரு பைசா அபராதம் ஓம்ரூல் உண்டியில் போடவேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் தமிழ் நடந்தது. அம்மையார் திருவாசகங்களைப் படிப்பதும் தமிழில் விளக்குவதும் எங்கள் முதல்வேலை. பிறகு நாளுக்கொரு தெருவில் கூட்டம் போட்டோம். அதில் ஏ. ரங்கசாமி ஐயர், என் மூத்தண்ணு ஜ. வே. ராம் முதலியோர் பேசினர். நானும் பேசினேன். வெறும்பேச்சில்லை. பெசண்டு தேசியக்கல்லூரிக்குப் பணமும் வசூலித்தோம். வீடு வீடாக ஓட்டை உடைசல் சட்டிமுட்டி பெட்டி துணிமணிகளை வசூலித்து, கூட்டத்தில் ஏலம்போட்டோம். தேசியக்கல்விக்கு நிதி யனுப்பினோம், பணமெல்லாம் அருண்டேலிடம் போய்ச்சேர்ந்து, பெசண்டுப் பள்ளிக்கூடமாக உருவானது.

71. பி. வி. நரசிம்மையர்

அந்தக்காலம் சேலம். பி. வி. நரசிம்மையர் எங்கள் ஊருக்கு வந்தார். பெரிய ஊர்வலம் வைத்தோம். நானும் அண்ணாவுடன் தேசிய கீதங்கள் பாடினேன். என் அண்ணா லக்னோ காங்கரஸ் பார்த்துவந்து ஊரில் தேசிய உணர்ச்சியைப் பரப்பினார். ஓம்ரூல் சங்கம் கண்டார். அதற்கு வக்கீல் அரங்கசாமி ஐயங்கார் (ஹரிஜன் ரங்கண்ணா) காரிய தரிசி. என் அண்ணா உபகாரியதரிசி. இவரிடமே புத்தகசாலையும் ஓம்ரூல் பிரசாரப் பிரசுரங்களும் இருந்தன. வாரம் ஒருமுறை செட்டி சத்திரத்தில் கூட்டம் நடந்தது. சந்தைக் கூட்டம் தேவலை— அவ்வளவு சத்தம். நான் நீ என்று சளசளப்பர். ஒரு தீர்மானத்திற்கு இரண்டுமணிநேரம் சர்ச்சை நடக்கும். அந்தக்காலம் சிவகங்கை ஓம்ரூல் லீக் என் அண்ணா ஜ. வே. ராமின் காங்கரஸ் கீதங்களை அச்சிட்டது. வக்கீல் நாகசாமி ஐயர் கச்சேரி செய்தார். சிறு புத்தகம், விற்றுப்போனது. ஓம்ரூல் சார்பாக தேசத் தலைவர்களை வரவழைத்தோம். முதலில் வந்தவர் சேலம் நரசிம்மையரே. எனது தோழன் கே. எஸ். வேங்கடராமன் வீட்டில் அவர் இறங்கினார். ஆள் ஒல்லி, மூளை அபாரம். மிதமாக உண்பார். சந்தி ஜபம் ராமாயண பாராயணங்களை ஒழுங்காகச் செய்வார். ஆங்கிலத்தில் புலவர்: என்றாலும் சட்டசபையிற்கூடத் தமிழ் பேசத்தொடங்கினார். அவர் செட்டி சத்திரத்திலும் கோயில் முன்பும் பேசினார், நல்ல கூட்டம். மஹாத்மா காந்தியைப்பற்றி அவரே முதன் முதல் தெளிவாகப் பேசக்கேட்டேன். காந்தி சர்க்கா சுற்றுவதையும் அவர் வர்ணித்தார். சத்தியாக்கிரக தத்துவத்தை விளக்கினார். இரவில் பெரிய ஊர்வலம் நடத்தினோம். ஒவ்வொரு தெரு முனையிலும் நின்று வந்தேமாதரம் பாடி சுயாட்சிப் பிரசங்கம் செய்தோம். ஐயரும் கூடவே வந்தார்.

72. வரதராஜுலு நாயுடு.

அடுத்தபடி வந்தார் வரதராஜுலு நாயுடு. அந்தக்காலம் அவர் அசல் வைஷ்ணவ கனவானுயிருந்தார். நாமம் பஞ்சகச்சம் அங்கவஸ்திரம் எல்லாம் உண்டு. மஞ்சள் கோட்டுப் போட்டிருந்தார். தலையில் சிகையுண்டு. பிற்காலம் கிராப்பும் கால்சராயும் குடுத்துணியும் அணிந்தார். டாக்டர் நாயுடு இனிய பேச்சாளர். நிதானமான போக்குடையவர். அவர் நான்கு நாள் பிரசங்கம் செய்தார். கோயிலுக்கு முன் நமது நாடு, அரண்மனைக்கு முன் தற்கால நிலைமை, அன்னியர் ஆட்சியின் தீமை, பிள்ளையார்கோயிலுக்கு அருகே சுதந்தர இந்தியா என்பதுபற்றிப் பேசினுர். நான் குறிப்பெடுத்து எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். அவருக்குப் போட்டியாக மதுரை திராவிடக்கட்சி ராமநாதர் வந்தார். டாக்டர் நாயுடுக்கு ஜே என்ன வேண்டியது தான்; அந்தப்பக்கம் திராவிட சிங்கம் ராமநாதனுக்கு ஜே என்று பலத்த சத்தம் கேட்கும். இரண்டா நாள் எங்களுக்கு முன் திராவிடக் கூட்டம் அரண்மனை மைதானத்தை ஆக்ரமித்துக்கொண்டது; நாங்கள் எதிரே கூட்டம் போட்டோம்; வழக்கப்படி கேள்விகள் கேட்டுக் கைதட்டி திராவிடத் தோழர் கூட்டத்தைக் கலைத்தனர். "பார்ப்பன சுயாட்சி வேண்டோம்...பார்ப்பனிய நாயுடு ஒழிக!" என்று பெரும் கூச்சலுடன் ஒரு பெரிய பன்றியை ஏவினர். அது அப்போதுதான் சாக்கடை ஸ்நானம் செய்து, வாராக ராகம் பாடிக்கொண்டு தாவி வந்து கணேசையர் தோளில் இடித்து மற்ருெரு சாஸ்திரி மடியில் தாவி வளைந்து ஓடியது. கூட்டம் குழப்பமாய்க் கலைந்தது. திரு. ராமநாதனுர் "பிராமணச்சேரி ஒழிக" என்று ஆசிர்வதித்தார். நாங்கள் வந்தேமாதர கோஷத்துடன் விளக்குகளைத் தூக்கிக்கொண்டு கௌரிப் பிள்ளையார் கோயில் அருகே போய், டாக்டர் நாயுடு காருவைத் தொடர்ந்து பேசச்செய்தோம். நாங்கள் எதிர்த்திருந்தால் போர் நடந்திருக்கும். அமைதியாகவே எங்கள் காரியத்தைப் பார்த்தோம். அன்றுமுதல் எங்கள் ஊரில் காங்கரஸ் வாதிகளுக்கும் ஜஸ்டிஸ் தோழருக்கும் தர்க்கம் நடந்தது...போட்டி வலுத்தது. டாக்டர் நாயுடு' பிரமஞான சபையில் இறங்கியிருந்தார். நான் அவருடன் நெருங்கிப் பழகினேன். கால நிலையை அறிந்தேன். ஒருநாள் இரவு நாங்கள் பேசிய போது ஜன்னலோரத்தில் ஓர் ஆள் ஒண்டிக்கேட்டான். நானும் மெல்லச் சென்று அவன் குடுமியை இழுத்தேன். அண்ணு சட்டென்று விளக்குக் கொண்டுவந்தார். அவன் ஒற்றன். மன்னிப்பு கேட்டுக் கொண்டு சென்ருன். ஒற்றர் நரிவேலையை நான் அப்போது அறிந்தேன். அந்தக்காலம் திராவிடக் கட்சி சர்க்காரின் செல்லப்பிள்ளையானது. "சுயாட்சி பிராமண ஆட்சி அப்ராமணர்களே கவனம்" என்ற சுலோகத்தை கோஷித்தார் டாக்டர் நாயர். அதன் அனுபல்லவி தியாகராய செட்டியாரின் "பார்ப்பானை ஒதுக்கு" என்பது. எங்கள்

ளரில் அந்தக்கட்சி பலம்பெற்றது. அக்காலமே நான் வீடு வீடாகக் காங்கரஸ் பிரசாரம் செய்தேன். திரு. ராமநாதன் எனது தமிழுணர்ச்சியை மெச்சினர். இருவருக்கும் தர்க்கம் பலமாக நடந்தது.

73. தோழரே !

சைவப் புலவர் நல்லசாமி பிள்ளை மகன் ராமநாதர். நல்லசாமி பிள்ளை தெய்வபக்தர், தமிழ் நேசர். சித்தாந்த சரபம். மெய்கண்டாரை ஆங்கிலமாக்கிய புலவர். திரு. ராமநாதனை நான் மதுரையிலேயே அறிவேன். ஒரு நாள் இருவருக்கும் பேச்சு வலுத்தது :

அவர் : பார்ப்பானுலேதான் தமிழகம் கெட்டது. தமிழின் பத்தித்தன்மையைக் கெடுக்க பார்ப்பான் சமுஸ்கிரதம் கலந்தான். தமிழ் மக்களின் சுயமரியாதை கெட தர்ப்பைக் கட்டைபிடித்து புரோகிதப் புரட்டைத் தொடங்கினுன். எல்லா வேலைகளிலும் புகுந்து நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பங்கு சர்க்கார் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறுன். பார்ப்பானுக்கு இனி வேலைதரக்கூடாது. திராவிடர்களைச் சூத்திரர் பறையர் என்று இழிவு செய்து தாழ்த்தியிருக்கிறுன். சாதிமத வேற்றுமைக்குக் காரணம் பார்ப்பானே. நாய் பன்றி பார்த்தால் பரவாயில்லை. நாங்கள் பார்த்துச் சாப்பிட்டால் திட்டி தோடமாம். பார்ப்பனக் கொடுமையை ஒழிப்போம். திராவிடம் வாழ்க...

நான் : தோழரே, நான் தமிழன் ; சாதிமதப் பித்தம் எனக்கில்லை என்பது தங்களுக்குத் தெரியும். தீண்டாமை பாராமை தொடாமை ஒரு ஆமையும் இங்கில்லை. பொருமையும் இல்லை. தமிழ் உள்ளத்துடன் பேசினுல், தமிழ் உணர்ச்சியுடன் கேளும். உலகம் ஒருமையை நோக்கி முன்னேறுகிறது. அந்த வேகத்தில் சாதி மதம் தீண்டாமை இனச்செருக்கு எல்லாம் அழிந்தொழியும். தகுதியால் முன்னேற்றம் ; ஆற்றலால் உயர்வு என்ற உண்மை இயல்பாகும். நாம் கூச்சலிடாமலே காலசக்தி வேலை செய்து வேறுபாடுகளை ஒழிக்கும். ஆனுல் ஒன்று கவனிக்கவேண்டும். உடனுண்ணலாம் ; ஆனுல் எல்லாரும் ஒரே வகை யுணவை உண்ணமுடியாது. நீர் வேளாளர். வீட்டில் சோறும் பருப்பும் உண்கிறீர். சேரிச் சாம்பான் வீட்டில், மாட்டிறைச்சியுண்பீரா ? நீர் திராவிடரானுல், அவன் உமக்கு முன் இருந்த ஆதி திராவிடனன்றே ? அவன் சுத்தமாயில்லை, அழுக்குப்பிடித்த உணவை உண்டால் நோய்வரும். ஆதலால் சமத்துவத்திற்கு முன் சுத்தமாயிருக்கவேண்டும் என்பதை ஒப்புகிறீர். சாக்கடைப் பன்றியும் உயிர், சங்கரரும் உயிர் · இருவரும் ஏன் சேர்ந்திருக்கக்கூடாது என்று பேசமாட்டீர். நமது சமுதாயம் தூய்மையுறவேண்டும், வாய்மையுறவேண்டும் ; சமத்துவம் தேடிவரும்.

இப்போது அப்பிராமணக் கிளர்ச்சியைப் பார்ப்போம் ; இதன் பின்னே சர்க்கார் உள்ளது. நமது நாட்டுக்கு உரிமை தரக்கூடாது

என்பதற்கு இந்தப் பிரிவினையைக் காட்டுகிறார்கள். அவர்களே பிரித்து ஆளுகிறார்கள். நாமும் பிரிவினை பேசி உட்கலகம் மூட்டினால், விடுதலை வராது ; என்றும் அடிமையாயிருக்க வேண்டியதே. பார்ப் பான் வீடு நிலத்தை அடகுவைத்தோ, பிச்சை வாங்கியோ வருந்திப் படித்துப் பட்டம் பெறுகிறான். உத்யோகம் கிடைக்கிறது. அதே உத் யோகத்தை எல்லாரும் பெறத் தடையில்லையே ! பிரிடிஷ் சர்க்கார் பிராமணனுக்குத்தான் வேலை என்கிறதா ? இல்லை. அதற்கு மாறாக பிராமணனுக்கு வேலை கிடைப்பதே அரிதாயிருக்கிறது. மேலும் வேதம் படித்து ஓமஞ் செய்யும் பிராமணர் எத்தனை? அந்தணரே நூற்றுக்கு மூன்று; அதில் சமுஸ்கிரதம் அறிந்தவர் நூற்றுக்கு இரண் டொருவர். வேதக்கலை தேர்ந்தவர் முப்பது நாற்பது பேர் இருக்க லாம். இவர்களுக்காக இரண்டு கோடித் தமிழர் ஏன் அஞ்சவேண்டும்? இவர்களும் காலப்போக்கில் கலப்புமணங்களால் மற்றவர்களுடன் கலந்துபோவார்கள். தீண்டாமை இனி வேண்டாமையாகும். நாடு சுதந்தரம் ஆனால், சமுதாய ஒற்றுமை இயலும். அன்னியர் கத்திரிக் கோல்போட்டு அமுல் செலுத்துகிறார்கள். அவர்களுக்குக் கையாளா யிருந்து நாட்டைக் காட்டிக்கொடுப்பதா தமிழனுக்கு அழகு ? நாடு முழுதும் யூனியன்ஜாக்கிற்கு அடிமை: அடிமையில் ஆரிய அடிமை யென்ன, திராவிட அடிமையென்ன ? நாம் மனிதராகவேண்டுமானால், நாடு உரிமைபெறவேண்டும். வீட்டை அந்நியனுக்கு விட்டு, அண்ணன் தம்பிகள் சோற்றுச் சண்டை போடுகிறார்கள். வந்தவன் சோற்றை அள்ளிச்செல்கிறான். நமக்குச் சண்டையே மிச்சம். கப்பலில் ஓட்டை யிருந்தால் அதை அடைத்துக் கப்பலோட்டல் நல்லது. ஓட்டைக் கப்பலை உடைத்தெறியலாமா? மதுரைக்கு ரயிலேறுகிறோம். கிடைத்த இடத்தில் அமர்ந்து செல்வது நல்லது. எனக்கு ஜன்னல் பக்கமே வேண்டும் : இன்றேல் ரயிலையே தகர்ப்பேன் என்பது பொருந்துமா ? முதலைவாயில் குழந்தை அகப்பட்டுத் தவிக்கிறது ; அதைக் காக்காமல் குழந்தையின் நகையைப் பங்குபோடச் சண்டை செய்வதா நீதி ? காங்கரஸ் பிராமணச் சூழ்ச்சியில்லை. அதைக்கண்ட ஹ்யூமும் வெட் டர்பர்னும், வெள்ளையர். அதில் சாதிமத பேதமில்லாமல் திலகர், அபுல்கலாம், லாலாலஜபதிராய், பனர்ஜீ, கோகலே, சிதம்பரம் பிள்ளை, காந்திமகான் எல்லாரும் சேர்ந்திருக்கிறார்கள். நாட்டுக்குச் சுதந்தரம் வேண்டும் ; நம் வீட்டை நாமே நிர்வகிக்கவேண்டும். அன் னியர் கொள்ளையை ஒழிக்கவேண்டும். நம் ஆடை, நம் தேவைகளை நாட்டிலேயே நம் உழைப்பினால் அடையவேண்டும். அன்னியப் பொருள்களை விலக்கினால், பணம் மிஞ்சும்; வளம்பெருகும். அன்னியக் கல்விமுறை நம்மைக் கெடுக்கிறது. நமது கலைப் பண்பிற் கேற்ற கல்வியை வளர்க்கவேண்டும்.

கள் கஞ்சாபுகையிலைபோன்ற தீயபொருள்களை ஒழிக்கவேண்டும். சாதிமதபேதம் தீண்டாமை போன்ற தீமைகளை விலக்கி, எல்லாரும்

ஓரினமாக, எல்லாரும் இந்தியா மக்களாக வாழவேண்டும்—இதுதான் காங்கரஸ் கொள்கை. இதில் பார்ப்பனீயம் என்ன இருக்கிறது? சூழ்ச்சி எது? அரசாங்கச் சலுகையால் இன்று பேசுகிறீர். நாளையே அதே அரசாங்கம் 144 போட்டால்...கப்சுப்!

இந்தமாதிரிப் பேசினேன். கேட்டார் கைதட்டினர். ராமநாதன் சிந்தனையில் ஆழ்ந்து, "உம்மைச் சொல்லவில்லை. நீர் தமிழுக்கே வாழும் சமரஸ வீரர். தமிழர் பிழைப்பைக் கெடுக்கும் பேராசை பிடித்த போலிகளையே சொல்லுகிறேன்..." என்று நயந்துகொண்டு முடிவில், "தாங்கள் கலை நூல்கள் எழுதிக்கொடுங்கள், அச்சிடுகிறேன்" என்று எழுந்தார்.

நான் சொன்னபடியே இரண்டாண்டுகளுக்குப் பிறகு மதுரையில் ராமநாதனுக்கு 144 கிடைத்தது. ஹார்வீ மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் பலமாக நடந்தது. வரதராஜுலு நாயுடு வைகை மணலில் கூட்டம்போட்டுப் பேசினார். அதே கூட்டத்தில் திராவிடச் சிங்கத்தைப் பார்த்தேன். "நீர் சொன்னபடியே 144 வந்தது. உணர்ந்தேன்" என்றார்.

74. சமூகசேவை

நான் சிலகாலம் சமுதாய சீர்திருத்தப் பணியிற் புகுந்தேன். அந்தணரைக் காலத்திற்குத் தக்கபடி விசால மனதுடனிருக்க வேண்டினேன். சர்க்கார் உத்தியோகத்திற்குப் போட்டி போடாமல், கைத்தொழில் கற்றுப் பிழைக்கும்படி வற்புறுத்தினேன். கைம்பெண் கண்ணீர், கிழட்டுமணம், வலுமணம், குழந்தை மணம், தீண்டாமை, மதுபானம், இவற்றை நீக்க அங்குமிங்கும் பணிசெய்தேன். கொட்டகுடிச் சேரியில் அன்பருடன் புகுந்து திருக்குலத்தாருக்குக் கல்வியும் தூய வாழ்வும் வர முயன்றேன். கட்குடியை ஒழிக்கப் பாடுபட்டேன். பத்துப்பேர் குடி நிறுத்தினர். முப்பது ஹரிஜனப் பிள்ளைகள் நான் தொடங்கிய ஐயனார் கோயில் பள்ளிக்கூடத்தில் படித்தனர்.

ஒருசமயம் மதுரையிலிருந்து ஜார்ஜ் ஜோஸப் வ்ந்தார். அழகான ஆங்கிலத்தில் நாட்டின் முற்கால தற்கால பிற்காலம் பற்றிப் பேசினார். என் அண்ணாவும், ஏ. ரங்கசாமி ஐயரும், அவர் பேச்சை மொழி பெயர்த்தனர், நான் குறுக்கெழுத்தில் எடுத்துப் பத்திரிகைகளுக்கனுப்பினேன். ஜோஸப் என் அரிய நண்பரானார். அவரை மதுரையில் அடிக்கடி பார்ப்பதுண்டு. அவர் வீட்டிலேதான் மஹாத்மா காந்தியையும் முதல் தடவை பார்த்தேன். மஹாத்மா தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகத்தையும், வள்ளியம்மை தைரியத்தையும் நாகப்பன் தியாகத்தையும் புகழ்ந்தார். மஹாத்மாவின் தரிசனம் என் வாழ்விற்குப் புதிய எழுச்சி தந்தது.

அக்காலமே நான் திலகரை மாநுமதுரையில் கண்டேன். இந்தச் சிறிய ஆளா பிரிடிஷ் சர்க்காரை இப்படி ஆட்டி வைக்கிறார் என்று வியந்தேன். கண் மீசை இரண்டும் மறக்கமுடியாத அம்சங்கள். நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, உரத்த பேச்சு உரம்பெற்ற கொள்கை இவையே திலகர். "அர்ஜுனராயிருங்கள்; கிருஷ்ணன் விடுதலை தருவான்; இனி அன்னியர் நமது நாட்டில் இருக்க முடியாது. சுதந்தரக் கனல் அடிமைத் தளைகளைச் சுட்டெரித்துவிட்டது. நாட்டுக்காகப் போராடும் ஜயவீரர்களாயிருங்கள்" என்பதே அவர் சொற்சுருக்கம். திலகர் காட்சி எனது தேசாவேசத்தை ஜ்வாலையாகத் தூண்டிவிட்டது; சமுதாய சேவைக்குப் புதிய சக்தி யளித்தது.

75. வீரப்பயிற்சி

1915 ஜர்மன் யுத்தம் டாம் டாம் என்று குண்டுபோட்டது. அதன் எதிரொலி சென்னையிலும் கேட்டது. எம்டன் கப்பல் இங்கே திருவிளையாடல் நடத்தியது. ஜர்மன் ஒற்றர் இங்கே வேலை செய்தார்கள். "ரேம்ஸ் மாதாகோயில் தகர்ந்ததுபோல், சென்னை ஹைகோர்ட்டும் தகரும்; ஜெப்பலின் குண்டு விழும். இண்டன்பர்க்குகூட இந்தியாவைப் படையெடுத்து வருவார்" என்ற பொய் வதந்தியுடன் பயமும் பரவியது. கருங்கடலில் கடும்போர் நடந்தது. அரபியாவில் குருவளிப்போர் நடந்தது. துருக்கியும் ஜர்மனியைச் சேர்ந்தது. அதைச் சுற்றிலும் எமகண்டப்போர் நடந்தது. இந்தப் போரில் இந்தியர் பணமும் இரத்தமும் கொட்டினர். இந்தியா மந்திரி, மண்டை பெருத்த மாங்தெகு, புதிய சீர்திருத்தம் தருவதாகச் சொல்லி, வந்து பிரசாரம் செய்தார். திலகர் காந்தி பெசண்டு அனைவரும் போருக்கு ஆள்சேர்ப்பதில் தலைப்பட்டனர். திருச்சியில் இந்தியப் பாதுகாப்புப் படைக்குப் பயிற்சி நடந்தது. எனது நண்பர் பலர் பயிற்சிபெற்று பஸ்ராவுக்குச் சென்றனர். நானும் அந்தப் பயிற்சி பெற முயன்றேன். எனக்கு முதற் சிகிச்சைப் பயிற்சிதான் கிடைத்தது. டாக்டர் கோபாலன் உடல்கூறு, காயங்களுக்கு வைத்தியம், புண்கட்டுதல், நோயாளரைத் தூக்கிச்செல்லல் போர்க்களத்தில் சிகிச்சை நிலையம் அமைத்தல், ஆகிய அம்புலன்ஸ் பயிற்சியளித்துச் சோதனை செய்தார். நான் முதலாவதாகத்தேறி பானர்மான் கையெழுத்திட்ட பத்திரமும் வாங்கினேன். அதைத் தொடர்ந்து ராணுவ நூல்களையும் வைத்திய நூல்களையும் படித்தேன். துப்பாக்கி கூடப் பாக்கிவிடாமல் பழகினேன். பிறகு டாக்டர் வேலைக்குப் படிக்கப் பெருமுயற்சி செய்தேன். ஒருதரம் பிணம் அறுப்பதைப் பார்த்து உடல் குடல் அமைப்புகளை அறிந்தேன், கசாப்புக்கடை சாகெபு ஒருவர் எனக்கு உடல்கூறு காட்டினார். சுடுகாட்டில் எலும்புகளைப் பொறுக்கிவந்து ஆராய்ந்தேன். பிறகு எங்களூர் மிருக வைத்தியரிடம் விலங்கு நூலும் ஆராய்ந்தேன். வெடரினரி டாக்ட

ருக்குப் படிக்க விரும்பி, சென்னை வெடரினரி கல்லூரித் தலைவர் ஏய்ச்ஸ னுக்கு மனுப்போட்டேன். 'நேரே வா' என்றெழுதினர். புறப்படத் தயாரித்துக் கொண்டபோது உள்ளெச்சரிக்கை! "டே இதெல்லாம் உன் வேலையில்லை!" டக் என்று திரும்பினேன். ஸர்வே எஞ்சினீரிங் படிக்கும் நண்பருடன் அந்த வழியில் பயின்றேன். மறுபடி மனச் சாட்சி "டே இது உன் வேலையில்லை!"

ஒரு நாள் அப்பா "ஒரு வேலை வெட்டி பார். போடுமனு" என்ருர். நான் மில்டன் நடையில் கவிதையெழுதி உள்ளூர் கோர்ட்டு களுக்கு மனுச்செய்தேன். கலெக்டருக்கு மனுப்போட்டேன். பய னில்லை. சிவஞானம்பிள்ளை ஒருவரே நேரே வாரும் என்றெழுதினர். பார்த்தேன்; காலி யிருக்கும்போது உத்தரவு அனுப்புவோம் என்ருர். பிறகு முனிசிப் கனவானைக் கண்டேன். பேசாமல் கவிபாடிக்கொண்டிரு என்ருர்.

A post ! a call !
That is all !
To free my life
From daily strife

என்றேன்.

சிரஸ்தாரைப்பார்த்தேன் "இதெல்லாம் உனக்கேனப்பா. நாடகக் கம்பெனியிலே சேர்ந்தால் ராணியாயிருக்கலாம்" என்ருர். ஸப்ஜட்ஜைப் பார்த்தேன் "உன்புலமையைப் பாழாக்காதே. "ஆசிரியர்வேலைக்கு முயன்று இலக்கியத்துறையில் புகு". என்று பொருத்தமாகச் சொன்னர் கோபால்ராவ். மற்ருெரு உத்தியோக கனவானிடம் மனுக் கொடுத்தேன். "நீபோய் கவலையில்லாமல் தூங்கு. காலி வரும்போது தகவல் வரும்; பிறகு இங்கேவந்து தூங்கலாம்" என்று சிரித்தார். நான் வெளியேவந்தேன். பரட் பரட் என்ற சத்தம் கேட்டது. என் விண்ணப்பம் குப்பைக்கூடைக்குப்போனது. "இனி இந்தக் கச்சேரிமுகத்தில் விழிப்பதில்லை" என்று ஹனுமார் கோவிலுக்கு வந்தேன். அங்கே என்னுடன் எட்டாவது மட்டும் படித்து விட்டவன், காதில் பேனுசெருகிக்கொண்டு 'ஹனுமாருக்கு விழுந்து விழுந்து நமஸ்கரித்தான். "நண்பா எங்கேவேலை?" என் றேன். "முனிசிபு கச்சேரியில் காபிஸ்டு" என்ருன் "எப்படிடா உனக்கு வேலைகிடைத்தது?" "எல்லாம் ஹனுமார்கிருபையால்" என் அப்பா அர்ச்சகர். அவர் அனுமாருக்குச் சாத்தும் வடைமாலையில் ஒன்று நிவேதித்து முனிசிபு...ராயருக்குச் சேவை செய்தேன். ஆறு மாதம் அம்மாமிக்குச் சமையல் செய்துபோட்டேன். என் பேளா ஹுளிக்குக் கிடைத்த பரிசுதானப்பா காபிஸ்டு வேலை'' எனக்கு எந்த அம்மா சிபார்சும் இல்லை.

வாலைப் பிடித்து வசைதாங்கி மேலேசமான்
காலைப் பிடிக்கும் கதி வேண்டேன்—வேலைக்குக்
கெஞ்சி யலையாது கேடில் சிவபாதம்
கொஞ்சு மகிழ்வே குறிப்பு.

என்று நடராஜா சந்நிதிக்குச் சென்றேன். தியானித்தேன். அஞ்சாதே என்றது மனச்சாட்சி. இதற்குள் நான் குறுக்கெழுத்தும் கையச்சும் கற்றேன். நானாகவே கற்றேன். டைப் நன்றாயடித்தேன். ஷார்ட்ஹாண்டு விரைவாக எழுதினேன், பரீட்சைக்குப் போனேன். மதுரை தொழிற் கலாசாலையில் டங்ஹில் தலைமையில் பரீட்சை நடந்தது. டைப் பரீட்சைக்கூடம் கருடமண்டபம் உலகைக்கூடம் போல், படபடச் சத்தம் நிறைந்தது. குறுக்கெழுத்து டிக்டேஷனும் பரீட்சையும் நடந்தன. ஆறு ரூபா கட்டினதே மிச்சம், நான் பிராக்டிகல் டெஸ்டிற்குப் போகவில்லை. மனச்சாட்சி "இதுவா உன் வேலை?" என்றது. பிறகு எது என்வேலை?

76. கல்விப்பணியே பணி

பொன்னு குளத்திற்குக் குளிக்கப் போனேன். அங்கே எனது நண்பர் "வாடா வாடா சாமியார், இங்கே பிக்னிக்" என்றனர். சரி என்று நானும் சமையலில் பங்குகொண்டேன். பகாளபாத்து வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு வருவல், பார்க்காய் பிட்லே, அப்பளாம் எல்லாம் செய்தோம். வேலை செய்து முடித்து நீந்திக் குளித்து வந்து, நன்றாகச் சாப்பிட்டோம். அப்போது வாசலில் ஏழைகளின் கூக்குரல் கேட்டது. இந்த விருந்துக்குச் செலவான பண்டங்கள் அறுபது ஏழைகளுக்குப் போதுமே. அறுபதுபேர் சாப்பாட்டை யல்லவா அறுவர் சாப்பிட்டோம் என்று நொந்தேன். பாதி சாப்பிட்டு மிச்சத்தை ஒரு ஏழைக்குத் தந்தேன். நண்பர் அரட்டையும் சிட்டுமா யிருந்தனர். நான் கிராமத்திற்குச் சென்று, சுற்றிப் பார்த்தேன். ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பத்துப் பிள்ளைகள் அரிக்குழி தோண்டி, ஒரேனெண்ணு முறை வைத்தனர். மற்றப் பிள்ளைக ளெல்லாரும் கோவணம் கட்டிக்கொண்டு திரிந்தார்கள். உடம்பெல் லாம் அழுக்கு, கூழ்கூட அரைவயிற்றிற்கே. ஹா, நமது நாடு இப்படிப் பஞ்சமும் கவலையும் இருளும் கண்ணீருமாயிருக்கிறதே என்று ஏங்கினேன். "இவர்களுக்குத் தொண்டு செய். அறிவை வளர், அறிவைத் தா" என்றது மனச்சாட்சி. கல்விப் பணியே பணி என்று கண்டேன், வீட்டுக்கு வந்தேன்.

மானாமதுரைப் பள்ளிக்கூடத் தலைவர் வந்திருந்தார். அவர் எனது நண்பர். நான் வந்ததுமே முகமலர்ந்து, "வா மானா மதுரைக்கு, என் பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கலாம்" என்றார்.

"அம்மாளும் நான் சமைத்துப்போட வருகிறேன், புறப்படு" என்றாள். "நான் பார்த்து வருகிறேன்" என்று கிளம்பினேன். பள்ளிக் கூடத்தைப் பார்த்தேன். நான் அங்கே வேலை பார்த்தால், சோறு துணிக்கு பஞ்சமில்லை. ஆனால் ஆயுளெல்லாம் ஒரே பாடத்தைச் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும். அறிவு வளராது. என் வாழ்வின் சிறந்த எண்ணங்கள் நிறைவேறா. யோசித்துச் சொல்லுகிறேன். என்று சாதாசிவப் பிரமேந்திரர் இருந்த இடத்திற்குச் சென்றேன். மனம் உள்ளே திரும்பியது. தியானித்தேன். கண் விழித்தபோது அந்தி படர்ந்தது. அங்கே எதிர்பாராமல் பெஜவாடா ராமசாமி ஐயர் வந்தார். அவர் அந்த ஊர் உயர்ப்பள்ளித் தலைவர் என்று அறிந்தேன். என்னை அவர் அறிவார்.

அவர்: எங்கே வந்தாயப்பா? ஏன் இங்கே இருக்கிறாய்? என்னவேலை?

நான்: அறிவை வளர்த்து, அறிவைப்பரப்பும் வேலையே என் வேலை.

அவர்: மெய்தான். நீ முதலில் அறிவை நன்றாக வளர்க்க வேண்டும். பிறகு ஆசிரியர் கலாசாலையில் படி; அப்புறம் வா, நானே வேலை தருகிறேன்.

நான்: அதுதான் எண்ணம். காலத்தை வீணாக்காமல் கற்பன கற்கவேண்டும். கற்றது சிறிது; கற்பன பெரிது.

இதன் பிறகு இலக்கியச் சோலையிற் புகுந்தோம். கம்பனையும் ஷேக்ஸ்பியரையும் பருகினோம். மாலை ஏழுமணிக்குக் கால் நடையாகக் கிளம்பிப் பதினொருமணிக்கு நடந்து வீட்டுக்குவந்தேன். மனம் ஏதேதோ நினைத்தது. மனச்சாட்சி "நான் காட்டிய வழியில் செல்..." என்றது. ஒருவாரம் ஏதோ குழப்பம்...? இங்கா அங்கா, இதுவா அதுவா...என்ற திகைப்பு...

77. புத்தகசாலை

ஒரு நாள் பிரமஞான சபைக் கிணற்றில் குளித்து, கீதை படித்துக் கொண்டிருந்தேன். எஸ். எம். நாராயணசாமி ஐயர் குரல் கேட்டது.

அவர்: நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

நான்: நல்ல நூல்களைப்படித்து அறிவை வளர்க்கிறேன்...

அவர்: சரி நீ நாளை முதல் புத்தகசாலையைப் பார்த்துக்கொள். நிரம்பப் படிக்கலாம். வா பத்து மணிக்கு...

நான்: நமஸ்காரம் வந்தனம்.

மறுநாள் சாம்பமூர்த்திக்குப் பூஜை செய்தேன். அப்பா அம்மாவை நமஸ்காரம் செய்தேன். ஆசிபெற்றேன். அன்று கோட்டை மாட்டிக்கொண்டேன். பழைய செட்டித் தலைப்பாகையை வைத்துக் கொண்டேன். கோயில் மணி அழைத்தது. நடராஜா சந்நிதிக்குச் சென்றேன்.

உள்ளப் பெருவெளியில் ஓங்கு நடம்புரியும்
வள்ளலே ஞானம் வளர்ந்தோங்கி—உள்ளபடி
நின்று நடந்து நிலையான நன்மைக்கே
என்றுந்தொண் டாற்றவரு ளே ..

இந்தப் பாமாலையைச் சூட்டித் திருநீறிட்டுக்கொண்டு சென்றேன். தலைமை ஆசிரியரை வணங்கினேன். அவர் என்னைப் புத்தகசாலைக்கு இட்டுச்சென்று சாவிகளைத்தந்து "இப்படிச்செய் அப்படிச்செய்" என்று வழிகாட்டினார்.

மனம் குளிர்ந்தது; அழகான கட்டிடம். குளுகுளு வென்று காற்று வீசுகிறது. நிம்மதியான இடம்; ஏராளமான நூல்கள். சுதந்தரமாகப் படிக்கலாம். நாள் முழுதும் அங்கேதான். ஆசிரியருக்கு வேண்டிய நூல்களைத்தந்து பதினைந்து நாளுக்கு ஒருமுறை வாங்கி வைக்க வேண்டும். எட்டாவது ஒன்பதாவது பத்தாவது மாணவருக்கு வாரம் இரண்டுதடவை வாசிப்பு வகுப்பு நடத்தவேண்டும். புத்தகங்களைத் தந்து படிக்கச் செல்லி, படித்த சுருக்கம் எழுதச்செய்து, பார்க்க வேண்டும். எல்லாம் எனக்கு நல்ல பயிற்சியளித்தன. என் ஆங்கிலம் அந்த இடத்திலேதான் உருவானது. பி. ஏக்குப்படிக்கும் இரு நண்பர்-ஆசிரியர் என்னிடம் வருவார். படிப்போம்; நான் படித்த சுருக்கத்தை எழுதித்தருவேன். இப்படி பி. ஏ. நூல்கள் அனைத்தையும் படிக்க முடிந்தது. புத்தகசாலை முழுதும் ஒழுங்காக அடுக்கிப் புதிய எண்கள் போட்டு வரிசைப்படுத்தினேன். எந்தப் புத்தகம் கேட்டாலும் உடனே எடுத்துத் தரமுடிந்தது. தமிழ், ஆரியம், ஆங்கிலம், சரித்திரம், பூகோளம், பௌதிகம், ரசாயனம், தாவரம் உயிர் நூல், கணிதம், என்று பாகுபடுத்தி, ஒவ்வொன்றிலும் உள்ள அரிய நூல்களையெல்லாம் படித்தேன். படிக்கப்படிக்க என் கல்விப்பசி பெருகியது. இரவில்கூட அங்கே படிப்பதுண்டு. பேச்சை மிகவும் சுருக்கினேன். சமுஸ்கிரத அறிவையும் தமிழறிவையும் வளர்த்தேன். எனக்கு நானே ஒரு சர்வ கலாசாலையை ஏற்படுத்திக்கொண்டேன். மனச்சாட்சியே என் ஆசிரியர்.

ஷேக்ஸ்பியர் மோலியர், கோல்ட்ஸ்மித், தாந்தே, மில்டன், கெத்தே, ஓமர், விர்ஜில், தாகூர், காளிதாஸன், கம்பன் போன்ற புலவர் நட்பைவிட எனக்கென்ன இன்பம் வேண்டும்? ஸ்காட், எலியாட், மார்லி, விக்தர் ஹ்யூகோ, டிகென்ஸ், அடிஸன், தோல்ஸ்தாய் முதலி

யோர் கதைகளைப் படித்துப் பரவசமானேன். பேகன், எமர்ஸன், லாம்ப், கார்லைல், ஸ்டீல், ஸ்மைல்ஸ், மெக்காலே, ஸ்டீவன்ஸன், கிராபோர்ட், ஜான்ஸன் முதலிய பேராசிரியர் நடைகளைக்கண்டு நானும் அன்ன நடை பயின்றேன். கிப்பன், பூரே, ராலே போன்ற சரித்திராசிரியர்களுடன் அளாவளாவினேன். உலக வீரர் சரித்திரங்களை ஆர்வமுடன் கற்றேன். இந்திய சரித்திரத்தை முறையாக ஆராய்ந்து எனது அன்னைக்கு ஒரு மணிமகுடம் சூட்டக் கருதினேன். பௌதிக ரசாயன கணித நூல்களைச் சிறிது ஆராய்ந்தேன். இப்படி ஆத்ம கலாசாலையில் பயின்றேன். கல்லூரியைவிட ஆத்ம கலாசாலை பத்து மடங்கு பயனைத் தந்தது. அங்கே அரட்டை குறட்டைகளில் காலம் வீணாகும். இங்கே ஒரு நொடிகூட வீணாகவில்லை. இத்துடன் தலைமை ஆசிரியர் தமது மூத்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேட வெளியூர்களுக்கு அடிக்கடி சென்றார். மாணவரைப் பார்த்துக் கொள்ள எனக்கு வாய்ப்பு வரும். அந்தச் சமயங்களில் மாணவருக்கு நல்ல இலக்கியங்களைப் படித்துக் காட்டி மகிழ்விப்பேன். லைப்ரரி வகுப்பிலும் அவ்வாறே படித்துக் காட்டுவேன். கற்றதைத் தெளிவாகச் சொல்லவும் பயின்றேன். இந்தக் காலமே நான் அரிய நாடகங்கள் எழுதினேன். ஜயவீரன், பத்மாவதி, பிரதாபசிங்கன், ஜயமணி, ராணி மங்கம்மாள், பாசுபதாஸ்திரம் முதலியவை நினைவிருக்கிறது. கம்பன், சேக்கிழார், வள்ளுவர், சங்கப்புலவர்களுடன் உறவாடிப் பழந்தமிழைப் பயின்றேன். ஆனால் தமிழில் புதிய இலக்கியங்களைச் செய்யவே ஆர்வங்கொண்டேன். அந்தக்காலம் பழைய மெட்டுகளிளேயே சொற்களைத் திணித்துத் தாமே கவியென்னும் இமிடேஷன் புலவர் அதிகம். சந்தங்கள்கூடப் புதிதாகப் புதிய துறைகளில் எளிய நடைக்கவி பாட முயன்றுவந்தேன். இதனால் தொல்காப்பிய சரபத்திற்கும் எனக்கும் பகையுண்டாயிற்று. அவரை ஊரில் பேச விட்டு, நான் மௌனமாக என் ஆத்மகலாலாலையில் கலைத்தவம் புரிந்தேன்.

மற்றொரு வேலை வந்தது. ஏழு வகுப்புவரையில் யார் வராவிட்டாலும், அந்த ஆசிரியருக்குப் பதில் நான் வகுப்பு நடத்த உத்தரவிட்டார் தலைவர். மிக்க உற்சாகத்துடன் இப்பணியை ஏற்றேன். அக்காலம் கதை வகுப்பும் நடத்தினேன்—ஆங்கிலத்தில் எளியநடையில் கதை சொல்வது மாணவர் திருப்பிச் சொல்லுவது. இதற்காக அநேக சிறு கதைகளைப் படித்து நல்லதாகத் தேர்ந்துகொண்டேன். சில கதைகளை நானே நடித்துக் காட்டினேன். மணவருக்கு வெகு குஷி! அந்த மாசற்ற உள்ளங்களுடன் பழகிப் பழகி, நானும் நித்திய மாணவனானேன். இன்றும் நான் மாணவனே. சொக்கலிங்கம் ஆசாரியார் ஆறுமாத லீவில் சென்றார். அவருக்குப்பதில் நான் வேலைபார்த்தேன். அதனால் எனக்குப் போதனைப்பயிற்சி கிடைத்தது. மாணவர் பெற்றோரிடம்

என்னை புகழ்ந்து சொல்வார்கள். பெற்றோர் அடிக்கடி என்னை வந்து காண்பர்.

78. தனிப் பள்ளிக்கூடம்

அவருள் கோபால் ராஜாவும், கிருஷ்ண பிள்ளையும் குறிப்பிடத் தக்கவர்கள். கோபால்ராஜா என்னை அழைத்து "எங்கள் பிள்ளைகளுக்கு இங்கே வீட்டுப்பாடம் சொன்னால் நல்லது. இடம் தாராளமாயிருக்கிறது. நாளையே தொடங்கலாம்" என்றார். இதுவும் கடவுளிச்சை என்று முனைந்தேன். மறுநாள் புதன்கிழமை ஏழரை மணிக்குச் சென்றேன். பத்து அழகிய குழந்தைகள் "வாருங்கோ ஸார்" என்று ஆரவாரித்தன. அவர்களைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சிக்குலாவி உள்ளே அழைத்துச் சென்றேன். கோபால்ராஜு "ஒரு பாட்டுப்பாடி ஆரம்பிக்கலாமே" என்று கஞ்சிராவைத் தட்டினார். நான் அப்போதுதான் சகலகாலாவாணியே பாடினேன். பத்து நிமிஷம் வாணி உபாஸனையானது. பிறகு "குழந்தைகளா! நீங்களெல்லாரும் நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும். நான் உங்கள் அண்ணா; வேண்டியதைக் கேளுங்கள். இப்போது என்ன நடத்தலாம் என்றேன்." பாட்டுப் பாடுங்கோ என்றாள் கோதை. "எல்லாம் நீயே அம்மா" என்ற பாட்டைப் பாடினேன். பிறகு ஆங்கிலம் தொடங்கினேன். புத்தகத்தை மூடிவைத்து நான் பாடத்தில் வரும் சொற்களைக்கொண்டு நில் உட்கார் செல் வா என்று கபாத்து வாங்கினேன். நானும் அவர்களுடன் நடித்தேன். மாணவருக்கு வெகு குஷி. பிறகு பாடத்தை மளமளவென்று படிக்கச் செய்தேன். என்னிடம் அங்கே படித்த மாணவருள் அளகிரிராஜு, ராமதாஸ், வேங்கடசாமி, கிருஷ்ணன், சாத்தப்பன். கோதை, மேரி. மாணிக்கம் முதலியோர் மணிப்பிள்ளைகள். இவர்களுக்கெல்லாம் வகுப்புப் பாடம் மட்டுமின்றி, மாலைதோறும் உலாவ அழைத்துச் சென்று, நமது நாட்டு வரலாறு. தேசநிலை, தமிழர்நிலை நமது கடமை ஆகிய விஷயங்களைச் சொல்வேன். பத்திரிகைகள் படித்துக்காட்டுவேன். எனக்கு இந்த மாணவர்களே ஸைகிள் பழக்கினர். எல்லாரும் குளத்தில் நீந்துவோம். அனுட்டானங்களை முடிப்போம். ஜபம் செய்வோம், நான் செய்வதெல்லாம் அவர்களும் செய்வார்கள். ஒரு தரம் குளத்தில் என் ஒரு ரூபா விழுந்துவிட்டது. அதை மாணவர் முக்குளித்து எடுத்துக்கொடுத்தனர், எல்லாரும் நல்ல தேகக் கட்டுள்ளவர்கள்.

79. சாண்டோ ராமமூர்த்தி

அந்தக் காலத்திலேதான் ராமமூர்த்தி சாண்டோ வந்தார். நாங்கள் அவரைப்பார்த்து கோகலே ஹாலுக்கு ஒரு ஆட்டம் உதவ வேண்டினோம். அவர் அப்படியே செய்தார். சாண்டோவை நான்

தனியே கண்டு பிராணுயாமத்தைப்பற்றிப் பேசினேன். பள்ளிக்கூடத்தில் அவர் பிரமசரியத்தைப்பற்றிப் பேசினுர். அவரது பழக்க வழக்கங்களை நான் கவனித்தேன். மனேதைரியத்தால் அவர் உடலைப் பெருக்கி மோடார் நிறுத்துதல், யானையை மார்பில் ஏற்றல், சங்கிலி யறுத்தல் முதலிய வித்தைகளைச் செய்தார். அவர் கொச்சை ஆங்கிலம் பேசினுர். நான் தெலுங்கில் அவருடன் பேசினேன். பிற்காலம் சென்னையில் அவரைக் கண்டேன். உடம்பு தளர்ந்திருந்தது. அவரும் ஒருநாள் மறைந்தார்...

ராமமூர்த்தி வந்து சென்றபிறகு ஊரில் ஸர்கஸ் பைத்தியம் அதிகரித்தது. பொன்னு சாண்டோ வந்தார். "ராமு மார்லே கல்லு டைக்கிருன். நான் மண்டையிலே உடைக்கிறேனுங்க" என்ருர். அவரையும் கண்டு பேசினேன். "நல்ல தீனி நல்ல பலம்" என்ருர். அந்தத் தீனி தின்ன நமக்குக் கட்டிவராது. என்ருலும் பிராணுயாமத்தாலும் மனேபலத்தாலும் சகனசக்தியாலும் அரிய காரியங்களைச் செய்யலாம். தைரியம்பிறந்தது. நானும் மார்பில் பெரிய கற்களை ஏற்றிக்கொண்டேன். கல்லின்மேல் எனது நண்பரும் நிற்பர். மூச்சைக்கட்டி ஒரு நிமிஷம் தாங்குவேன். பிறகு மூச்சை உறுத்திக் கல்லைத்தள்ளுவேன். பெட்டியில் புகுந்து மூடச்சொல்லி அரைமணி நேரம் இருப்பேன். தண்ணிருக்குள் நீண்டநேரம் முக்குளிப்பேன். ஜலஸ்தம்பனம் செய்வேன். நாலைந்து மைல்கள் ஓடுவேன். இவையெல்லாம் என்ன பயன்? ஒருநாள் வயல் உழவனைக்கண்டேன். அவன் போல் வேலை செய்தால் பலத்துக்குப்பலம் பயனுக்குப்பயன் என்றறிந்தேன். மறுநாள் முதல் பிரம்மஞான சபைக் கிணற்றில் தண்ணீர் இறைத்துப் பெரிய தொட்டியை நிரப்புவது, தோட்ட வேலை செய்வது, வியர்க்க வியர்க்க விறகு வெட்டுவது, முதலிய வேலைகளில் ஈடுபட்டேன். எனக்கு டால்ஸ்டாய் நூல்களையும் காந்தியின் ஹிந்த் ஸ்வராஜையும் படித்துப் புதிய யோசனை தோன்றியது. என் முன்னேர் கிராமம் பனையூர்; அதில் நிலம் வாங்கிக் கிணறு வெட்டுதல்; மாடு கட்டி உழுது பயிர்செய்தல். பாலுக்கு ஒரு பசு வளர்த்தல்; தென்னை வாழை முதலிய கனிகள் விளைத்தல். இராட்டை நூற்றல், இப்படியே விளைத்துண்டு நூற்று நெய்து சுதந்தரமாக வாழ்ந்து, கிராமப் பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூடம் நடத்தல், நல்ல தொண்டெனப்பட்டது. ஆனுல் இந்த எண்ணம் நிறைவேறுமுன் என் வாழ்க்கையில் பல மாறுதல்கள் வந்தன.

80. ஆசிரிய வேலையே

என் அண்ணுவின் போதன முறைக் குறிப்புகளையெல்லாம் நான் கருத்துடன் படித்தேன். ஐ. ரங்கசாமி ஐயர் முதல்தரமான ஆசிரியர். அவர் தோட்டம்போட்டுப் பிள்ளைகளுக்குச் செடி நூல் கற்பித்தார். நானும் மாணவருக்கு ஸயன்ஸ் போதித்தேன். ஒரு நாள்

மாணவருக்குப் பருவகாலங்களைப்பற்றி விளக்கினேன். அதற்கேற்ற கருவிகளையும் படங்களையும் காட்டித் தெளிவாகப் போதித்தேன். தலைவர் கவனித்தார். மகிழ்ந்தார். "நீ குழந்தைகளுக்கு கதை, ஆங்கிலம் சொல்லித்தா" என்றார். மிக்க மகிழ்ச்சியுடன் இப்பணியை ஏற்றேன். அக்காலமே நான் குழந்தையின்பப் பாடல்களைப் பாடினேன். கதைப்பாட்டுகளும் பல பாடினேன். பாட்டும் செயலும் கலையும் நடிப்பும் சேர்ந்து பாடத்தை ஒரு விளையாடலாக்கின. பள்ளிக்கூடம் முடிந்த பிறகும் மாணவர் என்னை விட்டுப் போகமாட்டார்கள். அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச்சென்று சரித்திரம் இயற்கை விநோதம் தாவரம் பூகோளம் முதலிய பாடங்களை விளையாட்டாகவே நடத்துவேன். சிறு சிறு நாடகங்கள் பயிற்றுவேன். பாட்டுச் சொல்லிக்கொடுத்து, எல்லோரையும் சேர்ந்து பாடச்செய்வேன். இவற்றுடன் புரோபல் மாந்தஸோரி முறைகளையும் கற்று, கட்டையடுக்கி கருவிகளைக்கொண்டு கணக்கு எளிதாகக் கற்பித்தேன். ஒரு மாணவனுக்கு ஆங்கிலமே ஏறவில்லை. ஒரு நாள் நான் பாடம் சொல்லும்போது அவன் ஏதோ கிறிக்கிக்கொண்டிருந்தான். வகுப்பு முடிந்த பிறகும் அவன் எழுந்திருக்கவில்லை. மெல்லப் பின்னே சென்று பார்த்தேன். என்னைப்போல் உருவம், அழகாக வரைந்திருந்தான். உடனே அவனைச் சித்திரப் புலவனாகும்படி ஊக்கினேன். அப்படியே ஆனான். சுந்தரம் என்ற மற்றொரு மாணவனும் இயற்கையில் சைத்திரிகனான். இப்படி அவரவர் புலமையைத் தூண்ட நான் ஆசைகொண்டேன். கல்வி கற்பது கஞ்சிக்கன்று; தேச சேவைக்கும் தன் நிறைவிற்குமே என்பதை மாணவர் உணரச் செய்தேன். இந்தக்காலமே தேசியக் கல்விக்கு ஒரு கிளர்ச்சி யுண்டானது. திருவாரூருக்கு அருகே ஒரு கிராமப் பள்ளிக்கூடம் ஏற்பட்டது. அதன் தலைவர் பஞ்சாபிகேசர். என்னை அங்கே அழைத்தார். அப்போது நான் மதுரைக்குச் சென்றேன். என் மனம் மாறியது.

81. சலோ பசுமலே!

நேடிவ் காலேஜ், அமெரிக்கன் காலேஜ்களில் எனது நண்பர்களைக் கண்டு, அளவாளாவினேன். அமெரிக்கன் பாதிரிமார் செய்யும் கல்விப்பணியும், சமுதாய சேவையும், என்னைக் கவர்ந்தன. ஒருநாள் சில நண்பர் பசுமலைக்குச் சென்றோம். சர்ச்சில் சங்கீதம் கேட்டது. உள்ளே சென்றமர்ந்தேன். என் அருகே ராஜாராவ் என்ற ஆசிரியர் அமர்ந்திருந்தார். வெளியேறும்போது அவர் எனது நண்பரானார். அன்றிரவு அவர் அறையிலேயே தங்கினேன். மறுநாள் சுற்றிப் பார்த்தேன். பசுமலை எனக்கொரு அனுபவ மலையாகத் தோன்றியது. அங்கே ஆசிரியர் கலாசாலையுள்ளது; அதிலேதான் என் அண்ணா படித்தார். அந்தக் கல்லூரித் தலைவர் மிஸ்டர் மைகேலைப் பார்த்தேன். அவர் மகா உத்தமர். சரளமான அன்பர். எங்கள் ஊர்

தயானந்தத்தேவரின் சகோதரர். தயானந்தர் பெண்ணுக்கு நானே ஆசிரியர். அந்தப் பெண் தகப்பனாரிடம் என்னை மெச்ச, அவர் மைகேலிடம் பலமுறை என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். நான் 'சிவகங்கை' என்றதுமே, "வாருமையா...உம்மைப்பற்றி தயானந்தம் சொல்லுவான்." நீர் ஏன் இங்கே ஆசிரியப் பயிற்சி பெறக்கூடாது?' என்று கேட்டதுமே...என் உள்ளம் சிலிர்த்தது. உடனே மனு எழுதினேன். "நீங்கள் வேலைபார்த்த பள்ளித் தலைவரிடமிருந்தும் ஒரு நற்சாட்சி பெற்றனுப்புங்கள். உடனே தேர்ந்தெடுக்கிறேன்." என்றார் மைகேல். நான் மற்றெல்லா நினைவுகளையும்விட்டுச் சிவ கங்கைக்குச் சென்றேன். நாராயணசாமி ஐயரிடம் சொன்னேன். உடனே எழுதினார் ஆங்கிலத்தில்—தமிழில் சொல்லுகிறேன் :

"இவர் என் ஹைஸ்கூலில் ஆசிரியராயிருந்தார். இவர் அறிவும் அன்பும் மாணவரிடம் அவர் வைத்த பாசமும், போதனாமுறையும் நான் கண்டு மெச்சியிருக்கிறேன். அவர் ஆசிரியராகவே பிறந்தவர். அவரை ஆசிரியப் பயிற்சிக் கழகத்தில் நன்றாகச் சேர்த்துக்கொள்ள லாம்."

ராஜாப் பள்ளிக்கூடத்திலிருந்தே நான் சென்றதால், என் மனுவை ரெசிடண்டு துரை டாடன்ஹாமிடம் காட்டினேன். பிறகு அரண் மனைக் கச்சேரி சிரஸ்தாரிடம் தந்தேன். ஆனால் என்ன சூழ்ச்சி நடந்ததோ, பொறாமையுலகம் என்ன மாயம் செய்ததோ, என் மனு மேலே போய்ச்சேரவில்லை. பசுமலைக்குச் சென்றேன். "இங்கொன்றும் வரவில்லையே, என்றார் மைகேல். நல்ல வேளையாக தலைவர் எழுதித் தந்தது என் கையில் இருந்தது. அதைக் காட்டினேன். நான் அறிந்த, இன்னொரு ஆசிரியரான, சோழவந்தான் சூரியநாராயண சாஸ்திரியாரிடம் ஒரு கடிதம் பெற்றேன். அதில் "இந்த இளைஞனை நான் அறிவேன்; நற்குணசீலன்; தேசாபிமானமுடன் பாஷாபி மானமும்கொண்டு, கல்விக்கே வாழ்பவன்." என்றெழுதினார். மைகேலுடன் ஒருநாள் பழகினேன். "சரி...உமது பெயர் முதலில் வரும்" என்றார். அப்படியே வந்தது. அம்மாளுக்கு மலர்தூவி வணங்கினேன். அப்பாவுக்கு வணக்கம் செலுத்தி, ஐநூறு ரூபா தந்தேன். எனக்கு ஸ்டைபண்டு (உபகாரச் சம்பளம்) போக இன்னும் மாதம் பத்து ரூபா வேண்டும். அதை ஸேவிங்ஸ் பாங்கில் போட்டேன். சாம்பமூர்த்திக்கு அமோகமாக அர்ச்சனை நடத்தினேன். நடராஜா சந்நிதியின் பாமாலை சூட்டினேன் :

என்னோடு நீயிருக்கும் இன்பமும் எந்நாளும்
உன்னோடு நானிருக்கும் உள்ளன்பும்—தன்னோடு
வந்தால் சிவகங்கை வாழ்வேயென் வாழ்வாகும்
எந்தாய் நடராச னே.

இத்துடன் சிவகங்கைப் படலம் முற்றிற்று. சலோ பசுமலை!

அ. பயின்றேன்

82. பாதிரிமார் வேலை

25,000 வார்த்தைகள் கொண்ட ஒரு நூல் பைபிள். அது ஏசுநாதர் பெருமையும் திருவாக்கும் கொண்ட உலகநூல். ஏசுநாதர் யூதராகப் பிறந்தார். யூதராக இறந்தார். அந்தக்கால யூதரின் தீமைகளையும் இடம்பச் செருக்குக்களையும் கண்டித்தார். பொது ஜனங்களுக்கு அன்புப் பெறுமையை உபதேசித்தார். "பரமபிதாவை வணங்குங்கள். பூரணம் பெறுங்கள்; சுவர்க்க ராஜ்யத்தை உள்ளே அடையுங்கள். உலகப் பொருளுக்கு ஆசைப்படவேண்டும்." என்று சொன்னார். முப்பதே ஆண்டுகள் வாழ்ந்து, ஏசுநாதர் சிலுவையேறி விண்ணேறி மறைந்தார். அவர் சீடரும் அங்குமிங்கும் சிதறி ஓடினர். பீடர் அவர்களை ஒன்று சேர்த்தான். யூதமந்திரத்தில் தொழுகை நடத்தினான். கிறிஸ்துநாதர் உபதேசங்களைத் தொகுத்துப் பரப்பினான். மார்க்கு, மாத்யூ, லூகா, ஜான் ஆகியோர் கிரேக்கமொழியில் புதிய ஏப்பாடான பைபிளைச் செய்தனர். பிறகு லத்தீன் மொழி பெயர்ப்பு வந்தது. அதன் ஒவ்வொரு வார்த்தையும் ஏசுநாதர் இரத்தத்தில் தோய்ந்தது. அதன் வரிகள் அபோஸ்தலர் பலிடத்தின் இரத்த மலர்கள். பைபிளைப் பிரசாரம் செய்த ஸ்டீவன்ஸை யூதர் கல்லெறிந்து கொன்றனர். சில போதகரைச் சிங்கக் கூட்டில் அடைத்துச் சித்தரவதை செய்தனர். ரோமில் பாலும் பீடரும் கிறிஸ்து சமயத்தைப் பரப்பினர். மன்னன் நீரோ கிறிஸ்துவரைத் தீயிட்டுக் கொன்றான். பீடர் சிறையில் இறந்தான். பால் முனிவரும் படுகொலையானார். இப்படிப் பல பக்தர்களின் இரத்தத்தை யுண்ட சமயம், ரோமில் ஊன்றிக் கிளைபரவியது. கத்தோலிக்க மதமே ஆதி கிறிஸ்துவம். கத்தோலிக்க போப்பே பைபிளுக்கு உரிமைகொண்டாடினார். அதைப் பிறமொழிகளில் பெயர்க்கக்கூட முடியாது. 1536ம் ஆண்டு பைபிளை மொழிபெயர்த்து வெளியிட்ட டிண்டாலை மதவிரோதி என்று சிறையிட்டுக் கொன்றனர். 1611ம் ஆண்டுதான் பைபிள் தாராளமாக அச்சிட்டுலாவத் தொடங்கியது. இப்போது 900 பாஷைகளில் அது விளங்குகிறது. பாதிரிமார் உலகெங்கும் சுவிசேஷத்தைப் பரப்பி, அற்புதமான ஜனசேவைகளைச் செய்தனர். சென்னை திருச்சி தஞ்சை மதுரை பசுமலை பாளையங்கோட்டை வேலூர்களில் அவர்கள் செய்யும் பணிகளைப் பார்க்கவேண்டும். கலாசாலை, வைத்தியசாலை, தொழிற்சாலை, கன்னிமடம், வேதசாலை, அனாதையில்லம்—முதலிய எத்தனையோ அறச்சாலைகள் சர்ச்சை அணைந்து வளர்கின்றன. பைபிள், திராசு, வாள் மகுடம்—பாதிரி வாணிகம். படை போர் அரசு என்ற வரிசையில் கிறிஸ்து ராஜ்யம் எழுந்தது. அதன் பயனாக இன்று நமது நாட்டில், மூன்றரைக் கோடி கிருஸ்து

வரைக் காண்கிறோம். பாதிரிகள் அக்காலம் எழுதிய கடிதங்களி லிருந்து நாட்டு வரலாறும் அறிகிறோம். காலத்திற்கேற்ற கோலம் போட்டு, பாதிரிமார் நம்மவரை ஏராளமாக மதம் மாற்றினர். முதலில் போர்ஜுகீஸ் பாதிரிகள் பன்னிரண்டாண்டுகள் முயன்றும் மந்தை கூடவில்லை. 1606-ல் வந்தார் ராபர்ட் நோபிலி. அவர் நமது நடை யுடை பாவனை பேச்சு வழக்கங்களைக் கற்று, தத்துவபோதக சாமியா ராகி, மதுரைமிஷன் நாட்டி, ஏராளமான இந்துக்களைக் கிறிஸ்துவ ராக்கினர். பண்டார சாமிகளைத் தயாரித்துப் பல்லக்குடன் கிராமங் கள் தோறும் சென்று, கும்பல் கும்பலாக ஜனங்களை மாற்றினர். இவர் மதுரை, திருசிரபுரம், இராமனுதபுரம், இடைக்காட்டூர், சேலம், சத்தியமங்கலங்களில் ரோம் சாமியார் பல்லாக்கு, வேதகானத் துடன் வரும் காட்சியைக் கண்டே, சுவிசேஷ அடியாரானர் பலர். சுமார் 30,000 பேரை இவர் ஒருவரே கிறிஸ்துவராக்கினர். வேதக் கோலம் போட்ட நோபிலிக்குப் பிறகு சைவக் கோலத்துடன் வந்தார் பெஷி, வீரமாமுனிவர். அவர் சங்கராசாரியார்போல்; இவர் பண்டார சந்நிதிகள்போல் விளங்கினர். தமிழ் ஆரியம் பார்ஸி லத்தீன் மொழி களிற் புலமை பெற்ற இவர், தமிழுக்கு நல்ல சேவை செய்தார். சதுர அகராதி, இலக்கணம் பரமார்த்தகுருகதை, 3615 விருத்தங்கள் கொண்ட தேம்பாவணி ஆகிய பல நூல்களால், இவர் தமிழர் உள்ளத் தைக் கவர்ந்தார். சந்தாசாகேபுகூட இவர் அறிவை மெச்சிக் கொஞ்ச காலம் தனது மந்திரியாக்கினன். ஆவூரில்மட்டும் இவர் 30,000 கிறிஸ்துவர்களைச் சேர்த்தார் என்ருல் பார்த்துக்கொள்ளுங் கள். எல்லிஸ் பாதிரி நமச்சிவாயஓம் என்றே, சிலுவைக்கு ஆக்கம் தேடினர். சீகன்பர்கு என்ற ஜர்மன்பாதிரி, தரங்கம்பாடியில் அச்சகம் நாட்டி பைபிளை அச்சிட்டுப் பரப்பினர். போப்பையர், அகராதி, சிற்றிலக்கணம் எல்லாம் எழுதி குறள், திருவாசகம், நாலடியார் ஆகியவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார். தாம் தமிழ் மாணவன் என்பதில் இவர் பெருமைகொண்டார். இடையன்குடி கால்டுவெல் ஐயர் செய்த பணிகள் மிகப்பல. இவர் தமிழில் நன்ருகப் பேசினர். மதுரை ஜில்லா வரலாறு தயாரித்தார். நூருயிரம் பேரை இவர் மதம் மாற்றினர். பாமர ஜனங்களின் பெருமதிப்பைப் பெற்ருர். 1841-ல் இவர் தொடங்கிய உதயதாரகை என்ற பத்திரிகை இன்றும் நடந்துவருகிறது. ரிங்கில்டாப் என்ற பாதிரி சைவ ஒழுக் கத்துடன், தமிழில் சுவிசேஷப் பிரசாரம் செய்து, பலரை வசீகரித் தார். ஷ்வார்ட்ஸ் என்ற ஜர்மன் பாதிரி தஞ்சையில் அரிய சமுதாய சேவையும் கல்விப் பணியும் செய்தார். ஐதராலிகூட இவர் பேச்சை மதித்தான். அக்காலம் நாடெல்லாம் சண்டைக்காடானது. தமிழ கத்தை நாயக்கர், மராடியர் நவாபுகள் ஆகிய பலர் ஆண்டனர். தமிழர்நாடு தமிழரிடமில்லை. எங்கும் பஞ்சமும் பயமும் அறியாமை யும் குழப்பமுமாயிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்

கொண்டு பாதிரிமார் வெற்றிபெற்றனர். அக்காலச் சண்டைகளால் பஞ்சம் கடுமையானது. பாதிரிமார் அன்னதானம் செய்து, ஆயிரக் கணக்கான பேர்களுக்குச் சிலுவையும் மாட்டினர். ராஜிநால்ட் எபர் என்ற பாதிரி நாடெல்லாம் சுற்றி, அரிய பணிசெய்தார். பல கலா சாலைகளை நாட்டினார். அவர் பெயரால் திருச்சியில் எபர் கல்லூரி விளங்குகிறது. பாதிரிமார் கல்லூரிகளையும் சர்ச்சுகளையும் பாருங் கள்! திருச்சியில் மலைக்கோயிலையும் பாருங்கள்! ஒரு பாதிரி சிறு பள்ளிக்கூடம் தொடங்குகிறான்; அது வளர்ச்சிபெற்றுப் பெரிய கல்லூரியாகிறது. ஒரு சிறு ஆஸ்பத்திரி தொடங்குகிறான். அது பெரிய வைத்திய நிலையமாகி, ஆயிரக்கணக்கான மக்களுக்கு நோய் தீர்கிறது. வாசலில் அனாதைகள் ஐயா சோறு என்றால் 'நாம் போபோ' என்கிறோம். பாதிரி, வாவா, என்று சோறுபோட்டுச் சிலுவைமாட்டிப் படிப்புத்தந்து அவனை ஆளாக்குகிறான். எத்தனை அனாதைகள் ஏசுநாதர் பெயரால் மேதைகளாக விளங்குகிறார்கள்! நமது சன்மார்க் கம் உருப்படவேண்டுமானால், இப்படிப்பட்ட ஆக்கவேலைகளைச் செய்ய வேண்டும்.

83. பசுமலை

அமெரிக்கன் பாதிரிகள் சமீபத்திலேதான் இங்கே வந்தார்கள். 1906-ம் ஆண்டில் ஏராளமானவர்களை மதம் மாற்றிக் கல்வியும் தொழிலும் தந்து, சமயத்திற்கு ஆக்கம் தேடினர். 1905-ல் ஜம்ப்ரோ லக்ஷரூபாயுடன் வந்தார். தெல்லாகுளத்தில் மலிவாக நிலம் வாங்கி னார். கல்லூரி கட்டினார். இன்று அது கிளை பரவி வளர்ந்து ஆயிரக் கணக்கான மக்களுக்கு அறிவு தருகிறது. சிறு வயதுமுதல் நான் ஜம்ப்ரோவை அறிவேன். இரண்டுதரம் பார்த்துப் பேசியிருக்கிறேன். அவரைப்போல் நானும் சன்மார்க்கப்பணி செய்யவேண்டும் என்று சிறுவயதில் உறுதிகொண்டேன்.

அந்த உறுதியைத் தூண்டிவிட்டது பசுமலையே. மதுரை திருப் பரங்குன்றம் ரஸ்தாவில், ஒரு பாதிரி சிறிய சர்ச்சு கட்டிக்கொண்டு வழிப்போக்கருக்கு மதப்பிரசாரம் செய்து, பலரை மாற்றினார். மதுரை சர்ச்சு கௌன்ஸில் சார்பாக அவர் உபதேசித்து, கள்ளர் நாடார் பள்ளர்களையெல்லாம் மதம் மாற்றினார். பணமும் சேர்ந்தது. வாஷ்பர்ன் என்ற பாதிரி கல்விப்பணி தொடங்கினார். அமெரிக்க கனவான்கள் பணம் உதவினர். காடுமேடாயிருந்த பசுமலையை வாங்கி, அழகிய ஊராக்கினர் பாதிரிமார்.

1816-ல் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் மிஷன் எழுந்து வேலை செய்தது. அதில் இருவர் இங்கே வந்து அமெரிக்கன் மதுரைமிஷன் நட்த்தினர். 1844-ல் சர்க்காரிடம் மன்றாடி பசுமலையில் நாற்பது ஏகரா வாங்கிப் பள்ளிக்கூடம் நிறுவினர். 1847-ல் சர்ச்சு எழுந்தது

அதைச் சார்ந்து ஸெமினரி எழுந்து மதக்கல்வி தந்தது. ஏராளமான பேர் கிறிஸ்து மதத்திற் சேர்ந்தனர். அவர்களுக்கு நல்ல கல்வி தொழில் தரவேண்டும். அதற்குக் கலாசாலைகளும் தொழிற்சாலை களும் எழுந்தன. வில்லியம் டிரேஸி, எர்ரிக், சாண்ட்லர், ஜோன்ஸ் ஆகிய அறிஞர் பசுமலை ஸ்தாபனங்களைப் பாடுபட்டு வளர்த்தனர். அவர்களுக்குப் பிறகு டாக்டர் வாஷ்பர்ன் என்பவர் பசுமலையைத் தற்போதிருக்கும் நிலைக்குக் கொண்டுவந்தார். கல்லூரியும் உயர் பள்ளியும் மதக்கல்லூரியும் அவரால் வளம்பெற்றன. அவரே லினுக்ஸ் அச்சகம் நாட்டி மிஷனுக்கு வேண்டிய நூல்களையும், இரண்டு பத்திரிகைகளையும் நடத்தினர். பசுமலையில் போஸ்டாபீஸ் வரச் செய்தார். 1886-ல் அவர் ஆசிரியர் கல்லூரியை நாட்டினர். வாஷ்பர் னுக்குப் பிறகு டாக்டர் வில்லியம் ஜம்ப்ரு வந்தார். இவர் கல்லூரியை நன்ருகப் பேணி, சுற்றுப் பிரசங்கம் செய்து கல்லூரியின் புகழைப் பரப்பினர். லைஸியம் ஏற்படுத்தி மாணவர் பேசவும் நாடகம் நடிக்க வும் பழக்கினர். கனித்தோட்டம் போட்டு ஊரைச் செழிப்பாக்கினர். இத்துடன் தெல்லாகுளத்தில் பெரிய நிலம் மலிவாக வாங்கி, அங்கே கல்லூரியைக்கொண்டு சென்ருர். அதனிடத்தில் இங்கே தொழிற் கலாசாலை நாட்டினர். இவர் மதுரைக் கல்லூரியைக் கவனிக்கச் சென்றபோது, மில்லர் பசுமலைப் பொறுப்பை ஏற்ருர். இவர் புலவர்; பயிர்த்தொழில் அறிஞர்; இவர் மனைவி டாக்டர்; இருவரும் தந்தை தாய்போலிருந்து, பசுமலைக்குப் புதுவாழ்வும் புதுப்பெருமை யும் அளித்தனர். மில்லர் 60 ஏகரில் விவசாயப்பண்ணை நாட்டினர். தொழிற்சாலையை விரிவாக்கினர். கல்வியறிவைத் தொழில்பெற வகுத்தார். செல்வரிடம் பொருள்சேர்த்து, பல அரிய ஆக்கவேலை களைச் செய்தார். மின்சார வசதி ஏற்படுத்தினர். ஸ்ரீமதி மில்லர் வைத்தியசாலை நாட்டி நடத்தினர். குழந்தைகளுக்கு கிண்டர்கார்டன் வகுப்பு ஏற்படுத்தினர். சங்கீத வகுப்பு கண்டார். பசுமலைக்கு இவர் அன்னைபோல் விளங்கினர். இவர்களுக்குப்பின் இப்போது லார்பீர் தலைமை வகித்து, கிராம நிர்மாண வேலை நடத்துகிருர். தொழில் நுட்பக் கலாசாலையை வளர்க்கிருர். ஸ்ரீமதி லார்பீர் குழந்தைக் கல்விக்காக அரியசேவை செய்கிருர். பசுமலையை நினைக் கும்போது மைகேல், லாஸன், சின்னையா, பானிங்கா, பீடர் ஐஸக், தாவீது முதலியோரையும் மறக்கமுடியாது. இத்தகைய ஏசுபக்தர் நூருண்டுகளாக வளர்த்த பசுமலையைப் பார்ப்போம். டிங் டாங் டிங் டாங்!

84. சுற்றிப்பார்த்தேன்

டிங் டாங் டிங் டாங்! சர்ச்சு மணி; சுவிசேஷகீதம்; "கர்த்தரே இன்னும் இன்னும் உம் அருகே நாங்கள் வர ஒளிகாட்டு" என்ற பாட்டு! விரைந்தேன். வாசலில் ஒரு மயில். ஒயிலாக ஆடியது.

அதை அணைக்கப் போனேன். திருப்பரங்கிரிப் பக்கம் ஓடியது. "முருகா வருகிறேன்" என்று சர்ச்சில் நுழைந்தேன். நூறு குரல்கள் சேர்ந்து பாடிய பாட்டுடன் என் ஆர்வக் குரலையும் சேர்த்தேன். பைபிளி லிருந்து மில்லர் ஒரு பகுதி படித்தார். அதன் தமிழை உபதேசி யார் ராகம்போட்டுச் சொன்னார். "நமது சேசுநாதரின் மலையுப தேசம் உலகுபதேசம்" என்று கம்பீரமாகச் சொன்னார்.

டிங் டாங் டிங் டாங்! எல்லோரும் 'ஆமன்' என்றெழுந்து வெளியே வந்தனர். "வாருமையா" என்ற குரல்கேட்டது; மைகேலின் குரல். "வந்தேன் வந்தனம்." என்று தொடர்ந்தேன். அவர் என்னை அண்ணா மலைச்செட்டியார் ஹாஸ்டலுக்கே அழைத்துச்சென்று, உட்காரும் என்று பேசினார். உம்மை முதலில் போட்டிருக்கிறோமையா. அதிட் டசாலி. லார்பிர் உமது இங்கிலீஷை மெச்சினாரையா. நீர் இந்த ஹாஸ்டலிலேயே இருக்கலாம். "சாப்பாடு எங்கே" என்னும்போதே சீதாராமையா, பகவதி, துரைசாமி, சஞ்சீவி, சுப்ரமணியம், சிவ ராஜபிள்ளை, ரங்கநாதராவ் எல்லோரும் வந்து, மைகேலுக்கு ஸல் யூட் வைத்து நின்றனர். மைகேல் அவர்களை அறிமுகப் படுத்தி "தென்னாலி புதுக்கோட்டை, திண்டிவனம் எல்லாம் இங்கே வந்தன. சிவகங்கையும் வந்துவிட்டது" என்றார். அப் போது ஞானமுத்து வந்தார்; அவர் என் உள்ளத்தைக் கவர்ந்தார், இனிய புன்னகையுடன் எனது நண்பரானார். அவர் சட் டைப்பையில் பைபிளும் கோல்ட்ஸ்மித்தின் வைக்கார் ஆப் வேக்பீல்டு (Vicar of Wakefield) என்னும் நாவலும் கையடக்கமாக இருந்தன. நான் பைபிளை வாங்கிப்படித்தேன். அவர் நட்பிற்கு'அறிகுறி அந்த அழகான நாவலைப் பரிசளித்தார். மைகேல் "சரியான நண்பர் ஐயா, இவருக்கு எல்லாம் சுற்றிக்காட்டுங்கள்" என்று வீட்டிற்குச் சென்றார்.

நல்ல நிலா; 'ரண்டி' என்று தென்னாலி ராமன் இழுத்துச் சென்றான். நானும் தெலுங்கு பேசியதால் நல்ல நண்பரானோம். தென்னாலிராமன் வீராவேசமாகத் தன் பீம கதாயுதமான கர்லாக் கட்டையைச் சுழற்றினான். நான் அதைத் தூக்கக்கூட முக்கினேன். "பச்சை மிளகாய் சாப்பிடு; தூக்கலாம்" என்றான். மிளகாக் காரத் தில் கோபம்வந்து, என்னை கதாயுதத்தால் திட்டினால், என்ன செய்வது என்று அஞ்சினேன். என்னை அவன் பத்து தண்டால் பத்து பஸ்கி வாங் கிக்கொண்டே விட்டான். அதுவும் சரி. கவிக்கனவில் வாழ்ந்த எனக்கு உடலின் அருமை தெரிந்தது. ஞானமுத்து என்னை மேலே அழைத்துச் சென்றார். மேலே ஸ்டீபன்ஸ் "வாருங்கோ பிரதர் டிபன் சாப்பி டுங்கோ" என்று, சாக்லேட்டும் கேக்கும் தந்தார். நான் சிறிது தொட்டு வைத்தேன். "அட ப்ராமணஹா!" என்று எல்லாரும் சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பை அதிகப்படுத்த நான் அங்கேயிருந்த சிலுவைக்

கிறிஸ்துவை மண்டியிட்டு வணங்கி, மடியிலிருந்து விபூதி எடுத்துப் பூசிக்கொண்டு, இந்து நண்பருக்கும் தந்தேன். எல்லாரும் "சாணி சாமி சாமி சாணி, சாணியே சாமி" என்று கத்திக் கைகொட்டினர். எனக்கு நமது சைவஒழுக்கம் இப்படியா கேலிக்கிடமானது என்று துக்கம் வந்தது. "அன்பர்களே நீங்கள் சாப்பிடும் அரிசிக்கு உரம் என்ன? சாணி விட்டை சேர் சகதியை உண்டு பயிர் முளைக்கிறது. அந்தப் பயிரை உண்டு, உடம்பு வளர்கிறது. உயிர்நீத்த உடம்பை எரிக்கிறோம். அதுவும் சாம்பலாகிறது. இப்படியே உலகமும் ஒரு காலம் நீறுகிவிடும். மனிதனிடம் ஆணவம் மாயை கர்மம் என்ற மும்மலங்கள் உள்ளன. அவற்றைச் சுட்டுச் சாம்பலாக்கவேண்டும். அப்போதுதான் நின்மலமான சுத்தான்மா அறிவாகும். அதற்கு அடையாளமே திருநீறு." என்று ஆத்திரமாகப் பேசினேன். எல்லாரும் "சபாஷ் மும்மலம்" என்று சிரித்தார்கள். அப்போது ஞானப்ரகாசம் என்ற முதிய மாணவர் வந்து "ஏ பேசாதிங்க. பிற மததூஷணை நமக்கேன்?" என்றார். எனது நண்பர் ரங்கநாதராவுக்கு மீசை துடித்தது. இராம தீர்த்தர் வாக்குகளைப் பொழிந்து கால் மணிநேரம் ஆங்கிலத்தில் ஆத்மஞானம் பேசினார். அவர் பிடித்தால் இரண்டு மணிநேரம் பேசியே தீர்ப்பார். அதற்குள் கனகசுந்தரம் பிடில் இழுத்தார். எல்லாரும் "என் ஏற்பர் உயிரோ டிருக்கையிலே-இனி என்ன குறை உனக்குண்டு நல்ல மனமே" என்று பாடினர். நான் "தியாகச் சிலுவையிலே—அகங்—காரத்தைச் செற்றிடுவோம்" என்றொரு பாட்டுப்பாடினேன். எல்லாரும் தாளம் போட்டனர். நண்பர் பரவாயில்லையே என்று கைகொட்டினர். அதற்குள் மணி யடித்தது. கிறிஸ்து நண்பர் சமையலறைக்குச் சென்றனர். ஞான முத்து மட்டும் எங்களுடன் வந்தார்.

சிதாராமையா குஷிப் பேர்வழி. மாடியில் நடந்ததை அவரிடம் சொல்லிக்கொண்டே, பந்தாடும் இடத்திற்கு வந்தோம். பெரிய கோஷ்டி விளையாடிய பந்து, எங்கள் அருகே வந்தது. தென்னுலி "குடண்டி" என்று ஒரு ஹைகிக் கொடுத்தான். பந்து மரக்கிளைகளையும் தாவிக்கொண்டு, மேலே பறந்து, வெகுதூரத்தில் விழுந்தது. எல்லாரும் வியந்து அவரை நாளை "ஆடவாரும்" என்றனர். அங்கே மிஸ்டர் ஃபென் வந்தார். அவரே மோந்தஸோரி முறைக்கு ஆசிரியர். அவர் ஆசிரியர்கள் வீடுகளைக் காட்டினர். நான்கு பேர்களுக்குப் போதுமான ஓட்டு வீடுகள் சுத்தமாயிருந்தன. அங்கிருந்து பள்ளிக்கூட மாணவர் ஹாஸ்டலுக்குச் சென்றோம். ராஜாராவ் அன்புடன் வரவேற்றார். அவர் என் அரிய நண்பர் ஆதலால் உடன்வந்து பசுமலையைச் சுற்றிக் காட்டினர். இருவரும் பசுமலை நடப்புகளைப் பேசிக்கொண்டே சென்றோம். 'இன்னாரிடம் இப்படி இருக்கவேண்டும்' என்று அவர் சொன்னர். பாற்பண்ணையைப் பார்த்தோம். அந்த மாதிரி உரத்த பசுக்களை நான் முன்பு பார்த்ததில்லை. அவற்றிற்

கேற்ற பொலிமாடுகளையும் பார்த்தோம். அங்கே கலப்புப் புணர்ச்சியால் புதிய ரகங்களை உண்டாக்கி, நிரம்பப் பால் கறக்கிறார்கள். எனக்கும் காலை அரைக்கால்படி பாலுக்கு ஏற்பாடு செய்து முன் பணம் தந்தேன். தென்னாலி கால்படி பாலுக்குப் பணந்தந்தான். தோட்டம் கனிகுலுங்கியது, அங்கே கொய்த கனிகளைப் பார்த்தோம், தென்னாலி அரை ரூபாய்க் கனிகள் வாங்கி, அங்கேயே ஒரு விருந்து நடத்திவிட்டான். கொஞ்சம் பாலும் பருகினோம். என் உணவுக் கடன் அத்துடன் தீர்ந்தது. பிறகு பைபிள் நடக்கும் ஸெமினரிக்குச் சென்றோம், அங்கே பாடம் நடந்துகொண்டிருந்தது. அது பைபிள் பிரசாரகருக்கான வகுப்பு. நான் இதிலும் பங்குகொண்டேன். பிறகு அமெரிக்க துரைகள் வசிக்குமிடங்களைச் சுற்றினோம். ஆ! எவ்வளவு சுத்தம், காற்றோட்டம், அழகு, அமைதி! லார்பீர் நிலா முற்றத்தில் தம் குழந்தையுடன் கொஞ்சிக் கொண்டிருந்தார். நாங்கள் வந்தனம் செய்தோம். அவரும் "வந்தனம் வாருங்கள் ஐயா" என்று தமிழில் வரவேற்றார். அவர் தமது குழந்தை கிருபைக்கு "இவர்கள் நமது நண்பர்கள்" என்று தமிழ் சொல்லி வைத்ததைக்கண்டு வியந்தேன். ஸ்ரீமதி லார்பீர் மாடியில் பாடிக்கொண்டிருந்தார். அப்போது பானிங்கா மாளிகையிலிருந்து இனிய சுவிசேஷ கீதங்கள் வந்தன. அச்சகம், வைத்தியசாலை, தொழிற்சாலை தாவீதின் சித்திரக்குடில் எல்லாம் பார்த்துக்கொண்டு, நாங்கள் மைகேல் வீட்டிற்கு வந்தோம். ஒரு சேவல் பட பட க்ளக் என்று உள்ளே ஓடியது. மைகேல் வெளியே வந்தார். வீட்டுக்கு யாராவது வந்தால் சேவல் உடனே அவரிடம் ஓடும்படி பழக்கி வைத்திருந்தார் மைகேல்.

84. எழுதினேன்

மைகேல் எங்கள் ஆசிரியப் பயிற்சிக்குரிய பாட முறைகளையெல்லாம் சொன்னார். பாடங்களுக்கு உரிய நோட்டுகளை மைகேல் என்னிடம் தந்து விரைவாக எழுதிக்கொள்ளச் சொன்னார். நாங்கள் படிக்க வேண்டியவை அவையே. சித்திரம் ஆங்கில இலக்கியம் முதலியவற்றிற்குரிய நூல்களையும் மறுநாள் வாங்கிக்கொண்டோம். போதனைக் குறிப்புகளுக்குப் புத்தகங்கள் தைத்துக்கொண்டோம். இனி மளமளவென்று பாடங்கள் நடந்தன.

இரவு அண்ணாமலை ஹாஸ்டலுக்குச் சென்றேன். அன்றே பாடங்களை எழுதத் தொடங்கினேன். தென்னாலி சாப்பிட்டு ஹாயாகப் படுத்தான். கொசுக்கள் மொய்த்தன. சுற்றிலும் கம்போடியாப் பருத்தி சாகுபடி செய்திருந்தார்கள்; கொடிய கொசுக்கள் எங்களைத் தாக்கின. நான் அக்கரையாகப் பாடங்களை எழுதினேன். தென்னாலி "நித்ரபோ ஒய்" என்று விளக்கை அணைத்தான். நானும் சிறிது கண்ணயர்ந்து, மூன்று மணிக்கே விளக்கேற்றி வராந்தா

வில் வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினேன். காலை ஐந்து மணிக்கு எழுந்த தென்னலி "என்னையா பேனு முனையில் சாகிறீர்" என்று எனது நோட்டைத் தூக்கியெறிந்தான். விளக்கை அணைத்தான். "போடு கசரத்; செய் பஸ்கி; சுற்று கர்லா" என்று வேலை வாங்கினன். "வகுப்புடன் படிப்புசரி. வெளியே வந்தால் என்னுடன் சுற்ற வேண்டும். சாப்பிடவேண்டும்." என்று உத்தரவு போட்டான். என் மனமெல்லாம் படிப்பில் இருந்ததால், அந்தத் தடையுத்தரவை நான் மீறி மற்ருெரு நல்ல அறையிற் புகுந்தேன். அங்கே பகவதி துரைசாமி சுப்பிரமணியம் மூவரும் போட்டிபோட்டுப் படிப்பவர். நான் அமைதியாக, பதினைந்து நாட்களில் எல்லாம் எழுதி முடித்து, விட்டேன். பரீட்சை வைத்தாலும் தேருவேன். மைகேலிடம் நான் எழுதியதைக் காட்டினேன். 'சரி; இன்னெரு வேலை செய்யும்" என்று பி. ஏ. வகுப்புக்குரிய பாடக்குறிப்புகளைத் தந்து, காப்பி செய்யச் சொன்னர். அவர் மகன் திருச்சியில் பி. ஏ. படித்தான். அவனுக்கே அந்தப் பாடங்களை எழுதி யனுப்பவேண்டும். எனக்கும் அது நல்ல பயிற்சியானது. பசுமலையில் ஒரு நொடிகூட வீணுக்காது நான் கல்வித்தவம் புரிந்தேன். அதில் முதன்மையானது நான் சிகாகோ எம். ஏ. பாடங்களைப் படித்ததே. நான் பைபிள் வகுப்பில் கொண்ட கருத்தை மெச்சி ஓர் அமெரிக்க நண்பர் என்னைப் படிக்கத் தூண்டினர். நான் உற்சாகமாக ஆங்கில இலக்கியப் பாடங்களைப் படித்தேன். ஹாம்லெட்டும் மாக்பெத்தும் மில்டனும் எமர்ஸனும் ஏராளமான அமெரிக்க நூல்களும் பயின்றேன். இனி வகுப்பில் புகுவோம்.

86. ஆசிரியப் பயிற்சி

பத்தரைமணி; வகுப்பு டான் என்று தொடங்கியது. டக் டக் என்று வந்தார் லார்பீர்: எழுந்து நின்றோம். இருகை குவித்துக் கும்பிட்டார். நிச்சப்தம். லார்பீர் அழகான ஆங்கிலத்தில் எங்களுக்கு வரவு கூறினர். "உலகெங்கும் அமெரிக்க மிஷனரிகள் ஏசுநாதர் பெயரால் அரிய பணிகளைச் செய்கிறர்கள். அவற்றுள் கல்விப்பணி முதன்மை. கல்விதான் நாகரிகத்தின் உயிர். கல்வி என்பது வெளியிருந்து புத்தகங்களைத் திணிப்பதில்லை; உள்ளேயிருந்து இயற்கையான அறிவை வெளிப்படுத்துவதே. மனிதனிடம் ஆற்றல் உள்ளது, பலம் உள்ளது. ஆத்மஞானம் உள்ளது, கலையுணர்ச்சி, தொழில் திறன், அறிவுணர்ச்சிகள் உள்ளன. அவற்றை விளக்கிச் சமுதாயத் திற்குப் பயனுக்குதலே கல்வியின் கருத்தாம் இத்தகைய கலையையே நீங்கள் இங்கே பயில்வீர்கள். கலையால் தேசசேவை செய்வீர்கள். தேச முன்னேற்றம் பள்ளிக்கூடத்தில் தொடங்குகிறது. பள்ளிக் கூடம் மாணவருக்காக. ஆசிரியர் மாணவரின் தோழர், துணைவர்,

அன்பான நண்பர். மாணவரை, அறிவும் ஆற்றலுந் தந்து, ஆளாக்குவதே ஆசிரியர் கடமை." இந்தவிதமாக லார்பிர் பல அறிஞர் கோட்பாடுடன் பேசினார். நாங்கள் குறிப்பெடுத்துக்கொண்டோம். பிரின்ஸ்பிள்ஸ் (போததத்துவம்) பாடமுறைகளை வகுத்து, தெளிவாகச் சொல்லி, நாங்கள் படிக்கவேண்டிய பல நூல்களையும் குறிப்பிட்டார். அத்துடன் ஆங்கில வளர்ச்சிக்காக சிகாகோ சர்வ கலாசாலையில் வைத்திருந்த சில நூல்களை இங்கும் நடத்தினார். அவற்றுள் ஹாம்லெட், ஜார்ஜ் எலியட்டின் Sailas the Mariner, பல அறிஞர் சொற்கதம்பமான Select Orations, ஆகியவை முதன்மையாகும். லார்பிர் எங்கள் உச்சரிப்பைத் திருத்தினார். அதற்கே ஃபோனெடிக்ஸ் (ஒலிக்கலை) கற்றோம். அவருடன் நான் அடிக்கடி பேசுவேன். அவர் "உங்கள் வேதாந்தம் சும்மா...சும்மா..." என்று சிரிப்பார். சும்மா இருக்க அருளாய் என்ற தாயுமானர் பாட்டைச் சொல்லி, "நாங்கள் சுருசுருப்பு" என்பார். நான் "உங்கள் சுருசுருப்பு ஆகாச குண்டு போடுகிறது. எங்கள் சும்மா உள்ளே கடவுளைத் தேடி உலகிற்கு அறிவைத் தருகிறது" என்பேன். இந்துக்களின் சாதி வேறுபாட்டை பாதிரிமார் இடித்துக் காட்டி, நாடு கிறிஸ்துவமாவதே நலம் என்பர். நான் கிறிஸ்து நாடுகளிலே தான் கலகக்காடு தொடங்குகிறது, டாங்கும் குண்டும் பீரங்கியும் அந்த நாட்டு மூளையிலிருந்தே உதிக்கின்றன என்பேன். கத்தோலிகர், புரோடஸ்டான்டியர், பிரிஸ்பிடேரியர், ஆங்கிலிகர் போராட்டங்களைக் குறிப்பேன். சர்ச்சுக்குச் சர்ச்சு பகையாடுவதைச் சுட்டிக்காட்டுவேன். அன்னியர் இடைப் புகாவிட்டால் நாங்கள் ஒற்றுமை காட்டுவோம். பிரித்தாளும் சூழ்ச்சி ஒழிந்தால் நாடு கூடி வாழும் என்று விளக்குவேன். மிஸஸ் லார்பிர் எங்களுக்கு புரோபல் மோந்தஸொரி முறைகளைக் கற்பித்தார். சிறு குழந்தைகளிடம் அவருக்கு உயிர். அவரால் நான் குழந்தைக் கல்விக்குரிய பல நூல்களைக் கற்றேன். மங்களபுரத்தில் இதற்காகவே விரிவான ஏற்பாடுகள் உண்டு. ஆனால் அங்கே ஆண்கள் தாராளமாகப் போகமுடியாது. மிஸஸ் லார்பிரிடம் சிபார்சுக் கடிதம் பெற்று, நான் அடிக்கடி மங்களபுரம் சென்று, மாதாம் நார்மனைக்கண்டு பேசினேன். அங்கே பெண் ஆசிரியர்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்தருவது, ஆடல் பாடல் கற்பிப்பது, மோந்தெஸ்ஸோரி வகுப்பு நடத்துவது எல்லாம் நன்முகக் கவனித்துப் பயன் பெற்றேன். மிஸஸ் லார்பிரின் இனிய குரலும், அன்பான பேச்சும், இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன. தையல் பியானோ வாசித்தல் இவற்றிலும், அவர் நிபுணர். சதிபதிகள் ஒரு நொடியும் வீணாக்காமல் அன்பும் அறிவும் பொதுநலமுமாக வாழ்ந்தனர். அவர்கள் வாழ்க்கை எனக்குச் சிறந்த ஆதர்சமாக விளங்கியது. ஃபென் என்பவரும் எங்களுக்கு கிண்டர் கார்டன் வகுப்பு நடத்தினார். இவர் கதை நாடகம் நடத்திக் குழந்தைகளை மகிழ்வித்தார். இவர் கலியாணம் அப்போதுதான் நடந்தது.

சர்ச்சில் எல்லாரும் கூடி கீதம் பாடினர். பாதிரியார் இருவரையும் ஆசீர்வதித்தார். மோதரம் மாறின. சதிபதிகளின் அருமைபெருமை களைப்பற்றி நண்பர் பேசினர், பாடினர்; நானும் ராஜாராவும் கவி மாலை சூட்டினோம்; ஒரு விருந்துடன் கலியாணம் முடிந்தது, மறுநாள் அவள் ஒரு வகுப்பு, இவர் ஒரு வகுப்பில் பாடம் சொல்லித்தந்தனர்.

அடுத்த முக்கியமான ஆசிரியர் மிஸ்டர் மைகேல். அவரே லார்பி ருக்கு அடுத்த தலைவர். அவர் பாடமுறை, போதனைமுறை, பள்ளி ஒழுங்கு, மாணவன் ஒழுக்கம், ஆசிரியர் நடைமுறைகள் பல பாடல் களின் பயிற்சி முறைகளைப்பற்றி விளக்கினார். பல நூல்களிலிருந்து வடித்தெடுத்த அவரது நோட்ஸ் போதும். அதை முன்பே எழுதி முடித்ததால் என் வேலை எளிதானது. அடுத்தபடி மாதிரிப் பாடங் கள் தருவது. தினம் மற்ற ஆசிரியர்களின் வகுப்புகளில் அமர்ந்து, போதனை முறையைக் கவனிக்கவேண்டும். பிறகு குறித்த சில மாணவ ருக்குக் குறித்த பாடத்தைப் போதிக்கவேண்டும். வகுப்பில் நானே முதல் போதகாசிரியன். நேர்முறையில் ஆங்கிலம் போதித்தேன். மைகேல் "எடுத்த எடுப்பிலேயே போதனைமுறையில் வெற்றிபெற்ற அறிவாளி" என்று பத்திரத்தில் எழுதினார். நான் அடிக்கடி பல வகுப்புகளில் பாடம் கற்பித்தேன். சித்திரக்கலை எங்களுக்கு அவ சியம். தாவீது பெரிய புலவர். அவர் எங்களுக்குச் சித்திரக்கலையை நன்றாகப் பழக்கினார். அதற்கென ஒரு பெரிய புத்தகமும் வாங்கி னேன். அத்துடன் பூகோளம் செய்து, அதில் பல நாடுகளையும் ஊர் களையும் குறித்தேன். பாரிஸ் வெள்ளையால் செய்து, நிறந்தீட்டி, மேலே வார்னிஷ் அடித்து, ஸ்டாண்டில் ஏற்றினால் பூகோளம் அழகா யிருக்கும். உள்ளே அட்டைதான். செலவு நான்குரூபா ஆகும். எங்களிடம் எட்டுரூபா வாங்கினர். பூகோளத்தை ஐம்பதுக்கும் விற்கலாம். நான் செய்ததைத் தமிழ்க் குருகுலத்திற்கு அளித்தேன். சித்திரத் தேர்ச்சியால், மாதிரிப்பாடங்களில் எனக்கு நிரம்ப வெற்றி கிடைத்தது. ஒருமுறை நற்றாமரைக்கயத்து நல்லன்னம் சேர்ந்தாற் போல் என்ற பாட்டைப் படம்போட்டுக் கேள்விகேட்டே, மாணவர் உணர்ந்து ஒப்பிக்கச்செய்தேன். அதுமுதல் தமிழ்ப்பாடல்கள் கற்பிக்க எனக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. பெரிய வகுப்புகளுக்கு நான் பரீட்சைக் கேள்விகளும் தயாரித்து விடைத்தாள்களும் திருத்தி னேன். பண்டிதர் தி. நா. சுப்பிரமணியர் என்னிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். எனது நாடகத்தை அவர் பார்த்து மெச்சினார். தமிழ்த்தெரியாத, வெள்ளைக்காரர் அவரால் என்னிடம் பிரியங்கொண் டனர். ஒரு வைதிக மாணவன் துரையிடம், சிராத்தா கம்ஸ். லீவ் என்றான். துரை கொண்டா அந்த சிராத்தத்தை என்றார். அவன் பண்டிதரிடம் வந்து சொன்னான். அவர் என்னை விளக்கச்செய்தார். நான் பிதுர், தர்ப்பணம், சிராத்தம், எல்லாம் விளக்கி, மாணவனுக்கு

ஒய்வு வாங்கித் தங்தேன். ஸயன்ஸ் ஆசிரியர் சேசுதாசர் எனது நண்ப ராளுர். ஸயன்ஸ் வளர்ச்சிக்கு இந்த நட்பு துணையானது.

பசுமலையில் நான் உடலுறுதியைக் கவனித்தேன். டிரில் வகுப்பு கடுமையாக நடந்தது. புட்பால் பாட்மின்டன் வாலிபால் விளையாடி னேன். ஸைகில் பழகினேன். அனைத்திலும் சாரணப்பயிற்சி முதன்மை, அந்தக்காலம் ஊரில் கள்ளர்பயம் அதிகம். தினம் ஒரு வீட்டில் களவு நடக்கும். ஊரைக் காக்க நாங்கள் வேவுபடை திரட்டினோம். சார ணப்பயிற்சி பெற்ருேம். இரவு பனிரண்டிலிருந்து, மணிக்கு ஒரு வரிசையாக நாற்புறமும் சென்று, டடடேய் உஷர் தேகோ...போட் டோம். ஒருநாள் நான் அறையில் தனித்திருந்தேன். விளக்கில்லை. தியானித்திருந்தேன். படார் என்ருெரு கூழாங்கள் கம்பிகளைத் தாண்டி என் அருகே விழுந்தது. மேலே விழுந்திருந்தால் காயப்பட் டிருக்கும். இருட்டில் மெல்ல எட்டிப்பார்த்தேன். நான்குபேர் உள்ளே நுழைய நின்றனர். நல்ல தடியர்கள். அப்போது ஹாஸ்டலில் யாரும் இல்லை. ஒய்வுநாள். நான் பளிச்சென்று அதேகல்லை வெளியே வீசி னேன். "டே பகவதி, துரைசாமி, சுந்தரம்! ஸ்டீபன்ஸ் எழுந்திருங்கோ! திருடர்! திருடர்!!" என்று பேய்க்குரலெடுத்தேன். இதோ பிடிபிடி என்று பல குரல்கள்போல் அபிநயித்தேன். திருடன் ஓடி மறைந்தனர். ஒருநாள் ஒரு வீட்டில் திருட்டுப்போனது. வீட்டார் சத்தம் போட்ட தும் ஓடினோம். விளக்கு வெளிச்சத்தில் தடம்பார்த்துச் சென்ருேம், கள்ளத்தெருவில் நுழைந்தோம். ஒரு திண்ணையில் இருவர் பேசியதை நான் கவனித்தேன். அந்த வீட்டுக்குள் நுழைந்தோம். எங்களுள் ஒருவர் போலிஸ் அமுல் செலுத்திளுர். ஆள் பயந்துபோய் 'நப்ப நப்ப விட்டுடுங்க...' என்று, திருடிய பாத்திரங்களைத் தந்துவிட்டான். இந்தச் சாரண வேலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஆசிரிய மாணவர் அடிக்கடி உல்லாசயாத்திரை செல்வோம். மைகேல் அழைத்துச்செல்வார். ஒருதரம் பெரியார் பாசனம் பார்க்கச் சென்ருேம்: எங்கும் பசுங்காட்சி; ஆற்றின் கம்பீரமான ஓங்காரம் அந்தப் பெரிய இரும்புப்பாலத்தை மோதும்போது, ஜயபேரிகை, முழக் கம்; காற்றின் க்ளாளினெட்; அதற்கேற்றபடி கொங்கை குலுங்க அசைந்தாடும் தென்னைகளின் லாஸ்யநடனம்-ஆ! தக்க தரிகிடதோம்... பரமானந்தம்! எல்லாரும் கட்டுச்சாதம் சாப்பிட்டார்கள். நான் தங்கக் கிண்ணங்களில் ஊறும் அமுதுபோன்ற அந்த இளநீரையே சாப்பிட் டேன். அதுமுதல் எனக்கு வழுக்கைதான் தோசை இட்டலி; இள நீரே காப்பி டீ ஆனது. அத்துடன் இரண்டு வாழைப்பழமும் ஒருபிடி நிலக்கடலையும் சேர்ந்தால் பூரண ஆகாரம்; கொஞ்சம் தயிரும் பருகி ளுல் ஒருநாளைக்குப் போதும். நாள்முழுதும் சிரிப்பும் விளையாட்டும் வேடிக்கை விநோதமுமாயிருந்து. மாணவர் திரும்பினர். நான் சுற்றுப் புறங்களில் பொதுஜன நிலையை ஆராய்ந்து சிந்தை நிரம்பித் திரும்பி

னேன். ஆறு ஓடுகிறது. பாசனம் வளந்தருகிறது. உழவர் உழைக்கின்றனர். எனினும் ஏழை மக்கள் முகத்தில் செழிப்பில்லை. மனதில் கவலை. வறுமையின் கொடுமை. படிப்பேயில்லை. சில உத்தியோகர் வெளுத்த சட்டை துணியுடன் நடக்கிறார்கள். பொதுஜனங்கள் கோவணமும் துண்டுமாகக் காண்கிறார்கள். சிலர் வாழ்வை விசாரித்தறிந்தேன். கண்ணீர்!

இந்த நிலைமையில் பசுமலை வாழ்வு எவ்வளவோ மேல். இங்கே பாதிரிமார், உண்ண உடுக்க இருக்க வசதி தந்து, படிப்பும் தந்து, ஆயிரக்கணக்கான மக்களை ஆதரிக்கிறார்கள். இதை நினைத்தபோது எனக்குக் கிறிஸ்துவிடமும், பைபிளிடமும் பாதிரிகளிடமும் அன்பு பொங்கியது. சுற்றம் ஆங்கிலம், பேச்சு ஆங்கிலம், படிப்பெல்லாம் ஆங்கிலமயம். ராஜாராவ் புலவர் சுப்பிரமணியர் ஆகிய இருவரிடமே எனது தமிழ்க் கவிதைகளைப் படித்தேன்; தமிழ் பேசினேன். மற்றெல்லாருடனும் ஆங்கிலமே. பசுமலை புத்தகசாலையை நான் நன்றாகப் பயன்படுத்திப் பல அரிய நூல்களைப் படித்தேன். சுமார் ஐம்பது போதனாமுறை நூல்களைக் கற்றேன். ஸ்பென்ஸர், ரென், பெஸ்தலோஜி, புரோபெல், பாக்லி. ஆம்ஸ்ட்ராங், ஆடாம்ஸ், கிரீன், பென்னெட், மோண்டெஸ்ஸோரி, கார்டன், ஜேம்ஸ் இர்விங், ஜெங்க், டுயி, கெப்ரியேல், ஜில், ஹார்ட், வால்டன், டைலர் நியூமன் முதலிய பிரபல ஆசிரியர்கள் நூல்களைப் படித்துப் படித்துக் குறிப்பெடுத்தேன். பிறகு நானே ஆங்கிலத்தில் புதிய போதனாமுறை (New Method) என்ற நூலும், பள்ளி ஒழுங்கு (ஸ்கூல் டிஸிப்ளின்) என்ற நூலும் தமிழில் கல்விக் கதிர் என்ற நூலும் எழுதினேன். ஆங்கில நூல்கள் பிற்காலம் கரையானுக்கு இரையாயின. கல்விக் கதிரே வெளி வந்தது. குழந்தைக் கல்வி என்றொரு நூலும் பாடல்களும் எழுதினேன். பாடல்களே மிஞ்சின. இப்படிக் கருத்தூன்றிப் படித்ததால் எனக்குப் பரிட்சை மிக எளிதானது. எந்த வகுப்பிற்கும் எந்தப் பாடமும் போதிக்க முடிந்தது. முதன்மையாக ஸயன்ஸ் பூகோளம் இரண்டிலும் நல்ல பெயர். பரிட்சைத் தாள்களையும் திருப்தியாக எழுதி முடித்தேன். முன்னணியில் தேறினேன். இதனிடையே என் வாழ்வில் வந்த மாறுதல்களைச் சொல்லுகிறேன்:

87. கிறிஸ்து சாதனம்

பசுமலையில் நான் பைபிளை ஊன்றிக் கற்றேன், பைபிள் வகுப்பில் ரங்கராவ் சிக்கலான கேள்விகள் கேட்டுப் பிரசங்கத்தில் பிடிப்பார். அதிக பிரசங்கமும் நடக்கும். நான் பைபிளைப் படித்துச் சிந்தித்து, ஏசுநாதர் சரிதையைக் காவியமாக எழுதினேன். அப்படி பைபிள் வகுப்புகளில் எழுதிய காவியமே, பிற்காலம் கிறிஸ்து சங்கத்தில் அச்சானது. பிறகு திருத்தமாக பாரதசக்தி கிறிஸ்து

ஜோதிப்படலமும் பைபிள் படலமும் ஆனது. சர்ச்சிற்கு ஒழுங்காகச் சென்று, பிரார்த்தனையில் கலந்துகொண்டு, சுவிசேஷ கீதங்கள் பாடினேன். எனது கிறிஸ்து பக்தியை இன்னும் தூண்ட இருவர் வந்தனர்: ஸ்டான்லி ஜோன்ஸ், சாது சுந்தரசிங். ஸ்டான்லிஜோன்ஸ் சண்டப்ரசண்டர்: அவர் பத்து உருக்கமான பிரசங்கமாரி பொழிந்தார். "ஏசுநாதர் இதோ உள்ளத்தில்; அதோ மேலே வானில். இதோ எதிரே இருக்கிறார். பாவிகளே உணருங்கள், பரமபிதாவைத் தொழுங்கள். மன்னிப்படைவீர்." என்று அவர் சொல்லும்போதே, சபையில் பலர் முழந்தாளிட்டு "கர்த்தரே எமது பாபத்தை மன்னியும்; சேசுநாதரே எனக்குத் துணைசெய்யும், ஒளிகாட்டி நடத்தும்" என்று வணங்குவர். ஸ்டான்லி ஜோன்சுடன் நான் ஒருநாள் தனித்துப் பேசினேன். உலகமெல்லாம் கிறிஸ்து மதம் பரவி எல்லையற்ற ஆக்கவேலைகள் நடக்கும் திறனை அறிந்தேன். நானும் கிறிஸ்துவணகி அமெரிக்கா சென்று பட்டம் பெற்றுவர விரும்பினேன். உபதேசியார்களுடன் நானும் கிராமங்களுக்குச் சென்று பேசினேன். வறுமையால் மடமையால் பாமர மக்கள் பிறமதம் புகுவதைக் கண்டேன். நாகரிக மோகத்தால் பண மயக்கால் காம விகாரத்தால் கல்லூரி மாணவர் மதம் மாறியதைக் கண்டேன். நேற்று ராமு இன்று ராம்ஸே, இன்று கமலம் நாளை காதரைன், நேற்று கந்தன் இன்று அந்தோனியாவதைக் கண்டேன். இப்படி இந்து சமயத்திற்கு வேலை செய்ய யாரும் இல்லையா? இல்லை, இல்லை. இந்து மதத்திற்கு இருபுறமும் இடி. அன்னியரும் நம்மை அஞ்ஞானிகள் என்கிறார்கள். நம்மவர்களே சமய அனுட்டானங்களைக் கிண்டல் செய்கின்றனர். சமயத்திலும் புல்லுருவிகள் படர்ந்தன. இப்படி ஆராயும்போது சாதுசுந்தரசிங் மதுரைக்கு வந்தார்.

88. சாதுசுந்தரசிங்

இவர் பஞ்ஜாபி, சீக்கியர். 1989-ல் பாடியாலாவில் ஒரு செல்வக் குடும்பத்திற் பிறந்தார், இவருக்குக் கிரந்தாசாகெபு அமைதி தரவில்லை. ஒருநாள் பைபிள் கிடைத்தது; படித்தார்; அமைதி வந்தது. கிறிஸ்துவைத் தியானித்தார். ஒளிகண்டார். 1906-ல் ஞானஸ்நானம் பெற்றார். உறவினர் துரத்தினர்; ஊரார் கல்லெறிந்தனர், அடித்தனர், வைதனர். எல்லாம் பொறுத்துக்கொண்டு அவர் துறவியாகக் கிளம்பி கிராமம் கிராமமாகக் கிறிஸ்துமத போதனை செய்தார். அவர் வசீகரமான ஆள்; மின்னல்போல் ஒல்லி, இனிய ஆவேசப் பேச்சாளர். அவர் இந்தியிலேதான் பேசினார். மதுரை விக்டோரியா ஹாலில் ஜம்ப்ரோ அவரை அழைத்து வந்து, பிரசங்கம் வைத்தார். ஏராளமான கூட்டம். கேள்விகள் பறந்தன. சாது தக்க பதிலளித்தார். நான் "ஒரே கிறிஸ்து சீடர் பல சர்ச்சுகளாகப் பிரிந்து சண்டையிடலேன்? தனி முத்திரையில்லாமல் எல்லாரும்

தீர்க்கதரிசிகளின் உண்மைகளைப் பின்பற்றினாலென்ன?" என்று கேட்டேன். சாது "சர்ச்சைவிட கிறிஸ்துவே பெரியவர். கிறிஸ்துப தேசங்கள் வளரும் நெஞ்சமே உண்மையான சர்ச்சு" என்றார். அவருடன் சில நிமிஷங்கள் பேசினேன். தாம் லாகூரில் ஒரு ஐக்கிய கிறிஸ்து நிலயம் காண்பதாக இந்தியில் சொன்னார். பைபிளில் எனக்கிருந்த சில சந்தேகங்களைத் தெளிவாக்கினார். விண்ணரசு உன்னுள் (ஸ்வர்கராஜ் அந்தர்) என்று அவர் எனது நெஞ்சைத் தொட்டது இன்னும் மகிழ்ச்சியளிக்கிறது. நானும் கிறிஸ்து சமயத்தைத் தழுவியிருப்பேன். அதற்கேற்ற சௌகரியங்களெல்லாம் இருந்தன. ஆனால் இறைவன் என் கண்ணைத் திறந்தான்.

89. மனமாற்றம்

சாது சுந்தரசிங்கைக் கண்டு திரும்பியபோது, ஒரு நாள் வக்கீல் நடேசையர் பங்களாவில் பூரிசங்கராசாரியார் கீதைப் பிரசங்கம் செய்தார். கேட்டேன். ஆறும் அத்யாயம் என்னைக் கவர்ந்தது. சுவாமிகளை வணங்கி வந்து, பெசண்டம்மையாரின் மொழி பெயர்ப்புடன் கூடிய கீதையைப் படித்தேன். மனம் திரும்பியது. பிறகு திருப்பரங்குன்றத்திற்குச் சென்றேன். அங்கே தேவாரமும் திருப்புகழும் கேட்டேன். பால்சாமியார் அங்கிருந்தார். அவர் அரிய வைத்தியர், சித்தஞானி. அவரிடம் அளவளாவினேன். அவர் சுத்தாத்வைதத்தை விளக்கினார். ஒரு நாள் திருப்பரங்குன்றத்திற்கு புஷ்பவனமும் ஜலதரங்கம் சுப்பையாவும் வந்திருந்தனர். புஷ்பவனம் உடல் மெலிந்தாலும் குரல் வெள்ளிமணி போலிருந்தது. "பக்திலேனி நரஜன்மம் எந்துகு" என்ற கீர்த்தனத்தைப் பாடினார். சுப்பையா கருவினுருவாகி வந்து என்ற திருப்புகழை வாசித்தார். அப்போது நானும் முருகன்மேல் சில பாடல்கள் பாடினேன். பாடப்பாட பக்திபரவசனானேன். சந்தேகப்பேய் என்னை விலகியது. குன்றத்தில் ஏறிச் சரவணப் பொய்கைமுன்னும் மகுதியிலும் அமர்ந்து, தியானித்தேன், சிந்தித்தேன் அருள் நூல்களைப் படித்தேன், கவி எழுதினேன். சுத்த சன்மார்க்கியானேன். நமது வேதாகம சமய ஞானியானேன். மதுரைக்குச் சென்று அடிக்கடி என்னையாளுடை மீனம்பிகைமேல் பாடினேன்.

90. B. C. பால்

இக்காலம் ஹார்வி மில் வேலை நிறுத்தம் பலமாக நடந்தது, வைகை மணலில் வரதராசுலு பேசினார். ஏராளமான கூட்டம். அப்போதுதான் ஜே. என். ராமநாதனுக்கு 144 கிடைத்தது. அக் கூட்டங்களில் அமர்ந்து, நாட்டு நிலையை அறிந்தேன். ஒரு நாள் பிபின் சந்திரபால் மதுரைக்கு வந்தார். மூன்று ஆங்கிலச் சொற்பொழிவுகள் ஆற்றினார். இளந் தொந்தியும் பெருத்த மண்டையும்

கொண்ட பால், 1907-ம் ஆண்டின் தீவிரவாதியா யில்லை. அவர் பேச்சில் மிதவாதம் கலந்திருந்தது. ஜார்ஜ் ஜோஸப் வீட்டில் அவரைக் கண்டேன்; அவர் வேதாந்தம் அழகாகப் பேசினார். "பாரதாத்மா உள்ளந்தோறும் எழுந்து. ஜ்வாலையாக ஒளிரவேண்டும். பகவானிடம் நிரம்ப பக்தி வைக்கவேண்டும். அதுதான் இந்திய அரசியலின் தனிப்பெருமை. ஸ்ரீ அரவிந்தகோஷ் அத்தகைய அரசியலை உபதேசித்தார்" என்றார். என் உள்ளம் அரவிந்தரிடமும் அவரது உத்தர்பாராபிரசங்கத்திடமும் சென்றது.

91. டாகூர் வந்தார்

வந்தார் ரவீந்திரநாத தாகூர்; கவர்ச்சியான ஆள்; அவர் உருவத்தில் கலையழகுண்டு. வெண்பட்டும் தாடியும் கண்ணாடியை ஊடுருவிப் பார்க்கும் கூர்விழிகளும் கண்டு பிரமித்தேன். அவர் வனவாசகம் (Message of the Forest) என்ற சொற்பொழிவையே எங்கும் படித்தார். நாங்கள் இரண்டு ரூபா சீட்டெடுத்து அமெரிக்கன் கல்லூரியில் அவர் குரலைக் கேட்டோம். மெல்லிய பெண்குரல்; இனிய ஆங்கில உச்சரிப்பு. அவர் கீதாஞ்ஜலியில் இரண்டு பாடல்களை வங்கத்திலும் ஆங்கிலத்திலும் சொன்னார். அவருக்குச் சங்கீத ஞானமில்லை; குரல் மிக இனிது. அவர் அன்று பொழிந்த கீதாஞ்சலிப் பாடல்கள் இசைத்தட்டில் வந்துள்ளன. தாகூருடன் தேசபந்து ஆந்துரு வந்திருந்தார். அவர் விக்டோரியா ஹாலில் காந்தியின் சத்தியாக்கிரக தத்துவத்தைக் குறித்துப் பேசினார். தாகூர் மேஜர் கணபதிராய் வீட்டில் தங்கினார். நானும் கல்லூரித் தலைவர் சூரியநாராயண சாஸ்திரியாரும் அவரைக் கண்டோம்.

தாகூர் நோயால் மெத்தையில் படுத்திருந்தார். எங்களைக் கண்டதும் எழுந்தார். நாங்கள் "படுத்திருக்கலாமே" என்றோம். அவர் "படுத்தால் கலி, விழித்தால் துவாபரம், எழுந்தால் திரேதா, நடத்தால் கிருதயுகம்" என்ற கருத்துள்ள சமஸ்கிருத சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே எழுந்து, உட்கார்ந்து, புன்னகையுடன் வரவேற்றார். இன்னும் சில நண்பர் அப்போது வந்தனர். நான் சிற்பி (ஸ்கல்ப்டர்) என்ெறாரு கவி புனைந்து படிக்கத் துடித்தேன். அதற்கு முன்பே ஒரு நண்பர் தமது ஆங்கிலக் கவியைப் படித்தார். தாகூர் "குயில் வாத்துக் குரலில் பாடுவதில்லை. பிழைப்பிற்குக் கற்ற பிறமொழியில் கவி புனைவானேன்? தாய் மொழியிலேயே பாடலாமே. நான் வங்காளத்திலேதான் பாடுகிறேன். தமிழர் தமிழிலே பாடுக. சுதேச பாஷைகளை வளர்க்கவேண்டும்" என்றார். நான் என் ஸ்கல்ப்டரைச் சட்டைப் பைக்குள் திணித்துக்கொண்டு, தமிழ் வாணியை தாகூர் முன் உபாசித்தேன். தாகூர் தமிழ்க் கலையைப்பற்றிக் கேட்டார். கலைக்கோயில் என்ற நாவலில் அந்தச் சம்பாஷணையை

இணைத்திருக்கிறேன். சாந்திநிகேதனில் தக்க சமயம் வரும்போது தமிழுக்கு ஒரு பீடம் நாட்டுவதாக தாகூர் உறுதி கூறினார். அவருக்குத் தாயுமானாரின் அரும்பொனேமணியே என்ற பாடலையும், ஆனந்தக் களிப்பையும் விளக்கினேன். அரைமணி நேரத்தில் பல விஷயங்கள் அறிந்தேன். தாகூர் பேச்சு அர்த்த புஷ்டியாயிருக்கிறது. அவர் சிறந்த சிந்தனைச் சிற்பி. அவர் காட்சி எனது தமிழ்க் கனலைத் தூண்டியது. மனம் இந்தியமயமானது.

92. நாடகம்

இச்சமயமே கல்லூரித் திருநாள் நடந்தது. அதற்கு நானும் ராஜாராவும் நாடகம் தயாரித்தோம். கம்பன் வரலாற்றை நான் நாடகமாக எழுதினேன். நானே கம்பனாக நடித்தேன். பாட்டு வசனம் காட்சி ஜோடிப்பு எல்லாம் என் பொறுப்பு. கம்பனாக நடித்த போது நான் இந்து சமயத்தைப்பற்றியும் தெளிவாக மேடையில் பேசினேன்.

இந்திய கிறிஸ்துவ சங்க விழா நடந்தது; பல வெள்ளைக்காரரும் பெரிய பாதிரிகளும் வந்தனர், "ஐயா ஒரு நாடகம்" என்றார் மைகேல். நானும் ராவும் ஏசுநாதர் சரித்திரத்தையே நாடகமாகத் தயாரித்தோம். நாடகம் இரண்டு பாகம். முதலில் கிறிஸ்து ஜனனம். அதில் நான், கிறிஸ்து தரிசனத்திற்காகச் சென்ற, இந்திய ரிஷியாக நடித்தேன். இனிய பாடல்களால் வேதசாரத்தை உபதேசித்தேன். குழந்தை கிறிஸ்துவின் காதில் ஓம் என்றேன். பிறகு ஆம் ஆமன் என்றேன், இதை ஆட்சேபித்தவர்களுக்கு மறுநாள் ஓங்கார விளக்கம் செய்தேன். மறு தடவை நான் சிலுவைக் காட்சியில் ஏசுநாதராக நடித்தேன். மலையுபதேசம் நடித்தபோது திருக்குறளையும் கலந்து சொன்னேன், "உம்மைச் சிலுவையேற்றியது சரிதான்" என்றார் ஒரு நண்பர். இந்து நண்பர் கிறிஸ்துவாகிவிட்டாய் என்றனர். கிறிஸ்துவர் இன்னும் சாணி வாசனை போகவில்லை என்று நெற்றியைத் தடவினர். இந்தச் சமயம் என் வீராவேசத்தைக்கிளப்பிய சந்தர்ப்பம் வந்தது.

93. சத்தியார்த்தப் பிரகாசம்

நான் மாணவர் சங்க வாரக்கூட்டங்களில் அரிய விஷயங்களைப் பற்றிப் பேசினேன். புதிய கல்விமுறை, நமது நாட்டு நிலைமை, கல்வி பரவும் வழி, ஆசிரியர் கடமை; பள்ளி ஒழுங்கு, ஸயன்சும் வாழ்வும், மதம் வேண்டுமா...பாதிரிமார் பணிகள் முதலியவற்றைப்பற்றிப் பேசினேன். ஒரு நாள் லார்பீர் என்னைக் கூப்பிட்டு "இங்கே பெரிய சபை கூடும், அதில் இந்தியா கிறிஸ்து மயம் ஆகுமா என்ற விவாதம் நடைபெறும். ஆகும் என்பதற்கு ஐந்து கிறிஸ்துவர் பேசுவர். ஆகாது

என்ற கட்சியை நீர் பேசவேண்டும். உம் பக்கம் பேச ஐவரைக் கூட்டிக் கொள்க" என்றார். என் சகாக்களில் ரங்கராவ் ராமநாதன் ஆகிய இருவரே முன்வந்தனர். மற்றவர்கள் "நமது கட்சி தோற்பது நிச்சயம். இத்தனை கிறிஸ்துவருக்கு நாம் பதிற் சொல்லமுடியாது" என்று பின் வாங்கினர். நான் தைரியமாக முனைந்தேன். இந்துமத விளக்கத்திற்காக நூல்களைத் தேடினேன். விக்டோரியா எட்வேட் நூலகத்தில் கீதையும் விவேகானந்தர் நூல்களுமே கிடைத்தன. அவை போதா. நான் மனத்தளர்ச்சியுடன் மீனாட்சி தரிசனம் செய்துகொண்டு, அந்திக்கடைப்பொட்டலுக்குச் சென்றேன். அங்கொரு பாதிரி பிடிவிழுத்துக்கொண்டு 'ஏசுவை நம்புங்கள்...சுகம் பெறலாம்,' என்றான். கிளம்பினார் ஆரியசமாஜ் சர்மா...அவர் கிறிஸ்து மதத்தின் குறைகளையெல்லாம் அம்பலமாகிக் கொச்சைத் தமிழில் வேத தர்மத்தை விளக்கினார். நான் கூர்ந்துகேட்டு அவரைத் தொடர்ந்தேன். அவரும் இந்தியில் என்னுடன் அன்பாகப் பேசினார். நான் எனது தேவையைச் சொன்னேன். அவர் இதோ சமய சஞ்ஜீவி என்று சத்தியார்த்தப் பிரகாசத்தைக் கொடுத்தார். அதில் கிறிஸ்துமத கண்டனம் இருந்தது. படித்துக் குறிப்பெடுத்தேன். மற்ற அத்யாயங்களையும் படித்தேன். சத்யார்த்தப் பிரகாசம் என் கண்ணைத் திறந்தது. இனி, தைரியம்!

வாஷ்பர்ன் ஹாலில் பெரிய கூட்டம். பாதிரிமார் பலர் வந்திருக்கிறார்கள். மில்லர் தலைமைவகித்து, பாதிரிமார் தொண்டுகளையும் கிறிஸ்துவ மதத்தால் ஆசிய ஆப்பரிக்க நாடுகள் அடைந்த நலத்தையும் பெருமையாகப் பேசி, விவாதத்தைத் தொடங்கினார். ஐந்து கிறிஸ்துவர் இந்தியாவின் அந்தகாரத்திற்கு கிறிஸ்து ஜோதியே விளக்கு என்று விளக்கித் தீர்த்தனர். அழகான ஆங்கிலமும் பைபிளும் சேர்ந்து அவர்களுக்குக் கரகோஷங்கள் அளித்தன. பிறகு மில்லர் இப்போது எதிர்க் கட்சி வாதாடுகிறது; பேசும் என்று என்னைப்பார்த்தார். நான் இரண்டு நிமிஷம் திருப்பரங்குன்றத்தை நோக்கித் தியானித்தேன்:

நாட்டுக்குச் சீரான நல்லசன் மார்க்கத்தைக்
கேட்டுணர முன்னே கிறித்துவரும்—ஊட்டமுத
வாக்கருளாய் ஓங்கார மந்திரத்தை விண்ணறிய
ஊக்குமுரு காபேசென்னுள்.

என்று பாடித் தொடங்கினேன். ஆங்கிலப் பேச்சின் சாரத்தையே தமிழில் தருகிறேன். இதில் நான் பசுமலையில் பெற்ற இந்து கிறிஸ்து மதானுபவங்களெல்லாம் உள்ளன.

94. உள்ளம் பேசியது!

நண்பர்காள்,

என் உள்ளத்தால் உங்கள் உள்ளத்திற்குப் பேசுகிறேன். நான் யாரோ அவரே நீர். ஸ்டான்லி ஜோன்ஸில் துடிக்கும் உள்ளமே சாமிநாதனிடமும் துடிக்கிறது. மாசற்ற உள்ளம் ஈசனைக்காணும். அந்த உள்ளத்திற் பேசுவது மனச்சாட்சி. அச்சு நூல்களையெல்லாம் மூடிவைப்போம்; மனச்சாட்சியின் மெல்லிய மெய்க்குரலைக்கேட்போம். அது, ' செய் அன்பு, பேசு உண்மை, நினை கடவுளை, இரு அமைதியாய், நட நன்னெறியில் ' என்கிறது, மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து நடந்தால், எல்லாரும் நல்ல வழியிலேயே நடப்பார்கள், உலக தீர்க்க தரிசிகள் அனைவரும் மனச்சாட்சியின் தூதர்களே. அவர்கள் திருவாக்குகளும் மனச்சாட்சியின் எதிரொலியே. வேதம், உபநிஷதம், கீதை, குறள், திருவாசகம், தாயுமானர், அருட்பா, பைபிள், குரான் எல்லாம் மனச்சாட்சியின் வாசகங்களே. மனச்சாட்சி ஒன்றே. அதற்கு வெள்ளை, கறுப்பு, சாதிமதம், கிழக்கு மேற்கு என்ற வேற்றுமை இல்லை. இந்த வேற்றுமை மன விகாரத்தால் உண்டாவதே. சாமிக்கும் சைத்தானுக்கும் போர் மூட்டியது மனமே. சுவர்க்க நரகங்களின் நிலைக்களன் மனமே. இந்த மனதைப் பண்படுத்தினால் அன்புப்பயிர் விளையும், பகை ஒழியும். உலகப்போராட்டங்கள் மனப்போராட்டங்களே, மனமே மனிதன். மனம் தீமைக் காடாகி உலகில் அநியாயம் செய்யும்போது, மனித சமுதாயமே துன்பச்சுழலில் சிக்கித்தவிக்கிறது. அப்போது ஒரு அருட்சுடர் உதிக்கிறது; வழிகாட்டுகிறது. அதன் கடமை முடிந்ததும் மறைகிறது. இந்த அருட்சுடரையே அவதாரம் என்பர். கண்ணன், ராமன், புத்தன், சங்கரர், வள்ளலார் ஏசுநாதார் முதலியோர் அத்தகையோர்.

ஏசுநாதர், யூதர் வாழ்வைத் திருத்த வந்தார். யூதராகப் பிறந்து யூதராகவே இறந்தார். இறுதி முப்பத்தைந்து நாட்களின் நிகழ்ச்சி தான் நமக்குத் தெரியும்; மற்ற நாளெல்லாம் ஏசுநாதர் இந்தியாவிலும் திபேத்திலும் சுற்றி ஞானசாதனம் செய்தார். அக்கால யூதர் முலாம்பூசிய நச்சுக்கோப்பைபோன்று, உள்ளே வஞ்சமும் வெளியே இடம்பச் செருக்குமாயிருந்தனர். எருசலத்தைக்கூடக் களியாட்டக் கடையாக்கினர். கோயிலை வட்டிக் கடையாக்கினர். பொய்யும் வஞ்சமும் பொறாமையும் கோளும் கொடுமையும் இறுமாப்பும் கொண்ட முரடராயினர், மனக் குருடராயினர் யூதர். நல்லது சொன்னால் கல்லெறிதான். இவர்களை ரோம் அடிமை செய்து வைத்திருந்தது, ஏசுநாதர் எழுந்து அடிமை விலங்கை அறுத்து, மடமையிருளை நீக்கி, பாவிகளைப் புண்ணியராக்கி, அடிமை நாட்டில் விண்ணரசை நாட்ட முயன்றார். அன்பு பொறுமை, உண்மை, மனச்சாட்சியை

மதித்து நடத்தல், ஆகிய ஒழுக்கங்களையே உபதேசித்தார். "உலக மாயத்தில் மயங்காதிர் : அடிமை ராஜ்யத்தை ஒழித்து, ஆத்ம ராஜ்ய மான விண்ணரசை அடையுங்கள். பரம பிதா போல் பூரணம் பெறுங்கள். நாளைக் கவலை ஏன்? குருவிக்கு ஊட்டி, அல்லிக்கு உடுத்தும் இறைவன் நம்மைக் காப்பான்; நம்புங்கள்" என்று உபதேசித்தார் மகான். ஏசுநாதர் அன்புப் பொறுமையைச் சொல்லி, செய்து அதற்கே தியாக பலியாகி விண்ணேறினர். கல்வரிக்கொடுமை நடந்தபோது சீடர்கள் ஓடி ஒளிந்தனர். யூதாஸ் குருவைக் காட்டிக்கொடுத்தான்; பீடர் மறுத்தான். குரு மறைந்தபிறகுதான் சீடர் வெளிவந்து, யூத மந்திரங்களில் தொழுகை நடத்தினர். பீடர் பால்—இருவரும் ரோமில் உபதேசம் நடத்தினர், எந்த ரோம் யூதரை அடிமை செய்ததோ அந்த ரோமில் கிறிஸ்து ராஜ்யத்தை நாட்டினர் அன்பர். ஏகாதிபத்ய ரோம் மறைந்தது. ஆனால் வாடிகனில் கிறிஸ்து ராஜ்யம் இன்னும் செழிக்கிறது. ஏசுநாதர் பெயரால் இன்று உலகெங்கும் அரிய பணிகள் நடக்கின்றன. மார்க்கும், மாத்யூவும் ஜானும் லூக்காவும் கிரேக்கத்தில் எழுதிய பைபிள், இன்று உலக மொழிகளிலெல்லாம் வழங்குகிறது. சென்ற மூன்னூறாண்டுகளாகவே பைபிளுக்கு 'உலகப்புகழ்' கிடைத்தது. அதில் உள்ள உபதேசங்களெல்லாம் திருக்குறளில் உண்டு. எங்கள் ஆத்திச்சூடியிலும் உண்டு. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எங்கள் வேதரிஷிகளும் தமிழ் சித்தர்களும் அரிய தெய்வக்கலையை அளித்தனர்.

சரியை கிரியை யோகம் ஞானம் என, தெய்வச் சாதனங்கள் நான்கு. உலகச் சமயங்களெல்லாம் சரியை கிரியை (நன்னடை அருட்பணி) ஆகிய இரண்டே படிகளை எட்டியுள்ளன. எங்கள் பாரதநாட்டு வேதாகமக் கலைகளோ யோகஞானப்படிகளை எட்டி, மனிதனைத் தேவனுக்கும் புனிதமான ஆத்மீக ரகசியங்களை உலகிற்குத் தந்தன. எங்களுக்கு அன்னியர் கடல்கடந்துவந்து ஆத்மபோதனை செய்யத் தேவையேயில்லை. இந்தியாவின் யோகஞான மார்க்கத்தையே ஒருநாள் உலகம் ஆவலாகப் பின்பற்றப்போகிறது. இன்று இந்தியா அடிமையாயிருக்கிறது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் சுதந்தரமாயிருக்கின்றன. நாங்களும் சுதந்தரமானால், உங்களைப்போல ஸயன்சும் தொழிலும் செல்வமும் செல்வாக்குமாயிருப்போம். எங்கள் ஞானிகளை உலகெல்லாம் அனுப்பி, ஆக்கவேலை செய்வோம். புத்தர் காலத்தில் அப்படியே நடந்தது. அசோகர் உலகெங்கும் துறவிகளை யனுப்பி, புத்த தருமத்தைப் பரப்பினர். அறநெறிக் கொள்கைகளைக் கல்தூண்களில் எழுதி நாடெங்கும் நாட்டினர். அக்கால நாலந்தா இக்கால ஆக்ஸ்போர்டுபோலிருந்தது. அக்காலம் புழுவுக்குக்கூட வைத்தியம் பார்த்தனர். இக்காலம்போல் கப்பலில் புட்டி மருந்துகளை வரவழைத்துச் சீட்டெழுதித்தரும் வைத்தியமன்று; மூலிகைகளையும் வைத்திய நிலையத்திலேயே பயிர்பண்ணி, அங்கேயே மருந்தும் செய்து தந்தனர்.

ஐரோப்பியர் பருத்தியை மயிர்முளைக்கும் செடியென வியந்தநாளில், இந்தியா டாகா மஸ்லின் நெய்தது. உலகெங்கும் தேக்குக் கப்பலில் இந்தியாவின் சரக்குகள் சென்றன. எங்கள் தமிழகம் சீனம், ரோம் கிரீஸ் பொனீசியா முதலிய நாடுகளுடன் கப்பல் வியாபாரம் செய்தது. யவனரும் சோனகரும் இங்கேவந்து, சரக்கு வாங்கிச் சென்றனர். ரோமர் எங்கள் பாண்டிய மன்னரின் வாயற் காப்பாளராயிருந்தனர். கரிகாலன், நெடுமாறன், இளஞ்செழியன், செங்குட்டுவன் ராஜ ராஜன், அசோகன், ஹர்ஷன் போன்ற நீதிமன்னர் இங்கே ஆண்டனர். இவர்கள் ஆல்ப்ரட், சார்ல்ஸ்மாங், அகுஸ்தன் போன்ற ஐரோப்பிய மன்னருக்கு இம்மியும் குறைந்தவர்களில்லை. நாங்கள்மட்டும் சரித்திரம் எழுதியிருந்தால் ஒவ்வொரு ஊருக்கும் தெருவுக்குங்கூட ஒரு சரித்திரம் எழுதலாம். ஒவ்வொரு வேதாகம முனிவருக்கும் ஒரு பைபிள் எழுதமுடியும். ஆளல்ல; ஆண்டவனே எங்கள் குறிப்பு. அதனால் எங்கள் பெரியார் பலர், தங்கள் பெயர்கூடத் தெரியாமல் ஞானச்செல்வந் தந்திருக்கிறார்கள். உலகச் சமயங்கள் சமயாசாரியார் பெயரால் வழங்கும்; எங்கள் சமயங்கள் ஆண்டவன் பெயராலும் உண்மையின் பெயராலுமே வழங்கும். கிறிஸ்துமதம் கிறிஸ்துவையே முன்வைத்துப் பேசும், எங்கள் சைவமதம் மெய்க்கண்டோரையோ அப்பரையோ வைத்து வழங்காது. சிவனையே குறித்து நிற்கும். அதே போல் வைஷ்ணவம் ஆழ்வார் பெயரையோ ராமானுஜர் பெயரையோ தாங்கியதன்று. எங்கும் நிறைந்த கடவுளான விஷ்ணு பெயரைத் தாங்கி நிற்கிறது. வேதாகமத்தில் சாதிமத பேதம் இல்லை; எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே; எல்லா உடலும் இறைவன் ஆலயமே என்பதை வேதம் வற்புறுத்துகிறது. தற்காலத்தில் சாதி வகுப்பு வேறுபாடுகள், தீண்டாமை, நெற்றிக்கோடுகள், குழந்தை மணம் விதவைக்கோலம் எல்லாம் கண்டு நீங்கள் இந்து சமுதாயத்தைக் கேலி செய்கிறீர்கள். இவையெல்லாம் இடையே புகுந்த புல்லுருவிகள். காலத்தால் இவை மறைந்துபோகும். இனிச் சாதிமத பேதம் உலகில் இருக்கமுடியாது. மனிதனை மனிதன் மதியாத இறுமாப்பும் இருக்கமுடியாது. பெண்களை அடிமைபோல் நடத்த இனி முடியாது. பெண்ணுரிமை விழித்தெழுகிறது. உங்கள் நாட்டில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. இந்தியாவில் அதிசீக்கிரம் பெண்கள் பொது நல வாழ்விற் பங்கு கொண்டு நாட்டை ஆளப்போகிறார்கள். ஆண்களைப்போல் பெண்களும் எல்லாத் துறையிலும் சமபங்கு கொண்டு வாழ்வார்கள். ஆதலால் தற்போதைய தீமைகள் மறைந்துபோகும். அவற்றைக்கொண்டு நீங்கள் எங்களைக் கேலிசெய்து, உங்கள் மதத்தைப் புகுத்தமுடியாது. வருங்கால உலகம் இந்தியாவிலிருந்து மக்கட் பண்பைக் கற்கவேண்டும். சென்ற ஐநூறாண்டுகளாகவே எங்கள் நாடு அடிமை நாடானது. அன்னியமாயம் எங்கள் முன்னேற்றத்தின் மூச்சைப்பிடிக்கிறது. சுதேசக்கலைகளையும் அருட்செல்வங்களையும் தலை

தூக்கமுடியாமல் யந்திரச் சவுக்கால் அடிக்கிறது. ஆனால் நிலைமை திருந்தும்; இருள் நீங்கும். அச்சம் ஒழியும். ஒருநாள் சிங்கம்போல் எங்கள் ஆத்மா எழுந்து விழிடும்; கீதையின் முழக்கமும், குறளின் குரலும் பாரதசக்தியை உலகிற்கு விளக்கும். அடிமை நோயால் வறண்டுபோன எங்கள் புலமையும் மேதையும், புத்துயிர் பெற்றுத் தழைக்கும். உலகம் அந்த மறுமலர்ச்சியின் மணத்தை நுகர்ந்து இந்தியாவுக்கு யாத்திரை வரும். இப்போது இந்தியாவைப் பகற் கொள்ளையடிக்கும் நாடுகள், அப்போது இந்தியாவை சன்மார்க்கக் கோயிலாக வணங்கும். போரில் சிக்கி இரத்தப்புயலில் தடுமாறும் ஸயன்ஸ் நாகரிகத்திற்கு, இந்தியா ஆத்மசாந்தியைக் காட்டும் கலன் கரை விளக்காகும். இப்போது இந்தியா திறந்துவிட்ட சத்திரமா யிருக்கிறது. வந்தவன் போனவனெல்லாம் அவனவன் மொழியை, மதத்தைப் புகுத்திச் சுதேசிகளின் நாகரிகத்தைக் சீர்குலைக்கிறான். இனி இந்தியா புதிய வீரக்கனலுடன் எழுந்து, தன் வீட்டைக் காக்கும். ஸயன்ஸ் குண்டிற்கும் எட்டாத ஒரு புதிய முறையால், இந்தியா விடு தலையாகும். அப்போது எங்கள் திரிசங்கு சுவர்க்கம் நீங்கும்; கிழக்கு மின்றி, மேற்குமின்றி நாகரிகப் போலி யடிமைகளாக வாழும் இழிவு நீங்கி, உள்ளறிவும் உலகறிவுங்கொண்ட புதிய வாழ்வை வாழ்வோம். இந்தியாவின் உடல் அடிமையாயிருக்கிறது, அதன் ஆத்மாவை யார் அடிமை யாக்கமுடியும்? ஆத்மசக்தி உதிக்கிறது. அதுவே அடிமைத் தளைகளைச் சுட்டெரிக்கும்.

ஏனெனில் இந்தியா என்பது மண்ணல்ல, மலையல்ல; இந்தியா பாரதசக்தியின் ஓமகுண்டம். இந்தியா ஒரு தெய்வக்கனல். அந்தக் கனலைத் தூண்ட இன்றும் மகான்கள் வருகிறார்கள். வந்தார் ராஜா ராம் மோகன்ராய்; சாதிமதப் பேதமில்லாமல் எல்லாரும் தெய்வ உணர்வில் கலந்து, வாழவும், ஆண் பெண் சமவுரிமையுடன் தலை நிமிர்ந்து நடக்கவும், பிரமசமாஜம் கண்டார். வந்தார் தயானந்தர். மாசற்ற வேததருமத்தை நாட்டினார். எங்கள் சமுதாய வாழ்விற் படர்ந்த மாசுகளை ஊதியெறிந்தார். ஆரிய சமாஜம் இன்று சுத்தி சங்கடன் இயக்கத்தால், பிறமதம் புகுந்தவரை வேத தருமத்திற் கொண்டு சேர்க்கிறது. இந்தியக்கலையை வளர்க்கிறது. எழுந்தார் பரமஹம்ஸர், எல்லா ஆறுகளும் ஒரே கடலிற் பாய்வதுபோல், எல்லா மதங்களும் ஒரே அருட்கடலில் கலக்கின்றன; சாதிமத பேதம் மன மயக்கம் என்பதைக் காட்டினார். எழுந்தார் வேதாந்தச்சிங்கம் விவேகானந்தர்; ஒரேநாளில் சிகாகோ சர்வமத சங்கத்தில் எங்கள் வேத தருமத்திற்கு வெற்றியளித்தார். அவரைவிட ஆத்மஞானத்தை யும் உபநிஷத் ரகசியத்தையும், அவ்வளவு ஆவேசமாகப் பேசினோர் இல்லை. இதை மாக்ஸ்முல்லர் போன்ற அறிஞரும் அறிவர். மற்றொரு தீர்க்கதரிசி தமிழ்நாட்டிற் தோன்றினார்—வடலூர் ராமலிங்க வள்ள

லார். இந்த யுகத்தின் உண்மையான தீர்க்கதரிசி இவரே. தமிழ் நாட்டில் பிறந்ததால் இவர் ஒளி இன்னும் உலகிற் பரவாமல் இருக்கிறது. அதற்குக் காலம் வரும். சாதிமத சாத்திர கோத்திர பேதமில்லாமல், எல்லாரும் சுத்த சத்திய சன்மார்க்க சங்கத்திற் கூடி, வாழ அவர் பாடினர், பேசினர், எழுதினர். வடலூரில் ஒரு ஞானசபையும் கூட்டினர். இவர் தீர்க்கதரிசனமே இப்போது நிறைவேறி வருகிறது. உலகில் வானரசைக் கொண்டுவரவும் வாழ்வைத் தெய்விகமாக்கவும், மானிடம் அமரநிலை பெறச்செய்யவும் இவர் பாடுபட்டார். இவர் அருளிய அருட்பா போன்று எந்த நாட்டில் உண்டு ?

இப்படிப்பட்ட பல அருட்பெரியார் எங்கள் புண்ணிய பூமியில் என்றும் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். இனியும் வருவார்கள். வருங்காலத்தில் ஓர் ஜோதி இந்தத் தமிழுலகில் உதிக்கும். அது மாந்தர் வாழ்விற்கு சுத்தசுதந்தர சமத்துவமான இயற்கை வழியைக் காட்டும். எங்கள் நாட்டிற்கே உரிய யோக சக்தியால் அது பெரிய காரியங்களைச் சாதிக்கும்.

எங்கள் நாடு புண்ணியபூமி' அதன் சமயம் மனித சமுதாயத்திற் கெல்லாம் பொதுவான சுத்த சன்மார்க்க யோகம். இந்திய சன்மார்க்கம் அகண்ட சமரஸக் கடல்; அதற்குக் கிணற்றுத்தவளை மனப்பான்மையில்லை. அதன் கை படுகொலை ரத்தத்தில் தோய்ந்ததில்லை. அநியாயப் படையெடுப்பும், அதர்மப்போரும் இந்தியாவுக்கு இல்லை. "எல்லாரும் இன்புறுக; ஆன்மநேய ஒருமை துலங்குக'' என்பது இந்தியாவின் சுருதி வாக்கியம். இந்தியாதான் உலகில் சுத்த சமரஸ பீடம். உலகின் அகதிகளுக்கு அதுவே புகலளித்தது. அரபியாவிலிருந்து ஓடிவந்த சிரியா கிறிஸ்துவருக்குப் புகலளித்தது இந்தியா. பாரசிகத்திலிருந்து ஓடிவந்த ஜரதுஷ்ட்ரருக்குப் புகலளித்தது இந்தியா. ஏசுநாதர் முதல் மாணவர் தோமாமுனிவருக்கு இடமளித்தது சென்னை. புத்தரையும் காந்தியடிகளையும் பெற்றது இந்தியா. ஆத்மசக்தியின் கோயில் இந்தியா. இங்கே சுயநலத்திற்கும் அகம்பாவத்திற்கும் சாதிமத பேதத்திற்கும் இடமிராது. இந்தக் கோயிலில் சத்திய சூரியன் நித்தியம் விளங்கும். ஆதலால் பதினாயிரம் மைலிலிருந்து இங்கே யாரும் விளக்குப்போட வரவேண்டியதில்லை. எங்கள் நாட்டு சுத்தான்ம சூரியனே உலகைப் பகலாக்கும், இரவை நீக்கும். கவலை போக்கும், இன்பமாக்கும். இந்தியா இந்தியாவே; இந்திய தர்மம் இந்திய தர்மமே. பாரதசக்தி பாரதசக்தியே. அதை அன்னியர்வந்து திருவழிக்கமுடியாது. இந்தியஞானம் அகண்டசமுத்திரம்; அது சமயங்களையெல்லாம் விழுங்கிய சமயாதீதப் பரம்பொருள் விரிவு. பாரத தர்மம் எல்லாச் சமயங்களையும் உரமாகக்கொண்டு தழைக்கும் சுத்த சுதந்தர சமரஸக் கற்பகம். இந்தக் கற்பகம் தனக்குரிய தெய்வக்கனியே தரும்; தனக்குரிய அருள்மணமே கமழும். இயற்கையான ஆனந்தத்

தேன் பிலிற்றும். நண்பர்காள், கற்பகத்தை முழுதும் வேப்பங்காய் குலுங்கச் செய்கிறேன் என்றால் நகைப்பார்களா மாட்டார்களா! தெய்வ ஜோதியான இந்தியாவை, வேதமும் உபநிஷத்தும் அருட்பாவும் திருவாசகமும் முழங்கும் இந்தியாவை, யாராவது பைபிள்மயமாக்குவேன், கிறிஸ்துமயம் ஆக்குவேன் என்றால், பாரடா இவன் அகம்பாவத்தை என்பார். ஏனெனில் இந்தியாவில் இன்று கிறிஸ்துவ நாட்டுக் கொடி யாடுவதால், இந்தியரெல்லாரும் கிறிஸ்துவராக முடியாது. இந்தியர் கஞ்சிப்பட்டாளமில்லை. அந்தக் கொடி நாளையே இறங்கிவிட்டால்? நாளையே எங்கள் அருட்கொடி வானளாவப் பறந்தால்? உலகமெல்லாம் இந்தியாவைத் தேடிவரும்; ஆத்மசாந்தக் காமதேனு பாரதசக்தி. அதுதான் உலகின் உள்ளப் பசியைத் தீர்க்கும். நம்புங்கள் நண்பர்காள், இந்தியா ஒருக்காலும் கிறிஸ்துவமாகாது, ஒருக்காலும் இஸ்லாமாகாது; இந்தியா இந்தியாவே, வேதாகம நிலையமே. கீதை எங்கள் உள்ளத்தில் உள்ளமட்டும், திருக்குறளும் திருவாசகமும் உள்ளமட்டும் யார் எங்கள் ஆத்ம சுதந்தரத்தைத் தடைசெய்யமுடியும்? நேயர்களே, நான் அப்பரை மதிக்கிறேன். ஏசுநாதரையும் மதிக்கிறேன். தாயுமானுர் போல் பைபிளையும் படிக்கிறேன். பாதிரிகளின் பொதுநலப் பணிகளைப் போற்றுகிறேன். பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி, தொழிற்சாலை...எல்லாம் சரிதான். ஆனால் எங்கள் சமயத்தில்மட்டும் கை வைக்கவேண்டாம் என்கிறேன். வெள்ளைக்காரர்களே வாருங்கள்; உங்கள் ஸயன்ஸையும் தற்காலத் தொழில்முறைகளையும் யந்திரக் கலைகளையும் சொல்லித்தாருங்கள்: கற்கிறோம். ஆனால் சிலுவையைத் தூக்கி, வந்து எங்களை மதம் மாற்றாதீர்கள். சிலுவை நிழலில் அரசியல் கொடியை நடாதீர்கள். இந்தியச் சிங்கம் சுதந்தரகர்ஜனை செய்கிறது. அடிமைத்தளைகள் தகர்கின்றன. சுதந்தர இந்தியா உலகிற்கெல்லாம் ஆத்மஒளி வீசும். வந்தேமாதரம்.

என் நண்பர்கள் நீண்ட கரகோஷம் செய்தனர். என்னை மறந்து பேசிவிட்டேன். மனச்சாட்சியின் குரலையே எதிரொலித்தேன். என்னைத் தொடர்ந்து பேசினோர் என்னை ஆமோதித்தனர். எதிர்க்கட்சியில் பால் என்பவர், பத்தாண்டுகளுக்கு முன்னே எங்கள் ஊரில் ஐம்பதே கிறிஸ்துவர், இந்த ஆண்டு நூறு, இப்படியே பார்த்தால் இந்தியா சில ஆண்டுகளில் கிறிஸ்துமயம் ஆகும் என்றார். கிறிஸ்துவர் கைதட்டினர். தலைவர் ஆமோதித்தார். நான் எழுந்தேன். "ஐயா எனது நண்பர் சொல்வது உண்மையானால், நான் ஒன்று சொல்லுகிறேன்: சிரிக்காதீர்கள். எங்கள் வீட்டில் சென்ற வருஷம் ஒரே பூனை இருந்தது; இந்த வருஷம் அது குட்டிபோட்டது; மூன்று பூனைகள் உள்ளன. இப்படியே கணக்குப் பார்த்தால் இன்னும் பத்து வருஷங்களில் எங்கள் ஊரே பூனைக்குட்டி நகராகிவிடும் உண்மைதானே. பிறகு ஊரில் மனிதரே இருக்கமாட்டார்கள். மியாமியா என்று பூனைகளே தங்கள் பாஷையில் பேசிக்கொண்டிருக்கும். அல்லது மனிதர்களும் தாய் மொழியை மறந்து மியாமியா பாஷை பேசுவார்கள்."

95. பசுமலை வாழ்க!

சிலர் அதிகப்ரசங்கி மிந்திரிக்கொட்டை என்றனர். சிலர் என்ன துணிச்சல் என்றனர். சிலர் குடி பறிக்காதே என்றனர். சிலர் துரை முகம் சிவக்கிறது என்றனர். நான் என் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். என் பேச்சினால் சில இடர்கள் வந்தன. என்றாலும் எனது நெஞ்சில் சன்மார்க்கப் பாதிரியாக வேண்டும் என்ற கனல் பற்றியது. அந்தக் கனல் வளர்ந்துகொண்டே யிருக்கிறது. பாதிரிகள் பசுமலை நாட்டியதுபோல் நான் பதிமலைநாட்டி, நம்மவர் அறிவும் தொழிலும் ஒழுக்கமும் இன்பமும் எய்த, யோக சாதனம் பயிற்றி அருட்கோயில் எழுப்பி, ஐயாயிரம் பெயரையாவது சுத்தாத்ம ரராகக் கண்டால் மகிழ்வேன். பசுமலைக்கு நான் என்றும் நன்றி செலுத்துகிறேன். அங்கேதான் எனது கடமையை அறிந்தேன். பாதிரிமார்கள் வாழ்க! அவர்கள் உறவால், எனது நாட்டிற்கும் சமயத்திற்கும் எப்படிப் பணி புரிவதென்றறிந்தேன். பைபிள் வாழ்க! அதனால் நான் கீதையை நன்கு அறிந்தேன். உலகமெல்லாம் பின்பற்றிப் பயன் பெறும் ஒரு பொது நூலை ஆக்க அன்றுமுதல் தொடங்கினேன். வெள்ளைக்காரர் உறவால் என் ஆங்கிலம் பண்பட்டது; மேனாட்டாரின் காவிய வேகம் என் நரம்புகளை ஊக்கியது. அன்றுமுதல் இன்று வரையில் நான் ஒரு நிமிஷங்கூட வீணாக்கியதில்லை: வீண் வம்படித்ததில்லை. ஒவ்வொரு நிமிஷத்தையும் கலையாக, ஒவ்வொரு மூச்சையும் பொதுநலமாகச் செய்தேன், பரீட்சைகள் முடிந்தன; இறுதியில் சொல்லுருக்கச் சோதனை நடந்தது. அதற்கு நான் பைபிளிலிருந்து மலையுபதேசத்தையும், ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்டிலிருந்து ஒரு காட்சியையும் ஒப்பித்தேன். இறுதிநாளில் லார்பிர் மைகேல் உள்பட எல்லாருக்கும் விருந்து வைத்தோம்; படம் பிடித்துக்கொண்டோம். பசுமலைக்கு வந்தனம் கூறினோம். அந்தப் பொறுப்பு எனக்கு: "பசுமலையிலிருந்து நான் போகிறேன்; ஆனால் பசுமலை என்னைத் தொடர்ந்து வருகிறது. என் வருங்காலத்தை அது உருவாக்குகிறது. பாதிரிமார் போல் எனது தாய்மொழிக்கும், தாய் நாட்டிற்கும், சுத்த சன்மார்க்கத்திற்கும் என்னை அர்ப்பணிக்கிறேன். எந்த ஆண்டவன் இவர்கள்மூலம் அருட்பணி செய்கிறானோ, அதே ஆண்டவம் எங்கள் மூலம் எங்கள் நாட்டு முன்னேற்றத்திற்கான பணிகளை ஊக்கி, வெற்றி தருக..." இவ்வாறு இறுதி விருந்து நடத்தி வெளியே வந்தோம். அதற்குள் சர்ச்சு பிரார்த்தனை தொடங்கியது. அங்கே மதுரைப் பட்டாளம் வந்தது; பசுமலை ஏரிக்கருகே பட்டாளம் துப்பாக்கி பழகுவதுண்டு. பட்டாள வீரர் சர்ச்சுக்கு முன்னே பய பக்தியுடன் நின்று பிரார்த்தனை கேட்டு, சிலுவை யடையாளம், செய்து ஆமன் என்று சென்ற காட்சியை நான் மறக்கமுடியாது. இப்படி நமது சன்மார்க்கத்திற்கும் அருட்கோயில் கட்டிக் காண்போமா என்ற எண்ணமே என்னை உந்தியது.

96. போம் உடனே !

இனி ? இரவெல்லாம் கனவுப்படலம். நான் தமிழ்ப் பாதிரியாகி சுத்த சன்மார்க்கத் தொண்டுசெய்து, கிராமம் கிராமமாக வெற்றி பெறக்கண்டேன். காலை எழுந்தேன். உலகம் என்முன் நின்றது. உத்யோகம் எங்கே என்ற கேள்வியைக் காலம் கேட்கிறது. ஒப்பந்தப்படி வேலை பார்த்துத் தீரவேண்டுமே. எனக்கோ ஏதாவது நல்ல கிராமத்தில் தங்கி, எளியவர்களுக்குக் கல்வி தொழில் தந்து தேசசேவை செய்யவே விருப்பம். எந்த கிராமத்திற்குச் செல்வது ? திருப்பரங்குன்றத்திற்குச் சென்று நீண்டநேரம் தியானித்தேன். மனம் நிம்மதியானது. புதிய தைரியம் பிறந்தது. பசுமலைக்குத் திரும்பினேன். வழியில் மைகேல் வந்தார். "ஏனையா எங்கே போனீர் ? வாருமையா ; ஜல்தி !" என்று அழைத்துச்சென்றார். "திருமங்கலம் போர்டு பள்ளிக்கூடத்தில் வேலை காலி. போம்; தாலுகா போர்டு தலைவரைப் பாரும்." என்றார். ஒரு யோக்கிதா பத்திரம் கேட்டேன். எழுதினார்..."இந்தச் சுறுசுறுப்புள்ள வாலிபர், ஆசிரியர் வகுப்பில் முதன்மை பெற்றார். போதனை முறையில் மிகச் சிறந்தவர். மாணவர் இவரை மிகவும் விரும்புகிறார்கள். இவருக்கு டைப்ரைடிங் ஷார்ட்ஹாண்ட், குளோப்மேகிங், ஸ்கௌடிங், நாடகம், சங்கீதம் முதலிய பலகலைகள் தெரியும், தமிழில் புலவர். இவரை எந்தப் பள்ளிக்கூடமும் மகிழ்ச்சியுடன் ஆதரிக்கும்." என்று எழுதித் தந்தார் ; லார்பிரும் "இதை ஆமோதிக்கிறேன்." என்று கையெழுத்திட்டார். உடனே ரயிலேறினேன்.

97. வேலை வந்தது !

சாயங்காலம் ஆறுமணி; தாலுகாத் தலைவரைக் கண்டேன். விளக்கில்லாத அறை ஒன்றில் அவர் அமர்ந்திருந்தார். இருட்டுக்கும் அவருக்கும் வித்யாசம் தெரியவில்லை. நான் சென்றதும் "பியூன் ! உனக்கு எத்தனைதடவை சொல்லுவது புத்தியிருக்கா ! வில்கேற்றுடா" என்றார். பியூன் இல்லை ; நானே முன் நின்றேன். "தீப்பெட்டி எங்கே ? விளக்கெங்கே ?" என்று கேட்டேன். "சுத்த மடப்பயல் டாம்டும்டன்ஸ்" என்று எழுந்தார். பிறகு "நீர் யார் ?" என்றார். இதற்குள் அவர் அறையிலிருந்த விளக்கைத் தடவிப்பார்த்து ஏற்றி வைத்து, வெளியே யிருந்த நாற்காலியைத் தூக்கிவந்து போட்டு' உட்கார்ந்தேன். பிறகு ஆங்கிலத்தில் நான் தங்கள் கதவைத்தட்டினேன் ; திறந்தது ; இனிக் கேட்பேன் ; கேட்டது கிடைக்கும். என்று நம்புகிறேன்" என்றேன். "நீர் எங்கிருந்து வருகிறீர்?" "பசுமலையிலிருந்து; மைகேல் அனுப்பினார்" "ஓகோ !" என்றார் நான் கடிதத்தையும் மனுவையும் நீட்டினேன். "அதுவா. சரி நீர் காலையில் ஸ்கூல் இன்ஸ்பெக்டரைப் பாரும்" என்றார். இதற்குள் நாலைந்துபேர் வந்து

விட்டனர். நான் மரியாதையாக விடை பெற்றேன். காலையில் இன்ஸ்பெக்டரைக் கண்டேன். அவர் "ஐம்பது மனுக்கள் வந்துள்ளன. நீர் சென்று நான்குநாட்கள் கழித்து வாரும்'' என்றார். நான் மதுரைக்குச்சென்று அமெரிக்கன் கல்லூரித் தோழருடன் அளவளாவினேன். ஒருவர் எனக்குப் பெண் கொடுக்க வேட்டையாடி வந்தார். அவரைத் தப்பிக்கொண்டு மறுபடி திருமங்கலத்திற்கு வந்தேன். புளிய மரத்தடியில் நாலைந்துபேர் நின்று என்னைச் சுட்டிக்கொண்டிருந்தனர். "வந்தேமாதரம்'' என்றேன். "ஐயா நீர் சாது; இந்தப் புலியிடம் சிக்கி முழிக்காதேயும். மைகேல் சிபார்சு என்று கேள்வி. பிரம்மாவே சிபார்சு செய்தாலும் நடக்காது. கையில் நீட்டவேண்டும்.'' என்றார் ஒருவர். இன்னொருவர் "உமக்கு மாதம் மூன்றுநாள் பீம விலாஸ் வேலைபார்க்க முடியுமா?'' என்றார். எனக்கு நாடி தளர்ந்தது. எனக்கும் அடிமை வேலைக்கும் வெகுதூரம். முடிவாகப் பார்ப்போம் என்று சென்றேன். ஐயா திண்ணையில் காகிதங்களைப் புரட்டிச் சிகப்பு நாடாவில் கோத்துக் கொண்டிருந்தார். என்னை ஐந்து நிமிஷம் கழித்தே பார்த்தார். மோலியர் நாடகம் நினைவு வந்தது. "என்ன ஸார், என் மனு என்ன ஆனது?'' என்று கேட்டேன். ஆவதென்ன போவதென்ன? உமக்கு வேலைதானே வேண்டும்? இங்கே ஆள் வந்துவிட்டது; விருதுபட்டிக்கு மனுப்போடும். என்னும்போதே ஒரு தடிப்பேர்வழி வந்து கும்பிட்டான். இன்ஸ்பெக்டர் அவனுடன் உள்ளே போனார். நான் திண்ணையில் காத்திருந்து திரும்பிச் சென்றேன்.

அதுமுதல் நானாக வலுவில் உத்யோகஸ்தரைக் காண்பதில்லை. திண்டுக்கல், மதுரை, பெரியகுளம், கும்கோணம் முதலிய இடங்களில் வேலை கிடைக்க வாய்ப்பிருந்தது. வேலை என்னைத் தேடி வரட்டும் என்று நான் யாத்திரை செய்தேன். வேட்டி சட்டை அங்கவஸ்திரம் ஒரு கார்மடி; தோள்பையில் சீப்பு, தைலம் நோட்டு, பென்ஸில்; கீதை குறள் இவையே என்சுமை. பசித்த இடத்தில் கடலையும் வாழைப் பழமும் உண்டு, இளநீர் பருகுவது; பிறகு கிராம ஜனங்களுக்குக் கல்வி சுகாதாரம் ஒழுக்கம் விவசாயம் இவற்றைப்பற்றியும் தேச பக்தியைப்பற்றியும் பேசுவது; முன்னே நடப்பது. இப்படியாக நான் கொடைக்கானலுக்கு வந்ததும்; இந்து பத்திரிகையைப் பார்த்தேன். காட்டுப்புத்தூர் ஹைஸ்கூலில் வேலையிருப்பதை யறிந்தேன். அது நெரூருக்குப்பக்கம்; சதாசிவ சமாதியில் தியானிக்கலாம் என்ற மகிழ்ச்சி; உடனே தலைவர் பி. ஜி. சுந்தரமையருக்கு மனுச்செய்தேன். நான்காம் நாள் என் விலாசத்திற்குக் கடிதம் வந்தது—தாங்கள் வந்து அலுவலை ஒப்புக்கொள்ளலாம்...'' என்று. சிவகங்கைக்கு வந்தேன். பெற்றோரை வணங்கினேன். அன்னையிடம் விடைபெற்றேன். வக்கீல் கணேசையர் அந்தப்பக்கம்; அவர் சொந்தக்காரருக்குக் கடிதம் வாங்கிக்கொண்டேன். எங்களூர் எஞ்சினியர் ஆபீஸ் பஞ்சநதம் கட்டளை

யில் இருந்தார். சரி தைரியம்! ஓம் சுத்தசத்தி. வீட்டுக் கூரையில் ஒரு வெண்பா எழுதிச் செருகிறேன்:

எனைவளர்த்த வீடேநான் இன்றுமுதல் என்றும்
உனைவிடுத்துச் செல்கின்றேன் உய்யத்—தனையறிந்து
மோகந் தவிர்ந்து முதல்வன் அருபெருகும்
யோகந் தழைக்க உவந்து.

மானுமதுரையில் வண்டியேறினேன். புகுபுகு புகுபுகு! மதுரை மீனுட்சி சந்நிதிக்கு நேரே சென்றேன்:

ஞான மளித்தனை நற்றுயே மீனுட்சி
மோன வரம்பளித்த மூலியே—தேனமுத
வாக்கும், அருட்பணிசெய் வாழ்வுடனே யோகசித்தி
ஆக்கும் கனலும் அருள்.

என்று வணங்கி, என் தியான நிலையமான வன்னிமரத்தடியில் ஐந்து நிமிஷம் அமர்ந்து, உடனே ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயில் ஊதி விட்டது. தடதடவென்று உள்ளே தாவினேன். கார்டு ஓடிவந்து தடுப்பதற்குள் நான் சரியான இடத்தில் அமர்ந்தேன். வண்டியும் புறப் பட்டது; சரி குப்குப்குப்குப் தந்தின தந்தின என்று வண்டி ஓடுகிறது. கோடைக்கானல் ஸ்டேஷனில் கொஞ்சம் கனிகள் வாங்கிக்கொண் டேன். குரங்குகளுக்கு ஒரு கனி வீசினேன். மலைக்கோட்டையில் ஒரு சாது வந்தார், அவரும் நானும் கனிகளை உண்டோம். அவர் நெரூர் சதாசிவப்பிரமேந்திரர் சமாது மகிமையைச் சொன்னுர். காலை நான்கு மணி; கட்டளை ஸ்டேஷன்; இறங்கினேன்; இனிக் காட்டுப்புத்தூர். பசு மலைப் படலம் முற்றிற்று.

௯௦. பயிற்றினேன்

98. மங்கலக் காட்சி

இனி உத்யோக பருவம் நடக்கிறது, வண்டி நள்ளிரவில் கட்ட ளைக்கு வந்தது. நல்ல இருட்டு. காவேரியின் அகண்ட கர்ஜனை இரவில் மௌனப்பாட்டிற்கு முரசு கொட்டியது. ஸ்டேஷன் மாஸ்டரிடம் தங்க இடம் கேட்டேன். எதிரே காட்டினுர். தண்டவாளத்தைத் தாண்டி பிரயாணி விடுதிக்குச் சென்றேன். அயர்ந்து படுத்தேன். ஒரு மூலையில் காவற்காரன் குறட்டை விட்டான். நான் தியானமும் உறக் கமுமாய் இரவைக் கழித்து, ஐந்து மணிக்குப் புறப்பட்டேன். நல்ல சகுனம்; பௌளி ராகம் கேட்டது. கலியாணவீடு எதிரே தெரிந்தது. நண்பன் பஞ்சுவீட்டுக் கல்யாணமே! நான் புகுந்ததும் "வாருமையா" என்று இரண்டு பழகிய குரல்கள் வரவேற்றன. என்னிடம் படித்த

ராமாமிர்தம் அங்கிருந்தான். இனிக் கவலையில்லை. காவேரியில் குளித்து அனுஷ்டானங்களைச் செய்துவந்தேன். பஞ்சு சுடச்சுடப் பொங்கலும் கொத்தவரங்காய் வருவலும் தந்தார். சாப்பிட்டேன். சம்பந்திகளுக்கு முன்பே எனக்குப் பலகாரம் ஆனது. ஒரு ஏப்பம் விட்டதும், நண்பர் "எங்கே கிளம்பினீர் தீர்க்கயாத்திரையா?" என்று வினவினர். "காட்டுப்புத்தூரில் வாத்தியார் வேலை" என்றதுமே... 'அடடா அங்கேயா...சிவகங்கையைவிட்டா.' என்று வியந்தார் பஞ்சு.

நான், கொஞ்சம் காவேரி தீரத்தில் இருக்கலாம் என்று நினைப்பு. சதாசிவப்ரம்மேந்திராள் இருந்த இடம்.

பஞ்சு: நீரும் பிரம்மமாயிரும். வாயைத்திறந்தால் வம்பு. சாதுவாயிருக்கிறீர். எப்படி அங்கே பிழைக்கப்போகிறீர்? உம்மை பகவனே காப்பாற்றவேண்டும்.

எனக்குக் கலக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் "நல்ல சகுனம்; காலை கண்விழித்ததும் மங்களமான மணக்கோலம் கண்டேன். வந்தனம்" என்று விடைபெற்றுப் பரிசல் ஏறினேன். நடுக் காவேரியில் சூரியோதயமானது. என் உள்ளத்திலும் நவ ஜீவோதயம் ஆனது. காவேரியும் அமராவதியும் கூடும் இடம் அது. "ஜீவப்படகை ஓட்டும் தேவதேவனை நம்பி" என்ற பாட்டைப் பாடிக்கொண்டே, பிள்ளையார்புத்தூரில் புகுந்தேன். கண்பார்க்கும் திசையெல்லாம் பசும் பயிர்கள், தோப்புகள். காதில் "குக்கு" என்று குயில்இசை வந்து கொஞ்சுகிறது. கிளிகளும் மைனாக்களும் சுயேச்சையாகப் பாடுகின்றன. சாலை இருபுறமும் தென்னை வாழை செந்நெல், அகத்திமரத்தைத் தழுவிக் கொஞ்சும் வெற்றிலைக்கொடிகள் கண்டேன். உழவர் தெம்மாங்கு காவேரி வாய்க்கால்களின் சலசலப்புடன் கலந்துவந்தது. நான் மூன்று மைல் நடந்தே சென்றேன். காட்டுப்புத்தூர் வாய்க்கால் வந்தது. அங்கே ஐயனார்கோயில் பூசை மணி யடித்தது. வேளாளர் வீட்டுக் கலியாண மேளம் கேட்டது. நல்ல சகுனம்; ஊருக்குள் சென்றேன். பள்ளிக்கூடத்தைக் கண்டுபிடித்தேன். பூட்டியிருந்தது. மணி எட்டரை தான்; ஒரு பையனை விசாரித்தேன். அக்கிரகாரத்திற்கு வழிகாட்டினான். அங்கே தலைமை ஆசிரியர் பி. ஜி. சுந்தரமையரைக் கண்டேன்.

99. சுந்தரக் குழல்

நல்ல உயரம் பருமன், பால்வடியும் இளமுகம், முதிய இளைஞர், இனிய குரலில், "வாருங்கோ உட்காருங்கோ சாப்பிட்டாச்சா?" என்றெல்லாம் கேட்டார். "கல்லூரி வாசலைத் தாண்டி வந்திருக்கிறேன். பெரியவாள் என்னை வழிநடத்தி ஆளாக்கவேண்டும்." என்று நமஸ்கரித்தேன். அவர் "ஆஹா தங்களுக்கு எல்லாம் நடக்கும். பிரமசாரிதானே; பள்ளிக்கூடத்திலேயே இருக்கலாம். ஓட்டலில் சாப்பிட

லாம்" என்றார். அப்போது மிராசுதார் சுப்பண்ணு வீட்டுக் கலியாண மேளம் தன்யாசி முழங்கியது. "புது வாத்தியாரா! தாம்பூலத்துக்கு வரணும்; சாயங்காலம் வீணைக் கச்சேரி, வாருங்கோ" என்று சுப்பண்ணுவே அழைத்தார். "வந்தனம்", சிறிது பேசியபிறகு தலைவர் ஒரு பையனை உடனனுப்பி, பள்ளிக்கூடத்திற்குப் போகச்சொன்னார். அங்கே ஸ்ரீரங்கம் கிருஷ்ணையங்கார் என்னை அன்பாக வரவேற்று, ஏழாம் வகுப்பு அறையைத் திறந்து "இங்கே இருக்கலாம்" என்றார்.

நாங்கள் சாப்பிட்டுப் பள்ளிக்கூட வரலாறு பேசும்போது, மங்கள வாத்தியம் நாலுதிசையிலிருந்தும் கேட்டது. கன்னையாவின் ரத்னும் பரி ஸ க ம ப ஸா, ஸா நீ தா ப ம ரி ஸா என்று காதைக் கொஞ்சியது. நான்குமணிக்குச் சுப்பண்ணு வீட்டுக்குச் சென்றோம். அங்கே சுந்தரமையர் முன்னே அமர்ந்திருந்தார். என்னைப் பக்கத்தில் இருக்கச் செய்தார், கச்சேரி இனிமையாயிருந்தது. ஐயர் "இது என்ன ராகம் தெரியுமா? இந்தச் சங்கதி எப்படி!" என்றெல்லாம் கேட்டார். என் மறுமொழியிலிருந்து "தங்களுக்குச் சங்கீதம் நன்ருக வரும்போலிருக்கிறதே" என்றார். வீணையில் அப்பராமபக்தி வந்தது; பந்துவராளி என் உள்ளத்தை உருக்கியது. மண்டையை ஆடிச்சவுக்க மரம்போல் ஆட்டினேன். திடீரென்று நீகாமரூபமுலகு வந்துவிட்டது. ஐயர் வாரும் என்று என்னைத் தட்டினார். மிராசுதார் தாம்பூலம் தந்தார்... வாங்கிக்கொண்டு தலைவர் வீட்டுக்குச் சென்றோம். அங்கே கணக்கு சின்னசாமி ஐயர், ஸயன்ஸ் ரங்கசாமி ஐயங்கார் முதலியோர் கூடியிருந்தனர். சுந்தரமையர் அவர்களுக்கு "புது ஆள், ஆள் உள்ளே. நல்ல ரசிகர்" என்று அறிமுகம் செய்தார். பிறகு சீழ்க்கை யடிக்கத் தொடங்கினார். புல்லாங்குழல் தோற்றுப்போகும். அவ்வளவு தெளிவாக அபூர்வ ராகங்களையெல்லாம் வாய்க்குழலால் ஊதினார். நான் பைரவி, உசேனி, முகாரி, நடபைரவி, கல்யாணி, பூர்விகல்யாணி, வசந்தா, பந்துவராளி, ஹம்ஸாநந்தி, ஜகன்மோகினி, மந்தாரி, பியாகடை, ஸஹானு, கானடா, தர்பார், அடாணு, ஆனந்தபைரவி, சுரடி என்று சொல்லிக்கொண்டே வந்தேன். எல்லா ராகங்களையும் இனிமையாக வாசித்ததுடன் அதனதன் ஆரோகணு வரோகணக் கிரமங்களையும் சஞ்சார பத்ததியையும் கச்சிதமாகச் சொல்லி விளக்கினார். "முடிவில் நீர் ஒரு பாட்டுப்பாடும்" என்றார். நான் "குழலோசை கேட்குதம்மா" என்ற காமாஸ் ராகப் பாட்டை அப்போதுதான் பாடினேன், ஐயர் சீழ்க்கைக்குழலூதிச் சங்கதிகளும் போட்டார். நண்பர் எப்படி குழலோசை என்றார்கள். "சுந்தரக்குழல்!" என்று ராகமாலிகை பாடினேன் :

எந்தை சதாசிவனுர் இன்புற்ற புத்தூரில்
வந்ததும் மங்கல யாழ்கேட்டேன்—சுந்தரனுர்

சிழ்க்கைக் குழல்கேட்டேன் ; ஜீவாத்ம நாதனிசை
வாழ்க்கைக் குழல்கேட்டேன் மன்!

"பெரியகவி...சபாஷ்!" என்றனர் நண்பர். பிறகு பள்ளிக்கூட விவகாரம் பேசினோம். தலைவர் என்னை ஸயன்ஸ், பூகோளம், கணிதம் ஆகிய பாடங்களுக்குப் பாடமுறை தயாரிக்கச்சொன்னார். மற்ற ஆசிரியருடன் நான் அந்த வேலையில் முனைந்தேன். ஒரே நாளில் எல்லாம் தயார். பள்ளிக்கூடத்தில் நுழையுமுன் ஊரைச் சுற்றிப் பார்ப்போம்.

100. காட்டுப்புத்தூர்

காட்டுப்புத்தூரை நான் பாட்டுப்புத்தூர் என்பதுண்டு. ஏன்? அதுவே என் கவிக்குப் புதுமையீந்தது. என் ஆயுட்காவியமான பாரதசக்தி அங்கேதான் உருக்கொண்டது. காட்டுப்புத்தூர் பச்சமழகின் காவியம் போன்றது. அகண்ட காவேரியின் யாழிசையில் பூத்த ஆனந்தச் சோலைகள் எங்கும் சூழ்ந்தது அந்த ஊர். சதாசிவப் பிரமேந்திரர் சமாது நெரூரில் உள்ளது; அங்கே மறுநாளே சென்று நிம்மதியாகத் தியானித்து வந்தேன். என் உள்ளம் "சிந்தாநாஸ்திகலா" என்று பாடியது. சதாசிவ சமாதியில் தழைக்கும் வில்வமரம் என்மேல் இன்னும் பசுநிழல் விரித்து நிற்கிறது. சுற்றிலும் அயலூர் வான்மீகிநாதர் கோயில், பிள்ளையார் புத்தூர், நத்தம் நாகையநல்லூர், தொட்டியம், கிருஷ்ணராயபுரம், மாயனூர், சோமூர் முதலிய கிராமங்கள் அழகும் திருவும் நிறைந்தவை.

காட்டுப்புத்தூர் இரண்டு கிராமங்கள் சேர்ந்தது: கிழக்கே பழையபுத்தூர், ஜமீந்தார் இருப்பது; கடை கண்ணிகள் நிரம்பியது. மேற்கே ஒருமைல் நடந்தால் அக்கிரகாரப் புத்தூர். அங்கே பிராமணர்கள் நான்கு தெருக்களில் வசிக்கிறார்கள். சிவன் கோயிலைத் தாண்டினால் இரட்டைத்தெரு. அதன் கோடியில் பெருமாள் கோயில் காணும், அனுமார் கோயிலும் உண்டு. இந்தத் தெருவில் ராயர், தெலுங்கர், வடமர், வாத்திமர், ஐயங்கார் எல்லாரும் குடியிருந்தனர். இதுவே பெரியவாள் தெரு. எல்லாருக்கும் நிலபலன்கள் உண்டு, ரொக்கம் உண்டு. சனாதன தர்ம பக்தியுண்டு. ஆசார அனுஷ்டான சீலர்களான அந்தணர், அதிகாலையில் எழுந்து காவிரியாடி, மடியுடுத்து, சந்தி ஜபங்களைச் சரிவரச்செய்து, பாராயணம் நடத்தி, பிறகே லௌகிக காரியங்களைக் கவனிப்பார்கள். இரவில் கதை புராணம் பஜனை, கச்சேரிகள் அல்லது நாடகங்கள் நடக்கும்; அடிக்கடி வன போஜனங்கள் நடக்கும். ஸ்ரீராமநவமி உற்சவம் விமரிசையாக எல்லாக் கிராமங்களிலும் நடக்கும். பெண்கள் மிகவும் ஆசாரமாயிருப்பார்கள். பதிபக்தியை அந்த ஊரில் பார்க்கவேண்டும். ஊருக்கு வரும் பாகவதர் சங்கீத வித்வான் வாத்ய வித்வான் பௌராணிகர் அனைவரை

யும் உபசரித்து. மரியாதைசெய்து அனுப்புவார்கள். எனது நண்பர் அனைவரும் இந்தத் தெருவிலேதான் இருந்தார்கள்: தலைவர் சுந்தரர், கணக்கு சின்னசாமி, ஸயன்ஸ் அரங்கசாமி, கே. எஸ் வேங்கடராமர், வேங்கடரத்னம், எஸ். டி. ராமானுஜர், சுப்பராயர், ரசிகமணி கோடீசர், பொருளாதார ராமகிருஷ்ணர், சீதாராமர், போலீஸ்ராயர், டிராயிங் கிருஷ்ணர், நண்பர் சுந்தரேசர், பஜனை விசுவநாதர் முதலியோரை மறக்கமுடியாது. வெளி விவகாரங்களின் வாடையே இல்லாமல், இந்தப்பகுதி அமைதியின் சித்திரமாக விளங்கும். இதன் வாழ்க்கைக்கு ஆதாரமாயிருப்பது பழைய காட்டுப்புத்தூர்.

பழைய புத்தூரில்தான் ஜமீன்தார் ரெட்டியார் பங்களா தோட்டம், பள்ளிக்கூடம், அலுவலகம், உபவனம், பெண்கள் பாடசாலை, வைத்தியசாலை, பதிவுச்சாலை, வேளாளர் தெரு, இஸ்லாமியர் தெருக்கள் உள்ளன. கடை, சந்தை வியாபார நிலையங்களெல்லாம் இங்கேதான் உண்டு. இஸ்லாமியத் தெருவில் பெரிய மசூதியுண்டு. எனது மாணவன் அப்துல்காதர் வீடுதான் அங்கே பெரிது. இந்தப் பகுதியில் எனது நண்பர் பலர் இருந்தனர்: புலவர்மணி கோவிந்தசாமி, பிடில் ராஜமாணிக்கம் முருகேசர், மாணவமணிகளான வேங்கடாசலம், ராமலிங்கம், சபாபதி. நடேசன், மாணிக்கம் முதலியோரை மறக்கமுடியாது. எனது சாரணர் இங்கே அரிய பணிகள் செய்தனர். ஊரைச்சுற்றியும் தெருக்களூடும் காவேரி வாய்க்கால் சலசலத்தோடும்.

101. ஜமீந்தார் பள்ளிக்கூடம்

காட்டுப்புத்தூர் ஜமீந்தார்களில் சிதம்பர ரெட்டியார் அறநெறிச் செல்வர்; கல்வியறமே அறம் என நினைத்தார் இந்தப் புண்ணியவான்; 1903ல் பிள்ளையார்புத்தூரில் சிறு பள்ளிக்கூடம் ஏற்பட்டது. அதைக் காட்டுப்புத்தூருக்கே மாற்றி, சிதம்பரர் பெருமுயற்சி செய்து, நான்கு ஆண்டுகளில் உயர்பள்ளியாக்கினர். ஊரில் நான்கு வகுப்புவரையில் போதிக்கும் போர்டு பள்ளிக்கூடம் உண்டு. ஆதலால் ஐந்தாம் வகுப்புடன் உயர்பள்ளி தொடங்கியது. சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு இதுவே நல்ல பள்ளிக்கூடம். சிதம்பரம் ரெட்டியார் குமாரர் சப்தரிஷி, வேங்கடாசலம், நாராயணசாமி ஆகியோர் இங்கேயே பி. ஜி. சுந்தரர் மாணவராகப் பயின்றனர். ஸப்தரிஷி ரெட்டியார் நல்ல அழகர், உயரமும் பெருமனும் பேச்சும் வீச்சும் ராஜ கம்பிரமாயிருப்பார். அவரை உள்ளே சென்றே காணமுடியும். வெளியே வருவதில்லை. பேச்சு சுருக்கம்; செயல் அதிகம்; காரியமில்லாமல் ரெட்டியார் வாயைத் திறக்கவேமாட்டார். பள்ளிக்கூட அமைப்பிலும் நடப்பிலும் அவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். ஆண்டுதோறும் மூவாயிரம் ரூபா கைச்செலவுதான். என்றாலும் தந்தை நாட்டிய தருமத்தை அவர் தொடர்ந்து நடத்தினர். பள்ளிக்கூடத்தில் இரண்டு கட்டிடங்கள் உண்டு. ஒன்று தெருவுக்கு வடக்கே பெரிய

கட்டடம்; அதில் ஸயன்ஸ்ஹாலும், எட்டாவதுவரையில் எல்லா வகுப்புகளும் இருந்தன. தென் கட்டிடமே தலைவர் கட்டிடம். அதில் புத்தகசாலை பள்ளிக்கூட அலுவலகம், ஒன்பது பத்தாம் வகுப்புகள், ஆசிரியர் சங்கம் எல்லாம் இருந்தன. பின்னால் தோட்டந்துறவுகள்; அங்கே மாணவர் சாரணவிளையாட்டும் கபாத்தும் பழகினர். ரெட்டியார் தோட்டத்தில் ஓடுகாலுக் கருகே விருந்தினர் தங்குவதற்கு ஒரு கட்டிடமும் சிற்றுக் கொட்டகையும் உண்டு. அதுதான் எனது பர்ணசாலை. காவேரி வாய்க்காலின் ஓங்காரமும் தேனீக்களின் ரீங்காரமும், புட்களின் துள்ளிசையும், உழவர் தெம்மாங்கும் கேட்டுக் கலைவெறி கொண்டு, நான் கவிகள் பல பாடிய இடம் அதுதான். இரவில் அங்கேதான் தனியாக தியானம் செய்வது. அங்கே ஒரு குருகுலம் காணவேண்டும் என்பது என் கருத்து. அறுவடைகாலத்தில் அங்கே ஓரிடத்தில் கதிர்மணிகளைக் குவித்து நெல்லைப் பிரித்துக் களஞ்சியத்திற் கொட்டும் காட்சி, தொழிலின் பெருமையை எவருக்கும் புலனாக்கும். வாழை, பப்பாளி, கமுகு, கூந்தற்பனை, பாக்கு, தென்னை, மா, பலா, கொய்யா, ஆரஞ்சு, சந்தனம், ரப்பர் முதலிய பல மரவகைகள், அந்தத் தோட்டத்தில் ஒரு தாவர மகாநாடுபோலக் கூடி வளரும். மருத நிலத் தென்றலில் இலைகள் சலசலக்கும். கண்ணெட்டு மட்டும் பச்சைப் பசேலென்று விரிந்து செழித்த, பயிர்களை ஆவேசமாகத் தழுவிவரும் தென்றலை, நான் காதலுடன் அணைந்துகொள்வேன். பள்ளிக்கூடத்திற்கு அருகே மாணவர் விடுதியும், இப்புறம் ஹாஸ்டலும் உண்டு. ஏழை மாணவருக்கு இந்தத் தருமப் பள்ளிக்கூடம் சமய சஞ்சீவிபோல் உதவும். இதை நடத்தும் ரெட்டியார் வாழ்க!

102. நம்பிகளா!

பரீட்சை முடிவு அறிவிக்கப்பட்டது. மாணவர் வகுப்பு மாறினர். சுந்தரமையர் என்னை ஆரும் வகுப்பு எ டிவிஷனில் அமர்த்தி, "உங்கள் வாத்தியார் அன்பான வாத்தியார் அவரிடம் ஒழுங்காகப் படியுங்கள்" என்றார். நான் வகுப்பையும் மாணவரையும் வலம்செய்து, உள்ளே புகுந்து புன்னகை வணக்கம் செலுத்தினேன். பிறகு "தம்பிகளா, என்னை உங்கள் தமயன்போல நினையுங்கள். வேண்டியதைக் கேளுங்கள். நான் உங்கள் நண்பன்; உங்களுக்காகவே வாழ்பவன். முதலில் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன் நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?"

மாணவர் திகைத்தனர். ஒருவன் தைரியமாக எழுந்தான் "என் அப்பா அனுப்பினார் வந்தேன்" என்றான். இன்னொருவன் "பள்ளிக்கூடம் போகாவிட்டால் அம்மா வைவாள்; அதனால் வந்தேன்." இன்னொருவன் "எப்படியாவது பத்து கிளாசு படித்தால் ஒரு குமாஸ்தா வேலையாவது கிடைக்கும்; பிழைக்கலாம்" என்று வீட்டில்

அனுப்பினர்; வந்தேன். இன்னொரு செல்வக்குழந்தை "ஆத்துலே விஷமம்பண்ணுறேன்னு அம்மா இங்கே அனுப்பின" என்ருன். ஒரே ஒரு பையன் "படித்து அறிவை வளர்க்கத்தான் பள்ளிக்கூடத்துக்கு வருகிறோம் ஸார்." என்ருன். அவனுக்கு சபாஷ் போட்டுச் சொன்னேன். "தம்பிமார்களா, நீங்கள் எதற்காகச் சாப்பிடுகிறீர்கள்? அம்மா சாதம்போட்டா அதனுல் சாப்பிடுகிறேன் என்பது சரியான காரணமாகாது. உடம்பு வளர, பலபேருக்கு உதவிசெய்ய பலம்பெற, நாம் சாப்பிடுகிருேம் அல்லவா? உடம்புக்குள்ளே உயிர் இருக்கிறது; மனம் இருக்கிறது, மூளையிருக்கிறது, புத்தியிருக்கிறது; அறிவினுல் இவற்றை வளர்த்தாலே நாம் பூரண மனிதராகலாம். அறிவில்லாத உடல் அசட்டு ஜடந்தான். மனிதனுய்ப் பிறந்தால் நல்ல அறிவு, உயர்ந்த நினைப்பு, சிறந்த கொள்கை, இனிய பேச்சு, நாலுபேர் நல்லவன் என்னும் நடத்தை, தேக பலம், தெய்வ பக்தி—எல்லாம் வேண்டும். இவை இருந்தால் நாம் உலகில் முன்னேறலாம். அதற்கே நாம் பள்ளிக்கூடத்திற்கு வருகிருேம். உலகம் பள்ளிக்கூடத்தில் தொடங்குகிறது. நமது நாட்டில் சில பெரியவாள் பெயர் சொல்லுங்கள்; காந்தி, திலகர், விவேகானந்தர், டாகுர், சரோஜனி, இவர்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். தமிழ்நாட்டில் மணி ஐயர், முத்துசாமி ஐயர், சதாசிவையர், சிதம்பரம் பிள்ளை, எல்லாரும் பெரியமனிதரானது எதனுல்? படிப்பினுல், அறிவினுல், தியாகத்தால் தேச சேவையால். நாமும் நன்ருகப் படித்துப் பெரிய மனிதராகி, நாட்டுக்கு நல்ல தொண்டு செய்து, புகழுடன் வாழவேண்டும் என்று விரும்பும் பையன்கள் கையைத் தூக்குங்கள்." எல்லாரும் கைதூக்குகிருர்கள். "அப்பா அம்மாவுக்காகப் பள்ளிக்கூடத்துக்கு வந்து சும்மா தூங்கி வழிந்து, பரீட்சையிலே குழிபறித்து, மண்டுவாயிருக்க விரும்பினுல் கைதூக்குங்கள்" ஒருவரும் மண்டுவாயிருக்க விரும்பவில்லை...ஆதலால் எல்லாருக்கும் படித்து கெட்டிக்கார ராகவேண்டும் என்றிருக்கிறது. சரி அதற்கு நான் என்னுல் முடிந்ததைச் செய்வேன். நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்து சுறு சுறுப்பாக என்னுடன் ஒத்துழைக்கவேண்டும்." [ஆகட்டும் ஸார்].

"இனிப் பாடம்: உங்களுக்கு ஆங்கிலம் நன்ருக வரவேண்டும்; அது உலகமொழி; உலகக் கலைகள் அதில் உள்ளன. உங்களுக்கு ஒரு வாரம் கதை மட்டும் சொல்லுவேன். முதலில் தமிழில்; அதைத் திருப்பிச் சொல்லவேண்டும்; பிறகு ஆங்கிலத்தில் சொல்லுவேன்; கேள்வி கேட்டு அந்தக் கதையை நீங்களே சொல்லச்செய்வேன். போர்டில் படம் போட்டிருப்பேன். அந்தப் படம் பார்த்தே கதை சொல்லலாம்" இந்தமாதிரி தொடங்கிச் சில நகைச்சுவைக் கதைகளைச் சொன்னேன். மாணவர் வெகு குஷியாக ரசித்துத் திருப்பிச் சொன்னுர்கள். அப்படியே ஆங்கில உச்சரிப்பைத் திருத்தினேன். பிறகு பாட புத்தகம் தொடங்கினேன். பாடத்தில் படத்தைக் கொண்டு கேள்விகள் போடு

வேன். கடின பதங்களை போர்டில் எழுதிப் பொருள் விளக்குவேன். அதைப் பல சொற்றொடர்களில் இணைத்துப் பேசுவேன்; கேள்வி போடுவேன். பிறகு பாடத்தைத் தமிழில் சொல்லிப் படித்துக் காட்டி, அவர்களைப் படிக்கச்செய்வேன். வாரம் இப்படி இரண்டு பாடங்கள் நிறைவாக நடக்கும். அவர்கள் வீட்டில் கூடப் படிக்கத் தேவையில்லை.

ஸயன்ஸ் வகுப்பு வெகு கலகலப்பாகவும் தமாஷாகவும் இருக்கும். ஐந்து நிமிஷம் கலகலவென்று சிரிக்க வைத்தே பாடம் தொடங்குவேன். திடீரென்று ஒரு மண்ணைக் கொண்டுவரச் செய்வேன்; அதில் காந்தத்தைக் தோய்ப்பேன்; இரும்புத் தூள்கள் அதில் படியும். மாணவர் வியப்பர். உடனே "கோலுக்குத் தாடி முளைச்சுப் போச்சு ஸார்" என்பர் மாணவர். நான் காந்தப் பாடம் தொடங்குவேன். காந்த முனைகளைப் பொருத விடுவேன். நீங்கள் "மாஜிக் பண்ணுறயளே" என்பர் மாணவர். "மாஜிக் இல்லை ஸயன்ஸ்; கண் கண்ட உண்மை" என்று விளக்குவேன். பையன்களின் பேனா முள்ளைக் கழற்றிக் காந்தில் சங்கிலிபோல ஒட்டிக் கொள்ளச் செய்வேன். அவர்களிடம் காந்தம் தந்து அப்படிச் செய்யச்சொல்லுவேன். அதே கவனமாயிருந்து மாணவர் பல உண்மைகளை அறிவார்கள். ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கொண்டே நான் ஸயன்ஸ் பாடம் தொடங்கினேன். நான் அந்தக்காலம் போதித்த ஸயன்ஸ் பாடங்கள், என் ஸயன்ஸ் நூல் தொகுப்பில் உள்ளன காண்க.

103. வெடி மருந்து

எனக்குச் சரித்திரத்தைவிட ஸயன்ஸில் விருப்பம் அதிகம் தேச சரித்திரங்களை பில்லில் எடுத்து, மளமளவென்று காட்டிவிட்டு, தொழில், வீரம், வாணிகம், சன்மார்க்கம் இவற்றில் முன்னேற வேண்டிய ஆக்க வேலைகளைப் பள்ளிக்கூடத்திலேயே தொடங்கவேண்டும் என்பது என் ஆசை. அதற்காகவே நான் ஆங்கிலப் பாடத்துடன் மாணவருக்கு ஸயன்ஸ் பூகோளம் சாரணப் பயிற்சி ஆகியவற்றையும் பயிற்ற மகிழ்ச்சியுடன் மேற்கொண்டேன். நாவல் படிப்பதை விட கிளேஸ்புருக் படித்து, ஆராய்ச்சி சாலையில் அமர்ந்து, சோதனைகள் செய்வதில் நான் இன்பங்கொண்டேன். அகற்கேற்ற எல்லாச் சௌகரியங்களையும் மேற்சொன்ன நண்பர் எனக்குச் செய்து தந்தனர். குழலோசையை விட ஹைட்ரஜன் ஓங்காரத்தை நான் வியப்புடன் அனுபவிப்பேன். எனது மாணவர் போஸ், ராமன், ரே, மார்கோனி, எய்ன்ஸ்டன் போல் பெரிய மேதாவிகளாகி, இந்தியாவிற்குப் பயனுள்ள புதுமைகளைக் கண்டு பிடிக்கவேண்டும், என்று ஆர்வங் கொள்வேன். இதற்கேற்றபடியே நான் புதுமுறையில் பாட முறைகள் வகுத்துச் சுதந்தரமாக மாணவருக்குப் பயிற்சி யளித்தேன். மாணவரை அடிக்கடி வெளியே பல இடங்களுக்கும் காடுமலைகளுக்கும் தொழிற் கூடங்களுக்கும் அழைத்துச் செல்வேன். முதலில் தேசபக்தி

யைப் புகட்டி தேசத்திற்காக இன்ன சேவை இப்படிச் செய்யவேண்டும், இதுவழி என்று காட்டுவேன். பொழுது போக்காக மாணவர் பல சிறு தொழில்களைச் செய்யத் தூண்டுவேன். அத்தொழில்களால் கலை நுட்பத்தை விளக்குவேன்.

சில சமயம் இந்த ஆர்வமும் ஊக்கமும் விபரீதமாக முடிவதும் உண்டு. ஒருதரம் செடி நூல் கற்பிக்கத் தோட்டம் போட்டேன். இரவும் பகலும் எனது சாரண மாணவருடன் நானும் மண்ணைப்பண்படுத்திக் குழிதோண்டி எருக்களைக்கொண்டு சேர்த்து, வாய்க்காலிலிருந்து தண்ணீரைக் கொண்டு விட்டு உழைத்தேன். பயிர் செழித்தது. வாய்க்கால் தண்ணீரை ஏன் மொண்டு வந்து சிரமப்பட வேண்டும்? நாமே இங்கே ஒரு கிணறு வெட்டி விட்டால் என்ன என்று, என் இளம் சிப்பாய்களுடன் யோசித்தேன். "அப்படியே செய்யலாம் ஸார்" என்று அவர்கள் உற்சாகமாகக் கிளம்பியதும், நானே மண்வெட்டி பிடித்து முதல் இரண்டடிகளைத் தோண்டி விட்டேன். மறுநாள் மாலை மாணவருடன் இன்னும் மூன்றடி, மறுநாள் மற்றோர் அடி. பிறகு பாறை வந்தது...இந்தப் பாறையைத் தகர்த்தால் தண்ணீர் வரலாம் என்று நினைத்தேன். அதற்கு வெடி மருந்து தயாரிக்கிறேன். அந்தச்சமயம் தலைவர் வந்து "என்னங்காணும் பாரதியார் இதென்ன?" என்று வினவினர். அவர் சந்தோஷப்படுவாரென்று நான், என் தோட்டத்தையும் அதற்குத் தண்ணீர் நிரம்பப் பாய்ச்ச நான் செய்த வேலையையும் விளக்கினேன். "இதென்ன பைத்தியம்! இங்கே கிணறு வெட்ட முடியுமா?" என்று சிரித்தார் அவர். "முடியும் ஐயா, மனிதன் முயற்சியால் முடியாதது உண்டோ? சகாரா வனாந்தரத்திற் கூடக் கிணறு தோண்டிப் பயிர் செய்கிறார்களே. காவேரி பாயும் இந்த ஊரில் நாம் அப்படிச் செய்வதா பிரமாதம்? இதோ வெடி மருந்து தயாரித்து விட்டேன்...நாளைக்காலை ஒரு படார்! உடனே குபுகுபு என்று தண்ணீர் வரும் பாரும்" என்றேன் இதற்குள் என் திருவிளையாடல்கள் ஜமீந்தார் காதிற்கு எட்டி விட்டன. அவர் அனுப்பியே தலைவரும் வந்தார். தலைவர் "நிறுத்தும் போதும், உமது வெடிமருந்து. இந்தக் குழியில் வெடி வைத்தால் பள்ளிக்கூடச் சுவற்றை அது தகர்க்கும். கயபாகஸ் செய்த கன்பௌடர் பிளாட் மாதிரிக் காரியம் செய்கிறீரே" என்று கண்டித்தார். என்மேல் உயிராயிருந்தவர் கண்டிப்பாகப் பேசியதும் எனக்குச் சுரீர் என்றது" உடனே மனச்சாட்சி "நானே பேசுகிறேன்; கேள்...உன் துருதுருப்பை அடக்கிக்கொள்" என்றது. ஆம், நான் கிணற்றுக் குழியில் வெடி வைத்திருந்தால் அந்த ஸைன்ஸ் ஹாலையே அது இடித்து விடும் என்பதைக் கண்டேன். உடனே சுந்தரமையரிடம் "நான் செய்தது தவறுதான்; இந்தக்குற்றத்திற்காக என்னையே அந்தக் குழியில் போட்டு மூடிவிட்டாலும் சரியே" என்று சொன்னேன். "நான் அப்படிச் சொல்லுவேனா" என்று தலைவர்

என்னைத் தட்டிக் கொடுத்து "உமது தோட்டத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார், அந்தக்குழியில் பப்பாளி நட்டோம். தோட்டத்தில் காய்கறிகள் போட்டோம் தண்ணீர் வார்க்க ஆள் போட்டோம். பல பயனுள்ள மூலிகைகளும் அங்கே பயிர்செய்து, தாவர நூலை நான் பயன்பட நடத்தினேன், இருந்தாலும் எனது துறுதுறுப்பு அடங்கவில்லை. வாலிபத் துள்ளல் மற்றொரு வெடிகுண்டு போட்டது.

104. டபார்! டபார்!

இன்ஸ்பெக்டர் டி. கே. வேங்கட்ராமையர் வந்திருந்தார். அவர் என் வகுப்பைக்காண ஆசை கொண்டார். நானும் அவருக்கு ஏதாவது அற்புதமாக ஒன்றைச் செய்து காட்ட ஆசைகொண்டு துள்ளினேன்; அந்தக் காலம் ஸ்விடன் திக்குச்சிதான் அதிகம். அதை நமது நாட்டில் ஏன் செய்யக்கூடாது? நாமே ஏன் செய்யக்கூடாது? வழி காட்டினால் நமது மாணவரில் ஒருவரே செய்து பிழைக்கலாமே' என்று கிளம்பினேன். அதற்கான ரசாயன முறைகளை ஆராய்ந்து குறிப்பு எடுத்துக் கொண்டேன்.

மாணவரும் உற்சாகமாக இருந்தனர். "நாம் ஸ்விடனைத் தூக்கி அடித்து விடலாம்" என்றேன். "வழிமட்டும் காட்டுங்கள்; செய்கிறோம் சார்" என்று என் அருமைக் கண்மணிகள் குதித்தனர். நான் சக்கிமுக்கிக் கல்லிலிருந்து தொடங்கினேன். முன்பே மாணவரை ஒரு மலைக்கு அழைத்துச் சென்று, அங்கே மலையாளிகள் சக்கி முக்கிக் கல்லால் பஞ்சை ஏற்றித் தீப்பற்ற வைப்பதைக் காட்டியிருந்தேன். வகுப்பிலும் டக் டக் என்று கல்லைத் தட்டத் தொடக்கினேன். டக் டக் சத்தம் பலமான போது பரிசோதகர் வந்துவிட்டார். அவருக்கு நான் உரிய மரியாதை தந்து, அமர்த்தி, எனது பாடக் குறிப்புக்களையும் காட்டினேன். அவர் இதுவே முறை; நடக்கட்டும் பாடம் என்று ஆவலாகக் கவனித்தார். நான் கல்லைத் தட்டிப் பஞ்சை ஏற்றி, அதனால் சாராய விளக்கைப் பற்றவைத்தேன். பிறகு கேள்விகள் போட்டேன். "தம்பிமார்களா, இந்தக் கல்லைத்தட்ட அதிக நேரமாகிறது. அவசரத்திற்கு இது லாயக்கில்லை. இது ஸயன்ஸ் தெரியாத காலத்தில் திக்காக நடந்த உபாயம். நாம் இன்று பௌதிக ரசாயன யுகத்தில் பல அற்புதங்களைக் காண்கிறோம். இந்த அற்புதங்களுக்கெல்லாம் கனலே காரணம். கிரேக்க ஐதிகத்தில் புரொமீதியஸ் என்பவன் தீயை உலகிற்குக் கொண்டு வந்ததாகக் கதையுண்டு, ஐயோ தீயை உலகிற்குக் கொண்டுதந்தால், மனிதர் நாகரிகம் பெற்றுவிடுவார்களே, யந்திரங்களைச் செய்வார்களே, நமக்கும் போட்டியாக வருவார்களே என்று தேவதைகள், புரொமீதியஸை ஒரு பாறையில் கட்டிப்போட்டுத் தண்டித்தனர் என்ற கதையைச் சொன்னேன். மாணவருக்குப் பாடத்தில் ஊக்கம் ஏற்பட்டது. பிறகு

தீப்பற்ற வைக்கத் தற்கால உபாயங்களை விளக்கினேன். படங்கள் போட்டு, தீக்குச்சி முதல் மின்சார அடுப்பு வரையில் எல்லாம் விளக்கிய பிறகு, ஒரு தீக்குச்சியின் பாகங்களைப் பிரித்துப் பார்க்கச் செய்தேன். மஞ்சளாயிருப்பதை முகர்ந்து பார்க்கச் சொன்னேன். "கந்தக நாற்றம் அடிக்கிறது சார்" என்றதும், "அதுதானப்பா தீக்குச்சியில் ஏறும் முதல் சரக்கு" என்று கந்தகத்தைக் காய்ச்சினேன். அது காயும் போதே குச்சிகளைத் தயாரித்தேன். பழைய தீக்குச்சிகளையே உபயோகித்தேன். கந்தகக் குழம்பில் குச்சிகளைத் தோய்த்தெடுக்கச் சொன்னேன். பையன்கள் அப்படியே சுறு சுறுப்புடன் செய்தார்கள். அதற்குள் சோதகர் "ஆல்ரைட்" என்று எழுந்து தலைவருடன் வேறு வகுப்பிற்குச் சென்றார். நான் இங்கே தொடங்கினேன்:

"கண்மணிகளா, நமது நாடு சுதந்தரம் பெறவேண்டும், அதற்கு ஒரு வழி சுதேசியம்; நமது நாட்டில் உண்டாவதையே நாம் உபயோகிக்க வேண்டும். ஏன்? அன்னியச் சரக்குகள் நமது நாட்டைக் கொள்ளை யடிக்கின்றன. அதனால் நாம் ஏழைகளாகிறோம். உதாரணமாக, நாம் ஸ்வீடனிலிருந்து தீப்பெட்டி வரவழைத்தால், கோடிக் கணக்கான பணம் கப்பலேறிப் போய்விடுகிறது. தீக்குச்சியை நமது நாட்டிலேயே செய்து கொண்டால், பணம் நமக்கு மிச்சம்...அதைக் கொண்டு நாமும் ஐரோப்பா, அமெரிக்கா, போலப் பெரிய தொழில்களை நடத்தி முன்னேறலாம். நீங்களெல்லாம் படித்து உலகிற் புகுந்ததும், நாட்டிற்கு நல்ல தொழில்களை நடத்திப் பிழைக்கவேண்டும். நம்மை அடிமைப் படுத்தும் சர்க்கார் வேலைக்குப் போகக்கூடாது: 'நாம் யர்க்கும் குடியல்லோம்' என்றார் அப்பர் "என்ன நீங்களெல்லாம் சுந்தரமான வீராவீரா?" "ஆமாம் ஐயா."

இந்தப் பேச்சு நடத்திக் கொண்டே நான் கல்வத்தைத் துடைத்து, அதில் குறுமணலைப் போட்டு அறைத்தேன்...பிறகு பொட்டிலுப்பைக் காட்டி—இதற்குப் பொடாசியம் என்பர்—இது மத்தாப்பு செய்ய உதவும். "பாருங்கள் மத்தாப்பு வேடிக்கை" என்று செய்து காட்டினேன். வகுப்பெல்லாம் ஒரே குதிதான். பிறகு ஒரு மாணவனை அருகில் துணைக்குவைத்துக் கொண்டு, "தம்பீ, நான் இந்தக் கல்வத்தில் அறைக்கும்போது நீ தண்ணீர் சிறுகச்சிறுக ஊற்றவேண்டும்." என்றேன். நான் மணலையும் பொட்டிலுப்பையும் அறைத்து முடித்த பிறகு, வகுப்புக் கதவுகளை அடைத்து, பாருங்கள்! இதை, என்று பாஸ்வரஸ் துண்டைக் காட்டினேன். "மின்மினுப் பூச்சிமாதிரி மினுமினு என்கிறதே ஐயா" என்று எல்லாரும் வியந்தனர். பிறகு கதவுகளைத்திறந்து, "தம்பிகளா இதுதான் பாஸ்பரஸ் என்பது. அதை பாஸ்வரம் என்பர்: இதுதான் திக்குச்சிக்கு நெருப்பைக் தரும் சரக்கு, வெங்காய வெடிக்கும் இதுதான் மூலச்சரக்கு, இது அபாயமானது. இதைச் சும்மா மேஜைமேல் வைத்தால் மேஜையே தீப்பற்றி விடும்...

அதனால் இதைத் தண்ணீரில் வைக்கவேண்டும். இதைப்பற்றி இன்னொரு நாள் விரிவாகக் காண்போம். இப்போது இதைக் கல்வத்தில் போட்டு அறைக்கிறேன். அறைத்த கூழில் கந்தகம் ஏறிய குச்சியைத் தோய்க்கிறேன். பிறகு பாருங்கள் வேடிக்கையை" என்று அறைக்கத் தொடங்கினேன். நான் தண்ணீர் விடச் சொன்ன பையன் ஆச்சரியமாக வாயைப் பிளந்து கொண்டு சும்மா நின்றுவிட்டான். நான் பாஸ்பரசைக் கலந்து அறைத்ததுமே டபார் டபார் என்று சத்தம்! கல்வமும் குழவியும் குபீர் என்று மேலே தூக்கியடித்து முகட்டில் முட்டிக் கீழே உடைந்து விழுந்தன. என் தொடையில் ஒரு துண்டு விழுந்தது. என் கையில் இரத்தம் ஓடியது. கையையே அது அறுத்துக் கொண்டு பலிவாங்கியிருக்கும். கலைவாணிக்கு அந்தக் கையால் சேவை செய்ய வேண்டுமே என்று விதி காத்தது. நான் மயக்க முற்றுக் கீழே சாய்ந்தேன். புகை என் ஈரலில் தைத்தது. பிறகு சமாளித்துக் கொண்டு எழுந்தேன். தலை சுழன்றது. உடல் நடுங்கியது; வகுப்புப் பையன்கள் 'ஐயோ' என்று அலறினர், தலைவர் ஓடி வந்தார். சோதகர் பரபரப்புடன் "என்ன குண்டுச் சத்தம்" என்று வந்தார். என் அருமை நண்பர் அரங்கசாமி ஐயங்கார் பதறிப் போனார் நான் ஒன்றும் பேசமுடியாமல், உலகையே மறந்து திகைத்து நின்றேன். பையன்கள் 'திக்குச்சி செய்தாரையா :இப்படி ஆனது" என்று அலறினர். சோதகர் சட்டென்று என் தலையைப் பிடித்துக் கொண்டார். அதற்குள் நான் பிராணாயாமம் செய்து உள்ளே புகுந்த புகையை இரேசகத்தால் வெளியேற்றி, நினைவு வந்ததும் சுற்றிப் பார்த்தேன். அப்போதே நடந்தது தெரிந்தது. தலைவர் "என்ன ஆபத்தான காரியம் செய்தீரையா. அடடா சாகத்தெரிந்தீரே!" என்று விசனித்தார். சோதகர் "நீர் போய் இளைப்பாறும்" என்றார். நான்" அதனாலென்ன இப்போது, ஒரு சோதனைக்குச்சோதனை வந்தது. வாதனைப் படுவானேன்?" என்று கைக்காயத்தைத் தண்ணீரால் கழுவிக் கட்டிக்கொண்டு, பாடத்தை நடத்தியே தீர்த்தேன். உடைந்த கல்வத்தில் நல்ல வேளையாக மருந்து ஒட்டிக் கொண்டிருந்தது. அதில் கந்தகமேறிய குச்சியைத் தோய்த்தெடுத்து, இன்னொரு ரசாயனம் சேர்த்துக் காயவைத்தேன். அதற்குள் மணியடித்தது...மாணவர் திக்குச்சி செய்து விடலாமையா என்று சென்றனர். யான் தப்பிப் பிழைத்ததற்காக என்னை எல்லாரும் சூழ்ந்து கொண்டு வாழ்த்தினர். இந்தச் சம்பவம் எனக்கு ஒரு புதிய விழிப்பை அளித்தது. என் மணிக்கட்டில் இன்னும் அந்தக் காயத்தழும்பு உள்ளது. அதைக் காணும்போதெல்லாம் வாழ்க்கையின் போக்கும் புலப்படும்.

105. எச்சரிக்கை

என் வாழ்வில் எத்தனையோ சோதனைகள் வந்ததுண்டு—கடுமையான சோதனைகள். அப்போதெல்லாம் நான் மௌனத்தில் ஆழ்ந்து,

உள்ளேதான் பரிகாரம் தேடுவேன். யாரிடமும் பேசாமல், இயற்கை யெழிலில் நீண்ட நேரம் தியானிப்பேன். அந்தராத்மனை வழி கேட்பேன். அவன் காட்டிய வழியில் துணிந்து நடப்பேன். அந்த வழி கரடு முரடாகவே யிருக்கும். மனக்குதிரை இடக்குச் செய்யும்; ஆனால் முடிவில் அது நல்லதாகவே முடியும். அந்த வழியில் செல்ல எத்தகைய தியாகத்திற்கும் நான் பின் வாங்கியதில்லை

வெடிகுண்டு சம்பவம் எனது மனச்சாட்சியில் ஒரு புரட்சியை உண்டாக்கியது. நான் மாலையில் வழக்கம் போல் சுந்தரமையரைக் காணச் சென்றேன். சும்மா இல்லை. ஜேபில் ராஜினுமாவை வைத்துக் கொண்டு சென்றேன். ஆசிரியர் வேலையை உடனே ஒழித்துவிட்டு, தவத்திலேயே ஆழ்ந்துவிடுவது என்ற உறுதியுடன் சென்றேன். நாங்களெல்லாம் கூடும் இடம் கா. சி. ராமகிருஷ்ணையர் வீடு; அவர் அக்காலம் சென்னையில் பொருளாதார ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். ஓய்வு காலத்தில் காட்டுப்புத்தூருக்கு வந்து, தமது சென்னை அனுபவங்களை ஆங்கிலத்தில் அழகாகப் பேசுவார்.

அன்று நான் அக்கிரகாரத்தில் நுழையும்போதே "கேட்டீரோ சங்கதி...நமது J. V. S. (இதுதான் என்னை ஊரார் அழைக்கும் பெயர்) சாகத் தெரிந்தார். நல்ல வேளையாகத் தப்பினர். பகவான் காத்தார். வெடித்த கல்வம் மண்டையில் விழுந்திருந்தால், கபால மோக்ஷந்தான். விதியின் இச்சையை நாம் என்ன கண்டோம்" என்று திண்ணை வம்புகள் நடந்தன. அவை என் காதில் விதியின் அம்புகள் போலப் பட்டன.

என்னைக் கண்டதும் சுந்தரமையருடன் S. T. ராமானுஜ ஐயங்கார், அரங்கசாமி ஐயங்கார், கோடீசையர் முதலியோர் "வாருமையா! ஊரெல்லாம் உங்கள் வெடிகுண்டுப் பேச்சுத்தான்" என்ற பல்லவியுடன் வரவேற்றனர். "குண்டு போட்டாரே, ஐயா குண்டு போட்டாரே" என்றொரு நண்பர் பல்லவி யெழுத்தார். நான்,

> நச்சரிக்கும் வாழ்வைநீ நம்பாதே என்றெம்மான்
> எச்சரிக்கை செய்தான் இனிநானும்—அச்சமுறேன்
> சாவையும் வெல்லுமோரு சத்திப் பணிசெய்யப்
> போவேன்; அவனே புகல்,

என்று பந்துவராளியில் ஒரு வெண்பா இழுத்தேன். சுந்தரமையர் சிழ்க்கை யடித்தார். அதைத் தொடர்ந்து சக்ரவாகம், ரேவணி, நாயகி, தர்பார் ராகப் பாடல்கள் நடந்தன. இந்தக் காலம் பாடின பாடல்கள் கீர்த்தனஞ்சலியில் உள்ளன.

அந்திச் செவ்வானம் தியானத்திற்கழைத்தது. சதாசிவப் பிரமேந்திரர் நினைப்பு வந்தது. மனம் தனிமையை நாடியது. சுந்தரமையு

ரிடம் என் பையிலிருந்த ராஜினாமாக் கடிதத்தைத் தந்து, "நாளைக் காலை வருகிறேன்..." என்று நடந்தேன். எங்கே?

106. ஐந்து கட்டளைகள்

நேராக நெரூர்; மூன்று மைல் நடந்ததே தெரியவில்லை. ஏதோ ஒன்று கால்களை இழுத்துச் செல்கிறது. பின்னிருந்து ஒரு சக்தி 'போ போ இதுதான் வழி" என்று கட்டளையிட்டு நடத்துவது போல் உணர்ந்தேன். பணிவுள்ள சிப்பாய் போல் நான் அந்த இயற்கையின்பத்தில் நடந்தேன்.

காவிரியைத் தாண்ட வேண்டும்—அகண்ட காவேரி. சற்றே திகைத்தேன். அப்போது வயலில் வேலை செய்த உழவர் ஆற்றில் இறங்கினர். நானும் அவர்களுடன் இறங்கினேன். "சாமி இப்படி வாங்க" என்று அவர்கள் அன்புடன் வழி நடத்தினர். அக்கரையடைந்தேன். கவலை விட்டது. பிரம்மேந்திரக் காட்டின் சுதந்திரக் காற்றை முகர்ந்தேன். சுற்றிலும் கண் எட்டுமட்டும் நெல், வாழை, கரும்புப் பயிர்களும் வெற்றிலைக் கொடிக்காலும் பச்சமுகு வீசின. காவிரியின் ஓங்காரம் ஞானோபதேசம் செய்தது. உழவர் வீடுகளுக்குச் சென்றனர். யாரும் இல்லை: காற்றுப்பாட்டும் ஆற்றுப்பாட்டும் என் இதயப் பாட்டுடன் கொஞ்சி விளையாடின. நான் ஓங்கி வளர்ந்த மரங்களூடு சென்றேன். முழு நிலா என்னைக் கண்டு புன்னகைத்தது. தொலைவில் நரிகள் ஊளையிட்டன. ஓரிடத்தில் பாம்பு நெளிந்தோடியது. பரம பக்தர்களைக் கண்டு பொறுமைக் கொண்டு ஊளையிடும் உலகை மறந்து, துறந்து, காட்டிற்குள் சென்றேன். சதாசிவாலயம்: பிருந்தாவனங் கண்ட சைதன்யர் போல் ஆவேசங் கொண்டேன்; கதவு பூட்டியிருந்தது; சுவர் ஏறிக் குதித்தேன். சுற்றிப் பார்த்தேன். சந்நிதியும் மூடியிருந்தது. வடமேற்கு மூலையில் பரம சாந்தம் நிலவியது. அங்கே ஒரு வில்வ மரம்—வாடா மரம். அதனடியில் ஒரு புற்று; அதுதான் சதாசிவ சமாது. அதைக் கண்டதும் "சச்சிதானந்த ஸ்வரூபனே சதா சிவனே" என்ற ஸ்ரீராகப் பாட்டைப் பாடி, பரவசமானேன். பறவைகளும் என் பாட்டுக்கு ஸ்வரகெத்து மீட்டுவது போலச் சிச்சிலி கொட்டின.

பறவைகள் கூடடைந்தன. அந்த அமைதியில் ஸஹானா எழுந்தது. "நிர் விஷயனாய்ச் சற்று நிர் விகல்பஸமாதி நிலைத்து நான் சுகிப்பதென்றோ" என்ற பாட்டைப் பாடி தியானத்தில் லயித்தேன்.

உடல், உயிர் உலகக் கவலைகளின்றி, இறைவனைத் தவிர வேறொன்றையும் நினையாத ஒருமையில், அமைதியின்பம் உண்டாகிறது அந்த இன்பத்தில் ஒரு சக்தி ஓட்டம் காணும். இரண்டு மின் கம்பிகள் மின்மீட்டியில் பொருந்தியதும், சக்தி எழுந்து எங்கும் பாய்ந்து பரவுகிறது; அது போலவே உள்ளமைதியில் இடை, பிங்கலை என்ற

நாடிகள் கூடி ஒன்றுனதும், மனம் மறைந்துபோகிறது. மனவிகாரங்கள் ஒழிகின்றன. மனதிற்கு அப்பால் உள்ள உள்ளறிவு எழுகிறது. அதிலேயே லயித்தால் ஓர் இன்பக்கனல், மூலாதாரத்திலிருந்து எழுந்து, நடு நரம்பு வழியே மேலேறி, ஆதார சக்கரங்களைத் தாண்டிக் கொண்டு, நெற்றிக்கு நடுவே ஒளிப் பிழம்பாக நிலவும். அதற்கு மேல் பொறுமையும் ஒருமையும் கூடி ஆழ்ந்தால், நாதவிந்கலாதி தத்துவங்கள் அனுபவமாகும். அவற்றையும் தாண்டி நீண்ட சமாதி யோகத்தில் ஆழ்ந்தால், ஸஹஸ்ராரத்தை எட்டலாம்.

எட்டு வயதுமுதல் நான் தொடர்ந்து செய்து வந்த, பல யோக சாதனங்களும் அன்று சித்தியைக் கண்டன. இரவு ஒரு மணிக்குத்தான் எனது சமாதி நிலை கலைந்தது. என்னுள் ஒரு புதிய சக்தி சுழன்றது. எப்போதும் சுழலும் குண்டலினிக் கனலைவிட அதன் கனல் தீவிரமா யிருந்தது. வழக்கம் போலக் கேட்கும் ஓங்காரம் பதின் மடங்கு தெளிவாக ஒலித்தது. உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற ஐயனை உணர்ந்தேன். எனது நெஞ்சத் துடிப்பும் அவனது இன்ப நடனமானது, கோயிலைச் சுற்றிச் சுற்றி நடந்தேன்.

அடுத்த கேள்வி: இனி நான் என்ன செய்வது? நாளை எனது நிலையென்ன? எங்கே செல்வது? பிள்ளைப் பருவத்தில் எனக்கு ஒரு வாக்கு உதித்தது. "உள்ளவரை உழை: இங்கே வேலையுள்ள வரை இரு" இனி என் வேலை என்ன? நான் உள்ளே அடைய வேண்டியதை அடைந்தாயிற்று. இந்த உலகத்தில் பிறந்த பயன் என்ன? என்ற கேள்விகளுடன் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தேன். மனச்சாட்சியாகிய அறக்கடவுள் எனக்கு ஐந்து கட்டளைகளைத் தந்தது:

1. காவிரி வெள்ளம் போல் கவி பாடு; பேர், புகழுக்கில்லை, இறைவனுக்கே பாடு.

2. அறிவு, அன்பு, தூய மெய்வழி பரவத் தொண்டு செய்.

3. யோக ரகசியங்களை உலகிற்கு அள்ளி அளி: எதையும் ஒளிக்காதே,

4. உலகே கோயில்; உயிர்த் தொகுதியே கடவுள். வாழ்வை உயிர்ப் பணியாக்கு; இடர்களை பொறு.

5. முன்செல்; பின் வாங்காதே; திருவருள் வழி காட்டும்.

சுக்கிரோதயமானது; காவிரிக்குச் சென்று என் அனுஷ்டானங்களை முடித்தேன்; உள்ளும் புறமும் தூய்மையும், ஒண்மையும் ஒருமையும் பெற்றிருந்தன. சமாதி நிலையை விடமுடியவில்லை. சதாசிவ வில்வ மரத்தையும் விட முடியவில்லை. என் ஆடையை உலர்த்தி விட்டுக் கோவணத்துடன் வந்து, வில்வமரத்தின் அடியில் அமர்ந்து, தியானித்தேன். முதல் கட்டளையைப்பற்றி நினைத்தேன். வாழ்வை

எத்தகைய காவியமாக்குவது? எத்தனையோ புலவர் பாடிச் சென்றனர். ஒரு கம்பரை, வள்ளுவரை, அப்பரை, தாயுமானவரை உலகம் கருதி மதிக்கிறது. ஆயிரக்கணக்கான புலவர் வாக்குகள் கால வெள்ளத்தில் மறைந்து போகின்றன. நாம் பாடி யாருக்குப் பயன்? என்ன இருக்கிறது பாட? இறைவன் விரும்பினால் என்னுள் பாடிக் கொள்ளட்டும். நான் வீணை. அவன் நாதம் என்ற பணிவுடன் தியானித்தேன். அப்போதுதான் நான் இளமை முதல் அடிக்கடி சிந்தித்து வந்த பாரத சக்தி மகா காவியம் உருவெடுத்தது. "ஆம், பாரத சக்தி மகா காவியமாக என் வாழ்க்கைநதி உலகில் ஓடிக் கொண்டிருக்கட்டும்" என்ற உறுதி கொண்டேன். பிறகு உலக மக்கள் முன்னேற்றத்திற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும், சுத்த சன்மார்க்க உணர்ச்சிக்கும்; இறைவன் அருளெழுச்சிக்கும் உரிய இசைப் பாடல்களைப் பாட வேண்டும், என்ற மற்றோர் உறுதி கொண்டேன். இந்தப் பாடல்களை இயல்பாகப் பாடி, இறைவனுக்கு அர்ப்பணித்துச் செல்லவே கருதினேன். சீனத்து மகான் லௌத்ஸன் போலும், சதாசிவப்ரம்மேந்திரர் போலவும், மௌனத்தில் ஞான முத்துக்களை எடுத்து, சுத்தசக்தி இறைவனுக்கே அர்ப்பணித்துச் செல்ல நினைத்தேன். என் பெயர்கூட உலகிற்குத் தெரிய வேண்டாம் என்று எண்ணியே எனது பாடல்களுக்கு முத்திரை வைக்கவில்லை. ஆனால் அவன் அருளால் மலரும் மலரின் மணம் பரவுவதை நானோ பிறரோ எப்படித் தடுக்க முடியும்? "முன்செல்: வழி துலங்கும்" என்ற பின், நான் அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்ற மனக்கோட்டை கட்டிப் பயனென்ன? மறுபடியும் அந்த அற்புதமான வில்வமரத்தின் காற்றைக் கும்பகத்தால் உள்ளே அடைத்துக் கொண்டு, ஓசைப்படாமல் புறப்பட்டேன். வாரம் இரு முறையாவது அதே இடத்தில் வந்து தியானிப்பதுண்டு. சில சமயம் நல்ல துறவிகளும் அங்கே வருவார்கள். கீர்த்தனாஞ்ஜலியில் உள்ள பல பாடல்கள் அங்கேயே பாடப்பெற்றன. இனிக் காட்டுப்புத்தூர் செல்வோம்.

107. கிழித்தெறியும்!

இதற்குள் நான் ராஜினாமாவை நீட்டிய செய்தி ஊரெல்லாம் பரவிப்போனது. நான் பள்ளிக்கூடத்திலேயே ஜாகை வைத்திருந்தேன். ஜமீந்தார் எனக்கு எல்லாச் சௌகரியங்களும் செய்து கொடுத்தார். நண்பர் பள்ளிக்கூடத்தில் தேடினர். காணவில்லை. ஆசாமி எங்கோ ஓடிப்போனார் என்ற வதந்தி பரவியது. பள்ளிப் பரிசோதகர் இன்னும் இருக்கிறார். இன்று சாரண விளையாட்டைக் காணத் திட்டமிட்டிருக்கிறார். சுந்தரமையர் என்னை எதிர்பார்க்கிறார்.

* * *

மணி பத்து; நான் வழியில் ஓர் யாதவர் வீட்டில் பால் வாங்கி அருந்தி விரைந்தேன். பள்ளிக்கூடத்துட் புகுந்தேன் ஆசிரியர்க ளெல்லோரும் ஆடம்பரச் சட்டைகள் அணிந்து ஜோராக வந்து வகுப்பில் கொலு விருந்தனர். மாணவரும் அவ்வாறே. நான் விருட் டென்று என் அறைக்குள் புகுந்தேன். சட்டை பாகை யணிந்தேன். ஓசைப்படாமல் எனது வகுப்பிற்குப் போய் ஆங்கிலப் பாடம் தொடங்கினேன். என்னைக் கண்டதும் மாணவர் "இதோ வந்துட்டார் ஐயா ' என்று ஆரவாரம் செய்தனர். அவர்களை அமைதி யாக்கி, அமர்த்தி நான் பாடந் தொடங்கினேன். நான் வந்த செய்தி தலைவருக்கு எட்டியது. அவர் அவசரமாக என் வகுப்பிற்கு வந்தார். "இங்கே வாரும்" என்று தனியே அழைத்துச் சென்றார். 'ஹூ' இதென்ன பைத்தியம்? கிழித்தெறியும் உமது ராஜினமாவை..." என்று தந்தார். நான் தயங்கினேன். அவரே கிழித்தெறிந்து "போம் வகுப்பிற்கு. பிறகு பேசுகிறேன். நிம்மதியாயிரும்..." என்று சொல்லிக் கொண்டிருந்த போதே, பரிசோதகர் வாசலில் வந்து விட்டார். நான் வகுப்பிற்கு ஓடி மாணவர்களை ஆங்கிலத்தில் கபாத்து வாங்கினேன். கரும்பலகையில் அழகான மலையருவிப் படம் போட்டு, அருவி (Brook) என்ற ஆங்கிலப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தேன். ஐந்து நிமிஷம் இருந்து சென்றார்.

மாலை ஐந்து மணி; பள்ளிக்கூடத்திற்குப் பின்னால் இருந்த பெரிய பெரிய தோட்டத்தில் சாரணரைக் கொண்டு நிறுத்தினேன். நானும் ஜோராகச் சாரண உடையணிந்திருந்தேன். முதலில் வலது, இடது, நில், செல், வளை, ஓடு, சுற்று, படு, எழு, தொடர், கலை என்று தமிழில் கட்டளைகளைச் சொல்லிக் கபாத்து நடத்தினேன். பிறகு கொடிக்குறி களுடன் ஆடல்களைக் காட்டினேன். பிறகு ஊதுகுறியால் அவர்களை ஒளிந்து மறைந்து கிளர்ந்து விளையாடச் செய்தேன். பிறகு கூடாரம் கட்டி, அதில் திருடன் வந்து ஓடுவதாகக் காட்டி, அவனைப் பிடிக்கத் தடங்கண்டு ஓடும் ஆடல் காட்டினேன். முடிவில் ஒரு போர்க்காட்சி; எதிரி சுயேச்சாதிகாரம்; சுதந்தரப் படை அதை எதிர்த்து அழிக் கிறது. சுதந்தரம் வெற்றி முரசடிக்கிறது. அத்துடன் "புண்ணிய நாடே பூசுரர் நாடே" என்ற தேசிய கீதம் பாடி வட்டமிட்டு ஆடினோம். சோதகர் அரச வாழ்த்துப் பாடச் சொன்னார். "தேச வாழ்த்தே பிள்ளைகளுக்கு தெரியும்" என்றேன். அவர் ஆடல் பாடல்களை மெச்சி என்னை " நீங்கள் எங்கே சாரணப் பயிற்சி பெற்றீர்கள்?" என்று கேட்டார். நான் பசுமலையில் கிறிஸ்துவச் சாரணருடன் பயின்றதாகச் சொன்னேன். அவர் உடனே அப்போது வேலூரில் நடக்க இருந்த பெரிய சாரணர் பயிற்சிக்கு என்னைச் சிபார்சு செய்தார். சுந்தரமையரும் ஜமீந்தாரிடம் சொல்லி என்னை அனுப்பினர்; டிஸம்பர் லீவில் கிளம்பினேன்.

108. வேலூர் பிரயாணம்

எனக்குப் பரீட்சை, பட்டம், பத்திரங்களில் நம்பிக்கை கிடையாது. கலாசாலைப் படிப்பை முடித்த பிறகுதான் நான் உண்மையான கல்வி கற்றேன்—என் உள்ளமான கலாசாலையில் இயற்கை போதித்த கல்வியை. இருந்தாலும் புதிய புதிய பயிற்சிகள் பெறுவதில் எனக்கு ஆர்வம் அதிகம். அதனால் நாட்டிற்குப் பயனுண்டு என்றறிந்தால், உடனே முனைவேன். ஆதலால் வேலூருக்குக் கால்வண்டியைத் தட்டி விட்டேன். கிராம கிராமமாகப் பார்த்துச் சென்றால் உலகானுபவம் அதிகமாக கிடைக்கும். எனது மகா கவிக்கு நல்ல குறிப்புகளும் எய்தும். எனது சிப்பாய்களில் நாகைய நல்லூர் பேர்வழிகள் கட்டுமஸ்தானவர்கள். எல்லாரும் பழையது சாப்பிட்டுப் பத்து மைல் தாவும் பீமர்கள். "முதலில் எங்கள் ஊருக்கு வாருங்கள் ஸார்" என்று அவர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கே வேதம் உபநிஷத்து ஓம மந்திரங்கள் எல்லாம் ஓதிப் பயன்பெற்றேன். அங்கிருந்து மாணவருடன் தலைமலைக்குச் சென்றேன். அங்கே பெருமாள் கோயில் விநியோகம் கிடைத்தது; நிரம்ப நெய்விட்டுத் தந்தார் பட்டர்.

தலைமலைக்குச் சென்று வந்ததும் நாமக்கல்லுக்குப் புறப்பட்டேன். வழியில் உள்ள கிராமங்களில் நமது நாட்டு நிலையைக் கண்டு கலங்கினேன். எங்கும் வறுமை, மடமை, அடிமையிருள் குடிகொண்டன. எனது கடமை எனக்குப் புலனானது. ஜனங்களுக்குச் சுகாதாரமும் சன்மார்க்கமும் போதித்துக் கொண்டே நாமக்கல் போய்ச் சேர்ந்தேன். அங்கே நாமகிரியம்மனையும் கம்பீரமான தோரணகம்ப ஹனுமானையும் பார்த்து நிற்கவில்லை. ஜனங்களின் வாடிய முகத்தையும் கவலை தேங்கிய மனதையும் கண்டேன். பாடுபட்டும் பசி தவிக்கும் ஏழைகளைக் கண்டேன். அவர்கள் கண்ணீரைக் காவியமாக்கினேன். நாமக்கல்லில் நாட்டுணர்ச்சி அதிகமாயிருந்தது. எனக்கு அங்கே சில நண்பர்களுண்டு. அவர்களைப் பார்த்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு வந்தேன். அங்கே சாரண ஆசிரியர் நாராயணசாமி ஐயருடன் அளவளாவி, என் பயிற்சிக்கேற்ற குறிப்புகளைப் பெற்றேன். அந்தப் பக்கத்திலிருந்து பல மாணவர் வந்து காட்டுப்புத்தூரில் என்னிடம் படித்தனர். அவர்கள் என்னைத் தங்கள் ஊர்களுக்கு அழைத்துச் சென்று உபசரித்தனர். எனது உணவு, கமண்டலத்தில் ஊறப்போட்ட கொத்துக்கடலையும் வாழைப்பழமுமே. ஆதலால் என்னை வரவேற்பவர்களுக்கும் எளிதே. அந்தந்த ஊர்களில் நாட்டு நிலையையும், நமது கடமையும் பற்றிச் சொற்பொழிந்துகொண்டே சென்றேன். எனக்கு மிகவும் பிடித்திருந்த ஊர் பாண்டமங்கலம். அங்கே எனது மாணவன் சிதம்பரம் என்னை உபசரித்தான். பாண்டமங்கலம் காவிரிக் கரையில், ஓர் அழகிய சோலையுண்டு. அதில் கிளி கொஞ்சும்: குயில் அகவும் ஊர்க்குருவிகள் முகர்சிங் வாசிப்பது போலச் சத்தமிட்டுத் தாவி விளை

யாடும். அந்தச் சோலை வனப்பில் நீண்டநேரம் தியானித்தேன். பிறகு பரமத்தி சென்றேன். அங்கிருந்து படையாட்சி மங்கலம் சென்றேன். அங்கே எனது மாணவர் சிலர் வரவேற்றனர். படையாட்சிகள் தமிழ் வீரர்: வன்னியகுல க்ஷத்திரியர்; செல்வத் தொழிலாளர். தமிழ்ப் பண்புள்ள தமிழர். அவர்கள் எனக்கு பஜனை மடத்தில் இடந் தந்தனர். அங்கே ஒரு பஜனை கோஷ்டியிருந்தது. காலை நான்கு மணிக்கே எழுந்து காவிரியாடி, நான் அவர்களுடன் நகர பஜனை நடத்தினேன். அந்த ஊரில் ஆறுமுகப் படையாட்சி என்ற செல்வர் எனக்கு நண்பரானார். அவர் தமது பிள்ளைக் கவலையை முறையிட்டார். "ஐயா இந்த நாட்டில் எத்தனையோ ஏழைக் குழந்தைகள் வறுமையால் வாடுகின்றன. கல்வி கற்க வசதி யில்லாமல் வருந்துகின்றன. அந்தக் குழந்தைகளை யெல்லாம் தங்கள் குழந்தைகளாகக் கருதுங்கள். அவர்களுக்குக் கல்வியும் உணவும் தர வழி செய்யுங்கள். அதுவே பிறவிப்பயன், செல்வப்பயன்" என்றேன். அந்தச் செல்வர் நாமக்கல்லில் மாணவருக்கு ஓர் உணவுச்சாலை கட்டி அறம் புரிந்தார். எனது மாணவன் கந்தசாமி என் உள்ளத்தை அறிந்தவன். அவன் வேண்டுகோட்படி அந்த ஊரில் கிராம சேவையைப் பற்றிப் பேசினேன். பேச்சிடையே கிராமத் தொண்டர் படை சாரணப்பயிற்சி பெறவேண்டும் என்று வற்புறுத்தினேன். பேச்சு முடிந்த பிறகு "வேலூருக்கு வாருங்கள்; அங்கே சாரணப் புலவர் இருக்கிறார்" என்று அழைத்துச் சென்றார். காலையில் அமோகமாக பஜனை நடந்தது. சேர்ந்து நிவேதனம் ஆக்கினோம்; சேர்ந்தே உண்டோம். பஜனையுடன் அன்பர் என்னை வழியனுப்பினர். நான் அழகிய பசு வயல்களூடு நடந்து வேலூருக்கு வந்தேன்.

109. சாரணப் பயிற்சி

வேலூர் முத்துக்கருப்பனார் சாரணப்புலவர்; அவருடன் ஜி. வெங்கடேசரும் இருந்தார். இருவரும் என்னை அன்புடன் ஏற்று, சாரணப் பயிற்சிபற்றிப் பேசினர். நான் வந்தது மார்கழி மாதம்; ஸ்கௌட்காம்பை ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைத்திருந்தனர். ஆனால் மேற்சொன்ன நண்பர் "தாங்கள் உடனே பயிற்சி தொடங்கலாம்; பிற்காலம் பயனாகும். நாங்களே பத்திரமும் தரமுடியும்" என்றனர். ஜி. வே. அறிஞர், கம்பராமாயணப் புலவர். ஆங்கிலம் அழகாகப் பேசுவார். சாரண நிபுணர், நல்லன்பர். நான் வேலையை ராஜினாமாச் செய்த செய்தியைச் சொன்னதும், "இனி நீங்கள் வேலையை விடுவதானால், என்னை அந்த இடத்திற்குச் சிபார்சு செய்யுங்கள்" என்றார். "அந்தச் சந்தர்ப்பமும் வரும்" என்றேன். முத்துக்கருப்பர் பல சாரணரைப் பயிற்றிக்கொண்டிருந்தார். நானும் சேர்ந்து சாரணக்கலையை ஒருவாரம் கற்றேன். ஏப்ரல் பயிற்சிக்கு வருவதாக

வாக்களித்துத் திரும்பினேன். இந்தக் கால்நடைப் பிரயாணம், நாட்டு நிலையை எனக்குப் படம்பிடித்துக் காட்டியது.

காட்டுப்புத்தூருக்கு மீண்டதுமே, நான் ஒரு தொண்டர்படை கூட்டிச் சாரணப் பயிற்சி யளித்து, சமுதாய சேவை தொடங்கினேன்.

ஏப்ரல் மாதம் வந்தது. மெண்டிஸ் எனக்கு எழுதினார். நான் ரயிலில் சென்றேன்; மெண்டிஸைக் கண்டேன். அவர் அன்புப் புன்னகையுடன் எனக்கு ஸ்கௌட்ஸல்யூட் செய்து "ஓகோ நீர் ஜ. ரங்கசாமியின் சகோதரரா"...என்று சிரித்தார். நான் வியந்தேன். "உமக்கு எப்படித் தெரிந்தது?." என்றேன். "பாளையங்கோட்டை ஸ்கௌட் காம்பிற்கு உம் அண்ணா வந்திருந்தாரே; அவர் உம்மைப் பற்றி வெகுவாகச் சொன்னார். மற்றும் பலர் அவர் ஒரு விநோத யோகி என்றனர்" என்றார். "அப்படியெல்லாம் இல்லை. நான் ஒரு வேதாந்தக் கோமாளி. உலகரங்கில் நகைத்தீ மூட்டிப் பகைத்தீயை அணைப்பவன்" என்றேன். "அப்படியானால் உமது நகைத் தீயால் இரவில் குளிர் காய்வோம்" என்றார் மெண்டிஸ். எங்கள் பேச்செல்லாம் ஆங்கிலமயம்; இங்கே தமிழில் எழுதுகிறேன். எனக்கும் அக்காலம் ஆங்கில மோகம் பலமாக இருந்தது என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். மெண்டிஸ் சிங்கள கிறிஸ்துவர்; ஆங்கிலத்தையே தாய்மொழியாகப் பேசுகிறவர். அவர் இளம் மனைவியும் அவ்வாறே. மனைவி எப்போதும் கலகலப்பாகச் சிரித்து விளையாடுவாள்.

சாரண முகாம் ஓர் அனுபவக் கலாசாலை. வேலூர் முகாமிற்குத் தென்னாட்டுக் கல்லூரிகளிலிருந்து ஆசிரியர் பலர் வந்திருந்தனர். அவருள் முப்பது பேருடன் நான் நெருங்கிப் பழகினேன். இருவர் என்னுடன் பசுமலை ஆசிரியர் கல்லூரியில் படித்த நண்பர். புத்தூர் வால்மீகிநாதன், நத்தார் சாகெபு, கரூர் பத்மநாதர், திருச்சி எஸ், பி. ஜி. கல்லூரி சித்திரப்புலவரான ஸ்ரீபாதராவ், திண்டுக்கல் ஆசிரியர் பள்ளித்தலைவர் பஞ்சாபிகேசையர், இராமநாதபுரம் பள்ளிப்புலவர் நாராயணையர், புதுக்கோட்டை சாரணப்புலவர் சாம்பமூர்த்தி, மன்னார் குடி பின்ட்லே கல்லூரி அண்ணாசாமி ஐயர். திண்டுக்கல் யக்ஞநாராய ணையர், பாபநாசம் ராமபத்ராசாரியார், பெரியகுளம் விக்டோரியா பள்ளியாசிரியர் சித்திரப்புலவர் சுந்தரபாண்டியன், பசுமலை நண்பர் கெப்ரியேல், தேவசகாயம், கந்துகூர் ஆசிரியர் இருவர், திருக்காட்டுப் பள்ளி ஜி. வேங்கடேசன் ஆகியோர் பெயர் நினைப்பிருக்கிறது. எங்களுக்கெல்லாம் ஜாகை உள்ளூர் பள்ளிக்கூடத்தில். சாரணப்பயிற் சிக்குத் தனியான ஒரு பங்களா ஏற்பாடு செய்திருந்தனர். உணவுக்கு உயர்ந்த ஏற்பாடு; மஸ்தாக நான்குவேளை சாப்பாடு. காலை உப்புமா காப்பி இட்டலி, பதினொருமணிக்கு, தாட்டான சாப்பாடு. நான்கு மணிக்கு ஹல்வா கேசரியுடன் சிற்றுண்டி, இரவு ஏழரைக்கு வெங் காய சாம்பார் உருளைக்கிழங்கு பொடிமாசுடன் விருந்து—இந்த உண

வுக்குத் தினம் ஒன்றரை ரூபா செலவு. பலருடன் வசித்ததாலும் பயிற்சியைக் கவனிக்க வேண்டியதாலும், நானும் இந்த உணவையே உண்ண வேண்டியிருந்தது. ஆனால் இரண்டு நாளைக்குமேல் உண்ண முடியவில்லை. தெவிட்டிப்போனது. இரண்டுவேளை போதும் என்று உண்டேன். ஒருநாள் உபவாசம்.

ஸ்கௌட் பயிற்சி காலை ஆறுமணிக்குத் தொடங்கும். முதலில் கோல் பயிற்சி, பிறகு கபாத்து—கையை, காலை, இடுப்பை, கழுத்தை, முழங்காலை வளைத்து, நரம்புகளைச் சுறுசுறுப்பாக்கி, இரத்த ஓட்டத்தைக் பெருக்கும் பயிற்சி. அதன்பிறகு ஊதலும் ஓடி ஒளிதலும், ஊதலிலேயே டுடு, டுடுடு, டுடுடுடு என்று பேசுவோம். அதற்கேற்ற செயலும் நடக்கும். பிறகு பலவகையான பயனுள்ள முடிச்சுகளைப் போடுதல், அவிழ்த்தல், கொடி உயர்த்தல், கயிற்றால் ஏணி கட்டுதல். பாலம் கட்டி ஆறு மலைகளைக்கடத்தல், கூடாரம் அமைத்தல், தீ மூட்டுதல், சமைத்தல், நோயாளிகளை டோலிகட்டித் தூக்கி வருதல், சிகிச்சை செய்தல், பயனுள்ள சில கைத்தொழில்கள்—இவை நடக்கும். பதினொருமணிக்கு எல்லாரும் ஆற்றிலும் நடைவாவிகளிலும் நீந்துவோம். அப்போது நீரில் விழுந்து மூழ்குவோனைக் காப்பாற்றும் வகையெல்லாம் கற்பிப்பர். மாலை ஐந்துமணிக்கு மீண்டும் பயிற்சி தொடங்கும். முதலில் தீவிரமான கழிப்பயிற்சி. கழியைக்கொண்டு பல அபாயங்களைத் தடுத்தல், கழியால் கூடாரம் கட்டுதல். பெருங் கூட்டங்களை ஒழுங்கு செய்தல், எல்லாரும் வட்டமிட்டு நின்று கூட்டத்தைத் தடுத்தல், தீ வீட்டில் புகுந்து தீ யணைத்தல், அங்கே அகப்பட்டுக் கொண்டவர்களைச் செந்தூக்காகத் தூக்கிவந்து காத்தல், பலவிதமான தூக்குகள். வட்டமிட்டு விளையாடல்; பிறகு தந்திக்குறி, கொடிக்குறி, ஒலிக்குறி, புகைக்குறி, மோர்ஸ்கோட், ஸெமஃபோர் ஸிக்னலிங் (கை காட்டி மரக்குறி), கைக்குறிகளால் பேசுதல், முகம் சுளித்தலால் பேசுதல், முதலிய பல பயனுள்ள அடையாளப் பயிற்சிகள் நடக்கும். பிறகு ஸ்கௌட் ஓட்டத்தில் இருபதடி நடை, இருபத்தெட்டு ஓட்டம் ஓடி வழிக்குறிகளைக் கண்டு கண்டு, முன்னே (எங்கோ மூன்றுமைல்) சென்று மறைந்த திருடனையோ ஆளையோ கண்டுபிடித்துக்கொண்டு வருதல், ஓர் அரிய விளையாட்டாகும். ஆறு மணிக்குமேல் ஆற்று மணலில் புதிய பல ஆடல்கள் நடக்கும். இந்த ஆடல்கள் உடம்புக்கும் மூளைக்கும் மனதிற்கும் உற்சாகமான பயிற்சியளிப்பவை. ஏழரை மணிக்கு இரா வுண்டி நடக்கும். பிறகு சிறிது அரட்டையும் தமாஷுமாயிருப்பர். சிலர் பத்திரிகை படித்து வம்பளப்பர். சிலர் பாடுவர். மணி ஒன்பதுக்கு உல்லாசத் தீ வளர்ப்பர். இதை வழக்கமாக நானே மூட்டுவேன். ''பாரதியார் கட்டையடுக்கிக் கொள்ளி வைக்கிறாரடா'' என்று எல்லாரும் சிரித்துக்கொண்டு வருவர். எல்லாரும் தீயைச் சுற்றி அமர்வோம். மெண்டிஸ் தம்பதிகள் நாற்காலிகளில் அமர்ந்து, சாரண அனுபவங்களைப்பற்றி ரஸமாகப் பேசுவார்

கள். பிறகு வேடிக்கை விளையாட்டு, இவற்றில் பெரும்பங்கு எனக்குத் தான். நான் வேலூர் காம்பின் விகடகவி யானேன். எல்லாரையும் எந்தநேரமும் சிரிக்க வைத்தேன். நான் மூன்று கை விரல்களையும் பட்டைநாமம்போல் நெற்றியில் வைத்து "நாராயணா என்னும் நாமம்" என்று ஸல்யூட் செய்யும்போதே சிரிப்புத் தொடங்கிவிடும். பிறகு சிறுவயதில் நான் செய்த விகடக் குறும்புகளெல்லாம் புறப் படும். கணவன் மனைவி பிணங்கிக்கொள்வதுபோல நடிப்பேன். ஷேக்ஸ்பியர், மோலியர் நாடகக் காட்சிகளை நடிப்பதுண்டு. பறவை கள் விலங்குகள் போலக் கத்துவேன். தேசியத்தலைவர் குரல்களை அபிநயித்துப் பேசுவேன். பொருமை நாய்களின் சண்டை, கோட்-சொல்லிகளின் நரிவேலை இவற்றையெல்லாம் அபிநயித்துப் பேசுவேன், பாடுவேன், ஆங்கிலத்தில் பல வேடிக்கைப் பாட்டுகள் கட்டிப் பாடு வேன். சிலசமயம் நான் எங்காவது ஓடி ஒளிவேன். நண்பர் தேடுவர். நான் அருகிலேயே படுக்கைக்குள் ஒளிந்து, நரி மாதிரி ஊளையிடுவேன். எல்லோரும் சிரித்துக்கொண்டே வருவர். நான் பட்டைநாமத்துடன் பல்லாண்டு பாடி வருவேன்...இப்படிப் பல வேடிக்கைகள் நடக்கும்; நகைச் சுவைக் கதைகள், நாடகங்கள் நடக்கும்; சமயத்திற்கேற்ற பாட்டுகள் முழங்கும். உருக்கமான பிரசங்கங்களும் நடக்கும். எல்லாம் பதினெரு மணியாய்விடும். மெண்டிஸ் ராஜ வாழ்த்துப் பாடத் தொடங்குவார். நான் அப்போது தமிழில் தேசவாழ்த்தே பாடுவேன்...ஓட்டம், நீச்சு, தூக்கு உல்லாசத்தி இவற்றில் நான் முதன் மையாயிருந்தேன்; ஸ்கௌட் மாஸ்டர் பட்டம் கிடைத்தது. கடைசி நாள் நாங்கள் மெண்டிஸ் தம்பதிகளுக்கு விருந்து வைத்தோம். மெண் டிஸ் சாரண இயக்கத்தைப்பற்றிப் பேசி, எங்களுக்கு நன்றி சொன்னர். எல்லோரும் என்னை முடிவுரை பேசச்சொன்னர்கள். ஆங்கிலத்திற் பேசினேன்.

110. எனது சொற்பொழிவு

மிஸ்டர் மெண்டிஸ், சாரணத் தோழர்களே! நாம் சில நாட்கள் கவலையை மறந்து புதிய உலகில் வாழ்ந்தோம். வீட்டுத் தொல்லை யில்லை; முகட்டுக்கடியில்லை. நன்குக உல்லாசமாகக் காலம் கழித் தோம். பல அரிய விஷயங்களைக் கற்றுக்கொண்டோம். முதலில் முடிச்சவிழ்க்கக் கற்றோம்—கோபித்துக்கொள்ளாதீர்கள்; முடிச்சுப் போடுவதும் அவிழ்ப்பதும், பெரிய அரசியல் வாதிகள் செய்யும் வேலை கள். ஒருவருக்கொருவர் சிண்டு முடிப்பதையோ, கூட்டத்தில் முடிச் சவிழ்த்து மூட்டையடிக்கும் தொழிலையோ நான் குறிக்கவில்லை. இவற் றைக் கண்டுபிடித்து ஒழிக்கவே நாம் சாரணரா யிருக்கிறோம். நாம் வாழ்க்கையின் கடினமாக முடிச்சுகளை அவிழ்த்து, விதாயகம் காண வும், ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகப் பின்னிவிடவும் சாரணரா னோம். பிறகு தடிக் கம்பைத் தூக்கினோம். யாரையும் அடிக்கவில்லை—

சுயராஜ்யம் என்றால் தடியாராதனை நடக்கிறதே அங்கே. அதைக் குறிக்கவில்லை. தடியரசை ஒழித்து அன்பினால் குடியரசை நாட்டுவது நமது வேலை. நாம் ஊருக்கு உதவிசெய்யவே கங்கணம் கட்டிக் கொண்டோம். நாம் நீரில் மூழ்கினவர்களைக் கரையேற்றப் பயின்றோம். அதேமாதிரி மடமையில் மூழ்கிய கோடானுகோடி ஜனங்களைக் கல்வி கொடுத்துக் கைதூக்கிவிடவேண்டும். நாம் தீ வீட்டை விட்டு ஆட்களைத் தூக்கிவரக் கற்றோம். வறுமையாகிய தீயில் நாடு வேகிறது. பல தொழில்களால் வறுமை தீர்த்து நம்மவரைக் காப்பாற்றவேண்டும். ஸ்கௌட் மூன்று விரல்களால் சலாம் வைக்கிறான். அது உனது நெற்றியில் முப்பட்டை நாமம் போடுவேன் என்பதன்று; கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் தேசத்திற்கும் உவப்ப நடப்பதுதான் அதன் பொருள். தேசமின்றி அரசன் இல்லை. சுதந்திரமின்றி தேசமில்லை. ஆதலால் தேச சேவை செய்தால், அதுவே அரச சேவையாகும். மனோவாக்கு காய சுத்தியுடன், பொதுநலம் புரிவதையும் அது குறிக்கும். விரல்களெல்லாம் ஒரே கையில் சேர்ந்திருக்கின்றன. அதேமாதிரி நமது பஞ்சேந்திரியங்களும் அந்தக்கரணத்தில் ஒன்றுபட்டு, தெய்வார்ப்பணமாக ஜனசேவை செய்யவேண்டும். இதுவே சாரணியத்தின் கருத்தாகும்.

சாரண இயக்கத்தின் வரலாறு உங்களுக்கெல்லாம் தெரியும். பேடன் பௌல் யார் என்பதும் தெரியும். நமது இந்தியா தனிக் கலையுடையது. நமது தேவைகள் பல. பேடன் பௌலின் இங்கிலாந்து சுதந்திர நாடு. நமது நாடு யூனியன் ஜாக்கிற்கு சலாம் வைக்கும் நிலையில் உள்ளது. நமக்கு மூளையிருந்தும் கல்வியில்லை. கையிருந்தும் தொழில் வளமில்லை. வீரமிருந்தும் போர்த்திறனில்லை. ஜனத்தொகையிருந்தும் ஒற்றுமையில்லை. முப்பது கோடிப் பேரும் நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்தது போல் சிதறிக்கிடக்கிறோம். இந்தியா இங்கிலாந்தின் நகலாயிருக்க முடியாது. நமக்கு கீதையும் குறளும் வழிகாட்டுகின்றன. நமக்கென ஓர் அத்யாத்மக் கலையுள்ளது. அதை அடிப்படையாகக் கொண்டு, நம் வாழ்க்கை அமைந்தது. அந்த அடிப்படையின் மேல் காலத்திற்கு ஏற்ற விஞ்ஞான ஆராய்ச்சி மாளிகையை நாம் கட்டவேண்டும். நன்மை, எதிலிருந்தாலும் கொள்ளுவோம். தீமையை ஒதுக்கித் தள்ளுவோம். "தயாராயிரு," என்பது சாரண வாக்கியம். நாம் கண் விழித்திருந்து நமது நாட்டு நன்மையே பேணத் தயாராயிருக்க வேண்டும். நமக்கு சிவாஜி, பிரதாபசிங்கன், ராஜ ராஜன் போன்ற வீரர் உதாரணம் உள்ளது. திலகர் காந்தி போன்ற வீரர் தியாகம் நம்மை தேச சேவைக்கு அழைக்கிறது. சாரணீயம் காலத்திற் கேற்ற இயக்கம். அதை நாம் இந்திய மயமாக்கி, தேச!சேவா சாதனமாக்குவோம். தேசமில்லாவிட்டால் கப்பலில்லா மாலுமி போல் ஆவோம். சும்மா யூனிபாரம் மாட்டிக் கொண்டு ஜம்பமாக நடக்கவோ, யூனியன் ஜாக்

திற்கு சலாம் போட்டதுடன் நமது கடமை தீர்ந்ததென்றோ நாம் சாரணியத்தை மேற்கொள்ளவில்லை. சாரணன் சட்டை பாகைகூட ஜனோபகாரத்திற்கே. சட்டையால் டோலிகட்டி நோயாளியைத் தூக்கிச் செல்லலாம். ஒருவனுக்குக் காயம பட்டு இரத்தம் வந்தாலும், தலை முண்டாசைக் கிழித்துக் காயம் கட்டத் தயாராயிருப்பவனே சாரணன். காலத்திற் கேற்ற தேச சேவை செய்ய எந்தச் சாரணனும் பின்வாங்கக் கூடாது. நாட்டில் ஒற்றுமை வளரும் முயற்சியை நாம் செய்யவேண்டும். இந்த முகாமில் பல சாதி மதத்தினர் ஒன்றுகக்கூடிக் குலாவி அன்புமயமாயிருந்தோம். பிரித்தாளும் தந்திரமோ, பழித்தாளும் கொடுமையோ இங்கேயில்லை. இப்படியே பொது வாழ்விலும் நாம் உழைப்பால் உண்டு, ஊருக்கு நல்லது செய்து, ஒற்றுமையாயிருக்க வேண்டும்.

சில நாட்கள் ஒரு சோலைப் பறவைகள் போல வாழ்ந்தோம். இனிப்பறவைகள் பல திசைகளுக்கும் பறந்தோடும். எல்லாரும் மூட்டை கட்டிக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓட்ட மெடுக்கத் தயாராக நிற்கின்றனர். ஆனால் நாம் ஒருவர் மனதை விட்டு ஒருவர் ஓட்டம் பிடிக்க மாட்டோம். மனச் சோலையில் எல்லாப் பறவைகளும் சேர்ந்து வாழ வேண்டும். இந்த முகாமை அன்பு ததும்ப நடத்திய மெண்டிஸ் தம்பதிகளை நாம் எப்படி மறக்க முடியும்? நாம் மெண்டிஸின் உருவை மறந்தாலும் ஹஹஹ என்று குதூகலமாகக் கிளம்பும் அவரது சிரிப்பை எப்படி மறக்க முடியும்? அவர் துணைவியின் இன்பப் புன்னகையையும் கிண்கிணிக் குரலையும் எப்படி மறப்போம்? சாரணத் தடி நமது கையில் உள்ள மட்டும் கடமையை மறவோம். இந்த ஊது உள்ள மட்டும் மனச்சாட்சியின் கட்டளையை மறவோம்...வந்தே மாதரம்! எல்லாரும் வாழ்க! எந்தாய் வாழ்க! (கரகோஷம்)

மெண்டிஸ் எங்களுக் கெல்லாம் மீண்டும் வந்தனம் கூறினர். உடனே புகைப் படம் பிடித்தோம், அதில் என்னை எல்லாருக்கும் மேலே ஏற்றி வைத்து, ஸ்கௌட் சலாம் போடச் சொன்னர் மெண்டிஸ். நான் அப்படியே புன்னகைத்து நின்றேன். படம் பிடித்ததும் சிற்றுண்டியருந்தி, எல்லாரும் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம். வண்டி வருமட்டும் நகைச்சுவைப் பேச்சுத்தான்......... ரயிலேறியதும் அவரவர் கவலை அவரவருக்கு......திருச்சிராப்பள்ளி நிலையத்தில் எல்லாரும் மீண்டும் கூடிப் பிரியா விடை கொண்டோம்.

111. அடக்கம் வந்தது

நாவடக்கம் போதாது; பிறர் சிரிக்க வேண்டும் என்றே நான் விகடம் பண்ணுவேன். கேலி கையாண்டி செய்வேன். பிறருக்குப் புனைப்பெயர் வைப்பேன். திண்ணை நிரம்ப மெத்தையும், மெத்தை நிரம்பத் தலையணையும் போட்டுப் புரண்ட இருவரை சேஷசயனம்

ஜோடிகள் என்றேன். அவர்களுக்கும் ஒரு தடியண்ணாவுக்கும் தலையணைச் சண்டை வந்தது. குண்டோதர மச்சான், இட்டலி வீரன், காப்பி கூஜா என்று கேலி செய்த நண்பர் எனக்கே பகைவரானார்; என் பிரசங்கம் சர்க்கார் விரோதம். எனக்குப் பத்திரம் தரக்கூடாது என்று சத்தமிட்டனர். விளையாட்டுக் கேலி வினையாய் முடிந்தது. நான் சிந்தித்தேன், இந்தப் பகைகள் வரக் காரணம் என்ன? எனது நாக்கல்லவா? நான் ஏன் பிறருக்குப் போலிப் பெயர் வைக்க வேண்டும்? "வருந்தாதே, வருந்தாதே" என்றது மனச்சாட்சி. நான் கேலி செய்த நண்பர் ஒவ்வொருவரிடமும் மன்னிப்புக் கேட்டேன். அவர்களும் மனமிளகி "அதிலென்ன? விளையாட்டுத்தானே..." என்றனர். சேஷயனம் ஜோடிகளிடம் வேமன பத்யங்கள் சொல்லி, மன்னிப்புக் கோரினேன். "பரவாலேதண்டீ..." என்று என் முதுகில் தட்டிக் கொடுத்தனர். அன்று ஒரு விரதம் பூண்டேன். விளையாட்டிற்குக் கூடப் பிறரை கேலி செய்வதில்லை, நையாண்டி செய்வதில்லை. நகைச் சுவையை இலக்கியமாக்கிப் பெயர் ஊர் குறிக்காமல் நீதியுரைப்பது என்ற விரதம் பூண்டேன். மனச்சாட்சி "பிறரைத் திருத்து முன் உன்னைத் திருத்திக் கொள்" என்றது. அன்று முதல் சளசளப் பேச்சை நிறுத்தினேன். பிறர் சொல்வதை கேட்டுச் சிந்தித்துப் பார்த்தே பதில் உரைப்பது. பதிலும் சுருக்கமாயிருக்கும். இதிலும் ஆபத்து வந்தது. சிலருக்கு நான் சளசளவென்று பேசிக் கொட்டவில்லை என்று கோபம்; மனச்சாட்சி உத்திர விட்டாலொழிய என் வாய் அசையாது. மௌனமே எனக்கு விருப்பம். என் வாழ்வில் முக்கால்வாசி நாட்களுக்கு மேல் முழு மௌன விரதமே கடைப்பிடித்திருக்கிறேன். தினம் இரண்டொரு மணி நேரமே பேச்சு. புண்ணிய நூல்களைப் பாராயணம் செய்வதும், கடவுளைப் பாடுவதுமே பெரும்பாலும் பேச்சாயிருக்கும். இந்த மௌனமும் அடக்கமும் இன்றி, நான் கொண்ட கலை விரதம் நிறைவேறியிராது. சாரண முகாம் எனக்குப் புகட்டிய இந்தப் பாடத்திற்கு நன்றி. இசை வசை இரண்டும் உலகில் கலந்தே வருகின்றன. நான் இரண்டையும் பாராட்டுவதில்லை. உள்ளே அந்தராத்மன் இட்ட கட்டளையைத்தான் உண்மை வீரன் போல் நிறைவேற்ற முனைவேன். என் வாழ்வில் எத்தனையோ ஏமாற்றங்கள், நயவஞ்சகரின் மோசடிகள் நடந்ததுண்டு. எத்தனையோ வரும் போகும், பலி கொடுக்க நேரிடும். நான் அன்புடனிருந்தாலும் தூற்றுவாருண்டு. எதிரே இச்சகம் பேசிப் பின்னே கொச்சைக் கேலி செய்வாருண்டு. சென்றதற்கு வருந்துவதில்லை. கலங்குவதில்லை. எதிர் செய்வதும் இல்லை. பொறுக்க முடியாத துயர்களை இறைவனிடம் பாடி முறையிடுவதுதான் எனக்குப் பரிகாரம். இன்றும் அந்த இறைவன் சந்நிதி முறையே எனக்கு ஆறுதல் அளித்து வருகிறது, இறைவன் ஏன் என்னைச் சாரணத் தலைவனாக்கினான்? பாருங்கள்.

112. காட்டுக்குடியில்

காட்டுப் புத்தூருக்கு வந்ததும் பள்ளிக்கூடத்திற்குப் போனேன், எல்லாம் பூட்டியிருந்தது. என் சட்டை துணிகளெல்லாம் உள்ளே அகப்பட்டுக்கொண்டன. ஸ்கௌட் உடையும் வேட்டி துண்டும் மட்டும் கைவசம் இருந்தன. ஓய்வு நாளாதலால், என் அருமை நண்பரும் மாணவரும் வேறு ஊர்களுக்குச் சென்றனர். நான் டுடுடு என்று தெருவில் ஊதினேன். ஓரே ஒரு மாணவன் ஓடி வந்தான். அவன் "தெருப்பையன்கள் எல்லாரும் ஸ்ரீராம சமுத்திரத்திற்கு சென்றிருக்கிறார்கள்" என்றான். "நாமும் செல்வோம், வா" என்று அவனை அழைத்துக்கொண்டு வயல்களூடு பாடிக்கொண்டே சென்றேன். சிவன் கோயில் துறையில் பெரிய கூட்டம். மகாலய அமாவாசை: எல்லாரும் சங்கல்பம் செய்து முழுகிப் பட்டு உடுத்திக் கொண்டு, தர்ப்பணம் செய்கிறார்கள். நான் ஸ்கௌட் உடையுடன் அங்கே நின்றேன். என்னை அறிந்த சில நண்பர் "ஹஹஹ இதென்ன சிப்பாய் வேஷம் அமாவாசை ஐயா..." என்றனர். "தர்ப்பணம் செய்துக் கொள்ளும்" என்று புரோகிதர் தருப்பையுடன் வந்து விட்டார். "அந்த விதி எனக்கின்னும் வரவில்லை; ஆத்மா சமர்ப்பணமே எனது தர்ப்பணம்" என்றேன். இதைக் கேட்டதும் "அவர் வேதாந்தி ஐயா. சதாசிவப்ரமமேந்திரானந்தர்...சுத்தானந்தர்" என்று அரட்டையடிக்கத் தொடங்கினர். நான் ஸ்கௌட் சட்டைகளை எனது மாணவனிடம் கழற்றி வீசிவிட்டு, கோவணம் கட்டிக்கொண்டு காவேரியில் இறங்கி நன்றாக நீந்திக் குளித்தேன். "சங்கல்பம் சொல்லிக்காமல் இவர் சிறு பிள்ளைத்தனமாக நீச்சடித்து விளையாடுகிறாரே" என்றார் ஒருவர். இன்னொருவர் "இவருக்குக் கலியாணமானதோ" என்றார். "கரையேறட்டும் பூணூலைப் பார்ப்போம்" என்றார் ஒருவர். நான் நீந்திக் கரையேறினேன்' சட்டென்று அந்தப் பேர்வழி "ஒற்றை பூணூலா, இரட்டைப் பூணூலா காட்டும்" என்று, என் உடம்பை நோக்கினார். நான் "ஒன்றுமில்லை, இரண்டுமில்லை, மூன்றுமில்லை; எல்லாம் சுன்னம், சூனியம், குண்டலம், விண்டலம்" என்று பரிபாஷை பேசினேன். "ஐயையோ உம்மை பிராமணாள் என்றல்லவா நினைத்தோம் பூணூலைக் காணோமே! என்று சிலர் திகைத்தனர். ஒருவர் 'பூணூல் நீந்தும்போது போயிருக்கும்' என்றார், "ஆம் ஐயா நான் தியான வெள்ளத்தில் நீந்தும்போது பூணூல் போய் விட்டது" என்றேன்.

அப்போது எனது மாணவன் ஓடி வந்து "அவர் சந்யாசி; அவருச்குப் பூணூல் எதற்கு?" என்றான். "சந்யாசியா...கலியாணம் ஆனதா?...சதாசிவர்போல் மாமியார் வீட்டுடன் கோவித்துக்கொண்டு சவாரி விட்டீரா" என்று இருவர் கிண்டல் செய்தனர். மற்றொருவர் "இதென்ன கண்ணூருவி...சொசொசொ இந்த வயசில், அதிபாலியத்

தில், இப்படி அழகான வாலிபன், படித்து உத்தியோகம் பார்ப்பவன், சம்பாதிப்பவன் துறவாம் இறவாம்...ஐயா. உமக்கு நான் பெண்ணைத் தீர்மானிக்கிறேன்: ஜோராக இரண்டாகி, மூன்றாகி, நான்காகி, ஐந்தாகி வாழும். சாப்பாட்டுக்குத் திண்டாடாதேயும்'' என்றார். "அப்படிச் சொல்லுங்கள் ஐயா; இந்த உபாத்தியார் துடுக்கை அடக்க ஒருத்தியைக் கட்டிப் போடவேண்டும்.'' என்றார் ஒரு நண்பர். "இவர் ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை. ஞானப் பைத்தியமோ அல்லது ஏதாவது...'' என்றொரு வாதம் கிளம்பியது. நான் "சுவாமிகளே இந்த வம்படி எதற்கு? மஹாலய அமாவாசை. காவிரியாடிக் கடவுளை நினையுங்கள்'' என்று பேசாமல் கரையிலிருந்த கடம்ப மரத்தடியில் துண்டை விரித்து, தியானத்தில் அமர்ந்தேன். "இனி வழி என்ன?'' என்று உள்ளே வினவிக்கொண்டிருந்தேன். கரையில் பலர் பலவாறு பேசிக்கொண்டிருந்தபோது "அட சட் சும்மா இருங்கோ... பெரியவர்'' என்றொரு சத்தம் கேட்டது. நான் தியானத்திலிருந்து விழித்தபொழுது என் எதிரே ஒரு துறவி நின்றார். அவருடன் ஒரு முதலியார். அவர் சிவநெறிச் செல்வர். என்னைக் கண்டதும் "அடிகள் அமுதுண்பது எங்கே?'' என்று வினவினர். அவர் கேட்டபோது எனக்கு நல்ல பசி. நேற்றிரவு வேலூரில் உண்டதுதான்; பிறகு நீர் கூட அருந்தவில்லை. இதைத் துறவியும் அறிந்துகொண்டு, "சாமி எழுந்து வரட்டும்'' என்றார். முதலியாரிடம் ஏதோ பேசினர். முதலியார் முன்னே ஓடினர். இருக்க இடமில்லையே என்று சிறிது நினைத்த எனக்கு 'இதோ பார் இன்பவீடு' என்று இறைவன் அந்தக் காட்டுக் குடிலைக் காட்டினன்.

காவிரிக்கரையில் பெரிய காடு; நீண்ட மாமரங்களும் புளியமரங்களும் தென்னையும் அடர்ந்தது அதில் நரிகள் ஊளையிடும்; பாம்புகள் படமெடுத்தாடும்; குயில்கள் கொஞ்சும்; கிளிகள் பேசும்; இரண்டு கால் நரிகளின் நயவஞ்சனை இன்னும் அடிவைக்காத மாசற்ற இயற்கை மாளிகை அதுவே. எதிரே ஆற்றுமணல்; இங்குமங்கும் பாறைகள்.

என்னை அழைத்துச்சென்ற துறவி மெய்யடியார். அவரை நான் சிவம் என்று அழைத்தேன். "இந்தக் கட்டைக்கு ஊரேது பேரேது, உறவேது, வீடேது. இருக்குமட்டும் இறைவனிச்சை என்றிருப்பதுதான் இயற்கை'' என்று அவரும் சொன்னார். சிவம் உடலைச் சவம் என்பார். அதில் விளையாடும் சித்திற்கே எல்லா மதிப்பும் தருவார். துறவிகள் கூட்டமே எனக்குப் பேரின்பம். சிவன் மலையாளி: தமிழ் பேசுவார்; சித்த வைத்திய சிகாமணி; அரிய மூலிகைகளை அறிவார்; சிவமுருகன் பெயரால் நோய் தீர்ப்பார். ஓம் சிவஷண்முகாய நம: என்ற மந்திரத்தைக் கோடிக்கணக்காகச் செய்து பிரணவ சித்தி பெற்றவர். அவர் நாடெல்லாம் சுற்றித் திரிந்து ஞானம் தேடியவர். சுமார் அறுபது வயது முதியார்; முகக் களையும் அகத்தெளிவும் உடையார், படிப்

பில்லை, கேள்வியுண்டு; அறிவைவிட அனுபவம் அதிகம். வெளியே செல்லும்போது துண்டணிவார்; மற்றப்போது கோவணமே அணிவார். பரிசுத்தமான ஆள். தாமே ஒரு வட்டச் சுவர் எடுத்து, ஓலைக் கூரை வேய்ந்து, குடிலமைத்துத் தனிமையில் வசித்தார். அவர் குடிலுள் ஒரு முருகன் படம், வேல், கப்பறை இரண்டு மூன்று சட்டிகள்—இவையே உண்டு. இரண்டு கோவணங்கள், இரண்டு துண்டுகள், குளிருக்கு ஒரு போர்வை—இவையே அவர் ஆடை யணிகள்.

முதலில் 'சாமி' என்றவர் பிறகு 'தம்பி' என்றார். அப்படியே இருக்கட்டும் என்றேன். "தம்பி நல்ல பழம்; இப்படி உட்காரட்டும்;" என்று அமர்த்தி அவர் முருகனை வணங்கத் தொடங்கினர். குடில் கதவை அடைத்து, நிம்மதியாக மனங்குவிந்து தியானித்த பிறகு மலக் தூவி, தூபம் காட்டியபோது முதலியார் தேங்காய் பழமும் அரிசி பருப்பும் கொணர்ந்தார். சிவம் முருகனுக்குத் தேங்காய் பழம் நிவேதித்து "தம்பி சாப்பிடுமே" என்றார். "சிவம் சாப்பிடட்டும் முதலில்" என்றேன். 'இந்தக்கட்டை பொங்கித் தின்னும்' என்றார். நானே 'அடியாருக்கு அமுதாக்குவேன்' என்றெழுந்தேன். என் சாரண அனுபவத்தைக்கொண்டு வெளியே மறைவுகட்டி, மூன்று கற்களை அடுப்பாக்கி, சுள்ளிகள் பொருக்கித் திமூட்டி, சட்டிகளைத் தேய்த்து காவிரி நீரை வடிகட்டிவந்து கொதிக்கவைத்தேன். பிறகு அரிசி களைந்து போட்டேன். அதிலேயே பாசிப்பருப்பையும் கழுவிப் போட்டேன். புளியமரத்தில் காய் பறித்து கரைத்துப் புளி விட்டேன். உப்புப் போட்டேன். முதலியார் "கத்திரிக்காய் இருக்கிறது" என்றார். அதையும் அப்படியே பாதியாய் அறுத்துக் கொதிக்கிற பொங்கலில் போட்டேன். சிவம் நான் செய்வதெல்லாம் பார்த்துக்கொண்டே சுற்றிடத்தைச் சுத்தம் செய்தார். பொங்கல் ஆனதும் சிவம் அதை அப்படியே முருகனுக்கு நிவேதித்து வந்து, ஒரு தையல் இலை பரப்பி தம்பியும் சாப்பிடவேண்டும்" என்றார். இருவரும் உண்டோம். பொங்கல் நன்றாக அமைந்தது. "ஒரே சட்டியில் எல்லாம் ஆனதே" என்று சிவம் பாராட்டினர். அன்றுமுதல் நான் ஒரேசட்டியில் சமையல் செய்தேன்.

உண்டானதும் சிவம் பச்சிலை மூலிகைகளைக் கொண்டு, முதலி' யாருடன் ஏதோ மருந்துகள் செய்தார். நான்கு மணிக்கு "தம்பி இங்கே இருக்கட்டும்" என்று அவர் முதலியாருடன் வைத்தியம் செய்யக் கிளப்பினர்.

நான் அவர் சட்டிகளைக் கழுவி, அறையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்து, சாம்பிராணிப் புகைபோட்டு, வெளியே நிஷ்டையில் அமர்ந்தேன்.

113. காட்சிப் படலம்

மாலை ஐந்தரை; வழக்கப்படி காவிரியில் நீராடி, அழகான பாறை ஒன்றிலமர்ந்து, மேற்கே செந்நிறமாக விடை பெற்றுச் செல்லும் சூரியனைப் பார்த்தேன். தியான விம்மதியில், ஓர் பேரின்ப அலை பொங்கி எழுந்தது. என் உயிர்ப் படகு அதில் மிதந்துகொண்டே ஓர் கனவுலகை நாடியது. கனவுக் காட்சிகள் படலம் படலமாக எழுந்தன. திடீரென ஊழி வெள்ளம். அது பழைய துன்பஉலகை அள்ளி விழுங்கி வீறிடுகிறது பரமாத்மன் துரியாதீத சாந்தியில் லயித்துவிடுகிறான் அவனுள் ஐம்பூதங்களும் அந்தக்கரண சக்திகளும் ஐந்தொழில் திறமைகளும் உறங்குகின்றன. எங்கும் மோனப்பாழ்; திடீரென்று அருட்சக்தி விழித்தெழுந்து பாம்பொருளை எழுப்புகிறது. மறுபடி புதிய உலகைப் படைக்கத் தூண்டுகிறது. இறைவன் ஓங்கார யாழை மீட்டச் செய்கிறான். ஓமொலியால் அணுக்கள் சுழல்கின்றன; அந்தச் சுயற்சியால் வான், வளி, தீ, நீர், மண் எல்லாம் எழுகின்றன.

ஐம்பூதச் சேர்க்கையால் இயற்கை வடிவங்கள் தோன்றுகின்றன. பிறகு புல் பூண்டு, செடி கொடி, மரம், புழு பூச்சி பறவை, விலங்குகள் தோன்றுகின்றன. இறுதியில் மானிடம் தோன்றுகிறது. ஆண்மையும் பெண்மையும் தோன்றுகின்றன. ஆண் சிவம், பெண் சக்திமயமாகி, மரபை வளர்க்கின்றன். புதிய உலகும் புதுமரபும் புதுவாழ்க்கை வாழ்கின்றன. இந்த வாழ்க்கையைக் கெடுக்க, குணதொந்த விகாரங்கள் கிளம்பி, அசுர நாடகமாடுகின்றன, நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம்; அறமும் நலமும் புகலின்றித் தவிக்கும்போது, ஒரு புனிதன் விளங்குகிறான். அவனுள் பாரத சக்தி பொழிகிறது, அந்தச் சக்தியால் அவன் அசுர பலன்களை அமைதியாக வென்று, உலகில் புண்ணிய விண்ணரசையும் புதியதெய்வ வாழ்வையும் நிலைநாட்டுகிறான். இப்படிப் படலம் படலமாகக் காட்சிகள் என் உள்ளக்கனவில் எழுந்துகொண்டேயிருந்தன, இந்தக் காட்சிப் படலங்களே பாரதசக்திக்கு வழி காட்டின.

மணி எட்டு; ஸ்ரீ ராமசமுத்திரம் காவிரியில் சந்திரபிம்பம் நீந்தித் திளைக்கிறது. பொன்னி வெள்ளம் வெள்ளியலைகளை வீசி வீசி நடனமாடுகிறது. அதன் பாட்டு பாரதசக்தி காவியத்தைத் தூண்டுகிறது. ஆனால் இன்னும் மகாகாவியம் உதிக்கவில்லை. கதைப்படலமே திடீர் திடீரென்று மனக்கனவில் எழுந்துகொண்டிருக்கிறது. என் பின்னால் சிவம் வந்து நின்று "தம்பி சாப்பிடட்டும்" என்று தேங்காய், பழம் தந்தார். அவர் ஒரே வேளைதான் உண்பது. நான் தேங்காயைக் கல்லில் உடைத்துச் சிறிது கனியுடன் உண்டு, காவிரி நீர் அருந்தினேன். அதற்குள் அவர் குடிலுக்குச் சென்று, முருகனை வழிபட்டு, சிப்பளாக்கட்டையைத் தட்டிக் கொண்டே பரவசமாக வந்தார்,

குதம்பைச் சித்தர் பாடலைப் பாடி ஆடினார். 'தம்பி பாடட்டும்' என்றார்...பாடினேன்.

வெள்ளி நிலாவினிலே—ஒரு
விந்தைக் கனவினிலே—என்
உள்ளப் படகோட—அதிலோர்
ஒளி யெழுந்ததம்மா.

பாரதசக்தி யொளி—அது
பண்ணுருக் கொண்டுநிதம்
நாரத யாழிசைபோல்—எனது
நாடியில் கூடுதையா.

காலத்திரை தூக்கி—எனது
காவிய நாயகியே
ஞாலத் திருவரங்கில்—நவரச
நாடகம் ஆடுகிறாள்.

உருகும் வெள்ளியைப்போல்—இந்த
ஓங்காரக் காவிரிபோல்
பெருகும் கவியருள்வாய்—சரணம்
பேரின்ப நாயகனே.

இந்தப்பாட்டைத் தொடர்ந்து, பாரதசக்தியைப் பற்றிப் பேச்சு நடந்தது. எனக்கு எழுந்தமட்டில் கதையைச் சொன்னேன், போக சித்தர் சத்தியனை இளமை தந்து தானவத்திற்கு விமானத்தில் கொண்டு செல்லும் காட்சியைக் கேட்டதும், சிவம் மகிழ்ச்சி யடைந்தார். இளமையும் வனப்பும், சத்துரு ஜயமும் தரும் சில குளிகை முறைகளைச் சொன்னார். போகர் கதைப்படலம் அங்கே உதித்தது. சாமியார் "தம்பி பாடு, காவியம் பாடு; அதிலும் பற்று வைக்காதே, வற்புறுத்திப் பாடாதே......அருளெழுச்சிக்குக் காத்திரு; வந்ததை எழுதிவை...என்னையும் நீரும், புளியும் ஓடும், கனியும் வித்தும் போல் இரு. பரமாத்மனையே பற்று; வேறு பற்றை விடு. அவன் கவிதை தந்தால் பாடு; பாடியதை உலக நாதனுக்கே நிவேதி......" என்றார்.

பிறகு அவர் பாம்பாட்டிச் சித்தர் பாடலை ஆவேசமாகப் பாடிக் குதித்தார். பிறகு அரை மணி நேரம் தியானம்; பிறகு குடிலுக்குச் சென்றோம். அவர் ஓலைப்பாய் விரித்துப் படுத்தார், எனக்கொரு பாய் தந்தார். நான் வெளியே புளியமரத்தடியில் படுத்தேன். பத்து நிமிஷம் கண்ணயர்ந்தேன். சரசரச் சத்தம்; குடுகுடுச் சத்தம், பார்த்தேன், கரு நாகம் எலிகளைத் துரத்தியது. எலிகள் குடிலுக்குள்

சடுகுடுபாய்ந்தன. நாகம் உள்ளே ஓடியது. நான் "சாமி நாகம் நாகம்" என்று அலறினேன். அவர் எழுந்து "சும்மா இரு தம்பி, நாகப்பன் அப்படித்தான் ஓடி விளையாடுவான். ஏ நாகப்பா தம்பி பக்கம் போகாதே" என்று பாம்பை வாலால் தூக்கித்தடவிக் கொடுத்து ஒரு புதரில் கொண்டுபோய் விட்டு வந்து படுத்தார். பத்து நிமிஷம் ஆனது. வெருகுப் பூனை ஒன்று எலிகளைத் துரத்தியது. சாமியார் எழுந்து விளக்கேற்றினர். பூனை ஓடிப்போனது எலிகள் மட்டும் ஓடி விளையாடின. எனக்கு அமைதியில்லை. நான் ஆற்று மணற்பாறைக்கு வந்து சாய்ந்த வாக்கில் தியானித்தேன். அப்போது தான் தானவ காண்டக்கதை என்னுள் எழுந்தது.

இப்படியே சாமியாரிடம் இரண்டு மூன்று நாட்கள் தங்கிய பிறகு, காட்டுப்புத்தூருக்கு வந்தேன். நண்பரும் வந்து சேர்ந்தனர். பாரத சக்தி முயற்சிக்குமுன் பல தொண்டுகள் எனது வாழ்வைப் பங்கு கொண்டன.

114 வீர வாலிபர்கள்!

பள்ளிக்கூடம் திறந்தது. பாடங்கள் பழம் பாடங்களே. மாணவர்களுக்குப் புதிய உணர்ச்சி புகட்ட என் உள்ளம் துடித்தது. மாணவர் சங்கம் நாட்டி வாரக்கூட்டங்கள் நடத்தினேம். கூட்டங்களுக்கு உள்ளூர் அன்பரையும் அழைத்தோம், முதலில் ஆங்கிலத்தில், பிறகு நமது தாய் மொழியில் சொற்பொழிவுகள் நடந்தன. மின்சார வேகத்தில் ஆங்கிலம் பேசும் நாக்கு தமிழ்பேசப் பட்டபாடு சொல்லி முடியாது; திக்குவாயனுக்குத் திருத்தாண்டகம் கற்பிப்பது போலத் தான். எப்படியோ மெல்லமெல்லத் தமிழுக்கும் ஆக்கம் அளித்தோம். சன்மார்க்கம், பிரமசரியம், நல்லகல்வி, கற்றபயன், தேசபக்தி, உடலுறுதி, மாணவர் கடமை, வாழ்க்கை விளக்கம் முதலிவை குறித்து பேசிய பிறகு, நான் ஒருநாள் வாலிபர்களைத் தனியே கூட்டி "நீங்களெல்லாம் நாட்டுக்கு நல்ல வீராக வேண்டும். அதற்குச் சாரணப்பயிற்சி பெறவேண்டும்" என்று விளக்கினேன். பன்னிரண்டு பேர் பயிற்சிக்கு முன் வந்தனர். நான் தலைமையாசிரியரிடம் 'ஒரு பொதுக் கூட்டம் போட்டுச் சாரணப் பயிற்சி தொடங்கலாம்' என்றேன். சிலருக்கு இந்தப் பயிற்சி பிடிக்கவில்லை. சிலர் பெற்றோர் களையும் கிளப்பிவிட்டு எதிர்த்தனர். ஆனல் தலைவர் நான் விரும்பிய படி கூட்டம் கூட்டித் தலைமையும் வகித்தார். அன்று நான் இரண்டு மணிநேரம் பேசினேன்—ஆங்கிலத்தில்தான். அதன் சுருக்கம்.

தமிழ்நாட்டு மாணிக்கங்காள், வீர வாலிபர்காள்!

நீங்களே இனிவரும் தமிழகம். நீங்களே வருங்கால இந்தியா. நீங்களே புதுவுலக மலர்கள். உங்கள் இளமுகத்தில் பாரதசக்தி பொலிகிறது. உங்கள் உள்ளத்தில் சிவாஜியும், மஜினியும், எடிஸனும்,

கம்பனும், திலகரும், காந்தியும் பொலிகின்றனர். நீங்கள் சக்தியின் ஊற்றுக்கள், புலமையின் நிலயம். உங்கள் சக்திகளைத் தூண்டி. நாட்டிற்குப் பயனுக்கவேண்டும். அதுதான் உண்மைக் கல்வியாகும். உள்ளப் புலமையைத் கல்லியெடுத்து உலகிற்குப் பயன்பட விளக்கு தலே கல்வியாகும். நீங்களே நாட்டின் வருங்காலச் சிற்பிகள். நிகழ் காலத்தில் நீங்கள் உங்கள் வாழ்க்கையை தெய்வச்சிற்ப மாக்கவேண் டும். அதற்கேற்ற பயிற்சிகளைப் பெற ஆவல் கொள்ளுங்கள்!

நாடு வீர வாலிபரை வேண்டுகிறது. உடலுக்கும் உலகுக்கும் வீட்டிற்கும் நாட்டிற்கும் நீங்கள் உரிய கடமை செய்து வாழவேண்டும். அதற்குத் தக்க பயிற்சி முறையை நான் வகுத்திருக்கிறேன். அதை உங்களுக்குத் தர ஆவல்கொண்டிருக்கிறேன். முதலில் சாரணப் பயிற்சி.

1908ம் ஆண்டில் பேடன் பௌல், லண்டனில் சாரண இயக்கத் தைக் கண்டார். அவர் போர்வீரர்; இந்தியாவிலும் ஆப்பிரிக்காவி லும் தொண்டுசெய்து அனுபவம் பெற்றவர். மலைவாசிகளின் வாழ் வையும், ஆப்பிரிக்க காட்டுவாசிகளின் வாழ்வையும் ஆராய்ந்தவர். அவர் பயனுள்ள பல வீரப் பயிற்சிகளைக் கண்டுபிடித்தார். சாரணனு யிருப்பதை உலக வாலிபர் தனிப்பெருமையாகக் கருதுகிறார்கள். நீங்க ளும் சாரணப்பயிற்சி பெறவேண்டும்.

வாய்மை, தூய்மை, நேர்மை, மனமகிழ்வு, பொதுநலம், அன்பு, அருள், வீரம், தெய்வபக்தி, தேசபக்தி ஆகியவை சாரணர் போற்றும் பத்துக் கொள்கைகள். இவையே நமது சன்மார்க்கம். இந்தக் கொள் கைகளின் சாதனமே சாரணீயம். சாரணன் கடவுளை நம்புகிறான். மனச்சாட்சியையே தைரியமாகப்பின்பற்றி நடக்கிறான். சுயநலத்தைத் துறந்து பொதுநலமே புரிகிறான். ஊருக்கு உதவியாகவே வாழ்கிறான். தன்னைப்போலப் பிறரை மதிக்கிறான். பிறர் இன்னலைத் தீர்க்கத் தீயிலும் பாய்கிறான். பெரிய கூட்டங்களை ஒழுங்கு செய்கிறான். காயப் பட்டவர்களுக்கு நோய் தீர்க்கிறான். ஊரைக் காக்கிறான். திருடரைக் கண்டுபிடிக்கிறான். காணுமல்போன பொருளைத் தேடிக்கொடுக் கிறான். நீரில் மூழ்கினவனைக் கரையேற்றிவிடுகிறான். சாரணன் ஏதாயினும் ஒரு பரோபகாரம் செய்தே உண்பான். அவன் உலக நன்மைக்கே உயிர்க்கிறான். சாரணன் சும்மா கால்சராய் சட்டை முண்டாசுகள் அணிந்து ஜோர்நடை போடும் இடம்பாசாரியல்லன். சாரணன் தடியும் உடையும் சமயோபகாரிகளாகும். தடியால் சார ணன் வழியில் கிடக்கும் முள், கண்ணாடிச்சில்களை அப்புறப்படுத்து வான். முக்காலி கட்டி முண்டாசைப் போர்த்துக் கூடாரம் அமைப் பான். டோலிகட்டி நோயாளியைத் தூக்கிச் செல்வான். போரில் சாரணன் செய்யும் உதவி அளப்பரிது. கொடியால் பேசிச் செய்தி யறிவித்தல், இரகசியச் செய்தியறிவித்தல், இரகசியச் செய்தி கொண்டு செல்லல், உணவளித்தல், முதல் சிகிச்சை செய்தல்; இப்படி எத்த

லையோ வகையாக உண்மைச் சாரணர் உலகுக்கு உதவியாக வாழ்கிறார்கள். நீங்களும் அப்படி வாழவேண்டும் அல்லவா?

இங்கே நாம் காணும் சாரணீயம் லண்டன் சரக்கன்று. நான் உங்களை யூனியன் ஜாக் வணக்கம் செய்யச் செல்லமாட்டேன். நமது நாட்டுக்கொடியையே மதிக்கச் செய்வேன். நாட்டுப்பணியே நம் குறிப்பு. சுதந்தர இந்தியாவில் சுதந்திரமாக வாழ்வதே நமது முயற்சி. தெய்வம், தேசம், மனச்சாட்சி இம் மூன்றையும் மதித்தே நாம் நடக்க வேண்டும். கீதையும் குறளும் நம் வேதம். திலகரும் காந்தியும் நம் ஆதர்ச புருஷர். வந்தேமாதரம், எந்தாய் வாழ்க என்பதே நமது மந்திரம். தேசசேவையே நமது பயிற்சி. சிலர் சாரணீயம் படிப்பைக் கெடுக்கும் என்கின்றனர். அது பொய். சாரணீயம் கல்வியை வளர்க்கும். அதுவே ஒரு கல்வி. சாரணர் நாட்டும் நீதிமன்றம், மாணவர் ஒழுங்காகப் படிக்க, பாடங்களைக் கவனிக்க நல்வழி நடக்கத் தூண்டும். வெறும் புத்தகப் பூச்சிகளாக இராமல், உலகறிந்து மான மாகத் தொழில்செய்து பிழைக்கச் சாரணீயம் வழிகாட்டும். சாரணர் ஆங்கிலம், தமிழ், இந்தி, கணிதம், சரித்திரம் பூகோளம், பௌதிகம், ரசாயனம் முதலிய பாடங்களைக் கற்பதுடன், ஓவியம், நூற்பு, நெசவு, பின்னல், பானை பொத்தான் செய்தல், பைண்டிங் முதலிய பல தொழில்களைக் கற்பார்கள். நேரத்தைப் பொன்னென மதித்து, ஒழுக்கத்தை உயிரென மதித்து, பொதுநலமே வாழ்வென மதித்தொழுகும் வீர வாலிபர் சாரணர். அத்தகைய தமிழ்ச் சாரணராயிருக்க உங்களுக்கு விருப்பமா? விரும்புவோர் நாளை ஐந்து மணிக்கு விளையாட்டு மைதானத்தில் வந்துசேருங்கள். பயிற்சி தொடங்குவோம். பயன் பெறுவோம். வீரராவோம். வாழ்வில் வெற்றிமேல் வெற்றி பெறுவோம்...எந்தாய் வாழ்க!''

“சாரணப்பயிற்சி நல்லதுதான். பாரதியார் சொன்னபடி செய்யுங்கள். அது உங்களுக்குப் புதிய உணர்ச்சி தரும், கலாசாலைக்கும் புகழ் தரும்'' என்றார் தலைவர். மாணவர் ஆமோதித்தனர். சில ஆசிரியர் எதிர்த்தனர். எதிர்ப்பில்லாத காரியம் நம்மிடையே ஏது?

115. சாரணப்படை

பத்துலட்சம்பேர் கைதட்ட மேடைப் புகழ்பெறவேண்டுமா? அல்லது பத்து வாலிபரை வீரராக்கும் மகிழ்ச்சி வேண்டுமா? என்று கேட்டால், பின்னதே வேண்டும் என்பேன். எனக்கு நமது நாட்டு மாணவரிடம் உயிர், இளம் பொலிவுள்ள முகத்தில் இந்தியா பளிச்சிடுகிறது. என் உள்ளக் கனிவுகளையெல்லாம் அளந்து கொட்டி, மாணவரை தேசபக்தராகவேண்டும் என்பது என் ஆர்வம். வகுப்புப் பாடங்களைவிட வீரப்பயிற்சியையே நான் அதிகமாகக் கவனித்தேன். என் சாரண ஊதியைக் கேட்டதும், பத்துப்பதினைந்து மாணவர் ஓடி-

வருவார்கள். ஊரில் எங்கே எந்த நேரம் எனது சேவை வேண்டுமானாலும் பாய்ந்து சென்றேன். எங்கே எங்கே என்று தொண்டுகளைத் தேடிச் செல்வது என் இயற்கையானது. அதற்காக எப்போதும் என்னுடன் அன்புத் தொண்டர் இருந்தனர். இவர்கள் எனக்காக உயிர் தரவும் துணிந்தனர். நான் என்பது பொதுநல உள்ளமே. ஏராளமான எதிர்ப்புகளும் பொறுமைப் புயல்களும் சாபங்களும், வசைகளும் என்னைச் சூழ்ந்தன.

இடையிடையே சில வாழ்த் தொலிகளும் கேட்டன. குளிர் வாடைக்கு ஒரு சிறு போர்வை போதுமல்லவா? இடுப்பொடியப் பாடு பட்டவனுக்கு ஒரு வாய்க்கூழ் மகிழ்ச்சியளிக்குமல்லவா? கொட்டும் மழைக்குக் குடை போதுமே,

பதினெட்டு மாணவர் என் அழைப்பைக்கேட்டு வந்தனர். அத்தனை பேரும் உண்மையான தொண்டர்கள். அவர்களைக்கொண்டு மூன்று பெட்ரோல்கள் வகுத்தேன். அவருள் ஆறுபேர்கள் என்னுடனேயே எப்போதும் இருந்தனர். காலையில் கபாத்தும் தேகப்பயிற்சியும் தோட்டவேலையும்; மாலையில் நல்ல விளையாட்டும், பிறகு நாட்டன்பு வளரும் பேச்சும் நடந்தன. நான் மறவருடன் பழகி, தமிழர் படையின் அந்தக்கால அணிவகுப்புக்களையும் ஆணைக்குறிகளையும் கற்றிருந்தேன்; முதலாவது உலகப்போரின்போது, முதற்சிகிச்சைப் பரீட்சையுடன் ஐடிஎப்கலையும் கற்றிருந்தேன். ஆதலால் நான் புதிய ஆடல்கள் மூலம் வீரப்பயிற்சி தந்ததுடன், தமிழிலேயே கட்டளைச் சொற்களையும் கையாண்டேன். ஆங்கிலமே கலக்கவில்லை, கொடி, தந்திகளுக்கு டட் டாட் (DOT DASH) முறையில் குறிகள் கோத்து தமிழிலேயே அறியச் செய்தேன். யூனியன் ஜாக்கிகுற்குப் பதில் சுதேசக் கொடி நாட்டி தேச வாழ்த்துப் பாடச் செய்தேன். ஆடல்களிலும் தேசபக்தியையே முதன்மையாக்கினேன். உதாரணமாக பிரதாப சிங்கன் கோமல்மீரமலையில் பில்லர் படைதிரட்டி, சுதந்தரப் போர் புரிந்தது; குருகோவிந்தன் ஆனந்தக் கோட்டையிலிருந்து போர் நடத்தியது; சிவாஜி டில்லி சிறையிலிருந்து விடுதலை யடைந்தது முதலிய சரித்திர சம்பந்தமான பல கதைகளை விளையாட்டில் புகுத்தினேன், மாணவரை அடிக்கடி பல கிராமங்களுக்கு அழைத்துச் சென்று, நாட்டு நிலையை விளக்கினேன். திலகர், காந்தி, சிதம்பரம்பிள்ளை, பாரதியார், ஐயர் போன்ற தேசபக்தர்கள் வரலாறுகளை அவர்களுக்குச் சொன்னேன். நாங்கள் செல்லுமிடங்களில், நாங்களே முகாம் அமைத்து சமைத்து, சாதிமத பேதமில்லாமல் கலந்துண்டோம். அங்கங்கே சுகாதாரம், கல்வி, தொழில், மதுவிலக்கு, சமுதாய ஒற்றுமை பற்றிச் சொற்பொழிவுகளும், சம்பாஷணைகளும் நடந்தன, மாணவர் புதிய உணர்ச்சி பெற்றனர். தேசாவேசங் கொண்டு என்னைப் பின்பற்றினர். ஆனால் சில முதியோர்களே அஞ்சி நடுங்கி, என்னைத் தூற்றி மாணவரையும் மிரட்டினர். அதிகாரிகளும் என்னை ஆதரிக்க

வில்லை. ஆதலால் எனது சாரண முயற்சி கலாசாலையில் வெற்றி பெற வில்லை. என்றாலும் என்னுடன் எப்போதும் இருந்த மாணவ வீரர், என் உள்ளத்துடிப்பை அறிந்து போற்றினர். அவர்களைக் கொண்டு என்னால் இயன்ற பொதுநலம் புரிந்தேன். மெண்டிஸ் அவர்றை அறிந்து அடிக்கடி வெகுமானப்பத்திரம் அளித்து என்னை ஊக்கினர்.

ஒரு நாள் ஒரு தோட்டக்கிணற்றிற்கு நான் குளிக்கச் சென்றேன். அது நடைக்கிணறு. அதில் ஓர் ஏழைப் பையன் விழுந்து திணறிக் கொண்டிருந்தான். சட்டென்று நான் இறங்கி நீந்தி அவன் தோளைப் பிடித்துத் தூக்கிக் கரையேற்றினேன். தாயார் பையனைத் தேடிக் கொண்டு வந்தாள். செய்தியைச் சொல்லிப் பையனை ஒப்பித்தேன்.

ஒரு நாள் இரண்டு வீடுகளுக்குச் சண்டை வந்து, பகைவன் எதிரி வீட்டிற்கு இரவில் தீ வைத்தான். புகையைக் கண்டு நான் ஓடினேன். குடியானவர்களைக் கூவினேன். தடிகொண்டு கூரையைப் புடைத்துத் தீயைச் சிதறடித்தேன். வாளிகளில் தண்ணீர் கொண்டுவந்து கொட்டினேன். நல்ல வேளையாகச் சேதமில்லாமல் தீ யணைந்தது. பிறகு இரண்டு வீடுகளையும் சமாதானம் செய்து வந்தேன். அப்போது "அப்படித் தான்டா செய்வேன் நீ யார்ரு கேட்பது? நான் ருசா மவண்டா" என்றொரு பேர்வழி வெறியாட்டமாடினான். "இவருதானையா இப்படிச் செய்தது. குடிகாரப்பேய்" என்றொரு கிழவி முறையிட்டாள். அன்று முதல் என் மனம் மதுவிலக்குத்தொண்டில் ஈடுபட்டது. அதன் விபரம் பின் வரும்.

இப்படிப் பல தொண்டுகளைச் செய்து எனக்குப் புதிய தொண்டுணர்ச்சி வளர்ந்தது. கவிதை மட்டும் போதாது...பொது நலமும் வேண்டும்; அதையும் ஆத்ம சுத்திக்காகச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டேன், எனது சாரண இயக்கம் பள்ளிக்கூடத்தில் நிறைவேறவில்லையே யொழிய எனது ஊதுக்கு நல்ல மதிப்பிருந்தது. நான் நள்ளிரவில் எத்தெருவில் ஊதினாலும், தடதடவென்று மாணவர் வந்து கட்டளையைச் செய்வர். இதை இன்ஸ்பெக்டர் டீ கே. வேங்கடராமையர் கூட அறிந்திருந்தார்.

அவர் மறு ஆண்டும் வந்தார். "ஆக்கமும் ஊக்கமும் உற்சாகமும் கொண்ட நல்லாசிரியர்; இவரால் பள்ளிக்கூட வாழ்க்கையில் புதிய உணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஏற்பட்டிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார். அவர் வரும் மாதத்தில் மட்டும் பாடங்கள் ஒத்திகை நடத்துவது போலச் சாரணப் பயிற்சியும் நடத்த விடுவார்கள். நான் பன்னிரண்டு மாணவரைத் தேர்ந்தெடுத்து, ஆட்டிவைப்பேன். அந்த ஆண்டு சுறு சுறுப்பாகக் கபாத்து வாங்கி, கொடியாட்டங் காட்டி, முடிவில் தீ வீட்டை அணைத்து, அதில் அகப்பட்டவர்களைக் காத்துச் சிகிச்சை செய்து, ஒரு கூடாரத்தில் உணவு தருவதாகக் காட்டினேன். ஆட்டம் பாட்டம் முடிந்தபிறகு, சோதகர், டேனியல் தாமஸ், சில ஆசிரியர்கள்,

அனைவரும் தனித்துப் பேசினோம். அப்பேச்சில் பெரும் பங்கு கொண்டு நான் அக்காலப் பள்ளிமுறைகளிலிருந்த ஊழல்களைத் தெளிவாகச் சொன்னேன், மறுநாள் ஆசிரியர் கூட்டத்தில் நான் பேச அவர்கள் அனுமதியளித்தார்கள். ஆசிரியர் சங்கக்காரியதரிசிகளில் நான் ஒருவன். அந்த முறையிலும் என் எண்ணங்களைப் பேசி முடித்தேன்.

116 கல்வி முறை மாற வேண்டும்

எங்கள் மரியாதைக்குரிய இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு வந்தனம் நாம் இங்கே கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசக் கூடியிருக்கிறோம், நாம் தமிழர்; நமது தாய் மொழி தமிழ்; தமிழில் பேச என் உள்ளம் துடிக்கிறது. என்றாலும் ஆங்கிலப்பள்ளி ஆசிரியராக சட்டைப்பாகை யணிந்து, யூனியன் ஜாக்கின் கீழ் இன்னும் நாம் வசிப்பதால், சங்கேதத்தை ஒட்டி, ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

அறிவு, பலம், ஒழுக்கம், தொழில், கலைச்சுவைகளை ஒருங்கே வளர்த்து, மாணவனுக்குச் சமுதாய சேவைத்திறமை யளிப்பதே நல்ல கல்வி என்கிறார். பாக்லி, போதனா கலாசாலையில் எல்லாம் படிக்கிறோம். ஆனால் படித்ததை அனுஷ்டிக்கப் பள்ளிக்கூடத்தில் இடமில்லை. ஆசிரியர் வேலை மிக உயர்ந்தது என்கிறார்கள். பள்ளிக் கூடத்தில் அவர் பிழைப்பு ஒப்பந்தக் கூலியின் விதியாயிருக்கிறது. செக்குமாடுபோல், ஆசிரியர் என்னும் பிராணி ஒரே பாடமுறையைச் சுற்றிச் சுற்றி நாட்களை இழுத்துச் செல்லுகிறார். புதுமையில்லை; காலத்திற்குத் தக்க மாறுதல் இல்லை. நாம் ஏதாவது புதிய வழியில் செல்லவேண்டுமானால், அதிகார வர்க்கம் "அப்படிப்போ இப் படிப்போ" என்று தார் வைத்துத் தள்ளுகிறது, சுதந்திரமில்லை. ஆசிரியர் சங்கம் வைத்திருக்கிறோம். சங்கம் என்றால் ஒற்றுமையாகக் கூடும் இடம். ஆனால் ஒற்றுமை மருந்திற்கும் இல்லை, போட்டி, பொறாமை, கோள், வசை வம்புகளே வளர்கின்றன. மேல் வகுப்பு ஆசிருயர் கீழ் வகுப்பில் உழைக்கும் ஆசிரியரை மட்டமாக நினைக்கிறார். புலமைக்கு மதிப்பில்லை; வெறும் பத்திரத்திற்கே மதிப்பிருக்கிறது. எல். டி. பட்டம் பெற்று. படிப்பை மறந்து நாலு வார்த்தை நன்றாகப் பேசத் தெரியாதவரும், பெருமையடைகிறார்கள். பணமில்லாமல், எப்படியோ கஷ்டப்பட்டு செகண்டரி கிரேட் தேறி, அதன் பிறகு நிரம்பப்படித்து நிபுணராயிருப்பவர் பலர். இவர்கள் எம். ஏக்களைவிட அறிவாளிகளா யிருக்கிறார்கள். தன்முயற்சியால் நல்ல தகுதி பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு உயர்வு கிடையாது, ஆயுளெல்லாம் அரிக்குழி தோண்ட வேண்டியதே விதி. பட்டத்தால் அல்ல, அறிவும் ஆற்றலுங் கொண்டு தகுதியை அளக்கவேண்டும். ஆசிரியர் பட்டம் பெற்றவர்கள் தனியாகப்படித்துப் பல கலைப்பரீட்சைகளுக்கு எழுதித் தேர்ச்சி பெற உரிமை யிருக்க வேண்டும் ஆர்வத்திற் கேற்றபடி அறிவை வளர்த்துத் தேர்ச்சி பெற்று, தேர்ச்சி பெற்ற

கலையைப் பள்ளிக்கூடத்தில் போதிக்க உரிமையிருக்க வேண்டும். உதாரணமாக ஒரு செக்கண்டரி கிரேட் ஆசிரியர் தன் முயற்சியால் பி.ஏ. பாடங்களை நன்ருகப்படித்துத் திறமை பெற்றதும், பி.ஏ. பரீட்சைக்கு அமர்ந்து தேர்ந்து உயர்ந்து வாழ உரிமை யிருக்க வேண்டும். மேதையென்பது பட்டத்தால் வராது, உதாரணமாக ரவீந்திரநாத டாகூர், கணிதமணி ராமாநுஜம் முதலியோர் பட்டம் பெற்றவர்களல்லர். ஷேக்ஸ்பியரும் ஓமரும் கல்லூரி செல்லாமலே இயற்கைப்புலமையால் இலக்கிய உலகை ஆண்டனர். அப்படி இயற்கைப்புலமை பெற்ற மேதாவிகளைக் கல்வி அதிகாரிகள் மதிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கு மூன்ருண்டிற்கு ஒருமுறை பரீட்சை வைக்க வேண்டும். அதில் அவரவர் புதிதாகப் பயின்ற கலைகளை சோதித்துப் பட்டம் வழங்கலாம். ஒரு சரித்திர ஆசிரியரோ, கணித ஆசிரியரோ தமது கலையறிவில் குறைந்திருந்தால், அதற்கேற்ற படியில் அவர்களை வைத்தலே முறை. பட்டம் பெற்ற பிறகு, பாடத்தை அறவே மறந்து, சும்மா வயிற்றுப் பாட்டிற்காக வகுப்பில் கடனைக் கழிக்கும் ஆசிரியர்களை மறுபடியும் தங்கள் பாடங்களில் நிபுணராகச் செய்ய வேண்டும். ஆசிரியர் பல நூல்களைப் படிக்கத் தூண்ட வேண்டும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் ஓர் ஆசிரியர் என்ன புதிய நூல்கள் படித்தார், எப்படி அறிவை வளர்த்தார் என்பதைச் சோதித்து அறியவேண்டும். இன்றேல் ஆசிரியர் பிழைப்பும் புத்தியும், பழையகருப்பனுகவே இருக்கும். தகுதிக்கும் அறிவிற்கும் தக்கபடி ஆசிரியர்களை உயர்த்த வேண்டும்.

ஆசிரியர் நடையுடை பாவனைகள் இப்போது வான்கோழி நடனமாயிருக்கின்றன. சட்டை பாகையுடன் ஆசிரியரைக் கண்டதும் மாணவர் கிலி பிடித்து நிற்கின்றனர். தெருவில் ஆசிரியர் வந்தால் ஓடி ஒளிகின்றனர் மாணவருக்கு அன்பு ஏற்படவில்லை. சிலருக்குப்பயம் பலருக்கு அசட்டை ஏற்படுகிறது. ஆசிரியர் உடை அனாவசியமான படாடோபச் சுமையாயிருக்கக் கூடாது. நாட்டிற்கேற்றபடி எளிமையாயிருக்க வேண்டும். இந்த நாட்டில் ஒரு வேஷ்டி, ஷர்ட்டு, துண்டு இவைபோதும். அதிகமானல் ஒரு கதர் குல்லா போட்டுக்கொள்ளலாம். இதற்கு மேல் தடித்தடி கோட்டுகள், முண்டாசுகள், டைகாலர்கள் ஸ்டாகிங்ஸ் பூட்சுகள் எல்லாம் மிகை என்று எனக்குத் தோன்றுகின்றன. சட்டையில் இல்லை; ஆசிரியர் வெற்றி, திறமையில் உள்ளது. எளிய தூய உடைகளை அணிந்து, மாணவருடன் அன்பொழுகப் பழகினல், மாணவரும் அன்புடன் கற்று, பயப்படாமல் வேண்டியதைக் கேட்டுத்தெரிந்து கொள்ள ஏதுவாயிருக்கும். போலிஸ் இலாகாவுக்கு உடுப்புத்தருவதுபோல் பள்ளி ஆசிரியர்களுக்கும் அதிகாரிகளே ஆடை, அங்கி, மேவேட்டி. காலணி தந்து அவற்றைச் சுத்தமாக வைத்திருக்கவும் வழி செய்ய வேண்டும்.

ஆசிரியர் இன்று வறுமையின் சின்னமாக விளங்குகிருர். எண்பது தொண்ணூறு வாங்குகிறவர்கள் எப்படியோ மானமாகக் காலம் கழித்

கிறார்கள். ஐம்பதுக்குக் குறைந்த சம்பளம் பெறும் ஆசிரியர் பாடு, அதிலும் இருபதுக்கும் குறைந்துபெறும் எலிமெண்டரி ஆசிரியர் துயரம் சொல்லி முடியாது. குழந்தைக் குட்டிகளைக் கட்டிக் கொண்டு அவர்கள் நித்திய தரித்திரத்துடன் இரத்தக்கண்ணீர் விட்டுப் போராடுகிறார்கள். குடும்பத்தை எப்படிக் காப்போம், நாளை என்ன செய்வோம், அகவிலை ஏறுகிறதே என்ற ஏக்கமே கதியாக அவர்கள் வாழ்கிறார்கள். ஏக்கம் வகுப்பில் தூக்கமாக மாறுவதும் உண்டு, இந்த நிலை மாற வேண்டும். ஆசிரியருக்கு வயிற்றுக் கவலை கூடாது. ஊர் தோறும் ஐக்கிய பண்டசாலை நாட்டி, அதிலிருந்து ஆசிரியர் தமது காலட்சேபத்திற்கு வேண்டியதெல்லாம் வாங்கிக் கொள்ளும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்; குடும்பத்திற்கேற்றபடி பண்டங்களை ஆசிரியர்களுக்குத் தந்துதவ வேண்டும். பொருளாதாரம் சரியானாலே அருளாதாரம் சரியாகும். ஆசிரியர்களுக்கு உணவுப் பொருள்களைக் கொடுத்துதவ வேண்டியது அதிகாரிகளின் முதற்கடமையாகும். சம்பளத்தைவிட இதுவே முதன்மையாகும்...கல்வித்தொண்டிற்கே தம்மையளித்த ஆசிரியர் பட்டினி கிடப்பது கொடுமை! அரைப் பட்டினி எலும்புக் கூடுகள் எப்படி உழைத்துப்பாடம் சொல்லித்தர முடியும்? ஆசிரியர் ஒடிந்து விழுவது போலிருந்தால், மாணவருக்கு அவரிடம் மதிப்பு ஏற்படாது. ஆசிரியர் உள்ளும் புறமும் திறம் பொலியவேண்டும். ஆசிரியர்களுக்குக் கல்வியை வளர்க்கவும், குடும்பத்தை காக்கவும், சர்க்கார் அன்புடன் உதவி செய்யவேண்டும். ஆசிரியர் குழந்தைகளுக்கெல்லாம் இனமாகக் கல்வி தருதல் வேண்டும். சம்பளம் வாங்கக் கூடாது. அவர்களுக்கு வைத்திய உதவியும் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்குப் போதுமான வீட்டு வசதியும் பள்ளிக்கூடத்திற்கு அருகே தரவேண்டும். பழைய குருகுல முறையும் புதிய ஆராய்ச்சி முறையும் ஒன்று சேர்ந்து, மாணவரை ஆளாக்கும் தீவிரக் கல்வி முறையை வகுக்க வேண்டும்.

மாணவருக்கு எண்ணெழுத்து மட்டும் போதாது. வகுப்பிற்குள் கற்கும் பாடத்துடன் வகுப்பிற்கு வெளியே கற்க வேண்டிய பாடங்களிலும் அவர்கள் கருத்தூன்ற வேண்டும். எம். ஏ. பட்டம் பெற்றவன் நாற்காலியிலேயே சாய்ந்து கொட்டாவி விட்டால் பயனென்ன? குருட்டுப் பாடத்தால் மருட்டும் காலம் மலையேறி விட்டது. நாடு பல துறைப்புலவரைக் கூவியழைக்கிறது. சமுதாய சேவை நம்மை அழைக்கிறது. தேச சமுதாய சேவையே கல்வியின் நோக்கமாயிருக்க வேண்டும். மாணவருக்குப் பள்ளிக்கூடத்திலேயே சமுதாய சேவையைப் பழக்க வேண்டும். அதற்குச் சாரணப்பயிற்சி மிகச் சிறந்தது. நாட்டுக்கேற்றபடி சாரணப்பயிற்சி தந்தால், மாணவர் வாழ்க்கை மெருகேறிப்பொலியும், திறமைபெற்ற மாணவர் வாழ்க்கைப் புதிரை மயங்காமல் தீர்த்துக் கொள்ள முடியும். இப்போது நாம் ரசாயனச்சாலையில் செய்யும் தீக்குச்சி, தீயில் காட்டினாலே பற்றிக்

கொள்கிறது. கணிதம் படிக்கிற பிள்ளைக்குக் கடைச்சாமான் வாங்கத் தெரியவில்லை. தாவரநூல் படிக்கும் பிள்ளைக்குக் கொல்லைப் பச்சிலை தெரியவில்லை. கல்விக்கும் வாழ்க்கைக்கும் எட்டாத் தூரமாயிருக்கிறது. நமது கல்வி முறையை வாழ்வுடன் இணைக்கவேண்டும். மாணவர் தமிழ், ஆங்கிலம், கணிதம், பௌதிகம், ரசாயனம், பூகோளம் கற்பதுடன், சாரணப்பயிற்சியும் ஒரு நல்ல தொழிலும் பயில வேண்டும்.

நமது நாடு இருக்கும் வறிய நிலையில், அடிமை நிலையில், நூற்றுக்குத் தொண்ணூறுபேர் படிப்பு மணமேயில்லாது மடமையில் ஆழ்ந்திருக்கிறார்கள். கட்டாய இலவசக்கல்வி முறை சுதந்தர இந்தியாவிலேதான் பலிக்கும். இப்போது படிக்கவரும் மாணவருக்கு வாழ்க்கைத் திறமையளிக்க வேண்டும். சிலமாணவர் உயர்கலை பயிலலாம். கல்லூரிக்குச் செல்லலாம். கல்லூரிப்படிப்பென்றால் ஏராளமாகச் செலவாகும் அப்படிச் செலவிடப் பலருக்கு வசதி கிடையாது. குடிக்கையான மாணவரும் பணக்குறைவால் மனக்குறையுற்று மேற்கொண்டு படிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள், அவர்களுக்கெல்லாம் சர்க்கார் உதவி வேண்டும். சாதாரணமாய் பிழைக்கவே கற்கும் மாணவருக்குத் தொழிற் கல்வி தர வேண்டும். எட்டு வகுப்பு மட்டும் வேண்டிய எண்ணெழுத்தைத் தந்து, பிறகு அவரவர் புலமைக்கேற்ற தொழில் நுணுக்கம் கற்பிக்கவேண்டும். உதாரணமாக, காத்தான் மகனுக்கு விவசாயத்தில் திறமையுண்டு; அவனை எட்டுவரை எட்ட வைத்து, உடனே விவசாயப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும். விவசாயப்படிப்பில் அவன் திறமையுள்ள மட்டும் மேலோங்க வழி துலக்க வேண்டும். எட்டாவது படித்தவன்தானே இவன் பெரிய விவசாயப் பரீட்சைக்குப் போகக்கூடாது என்று தடுக்கக் கூடாது. கலையும் தொழிலும் சேர்ந்து இயங்கவேண்டும். திறமையும் புலமையும் சமுதாய சேவையின் ஆர்வமுமே அறிவின் அளவுகோலாயிருக்க வேண்டும். திறமைக்குத் தக்கபடி ஒரு ஆசிரியரோ மாணவரோ மேலோங்கி விளங்கச்சுதந்தரமான வழி துலக்க வேண்டும். அப்போது எல்லாரும் சுறுசுறுப்பாகக் கல்விப்பயிற்சியிலும் தொழிற் பயிற்சியிலும் கருத்தூன்றுவார்கள். நாட்டிலும் புலமை பெருகும். புலமை புகழ் தரும், எந்தாய் வாழ்க!

இன்ஸ்பெக்டர் எனது பேச்சின் சாரத்தைக் குறித்துக்கொண்டு சில பகுதிகளுக்குப் பதிலளித்தார். "இந்த ஆசிரியர் பேச்சில் நாம் கருதத்தக்க விஷயங்கள் பல உண்டு. எனினும் நான் இரண்டொன்றிற்கே இப்போது விடைதர முடியும். மற்றவை எனது இலாகாவுக்குப் புறம்பானவை. ஆசிரியர் ஆள் வாட்ட சாட்டமாகத்தான் இருக்கவேண்டும். அதற்குத் தக்க சட்டைப் பாகை யணியவேண்டுமென்று கருதுகிறேன். கலையும் தொழிலும் சேர்ந்து மாணவரை

ஆளாக்கவேண்டியதுதான். சாரணப் பயிற்சி மாணவருக்கு அத்யாவசியம் என்றே நான் கருதுகிறேன், ஆசிரியர் சொன்னதுபோல் சமுதாயத் திறமையை மாணவர் வளர்க்கவேண்டும்."

இன்ஸ்பெக்டர் தனுக்காகப் பேசிச் சென்ருர். "அதிகப்பிரசங்கி, அவர் முன் என்னென்னமோ வாரிவிட்டான். வம்பாடி" என்று சிலர் பல்லைக் கடித்தனர். 'எங்காணும் பெரிய ஆபீஸர்முன் உமது புரட்சிச் சரக்கை அவிழ்த்தீர்' என்ருருவர் முகம் சுளித்தார். 'ஐயா சோதகர் எதைச் சோதிக்க வந்தார்? உமது பட்டுப் பாகையையா தாசா சில்க் கோட்டையா, குண்டஞ்சி வேட்டியையா அல்லது வெற்றிலைக்காவி ஏறிய பல்லையா? அல்லது உமது எல்டிப் பட்டாவைப் பார்க்கவந்தாரா? நமது கல்வித் திறமையைச் சோதிக்கவே அவர் வந்தார். நமது திறமை நிலைமைகளை அவருக்கு விளக்கவேண்டாமா? அல்பாகா கோட்டில் மனச்சாட்சியை ஒளித்து வைத்தென்ன பயன்?' என்று பதிலிறுத்தேன். அன்று முதல் வாரக் கூட்டங்களில் நாட்டுக்குத் தக்க கல்வி முறையைப்பற்றி நீளப் பேசினேன். (கல்விக் கதிரில் அதன் சாரம் உள்ளது.) ஆசிரியர் சங்கத்தில் ஓயாமல் போர் புரிந்தேன். பேசும்போது அப்ளாஸ் கிடைக்கும்; பின்னே சுத்த அதிகப் பிரசங்கி, காலமறியாமல் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிருன். இவன் சுத்த பொலிடிகல் என்ருரு குரல் இடித்துக் காட்டும். ஆனால் என் மனச்சாட்சி உறங்காது. அதன்வழியே செல்ல நானும் தயங்கமாட்டேன். படிப்படியாக என்னை அது தேசசேவைக்கு இட்டுச் சென்றது.

117. திருமுக்கூடல்

என் வாழ்க்கையில் திடீர் திடீர் என்று மாறுதல்கள் வரும். அதற்குமுன் மனம் காட்டில் விட்டதுபோலத் திகைக்கும். எனக்கு ஒன்றுமே தோன்ருது. தற்கொலை புரிந்துகொள்ளக்கூடத் தோன்றும். ஏனெனில் கடமையுள்ளமட்டுமே நான் வாழவேண்டும் என்பது விரதம், "அடிக்கடி என் கடமை முடிந்தது! இனி என்னை அழைத்துக்கொள்" என்று இறைவனைத் தியானிப்பேன். தியானிப்பதற்குத் தனியிடம் தேடிச் செல்வேன்.

ஒருநாள் பள்ளிக்கூட வேலை எனக்கு பிடிக்கவில்லை. வேறென்ன செய்வதென்றும் தோன்றவில்லை. அகண்ட காவிரியை நோக்கி நடந்தேன். ஸ்ரீராமசமுத்திரம் வாலீசர் கோயிலுக்கு வந்தேன். அங்கே கூட்டம் அதிகமாயிருந்தது. கரையிலிருந்து கொஞ்சம் தியானித்தேன். டொப் டொப் டொப் என்று ஆடை துவைத்துக் குளிக்கும் ஆட்கள் சளசளவென்று வம்பாடிக்கொண்டிருந்தனர். இன்னும் நிம்மதியான இடத்தை நாடினேன். திருமுக்கூடலை நோக்கி நடந்தேன்.

திருமுக்கூடல் காவிரியும் பவானியும் அமராவதியும் கூடும் இடத்தில் உள்ளது. அதனருகே மதுராந்தகபுரம் இருந்தது. அதில் இராஜ

ராஜ சோழன் (985-1013) ஆறுமாதம் தங்கினானாம். தாமோதர பட்டருக்கு 25 வேலி நிலம் தந்தானாம். இராஜேந்திர சோழன் அங்கே தங்கி, பல தரும சாசனங்களைச் செய்தான். ஓடக்காரர், கோயில் திருநாளுக்கு வேண்டியதை செய்தனர். எல்லாம் அந்தக் காலத்தில். காலவெள்ளம் மனித சிருஷ்டிகளை எப்படியெல்லாம் மாற்றி அமைக்கிறது! இப்போது கோவில் மணலுக்கடியில் புதைந்தது. ஒரு சுவர்மட்டுமே சிறிது தெரிந்தது. அதனருகே ஓடும் நீரில் குளித்து அங்கே அதே மணல் மேட்டிலேயே தியானம் செய்தேன்.

எத்தனையோ கோயில்கள் எத்தனையோ மனைகள்
எத்தனையோ திருவூர்கள் எத்தனையோ சீர்கள்
எத்தனையோ மன்னர்களின் டோன்முடிகள், குடிகள்
எத்தனையோ புலவர்களின் ஏட்டுச்செல்வங்கள்
அத்தனையும் காலநதி அள்ளி விழுங்கியதே.
அன்றிருந்த தின்றில்லை—அழிகாலக் கூத்தால்!
சுத்தனையே துதிநெஞ்சே! நித்தியமோன் றவனே;
சூழுலகம் அவனருளின் தூசியிது வாமே.

என்று பாடினேன். ஒரு வைராக்கியம் உதித்தது. இந்தக் கோயில் மண் மேவிப்போனதுபோல், மனிதக்கனவையும் காலவெள்ளம் அடித்துச்சென்று, மறதியாகிய மண்ணில் புதைத்துவிடுகிறது. என் வாழ்விற்கு வெள்ளம் வரும்முன் என் கனவுகளை நிறைவேற்ற வேண்டும்; இந்தப் பிறவியின் பயனை நிறைவாக அடையவேண்டும் என்று கருதிக்கொண்டே அக்கரையில் சோழூர் வரையில் சென்றேன். அந்த ஊர் கிராம முன்சீப் என்னை உபசரித்து மாலை ஒரு சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்தார். அந்த ஊரைச் சுற்றிப்பார்த்தேன். ஏழைகளின் கண்ணீரும் வறுமையும் ஏக்கமும் கண்டு நொந்தேன். மாலையில் நமது கிராம சமுதாயத்தின் நிலையையும் அது திருந்தி முன்னேற நாம் செய்ய வேண்டிய பணிகளையும்பற்றிப் பேசினேன். இரவெல்லாம் ஏழைகளின் நினைவே. ஏதோ ஒன்று என்னைக் கிராமசேவைக்கு அழைத்தது. அழைப்புவந்தால் செல்லவேண்டியதுதானே.

118. ஸ்ரீராம சமுத்திரத்தில்

காலையில் ஆற்றுமணலிலேயே கிழக்கு நோக்கி நடந்தேன், ஸ்ரீராம சமுத்திரம் மாந்தோப்பை அடைந்தேன். அங்கே எனது மாணவர் சிலர் விளையாடிக்கொண்டிருந்தனர். என் ஸ்கௌட் ஊதலைக் கேட்டதுமே அவர்கள் தடதடவென்று ஓடிவந்து என்னை ஊருக்குள் அழைத்துச்சென்றனர், அக்கிரகார அந்தணர் என்னை அன்புடன் வரவேற்றனர். எனது மாணவரும் சாரணரும் "எங்கள் ஊரிலேயே இருங்கள் ஸார்; நாங்கள் வேண்டியது செய்கிறோம்" என்ற

னர். பீமராயர் "இந்த வீட்டில் தாராளமாக இருங்கள்" என்று ஒரு கூரைவீட்டைக் காலிபண்ணிக் கொடுத்தார். அந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அங்கிருந்தவர்கள் வஞ்சமற்ற கிராமப் பான்மையுள்ள மக்கள். எல்லாரும் ஆசார அனுஷ்டானங்களில் தவறுதவர்கள். கலை நிரம்பிய முகப்பொலிவுள்ள அந்தணர். சிலர் தமிழ்ப்புலவர்; சிலர் ஆரியப்புலவர்; சிலர் வைணவர்; சிலர் மாத்துவர்; சிலர் அத்வைதிகள். எல்லாரும் நிலபுலன்களைக் கொண்டு மானமாகப் பிழைப்பவர்கள், அந்த ஊர் காவிரிக்கே ஒரு தனி யழகுண்டு. காவேரிக்கு இடையே பாறைகள் அதிகம். அந்த வட்டப்பாறைகளில் பத்மாஸனம் போட்டு தியானித்தால், காவிரியின் நீரோட்டம்போலவே குண்டலிசக்தி ஓட்டம் பெருகும். எனது சமுஸ்கிரத அறிவை வளர்த்துக்கொள்ள அந்த ஊரில் சந்தர்ப்பம் கிடைத்தது. வால்மீகி ராமாயணத்தையும் ஸ்ரீ பாஷ்யத்தையும் கரைத்துக்குடித்த ஒரு புலவர் என் அரிய நண்பரானர். அவருக்குப் பல சிஷ்யர்கள் உண்டு.

"உங்கள் ஊரில் நான் இருக்க விரும்புகிறேன்;' என்றதுமே என் சிப்பாய்களான இராசகோபாலன், தேசிகன், ராமசாமி, சுப்பிரமணியன், சின்னக்கிட்டு முதலிய எல்லாரும் அந்த ஓலைக் குடிலைக் கூட்டி மெழுகிக் கொடுத்தனர். நான் ஒரு கரியடுப்புப் போட்டேன். இரண்டு சட்டிகளும், தண்ணீர் வைத்துக்கொள்ள ஒரு பானையும் வாங்கிக் கொண்டேன். மாணவர் வீட்டில் குவியும் அடுப்புக்கரியில் சிறிது என் கரியடுப்பிற்கு வந்து சேரும். தென்ன நாரால் கரியை மூட்டி, அட்டையால் விசிறித் தணலாக்கி, அதன்மேல் ஒரு சட்டியை வைப்பது; அதில் காவிரி நீரை விட்டு, பாசிப்பருப்பைக் களைந்துபோடுவது; அது வெதுவெதுப்பானதும் அரிசியைக் களைந்துபோடுவது; அது பாதி கொதி வந்ததும் கிடைத்த காய்கறிகளையெல்லாம் அப்படியே அறுக்காமல் போடுவது; பக்குவமானதும் இறக்கி தேங்காய்ச் சில்லு, வாழைப்பழம், நிலக்கடலை அல்லது கொத்துக்கடலை தொட்டுக் கொண்டு சாப்பிடுவத. சிலநாள் மோர் விட்டுக்கொள்வதுண்டு. இது தான் எனது சமையல் திட்டம். இந்தச் சமையல் அரைமணி நேரத்தில் ஆய்விடும். நான், ஆண்பிள்ளை, சமைத்துச் சாப்பிடுவது கண்டு அனுதாபப்படும் நண்பர் பலர். "அடடா! நல்ல பிராமணன், உத்யோகம் பார்க்கிருர், ஒரு பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டு சுகமாயிருக்கலாகாதோ" என்று பெண்கள் பேசுவார்கள். சிலநாள் என்னை அவர்கள்வீட்டில் உபசரித்து உணவளிப்பார்கள்.

அந்தத் தெருவில் ஓர் ஏழைக் குடில்; தெலுங்கர் மனை; அதன் தலைவர் ஜோதிடர். அத்யயனம் செய்தவர். அவர் மனம் தங்கம்; கை தாராளம். அவர் வீட்டில் நான் நான்குதடவை சாப்பிட்டிருக்கிறேன், நான் அடுப்பு மூட்டும்போது அவர் பெண் வந்து நான் நிமிஷம் சமைத்துப்போடுகிறேன் மாமா என்று மன்றுடுவாள்,

"அமாம் இத்தனைநாள் பெண்ணே அடுப்பு வேலை பார்த்தாள். இப்போது ஆணும் அதைப் பார்க்க வேண்டும், அப்போதுதான் பெண்ணின் அன்பும் அருமையும் அவனுக்குத் தெரியும்" என்பேன். என் கையால் எனது காரியங்களைச் செய்தாலே எனக்கு மகிழ்வுண்டு. இயன்றமட்டும் பிறர் கையை எதிர்பாராமல் சுதந்திரமாகப் பிழைக்க வேண்டும் என்பது என் கொள்கை. ஆதலால் எனது சமயல் சாப்பாட்டில் பிறரைப் புகவிடுவதில்லை. நான் சமையல் செய்த சட்டியை மாணவர்கள் கழுவக்கூட விடமாட்டேன். நானே ஓடுகாலில் கொண்டு போய் கரையில் தேய்த்துக் கழுவிப் பிறகு தண்ணீரில் நன்ருகக் கழுவி வருவேன். சாப்பிடுவதற்கும் மண்வட்டிலே. சுத்தம், சிக்கனம், சுகாதாரம் இந்த மூன்றையும் நான் காப்பது வழக்கம். பிறகு சமையலையும் விட்டுக் கனி கடலையே உண்டேன்.

அதிகாலையில் எழுந்து ஊதுவேன்! சாரணர் வருவர். உடனே வரிசையாக திவ்ய நாமங்களைப் பாடிக்கொண்டு காவிரிக்குச் சென்று, மாவிலை அல்லது குச்சி போட்டுப் பல் விளக்கி, கபாத்து நடத்துவேன். தண்டால் பஸ்கி ஓட்டம் முதலிய பயிற்சிகள் நடத்துவேன். உடம்பிற்குப் போதிய பயிற்சி தந்தபிறகு, காவிரியில் நீராடுவோம். ஆடையை நன்ருகத் துவைத்து உலர்த்தியணிவோம். பிறகு சிறிது தியானம் நடக்கும்; அதன்பிறகு பக்திரசமான பாட்டு, பேச்சு. ஐந்தரை அல்லது ஆறுமணிக்கெல்லாம் வீட்டுக்குத் திரும்புவோம். குளிர் நாட்களில் வீட்டிலேயே பல் விளக்கி தேகப் பயிற்சி செய்து மாணவரைப் பாடங்கள் படிக்கச் செய்வதுண்டு. நல்ல வெய்யில் வந்ததும் ஆற்றில் குளிப்போம். ஒன்பதரைமணிக்கு என் குழல்கேட்டு, மாணவர் அனைவரும் வரிசையாக வந்து நிற்பார்கள். சில செல்வ மாணவர்கள் வண்டி கட்டி வருவார்கள். நேரம் அதிகமானல் நானும் வண்டியில் செல்வேன்; பெரும்பாலும் வயல்களூடு நடந்தே செல்வது. பத்து மணிக்கெல்லாம் கலாசாலைக்கு வந்து கணக்காக வகுப்பைத் தொடங்குவது வழக்கம். ஒருநாள்கூடத் தாமதமானதில்லை. ஒரு நிமிஷம் வீணுனால் என் உயிர் துடிக்கும். ஆதலால் காலத்தைப்பற்றி நான் கணக்காயிருப்பதுண்டு. மாலை ஐந்துமணி யடித்ததுமே பள்ளிக்கூடத்திலிருந்து புறப்படுவோம். வரும்போதே சாரணப்பயிற்சி, சன்மார்க்கப் பேச்சு தேசீய உணர்ச்சி ததும்பும் பேச்சு பாட்டு நடக்கும். மாணவர் வீட்டிற்குச் சென்று அரைமணி நேரம் கழித்து என்னிடம் வருவார்கள். எல்லாரும் காவேரி மணலில் விளையாடுவோம், கபாத்து செய்வோம்...சாரணப்பயிற்சி நடத்துவோம். பிறகு குளித்து கால்மணி நேரம் தியானம் செய்வோம். பிறகு நல்ல பக்தி கானங்கள் நடக்கும். ஏழுமணிக்கெல்லாம் மாணவர் சாப்பாட்டை முடித்துக் கொண்டு என்னிடம் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பாடம் சொல்லித் தருவேன். ஸ்கூல் பைனல் மாணவருக்கு ஆங்கிலம் சரித்திரம் ஸயன்ஸ் சொல்லி வைப்பேன். மற்ற மாணவருக்கு ஆங்கிலம் தமிழ்

கணக்கு சொல்லித்தருவேன். நானும் மாணவன்போலவே கருத்தூன்றிப் பல நூல்களைப் படித்துக் குறிப்பெழுதுவேன். சமுஸ்கிரதம் நிரம்பக் கற்பேன்.

இவ்வாறு இயற்கையன்னையின் திருக்கரங்களில் யாழிசைபோல் எனது வாழ்வு சலசலத்து நடந்தது. யாழிசைக்குப் பின்னணியாகக் குழிசையும் ஒலித்தது.

119. திருக்குலத்தொண்டு

ஆாட்டுப்புத்தூரிலிருந்து ஸ்ரீ ராமசமுத்திரத்திற்கு வயல்கள் வழியாக வந்து கொண்டிருந்தேன். அருகே வேலை செய்துகொண்டிருந்த சில பாட்டாளிகள் "ஐய, ஐய போய்விடுகிறோம்" என்று தள்ளி ஓடினார்கள். நான் 'இங்கே வாருங்கள்' என்று அவர்களை அழைத்தேன். "ஐய" நாங்கள் தீண்டாப் பிள்ளைகள்; கிட்ட வரலாமா" என்றார்கள் "தாராளமாக வாருங்கள்; நாங்கள் தீண்டும் பிள்ளைகள்" என்றேன். அவர்கள் திகைத்து நின்றார்கள். நான் அவர்கள் அருகே சென்றேன். "ஐயஐய," என்று ஒதுங்கிச் சென்றார்கள். நான் உடனே எனது சட்டை தலைப்பாகையெல்லாம் கழற்றி ஒரு மாணவனிடம் தந்து, அவர்களை அணுகி, "நாம் எல்லாரும் தமிழர்கள்; ஒரே நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள். ஓரினம் என்னைக் கண்டு நீங்கள் ஏன் ஒதுங்கி ஓடவேண்டும்? நான் என்ன பேயா காட்டேரியா?" என்றேன். "நீங்கள் பிராமணரல்லவா, நாங்கள் தீண்டாப் பிள்ளைகளல்லவா?" என்றனர், "ஐயா நானும் பிராமணனில்லை: நீங்களும் தீண்டாப் பிள்ளைகளில்லை; நாமெல்லாரும் மனிதர். இதோ பாருங்கள் ஆகாசம்; அதற்குச் சாதி வேறுபாடு உண்டா? சூரியனுக்கு இந்தச்சாதி அந்தச்சாதி என்று உண்டா? இந்தக் காவேரி நதி ஐயர் வயலிலேதான் பாயுமா? உங்கள் வயலில் பாயாமல் போகுமா? மண்ணுக்குச் சாதியுண்டா? நீங்கள் உழுது பாடு பட்டு விளைவித்ததை நாங்கள் உண்டு பிழைக்கிறோம். அதற்கு நன்றி வேண்டாமா?"

இவ்வாறு நான் பேசக் கேட்ட திருக்குலத்தார் "ஞாயந்தான் சாமி. ஆனால் இந்தக்காலத்திலே அதை யார் பார்க்கிறார்கள்? நாங்கள் நாய்ப்பாடு படுகிறோம்." என்றெல்லாம் முறையிட்டார்கள். "உங்களைச் சேரியில் வந்து பார்க்கிறோம்" என்று சொல்லி, நான் சென்றேன். "நல்லா வாருங்க மகாராசா" என்ற சத்தத்தினூடு, "அட நீ சும்மா இரு...ஐயமாரு அங்கே வருவாங்களா?" என்றொரு வெட்டுப் பேச்சும் பாய்ந்தது.

மறுநாள் மாலை ஐந்தரைமணிக்கு எனது சாரணரை ஒன்று கூட்டிப் பேசினேன். "நம் உடலில் ஓரிடம் முள் தைத்தால், உடல் முழுதும் வருந்துகிறது, நமது சமுதாயத்தில் தீண்டாமை என்ற முள் தைத்திருக்கிறது. அதனால் அது உலகின்முன் நொண்டுகிறது.

அவமானக் குழியில் விழுகிறது. இன்று அந்த முள்ளை எடுத்தெறிவோம். இந்த ஊருக்கு இரவும் பகலும் உழைக்கும் பாட்டாளிகளை நாம் சேரியில் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவர்களை நாம் கல்வியில்லாமல் இருளில் ஆழ்த்தி விட்டோம். இப்படி இந்தியாவில் ஏழு கோடிக்குமேல் தீண்டாதார் இருக்கின்றனர். நாம் அவமதிக்கும் இவர்களையே, பாதிரிமாரும் முல்லாக்களும் மதம் மாற்றுகின்றனர். மாறினவர் நம்மையே அஞ்ஞானிகள் என்று வெறுக்கிறார்கள் இப்படி இந்தியா கோடிக்கணக்கான பேரை இழந்துவிட்டது. இதனால் நமது சமுதாயம் மெலிந்தது; நலிந்தது; அன்னியருக்கு அடிமையானது. இப்பொழுது சிலர் இதை உணர்ந்து வருகிறார்கள். நாம் நம் ஊரில் உள்ள திருக்குலத்தாருக்குத் தொண்டு செய்வோம். அவர்களைத் தமிழர் என, இந்தியர் என, மனித சகோதரர் என மதிப்போம். மனந் திருந்தினால் இனம் திருந்தும். ஒரு திருக்குலன் டாக்டர் ஜான் ஆனால், அவனை குட்மார்னிங் வைத்து வரவேற்கிறோம். அவனே பழைய காத்தான் ஆனால், தள்ளி நில் என்கிறோம். இந்த மனப்பான்மை மாறவேண்டும். எவரையும் எந்த நிலையிலும், நாமே எனக் கருதி மதிக்கும் சமநிலை வரவேண்டும். அதை நீங்கள் இப்போதே பயின்று, நமது நாடு ஒற்றுமையாகி முன்னேற, வாழவேண்டும். வாருங்கள் !''

பந்துத் தொண்டர் என்னுடன் வந்தனர். சேரிக்கும் ஊருக்கும் இடையே ஒரு கால்வாய் உண்டு. அதில் எல்லாரும் உடம்பைச் சுத்தம் செய்துகொண்டு சேரிக்குச் சென்றோம். முன்னே ஒரு பழைய புத்தர் சிலையிருந்தது. *அதைக் கழுவிச் சுத்தமாக்கி, சந்தனப்பொட்டு வைத்தேன். இது பலரை இழுத்தது. இந்தச் சேரியிலும் புத்த விக்கிரகத்தைக் கண்டதும், எனக்கு என் பணியில் நம்பிக்கையுண்டானது. தெய்வபக்தியுடன் தார்மிக உணர்ச்சியும் இயல்பாக நமது நாட்டாரிடம் உள்ளது. அதைத் தூண்டினால் எத்தகைய சீர்திருத்தமும் எளிதில் நடக்கும் என்பது என் அனுபவ உண்மை புத்த விக்கிரகத்திற்குத் தீபாராதனை காட்டியதும், நாங்கள் பஜனை செய்தோம். பாட்டைக் கேட்டுச் சேரி முழுதும் கூடியது. பேசத் தொடங்கினேன்.

120. நல்ல காலம் !

தோழர்களே,

உங்களுக்கு நல்ல காலம் பிறக்கிறது. தீண்டாமை ஒழிகிறது. உங்களை ஒதுக்கித் தாழ்த்திய கொடுமை வீழ்ந்தது. இனி நீங்கள்

---

*காட்டுப்புத்தூர் வட்டாரம் அந்தக்காலம் புத்தர் நிலைபமாயிருந்தது. புத்தனேரி என்ற கிராமத்தில் புத்த ஜைனச்சிலைகள் சில அகப்பட்டன. புத்தர் சிலையைப்பற்றி நான் பள்ளித்தலைவருக்கு அறிவித்தேன், அவர் அதைப் பெயர்த்து வந்து பள்ளிக்கூடத்தில் வைத்தார்,

உங்களைச் சேரி ஆட்கள், தீண்டாதார் என்று நினைக்கக் கூடாது. யாராவது நீ என்ன பிள்ளை என்று கேட்டால், ஆண்பிள்ளை என்னுங்கள். பெண்ணானால் பெண்பிள்ளை என்னுங்கள். என்ன குலம் என்று கேட்டால் மனிதகுலம் என்னுங்கள். என்ன சாதி என்று கேட்டால் மானிடச்சாதி என்னுங்கள். மேலே பாருங்கள். எங்கும் விரிந்த வானம். அதற்குச் சாதிமத பேதமில்லை; அது தரும் காற்றுக்கும் ஒளிக்கும் மழைக்கும் சாதி பேதமில்லை. மழை பெய்து விளையும் நிலத்திற்குச் சாதி பேதமில்லை; யார் பாடுபட்டாலும் பலனடையலாம். பேதப்பேய் மனித மூளையில் புகுந்திருக்கிறது. நீங்கள் தைரியமாயிருந்தால், அதை விரட்டி விடலாம். உங்களுக்கு முதலில் உங்கள் நிலைமை தெரியவேண்டும்.

உங்களை ஏன் பிறர் ஒதுக்கவேண்டும்? நாளெல்லாம் பாடு பட்டு ஊருக்குத் தொண்டு செய்கிறீர்கள். வயல்களை உழுகிறீர்கள்: காவல் காக்கிறீர்கள்; குப்பைகளை நீக்கி ஊரைச் சுத்தம் செய்கிறீர்கள். உங்களைத் தள்ளிப்போ என்று ஏன் பிறர் சொல்லவேண்டும்? இனி அப்படி யாரும் உங்களைக் கொடுமை செய்யக்கூடாது. நீங்கள் அவ்வளவு சுத்தமாகவும், அறிவுடனும் நடந்து முன்னேறுவீர்கள். அதற்கு நீங்கள் செய்யவேண்டிய காரியங்களைக் கேளுங்கள்.

1. உங்கள் வீட்டையும் தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். சுத்தமாகக் குளிக்கவேண்டும்: சுத்தமான ஆடையணியவேண்டும்; நல்ல தூய உணவு கொள்ளவேண்டும்.

2. கல்வியே கண்; நீங்கள் உடனே எண் எழுத்துக் கற்கவேண்டும். நானே முதலில் உங்களுக்குத் தமிழ் சொல்லித்தருவேன். இதோ இந்தத் தென்னந்தோப்பில் மணலைக் கொட்டுங்கள்; காலை ஒன்பது மணிக்கு ஊதுவேன்; எல்லோரும் சுத்தமாக வந்து அமர்ந்து படிக்க வேண்டும்; அப்படியே மாலை ஆறுமணிக்கு ஊதுவேன்; ஓடிவந்து படிக்கவேண்டும். பிறகு என்னுடன் காவேரியில் குளித்துவந்து, பஜனை செய்யலாம்.

இதோ பாருங்கள், இந்தச் சிலை; புத்தர் சிலை. புத்தர் பல ஆண்டுகளுக்குமுன் இருந்த மகான். அவர் சாதிபேத மில்லாமல் எல்லோரும் சுத்தமாக வாழ வழிகாட்டினார். அன்புடன் அறவினை செய்து வாழச் சொன்னார் இப் பெரியார். அவர் கருணைவள்ளல்; தம் உயிரையே உலக நன்மைக்காகத் தந்த தியாகி. உலகமெல்லாம் அவரைக் கொண்டாடுகிறது. புத்தர் கருணை உங்கள் கருத்தாகுக. இனி உங்களைத் தமிழ் மனிதர் என்று நினையுங்கள். சாதி வேறுபாடுகளை நினைக்காதீர்கள், எல்லாரும் சுகமாயிருக்கவேண்டுமென்று தொண்டு செய்யுங்கள். நந்தனார்போலக் கடவுளை அன்பு செய்யுங்கள். கடவுளன்பு, தூய ஒழுக்கம், அறிவு வளர்ச்சி, நல்ல முயற்சி, மனோதைரியம்

இவையே முன்னேற்றத்தின் வழிகள். முன்னேறுங்கள், தோழர்காள் முன்னேறுங்கள்."

"நந்தனார் வந்த குலம்" என்ற பாட்டைப் பாடிக்கொண்டே சாரணருடன் சேரிக்குள் சென்றேன். என்பின் சேரி ஆட்கள் திரளாக வந்தார்கள். சிலர் "ஐயமார் இங்கே வரலாமா எங்களுக்குப் பாவம்" என்றெல்லாம் பழைய பல்லவியைப் பாடினர். நாட்டாண்மைக்காரர் எனக்கு உதவி செய்தார்.

121. நல்லாப் படிக்கிறோம்

மறுநாள் நான் சொன்னபடியே ஊதினேன்; திருக்குலப் பிள்ளைகள் ஓடி வந்தனர். சுத்தமாகக் குளித்து, நீறுபூசி, ஒழுங்காக நின்றனர். அவர்களுக்கு முதலில் கடவுள் வணக்கம் சொல்லித் தந்தேன்; பிறகு மணலில் அ, ஆ, எழுதக் கற்பித்தேன். பிறகு எண்சுவடி தொடங்கினேன். "பிள்ளைகளா! நான் மாலை ஆறுமணிக்கு வருவேன்; அதற்குள் புளியம் விதையால் நீங்கள் அ, ஆ இ. ஈ. உ, ஊ, எ, ஏ. ஐ, ஒ, ஓ, ஔ, ஃ கட்டி வைக்கவேண்டும். ஆளுக்கு ஒரு எழுத்துவீதம் விதையால் அடுக்குங்கள்; அப்படி அடுக்கியதில் எத்தனை புளியம் விதைகள் உள்ளன என்று கணக்கிட்டுச் சொல்லவேண்டும்" என்று சொல்லிச் சென்றேன். பிள்ளைகள் நான் வந்ததும், "நல்லாப் படிக்கிறோம்" என்பர்.

மாலை ஆறுமணிக்கு ஊதினேன்; நான் எதிர்பாராமலே பிள்ளைகளுடன் பெரிய ஆட்களும் வந்தனர். பிள்ளைகள் நான் சொன்னபடியே செய்திருந்தனர். அழகாக உயிரெழுத்துக்களைப் புளியம் விதையால் அமைத்து எண்ணி, எண்ணை எழுதியும் வைத்திருந்தனர். அவர்களுக்கு மெய்யெழுத்துத் தொடங்கினேன். பிறகு உயிர்மெய் எழுத்துக்களைப் பயிற்றினேன்; சுற்றிலும் உள்ள பல பொருள்களின் பெயர்களைச் சொல்லி, எழுத்துக்கூட்டி அறியச் செய்தேன். மறுநாள் அவர்கள் பார்க்கும் பத்துப் பொருள்களின் பெயரைச் சொல்லி எழுத்துக்கூட்ட வேண்டும் என்றேன். அதன்பிறகு எல்லாரையும் காவிரிக்கு அழைத்துச்சென்று உடம்பைச் சுத்தம் செய்வித்து, வரிசையாக அழைத்து வந்து, கடவுள் வணக்கம் செய்து கதை சொன்னேன். முதலில் நந்தனார் கதை பாட்டுடன் சொன்னேன். இப்படியே ஒவ்வொருநாளும் எண், எழுத்து, கதை கடவுள் வணக்கம் இவை தொடர்ந்து நடந்தன. திருக்குலத்தாருக்கும் புதிய உணர்வும் கருத்தும் ஏற்பட்டன. அப்பர், திருப்பாணர், கனகர், சோகமேளர், புக்கர் வாஷிங்டன் முதலியோர் கதை,அவர்களுக்கு மகிழ்வை யளித்தது. நெருங்கிப் பழகப்பழகத் திருக்குலத்தார் அன்பு மேலோங்கி, நான் சொல்லும் காரியங்களை உடனுடன் செய்து முடித்தனர். ஒருநாள் "இதோ தென்னை மரத்திடலில், ஒரு பள்ளிக்கூடம் கட்டலாம். நீங்கள் பாட்டாளிகள். வெட்டுங்கள்

தென்னமட்டை; முடையுங்கள் கிடுகு; எடுங்கள் மண்சுவர்; போடுங்கள் கூரை; கட்டுங்கள் பள்ளிக்கூடம்'' என்றேன். ஆளுக்குப் பத்துக் கிடுகு முடைந்து சுவர் எழுப்பி வேய்ந்து, ஒரேவாரத்தில் பள்ளிக்கூடம் கட்டி முடித்தனர். அதில் மணல் பரப்பி தடுக்குகளில் மாணவர்கள் அமர்ந்து எழுதினர்; எண்சுவடி முறை வைத்தனர். நான் சிறுசிறு சொற்களும் சம்பாஷணைகளும் நடத்தினேன். பத்துநாள் இப்படிச் செய்தபிறகு, நாட்டாண்மைக்காரரிடம் "என் கடமை முடிந்தது. இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல ஆசிரியரை அமர்த்த வேண்டும். அவருக்கு நீங்கள் பணத்திற்குப் பதில் நெல் அளக்கலாம். ஆளுக்கு இத்தனைபடி என்று ஒப்பந்தம்செய்து வசூலித்துக்கொடுங்கள். அல்லது வசூலித்த நெல்லை உங்களுக்குள் விற்றுப் பணமாகக் கொடுங்கள். மாதம் இருபது ரூபாய் திட்டம் போதும்'' என்றேன். அப்படியே ஏற்பாடானது. ஒரு கிருஸ்துவ ஆசிரியர் முன் வந்தார். அவரிடம் என் பொறுப்பை ஒப்பிக்க வேண்டியிருந்தது. ஏனெனில் வேறு பல தொண்டுகளில் நான் ஈடுபட்டேன்.

122. குடிப்பேய்!

அடுத்தபடி சேரியாட்கள் கட் குடிக்காதபடி தடுக்க முயன்றேன். ஒருநாள் கூட்டத்தில் பேசினேன் "தோழர்களே உங்கள் சேரி சுத்தமாயிருக்கிறது; எல்லாரும் கடவுளை அன்பு செய்கிறீர்கள். அன்புடன் நடக்கிறீர்கள். உடம்பு குளித்து வேட்டி துவைத் துடுத்திச் சுத்தமாயிருக்கிறீர்கள். சுத்தமே சுகம். உங்கள் குழந்தைகள் படிக்கின்றன; ஒழுங்காக நடக்கின்றன. எல்லாம் சரிதான். ஆனால் ஒரு பேய் இங்கே நடமாடுகிறது. குடியைக் கெடுக்கும் கள்ளுப் பேய். அதை ஒழிக்கவேண்டும். உழைத்த காசைக்கொண்டு கஞ்சி குடிப்பது நல்லது. நாறக்கள்ளைக் குடிப்பது கெட்டது என்று சிறுபிள்ளையும் சொல்லும். கள்குடி மதி மயக்கும்; அறிவைக் கெடுக்கும்; உடம்பைக் கெடுக்கும்; பணத்தைப்பறிக்கும்' வறுமை யாக்கும்; தெருவிலும் பள்ளத்திலும் தள்ளி அவமானப்படுத்தும். தென்னையைக் கள்ளுக்கு விடுவது பாபம். தேங்காய்க் கீற்று, கயிறு இவற்றை விற்றுப் பிழைக்கலாம், கள்ளுத் தினவை விட முடியவில்லை என்கிறீர்கள். மாலை வேலைசெய்து கூலிப் பணத்தை நேராகக் கொண்டுவந்து மனைவியிடம் தாருங்கள். அவள் ஊற்றும் கஞ்சியையோ, மோரையோ குடியுங்கள். காலைப் பதநீர் பருகுங்கள். அரிசிகளைந்த நீரில் மோர் சேர்த்து கருவேப்பிலை போட்டுக் குடியுங்கள். கள்ளாசை ஒழியும். மாலை நேரத்தில் உடம்பு தேய்த்துக் குளித்து, கடவுளைப் பாடுங்கள். பிறகு கஞ்சி குடியுங்கள்; களைப்புத் தீரும். தெம்பு வரும்."

இந்தப் பேச்சைக் கருத்தூன்றிக் கேட்ட சேரியாட்கள் கள்ளை நிறுத்த உறுதி கொண்டனர். சிலர் உடனே கள்ளை ஒழித்தனர். சிலர்

கள்ளிறக்கவும் மறுத்தனர். இன்னும் சில நாள் அங்கே பாடுபட்டிருந்தால், எல்லாரும் நல்ல வழிக்கு வந்திருப்பார்கள். ஆனால் அதற்குள் நான் கிராமத்தைக் காலிசெய்ய நேர்ந்தது.

என் தொண்டு சில மிராசுதாரர்களுக்குப் பிடிக்கவில்லை. "இண்டாச் சாதியைத் தீண்டுகிறார். பிராமணப் பிள்ளைகளைச் சேரிக்குச் கூட்டிச் சென்று கெடுக்கிறார். சேரியாட்கள் படித்தால், மிராசுதாரருக்கு வணங்குவார்களா? மேலும், தென்னையைக் குத்தகைக்கு விடக்கூடாது, கள் குத்தகை எடுக்கக்கூடாது, கள்ளுக் குடிக்கக் கூடாது என்று பேச இவர் யார்? சர்க்கார் ஏற்பாட்டைக் கெடுக்க இவர் யார்" என்றெல்லாம் பேச்சுத் தட்டியது. ஒரு மிராசுதாரர் என்னைப்பற்றி கலெக்டருக்கும் புகார் செய்துவிட்டார் இவர் "பொலிடிகல் செய்கிறார்" என்றொரு புகார். இத்துடன் நான் குடியிருந்த வீட்டில் அந்த வீட்டு உறவினரே காப்பிக் கடை வைத்தார். நான் வெளியேற நேர்ந்தது. ஒரு வைணவ நண்பர் அவர் வீட்டுத் திண்ணையில் இருந்த சிற்றறையைத் தந்தார். ஆனால் அந்த வீட்டிலும் இளம் தம்பதிகள் குடியேறினர் என்னை ஆதரித்த மாணவரும், ஸ்கூல் பைனல் முடிந்ததும் திருச்சிக்குப் படிக்கச் சென்றனர். ஆதலால் நான் ஒரு நாள் சட்டி முட்டிச் சாமான்களை அப்படியே போட்டுவிட்டு, ஆடைகளைமட்டும் அணிந்துகொண்டு, நண்பருக்கு நன்றி கூறி, காட்டுப்புத்தூருக்கு வந்து சேர்ந்தேன். பிறகு ஸ்ரீராமசமுத்திரத்திற்கு அரிதாகவே சென்றேன்.

123. ஒற்றர் விழிகள்

இன்னும் சில சம்பவங்கள் என்னை உஷார்ப் படுத்தின. உலகில் நாளை என்ன நடக்கும் என்பது தெரியாது. உலகோர் நட்பு இன்று நெருங்கும்; நாளை நொருங்கும். எவரையும் நம்பி வாழ முடியாது. தானே தனக்கு உதவி; மனச்சாட்சியே வழிகாட்டி, உத்யோக உலகெல்லாம் பொறாமைக் காடு. ஒருவர் மேல் ஒருவர் கோள் ஏற்றுவது. முன்னே முகமன் பேசிப் பின்னே நரிவேலை செய்வது; ஒருவர் சோற்றில் ஒருவர் மண்போடப்பார்ப்பது; மெல்ல ஒற்று வேலை செய்வது. நமது வாயைப்பிடுங்கி வாழ்வைப் பிடுங்குவது. அவருக்கென்ன தெரியும் நானே மேதாவி என்னிடம் டியூஷன் வைத்துக்கொள் என்று போட்டியாடுவது. தக்காரைத் தாழ்த்துவது; காக்காய் பிடுக்கிகளை உயர்த்துவது, அடிமைகளை ஆதரிப்பது சுதந்தரமான நல்லோரை இது குற்றம் அது குற்றம் மன்னிப்புக்கேள், என்று விரட்டுவது. அதிலும் பொதுநலப் பணி புரிந்தால், அபாயம் அராஜகப் புரட்சி பண்ணுகிறான் என்று அதிகாரிகளுக்கு எழுதிவிடுவது—இப்படி எத்தனையோ இடுக்கண்கள். அலுவல்கூடம் கரடிச்சண்டையும் வெருகுச் சண்டையுமாயிருந்தது. இவற்றிடையே மற்றோர் எச்சரிக்கை.

பள்ளிக்கூடத்தில் சில திருநாட்கள் நடக்கும். வரவேற்புகள் நடக்கும். உபசாரங்களும் நடக்கும். அக் கூட்டங்களில் நான் பேசுவேன்; பாடுவேன். நாடகமும் நடக்கும் அனைத்திலும் நான் நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசுவதுண்டு. எனது நண்பர் வேங்கடரத்தினம் ஆங்கில ஆசிரியர் வேலையை விட்டு வக்கீலுக்குப் படிக்க லாகாலேஜுக்குச் சென்றார். அவருக்கு உபசாரப் பத்திரம் அளித்தோம். அந்தக் கூடத்திற்கு மீனும்பள்ளி ஜமீந்தார் வேங்கடாசல ரெட்டியார் வந்திருந்தார். சீர்திருத்தவாதி, சட்டசபைத் தேர்தலுக்கும் நின்றார். அவர் முன்னிலையில் நான் பேச நேர்ந்தது. ஆதலால் எனது தேசாபிமானத்தையெல்லாம் உணர்ச்சி ததும்பப் பேசித் தீர்த்தேன். கூட்டத்தில் ஒரு பேர்வழி என்னையே குறுகுறவென்று பார்த்தான்; அவனைப் பார்த்ததுமே யார், எப்படி வந்தான், எதற்காக என்று தெரிந்து கொண்டு, இன்னும் உணர்ச்சியுடன் பேசினேன். மற்றொருசமயம் பள்ளிக்கூட ஆண்டு விழாவின்போது தேசிய கீதங்கள் பாடினேன். கூட்டத்திற்கு சேலம் யக்ஞநாராயணையர், எம். ஏ. எல். டி., தலைமை வகித்தார். அவர் தாகூரிடம் பிரியமுள்ளவர். சாந்திநிகேதனத்தைப் பார்த்தவர்; அங்கே நிகழும் கல்வி முறையைப்பற்றிப் பேசினார். நான் அதையே தொடர்ந்து இங்கே நிகழும் கல்விமுறை, அதன் குறை, சர்க்காரின் அடக்குமுறை அனைத்தையும்பற்றிப் பாட்டாகப் பாடிவிட்டேன். கூட்டத்தில் அப்போது இருவர் கண்ஜாடை செய்துகொண்டனர். ஒருவர் குறிப்பெழுதினார். யக்ஞநாராயணையருடன் நான் தனித்துப்பேசி என் உள்ளத்தைச் சொன்னேன். "அடிமைப்பள்ளியை விட்டுச் சுதந்தரக் கலாசாலை நடத்தவேண்டும்" என்று நான் சொல்லும்போது ஒரு நண்பர் புகுந்தார். அவர் பள்ளிக்கூட ஒற்றரே. மறுநாள் தலைமை ஆசிரியர் என்னை அழைத்து நீண்டநேரம் பேசினார், "நீர் அரசியலில் தீவிரமாக ஈடுபடுகிறீர்: புகார் வலுக்கிறது. கவனமாயிரும்" என்றார். "இனிக் கவனமாகவே யிருப்பேன், கவனம் ஆகவே உயிர்ப்பேன்" என்று சொல்லி வந்தேன். அன்றிரவில் நீண்டநேரம் தியானித்தேன். இன்னும் ஓராண்டில் என் வாழ்வில் பெரிய மாறுதல்கள் ஏற்படும். அதற்குள் பாரதசக்தி மகாகாவியத்தை நிறைவேற்ற என்னைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும் என்று எழுந்தேன். அன்று முதல் சில மாதங்கள் என் காலம் கவிதை வெள்ளத்தில் நீந்தியது. அதற்கேற்ப புலவர் நட்புக் கிடைத்ததும் இறைவன் கருணையே.

124. புலவர் உறவு

கல்வி எல்லையற்றது. எல்லாம் அறிந்தவன் இறைவன் ஒருவனே. நாமெல்லாம் முயற்சியினாலும் பயிற்சியாலும் எழுச்சியாலும் வரும் அறிவைக் கொண்டவர்கள். என் அறிவு ஜபதப சாதனங்களால் உள்ளெழுந்தது. அந்த எழுச்சியைக் கொண்டு நான் உலகையும் மாந்தர் உள்ளத்தையும் அறிஞர் நூல்களையும் ஆராய்ந்தேன். உலகின்

முதன்மையான இலக்கியங்களை யெல்லாம் நான் படித்திருக்கிறேன். ஆனால் எதையும் நான் வருந்தி மனப்பாடம் செய்ததில்லை. பலவகை உரத்தையும் நீரையும் உண்டு, செடி தன் இயல்பைக்கொண்டு வளர்ந்து மலர்வது போலவே, கல்வியாலும் தியானத்தாலும் எனது இயலறிவு வளர்ந்தது. கல்விக்கு எனக்குப் பல புலவர் நட்பும், தியான சித்திக்கு யோகியர் நட்பும் கிடைத்ததும் இறைவனே அருளே. ஏனெனில் நான் எதிர் பாராமலே இவை கிடைத்தன. இந்த நட்புறவு இளமையில் நான் கற்று மறந்ததைப் பெறவும், புதிய அறிவை வளர்க்கவும், அந்த அறிவைப் பயன்படுத்திப் புதிய இலக்கியங்களை ஆக்கவும் பயனுனது.

நாராயண சாஸ்திரியார்

எனது வடமொழி அறிவை வளர்க்கச் சில புலவர்கள் நட்புக் கிடைத்தது. அவருள் கிருஷ்ணசாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள் ஆகிய இருவரும் முதன்மையானவர்கள். முன்னவரிடம் பாகவதம் கேட்டேன்; நாடக அலங்காரம் கேட்டேன். பின்னவர் பட்டம் பெற்ற புலவர். தர்சனக் கிரந்தத்திலும் ராமாயணத்திலும் காவ்யங்களிலும் நிபுணர்; ஆசார சீலர். இவரிடம் குமார சம்பவம் படித்தேன். சமுஸ்கிரதத்தில் கவனம் செய்யவும் சக்தி வந்தது. ஸ்ரீ ரமண கீதையும் படித்தேன். ஒரு நாள் அதனின்று ஒரு சுலோகம் சொன்னேன். நாராயண சாஸ்திரியார் "அடடா! ரமணவாக்கு...! நான் அவரைத் தரிசித்தேன்" என்றார். உடனே மஹரிஷிகளைப்பற்றி வினவினேன். ஸ்கந்தாசிரமத்தில் மஹரிஷிகளைக் கண்டு பேசிய கதையைச் சொன்னார். இந்த அறிமுகம் ரிஷிஞானத்தில் என்கருத்தைச் செலுத்தியது. இவர் ஸ்ரீ ராம சமுத்திரத்தில் குடியேறி ராமாயண காலக்ஷேபம் செய்தார். நானும் கேட்டுப் பயன் பெற்றேன். வால்மீகியின் புலமை என் காவியப் புலமையைத் தூண்டியது. அத்துடன் கரூரில் மகா மேதாவியான சமுஸ்கிரத பண்டிதர் (பெயர் ராமசாமி தீக்ஷிதர் என்று நினைவு) இருந்தார். நான் அடிக்கடி கரூர் சென்று அவரது காவியங்களையும் பாரத இதிகாசத்தையும் கேட்டு மகிழ்வதுண்டு. பாரத சக்திக்கு இவற்றால் ஓர் அரிய குறிப்புக் கிடைத்தது. வியாசர், வால்மீகி கம்பர் போன்ற முனிவர், மகா காவியங்களை எந்த நிலையில் இருந்து செய்தார்கள் என்பதை நான் உள்ளே அறிந்தேன். அந்தத் தியான நிலைக்கு என்னை உயர்த்திக் கொண்டேன். நான் எழுத வேண்டியது தமிழில்; அதற்குத் தமிழ் அறிவு நிரம்ப வேண்டுமே.

125. கோவிந்தசாமிப் புலவர்

வந்தார் கோவிந்தசாமிப் புலவர். என் ஆயுளில் மறக்க முடியாத நண்பர் இவர். பரம சாது: ஒழுக்கமும் பயபக்தி விசுவாசமும் கொண்ட ஆஸ்திக மணி. இவருக்காகவே நான் இவர் வீட்டுக் கடுத்த கூரைக் குடிலில் இருந்தேன்.

எங்களுடன் ஜமீந்தார் மகனுக்குத் தெலுங்கு சொல்லித்தரும், ஒரு புலவரும் சேர்ந்தார். அவர் தமிழிலும் பெரும் புலவர், யாப்பருங் கலப்புலவர். எங்களிடையே வீண் பேச்சே இராது. பள்ளிக்கூடம் விட்டதும், நேரே கோவிந்தசாமிப் புலவர் என்னிடம் வருவார். இருவரும் வரிசையாகச் சங்க இலக்கியங்களை ஆராயத் தொடங்கினோம். எல்லாரும் தமிழறிஞர். ஆதலால் நான் வேகமாகப் படிப்பேன். சந்தேகமான இடங்களில் பொருளாராய்ச்சி நடக்கும்; தர்க்கம் இராது. புலவர் சொன்னதே பொருத்தம். தொல்காப்பியம், யாப்பருங்கலம் தண்டியலங்காரம, தஞ்சைவாணன் கோவை, நன்னூல், நேமிநாதம் ஆகிய கருவி நூல்களை முடித்த பிறகு, திருக்குறள் ஒரே வாரம்; பிறகு கம்ப ராமாயணம்; உட்கார்ந்தால் நூறுக்குக் குறையாமல் கம்பப் பாசுரங்களை நான் பல ராகங்களில் தாளக்கட்டுடன் ஆவேசமாக வாசிப்பேன். புலவர் மிக நுட்பமாகப் பொருள் கூறுவார். சில நாட்கள் கம்பனை முடித்து, ஷேக்ஸ்பியர் ஷெல்லி. வால்மீகி, காளிதாஸன் முதலிய புலவருடன் ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. கம்பன் முழுதும் நான் மூன்று தடவை படித்தாயிற்று. ஷேக்ஸ்பியர் போல் கம்பராமாயணத்தை நாடகமாகச் செய்தால் பலருக்கும் எளிதில் விளங்கும் என்று நினைத்தேன். ஒரு வாரம் நான் என் குடிலுக்குள்ளேயே இருந்து எழுதினேன். கோவிந்தசாமிபிள்ளை எனக்கு உடம்பு நோயென்று பதறிப்போய் வந்தார். அவர் வந்த நாள் நல்ல மழை. ஐந்தரை மணிக்குப் பிடித்த மழை இரவு பத்து மணிக்கே விட்டது. அவர் என் குடிலை விட்டு வெளியே போக முடியவில்லை. அதுவும் நல்லது தானே...ஏன்...? "புலவரே என்னை ஒரு தீப்பற்றி விட்டது! கம்பனை நாடகமாக்கி, உலகிற்குக் காட்டவேண்டும் என்ற ஆர்வத்தீ... பாருங்கள் சுந்தரகாண்டத்தை; ஸ்ரீராம தூதன் என்று நாடகமாக எழுதி முடித்தேன்..." நாடகத்தை நடித்தே காட்டி விட்டேன், புலவர் பொழுது போவதே தெரியாமல் கேட்டு மகிழ்ந்தார். அவர் வாக்கிலிருந்து ஒரு வெண்பா புறப்பட்டது:

வரங்கொண்ட வாக்கால் வளர்நா டகமாய்
அரங்கேறி ஞன்கம்பன்; இன்பப்—பரங்கவிதை
கண்டேன் களித்தேன் கவிச்செல்வன் பாரதியை
எண்டிசையும் போற்றும் இனி.

"இம்மாதிரியே கம்பன் முழுதும் நாடகமாக்கும்" என்ருர் புலவர், அவ்வாறே இரவும் பகலும் அமர்ந்து இராமர் தியாகம், மாயமான், ராமதூதன் ஆகிய மூன்றையும் முடித்து, யுத்தகாண்டத்தை ஒரு ஆராய்ச்சி நூலாக எழுதினேன். கம்பனுடன் ஐக்கியமாவதற்கு இது ஒரு சாதனமா யிருந்தது. இதனிடையே சிலப்பதிகாரம், மணிமேகலை படித்தோம். சிந்தாமணியில் சில இலம்பகங்கள் படித்தோம். புலவர் தந்தை வைணவ கிரந்தங்களில் மேதாவி. அவர் முதியார். "தங்கள்

இனிய குரலால் திவ்யப்பிரபந்தம் கேட்கவேண்டும்'' என்று வேண்டினர். இன்னும் சில விஷ்ணுபக்தர்களும் கூடினர். நான் ''பல்லாண்டு'' தொடங்கி, தினம் நூறு பாசுரங்கள் படித்தேன். புலவர் இடையிடையே பொருள் கூறினர். நம்மாழ்வார் பாசுரங்களில் ''பொலிக பொலிக'' என்ற வாக்கு வந்தபோது. புலவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. அன்றிரவு ''என் சந்நிதிக்குவா'' என்று ஸ்ரீரங்கநாதர் சொன்னராம். புறப்படும் என்றார். கிளம்பினோம்.

126. ஜீயர்

ஸ்ரீரங்கத்தில் மார்கழித் திருநாள் நடந்தது. கோவிந்தசாமிப் புலவர் தமது ஆசாரியரான ஜீயர் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார். ஜீயர் என்னையும் வரவேற்று, என்ன ஜாதி என்று வினவினர்; ஸ்ரீமந் நாராயண கோஷ்டி; ''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'' என்றேன். பிறகு, நாமெல்லாம் அவனுடன் ஒன்றுபட்ட தொண்டரே என்று பல்லாண்டை விளக்கியதும், அவருக்கு என்னிடம் ஒரு மரியாதை பிறந்தது. அவர் ஆங்கிலப் பட்டம் பெற்றவர், வக்கீல்; திருவாய் மொழியும் தெரியும்; சிவில் கோட்மான் நூல் அதிகம் தெரியும். நானும் வணங்கினேன். காணிக்கைக்குப் பதிலாக ஒரு கவிதை செலுத்தினேன்:

வேணவே தங்கள் ஓதியும் எனது
　　வேதனை தீர்ந்தபா டில்லை;
நாணியுன் முன்னே நின்றனன் இன்றே
　　நாராண நம்பியே போற்றி!
ஆணவம் போக்கி, ஆசைநோய் தீர்த்தேன்,
　　அன்பினில் உன்னருள் காட்டி,
காணவும் அரிய கடவுளே எனது
　　காதலிற் சலந்திடு வாயே!

நாரண எனினும், ஓம்சிவம் என்று
　　நவிலினும் உயர்பொருள் ஒன்றே.
ஆரணந் தனிலும், அல்குரான் அதிலும்
　　தன்னுள்ளே ஆழ்ந்தவர் கண்ட
பூரணப் பொருளே பொருளென உணர்ந்து
　　புனிதமே வாழ்வெனப் போற்றிப்
பேரணுவான உலகிலே உனது
　　பித்தனாய்த் திரிந்திட அருளாய்.

ஜீயர், எனக்குப் பிள்ளை லோகாசாரியாரின் தத்வதரயத்தை, ஆங்கிலத்தில் நன்றாக விளக்கினர், அவர் மனைவியும் மகளும் திருவாய்

மொழி படித்தவர்கள்; காலையில் சுப்ரபாதம் பாடி எழுந்து, காவிரியாடி, திருவாராதனத்திற்கு எல்லாம் கழுவித் துடைத்து வைத்து, பாசுரம் பாடிக்கொண்டே சமைப்பார்கள்.

ஜியர் கேஸ் கட்டுகளைக் கவனித்து வந்து குளித்து, பெருமாள் திருஆராதனம் செய்து, நிவேதனம் காட்டியதும், 'அமிசயிக்க வரலாம்' என்றார். நான் வைணவர் வீட்டு வழக்கப்படி குறிப்பறிந்து, துவாதச நாமங்கள் பலமாகப் போட்டேன், எனது நண்பர் கொண்டுவந்த நாமக்கட்டியில் முக்கால் பங்குக்கு மேல் நானே கரைத்து விட்டேன். திருவாய்மொழியும் ஓதினேன். எனினும், என்னை அவர்கள் திரைக்குப் பின்னால் இருந்தே அமிசயிக்கச் செய்தனர். 'பிராமணர் முன்னே, பிள்ளை பின்னே,' என்றாள் அம்மா. "அம்மா நாங்கள் இருவரும் ஒருவரே; சேர்ந்தே உண்போம்" என்றேன். கொஞ்சம் தர்க்கம் நடந்த பிறகு, நானும் கோவிந்தசாமி பிள்ளையும் உடனுண்டோம். உண்டபிறகு ஜியர் என்னிடம் நித்தியானுஸந்தானத்தைக் கொடுத்து, கோர்ட்டுக்குச் சென்றார். புலவருடன் நான் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்குச் சென்று, அதை ஓதினேன்.

மார்கழித் திருநாளுக்கு எத்தனையோ கடை கண்ணிகளெல்லாம் வந்திருந்தன, என் அன்புப் புலவர் புத்தகக் கடையைத் தேடிச் சென்றார். அங்கே பழம் புத்தகக் கடை ஒன்று இருந்தது. அதில் துளாவினோம். அரிய பல நூல்கள் வாங்குவாரின்றிக் கிடந்தன. தமிழைத் தமிழர் புறக்கணித்தனர்; கடைக்காரர், "ஐயா என் அப்பா இப்படிப் பல நூல்கள் அச்சிட்டார். பெருத்த நஷ்டம்; அச்சகத்தை விற்றார். ஏலம் போட்டுச் சில நூல்களைப் பாதி விலைக்கு விற்றார். மீதி இந்தக் கதியானது. பிரியமான விலை கொடுத்து எடுத்துச் செல்லுங்கள்" என்றார். நான் அவர் கையில் பதினைந்து ரூபா தந்து, சில அரிய நூல்களைக் கொண்டேன். அவற்றுள் புலவர் தமக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டார். எனக்குக் கம்பராமாயணம்; பெரிய புராணம், திவ்யப் பிரபந்தம் இவை கிடைத்தன. கடைக்காரர் "என் அப்பா உங்களைப் பார்த்திருந்தால் புளகாங்கிதமாவார்" என்றார். நூற்செல்வத்தைச் சுமந்துகொண்டு வெளியே வந்தோம் எனது நண்பன் வால்மீகி நாதன் "ஹல்லோ வாருங்கள்" என்று ஸ்கௌட் சலாம் வைத்தான். சாரண பாஷையில் நாங்கள் நலம் விசாரித்துக்கொண்டோம். "புத்தூரில் எங்கள் மாளிகையில் தாங்கள் வந்து ஒரு நாள் தங்கவேண்டும்" என்று அழைத்தார். "வந்தனம் அடுத்த வாரம் புதன்கிழமை வால்மீகி விலாசத்தில் இருப்பேன்' என்று சொன்னேன். அவர் எனது நூல் ஒன்றை வாங்கிக் கொண்டு சென்றார்.

புலவர் பரபரப்புடன் "வாருங்கள் கேளுங்கள்" என்றார். பின்னே சென்றேன். நம்மாழ்வார் பாசுரம் கண்ணன் குழல்போல் எங்களை வசீகரித்தது. ஒரு வைணவ பாகவதர் கோஷ்டியுடன் ஒரு மடத்தில்

திருவாய்மொழி பாராயணம் நடத்தினர். நான் நூலைத் திறந்து வைத்துக் கொண்டு பாராயணம் கேட்டேன். கூடப்பாடினேன். புலவர் தேனுண்ட வண்டு போல் அப்படியே சொக்கி நின்றார்.

யாவரையும் எவரும் தானாய் அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும் சொலப்படான்
உணர்வின் மூர்த்தி ;
ஆவிசேர் உயிரின் உள்ளான் யாதுமோர் பற்றிலாத
பாவனை அதனைக் கூடில் அவனையும் கூட லாமே.

என்ற நம்மாழ்வார் பாசுரம் என்னை வசீகரித்தது. பாராயணம் முடிய மாலை ஐந்தரை மணியானது.

127. விநோத பாகவதர்.

அதன் பிறகு நான் ஒரு விநோத பாகவதருடன் அளவளாவினேன். அவர் என் பட்டை நாமத்தில் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். நானும் விநோதமாக பதிற்சொன்னேன். "தேவாள் எந்த திவ்ய தேசம்" "எல்லாம் சுதேசந்தான்?" "என்ன குலமோ?" "மனித குலமே" 'திருநாமம்?' 'நாராயணா என்னும் நாமம்'. எங்கே அமிசை?' 'கிடைத்த இடத்தில் தான்' 'அது வைஷ்ணவ தர்மமில்லையே' ஸ்மார்த்தன் பார்த்து சாப்பிடக் கூடாது. அவன் கையால் ஜலபானம் செய்யக் கூடாது, என்றெல்லாம் வீர வைஷ்ணவம் பேசினர். "சுவாமீ, நீர் திருச்சிராப்பள்ளிக்குப் போகிறீர்; பசி கிண்டுகிறது. அப்போது ஒரு சிவபக்தன் அன்னமளிக்கிறான்; உண்பீரா மாட்டீரா?" "ஹரி, ஹரி, மாட்டவே மாட்டேன். அசல் பிராமணன் முன்னே கூடத் திரைபோட்டுத்தான் சாப்பிடுவேன்" இந்த மாதிரி அவர் பேசவே நான் திருப்பாணாழ்வார் பிரசாதம் தந்தால் சாப்பிடுவீரா என்று கேட்டேன். கோவிந்தசாமிபிள்ளை நம்மாழ்வார் தந்தால்—? என்றொரு கேள்வி போட்டார். ஆள் பதில் சொல்லவில்லை. நாங்களும் காவேரியில் நீராடி சந்தி ஜபம் செய்து, ஜீயர் வீட்டுக்குச் சென்றோம். புத்தக மூட்டைகளை வைத்தோம் வீட்டு அம்மாள் விளக்கேற்றி "இப்படியிருங்கோ, ஆசாரியாள் வந்ததும் அமிசயிக்கலாம்" என்றாள், நான் "அம்மா இன்று பெருமாள் பிரசாதம் ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றேன். புலவர் என் குறிப்பையறிந்தார் "ஆம் அம்மா, நாங்கள் அரங்கநாதர் சேவை செய்து அங்கேயே அமிசயித்து வருகிறோம்" என்றார். இருவரும் கோயிலை நோக்கும் போதே புலவர் "என்ன அப்படிச் சொன்னீர்கள்? ஆசாரியார் மனையில் சாப்பிட்டிருக்கலாமே... நானை எங்கே சாப்பிடுவது?" என்று வினவினர். 'கம்பரே' ஜீயர் குடும்பி; வக்கீல் தொழிலில் வரும்படியில்லை. சிஷ்யார்ச்சனத்திற்கும் இந்தத் தெருவில் போட்டி அதிகம். ஐந்தாறு ஆசாரியர் இங்கே

சிஷ்ய வேட்டையாடுகிறார்கள். ஆதலால் நாம் நமது உணவிற்காகக் குடும்பிகளை எதிர்பாராமல் இருப்பது நலம்.'' என்றேன். ',இல்வாழ்வான் தங்களைப் போன்ற துறவிகளை உபசரிக்க வேண்டியது ''தானே.'' என்று திருக்குறள் பேசினர் புலவர். ''புலவரே எனது கொள்கை தலைகீழ். துறவிகளே இல்லறத்தாருக்குத் தொண்டு செய்ய வேண்டும். இவன் ஒருவன்; குடும்பத்தார் பலர்; அத்தனை பேருக்கும் கஷ்டப் பட்டுச் சம்பாதித்துச் சோறு போட வேண்டும். நாமும் ஊடே புகுவது நாகரிகமாகாது. நீர் கவலைப்படாதிரும்; வாரும் தேசாந் தரிக்கட்டளைக்கு'' என்றேன். புலவர் ''அங்கே பிராமண வைஷ்ண வர்களுக்கே ததியோன்னம் புளியோதரை தருவார்கள்'' என்றார். பேசாமல் ''வாரும்'' என்று சந்நிதிக்கு அழைத்துச் சென்றேன். அங்கே பல்லாண்டு பல்லாண்டு என்று தொடங்கி, ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி, ஊரிலேன், காணியில்லேன், வேத நூற் பிராயம், உளன் கண்டாய், பொலிக பொலிக எல்லாம் பாடி, பரங்யாசத்திற்குத் தண்டம் சமர்ப்பிப்பது போல், விழுந்து விழுந்து பள்ளிகொண்ட பெருமாளைச் சேவித்தேன். புலவர் கண்ணன் கழலிணை பாடிச் சேவித்தார். எங்கள் உள்ளம் உண்மையாகவே பெருமாளிடம் ஈடுபட்டிருந்தது. 'மனக்கால் நம்பி பேரின்பச் செல்வம் இதுவே' என்று ஆளவந்தாருக்குக் காட்டிய அரவணைச் செல்வத்தில் நான் மையல் கொண்டேன்.

ஆண்டாளைப் போலேநம் ஆழ்வாரைப் போலவே
வேண்டினேன் அன்பு விளக்கொளியே—ஈண்டுலகில்
உன்னையே காதலித்தேன்; உன்பணிக்கே ஆளானேன்
என்னையாள் எம்பெருமானே.

என்று வணங்கி வெளியே பிராகாரத்திற்கு வந்ததும், 'தேசாந்திரி ப்ரசாதத்துக்கு எழுனும்' என்று ஒருவர் அழைத்துச் சென்றார். எதிர் பாராமல் வந்த உபசாரத்தை ஏற்றோம். பிரசாதம் உண்டெனக் கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு புஷ்கரணிக்கு வந்தோம். வந்தார் விநோத பாகவதர். அமிசையாச்சோ...? இதோ அமிசயிக்கப் போகிறோம்...? பெருமாள் பிரசாதமா... ஆஹா...கொடுத்துவைத்த வர்கள்; தாஸனுக்குக் கிஞ்சித்'' என்று பொடிப்பட்டையை 'உறுஞ்சி ஒரு தும்மல் போட்டார். பாகவதர்...''பொடியமுது என்ன இப்படி மூக்கில் ஏறுகிறது...'' என்றேன். ''எல்லாம் அவன் செயல்'' என்று உடன் வந்தார். புஷ்கரணியில் நல்ல படி பார்த்து உட்கார்ந்தோம். எனக்குத் தயிர்ச்சோறு அதிகம். ஆதலால் அவருக் குப் பாதி கொடுத்தேன். கோவிந்தசாமி பிள்ளை கொஞ்சம் தந்தார். அத்தனையும் அள்ளி யடைத்துவிட்டு மற்றொரு சிம்டா பொடியமுதை உறுஞ்சி, ''அரங்கத்தம்மா பிரசாதம் இன்று சாஷாத் ஸத்வைஷ்ணவ பிராமணர் கையால் கிடைத்தது. அஹோபாக்யம்' என்றார். நான் கையைக் கழுவிக்கொண்டு தண்ணீர் பருகக் காவிரிக்குச் சென்றேன்.

ஏனெனில் கோயில் புஷ்கரணித் தண்ணீரில் பாசி அதிகம். குடிக்க லாயக்கில்லை. என் உள்ளே போகிற பண்டம் சுத்தமாயிருக்கவேண்டும். பாகவதரும் கூடவே வந்தார். வழியில் பலகாரக்கடை யிருந்தது. விநோதர் "பெருமாள், இங்கே கொஞ்சம் அமிசயிக்கலாமே. ஸ்ரீரங்கநாதர் பார்வையி லிருக்கிற பட்சணக் கடையும் பிரசாதக் கடையே" என்றார். "அப்படியானால் கருட மண்டபத்தில் உருட்டி வைத்து விற்கும் பழையதும் பிரசாதமோ" என்று கேட்டேன்.

காவிரியைப் பருகினோம். படியில் அமர்ந்தோம் "வைஷ்ணவ பிராமணாள் தந்ததெல்லாம் அமுதமே." என்றார் பாகவதர். "ஐயா நான் நாமம்போட்ட ஸ்மார்த்தன்; சாங்கராத்வைதி; இதோ பாரும் விபூதி" என்று நாமத்தை அழித்து, விபூதி பூசினேன். "நாராயண நாராயண ஹரி ஹரி" என்று தலையில் அடித்துக்கொண்டார் பாகவதர். அதுமட்டுமா, உமது பசிக்கு அன்னமளித்த இவர் வேளாளர். என்றதும், "ஐயையோ" என்று நெஞ்சில் அடித்துக்கொண்டார். "இல்லை ஐயா நம்மாழ்வார் குலம்" என்றேன். இனி என்ன? சோறு உள்ளே போய்விட்டது. "ஐயா எச்சாதியரானாலும் நாராயணா என்று பக்தி செய்பவரே நாம் வணங்கும் கடவுள், என்று ஆழ்வார் பாடியிருக்கிறாரே" என்று திருவாய்மொழியைக்கொண்டே அவர் வாயை அடக்கினேன். பாகவதர் நமது பக்கம் திரும்பினார். தமது சுய சரித்திரத்தை ரசமாகச் சொன்னார். அவர் ஸ்ரீரங்கம் பேர்வழியே...மனைவியை வெறுத்துக்கொண்டு தேசாந்திரியாகப் புறப்பட்டார். மனைவியும் அவரை அலட்சியம் செய்தாள். அந்த ஏக்கமே தூக்கம் வராமல் இவரை வேதனைப் படுத்தியது. அவருக்கு நான் ஆறுதல் சொன்னேன். மூவரும் பிரபந்தம் படித்தோம். மூன்றுநாளில் அவரது பொடிய முதை ஒழித்தது, எனக்கு வெற்றி.

128. கோயிற் கலை

ஜீயரைமட்டும் காலையில் பார்த்துவிட்டு ஊரைச் சுற்றினோம். பல நல்லோர் உறவு கிடைத்தது. ஒரு நண்பர் 'இங்கே பிரசங்கம்' என்று அழைத்துச் சென்றார்; சென்றோம் லண்டனிலிருந்து பின் சாரப் பட்டம்பெற்ற ஒரு கனவான் தலைமையில், ஊர் வாலிபர் சபை கூடினர். நாங்களும் சபையில் அமர்ந்தோம் லண்டன் பட்டதாரி கோவில், குளம், வேதம், கீதம் எல்லாம் மூடர்வேலை என்று கண்டித்து, வெப்ஸ்டர் அகராதியெல்லாம் விறுவிறுப்பாகக் கொட்டினார். அவரை ஒரு வைதிகர் தாக்கிப் பேசினார். சபை இரண்டானது. கூச்சல் வலுத்தது. காரியதரிசி "நீங்கள் கொஞ்சம் பேசவேண்டும்" என்று அழைத்தார். 'தலைவர் ஒப்பினால் பேசலாம்' என்றேன். தலைவர் "இப்போது நம்மிடையே வந்திருக்கும் ஒரு பண்டிதர் கோவில் சம்பந்தமாகப் பேசுவார்" என்று என்னைக் கலக்காமலே கூறிவிட்

டார். நான் அவர் மேஜையருகே நின்று தமிழில் பேசினேன். அதன் சுருக்கமாவது :

நமது முன்னோர்கள் கலையையே கோயிலாக்கினார்கள். நாம் கோயிலைக் கலையாக்கவேண்டும். இன்று ஸ்ரீரங்கம்போல் இன்னொரு கோயில் கட்டுதல் அரிது. இக்காலத்தில் "கோயில் எதற்கு? அங்கே அர்ச்சகர் தட்சிணையும் உண்டைக்கட்டிச் சண்டையும் தேவதாசிகள் நடனமுமே மிச்சம். எல்லாம் இருள்மூடிக் கிடக்கின்றன. வௌவால்களே இங்குமங்கும் அசுத்தை தூவி, நாலுமூலை தாவி விளையாடுகின்றன" என்கின்றனர். நமது முன்னோர் வேதாகம தர்மத்தையே கோயிலாகக் கட்டி, எல்லாருக்கும் தெய்வ உணர்ச்சி பெருகச் செய்தார். அவர்கள் செதுக்கிய சிற்பங்கள் கல்லிற் பேசும் காவியங்கள். ஆடல் பாடல் அழகு எல்லாம் நமது கோயிலில் தெய்வச் சுவையேறி விளங்குகின்றன. யோகிகள் தியானக் காட்சியிற் கண்ட தெய்வ சேதன வடிவங்களே நமது விக்கிரகங்கள். அவற்றைக் காணும்போது, நாம் கல்லைக் காண்பதில்லை. கல்லிலும் செம்பிலும் பொதிந்து விளங்கும் தத்துவத்தையே கண்டு வணங்குகிறோம். நமது நாட்டு நாகரிகம் இந்த அருட்கோயிலைச் சுற்றியே அமைந்தது. இக் கோயில் தொண்டர்கள் நமது தொண்டின் பயனை இறைவனுக்கே நிவேதிக்கிறார்கள். அருட்பாவலர் தமது வாக்கினால் உள்ளக் கோயிலானை உருக்கமாகப் பாடினர். அந்தப் பாடல்களே நமக்கு அமர காவியங்களாகவும் வாழ்வுக்கு வழிகாட்டும் வேதங்களாகவும் இன்றும் என்றும் உதவுகின்றன. காலக்கோளால் நமது சமுதாயத்தில் பல தீமைகள் படர்ந்தன; நமது கோயிலில் இருள் மேவி அருள் குறைந்துபொருள்,வேட்டை அதிகமானது.கோயிலைச்சுற்றி இன்று சாதிமதச் சண்டைகளும் கோர்ட்டு விவகாரங்களும் வலுத்தன. சிற்ப அற்புதங்கள் அழுக்குப்பிடித்து மங்கி மழுங்கின: "நான் சைவன்! நீ வைணவன்; அவன் வடகலை இவன் தென்கலை" என்று நாம் சண்டை போடுகிறோம். காலனை நாமக்கட்டி லட்ச ரூபா கோர்ட்டு விவகாரத்தை இழுத்து விடுகிறது. நமது நாடும் சமயமும் உருப்பட வேண்டுமானால், முதலில் ஒருமையான சமநோக்கம் வேண்டும். ஸ்ரீரங்கக் கோயிலுக்குச் சிலர் திரு ஆனைக்கா வழியே, சிலர் காவிரி தாண்டி, சிலர் சிந்தாமணிப்பாலம் தாண்டி வருகின்றனர். பாதை பல : கோயிலும் குறிப்பும் ஒன்று. சைவம் வைணவம் ஆகிய சமயங்களின் லட்சியம் ஒரே பரம்பொருள் அடைவே. சிவனை வணங்கிய திருத்தொண்டரும், திருமாலை வணங்கிய ஆழ்வாராதிகளும் பல வகுப்பினராவார், எல்லாருக்கும் இதயேசனான இறைவன் பொதுப் பொருள் ; இந்தச் சமரச உணர்வில்லாது சமயவாதம் பேசுதல், வேரை வெட்டி மரத்திற்கு நீர் வார்ப்பதுபோலும். ஆன்மநேய ஒருமையை அடிப்படையாகக் கொண்டுதான் நமது வாழ்வுச்சோலையின் தத்துவங்கள் செழித்து வளர வேண்டும். சிதம்பரமும் நடராஜன் ஆடரங்கம், ஸ்ரீரங்கம் அரங்கநாதப் பெருமாள் ஆடரங்கம். அவர் சிற்சபையில்

ஆடுகிறார். இவர் இதயக்கடலில் குண்டலிப் பாம்பின் மேலே துரிய யோகத்திலிருந்து திருவிளையாடல் புரிகிறார். அங்கு நந்தனார் இங்கு திருப்பாணர், முத்தி பெற்றனர். முனிவாகனர் திருக்குலப் பாணரை முதுகில் சுமந்துவந்து சந்நிதானத்தில் விட்டார். பழமையைப் பழங் கண்ணால் நாம் பார்த்துப் புதுமையைப் புத்துணர்வுடன் வரவேற் போம். சிலர் ரஷ்யாவைக் காப்பியடிக்கப் பார்க்கிறார்கள். ரஷ்யப் பொதுவுடமையைவிட நமது தார்மீக வாழ்க்கை சிறந்த பொதுநலப் பண்புடையது.

நம்மவர் அருளுடைமையை விளக்கினார்கள், தான தருமங்களால் ஒரு செல்வன் தன் பொருளைப் பலர் வாழப் பங்கு வைக்கிறான். கோயில் காணிக்கைப் பணம் பல திருத்தொண்டருக்கும் கலைத்தொண்ட ருக்கும் பயனாகிறது. கோயில் மணியோசை நமது நாகரிகக் கலையின் ஜய நாதமாயிருக்கிறது இந்தக்காலம் கோயில் சொத்தைக்கொண்டு சமயக் கல்லூரிகள் அமைக்கலாம். நன்மாணவருக்கு உணவும் கல்வி யும் தரலாம். சன்மார்க்க நூல்களை ஏராளமாக அச்சிட்டுத் தரிசனத் திற்கு வருவோருக்கு வழங்கலாம். நம் அருட்செல்வங்களான திவ்யப் பிரபந்தம் தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் பாராயணம் செய்யலாம். ஆண்டுதோறும் சாதன வகுப்புக்கள் நடத்தலாம். தக்க யோக முனிவரைக் கோயில்கள் ஆதரித்துத் தவம்புரியச் சொல்ல லாம். நாம் வாழ்க்கைக் கோயிலையும் திருத்திப் புதுமை பெறவேண் டும். சாதி மதச் செருக்கு, தீண்டாமை, மடமை, வறுமை, அடிமைத் தனங்களை ஒழித்து, நாட்டையே சுத்த சுதந்தர சமத்துவக் கோயி லாக்கவேண்டும். முதலில் உங்கள் வாழ்வில் மனோ, வாக்கு, காய சுத்த மும், ஆத்ம சுதந்தரமும், அன்புச் சமரசமும் நாட்டுங்கள். அவரவர் திருந்தினால் அகிலமும் திருந்தும்.''

இந்தப் பிரசங்கத்திற்குப்பிறகு ஸ்ரீரங்கத்தில் எனக்குப் பல நண்பர் கிடைத்தனர், மேலும் என்னுடன் ஆசிரியராயிருந்த கிருஷ்ணயங் கார் என்னைப் பலருக்கும் அறிமுகப்படுத்தினார். முக்கியமாக நான் வாணி விலாஸ் அச்சகத்தையும் அங்கே டி. கே. பாலசுப்பிரமணிய ஐயர் செய்துள்ள வேதாந்த அற்புதங்களையும் கண்டு மகிழ்ந்தேன். சங்கரர் நூல்களை அவர் அழகாகப் பதிப்பித்திருந்தார். நரசிம்ம பாரதிகளைப்பற்றி அவர் ரசமான விஷயங்களைச் சொன்னார். நான் புலவர் குருமூர்த்தி ஐயரைக் கண்டேன், முதிய பழுத்த புலமையுடை யவர்; அவர் அருமையை அந்தக்காலம் அறியவில்லை. வகுப்புவாதம் புகாமல் மேதாவிகளைத் தமிழர் ஆதரிக்கவேண்டும்.

பொய்யும் வசையும் பொறாமைச் செருக்குமற
மெய்யன்பு மேதை விளங்குகவே—தெய்வத்
திருவருளைப் பாடித் திருத்தொண்டு செய்யும்
குருவருளை நாளும் குறித்து.

என்றொரு பாடலுடன் விடை பெற்றுக் கொண்டோம். அவரே எங்களுக்கு நாஷனல் கல்லூரிப் புலவர் பழனியப்ப பிள்ளையை அறிமுகப் படுத்தியவர். இன்னும் ஸ்ரீரங்கத்தில் பழனிசிவத்தின் கதா காலக்ஷேபம் கேட்டேன். இராமதாஸ் கதை ரசமாயிருந்தது. பாகவத விளக்கம் கேட்டேன். உத்தவ ஸம்வாதத்தை ஒரு பக்தர் மிக நன்றாக விளக்கினார். இப்படிப் பல அனுபவங்கள் பெற்று, ஜீயர் ஆசியுடன் நாங்கள் திருச்சிராப்பள்ளிக்கு வந்தோம்.

129. உச்சிப் பிள்ளையார் முன்

திருச்சியில் எனக்கொரு மோகம். அதைத் தமிழகத்தின் தலைநகராக்கவேண்டும். உச்சிப்பிள்ளையார் கோயில் சிகரத்தில் நமது நாட்டுக்கொடி பறக்கவேண்டும். நானும் புலவரும் திருஆனைக்கா தரிசனம் செய்தோம். தீவிர வைணவராகிய அவர் சிவதரிசனம் செய்து, நான் தந்த விபூதியையும் நெற்றியில் சிறிது வைத்துக்கொண்டதும் எனக்கு உள்ளம் குளிர்ந்தது.

அரங்கமும் காவும் அருகருகே ஆனந்தத்
தரங்கத்தி லாடித் தவழும்—பரம்பொருள்
ஒன்றதுவே மூன்றாய் உலகில்விளை யாடிவரும்
என்றறிந்து நின்றால் இனிது.

இந்த வெண்பாவை நான் பாடியதும் வீர வைணவரான புலவர் அரங்கனும் சிவனும் தரங்கமும் ஆறும் போல் என்றார். அங்கிருந்து நாங்கள் சிந்தாமணிப் பாலத்தைக் கடந்து திருச்சி சேர்ந்து, உச்சிப்பிள்ளையார் கோயில் படி வேறுமட்டும் சிலப்பதிகாரப் பேச்சும், கரிகாலன் பேச்சுமே. நான் ஒரு நண்பன் வீட்டு மச்சுப் படியில் ஏறுவதுபோல மகிழ்ச்சியுடன் ஏறி தாயுமானவரை தரிசித்து, உச்சிப் பிள்ளையார் கோயில் முன் காற்றாட அமர்ந்து, சுற்றிப் பார்த்தேன். 275 அடி உயரத்திலிருந்து ஒன்றரை லட்சம் அடங்கிய அந்த முத்தலையான் ஊரைப் பார்க்க, ஆனந்த அலைகள் பொங்கின. புலவரும் மெதுவாக வந்து சேர்ந்தார். "சுற்றிப் பாருங்கள். கண்டோன்மெண்டு அதோ பட்டாளம், பாலக்கரை, புத்தூர், தென்னூர், அங்கே உறையூர், கோட்டை, சிந்தாமணி, வரகநேரி, தேவதானம். அதோ காவிரி இந்த ஊர்களை மாலையிட்டுச் செல்லுகிறது" என்று அவர் காட்டினார். நான் உறையூர் பக்கம் பார்த்தேன். என் உள்ளம் கும்மிதட்டிக் கூத்தாடத் தொடங்கியது.

முத்தலை அண்ணலின் ஊரிதுவே-ஐயா
முத்தமிழ்ச் சோழரின் ஊரிதுவே
சித்தர் தாயுமானார் ஊரிதுவே-புகழ்ச்
சிகரஜோதியாய் வாழியவே.

இந்த மலைக் கோட்டைக் கோபுரத்தினின்றே
எட்டுத் திசையிலும் பார்த்தவிழி
சந்தமலைநதி ஓடுகின்ற-தமிழ்ச்
சங்கப் புகழை நினைக்குதையா.

சிலம்புச் செல்வம் குலுங்கிடவே-பொன்னி
திருமாவளவனைப் பாடுகின்றாள்
கலங்கள் புலிக்கொடி ஏந்திநம் வீரத்தைக்
கடல்கடந்து முழங்குமையா.

இவ்வாறே பாடியும் எழுதியும் இந்திய சரித்திரக் கும்மி யாத்தேன். புலவர் இடையிடையே புறநானூற்று வீரரையும் வள்ளல்களையும் பற்றிச் சொன்னார். நடுநடுவே எழுந்து உறையூர்ப் பக்கம் பார்ப்போம். பாரந்தக சோழன், திருமாவளவன் காலத்தை நினைப்போம். வளவன் கட்டிய கல்லணையைக் கான ஆவல் கொள்வோம். தமிழரின் எஞ்சினிரிங் திறத்தை வியப்போம். கோச்செங் கண்ணன் அமைத்த திரு ஆனைக்காவைப் பார்ப்போம்; குலோத்துங்கன் காலத்தில் ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும், கம்பனும் கவி வளர்த்ததை நினைத்துப் பெருமிதம் கொள்வோம். இராசராச சோழனும் இராசேந்திர சோழனும் தென்னாடு முழுதும் வென்று, இலங்கை, பர்மா, மலாய், ஜாவா நாடுகளையும் வென்று, தமிழ்ப் பேரரசு நாட்டிய நாளை நினைப்போம்; பிறகு பல்லவர் காலத்தில் நமது சிற்பக்கலை முன்னேறியதைக் காண்போம். மகேந்திர பல்லவன் இங்கே அமைத்த் பல்லவன் குகையில் சிறிது புகுவோம். விஜயநகர ராயர்களின் ஆட்சியை நினைப்போம். ஸ்ரீரங்கம் ராயகோபுரம் எதிரே நிற்கும். நாயக்கர் படைகள் பாண்டி நாட்டைவென்று புரந்ததை எண்ணுவோம். திருச்சியில் விசுவநாத நாயக்கர் தொட்ட தெப்பக்குளம் அதோ உள்ளது. அவன் கட்டிய கோட்டை இடிந்தது. மங்கம்மாள் கட்டிய மண்டபம் நகர மண்டபமாயிருக்கிறது. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் நடந்த தானதருமங்களை நினைப்போம். தாயுமானவரும் சதாசிவரும் ஞானஒளி வீசியதை நினைப்போம். பிறகு இராணி மீனாட்சியின் ஆட்சியில் சந்தாசாகெபின் திருவிளையாடல்களும், ராணி நஞ்சை உண்டு இறந்ததும், திருச்சி நவாபு ஆட்சியில் வந்ததும்; ஆற்காடு முற்றுகைக்குப் பிறகு ஆங்கிலக் கொடிக்கு வந்த அதிட்டமும் நினைத்தோம். நமது துரதிட்டத்தை எண்ணிக் கலங்கினோம். 1800-ல் கர்னாடகம் முழுதும் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்தது. 1811 முதல் ஆங்கிலக் கலெக்டர் திரிசிரபுரத்தின் ஊரை ஆண்டார். உறையூர் மாண்பெங்கே? காவிரிப் பட்டினத்தின் கப்பல் வாணிகமெங்கே? எல்லாம் மாய மாயின. காலவெள்ளம் உலகை எப்படி யெல்லாம் மாற்றுகிறது! அதோ ஆடும் ஆங்கிலக் கொடியும் நாளை இறங்க வேண்டியது

தான். அதனிடத்தில் இந்தியக் கொடி ஆடும். ஆம் ஆடும்...என்றெல்லாம் சிந்தனை செய்து கொண்டே கீழே இறங்கினோம். நேரம் போனதே தெரியவில்லை, நாஷனல் கல்லூரியை நோக்கிச் சென்றோம்.

130. கோபாலகிருஷ்ணையர்.

வழியில் நான் மலை வாழைப்பழமும் நிலக்கடலையும் வாங்கிப் பசி தீர்த்துக் கொண்டேன். புலவர் சுத்தமான பலகாரக் கடையில் புகுந்து சுசிருசியாக உளுத்தம் வடையும் போண்டாவும் சாப்பிட்டு மோர் குடித்து வந்தார். நாங்கள் கல்லூரி வாசலை அடைந்தபோது, மணி அடித்தது ; கல்லூரி மூடும் சமயம், "வாருங்கோ வாருங்கோ!" என்றொரு சத்தம் கேட்டது. என் அருமை நண்பர் பண்டித கோபால கிருஷ்ணையர் முன்னே நின்றார். "நமஸ்காரம், இவர் எனது நண்பர் கோவிந்தசாமிப் புலவர். இருவரும் கல்லூரியைப் பார்க்க வந்தோம்" என்றேன். "நன்றாக வாருங்கள்..." என்று பண்டிதர் அழைத்துச் சென்று, சாரநாதருக்கு எங்களை அறிமுகப்படுத்தினார்; அவரே கல்லூரிச் சரித்திரத்தை உருக்கமாகச் சொன்னார். அது 1836-ம் ஆண்டு உயர் பள்ளியாகத் தொடங்கியது. 1904-ல் நானூறு மாணவருடன் கல்லூரியானது. ஹைஸ்கூலில் சுமார் ஆயிரம் மாணவர்கள் படித்தார்கள். கல்லூரி ஐம்பது அங்கத்தினரால் நிர்வகிக்கப்படும். சேஷ ஐயங்கார், சாரநாதர், ராமையர் முதலிய சிலர் தியாகத்தால் கல்லூரி செழித்தது. கொடியாலம் வாசுதேவையங்கார், உடையார்பாளையம் ஜமீந்தார், ஆண்டிபட்டி பெத்தாசி செட்டியார் போன்ற பல செல்வர், இக்கல்லூரிக்குப் பொருள் உதவினர். சாரநாதர் ஆங்கிலப் பெரும்புலவர், கவிஞர், பிரமசாரி, வாழ்வை தேசியக் கல்லூரிக்கே பலிதானம் ஆக்கியவர். தமது தேவையளவே செலவிட்டு, மிச்சத்தைக் கல்லூரிக்கே தானமாகத் தரும் தியாகி. அவர் கல்லூரியைச் சுற்றிப்பார்த்து நாங்கள் கோபாலகிருஷ்ணையர் வீட்டுக்குச் சென்றோம். இவர் மதுரை நச்சினார் தமிழ்ச் சங்கப் புலவர், பாண்டித்துரைக்குக் கண்ணாயிருந்தவர். பாஸ்கர சேதுபதியுடன் விவேகானந்தரை வரவேற்ற புலவருள் ஒருவர். மதுரைக் கல்லூரி தமிழ் ஆசிரியர். மதுரையில் இவரை நான் கண்டு பழகியதுண்டு. மதுரையில் இவருக்கு நல்ல மதிப்பு, அதை விட்டுத் திருச்சிக் கல்லூரிக்கு வந்து, முத்துமீனாக்ஷி ஸ்டோர்ஸில் சிறிய வீட்டில் குடியிருப்பதேன், என்று கேட்டேன். கேட்குமுன் அவரே " எல்லாம் உள்ளூர் காய்ச்சல்தான் " என்றார். அவர் தமிழில் பத்து நிமிஷம் பேசியதும், ஆங்கிலத்தில் சண்டமாருதமாகக் கிளம்பினார். தாம் விவேகானந்தரைக் கண்டது முதல் இன்று வரை, சுயசரித்திரத்தைப் பொழிந்து தீர்ந்தார். பிறகு ஷெல்லியின் வானம்பாடி மொழி பெயர்ப்பைப் படித்தார். பிறகுதான் " பாரதி, என்ன எழுதியிருக்கிறீர்? " என்று வினவினார். "நாடகம், காவியம் ஸயன்ஸ்' என்றேன். தாம் எழுதிய விசுவநாதன் என்ற செய்யுள்

நாடகத்தைப் படிக்கச் சொன்னார். படித்தேன். எல்லாம் நேன், தமிழின் நிலைமையைப்பற்றிப் பேச்சு வலுத்தது. "நாட்டில் வகுப்பு வாதமும் சாதிப் பித்தமும் தலைதூக்கி அட்டூழியம் செய்கின்றன. புலமையைச் சாதிக் கண்ணாடியால் பார்க்கிறார்கள். மதுரையிலே தான் அப்படியென்றால், திருச்சியிலும் அதே கதைதான் என்றார். நான் "தமிழ் நாட்டில் பிறந்தவர் தமிழர் என்று ஏன் சமபுத்தியுடன் மதிக்கக்கூடாது? பழம் பாயிலேயே தமிழர் கண்மூடி உறங்குகிறார் கள்" என்றேன். அவர் பழமை பெரிதே. ஆனால் புதிய ஒளியைக் காணாக் காமாலைக் கண்களால் பயனென்ன? தமிழை கம்பர் போல உமர் புலவரும் வீரமா முனிவரும், கால்ட்வெல்லும் அன்று வளர்த் தார்கள். இன்று தமிழர் என்ன செய்கிறார்கள்? சி. சு. பாரதி மதுரையில் என்னிடம் வருவதுண்டு. அவர் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும் என்றார். இப்போது வசை முழக்கம் நடக்கிறது. தமிழுக்குத் தகுதி யுண்டு. ஷேக்ஸ்பியரை ஈன்ற ஆங்கிலம் போலவே கம்பனைப்பெற்ற தமிழும் தழைத்து வளர வேண்டும்" என்றார். எனக்கு ஆவேசம் வந்து விட்டது. "வைய மெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வாருங்கள்" என்ற பாட்டைப் பாடினேன். பிறகு எனது தமிழ் கனவுகளை கோவிந்தசாமி பிள்ளை சொல்லி, "அல்லும் பகலும் தமிழே இவர் தவம்" என்றார். பண்டிதர் எனக்கு அரிய உபதேசங்களைச் செய்தார்: "வாக்கு நன்றாயிருக்கிறது, இன்னும் வளரும்; பழுத்தால் சுவை தானே வெளிப்படும், மலர்ந் தால் மணம் தானே பரவும். அச்சிற்கு அவசரப்பட வேண்டாம். அடங்கி முயல்க 'காலதேவி தக்க சந்தர்ப்பத்தைக் கொணர்வாள். பிறகு வெற்றி காணும்" என்றார். பிற்காலம் நான் அவரைத் தேவ கோட்டையில் சந்தித்தபோதே "இனித்தங்கள் நூல்கள் வெளிவர லாம்" என்றார். அவர் அப்போது பேசிய கூட்டத்தில் நானும் பேசினேன். கோபாலகிருஷ்ணையர் கம்பீரமான நவீன கனவான்; இரட்டை நாடி சரீரம். உருண்டை முகம், மாநிறம். மீசையுண்டு. குழந்தையுள்ளம். யாரும் சரளமாகப் பேசலாம், பேச்செல்லாம் புலமையா யிருக்கும். நான் மறக்க முடியாத புலவருள் அவர் ஒருவர். கோபாலகிருஷ்ணையரிடமிருந்து விடைபெற்று நாங்கள் பழநியப் பிள்ளையைப் பார்க்கப் பாலக்கரைக்குச் சென்றோம்.

131. பெரியபுராணக் காதல்

கோவிந்தசாமி பிள்ளையைப் பாலக்கரையில் பழனியப்பரிடம் சேர்த்து, நான் புத்தூருக்குச் சென்று, சாரண நண்பர் வால்மீகிநாத ரைக் கண்டேன். அவர் மாளிகைச் செல்வர். செல்லப்பிள்ளை. பி. ஏ. புத்தகங்கள் படித்துக்கொண்டிருந்தார். என்னை மிக அன்புடன் வரவேற்றுக் கனிகள் அளித்தார். அவரிடம் ஒருமணி நேரம் சாரண விஷயமாகப் பேசும்போது, தமிழ்ப் பேச்சும் வந்தது, அவர் தனித்

தமிழைப் போற்றுபவர். "மாணிக்க நாயக்கரைப் பாருங்கள்" என்றார். விலாசம் குறித்துக்கொண்டு பாலக்கரைக்கு மீண்டேன்.

எனது நண்பர் கோவிந்தசாமி பிள்ளை பழனியப்பப்பருடன் சைவ வைணவ வாதம் நடத்திக்கொண்டிருந்தார். வாதில் அவரை வெல்ல முடியாது· பழனியப்பர் தமிழும் சைவமுமே உயிர்ப்பானவர். அவர் தந்தையும் நல்ல புலவர். பழனியப்பர் ஒற்றைநாடி; கறுப்பு, பால் ஒழுகும் முகம், நல்ல புன்னகை. அவர் பேச்சு மீசையைப் பிளந்து கொணடு மெல்லிய ஓசை மின்னல்போல் வரும். குணம், தங்கக் கம்பி. வீண் பேச்சிற்கு இடந்தர மாட்டார். பொறுமையில்லாத புலவர். புறங்கூறினல் காதை அடைத்துக் கொள்வார். பேச்சை சேக்கிழாருக்கு மாற்றி, தமிழன்பு கொள்ளச் செய்வார். அவர் அப்பர் தேவாரத்தின் அருமையை வியந்தார். "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் கற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற வாக்கை சேக்கிழாரைக்கொண்டு அழகாக விளக்கினர். இந்தச்சமயம் திருநெல்வேலியிலிருந்து ஒரு புலவர் வந்தார். அவர் "பார்ப்பனராலே தான் தமிழ் கெட்டுப்போனது, வடமொழி கலந்து தமிழின் பத்தினித் தன்மை போய் விட்டது" என்று ஆத்திரப் புயல் வீசினர். பழனியப்ப பிள்ளை,

> பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தந்தம்
> கருமமே கட்டளைக் கல்.

என்றார். கோவிந்தசாமிப் புலவர் :" ஒரு சாதியையே திட்டுவதிற் பயனில்லை, நமது காலமே வீணாகும். நாட்டில் பகை வளரும்" என்றார்.

நான் ஐயா " இனி யுலகில் பிராமணன் பறையன் என்ற பேச்சே யிராதே. சாதி—வகுப்பு—வாதங்கள் தம்மால் மறைந்துபோகும். தமிழகத்தில் பிறந்தவர்·தமிழர். இந்தியாவில் பிறந்தார் இந்தியர் உலகில் பிறந்தார் மானிடர். ஆண் பெண் ஆகிய இரண்டு இனமேஉண்டு. வேறு வேறுபாடுகள் இல்லை. ஒருவர் தகுதிக்கேற்ற மதிப்பு ; திறமைக்கேற்ற பெருமை. தகுதியை, திறமையை, புலமையை வளர்த்து நாட்டுக்கு எல்லாரும் கைபோல் உதவுங்கள். வகுப்புவாதம், இழுப்பு வாதத்தைவிடக் கொடிது" என்றேன், பழனியப்பர் " அறுபத்துநான்கு திருத்தொண்டருள் சாதிபேதமுண்டா? எல்லாரும் இறைவனிடம் ஈடுபட்டுத் தூய சிவநேச வாழ்க்கை வாழ்ந்ததால், அவர்களைக் கோயிலில் வைத்துக் கும்பிடுகிறோம்" என்று உருக்கமாகப் பேசினர். திருநெல்வேலிப் புலவர் விருட்டென்றெழுந்து ஆண்டார் தெருவுக்குச் சென்றார். பழனியப்பரை நாங்கள் அடிக்கடி கண்டு பேசினோம். பெரிய புராணத்தின் சுவையை அவர் எனக்கு ஊட்டினர். அவரிடம் விடைபெற்று, சிவஞானம் பிள்ளையைக் கண்டோம். அவர் தாய் நாடு என்ற இதழ் நடத்தினர். பெரும்புலவர். அவரே நாட்டார் வீட்டைக் காட்டினர்.

132. வேங்கடசாமி நாட்டார்

முன்பே ஒருதரம் வேங்கடசாமி நாட்டாரை நாங்கள் வாங்கலில் கண்டு பேசினோம். இப்போது நாட்டார் மணிமேகலை பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். நாங்கள் வந்ததும் அன்புடன் வரவேற்று உட்காரச்சொல்லி "கவிப்பயிர் விளைகிறதா?" என்று கேட்டார். "உழுது விதைத்து அறிவுநீர் பாய்ச்சுகிறேன்" என்றேன். நாட்டார் நெற்றி நிரம்ப நீறணித்து சிவப்பழமாக விளங்கினார். அவர் அறிவும், அன்பும், புலமையும் அடக்கத்தை அணிந்து விளங்கும். மணிமேகலை பாடத்தை நிறுத்திவிட்டு எனக்குப் பிரியமான பெரிய புராணத்தைப் பற்றிப் பேசினார். கேட்கக் கேட்கத் தெவிட்டா தினித்தது. பிறகு தாம் எழுதிய நக்கீரர் என்ற நூலைக் காட்டினார். கோவிந்தசாமி பிள்ளை "தமிழ் என்றால் இப்படி யிருக்கவேண்டும்; பாட்டாலும் உரையாலும் நாட்டார் பணி செய்தார். ஒருநொடி தமிழ் நினைப்பில்லா திருக்கமாட்டார்" என்றார். நானும் 'ட்டா' வரும்படி பாடினேன்.

பாட்டாலும் உரையாலும் பயன்சிறந்த
 பைந்தமிழைப் பயின்று நாளும்
எட்டாலும் எழுத்தாலும் இனியகனி
 மொழியாலும் இளைஞருக்குக்
காட்டாறு போலுதவிக் கலைவளர்வேங்
 கடசாமி; நாடறிந்த
நாட்டாரைப் போற்றுதமிழ் நாட்டார்நந்
 தமிழிசையை நாட்டு வாரே.

நாட்டார் எங்களுக்கு விடைதந்து "சவுரி ராயரைப் பாருங்கள்" என்றார். பிற்காலம் நாட்டாருடன் கடித வுறவு கொண்டிருந்தேன். நான் நடத்திய பத்திரிகைகளுக்கு அவர் கட்டுரைகளும் உதவினார். நிரம்பிய புலமையும், தெளிந்த உள்ளமும் படைத்த, தூய தமிழர் நாட்டார். அவரிடம் விடைபெற்று, நாங்கள் சவுரிராயப் புலவரைக் காணச் சென்றோம்.

133. தமிழர் வரலாறு

வித்வான் சவுரிரர்ய பிள்ளையை எனக்கு அறிமுகப்படுத்தியது Tamilian Antiquary (பழந்தமிழர் வரலாறு) என்ற அரிய ஆங்கில வெளியீடுகளே. அத்தொகுதிகள் முழுதும் காணவே அவரிடம் சென்றேன். கோவிந்தசாமிப் புலவர் மீண்டும் பழநியப்பரிடம் சென்றதால், நான்மட்டும் தனியாகச் சென்றேன். சவுரிராயர் "வாருமையா இளங் கவிப் புலவரே? கோபாலகிருஷ்ணர் உம்மைப்பற்றிச் சொன்னார்." என்று வரவேற்றார். சவுரிராயர் யாழ்ப்பாணி, வைரம்பாய்ந்த

கத்தோலிக்கர்; தூத்துக்குடியிலும், திருவாங்கூரிலும் பயின்றவர். லத்தீன், சமுஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் நான்கிலும் புலவர். அவரிடம் நான் பைபிளைப்பற்றிப் பேச்செடுத்தேன். அவர் 'தனக்கிணையாக அனைத்தையும் காண்பவனே கண்ணுள்ளவன்' என்ற கீதா சுலோகத்தைச் சொல்லி, பைபிள் கருத்தும் இதுதான் என்றார். திருவாங்கூரில் தாம் பி. சுந்தரம் பிள்ளையுடன் பழகியதைச் சொன்னார். பிறகு "கவி எழுதுகிறீரே, நாடகத் தமிழ் எழுதும் ஐயா. சுந்தரம் பிள்ளைக்குப் பிறகு செய்யுள் நாடகம் அரிதாய்விட்டது. நாடகத் தமிழை முறையாக வளரும் ஐயா...உமது பேச்சே மேடையில் நடிப்பதுபோல் இருக்கிறது...எழுதும் நாடகம்" என்றார். "ஆண்டவன் அருள் இந்த விருப்பத்தை நிறைவேற்றட்டும். நான் அவர் கைப்பாவை" என்றேன். பிறகு Tamilian Antiquary 1904-1909) பார்த்தேன். அடடா அரிய கட்டுரைகள்; பூர்ணலிங்கம் பிள்ளை ஆங்கிலத்தில் தமிழிலக்கிய வரலாறு வெளியிட்டிருப்பதுபோல், சவுரிராயர் பதிப்பித்த தமிழர் பழம் பெருமையும் வெளியிடவேண்டும். சவுரிராயர் "தமிழை உலகறியத் தொண்டு செய்யவேண்டும். அதற்கே இதைத் தொடங்கினோம். ஆதரவில்லை. புலமை வறுமையுடன் போராடுகிறது" என்றார். சவுரிராயர் வேதநாயகம் பிள்ளையைப்பற்றியும் மேன்மையாகப் பேசினார். "எல்லா மதங்களும் அவரது சன்மார்க்க கீர்த்தனங்களைப் பாடலாம்" என்று நான் நித்யானந்தத்தைப் பாடி விடை பெற்றுக் கொண்டேன். "நீங்கள் எங்கள் சரித்திரப்புலவர், பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்காரை அவசியம் பாருங்கள்" என்று அவர் அனுப்பினார். "இன்று மாலை அவரைக் காண்பேன்; வந்தனம்" என்று நான் விடை பெற்றுக்கொண்டு இன்னும் சில நண்பரைக் கண்டுவிட்டு, கோவிந்தசாமி பிள்ளையிடம் சென்றேன்.

134. மகா மேதாவி

என்னுடன் ஆசிரியராயிருந்த சரித்திரப்புலவர் எஸ். டி. ராமானுஜம், பி. டி. ஸ்ரீநிவாசரின் மாணவர். அவர் என்னை முன்பே தமது ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தி யிருந்தார். ஆனால் நான் யார் அறிமுகத்தையும் விரும்புவதில்லை. மனிதனை மனிதப் பண்புடன் கண்டு, உள்ளத்தைத் தொட்டு பேசினால், அதுவே அறிமுகம் ஆகும். பி. டி. ஸ்ரீ. கோட்டைத் தெருவில் ஒரு சுமாரான வீட்டில் குடியிருந்தார். வீடு நிரம்பக் குழந்தைகள். நான் சென்றதும் "குட் ஈவினிங் ஸார், கமான் ஸார்!' என்று இரண்டு பையன்கள் குதூகலமாக ஆங்கிலத்தில் என்னை வரவேற்றார்கள். 'அப்பாவைப் பார்க்கவேண்டும்' என்று நான் பேசும்போதே மாடியிலிருந்து ஒருவர் தடிபிடித்து ஒற்றைக்கால் இழுத்து இழுத்து நடந்துகொண்டு 'வாருங்கள் மேலே' என்று வந்து, எங்களை அழைத்துச் சென்றார்.

ஆச்சாரியார் பி. டி. ஸ்ரீ தனித் தமிழில் வெகு அழகாகப் பேசினார். தமிழ், சமுஸ்கிரதம், ஆங்கிலம் மூன்றிலும் அவர் புலவர். அவர் விசாகப்பட்டணம் கல்லூரித் தலைவராக யிருந்தார். விஞ்ஞானி சி. வி. ராமன் தந்தையை ரசாயனப் புலவராக அங்கே அழைத்து ஆதரித்தார். நான் சென்றபோது அவர் கல்வெட்டுகளையும் நாணயங்களையும் பட்டயங்களையும் சங்க நூல்களையும் ஆராய்ந்து கொண்டிருந்தார். "தாங்களே தமிழர் வரலாறு எழுதத்தகும்" என்றேன். "அதற்குத் தானே முயற்சி நடக்கிறது. "நாளை லாலி ஹாலில் ப. வே. மாணிக்க நாயக்கர் தலைமையில் நான் பேசுகிறேன். கேட்டால் எல்லாம் தெரியும்" என்றார். அவரைப் பார்க்க நினைத்தேன். வீட்டில் பார்ப்பதைவிட மன்றத்தில் பார்ப்பது நலமே என்றேன். புலவர் சிலப்பதிகாரத்தில் உள்ள வரலாற்றுக் குறிப்புகளை விளக்கப் புகுந்தார். "சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்துடன் நின்றிருக்கவேண்டும். வஞ்சிக்காண்டம் மிகை" என்றார். பி. டி. ஸ்ரீ. என் பக்கம் திரும்பி "கவி எழுதுகிறீர்களாமே" என்றார். "ஏதோ உள்ளே உதித்ததைச் சொல்லோவியமாக்குகிறேன். நாடகங்களும் எழுதியிருக்கிறேன்" என்றேன். அவர் நல்ல குறிப்புகளைத் தந்தார். "நமது நாட்டு வரலாற்றையே பொது மக்கள் இயல்பாக அறியும்படி கும்மிகளாகவும் சிந்துகளாகவும் பாடவேண்டும். தமிழில் கவிதை எவ்வளவோ முன்னேற வேண்டும். கவிகள் ஷெல்லி காளிதாஸன்போல் இலக்கிய நயமும், ஷேக்ஸ்பியர்போல் கருத்து நயமும் கொண்டு, காலத்திற்கேற்ற பொருளமைதியுடன் துலங்கவேண்டும். மனக்கனவின் இயற்கை ஓவியமே கவி என்று தாங்கள் சொல்லியிருப்பது சரி. தங்கள் கவிதைகளில் சில உயர் தரமா யிருக்கின்றன. இன்னும் பாடிப்பாடி வாக்கை வளப்படுத்துங்கள்" என்றார். "நாடகத்துறையில் தாங்கள் ஒருமையுடன் உழைத்தால் பலனுண்டு" என்று விடை கொடுத்தார். பிறகு அவரைப் பலமுறை சந்தித்தேன். எனது நாடகங்கள் சிலவற்றைக் காட்டினேன். அவர் குறை நிறைகளைக் கூசாமல் எடுத்து விளக்கி, எனக்கு ஊக்கமளித்தார். ஒத்துழையாமை வந்ததும் அவர் தூய கதர் கட்டினார். கதரும் விற்றார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய இந்து சரித்திரம், தமிழர் வரலாறு, பல்லவர் சரிதை, மந்திர சாஸ்திரம், ஈட்சும் அவரும் எழுதிய பாட புத்தகங்கள் எல்லாம் சிறந்த நூல்களாகும்.

135. லாலி ஹாலில்

மறுநாள் ஐந்தரைமணிக்கே நாங்கள் லாலி ஹாலுக்குச் சென்றோம். கூட்டம் அதிகமில்லை. ஆனால் வந்தவர்கள் நல்ல ஆராய்ச்சியாளர். மணி ஆறடித்தது. பி டி. ஸ்ரீ கால்சராய் கோட்டு எல்லாம் முறுக்காக மாட்டி, தடிபிடித்து வந்து மேடைமேல் அமர்ந்தார். ஐந்து நிமிஷம் சென்றது. வாசலில் மோட்டார் நின்றது. எல்லாரும்

அந்தப்பக்கமே பார்த்தனர். ஒரு கெடிய கனவான் ஹாலுக்குள் கம்பிரமாகப் புகுந்தார். ஹால்முழுதும் அவராகவே காணப்பட்டது. அவ்வளவு பெருந்தகை உருவம்! ஜம் என்று மேடைமேல் நாற்காலியில் அமர்ந்தார் ப. வே. மாணிக்க நாயக்கர். மணியடித்தது; நிச்சப்தம். சவுரியராய பிள்ளை நாயகரை நாயகம் வகிக்கக் கேட்டுக்கொண்டார். நாயகர் தலைமை வகித்து, சபையைப் புன்னகையால் அளந்து மீசையை ஒருதரம் திருகிவிட்டு "நண்பர்களே" என்று தொடங்கியதும், ஹால் கூர்ந்து கேட்டது.

"தமிழ் தனிப் பழமொழி, நமது ஒப்புயர்வற்ற தாய் மொழி. சில எழுத்துக்களால் பல பொருள் விளக்கும் செம்மொழி. மூச்சுச் செட்டுள்ளது. ஆங்கிலத்திற்கு அடுத்தபடி அதுவே நெகிழ்ச்சியும் தெளிவும் கொண்டது. எக் கருத்தையும் தமிழில் எளிதாக விளக்கலாம். நீண்ட காலம் முயற்சி குன்றியதால் தமிழர் நிலையும் குலைந்தது. இன்று விழித்தெழுந்தோம். இனி தமிழ் உயரத் தொண்டு செய்வோம் நாம் கலைத்துறையில் இன்னும் அடியெடுத்தே வைக்கவில்லை, மேற்கே கணக்கற்ற புதிய புதிய கலைச்செல்வம் குவிந்து கிடக்கிறது. அதையெல்லாம் தமிழாக்கவேண்டும், அத்துறையில் இப்போது அறிஞர் பி. டி. ஸ்ரீனிவாசர் முனைந்திருக்கிறார். அவர் நிரம்ப கல்வியும் ஆராய்ச்சியும் கொண்ட சொற்கொண்டல். அவர் வெகு பாடுபட்டுத் தமிழர் வரலாற்றுக்கு ஏற்ற கல்வெட்டுக்களையும் நாணயங்களையும் பட்டயங்களையும் நூல்களையும் சேர்த்து, ஆராய்ந்து நூல் தொகுக்கிறார், தமது ஆராய்ச்சிகளைப் பற்றி அன்னார் இப்போது பேசுவார்கள். கருத்தூன்றிக் கேளுங்கள்."

பி. டி. ஸ்ரீ நிதானமாக, சொற்களை அளந்து தமிழர் வரலாற்றுக் குறிப்புகளை விளக்கினார். முதன்மையாக ஐந்திணை விளக்கம் தெளிவாகச் சொன்னார். தமிழரின் கப்பல் தொழில், வாணிகம், குடியேற்றம் இவற்றைச் சங்கநூல் ஆதாரத்துடன் விளக்கினார். அன்று நான் கேட்ட சொற்பொழிவு எனது தமிழுணர்ச்சியைத் தூண்டிவிட்டது. முடிவுரையில் நாயக்கர் தமிழர் வீரப் பெருமையைப் பேசியபிறகு சொன்னார்:

"மறுபடி தமிழர், சங்கப் பெருமையும் இன்று நிலவும் கலைப் பெருமையும் பெறவேண்டும். அதை ஊக்கவே திருச்சிராப்பள்ளியில் பெரிய புலவர் மகாநாடு கூட்டப் போகிறோம். அதற்காக எனது முருகன் தமிழகத்தில் கூட்டம் நடக்கும்" என்றார்.

மாணிக்க நாயக்கரைப் பார்த்தாயிற்று, கேட்டாயிற்று. நெருங்கிப் பழகவேண்டும். அதற்கு இது சமயமில்லை. புலவர் மாநாட்டுக்கு வருவோம் என்று நண்பருடன் யோசேப்பு கல்லூரியைச் சுற்றிப் பார்த்து, எஸ். பி. ஜி. காலேஜையும் பார்த்துச் சென்றோம். நத்தார்சா மசூதியில் லாயிலாஹி கேட்டது. சென்றேன். சுமார் ஐநூறு முஸ்லி

மான்கள் சேர்ந்து தொழும் காட்சியைக் கண்டு மெய் சிலிர்த்தேன். இந்தமாதிரி நம்மவர் கோயில்களில் தொழுகை நடத்தவேண்டும், என்று அவாவினேன். அதற்காக அருட்செல்வம் தொகுக்க அன்றே உறுதி கொண்டேன்.

136. பெத்நாச்சி

மறுநாள் காட்டுப் புத்தூருக்குச் சென்ளோம். ஓய்வுநாள் இன்னும் ஒருவாரம் இருந்தது. கரூர் கோவிந்தராஜ முதலியார் கடிதம் எங்களை அழைத்தது. புலவர் சுப்பராமையரும் அழைத்தார். கோவிந்தராஜர் வைணவர். இறுதிகாலத்தில் பெருமாளைப் பாடவேண்டும் என்ற விரதங்கொண்டு, நூறு அந்தாதிகள் செய்திருந்தார். அதைச் சுப்புராமையர் கோவிந்தசாமிப் புலவரிடம் திருத்தக் கொண்டுவந்தார். நானும்கூட இருந்து இருவரும் செப்பனிட்டுத் தந்தோம். அந்தச் செய்யுட்களை அச்சிட்டும் படிக்க எங்களை அழைத்தார். நாங்கள் நெரூர்வழியே நடந்து சென்ருேம்; வழிநெடுகப் புலவர் ஆழ்வாராதிகள் திருக்கதையைச் சொல்லிவந்தார். கோவிந்தராஜர் படுக்கையிலிருந்தார். சுப்பராமையர் எங்களை வரவேற்று உபசரித்தார். நாங்கள் சமையல் செய்துண்டோம். பிறகு பாமாலை புனைந்தோம். அதைக் கேட்டு கோவிந்தராஜர் இருபது ரூபா சன்மானம் செய்தார். இரவில் கம்பராமாயணப் பிரசங்கம் நடந்தது. பிரசங்கம் செய்தவர் இடையிடையே அருணுசலக் கவிராயர் கீர்த்தனங்களையும் பாடினுர். மறுநாள் சுப்பராமையர் இனிமையாகத் திருப்புகழ் பாடினுர். நானும் சேர்ந்து பாடினேன். சந்த இன்பம் துய்த்தோம். பிறகு நாங்கள் வெண்ணைமலை சென்று சதாசிவர் அமர்ந்த குகையில் தியானம் செய்து விட்டுக் கரூருக்கு வந்தோம். ஒரு திருமடத்தில் பண்டாரம் ஒருவர் எங்களை வரவேற்று உபசரித்தார். அங்கே சில புலவர்கள் வந்தார்கள். ஒருவர் பழமை பாராட்டிப் புதிய கவிகளை வெறுப்பவர். நான் புதுக்கவி பாடுவதை கேள்விப்பட்டே வந்தவர். எனது கவிதைப் பிரதியை அவர் பார்த்தார். பதங்களைப் பிரித்து எழுதியது அவருக்குப் பிடிக்கவில்லை. இதெல்லாம் என்ன பாட்டு. சங்கப்புலவர் வாய்மொழியே வாய்மை மொழி. நாட்டுப் பாட்டாம் காட்டுப் பாட்டு! நீர் தன்னுனைப் பாட்டெல்லாம் பாடாதேயும். யாப்பணி அமைதியுடன் பதியைப் பாடும். உமக்கு வாக்கிருக்கிறது. ஆனல் அருள் நோக்கு வேண்டும். சிவனருள் இன்றேல் சிவம் சவமே. திருமுறைகளைப் படியும். நல்ல சொற்றிறன் உண்டாகும்" என்ருர். "புலவரே, இறைவன் அருளால் வெளிவரும் கவிதைகளையே நான் வெளியிடமுடியும்" என்றேன். அடுத்து வேங்கடசுப்பிரமணியர் என்ற இசைப்புலவர் வந்தார். அவர் கர்ப்பபுரிப் புலவரின் பேரர். அவர் சில பதங்கள் பாடினுர். எல்லாம் மதுரரசப் பாடல்கள். வாக்கு நன்றுயிருந்தது; "ஆண் பெண் விவகாரம் கேட்டுக் கேட்டு 'அலுத்தவை.

சலிப்பில்லா இறைவனைப் பாடும்'' என்றேன்.'' அவரைத் தொடர்ந்து வந்தார் ஒரு தொல்காப்பியப் புலவர். இவர் "ஐய, யாம் பெத்தாச்சி செட்டியாரைக் காண்போம். அதற்கு ஒரு செய்யுள் செய்துள்ளோம்'' என்று படித்தார்; எதுகைமோனை கூடச் சரியாயில்லை. "ஐயா அங்கே முத்தையா பாகவதர் இருக்கிறார், இதைப் பார்த்தால் மதிக்க மாட்டார்'' என்றேன். அப்படியானால் ''தாங்களே ஒன்று பாடித் தாருங்கள்'' ஏன்? ''இன்று என் பிழைப்பு நடக்கவேண்டும். இலக்கணம் படித்தும் கவி வரவில்லை'' என்றார். பாவம் ஏழை பிழைக்கட்டும் என்று ஒரு வெண்பா எழுதித் தந்தேன்;

கல்விக் கனிசெழித்த கற்பகம்போல் அன்பர்க்குச்
செல்வக் கனிசெழிக்கச் செய்யுமே—மல்கருளாம்
சித்தாட்சி செய்யும் சிவனை யிணைபிரியாப்
பெத்தாச்சி யின்புகழைப் பேசு.

இதைக் கொண்டோடி ஒருமணி நேரத்திற்கெல்லாம் தொல்காப்பியப் புலவர் இருபது ரூபாவும் ஒரு பதக்கமும் கொண்டுவந்து காட்டினார். நான் நரத்துதி பாடி யளித்ததாகப் பண்டாரம் முகம் சுளித்தார். "ஐயா இது நரத்துதியில்லை பரத்ததுதி. பெத்தாச்சி என்றால் பெரியன்னை பராசக்தி, சிவை. சிவனை இணைபிரியாத பராசக்தியை என்றும் பேசிப் புகழ். வேறு நரத்துதி செய்யாதே. சிவம் அருள் மயமாக இச் சிதாகாச மண்டலத்தில் ஆட்சிபுரிந்து, இச்சா ஞான கிரியா சக்திகளாக விளங்குகிறது. அதையே வினைப்போருக்கு ஞானக் கனி குலுங்கும் கற்பகம்போல் செல்வம் செழிக்கும். அதாவது சிவசக்தி தியானத்தால் எல்லாச் சீர்களும் பெருகும், என்பதாம். இந்த விளக்கம் எல்லாருக்கும் மகிழ்ச்சி யளித்தது.

137. சன்மார்க்க சபை

இன்னும் சில வித்துவான்களைப் பார்த்து நெருருக்குவந்து தியாவித்து இருவரும் காட்டுப்புத்தூர் வந்தோம். பள்ளிக்கூட வேலையைக் கவனித்தோம். மாலை நேரங்களில் பெரிய புராணம் படித்தோம். ஒருநாள் சண்முகம் பிள்ளை வந்து ''ஐயா நம் வீட்டுத் திண்ணையிலேயே பெரியபுராணம் படிக்கலாம். தயவு செய்யவேண்டும்...'' என்றார். அவர் தமிழன்பர், சிவபக்தர், நல்ல மனத்தர். ஆதலால் நாங்கள் இசைந்தோம். வீர வைணவரான கோவிந்தசாமி பிள்ளையும் சைவ புராணத்தைக் கேட்கமட்டுமின்றி விளக்கவும் வந்தார்! இரவு எட்டு மணிக்குத் திண்ணையில் குத்துவிளக்கேற்றிப் பூ முடித்து சாய்வு மேஜை போட்டு எங்களை வரவேற்பார் முதலியார். "உலகெலாம்'' என்று தொடங்கி, நான் பல ராகங்களில் மூலத்தைப் படித்தேன்; புலவர் விளக்கினார். சுந்தரர், அப்பர் இரண்டும் முடிந்தன. அப்பர் சிவனடி சேர்ந்த அன்று முதலியார் சில நண்பரை அழைத்து வந்தார்.

அவர்கள் "சிலைப் பிள்ளையார் புத்தூரில் நாங்கள் சன்மார்க்க சபை நாட்டியிருக்கிறோம். அதில் வாரா வாரம் பிரசங்கம் வைப்போம். தாங்கள் தவறாது வந்து சொற்பொழியவேண்டும். போகவர இருக்க எல்லாச் சௌகரியங்களும் செய்வோம்" என்றார்கள். இதுவும் திருவருள் ஆணை, என்று நான் ஒப்பினேன். புலவரும் பேசச் சம்மதித்தார்.

பிள்ளையார் புத்தூர் வேளாளர் தெருவில் ஒரு சிறு கட்டிடம்; முன்னே பந்தல்; இதுவே சன்மார்க்கச்சபை. இராமசாமி பிள்ளையும் பஞ்சாட்சரம் பிள்ளையும் நடேசம் பிள்ளையும் பல அன்பர் உதவியால் இச் சபையை நடத்தினர். திருச்சி தஞ்சை ஜில்லாவில் இருந்த பல புலவர்கள் அங்கே வந்து பேசியதுண்டு. சுமார் இருநூறுபேர் கூடுவர். காட்டுப்புத்தூர் கன்னையா எங்களுடன் வந்து, மேளக் கச்சேரி செய்வார். அவர்போல் குந்தலவராளியும் நாட்டக்குறிஞ்சியும் யாரும் வாசித்துக் கேட்டதில்லை. கலை நிரம்பிய புலவர்; அவரது தங்க—நாயனம் குழல்போலினிக்கும்.

சன்மார்க்க சபையில் நான் மிகவும் ஈடுபட்டுழைத்தேன். சில நாட்கள் அங்கேயே தங்குவதும் உண்டு. நான் சில கூட்டங்களுக்குத் தலைமை வகித்தேன். நீதிபதி பொன்னுவையர், சோமசுந்தர தேசிகர் முதலானோர் மற்றக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். தேவாரப்பாடலுடன் கூட்டம் தொடங்கும். கோவிந்ரசாமிப் புலவர் கம்பராமாயணத்தைப் படலம் படலமாக எடுத்துக்கொண்டு, கவி நயங் காட்டிப் பேசினார். முத்தையா முதலியார் அப்பர், சுந்தரர், சம்பந்தர் சரித்திரங்களை, சேக்கிழார் வாக்கைக்கொண்டு, வெகு உருக்கமாக மணிக்கணக்கில் பேசினார். சோமசுந்தரர் சங்க இலக்கியங்களை ஆராய்ந்தார். இராமசாமி நாயுடு மணிமேகலைப் பிரசங்கம் செய்தார். இப்படியே தமிழ், சைவம், வைணவம், சன்மார்க்கம் ஆகிய நான்கு விஷயங்கள் அங்கே பேசப்பெற்றன. நான் இலக்கியத்துடன் எனது கவிதைகளையும் அரங்கேற்றினேன். அரங்கேற்றிய கண்ணன் கதை, கீதை முதலியவை பாரத சக்தியில் உள்ளன. தமிழ் உணர்ச்சி, நாட்டன்பு, காந்தியம், நம் அருட்சமயம், சமுதாய ஒற்றுமை, சீர்திருத்தம், சன்மார்க்கம், கொலை மறுத்தல், ஊன்மறுத்தல், கள்மறுப்பு, சாதிமதபேத கண்டனம், கல்வித்தொழில், பயிர்த்தொழில், கூட்டுறவு, கிராமசேவை, தேசசேவை முதலிய பொருள்பற்றி நான் பேசினேன். அவை எனது சொல்திறமையை ஊக்கின. சபையில் சுதேச மித்திரன் வரவழைத்துப் போட்டு எல்லாரும் கால நிலையை அறியச் செய்தேன். கூட்ட நிகழ்ச்சிகள் மித்திரனில் வந்தன.

"அன்பர்காள், சன்மார்க்கம் என்பது (சத்+மார்க்கம்) மெய்நெறி. அன்பு, உண்மை, இன்சொல், கருணை, பரோபகாரம், கடவுளை நினைத்தல், மனச்சாட்சி கோணாது நடத்தல், ஒழுங்கான தொழில் செய்து பிழைத்தல் இவையெல்லாம் மெய்நெறியாகும். திருக்குறளே

மெய்நெறி விளக்கம். எந்தக்காலத்திலும் இந்த மெய்நெறியைச் சிலர் எதிர்ப்பதுண்டு. அந்தக்காலம் அப்பர் சம்பந்தர் முதலிய திருத்தொண்டர் தம் உயிரைக் கொடுத்தும் மெய்நெறியைக் காத்துப் பொய் நெறியை ஒழித்தனர். இந்தக்காலம் பொய் நெறி வலுத்தது. நாட்டை நாடு அடிமைசெய்து பகற் கொள்ளையடிப்பது, போட்டி பொருமைகளால் போர் நடத்திக் கொலை செய்வது, ஆகாசகுண்டு போட்டு ஊர்களை அழித்தல், வயிறு வளர்க்கப் பிறர்குடி கெடுத்தல், முதலிய ஆயிரம் தீமைகள் படர்ந்தன; நம்மவர் இத் தீமைகளை எதிர்த்து வீழ்த்த முடியாமல், அடிமை விலங்கும் அச்சப்பேயும் பற்றித் திண்டாடுகிறார்கள். அடிமை நாட்டில் வேதாந்தம் ஏருது. வறுமை வயிற்றைக் கிண்டும்போது, வள்ளுவர் குறளும் ஏருது. மடமை யிருளில் சிர்திருத்தம் நில்லாது. ஒற்றுமையில்லாது ஒரு காரியமும் நடக்காது. நம்மவர் தாய் மொழி கூடச் சரியாகத் தெரியாத மடமையில் ஆழ்ந்திருக்கிறார்கள். படித்தவர் வர்களும் வேலைக்குத் திண்டாடுகிறார்கள். தொழிலறிவு மட்டம், கப்பலேறிக் கூலியாகப் பிழைக்கக்கருதுகிறார்களே யொழிய, பிற நாட்டார்போல் சுதந்தரமாக உள்நாட்டில் தொழில் செய்து பிழைக்கக் கருதுவதில்லை. சமயஞானம் படுசூனியம். பாமர மக்கள் பிறமதம் புகுந்து, நமக்கே பகைவராகிறார்கள். சுப்பன் குசையாகி அப்பனை அஞ்ஞானி என்கிறான். அடிமை நிலையைப் போக்கக் காந்திமகான் தலைமையில் தியாகிகள் தொண்டு செய்கிறார்கள். நாம் அவர்களுக்கு உதவியா யிருக்கவேண்டும். அந்தக்காலம் அப்பர் காட்டிய சத்தியாக்கிரக வழியை இன்று மஹாத்மாகாந்தி காட்டி, நாட்டை விடுதலைக்கு இட்டுச் செல்கிறார். நாம் அவர் கட்டளைகளை நிறைவேற்றுவோமாக! சமுதாயம் கல்வியின் ஒளிபெற நாம் வீடுதோறும் அறிவை வளர்க்க வேண்டும். படியாத வீடு விடியாது. படித்தவர்கள் பத்துப்பேருக்குப் படிப்புச் சொல்லித்தரவேண்டும். சன்மார்க்க சபை கூடி நல்ல பொருள்பற்றிப் பேச வேண்டும். தமிழைத் தமிழர் உயிர்போல வளர்க்கவேண்டும். தமிழ் நாட்டுத் தொழில்களைத் தமிழர் கைப்பற்ற வேண்டும். தினம் ஆறு மணி நேரம் ஒவ்வொருவரும் நல்லதொரு தொழில் செய்யவேண்டும். தொழிலே வாழ்வின் எழில். நமது முன்னேற்றத்திற்கு மற்றொரு பெருந்தடை சாதிப் பிரிவினை, இரண்டாயிரத்திற்குமேல் சாதிப் பிரிவினைகள் கருவிளைகளாகப் படர்ந்திருக்கின்றன. சடங்குகளைவிடச் சத்தியமே மேல். சாதியைவிட நீதியே மேல். தீண்டாமை, பாராமை, கைம்பெண் கண்ணீர், பெண்ணடிமை, முதலிய சமுதாயத் தீமைகள் சாதி பேதத்தினால் வந்தன. சன்மார்க்க ஒழுக்கம் எல்லாருக்கும் பொது. அதனால் சாதி யுணர்வைப் போக்க வேண்டும். நீ யார் என்றால் தமிழன், இந்தியன், மனிதன், என்க. என்ன சமயம் என்றால் சுத்த சன்மார்க்கம், தூய மெய்நெறி என்க. உலகையே கோயிலாக உள்ளையே சந்நிதியாக, உயிர்க்குலத்தையே கடவுளாகக் கருதி அருட்பணி செய்க. அதுதான் சன்மார்க்கம்.''

இது நான் பேசிய ஒரு பேச்சின் குறிப்பாகும். சபைக்கு வெளியூர்களிலிருந்து அறிஞரும் அன்பரும் வருவதுண்டு. அவர்கள் எங்களை அவரவர் ஊர் திருநாட்களுக்கு அழைப்பார்கள். பஜனைகளுக்கும் என்னை அழைப்பார்கள். அங்கங்கே சென்று நான் பேசுவேன்; பாடுவேன். புலவர் உருக்கமாகப் பேசுவார். இந்தமாதிரி என் வாழ்க்கை இலக்கிய விருந்திலும். சொல்மாரியிலும் இன்பங்கொண்டு திரிந்தது. இதன் சிகரம் திருச்சி புலவர் மகாநாடு.

138. புலவர் மாநாடு

அழைப்பு வந்தது; நானும் கோவிந்தசாமிப்புலவரும் திருச்சி புலவர் மாநாட்டிற்குச் சென்றோம். திருச்சி பிஷப் ஹீபர் ஹாலில் புலவரும் ரசிகரும் கூடினர். பல ஊர்களிலிருந்தும் இருநூறு தமிழ்ப் பண்டிதர்கள் வந்திருந்தார்கள். தமிழுக்கே உயிர்க்கும் பல பெரியாரைக் கண்டோம்—கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் இராதா கிருட்டினர், உமாமகேசர், கவி வெங்கடாசலனார், சைவசித்தாந்தக் கழகம் சுப்பரமணியனார், திருச்சி வேங்கடசாமி நாட்டார், சவுரிராயனார், மதுரை கார்மேகக் கோனார், மாயவரம் ஷண்முகப் புலவர், புதுக்கோட்டை ஸ்ரீநிவாச்சாரியார், கோயில்பட்டி குருசாமியார், இன்னும் சென்னை, வடதென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர், இராமனாதபுரம் மாவட்டப்புலவர் பலர் வந்திருந்தனர். பலருக்கு மாணிக்க நாயக்கரின் முருகன் தமிழகத்தில் உறையுள் கிடைத்தது. நான்மட்டும் எஸ். பி. ஜி. கல்லூரியில் எனது நண்பன் ஜி. சுந்தரத்துடன் தங்கினேன். ஸ்ரீ சுந்தரம் அப்போது பி. ஏ, படித்தார்.

காலை பத்து மணிக்கு மாநாடு தொடங்கியது. மாணிக்க நாயக்கர் மாண் சிறப்புடன் மன்றத் தலைமை தாங்கிப் பேசினார். கல்ல உயரமும் பருமனும் அழகிய நிறமும் முகமும் அறிவு ததும்பும் விழிகளும் கொண்ட அவர் உருவும், தெள்ளிய தூய தமிழும் மன்றத்தைக் கவர்ந்தன. அவர் பேருரையின் கருத்தைக் கேளுங்கள்:

" தமிழ் தொல்பெருந் தனி மொழி- இந்தியாவில் தனித்தியங்கும் ஒரே மொழி தமிழே. தமிழ் இனிய ஒலியும் மூச்சுச் செட்டும் உடையது. சமுஸ்கிருதத்தில் ஹா, ஷ முதலிய வல்லோசைகள் மூச்சை மிகுதியாகப் பறிக்கின்றன. தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலியன தமிழின் சேய்கள்: அவை தாயை மறந்து சமுஸ்கிருதத்தைத் தழுவி இலக்கணம் செய்து கொண்டன. தமிழைத் தூய்மையாக்க வேண்டும். தமிழ்ச் சொல்லை பிற சொற்கலக்காமல் பேசுக: இன்றேல் தமிழை இழப்போம். நீர் என்பதற்கு ஜலம் போட்டால் நீர் என்ற சொல் வழக்கற்றுவிடும். கதிரவனைச் சூரியன் என்றால், கதிரவன் என்ற சொல்லை இழப்போம். இப்படியே தமிழும் பிற மொழிகளுக்கு இடந்தந்து கொண்டே போனால், முடிவில் தன் இயல்பை இழந்து,

வேறு மொழிபோல் ஆகும். இப்போது தமிழ் உருக்குலைந்திருக்கிறது. கொச்சையும் பச்சையுமாயிருக்கிறது. ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் மொழிகளைப் பேசுகிற படியே எழுதுகிறார்கள். எழுதியபடியே பேசுகிறார்கள். தமிழையும் அவ்வாறே செய்ய வேண்டும். தமிழ் இலக்கண வரம்புடையது. அதை இலக்கண வரம்புடன் திருத்தமாகவே பேசி எழுதவேண்டும். அப்போதே மொழிக்குப் பெருமையும் இலக்கிய மதிப்பும் உண்டு. தமிழின் சிறப்புகள் பல, அதன் அகப்புற இலக்கணங்களும் ஐந்திணையிலக்கணங்களும் அதற்கே தனியுரிமையாகும். ஒரெழுத்தும் இரண்டெழுத்தும் கூடிய பல அரிய சொற்கள் தமிழில் உண்டு, தமிழ் மிக நெகிழ்வுள்ளது. இன்றுலகிற் சிறந்த ஆங்கில மொழியில் உள்ள கலைச் சொற்களை எளிதில் தமிழாக்கலாம். எடுத்துக்காட்டாக லங்ஸ் என்பதை சுவாச கோசம் என்பர் வடமொழியார். தமிழில் உயிரி என்பது பொருத்தமாயிருக்கிறது. ரேடியம் என்பதைக் கதிரி என்றால் எளிதில் விளங்குகிறது. தமிழ் வரிவடியும் நுட்பமாக அமைந்தது. தமிழ்ப்பண்பு இயல்பான மக்கட் பண்பு கெழுமியது. அதைப் பாதுகாக்க வேண்டும். புதிய பேரகராதியும், தமிழர் வரலாறும் உடனே தொகுக்க வேண்டும்.''

இந்த மொழிகள் என் உள்ளத்திற்கலந்து துடித்தன; கூட்டம் முடிந்தது. உணவு கொண்டோம். பிறகு பல புலவர் கூடிப் பேசினோம். புலவருக்குப் புலவர் வேறுபாடுகள் மிகுதி. சில புலவருக்குப் புதிய வாடையே கூடாது. பழைய அகப்பொருள் ஏட்டையே திருப்பிக் கொண்டிருந்தனர். பேசுவதெல்லாம் சிற்றின்பப் பொருளே, அதனால் சுற்றியிருந்தவர்களைச் சிரிக்க வைத்து என்னிடமும் புலமையைக் காட்டினவர். அவர்: ''இளம் புலவீர், உமக்குத் திருமணம் ஆனதா?'' நான் ''கலைமணமே ஆனது...''சை, முலைமணம் பாராதவர் கலைமணம் காண்பரோ? நான்'' உமது தலைமணமெல்லாம் முலைமண மான போது நிலைமணம் அறிவீரோ? அலைமனப் புலவீர்! நீர் அகப் பொருளிலும் புணர்ச்சி விகாரத்திலும் பொழுதைப்போக்காதீர். அருண் மணம் பெற அன்பு செய்யும். அஃதே அறிவின் பயன்.'' இன்னொரு புலவர் தொல்காப்பியத்தை நக்கீரர் நடையில் புகழ்ந்து கொண்டே போனார், 'ஐயா' எல்லாருக்கும் விளங்கும்படியாக நெஸ்பீல்டு, மேசன், பெயின் போல், தமிழ் இலக்கணம் எழுதக் கூடாதா'' என்றேன். ''உமக்கென்ன தெரியும் குசுடுதுபுறு,'' என்று படபடத்தார் இலக்கணக் கோடையிடிப் புலவனார்...புதிய முதிய இளம் பூரணனார். இன்னொரு புலவர் ''வடமொழி கலக்க வேண்டும். தாயுமானார் வள்ளலார் வடமொழி கலந்தனர். கம்பர் வள்ளுவர் கூட வடமொழியையும் அந்தணரையும் யாகாதிகளையும் போற்றினர்'' என்றார். அவருடன் தனித் தமிழாளர் போட்ட சண்டையும் பூசலும் கொஞ்சமன்று. ஒரு வடமொழித் தாத்தா ஊடே புகுந்தார்...... புராதன நூதன மகிஷசர்ம பந்தனக்ரந்தம் தெரியுமோ? என்றார்,

எல்லாரும் அதென்ன கிரந்தம்? என்று வயிறு குலுங்கச் சிரித்தனர். பைபிளுக்கு (OLD AND NEW TESTAMENT) அந்தப்பாடு. நான் "அவ்வளவு மகிஷபந்தனம் ஏன்? பழைய புதிய ஏற்பாடு என்ன லாம் அல்லது பைபிள் என்றே சொல்லாமே" என்றேன். அக்காலமே நான் தமிழில் கலை நூல்கள் யாத்தேன். அந்நூல்களைத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு புலவர் வந்து "என்ன கலைச் சொற்களை யெல்லாம் தனித்தமிழாக்கி விட்டீரா?" என்று கேட்டார். "முடிந்த மட்டும் செய்துள்ளேன்" என்றேன். ஒரு கடிகாரத்தைக் காட்டி" இந்த வாட்சுக்குத் தமிழ் என்ன?" என்று கேட்டார். போதுகாட்டி என்றேன். கிளாக்கிற்கு? போது ஆட்டி என்றேன். "மிக நேர்த்தி" என்றொரு குரல் கேட்டது. மாணிக்க நாயக்கரே வந்து விட்டார். என்னைப் புன்னகையுடன் கண்டார், "உம்மூர் எது" என்று கேட்டார்......

என்னூர் தமிழகமே; என்புலமை தமிழன்பே
என்சாதி ஆண்சாதி என்னினமோ—உன்னினமாம்
மானிடமே; என்சமயம் வாய்மையே; என்கடவுள்
ஊனிடமே ஒன்றும் உயிர்.

என்று பாடினேன்..." ஏது முதலியாரிடம் சரக்கு நிரம்ப உண்டு போலிருக்கிறதே! கவிதைப் புலமையும் உண்டோ?" என்றார் மாணிக்கம். கோவிந்தசாமிப் புலவர் "இவர் ஏராளமாகப் பாடி வைத்திருக்கிறார். தமிழ் மாலை ஒன்று நேற்றுப் பாடினார்" என்றார். மாணிக்க நாயக்கர் "அதை மன்றத்தில் படிக்கலாமே...படியும்..." என்றார். "தங்கள் சொற் படிகிறேன், படிக்கிறேன்" என்றேன்.

மாலைக் கூட்டம் நாலரை மணிக்குத் தொடங்கியது. மாணிக்க நாயக்கர் முன்னுரை பேசியதும், "இப்போது காட்டுப்புத்தூர் முதலியார் தமிழன்பு மாலை பாடுவார்" என்றார். நான் மேடையேறினேன். தமிழன்பு மாலையை ஆரபி, மோகனம், சுரடி, காபி, மத்யமாவதி முதலிய ராகங்களில் பாடினேன். அந்த மாலை பைந்தமிழ்ச் சோலையிலும் தமிழ்க் கனவிலும் உள்ளது காண்க.

தமிழே தமிழே தமிழர்க் குயிரே
அமுதே அழகே அன்பே அருளே,
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வைகையும்
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே!
செவிக்கினி தாகிய கவிக்கனி குலுங்கும்
புவிக்கினி தாகிய புண்ணியத் தமிழே!
விழித்தோம் எழுந்தோம் வீரராய் நின்றோம்
அழித்தோம் இருளை அச்சம் விடுத்தோம்.

தமிழன் எவனும் சத்தியந் தவறினல்
தமிழ்மர பிற்கே தவறிழைத் தோனும்.
தமிழருக் கெல்லாம் தமிழ்ப்பணி தவமாம் ;
தமிழன் பசிக்கத் தமிழர் புசியோம் ;
தமிழன் வருந்தத் தமிழர் சகியோம் ;
தமிழ் இனி தோங்குக தமிழ் உல காளுக !
தமிழகம் உலகத் தாயகம் ஆகுக !
தமிழ்மொழி உலகத் தாய்மொழி யாகுக !
தமிழர் அனைவரும் சமாசக் குடும்பம்
தமிழுல கெனது தங்கக் கோயில்
தமிழ்ப்பணி எனது சலியா மூச்சு.

எண்ணும் போது தமிழையே எண்ணீர் !
இசைத்திடில் தமிழையே இசைப்பீர் !
பண்ணும்போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர்
உண்ணும் போதும் உறங்கிடும் போதும்
உயிருளந் துடித்திடும் போதும்
கண்ணினும் அரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுவீர் !

என்ற வரிகள் மாணிக்கநாயக்கரையும் சில புலவரையும் கவர்ந்தன. எனது தமிழ் விரதமும் உறுதி கொண்டது. அன்று கூட்டத்தில் பல புலவர் மணிகள் பேசினர் ; தமிழின் பெருமை, தொன்மை, சங்கத் தமிழ், தமிழர் நாகரிகம், தமிழர் வரலாறு, திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறும் தமிழர் வீரமும், காலப்போக்கு, தமிழை நம்பினோர் நிலை, முதலிய பொருள் பற்றிப் பேசிய பிறகு, தலைவர் முடிவுரை நடந்தது. தாயதமிழ் வீடுதோறும் துலங்க வேண்டும். தமிழர் ஒருமையுணர்வுடன் தமிழ் பெருமைபெற வாழ்க என்பதே அவர் பேச்சின் கருத்து.

மறுநாள் மாணிக்கநாயக்கர் எல்லோருக்கும் விருந்தளித்தார். வைதிகப்புலவர் உடனுண்ணவில்லை. விருந்திற்குப் பிறகு செயல் கூட்டம் நடந்தது. அதற்கு பி. டி ஸ்ரீநிவாசர் வந்திருந்தார். தற்காலத்தில் தமிழின் நிலை, தமிழர் நிலை, புலவர் நிலைகளை ஆராய்ந்து, நிலைமை திருந்தத் தீர்மானங்கள் செய்தனர். அனைத்தின் முடிவும் இரண்டே : தமிழ்ப் புலவருக்கு ஐம்பது முதல் இருநூற்றைம்பது வரையில் தகுதிக்கேற்ற சம்பளந்தருதல்...புதிய தமிழ்ப் பேரகராதி தொகுத்தல். பேரகராதிபற்றி நானும் பேசினேன். பி.டி.

ஸ்ரீ அரிய யோசனைகள் கூறினர். காரியக் கூட்டம் மாலை நடந்தது. அதில் தமிழ் ஆசிரியர் தமது குறைகளைக் கூறினர்கள். குறை தீரும் வழி, தமிழர் தமிழைப் போற்றுதலே, என்ற முடிவுடன் சபை கலைந்தது.

நான் நீண்ட அல்பாகா கோட்டு, தலையில் பட்டுத் தலைப்பாகை யுடன் சென்றிருந்தேன். என் வேடத்தைக் கண்ட சிலர் என்னை வக்கிலா, ஆசிரியரா என்று கேட்டனர். "தமிழுக்குப் பரிந்துபேசும் வக்கில், தமிழின் பெருமையைப் போதிக்கும் ஆசான்" என்றேன். சுமார் இருபது புலவர் நட்பு எனக்குக் கிடைத்தது. அனைத்தினும் மேலாக மாணிக்க நாயக்கர் நட்புக் கிடைத்தது. "முதலியார்! அடிக்கடி என்னிடம் வருக" என்று எனக்கு விடை கொடுத்தார் நாயக்கர்.

139. மாணிக்க நாயக்கருடன்

ஆம், நான் நாயக்கரை அடிக்கடி பொன்மலையில் சென்று கண்டேன். மகாநாட்டிலிருந்து காட்டுப் புத்தூருக்கு வந்ததும், எனது ஸயன்ஸ் குறிப்புகளைக் கொண்டு, உயர் பள்ளிகளுக்கு வேண்டிய பௌதிக ரசாயன, தாவர நூல்கள், உயிர் நூல், பூமி நூல் ஆகியவற்றை எழுதினேன். அவற்றை அடிக்கடி கொண்டு சென்று மாணிக்க நாயக்கரிடம் காட்டியதுண்டு. அவர் கலைச் சொற்களைக் கவனிப்பார்; தனித்தமிழ்ச் சொற்களைப் போற்றி, 'இப்படியே எழுதுங்கள்' என்பார். பொருத்தமான புதிய சொற்களையும் சொல்லுவார். அவர் இயற்புலவர், பூகோளம் என்பதைத் தரைநூல் என்று திருத்தினர்.

அவர் கணிதத்திலும் மோட்டார் யந்திரத்திலும் கண்டுள்ள புதிய புதுமைகளை எனக்கு விளக்குவதுண்டு. பெட்ரோல் இல்லாமலே, கரியாலும் சாதாரண மண்ணெண்ணெயாலும் மோட்டார் ஓட்டும் சோதனைகளைச் செய்து கொண்டிருந்தார். அவர் அறிஞர்; என் தமிழார்வத்தைச் சுடர்பெறத் தூண்டினர். எனது கவிதைகளை யெல்லாம் கேட்டு இன்னது இப்படியிருக்க வேண்டும்; கவிதை இயல் பாயிருத்தல் வேண்டும், புராணக்காலம் போய்விட்டது, சங்கக்கவி களைப் படியுங்கள், என்று தூண்டினர். பைந்தமிழ்ச்சோலை அந்தக் காலத்திலேதான் உருவானது. அதை நான் படிக்க அவர் மகிழ்ந்தார். தமிழுணர்ச்சிக்கும் அப்போதே அடிப்படை போட்டிருந்தேன். ஒரு நாள் அவர் பங்களா ஊற்றில் நீர் எடுத்துக் குளித்து, தியானித்தேன்: இவர் எல்லாம் பார்த்து நின்றார். நான் பத்மாசனம் போட்டு தியானிப்பதைப்பார்த்து "இவர் பிராமணராகவே இருக்க வேண்டும்" என்று பக்கத்திலிருப்பவரிடம் சொன்னர். நான் கண் விழித்ததும், "மேலே வாருங்கள்" என்று அழைத்துச் சென்றார்- பேச்சு நடந்தது.

மாணி: இவ்வளவு ஆழ்ந்து உள்வழிபாடுகள் செய்கிறீர், நீர் முதலியாரில்லை, அந்தணரே.

நான்: நான் முதல்வனுரை தியானிக்கும், அந்தணன், அந்தண்மையன், சாதிப் பார்ப்பான் இல்லை.

மாணி: இல்லை; நீர் சாதியிலும்...பிராமணரே...எடுங்கள் சட்டையை...அடடா பூணூல் இல்லையே! பிறகு தங்கள் சாதி, மதம்.

நான்; சாதிமதமற்ற சன்மார்க்கி. தூய்மையே என் கடவுள் வாய்மையே அறம்.

மாணி: சமதருமப் பார்ப்பாளர் ஒருவரைக் கண்டேன், மகிழ்ச்சி...சனுதன தருமம் தங்களுக்கு உடன் பாடில்லையே.

நான்: சனுதன தருமம் என்ருல் பண்டறம்; திருக்குறளே எனது பண்டறம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்: மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும் கீழல்லார் கீழல்லர், பிராமணனுக்குப் பிறந்தவன் அழுக்குப் பிடித்த மூடனுனுல் அவன் பிராமணனில்லை. கீதையில் நான்கு வர்ணங்களும் குண கர்மபேதம் என்ருன் கண்ணன். வள்ளுவர் செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா...அதாவது தொழில் வேறுபட்டால் மாந்தர் பலதிறம் என்ருர். இப்போது, அனைவரும் மானிடரே, சரி நிகரே, ஆனுல் தாங்கள் எஞ்சினியர் ரூ. 1,500 சம்பளம் வாங்கும் உயர்ந்த அலுவலாளர். பொறிக்கலைப்புலவர், தங்கள் பெயருக்கு நாடெங்கும் மதிப்புண்டு. தாங்கள் தமிழ் மாநாட்டுத் தலைவரானது எதனுல்? பிறப்பினுலா, இல்லை: தகுதியால். என்னை அப்படித் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்... தங்களுக்குள்ள தகுதி எனக்கில்லை. என் தகுதி வேறு. அதோ நிற்கும் அந்த ஆளின் தகுதி வேறு. அவன் செய்யும் தோட்டவேலை என்னுல் இயலாது. அந்த வேலைக்கு அவன் தலைவன். இப்படியே தொழிற் சிறப்பால் ஆளுக்காள் வேறுபாடுண்டு. நாமெல்லாரும் ஒரே தரையில் வாழும் மாந்தரே; ஆனுல் ஒரே தரையில் ஒரே எருவும நீரும் உண்ட பல விதைகள் பல வகையாக மலர்ந்து கனிகின்றன. பல பறவைகள் ஒரு மரத்திற் கூடு கட்டி வாழ்கின்றன. அப்படி மாந்தரும் வாழலாம்.

மாணி: அந்தச் சமதரும வாழ்விற்குத் குறுக்கே நிற்பதுதான் உமது மனு நீதி.

நான்: நான் மனுநீதியறியேன். மனச்சாட்சி நீதிதான் என் கொள்கை. என் மனச்சாட்சி எல்லாரும் ஒரு குலம் என்கிறது.

எல்லா உயிர்க்கும் இறைவன்ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே

என்கிறது.

மாணி : இப்படி எல்லாப் பார்ப்பனரும் எண்ணுவாரா? தமிழன் பார்ப்பனப் புரோகிதன் காலில் விழுந்து தட்சிணைவைக்கும் காலம் ஒழியுமா ? சாதிப் பித்தம் ஒழியுமா ?

நான் : ஒழியும், ஒழிந்தது, ஒழிந்தேபோனது...சாதி என்பதே என் அகராதியில் இல்லை. நான் எந்தப் புரோகிதனையும் தேடியதில்லை; யாரையும் காலில் விழச் சொன்னதுமில்லை. இனி அந்தக் காலம் திரும்பாது. மனிதர் மனச் சாட்சியையே பணிக. யார் என்ருல் மனிதன் என்க. தமிழகத்தார் தம்மைத் தமிழர், இந்தியா மாந்தர் இந்தியர், உலக மாந்தர் உலகோர், என்க. உள்ளத் துடிப்பு ஒன்றே, உள்ளத்தில் துடிக்கும் உயிர் ஒன்றே. அந்த உயிரொற்றுமையில் ஊன்றி, மனச்சாட்சிக்கு இணங்கி நடந்தால், உலகெல்லாம் ஒரு குலமாகலாம். சாதிமத நாடு நிறவேறுபாடே தோன்ருது. இதைத்தான் வள்ளுவர், அப்பர், வள்ளலார் போன்ற பெரியாரும் விளக்கினர். இது தான் எனது சுத்தான்ம சன்மார்க்கம் (தூயமெய்வழி)

மாணி : தங்களிடம் ஐயமில்லை...உம்மை முதலியார் என்றது சமதருமத்தில் முதன்மையாக நிற்பதனுல். சரி உமக்குத்தான் சாதியில்லையே ; என்னுடன் உண்ணவாரும்.

நான் : இதோ என் உணவு ; கனி கடலை.

மாணி : சரி, பாலும் சேர்த்துக்கொள்ளும்.

மாணிக்க நாயக்கர் எனக்குப் பால் தந்தார். நான் உண்பதை வியந்தார். நீண்ட நேரம் தமிழ் வளர்ச்சியைப் பற்றிப் பேசினேம். இரவு நான் அங்கேயே இளைப்பாறினேன். காலை நான்கு மணிக்கே எழுந்து சுத்தம் செய்து கொண்டு தியானித்தேன். அழைப்பு வந்தது. மேலே சென்றேன். மாணிக்க நாயக்கர் "நேற்று மாலை பேசியதைப் பற்றி வேறு நினைக்கவேண்டாம். தங்கள் பரந்த உள்ளத்தை அறிவேன். தங்களைப்போல் எல்லாரும் இருந்தால் புதிய தமிழுலகம் தோன்றும்" என்ருர். நான் "புதிய தமிழுலகைத் தோற்றுவோம்" என்ற பாடலைப் பாடினேன். பிறகு விடை பெற்றுக்கொண்டு நேரே மலைக் கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, நீண்ட நேரம் தியானித்தேன். அப்போது "காலத்தை இப்படி வீணுக்காதே... வந்த காரியத்தைப்பார்...தொடங்கு பாரத சக்தியை" என்று மனச்சாட்சி கட்டளையிட்டது. பாரத சக்தி கதைப்போக்கு முழுவதையும் அங்கே மனதில் குறித்துக்கொண்டு, கீழே இறங்கி ஊர்வந்து சேர்ந்தேன்.

140. ரசிகர் உறவு

பூவுக்குக் காற்றுவேண்டும்—மணம் பரப்ப: கவிஞருக்கு ரசிகர் வேண்டும்— கவிமணம் பரப்ப; அதுகாறும் எனது கவி மதிப்பு

எனக்கே தெரியாது. காரிகையை வைத்து அளந்து பாடிய இலக்கணக் கவிகள் எனக்கே ரசிக்கவில்லை. இயல்பாக உள்ளெழுந்து வந்த கவிகள் எனக்கே வழிகாட்டின. ஒரு கவிதை எப்படி யிருக்கிறது என்று இடைபோட்டுப் பார்க்கும் சக்தி எனக்கு ஷேக்ஸ்பியர், ஷெல்லி டாகூர் கவிதைகளை ஆழ்ந்து ஆராய்ந்த பிறகே தெரிந்தது. அதற்கு எனக்கு இரண்டு நண்பர் கிடைத்தனர்.

காட்டுப்புத்தூரை நினைக்கும் போது கோடீச்வரையர் நினைவு முன்னே வந்து நிற்கும். ஆள் நெட்டை, மனம் விசாலம், நல்ல கல்விமான், தக்க செல்வர். என்னிடம் மிகவும் அன்புகொண்டவர். அவர் கீர்த்தனாசாரியார் ஸ்ரீ எஸ் ஆர். ஸ்ரீநிவாச ஐயங்காரின் மாணவர். அவரிடம் கிதை பயின்றவர். ஏராளமான தியாகராஜ கிருதிகளைக் கேட்டவர். அவர் ஸ்வரப்படுத்திய கீர்த்தனங்களை கோடீஸ்வரரே எனக்குத் தந்தார். நான் ஹார்மோனியம் கொஞ்சம் பயின்றேன்; ஸ்வரங்களைப் பார்த்து வாத்தியத்தில் மெட்டுகளை அழுத்தியமுத்திப் பல கீர்த்தனங்களைச் சாதகம் செய்தேன். புதிய பாடல்களும் பல புனைந்து வாசித்தேன். புதிய பாடல்களை அவ்வப்போது நான் கோடீசர் முன்னே தான் அரங்கேற்றுவது. அவர் மனைவியும் நல்ல ரசிகை, உத்தம பத்தினி. நான் கூடத்தில் பாடிக்கொண்டிருக்கும் போதே உள்ளே சமையல் செய்து, மாமாவைக் கூப்பிடு என்று மகன் ஜயராமனை அனுப்புவாள். ஒருமணிநேரம் பாடுவேன்; பிறகு எனது கடலைப் பொட்டணத்தை அவிழ்ப்பேன். "அதெல்லாம் அங்கே, இங்கே வந்தால் நன்றாகச் சாப்பிடவேண்டும்" என்று ஐயர் உள்ளே அழைத்துச் செல்வார். அம்மாள் பலகைபோட்டு, பஞ்சபாத்திரம் வைத்து, வாழையிலே போட்டு அழகாகப் பரிமாறுவாள். அந்த இல்லற ஒழுங்கைக் காணவே நான் அவரிட்ட விருந்தை அருந்துவேன். சாப்பாடானதும் திண்ணைக்கு வருவோம். அங்கே ஒரு வம்புக்கச்சேரி நடக்கும்.

"காலம் கலிகாலம் அண்ணா, சாதிமதமெல்லாம் ஒன்றானது. சங்கர ஜாதிக் கும்பல் வலுத்தது. இனி உலகம் உருப்படாது." என்று ஒருவர் வெம்புவார். "இந்த ஸ்கௌட் வாத்தியார் நல்லவர் என்று நினைத்தேன். கோடி வீட்டில் சாப்பிட்டு வருகிறார்" என்பார் இன்னொருவர். என்னை அதிசயமாகப் பார்க்கும் முகங்களை நானும் பார்ப்பேன். "இவர் வீட்டில் சாப்பிட்டால் என்ன ஐயா. பரம சுத்தமாயிருக்கிறது...மகா உத்தமக்குலம்." என்பேன். "ஆமா மீனும் பள்ளி சமபந்தியிலே துலுக்கன் கையால் ஜலம் சாப்பிட்ட உத்தமக் குலம். நீரே மெச்ச வேண்டும்." என்று இன்னொரு கிழவர் இழுப்பார். நான் சமரசப் பேச்சில் பிடிப்பேன். "நாமெல்லோரும் ஒரே மனித குலம். வயிறும் பசியும் எல்லோருக்கும் ஒன்றே. ஆதியில் ஏற்பட்ட குண கர்ம பேதம் நான்கே, இப்போதிருப்பது நாலாயிரம்.

இத்தனையும் நமது நாட்டைப் பிரித்து மெலித்து அன்னியருக்கு அடிமையாக்கின. மீனும்பள்ளி ஜமீந்தார் நடத்திய சமரச விருந்துக்கு நீதிபதி சதாசிவையர் போன்ற அறிஞர் வந்திருந்தார்கள். சுந்தரமையர் வேங்கடரத்தினம், சுப்பராயர், கோடீச்வரையர் எல்லாரும் அதிற் கலந்துகொண்டது நமக்குப் பெருமைதானே. சுக்கூர் சாகெப் தண்ணீர் ஊற்றும்போது பிடித்த படம் உங்களுக்குப் பிடிக்கவில்லை. சமபந்தி சாப்பிட்டவர்களை சாதிப்ரஷ்டம் செய்தீர்கள். அவர்களும் உங்களை விலக்கி வைத்தார்கள். சிலர் மனைவிக்குப் பயந்து பஞ்சகவ்யம் சாப்பிட்டு, பிராயச்சித்தம் செய்துகொண்டனர். கோடீசையர் ஒருவரே தைரியமாக சமரஸக் கொள்கையில் நின்றார். அவர் தைரியத்தை மெச்சியே அவர் வீட்டில் அந்த அம்மாள் இட்ட அமுதை உண்டேன். என்னையும் விலக்கலாமே. நான் திவசம் தர்ப்பணம் கருமாதி எதுவும் செய்யத் தேவையில்லை. புரோகிதன் உதவியை நான் நாடியதேயில்லை. என் மனச்சாட்சியே எனது தலைவன். அது ''ஒற்றுமையே வெற்றி'' என்கிறது. நீங்கள் பிரிவினையே புரிகிறீர்கள். இந்தியாவிற் பிறந்தவர் இந்தியர். இந்தியர் எல்லாரும் ஒரே இனம், ஒரே குலம். தீண்டாமை பாராமை, கேளாமை எல்லாம் அசூயைப் பித்தம். ஒழிக பித்தம் வாழ்க சமத்துவம். என்று கூச்சலிடுவேன். வைத்திகர் ''கலிகாலம் அப்பா கலிகாலம்'' என்று இரண்டு சிம்டா பொடி உறுஞ்சி நாலு தும்மல் போட்டுச் செல்வார்.

கோடீசையரும் வேங்கடரத்னமும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வைதிகர் சாபம் வைத்துச் சென்றதும் நான் இவர் சாபம் நமக்கு லாபம் என்று பாடுவேன். வேங்கடரத்தினம் ''சபாஷ்! நல்ல போடுபோட்டீர், இதை ஜமீந்தாரிடம் சொல்வேன்'' என்பார். ஜமீந்தாருக்குக் கண்ணாயிருந்தவர் ரத்தினமே. இடையே சரித்திர மேதாவியான எஸ். டி. ராமானுஜர் வருவார். இவர் என் பேச்சையும் எழுத்தையும் நன்றாக ரசிப்பார். பல அரிய விஷயங்களைச் சுருக்க விளக்கமாகச் சொல்லுவார். நாங்கள் நாடக இலக்கியம் பற்றிப் பேசுவோம். ஊடே வருவார் அரங்கசாமி ஐயங்கார். பேச்சு கம்பராமாயணம் திவ்யப்ரபந்தங்களுக்குத் திரும்பும். இரண்டிலும் அவருக்கு அரிய பயிற்சியுண்டு. அடக்கமாக வருவார் சுந்தரமையர். கணக்கு வாத்தியார் சின்னசாமி ஐயரும் ஒவ்வொருநாள் வருவார். எல்லாரும் நல்ல செவிச் செல்வங்கொண்ட மேதாவிகள். சுந்தரமையர் வந்தால் இசை விருந்துதான். நான் பாட அவர் சீழ்க்கையடிப்பார். சில நாட்களில் அயலூர் வித்வானகள் வருவார்கள். மதுரை அப்புவையர் அடிக்கடி வந்து பாடுவார். சூலமங்கலம் வைத்திநாதையர் கதை செய்வார். கருத்துடன் கேட்போம். ஜலதரங்கம் கணபதி வருவார். தெரு கிண்கிணிக்கும். ஜாலவித்தைக்காரரும் பொம்மலாட்டக்காரருங்கூட வந்து திறமை காட்டிக் கைநிரம்பப் பணம் பெற்றுச்செல்வர். கைசு வேங்கடராம சாஸ்திரியார் இவற்றிலெல்லாம்

ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பார். நான் அவரிடம் சென்றால் பேச் செல்லாம் கீதை உபநிஷத்து ஸயன்ஸ் மயமாயிருக்கும். ஸயன்ஸில் எனக்குச் சந்தேகம் வந்தால் அவரைக் கேட்டறிவேன். அவர் அந்தக் கலையில் மகாமேதாவி. பொறுமையாக எல்லாம் விளக்குவார். இடை யிலே உலக அனுபவங்களையும் பேசுவார். அது எனக்குச் சிந்தனை விருந்தாயிருக்கும். அந்த ரசிகர் உறவால் நான் பெற்ற கலைப்பயன் மிகுதி. மற்றொரு ரசிகர் சுந்தரேசன்.

141. சுந்தரேசன்

1920 செப்டம்பர்; மாலை நேரம். சுந்தரமையர் வீட்டுத் திண்ணையில் ரசிகர் கூட்டம் பேசிக்கொண்டிருக்கிறது. பேச்சின் அலை கள் அடுத்த வீட்டில் பொம்மரபாளையம் சீதாராமையருடன் பேசிக் கொண்டிருக்கும் என் காதில் வந்து மோதுகின்றன. இங்கே சீதாரா மையர், "பாரதி, உமக்கு உலகம் தெரியாது. எல்லாரையும் நம்பி மோசம் போகிறீர்." என்கிறார். அங்கே ஒரு இனிய குரல் "அவர் எப்படியிருப்பார்? பையன்கள் அவரையே மெச்சிப் பேசுகிறார்கள்" என்று வினவுகிறது. எஸ், டீ. ராமானுஜம் "காந்திபோல் இருப்பார் ...சாப்பாடு மோசம்...கடலை வாழைப்பழம். உபவாசத்தில் பிடித்தால் தண்ணீர்கூட இராது. சும்மா இருக்கமாட்டார்; ராத்திரியெல்லாம் எழுதித்தள்ளுவார், படிப்பார். ஊருக்கு உழைப்பார்" என்கிறார். சுந்தரமையர்..." அது ஒரு தனி ரகம். பாட்டு ஜபதபம் ஸ்கௌட், ஸயன்ஸ் என்று துருதுருத்தலைவார்" என்கிறார். இன்னொருவர் "எல்லாம் சரிதான். அவர் பிரம்மசாரியாயிருப்பது எனக்குப் பிடிக் கவே யில்லை. நான் ஒரு பெண்ணைப் பார்க்கிறேன்; கலியாணம் பண்ணிக்கொள்ளும் என்றால், மனசே மனைவி. சங்கல்பமே மக்கள் என்று வேதாந்தம் பேசுகிறார்" என்கிறார். எல்லாரும் "இன்று இந்தப்பக்கம் வரட்டும் கண்டிப்பாகக் கேட்டே விடுவோம்" என்றனர். "இதோ வந்தேன் வந்தேமாதரம்!" என்று நான் அவர்கள் முன்னே நின்றேன். "அடெடே வாருமையா உம்மைப்பற்றித்தான் பேசி னோம்" என்று எல்லாரும் சிரித்தனர். "இவர்தானையா அவர்" என்று தலைவர் ஓர் அழகிய வாலிபருக்கு அறிமுகப்படுத்தினர், நான் சுந்தரேசர் பக்கம் திரும்பிப் புன்னகைத்தேன். அந்தப் புன்னகை யுறவு கலையாகக் கனிந்தது. "ஐயா, நான் பிரமசாரியில்லை; கலையை மணந்துகொண்டிருக்கிறேன். எனக்கும் அவளுக்கும் ஏராளமான சந்ததிகள் உண்டாகப்போகின்றன. அந்தச் சந்ததிகள் நீடு வாழ ஆசீர்வதியுங்கள். பாரத சக்தி என்ற தெய்வக்குழந்தை பிறக்கப் போகிறது. இப்போது பிரவசமாயிருக்கிறது..." என்றேன்...எல்லா ரும் சிரித்தனர். சுந்தரேசரும் ரசித்தார். அன்றுமுதல் எங்கள் கலை வளர்ந்தது.

அழகர் நிரம்ப அழகர்; கலையழகர், அன்பழகர். ஆங்கிலத்திலும் கணக்கிலும் பெரும்புலவர்—B.SC. என்னைப்போல் அவருக்கு டாகூர் கவிதைகளில் காதல் அதிகம். அவரும் நல்ல வசன காவியங்கள் எழுதிவந்தார், எனது கவிதைகளை அவர் கேட்டு ரசித்தார். நான் அக்காலம் ஆங்கிலத்தில் கவி யெழுதி வந்தேன். எழுதியெழுதி சுந்தரேசரிடம் படிப்பேன்- அவர் எழுதியதையும் கேட்பேன். பிறகு டாகூர் கவிகளில் கீதாஞ்சலி, கனிசேர்த்தல் (Fruit Gathering) தோட்டக்காரன் (Gardner) ஆகிய மூன்று நூல்களை வரி வரியாகப் படித்து ஆராய்ந்தோம். கவிஞனை தோட்டக்காரன் வேலையென்ன? அவன் விளைக்கும் கனிகள் யாவை? அவன் தோட்டத்தை எப்படிப் பாதுகாக்கிறான்? அவனால் என்ன பயன்? என்றெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டு கலை விளக்கம் செய்வோம். இடையிடையே ஆங்கிலப் பேராசிரியர் வாக்குகள் மேற்கோளாக வரும். இந்தச் சிந்தனைக் கலையின் பயன் கவிக்கனவுகள் என்ற பாமலர்களாக அரும்பிப் பிற்காலம் வெளிவந்தது. இருவரும் அழகான இயற்கை வனப்புகளில் ஆனந்தமாக உலாவுவோம். அப்போது நான் தமிழில் கவி பாடுவேன்...ஆ தமிழ் எவ்வளவு இனிமையாயிருக்கிறது என்று அவர் வியப்பார். எனது தமிழ்ப் பாடல்களையெல்லாம் அவரிடம் பாடிக் காட்டுவதுண்டு. கேட்டுக் கேட்டு அவரும் வசன காவியங்கள் எழுதத் தொடங்கினார். பிற்காலம் தாமே தமிழ் இலக்கியங்களைக் கற்றுக் கவி புனைந்தார். அழகன் என்ற புனைப்பெயரால் அவர் தமிழ்ப் பத்திரிகைகளில் கவிதையும் நாடகமும் எழுதிவந்தார். அவர் கவிதைகள் யாப்பமைதியை மீறி சிறந்த சிந்தனைச் சித்திரங்களாயிருக்கும். அழகிய சொல்லணியுண்டு. அவர் மனைவி முசிரி சுந்தரேசையரிடம் பாட்டுச் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுக்கு எனது தேசிய கீதங்களைப் பாட ஆசை. முசிரிக்குத் தெலுங்கு மோகம். அவர் சுந்தரேசரிடம் பாரதியார் தெலுங்கில் பாடுவாரா தேசியக்கீதம் வேண்டும்... என்று வினவினார். அழகர் என்னிடம் வந்து ''உமது கவிதாதேவி தெலுங்கில் பாடுவாளா?'' என்று கேட்டார். 'நாளைக் 'காலை பாடுவாள்' என்றேன். அன்றிரவே தெலுங்கில் பாடத் தொடங்கினேன்.

சகலகலாவாணி சங்கீத பூஷணீ
சக்கனி தல்லி மா சக்தி தேவீ
இகபரம் புனகைன இம்பைன வரமுலுன்
இச்சுமா இந்த்ராணி அம்ருத வசனீ...

என்று தொடங்கி இருபது பத்யங்கள் எழுதினேன், பிறகு இரண்டு கீர்த்தனங்கள் வந்தன.

அன்றுமுதல் நான் தெலுங்கிலும் கவனம் செய்தேன். ஆனால் எனது தெலுங்குப் பாடல்கள் எந்த மூலையில் போனவோ தெரிய

வில்லை.* சுந்தரேசர் பிற்காலம் பர்ஹாம்பூர் கல்லூரியில் கணிதப் புலவரானார். எனக்கும் அடிக்கடி எழுதிக்கொண்டிருந்தார். இப்படிப் பல வழிகளில் என்னைப் பண்படுத்தி "இனி பாரதசக்தி பாடு" என்று மனச்சாட்சியான சுத்தசக்தி கட்டளையிட்டாள்.

கo. பாரதசக்தி

142. ஐயம்பாளையம்

பூங்குழல்போல் நான் சுத்தமாயிருக்கும்போது சுத்த சக்தி தேங் கவி பொழிகிறது. அதன் உயிர்ப்பே எனது கலை. "படிக்கவேண்டிய தெல்லாம் படித்துப் படிப்பற்று நில்; காணவேண்டியதெல்லாம் கண்டு, கண்ணை உள்ளே திருப்பு; கேட்கவேண்டியதெல்லாம் கேட்டு உள்ளே ஓங்காரத்தில் லயித்திரு; ஆட்டமெல்லாம் ஆடி அமைதியாக நிலைத்திரு. உன்னைத் தூய வெளியாக்கு; வெள்ளைத் திரையாக்கு; அதில் கலைச்சித்திரம் சுருள் சுருளா ஓடும்." இதுதான் ஆணை.

ஓய்வு நாட்களில் நான் வழக்கம்போலக் கிளம்பினேன். முதலில் நெரூர் சென்று சதாசிவ சமாதியில் தியானித்தேன். அங்கிருந்து தான் தோன்றி மலைக்குச் சென்றேன். அது கரூருக்கு அருகேயுள்ளது. இதுவும் சதாசிவர் தவம்புரிந்த இடம். அங்கேயிருந்த சிலாசானங் களைப் பார்த்தேன். பிறகு கொடுமுடி சென்றேன். அங்கே வேங்கட ராமையர் உபசரித்தார். வெங்கரை சாஸ்திரியார் ஸ்ரீமத் பாகவதத் தைக்கொண்டு மஹாகாவிய லட்சணத்தை விளக்கினார். மற்றொரு சமஸ்கிருத வித்வான் காளிதாஸ வாக்குகளைப் பொழிந்து, இதுவே கவி எனக் காட்டினார். கொடுமுடி ஆற்றில் சதாசிவர் ஆழப் புதைந்து சமாதியிலிருந்த இடத்தில் நானும் நெடுநேரம் இரவில் தியானித் தேன். அப்போது காவிரியில் தண்ணீர் வற்றியிருந்தது. இந்த தியா னத்தால் என் மனம் உள்ளடங்கியது. மறுநாளே பெரிய மழை; ஆற்றில் வெள்ளம்...நேற்று வறண்டிருந்த ஆற்றில் இன்று வெள்ளம் வந்ததே; அதேமாதிரி என் மோன உள்ளத்திலும் காவிய வெள்ளம் பொங்காதோ என்றெண்ணிக் கொண்டே வண்டி நிலையத்தை நோக்கி னேன். இனி எங்கே போவது? 'சலோ ஐயம்பாளையம்!' என்றது மனச்சாட்சி. ஸ்ரீரங்கத்திற்குச் சீட்டு வாங்கினேன். அரங்கநாதர் தரிசனம் ஆனது. கொடுமுடி வெள்ளத்தையும் இங்கே பள்ளிகொண்ட காட்சியையும் சிந்திக்கையில் ஊழி வெள்ளத்தால் உலகழிந்து, பரம் பொருள் தன்மயமாகத் துரியாதீதத்தில் அடங்கிய காட்சி புலனானது. அதுவே பாரதசக்தி தோற்றப்படலமாக அமைந்தது. பிறகு திரு

* பிற்காலம் 50 கீர்த்தனங்கள் கிடைத்தன அவை "சுத்தானந்த கருது மப" என்ற பெயரால் வெளிவந்தன.

ஆனைக்கா; பிறகு தாயுமானர் தரிசனம் செய்துகொண்டு கால் வண்டியைத் தட்டிவிட்டேன். ஓம் சுத்த சக்தி ஜபமும் வாசிதாரணையும் பாரத சக்தி சிந்தனையுமாகவே நடந்தேன். வழிநெடுகக் காவிரியின் ஓங்காரம் என் கவிக் கனவுகளுக்கு சுருதி கட்டி வந்தது. சிறுதூரில் குருசாமி ஐயர் என்னை அன்புடன் உபசரித்ததை மறுக்கமுடியாது; அவர் குடிலில் Standarb Bearer பத்திரிகை மலர்களைப் படித்துப் பயன்பெற்றேன். லால்குடி வாசகசாலையில் நமது தருமம் என்பது பற்றிப் பேசினேன். பூவாளூர் சைவசித்தாந்தக் கழகத்தில் நமது சமயநிலை என்பதுபற்றிப் பேசினேன். அங்கே திருவாசக விளக்கம் என்ற பொருள்பற்றிப் பெரும் புலவர் பேசக்கேட்டு மகிழ்ந்தேன். காலையில் சாலைவழியாகப் புறப்பட்டேன்- இருபுறமும் அடர்ந்த காடுகள், பெரிய மரங்கள்: மரங்களில் குரங்குகள் ஏராளம்; குரங்குகளின் போராட்டம் ஒன்றைக் கண்டேன். ஒருமணி நேரம் உர் புர் கர் என்றனகள; பிறகு எல்லாம் கூடிக் குலாவின. ஏகாந்தமான காடுகளில் தியானிப்பது பேரின்பமளித்தது. அந்தக் காடுளில் பஞ்சவடிப் படலக் காட்சிகள் உதித்தன.

மாலை ஆறு மணிக்கு ஐயம்பாளையம் வந்து சேர்ந்தேன். அகண்ட காவிரிக்கரையில் அழகான ஊர்; காவிரிக்கரையில் அமைதியான வனம்; அதைத் தாண்டி, சொக்கமுகான சிறு கோயில்; அருகே பாடசாலை, சத்திரம், மிட்டாதார் மாளிகை, அக்கிரகாரம், மண்டபங்கள் முதலியன. நான் சென்ற சமயம் நவராத்திரி உற்சவம் நடந்தது. கூட்டம் ஏராளம். பாதி பெண் கூட்டமே.

ஐயம்பாளையம் தண்டாயுதபாணி கோவில், ஜகத்குரு நரசிம்ம பாரதி ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. அவரது அழகிய திருவுரு கோயிலுள் இருக்கிறது. தண்டாயுதபாணி விக்கிரகம் கொஞ்சும் செஞ்சுடர் அழகு பொலிகிறது. நான் சென்ற சமயம், மூர்த்தி சந்தனக் காப்பிட்டு அலங்கரித்திருந்தது. எங்கும் பூமணம், சந்தனமணம், அருள்மணம் வீசின. எனக்குப் புதிய ஆவேசம் பிறந்தது. முருகன் திருவுருவம் என்னை "வா மகனே" என்று அழைப்பது போலிருந்தது, உடனே குகமந்திரம் பாடினேன். அது பாரத சக்தி சித்தி காண்டம் அபயமளித்த படலத்தில் உள்ளது. அந்த மந்திரம் வந்த வேகத்தில் எனது பாரத சக்தியும் வரும் என்ற தைரியம் பிறந்தது. கோயில் எங்கும் வனப்பான சிற்ப—சித்திரச் செல்வங் கண்டேன். முருகன், கண்ணன், சிவன் வரலாற்றுச் சித்திரங்கள் சிறந்து விளங்கின. காணக் காணக் கலாவேசம் எழுந்தது. பாடசாலையிலிருந்து வேதகானம் வந்துகொண்டே யிருந்தது. பாரதசக்தி சித்தி பெறவேண்டும் என்று உள்ளத்தானே தியானித்தேன். கணகணவென்று மணி யடித்தது. தீபாராதனையானது. சந்நிதியில் நான் பரவசமாக நிற்கையில், காரைக்குடி இந்து மதாபிமான சங்கம்

விசுவநாதையர் "வாருங்கோ, சிவோஹம்" என்றார். அவர் இந்து தர்மப் பிரசாரகர்; என்னை முன்பே அறிவார். ஸ்ரீரங்கத்தில் நானும் அவரும் இந்துமதப் பிரசங்கம் செய்தோம். அவர் பிரசங்கப்புலி; கூட்டத்தைக் கண்டால் தடதடவென்று "ஹிந்து சகோதர சகோதரிகளே, கேளுங்கள். நீங்கள் இந்துக்கள். உங்கள் சமயம் இந்து மதம்" என்று சொல்மாரி பொழிவார். அன்று முருகன் சந்நிதியில் நல்ல கூட்டம். "மஹா ஜனங்களே, தெய்வபக்தர்களே, இன்று காட்டுப் புத்தூர் பாரதியார் பேசுகிறார்; தர்ம சக்தி என்பதைப்பற்றிப் பேசுவார். கேளுங்கள். நமப் பார்வதி பதையே...ஹரஹர மகாதேவ... பேசும் பாரதியார்!" பேர்வழி இம்மாதிரி என்னைக் கிளப்பிவிட்டார். சந்நிதியில் வணங்கி, நின்று, ஒன்றரை மணிநேரம் பேசினேன், அதன் சுருக்கம்:—

143. தர்மசக்தி

அன்பர்காள்,

இங்கே அருள் ஆடுகிறது. கலை விளங்குகிறது. முருகன் புன்னகை ஞான ஒளி வீசுகிறது. வேதகானம் காவேரியின் ஓங்காரத்துடன் சேர்ந்து கம்பீரமாக முழங்குகிறது. நாதஸ்வரம் வசந்தா அலைகளை அள்ளி வீசுகிறது.

அன்பர்காள், இந்தக்கோயிலில் நிலவும் சாந்தம் உலகெங்கும் நிலவினால் மானிட வாழ்வு பேரின்ப மயமாகும். ஆனால் வெளியே உள்ள நிலையென்ன? அடிமை, மடமை வறுமைப் பிணிகளால் நாடு வருந்துகிறது. தருமம் கண்ணீர் விடுகிறது. அதர்மம் அட்டகாசம் செய்கிறது. தர்மவீரர்கள் சிறை காக்கிறார்கள். அன்னிய மாயம் நம்மை அடக்கி யாளுகிறது. நமது நாட்டுக்குரிய ஆத்மஞானம் உறங்கிப்போனது. நமது தாய்மொழியைத் தேடுவாரில்லை. ஆங்கிலத்திற்கு யோகம் அடிக்கிறது. ஏனெனில் அதைப்படித்தே வயிறு பிழைக்கவேண்டியிருக்கிறது. இப்போது வயிற்றுக்கவலையே, அன்ன விசாரமே ஓயாக் கவலையானது. இவ்வளவு கவலைப்பட்டும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். வேலை கிடைத்தாலும் அடிமைச் சங்கிலியை கழுத்தில் மாட்டிக்கொண்டு தோதோ போடுகிற துரைகளுக்கெல்லாம் வாலாட்டித் திரியவேண்டும். படித்தவரும் டுஷ் புஷ் என்று ஆங்கிலம் பேசுகிறார்களே யொழிய தாய்மொழியையோ அற நூல்களையோ கற்பதில்லை. அதனால் ஆன்ம நேயமோ அற வழியோ தெரியாமல், வகை யறியாமல் வாழ்ந்து துன்பப்படுகிறார்கள். நமது நாடு சைவமும் வைணவமும் துலங்கும் புண்ணியபூமி; சங்கரரும் அப்பரும் விளங்கிய ஞான பூமி. உலகிற்கெல்லாம் ஞானப் பால் அளிக்கும் காமதேனு. இந்தக் காமதேனு இன்று கண்ணீர் விடுகிறது. நாம் இதைச் சரியானபடி கருதாமல், ஏனோதானோ என்று

வாழ்கிறோம். வேதரிஷிகள் முதல் சங்கரர் வரைக்கும், வள்ளுவர் முதல் வள்ளலார் வரைக்கும் எத்தனையோ மகான்கள் நமக்கு அரிய அறிவுமணிகளை அளித்தனர். கீதையும் குறளும் உள்ளன. நாம் அவற்றில் ஒரு வரிகூடக் கற்று நடக்காமல், அன்னிய மாயச் சுழலில் சிக்கி, வழிதப்பிக் கண்மயங்கி மனம் நொந்து அலைகிறோம். ஆனால் எல்லோரும் இன்பத்தையே தேடுகிறோம். இன்பம் எதனால் வரும்?

"அறத்தால் வருவதே இன்பம்" என்றார் வள்ளுவர். அறம் என்பது என்ன? மனச்சாட்சிக்கு உண்மையாக நடப்பது. பலரும் நலம் பெற வாழ்வது. அறத்தின் அடிப்படை வாய்மை. வாய்மையின் அடிப்படை தூய்மை. தூய்மை அல்லது பரம பரிசுத்தமே கடவுளின் உருவம். மாசற்ற அறம் நிலைத்து, உயிர்கள் இன்பம் பெறவேண்டு மானால், அறவோர் திருக்கூட்டம் எழுந்து தொண்டு செய்யவேண்டும். காரியம் வெற்றி பெறவேண்டுமானால், தியாகம் வேண்டும். எண்ணெ யும் திரியும் செய்யும் தியாகத்தாலே தான் விளக்கு எரிகிறது. வான் முகில் தன்னையே பொழிந்து பயிரை ஊட்டுகிறது. இந்தத் தியாகத்தி னாலேதான் உயிர் செழிக்கிறது. உலகம் தழைக்கிறது. தியாகத் தீயில் புடம் போட்ட வாழ்க்கையே சொக்கத் தங்கம்போல் மாசற் றொளிரும்.

தியாகச்சிலுவை யேறிய ஏசுநாதர் தர்மசக்தியை விளக்கினார். அஞ்சாமை, வாய்மை, தூய்மை, பொறுமை, மனத்திண்மை, அன்பு அருள்—இவையே தியாகத்தின் உறுப்புக்கள். இவற்றால் சுயநல மற்ற பொதுநலம் புரிதலே கர்மயோகம். இவற்றால் புலன்களையும் மனதை யும் அடக்கி தியான சித்தி பெறலே ஞானயோகம்; இவற்றால் உள்ளத் தைப் பண்படுத்தி, இறைவனிடமும் உயிர்களிடமும் அன்பு வளர்த் தலே பக்தியோகம். இந்த மூன்று யோகங்களும் மனிதனுக்கு உடலும் மூளையும் உள்ளமும்போலும். இந்த யோகத்தால் ஒரு சக்தி வளரும். அதையே சுத்தசக்தி என்பர். இந்தச் சக்தி பாரதநாட்டுத் தவமுனிவரால் வளர்க்கப்பெற்ற தனிப்பெரும் சுத்தசக்தி.

இதையே நான் பாரதசக்தி என்கிறேன். நியூடன் கண்டுபிடித்த கவர்ச்சி உண்மையை 'நியூடனின் கவர்ச்சி விதி' என்பதுபோல், பாரத முனிவர் கண்ட தூய சக்தியை. யோகசக்தியை, மகா குண்டலி சக்தியை, பிரம்மாகார சக்தியை, பாரதசக்தி என்போம். இந்தச் சக்தியை வளர்ப்பதே, நமது நாடு தழைக்கும் வழி. இந்தச் சக்தியை இழந்தே, நாம் விழுந்தோம். கண்ணன், புத்தன் முதல் சங்கரர் வரை யில் போந்த மகான்கள் அந்தச் சக்தியை மீண்டும் தாண்டவே அவ தரித்தனர். இந்தச் சக்தி மின்சாரம்போலப் பரவி, மனித வாழ்வை தெய்வவாழ்வாக்கும். அசுர பலங்களை ஒழிக்கும். இந்தச் சக்திதான். பல மூர்த்திகளாக உருவானது—உலகைப்படைக்கும் பிரமன், காக்கும் விஷ்ணு, அழிக்கும் ருத்ரன், மறைக்கும் மகேசன், அருளும் சதாசிவன்.

இந்தத் தெய்வச்சுடர்களின் சக்திகளை முறையே வாணி, லக்ஷ்மி, காளி, மகேச்வரி, மனோன்மணி என்பர். மானிட வாழ்வை உயர்த்தும் சக்திகள் முதல் மூன்று; அறிவும் கலையும் தரும் வாணி, செல்வமும் இசையும் தரும் லக்ஷ்மி, வீரமும் வினைத்திறனும் வெற்றியும் தரும் மகாகாளி.—இந்த மூன்று சக்திகளுக்கே நாம் நவராத்திரித் திருநாள் கொண்டாடுகிறோம். காளிதேவி மகிஷாசுரனைக் கொன்றதாகக் கதை: மனிதனிடமுள்ள முரட்டுத் தாமஸ புத்தியே மகிஷாசுரன். அதை ஒழித்துச் சுதந்திரம் பெறுதலே மகிஷாசுர வதம். வறுமையை ஒழிக்கும் தொழில் வளர்ச்சியே லக்ஷ்மி பூஜையாகும். மடமையை ஒழிக்கும் கல்வி யறிவை வளர்ப்பதே சரஸ்வதி பூஜையாகும். மனவிகாரங்களை ஒழித்து விஞ்ஞான ஜோதி பெறுதலே மகேச்வரசக்தி உபாசனையாகும். துயர்களுக்குக் காரணமான பந்த தொந்தங்களை விட்டு, ஆத்மானந்த மடைதலே மனோன்மணி உபாசனையாகும். இந்தச் சக்திகளெல்லாம் கர்ம பக்தி ஞான யோக சாதனங்களால் வரும்.

உலகம் ஒரு காலம் ஊழி வெள்ளத்தால் அழிந்துபோகிறது. பஞ்ச பூதங்களையும் தன்னுள் அடக்கிய பரம்பொருள் துரியத்துயில் கொள்ளுகிறான். எங்கும் மௌனப்பாழ். ஒருநாள் அவன் சக்தி எழுந்து மறுபடி உலகைப் புதுமையாகப் படைக்க விரும்புகிறது. பரம்பொருள் ஓங்கார வினையை மீட்டச் செய்கிறான். ஓங்காரத்தால் பரமாணுக்கள் சுழல்கின்றன. பூதங்கள் சுழன்று சேர்ந்து பல உருக்கள் தோன்றுகின்றன. ஆகாயம், காற்று, தீ, நீர், மண், பயிர், உயிர்க் குலங்கள் இயற்கை வளங்கள் எல்லாம் தோன்றுகின்றன. முடிவில் மனுமதி என்ற ஆண்பெண் தோற்றம் வருகிறது. மனித மரபு வளர்கிறது. மனித இயல்பில் முக்குண பந்த தொந்தங்கள் புகுகின்றன. சாத்விக குண மாந்தர் தெய்வத் தன்மை பெறுகின்றனர். தாமச அகங்காரிகள் அசுரத்தன்மை கொண்டு பிறரைத் துன்புறுத்துகின்றனர். பாரதசக்தியை வளர்த்த பரதன், அசுரரை வீழ்த்தி, சத்திய ராஜ்யம் நாட்டுகிறான். அவன் மரபில் வந்த சத்தியன் தர்மசக்தியால் உலகை ஆளுகிறான். அவன் தம்பி கலியன் அசுர பலங்களைக்கொண்டு சத்திய அரசைத் தாக்கிப் பிடிக்கப் பார்க்கிறான். சத்தியசுதனான சுத்தன், அவனைப் போரில் முறியடிக்கிறான். கலியன் தானவம் என்ற அசுரத் தீவின் அரசனான மாவலியின் துணையைக்கொண்டு ஏராளமான அதர்ம ராக்ஷஸரை அழைத்துவந்து, பாரத பூமியை அதர்மக் காடாக்குகிறான். சுத்தனைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறான். சுத்தன் பல சமய சன்மார்க்கங்களை ஆராய்ந்து, அனைவருக்கும் பொதுவான சுத்த யோக சாதனத்தை வகுக்கிறான்; இமயமலையில் ஆசிரமம் நாட்டி, தக்க தீரர்களுக்கு யோக சித்தியளித்து, உலகெங்கும் யோக சக்தியைப் பரப்பச் செய்கிறான். அதனால் உலகில் புதிய விழிப்புண்டாகிறது. தானவத்திலேயே அசுரபலம் ஒடுங்குகிறது; தானவன் மகள் யோகசித்தி பெற்று, சுத்த சேவையில் ஈடுபடுகிறாள். கலியும் திருந்தி வருகிறான்

தாமஸப் பழக்கங்கள் ஒழிந்து பாரத மக்கள் சீர் திருந்தி சுத்தனை அடைகின்றனர். சுத்தன் உலகில் சுத்த சுதந்தர சமத்துவ சக்தி யோக சாம்ராஜ்யத்தை நாட்டுகிறுன். இப்படி ஒரு பெருங்கதை, ஒரு மகாகாவியம் என்னுள் உருவாகியிருக்கிறது. உலகில் பாரதசக்தியான யோகசாதனத் திறமையை விளக்கவே, இந்தக் காவியம் உதிக்கிறது. தியான ஜப சாதனங்களாலும், அந்தரங்க சுத்தியாலும், நீங்களும் சக்திபெற்று தெய்வஜீவனம் கைகூடி, இங்கேயே பேரின்ப மடைய லாம். ஓம் சுத்தசக்தி என்று ஒவ்வொரு மூச்சுடனும் ஜபியுங்கள். சக்தி எழும்; தர்மசக்தி பெருகும். ஓம் சுத்தசக்தி."

சாஸ்திரியாரின் முடிவுரையுடன் என் பிரசங்கம் முடிந்தது. தீபா ராதனையானது. நான் எதிரே இருந்த வில்வமரத்தடியில் அமர்ந் தேன்.

144. சித்தியாகும்

அங்கே இரண்டு துறவிகள்: ஒருவர் கோவணம் அணிந்து யோக தண்டத்தில் சாய்ந்திருந்தார். அவர் "பாரதசக்தி சித்தியாகும் கதைப் போக்கு நன்றுயிருக்கிறது" என்றுர். "தங்கள் ஆசீர்வாதத் தால் என் வாக்கு காவிய கங்கையாகி, உலகில் என்றும் ஓடிக்கொண் டிருக்கவேண்டும்" என்று வணங்கினேன். மற்ருருவர் என்னைக் குறிப்பாகப் பார்த்தார். "வாருங்காணும் யோகியே, உம்மை நெரூர் சதாசிவசமாதியில் கண்டேன். பிறகு காட்டுப்புத்தூர் சுந்தரமைய ரிடம் வந்தேன். உம்மைப்பற்றிச் சொன்னுர். சுத்தானந்தம்...சுத்த சக்தி சரித்திரம் எழுதவேண்டியதுதானே. தத்துவ ரகசியங்களை இப்படித்தான் காவிய மாக்கவேண்டும். ஸரஸ்வதி கடாக்ஷம் இருக் கிறது. எல்லாம் சித்தியாகும்..." என்றுர். அவரை வணங்கி "எப்படி இந்த மகாகாவியம் உருவாகுமோ தெரியவில்லை...எல்லாம் சுத்தசக்தி அருள்" என்றேன். அவர் "சுத்தன் அப்பன், சக்தி அம்மை, அம்மையப்பன் கருணையிருந்தால் எதுதான் ஆகாது?" என்றுர். ஞானசம்பந்தர் 'அம்மையே அப்பா' என்று கதறினர்'; அப்பரும் 'அப்பநீ அம்மைநீ' என்றுர். மாணிக்கவாசகரும் 'அம்மையே அப்பா ஒப்பிலா மருந்தே' என்றுர். சூரியன் அப்பன்: கதிர்கள் அம்மை அப்பன் சுத்தன் அம்மை சக்தி என்றே நான் சிறுவயது முதல் தியானித்து வருகிறேன்" என்றேன். அவர் கட்டுமஸ்தான ஆள்; நிரம்பப் படித்தவர்; தமிழ் ஆரியம் ஆங்கிலம் மூன்றும் தெரி யும். விவேகானந்தர் போல வீரத்துறவி. மற்றவர் சேந்தமங்கலம் அவதூதரைப் போன்றிருந்தார். வந்ததைப் புசிப்பது; காவிரியில் குளிப்பது; அப்படியே தியானத்தில் லயிப்பது—இவையே அவர் தொழில். இருவரும் உயர்ந்த தத்துவ யோக ரகசியங்களைப் பற்றிப் பேசினர். நான் உள்ளாழ்ந்து கேட்டேன். இடையிடையே என்

அனுபவங்களையும் சொன்னேன். இராமகிருஷ்ண பரமஹம்ஸரை இருவரும் பார்த்ததாகச் சொன்னார்கள். நான் அவர்களுடனே தான் இருந்தேன், உண்டேன். தியானித்தேன். மூவரும் காலையில் குணசேகரம் சென்றோம். அங்கே ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசித்து, சந்நிதியில் கீதையும் உபநிஷத்தும் பாராயணம் செய்தோம். சேஷகிரி ஐயர் சத்திரத்தில் தங்கினோம். கோயில் பிரசாதமே உண்டோம். மாலையில் அகண்ட காவேரியைத் தாண்டித் திருப்பலாத்துறைக்குச் சென்றோம். அங்கே தனியிடத்தில் அமர்ந்து நீண்ட நேரம் தியானம் நடந்தது. பிறகு ஒரு பஜனை மடத்தார் அழைத்தனர். நாங்களும் பஜனையில் கலந்து கொண்டோம், மறுநாட் காலை மூவரும் முக்கொம்பிற்குச் சென்றோம்.

145. எழுந்தது பாரதசக்தி

அகண்ட காவேரியில் நன்றாகக் குளித்து, நிம்மதியாக அருணோதயத்தைப் பார்த்து நான் தியானித்தேன். மற்றிருவரும் குளித்ததும் குணசேகரத்திற்கே சென்றனர். எனக்கு அந்த இடத்தை விட்டுச் செல்ல மனமில்லை. ஏதோ ஒரு சக்தி என்னை வசிகரித்தது. நான் பத்துமணிக்கு வருவேன், என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, அருணப் புன்னகையை அள்ளிப் பருகி ஆனந்தங் கொண்டேன். உள்ளம் களி துள்ளியது; மகா குண்டலி சக்தி அமுத நாடியில் ஓடி விளையாடியது. பாரதசக்திக் காட்சிகள் விறுவிறுப்பாகத் தூய சித்தத் திரையில் ஓடின. செங்கதிர் ஞாயிறு தெய்வச் சுடர் வீசியெழுந்தது; என்னுள்ளும் மங்கலவாழ்த்து எழுந்தது :

அம்மை யப்பன் அருட்பெருஞ் சோதியான்
எம்மை ஆளும் இறைவன் குருபரன்;
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன்
செம்மல ரடியைத் தினம் சேவிப்பாம்.

அந்தக் கலி விருத்தத்தின் பொருட்சுவையில் ஆழ்ந்தேன் அம்மை சக்தி அப்பன் சுத்தன்...சுத்தசக்தி யிறைவன் என் குருபரன்; அவனுக்கே என்னை நிவேதித்தேன். அவன் எனது தாபந் தணித்தான். எனது தாபம் என்ன? என் வாழ்வெல்லாம் சுத்தசக்தி யோகமாக வேண்டும்; அந்த யோகத்தில் பாரதசக்தி மகாகாவியம் எழுந்து விளங்கவேண்டும். காவியப் பொருள் வடிவாகவே எனது வாழ்வுப் பணியும் நிகழவேண்டும். அதன் பயனெல்லாம் அவன் மயமான உயிர்க் குலத்திற்கே எந்நாளும் சேரவேண்டும். சுத்தசக்தி யிறைவன் புகழை உலகில் நாட்டவேண்டும். இந்த ஆர்வத்தை நிறைவேற்றவே இறைவன் என் அந்தக்கரணத்தில் காவிய வீணை யிசைக்கட்டும் என்று கருதினேன்.

மீட்டுவாய் உயிர் வீணையைப் பண்ணுடன்
ஊட்டுவாய் உயர் வோங்கும் கலையின்பம்;
காட்டுவாய் வழி காசினி எங்குமே
நாட்ட உன்னிசை நற்றமிழ் வாணியே.

தமிழ் வாணியாகிய கலைமகள் அருளை உபாசித்தேன். உலகில் எத்தனையோ மொழிகள் உண்டு. நானே பல மொழிகளைக் கற்றிருக்கிறேன். ஆனால் தமிழ் பலவகையில் சிறந்த மொழி. பாடவும் பேசவும் இனிது. சுருங்கிய சொற்களில், அரிய பெரிய கருத்துக்களை விளக்கவல்லது. தமிழின் தொன்மை பெரிது. இந்தியாவின் அருட்செல்வம் தமிழிலே தான் அதிகம். ஆயினும் தமிழ் இக்காலம் சிறுமையுற்றிருக்கிறது, அதற்கு உலகில் தக்க இடம் வேண்டும். இப்போது கிரீக்லத்தீன் பாஷைகளை அரிதாகவே உலகம் பேசுகிறது: என்றாலும் ஓமர் விர்ஜில் காவியங்களால் அது உலகப்புகழ் பெற்றது. அதுபோல் பாரதசக்தி காவியம் பல மொழிகளில் உலாவித் தமிழின் பெருமையை என்றும் காக்கவேண்டும். இந்தக் கவி இயற்கையான மலையாறுபோலும், மதி கண்ட கடல்போலும் பொங்கிப் பெருக அருள். இந்தக் கவிமூலம் சுயநலப் புகழை நான் தேடவில்லை. என் பெயரை உலகம் மறந்தாலும் உன் பெயரை நீடு நினைக்கவேண்டும். என்னை உய்வித்த யோகசக்தி உருப்பெற வேண்டும், என்ற எண்ணத்துடன் காவியத்தை உள்ளத்தில் ஊறியபடி சொல்லோவிய மாக்குகிறேன். என் உள்ளமான தில்லையில் நடம் புரியும் சுத்தசக்தி யிறைவனை, உலகோர் அனைவரும் தம் உள்ளத்தில் உணரவேண்டும். எல்லாரும் தெய்வத் திருவருள் பொலிந்து வாழவேண்டும்.. அதற்கேற்ற சொல் வரம் அருள்...

எல்லை யற்றநல் இன்னுயிர் உள்ளமே
தில்லை யாகத் திருநடம் செய்பவன்
இல்லை என்பவர் உள்ளும் இருப்பவன்
சொல்லைத் தூண்டித் துலக்குக வெற்றியே!

இந்தமாதிரி மளமளவென்று மங்கல வாழ்த்துச் செய்யுள் எழுந்தது. தியான முடிவில் பாரத சக்தியின் வெற்றிக்காட்சி புலனானது. உலகெல்லாம் தனி உடைமையின்றி, ஆணவப் பொதுவுடைமையின்றி, இறைவன் அருளையே பற்றி, எல்லாருக்கும் அன்பு செய்யும் அருளுடைமையில் இன்புறக் கண்டேன். அதையே முதற்பாட்டாக வைத்தேன். அதுதான் காவியப்பயன் :

வெற்றி கொட்டுக! விம்முக பேரின்பம்!
சுற்றி ஞானச் சுடரொளி வீசுக!

முற்ற றிவன் முதல்வன் பதத்தையே
பற்றி வாழப் பயின்றதிப் பாரெல்லாம்.

மங்கலவாழ்த்தை உடனே பென்ஸிலால் பாரதசக்திக் குறிப்பில் எழுதிவைத்துவிட்டு மீண்டும் உலாவினேன் என்னுள் கேள்விகள் எழுந்தன :

எங்கு வந்ததிப் பூவியல்? எப்படி? எதனால்?
எங்கு செல்வதிப் படைப்பணி? இதன்பயன் என்னே?
இங்கு வந்துவந் தியங்கிடும் வாழ்க்கையின் பண்பை
நன்கெனக்கருள் என்று நான் சக்தியை நயந்தேன்.

உலகசிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார ரகசியங்களை அருள நான் சுத்த சக்தியை உபாசித்தேன். அத்துடன் குணசேகரம் சென்றேன். துறவிகளைக் கண்டேன். அவதூதர் பாரதசக்தி வந்ததா என்று கேட்டார். மங்கள வாழ்த்தைப் படித்துக் காட்டினேன். நாட்டை ராகத்தில் ஆதிதாளம் போட்டுக்கொண்டு ஆவேசமாகப் பாடினேன். "வெற்றி கொட்டுக! உலகில் இனிப் பேரின்பம் விம்முக" என்றார். ஞானனந்த சுவாமிகள் "சுத்தானந்தமே இந்தக் காவியம்; ஆதலால் பாரத சக்தியை நினைக்கும்போது, உலகம் உம்மையும் நினைக்கும்; உம்மை மறக்காது" என்றார். "எல்லாம் திருவருள் இச்சை..." அடுத்தது சிருஷ்டிப் படலம். புது உலக சிருஷ்டி; இன்று மாலை ஆகவேண்டும்..." என்றேன். "மௌனமாக இரும் வரும்" என்றார். பிறகு அவர்களுள் மூலப்பிரகிருதி விசாரம் நடந்தது. நான் மௌனமாகவே ஜபம் செய்து கொண்டிருந்தேன்.

மாலை மறுபடி முக்கொம்பில் குளித்துத் தியானித்தேன். மளமளவென்று சிருஷ்டிப் படலம் உருவாகிப் பொழிந்தது. எழுதிக் கொண்டே போனேன். அதையும் இரவில் குணசேகரப் பெருமாள் சந்நிதியில், எனது துறவித் தோழருக்குப் படித்துக் காட்டினேன், குணசேகரத்தில் பேய் பிடித்த சில பெண்களும் ஆண்களும் வந்திருந்தனர். அவர்கள் செய்த ஆர்ப்பாட்டம் காமக்குரோதாதி அசுரத் தன்மைகளால் நோய்பிடித்தலையும் உலகின் நிலையை விளக்கியது. கலியின் உருவம் கவிக்கனவில் வந்தது. மாவலியரக்கர் கொடுமைகளும் தோன்றின. நான் ஐயன்பாளையத்தில் அருட்குலப் படலம் பாடியபிறகு, அசுர சக்திகளின் கொடுமைகளைச் சிந்தித்தேன். பஞ்சவடிப் போர்ப்படலம் உருவானது.

சரஸ்வதி பூஜை விஜயதசமி நாட்களில், ஐயன்பாளையத்தில் ஓமம் நடந்தது. நானும் கலந்துகொண்டு மந்திரங்களை உச்சரித்தேன். வேதப் புலவர்களுடனும் எனது துறவு நண்பர்களுடனும் வேதப் பொருளை ஆராய்ந்தேன். அதன் பயனாகப் பல வேதக் கவிகளும்

தோத்திரப் பாடல்களும் எழுந்தன. அவற்றை பாரதசக்தி வேதபுரிப் படலம், ஞானோதயப் படலம் சுத்த ஜயந்திப் படலம் முதலியவற்றில் சேர்த்திருக்கிறேன்.

நவராத்திரி விடுமுறை முடிந்தது. நானும் காட்டுப்புத்தூர் போய்ச் சேர்ந்தேன். அன்றுமுதல் பாரதசக்தியே முதன்மையான வேலை. உத்தியோக வேலை தவிர மற்ற நேரமெல்லாம் பாரத சக்தியே. உள்ளெழுச்சிக் கேற்ற காடு மலை வனம் ஆற்றங்கரைகளைத்தேடி அமர்ந்து, பாட்டெழுதுவதே என் அலுவல். இக்காலங்களில் என் உணவு வாழைப்பழமும் ஊறிய கொத்துக் கடலையுமே; கிடைத்த போது பால் அல்லது தயிர் சேர்த்துக் கொள்வேன். பாரத சக்தி சித்த காண்டம், கௌரி காண்டம், தானவ காண்டம் மூன்றும் எழுதப்பட்ட இடங்களாவன: பள்ளிக்கூடத்திற்கு பின்னால் உள்ள தோட்டக்குடில். நெரூர் சதாசிவசமாதி, ஸ்ரீராமசமுத்திரம் வால்மீகி நாதர் கோயில். பிள்ளையார் புத்தூர் மாந்தோப்பு. தலைமலை பெருமாள்கோயில் மண்டபம், கொல்லிமலைச் சரிவு, அரப்பளீசுரமலைக் கோயில் மண்டபம், நீண்ட விடுமுறை நாட்களில் யாத்திரை செய்து கொண்டே பாடினேன். திருவானைக்கா கோயில், ஸ்ரீரங்கம் கம்பர் மண்டபம், திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயில், லால்குடி மயில்ரங்கம் ஆற்றங் கரைகள், சாத்தனூர் சத்திரம், கோயிலடி பெருமாள் கோயில் ராயர் சத்திரம், திருவையாறு கல்யாணமகால், சாமிமலை முருகன் கோயில், கும்பகோணம் மங்களாம்பிகை சந்நிதி, கும்பேசர் மண்டபம் திருநாகேசபுரம் கோயில் மண்டபம், திரு இடைமருதூர் கௌதம நிலையம், தருமபுரம் தோப்பு, கோவிந்தபுரம் பஜனை மடம், மாயவரம் வேதாந்த சுவாமிகள் மடம், குற்றாலம் பாபநாசம் கோயில்கள், சென்னை ஏகாம்பரேசர் கோயில் பின்மண்டபம், திருவொற்றியூர் பட்டணத்தார் சமாது. தியாகராஜர் கோயில், திருத்தணி முருகன் கோயில் காளஹஸ்தி முகலி நதிக்கரையிலுள்ள சிவன்கோயில், கண்ணப்பர்மலை, திருப்பதி மலையில் பெருமாள் பிராகாரம், சோலை, பாண்டவதீர்த்தம், தென்னாலி ஜைன மந்திரம், பெஜவாடா மலைக்குகை, மசூலிப்பட்டணம் தேசியக்கல்லூரி, துறைமுகம், பூரி கோவர்த்தன மடம்; ஜகன்னாதர் கோயில், காசிகுமாரசாமி கட்டம், தசாஸ்வமேத கட்டம், ஹரித்வாரம் காங்கிரி குருகுலம், முதலிய பல இடங்களிலும், திருக்குற்றாலம், கடயம் ஆள்வார் திருநகரி, திருச்செந்தூர், குமரிமுனை முதலிய இடங்களிலும் இயற்கை வனப்பு நிரம்பிய இடங்களில் அமர்ந்து தியானசுகத்தில் பாரதசக்தி காவியத்தை எழுதினேன். ஒருமணி தியானிப்பது, உடனே எழுதுவது, பிறகு தியானிப்பது வழக்கம். வற்புறுத்தி எதுவும் எழுதுவதில்லை. காலை நான்குமுதல் எட்டுமணிவரையில் எழுதுவது; பிற்பகல் மூன்றுமுதல் ஐந்துவரையில், பிறகு மாலை தியானாதிகள் ஆனபிறகு பத்து பதினொருமணி வரையில் எழுதுவதுண்டு. அதன்பிறகு சமாதியிலிருந்து சக்தியை வளர்ப்பதுண்டு. இந்தமாதிரி

மூன்று காண்டங்கள் உருவாயின. நான் தேவகோட்டை தேசியக் கலாசாலையிலிருந்தபோது, பாரதசக்தியை முதல்தடவையாக முடித்தேன். பிறகு வ. வே. சு. ஐயருடன் தமிழ்க் குருகுலத்தில் புதுக்கி எழுதினேன். அதன்பிறகு எனது கையெழுத்துப் பிரதிகள் கறையான் அரிக்க நேர்ந்ததால், பாமணியில் மறுபடி மௌனவிரதம் பூண்டு எழுதினேன். பிறகு அதைத் தேடவேயில்லை. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தில் இருபத்தோராண்டுகள் மௌனம் பூண்டு, தவம்புரிந்த காலத்திலேதான், பாரத சக்தியை நன்றாகச் செப்பனிட்டு வெளியிட முடிந்தது.

இந்த மகாகாவியத்திற்கே எனது வாழ்வைப்பலிதான மாக்கினேன். சாதனகாண்டத்தில் சொல்லப்பட்ட சுத்த யோக தத்துவானுபவங்களைப் பெறுவதற்கு நான் எத்தனையோ பெரியார்களை அண்டிச் சாதனம் செய்தேன். நான் பெற்ற அனுபவங்களைத்தான் சாதன காண்டமாக எழுதியுள்ளேன். சுத்த சக்தி காண்டம் யோகசித்தியுடன் விளங்குகிறது. அதற்குப் பிறகு வரும் பகுதிகள் என் எதிர்காலக் குறிப்புகள். இவ்வாறு பாரத சக்தி எனது உட்புற அனுபவ விளக்கமாகவே அமைந்தது. அதை வகையறிந்து அமைக்கவே நான் உலக இலக்கியங்களில் முதன்மையானவற்றையும், பல அறிவு நூல்களையும் பெருங் கதைகளையும் படித்தேன். கம்பர், வள்ளுவர், இளங்கோ, சாத்தனர், திருத்தக்கர், வீரமாமுனிவர், உமறுபுலவர், சேக்கிழார், பரஞ்சோதி, வள்ளலார், அப்பர், மாணிக்கவாசகர், தாயுமானுர், பட்டினத்தார், வேமனு, போதனு, காளிதாஸன், பவபூதி, துளசிதாஸர், வால்மீகி, வியாசர், சுகர், மஜினி, ரூஸோ, ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி; பிரௌனிங், பிளேக், தாம்ஸன், தாந்தே, ஓமர், விர்ஜில், ஓராஸியன், பொகாஸியன், கெத்தே, ஷில்லர், ராஸின், மோலியர், கொர்நெய், விக்தர்ஹ்யூகோ, அனதோல் பிரான்ஸ், மூஸே, விட்மன், தோரோ, எமர்ஸன், காரல்மார்க்ஸ், லெனின், புஷ்கின், கோர்கி, டால்ஸ்டாய், எலியட், ஸ்காட், கார்லைல், பங்கிம், டாகூர் முதலிய பலர் நூல்களைக் கற்றேன். ஒரு நூலை இரண்டுதரம் படித்துச் சிந்திப்பதுண்டு. காவியம் எழுதும்போது எந்த நூலும் அருகே இராது. படித்ததெல்லாம் மறந்து, இதயத் துடிப்புத்தான் உணர நிற்கும். இவ்வாறு பாரதசக்திக்கவியாறு ஓடிய இருகரையிலும் நிகழ்ந்த கதையை இனிச் சொல்லுகிறேன்.

146. ஆகாசக்கோட்டை இடிந்தது

இன்னும் அவசரக்குடுக்கை ஆகாசக்கோட்டை கட்டிய கதையானது என் பிழைப்பு. ஒருநாள் தஞ்சை ஸரஸ்வதி மஹால் புத்தகசாலையிலிருந்து சிந்தித்தேன். இந்தப் புத்தகசாலையைப் புரட்டிப் பார்த்தோம். அடாடா எத்தனை இலக்கியச் செல்வங்கள், கலைக் குப்பைகள் எல்லாம் காலத்திற்கு இரையாகின்றன, தமிழ் இலக்கி

யங்கள் எத்தனை கடலுக்கு இரையாயின! நம் இலக்கியங்களும் அப்படித்தானே போகும். நமது காலம் ஆகுமுன்பே அவற்றை அச்சுப்போட்டு உலகிற்குத் தந்து கடமையைத் தீர்க்கவேண்டும். இப்போதே மெல்ல மெல்ல அச்சுப் போட்டாலே நாம் ஒரு புத்தக சாலை நிரம்ப நூல்களை ஆக்கி வைக்கலாம். பணம் வரவரப் பணி யாக்குவோம். பணியால் தமிழரை உயர்த்துவோம். பாரதசக்தியை ஆங்கிலமாக்குவோம்; ஓமர், தாந்தே போல் உலகப் புகழ்பெறு வோம்; என்றெல்லாம் நீண்ட அல்னஷர் கனவுகண்டு, முதலில் ஒரு நூலை சென்னை லா பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிட்டேன். நான் இருநூறு ரூபா முன்பணம் அனுப்பி, அர்ஜுன ஸந்யாசி என்ற நாடகத்தையும் அனுப்பினேன். கோவிந்தசாமி பிள்ளை அச்சுத்தாட்களைத் திருத்தி னார். புத்தகம் அச்சிட்டு திருச்சி ஸ்டேஷனுக்கு வந்தது. நான் அங்கே போய் பார்ஸலை எடுத்தேன்.

பார்ஸலை ரயிலேற்றக் கூலிதேடினேன். ஒரு பித்தன் திடீரென்று வந்து, நான் சொல்லாமலே மூட்டையைத் தூக்கி ரயிலேற்றினான். நான் அவனுக்குக் கால் ரூபா தந்தேன். அவன், ஒரு ரூபா கேட்டான். ' முழு ரூபா தா தம்பி...சில்லறையில் பலனில்லை '' என்றான். நான் அரை ரூபா தந்தேன் அதை வீசி யெறிந்து விட்டு...“தம்பி அரை குறையால் ஒன்றும் லாபமில்லை '' என்று ஓடிப்போனான். இதுவும் எனக்கொரு உபதேசமாகப்பட்டது. நான் '' அண்ணா வா, வா முழு ரூபா தருகிறேன் '' என்று கூவினேன் ''நீ வா '' என்ற எதிரொலி தான் கேட்டது. நான் அவனைத்தேட அடியெடுத்தேன். வண்டி புறப்பட்டது. அவன் சென்ற திசையை மட்டும் பார்த்துக் கொண் டேன். கட்டளை ஸ்டேஸனுக்கு வந்ததும், ஒரு போர்டரைப் பிடித்து மூட்டையைப் படகேற்றி, அக்கரை சேர்த்துக் காட்டுப்புத்தூருக்கு கொண்டு வந்து, நான் அப்போது வசித்த அப்துல்காதர் மாளிகையில் இறக்கினேன். நூலை எல்லாரும் விரும்பினர்; ஐந்தே பிரதிகள் செல வழிந்தன. பாடபுத்தக கமிட்டி கூட அங்கிகரித்தது. பி. ஜி. சுந்தர மையர், ஸரஸ்வதி மஹால் அறிஞர், எல்லாரும் மெச்சினார்கள்; திருவையாறு சமுஸ்கிரத கல்லூரியிலும் திருச்சியிலும் நடித்தனர். பி.டி. ஸ்ரீ போற்றினார். ஆனால் நான் போட்ட பணம் வரவில்லை. வ. வே. சு. ஐயர் தேச பக்தனில் '' இந்த ஆசிரியருக்குக் கவிதை யிலும் நாடகத்திலும் மேதையுள்ளது. நாடக இலக்கியத்திற்கு இவர் சேவை நல்ல பலனளிக்கும் '' என்று எழுதினார். ஆனால் விதி வேறானது. அங்குமிங்கும் விற்பனைக்குத் தந்ததெல்லாம் என்ன ஆயினவோ இன்றும் தெரியாது. மூன்னூறு ரூபா செலவிட்டதற்கு எனக்குக் கைக்கு வந்த தொகை மூன்றரைதான். அதன் பிறகு பள்ளிக் கூடங்களுக்காக நான் ஒரு பொதுவணக்கம் அச்சிடத் தந்தேன். அச்சும் ஆனது; பணமும் இருநூறு அனுப்பினேன் அச்சுப்பிரதிகளை துறை யூர் ஸ்டேஸனுக்கு அனுப்பியிருப்பதாக எழுதினார் அச்சுத்தலைவர்.

இதுவரையில் நான் ஒரு புத்தகங்கூடக் கண்ணால் காணவில்லை. பிறகு இந்திய சரித்திரக் கும்மியை அச்சிட நினைத்தேன். நான் எழுதிய திருத்தப் பிரதியைக்கேட்காமல், நான் கிறுக்கி வைத்திருந்த கையெழுத்துப் பிரதியை தப்பும் தவறுமாக ஒருவர் அச்சிட்டு ஒரு கோயிலுக்கு பண்டு சேர்க்க முனைந்தார். அடசிவனே, இந்த அபத்தக்களஞ்சியத்தை வெளியிடாதேயும் என்று தடுத்தேன். பிறகு கிருஷ்ணவதாரக் கதையை வெளியிடச் செய்தேன். அதுவும் பிடிக்கவில்லை ஏமாற்றம், ஏமாற்றம்! அப்போதுதான் அந்த வினோதக்கூலி சொன்ன அரைகுறை அபஜயம் என்ற உபதேசம் நினைவிற்கு வந்தது. அவனைத் தேடித் திருச்சிக்குச் சென்றேன்.

நத்தர்ஷா மசூதியில் குத்பா நடந்தது. எல்லாரும் உள்ளே தொழுகை நடத்தினார்கள். ஒருபேர்வழிமட்டும் வெளியே ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனே அவன். குத்பா முடிந்து எல்லாரும் வெளியே வரும்முன் அவன் சிந்தாமணிப் பாலத்தை நோக்கி ஓடினான். நானும் பின் தொடர்ந்தேன். இருவரும் ஸ்ரீரங்கம் பாதையில் ஒரு தோட்டத்தில் சந்தித்தோம்.

'உங்கள் வாக்கு பலித்தது'' என்றேன். அவன் சட்டென்று என்னை அறிந்தான். நான் அவனை வணங்கி ''இந்தா ஐயா அபராதம் ஒரு ரூபா'' என்று நீட்டினேன். அவன் ''பணத்தை நீயே வச்சிக்க தம்பி. பசிக்குப் பணம்: பசி தீர்ந்தால் அது மண். தம்பி உன் புத்தகப் பசி தீர்ந்ததா? ஹ ஹ ஹ...'' என்று நகைத்து, என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். இருவரும் ஒரு மாமரத்தடியில் தனியே அமர்ந்தோம். என் கண் கலங்கியது; மனம் புதிய துடிப்பை உணர்ந்தது. ''தாங்கள் மகான்; தங்களுக்கு அபராதம் செய்தேன். அதனால் எனது புத்தகக் கனவு பகற்கனவானது. புத்தகம் சுமையானது. ஒன்றும் விற்கவில்லை. இனி அந்த ஆசையை ஒழிப்பேன்'' என்றேன். அந்த மகான் ''ஆசை ஒழியுமா?'' உள்ளேயே வேலை செய்து, குப்பென்று கிளம்பும். அதற்கொரு காலம் ஆண்டவன் அருளால் வரும். அதற்குள் உன் வாக்கு கனியும். பிஞ்சு, ஊறுகாய்க்கே உதவும், பொறுத்திரு. புத்தகத்தைப் புத்தகத்திற் காண்'' என்று, மறுபடியும் புதர்களில் ஓடி மறைந்தான். என்னால் தொடர முடியவில்லை. ஆனால் நான் திருச்சிக்கு வரும்போதெல்லாம் அந்த இடத்தைக்காண மறப்பதில்லை. ஒரு நாள் அந்த மகான் அதே மாமரத்தடியில் தியானித்திருக்கக் கண்டேன். கூட ஒருவன் இருந்தான். அவனை விபரம் கேட்டேன். ''அது அதிசயப் பிறவி; யாரிடமும் எதையும் தருமமாகப் பெறாது. பசித்தால் ரயிலடியில் போய் மூட்டை தூக்கியோ, கூலி வேலை செய்தோ, சம்பாதித்து, வாழைப்பழமும் இளநீரும் வாங்கிச் சாப்பிட்டு, மீதிப்பணத்தை யாருக்காவது ஏழைக்குத் தந்து விட்டு, இந்தத் தோட்டத்தில் வந்து நிஷ்டை

கூடும்" என்றான். மற்றொரு நாள் இதே மகான், "தம்பி, நடத்து வோன் நடத்த விடப்பா, உன் ஆசையை ஊடே ஓட்டாதே. போ, அவனையே நினை" என்றார்:

என் வாழ்வில் இந்தச் சம்பவம் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று. எனது நூல்களை அச்சிடத் தோன்றும். பணமும் கையில் இருக்கும் ஏதோ ஒன்று "இன்னும் பக்குவம் வரவில்லை; பொறு பொறு" என்னும். அந்த மனச்சாட்சியின் வாக்கை மீறி நான் சில நூல்களை அச்சிட்டேன். எல்லாம் தோல்வி, அறநூலை ஐந்து தடவை அச்சிட்டேன். மூன்று தடவை அச்சுத்தாட்களைத் தீ வைத்துக் கொளுத்தினேன். நான்காந் தடவை அச்சுப் பிழைகள் மலிந்த பிரதிகளை குப்பையில் போட்டேன். ஐந்தாம் தரம் ஸமரஸ போதினி யில் அச்சிட்டச் சில பிரதிகள் விற்றன. விலை மூன்றே அணாதான். மிச்சத்தை பாமணி கிராமத்தில் கொண்டு போய் விநியோகித்தேன். பிறகு விளக்கத்துடன் கணேசன் கம்பெனியில் கரெண்ட் தாட் அச்சகத்தில் அறநூல் அழகாக அச்சிட்டு, இருநூறு பிரதிகள் தேவகோட்டை வைத்திய நாதனுக்கும், நூறு கொளும்புக்கும் அனுப்பி, மிச்சம் அலயன்ஸ் கம்பெணி குப்புசாமி ஐயரிடம் தந்தேன். ஒரு தம்படி கூட எனக்கு வரவில்லை. இப்படியே சிவாஜி விஜயம், ராமகிருஷ்ண விஜயம் இன்னும் என்னென்னமோ நூல்களை அச்சிட் டேன். எல்லாம் எங்கே போயினவோ, மறதிப் பெருமாளுக்கே வெளிச்சம். அவை அழிந்ததே நலம். இப்படியே பல பாட்டுப் பிரதிகளும் அங்கங்கே வைத்து மறைந்தன. எல்லாம் நலமே. சுமை குறைந்தது. முட்டையிடுமுன் குஞ்சுக்கு விலை பேசிய அசடன் கதை போலானது எனது புத்தக முயற்சி. அதனால் எனக்கு இரண்டாயிரம் ரூபா நஷ்டமானது. அனுபவம் லாபமானது. திருவருள் ஆணையில்லாமல் எதையும் ஆசையாலும் அகம்பாவத்தாலும் செய்யக்கூடாது, என்ற பாடம் கற்றேன். ஆனால் இலக்கியப் பணியை நான் கைவிடவில்லை. அதற்குத் தூண்டு கோலாக ஐயர் நட்புக் கிடைத்தது.

147. ஐயர் நட்பு

நான் திருக்குறளை எதுகை நயத்துடன் ஆங்கிலமாக்கினேன். வந்தது நட்புக் குறள்.

> நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு.

இந்தக் குறளை மொழி பெயர்த்த போது, எனது நண்பரான ஸயன்ஸ் சாஸ்திரியார் வந்தார்; பார்த்தார். "இந்தக்குறள் ஐயருக்கே பொருந்தும்; அவர் குறளை அழகாக மொழி பெயர்த்திருக்கிறார். வாரும் காட்டுகிறேன்" என்று அழைத்துச் சென்றார். காட்டினார். மாக்

ஸிம்ஸ் ஆப் திருவள்ளுவர் (MAXIMS OF TIRUVALLUVAR) என்ற நூலின் முதற்பதிப்பைப் பார்த்தேன். ஐயர் மொழிபெயர்ப்பு எனக்குப் பிடித்திருந்தது. எனது முயற்சியை SAINT VALLUVAR என்ற ஆங்கில நூலாகச் செய்து நிறைவேற்றினேன். வெங்கடராம சாஸ்திரிகள் அடிக்கடி ஐயரைப் பற்றிப் பேசுவார். தலைமையாசிரியர் சுந்தரமையர், ஐயருக்கு ஆசிரியராயிருந்தவர். அவரும் ஐயரின் ஆங்கிலத்தின் கட்டுரைகளைப் பாராட்டுவார்.

அந்தக் காலமே ஐயர் கம்ப நிலையம் நாட்டினார். ஒரு நாள் கோடைசையர் 'படியுங்கள்' என்று ஐயர் பதித்த கம்ப ராமாயணம் பாலகாண்டத்தைத் தந்தார். நான் ஆவேசமாகப் படித்தேன். நண்பர், "அடடா கம்பன் இவ்வளவு இனிமையா!' என்று வியந்தனர். அங்கே கோவிந்தசாமி சர்மா தோன்றினார். இவர் புகழேந்தி பிறந்த பொன்விளைந்தகளத்தூர் ராயர். "ஊர் அருகேதான்; வாருங்கள்" என்று என்னை அழைத்துச் சென்றார். ஐயரின் மங்கையிற்கரசியைத் தந்தார். தன்னம் பிக்கையைக் காட்டினார். பாரதியார் அப்போது தான் வெளியிட்ட கண்ணன் பாட்டையும் முரசையும் கொடுத்தார். படித்துப் பரவசமானேன். அப்போதுதான் நான் பாரதசக்தி முதற் காண்டம் முடித்திருந்தேன். சில நாடகங்களும் எழுதியிருந்தேன். புதுச்சேரிக்கு எனது நண்பர் ஒருவர் சென்றார். அவர் மூலம் ஐயருக்கு ஒரு கடிதமும், பாரதசக்தியும் இரண்டு நாடகங்களும் அனுப்பினேன். பாரதியாருக்கு எனது இசைப் பாடல்களுடன் தலைநிமிர் தமிழா என்ற பாட்டை அனுப்பியிருந்தேன். ஐயர் நான் எதிர்பாராமல் பாரத சக்தியை ஊன்றிப் படித்து, இவ்வாறு எழுதினார். "பாரதசக்தி மஹாகவி நடையில் அமைந்திருக்கிறது. இது கம்பரசனை போல் விளங்கும் என்று நம்புகிறேன். தங்கள் நாடகங்களும் மிக்க இனிமையாயிருக்கின்றன- பக்தி ரசம் அதிகம். சிருங்காரமும் வீரமும் கலந்து வந்தால் நல்லது. கம்பனில் இவையே விசேஷம்."

ஒரு நாள் நாங்கள் ஆசிரியர் சங்கத்தில் பேசிக் கொண்டிருந்த போது, பத்திரிகையில் ஐயர் சென்னைக்கு வந்து, தேசபக்தன் ஆசிரியராவார் என்ற செய்தி வந்தது. நான் உடனே ஐயரைப் பார்க்கக் கிளம்பினேன். சுந்தரமையர் "உஷ் பாரதி, உமது துரு துருப்பை அடக்கும். உம்மை ஒற்றர் கவனிக்கிறார்கள். கவனம்...உமது உறவு இலக்கியத்துடன் நிற்கட்டும். ஐயர் வரகநேரிக்கு வருவார். அப்போது பார்க்கலாம்.' என்று அடக்கி வந்தார். நான் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். மஹாத்மாஜி சென்னைக்கு வந்தார்; அவரைத் தரிசிக்கச் சென்றேன்: அப்படியே ஐயரையும் காணவிரும்பினேன். திருவல்லிக்கேணி கடற்கரையில் அன்று கூட்டம் நடந்தது; ஐயர் கூட்டத்தில் இருந்தார். பாரதியார் பாரத சமுதாயம் பாடினார். கேட்டு ஆவேசம் கொண்டேன்: தட தடவென்று மழை; கூட்டம் கலைந்தது. ஐயரைக் காணமுடியாது திரும்பினேன்.

ஐயர் தேசபக்தனை ஒப்புக் கொண்டு அரிய இலக்கியப்பணியும் வீரப்பணியும் புரிந்தார். அதில் எனது நூலையும் விமர்சனம் செய்தார். "தமிழில் உள்ள நாடகக்குறையைத் தாங்கள் நீக்கி, ஷேக்ஸ்பியர் போன்ற அரிய நாடகங்களை எழுத வேண்டும்'' என்றார். தேசபக்தனில் பணம் அனுப்பி விளம்பரம் செய்தேன். ஒரு ஆர்டர் வந்தது. ஆறுமாத விளம்பரம் இரண்டே மாதத்துடன் நின்றது. காரணம் கேட்டேன், பதிலில்லை. நான் மற்றொரு தடவை சென்னைக்குச் சென்றேன். அப்போதுதான் ஐயர் பல்லாரிச் சிறைக்குச் சென்றார். தியாகக் காட்சியைக் கண்டு திரும்பினேன். வடக்கே சென்றேன். திருத்தணி, காளஹஸ்தி, திருப்பதி, தென்னாலி, பெஜவாடா, ராஜமகேந்திரபுரம், மசூலிபட்டணம், கோகனடா, விசாகபட்டணம், பூரி, கல்கத்தா, காசி, கயா மட்டும் சென்று திரும்பினேன். நாடெங்கும் காந்திவேகம் பரவியிருந்தது. துர்கிராலா கோபால கிருஷ்ணையா, பிரகாசம், கொண்ட வேங்கடப்பையா, பட்டாபி சீதாராமையா, ஹனுமந்தராவ், ஹரி ஸர்வோத்தமராவ், நாகேச்வரராவ், புரா ஸத்யநாராயணா, சே. ஸ்ரீநிவாசையங்கார், ராஜகோபாலாச்சாரி முதலிய தேசபக்தரையும் தியாக தீரரையும் பார்த்தேன். சென்னையில் மஹாத்மா காந்தியைத் தரிசித்தேன். என் உள்ளத்தில் புதிய கிளர்ச்சிகள் எழுந்தன.

காட்டுப்புத்தூருக்கு வந்தேன். சுந்தரேசய்யருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது சுதேசமித்திரன் துணையாசிரியருள் ஒருவர் வந்தார். நான் கவிக் குயில் பாரதியாரைப்பற்றி வினவினேன், 'சும்மா புகையிலை போடுகிறார்; லேக்கா போட்டு பீர் என்று இருக்கிறார். ஆள் ஒடிசல், பாட்டில் கிளம்பினால் ஜயபேரிகைதான். ஆட்டமும் பாட்டமும் அமளியாயிருக்கும். அவர் இப்போது கடையத்தில் இருக்கிறார்'' என்றார்.

பாரதியார் நவயுகக் குயில் என்பதே எனது கருத்து. அவரைக் காண துடித்தேன். அப்போது திருநெல்வேலி ஜில்லா மகாநாடும் வந்தது. சே. ஸ்ரீநிவாசையங்கார் தலைமை வகித்தார். ஆனால் அக்காலம் என்னை ஒருவருக்கும் தெரியாது. ஆதலால் நிகழ்ச்சிகளைத் தள்ளியிருந்தே ஆராய்ந்தேன். திருநெல்வேலி மகாநாட்டிற்குச் சாதாரணமாகச் சென்று கண்டேன். பாரதி பாடல்கள் முழங்கின. தேசத்தின் மறுமலர்ச்சியும் புதுவுணர்ச்சியும் புலனாயின. எனது கடமையும் புலனானது. குற்றாலத்தை நோக்கிச் சென்றேன். இடையே கடையநல்லூர். நான் கிராமம் கிராமமாக நடந்து பொருநையாற்றின் வளமையைப் பார்த்துச் சென்றேன். பாரதசக்தி வாணியும் என்னுள்ளத்தில் ஆனந்த நடனமாடிக் கொண்டு வந்தாள்.

148. கண்டேன் கவிக்குயிலை!

பாரதியாரை நான் சிறு வயதில் மதுரையில் கோபாலகிருஷ்ணை யருடன் ஒரு முறை பார்த்திருந்தேன். அப்போது வாட்டசாட்டமாகக் களைநிரம்பியிருந்தார். நல்ல அழகர்; நிமிர்ந்த உருவம். இப்போது எவ்வளவு வேற்றுமை! ஆள் இளைத்திருந்தார். ஆனால் விழியில் அதே கனல்; வெற்றிலைக்காவியேறிய உதட்டில் அதே முத்து நகையைக் கண்டேன். மீசை "ஜயமுண்டு பயமில்லை" என்று பேசியது. முதலில் அக்கிராகாரத்திற்குச் சென்று "பாரதியார் வீடெது" என்று வினவினேன். "அடடா நீர் வைதிகமாயிருக்கிறீர். அவனை ஏன் பார்க்கிறீர்? முழு அனுச்சாரம்" என்றார் ஒருவர். "அது கிராக்குப்பிடித்து கஞ்சாப் போட்டு எங்காவது திரியும்" என்றார் இன்னொருவர். "நாங்கள் யாரும் அவன் வீட்டுக்குப் போவதில்லை. கழுதைக் குட்டியை முத்தம் கொஞ்சும் கவி" என்றார் இன்னொருவர். நான் அவர்கள் வாயை அடக்கினேன். "ஐயா தமிழ் நாடு முழுதும் கொண்டாடும் கவிக்குயிலை காகமும் கூகையும் வெறுத்தால் பரவா யில்லை. அவர் பெருமையை நான் அறிவேன்" என்றேன். ஒருவர் மட்டும் கடையம் சத்திரத் திண்ணையிலிருந்து வந்து, "அதோ அந்த ஆற்றங்கரைத் தோப்பில் தாண்டுகால் போடுகிறார்" போம்" என்றார். ஓடினேன், "விட்டு விடுதலை பெற்றிடுவாய் இந்தச் சிட்டுக் குருவி யைப் போலே" என்ற பாட்டு என்னை வரவேற்றது. பாரதியார் அதைப் பாடி வெகு முறுக்காக ராணுவ நடைபோட்டுக் கொண்டிருந் தார். இடையிடையே மீசையை நகாசு செய்து கொண்டே, அஸ்த மான சூரியனைப் பார்த்தார். பசுஞ்சோலையில் தங்கமுலாம் பூசினது போல் மஞ்சள் வெய்யில் படர்ந்தது. ஆற்றின் சலசலப்பும் புட்களின் கலகலப்பும் இயற்கையழகின் உள்ளிசையுடன் கொஞ்சி விளையாடின. இந்தக் காட்சியில் கட்டற்ற கருடனைப்போல் என் உள்ளம் வட்ட மிட்டு, பாரதியாரின் கவியுருவில் சொக்கிக் கொண்டிருந்தது அந்தக் கறுப்புக் கோட்டையோ, கிர்கி கட்டையோ, குச்சி போன்ற கால் களையோ, நான் பார்க்கவில்லை. அவர் உடலான கூண்டில் 'ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்' என்று பாடித்துள்ளும் அமரக்குயிலையே கண்டேன். "நமஸ்காரம்" என்னு முன் படபடவென்று பேசினார்...பேசினோம்.

அவர்: ஓம் சக்தி வரவேண்டும் பாரதி. பாரதசக்தியை ஐயர் காட்டினார். பார்த்தேன். நன்றாயிருக்கிறது, கம்பீரமாயிருக்கிறது.

நான்: பராசக்தியின் அருளால் அந்தக் காவியம் நிறைவேற வேண்டும், சக்தி அருள்பெற்ற தங்கள் ஆசி எனக்குப் பூரணமா யிருக்க வேண்டும்.

அவர்: நிறைவேறும்: ஓம் சக்தி நிறைவேறும்; ஆக்ஷேபனை யில்லை...... "எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எங்கும் வெற்றி"

மகா காவியம் என்றார் ஐயர். அதைப் பூர்த்தி பண்ணும்; தமிழுக்கு அரிய கலைச் செல்வமாகும். அத்யாத்ம நிதியாகும்.

நான்; திருவருளால் காவியம் நிறைவேறும். ஆனால் இந்தக் காலம் யார் அதை மதிக்கப் போகிறார்கள். ஐயர் மதிப்பார், நல்ல ரசிகர். தாங்கள் மதித்தால் அது கவிவாணியே மதித்ததாகும். ஆனால் தமிழகம் அதை அறிய வெகுகாலம் ஆகும்.

அவர்: அறியும், அறியும்! தமிழகம் எழுந்து விட்டது. தலை நிமிர் தமிழா என்று பாடினீரே...தலை நிமிர் தமிழா தலைநிமிர் தமிழா ......தமிழ் நாடு எழுந்து விட்டது. இதோ எழுந்து விட்டது.

நான்: இப்படி உட்காருவோம்.

அவர்: சரி. அஸ்தமனத்தை பார்த்து உட்காருவோம்.

நான்: உதயத்தைப் பார்த்தே அமர்வோம்.

அவர்: சபாஷ் பாண்டியா நமக்கு அஸ்தமனம் இல்லை. என்றும் உதயமே. நாம் அமரத் தன்மை பெற்று விட்டோம்...சாகா வரம் பெற்று விட்டோம்.

நான்: ஆம். இந்த உடம்பில் துடிப்பது அமராத்மாதானே. தங்கள் வாக்கு அமரத்தன்மை பெற்றது. இன்று அதை உலகம் சரியாக அறியவில்லை. நாளை அறியும்.

அவர்: பாரதி, நாம் என்ன செய்யப்போகிறோம் தெரியுமா ...... பாரும்... அமிர்தம் என்ற புதிய ஸஞ்சிகை நடத்தப் போகிறோம். ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் என்று சந்தா சேரும். நமது பாட்டு வசனம் எல்லாம் புதிய மொஸ்தரில் அழகாக வெளியிடுவோம். பணம் குவியும்.

நான்: அப்படி வெளிவந்தால் நாட்டுக்கே நல்லது. தங்கள் தைரியம் எனது சோர்வை விரட்டியடித்தது. நம்மை நாம் அறிந்தால் உலகம் நம்மை அறியும்.

அவர்: சபாஷ்! நல்ல ஞானம். சரி நாடகங்கள் எப்படியிருக்கின்றன? நாடக சிருஷ்டி செய்யும். பலதுறைகளில் தமிழை அபிவிருத்தி செய்ய வேண்டும். நான் கவிதை, நீ நாடகம், அவன் கதை இன்னொருவன் கட்டுரை என்று காரியம் நடத்தினால், இலக்கியம் நிறைவாக வளரும்.

நான்: இயற்கையிலும் அப்படியே. அததன் சக்தியைக் காட்டி அததது உலகை வளர்க்கிறது. சூரியன் ஒளி, மேகம் மழை, கடல் ஆவி, நதி நீர், மண் பயிர் தருவதுபோல், நமது புலமையைத் தந்து தேசந் தழைக்க வாழ வேண்டும். முரசுப் பாட்டை அனுஷ்டானத்

திற்குக் கொண்டு வந்தால் போதும். வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே......

பாரதியார் விரைப்பாக நின்று "வேதம் என்றும் வாழ்கவென்று கொட்டுமுரசே" என்று தொடங்கி முரசுப் பாட்டை ஆவேசமாகப் பாடினார். பிறகு "இங்கே தேவர் சங்கம் கூடும்" என்ற பாட்டை உரக்கப்பாடியதும் அப்படியே சோர்ந்து உட்கார்ந்து விட்டார்.

நான்: "இவ்வளவு பலமாகப் பாடினால் உடம்பு தளரும்; மூச்சு விறுகுமே" என்றேன்.

அவர்: "நாம் அமரத்தன்மை பெற்றுவிட்டோம் ஐயா" என்று நாலுதரம் சொன்னார். நிலாக்காலம். சந்திரன் எழுந்தது. நானும் குற்றாலம் நோக்கிச் செல்லக் காலெடுத்தேன். "சாப்பிட்டுப் போக லாமே" என்றார் பாரதியார். தங்கள் வாக்கமுதமே போதும் என்று புறப்படும்போது ஒரு கவி எழுந்தது:

வீரம் கனலும் விழிக்கனலும், பிள்ளைபோல்
ஈரந் திகழும் இளநெஞ்சும்—பாரதியின்
சொல்லும் பொருளும் சுதந்தரப் பேரிகையும்
வெல்லும் புவியை விரைந்து.

இத்துடன் நான் விடைபெற்றேன். பத்து நாட்களுக்குப் பிறகு நான் திருச்செந்தூர் சென்றேன். அங்கே நாழிக் கிணற்றில் குளித் தேன். அப்போது கடலோரத்தில் பாரதியார் அமர்ந்து சூரியோதயத் தைப் பார்த்தார். நான் அவரைக் கண்டேன். ஓம் சக்தி என்று அன் புடன் என்னை அழைத்துக்கொண்டு முருகன் சந்நிதிக்குச் சென்றார். ஆனால் முருகனைக் கும்பிடவில்லை. நிமிர்ந்து பார்த்துக் கொண்டே ஐந்து நிமிஷம் இருந்து, உடனே கடற்கரைக்கு ஓடினார். நானும் தொடர்ந்தேன். அங்கிருந்து கம்பீரமாக "முருகா முருகா முருகா" என்று பாடினார், கோவில் மணி கேட்டது. தீபாராதனை காண நான் சென்றேன். பாரதியாரும் எங்கோ சென்றார். ஒரு சோலையில் கூடி இரைதேடப் போகும் பறவைகள்போல் நாங்கள் பிரிந்தோம். கடைசி முறையாக நான் பாரதியாரைத் திலகர் கட்டத்தில் ஒரு கூட்டத்தில் பாரத சமுதாயம் என்ற பாட்டை ஆவேசமாகப் பாடக் கண்டேன். அக்கூட்டத்தில் ஐயரும் இருந்தார். ஆனால் திடீரென்று மழைவந்து கூட்டம் கலைந்தது. இருவரையும் சந்திக்க முடியவில்லை. பாரதியார் திருவல்லிக்கேணி யானை மிதித்து நோய்வாய்ப்பட்டதாகச் செய்தி வந் தது. ஒருநாள் ஒத்துழையாமையைப் பற்றி ஆசிரியர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன்; பாரதியார் இறந்த செய்தி வந்தது:

வீரமும் காதலும் வீறும் விடுதலையார்
பேரியென வந்த பெருங்கவியே-ஆர்வமுடன்

பண்ணுர் தமிழைப் பருகவோ மின்போல
விண்ணுர் அழைத்தார் விரைந்து ?

என்று காணிக்கை செலுத்திக் கண்ணன் பாட்டை ஒருதரம் அன்பருக்குப் பாடிக்காட்டினேன். "பாரதி விளக்கம்" கவிக்குயில் பாரதியார்" ஆகிய நூல்களைப் பிற்காலம் பாரதியாருக்கு அர்ப்பணித்தேன்.

149. நாராயணசாமி மடம்

என் பேனு காகிதத்தில் விளையாடுகிறது. நாடகங்களும் கதைகளும் பாடல்களும் பேனுமுனையில் மலர்ந்து சொரிகின்றன. ஐயர்மூலம் எனது பெயரும் சிறிது நாட்டை எட்டிப்பார்த்திருக்கிறது. நல்ல சாதுக்கள் உறவும் உண்டு. காட்டுப்புத்தூரில் நான் சாமியாரம்மா வீட்டில் வசித்தேன். அந்த அம்மா நாமக்கல் கவிஞரின் நெருங்கிய உறவு. சுவாமி நாராயணரிடம் உபதேசம் பெற்ற புனிதை. கணவன் இறந்த பிறகு. சிறுவயது முதலே துறவறம் பூண்ட ஞானியார். உள்ளூரில் நாராயணசாமி மடம் ஒன்று கண்டு, நல்ல முறையில் நடத்தி வந்தாள். அந்த மடத்தில் நானும் அடிக்கடி பிரசங்கம் செய்து வந்தேன். தாயுமானுர் படித்தேன். நாராயணசாமியார் வேமன யோகியின் பரம்பரை. யோகியின் உபதேசங்களையும் சாமியின் உபதேசங்களையும் நான் தொகுத்து நூல் எழுதி அங்கே படித்தேன். தினம் ஒரு துறவி, தினம் ஒரு பண்டாரத்தைச் சந்தித்தேன். சித்தயோக ரகசியங்களைச் சிலரிடம் அறிந்தேன். பள்ளிக்கூடத்தில் எனக்கு நல்ல பெயர்.

என்ருலும் என்னுள் ஒரு பெரிய கலக்கமும் துயரப்படலமும் எழுந்தன, காரணம் எனக்கே தெரியவில்லை. ஒருநாள் நாராயணசாமி மடத்தில் குரு பூஜையின்போது, பெரிய கூட்டத்தில் நான் தலைமை தாங்கினேன்; நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, பரமஹம்ஸரைப்பற்றிப் பேசினுர். அவர் காவியம் ஓவியம் வல்ல புலவர்; தமிழில் வெகு நன்ருகப் பேசுவார், துறவொழுக்கத்தைப்பற்றி நான் பேசினேன். அதன் சுருக்கம்:

மனத்துறவே துறவு, காவியும் கண்டியும் சடையும் தண்டமும் வேடங்கள். உண்மைத் துறவிக்கு வான் வளைத்த உலகமே வீடு; உயிர்த் தொகுதியே கடவுள்; அன்பே வழிபாடு; பொதுநலப்பணியே வாழ்க்கை; தன்னையறிந்து தலைவனையறிந்து, உயிரையும் உலகையும் அறிந்து, காலமும் இடமும் அறிந்து, திருத்தொண்டு பரவும் துறவிகள் நமக்கு வேண்டும். நாடு விடுதலைபெற இவர்கள் தியாகவேள்வி செய்யலாம். சன்மார்க்கம் தழைக்க நம் பெரியோர் தந்த அருட்செல்வத்தை ஊர்தோறும் பரப்பலாம். கோவில்களிலும் திருமடங்களிலும் சன்மார்க்க வகுப்புகளும், பாராயணங்களும், பஜனைகளும், நடத்திப் புதிய அறிவைப் பரப்பலாம். கோவில்களும் மடங்களும் இத்துறவி

களின் உடலைப் பாதுகாக்கவேண்டும். சுப்பறைக்குப் பதில் கீதையும் குறளும் திருவாசகமும் ஏந்தி, இந்தத் துறவிகள் உலாவும் சன்மார்க்க தீபமாயிருக்க வேண்டும். காலை மாலை இவர்கள் ஊருக்கெல்லாம் பொதுப் பிரார்த்தனைகள் நடத்தி, தெய்வச் சிந்தனையை வளர்க்க வேண்டும், சுமார் நூறுபேர் ஒரே குரலாகச் சேர்ந்து, அருட்செல்வப் பாடல்களை பாடிக்கொண்டே ஊரைச்சுற்றி வந்தால் சமயம் வளரும். சன்மார்க்கம் செழிக்கும். ஊரில் நாத்திக வம்புகளும் வசைபுராணங் களும் ஒழியும்.

நாட்டுக்கு விடுதலை வேண்டும், குடும்பக் கவலையே இல்லாத சந்நி யாசிகள் தேசப்பணியில் ஈடுபட்டுத் தியாகம் செய்ய வேண்டும். கிரா மம் கிராமமாகச் சென்று பாட்டும் பணியும் பரவவேண்டும்.''

நான் இப்படிப் பேசும்போது, சபையில் ஒரு பரதேசி என்னையே பார்த்துச் சிரித்தார். என் உள்ளத்தை அவர் அறிந்தவர்போலத் தோன்றியது. என் மனோவேதனைக்கு அவரிடம் மருந்து இருப்பது போல் தோன்றியது. நான் டக் என்று பேச்சை நிறுத்திக் கூட்டத் தைக் கலைத்து அவரைத் தனியே அழைத்துச் சென்றேன். இருவரும் பள்ளிக்கூடத்திற்குத் தெற்கே ரெட்டியார் தோட்டக்குடியில் அமர்ந்து தியானித்தோம்.

150 சுத்தானந்தமே

என்னை அறியாமல் மனம் படபடத்தது...........ஏதோ கடுங் கனவு......

ஊரின் புகழால் ஒருபயனும் இல்லையே
பேரின் புகழோ பெரிதுலகில்?—போர் மனத்தின்
வேகங் கெடுத்து விமலசுத் தானந்தத்
தாகந் தணிப்பாயேந் தாய்.

என்று பாடினேன். பரதேசி, ''சந்தேகமில்லை...இனிச் சுத்தானந் தமே'' என்றார்.

நான்: சாமி நான் சுத்தானந்தனா...அந்தப் பெயர் பூணக் காலம் வந்ததா? என் மனம் பதறுகிறது?

பரதேசி: அடிமையைத் தெரியுதா?

நான்: பார்த்த முகமாகத் தெரிகிறது. என் சிறுவயதில் பள் ளித்துயர் தாங்காது ஒரு மாந்தோப்பினருகே, ஏரிக்கரையில் கண்ணீர் வடித்தேன். அப்போது ஒரு ஞானி வந்து ஆறுதல் கூறி, நீ சுத்தானந் தம்... பக்குவம் வரும்போது இப்பெயர் விளங்கும் என்றார். அந்த ஞானியுடன் உங்கள் சாடையாக ஒருவரைப் பார்த்தேன்.

பரதேசி: அந்த மகான் இப்போது அரப்பளீசர் மலையிலும் கொல்லி மலையிலும் சுற்றித்திரிகிறார். மாசற்ற சுத்தானந்தம் வருவான் என்கிறார். நான் தற்செயலாக இந்தக் குருபூஜைக்கு வந்தேன். உண்மைதான். பொதுநலத் தியாகமே துறவு. அப்படிப்பட்ட முதல் துறவியாக நீயிரு. உன் வாழ்க்கையில் பெரிய மாறுதல் வருகிறது.

நான்: அதையே உணர்கிறேன். என் உள்ளம் தேசத்திற்காகத் துடிக்கிறது. அடிமை வேலையை வெறுக்கிறது.

பரதேசி: உமக்கு விடுதலை வருகிறது.

நீண்ட மௌனம்; மனம் ஏதேதோ சிந்திக்கிறது. மஹாத்மா ஜியின் நினைவே வருகிறது. பரதேசியை வீட்டிற்கு அழைத்து வந்தேன். கனிகடலை தந்தேன். உண்டபின் தோட்டத்திற்குச் சென்றோம்.

பரதேசி: அப்பனே பேச என்ன இருக்கிறது? நடப்பது நடக்கும். அதற்குத் தீர்மானம் ஆகிவிட்டது. வேலையை உதறித்தள்ளு. அதற்கும் ஆண்டவனே வழிதுலக்குவான். ஏன் கவலைப்படுகிறாய்?

நான்: ஏதோ துயரம் நெஞ்சை அடைக்கிறது. யாரோ இறந்த துயரம்...என்று விசனித்தேன். பரதேசி "அரப்பளீசர் மலைக்கு இனி வழிதுலங்கும்...அதனிடையே வருவதெல்லாம் தெய்வ சம்மதம் என்று பொறுத்து முன்செல்...பந்தமெல்லாம் உதறித்தள்ளு; சுதந்திரம் வரும்,"

இத்துடன் பரதேசி விடைபெற்றுச் சென்றார். நான் எனது குருநாதனையே சிந்தித்துக் கொண்டு கண் அயர்ந்தேன். கனவில் அவர் அந்தக்காலம் என் கவலையைத் தீர்த்த காட்சிப் படலங்கள் வந்தன. இடையிடையே விழிப்புடன் ஒரு விசனமும் மனதைக் குழப்பியது.

151. ஹா லோகமான்யா

காலையில் இந்துப் பத்திரிகை வந்தது. ஆவலாகப் பிரித்தேன்: லோகமான்யர் காலஞ் சென்றார். மஹாத்மா அவர் பக்கத்தில் இருந்தார். திலகர் தமது விடுதலைப் பணியை காந்தியிடம் ஒப்பித் சென்சென்றார். அறம் குலைந்து மறம் நிறைந்த நாளில் நான் அவதரிக்கிறேன். அறத்தைக் காக்கிறேன். தீயரை அழிக்கிறேன், நல்லோரைக் காக்கிறேன், என்ற தேவாக்கியத்தைச் சொல்லி இறுதி மூச்சை விட்டார்.

இந்தச் செய்தி என் மனத்தில் இரண்டு நாளாகத் துடித்த,விசனப் புயலை ஜ்வாலையாகக் கிளப்பி விட்டது. நான் திலகரிடம் அளவற்ற அன்பு கொண்டவன். ஒரு தரம் சிதம்பரம் பிள்ளையே திலகரைப் புகழக் கேட்டிருந்தேன். சிறு வயது முதல் அவரது வந்தேமாதரக் கிளர்ச்சியில் பங்கு கொண்டேன். திலகர் படத்தை என் முத்தண்ணு வழிபடு

வார். அவர் பெருமைகளைப் பேசுவார். நான் கருத்தூன்றி உணர்வேன். "தேசம் நமது; அதன் உரிமை நமது; அதன் ஆட்சி நம்மதே; யார் நம்மை அசைக்க முடியும். அடிமை விலங்குகள் பொடிபடுகின்றன. எந்த இந்தியனும் அதை இனி மாட்டிக்கொள்ள மாட்டான். அப்படி யாராவது மாட்டிக்கொண்டு அடிமைத் தொழில் செய்தால் அவன் மானங்கெட்டவன். தலை நிமிர்ந்து நில்லுங்கள். ஒவ்வொரு மூச்சுடனும் தேசம் வாழ்க! வந்தே மாதரம்! என்னுங்கள்" என்று உரத்த குரலில் தெள்ளிய ஆங்கிலத்தில், திலகர் சொன்ன வீரவுரை உள்ளத்தைப் பற்றிக்கொண்டது.

ஆம் நான் சுந்தரமையரிடம் சென்று, நமது திலகருக்குக் கூட்டம் போடுவோம் என்றேன். ஆசிரியர் சபையிலும் பேசினேன். மாலை ஐந்தரைமணிக்குக் கலாசாலை ஹாலில் பெரிய கூட்டம் கூடியது. சுந்தரமையர் பத்து நிமிஷம் ஆங்கிலத்தில் திலகர் பெருமைகளைப் பேசினார். பிறகு ஸ்ரீ ராமானுஜம் பேசினார்; பிறகு வேங்கடரத்னம், பிறகு நான் எழுந்தேன்...தமிழில் பேசத்தொடங்கினேன். தொண்டையடைத்தது. "என்னருமைச் சகோதரர்களே..." இரண்டு நிமிஷம் அழுகை...நம் அருமைத் தந்தை லோகமான்யரை இழந்தோம்...பேச்சு அவ்வளவே. பிறகு பாட்டுக் கிளம்பியது...எரிமலைபோல் கிளம்பியது...

இழந்தனம் லோக மான்ய திலகரை இந்தியாவின்
பழந்திரு விளங்க வந்த சுதந்திரப் பரிதி தன்னை
இழந்தனம் சுதேசத் தந்தை எனத்தகும் வேத வித்தை
இழந்தனம் இருகண் ணனை இருண்டதிவ் வுலகம் அந்தோ.
பாரத மாதா பட்ட பரிபவந் தன்னை நீக்க
மாரதச் சிங்கமாக வந்தனை சுதந்தி ரத்தின்
வேரிலே தியாக வாழ்வை விட்டனை அச்சம் போக்கும்
தீரனே லோக மான்ய திலகனே வீரத் தீயே
தந்தையை இழந்து வாடுந் தனயர்போல் வாடு கின்றோம்;
பந்தனை தளரவில்லை; பாரத தேவி கண்ணீர்
சிந்திய வண்ணம், எங்கள் சேவையைத் தூண்டு கின்றாள்;
வந்தெமைக் காந்தியாக வழிநடத் திடுவாய் அப்பா!

இப்படியே பத்து விருத்தங்கள் பாடிய பிறகு, உள்ளக் கிளர்ச்சியுடன் அரைமணி நேரம் விரிட்டேன்...சபையை மறந்தேன். என்னை மறந்தேன். திலகரின் ஆவி என்னுள் துடிப்பதாகப் பாவித்தேன்...

152. சுதந்தர வேகம்

நண்பர்காள்,

இப்படிப்பட்ட திலகரை இழந்தோம்; எதனால்? நாம் அடிமை வாழ்வைப் பொறுத்துக் கொண்டிருந்ததால். அடிமை நிலையை நாம் சுரீர் என்று உணராததால், நமது திலகர் முயற்சிகள் பலிக்காமல் போயின. இருந்தாலும் சுதந்தரக் கனல் அணையாது. 1857-ல் அது ஹர ஹர மகாதேவ என்று கர்ஜித்து, வாள் வீசி எழுந்தது. நானா சாகெபு, தாந்தியாதோபி, லக்ஷ்மிபாய், அகமத் மௌல்வி, குமார்சிங் முதலியோர் கனல் விசிப் போர் புரிந்தனர். துரோகிகள் எதிரிகளுடன் சேர்ந்து வீரர் முயற்சிக்குக் குழி பறித்தனர். 25—12—1885-ல் மீண்டும் சுதந்தரக் கனல் சாம்பலை ஊதியெறிந்து பளிச்சிட்டது. காங்கிரஸ் சபை எழுந்தது. ஹ்யூம்துரை தலைமை தாங்கிப் பேசினர். பிறகு ஸர், எஸ். சுப்பிரமணிய ஐயர் நமது உரிமையைப்பற்றிப் பேசினர். ஜி. சுப்பிரமணிய ஐயர், கேசவப் பிள்ளை, அனந்தாசார்லு, விஜயராகவாசாரியார், சுந்தரராமையர், ரானடே, திலாங், அகர்கார், மேதா, ஆப்தே, தாதாபாய் சுரேந்தரநாத் பனர்ஜிலாலா லஜ்பதிராய் முதலியோர் காங்கிரசை உருவாக்கினர். அதுமுதல் இந்தியாவின் சரித்திரமே காங்கிரஸ்சரித்திரமானது. காங்கிரஸ் முதலில் கோகலேயின் மிதவாதத்தைப்பின்பற்றி, பிரிட்டிஷ் பார்லிமெண்டைக் கெஞ்சிக்கொண்டிருந்தது. எழுந்தார் திலகர்! ‘இந்தப்பிச்சைப் பிழைப்பேனையா? நமது நாட்டை நாம் ஆள்வோம். சுதந்தரத் தீ இனி அணையாது. நமது பிறப்புரிமையைப் பெற்றே தீருவோம்'' என்று வீறிட்டார். லாலாஜீ, பால், அரவிந்தர், சிதம்பரம் பிள்ளை, பாரதியார் ஜி. சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரிரங்கர், விஜயராகவாச்சாரியார் முதலியோர் திலகரைப் போற்றி பேசினர், எழுதினர் பாரதியார் பாடினர். திலகரின் கேசரி மராடா, அரவிந்தரின் வந்தேமாதரம், பாரதியாரின் இந்தியா எல்லாம் சுதந்தர முழக்கம் செய்தன. கர்சான் நல்ல சகுனம் பார்த்து வங்கப் பிரிவினையைத் தொடங்கினன். அது தங்கப் பிரிவினையானது. நாடு ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்தது. மிதவாதிகள் லண்டனில் கெஞ்சிக் கதறி மிண்டோ மார்லி சீர்திருத்தத்தை எதிர்பார்த்து நின்றனர். நாட்டிலோ வெள்ளையர் கொள்ளை, சுதேசிகள் பட்டினி, மடமையிருள், வறுமைத்துயர், அடக்குமுறைக் கொடுமைகள் அதிகரித்தன.

திலகர் சூரத் காங்கிரஸில் மிதவாதிகளுக்கு ஒரு பலமான அடி கொடுத்தார், காங்கிரஸ் அலங்கோலமாகக் கலைந்தது. மிதவாதிகள் திலகரைப் புரட்சிக்காரர் என்று கண்டித்து, விபீஷண வேலை செய்தனர். ‘‘கட்டுங்கள் சுதேசத்துணி; அன்னியத் துணிகளை வர்ஜனம் செய்யுங்கள்; சுதேசக் கலைகளைப் போற்றுங்கள், சுயராஜ்யம் நம் பிறப்புரிமை'' என்று திலகர் நாட்டைத் தூண்டினர். நாடெல்லாம் திலகரை வாழ்த்தி எழுந்தது. அவருக்காகவே 124 ஏ, 153 ஏ எல்லாம்

வந்தன; அதுகாறும் ஆங்கிலத்தில் தலைவர் பேசினர். "அடடா என்ன ஆங்கிலம், என்ன அருவிப் பேச்சு," என்று ஜனங்கள் வியப்ப தன்றி, வேறு பயன் இல்லை. திலகர் மராடியில் பேசினர். கணபதித் திருநாள் சிவஜித் திருநாட்களால் உரிமையுணர்ச்சியைக் கிளப்பினர். குண்டுணி குலாமிகளை மட்டம் தட்டினர். சுதந்தர பேரிகை கொட்டி முன் சென்றர். 1908-ல், சர்க்கார் அவர்மேல் குற்றம் சாட்டி, ஆறுண்டுகள் மாந்தலைச் சிறையில் அடைத்தது. "நான் நிரபராதி; நம்மைவிட உயர்ந்த தெய்வசக்தி உள்ளது. அதுவே உலகை ஆளுகிறது. என் கொள்கை தூயதென்று அதற்குத் தெரியும். நான் வருந்துவதால் தேசம் நன்மை யடையுமானல், அதுவே என் இன்பம். அதுவே இறைவன் இச்சையானல் இதோ சிறை செல்கிறேன்..." என்று கீதையைக் கையிலேந்தி, திலகர் மாந்தலைக்குச் சென்றர். சிறையில் கீதாரகசியம் எழுதினர். 1916-ல் லக்னே காங்கிரஸில் அவர் இந்து முஸ்லிம் ஒற்றுமையை வற்புறுத்தினர். நாடெங்கும் சுயாட்சிக் கிளர்ச்சி செய்ய முனைந்தார். பெசண்டம்மையாரும் அவருடன் சேர்ந்து அரிய தொண்டு செய்தார். நாடெங்கும் முறையாக சுயாட்சிச் சங்கங்கள் எழுந்தன. மேடைகள் அதிர்ந்தன. பெசண்டின் நியூ இந்தியாவுக்கு நல்ல புகழ் கிடைத்தது. என்ன பயன்? மாந்தெகு செம்ஸ்போர்ட்டு சீர்திருத்தம் வந்தது. ரவ்லட்டு சட்டமும் வந்தது. வந்தது இரட்டையாட்சி. அடிமைச் சங்கிலி இன்னும் இறுகியது. வெள்ளையர் பிரித்தாளும் சூழ்ச்சி பலமானது. இந்தச்சமயம் அன்னிய ஆட்சியின் கொடுமை பஞ்சாப் படுகொலையாக உருவெடுத்தது—பயங்கரக் காட்சி! டயர் விமான குண்டு போட்டு ராமநாம பஜனை செய்யும் மக்களைக் கொன்றன். டயரும் உடையரும் இந்தியர் மனம் உடைய அடக்கி ஒடுக்கி அவமானப் படுத்தினர். இதைப் பொறுக்கமாட்டாமல் நாடு கொதித்தெழுந்தது. எழுந்தார் மஹாத்மா காந்தி...கிலாபத் இயக்கமும் எழுந்தது. இந்து முஸ்லிம்கள் மகாத்மாவுடன் ஒத்துழைத்தனர். மகாத்மா சத்தியாகிரகம் தொடங்கினர். பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துடன் ஒத்துழையாமை தொடங்கினர். 1920 முதல், இந்திய சரித்திரம் காந்தி சரித்திரமானது. புதிய தலைவன் எழுந்தான். பழைய தலைவனை இறைவன் அழைத்துக்கொண்டான்; திலகர் காந்தியிடம் தம் சுதந்தரப்பணியை ஈந்தார். திலகர் சக்தி காந்திஜியின் உள்ளத்தில் துடித்தது. நாம் திலகருக்குச் செய்யவேண்டிய கடமை காந்திக்குத் துணைசெய்வதே...கண்ணீரைத் துடைப்போம். துயரத்தை வீர உறுதியாக்குவோம். சோர்வை ஒழிப்போம். வீறுகொண்டு தேசப்பணி செய்வோம்.

வந்தேமாதரம்!

இந்தப் பேச்சு பள்ளிக்கூடத்தைக் கலக்கி விட்டது. இதன் குறிப்புகள் போலிஸ் இன்ஸ்பெக்டருக்குச் சென்றன. ஆசிரியர் "அபாயம் அபாயம்!...சர்க்கார் பள்ளிக்கூடத்தில் இப்படிப் பேசலாமா?" என்ற

னர். தலைவர் என்னைத் தனியாகக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்தார். எனக்குமட்டும் "கிளம்பு வீராவேசமாக! உதறித்தள்ளு அடிமை வேலையை" என்று மனச்சாட்சி கட்டளையிட்டது. பிறகு வாய் நிற்குமா? மறுநாள் பிரார்த்தனை ஹாலில் எல்லாரும் கூடினர், வழக்கம் போல் நான் பிரார்த்தனை பாடினேன்! என்ன பாடினேன்?

கலையினிற் பெரியார் வீரக் கனலினிற் பெரியார், நாட்டுத்
தலைவரிற் பெரியார், நாடு தந்ததை நாட்டிற் கீந்த
நிலைபெறுந் தியாக மூர்த்தி, நெறியினிற் பெரிய சீலர்
திலகரைப் போலெம் வாழ்வு திகழுக கருணை வேந்தே.

என்று நான் விருத்தங்கள் பாடிக் கண்ணீர் விட்டேன். மணியடித்ததும் எல்லாரும் வகுப்புகளுக்குச் சென்றனர். சுந்தரமையரும் சிலரும் "தேசப் பைத்தியம் பிடித்து விட்டது பாரதிக்கு; அவர் இனி இங்கே இருக்கமாட்டார்" என்று பேசியது என் காதில் விழுந்தது. சுந்தரமையர் "ஏங்காணும் சம்பந்தமில்லாததெல்லாம் பாடுகிறீர்... இனி கவனம்..." என்றார்.

153. கரூர் கூட்டத்தில்

மனம் துணிந்தது; மனச்சாட்சி 'கூட்டை உடைத்துக் கிளம்பு' என்றது, தேசம் அழைத்தது. என்னால் பேசாதிருக்க முடியவில்லை. சர்க்கார் நண்பர் எச்சரித்தனர், நச்சரித்தனர். ஒற்றர் கழுகுப் பார்வையும் ஆந்தைப் பார்வையும் பார்த்தனர். என் மனச்சாட்சி கருடப் பார்வையுடன் வருங் காலத்தை அளந்தது. சதாசிவப் பிரம்மேந்திரர் சமாதியில் நீண்ட நேரம் தியானித்தேன். "கர்மசுத்தி பெறு" என்று உள்ளே உதித்தது. சரியான யோகி, உலகில் பொதுநலம் புரிந்துகொண்டே கடவுளுடன் கலந்திருப்பான். அப்படி நானும் தேச சேவை செய்துகொண்டே உள்ளத்தானுடன் கலந்திருக்க விரும்பினேன். அந்தக்காலம் தேசசேவை காந்தி சேவையே. திருச்சி ஜில்லாவில் காந்திய வேகம் விரைந்து பரந்தது. பல பொதுக் கூட்டங்களில் நானும் கலந்துகொண்டு பேசினேன். அவற்றுள் கரூர் கூட்டமே பெரிது:

கரூருக்கு நான் அடிக்கடி செல்வதுண்டு. எனது நண்பர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையை அப்போது கண்டு அளவளாவுவேன். அவர் கரூர் மாப்பிள்ளை. அவர் மனைவி, மாமி, அத்தான் எல்லாரும் எனக்குத் தெரிந்தவர்கள். இரும்புக்கடை முத்துப் பிள்ளை வீட்டில் நான் தங்குவேன். கவிஞரும் அங்கே தான் என்னைக் காண்பார்.

அன்று அமராவதி ஆற்றுமணலில் மாபெரும் கூட்டம், திலகருக்காக அனுதாபக் கூட்டம். அதில் ராமலிங்கப் பிள்ளை தமது பாடல்களைப் படித்தார். பிறகு நான் பேசினேன். ஒரு பாட்டுப் பாடி, பேச்

சைத் தொடாங்கினேன். என்னை அறியாமல் பேசினேன். அதன் சுருக்கம்:

சென்ற உலகப் போரில் இந்தியா பணமும் இரத்தமும் கொட்டி, பிரிட்டிஷ் கொடிக்கு வெற்றி அளித்தது. காந்தியும் திலகரும், ஆளும் பணமும் சேர்த்து உதவினர். ஆங்கிலச் சிங்கமும் "சபாஷ் இந்தியா. சண்டை முடிந்ததும் சுதந்திரம்!" என்றது. 11—11—1918 சமாதானக் கொடியாடியது. வில்ஸனும் லாயிட் ஜார்ஜும் இனி உலகில் போரே இல்லாமல் செய்வோம், என்று ஜினிவாவில் சர்வதேச சங்கம் நாட்டினர். சர்வதேச சங்கம் சர்வ நாச ரங்கமானது. "எல்லா நாடுகளின் உரிமைகளையும் நாங்கள் பாதுகாப்போம். வெடி குண்டிற்கே இனி வேலை இராது" என்றது அந்தச் சர்வதேச சங்கம். பேச்சிற்குப் பின்னே ஒவ்வொரு நாடும் குண்டுக் கிடங்கிலே தான் குறி வைக்கிறது. உரிமைகளைக் காக்க வந்த சர்வதேச வெள்ளையர், இந்தியாவின் கண்ணீரைக் கண்டும் கல்நெஞ்சர் ஆனார். சண்டைக்கு உதவிய இந்தியாவிற்குக் கிடைத்தது என்ன? ரவ்லட்டுச் சட்டம். அது 1906 ஆண்டு முதல் 1916 ஆண்டுவரையில் இங்கும் அங்கும் நடந்த சில்லரைப் புரட்சிகளையும் குண்டு வீச்சுக்களையும் பயங்கரமாக வர்ணித்து, 'இந்த நாட்டிற்கு உரிமை தந்தால் அபாயம்' என்றது. ஒற்றர் கெடிபிடி பெரிகியது. போலீஸ் தடபுடல் அமலியானது. ஐந்துபேர் கூடிப் பேசக் கூடாது. யாரையும் கைது செய்யலாம்; சிறையிடலாம். மாஜிஸ்ட்ரேட் சர்வாதிகாரி. நாடு கம்ஸ ராஜ்யமானது.

இந்த நிலைமை மாற்ற ஒரு தீரர் எழுந்தார். திலகர் அவரிடமே நாட்டை விட்டுச் சென்றார், மகாத்மாகாந்தி—கமது மூச்சைப்பிடிக்கும் ரவ்லட்டுச் சட்டத்தை ஒழிக்கும்படி கேட்டார். சர்க்கார் பிடிவாதமாக அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டது. அடக்கு முறைகள், அடங்காச் சுதந்திரத்தை வளர்த்தன. கர்சானின் பிரிவினைச் சட்டம் சுதேசக் கிளர்ச்சியாக எழுந்தது: மின்டோமார்லி சீர்திருத்தமாக விளைந்தது. திலகரும் பெசண்டும் செய்த ஓம்ரூல் கிளர்ச்சி, மாண்டெகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமாகக் கிளைத்தது. வந்தது இரட்டையாட்சி, பணமும் படையும் அதிகார வர்க்கத்தின் இரும்புக்கையில்; மந்திரிசின்டும் அதன் கையில். ஒட்டைக்கூத்தன் கவிக்கு இரட்டைத் தாழ்பாழ் போலானது; அடிமைச் சங்கிலி அழுத்தி இறுகியது. இந்தியா இந்த இரட்டைப் பூட்டையும் பொறுத்துக்கொண்டு போருக்குப் பணம் கொட்டியதன் பலன், ரவ்லட்டுச் சட்டமாக வந்தது. இந்தச் சட்டத்தை எதிர்த்தார் காந்தி; 30-4-19-ல் ஹர்த்தால் நடத்தினர். டில்லியில் அமைதியாக ஊர்வலம் சென்ற தேச பக்தரைப் போலீஸ் தடிகள் தாக்கின. துப்பாக்கிச் சனியனும் நீட்டியது. சுவாமி சிரத்தானந்தர் தம் மார்பைக் காட்டி "சுடுங்கள்; சுதந்திரத்திற்காக இரத்தப்பலியாகிறேன்" என்று நின்றார். பிரிட்டிஷ் பீரங்கிகூட வெட்கிப்

போனது. 6-4-19-ல் சத்தியாக்கிரகம் பலமாக நடந்தது. நாமெல்லாம் பட்டினியிருந்து ஊர்வலம் வந்தது நினைவிருக்கும். பஞ்சாபில் ஆத்திரத் தீ மூண்டது. பஞ்சாப் இந்தியாவின் வீரப்பசு; அதை இரத்தம்வரக் கறந்து பருகினர் வெள்ளையர். சுதந்தர வாடையே அங்கே விசாமல் மைகேல் உடையார் மாயவலை வீசிவந்தார். டாக்டர் கிச்லு, ஸத்யபால் ஆகிய இருவரும் ஜனங்களுக்குப் புதிய விழிப்பைத்தந்து, சுதந்தரக் கனல் மூட்டினர். அவர்களை உடையார் தூக்கிச்சென்று மறைத்துக் காவலில் வைத்தார். பொதுஜனங்கள் ஆத்திரம்கொண்டு தலைவரை விடுதலை செய்ய சர்க்காரிடம் மன்றாடினர். பலிக்கவில்லை. பஞ்சாபியரின் வீரக்கனல் தேசாவேசமானது. தந்திகள் அறுந்தன; ரயில்களில் கல்லெறி! கச்சேரிகளில் தீ! கலகம் மூண்டது! போலீஸ் துப்பாக்கியும் சினத் தீ கக்கியது. கல்கத்தாவிலும் அதேசமயம் ரகளை நடந்தது. மகாத்மா நிலைமையை அமைதியாக்கப் புறப்பட்டார். அவரை அரசாங்கம் பம்பாயில் அடைத்து வைத்தது. பொது ஜனங்களின் மனக்கொதிப்பு எரிமலையானது. ஏப்ரல் 13-ந் தேதி ராம பஜனையுடன் இந்துக்கள் ஊர்வலம் வந்து, அமிர்தசரஸ் ஜலியன் வாலாபாகில் கூடினர். 20,000 பேருக்குமுன் ஹம்ஸ்ராஜ் பேசினார். அங்கே இந்திய சிப்பாய்கள் 100 பேர், வெள்ளைப்புலிகள் 50 பேர் தோன்றி, "இரண்டே நிமிஷம்; கூட்டம் வெளியேறட்டும்" என்று கட்டளையிட்டனர். கூட்டம் கலைந்து கொண்டிருந்தபோதே படபட என்று சுட்டனர்—1600 ரௌண்டுகள்! புலிவாய் மான்போலும் பூனைவாய்க் கிளிபோலும் ஆண் பெண்கள் துடித்தனர். மேலிருந்து விமான வேட்டுகள் பறந்தன. கொடுமை, கொடுமை! படுகொலை, படுகொலை! 400 பேர்கள் இறந்தார்கள். 1002 பேருக்குப் படுகாயம். பஞ்சாப்பில் ராணுவச் சட்டம் எமதாண்டவ மாடியது. சவுக்கடி, தடியடி, வசவு, அவமானம், குத்து, வெட்டு, மிதி, சிறை, தீவாந்தரம், தூக்குமேடை என்று தண்டனைகள் நரகத்தை தாக்கி யடித்தன. இந்தக் கொடிய செய்தியை சர்க்கார் மூடிவைத்தும், நாடறிந்தது. ஹண்டர் கமிட்டி போலி விசாரணை நடத்தியது. டயர் "சுட்டேன், சுட்டேன், சுட்டேன்! 1600 தடவை சுட்டேன். இன்னும் ரவையிருந்தால் சுட்டிருப்பேன். என் கடமை அதுவே" என்றான். சபாஷ் என்று தந்தி கொடுத்தான் உடையார். அவனுக்கு அரசாங்கம் வைரப் பிடிவாள் அளித்தது. இது இந்தியாவின் கன்னத்தில் கொடுத்தது போலிருந்தது. டாகூர் மணி ஐயர் காந்திஜி அனைவரும் சர்க்கார் அளித்த பட்டம் பதக்கங்களை எடுத்தெறிந்தனர். டாகூர் லண்டனில் டயர் கொடுமையைக் கண்டித்தார். காந்தி, சிரத்தானந்தர், தேசபந்து தாஸ், மோதிலால், ஜவஹர்லால், அபாஸ்தாயாப்ஜி, கே. ஸந்தானம், ஆண்ட்ரூஸ் முதலியோர் நிலைமையை நேரே கண்டு விசாரித்து, உண்மையான அறிக்கை விட்டனர். திலகர், விட்டல்பாய் படேல், வி. பி. மாதவராவ், பி. ஸி. பால், கபார்தே, கேல்கார், ஏ. ரங்கசாமி

ஐயங்கார் முதலியோர் லண்டனுக்குச் சென்று இந்தியாவில் நடக்கும் கொடுங்கோலை விளக்கி வந்தனர். அமிர்தஸரஸில் மோதிலால் நேரு தலைமையில் காங்கிரஸ் கூடியது. 10,000 பிரதிநிதிகள் வந்தார்கள். சிரத்தானந்தர் வரவேற்றார். பஞ்சாப் படுகொலையுடன் கிலாபத்து இயக்கமும் சேர்ந்தது. முகம்மதலி, சௌகதலி, அன்ஸாரி, அபுல் காலம் எல்லாரும் காங்கிரசுடன் ஒன்றி உழைத்தனர். நாடு காந்தியைப் பின்பற்றி ஒத்துழையாமையில் முனைந்தது. திலகர் கூட மராடிய மீசையை முறுக்கிவிட்டு காந்தியுடன் நின்றார். அவர்தம் இதயத் துடிப்பை காந்தியின் உள்ளத்தில் இட்டுச் சென்றார்.

15—1—1920; ஒத்துழையாமை ராம் ரஹீம் ஓம் என்று சுழன்றெழுந்தது. இராட்டை சுழன்றது, சட்டசபை சுழன்றது; கோர்ட்டு நாற்காலிகள் சுழன்றன. பள்ளிக்கூட பெஞ்சுகள் சுழன்றன. ஆங்கிலச் செருக்கு இறங்கியது. மாணவர் பள்ளிக்கூடங்களை விட்டனர். வக்கீல்கள் வழக்காட மறுத்தனர். காங்கிரஸ் சட்டசபையை விலக்கியது; தீண்டாமைப் பேய் நடுங்கியது கள்ளரக்கன் கலங்கினான், வேற்றுமைப் பித்தம் ஒழிந்தது: இந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டனர்; வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்! மஹாத்மா காந்திக்கு ஜே! காந்தியின் குரல் உள்ளந்தோறும் எதிரொலித்தது. ஒத்துழையாமை நாட்டை ஒற்றுமையாக்கியது. சர்க்கார் ஆட்டங் கொடுத்தது. தாஸ் மோதிலால் இருவரும் செல்வங் குவியும் வக்கீல் வேலையை உதறித்தள்ளி சர்க்காவைக் கையில் எடுத்துக் கொண்டு, காந்தியுடன் சேர்ந்தனர். இளஞ்சிங்கமான ஜவஹர் ஒத்துழையாமைப் படையணியில் தாவி முன்சென்றார். நமது ராஜாஜி வக்கில் வேலையை விட்டு காந்தியுடன் ஐக்கியமானார் லாலாஜி அமெரிக்காவிலிருந்து வந்து காந்தியுடன் கலந்து கொண்டு, கல்கத்தா காங்கிரஸ் தலைமை வகித்தார். தமிழ்த் தாத்தா சேலம் விஜயராகவாசாரியார் நாகபுரி காங்கிரஸ் தலைமை வகித்து, ஒத்துழையாமைச் சங்கு ஊதினார். இச்சமயம் என் உள்ளக் கிளர்ச்சிகளும் எழுந்தன. சென்னை சென்றேன். அங்கே திலகர் கட்டத்தில் மாபெருங் கூட்டம்; எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அட்வகேட் ஜெனரல் பதவியை உதறித்தள்ளி "முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன்" என்று வீராவேசமாகப் பேசினார். காந்தியின் சங்கநாதம் கேட்ட யார் தான் இனி சர்க்காருடன் ஒட்டிக் கொண்டிருக்க முடியும்! நாமெல்லாரும் அவர் வழியிற் சென்று தைரியமாக தேசசேவை செய்தால், ஒரே ஆண்டில் சுதந்திரம் கிடைத்து விடும். தியாகம், மனவுறுதி, ஒற்றுமை, தைரியம்...இவையே வேண்டும். தேசம் நமது. இங்கே நமது கொடியே ஆடவேண்டும்; சமுதாயம் நமது; அது சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும். அதற்குச் சஞ்சீவி காந்தியம். வந்தேமாதர கோஷத்துடன் காந்தியின் சாந்த சேனையிற் சேர்வோம்...முன் செல்வோம். விடுதலை பெறுவோம்...எந்தாய் வாழ்க!

கூட்டம் கலையும்போது "வாத்தியார் வேலையில் இருந்து கொண்டு இப்படிப் பேசினீரே', என்றொரு நண்பர் என்னை வினவினார். அதுவும் என்னைத் தட்டி எழுப்பியது.

154. மகாமகம்

சென்னைக்கு டியூக் ஆப் கானுட், (கானுட்டுக் கோமான்) வருகிறார். ஸ்கௌட் ஜம்பூரி நடக்கப்போகிறது. "நீரும் ஸ்கௌட்டுகளுடன் வர வேண்டும்," என்று மெண்டிஸ் அழைத்தார். "ஸ்கௌட் ஜம்பூரியையும் கானுட்டையும் விட உன்னதமான தாய் நாட்டு லட்சியத்தில் என் மனம் ஈடுபட்டிருக்கிறது. அதனால் சென்னைக்கு வரமுடியாமைக்கு வருந்துகிறேன்" என்று நான் பதில் எழுதிவிட்டேன். அப்போது கும்பகோணத்தில் மகாமகம் நடந்தது. நான் கிளம்பினேன். லால்குடி, அம்பில், திருவையாறு, கோயிலடி, தஞ்சை, திருவிடைமருதூர், திருஆரூர்' எல்லாம் சுற்றிக் கொண்டு, கும்பகோணம் போய்ச் சேர்ந்தேன். கும்பல் நெருநெருத்தது. மகாமகத் தெப்பக்குளத்தைச் சுற்றி, தென்னடே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. கடைகண்ணிகள் ஏராளம். புரோகிதர்கள் தர்ப்பைக் கட்டை வைத்துக் கொண்டு காற்றாடி போல் அலைகிறார்கள். கும்பேசர் கோயிலில் ஒரு பெரிய விதந்துப் பட்டாளத்தைக் கண்டேன். ஐயோ நமது நாட்டில் இளம் பெண்கள் வாழவேண்டிய வயதில் இப்படி முக்காடும் கண்ணீருமாயிருக்கிறார்களே என்று நொந்தேன். அந்தக் கூட்டத்தில் பட்டும் சரிகையும் தங்கமும் வைரமுமாக மினுமினுக்கிய பணமூட்டைகளை நான் மதிக்கவில்லை. அவர்களைக் கத்திரிக் கோல் பேர்வழிகள் வட்டமிடுகிறார்கள் என் கண் அங்கே "ஐயே காசு, புண்ணியம் உண்டு" என்று கைநீட்டி வயிற்றை எக்கிக் கெஞ்சும் ஆயிரக்கணக்கான ஏழைகளிடம் சென்றது. சில இடங்களில் பிராமண போசனம் நடந்தது. இந்த ஏழைகளுக்கு உணவு தருகிறவர் யார்? இந்தச் சிறு குளத்தில் மூழ்கினால் பாபமும் சாபமும் போகுமாமே......இந்த ஏழைகளைப் பிடித்த வறுமை நோயும், கவலைச் சாபமும் போகுமா! போன மகாமகத்தை விட இந்த மகாமகம் பஞ்சம் அதிகமாயிருக்கிறதே என்றெல்லாம் சிந்தித்தேன். ஆனால் அந்தக்கூட்டத்தில் கவியெழுச்சி பலமாயிருந்தது. பாரதசக்தியை மளமளவென்று எழுதிக் கொண்டே கும்பேசர் கோயிலில் அமர்ந்தேன். சில துறவிகள் அதோ என்னைக் குறிப்பாகப் பார்த்தனர். அவர்கள் "இன்று எங்கே சாப்பாடு" என்ற விஷயமாகப் பேசினர். ஒரே ஒருவர் பேசாமல் கண்ணை மூடிக் கொண்டிருந்தார். அவரிடமே என் மனம் சென்றது. அவரும் என்னை விரும்பினார். இருவரும் ஹிந்து தருமத்தைப்பற்றிப் பேசினோம். அசல் வேததருமம் சாதி சமய வேறுபாடற்றது. ஒன்றே பொருள்; யாதும் யாங்கும் அதுவே என்பது. அந்தப் பொருளை உள்ளத்திலே அடையலாம்: உள்ளத்தில் கண்டால் உலகெங்கும் காணலாம். சடங்குகளும்

ஸம்ஸ்காரங்களும் கோயில்களும் அந்தரங்க சுத்திக்கு ஒரு சாதனமே. தியானசுத்தி பெற்றால் கர்மசுத்தி தானே வரும். சடங்குகள் தேவையில்லை......என்பது எனது கொள்கை. அதை அவர் ஆமோதித்து வேதத்திலிருந்து பல கோட்பாடுகளைச் சொன்னார். முடிவில் "நீரும் புண்ணியம் பெற இந்தக் குளத்தில் குளிப்பீரா?" என்று கேட்டேன். "நான் இங்கே புண்ணியம் பெறவோ, கண்ணியம் பெறவோ வரவில்லை. இந்தக் கூட்டத்திலும் என் மனதை உள்ளடக்கி ஸ்வரூபதியானம் சித்திக்குமா என்பதைக் காணவே வந்தேன்" என்றார். "நீர்!" என்று என் முகத்தைப் பார்த்தார். "நான் கூட்டத்திற்கு முன்பே குளித்துவிட்டு சுவாமி மலைக்குப் போவேன்" என்றேன். "அது தான் சரி கூட்டம் திமு திமு என்று விழுந்து கலக்கினால் குளத்தில் சேறுதான் உண்டு. நானும் உம்மைப் போலச் செய்கிறேன்." என்றார். பிறகு தியானித்தோம். சிறிது, கண் அயர்ந்தோம். மூன்று மணிக்கே எழுந்து தடதடவென்று சென்று ,குளத்தில் மூழ்கினோம். நான் ஜலஸ்தம்பனம் செய்து 108 ஓம் சுத்தசக்தி ஜபமும் பண்ணிக் கரையேறினேன். சாது அதிவிரைவாகக் குளித்தார். இருவரும் சுவாமி மலைக்குச் சென்றோம். அங்கே காவிரியில் மூழ்கி, இளமுருகன் சந்நிதியில் அமர்ந்தோம்......அந்த அழகான மூர்த்தியைக் கண்டதும் ஆவேச அலைகள் எழுந்தன. சந்நிதியும் நிம்மதியாயிருந்தது. நான் பாரதசக்தி எழுதினேன்......சாதுவுக்குச் சில பாடல்களைப் படித்துக் காட்டினேன். முடிவில் முருகனுக்குப்பாமாலை சூட்டிப் புறப்பட்டோம்.

சத்திய தூத ராகிய காந்தி சாற்றிய நல்வழி பற்றி
நித்திய மான சுதந்திரம் பெற்று நீள்அடி மைத்துயர் நீங்கி,
இந்தலம் போற்றத் தாய்நிலம் எழுந்தே இரவிபோல்
விளக்கிட அருளாய்
முத்தமிழ்ப் புலவா, சிவக்கனற் செல்வா,
முருக ஓம் சரவண பவனே!

155. இஸ்லாம் சாதனம்

என் மனமெல்லாம் காந்திமயமாயிருந்தது. வகுப்புகளில் பாதி நேரம் காந்திப் பேச்சே, சத்தியாக்கிரகம் என்ற நாடகம் எழுதி மாணவரை நடிக்கச் செய்தேன். தொண்டர்களுக்கு தேசிய கீதங்கள் பயிற்றினேன். பொதுக் கூட்டங்கள் அடிக்கடி போட்டேன். திருச்சிராப்பள்ளிக்கும் சென்னைக்கும் சென்று தலைவர்களைப் பார்த்தேன். ஹிந்துஸ்தானி வகுப்பு ஏற்பாடு செய்தோம், ஆசிரியர் அனைவரும் கற்றனர். உஸேன் சாகெபு பாடம் சொல்லித் தந்தார். அவர் எனது நண்பர்; அவரிடம் நான் இந்துஸ்தானியில் காந்தி இயக்கம் பற்றியும்

கிலாபத்து பற்றியும் பேசினேன். அவர் மறுநாளே மசூதியில் கூட்டம் போட்டு என்னைப் பேசச் சொன்னார்.

வெள்ளிக்கிழமை; குத்பா சிறப்பாக நடந்தது. நானும் பிஸ்மில் லாஹி ஜபம் செய்தேன். மசூதியில் ஏராளமான கூட்டம். ஹூஸேன் என்னை அறிமுகப்படுத்தினர். நான் பேசியதன் சுருக்கம்:

இஸ்லாம் சகோதரர்களே,

உங்கள் முன் இஸ்லாமிய உள்ளத்துடன் பேசுகிறேன். உள்ளம் ஒன்றே. இந்து முஸ்லிம் ஒன்றே; மசூதியில் நான் இன்று தொழு தேன். நீங்கள் எந்த அல்லாவைத் தொழுகிர்களோ அதே ஆண்டவனை நானும் தியானித்தேன். சீருப்புராணம் எழுதிய உமறு புலவர் "பிறந்த பல் உயிரின் மனத்தள வுறைந்து, பிறப்பிறப் பொன்றிலா தவனை" என்று ஆண்டவனை வணங்குகிருர். இயற்கையில் எதற்கும் பெயர் கிடையாது. இந்தக் கட்டிடத்திற்கு மசூதி என்ற பெயர் நாமாகக் கொடுத்ததே. கடவுளையும் அல்லா சிவன் விஷ்ணு என்று நாமாக அழைப்பதே. ஒரு கனியை பழம் என்ருலும் ஒன்றே, புரூட் என்ருலும் ஒன்றே. பல் என்ருலும் அதுவே. இஸ்லாம் ஆண்ட வனை நாமருபங்கடந்த தனிப்பெரும் கருணையாகத் தொழும். பிஸ்மில்லாஹி இற்றஹ்மான் இற்றஹீம் என்பதன் பொருள் அது தான். ஆண்டவனைத் தவிர வேறென்றும் வணங்கத் தக்கதன்று என்பது இஸ்லாமின் அழுத்தமான கொள்கை; அதுதான் வேத சம்மதமும். நமக்குமேலே விரிந்த எல்லையற்ற வானம் ஒன்று; அதிலுள்ள கோடிக்கணக்கான கோளங்களையும் நட்சத்திரங்களையும் பாருங்கள். அவற்றுள் இந்த உலகம் ஒரு தூசி மாத்திரம். அத்தனை அண்டங்களையும் படைத்த ஆண்டவன் பெருமை அளவிற்கரியது. அவனையே வணங்காமல் அவனுக்குச் சமமாக வேறெந்தப் பொருளை வணங்கினுலும் வணக்கமாகாது. இதனுலேதான் முஸ்தபா முகம்மது ஸல்லம் தம் உருவைக்கூட யாரும் வணங்கக்கூடாது என்று மறைந் தார். உலகில் பல மதங்கள் குருமார்களையே படத்திலும் சிலையிலும் வணங்குகின்றன. குருமாரையே ஆண்டவனுகவும் அவதாரமாகவும் வணங்குகின்றன. பலன் என்ன? ஒவ்வொரு குருவைச் சுற்றிலும் மதக் கோட்டை; சிஷ்யக் கூட்டம். தத்துவ வேதம் தர்க்க வாதம்! "என் குருவை நம்பினுலே முக்தி: இன்றேல் நரகம்" என்று ஒவ்வொரு குரு வட்டமும் பேசுகிறது. இதனுல் நாடு பல குருவட்டங் களாகப் பிரிந்து போராடுகிறது. கடவுளின் அரியணையில் நாம் யாரையும் அமர்த்த முடியாது. அது அபசாரம், ஹாரம். யாராவது கடவுளின் இடத்தில் தன்னையே தொழச் சொன்னுல், அவனை அகம் பாவி என்றே சொல்லுவோம். கடவுள் கடவுளே, மனிதன் மனிதனே, மனிதான்மா கடவுளுக்கு என்றும் வணக்கமாகவே நடக்க வேண்டும். இந்தக் கொள்கையை உலகிற்குத் தெளிவாகச் சொன்னவர்

நபிகள் நாயகமே. அவருக்கடுத்தபடி இந்தக் கொள்கையை அனுஷ்டிப்பவர் நமது மஹாத்மாகாந்தி. காந்தி தம்மை அவதாரம் என்பதில்லை, தம்மை வணங்கச் சொல்வதில்லை. ஆண்டவனையே வணங்கச் சொல்லுகிறார். ஆண்டவன் மக்களான மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்யச் சொல்லுகிறார். அப்படிப்பட்ட மஹாத்மா நமது நாட்டின் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் செழிப்பிற்கும் நன்மைக்கும் அல்லும் பகலும் பாடு படுகிறார்.

நமது நாடு இன்று அன்னியருக்கு அடிமையாயிருக்கிறது. அடிமையில் இந்து அடிமை, முஸ்லிம் அடிமை, கிறிஸ்து அடிமை என்றில்லை. அடிமை நோய் எல்லாரையும் வாட்டுகிறது. அதை நினைக்கும்போது சவுக்கடிபோல் உணரவேண்டும். நம் கழுத்தில் விஷப்பாம்பு சுற்றியிருப்பதுபோல் உணரவேண்டும். அன்னியர் நம்மைப் புழுவாக மதிக்கின்றனர்- பஞ்சாப் படுகொலையை நீங்கள் மறக்க முடியாது. அதிலிருந்து வெடித்தெழுந்த நாட்டின் மனம் இப்போது ஒத்துழையாமைக் கிளர்ச்சி செய்கிறது. நாடு காந்தியின் கட்டளையைப் பின்பற்றுகிறது. நாட்டில் இரண்டு அநீதிகள் நடந்துள்ளன: ஒன்று பஞ்சாப் படுகொலை; மற்றொன்று கிலாபத்திற்கு ஆபத்து. முகம்மது நபி நாயகம் தமது சமயப் பாதுகாப்பை துருக்கி சுல்தானிடம் தந்தார். சுல்தான் காலிபா பட்டமேந்தினார். பரம்பரையாக காலிபாக்கள் இஸ்லாமைப் பாதுகாத்தனர். சென்ற போரில் துருக்கி ஜர்மனியுடன் சேர்ந்தது. இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலேயருக்கு உதவினர். ஆங்கிலேயர் கலிபா பீடத்தைக் காப்பாற்ற வாக்களித்தனர். சமாதானம் ஆனதும், வாக்கை மறந்தார். நோயாளி தலையில் கல்லை உருட்டுவதுபோல் கலிபா பீடத்தையே உருட்டி விட்டனர். இஸ்லாம் கப்பலில்லாத மீகான்போல் ஆனது. புண்ணிய ஸ்தலங்களையும் அன்னியர் கைப்பற்றினர். உனக்கு இலை எனக்குச் சோறு என்ற நியாயம் இனி நடக்காது. அடுத்த வயலில் தன் மாட்டை ஓட்டிவிட்டு 'அதுவும் ஆண்டவன் செயல்' என்ற அடாவடியும் பலிக்காது. நியாயம் நியாயமாக நடக்க வேண்டும். இஸ்லாமியாரின் உரிமையைக் காக்க இந்துக்களும் சேர்ந்து காந்தி தலைமையில் கிளர்ச்சி செய்கிறோம். அதனாலேதான் நாடெல்லாம் அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் கேட்கிறது. அத்துடன் வந்தேமாதரம் கேட்கிறது. அது இந்திய சுதந்திர மந்திரம்.

இந்தியாவின் மூச்சை ஆங்கில அதிகாரவர்க்கம் இரத்தக் கையால் பிடித்து அழுத்துகிறது. நாடு கிளர்ச்சி செய்த போதெல்லாம் அழுகிற பிள்ளைக்கு அழுகல் பழம் தருவதுபோல, இரட்டையாட்சியும் முட்டையாட்சியும் தந்து, அன்னியர் தகடி—தத்தம் செய்வதை இனித் தாங்கமாட்டோம். இந்தியா 1857-ம் ஆண்டு முதலே விடுதலைப்போர் புரிகிறது. வெடித்தெழுந்த போர் மேடைக் கிளர்ச்சியானது. தில

கர் அதைத் தீவிரப்படுத்தி ஓர் இயக்கமாக்கினார். மஹாத்மா இப்போது வெறும் பேச்சில்லாமல் செயலில் இறங்கியிருக்கிறார். நமது சுதந்திரத் தந்தை அவரே. நம்மைப் பிணைக்கும் அடிமைச் சங்கிலியின் ஒவ்வொரு வளையத்தையும் அறுத்தெறிய அவர் வழி காட்டுகிறார். "ஆடைக்காக ஐம்பதுகோடி மாஞ்செஸ்டருக்குக் கொடுக்கிறோம். இராட்டினம் நூற்றுத்தறி-நெய்து தூய கதர் அணியுங்கள்; பணம் மிச்சம்; அன்னிய மாயம் ஒழியும். நமது சமுதாயத்தில் சைத்தானாகப் புகுந்த கள்ளை ஒழியுங்கள்: சமுதாயத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் தீண்டாமையை ஒழியுங்கள். ஹரிஜனங்களைச் சகோதராகக் கருதுங்கள். இந்து முஸ்லிம்கள் இணைந்து வாழுங்கள். சர்க்கார் ஸ்தாபனங்களை விலக்குங்கள். பொது ஸ்தாபனங்களை தேசியமாக்குங்கள். தேசியக் கல்வியைப் போற்றுங்கள். தேச பாஷையான இந்தி கற்றுக் கொள்ளுங்கள். தாய் மொழியில் பேசுங்கள். பட்டம் பதவிகளைத் தூக்கியெறிந்து, பொதுநலம் புரியுங்கள்-சுதந்தரம்வரும்" என்கிறார் காந்திமகான். தாஸ், நேரு, ராஜாஜி, முகமதலி, சௌகதலி. யாகூப்ஹாஸன் போன்ற மாபெருந்தலைவர் காந்தி கட்டளையைப் பின்பற்றி நடக்கிறார்கள். இலட்சப் பிரபுக்களெல்லாம் பணத்தைத் தூசியென ஒதுக்கி, முரட்டுக் கதர் அணிந்து "காந்திக்கு ஜே" போட்டு சிறைக்குச் செல்லுகிறார்கள். நீங்களும் காந்திவழியே தேச சுதந்திரத்திற்கு உழைக்க வேண்டும், அதற்கு அடையாளமாக அல்லாஹு-அக்பர், வந்தேமாதரம்! போடுங்கள் பார்ப்போம்.

அவ்வாறே கோஷித்துப் பேச்சுமுடிந்தது. பத்து நிமிஷம் தியானம் நடத்தினேன். பிறகு கிலாபத்து சபை கூட்டினேன், அதையே காங்கிரஸ் ஆக்கினேன். அது நடக்கப் பணம்? நான் முதலில் இரண்டு ரூபா போட்டேன். எல்லாரும் ஒன்று இரண்டு என்றுபோட்டு நூற்றைம்பது ரூபா சேர்த்தனர். இஸ்லாமியருக்கு என்னைப் பிடித்துப்போனது. நான் எனது மாணவன் அப்துல்காதர் வீட்டு மாடியில் குடியேறினேன். இரவை மசூதியில் கழித்தேன். ஐந்து வேளையும் நமாஸ் செய்தேன். ரம்ஜான் பண்டிகை வந்தது, ஒரு மௌல்வியும் வந்தார். சீருப்புராணம் படித்தோம். பிறகு நான் திருக்குரான் படிக்க விரும்பினேன். அப்துல்லா மௌல்வி வந்து சேர்ந்தார், அவர் கம்பீரமான வீரபுருஷர். புகழ்பெற்ற ஹக்கீம், மந்திர சித்தர், என்னை அவர் எப்படியோ தெரிந்து கொண்டார். "நீர் தெய்வசிகாமணி ஐயர் மாணவரல்லவா......தாமரைக் குளக்கரையில் இரண்டுபேரும் கம்பராமாயணம் படித்தீர்களே" என்று அடையாளம் சொன்னதும், நான் திகைத்துப்போனேன். அந்த மௌல்வி சிவகங்கையில் கொஞ்சகாலம் இருந்தவர். அவரிடம் நான் அரிய மூலிகைகளை அறிந்தேன். வைத்தியம் கற்றேன். அனைத்தினும், திருக்குரானை நன்றாக ஆராய்ந்தேன். இரண்டு மௌல்விகளும் இரவில் மசூதியில் கூடுவோம். குரானை ஒருவர் மூலத்தில் படிப்பார்.

ஒருவர் விளக்குவார். நான் ஆங்கில மொழிபெயர்ப்பு வைத்துக் கொண்டு பார்ப்பேன். முஹம்மது தந்த குர்பானியைப் பற்றியும் மலைக்குகையில் அவர் பெற்ற ஞானஒளியையும் அப்துல்லா எனக்குத் தெளிவாக விளக்கி, 'எழுதும் முகம்மது சரிதை' என்றார். ரம்ஜான் நாட்களில் நான் பகலெல்லாம் உபவாசமிருந்து, நபிநாயக வரலாறும், திருக்குரான் உபதேசமும் எழுதினேன். பகலில் எழுதியதை இரவில் படித்து விளக்கினேன். அது பாரதசக்தியில் சாதன காண்டத்தில் உள்ளது; பார்த்துக் கொள்ளுங்கள். இஸ்லாம் சாதனம் எனக்கு மனவுறுதியும் வைராக்கியமும் தந்தது. முகம்மது நபியின் இஸ்லாமியக் குடியரசுதான் எனது லட்சிய அரசியலாகும். இஸ்லாமியர் என்னையும் தம்முள் ஒருவனாகக் கருதினர். பல இஸ்லாமிய நண்பர் என்னைத் தம் ஊர்களுக்கு அழைத்தனர், நாமக்கல் உஸ்மான் சாகெபு, பீர்பாசா சாகெபு ஆகிய இருவரும் அரிய நண்பரானார். ரம்ஜான் பண்டிகையில் குரான் ஓதிக்கொண்டு ஒரு பட்டை மேலே விரித்துப் பிடித்து, ஊர் சுற்றி மசூதிக்குச் செல்வர். பட்டின் கீழ் என்னையும் இருக்கச் செய்வர். மசூதியை எனது தியான பீட மாக்கியதில் என் சித்தம் நபிகள் நாயகம் நுபூவத்துப் பெற்ற ஹிராக்குகையானது.

156. கொல்லி மலைமேல்

இஸ்லாமியர் நட்பு எனக்கு இந்து முஸ்லிம் ஒற்றுமையில் நம்பிக்கை உண்டாக்கியது. நபிகள் நாயகத்தின் பரிசுத்த வாழ்வை அடிக்கடி அவர்களுக்குச் சொன்னேன். சிலர் கருட்டைவிட்டனர். இரண்டொருவர் புலாலையும் நீத்தனர். பலர் மசூதிக்கு ஒழுங்காக வந்து தொழுகை நடத்தினர், என்மேல் அன்புகொண்ட இஸ்லாமியருள் நாமக்கல் பீர்பாசா சாகெபு ஒருவர். அவர் என்னை நாமக்கல்லுக்கு அழைத்தார். அவர் அப்துல்காதர் வீட்டுச் சம்பந்தி, ஆதலால் நான் அப்துல்காதருடன் நாமக்கல் சென்றேன். ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, நண்பரிடம் சென்றோம். அவர் என்னை உபசரித்தார், பால் உண்டேன். இரவெல்லாம் திருக்குரான் பேச்சே, எனது முகம்மது சரித்திரத்தைப் படித்தேன். காலையில் உஸ்மானைப் பார்த்துப் பேசினேன். அப்போது ஒரு சாகெபு வந்து சேந்தமங்கலத்திற்குக் கூப்பிட்டார். சட்டென்று எனக்கும் செல்லத் தோன்றியது. வழியில் சில கிராமங்களைப் பார்த்து, நண்பர் உபசரிப்பை ஏற்றுச் சென்றோம்.

நான் ஒரு முஸல்மான் வீட்டில் தங்கினேன். எனக்குரிய பால் பழம் கடலை கேளாமலே கிடைத்தன, முஸல்மான்களுக்கு மாலை நேரம் இஸ்லாமைப்பற்றிப் பேசினேன், இரவில் எல்லாரும் சம்பாஷித்தபோது இங்கே ஒரு "சாமியார் முண்டத்தோடு திரிகிறார்; அவரைச் சக்கையாகப் போட்டோம்" என்றனர். யாரது? அவரே கிட்டு

சாமியார். அவரை எனக்கு நன்ருகத் தெரியும். காட்டுப்புதூரிலும் ஐயன் பாளையத்திலும் பார்த்திருக்கிறேன். என்னையும் அவருக்குத் தெரியும். அவரைப் பார்க்க விரும்பினேன். அப்துல்காதர் அழைத்துச் சென்ருன். ஒரு குகாசிரமத்திற்குச் சென்ருேம். வெளியே பெரிய கிணறு, உள்ளே பாதாள குகை...ஆள் யாரும் இல்லை, ஏகாந்தம். சுவாமிகள் எங்கோ சென்றிருந்தார். அந்த இடம் தியானத்திற்கு இனிது. ஆதலால் இரவில் அங்கே இருக்கத் தீர்மானித்தேன். ஒரு மெழுகு திரி ஏற்றிவைத்து இரவில் குகைக்குள் தியானம் தொடங்கினேன். பிறகு கதவைமூடி இளைப்பாறினேன். காலை நான்கு மணிக்கு எழுந்து கடன்முறைகள் செய்து தியானத்துக் கொண்டிருந்தேன். நண்பர் என்னைக் கொல்லிமலைக்கு அழைத்தனர். உடனே எனக்குப் பரதேசி சொன்னது நினைவிற்கு வந்தது. கடவுளின் அழைப்பு என்றெண்ணிப் புறப்பட்டேன். பத்து நண்பர் உடன் வந்தனர். சமையல் பாத்திரங்கள் சாமான்கள் எல்லாம் கொண்டு சென்ருேம். மலைக்காட்சி ஆறுதல் அளித்தது. எங்கும் பசுங்காடுகள்; மலையாளிகளின் சதாரிப்பாட்டு மலைக்காற்றுடன் வந்தது, புட்கள் சுதந்தரமாகப் பாடித் திரிந்தன. ஆடுகள் பாறைகளில் தாவித்தாவி மேய்ந்தன. பசுக்கள் பசும்புல் மேய்ந்தன. நண்பர் ஒரு பசுவைப் பிடித்துப் பால் கறந்தனர். ஒரு மலையாளி வந்தான், வஞ்சமற்ற நண்பன். அவனிடம் இரண்டணு தந்தோம். விறகு கொண்டுவந்து கொடுத்தான். ஒரு பாறையில் மூன்று கற்கள் வைத்து அடுப்பை மூட்டினேம். அருகே அருவி. அதிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தேன். தோழர் பெரிய வாணலியைத் தேய்த்து அடுப்பிலிட்டனர். நான் உப்புமாச் செய்தேன். அப்துல்காதர் துணை செய்தான், கடுகு, முந்திரிப்பருப்பு, கருவேப்பிலை, வெங்காயம் எல்லாம்போட்டு நெய் விட்டுத் தாளித்து, தண்ணீர் அளவாகவிட்டு, அது கொதிக்கும்போது நான் சில காட்டுமூலிகைகளைப் பறித்துவந்து போட்டேன். பிறகு ரவையைக் கொட்டிக் கிளறினேன். தேங்காய் திருகிப்போட்டோம், உப்புமா ஆனது. பிறகு மற்ருெரு பாத்திரத்தில் நண்பர் தேயிலைப் பானம் தயாரித்தனர். அதற்குள் நான் மலைமேல் வெகு தூரம் சென்றேன். மலையாளர் குடில்களைக் கண்டேன். அங்கே ஒரு பாதிரி பங்களா இருந்தது. பாதிரி மலையாளிகளை மதம் மாற்றிப் படிப்புச் சொல்லி வைத்தார். அந்த மாதிரி நாம் செய்வதற்கு இல்லையே என்று வருந்தினேன். மலையாளிகள் மூங்கிலரிசி, தினைமா, பலாப்பழம் மலைவாழை வேர்க்கடலை கிழங்குகள் முதலியவற்றை உண்டனர். எனக்குப் பலாப்பழங்கள் கீழே உதிர்ந்து கிடந்தன. கரடிகள் இரவில் உருட்டிவிட்டவை அவை. நான் வாழைப்பழம் வேர்க்கடலை பலாப்பழம் மூன்றையும் உண்டேன். மலையாளிகளுக்குக் "கடவுள் உண்டு. அக்கடவுள் எல்லாருக்கும் பொது; அன்பு உண்மை அறம் பொதுநலம் இவற்ருல் அறியலாம்" என்று உபதேசித்துக் கொண்டிருந்தேன்,

ஒரு மலையாளி "ஐயா உங்களைத்தேடுறுங்க கீழே" என்றான். எனக்கு நண்பர் நினைவு வந்தது. ஆனால் நான் தேடிய பொருள்...?...நண்பர் கீழே என்னைத் தேடினார்கள். நான் மேலே என் குருவைத் தேடினேன். மலையாளிகளை "இங்கே யாராவது சாமியார் இருக்கிறாரா?" என்று வினவினேன். "அறபளிசர் கோயிலிலே ஒரு சித்தர் இருக்கிறார்" என்றனர். நான் மளமளவென்று கீழே இறங்கி வந்தேன். நண்பர் ஆரவாரமுடன் "பாரதியாரே எங்கே போனீர்? உப்புமாவை நாங்கள் சாப்பிட்டு மிச்சம் வைத்திருக்கிறோம். மணி பதினொன்று; கீழே இறங்க வேண்டுமே" என்றனர். நான் உப்புமாவை அவர்களுக்கே தந்தேன். "கனிகள் உண்டாயிற்று. நான் மலைமேல் சிறிது சுற்றித் திரிந்து வருவேன்" என்றேன். அவர்களை என்னைத் தனியே விட மனமில்லாமல் வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். நான் நேராக சுவாமிகள் மடத்திற்குச் சென்றதும், நண்பரிடம் விடை பெற்றுக் கொண்டேன். மடத்தில் அப்போது ஒரு துறவி வந்து சேர்ந்தார். அவரிடம் அரப்பளிசர் கோயிலைப்பற்றி வினவினேன். "வாருங்கள்" என்று மறுநாள் அவரே அழைத்துச் சென்றார். மலைமேல் தாவிச் சென்றோம்.

157. அறிவாகி அன்பாயிரு

என் வாழ்வின் பெரிய பாக்கியம் இது; ஒன்பது வயதில் என்னை ஆண்ட குருநாதன் பரமஞானி, பனிரண்டாண்டுகளுக்குப் பிறகு காட்சியளித்தார். அதற்குள் எத்தனை மாறுதல்கள்! காலத்தேர் எத்தனை மேடுபள்ளங்களில் இறங்கித் தத்தளித்தது. காணமுடியாது என்ற மகானைக் கண்டேன். நான் வாழ்வில் பதினாயிரம் பேரைப் பார்த்திருக்கிறேன். இந்த ஒரு சாது செய்த உதவி எனக்கு யார் செய்யமுடியும்? விவேகானந்தருக்குப் பரஹம்ஸர் வாய்த்ததுபோல் இந்த மகான் எனக்கு வாய்த்தார். இதோ நான் கும்பிடுமுன் என்னை "வா வா தம்பி...நல்லாயிரு உட்காரு..." என்றார். பார்த்தால் தெருப் பரதேசிபோல் தோன்றும். விளம்பரம் சிறிதும் இல்லை. யாரையும் யாசிப்பதில்லை. அவதாரப் பறை யடிப்பதில்லை. பத்திரிகையை எட்டிப் பார்த்ததில்லை. குருபீட மோகமில்லை. சிஷ்ய வேட்டையும் இல்லை. தன்னந்தனியர்; எப்போதும் சித்தத்தில் சிவனை உணர்ந்து தியானத்திலே லயித்த சித்தர். என்னைச் சுத்தானந்தம் ஆக்கிய ஞானானந்தர். அவர் வயது தெரியாது. முகத்தில் நல்ல ஒளி; அகத்தில் சைதன்யப் பிரகாசம், பேச்செல்லாம் சுருக்க விளக்கமான சூத்திரம் போலிருக்கும். பரதேசியும் அங்கே இருந்ததால் என் காரியம் எளிதாயிற்று. இவர் ஞானிக்கு எனது வரலாறுகளையெல்லாம் முன்பே சொல்லிவிட்டார். ஆதலால் பூர்வ பீடிகையில்லாமல் ஞானகுரு பளிச் சென்று விஷயத்திற்கு வந்தார்;

நான் ; சுவாமீ, தங்களின் தரிசனம் பேரின்பமளிக்கிறது. என் கவலையெல்லாம் பறந்துபோனது.

ஞானி: உன்னைப் பார்; என்னைப் பார்ப்பாய். உன்னைப்பார். உலகைப் பார்ப்பாய். உலகைப் பார்த்து, உன்னைப் பார்க்காதே. பேரின்பம் வந்துகொண்டிருக்கிறது. ஆனால் சிக்கலில் மாட்டிக்கொள்ளாதே...

நான்: சுவாமி, யார் இன்பம் என்று அறிந்தேன். பேரின்பம் உதித்தது. சிக்கல் என்ன ?

ஞானி: தம்பீ, உன்னைச்சுற்றி ஓர் ஆசை வலை பின்னுகிறது. அந்த வலையில் சிக்காதே.

நான்: வலையா? சுவாமி தங்கள் அருளாலேதான் அந்த வலையைத் தப்பிப் பிழைத்தனே...கலைதான் இப்போது நிலை.

ஞானி: அதைச் சொல்லவில்லை தம்பி. உன்னை இனிப் பெண் வலையில் சிக்கவைக்க யாராலும் முடியாது. மற்றொரு வலை—உலகில் புகழ் பெறவேண்டும், அரசியல் மேடை ஏறித் தலைமை நடத்தவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதனால் அடிக்கடி உன்னறிவை மறக்கிறாய். உள்ளத்தானை மறக்கிறாய்...மெய்தானே ?

நான்: மெய்தான் சாமி. மகாத்மா காந்தியிடம் எனக்கு அளவற்ற அன்பு. அவர் வழி நடக்கத் துடிக்கிறேன். அலுவலைக் கூட விடப்போகிறேன். நானும் சத்தியாக்கிரகம் செய்து சிறைபுக விரும்புகிறேன். கரூரில் கள்ளுக்கடை மறியல் செய்வேன். மேடையேல் அதிகார வர்க்கத்தைக் கண்டிப்பேன். சிறை புகுவேன்; புகழ் பெறுவேன்...

ஞானி: தம்பி நீ சிறைபுக முடியாது. காந்திசேவை சரி. அந்த மகானால் நாடு விடுபடும். அவர் கொள்கை நல்லது, பின்பற்று. ஆனால் காந்தி மேடை மினுக்கர் இல்லையே. அவர் பத்திரிகை விளம்பரத்திற்காகவா சிறை சென்றார்? அந்தக்கரண சுத்தியுடன் ராம ஸேவையாக தேச சேவை செய்கிறார். அதேமாதிரி உனக்கொரு தொண்டு உண்டு. பாரதசக்தி எந்நிலையில் உள்ளது ?

நான்: சாமி, அதுதான் என் வாழ்வின் பெரும் பணி. மூன்று காண்டங்கள் முடிந்தன. இன்னும் இரண்டு பாக்கி. ஆழ்ந்த யோக ரகசியங்களைச் சொல்லும் அந்தக் காண்டங்களை எழுதப் பக்குவம் வேண்டும். மேலும் என் கவிதையில் எனக்கு இன்னும் உறுதிப்பாடில்லை. படித்துக் காட்டுகிறேன்; கேளுங்கள். [நான் சாதன காண்டத்தில் சில பகுதிகள் படித்தேன்.]

ஞானி: வாக்கு நன்றாயிருக்கிறது. ஆனால் இன்னும் தெளிய வேண்டும். பாடிப்பாடி வைத்திரு. மீண்டும் நான்கு முறை செப்ப

விட்டு, உன் மனச்சாட்சி கட்டளையிடும்போது வெளியிடு. அதற்கு முன் அவசரப்படாதே. திருவருள் கூடும்போது அச்சுவாகனமே உன்னை அழைக்கும். பாரதசக்தியை அறிந்துகொள்ள ஆர்வமுடன் சில அன்பர் தாமே வருவர். அவர்களுக்குப் பாடம் சொல்லி யோக ரகசியங்களைத் தந்து அமைதியாயிரு. அவரவர் காலத்தில் அருட் கவிகள் புகழ் பெறுவதில்லை. உன் வாக்கை உலகம் அறியக் காலம் வரும். பாரதசக்திதான் உனது ஆயுட்பணி, அதைப் பாடி சன்மார்க்க சேவை செய்; போதும்.

நான்: தேசசேவை? தமிழ் தேசம், மனித சமுதாயம் மூன்றி லும் பாசம் போகவில்லையே.

ஞானி: தம்பி, 'நீ நீயாயிரு; அது அதுவாய் நடக்கும். அறிவாகி அன்பாயிரு. உன்னறிவில் ஊன்றிக்கொள். பரம்பொருளை, சுத்த சக்தி யிறைவனை தியானத்திற் கலந்திரு. கட்டளை உள்ளிருந்து வரும். அதை நிறைவேற்றச் சக்திவரும். கட்டளை நிறைவேறியதும் உள்ளே போ...உள்ளிருந்து உலகிற்குதவு. உலகில் சிக்கினுல் உள்ளதும் போகும்: இரு விகாரப் புயல் உன் ஜீவப் படகை மோதும். தேச பக்தி செய். தெய்வ பக்திசெய். ஆனுல் கட்சிச் சண்டைகளிலும் வகுப்பு வாதத்திலும், சுயநலப் புகழிலும் வசைச் சூருவளியிலும் பட்டம் பதவி வேட்டையிலும் திரியும் அரசியலில் சிக்காதே. கடவுள், நீ ..வேருென்றையும் இடையில் புகவிடாதே. உலகை கடவுளின் கோயிலாகப் பார்; ஜனசேவையே தெய்வ சேவையெனக் கருது. உனக்கு இயல்பில்லாத சேவையில் புகாதே. உலகம் வினைக் கோயில். அதில் உனக்குரிய தொண்டைச் செய்து பலனை ஆண்டவனுக்கே அர்ப் பணம் செய். அவனுடன் ஐக்கியமாகக் கருது. வேறு ஆசைகள் புகுந்தால் இன்னொரு பிறவி எடுக்கவரும், கவனம்.

நான்: சாமி, இப்போது நான் மருதியில் வசிக்கிறேன். கிலாபத்தில் ஈடுபட்டிருக்கிறேன். இனி வாழ்வின்போக்கு எப்படி மாறும்? வேலை பிடிக்கவில்லை. காந்தி பக்தி அதிகம்.

ஞானி: தம்பி காந்தியை நம்பு, ஆனுல் மற்றதெல்லாம் உன் னைச் சோதிக்கும் வினைக்குலம். இனி சன்மார்க்கத்திற்குப் போ. நீ எவரிடமும் சேவகம் செய்யமாட்டாய். உன்போக்கு அலாதி. இந்த வேலையை விட்டு விடுவாய். அதற்கேற்ற சந்தர்ப்பம் வருகிறது. பிறகு இன்னொரு தேசப்பணி வரும. உனக்கு நல்ல இடங்கள் கிடைக்கும். மகான்களின் உறவு கிடைக்கும். பாரத சக்தியை நிம்மதியாகமுடி. 29-ம் ஆண்டுதான் உனக்கு அருள் வாக்குக் கனியும். அப்போதேமகா காவியம் நன்ருகும். அதன் பிறகு நீ நீண்டகாலம் மௌனமாயிருந்து ஏராளமான இலக்கியங்களையும் சாத்திரங்களையும் செய்வாய். உன் பேனுத் தாகந் தணியும். எழுதியதை வெளியிடத் திருவருளால் அன் பர் முன் வருவார். அவர்களிடம் அந்தக் காரியத்தை விட்டு விட்டு,

யோகத்தையே கவனி. சிவகங்கையில் உனக்கு ஒரு சமாஜம் ஏற்படும். ...இமாலயத்தில் ஒரு சங்கம் ஏற்படும். நீ சிலகாலம் இமாலயத்தில் இருந்து, துரியா தீத சித்தி பெறு. பிறகு பாரதசக்தியை உலகிற்குச் சொல்லு நடந்து காட்டு...

நான்: சாமி, எல்லாம் எழுதிவைத்த பிறகு சொல்ல என்ன இருக்கிறது? அப்படியே பிரம்ம கபாலத்தில் மூச்சை அடக்கி உடலை உதறிச் சென்றால் என்ன?

ஞானி: செய்யலாம். ஆனால் அதெல்லாம் உன் கையிலா இருக்கிறது? நான் என்ற அபிமானத்துடன் எதையும் செய்யாதே. உனக்கும் இறைவன் இச்சைக்கும் இடையே துளி அகங்காரத்தைக் கூடப் புகவிடாதே. அவன் மனச்சாட்சியாகப் பேசுகிறான். உள்ளே கேள்! உலகில் நட.

நான்: சாமி, உலகில் பல குருமார்கள் வருகிறார்களே. நான் யாரைப் பின்பற்றி நடப்பது? அவதார புருஷர் என்று சிலர் புகழ் பெறுகிறார்கள்.

ஞானி: தம்பி அந்தக் காலமே சொன்னேனே. நீ சுத்தானந்தனாயிருக்க வேண்டுமானால், சுதந்தரானந்தனாயிரு. சமத்துவமாயிரு. எதிலும் பட்டுக் கொள்ளாதே. இந்த உலகம் கெட்டது குருபீடங்களின் சுயநலத்தால். வேத ரிஷிகளும் சித்தாந்த முனிவரும் குருபீடமோ சிஷ்ய சங்கமோ நாட்டவில்லை. அவர்கள் பரம்பொருளுக்கே வணக்கம் செலுத்தினார்கள். பிற்காலம் அவதாரவாதம் முளைத்தது. இறைவன் அரியணையில் மனிதர் ஏறப் புகுந்தார். போட்டி வலுத்தது. நான் ஒரு குருபீடம் நாட்டுகிறேன் என்று வைத்துக்கொள். விளம்பரம் பெருகும். சீடர் கூடுவர்; புகழ்வார்; பொய்க் கதைகட்டி விளம்பரம் செய்வர். எனக்கு ஆணவம் ஏறிப்போகும். கடவுளை வணங்க வேண்டிய ஆன்மாக்கள் இந்தக் கட்டையை விழுந்து கும்பிடுவார்கள். ஆன்மாக்களுக்கும் கடவுளுக்கும் நடுவே நான் நிற்பேன், என் சீடர் என்னைச் சாராதவரை நிந்திப்பர். எனக்குப் பிறகு என்பெயரால் ஒரு மதம் பிறக்கும். அதில் கிளைகள் உண்டாகும்; அதைச் சேராதாருடன் போர் தொடரும். இப்படி ஆயிரம் குருபீடங்கள் எழுந்தால், நாடு ஆயிரம் சுயநல அகம்பாவக் கோட்டைகளாகப் பிரியும். ஒற்றுமை இராது. எல்லோருக்கும் இறைவன் ஒருவன் என்ற உண்மை மறையும். மனிதர் மனிதனின் படத்தைக் கும்பிட்டு, இறைவனை மறப்பார்கள். இறைவனன்றி இன்பமில்லை. அவனைந் தவிர வேறெதைப் பணிந்தாலும் சுதந்திரமில்லை.

நான்: உண்மை, உண்மை. இந்த உண்மைதான் பாரதசக்தியின் உயிர். சாமி இந்த உண்மையைச் சொல்லத்தான் மனம் துடிக்கிறது. ஆனால் குருபீடங்கள் ஒப்புமா? குருபீடங்களை ஒன்றுசேர்த்து,

'ஐயா உமக்குமேல் கடவுள் உண்டு. அதையே சாதனத்தால் அடைய உலகிற்கு வழிகாட்டுங்கள்' என்று சொல்ல வேண்டும்.

ஞானி: தம்பி, பொறு. இப்போது உன்சொல் ஏருது. சன் மார்க்கம் பிரசங்க மார்க்கமன்று; சக்தி மார்க்கம். தெய்வசக்திபேறு. தெய்வமே பேசும், நீயே பாரத சக்தியாயிரு, அதுவே வழிகாட்டும்.

நான் இத்துடன் உள்ளடங்கினேன். தியானம் செய்தேன். மகான் என் கையைப் பிடித்து மகாகுண்டலி மின்சாரத்தை என்னுள் ஏற்றினார். இரண்டு மணி நேரம் தியானம் நடந்தது, "குருநாதன் அவனே" என்றொரு கீதம் பாடினேன். அது கீர்த்தனாஞ்சலியில் உள்ளது. பசி கண்டது; கனியும் கடலையும் உண்டோம். பிறகு ஞானி என்னை மலையில் சில இடங்களுக்கு அழைத்துச் சென்று அரிய மூலிகைகளைக் காட்டினார். பசியைத் தணித்துக்கொண்டு வீட்டை கூடியிருக்க வழி சொன்னார். இரவு அறப்பளீசர் கோயில் மண்டபத்திலேயே தியானித்தோம். நான் கண்ணயர்ந்தேன். என் தலைமேல் அவர் கைவைத்தார் காலையில் "கருணாகரனை குருநாதன் வருகின்றான் கண்விழித்தெழுந்திரு மனமே" என்ற பாட்டுடன் எழுந்தேன். அவரைக் காணோம். பரதேசியுடன் அவர் எங்கோ சென்றார். அதன் பிறகு அவரை நான் பார்க்கவில்லை. அப்படிப்பட்ட மகா புருஷனையும் பார்க்க முடியவில்லை. அவர் இமாலயம் செல்வதாகச் சொன்னார். ஒருவேளை நான் அங்கே செல்லும்போது பார்க்கலாம். ஓம் சுத்த சக்தி!

158. பிரம்மார்ப்பணம்

நான் சேந்தமங்கலத்திற்கு வந்தேன். என்னைப்பிடித்த நல்ல காலம் கிட்டு சுவாமிகள் வந்து சேர்ந்தார். உடனே என்னைக் கண்டு கொண்டார்.

நான்: நமஸ்காரம். தங்கள் குகையில் நிம்மதி கண்டேன்.

சுவாமி: நின்னைக்காண்; நிம்மதிகாணும். பாரத சக்தி நடக்கிறதா?

நான்: பாரதசக்தி தானே பரமாத்ம சக்தி; அதுதான் மகா குண்டலியாகச் சுழல்கிறதே.

சுவாமி: நாக்கில் சுழலட்டும். அந்தச் சங்கற்பம் தீரட்டும். பிறகு நிஸ்ஸங்கற்பனாக நிர்விகாரியாக இருக்கலாம்.

நான்: சுவாமி பாரதசக்தியைக் கூட நான் ஒரு சங்கல்ப பந்தமாக நினைக்கவில்லை. திருவருள் கூடும்போது எழுதுகிறேன். மற்ற நேரங்களில் பரம்பொருளையே நினைக்கிறேன்.

சுவாமி: நினை; நினை; நினைப்பைவிட்டு நீயாயிரு.

சுவாமிகள் கீதை ஆரும் அத்தியாயத்தைப் படிக்கச் சொல்லி விளக்கினர். முடிவில் "பிரம்மார்ப்பணமாக வாழ்க" என்ருர். சுவாமிகளை நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டேன். சேந்தமங்கலம் சுவாமிகள் முழுத்துறவி; கோவணங்கூடச் சுமை யென்று உதறித் தள்ளியவர். குழந்தையுள்ளம் படைத்தவர். காற்றைப்போல் பற்றற்றவர். இனி என் ஜீவப் படம் விரைவாக ஓடும். வழி துலக்கினன் வள்ளல்.

159. ஆனந்தக் குடில்

சத்தியாக்கிரக நாளை அமோகமாகக் கொண்டாடினேம். மருதியில் இரண்டு மணிநேரம் காந்தி தத்துவத்தைப் பற்றிப் பேசினேன். பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது. திருச்சி டாக்டர் சாமிநாத சாஸ்திரியை வரவழைத்தோம். அவருடன் சில தொண்டர்கள் வந்திருந்தனர். நான் அன்றுதான் கதர் அணிந்தேன்; முரட்டுக் கதர்; நெல்லூரிலிருந்து வரவழைத்தது, சாக்குத்தான்... இருந்தாலும் கதர் கதர்தான். காந்தி. காந்திதான். 'சத்தியாக்கிரஹ நாளன்று சுதந்தரம் வருமட்டும் தாடிவளர்ப்பது என்ற விரதம் பூண்டேன். மருதியில் அடிக்கடி பிரசங்கம் மட்டும் செய்தேன். அப்துல்காதர் வீட்டையும் விட்டு, புலவர் கோவிந்தசாமி பிள்ளை வீட்டுப் பக்கத்தில் மாணிக்க முதலியார் குடிலிற் புகுந்தேன். ஒரு கரியடுப்பு, இரண்டு சட்டிகள் வைத்துக்கொண்டு குடித்தனம் செய்தேன். சமையல் அபூர்வம்; ஊறிய கொத்துக் கடலை வாழைப்பழம் இவையே பெரும்பாலும் உணவு. சமைத்தால் உப்பு, புளி, மிளகாய் இரா. மாணிக்கம் பிள்ளையின் மக்கள் சோமு, சதாசிவம், அயலூர் மிராஸ் பிள்ளைகளான சபாபதி இன்னும் மாணவர் பலர் அங்கே என்னுடன் இருந்தார்கள். "ஆனந்தக்குடில்" ஒரு குருகுலம்போல் ஆனது. மாணவர் காலை ஐந்து மணிக்கு ஆற்றிற்குச் சென்று நீராடிவந்து, பஜனை செய்து, பாடங்களைப் படிப்பார்கள். என்னுடன் ராட்டை நூற்பார்கள். மாலையும் குளித்து, கடவுள் வணக்கம் செய்து, அருட்பாடல்களைப் பாடக் கேட்பார்கள். நான் காந்திச் செய்தி சொல்லுவேன். மகான்கள் வரலாறுகளை இரவில் சொல்லுவேன். அத்துடன் தாகூர், விவேகானந்தர், காந்தி, கம்பன் முதலிய பெரியார்வாக்குகளை விளக்குவேன். இந்தக் குடிலில் நான் உளி, ரம்பம் வைத்துக்கொண்டு ராட்டினங்கள் செய்யத் தொடங்கினேன்; இரண்டு ராட்டைகள் உருப்பட்டன. மற்றவை கழுதை வண்ணான் குதிரை வளர்த்த கதையாயின. அந்தக் குடிலுக்கு திருச்சி தேசாபிமானிகள் அனைவரும் வந்து என்னுடன் அளவளாவினர்கள். டாக்டர் சாமிநாதர், பாலகிருஷ்ணர், வாதிராஜர், ரா. கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் நண்பர் கோடீஸ்வரரும், ராசகோபாலரும் என்னிடம் அழைத்து வந்தார்கள். நானும் அவர்களுடன் சுற்றி ஸ்வ்ராஜ்ய நிதி திரட்டினேன். கதர் விற்றேன். திலகர் பெயரால் ஸ்வராஜ்ய நிதி வசூலித்தனர்,

நான் வாங்கல் சென்றேன். சுப்புரத்னமையர் என்ற ஆசார சீலர், பிரசங்கம் வைத்தார். "வறுமை நீங்க வழி" என்பதைப் பற்றிப் பேசினேன். இருவரும் பணம் வசூலித்தோம். சுமார் பதினைறு ரூபா வசூலானது. அதைத் தேசியத் தொழில் நிதிக்குத் தந்தேன். உமது ஆனந்தக் குடிலையும் அடிமைத் தொழிலையும் விட்டு வாரும்..." என்று திருச்சி தேசபக்தர் அழைத்தனர்." சென்றேன்.

160. திருச்சி காங்கிரஸ் காரியாலயம்.

அம்பிகாபதி ஸ்டோர்சுக்கு எதிரே காங்கிரஸ் கட்டிடம். அங்கே பலதடவை சென்றிருக்கிறேன். என்றாலும் இந்தத் தடவை ஒரு வசீகரமான வாலிபரைக் கண்டேன்—ரா. கிருஷ்ணமூர்த்தி; இப்போது கல்கி என்று புகழ்பெற்ற பேனச்சிங்கம். கிருஷ்ணமூர்த்தியைக் கரூரிலும், காட்டுப்புத்தூரிலும் பலதடவை பார்த்திருக்கிறேன். கிளி கொஞ்சும் அவர் குரலை ரசித்திருக்கிறேன். ஆனாலும் அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் இப்போது வாய்த்தது. ரா.கி. திருச்சி தேசியக் கல்லூரியில் ஸயன்ஸ் மாணவராயிருந்தார். சூடிகையான புத்திசாலி. தொடர்ந்து படித்திருந்தால் அட்வொகேட்டாக வந்திருப்பார். காந்தியின் சங்கநாதம் கேட்டதும் அவர் இக்னேஷஸ், முத்துகிருஷ்ண நாயுடு எல்லாரும் படிப்பைவிட்டு, கதர் அணிந்து, காங்கிரஸ் தொண்டு செய்தனர். அப்போது நான் திருச்சியில் இருந்தேன். கிருஷ்ணமூர்த்தி பாரதி பாட்டுப்பாடக் கேட்டேன். பேசக்கேட்டேன். தமிழ்த்தாய் பெற்ற மணிப்புதல்வருள் ஒருவர் ரா.கி. பால்வடியும் முகம், வலது கன்னத்தில் அதிட்ட மச்சம், கம்பீரமான நடை, பெருந்தன்மையான நினைப்பு. அந்தரங்க சுத்தியுள்ள காந்தி பக்தி. கைராசிமிக்க காரியசித்தி இவையே கிருஷ்ணமூர்த்தி. கரூர் கிருஷ்ணையர் "பதினாறு வயதுப்பையன் பேசுகிறான்; அடடா கேளுங்கோ, பாரதியார்" என்று எனக்கு அறிமுகப்படுத்தினர். கிருஷ்ணமூர்த்தி பேச்சில் பொருத்தமான நகைச் சுவையும் உபகதைகளும் இருக்கும். ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தைத் தொடும். என்னை ரா. கி. அன்புடன் வரவேற்று, தமிழ்க்கவி என்று பலருக்கும் அறிமுகப்படுத்தினர். என் வாக்கு இன்னும் தெளிவடைய வில்லை. ஆங்கிலத்திலேயே புரண்டு கொண்டிருந்த நான், திடீரென்று தமிழில் வெற்றிபெற முடியவில்லை, அந்தக் காலம் காமாசோமா என்று தேசிய கீதங்கள் பாடினேன். நல்லவேளையாக அவை கால வெள்ளத்தில் மறைந்தன. உண்மையான ஆவேசத்துடன் பாடிய சில கவிகளே பிற்காலம் வெளியிடக் கிடைத்தன. ரா. கி. காங்கிரஸ் பவனத்தில் அரிய வேலை செய்தார். கதர் நூல்களை கண்டு கண்டாகச் சேர்த்து நிறுத்து விற்பது; ராமதுரைக்குத் தறிபோடக் கொடுப்பது. பிரசாரம் செய்வது, பொதுகூட்டங்களில் பேசுவது, நிதி வசூலிப்பது எல்லாம் அவர் காரியங்கள். முதல் நாள் நான் டி. வி. சாமிநாத சாஸ்திரியார் வீட்டில் சாப்பிட்டேன்; மறுநாள் முதல் கனி கடலை

யுண்டேன். ஒரு மாதம் காங்கிரஸ் தொண்டில் நானும் ஈடுபட்டேன். நியான சாதனங்களுக்கு உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வேன். மற்ற நேரங்களில் காங்கிரஸ் காரியாலயத்தில் இந்தி படிப்பதும், கவிதை எழுதுவதும் நூலிழுப்பதுமாயிருந்தேன். இடை யிடையே எனது நண்பரைச் சந்தித்தேன். டாக்டர் ராஜனைக் கண்டேன். கம்பீரமான நெட்டைத் திருமேனி; புண் அறுப்பதுபோலவே கறாராகப் பேசும் கண்டிப்புப் பேர்வழி; காரியம் உண்டு அவர் உண்டு, வீண் அளப்புக்கும் அவருக்கும் வெகுதூரம். காந்தியிடம் உயிர். ஐயரின் அரிய தோழர். லண்டன் இந்திய விடுதியில் ஐயர் ஸாவர்கருடன் புரட்சி ஜோடித்த வீரர். லண்டன் பட்டதாரியாயிருந்தும், தொழிலில் ஏராளமான வரும்படி வந்தும், எளிய வாழ்க்கை யுடையவர் நல்ல தர்மிஷ்டர். தேச பக்தர்களுக்கு அவர் வீடு சத்திரம் போலும். காந்தி மகானை அவர் வீட்டில் தரிசித்தேன். டாக்டர் ராஜன் என்னை அடையாளம் கண்டு கொண்டார். அவர் மணப்பாறை தாலுக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யச் சொன்னார். சாஸ்திரியார் தம்பி வாசுதேவன், காரியாலயக் கணக்கு வழக்குகளைக் கவனித்தார். அவரே செலவுக்குத்தந்து என்னையும், ரா. கிருஷ்ணமூர்த்தியையும் பிரசாரத்திற்கு அனுப்பினார்.

161. காங்கிரஸ் தொண்டு

வருங்கால கல்கியை அந்தக்கால 'ராகி'யில் கண்டேன். 'ராகி'யின் பேச்சும் நடையும் எனக்கு இன்பமளிக்கும். அவர் இடையிடையே எனது வைதிகத்திற்குத்தரும் டோஸ்கூட இன்பமளிக்கும். "வாத்தியார் வேலை அரோ ஹரா!" என்பார். நானும் "ஆறுமாதத்தில் அரோ ஹரா!" என்பேன். அவர் மனது தாராளம்; கருமித்தனம் கிடையாது: தம்மை அண்டினவருக்கு எல்லா உதவியும் செய்வார். நான் ஓட்டலில் சாப்பிடக் கூசுவேன்: என்னை இழுத்துச் சென்று "நன்றாகச் சாப்பிடும்" என்று உபசரிப்பார். 'ராகி'யிடம் நட்புரிமை அதிகம்.

அவரும் நானும் மணப்பாறைக்குச் சென்று இராமச்சந்திரராவ் வீட்டில் தங்கினோம். அந்தக் காலம் தேசபக்தர் சிறைசென்றனர். சர்க்கார் அடக்குமுறை, காந்தி பெயர்சொன்னால் கூடத் தாங்காது. சத்தியாக்கிரகிகள் என்றால் கோழைச் சொல்வர் கருடனைக் கண்ட பாம்புமாதிரி பயப்படுவார்கள். நாங்கள் இருவரும் வீடுவீடாகச் சென்று காந்தியைப் பற்றிச் சொல்லி, கதர் அணியச் செய்து திலகர் நிதியையும் வசூலித்தோம். என்னைவிட வசூல் விஷயத்தில் 'ராகி' பத்துமடங்கு நிபுணர்.

மணப்பாறையிலிருந்து இருவரும் மருங்காபுரிக்கு நடந்து சென்றோம். ராகி தமது டிரங்கை என்கையில் தள்ளிவிட்டு, ஜோராக

நடந்தார். மருங்கைச் சமரஸ சன்மார்க்க சங்கம் காரியதரிசி ராஜ கோபாலையர் எங்களை வரவேற்றார். மருங்கை ராணி இலட்சுமி அம்மணி திருக்குறளில் நல்ல புலமை பெற்றிருந்தார். அவர் கணவர் சுகபோகி, கலாரசிகர். மருங்காபுரியில் ஜமீந்தார் கதைகள் சில கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டேன். பிறகு யாகபுரிக்குச் சென்றோம். அங்கே ஒரு சத்திரத்தில் தங்கினோம். நான்மட்டும் அருகே இருந்த மலையில் சென்று தியானித்து வந்தேன். பொதுக்கூட்டம் அமளியாக நடந்தது. நல்ல வசூல். பிறகு துவரங் குறிச்சிக்குச் சென்றோம். அங்கே மசூதியில் நான் இஸ்லாமைப்பற்றிப் பேசினேன். "நபிநாயகம் அல்லாவின் திருவருளையே நம்பி வாழ்ந்த பரமபக்தர். தௌரிக்குகையில் குரேஷியர்கள் அவரைத் துரத்தி வந்தபோது, அபுபக்கர் "ஆ ரசூல், நாம் தனியாக இருவர் என்ன செய்வோம்" என்று வருந்தினார். முகமது ஸல்லம், "அன்பா நாம் இருவரில்லை. நமக்குப்பின் பரமசக்திமானான ஒருவன் இருக்கிறான். அவன் நம்மைக் காப்பான்" என்றார். அப்படியே நடந்தது. அந்தக்காலத்து மூடக் கொள்கைகளையும் அடிமைப் பழக்கங்களையும் ஒழிக்க வந்தார் நபிமணி. இந்தக்காலத்தில் நமது அடிமை விலங்கை முறித்து விடுதலை அளிக்கவந்தார் காந்திமகான். "ஒற்றுமையாயிருங்கள், சுத்தமாயிருங்கள், அன்பாயிருங்கள், குடி சுருட்டு புகையிலை முதலிய கெட்டபழக்கங்களை விட்டுவிடுங்கள், தீண்டாமையை ஒழியுங்கள், சாதிமதபேதங்களைப் பாராட்டாது சேர்ந்து வாழுங்கள், பட்டம் பதவிகளைக் கருதாது தேசசேவை செய்யுங்கள். தியாகபலத்தால் நாம் விடுதலை பெறலாம்" என்கிறார் மகாத்மா. நாடெல்லாம் அவரைப் பின்பற்றி தியாகம் செய்கிறது. நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். அவரவருக்கு இயன்றதை தேச நிதிக்குத் தாருங்கள். காங்கிரஸில் சேருங்கள்" என்று பேசிய பிறகு 'ராகி' கணிரென்று இருபது நிமிஷம் பேசி, வசூலுக்கு ஆரம்பித்தார். அந்த இடத்திலேயே எழுபது ரூபாய் வசூலானது. அல்லாஹு அக்பர்! வந்தேமாதர கோஷத்துடன் கூட்டம் கலைந்தது. சிலர் இராட்டை சுற்றத்தொடங்கினர். ஏற்கெனவே அந்தப் பக்கம் இஸ்லாமியர் வலைக்காக இராட்டை நூல், தக்ளி நூல் இழுத்தனர். இந்த மாதிரி வசூலித்துக்கொண்டே நாங்கள் மணப்பாறைக்குத் திரும்பி வந்தோம். ராகி அவசரமாகத் திருச்சி சென்றார். நான் இன்னும் சில கிராமங்களைச் சுற்றிப்பார்த்து ஊர் சேர்ந்தேன். ஒற்றர் எனது பேச்சு போக்கு அனைத்தையும் மேலே எழுதிவிட்டனர். காட்டுப்புத்தூர் ஸ்டேஷனிலிருந்து என்னை துவாரபாலகர் வட்டமிட்டு வந்தனர்.

162. தைரியமாகப் பணிசெய்தேன்

தைரியம் என்றது மனச்சாட்சி; தைரியம் என்றார் காந்தி மகான்; தைரியம் என்றது காலசக்தி; தைரியமாகவே பணிசெய்

தேன். காட்டுப்புத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் ராட்டைகளைக் கண்டுபிடித்தேன். பலர் கலியாணங்களில் சீதனம் கொடுத்த ராட்டை மணைகள், அட்டாணியில் பதுங்கியிருந்தன; அவற்றை இறக்கிச் சுத்தம் செய்து பஞ்சுகொடுத்து நூற்கச் செய்தேன். நெசவுக்காரர்களைக் கதர் நெய்யத் தூண்டினேன். பிறகு மதுவிலக்குத் தொண்டு செய்தேன். குடிகாரர் வீடுகளுக்கெல்லாம் சென்று, மதுவிலக்குப் பாட்டுப்பாடி, உறவினரிடையே கட்டுப்பாடு செய்து, மனைவிமக்களுக்கு அறிவுறுத்திப் பலர் குடிக்காமல் தடுத்தேன். கள்ளுக்கடைகளுக்கு முன்னே நின்று குடிகாரர் உள்ளே போகாமல் கெஞ்சி அறிவுறுத்தித்தடுத்தேன். அவர்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று வயிறு நிரம்பச் சோறு போடச் செய்தேன். சில கள்ளுக்கடைகளுக்கு முன் பஜனை வைத்தேன். பாட்டினால் அவர்களுக்கு அறிவு வந்தது. கள்ளுண்டு பிதற்றித்திரியும் ஏழைகளைக்கண்டு, என் உள்ளம் பதறும். இரண்டு மூன்று சம்பவங்களைச் சொல்லுகிறேன்:

ஜமீந்தார் வீட்டு வாசல் சேவகன் ஒரு நாள் குடித்துவிட்டு "ஏ பாலம்மா ஒரு முத்தம்" என்று கள்ளிச் செடியைக் கட்டி முத்தமிட்டுப் புதரில் விழுந்தான். நான் அவனைத் தூக்கிவிட்டு மெல்ல வீட்டுக்கு இட்டுச் சென்றேன். என்னையே பாலம்மா என்று கட்டிக்கொள்ள முயன்முன். பாலம்மா இந்தா என்று அவன் மனைவியிடம் ஒப்படைத்து "இனிக் குடித்தால் அவன் முகத்தைப் பாராதே. சமைத்துப்போடாதே சத்தியாக்கிரகம் செய்" என்றேன். அப்படியே செய்து ஆள் குடியை விட்டான். ஒரு சங்கீதவித்வான் பிராமணன். தாசிமோகத்தில் விழுந்து, குடிப்பழக்கம் செய்தான். "ஐயா குடிக்காதே கெடுவாய்" என்று நியாயமாகச் சொன்னேன். அவன் புட்டியை ஒரு தோப்புக்குள் எடுத்துச் சென்று மறைவாகக் குடித்து வந்தான். போதைவெறி மண்டைக்கேறி தாசியை அடிக்கப் போனான். அவள் அவனை உதைத்துத் தெருவில் தள்ளிக் கதவை மூடினாள். தெருவிலிருந்து ஆள் அட்டகாசம் செய்தான். போலீஸ்காரர் அவனைப் பிடித்து அடித்தனர். அவர்களை, "அடி தேவடியாச் சிறுக்கி உன்னை அவமானம் பண்ணுறேன் பாரடீ" என்று மிரட்டினான். நாலு அறை போட்டு அடக்கினர் போலீஸார். மறுநாள் நான் அவனைப் பார்த்துப் புத்தி சொன்னேன். ஆயிரம் காயத்திரி பண்ணி இனிக் குடிப்பதில்லை என்று விரதம் பூணச்செய்தேன். ஆள் தாசியிடம் எல்லாம் இழந்து பஞ்சையாகி ஓடி மறைந்தான். அரிய நாதஸ்வரவித்வானான காட்டுப்புத்தூர் கன்னையா குடிவெறியால் நரகவேதனைப்பட்டார். ஒருநாள் திடீரென்று மார்படைத்து இறந்தார், அவர் பிணம் போனபிறகு நான் பொது ஜனங்களுக்குக் குடியின் தீமையைப் போதித்தேன். கூட்டத்திலிருந்த சில பெண்கள் தமது நாயகரைக்காட்டி "இவரும் இப்படித்தான் சாமி, கெட்டுப்போறாரு. புத்தி சொல்லுங்க" என்றார்கள். 'குடிக்கிற கணவனைத் தொடாதீர்கள்: சத்தியாக்கிரகம் பண்ணுங்கள்' என்று

சொன்னேன். சமுதாயக் கட்டுப்பட்டால் பலர் குடிகிறுத்தினர், குடித்தவர்களை, கலியாணம் கார்த்திகைகளுக்குக் கூப்பிடுவதில்லை பந்தியில் வைப்பதில்லை, என்று கட்டுப்படுத்தினேன். பஞ்சாயத்து வைத்து அபராதம் போடச் செய்தேன். இப்படியே சுற்றுக் கிராமங்களில் பலர் குடியை நிறுத்தினர். மிராசுதாரர்களும் செல்வரும் தென்னையைக் கள்ளுக்கு விடாது தடுத்தேன். பணத்தாசைபிடித்த சிலர் என்மேல் புகார் எழுதிவிட்டனர். என்து நரித்தோழர் அதிகாரிகளுக்கு என்மேல் பொய்க் கடிதங்கள் எழுதினர். 'இவரால் பள்ளிக்கூடத்திற்கே கேடுவரும்; சர்ககார் கிராண்டு போய்விடும்; இவர் ஒத்துழையாமை வேலை செய்கிறார்; புரட்சிக்காரர்; இவரை விலக்குங்கள்', என்றெல்லாம் எழுதினர். கொதிக்கும் சிம்னியில் தண்ணீர் தெறித்தது போல் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

163. காந்தி தரிசனம்

நான் கரூர் அரசியல் கூட்டங்களில் தீவிரமாகக் கலந்து கொண்டேன். என் பேச்சு பத்திரிகையிலும் வந்தது, கரூர் கள்ளுக் கிடங்கு மறியலில் கலந்து கொண்டேன். ஒரு கழுதையைப் பிடித்து, "நான் குடிப்பதில்லை; மனிதா கள் குடிக்காதே" என்றெழுதி அட்டை ஒட்டி ஊரில் ஓட்டிவிட்டோம். கள்ளுக்கடை ஏலம்போடும் இடத்தில் கழுதை வாள்வாள் என்று கத்தியது. குத்தகைக்காரருக்கு அவமானமானது: கரூரில் நாமக்கல் கவிஞருடன் நான் அடிக்கடி தங்கினேன். திலகர் நிதி வசூலிக்க அவரும் நண்பரும் வந்தனர். ஒருதரம் நாடகக் கொட்டகைக்காரரிடம் ஒரு நாள் வசூலைக் கேட்டனர். கொட்டகைக்காரர் மறுத்தார். மறுநாள் கொட்டகை லங்காதகனம் ஆனது. போலிஸ்காரர் காங்கிரஸ் ஊழியர் பலரைக் கைது செய்து சிறையிட்டு விசாரித்தனர். அந்த விசாரணையை நானும் பார்க்கச் சென்றேன். அதில் கரூர் கிட்டு பண்ணிய கோமாளித்தனங்கள் இன்று நினைத்தாலும் சிரிப்புவரும். சர்க்கார் வக்கீலை அவர் திணறடித்தார். கேஸ் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. வகுப்புகளில் நான் இவற்றைக் குறிப்பிட்டு 'அடக்குமுறை அரசு இனி நடக்காது' என்றேன்: இதை எனது நரித்தோழர் கோளேற்றி விட்டார். அதிகாரிகள் மனதில் கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. அதில் நான் தாளிக்கப் புகுந்தேன்.

மஹாத்மா திருச்சிக்கு வருகிறார். கட்டளை ஸ்டேஷனில் அவரைப் பார்க்கவேண்டும். வண்டி அங்கே பனிரண்டு மணிக்கு வருகிறது. நண்பரை அழைத்தேன். எல்லாரும் கிளம்பினர். மாணவர் சிலர் கூட்டத்துடன் கலந்து கொண்டனர்—அப்துல் காதர், சாமராவ் முதலியோர். நானே நூற்ற கதர்க்கண்டுகளால் அழகான மாலை செய்தேன். இருபது ரூபா வசூலித்து ஒரு கவரில் போட்டு. அதில் ஆங்கிலக்கவிதை ஒன்றும், இந்தியில் உபசாரமொழிகளும் எழுதி

வைத்தேன். "இராமனும் கண்ணனும் ஆயுதம் தாங்கி நாட்டைக் காத்தனர். காந்திமகானே, நீ சத்தியமே ஆயுதமாகக் கொண்டு, தியாகத் தேர் ஏறிச் சுயேச்சாதிகாரத்தை வெல்லப்புறப்பட்டாய். உன் முயற்சி வெல்க. உன்னால் உலகில் போர் ஒழிக! சாந்தம் பொழிக! மனிதனுக்கு மனிதன் செய்யும் கொடுமைகள் ஒழிக! வானக்குடைக்கீழ் எல்லோரும் ஆண்டவன் அன்பைத்தாங்கி வாழ்க!" என்பது அதன் சாரம். எல்லாரும் வரிசையாகக் காவேரிக்குச் சென்றோம். பரிசல் இல்லை. என்ன வந்தாலும் சரி என்று ஆற்றில் இறங்கினோம். கையில் சுளுந்து இருந்தது. அதைக்கண்டு ஒருவன் பரிசல் கொண்டு வந்தான். "காந்திக்கு ஜே!" என்று ஏறினோம். வண்டி வருமட்டும் காந்திப் பேச்சும் பாட்டுமே. பனிரண்டுமணி; குபு குபென்று ரயில்வந்து நின்றது. நாங்கள் "மஹாத்மா காந்திக்கு ஜே! வந்தேமாதரம்" என்று பெருங்கூச்சலிட்டு காந்தி வண்டிக்கருகே நின்றோம். ஜன்னல் திறந்திருந்தது. மஹாத்மா ஒரு கம்பளம் போர்த்துத் தூங்கினார். அருகே அடுத்த வண்டிலிருந்து சிங்கம் மாதிரி சௌகத்தலி எழுந்து தலையை நீட்டி, இந்தியில் "அரே என்ன கூச்சல், மஹாத்மா தூங்குகிறார்" என்றார். நான் எல்லாரையும் அடக்கி விட்டு, கதர் மாலையையும் பணத்தையும் அவரிடம் தந்து 'மஹாத்மா விடம் அர்ப்பணியுங்கள்' என்றேன். அவர் வாங்கும்போது காந்தி எழுந்து விட்டார். நான் நமஸ்தே என்றேன். எல்லாரும் "ஜய! மஹாத்மா." என்று கூவினர். காந்தி மலர்ந்த முகத்துடன் நான் தந்ததை வாங்கிக்கொண்டார்., வந்தனம் வந்தேவாதரம்! படுத்துக் கொள்ளுங்கள். மன்னிக்கவேண்டும். தங்களைத் திருச்சியில் காண்கிறோம்.' என்று திரும்பினோம். ரயிலும் நகர்ந்தது. மஹாத்மாவின் காந்தம் என்னை ஆட்கொண்டது. நான் திருச்சிக்குச் சென்றேன்.

கண்கொள்ளாக் காட்சி; மாபெரும் கூட்டத்தில் காந்திஜீ பேசினார். அந்த மெல்லிய உடலும், மெல்லிய குரலும் எல்லார் உள்ளத்தையும் கொள்ளை கொண்டன. காந்தி குரல் இந்தியாவின் குரல்; அவர் உடல் பாரத சமுதாயத்தின் கோயில். "ஆண்டவன் இருக்கிறான். அவன் சக்தி உலகை ஆளுகிறது. அதுதான் ஆத்மசக்தி; அதை யாரா லும் அழிக்க முடியாது. எத்தகைய தியாகத்திற்கும் அந்தச் சக்தி ஈடு கொடுத்து வெற்றிபெறும். நம்மை அடக்கியாளுவோர் குண்டு பீரங்கி களால் எல்லாம் நடக்கும், என்று நினைக்கிறார்கள். மிருகபலத்தால் மனிதான்மாவைக் கட்டுப்படுத்த முயல்கிறார்கள். கோழைகளைக் கட்டுப்படுத்தலாம். தியாக தீரர்களைக் கட்டுப்படுத்த முடியுமா? தன்னம்பிக்கை, மனவுறுதி, அஹிம்ஸை, சத்தியம் இவற்றால் பொறுமையாக முயன்றால், எத்தகைய இடர்களையும் வெல்லலாம். அதற்கே ஒத்துழையாமைத் திட்டம் வகுக்கப்பெற்றது. நாடெல்லாம் கூடி அதைப் பின்பற்றினால் ஒரே ஆண்டில் சுதந்திரம் பெறலாம், என்று நம்புகிறேன். சர்க்கா சுற்றுங்கள், இந்தி படியுங்கள், தீண்டா

மையை ஒழியுங்கள். எல்லாரும் சேர்ந்து வாழுங்கள். பொதுநலம் புரியுங்கள். கிராமசேவை செய்யுங்கள். விடுதலை வரும்.''

இதுதான் மகாத்மாவின் பேச்சுச் சுருக்கம். முக்கால்மணி நேரம் முக்கால் விநாடிபோலச் சென்றது. கூட்டம் கலையுமுன்பே காந்திஜி டாக்டர் ராஜன் வீட்டிற்கு மோட்டாரில் சென்றார். நான் அடக்கமாயிருந்து மகாத்மாவின் நடையுடை பாவனை பேச்சு செயல் எல்லாம் கவனித்தேன். "காந்தி, கிராமவேலை செய்'' என்று எனக்கு கட்டளையிட்டார். "ததாஸ்து'' என்று திரும்பினேன்.

* * * *

திங்கட்கிழமை பள்ளிக்கூடத்தில் ஏகக் கலக்கம். நான் வழக்கம் போல் ஸயன்ஸ் பாடம் தொடங்கினேன். நரித்தோழர் வந்தார். "ஸார் ஸார் என்ன பிசகு பண்ணினீர். நீர் காந்தியைப் பார்க்கப் போகலாமா? பையன்களை அழைத்துச் செல்லலாமா? தலையாசிரியர் சினக்கிறார்; சீறுகிறார்!'' என்றார். நரித்தோழர் புலிக்கோளராய் விட்டார்; என் வாழ்வின் ஆத்ம சோதனைக்கு இப்படிப்பட்ட திருவாளர்கள் எங்கும் உண்டு. உலக நாடகத்தை நான் நேருக்கு நேராகப் பார்க்க இந்தக் குண்டுணி நரிகள் உதவி செய்தார்கள். ஆயாகோ (Iago) இல்லாமல் ஒதெல்லோ நாடகம் ஏது? சரி; என்னுடன் காந்தியைப் பார்க்கவந்த மாணவருக்கெல்லாம் அடி விழுந்தது. நான் பரபரப்புடன் தலைவரிடம் போனேன்: "ஐயா, அழைத்துச் சென்றவன் நான். என்னை அடியுங்கள்; குற்றமறியாத மாணவரை அடித்ததேன்?'' என்று கேட்டேன். 'நீர் அப்படிச் சொல்லுவீர், காந்தி ஆள் என்றுதான் உமக்குத் தெரியாமல் தண்டனை தந்தேன், அது எனது தொழில் முறை' என்றார் தலைவர். சரி எனது தொழில் முறையை நான் செய்கிறேன்...என்று பொறுத்திருந்தேன். அன்றுமுதல் ஆசிரியர் கூட்டங்களிலும் வாரக் கூட்டங்களிலும் தனியாக மாணவரிடமும் யங் இந்தியாவை வைத்துக்கொண்டு, காந்தியின் பெருமையே பேசி வந்தேன். நான் அங்கிருந்து செய்யவேண்டிய காரியங்களெல்லாம் விறுவிறுப்பாகச் செய்தேன். பள்ளிக்கூடத்திற்கு எதிரே யிருந்த சாமியாரம்மா வீட்டில் ஜாகை வைத்துக்கொண்டேன். மணியடித்ததும் அங்கே செல்வது; மற்றப்படி என் அறையில் தியானிப்பது, எழுதுவது பாடுவது இவையே வேலை.

இதனிடையே பிள்ளையார் புத்தூரிலிருந்து இராமகிருஷ்ண சாஸ்திரிகள் வந்தார். "நான் இங்கே தேசீயக் கலாசாலை நாட்டப் போகிறேன். திறப்பு விழா நடத்தவேண்டும். பள்ளிக்கூடத்தை வெற்றி பெறச் செய்யவேண்டும்'' என்றார். நான் அங்கே சென்று எல்லா ஏற்பாடுகளும் செய்து திருநாளை நடத்தினேன். அதில் தலைமை வகித்துப் பேசினேன். "கல்வி தான் நமக்குக் கண். கற்பது நாம்; ஆதலால் நமக்கேற்ற கல்வி வேண்டும். நமது நாடு மடமை, வறுமை, அடிமை

நோய் பிடித்து வருந்துகிறது. இந்த நோயைத் தீர்க்க, காலத்திற்குத் தக்க படிப்பு, தொழிற் பயிற்சி சன்மார்க்க சாதனம், காந்தி வழியே தேசசேவை, தியாகம்—இவை வேண்டும். கிராமந்தோறும் குருகுல முறையில் வித்யாலயங்கள் ஏற்படவேண்டும். கிராமவாசிகள் மகசூலில் ஒரு பங்கு கல்விக்கென்று தந்தால், அந்தக் காரியம் எளிதில் முடியும்'' என்றேன். ஊரார் ஊக்கமாக முன் வந்தனர். சாஸ்திரிகள் ஊராருக்குப் பெரிய வனபோஜனம் நடத்தினர். சாப்பாடானதும் நான் பாரதசக்தி உதயத்தைப்பற்றிப் பேசினேன். அன்றுமுதல் நான் அடிக்கடி புத்தூர் சென்றேன், பேசினேன், பாடினேன், பஜனை செய்தேன், சர்க்கா சுற்றினேன். சாஸ்திரியார் முப்பது சர்க்கா வாங்கி ஒரு திண்ணையில் போட்டார். அவற்றைச் சுழற்றி ஊரார் கதர் நூல் இழுக்கச் செய்தேன். அந்த ஊரார் மிக்க நல்லவர்கள்; அங்கே எனது மாணவர் பலர் இருந்தனர். அவருள் அர்ஜுனன் வீட்டிலே தான் நான் சாப்பிடுவது. அவன் தாயாரும் தந்தை ராமபத்திர தீக்ஷிதரும் நல்ல மனசுடைய செல்வர், எனக்கேற்றபடி உப்புப் புளி மிளகாய் இல்லாமல் பக்குவம்செய்து போடுவாள் அன்னை. எதிர்த்த வீடு, ராம சேஷையர் வீடு. அவர் நன்றாகப் பாடுவார். அவரைக் கொண்டு பஜனைகள் நடத்தினேன். நத்தம் மகாராஜபுரம் முதலிய சுற்றுக் கிராமங்களிலும் பஜனைகளில் கலந்து கொள்வதுண்டு. திவ்ய நாம சங்கீர்த்தனம்போல் எனக்கு வேறு ஆறுதல் தருவதொன்று மில்லை. இத்துடன் மஹாத்மாவின் மணிவாக்குகளையும் சேவா மார்க்கத்தையும் பொது ஜனங்களிடையே பரப்பி வந்தேன். ஸ்ரீராம நவமி சிறப்பாக நடத்தினோம். பத்துநாளும் தீபப் பிரதக்ஷிணத்துடன் பஜனை, ஆராதனை, காலையில் நான் செம்பை மாட்டிக்கொண்டு அன்பருடன் உஞ்சவிருத்தி செய்தேன். அதிற் சேர்ந்த அரிசியைக்கொண்டு பெரிய சமாராதனை நடத்தினோம். ராதாகல்யாணமும் அமோகமாக நடந்தது.

164 அழைத்தது சுதந்தரம்

மஹாத்மாஜியைக் கைதுசெய்த செய்தி வந்தது. அதை என்னால் சகிக்க முடியவில்லை. நான் இன்னும் சர்க்கார் அலுவலில் இருப்பது எனக்கே அவமானமாயிருந்தது. பள்ளிக்கூடத்தைவிடச் சிறைக்கூடம் கௌரவமாகத் தோன்றியது. என் பொறுப்பு நானே. பிள்ளைகுட்டிகள் இருக்கும் நாமக்கல் நாகராஜர், திண்டுக்கல் மகாதேவர். கல்லிடைக்குறிச்சி சர்மா, திருச்சி சாமிநாதையர், டாக்டர் ராஜன், முதலியோர், ராஜாஜி, ஸ்ரீநிவாசையங்கார் முதலிய செல்வந்தர்கள், காந்தி சேவை செய்கிறார்கள். இந்த உபாத்தியாயர் வேலையை விட்டு நாமும் தேச சேவை செய்வது கடமையல்லவா என்று சிந்தித்துக்கொண்டே, கோவிந்தசாமி பிள்ளையுடன் காவேரிக்குப் போனேன். இருவரும்

ஆசுகவி பாடிக்கொண்டே நடந்தோம், கவிகளில் எனது உள்ளம் துடித்தது. காவேரியில் குளித்துக்கொண்டே பாடியது :

முன்படிமை வாழ்விற்கு முழுக்குப் போட்டேன்
மூன்றுதரம் கவலைக்கு முழுக்குப்போட்டேன்
என்பழைய குறைகளெல்லாம் இன்றேழிந்ததே
எனதென்னும் செருக்கொழிந்துதேசத்திற்கே
அன்புடைய வாழ்வை, அத்யாத்ம வாழ்வை
அருட்பணிசெய் நல்வாழ்வை எல்லாருக்கும்
இன்பமருள் சாந்திமகான் இலக்கும் வாழ்வை
என்றென்றும் வாழச்செய் இதயத்தேவே!

"எனக்கு விடுதலை! நாட்டுக்கு விடுதலை! உலகுக்கு விடுதலை" என்று பாடிக்கொண்டே முழுக்குப் போட்டேன். ஆடையை உலர்த்திக் கட்டிக்கொண்டு தியானம் செய்தபிறகு புலவரிடம் என் வருங்காலத்தைப்பற்றிப் பேசினேன். புலவர் வாழ்த்தினர்.

"பாரத சக்தி பாடிய புலவரே
பூரணமான புகழ்பெற வாழ்வீர்
இறைவனைக் காணும் இன்பக் கவியே
நிறையிசை பெறுவீர் நீடுல கெங்குமே"

இரவெல்லாம் மனப்போராட்டம்: அடிமையுணர்ச்சி அந்தப் போராட்டத்தில் ஒழிந்தது. அருளுதயத்துடன் சுதந்திரமும் உதித்தது. ராஜினமா எழுத அமர்ந்தேன். ஒன்றும் தோன்றவில்லை. காட்டுப் புத்தூர் எனக்களித்த நன்மைகள் பல. நான் வேலையைவிடக் காரணம் என்னவென்றால், காந்திபேரில் பாரம் போடுவதா...அப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது நல்லவேளையாக நண்பர் சரித்திரப் புலவர் ஸ்ரீ ராமானுஜர் வந்தார். "பாரதியாரே ஒரு செய்தி? என்ன செய்தி? "நாம் இனி எக்ரிமெண்டு எழுதித் தரவேண்டுமாம். இன்ன சம்பளத்திற்கு இத்தனை வருஷம் பள்ளிக்கூடச் சட்டப்படி வேலை பார்ப்பேன். இடையே செல்வதானுல் மூன்று மாத நோட்டீஸ் தரவேண்டும், இன்றேல் சம்பளம் பிடித்தம். அரசியலில் பங்கெடுக்கக்கூடாது. இத்யாதி..."

ஒப்பந்தக் கூலியா ஆசிரியர்...? ஐயங்காரே, பள்ளிக்கூட அதிகாரிகள் சட்டம் போடுவது நியாயமே. மனச்சாட்சியைப் பின்பற்றுவது நமக்கு நியாயமே. 'அடிமை வேலையை உதறித் தள்ளு' என்று மனச்சாட்சி சொல்லுகிறது. இன்று ஆசிரியர் கூட்டத்தில் நான் பேசுகிறேன். பேசிமுடிந்ததும் ஜேபிலிருந்து ஒரு காகிதத் துண்டு வெளிவரும்" என்றேன்.

ஆசிரியர் கூட்டம் பனிரண்டு மணிக்கு நடந்தது. நான் வீரா வேசமாக முப்பது நிமிஷம் பேசினேன். "இத்தனைநாள் நான் ஆசிரியர் என்றிருந்தேன். இன்று தான் ஒப்பந்தக் கூலி என்றறிந்தேன். சம்பளம் அற்பம்; வேலை ஐந்தாறுமணி நேரம். மரியாதை பூஜ்யம். உரிமை சுன்னம். ஒற்றுமை இல்லை. ஒருவருக்கொருவர் ஒற்றர். மெகாலே வகுத்த கல்வி முறை இது. நமது வாலிபர்களை பேனுக் கூலிகளாக்கும் அன்னியர் கல்வி இது. இதில் தேசமணம் இல்லை. அடிமை நாற்றம் மூக்கைப் பிடிக்கவேண்டி யிருக்கிறது. நமது நாட்டின் அவதார புருஷன் காந்திமகான். அவரைப் பார்ப்பது குற்றம் என்று பிரம்படி கொடுக்கும் கல்வி, கல்வியா? நாடெல்லாம் 'விடுதலை' விடுதலை, என்று கதறும்போது, சிவாஜியை மலை எலி என்று கேலி செய்யும் பாடம் பாடமா? எங்கும் வறுமை தாண்டவமாடுகிறது. ஒரு தொழிலுக்கும் வகையில்லாமல், பட்டாவைத் தூக்கித்தரும் கல்வி கல்வியா? நாம் ரசாயண சாலையில் செய்யும் தீக்குச்சி விளக்கிலே காட்டினாலே பற்றிக்கொள்ளுகிறது. இந்தக் கையாலாகாத கல்வி யாருக்கு நன்மை? அடக்குமுறை யாட்சிக்கே நன்மை. ஆதலால் சுதந்தரம் வேண்டும். மனச்சாட்சிக்கு வஞ்சனையில்லாமல் வாழ உரிமை வேண்டும். தேசத்திற்கே நாம். நமக்கே கல்வி, கல்விக்கே கல்வி... என்ற நாள் வருமட்டும், ஆசிரியருக்கும் பெருமையில்லை. மாணவருக்கும் பெருமையில்லை. ஆசிரியத் தொழில் உலகில் முதல் மரியாதைக் குரியது. ஆசிரியனே தேசச் சிற்பி; சமுதாயத்தை உருவாக்கும் புலவன். அவனை இன்று அரைவயிற்றுப் பஞ்சையாக்கி யிருக்கிறது இந்த ஆங்கிலக் கல்விமுறை. நூறு ரூபா குறைந்த சம்பளம் வேண்டும். உயர்ந்தது ஐநூறு. ஆசிரியன் தேசபக்தியுடன் கல்வி புகட்ட உரிமையா யிருக்கவேண்டும். அப்படிப்பட்ட காலம் வரும்; நம்புங்கள் வந்தேமாதரம். ஆசிரியர் உரிமையைக்காக்க ஒரு ஆசிரியர் மகாநாடு கூடுவோம்.''

165. ஆசிரியர் மகாநாடு

என் பக்கம் ஒருவரே பேசினார். ஆனால் ராமானுஜர் ஆசிரியர் மகாநாடு கூட்டத் தீர்மானம் நிறைவேற்றினார். எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காரைத் தலைவராக்கி மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்தோம். ஜமீந்தார் சப்தரிஷி ரெட்டியார் ஜாகை உணவு வசதிகள் தந்தார். திருச்சி ஜில்லா ஆசிரியர் அனைவரும் வந்து மூன்று நாட்கள் எங்களுடன் இருந்தனர். ஐயங்காரும் நானும் பாய்ந்து பாய்ந்து தொண்டு செய்தோம். ஸ்ரீநிவாச ஐயங்கார் கம்பீரமாகப் பேசினார். தீர்மானங்கள் நிறைவேறின, நான் மூன்று தீர்மானங்கள் கொண்டுவந்தேன்: 1. தமிழர் வெளியீட்டு மன்றம் நிறுவி, ஆசிரியர் சபைசேர்த்து, நல்ல பாட புத்தகங்கள் வெளியிடுதல். ஆசிரியர் சங்கத்திற்கு பத்திரிகை நடத்தல். 2. ஆசிரியர் ஒப்பந்தம் கூடாது; சம்பளம் ஐம்பதுக்குக் குறையக்

கூடாது. 3. ஆசிரியர்கள் மேன்மேலும் படித்து உயர்ந்த பட்டம்பெற சர்க்கார் வழி செய்யவேண்டும்.

ஐயங்கார், ஆசிரியர் அரசியலில் கலக்கக்கூடாது என்று அழுத்தமாகச் சொன்னார். அது என் மண்டையில் கோடாலியால் அடித்தது போல் இருந்தது. மகாநாடு முடிந்ததும் அவர் பொதுக்கூட்டம் நடத்தி பொதுஜனங்களுக்கு அரசியலையும் காந்தியத்தையும்பற்றிப் பேசினார். நான் ஒரு தேசியகீதம் பாடினேன். தலைமை ஆசிரியர் மண்டையை ஆட்டிவிட்டார். இரவு ஸ்ரீநிவாச ஐயங்காரரிடம் எனது மனவுறுதியைப் பற்றிச் சொன்னேன், அவர் "உங்களுக்கு நல்ல வாக்கிருக்கிறதே; சுதேசமித்திரனில் இருந்து தேசப்பணி செய்யலாமே" என்றார். நா, பேனா இரண்டாலும் தேசசேவை செய்வதுடன், உடலாலும் செய்வேன் என்றேன். ஐயங்கார் என்னை என்றும் மறந்ததில்லை.

166. Freedom calls

இனிக் கதை சுருக்கந்தான். காந்தி யங் இந்தியாவில் ஒரு கட்டுரை எழுதினார். பிடரிச் சிலிர்ப்பு (Shaking the Mane) என்பது தலைப்பு. அதற்காக அவரைக் கைதுசெய்து விசாரிக்கிறார்கள். ஆறுண்டுகள் தீர்ப்பு. அன்று தலைமை ஆசிரியர் மேஜைமேல் ஒரு சிறு கடிதம் வைத்தேன். "ஒப்பந்தத்தில் கையெழுத்திடாதே மனமே... உரிமை அழைக்கிறது; உடை சுவர்களை...செல்.. (Agreement! Don't sign! Resign! Freedom calls! No more walls!)

சுந்தரமையர் மாலை ஐந்து மணிக்கு என்னை அழைத்தார்;

என்னங்காணும் இது ?

விடுதலை...

நான்—கோவாபரேஷனா...

இல்லை ஆப்பரேஷன்...என் மனப்புண்ணை அறுத்தெறிந்தேன். காந்தியம் பேசிக்கொண்டு, அடிமை வேலையில் இருப்பது மனச்சாட்சிக்கு விரோதம்.

என்ன ஜெயிலுக்குப் போவீரா ?

இல்லை ஜெயிலைவிட்டு வெளியேறுகிறேன்.

ஏதாவது மனஸ்தாபமா ?

ஒருக்காலும் இல்லை. தாங்கள் என்னை மிக்க அன்புடன் நடத்தினீர்கள். காட்டுப்புத்தூரே எனக்குப் புதுவாழ்வளித்தது. ஆதலால் தங்களையெல்லாம் நன்றியுடன் வணங்குகிறேன்.

அப்படியானால் இருமே இங்கேயே.

இங்கே வேலை ஆனது. இறைவன் வேறெங்கோ அழைக்கிறான். அவன் இச்சையை யார் தடுக்க முடியும்?

இதற்குள் ஆசிரியர்கள் கூடிப் பேசி, பள்ளிக்கூடம் மூடும் நாளில் எனக்குப் பிரிவுபசாரம் நடத்துவதாகத் தீர்மானித்தார்கள்.

167. மாணிக்கங்காள்!

நான், காந்தி எரவாடாச்சிறை புகுந்த நாள், கரூரில் உபவாச மிருந்தேன். நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அன்று தமது கவிதைகளை எனக்குப் படித்தார். எனது கவிதைகளையும் படித்துக் காட்டினேன். நண்பர் காந்தியின் பெருமைகளைப்பற்றிப் பேசியே அந்த நாளைக் கழித்தோம். கரூரிலிருந்து கட்டளைக்குவந்து காவேரியைத் தாண்டினேன். எனது மாணவர் சிலர் "எங்கள் ஊரிலே இருங்கள் ஐயா" என்று அழைத்துச் சென்றனர். நான் பிள்ளையார் புத்தூரில் பஜனை நடத்தினேன். தாயுமானார் பாடல் படித்து விளக்கினேன். சுற்றுக் கிராமங்களிலெல்லாம் காந்திய ஸன்மார்க்கம்பற்றிப் பேசினேன். சில கிராமங்களில் தேச விரோதிகள் தூற்றினர். அவர்களுடன் வாதாட நேர்ந்தது. மொத்தத்தில் தேசம் மடமையிலும், வறுமையிலும், அடிமை மனப்பான்மையிலும் அழுந்தியிருந்தது. என்னால் ஆன பணிகளைக் கர்மயோகமாகச் செய்ய முனைந்தேன்.

நான் வந்ததும் ஆசிரியர் மாணவர், ஊர்ப்பிரமுகர் எல்லோரும் கூடினர். தலைவர் தலைமைவகித்துப் புகழுரை கூறினார். "பாரதியாரை நான் கண்டதுமே, அவர் வெறும் ஆசிரியர் அன்று, ஒரு ஆசாரிய புருஷர் என்றறிந்தேன். அவர் கல்வியறிவு, கலை, யோகம், தூய வாழ்வு, எல்லாம் கண்டோம். அவர் தியாகி; இப்போது தேசசேவைக்குச் செல்கிறார். எங்கிருந்தாலும் அவருக்குக் கடவுள் நல்ல சிரேயசைத் தருவார்." என்பது அவர் பேச்சின் சுருக்கம். பிறகு ராமாநுஜர், சீதாராம ஐயர் முதலியோர் பேசினர். கோவிந்தசாமி பிள்ளை நீண்ட கவிமாலை சூட்டினார்; ஒரு கவிமட்டும் நினைவிருக்கிறது:

நற்றவம் புரிந்த நல்லோன் ஞானத்தின் வரம்புகண்டான்
உற்றவன் எவர்க்கும், இந்த உலகெலாம் உள்ளங்கொண்டோன்
பொற்றிரு மணியைப் போலப் புதுத்தமிழ் வாக்கினாலே
வெற்றிமா கவிதை செய்தான் பாரத சக்தி வீரன்...

மாணவர் ஒரு பதக்கம் தந்தனர். காந்தி—கஸ்தூரிபாய் விளங்கும் அழகான படம் ஒன்றும் தந்தனர். நான் எனது காட்டுப்புத்தூர் வாழ்விற்கு முடிவுரை கூறி விடை பெற்றுக்கொண்டேன். அதன் சுருக்கமாவது:

"தமிழன்னையின் மாணிக்கங்காள், உங்கள் நல்லுரைக்கு நன்றி. என் உள்ளம் சொல்லமுடியாத அன்பினால் நிரம்பி, உரை தடுமாறுகிறது. வாழ்க்கை எல்லையற்றது. இதுகாறும் நான்கு சுவற்றுள் இருந்தேன்; இனி எல்லையற்ற வாழ்வை மேற்கொண்டு செல்கிறேன். இதுகாறும் பொருட்பணி செய்தேன்; இனி அருட்பணிக்குச் செல்கிறேன்; இதுகாறும் உத்தியோகம் பண்ணினேன்; இப்போது தியாகத்திற்குத் தியாகம் தாவிச் செல்வேன். இந்த ஊரையும், உங்களையும் நான் என்றும் நினைப்பேன். ஏனெனில் இங்கேதான் என் வாழ்க்கை உருவானது; என் ஆயுட் காவியமான பாரதசக்தி உருவானது. நான் நீண்டகாலம் செய்த யோகமும் நிறைவேறியது. நான் இங்கே உபாத்தியாயரா யிருந்ததைவிட மாணவனாயிருந்ததே உண்மை. ஏனெனில் எனது சகோதர ஆசிரியரிடமிருந்து நான் கற்றவை மிகப் பல. ஸ்ரீ வெங்கட்டராமையர், ரங்கசாமி ஐயங்கார் இருவரும் எனக்கு ஸயன்ஸ் அறிவு நிரம்பச் செய்தனர். தலைவர் சுந்தரமையர் என் இலக்கியப் பசிக்கு உணவிந்தார். கோவிந்தசாமிப் புலவர் என் தமயனார் போலிருந்தார். இருவரும் தமிழின் அமுதில் திளைத்தோம். என் கவிக்கலைக்கு அவர் உறவு, சமய சஞ்சீவி போன்றது. இந்த அழகான ஊரில், இந்த அழகான உயர்பள்ளியை நிறுவி, அதில் நானும் தொண்டு செய்யும் வாய்ப்பைத் தந்த ஜமீந்தார் ஸப்தரிஷி ரெட்டியாரவர்களுக்கு எனது நன்றி. காட்டுப்புத்தூர் மகாஜனங்கள் அனைவரும் என்னிடம் காட்டிய அன்பை என் உள்ளத் துடிப்பாகக் கொண்டு செல்கிறேன். மாணவர் வருங்கால இந்தியர். இளங்கதிர் மணிகள்—அவர்களுக்கே என் வாழ்க்கை அர்ப்பணம். ஏனெனில் நான் செய்யும் தேசசேவை முதன்மையாக கல்விப்பணிதான். நானே என்றும் மாணவன்: நான் செய்வதும் மாணவர் சேவைதான். இளஞ்செல்வர்காள், உங்களுள் ஒரு காந்தி, திலகர், போஸ், ராமன், சிவாஜி, நியூடன், பாரடே உள்ளனர். உங்களுள் வீரனும், ஞானியும், விஞ்ஞானியும் தியாக தீரனும் உள்ளனர். உள்ளே ஆழ்ந்து பாருங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சக்தியின் அவதாரம். அந்தச் சக்தியைக் கல்வியெடுத்து உலகிற்குப் பயனாக்குவதே கல்வியாகும். அதற்குத் துணையாயிருப்பவனே ஆசிரியன். தன்னை, உலகை, கடவுளை, அறத்தை நலத்தை அறியத் தூண்டுவதே கல்விப்பயிற்சி. அதற்குச் சாதனமாயிருப்பதே படிப்பு, உடலுறுதி, மனவுறுதி, தெள்ளறிவு, கலையறிவு, விஞ்ஞானம், வீரப் பயிற்சி, தேகப்பயிற்சி எல்லாம் நீங்கள் இந்த வயதில் பெறவேண்டும். கல்விப் பருவத்தில் தூய பிரம்மசரியம் காத்து, சக்திகளை வளர்க்கவேண்டும். ஆண் இருபத்து நான்கு, பெண் பதினெட்டு வயதுவரையில் கல்விகற்று, சுத்த சுதந்திர சமத்துவ தீரராகவேண்டும். பிறகே இல்லறம் புகத்தகும். பள்ளிப் பருவத்தில் வாழ்க்கை உருவாகிறது. இந்த வாழ்க்கையில் சாதிமத பேதங்கள் கீழ்த்தரமான எண்ணங்கள், அதர்ம எழுச்சிகள், புகாதபடி பரிசுத்த

மாக வாழவேண்டும். தீண்டாமை பாராமை, பொறாமை, சிறுமை, தீமைகளை விலக்குங்கள். உண்மை, நன்மை, மெய்ம்மை, வாய்மை, தூய்மை, சுயநலமின்மை, சான்றாண்மை, பொறுமை, மனத்திண்மை, பொதுநலச்சீர்மை ஆகிய குணங்களை வளருங்கள். உலகம் கோயில், உயிர்ச் சமுதாயமே கடவுள், அருட்பணியே வழிபாடு—அதனால் வரும் ஆத்ம திருப்தியே மோட்சம்—என்ற சன்மார்க்கத்தைப் போற்றுங்கள். பெருமையுடன் தொண்டு செய்யுங்கள். உரிமையுடன் தொழில் செய்யுங்கள். எழுதப்படிக்க, பேச தாய்மொழி ஹிந்தி, ஆங்கிலம் இவை வேண்டும். காலத்திற்கேற்ற அறிவை மிகவும் வளர்க்கவேண்டும். தெய்வபக்தி செய்யவேண்டும்.

வறுமை ஒழிந்து வண்மை பொழிந்து
வாழ பாரதம்
சிறுமை ஒழிந்து மடமை யழிந்து
செழுமை சேரவே
மறுமைப் பயனை இம்மை பெறவே
வாய்மை வெல்கவே
பொறுமையாகத் தொண்டு செய்வோம்
புனித வீரர்காள்!

கண்மணிகாள், நமக்கு இன்று வழி காட்டுகிறார் மஹாத்மா காந்தி. அவர் பொதுநலமே உருவம்; சத்தியமே உயிரானவர். ஒவ்வொரு மூச்சையும் உலக சேவையாக்கும் உத்தமர். அவர் உண்மை பேசு, அன்பு செய், உழைத்துப் பிழை, நூற்றுடுத்து, பயிர்செய்துண்ணு. கள் விலக்கு, ஒற்றுமை பேணு என்கிறார், நீங்கள் காந்தி சொல்லும் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாவிட்டாலும், முடிந்ததைச் செய்யலாம். தன்னுதவியுடன் எளிய வாழ்வு வாழுங்கள். படித்த மாணவர் கிராமங்களுக்குச் சென்று, இதுகாறும் நான் இங்கே சாரணருடன் செய்த சேவையை நடத்துங்கள். கல்வியும் தொழிலும் சுகாதாரமும் பரப்புங்கள். உங்களுள் அபார சக்தியுள்ளது. ஆகாசத்தில் மின்சாரம் உள்ளது போல் உங்கள் உள்ளத்தில் தெய்வ சக்தி யுள்ளது. தியானம், பஜனை, ஜபம் தூயவாழ்வுகளால் அதைத் தூண்டி, ஆத்ம தீரர்களாக விளங்குங்கள். வந்தேமாதரம்! ஓம் சுத்தசக்தி! எந்தாய் வாழ்க.'

கற்கண்டு விநியோகத்துடன் கூட்டம் முடிந்தது.

பிறகு நெரூர் சதாசிவப் பிரம்மேந்திரர் திருநாளுக்குச் சென்று, வந்து, பிள்ளையார் புத்தூரில் பஜனைசெய்து, வடக்கே போகக் கிளம்பினேன். ஏதோ தடுத்தது. ஓடாதே நில் என்றது மனச்சாட்சி. ஒரு கடிதம் வந்தது. என்னருமை நண்பன் ஜி. சுந்தரம் அழைப்பு;

"நாம் இருவரும் சேர்ந்து தேசசேவை செய்ய இது சந்தர்ப்பம்; இங்கே நாங்கள் லட்ச ரூபா போட்டு தேசீய கலாசாலை நாட்டியிருக்கிறோம். மாதம் ஐம்பது ரூபா தருகிறோம். தாங்கள் அவசியம் வந்து இங்கே கல்விப்பணி செய்ய வேண்டும். அத்துடன் மகாத்மாஜீயின் ஆக்க வேலைகளும் தாராளமாகச் செய்யலாம். வருக."

தேவக்கோட்டையில் தேசியக் கலாசாலை நடப்பது முன்பே தெரியும். சிறிது நேரம் தியானித்து, மனச்சாட்சி சலோ, என்றதும் ஒப்புக் கொண்டேன்.

"அரிய நண்ப, நாம் இருவரும் கல்விப் பருவத்தில் நேசித்தோம்; கல்விப் பணியிலும் நேசிப்போம். வருகிறேன். பரதனும் ராமனும் போல நேசிப்போம். இரண்டு மாதம் ஓய்வு; நமது நாட்டைச் சுற்றிப் பார்த்து வருகிறேன். பள்ளிக்கூடத்தில் எனக்கு இடம் தயாரிக்கவும். நான் ஸயன்ஸ், ஆங்கிலம், பூகோளம், தமிழ் இவற்றுடன் சாரணப் பயிற்சியும் தருவேன். அன்பு நன்றி."

நான் திருப்பதியாத்திரை சென்றேன். காளத்தியில் கண்ணப்பர் மலையில் தியானித்தேன். பிறகு வடக்கே காசிமட்டும் சென்று நாட்டைப் பார்த்தேன். பயங்கரமான அடக்கு முறை. பஞ்சம், பட்டினி, சாதி மதக் கலகம், அரசியல் கட்சிகள், பண்டா குண்டா—பனியா—அட்டுழியங்கள் கண்டேன். மஹாத்மா சிறை சென்றதுமே காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. சுயநல வாதிகளின் சூதாட்டங்களைக் கண்டேன். அடக்கமாக ஓரிடம் தங்கி, கலையும் கதருமாயிருப்பதே நலம் என்று, தெற்கே சிவகங்கைக்கு வந்தேன். தாயாரைப் பார்த்தேன். எனது காவியங்களைப் படித்துக் காட்டி அவள் ஆசியைப் பெற்றேன். மறுநாளே சங்கரையர் வந்தார். அவருடன் தேவகோட்டை சென்று வேலை ஒப்புக்கொண்டேன். வாருங்கள் தேவகோட்டையில் என் ஸயன்ஸ் ஹாலுக்கு.

கஉ. ஒத்திகை

168. தேசியக்கலாசாலை

என்வாழ்வின் ஓவியம் எனக்குத் தெரியும்; நான் நடிக்கவேண்டிய பாகமும் தெரியும்: அதற்கு ஒத்திகை தேவகோட்டையில் நடந்தது. அங்கே என்னை நான் வருங்காலத்திற்குத் தயாரித்துக் கொண்டேன். அதற்கேற்ற சௌகரியங்களை யெல்லாம் அளித்த நண்பர் ஜி. சுந்தரத்தை என்றும் நான் மறக்கமுடியாது.

தனவணிகர் நீண்டகாலமாக பர்மா மலயா இலங்கைகளில் லேவாதேவியும், சரக்கு வியாபாரமும் நடத்திப் பொருள் குவித்தார்கள்.

ஊதியத்தில் மகமைப்பணம் எடுத்து வைத்து தான தருமம் செய்தார்கள். கோயில், சத்திரம், பாடசாலை, திருமடம் பசுமடம் கட்டி, பூரிதட்சிணைதானம் என்று கொடுத்து வந்த தனவணிகருக்குத் திடீரென்று நாட்டுக்கேற்ற கல்வி வளர்ச்சியில் கருத்துச் சென்றது. அதன் பயனாகவே சிதம்பரம், கடியாபட்டி, காரைக்குடி நகர்களில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. தேவகோட்டையில் நீண்ட காலம் தக்க பள்ளிக்கூடம் இல்லை. தந்திபடிக்கத் தெரிந்தால் "நம்ப மவன் இங்கிலீசு துரைகணக்கட்டா பொளக்கிருங்கிறேன்." என்பர். அவன் Iimmediately என்பதை இம்மிடி இட்டலி என்று படித்தாலும் மகிழ்வர். இப்படி இருந்த நிலைமாறச் சில செல்வர் ஊர்ப்பிள்ளைக்கு காலத்திற்கேற்ற நல்ல படிப்பு வேண்டும், என்று உணர்ந்தார்கள். அவர்களை வக்கீல் சுந்தரமையரும் பெரிய மைனரும் ஊக்கினர். சமயசஞ்சீவியாக ஜி. சுந்தரம் வந்து சேர்ந்தார். தேச்சேவையிற் புகுந்தவர் வித்யாசேவையில் குதித்தார். 1921-ல் இவர்கள் கூடி ஒரு தேசிய கலாசாலை நாட்டினர். புதூரில் முன்சிபு கோர்ட்டுக்குத் தெற்கே விக்டோரியா எட்வேடு வாசகலாசாலையிருந்தது. அதில் நான் முன்பு பத்திரிகை படித்ததுண்டு. அந்தக் கட்டிடத்தையும் தேவகோட்டை அள. அருவுக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தையும் பள்ளிக்கூடத்திற்கென்று அமர்த்தினார்கள். சிலர் பள்ளிக்கூடத்திற்குவேண்டிய சாமான்களைத் தந்தனர். பள்ளிக்கூடத்தைச் சுற்றிலும் பெரிய செம்மண் பொட்டல் இருந்தது காற்றோட்டமான இடம், எனக்கு நிம்மதி யளித்தது.

சுந்தரமையர் புத்தகசாலையின் ஒருபகுதி முழுதும் எனக்கென்றே அளித்தார். அதில் நான் ஸயன்ஸ் பூகோளம் முதலிய வகுப்புகளை நடத்திக்கொண்டு தவம்புரிந்தேன். எனக்கு அடுத்த ஹாலில் ஸப்கோர்ட்டு இருந்தது, அங்கே டாடென்ஹாம் கொஞ்சநாளும் பிறகு கே. ஜீ, சேஷையரும் நீதிபதிகளாயிருந்தனர். பகல் பத்தரை மணி முதல் ஐந்துமணி வரையில், யுவரானர் பல்லவியுடன் வக்கீல்களின் வாய்ச்சிலம்பங்களைக் கேட்பேன். மதுரை டீஸி. ஸ்ரீ. ராவ் சாகெப் ஸ்ரீநிவாசராவ், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், முதலிய பல பிரபல வக்கீல்களின் ஆர்குமெட்டுகளைக் கேட்டேன். அவர்கள் ஒரு சிறு பாயிண்டை வளைத்துவளைத்துத் தொண்டை வற்றுமட்டும். பேசும் திறமையைப் பார்த்தேன். பொய்யுடை மெய்யரையும், மெய்யுடைப் பொய்யரையும் பார்த்தேன். உள்ளூர் வக்கீல்களான முகுந்த ராஜர், சிவசுப்பிரமணியர், நாகசாமி ஐயர், ஏ. ரங்கசாமி ஐயங்கார் முதலியோர் பேசுவதும் என் அறைக்குக் கேட்டும். உலகவிவகாரங்களை அறிய இந்தச் சட்டமாரி பயனானது. பள்ளிச்சுவர் தாண்டினால் முன்சிப் கோர்ட்டு. முன்சிப் ஸ்ரீ. ரங்கசாமி ஐயங்கார் பிள்ளை பார்த்தசாரதி எனது மாணவன். ஐயங்கார் புலவர், பக்தர், சாது. அவர் வீட்டில் அடிக்கடி கதை பிரசங்கம் நடக்கும். என்னையும் அழைப்பார். அவர் வீடு

பக்தவிலாஸமாக விளங்கியது. ஸப்ஜட்ஜ சேஷையர் நல்ல தமிழாராய்ச்சியுள்ளவர். நாங்கள் சிலப்பதிகார ஆராய்ச்சியில் இறங்கினால் பொழுது போவதே தெரியாது. அவர் மகள் என்னிடமே படித்தாள்.

என் அறை போதிய விசாலமுடையது. இரண்டு பீரோக்களில் ஸயன்ஸ் சாமான்களையும் மற்றொன்றில் பூகோளச்சாமான்களுடன் என் புத்தகங்களையும் வைத்தேன். கதவை அடைத்துக்கொண்டு நாளெல்லாம் புதிய நூல்கள் எழுதுவது. பாரதசக்தியை நகாசுசெய்து நல்ல பிரதி யெடுப்பது பாடல்கள் எழுதுவது, தியானிப்பது. மணியடித்தபோது மாணவரை உள்ளே அழைத்துப் பாடம் சொல்வது—இவையே எனது வேலை. மாலை நேரம் சாரணப்பயிற்சி தந்தேன். சில மாணவர் என்னுடனேயே இருந்தனர். அவர்கள் என் உடலைக் கவனித்தனர். முதலில் நான் ஆசிரியர் சங்கரையருடன் பூமிநாதன் வீட்டில் சமைத்துண்டேன். சாதம் பருப்பு ஊறுகாய் மோர் இவையே உணவு. பிறகு ஸயன்ஸ் ஹாலிலேயே தங்கி ஊறப்போட்ட கொத்துக்கடலை பழம் பால் மூன்றும் உண்டேன். பூமிநாதன் தாயார் அறுபது வயதுக்கிழவி; எனக்குப்பால் கொண்டு வந்து ஜன்னலில் வைத்துச் செல்வாள். தடுத்தாலும் கேட்கமாட்டாள். சாப்பாட்டிற்கென்று நேரம் இல்லை. பசித்தபோது படித்துக்கொண்டே இயற்கையுணவைக் கொள்வேன். சிலசமயம் எனது மாணவர் வைத்தி ராகவன் வரதன் முதலியோர் கோவில் பிரசாதம் வாங்கிவருவார்கள்; வற்புறுத்தி ஊட்டுவார்கள். இப்படி என் உடலை நண்பரிடம் ஒப்பித்து என் உயிர் பலசாதனங்களால் தன்னைத் தயாரித்துக் கொண்டது.

169. மூச்செல்லாம் கலை

தினம் நான் ஆறு மணி நேரமே பேசுவது, மற்றநேரங்களில் மௌனமே. சனி ஞாயிறு விடுமுறைகளில் நாள் முழுதும் மௌனமாயிருந்து, சுத்தசாதனமும் இலக்கிய சிருஷ்டியும் நடக்கும். உணவு என்னைத்தேடிவரும். நான் அதை நாடிச் சென்றதில்லை. நான் கடை சந்தை என்று அலைந்ததேயில்லை.

காலை மூன்று மணிக்கே எழுந்து, என் ஜாகை மாடியில் அகண்டாகாசத்தின் கீழ் நிம்மதியாக தியானத்தில் ஆழ்ந்திருப்பேன். சில உயர்ந்த எண்ணங்கள் உதிக்கும், பாட்டுதிக்கும். அவற்றை எழுதி வைப்பேன். பிறகு பள்ளிக்கிணற்றிலேயே குளித்து, ஆடை தோய்த்து உலர்த்தி அணிந்து. பாடக்குறிப்புகளை எழுதுவேன். ஸயன்ஸ், பூகோளம், தமிழ், கணக்கு ஆங்கிலம், இவை நான் சொல்லித்தந்தவை. முன்பே பாடமுறை வகுத்திருந்தால் என் வேலை எளிதானது. காட்டுப்புத்தூர் பாடமே இங்கும் சொல்லித் தந்தேன். அங்கே நான் நினைத்த தமிழை இங்கேதான் சொல்லித்தர வாய்த்தது. எளியநடையில் இனிய கதைகள் சொல்லி, அவற்றின் மூலம் இலக்கண

இலக்கியப்பாடங்களைக் கற்பித்தேன். அப்பாடங்கள் இனிய தமிழ் இலக்கணத்தில் உள்ளன. அரிய கருத்துள்ள பாடல்களைத்தேர்ந்து போர்டில் எழுதிப் பண்ணுடன் பாடுவென். மாணவரைப் படிக்கச் செய்வேன். பிறகு கதைப்போக்கில் பொருள் விளக்கி, கடினபதங்களைத் தனியே எழுதி, வாக்கியங்களில் அமைத்துப் பழக்குவேன். படம் போட்டு விளக்குவேன். பாடம் முடிவதற்குள் மாணவர் அந்தப் பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பித்துவிடுவர். வீட்டில் உருத் தள்ளும் வேதனையிராது. தமிழ்ச் சுவை யேறுவதற்காகவே கம்பன், வில்லி, சேக்கிழார், பரஞ்சோதி, வள்ளுவர், புகழேந்தி, வாக்குகளையும் பாரதசக்தியையும் படித்துக்காட்டுவேன். படிக்கிறபாணியில் மாணவர் பொருள் அறிந்து கருத்தைச் சொல்லுவர். பாரதக் கதைகளை விரம்பச் சொல்லுவேன். பாரதநாட்டுப் பெரியார் கதைகளைச்சொல்வேன். மாணவர் கருத்தூன்றிக் கேட்பர். வகுப்பில் ஒரு சத்தமிராது. ஆனால் ஆறுமாதங்களுக்குப்பிறகு, பெரியமைனர் ராமநாதஞ்செட்டியார், சைவமதமும் தமிழும் சொல்லித்தர, யாழ்ப்பாணம் ராமனுதப்புலவரை நியமித்தார். அவர் எனது நண்பரானர். ஆனல் மாணவருக்கும் அவருக்கும் ஏழாம் பொருத்தமா யிருந்தது. அவர் "கற்றுங்கெரியோம்பி" இழுக்கும் போதே, மாணவர் கலாட்டா தொடங்கிவிடுவர். ஆறுமுகநாவலர் சைவவினாவிடையும் பாலபாடமும் படிப்பித்தார் புலவர். அவை அரிய நூல்களே. ஆனல் தற்காலப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டிய முறைவேறு. சைவவகுப்பில் "ஐயா சிவபெருமானுக்கு எத்தனை பிள்ளைகள்? எத்தனை பேரப்பிள்ளைகள்? எப்படிப் பிறந்தார்கள்? சௌசம் என்ருல் என்ன? என்றெல்லாம் கேட்டுத் தொல்லைசெய்வர். புலவருக்குக் கோபம் வந்தால், இலக்கணமாகக் கூச்சலிடுவார். மாணவர் அட்டகாசச்சிரிப்புடன் ரகளை செய்வர். இருபக்கங்களிலும் கைகலப்பு நடக்கும். ஒருநாள் அவர் தாவடத்தில் ஒரு பையன் கைபோட்டு விட்டான். நான் தடுத்து அமைதியாக்கினேன். ஆனல் ராமநாதப்புலவர், மனதில் வஞ்சனையற்றவர். மாலை மணியடித்ததும் அவர் என்னிடம் வருவார். இருவரும் திருமுறை நூல்களை வரிசையாகப்படிப்பதுண்டு. திருமந்திரமும் பெரியபுராணமும் சிவஞானபோதமும் சேர்ந்து படித்தோம். உள்ளூர் சைவ சித்தாந்தக் கழகத்தலைவர், பொ. முத்தையா முதலியாருடனும் சித்தாந்த நூல்களை நான் ஆராய்வதுண்டு. இரவில் சிலமாதங்கள் எனது ஆசிரியத்தோழர் மகாதேவர் வீட்டுத்திண்ணையில், கம்பராமாயணம் படித்தேன். உள்ளூரில் மாணிக்கவாசகர் சரித்திரமும் அப்பர் சரித்திமுரம், விவேகானந்த சங்கத்தில் சன்மார்க்கப் பிரசங்கமும் நடத்தினேன். அண்ணுமலை, அருணுசலம், சொக்கலிங்கம் முதலியோர் இவற்றிற்கு ஆக்கமளித்தனர். இவ்வாறு எனது தமிழ் வளர்ந்தது. ஆரியப்புலவர் ஸ்ரீ நாகரத்னமையருடன் பர்த்ருஹரி, ஸௌந்தர்ய லஹரி, சிவானந்தலஹரி முதலிய நன்னூல்களைப்படித்தேன். ஸ்ரீ சுந்த

ரமையர் இதைப்படிப்பார். நான் அதை ஆழ்ந்து கற்றேன். தமிழிலும் மொழி பெயர்த்தேன். பல புலவர்களும் இசைவாணரும், துறவிகளும் வருவார்கள். பயனுள்ள பேச்சும் சாதனமும் நடக்கும். ஒவ்வொரு மூச்சையும் கலையாக்கி, கருத்தாக்கி, உருவாக்கினேன்.

ஸயன்ஸ் பூகோளம் இரண்டும் எழுதத்தொடங்கினேன். சரியான கருவிகளும் இருந்ததால், சுதந்தரமாகச் சோதனை செய்து பௌதிக ரசாயன தாவர பிராணி நூல்களையும், புதிய தரை நூலையும் எழுதினேன். பாடம் முழுதும் எழுதியே மாணவருக்குத் தினம் கற்பிக்கும் நியமம் வைத்துக்கொண்டதால், அது இலக்கியப் பணியாகவும் ஆனது. பூகோளப்பாடத்திற்கு அழகான உலகப்படங்கள் போட்டு, வர்ணம் தீட்டிச் சுவரில் மாட்டினேன். இயற்கை அமைப்பைக் காட்டி பூகோளம் போதித்தேன். மாலை அரைமணி நேரம் சாரணப் பயிற்சி தந்து, சுமார் பனிரண்டு மாணவரைப் பொதுநல வீரராகப்பயிற்றினேன். இவர்கள் பெரும்பாலும் என்னுடன் இருந்தார்கள். இவருள் வைத்தியநாதன்,ராகவன், வரதன், ராஜகோபாலன், மீனாட்சிசுந்தரம், மகாலிங்கம், சேஷாத்ரி, ராமாநுஜம் முதலியோர் நல்ல சிப்பாய்கள். அந்தக்காலமெல்லாம் நான் தியானித்தாலும் எழுதினாலும் நூலாராய்ந்தாலும் அப்படியே லயித்துப்போவேன். சாப்பாட்டு நினைப்பே யிராது. வைத்திசேனை தடதடவென்று கதவுதட்டி, ஜன்னல் ஏறிக்குதித்தாவது உள்ளே வந்து உணவுதரும். சிலசமயம் இரவு பத்துமணிக்குக்கூட இவர்கள் வருவார்கள். பள்ளிக்கூடத்திலேயே படுத்து, காலையில் என்னுடன் குளித்துச் செல்வார்கள்.

170. அன்பு வேலை

சித்தமல்லி வைத்திநாதன் மிக அருமையான பையன், நான் சொல்வதெல்லாம் அவன் எழுதி வந்தான். அதற்காக ஒரு ரீம் காகிதம் வாங்கி, புத்தகங்கள் தைத்துக் கொண்டு வந்து விட்டான். ஒருநாள் நான் யோகசித்தி வகுப்பில்,தேங்காய்ப் பாலும் கோதுமையும் சேர்த்து ஒரு நல்ல உணவு தயாரிப்பதை விளக்கினேன். மறுநாளே வைத்திநாதன் ஒரு பெரிய டிபன் செட்டில் ஹல்வாப்பண்ணிக் கொண்டு வந்து, இரவு பத்து மணிக்குக் கதவு தட்டினான். நான் வாய் அசைத்தால் போதும், உடனே, ஒரே பாய்ச்சலில் காரியத்தை முடிப்பான் இந்தப் பையன். அவன் என் குழந்தை போல் வளர்ந்தான். அவனிடமே எனது கையெழுத்துப் பிரதிகளையும் சாமான்களையும் நம்பிக்கொடுப்பது வழக்கம். 1926-ம் ஆண்டு வரையில் நான் எழுதிய ஏராளமான நூல்களும், எனக்குக் கிடைத்த பரிசுகளும் புத்தகங்களும், இவனிடமே அடைக்கலம் புகுந்தன. நான் எங்கே சென்றாலும் அங்கே வருவான் வைத்திநாதன். இப்படி உயிராயிருந்தபிள்ளை 1931-ம் ஆண்டு ஜன்னி கண்டு காலமானான். ஆனால் அவன் மீண்டும் வருவான். இராகவன்,

வரதன், வைத்தியம் ஸ்ரீநிவாசையங்கார் புதல்வர், காரியத்திறமை மிக்கவர். இந்த மாணவர்களுக்கு நான் யோகசித்தி நடத்திவந்தேன். சுத்தன்ம ரகசியங்களைச் சொன்னேன். இவர்களைக் கொண்டு நான செய்த பொதுநலப்பணிகள் பலவாகும். எல்லாரும் அனுமார் மயமே. நான் சொன்னது தவிர சொல்லாததையும் செய்வார்கள். ஒருநாள் நான்கிணற்றில் நீர் இறைத்து ஆடை துவைத்தேன். சடக்கென்று பின்னுலிருந்து யாரோ ஆடையைப்பறித்தார்—வைத்தியும் ராகவனுமே. "ஸார் நீங்கள் வேட்டி துவைக்கலாமா." "அது எங்கள் வேலை" என்று துவைத்தனர். "என் கைக்கு வேலையென்ன?" என்று கேட்டேன். "வகுப்பில் நீங்கள் சொன்னபடி நாங்கள் கேட்போம். வெளியே வந்தால் நாங்கள் சொன்னபடியே தாங்கள் செய்யவேண்டும்" என்ருன் வைத்தி.

நான் குளிக்கவேண்டியது தான்; ராகவன் சடக்கென்று என் ஆடையைப் பறித்து வெள்ளையன் ஊருணிக்குப் போய்த் துவைத்து உலர்த்தி வருவான். ஒருநாள் எனக்கு ஒரே ஆடைதான் இருந்தது, கதராடை; அதை ராகவன் பறித்துக் கொண்டு போய் விட்டான். அவன் வர நாழியானது; பள்ளிக்கூட மணியடிக்கப் போகிறது. வகுப்பு நடக்க வேண்டும்; வைத்தி குறுக்கே ஓடிச் சென்று கடையில் கதர் வாங்கி வந்தான். அதற்குப் பணம் வாங்கமாட்டேன் என்ருன். நான் பள்ளிக்கூடச் சம்பளமாக அதைச் செலுத்தி விட்டேன். இவர்களின் அன்புத் தொல்லைக்காகவே நான் இரவில் ஆடை துவைத்து உலர்த்தி வந்தேன். மறுநாள் எல்லாரும் ஊருணிக்குக் குளிக்கச் சென்ருேம்; நான் வைத்தியாடையை எடுத்துத் துவைத்து உலர்த்தினேன். அதைக் கண்டு அவன் பதறிப்போனுன். "என் வேட்டியைத் தொட்டால், உன் வேட்டியை நான் துவைப்பேன், அவரவர் ஆடையை அவரவர் துவைத்தணிவதே நல்லது" என்றேன். அன்று முதல் நான் தடுத்ததைச் செய்யாமல், விரும்பியதை மட்டும் செய்தான் அன்பன்.

ஒருநாள் குளித்தபோது கிணற்றில் வைத்தியின் டிபன் செட் விழுந்து விட்டது. நான் வாளியைப் போட்டு அதை மெல்ல இழுத்தேன். பாத்திரம் மேலே வந்து விட்டது. வைத்தி "சுவாமிகள் மாஜிக் பண்ணித்தான் பாத்திரத்தை எடுத்தார். பார் இதையும் எடுப்பார்" என்று தன் வேட்டியைக் கிணற்றில் எறிந்தான். நான் தடுத்தேன். அதன் பலனுகச்சட்டையும் கழற்றிக்கிணற்றில் எறிந்தான். பிறகு கோவணத்தைக் கட்டிக் கொண்டான். "இனி வீட்டுக்குப் போக மாட்டேன். உங்களிடமே இருப்பேன்" என்று பிடிவாதம் செய்தான்' நான் பாதளக்கரண்டி போட்டுத் துணிகளை மேலே இழுத்துத் துவைத்து உலர்த்திக் கொடுத்தேன். வைத்தி விசியெறிந்து "கோவணமே போதும்" என்று என் அறையில் இரவு ஒன்பது மணி வரையில் உட்கார்ந்து விட்டான். பிறகு நான் அவனைச் செந்துக்காய்த் தூக்கி,

சிலம்பணித்தெரு முனையில் கொண்டு போய் விட்டு ஆடையும் உடுத்தி "போ" வீட்டுக்கு, என்றேன். நான் திரும்பி வந்து தியானித்தேன். வைத்தி பனிரண்டு மணிக்கு ஓடிவந்து கதவைத் தட்டினான்; திறந்து வினவினேன். "என்னமோ செய்கிறது. செத்துபோவேன் போலிருக்கிறது. அதற்குமுன் நான் யோகியாகிக் கடவுளைக் காண வேண்டும்" என்று அழுதான். அன்றுமுதல் அவனுக்கு மந்திரஜபமும் கேசரிமுத்திரையும் சரப்ராணாயாமமும் பழக்கினேன்: ஆனால் அவன் ஆறுண்டுகளே இருப்பான் என்பதை அறிந்தேன்.

ஒருநாள் "உளுத்தவடை நல்லது" என்றேன். கொண்டு வந்து விட்டான் இருபது வடைகள். நான் ஒன்றே பிட்டுச்சாப்பிட்டேன். "அத்தனையும் சாப்பிடாவிட்டால் வீட்டுக்குப் போகமாட்டேன்" என்று பிடிவாதம் செய்தான், "வயிறில்லை" என்றேன். "சாப்பிடத் தெரியாத வாத்தியார் என்ன பயன்" என்று கிண்டல் பண்ணினான். நல்லவேளையாக நண்பர் வந்தனர். பஜனை பண்ணி அத்தனையும் விநியோகம் செய்தேன். இப்படி அன்பு வேலைகள் பலவுண்டு.

171. சாரணர் நடை முறை

சாரணருக்கெல்லாம் நான் கதரிலேயே உடுப்பும் முண்டாசும் தயாரித்தளித்தேன். எனது சுதந்தர சேனை நீலச்சட்டையும் பச்சை முண்டாசும் கட்டியது. கையில் பாணத்தடி, சிலம்பம் வீசவும் பழக்க முண்டு. புதுப்புது சாரண விளையாட்டுகள் நடக்கும். வாரம் ஒருதரம் சுற்றியுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று வருவோம். ஆறுவயல், அரியக்குடி, காரைக்குடி, கல்லங்குடி, சிறுவயல், அனுமந்தக்குடி, கண்ட தேவி முதலிய ஊர்களில் முகாம் போடுவோம். சட்டிகளில் சமையல் செய்து எல்லாரும் உடனுண்ணுவோம். சாதிமத பேதத்தை மாணவர் ஒழிக்கச் செய்தேன். பூமிநாதன் 'கண்ணப்பன்' அழகப்பன் முதலிய தனவணிக மாணவர் என்னிடம் ஒட்டுப்பற்றுயிருந்தனர். கோயில் அல்லது தோப்புகளில் நாங்கள் முகாம்போடுவோம்; துணிகளும் கழிகளும் கொண்டு கூடாரங்கள் அமைப்போம். சுற்றத்தைச் சுத்தமாகக் கூட்டுவோம். ஊரில் நல்லவர்களைக் கண்டு பேசி, சட்டி பானை பாத்திரம் பண்டம் வாங்கி வருவோம். குளித்து நல்லாடை யணிந்து கடவுள் வணக்கம் செய்து, சமையலில் புகுவோம். ஒருவன்மாற்றி ஒருவன் யோகசித்தி (அறநூல்) படிப்பான்; எல்லாரும் கூடமுறை வைத்துக்கொண்டே காரியம் பார்ப்போம், மனம் வேறிடம் செல்லாது; மனம் உயர்ந்த எண்ணங்களிலேயே செல்லும். ராகவன், வரதன் மீனுக்ஷிசுந்தரம் மூவரும் நளபாகமாகச் சமைப்பார்கள். எல்லாரும் பஜனை பிரார்த்தனை செய்த பிறகு, வட்டமாக இலைபோட்டுப் பறிமாறிக்கொண்டு சேர்ந்துண்போம். சாப்பிட்ட பிறகு சிறிது உல்லாசமாகப்பாடியாடி விகடங்கள் நடத்திவிட்டு, இளைப்பாறிய

பின்பு, ஊரைச்சுற்றிப் பார்ப்போம். ஏழைகள் நிலைமை, நாட்டு நிலைமை, கைத்தொழில் வளமை இவற்றைக் காண்போம். கிராமத் தெருக்களைச் சுத்தம் செய்வோம். அவர்களுக்குச் சுகாதாரம் சொல்லுவோம். எழுத்தறிவு புகட்டுவோம். நாட்டு நடப்புகளைச் சொல்லித் தேசாபிமானம் புகட்டுவோம். நல்ல கைத்தொழில்களைக் கண்டு பயன் பெறுவோம். பூகோளம், சரித்திரம், இலக்கியம் ஆகிய பாடங்களும் நடக்கும். எல்லாம் மாணவர் குறிப்புகளிற் பதிவாகும். மாலை ஆறு மணிக்கெல்லாம் ஊர் திரும்புவோம். இக்காலங்களில் பல விநோதமான சம்பவங்கள் நடந்தன. இரண்டொன்றை இங்கே குறிக்கிறேன்.

172. நகையும் பகையும்

எனது தனவணிக மாணவர் சிலர் பொன்னணிகள் சூடிப் பட்டுக் கரைகட்டி டாம்பிகமாக வருவர். பெரிய மைனர் பிள்ளைகளான நாராயணன், கண்ணப்பன், ஜமீந்தார் வீட்டு சோமநாதன், திருமேனிநாதன், வீரப்பன், மாணிக்கவாசகன், ஞானசப்பந்தன் ஆகிய அனைவரும் தங்கமான பிள்ளைகள், புத்திசாலிகள், ஒருநாள் சிறுவயலில் முகாம் போட்டோம். முதலில் கழிப்பயிற்சி, கொடிப்பயிற்சி கயிற்றுப்பயிற்சி கபாத்துக்கள் நடத்திப்பிறகு, கழிகளைக்கோபுரம் போல் வைத்து ஆடைகளைப்பரப்பிக் கூடாரம் போட்டுக் கொண்டோம், சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். தடதடவென்று பூட்ஸ் சத்தம்; போலிஸ்காரர் ஓடினர். நாங்களும் ஓடிச்சென்று பார்த்தோம். ஒருவீட்டில் திருடர் புகுந்து கொள்ளையடித்து ஓடினர். அணிமணிகள் கொள்ளைபோயின; ஒரு பையன் அழுதான். அவனை ஒரு குமரி சமாதானம் செய்துகொண்டிருந்தாள். கேட்டதில் பையன் அவள் கணவன் என்றறிந்து வியந்தேன். இந்தக்காட்சி ஒரு பெரிய சீர்திருத்தமாக மலர்ந்தது. மாணவர் முகாமுக்கு வந்ததும் பேசினேன்: "அன்புமணிகாள், நகை பகையாய் விளைகிறது. பாருங்கள், தங்கமும் மணியும் அந்த வீட்டிற்குத் திருடரை ஏவின. ஆளுக்கே மோசம் வந்து விட்டது. ஒரேநாளில் ஐயாயிரம் ரூபா நகை களவு போனது. இந்தப்பணத்தைக்கொண்டு ராட்டை வாங்கி எளியவர்களுக்குத்தந்து நூற்கச்சொல்லித் தறிபோட்டால்,எத்தனையோ கைகள் உழைக்குமே. அல்லது நல்ல நூல்கள் அச்சிட்டால் அறிவு வளருமே. நீங்கள் இன்றுமுதல் நகை போடக்கூடாது. அதனால் ஆபத்து, பண நட்டம்; நகை பழங்கால அநாகரிகம். கடுக்கன் போடாவிட்டால் காது கேளாதா? காப்பில்லா விட்டால் கை உழைக்காதா? நகை போட்டவர்கள் 'நாளையேகழிற்றி வைத்து வருக' என்றேன். அப்படியே செய்தனர். கண்ணப்பனும் பூமிநாதனும் மறுநாளே நகை விலக்குச் செய்தனர்.

மற்றொரு சீர்திருத்தம்; "இளமணம் கூடாது: பெரிய பெண்களை முறை தவறும் என்று சிறு பையன்களுக்குக் கட்டினால் என் பையன்?

அவள் இவனை மடியில் வைத்துத் தாலாட்டத்தான் முடியும். இதே மாதிரி இளம்பெண்களையும் முதியோருக்குத்தரக்கூடாது. நீங்க ளெல்லாம் நன்ருகப் படித்து, ஒரு தொழிலில் ஊன்றிக்கொண்ட பிறகு உங்களைவிட ஐந்தாண்டுகள் இளைய கன்னியரை மணம் புரிந்து இல்லறம் நடத்தவேண்டும்.'' என்றேன். இரண்டொருவருக்குத் தைமாதம் முகூர்த்தம் வைக்க விருந்தது. அப்புச்சியிடம், கலியாணம் வேண்டாம் என்று மறுத்தனர். பிரமசரியத்தைப்பற்றி மாணவருக்கு உபதேசித்தேன். அது நல்ல பயனைத் தந்தது,

173. முரடன் இளகினுன்

ஒரு சமயம் அனுமந்தக் குடியில் முகாம் போட்டோம். அவ்வூர் ஜைனர் எங்களை உபசரித்தார். ஜைனர் எனக்கு நல்ல நண்பராயினர். நான் ஜீவக சிந்தாமணி படித்தேன். அவர்களிடம் மகா புராணம் கேட்டேன். அவர்களும் எங்களுடன் உண்டனர். ஜைன மந்திரத்தில் எல்லாரையும் கூட்டி, நான் அஹிம்ஸா தர்மத்தையும் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தையும்பற்றிப் பேசினேன். அப்படியே மஹாவீர தீர்த்தங்கரர் வரலாறும் சொன்னேன். ஒரு பையன்மட்டும் ''காந்தி வழி பலிக்குமா?'' என்று கேட்டான். நான் ''நானாசாகெபின் வாளும், திலகர் பேச்சும் நமக்குச் சுதந்தரம் தரவில்லை. மகாத்மாவின் சாந்தச் செயலே சுதந்தரம் தரப்போகிறது'' என்றேன். அந்த ஊரில் கதர்ப் பிரசாரம் செய்து வரும்வழியில் ஒரு சம்பவம் நடந்தது. பரம ஏழை வைக்கோல் சுமந்து வந்தான். எதிரே ஒரு ராவுத்தர் வண்டி ஓட்டி வந்தார். திடீரென்று ''இறக்கு கட்டை'' என்ருர். பாதி வைக்கோலைப் பறித்து வண்டியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். ஏழை அலறினுன். ராவுத்தர் வைது மிரட்டினுர். நான் வண்டியை மறித்து, ''ராவுத்தரே! இது ஹராம்...ஏழைகளுக்கு இரங்குவதே குரான் கட்டளை; அந்த மனிதன் இந்த வைக்கோலை விற்றல்லவா பிழைக்க வேண்டும்'' என்று மன்ருடினேன். ராவுத்தர் '' போ போ பார்ப்பான்'' என்று வண்டியை ஓட்டினுன். நான் ரோட்டில் குறுக்கே படுத்து ''வண்டியை என்மேல் ஏற்று. நான் செத்தாலும் நீ போகவிடமாட்டேன்.'' என்று பிடிவாதம் செய்தேன். ராவுத்தர் மனம் இளகி ''சரி சாமி.'' என்று வைக்கோலுக்குப் பணத்தைக் கொடுத்தார். ''பாதி வைக்கோலுக்குப் பணம் தந்தென்ன பயன்? முழுக்கட்டையும் வாங்கிக்கொள்ளும்'' என்று வற்புறுத்தினேன். இரண்டு ரூபா தந்து வைக்கோல் முழுவதையும் வாங்கிக்கொண்டு ''நீர் யார்? காந்திமாதிரி யிருக்கிறீரே?' என்று கேட்டார். ''காந்திதானையா எனக்கு இவ்வளவு தைரியம் தந்தார். இதுதான் சத்தியாக்கிரகம்...தன்னைப் பலிகொடுத்தாவது சத்தியத்தைக் காப்பது'' என்றேன். ''ஏழை ', ஐயா நீங்க மகாராசனு யிருக்கணுங்க.'' என்று வாழ்த்தினுன். நான் ''மகாராசனு யிருக்க

வேண்டாமையா, உங்களைப்போன்ற ஏழைகளுக்கு ஊழியனுயிருந்தால் போதும்'' என்று சென்றேன். இந்தச் சம்பவம்போல் பல என் வாழ்வில் நிகழ்ந்தன.

174. சாரணத் தொண்டு

எனது சாரணர் தினம் ஏதாவது பொதுநலம் செய்யவேண்டும். அதைத் தினம் குறிப்பில் எழுதி, மாலை சாரணப்பயிற்சியிற் படிக்க வேண்டும். இந்த முறையால் அவர்களுக்கு நல்ல ஒழுக்கமும் தொண்டுணர்வும் வளர்ந்தன.

அந்திநேரம்; ஒரு வெறிநாய் எங்கள்மேல் பாய வந்தது. சாரணத்தடியால் அதை நான் தட்டிவிட்டேன்; பத்தடி சென்று விழுந்து குலைத்துக்கொண்டோடியது. எதிரே ஒரு பெண் வந்தாள்; அவள் மேல் பாய்ந்து கடித்துவிட்டது. அவள் 'ஐயோ' என்று அலறிக் கீழே விழுந்தாள். இரத்தம் ஒழுகியது. அவளைத் தூக்கிவைத்து சிகிச்சை செய்ய தெருவில் சென்ற ஒரு பெண்ணை நயந்தேன்..."என் புருசன் காத்திருப்பாரையா'' என்று விரைந்தாள். நான் அவளை வழி மறித்து. "அம்மா அவளும் உன்போல் பெண்; அவளும் புருசனிடம் செல்லவேண்டும். பெண்ணுக்குப் பெண் உதவி செய்யம்மா. இந்தா அதற்கு ஒரணா'' என்று தந்தேன். "நீங்க சொன்னதே புத்தி'' என்று பெண் பெண்ணைத் தூக்கிவந்தாள்; உடனே இரத்தத்தைக் கழுவி மஞ்சளும் பச்சிலையும் அரைத்து, அந்த இடத்தில் தடவச்செய்தேன். இரத்தம் நின்றது. அதே மருந்தைத் தொடர்ந்து போடச் சொல்லி அவளை வீட்டிற்கு அனுப்பினேன்.

பள்ளிக்கூட மைதானத்தில் மஞ்சு விரட்டு நடந்தது. நல்ல காங்காயேம் காளைகளும் ஓங்கோல் காளைகளும் கொம்பு சீவி வர்ணம் பூசி, சாயத்துண்டு கட்டி, ஜல்லிக்கட்டுக்குத் தயாராக வந்தன. ஏராளமான கூட்டம். மாட்டுப்பந்தயம் தொடங்கியது. மாடுகள் வெறிபிடித்தோடின; மாடு பிடிப்பவர் திணறிப்போனுர்கள். நாங்கள் கூட்டத்தை ஒழுங்குசெய்து, அபாய உதவிக்குத் தயாராக நின்றோம். ஒரு பைல்வான் ஒரு மைலக்காளையின் கொம்பைப்பிடித்து நிறுத்தினுன். மாடு அவனை முட்டித்தள்ளியது...அந்த ஆள் கீழே உருண்டான். நாங்கள் உடனே அவனைத் தூக்கிவந்து காயம் கட்டினோம். இன்னொருவன் மாட்டைத் தைரியமாகப் பிடிக்கச் சென்ருன். நான் "அண்ணே மாட்டிடம் அன்பாகப் போ, கையில் இந்தப் பசும்புல்லைக் காட்டிச் செல். அதன் கொம்பைப் பிடித்து நிறுத்து; உடனே முதுகைத் தட்டிக் கொடுத்து புல்லைத் தா'' என்றேன். அப்படியே செய்தான். மாடு சாதுவாகப் பணிந்தது. அவனே பந்தயத்தில் வென்ருன்.

175. ஆடிப்பலி

சாரணருடன் நான் செய்த மற்ருெரு பெருந்தொண்டு, பலி நிறுத்தம். தென்னன் செட்டி அக்கிரகாரத்தில் கோட்டையம்மன் கோயில் உள்ளது. ஆடி மாதம் அங்கே ஏராளமான ஆடுகள் பலியாகும். அதற்கு அருகே எங்கள் மாப்பிள்ளையின் சித்தப்பா தோடுகுளம் சுந்தரமையர் வீடிருந்தது. சிறு வயதில் அங்கே சென்றிருக்கிறேன். அப்போது கோட்டையம்மன் பலிக்கொடுமையைக் கண்டு கண்ணீர் விடுத்தேன், அந்தப் பலியை நிறுத்தக் காலம் வந்தது. சாரணருக்கு அஹிம்ஸாதர்ம உணர்ச்சி யேற்றினேன். நம் உயிரைக் கொடுத்தாவது வாயில்லாச் சிவர்களைக் காப்போம். என்று சென்றேன். அங்கே டைரி அருணுசலம், டி. ஆர். அருணுசலம், சாமிநாதன், சோமு முதலியோர் எங்களை வரவேற்ருர்கள். நாங்கள் கொல்லாதே வாயில்லாச் சிவனைக் கொல்லாதே; அம்மன் வேண்டுவது ஆடில்லை கோழியில்லை, அன்பையே அம்மன் வேண்டுகிருள். அரிசிப்பொங்கல் வை; மலர் கனி நிவேதி. அதுவே நல்ல பூசை என்று நோடீஸ் அடித்து எல்லாருக்கும் தந்தோம். பிறகு தண்டோராப் போட்டு எல்லாரையும் கூட்டினேம், நான். அம்மன் பூஜை, பலியின் கொடுமை, சைவப் பெருமைகளைப்பற்றிப் பேசினேன். சிலர் பலியிடக் கொண்டு வந்த ஆடுகளை எங்களிடம் தந்து சென்றனர். சிலர் கொண்டு சென்றனர். பிறகு நாங்கள் கூட்டத்தோடு சென்று தனித்தனியாக பலிகாரரிடம் "வாயில்லாத் தம்பியைக் கொல்லாதே" என்று பிரசாரம் செய்தோம். பலிக்குக் கொண்டுபோகும் ஆடுகளை வளைத்து நிறுத்தித் திருப்பிக் கொண்டுபோகச் செய்தோம். பெண்மணிகளுக்கெல்லாம் "ஆடு கோழி உங்கள் மக்களுக்குச் சமானம்; ஊமை மக்களைக் கொல்லாதிர்" என்று சொன்னேம். அவர்கள் கேட்ட விநோதக் கேள்விகளுக்குப் பதில் சொன்னேம், "பலி கொடுக்காட்டி கோட்டையம்மன் பேதி காலரா அம்மை உண்டுபண்ணி கண்ணைக் கெடுப்பாள், சாகடிப்பாள்" என்று பயந்த கிராமவாசிகளிடம் பேசினேம், "ஐயா நாங்களெல்லாம் பலி கொடுப்பதில்லையே, எங்களை அம்மன் ஒன்றும் செய்வதில்லையே. பயப்படாதிர்கள். நோய்கள் பலியாகும் ஆடு கோழிகளின் சாபத்தால்வரும் தண்டனையே" என்ருேம். சிலருக்கு இந்தக் காரணம் மனதிற்பட்டது. ஆடுகோழிகளை எங்கள் சிவகாருண்யத் தோட்டத்தில் விட்டுச் சென்றனர். இந்தப் பிரசாரத்தால் படிப்படியாக பலி குறைந்து, நின்றேபோனது. அதுமுதல் ஜீவகாருண்ய சேவையை என் வாழ்வின் பணியாகக் கொண்டேன். அதற்காக நான் பாட்டும் நாடகமும் எழுதினேன். பத்திரிகைகளில் இந்தத் தொண்டுகள் போற்றப் பெற்றன.

176. செல்வக்கூத்து

ஊரில் என்னைத் தெரிந்த செல்வர் பலர் உண்டு. சிலசெல்வர் டியூஷனுக்கு அழைத்தனர். மறுத்தேன். பெரிய மைனர் வீட்டுக்குக் கூடச் சென்றதில்லை. ஒருநாள் என் பஞ்சாபி விரரைக்கண்டு திரும்பியபோது, ஜமீந்தார் நாராயணஞ் செட்டியார் பங்களா வாசலில் நின்று " நீர் யார்?" என்று வினவினர். நான் "தெரியவில்லையா...நான் தங்களைப் பலமுறை பார்த்திருக்கிறேனே...நான் ஏஜெண்டு சுப்பிரமணியர் மருமான்" என்றதும் அடையாளம் தெரிந்து "எங்கிருக்கிறீர்" என்று கேட்டார். மீனாட்சி கலாசாலையில் என்று விபரம் சொன்னதும், "சோமையாவுக்கு டியூஷன் சொல்லித்தருகிறீரோ?" என்று கேட்டார். "இல்லை சோமையா நன்றாகப் படிக்கிறான், புத்திசாலி" என்றேன். "சந்தோஷம்" என்று விடை கொடுத்தார்...செல்வர் வீட்டுக் கலியாணங்களுக்கு அழைப்பு வரும்; செல்வதில்லை. ஜீ சுந்தரமையர் சாந்தி முகூர்த்தத்திற்கு தாம்பூல வாங்கக்கூட நான் போகவில்லை. ஒருநாள் விவேகானந்த சங்கத்தில் சன்மார்க்கப் பிரசங்கம் செய்து திரும்பினேன். வழியில் ஒரு பணக்காரர் வீட்டில் பின்னல் கோலாட்டம் நடந்தது. கொட்டகையில் எட்டிப் பார்த்தேன். "அடட சவாசுங்கிறே, எப்படி இடுப்பை வளைக்கிறு...முகவெட்டைப் பாருங்கிறேன்" என்ற பேச்சுக்கள் காதில் விழுந்தன. மற்றொரு புறம் வெளியே எச்சில் இலை எறிந்தனர். நாய்கள் பாய்ந்து வந்தன. அவற்றைக் கல்லெடுத்தடித்துத் துரத்தி, ஏழைகள் இலைகளைப் பறித்துக்கொண்டு, அதிலிருந்த எச்சில்களை வாயில் வாரி யடைத்துக் கொண்டனர். நாய்கள் அவர்களைச் சுற்றி வள் வள் என்று அலாரிப்பு நடத்தின. உள்ளே விறலயர் கூத்து, பணத்தின் இடம்ப நாடகம்; புறத்தே ஏழைகளின் கண்ணீர்; பசியின் கொடுமை...இந்தக் காட்சி என் சிந்தனையைத் தூண்டியது. நான் அக்காலம் காரல்மார்க்ஸின் வெ. காபிதால், தோல்ஸ்தாய் நாவல்கள், லெனின் சரித்திரம், ரஷ்யப்புரட்சி நூல்களைப் படித்து சமதர்மியாயிருந்தேன். அந்தக் காலமே எனது தினசரிக் குறிப்புகளில் திருநூல் புகுந்தது. எனது அருளுடைமைக் கொள்கை அதில் விளங்கும். ஏழைகளை வேலை வாங்கிப் பணக்காரன் கொழுக்கிறான். ஏழை போதிய ஊதியமில்லாமல் பட்டினி கிடக்கிறான். பணக்காரன் பணத்தைப் பெட்டியில் சிறையிடுகிறான்; இடம்பக் கூத்தாடுகிறான். பணத் திமிரால் பிறரை ராங்கியாக நடத்தி அடிமை செய்கிறான். ஊர் அதிகாரம் பட்டம் பதவிகளெல்லாம் அவனிடம் வருகின்றன. ஓர் ஊரில் ஐம்பது பணக்காரர் ஐயாயிரம் பேர்களை ஏழைகளாக்கிக் கொடுங்கோல் செலுத்துகிறார்கள்; வர்க்கப் போராட்டமும் முதலாளித்வமும் தொழிலாளர் கண்ணீரும் பசிப்போரும் உலகின் அமைதியைக் கெடுக்கின்றன. இதற்கு மருந்தை நான் தேடி அதையே யோகசித்தி தொழிலியல் அரசியல்களாக எழுதி

னேன். பாரதசக்தியிலும் நன்ருக விளக்கியிருக்கிறேன். உலகில் வறுமைக்கே இடமில்லாமல் செய்ய வழியுண்டு. அந்த வழியை நடந்து காட்டுவதே அன்றுமுதல் எனது வேலையாயிருந்தது.

அன்னமென் றேழை அழுகுரலிங் கே;உள்ளே
பின்னற்கோ லாட்டப் பெரும்பித்து—சொன்னமே
சட்டைக்குந் தோந்திக்குந் தாசிக்கும் வெட்டைக்கும்
கட்டுண்டு கேட்டாய் கதி.

மற்ருெரு காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. ஒரு செல்வச் செட்டியாருக்கும் சேர்வைகாரருக்கும் பகையும் போட்டியும் மூண்டது. அது சம்பந்தமாக ஒரு பெண்கொலை நிகழ்ந்தது. கொன்ற பிணம் சேர்வைகாரர் வீட்டருகே கிடந்ததால், அவரே கொன்ருர் என்று கேஸ் ஜோடித்தனர். உண்மை நேர் எதிரிடை. செல்வன் தூண்டுதலால் பணம் பெற்றுக்கொண்டு ஒருவன் விஷம் வைத்துக் கொன்ருன். கொன்றவன் பேச்சேயில்லை. வக்கீல் சாமர்த்தியமாகக் கேஸை விசாரித்து, சேர்வைக்கு விடுதலை யளித்தார். ஏழைகள் அவரை மாலை போட்டு வரவேற்றனர். பணக்காரர் பணத்தை இப்படி அபாயமான மோசத் திருவிளையாடல்களில் அள்ளி யிறைப்பதைக் கண்டேன். கல்விக்கு, தொழிலுக்கு, பொதுநலத்திற்கு என்ருல் கை கர்ணக் கிழங்கும் செந்தூ வட்டியுமாகும். சதுர் கச்சேரி, தாசி, எலக்ஷன், ராவ்பகதூர் பட்டம் பதவிக்கு, கவர்னரை வரவேற்க, கலெக்டருக்கு விருந்து வைக்க, கோர்ட்டுக்கு வக்கீலுக்கு என்ருல், பை மளமளவென்று அவிழ்ந்து கொட்டும். ஒரு செல்வர் மனைவியை ஒதுக்கிவைத்துப் பெண் வேட்டையில் இரண்டு லட்சம் செலவிட்டார். ஒருவர் அழிவழக்கில் ஆயிர ஆயிரமாக அள்ளிவிட்டார்.

ஆட்டுக்கும் பாட்டுக்கும் ஆசைக் கிழத்திக்கும்
கோர்ட்டுக்கும் கொட்டும் பணக்குவையை—நாட்டுக்கும்
வீட்டுக்கும் நன்மை விளைகல்வி செய்தொழிலிற்
போட்டால் வறுமைதுயர் போம்.

கிராமங்களிற் சுற்றிப் பார்த்தேன். ஏழை விவசாயிகள் கடனுடன் பட்டுக் கவலைமிஞ்சிக் கண் குழிந்து, வயிறெக்கி நடைபிணமாயிருந்த நிலை என்னை மிகவும் வருத்தியது. என் சட்டை என்னையே கேலி செய்தது. சமுதாய ஒழுக்கமோ வழவழா! ஊர்ச் சுவர்களைப் பார்த்தாலே தெரியும். சமுதாயம் உருக்குலைந்து திருக்குலைந்து செல்வச் செருக்கரின் அடிமையாய் மானமிழந்து பிழைத்ததைக் கண்டேன். பொடி, புகையிலை, சீட்டு, சூது, பொய்சாட்சி, விபசாரம், துராசாரம், பிணி கவலை என்று சமுதாய வாழ்வு நரகப் படுகுழிக்கு வழுக்கிச் சென்றது. அன்பும் சிவமும் ஒன்று என்பர்; ஆனுல் சிவம் தம் அழி

வழக்கைச் சாதகமாக்கி, எதிரியைக் கடுங்காவலில்போட்டு, அவன் சொத்தையெல்லாம் இப்படித் திருப்பினாலே அன்பு, அபிஷேகம் எல்லாம் நடக்கும். அந்தரங்க சுத்தியிருந்தால் அல்லவா அன்பிருக்கும்? குடும்ப வீட்டில் குண்டுணி புகுந்த கதைதான். உலகில் ஒட்டிக் கொண்டிருக்கிறவர்களிடந்தான் இப்படி என்றால், துறவிகளைப் பாருங்கள்!

177. சில துறவிகள்

துறவிகளிடையே எப்படியோ என்பெயர் பரவியது; அடிக்கடி அவர்கள் என்னைத் தேடி வருவதுண்டு. ஒருநாள் தியானித்திருந்தேன். "நாம் வந்திருக்கிறோம்... பொம் பொம் சங்கர் மஹாதேவ்! ஹேவ்" என்ற கர்ஜனை கேட்டது. பார்த்தேன்—காஷாயம், புலித்தோல், திரிசூலம், சடை, உருத்திராட்ச மாலைகள், வெண்ணீற்றுக் கோலங்களுடன் ஒருவர் ஜன்னலில் எட்டிப் பார்த்தார். உள்ளேற்று அமர்த்தினேன். விரைப்பாகக் கைநீட்டி விபூதித் தந்தார். "ஓம் சிவம் எங்கே வந்தது... என்னைத் தெரியுமோ " என்றேன்.

பொம்: பொம்பொம் குடாக் சங்கர்: தெரியாதா நமக்கு. வெள்ளையன் ஊருணிக் கரையில் மாணிக்கவாசர்பற்றிப் பேசிய போதே உன்னைப் பக்குவி என்றறிந்தோம். வாலைபராசக்தி 'நமது பக்தனைப் பார்' என்றாள், வந்தோம். (இப்படிப் பேசிக்கொண்டே குப்பியில் கஞ்சாபோட்டு பற்றவைத்து ஒரு இழுப்பு இழுத்தார்.)

நான்: இங்கே புகைக்குடி கூடாது...லாகிரி உபயோகிப்பது கெடுதல். துறவி இந்தக் கெட்ட பழக்கமெல்லாம் துறக்கவேண்டும்.

பொம்: அப்படிச் சொல்லாதே தம்பி: கெடுதல் உலகோருக்கு. நிர்விகல்ப சகானந்ததுரிய நிட்டைக்கு ஏறிய நமக்கு "ஹே பகவதி அமரி லடக் சங்கர்"...உஃப்...இதுதான் ஆனந்தம்.

நான்: இதற்குமேல் பரமானந்தம் உண்டோ...கஞ்சா ஆனந்தம்; கள் பரமானந்தமோ?

பொம். தம்பி, உபதேச குருவை எதிர்க்காதே, உனக்குவாலை மந்திரம் தருகிறேன், என்று கண்ணைமூடி மூச்சிழுத்தார்.

அப்போது ஒரு தாடிச்சாமி தடபுடலாக வந்து, "அப்பா இந்தப் பாவிப் பயலை நம்பாதே" என்றது.

பொம்: அடபாதகா! இங்கும் வந்தாயா...உன்மேல் வாலையை ஏவிவிடுகிறேன் பார்...உஃப்...

தாடி: உன் வாலைக்காட்டாதேடா...தெருவிலே செருப்படிப் பட்டதைச் சொல்லட்டுமா?

பொம் : நீ கலசபூசைபண்ணி ஆழம்பார்த்த கதையை சொல்லட்டுமா ? பொம் பொம்!

தாடி : பொம் பொம்! பொம்புளை! இவன் பொம்புளைகளுக்குப் புள்ளைவரந்தரும் ஏமகாதக தேவன். மந்திரம் தந்திரம் என்று கஞ்சா குடித்து உளறுவான்.

அவர் ; அட நீ பட்டைச் சாராயம்போட்டுச் சாமியாடுவதும் ; தங்கம் செய்ய தகடுதத்தம் செய்வதும, கல்பம் விகல்பம் என்று பணம் பறிப்பதும் தெரியாதாடா. தாடிவைத்த கூத்தாடி, சூதாடி, புலையாடி கறிதின்னிக் கள்வா...இந்த மாதிரி இருவரும் பெரிய சண்டை தொடங்கவே நான், இருவரையும் வெவ்வேறு திசையில் பிரித்தனுப்பினேன்.

இன்னொரு சாமியார் கோவணம்கட்டி, உடம்பெல்லாம் சாம்பலை அள்ளிப் பூசிக்கொண்டு பத்மாசனத்தில் உட்காருவதுண்டு. அவர் வாயைத் திறந்தால் காதால் கேட்க முடியாமல் அசங்கியம் பேசுவார். ஒருநாள் என்னுடன் ஊருணிக்கு வந்தார். குளிக்கும்போது பார்த்தேன். உடம்பெல்லாம் மேகநீர், அட்லாஸ்மாதிரி படர்ந்திருந்தது. "இதை மறைக்கத்தான், சாமி இப்படி விபூதியடிக்கிறதோ" என்று கேட்டேன். நாய்மாதிரி கோபம் வந்தது. எதையடா...நீலமேக சாமளத்தைத்தான். "அது உனக்கென்ன தெரியும்?" "பார்த்தால் தெரிகிறதே" "சை உனக்கு ஞானக்கண் திறக்கவில்லை. கேள் மடையா. திருநீலகண்டம் நமது உடலை நீலமாக்கிய ரகசியம். நம்மை நீறுபூத்த நீலகண்டம் என்று வணங்குவர். நம்மிடம் உபதேசம்பெறு, உண்மை விளங்கும். உபதேசமுறை என்ன ? ஐந்து ரூபா தட்சிணை, ஒரு கூஜா காப்பி, பத்து இட்டலி, இரண்டுவேளை சாப்பாடு" தட்சிணை. எங்கே போகிறது ? விசாரித்தேன் ; கும்பகோணத்தில் இவருக்கு நீலதேகம் தந்த ஒரு சேலைதேகத்திற்குப்போகிறது ! இப்படியே சக்தி உபாசனை என்று மலையாளத்திலிருந்து வந்த ஒரு சாமியார் இளவட்டங்களை வசிய மந்திரம்போட்டு வட்டமிட்டுப் பணம் பறித்தார். அவரால் கெட்ட வாலிபர் பலர், காசி யாத்திரைச்சாமி ஒருவர் ; அவர் செல்வரிடமெல்லாம் "காசிக்குப்போய் உம் கருமம் தொலைய ஜபம் போடுகிறேன்" என்று பணம் வாங்கிக் கொள்வார். நாலைந்து மாதம் சென்னையில் சுளையமாடித் திரும்புவார், காசிச் செம்பில் குழாய்த் தண்ணீர் பிடித்து மூடி, ஈயப்பற்றுவைத்து, விபூதி குங்குவத்துடன் "அலக்சங்கர்" என்று வருவார். பில்லி, சூனியம், வசியம், ஏவல் என்று மாயம் புரிவோர் பலரைக் கண்டேன். சிலநல்ல துறவிகளையும் அரிதகாகக் கண்டேன். ஒருநாள் கருதாவூருணிக் கரையில் ஆசாரமாகத் தியானித்தேன். சுமார் இருபது உதாசி சாதுக்கள் வந்தார்கள். எல்லாரும் குருநானக் சிடர், பஞ்சாபிகள். தியானம் நீங்குமட்டும் என்னைச் சுற்றி அமர்ந்து சுகமணி பாடினர். நான் அவர்களுடன் இந்தியில்

பேசினேன். அவர்கள் கிரந்த சாகெபு பாடிக்கொண்டே ஊரைச் சுற்றுப் பிச்சையெடுத்து வந்தனர். ஒருவர் கடைக்குச் சென்று கோதுமை மா, காய் கனிகள், பருப்பு, நெய் முதலியன வாங்கி வந்தார். எல்லாரும் ஒரே வேளை தான் உணவு கொண்டனர். மாலை ஆறு மணிக்குச் சுத்தமாக, ஆடா பிசைந்து சப்பாத்தி தட்டி, பருப்பும், காய் கறிகளும் வேகவைத்து உப்புப்போட்டு இறக்கினர். எல்லாரும் கசரத் பஸ்கி செய்து இருந்து உண்டனர். அவர்களுள் சுந்தரசிங் எனது நெருங்கிய நண்பரானார். அவரைப்பற்றியே பாரதசக்தி நானகப்படலத்தில் குறித்தேன். நானக் குரு மதத்தைப்பற்றி நேர்முகமாக அவரிடம் தெரிந்து கொண்டேன். குருகோவிந்தரின் தல்வார் கீதம் கேட்டு உடல் சிலிர்த்தேன். இருபது நாட்கள் இந்தத் துறவிகளுடன் அளவளாவி மகிழ்ந்தேன். அவரிடமிருந்து சப்பாத்தி செய்யக் கற்றேன். அது எனது வட நாட்டுப் பிரயாணத்தில் பயனானது.

சட்டிச் சாமியார் என்றொரு நல்ல சாதுவை நான்கண்டு ஆதார சக்கர ரகசியங்களைக் கற்றேன். அவரையே கலைக்கோயிலிற் குறித்தேன். ஆனைக்குட்டிச் சாமியார் குழந்தைச் சாமியார், குள்ளச்சாமியார் என்றெல்லாம் ஜனங்கள் அழைத்த சில துறவிகளைக் கண்டேன். அவர்கள் பெயர்கூட இல்லாமல் நாமரூபபேதந் துறந்து திரிந்தனர். இந்தச்சடம்; "அந்தக் கட்டை" என்றே அவர்கள் பேசுவது. நான் என்னூர் : இது என்பர். அஃறிணைப் பேச்சு எனக்கும் பழகியிருந்தது. சமீபத்தில் அதை விட்டுவிட்டேன். வினையிருக்குமட்டும் உடலை மறக்க முடியாது ; உடம்பில் உயிர் உள்ளமட்டும் உலகை மறக்க முடியாது. மனமுள்ளமட்டும் மனித சமுதாயத்திற்கு நான் செய்யும் கடமையை மறக்கமுடியாது. அந்தக் கடமையை இங்கே தொடங்கினேன். அந்தக்காலம் நான் பேசியது, செய்தது, நினைத்ததெல்லாம் திருநூலாக எழுதினேன். அதுவே என்வாழ்வுக் கண்ணாடி. ஆதலால் இங்கே கூறியதையே கூறாது மேலே செல்கிறேன.

178. புலவர் உறவு

தேவகோட்டையில் எனக்குச் சில புலவர் நட்புக் கிடைத்தது ? அவர்களுடன் சேர்ந்து நான் தமிழ்த்தொண்டும் சிவத்தொண்டும் செய்தேன். ஸ்ரீராமநாதப் புலவர் மூலம் எனக்குச்சில யாழ்ப்பாண வித்வான்கள் அறிமுகமானார்கள். அவர்களிடமெல்லாம் பாரத சக்தியைப் படித்துக் காட்டினேன். புலவர் எனது மாணவன் மாணிக்கம் வீட்டிலே தான் இருந்தார். அங்கே பிரபல வணிகரும் புலவரும் வருவதுண்டு. ஒருசமயம் தஞ்சாவூர் பாவாசாமி மடச்சாமியார் வந்தார். அவர் தொல்காப்பியத்தைத் தலைகீழ் பாடம் பண்ணிய கோடையிடிப் புலவர். அடிக்கடி குறள் சொல்லுவார். ஆனால் சும்மா சுருட்டுக் குடிப்பார். என் யோகசித்தியைப் படித்துக்கொண்டே அடிக்கு ஒருதரம் புகைவிட்

டார், "சுவாமி இந்த பிரமபத்திரப் புகை எதற்கு? நெஞ்சைக் கெடுக்குமே" என்றேன். "புகையிலை பகையிலை; புகைக்காவிட்டால் நகையிலை" என்று எதுகை பேசினார். அவருக்காக நான்குநாள் பிரசங்கம் வைத்தோம். அதில் நான் சன்மார்க்க ஒழுக்கம்பற்றிப் பேசினேன். அவர் திருமந்திரத்தை நன்றாக விளக்கினார்.

விவேகானந்த சங்கம் ஆண்டுவிழாவுக்குப் பண்டித கோபாலகிருஷ்ணையரும், கம்பராமாயணப் புலவர் கோவிந்தராஜையங்காரும் வந்தனர். ஐயர் தமிழின் பெருமைபற்றி இனிது பேசினார். ஐயங்கார் கம்பனின் நாட்டுப் படலத்தை அழகாகப் பிரசங்கித்தார். அந்தக் கூட்டத்திலேதான் நான் தமிழுணர்ச்சிபற்றிப் பேசினேன். மறுநாள் ராய சொக்கலிங்கம் (ஊழியன் ஆசிரியர்) பெரியபுராணம்பற்றி இனிது பேசினார். செட்டிநாட்டுப் பேச்சாளருள் இவரும், குமரன் ஆசிரியர் சொ. முருகப்பாவும் மிகச் சிறந்தவர். ஊழியனும் குமரனும் புதிய செட்டிநாட்டை ஆக்கின. கோபாலகிருஷ்ணையரும் என்வாக்கு தெளிவடைந்திருக்கிறது, என்றார். பாரதசக்தியிலிருந்து சில செய்யுட்கள் படித்துக் காட்டினேன். கம்பன் கவிநயத்தையும் ஐயங்கார் இடையிடையே விளக்கினார். எனது புதிய எளிய வாழ்க்கையை, என் உணவு நியமத்தை இருவரும் கவனித்தனர். கோவிந்தராஜர் என்னைக் குறித்து ஒரு கட்டுரையும் எழுதினார். அதனால் என்பெயர் புலவர் உலகை எட்டிப் பார்த்தது. காரைக்குடி உயர் பள்ளியில் ஒருதரம் வாழ்வின் லக்ஷியம் பற்றிப் பேசினேன். புதுக்கோட்டைக் கல்லூரித் தலைவர் தியாகராஜையர் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் கே. ஆர். வேங்கடராமையரும் ஆங்கிலத்தில் பேசினார். பள்ளித் தலைவர் மன்னார்குடி வேங்கடராமையர் சிறந்த ஆசிரியர், நிரம்பப் படித்த புலவர். அவர் மாணவருடன் பலின்சடுகுடு விளையாடுவார். வகுப்பில் கண்டிப்பா யிருப்பார். பள்ளிக்கூட ரசாயனப் புலவர் ராமானுஜம் எங்களூர்க்காரர். அவர் எனது ஸயன்ஸ் தொகுதிகளைப் பார்த்து மெச்சினார். மாணவர் இவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். இவரது ரசாயனக் கூடம் சுத்தமாயிருந்தது. பள்ளித் தமிழாசிரியர் பலராமையர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலவர். காலமறிந்து தமிழ்ப்பணி செய்தவர். மேற்சொன்ன மூவர் நட்பும் எனது இலக்கியப் பணிக்கு ஆக்க மளித்தன. தேவகோட்டையில் ஒரு இலக்கிய கூட்டத்தில் விபுலானந்தர் என்று பிற்காலம் புகழ்பெற்ற மயில்வாகனரைக் கண்டேன். அவர் திருவாசகம்பற்றித் தெளிவாகப் பேசினார். இருவரும் தனித்தமிழில் பேசினோம். அவர் தமிழுக்கே வாழ்வை ஈந்த புலவர். அவரை நாலைந்துதடவை கண்டு தமிழ்ப்பயன் பெற்றேன். சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்றுகாதையை அவருடன் ஒருநாள் படித்தேன். பாலைப் பண்ணை அவர் விளக்கினார்.

உள்ளூரில் ஜி. சுந்தரமையர், நாகசாமி ஐயர் தவிர, வக்கீல் சுப்பிர மணியரும், சிவசுப்பிரமணியரும் என் அருமைத் தோழர்கள். சிவசுப் பிரமணியர் தமிழ் ஆங்கிலம் இரண்டும் அழகாகப் பேசுவார். நட்பிற்கு இனியவர். எனது நூல்களை ரசித்தவருள் ஒருவர். அவர் ஓர் அரிய நண்பரை என்னிடம் அழைத்து வந்தார்.

179. ரெவரண்ட் பாப்லி

அவரே நான் என்றும் மறக்கமுடியாத கிறிஸ்துவப் பாதிரி H. A. பாப்லி, அவர் மூன்று ஐரோப்பிய எஞ்சினியர்களுடன் வந்தார். சென்னை ராஜதானியில் நகர் அமைப்புப்பற்றி இவர்கள் பிரசங்கம் செய்து சுற்றினர். செட்டி நாட்டில் அழகான கட்டிடங்கள் உண்டு. அவற்றைப் பார்த்துவிட்டு, எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதற்கு நகரப் பிரமுகர் சிலர் வந்திருந்தனர். பிரசங்கம் முடிந்ததும், சிவசுப்ரமணியர் அவரை என் ஸயன்ஸ் ஹாலுக்கு அழைத்து வந்தார். வந்ததுமே "நீர் ஏசுநாதர்போல் வாழ்கிறீர்; நல்லநல்ல பாடல்கள் எழுதியிருக்கிறீர். உம்மைக் காண மகிழ்ச்சி" என்று தமிழில் பேசினார்; வியந்தேன். உடனே எனது காவிய மூட்டையை விரித்துப் படித்துக் காட்டினேன். யோகசித்தி (அந்தக்கால அறநூல்) ஒரு சிறிய கையடக்கப் பிரதியாக எழுதி வைத்திருந்தேன். பாப்லி "நான் இந்த அருமையான நூலை முழுதும் படித்து அனுப்புவேன்; தயவுசெய்து தாருங்கள்" என்றார். மிக்க மகிழ்ச்சி...என்று சில பக்கங்கள் படித்துக் காட்டினேன். "திருக்குறள்போல் இருக்கிறதே'! என்று பைக்குள் போட்டுக் கொண்டார். பிறகு ஏசுநாதர் சரிதையிலிருந்து சில பாடல்கள் படித்தேன், எழுதிக்கொண்டு போனார். போகும்போது "வணக்கம் ஐயா, உங்களைப் பலமுறை சந்திப்பேன்" என்றார். இந்தப் பாதிரி என் உள்ளத்தை தொட்ட சில நண்பருள் ஒருவர். ஒருநாள் பதிவுத் தபாலில் எனது நூலும் கடிதமும் வந்தன. அக்கடிதத்தை ஆயுள் உள்ளமட்டும் நான் மறக்க முடியாது. அதை எனது நண்பரிடம் காட்டினேன். கணிதப்புலி ராமாநுஜதத்திற்கு ஜி. எச். ஹார்டி வந்ததுபோல், பாப்லி எனக்கு வந்தார் என்றனர். பாப்லி கடிதம் இதுதான்:

Y. M. C. A,
Madras
24—3—1922

ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் அவர்களுக்கு,
ஸயன்ஸ் ஆசிரியர், தேவகோட்டை.

அன்புள்ள சகோதரரே,

தங்கள் இனிய குணங்களுக்கு வந்தனம். தாங்கள் எனக்குப் படிக்கத்தந்த அரிய நூலை ரிஜிஸ்தர் தபாலில்

அனுப்பியிருக்கிறேன். அறநூலை நான் மிகவும் கருத்துடன் ஆராய்ந்து நன்மையடைந்தேன். அது பெருந் தன்மையான எண்ணங்கள் பொதிந்து விளங்குகிறது. நடையும், சொல்லும் பொருளும் பேரின்ப மளிக்கின்றன. இந்த நாளில் நல்லொழுக்கத்தைப் பரப்புதல் நலம். அதிலும் இலக்கியவடிவில் நன்னெறியைப் பரப்புதல் மிகநல்லது. இப்போது தமிழ் இலக்கியத்தை வளர்த்து, நல்ல நூல்களைச்செய்து நல்வழிகாட்டும் தங்களைப்போன்ற புலவர் தேவை. ஜனங்களின் சீர் திருத்தத்தைக் கருதி இலக்கியம் செய்யும் தங்கள் தொண்டைப் பாராட்டுகிறேன். தங்கள் பணி சிறந்த கல்விப் பணியாகும்.

குறள்வடிவில் திகழும் தங்கள் அறநூல் திருக்குறளுக்கு அரிய துணைநூலாகும். இதைப் படிப்பவர் அதையும் படிப்பார். சிறந்த தமிழ் இலக்கியத்தை வளர்க்கும் இத்தகைய முயற்சிகளை மக்கள் போற்றவேண்டும். தாங்கள் தங்கள் முயற்சியில் வெற்றிபெறுவீர் களென்று நம்புகிறேன். தங்கள் முயற்சி மேன்மேலும் ஓங்கட்டும்.

தாங்கள் இயற்றிய நூலகளை அச்சில் பார்க்க விரும்புகிறேன் முதன்மையாக ஏசுநாதரைப்பற்றித் தாங்கள் பாடிய அரிய நூலைப் பார்வையிட விரும்புகிறேன்.

உங்கள் அன்புள்ள
எச். ஏ. பாப்லி.

நான் சென்ற இடமெல்லாம் பாப்லியைச் சந்தித்தேன். பாலையூர் சக்தி நிலையத்திலிருந்தே அவருக்கு ஏசுநாதர் சரிதையை அனுப்பி னேன். உடனே கிறிஸ்துவ சங்கத்தில் அச்சிட்டனுப்பி அவரே முன் னுரையும் தந்தார். பிறகு என் யோகசித்திக்கும் திருக்குறளின்பத் திற்கும் அழகான முன்னுரை தந்தார். எனது தமிழ் நடையை அவர் நன்ருக ரசிப்பார். ஸ்வராஜ்யாவில் இருந்த போதுதான் இருவரும் சென்னை ஒய். எம். ஸி. ஏ. யில் சந்தித்தோம். என்னை அவர் மோடா ரில் நீண்டதூரம் அழைத்துச் சென்று அளவளாவினர். அப்போது எங்களுடன் கீர்த்தனுசாரியார் ஸி. ஆர். ஸ்ரீநிவாசைங்காரும் இருந் தார். நான் பைபிளின் சாரம் இதுவே என்றொரு கீர்த்தனம் பாடி னேன். ஏசுநாதர்மேல் சில பாடல்கள் பாடினேன். மோடாரில் அமர்ந்தே பாப்லி அவற்றை எழுதிக்கொண்டார். மறுநாள் சபையில் பிடிலுடன் பாடினர். தமிழில் கதை செய்தார். என்னை ஒரு தமிழ னும் அறியாத காலத்தில், இந்தப் பாதிரி அறிந்து பலவிதத்திலும். ஊக்கி ஆதரித்தது ஒரு தெய்வச் செயலென்றே சொல்லவேண்டும். இன்றுவரையில் நான் பாப்லியுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக் கிறேன் எனது நூல்கள் அனைத்தையும் அவர் கருத்துடன் படித்து மெச்சி எழுதினர். சமீபத்தில் எனது கவிக்கனவுகளை மிக உன்னத மான கவிச்செல்வம் என்று போற்றினர். என் வாழ்விற்கு ஆறுதல் அளித்த நண்பருள் பாப்லி ஒருவர். ஒருதரம் கிறிஸ்து இளைஞர் சங்கத்

தில் சங்கீதக் கூட்டம் நடந்தது. வி, ஆர். ஸ்ரீநிவாசையங்கார் தலைமை வகித்தார். நானும் பேசினேன். பாப்லி பிடிலிழுத்துப் பாடினார். கூட்டமுடிவில் என்னையும் வி. ஆ.ரையும் ராமகிருஷ்ண லஞ்ச் ஹோமுக்கு அழைத்துச்சென்று எங்கள்முன் இனிப்பும் காரமுமாக வைத்தார். கீர்த்தனாசாரியார் "பாரதியார் தங்கள் பாட்டை எனக்குத் தாருங்கள்...பிரகாசப்படுத்துகிறேன். வாக்கு திவ்யமாயிருக்கிறது" என்று பேசிக்கொண்டே தட்டைக் காலிசெய்துவிட்டார். நான் எனது தட்டையும் அவரிடம் வைத்து "இதையும் காலிபண்ணும்" என்றேன்- 'பாப்லி நீங்கள் சாப்பிடுங்கள் ஐயா" என்றார். "வந்தனம் ஐயா! நான் ஓட்டலில் சாப்பிடுவதில்லை; மேலும் நான் இயற்கையான கனி கடலையே உண்டு மகிழ்வேன்." என்றேன். பாப்லி "என் மனைவி நிருந்தால் வீட்டுக்கு அழைத்துச் சென்று உமக்கு இயற்கையான சல்லாது கனி கடலை எம்லாம் படைப்பேன்" என்றார். உடனே கனிகள் வரவழைத்துத் தந்தார். நான் ஒன்றுமட்டும் உண்டு கிளம்பினேன். அவர் என்னை மோடாரில் ஸ்வராஜ்யா நிலயத்திற்கு அழைத்துவந்து, என்னுடன் உள்ளே வந்து, என் வாழ்க்கையைப் பார்த்து "கிறிஸ்துபோல் வாழ்கிறீர்" என்று மீண்டும் சொன்னார். அவருக்கு எனது நூல்களைத் தந்து, "இவையே நான் உமக்குத் தரும் கிறிஸ்துமஸ் அப்பங்கள்" என்றேன்.

180. கதர்ப்பணி

ஆம் நான் கிறிஸ்துபோல் வாழவே விரும்பினேன். உயிரோடிருக்கும் கிறிஸ்து மஹாத்மா காந்திதான். ஆதலால் அவர் அடிச்சுவடைப் பின்பற்றினேன். திருச்சியில் பார்த்தபோது அவர் ஆக்க வேலை செய்யச்சொன்னார். ஆக்கவேலையின் உயிர்நாடி, கதர். ஆதலால் தேவகோட்டையில் எளிய வாழ்வு மேற்கொண்டு நான் கதர்ப்பணி செய்தேன்.

பள்ளிக்கூடத்தில் சுமார் நாற்பது ராட்டினங்கள் சுழன்றன: ராட்டை வகுப்பு தினம் 45 நிமிஷம்; நானும் தினம் ஒருமணி நேரம் அவசியம் நூற்று நூற்றுச் சிட்டம்போட்டு வைத்திருந்தேன். நாங்களே பஞ்சு கொட்டிப் பட்டை போட்டோம். நூல் பட்டைகளும் குவிந்து கிடந்தன. எனது சிப்பாய்களெல்லோரும் முதல்தரமாக நூற்பார்கள். ராகவன் வரதன் அவர் தகப்பனார் ஸ்ரீநிவாசையங்கார் மூவரும் அல்லி நூல்போல் மெல்லிதாக நூற்பார்கள். இவர்கள் பல போட்டிகளில் வெகுமதி பெற்றார்கள். ஒருநாள் எங்கள் நூலைக் கதராக்கி அணிய முனைந்தோம். ஆனால் ஒருதறி ஓட நூல் போதாது; கிராமங்களில் நூல் சேர்க்க முனைந்தோம். கல்லலில் கொஞ்சம் சேர்ந்தது. இன்னும் வேண்டும். "வாரும் பாரதி" என்று கிளம்பினார் சங்கரையர். இருவரும் திருப்புனல் வாச

லுக்கு நடந்து சென்றோம்; பதினேழுமைல்; இங்கே ஐந்து மணிக்குப் புறப்பட்டோம். அங்கே ஒன்பது மணிக்கெல்லாம் போய்விட்டோம். வழிநெடுக சங்கரையர் தமது ராமநாதபுரம் அனுபவங்களைச் சொல்லி வந்தார். அவர் இனிய பேச்சாளர். வீட்டில் அவர் தர்மபத்தினி உப சரித்தாள். மறுநாள் ஆவணியாவிட்டம். நான் பூணூல் போடுவ தில்லை. கோயிலில் தியானம் செய்துகொண்டிருந்தேன். சங்கரையர் பாரதி! "வாரும் சொக்கி விழாதேயும்" என்று இழுத்துவந்து, பெரிய இலைமுன் அமர்த்தினர் சாப்பிடும்போது மௌனம்; ஆதலால் ஐயர் என் வக்ர விநோதங்களையெல்லாம் அகத்துக்காரியிடம் அரங்கேற்றினர். "பாரதி காயக்லேசானந்தர்: குதிரைக்காவது கொள்ளவித்துவைப் பர். இவர் ஊறப்போட்ட பச்சைக் கடலையை வாழைப் பழத்துடன் சாப் பிட்டு, கவிபாட உட்கார்ந்தால், அடித்தாலும் உணர்ச்சியிராது. இவ ருடன் நான் குடித்தனம் செய்தபோது, உப்பில்லாப் பத்தியம் இருக்க நேர்ந்தது. மிளகாயைக் கண்டால் பயம்! ஒரு பச்சைமிளகாய் ஊறு காய் போடு அவர் இலையில்...பாரதி நறுக் கடியும்...அள்ளுங்காணும்" நான் மிளகாயைத் தொடவில்லை. அம்மாள் சிரித்தாள். மகள் சிரித் தாள். சங்கரரோ "இவரைத் திருத்த ஒருத்தி வேணும். கட்டிப்போட் டால் காரசாரமாகச் சாப்பிடுவார்" என்று கல்விபண்ணி அப்பளம், வடை, போளி, பாயசம் எல்லாம் ஏற்றுமதி செய்துவிட்டார். கடாத் தினி தின்ன தவளைபோல் நான் திக்குமுக்காடினேன். சாப்பாடானதும் ஐயர் என்னைத் தமது வயலுக்கு அழைத்துச் சென்றார். வயல்களைச் சுற்றிப்பார்த்துக் குடியானவர் குறைகளை யறிந்தேன். 'உழவன் கணக் குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்பது உண்மை பாட்டா ளர் நன்மைக்காகவே ஜனோபகார சங்கம் என் மனதில் உருவானது. இதன் விபரம் திருநூலிற் காண்க.

மறுநாள் மாலை நாங்கள் சுந்தரபாண்டி பட்டணத்திற்குச் சென் றோம். அங்கே இஸ்லாமியரே அதிகம். எங்கள் நண்பர் தறிபோட்டுப் பிழைத்தனர். நாங்கள் முன்பே அங்கே ராட்டினங்கள் தந்து நூற்கச் செய்திருந்தோம். நாங்கள் சென்றதுமே பெண்கள், தாம் நூற்ற நூல் களைக் கண்டு கண்டாக ஆண்களிடம் தந்தனுப்பினர். நாங்கள் ஐம்பது ரூபா நூல் வாங்கினோம்: பெரிய சாக்கில் எல்லாம் போட்டு சங்கரையர் என் தலையில் கட்டிவிட்டார். நான் அந்தத் தெருவைச் சுற்றி ஏழைகள் நிலையை யறிந்தேன். கணவனை இழந்தவர், குடுகுடு கிழவிகள், காதியற்றவர், கண்கலங்கி தங்கள் வறுமையைத் தீர்க்க ஒரேவழி கண்டு நூற்பதே என்றனர். அவர்கள் வெகு விரைவாக நூற்று, நாளுக்குக் கால் அரை சம்பாதித்தனர். அந்த நூலை உள்ளூரி லேயே சில சாகெபுகள் சேர்த்துத் தறிபோட்டு லுங்கி நெய்தனர். நான் "சக்கரம் சுழற்றிடுவோம்" என்ற பாட்டுப்பாடி ராட்டைக்கு ஊக்கமளித்தேன்.

பதினேழு மைல் குழந்தையைத் தூக்கும் தாய்போல் அன்பினால் கதர் நூல் சுமந்தேன். சங்கரையர் அனுபவக் கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார்; அன்றுமுதல் நான் கதர்மூட்டை சுமப்பதில் சளைக்கவில்லை. அன்பினால் பெரிய மூட்டைகளும் கனப்பதில்லை, தாய்க்குக் குழந்தை பாரமில்லை. மூட்டை மட்டுமில்லை. பிறர் செய்யும் கேலி நையாண்டிகளையும் பொறுக்கப் பழகினேன். இப்படி நூல் சேர்த்துத் தறி போட்டோம்.

181. தறி நெய்தேன்

பெரியமைனர் ராமநாதர் தோட்டத்தில் தறி போட்டோம். அவரும் கதரன்பர். அவர் வீட்டுக்கே வருஷம் இரண்டாயிரம் ரூபா கதர்வேண்டும். பள்ளிக்கூடத்தில் இரண்டாயிரம் ரூபா கதர் செலவாகும். இதர நண்பர்கள் இரண்டாயிரம் மூவாயிரம் என்று தந்து வாங்குவர். ஆதலால் தைரியமாக ஆயிரம் ரூபா முதல் வைத்துத்தறி ஓட்டினோம். ஆருவயல் லிங்கையாவும் வீரையாவும் குடும்பத்துடன் அதில் பாடுபட்டார்கள். பெண்கள் ஆசுபோட்டுக் கண்டு சுற்றித் தருவார்கள். ஆண்கள் இருவரும் நெய்வார்கள். வாரம் இரண்டொரு பாவு நெய்தாகும். பேனு ஓட்டும் நானும் தறி ஓட்டத் தொடங்கினேன், ஆஸ் பலகையில் நூலைச் சுற்றி எடுத்து, பாவு விரித்துக் கஞ்சி வைத்தேன். நெசவு தனியே நடக்காது, நாலைந்து பேர் சேர்ந்தாலே நடக்கும். கஞ்சி வைப்பது மிகவும் சிரமமான வேலை. நூலை இரவு தெளிந்த சுண்ணாத் தண்ணிரில் ஊறவைத்து,காலையில் கஞ்சி வைத்தால் நல்லது. முதற்பாவு தறியில் மாட்டியானது. நான் திருவடத்தில் சிட்டங்களை மாட்டிக் கண்டு கண்டாகச் சுற்றித் தந்தேன். குழலில் அதை மாட்டிமாட்டி தக்தக் என்று மிதித்து, பட்பட் என்று நெய்தான் லிங்கையா. நானும் அப்படித் தறிஓட்டலாம் என்றே நினைத்தேன். நல்ல நாள் பார்த்துத் தறிமிதித்தேன். குழலை மாட்டி விசையை இழுத்தேன். குழல் படார் என்று பறந்து, சுவரில் துளை போட்டு விழுந்தது! மறுதடவை மெதுவாக ஓட்டினேன். பத்து இழை ஒடியது; படக்கென்று இழை அறுந்தது; பொறுமையாக முடித்தேன். பட் மறுபடி கண்டு அறுந்தது; பொறுமை! பட் பட்! பாவில் இரண்டு இழை அறுந்தன. வெகு சிரமப்பட்டு முடித்து மறுபடி குழல் ஓட்டினேன். டக் டக்! குழல் பாவுக்கு நடுவே சிக்கிக் கொண்டது. படக்! படக்! இரண்டு இழைகள் அறுந்தன. இழை முடித்து மறுபடி ஓட்டினேன். ஒருமிதி அழுத்த மறந்தேன். குழல் பாவுக்கு நடுவே பாய்ந்து கீழே விழுந்தது. அதை எடுத்து விட்டு மறுபடி நெய்தேன். இப்படிப் பொறுமையின் எல்லையைத்தாண்டி நானும் ஒரு துண்டு நெய்து பெருமையாக அணிந்தேன். லிங்கையா ஆருவயலுக்குப் போனான். தறியும் அவனுடன் போனது. நான் எனது சிப்பாய்களுடன் ஆருவயலுக்குச் சென்று, தறிகாரருடன்

வேலை செய்தேன். நான் நெடுநாளாக நூற்று நூற்று ஒருபாவு தயாரித்தேன். நானும் லிங்கையாவும் கஞ்சி வைத்துத் தறியில் மாட்டினோம். நான் தினம் காலை ஒன்பது மணி வரையில் நெய்வதும் பிறகு பள்ளிக்கூடத்திற்கு ஓடி வருவதுமா யிருந்தேன். ஒருவாரம் நான் செல்ல முடியவில்லை. பள்ளிக்கூடத்தில் அவசரவேலை. பிறகு சென்று பார்த்தேன். தறிகாரன் எல்லாம் நெய்து காரைக்குடிச் சந்தையில் விற்றுச் சாப்பிட்டுவிட்டான். கேட்டதற்கு "எங்கே ஸாமி கொடுத்தே, உம்" என்றான். எத்தனையோ ஏமாற்றத்துடன் இதுவும் ஒன்று என்று திரும்பி வந்து சேர்ந்தேன். மறுபடி இரவு பகலாக நூற்று ஒரு பாவுக்கு நூல் தயார் செய்தேன். இப்போது தறி எங்கள் பள்ளிக்கூடத்தருகேயே வந்தது. ஆனால் நான் அதில் நிபுணனாகவேண்டும் என்று தறிகாரர் வீட்டுக்கே சென்றேன். அவர்கள் அபின் உண்டு "காயரே லொடாயரே ஆவடே தயிர் வடே" என்று உளறிக்கொண்டிருந்தார்கள். "ஐயா அபின் பொல்லாது; குடி கெட்ட சனி" என்று உபதேசித்தேன். 'நியாயந்தானுங்க" என்று கேட்டுக்கொண்டே மறுநாளும் போதை போட்டு வந்தனர். நான் திருக்குறள் மேற்கோள் காட்டி உபதேசித்தேன். ஒருவன் "படிபில்லாச் சென்மங்களுக்குப் புத்தி ஏறாதையா" என்றான். "ஸாமி எனக்குப் படிப்புச் சொல்லிக் கொடு' என்றான் ஒருவன். "சம்மதம் நீ தறி சொல்லித்தா, நான் எழுத்துச் சொல்லித்தருகிறேன்." என்று ஒப்பந்தம் பேசினேன். அவனுக்குப்படிப்பும் ஏறவில்லை எனக்குத்தறியும் சரிவரவில்லை. மக்கத்துக்கும் பேனாவுக்கும் பொருந்தவில்லை. நான் பொறுமையை ஊன்றி ஒருச்சாண் நெய்வதற்குள் தொழிலாளி இரண்டுமுழம் நெய்தான்.

தமிழ்க்குருகுலத்தில் நான் எனது ஆடையை நூற்று நெய்தே அணிந்தேன். பிற்காலமும் தினம் நூற்று நூலைச் சேர்ப்பது, ஒரு கிராமத்தறியில் நெய்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு வேண்டிய துண்டுகளைத் தயாரித்து வைப்பதுமா யிருந்தேன். ஒரே ஆடைதான் அணிவது. ஆனால் ஒருநாள் ஹார்விமில்லைப் பார்த்தேன். கதிர்கள் நிமிஷத்திற்குப் பதினாயிரம் தடவை சுழன்று தடதடவென்று அருவி போல் ஆடை குவிப்பதைக் கண்டேன். இந்த யந்திரத்துடன் இராட்டினமும் கைத்தறியும் போட்டி போட முடியாது என்றுணர்ந்தேன். மின்சாரத்தைப் பொருத்தி வேலை செய்தால் ஒருக்கால் சமாளிக்கலாம். கொட்டை நூற்றால் தினம் இரண்டணா முதல் ஐந்தணா வரையில் சம்பாதிக்கலாம். தறிகாரன் தினம் ஒரு ரூபா அதிகப்படியாகச் சம்பாதிக்கலாம். கால நிலை கடுமையாகி வருகிறது. இந்தப்பெரிய நாட்டிற்கு ஆடையுடுத்தப் பெரிய யந்திரங்கள் வேண்டும். அல்லது ஒவ்வொருகையும் நூற்கவேண்டும். நாடு உலகுடன் முன்னேறவேண்டுமானால், யந்திரத்தின் உதவியும் மின்சார சக்தியும் அவசியம் என்றே முடிவு செய்தேன். ஆனால் கிராமப்பெண்கள் ஓய்வு நாட்களில் நூற்பதும், ஓய்வுநாளில் தெரிந்தவர் நெய்வதும், துணைத்தொழிலாகலாம்.

182. இந்திப்பயிற்சி

கூதருக்கு அடுத்தது இந்தி; இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும். இந்தியாவின் முன்மொழியும் தொன்மொழியுமான தமிழ் முப்பது எழுத்தில் முற்ற முடிந்த இனியமொழி. ஆனால் நாம் அதை வளர்க்காது சோம்பி விட்டோம். ஆதலால் இந்தி பொது மொழியாக வேண்டியிருக்கிறது. தமிழருக்குத் தமிழ். இந்தியருக்கு இந்தி, உலகுக்கு ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளை நாம் கற்கவேண்டும். நான் முன்பே இந்தி யறிந்திருந்தேன். இப்போது அதை ஆழக்கற்றேன். கல்வி டைக்குறிச்சி கிருஷ்ணசாமி ஐயர் என் அறையிலேயே இருந்தார். எங்கள் பள்ளிக்கூடத்திலேயே இந்தி வகுப்பிற்கு ஏற்பாடு செய்தேன்: பதினைந்து பேர் கற்றனர். எல்லாரும் பரீட்சை கொடுத்தோம். பள்ளிக் கூடத்திலேயே பரீட்சை நடந்தது, நான் நல்லமார்க்குடன் தேறிப் பத்திரமும் பெற்றேன். பிறகு பண்டித பரீட்சைக்குப் படித்தேன். அந்தோளன் (புரட்சி) என்றொரு இந்தி நாடகம் எழுதி இந்திப்ரேமீ மண்டலத்தில் நான் படித்தேன். கவிதைகளும் புனைந்தேன். அவை யெல்லாம் எங்கோ போயின! கிருஷ்ணையர் சென்ற பிறகு ஜமீந்தார் வீட்டில் இருந்த ஒரு ராஜபுத்திர சிப்பாய் எனது நண்பனாகி, துளஸி ராமாயணம் படிக்க உதவினான். அடிக்கடி அவன் என் அறையில் பூரி தயாரிப்பான். அவனிடம் ராமாயணத்துடன் வடநாட்டுப் பட்சணம் செய்யவும் கற்றேன். இது பிற்காலம் பயனானது. பின்வாழ் வின் முன்னோட்டமே முன்வாழ்வு. ராம்ஜீ முப்பது பூரியும், பத்து சப்பாத்தியும் சாப்பிடுவான். நான் ஒரு சப்பாத்தி இரண்டு பூரிதான் தின்னமுடிந்தது. அவனை நான் காந்தி பக்தனாக்கி ராம்ராம் காந்தி ராம் என்று ஜபம் செய்யச் சொன்னேன்

183. காந்தி சேவை

தேவகோட்டையில் சுதந்தரமாகவே நான் காந்தி சேவை செய்தேன். பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டேன். உள்ளூரில் எனது நண்பர் சிவசுப்பிரமணியம், நாகசாமி, சுப்ரமணியர், சங்கர லிங்கம், சாரணநாதன் ஆகிய எல்லாரும் உண்மையான காந்தி பக்தர். பலர் கதர் அணிந்தனர். செட்டியார்கள் பலர் காங்கரஸ் நேசர். அடிக்கடி ஊருக்குத்தலைவர்கள் வருவார்கள். செட்டி நாடே தமிழகத்தின் அளகாபுரி. ஆதலால் நிதி வசூலுக்கு இங்கே வரத்தான் வேண்டும். ஸ்ரீநிவாசர், வரதராஜலு, ஈவே. ராமசாமியார், ஸி. ஆர். தாஸ். டாக்டர் ராஜன், வ.வே.சு.ஐயர், மகாதேவர் வைத்திநாதர் ஆகிய பல தலைவர்கள் செட்டி நாட்டுக்கு வந்த வண்ணமிருந்தனர். தென்னஞ் செட்டி ஊருணிக் கரையில் கூட்டம் நடக்கும். பேச்செல்லாம் கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, அடக்குமுறைக்கண்டனம், காங்கரஸ் முயற்சி, காந்தி சேவைகளைப்பற்றியே இருக்கும். ஒத்துழையாமை

செய்த பல தேசபக்தர்கள் என்னிடம் வருவார்கள். அவர்களை நான் உபசரித்து இரவில் பள்ளிக்கூடத்தில் தங்கச் செய்வேன். விரும்பினால் என்னுடன் சாப்பிடச்சொல்லுவேன், ஆரணி சுகோதயம் சுப்ரமணியர் வந்திருந்தார். அவரே எனக்கு ரமண மஹர்ஷிகளைப் பற்றிச் சொன்னார்.

அந்தக்காலம் சுயராஜ்யக்கட்சி தலை தூக்கியது. கயா காங்கரஸில், தாஸ் மோதிலால் தனிக்கட்சி நடத்தப்புகுந்தனர், ராஜாஜியின் மூளை சமய சஞ்சீவியாகி, காந்தீயத்தைக்காத்தது, தாஸ் தமது உடல் பொருள் ஆவியெல்லாம், தமது மாளிகைச் செல்வமெல்லாம், தேசத்திற்கே அர்ப்பணம் செய்தார். அவருக்கு வடநாட்டிற் செல்வாக்கிருந்தது. காந்தியுடன் சமரஸம் பேசி, சட்ட சபையிற் புகுந்து, சிங்கத்தைக்குகையில் எதிர்ப்பதென்று முனைந்தார் தாஸர். இங்கே சத்யமூர்த்தியும் ஸ்ரீநிவாசய்யங்காரும் சட்ட சபைக் கட்சிக்குப் பாடுபட்டனர். லாலாஜி, தாஸ், மோதிலால், மாளவியா, விட்டல் பாய் போன்றோர் சட்ட சபையில் வெளுத்து வாங்கினர். காகிதத்தீர்மானங்கள் குவிந்தன. எல்லாம் செல்லாக்காசுக்கு முலம்பூசிச் செடிப்பவுன் என்ற கதையானது. அனுமார் இல்லாத சுந்தரகாண்டம் போல் காந்தியில்லாத சுயராஜ்ய இயக்கம் பொதுஜனங்களைக் கவரவில்லை. தாஸ் காரைக்குடிக்கு வந்தார். வெகு மிடுக்காக "காந்தியின் போக்கு மாறவேண்டும். சர்க்காவும் கதரும் கட்டை வண்டியும் போதா. பிரிடிஷ் ஆட்சியின் விசை சட்டசபை. அதைக் கைப்பற்றவேண்டும். இன்றேல் அதில் எதிரிகள் புகுந்து காங்கரஸ்காரருக்கு 144 போடுகிறார்கள்" என்றார். அவர் மிடுக்கும், சினமும், உணவுவகையும் நம்மவருக்குப் பிடிக்கவில்லை. வந்த நாளே மரியாதையாகத் திருப்பி யனுப்பிவிட்டார்கள். தேவகோட்டைக்கு அழைக்கவில்லை.

வந்தார் தேசபந்து ஸ்ரீநிவாச ஐயங்கார். அவர் செட்டிநாட்டு அட்வகேட். அள. அரு வழக்குகளெல்லாம் அவரிடமே செல்லும். அவரைப் பார்த்துப் பேசவே கட்டணம் அபரிமிதம். அப்படிப்பட்டவர் தேடி வருவதென்றால் சாமான்யமா? ஐயங்கார் சோ. மு, பங்களாவில் இறங்கினார். என்னைக் கண்டதுமே "என்ன பாரதி, வவேசு ஐயர் குருகுலம் வைச்சிருக்காரே போகலியா? உமக்கு ஆஸ்ரமந்தான் லாயக்கு" என்றார். "உங்கள் வாக்கே என் மனதில் துடிக்கிறது. இங்கே நிலையான ஒரு காரியம் செய்யப் போகிறேன்; பிறகு சேரமாதேவிதான்" என்றேன். அன்று மாலை இரட்டைக்குதிரை சாரட்டில் அவருக்குச் சிறப்பான பவனி நடந்தது, யானைகூட வந்தது. நாங்கள் தேசிய கீதம் பாடினோம். கோட்டையம்மன் மைதானத்தில் பெரிய கூட்டம். அவர் பிள்ளைத் தமிழ் பேசினார்: "இங்கிலீஷ்காரன் வாஜிபியா சுதந்தரம் தரமாட்டான். நாம் வழவழான்னு இருந்தால்,

காரியம் மோசமாகும் சட்டசபைக்குள் போய் சண்டைபோட்டாலே ஆள் மசிவான். காந்தியும் அதற்குச் சம்மதித்தார். நீங்களெல்லாரும் காங்கரஸ்காரருக்கே ஓட்டுக்கொடுத்து அனுப்புங்கோ" என்றார். செட்டி நாட்டில் அவர் சொல்லுக்கு இரண்டில்லை. தாஸ் பேச்சு ஏற வில்லை. ஐயங்கார் பேச்சு கப் என்று பிடித்தது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த சுவர்ணஞ் செட்டியார் "ஆயிரக்கணக்காக பீஸ்தந்து நாங்கள் பார்க்கும் ஸ்ரீமான் நம்மைத் தேடிவந்தார். காந்தி வாசகம் கொண்டுவந்தார். தமிழ்நாடே அவர். அவரே அரசியல் உலகில் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கச் செய்தவர்" என்று புகழ்ந்தார்,

ஆனால் தேவகோட்டை காந்திக்கோட்டையாகவே யிருந்தது. நாங்கள் திலகர் தினம் அமோகமாகக் கொண்டாடினோம். பஜனை ஊர்வலம் அமளியாக நடந்தது. எனது தேசிய கீதங்கள் அப்போது அரங்கேறின. மஹாத்மாவுக்குக் குடல் நோய்கண்டு மாடாக்ஸ் சத்திர சிகிச்சை செய்தார். அன்று நாங்கள் பெரிய நகர பஜனையும், கோயிலில் அர்ச்சனையும், காந்திக்காகப் பிரார்த்தனையும் நடத்தினோம். எனது பாடல்களை நான் ஓரடி பாடுவதும் எல்லாரும் திருப்பிப் பாடுவதுமாக ஊர்வலம் நடந்தது. காந்தி சம்பந்தமான பாட்டெல்லாம் காந்தி கீர்த்தனத்தில் சேர்த்திருக்கிறேன்; காண்க. காந்தி இரண்டாண்டுகளிலேயே விடுதலையடைந்து சபர்மதியில் கதர்த்தொண்டு செய்தார். அவரைச் சார்ந்த வைதிக ஒத்துழையாதார் கதர்நிதி திரட்டினர். அதற்காக மதுரை வைத்திநாதர், நாயக்கர்; வரதராஜுலு நாயுடு ஆகியோர் வந்தனர். நாயுடு காரு கதர்நிதிக்குப் பெருந்தொகை தந்தாலே பேசுவேன் என்று வாயை இறுக்கி மூடிக்கொண்டார். வைத்திநாதர் காந்தியே தேசரக்ஷகன் என்று பேசினர். எழுந்தார் ராமசாமி நாயக்கர். அவருக்கே உரிய அந்த பாஷையில், அழுத்தம் திருத்தம் காரசாரமாக அள்ளிவிட்டார் அகத்தில் பட்டதை: "சட்டசபையில் போய் முட்டிக்கொள்கிறவர்கள் முட்டிக்கொண்டு காயம் கட்டிக்கட்டும். நாம் காந்திவழியே நடப்போம். கதர் அணிதல், மதுவிலக்கு, தீண்டாமையை ஒழித்தல் ஆகிய மூன்று ஆக்கவேலையே இப்போது நமது வேலை. கதர் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கும்; அது நாடெங்கும் பெருகவேண்டும். அவரவருக்கு இயன்றதைத் தந்து, இந்தக் காரியம் வெற்றிபெறச் செய்யுங்கள். தீண்டாமையை ஒழிக்கவேண்டும். சாதிபேதி எல்லாம் பழைய பீடைகள். நமது சகோதரரைத் தீண்டாதவர் என்று தள்ளிவைப்பது, நமக்கே அவமானம். அவர் கோவிலில் புகுந்தால் என்ன; கல்லுச்சாமி ஓடிப் போகுமா? நமது சகோதரனைப் பயந்தோடும் சாமியைக் கட்டி அழுவானேன்? அந்தக் கல்லுச்சாமியைக் குப்புறப் போட்டு வேட்டி துவைப்போம். சாமி பூதம் என்று நம்மை அடிமைப்படுத்தும் குருட்டுப் பழக்கங்களை ஒழிப்போம்." பின்னால் வரும் நாயக்கரை அன்றே கண்டேன். அவர் "கோட்டையம்மனைத் தென்னஞ்செட்டி ஊருணியில் தூக்கிப்போட்டால் என்ன?" என்று கேட்டார். ஐயா இந்த்

ஊருணியில் தண்ணீர் இல்லையே. போட்டால் மறுபடி கொண்டுவந்து திருநாள் நடத்தி பிரதிஷ்டை செய்துவிடுவார்கள். அந்தச் செலவு நேராதபடி செய்யும்.'' என்றொரு நண்பர் எதிர் பேசினார். நாங்கள் அந்தக்கூட்டத்தில் நூறு ரூபா கதர்நிதிக்கு வசூலித்துத் தந்தோம். இப்படி அரசியல் வாதிகள் ஆளுக்கொரு பேச்சுப் பெசினர். நான் நிலையான ஒரு பணியை நாடினேன்.

184. அன்பு நிலையம்

என்னைக் கருதி ஓர் அன்பர் கூட்டம் உருவானது. எல்லாருக்கும் யோகசித்தி பாடம் சொன்னேன். திருநூலில் உள்ள பள்ளிக்கூடப் பகுதியைப் படியுங்கள். அதுதான் எனது உத்தேசம். மீனாட்சி வித்யாலயத்தை சர்க்காரில் சேர்த்து கிராண்டுப் பள்ளிக்கூடமாக்க முயன்றனர். பரிசோதகர் C. சுந்தரமையரும் வந்தார். ''சரி'' என்றார். உடனே நான் தனியாக ஒரு தொழிற் பாடசாலை காண முயன்றேன். அதற்கே அன்பு நிலையம் என்று பெயரிட்டேன். என்னிடம் பாங்கிலிருந்த பணத்தை அதற்கே செலவிடத் துணிந்தேன். நான் வைத்தி, ராகவன், வரதன், கிருஷ்ணன், டைரி அருணாசலம் முதலிய பத்துப்பேர்கள் சேர்ந்தோம்; புதுச் சிலம்பணிக் குளத்திற்குத் தெற்கே மதிலெடுத்த தோட்டமிருந்தது. அதை மாதம் ஒரு ரூபா வாடகைக்குப் பேசி முடித்தோம். ''முதல் பாடம் நமக்கு வேண்டிய உணவை விளைப்பதுதான்'' என்றேன். அந்தத் தோட்டத்தை நாள் முழுதும் நன்றாகக் கொத்திச் செப்பனிட்டோம். அருகே முனிசிபல் குப்பை கூளங்களும் பன்றி எருவும் இருந்தன. கூடை கூடையாக அள்ளிக் கொண்டு தோட்டத்தில் சேர்த்தோம். நன்றாகத் தண்ணீர் பாய்ச்சினோம். அது சிறந்த தேகப்பயிற்சியானது. பிறகு நாற்பது வாழைக் கன்று நட்டோம். குளத்திலிருந்து நீர் சுமப்பதேன். நாமே கிணறு தோண்டுவோம் என்று மண்வெட்டிப் பிடித்தோம். ஆறடி தோண்டியாயிற்று. நண்பர் எங்கள் வேலையைக் கவனித்தனர். தேவகோட்டையில் ''அன்பு நிலயக் குருகுலண்டோய்'' என்று ஆர்த்தனர். சிலர் கீற்றும் மூங்கிலும் தந்தனர். அடுத்தபாடம் வீடு கட்டுதல். நாங்கள் கீற்று முடைந்தோம். மூங்கில் கால் நட்டுக் கொட்டகை போட்டு முடித்தோம். காரியம் மின்சார வேகத்தில்; மறுநாள் திறப்பு விழா. தேங்காய் உடைத்துப் பழம் நிவேதித்து ஒரு பாட்டுப்பாடி, யோகசித்தி வகுப்பு நடத்தினேன். திருக்குறள் முதல் அதிகாரம் நடந்தது: பிறகு ஆங்கிலம் நடந்தது. பிறகு எண்சுவடி முறை வைத்தோம். நானும் அங்கே மாணவனே. எல்லாரும் என் தோழரே. பிறகு வாழைக்குத் தண்ணீர் விட்டோம். ராகவன் தகப்பனார் ஸ்ரீநிவாச பாகவதரும் எங்களுடன் உற்சாகமாக உழைத்தார், அவர் சிறந்த சித்த வைத்தியர், பாடகர், ராமாயணபக்தர், காந்திபக்தர், ராட்டைப்புலி. அவரை ராட்டினப்புலவராக்கினோம் ,மறுநாளே நூற்றல் தொடங்கிவிட்டது. என்

துறுதுறுப்பு; விறுவிறுப்பானது. "இனி அடிமைக் கல்வி தேவையில்லை. இதோ குருகுலம்" என்றதுதான் தாமதம்; என் சிப்பாய்கள் சர்க்காரில் சேரப்போகும் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டார்கள். அவர்களுக்குச் சுருக்குவழியில் ஆங்கிலம் சொல்லித் தந்தேன். பள்ளிக்கூடத்தில் காந்திப் பேச்சுதான் பாடம். அன்பு நிலையத்திற்குப் பல மாணவர் வர இருந்தனர். ஆனால் பணம்? என் பணம் இரண்டுமூன்று மாத செலவுக்காகும். பிறகு? யாரைக்கேட்பது? பிச்சை கூடாது. சாப்பிட? மாணவர் செலவு? லகாரம் வேண்டும். யோசித்தேன். "உன் முயற்சி பலிக்காது என் வழியேவா" என்றது அந்தராத்மா.

185. ஐயர் அழைப்பு

அப்போது வந்தார் தி.ரா. மகாதேவர். தேவகோட்டையில் அவர் பத்து அரசியல் பிரசங்கம் செய்தார். பிறகு குருகுலத்திற்குப்பணம் வசூலிக்க முயன்றார். சோமு வீட்டுக்கு நடந்துகொண்டிருந்தார். அவர் கூட்டங்களில் நானும் கலந்துகொண்டு பேசினேன், பாடினேன். என்னிடம் அவருக்கு நல்ல அன்பு. ஒருநாள் நான் அவரை என் அறைக்கு வரவேற்று உளுந்துவடை விருந்து நடத்தினேன். (வடை வைத்தி உபயம்). என் வாழ்க்கை வாக்கு நோக்கு எல்லாம் அவர் கவனித்து, வவேசு. ஐயருக்கு எழுதினார். "தமிழ் நாட்டுக்கு ஒரு குருகுலம் ஏற்பட்டுள்ளது. அதில் தங்கள் சக்தியை நிவேதித்தால் தமிழருக்கே நலமாகும்' என்றார். நான் உடனே ஐயருக்கு எழுதினேன். அத்துடன் என் யோகசித்திக்கும் ஒரு முன்னுரை கேட்டிருந்தேன். அதன் கையெழுத்துப் பிரதியையும் பாரதசக்தியையும் அவர் முன்பே பார்த்திருந்தார்.

வீரவிளக்கே வித்தகப்பெரும
அருந்தமிழ் உய்யக் குருகுலம் கண்டு
இனிவரும் வீரரைக் கனிவுடன் பயிற்றும்
ஆசா ரியநின் அருகி லிருந்தே
யானுந் தமிழ்ப்பணி யியற்ற விரும்பினேன்.
உடல்பொருள் ஆவி கடமைக் கீவேன்.
ஆசிகூறின் அன்புடன் வருவேன்.
பாரத சக்திப் பனுவலோன் யானே!

ஐயர் எனது நூலுக்கு அழகான முன்னுரையுடன் "சந்தோஷம்; பாரதி அவசியம் வரவேணும். நீண்ட நாளாக எதிர்பார்த்ததுதானே" என்றெழுதினார். முன்னுரையில அவர் சொன்னார்:

ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் அறநூல் (யோகசித்தி) இன்று தமிழருக்கு இனியதோர் விருந்தாக அளிக்கப்படுகிறது. இந்நாளில்

பக்தி விசுவாசமும் சிரத்தையும் குறைந்து வருகிறது. இக்காலம் மௌன விரதம் பூண்டு, மௌனாகாசத்தில் அடியார்க்கெளியனாகிய அண்ணலின் வாக்கிற்குக் காத்திருந்து, அத் திருவாக்கையே தமது நூலுக்கு வித்தாகக்கொண்டு துலங்கும் அருள் நூல்கள் அருகி வருகின்றன. பாரதியார் எளிய வாழ்க்கையும் பெரிய நோக்கமும் உடையவர். தம் வாழ்வையே தவத்திற்கு நிலைக்களமாக்கியவர். அவர் வாக்கு நம்மனோர்க்குப் புதிய வழிகாட்டியாகும்.

இந்நூல் இவர் எழுதிய பாரதசக்தி மகா காவியத்தின் உள்ளமாகும். இது ஈரடிக்குறளால் அமைந்த சிறந்த நீதி நூலாகத் திகழ்கிறது. உலகத்தில் இதுகாறும் தோன்றிய மகான்களின் கருத்துக்களையும் ஆசிரியர் தாமே நேராகக் கண்ட உண்மைகளையும் தன்னுள் அடக்கி, இது தமிழ் மக்களுக்கு அறிவு கொளுத்தும் சிறந்த கிரந்தமாக விளங்குகிறது. குறள் முதலிய நீதி நூல்கள் தமிழில் உளளன. அவை தத்தம் காலத்திற்குக் கோசரமான, பொதுவான அறங்களை நிர்ணயித்து தந்துவிட்டு நிற்கின்றன. ஆனால் நூற்றாண்டுகள் செல்லச் செல்லப் புதிய சந்தர்ப்பங்கள் தோன்றுகின்றன. இப் புதிய சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டும் புதிய அற நூல்கள் தோன்ற வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. உதாரணமாக இந்தக் காலத்தில் சமத்துவம் சகோதரத்துவம் ஜனஆட்சி முதலிய புதிய தர்மங்கள் தோன்றியிருப்பதால், அறிவாளிகள் அவற்றின் இயல்புகளை ஏனையோருக்கு எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது. இவற்றைப் பற்றிப் பழைய நூலாசிரியர் பேசவில்லை. ஆதலால் இவ்வறங்களை விவகரித்து அவற்றிற்குரிய ஸ்தானத்தில் அவ்வவற்றை வைக்கும் இந்த நீதிநூல், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள ஓர் ஆவசியகத்தைப் பூர்த்தி செய்கிறது.

சுதந்தரம், தேசபக்தி, குடியரசு, ஜனசமத்துவம், தொழில் முன்னேற்றம், இவற்றைக் குறித்து இந்த நூல் பரக்கப் பேசுகிறது. பழைய ஆத்மீக உண்மைகளைப் புதிய யுகத்திற் கேற்றபடி வியாக்யானம் செய்கிறது. முக்கியமாக மஹாத்மா காந்தியின் செந்நெறி பற்றிச் செல்கிறது. இந்நூல் நம்மனோருக்கு தைரியமும் விடாமுயற்சியும் போதிக்கிறது. விரிவான நோக்கமும் சமரஸ உணர்ச்சியும் நிறைந்த இந்நூலைத் தமிழ் மக்கள் ஆதரவுடன் ஏற்று, அதனுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளைச் சாட்சாத் கரித்து அனுஷ்டிக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

சேரன்மாதேவி.	வ. வே. சுப்ரஹ்மண்ய ஐயர்,
௬௦-௨-மாசிமீ சகம் ௧௮௪௬.	ஆசாரியார், பாரத்வாஜ ஆசிரமம்.

186. மாணிக்கவாசகர் தரிசனம்

என் வாழ்வில் புதிய மாறுதல் வரும்போதெல்லாம் நல்ல தலங்களில் தியானம் செய்வதுண்டு. குருகுலத்திற்குப் புறப்பட மூட்டையெல்லாம் கட்டி வைத்தேன். திருப்பெருந்துறைக்கு நடந்து சென்றேன். மாணிக்கவாசகர் சந்நிதியில் வணங்கி சிவகுரு எழுந்தருளிய குருந்த மரத்து நிழலில் இரண்டுமணி நேரம் தியானித்தேன். பிறகு ஆவேசமாக மாணிக்கப்பாட்டை எழுதினேன். அப்போது முன்பு என்னுடன் வடநாட்டில் யாத்திரை செய்த, ராம் மனோஹர பட்டாசாரி எதிர்பாராமல் வந்தார். அவர் தமிழகத்தில் சுற்றி, நமது மொழியைக் கற்று, தேவார திருவாசகம் படித்து, தேவார கோஷ்டியுடனே சேர்ந்து சிவபக்தி செய்தார். அவருடன் தமிழில் அளவளாவினேன். அவர் "மாணிக்கவாசகர் மந்திரி வேலையை உதறித் தள்ளியதுபோல், இந்த அடிமை வேலைகளை விட்டுச் சிவநேசப் பணி செய்யப்பா" என்றார். மறுநாள் அந்த ஊருக்குக் கும்பகோணம் சங்கராசாரியார் வந்தார். நாங்கள் எதிர்கொண்டழைத்தோம். வழியெல்லாம் அவர் வேதகானம் செய்துகொண்டே வந்தார். மகா தேஜஸ்வி; ஆசாரியார் சாதுர்மாசம் வியாஸ பூஜை செய்தார். இரண்டுநாள் வேத தர்மத்தைப்பற்றிப் பேசினார். ஒரு பண்டாரம் திருவாசகம் படித்தார். இனியென்ன? உத்தரவானது; ஒரு கவி மாலை சூட்டினேன்;

வாதவூ ரடிகள் போலே வாழ்ந்திடச் செல்வம் இல்லேன்;
தீதனிற் சோற்கோ போலே திளைத்திடத் திறனு மில்லேன்
பூதமெய் நெஞ்சம் ஆவி புகலென வைத்துன் அன்புக்
காதலே பற்றி நின்றேன் கலந்துகோள் கருணை வள்ளால்.

சித்தமே கோயிலாகச் சிவனொளி மூர்த்தியாகப்
பத்தியே பூஜை யாகப் பணிகளே துதிகளாக,
சுத்தமே நிட்டை யாகச் சுகானந்த நிலையே வீடாய்
நித்திய மிருக்க வுள்ளே நிறைந்துநீ நானு வாயே.

187. அடா பைத்தியமே!

இவ்வாறு வைராக்கியத்தைத் தீட்டிக்கொண்டு தேவகோட்டைக்கு வந்தேன். ராஜினாமாவை எழுதித் தந்தேன். சுந்தரமையர் "என்ன பாரதி இப்படிச் செய்துவிட்டீர்? நீர் இங்கிருந்தால் பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவோ உயர்வு...இரும்" என்று மன்றாடினார். "பள்ளிக்கூடத்திற்கு உயர்வுதான். எனக்கு இங்கிருந்தால் உயர்வில்லையே. வந்தகாரியம் ஆனது; இனிக் கிளம்ப வேண்டியதுதான். வந்தனம். தங்களை மறவேன். எனக்கு அழகான நிம்மதியான இடமளித்த நன்றியை மறவேன்" என்றேன். இதற்குள் செய்தி எட்டி

என் முத்தண்ணு ஜே. வி. ராம், ஒரு கடுமையான முடங்கலை ஆங்கிலத்தில் திட்டினுர்: "உனக்குப் பைத்தியம் முற்றிப்போனது. நாலுபேர் போலே சம்பாதித்து, சாப்பிட்டுக்கொண்டு வேலையில் ஊன்றிக் கொண்டு குசாலாயிரு...கலியாணம் பண்ணிக்கோ...எங்களுக்கெல்லாம் உதவியாயிரு...வீணுய்ப் போகாதே. குருகுலமாம், ஆச்ரமமாம். அந்தப் புரட்சிக்காரருடன் சேர்ந்து கெடாதே, ஏ பித்துக்குள்ளி! ஊருக்குவா. எலுமிச்சம்பழம் தேய்த்து மூளையைச் சரியாக்குகிறேன்" இத்யாதி இத்யாதி. நான் கவியாகவே பதில் எழுதினேன்.

சிவகாமப் பித்தன் சேகப்பித்தர் காணு
நவஜீவ னப்பித்தன் நானே—தவப்பித்தன்
பூரணப் பித்தன் புதிய கவிப்பித்தன்
ஆரணப் பித்தன் அறி.

உண்டுறங்கிக் கட்டடிமை உத்தியோ கஞ்செய்து
பெண்டுபிள்ளை வீடென்று பேயாசை—கொண்டுமிகச்
சிற்றின்பப் பித்தர் சிறிதும் அறியாரே
முற்றின்பப் பித்தர் முனைப்பு.

"அன்று முன்னெல்லாம் கலியாணம் பண்ணிக்காதே என்ருய். இப்போது பண்ணிக்கோ, பணம் எண்ணிக்கோ என்கிருயே...உன் மூளையிலே பச்சோந்தி புகுந்து இப்படி நிறம் பெயர்கிறது. பிற்காலம் என்னை உலகம் அறியும். உன்னை என் ஆத்மசோதனையால் அறியலாம். காலம் உள்ளதைக் காட்டும். பொறுத்திரு. விடை பெறுகிறேன்."

சில நண்பரைக் கொண்டு வீட்டில் புத்தி சொல்லச் சொன்னுர்கள். ஒருவர் கண்டபடி திட்டி நொருக்கினுர். நான் மௌனமாக எல்லாம் பொறுத்து என் காரியத்தைப் பார்த்தேன். உலகுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருந்தால், கழுதை விற்ற காத்தப்பன் கதைதான். மொத்தமாக எல்லாரும் இது பைத்தியம் என்ற முடிவுக்கே வந்தனர். அதை அதிகப்படுத்த நான் எனது தலைப்பாகையைக் காலில் போட்டு மிதித்தேன். என் லாங் கோட் ஷர்ட் அங்கவேட்டி சாமான் சட்டி முட்டிகளையெல்லாம் ஏழைகளுக்குத் தந்தேன். என் கையெழுத்துப் பிரதிகளில் பாரத சக்திமட்டும் வைத்துக்கொண்டு மிச்சத்தைத் தீயில் இட்டேன். நாவல்கள் பல எரிந்தன: நாடகங்கள் எரிந்தன; கட்டுரைகள் எரிகின்றன. இன்னும் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டுவர உள்ளே போனேன். வைத்திநாதன் அத்தனையும் அள்ளிக்கொண்டு வீட்டுக்கு ஓடினுன்.

டைரி அருணுசலஞ் செட்டியார் எதிர்பாராமல் வந்தார். ஐயையோ என்று எனது சொக்கப்பானையை அணைத்தார். உள்ள

கையெழுத்துப் பிரதிகளையும் அள்ளிச் சென்றார். பாரதசக்தியையும் லைத்தி பசக்கென்று பறித்து ஓடினான். மிச்சம் இரண்டு கதராடை, கதர்த்துண்டு, இரண்டு குடுத்துணிகள் இரண்டு கோவனங்கள் இவையே. ஊரெல்லாம் நான் போவது பரவியது. நண்பர் பலர் வந்து பார்த்தனர். மாணவர் இதற்குள் பணம் வசூலித்து எனக்கு உபசாரம் நடத்தினர். நான் அவர்களுக்குப் பேசினேன்.

188. மாணவருக்கு :

கண்மணிகாள், உங்களை இளந்தெய்வங்களாக வணங்குகிறேன். உங்கள் பணியே என் இன்பம். உங்களைப்போன்று அங்கே குருகுலத்தில், தமிழ் நாட்டின் மணிப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சேவை செய்யப் போகிறேன், இங்கே கட்டுப்பட்டுத் தொண்டு செய்தேன். அங்கே கட்டில்லாத சுதந்தரத் தொண்டு செய்வேன். இங்கே சர்க்கார் ராஜ்பம். அங்கே காந்தி ராஜ்யம். இங்கே பரீட்சை தேறப் படிப்பு. அங்கே வாழப் படிப்பு. அந்தக் கல்வியின் நோக்கம் வீரதீரராகித் தேசசேவை செய்தல். அதை உங்களுக்கு எல்லாம் முன்பே விளக்கியிருக்கிறேன். நீங்கள் ஸ்கூல் பைனல் தேறி, நாலுகாசு சம்பாதிக்கும் நோக்கத்துடன் படித்தாலும், வீடு தாண்டி நாடு உள்ளது என்பதை நினையுங்கள். நமது நாடு இன்னும் அன்னியருக்கு அடிமையாயிருக்கிறது. சுதந்தரம் பெற நாம் தியாகங்கள் செய்யவேண்டும். மஹாத்மாவின் தலைமையில் தியாகத் தீக் குளித்து விடுதலையின்பம் பெறவேண்டும். நாடு வாழ வீடும் வாழும். நாட்டை எல்லையற்ற வீடென்று போற்றுக. நீங்கள் இந்த இளம் வயதிலேயே நல்ல உடலுறுதி, மனவுறுதி, கல்வியறிவு, கலைச்சுவை, பிழைக்கத் தொழில் வளம், ஊருக்குதவும் ஒப்புரவு, சேர்ந்து வாழும் திறமை, சாதிமதப் பித்தமற்ற சமத்துவம், தூய ஒழுக்கம், தெய்வபக்தி ஆகிய நன்னெறிகளைப் பயிலவேண்டும். காலை மாலை சூரியனைப் பார்த்து எல்லையற்ற வான்சூழ்ந்த உலகக்கோயிலில் உயிர்குலமாக விளையாடும், இறைவனை வணங்குங்கள். அதற்கெல்லாம் தோத்திரம் உங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறேன். சாரணருக்கு நான் வகுத்த ஒழுக்க முறையை எப்போதும் காத்தால், வாழ்க்கையில் வெற்றிபெறலாம். நீங்கள் ஆசிரியர்களுக்கு அடங்கி நடந்து பள்ளிப் படிப்பில் தேர்ச்சிபெற வேண்டும். வீட்டில் பெரியார் சொற்படி கேட்டு நன்னடை பழகவேண்டும். ஊரில் பொதுநலப் பணிபுரிந்து பரோபகார சீலர்களாக வேண்டும். அன்பு அருட்பணி ஆகிய இரண்டே, வாழ்வின் பயனாகும். பயன்பெற வாழுமின். உங்கள் அன்பை எப்போதும் நான் நினைப்பேன். என் வாழ்க்கை திடீர் திடீர் என்று மாறும். அது இறைவன் ஆணைவழிச் செல்லும். ஆறு, மலை கணவாய்களைத் தாண்டிக் கடல் சேர்கிறது. என் வாழ்வும் எத்தனையோ மேடு பள்ளங்களைத் தாண்டி அதன் லட்சியத்தை அடைய வேண்டியிருக்கிறது. நான் தனிவழியே செல்கிறேன்,

அன்பு துணை வருக. எந்த அன்பு என்உள்ளப் பொருளாகத் துடிக்கிறதோ அந்த அன்பே உங்கள் உள்ளத்திலும் துடிக்கிறது. அதுவே துணை. தமிழுலகின் மாணிக்கங்காள், நான் எங்கேயிருந்தாலும், விதி என்னை எங்கே கொண்டு சென்றாலும், நீங்கள் நல்ல நிலையில் இருந்தால், அதை மனத்தால் உணர்ந்து மகிழ்வேன். வந்தேமாதரம். எந்தாய் வாழ்க!

189. இறுதி விருந்து

மாலை ஆறுமணி; நான் முன்னே அடிவைத்தேன். சிவகங்கை சென்று மானமதுரையில் ரயிலேறிச் சேரன்மாதேவிபோக நினைத்தேன். தெய்வ சங்கற்பம் வேறுவழியில் என்னை இழுத்துச் சென்றது. வந்தார் சிவசுப்பிரமணியர், "இன்றிரவு என்வீட்டில் விருந்து; வாரும்" என்றார். அவர் அன்பை மறுக்கமுடியாமல் சென்றேன் அவர் மனைவி சீதாதேவி அன்புடன் அளித்த உணவை உண்டேன். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அன்றுதான் நான் இலைபோட்டுச் சோறுண்டது. சாப்பிட்டதும், சிவம், "இராமேச்வரத்தில் S. ஸ்ரீனிவாசையங்கார் தலைமையில் இராமநாதபுரம் ஜில்லா மகாநாடு நடக்கிறது. நீங்கள் தேவகோட்டை காங்கிரஸ் பிரதிநிதியாகச் செல்ல வேண்டும்; இந்தாரும் பிரதிநிதிச் சீட்டு" என்று தந்தார். நான் மகிழ்ச்சியுடன் ஏற்றேன். சிவத்தின் வன்மையும் உண்மையும் பண்பும் நண்பும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. அவருக்கு நன்றிகூறிப் புறப்பட்டேன். காட்டுப்புத்தூரை விட்டுத் திருப்பதி யாத்திரை செய்தேன்; தேவகோட்டையைவிட்டு ராமேச்வர யாத்திரை செய்தேன். எப்படி? ரயிலை ஒதுக்கித் தள்ளினேன்...குறுக்கு வழியே பாய்ந்தேன். எனது சிப்பாய்கள் தொடர்ந்தனர். நல்ல இருட்டு; கிருஷ்ணபட்ச சதுர்தசி, இரவு எட்டுமணி; விண் மீன்கள் வைரக் கனல்போல் கண்சிமிட்டி "முன்செல்" என்கின்றன. அவற்றை நடத்தும் படைத்தலைவனே என்னையும் நடத்துகிறான். அந்தர்யாமியான அவன் கட்டளையே இனி என் போக்கு. பகலும் இரவும் இருவிழிகள்போல் என்னைப் பார்க்கின்றன. காற்றைப்போல் சுதந்தரமாகப் புறப்பட்டேன். இடுப்பில் கதராடை; மேலே அங்கி, தோளில் ஓர் ஆடைதுண்டு. ஒருகுடுத் துணி; கவி எழுத ஒரு குறிப்பு. பேனாபென்ஸில், சீப்பு. பகவத்கீதை யோக சித்தி—இவையே என் உடமை, ஆற்றங்கரை ஏறுகிறேன். அப்போது ஜி. சுந்தரம் வந்து "என்ன பாரதி, பரதனும் ராமனும்போல் இருப்போம், என்று பிரிந்து போகிறீரே...இருமே இங்கேயே" என்றார். "நண்பா, பரதன் நந்தி கிராமத்திலும் ராமன் தண்டகாரண்யத்திலும் இருந்தால்தானே ராவண ஸம்ஹாரம் நடக்கும். நான் எந்த உலகில் இருந்தாலும் இந்த இடத்தில் இருப்பேன்; நீயும் இந்த இடத்தில் இரு என்று நெஞ்சைத் தொட்டுக்காட்டி, ஓம் சுத்த சக்தி என்று விடைபெற்றேன். கால் நடையாகவே முன் சென்றேன்.

இருட்டிலும் ஒளியைக் காட்டும் இறைவனே! எனது நண்பா!
மருட்டிடும் உலகை நீத்தேன்; மனதினின் றேனைநீ ஏவும்
அருட்டிரு வழியே சென்றுன் அன்பினால் அன்பு செய்வேன்;
சிருட்டிசெய் தந்தாய் இந்தச் சேயினை வழிநடத்தாய்.

என்று பாடிக்கொண்டே சென்றேன். ராகவன், வைத்தி "உங்களை விடமாட்டோம்" என்று தொடர்ந்தனர். "நீங்கள் நடந்துபோகக் கூடாது சார்" என்றான் வைத்தி. அதற்குள் வரதன் "அதோ போக்குவண்டி" என்றான். வண்டி கிட்டவந்தது: கடக் குடக் என்று கட்டைவண்டி திருவாடானை சந்தைக்குச் சரக்கேற்றிச் சென்றது. வைத்தி வண்டிக்காரனிடம் ஏதோ சொன்னான். "சாமி தங்கம்போல வரட்டுமே...ஏறுங்க சாமி" என்றான் வண்டிக்காரன். ஏறியமர்ந்தேன். அன்பரும் அரைமைல் உடன்வந்து விடைபெற்றனர். இனி நான் உலகில் தனித்த யாத்திரி...போக்குவண்டிகள் நாலைந்து வந்தன. தெம்மாங்கு கிளம்பியது...

எல்லாரும் ஏறும்வண்டி
ஏழைக்கேற்ற கட்டைவண்டி...

190. இராமேச்வர யாத்திரை

கட்டைவண்டி கடக்முடக்கென்று முன்னே நடக்கிறது. என் சிந்தனை பின்னே நடக்கிறது; பிறகு எதிர்காலத்தை ஊகிக்கிறது. நான் கவிக் கனவிலும் யோகசாதனத்திலும் வாழ்ந்தவன். கலையரங்கில் நடித்திருக்கிறேன். உலகரங்கில் நடிக்காத நடிகன். அதற்குத் தேவகோட்டையிலேதான் ஒத்திகை நடத்தினேன். திடீரென்று உலகப் போர்அரங்கில் குதித்திருக்கிறேன். நான் வில்வளைக்காத வீரன். சண்டைபோடத் தெரியாத சமர்சிங்கம். வழி தெரியும்; இப்போதுதான் காலடி வைத்து நடக்கிறேன். பின்னே என் வயது முதிர்ந்த பெற்றோரை நீத்தேன். என்னைப் பிரிந்த அவர்கள் எப்படி வருந்துவார்களோ என்று விசனித்தேன். நான் சம்பாதித்தும் அவர்களை ஆதரிக்காது போகிறேன்...என்ன கல்நெஞ்சக்காரன் என்று என்னையே கடிந்தேன். "அவர்களைக்காக்கத் தமயன்மார் இருக்கிறார்கள்; நீ உன் கடமையைக் கவனி" என்றது மனச்சாட்சி. என் உறவினர் மனக்கண்முன் நின்றனர். உலக வீட்டில் எல்லா உயிர்களும் என்னவரே,என்ற உணர்ச்சியால் அவர்களுக்கும் அன்புகூறி மனவிடை பெற்றேன். என்னை அறிந்து அன்பு செய்தவர்களை வாழ்த்தினேன். எனக்குப் பகைசெய்த பொறாமைக்காரர்களையும் வாழ்த்தினேன். அவர்களாலேதான் எனது துறவு தீவிரமானது. உலகை நான் அறிந்தேன். ஒரு வீட்டில் தேள், பாம்பு, பூரான் வந்தால் வீடு அடசல், சுத்தம் செய்யவேண்டும் என்று அறிகிறோம் அல்லவா? அப்படியே புகை

வர் தீமைசெய்யும்போது, நம்மிடம் உள்ள தீமைகளைக்கண்டு திருத்திக் கொள்ள வேண்டும். இனிநான் பின்னே செல்ல முடியாது, மறுபடி பள்ளிக்கூட வாத்தியாராக முடியாது. உத்யோக பருவம் முற்றிற்று. முன்னே ஒரு ரகசியத் திரை. அதற்குப்பின் எத்தனையோ நவரஸ அனுபவங்கள் சுருள் சுருளாகக் கிடக்கின்றன. விடிந்தால் என்ன வருமோ!...

இப்படிச் சிந்தித்துக்கொண்டே இரவைப் போக்கினேன். "சாமி திருவாடானை" என்ருன் வண்டிக்காரன். அருணோதயம்; பவளநகை புரிகிறது. நான் வண்டிக்காரனுக்கு ஒருரூபா தந்தனுப்பிவிட்டுப் புதிய காலையின் புன்னகையைப் பார்த்து ஜபம் செய்தேன். என் மனதும் அருணோதயத்துடன் புன்னகைத்தது. நான் குளத்தில் குளித்து, உதய சூரியனைத் தியானித்தபோது ஒரு வைதிகர் என்னையே குறிப்பாகப் பார்த்தார். நான் யாரையும் பார்க்காமல் கீதை பாராயணம் பண்ணினேன். இருவர் பக்கத்தில் அமர்ந்தனர். மூவர் வந்தனர்; நான் மங்களா சரணம் பாடியதும், "பெரியவாள் எவ்விடமோ" என்று வினவினர். "ஐயா நான் ஒரு சுதேசப் பரதேசி" என்றேன். கேள்வி மேல் கேள்விபோட்டனர். எனக்கொரு பாட்டுக் கிளம்பியது:

ஊரிலேன் ; கருவூர் என்பார் ; உறவிலேன் ; உலகேன்வீடே;
பேரிலேன் ; ஆத்மா யானே ! பிரிந்ததும் வினையினாலே
காரிலே மழையைப் போன்றேன் ; காற்றுடன் அலைந்து [செல்வேன் ;
பாரிலே பொழிந்து விட்டுப் பரத்திலே கலந்து போவேன்.

"நீர் கவிராயரா? வாருமையா சாப்பிட" என்றனர். "நான் பொது வீடான சத்திரத்தில் உண்பேன்" என்றேன். சத்திரத் திண்ணையில் ஜபமாலையை உருட்டிக்கொண்டிருந்தேன். மணியடித்தது. உள்ளே சென்று வயிற்றை நிரப்பினேன்.

எனக்கு அடுத்து ஓர் ஆந்திரர் இருந்தார். இருவரும் நண்பரானோம். அவர் நல்ல படிப்பாளி. குடும்பத்தில் துக்கம்வந்து மனைவி மக்களை இழந்து, இப்படி இராமேசுரத்திற்குக் கிளம்பினர். அவர் என்னுடன் பிரயாணம் செய்யவே விரும்பினர். இருவரும் நான்கு மணிக்குக் கால்வண்டியைத் தட்டிவிட்டு தேவிபட்டணம் சென்ருேம். வழியில் மழைவந்து, எனது பாரதசக்தி நனைந்து போனது. ஆடையெல்லாம் ஈரம்...தேவிப்பட்டணம் சத்திரம் விசாலமானது. அங்கே இரவில் குளித்து ஆடையை உலர்த்தி அணிந்து, நிம்மதியாக வெய்யில் காத்த விநாயகர் சந்நிதியில் ஜபம் செய்துகொண்டிருந்தேன். சத்திர மணியடித்தது. ஆந்திரர் அழைத்தார். சென்று சாப்பிட்டேன்.

சத்திர அகுதார் என் சொந்தக்காரர். எனக்கு அவரைத் தெரியும்; நான் தாடி மீசை வளர்த்துச் சாமியார் கோலத்திலிருந்ததால், அவருக்கு என்னைத் தெரியவில்லை. என்பெயரையும் ஓங்காரம் ஆக்கி தெலுங்கும் இந்துஸ்தானியுமே பேசியதால், யாரோ உத்தராஜி என்றெண்ணினர். சாப்பாடு ஆனதும் அகுதார் "சிவகங்கையில் ஒரு பையன் இருந்தான்; அவனுக்கு மாமா பெண்தர இருந்தார். கல்யாணமே வேண்டாம் என்று காந்தியோடே சேர்ந்து எங்கோ போனானும். இப்போது ஜெயிலில் இருக்கானும்...அதிகப்ரசங்கி. அவன் அப்பன் ஜடாதரம் பட்டகஷ்டமென்ன" என்றெல்லாம் அளந்தார். நான் தெலுங்கில் "ஐயா அவன் இப்போதுதான் ஜெயிலிலிருந்து விடுதலை பெற்று, சுதந்தரமாகத் திரிகிறான்," என்றேன்.

தேவிபட்டணத்திலிருந்து கிளம்பி, தர்பசயனம் வந்தேன்; அங்கே பத்து முஸல்மான்கள் "அல்லாஹு அக்பர்! வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று எனக்குக் கதர்மாலை சூட்டினர். வியந்தேன். உங்களுக்கு என்னைத் தெரியுமா? என்று கேட்டேன். "சுத்தானந்த பாரதிக்கு ஜே!" என்றனர். "இதென்ன லீலை" என்று திகைத்தபோது, தேவகோட்டை காங்கரஸ் ஊழியரான ஓர் இஸ்லாமியர் அவர்களுடன் இருந்தார். அவருக்கு சிவசுப்பிரமணியர் மூலம் செய்தி எட்டியிருந்தது. எல்லாரும் என்னை மசூதிக்கு அழைத்துச் சென்றனர். நான் சிறிது தியானம் செய்தேன். உடனே ஒரு இஸ்லாமியர் "நம்பள் வீட்டிலே சாப்பிடுங்க" என்றார். "என் உணவை யார் வீட்டிலும் சாப்பிடுவேன்" என்று சென்றேன். அவர் சுத்தமான மேஜைமேல் அழகான வெள்ளித் தட்டில் கனி கடலை பால் வைத்து, நாற்காலியில் அமர்த்தி, 'உண்ணுங்கள்' என்றார். குழந்தைகள் ஊதுவர்த்தி கொளுத்தி வைத்தனர். ஆளுக்கொரு கனிதந்து, நானும் உண்டு பால்பருகி வந்தேன். அந்த ஊர் வாசகசாலைக்குச் சென்றேன். பத்திரிகை பார்த்தேன்; இராமேசுரம் மகாநாட்டிற்கு பக்ஷி பர்வத சாஸ்திரிகள் பலத்த ஏற்பாடுகள் செய்கிறார். பிரபல பிரதிநிதிகள் வருகிறார்கள் என்ற ஜாப்தாவில் என்பெயரும் இருந்தது. தர்ப்பசயனத்தில் மாலை நாலரை மணிக்கு ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடியது. நான் இந்து—முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றியும் மகாத்மாவின் தியாகங்களைப்பற்றியும் கதர்பற்றியும் பேசினேன். சுந்தரபாண்டிபட்டணத்தில் உண்டாகும் கதரைப்பற்றிச் சொன்னேன். இரவில் தொழுகை முடிந்ததும், இஸ்லாமியர்கூடி என்னைப் பேசச் சொன்னார்கள். நான் பாரதசக்தி நபிமணிப் படலத்தைப் படித்து விளக்கினேன். கூட்டம் முடிந்ததும். அவர்கள் அறுபதுரூபா வசூலித்தளித்தனர். அதை உள்ளூர் கதர் உற்பத்திக்குத் தந்தேன். அங்கே பலர் ராட்டை நூற்றனர். நூலை வாங்கித் தறிபோட்டுக் கதர் அணியும்படி வேண்டினேன்.

191. இராமநாதபுரம்

காலை இஸ்லாமியர் வண்டிகொண்டு வந்தனர். நான் நன்றி செலுத்தி கால்நடையாகவே ராமநாதபுரம் சென்றேன். அங்கே ஒரு தேசியப் பாடசாலையில் தங்கினேன். என்னுடன் காங்கரஸ் ஊழியர் சிலர் இருந்தனர். இனிக்கவலையில்லை. என் வாழ்க்கை வெள்ளித் திரைக்கு வந்துவிட்டது. காங்கரஸ் காரியதரிசி ஊரைச் சுற்றிக் காட்டினார். சேதுபதி அரண்மனையைப் பார்த்தேன். விவேகானந்தர் தங்கிய தினகரமாளிகையைப் பார்த்தேன். பொன்னுசாமித்தேவர் மாளிகையும் பார்த்தேன். என்னையும் பார்த்தேன். நான்கு மணிக்குப் பட்சிபர்வதரே எங்களை ரயிலேற்றி ராமேச்வரத்தில் சிறப்பாக வரவேற்றார். நான் வண்டியைவிட்டு இறங்கி எனக்குரிய ஜாகைக்குச் சென்றதும், என்னைப்பார்த்த முதல் பேர்வழி C. I. D. ஸி. ஐ. டி. துரைசாமிபிள்ளைதான். "ஓகோ நிழல் வந்து விட்டதா, சந்தோஷம்" என்றேன். அடுத்தபடி மெயில் நிருபர் சுந்தரராஜன் என்னுடன் அளவளாவி மகாநாட்டு ஏற்பாடுகளைச் சொன்னார், அடுத்தபடி அதே கட்டிடத்தில் மதுரை மௌலானா சாகிபைக் கண்டு, சலாமாலேகும் போட்டேன். மகாநாட்டு ஏற்பாடுகளைப் பேசியபோதே எனது நண்பர் சோமாஜியும் ஸ்ரீநிவாச வரதனும் வந்து விட்டனர். இனிக் குறையென்ன! அத்துடன் ராஜபாளையம் கதர் ரங்கசாமி ராஜூவும் வந்தால் கேட்க வேண்டுமா! "நீங்கள் வ.வே.சு, ஐயர் தம்பி போலிருக்கிறீர்கள்" என்ற பீடிகையுடன் பேசத்தொடங்கினார். சாத்தூர் சுப்பிரமணிய நாயனர் "இவரா சுத்தானந்த பாரதி! வந்தேமாதரம்!" என்று வந்தார். நாங்கள் பேசும்போதே அக்கிராசனர் வந்து விட்டார். ஊர்வலம் ஆரம்பமாகிறது; என்று கட்டியம் கூறினார் பர்வதசாஸ்திரியார். இனி மகாநாட்டிற்குச் செல்வோம்.

192. இராமேஸ்வரம் மகா நாடு

இதுதான் நான் கலந்துகொள்ளும் இரண்டாவது மகா நாடு. திருநெல்வேலித் தலைவரே இங்கும் தலைவர். மகா நாடு வெகு சிறப்பாக நடந்தது. சாஸ்திரிகள் கோயில் சர்வாதிகாரியாதலால் எங்களுக்கு ஒருகுறையும் இல்லாமல், பக்கா ஏற்பாடுகள் செய்திருந்தார். எனக்கு நிம்மதியான அறையும், கனிகடலையும் கொண்டு வந்து தந்தார், "அங்கே ஒரு காயக்லேச பாரதி இருக்கிறார்." என்று நாயனர் எல்லாரையும் என்னிடம் அனுப்பினர். வந்தவர்களுக்கெல்லாம் நான் பாரத சக்தி படித்தேன். இனி நான் அனாதையில்லை. பற்றைத்துறந்தால் பாரெலாம் நானே. அரிய நண்பர் என்னைச் சூழ்ந்து கொண்டனர். ஐயரின் அருமை பெருமைகளைப் பேசினர். குருகுலத்தைப் பலர் போற்றினர். முதன்மையாக சுதேசமித்திரன் உலகநாதபிள்ளையும், சிவாவின் பாரத சமாஜத்தொண்டரும் எனக்கு அரிய நண்பரானார்கள்.

மகா நாடு காலை பத்து மணிக்குத் தொடங்கியது. ஸ்ரீநிவாசவரதன் சோமயாஜி, ராகவன் ராமசாமி, சுந்தரம் முதலியோர் 'கம்பீரமான குரலில் "ஜயஜயபாரத" பாடினர். பாரதிபாடலுடன் மகா நாடு தொடங்கியது. சாஸ்திரிகள் வரவேற்புரை வாசித்தார். அக்ராசனரை மதுரை மௌலானா சாகெபு பிரேரேபித்தார். அவர் குணுதிசயங்களைப்பலர் புகழ்ந்து பேசினர். ஐயங்கார் ராமநாதபுரத்திற் பிறந்தவர். பாண்டித்துரைக்குக் கண்ணுயிருந்தவர். இரண்டு ஸ்ரீநிவாசரை சேது சமஸ்தானம் முன்னுக்குக் கொண்டு வந்தது. ஒருவர் மகா வித்வான் ஸ்ரீநிவாசர் (பூச்சி ஐயங்கார்): மற்ருெருவர் பாஷ்யமையங்கார் மாப்பிள்ளை சட்டப்புலி சே. ஸ்ரீநிவாசர். தாம் பிறந்த ஊரில் தமக்கு இவ்வளவு சிறப்புக்கிடைத்தது பற்றி ஐயங்கார் மகிழ்ந்து, தலைமையுரை நிகழ்த்திஞர்: "நாடு ஒற்றுமையா யிருக்கவேண்டும்; பிராமண அப்ராமணச் சண்டை, இந்து முஸ்லிம் சண்டைகளையெல்லாம் கட்டி வைத்து, எல்லாரும் ஏகோபித்து தேச சுதந்தரத்திற்குப் பாடு படுவோம். இந்தப்பிரிவினையின் பின்னே அதிகார வர்க்கம் உள்ளது. அதை மாற்றி, நமது கொடியின் கீழ் நாம் சுதந்தரமாக வாழ்ந்தாலே நமது பிரச்னைகள் தீரும்" என்று பேசினுர். சோமயாஜி சேனை, வீர சுதந்தரம் பாடியது. கூட்டமும் ஒரு மணிக்கு முடிந்தது. அன்றிரவு விஷயாலோசனைக் கூட்டம் ஐயங்கார் ஜாகையில் நடந்தது. ஐயங்கார் என்னுடன் பிரியமாகப் பேசினுர். "அப்பவே நினைத்தேன். உங்களைப் போன்ற வாக்கிகள் பள்ளிக்கூட மூலையில் அடைந்து கிடப்பாரோ. நீங்கள் காங்கரஸ் மேடைக்கு வந்து நாட்டைத்தட்டி எழுப்பவேண்டியது அவசியம்." என்ருர். நான் ஐயர் குருகுலத்தில் இருப்பதாக சாத்தூர் நயனுர் சொன்னுர். "நீரும் அந்த ரிஷிக்கூட்டத்தில் சேர்ந்திரா. சரி ஐயருடன் இரும். நான் கூப்பிடும்போது வந்து சேர வேண்டும்." என்ருர். நான் ஐயரின் குருகுலத்தைப் போற்றி மகா நாட்டில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். "சரி ஐமாயும்" என்ருர். விஷயாலோசனை பெரிய சந்தைச் சத்தத்திற்கிடையே நடந்தது. நம்மவர் கூட்ட ஒழுங்கு பழகவேண்டும். ஒருவர் பேசும்போது பலர் ஊடே பேசும் வழக்கம் ஒழிய வேண்டும். ஒருவர் சுதந்தரம் வேண்டுமென்று பேசினுல், சை பூரண சுதந்தரம் வேண்டும் என்று அவர் வாயை அடக்கி இன்னுேர் ஆள் கிளம்புகிருர். அவரையும் அடக்கி இன்னெருவர் குடியரசு வேண்டு மென்கிருர். எல்லாம் தன்னரசாட்சியாக முடிகிறது. எப்படியோ சத்தச் சந்தையூடு காரியம் நிறைவேறியது. எனது குருகுலத் தீர்மானத்தைச் சிலர் ஆட்சேபித்தனர். "ஐயர் அம்பிப் பயல்களைத் தாலாட்டிக்கொண்டிருக்கிருர். தேசத்திற்கு வீரர் வேண்டும். அதென்ன குருகுலமா குழந்தைப்பண்ணையா" என்ருர். "நான் மகாநாட்டில் தக்க பதில் சொல்லுகிறேன். இங்கே பேச்சு வளர்க்கவேண்டாம்" என்றேன்.

மகா நாட்டில் பலர் தீர்மானங்களை ஒட்டிப்பேசினர். அவர்கள் பேச்சைவிட பாரதசமாஜம் பாடிய பாரதிபாடல்கள் இனிமையாயிருந்தன. ஸ்ரீநிவாசவரதன் கூட்டம் "மண் வெட்டிக்கூலி தின்னலாச்சே" என்ற பாடலை வீராவேசமகப் பாடியதும் சபை கரகோஷம் செய்தது. பிறகு நான் குருகுலத் தீர்மானத்தைப் பிரேரேபித்தேன். "தியாகவீரரான வ. வே. சு. ஐயரை நீங்கள் அறிவீர்கள். அவரே காந்தியை மகாத்மா என்று முதன் முதலிற் கண்டார். அவரே சங்கதைத் தூக்கி யெறிந்து, சர்க்காருடன் முதலில் ஒத்துழையாமை நடத்தினர். அவர் குரு கோவிந்தசிங்கவின் மறு பிறப்பு, அவர் தமிழரை தீரஜாதியாக்க ஒரு குருகுலம் கண்டிருக்கிறார். அது பிள்ளைத்தொட்டிலுமன்று; தாலாட்டுப் பண்ணையும் அன்று. அங்கே நானே சாரணப் பயிற்சி நடத்துகிறேன். ஆத்மீக வாழ்வை அடிப்படையாகக் கொண்ட கர்ம வீரயை நாங்கள் தயாரிக்கிறோம். இந்தக் குருகுலத்திற்கு உங்கள் அன்பும் ஆதரவும் இருந்தால், தமிழகத்தில் ஒரு காங்கிரி, சபர்மதி சாந்தி நிகேதனம் உண்டாக்கலாம். ஐயர் குருகுலத்திற்கு உங்கள் ஆதரவைக் கரகோஷத்தால் உணர்த்த வேண்டுகிறேன்." என்றேன் சபை சட சடவென்று கையடித்தது. தலைவரும் "நான் ஐயர் குருகுலத்தைக் கண்டேன். அங்கே ரிஷிக்குட்டிகள் தயாராகிறார்கள் அந்த ஸ்தாபனத்தை தமிழர் அவசியம் ஆதரிக்கவேண்டும்" என்றார். தீர்மானம் நிறைவேறியது. ஆனால் கூட்டத்தில் சிலர் மட்டும் "ஐயர் குருகுலமா தமிழர் குருகுலமா." என்று முணுமுணுத்ததைக் கேட்டேன். "சபையோர்களே நான் ஐயர் குருகுலத்திற்கு உங்கள் ஆதரவைத் தேடவில்லை. ஐயரைவிடத் தமிழ் பெரிது. வவேசு ஐயர் நாட்டிய தமிழ்த் குருகுலத்திற்கே உங்கள் ஆதரவை வேண்டுகிறேன்." என்றேன், கரகோஷம் பலமானது. "பாரதசமுதாயம் வாழ்கவே" பாடி கூட்டம் முடிந்தது.

இரவு ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேக நிவேதனமானது. நான் மகேந்திர பருவதத்தில் நிம்மதியாக தியானித்து வந்தேன். ஸ்ரீநிவாச ஐயங்கார் "எங்கே பாரதி" என்று கேட்டதற்கு "குருகுலத்திற்கு அந்தர்தானமாய் விட்டார்" என்று நாயனர் பதிற்சொன்னர். நான் "இதோ" என்று வந்தேன். ஐயங்கார் "நீங்கள் மறுபடி எங்காவது சிக்கிக்கொள்ளாமல், பேசாது காங்க்ரஸ் பிரசாரம் செய்யும். அல்லது ஒரு பத்திரிகை நடத்தும்." என்றார். "தங்கள் அன்பிருந்தால் செய்வேன்." என்றேன். நான் பாரதசக்தி என்றபெயரால் ஒரு தினசரி தொடங்கக் கனவு கண்டேன். பணம் ?

இரவு எனது நண்பர் ஒரு கூட்டம் போட்டு என்னைப்பேச வேண்டினர். கோயில் மண்டபத்தில் ஏராளமான கூட்டம். உலகநாத பிள்ளை என்னைச் சபைக்கு அறிமுகப் படுத்தினர். நான் என்னையறியாமல் ஓர் எழுச்சியால் பேசினேன்; இரண்டு மணி நேரப் பேச்சின் சுருக்கமாவது;

193. ஆத்ம சக்தியை வளர்ப்போம்

என்றுமுள்ள பரம்பொருளை இதயமான சுகவெளியில்
ஒன்றி நிற்கும் ஒருமையிலே ஊறும் ஆத்ம சக்தியினை
இன்றுலகம் வளர்த்தோங்கி இங்கே அமர வாழ்வெய்தி
நன்று வென்றி சேர்ந்திடவே யோகம் ஒன்று நவில்வோமே.

ஆன்மநேயர்காள்,

நேற்று நாம் அரசியல் மகாநாட்டில் கூடினோம்; இந்தியாவின் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் பேசினோம். நமது பேச்சில் கதரும் காந்தியும் இந்தியும் கிளர்ச்சியும் நிரம்பியிருந்தன. நம்மை அடக்கியாளும் ஆங்கிலக் கொடியை எப்படியாவது பெயர்த்தெறிய வீராவேசமாகப் பேசினோம். பேச்சினால் அடிமைப்பேய் ஓடாது; செயல்வேண்டும். பிரிட்டிஷ் பீரங்கியையும் விமானகுண்டையும் பிரித்தாளும் சூழ்ச்சிகளையும் தகர்த்தெறியும் செயல் வேண்டும். செயலுக்குச் சக்தி வேண்டும். குண்டுகளை எதிர்க்கும் சக்தி நமக்கு உண்டா? குண்டைக் குண்டாந்தடியால் எதிர்க்க முடியாது. குண்டாந்தடிக்குக் கூட ஆயுதச் சட்டம் உண்டு. ஆதலால் நாம் ஒரு புதிய சக்தியைப் பெறவேண்டும். மஹாத்மா அதையே ஆத்மசக்தி அல்லது சத்தியாக்ரக சக்தி என்கிறார். இந்தச் சக்தியை உலகம் வளர்த்தால், ஸயன்ஸ் மூளை செய்து குவிக்கும் நாசப் படைகளெல்லாம் துருப்பிடித்துப் போகும். போருக்கே இடமிராது. அன்பும் கருணையும் உலகையாளும். பகை ஒழியும்; பிரிவினை தீரும்; எல்லாரும் ஆன்மநேய ஒருமையில் வாழலாம். இதையே அப்பரும் வள்ளலாரும் வற்புறுத்தினர். ஆத்மா யாது? சக்தி எப்படி வரும்? என்று கேட்கிறீர்கள். பெரும்பாலாருக்கு தொந்தி தான் தெரியும்; அது நிரம்பினால் எல்லாம் சரி; அதைச் சுற்றித்தான் நினைப்பும் செயலும் சொல்லும் சடுகுடுபாயும். அடுத்தது, முன்னிருக்கும் உலகம். பலர் உலகம் தரும் இன்பங்களை நுகர்வதே மோட்சம் என்பர். வயிறுபுடைக்க அல்வாவும் கேசரியும் இட்டலி காப்பியும் சாம்பாரும் அப்பளம் வடையும் போட்டடைக்கிறோம்; உடம்புக்கு பட்டும் சரிகையும் கட்டி, நகை நட்டுப்போட்டு, அலங்காரித்துக் கண்ணாடி பார்க்கிறோம். உடம்பு வினோதமான சுகங்களைத் தேடுகிறது. புலன்கள் இது வேண்டும் அது வேண்டும் என்று நைக்கின்றன. சினிமா பாட்டு, அழகான பெண், வியாபாரத்தில் கொழுத்த லாபம், பெட்டகம் நிரம்ப நோட்டுகள், மூன்றடுக்கு மாளிகை, தோட்டம் வயல் இத்தனையும் இருக்கின்றன. என்றால் சுகம் வருகிறதா? ஏதோ மனக்குறை இருந்து உள்ளே குடைகிறது. உலகில் சிக்கிய எவனும் பேரின்பம் பெற முடியாது. ஏதாவது துக்கம் அவனை வாட்டிக் கொண்டேயிருக்கும். ஆதலால் வெளிச் சுகம் மட்டும் பயனில்லை. உள் சுகம் பெற வேண்டும். மனிதன் உடல் மட்டுமன்று; உடம்பு, உயிர், மனம்,

அறிவு, அருளுணர்ச்சி, சித்துணர்ச்சி, இன்பம், சத்தியம் சுத்தம் ஆகிய பல தத்துவப் படிகளிலும் உபசாந்தி பெற்றாலே, மானிடம் நிறைவாகும்; என்னாளும் இன்புறலாம். உள்ளத்தைப் பண்படுத்தினாலே உலகத்தைப் பண்படுத்தலாம். சீர்திருத்தம் உள்ளிருந்து வரவேண்டும். முதலில் பூரணத்தை வைத்த பிறகு கொழுக்கட்டை பண்ணுகிறோம். ஒரு விதை பூமிக்குள் வேரூன்றிக் கொண்டு தான் வெளியே முளைக்கிறது, கிளைக்கிறது. அவ்வாறே வாழ்க்கையும் உள்ளே ஆன்ம நிலையமான உள்ளத்தில் ஊன்றிக் கொள்ளவேண்டும். கடலுக்குள் மூச்சைப் பிடித்து ஆழ்ந்து முத்தை அள்ளிக்கொண்டு வெளியேறினால் செல்வனாகலாம். மனம் வெளியே புலன்கள் வழியே அலைந்து விகாரப்படுகிறது. அதனால் நமது சக்திகளும் வெளி யேறி உறுதி குறைகிறது. மனம் உள்ளடங்கினால் சக்திக்கனல் பெருகும் அதனால்சித்தம் தெளிந்து சிவமாகும். இதற்குத்தான் யோகம் என்பர். மனம் உள்ளடங்கி உள்ளம் தன் மயமான சுத்தாத்மாவில் லயித்து, அந்தத் தூய இன்பத்தைப் பருகுதலே யோகப் பயன். உள்ளின்பத்தால் உலகின்பமும் ஆகும்- உள்ளமைதியால் உலகம் அமைதியாகும். அன்பு, அமைதி, இன்பம். சக்தி, அறிவு இவை நமது இயல் நிலையாகும். துன்பம், கவலை, தளர்ச்சி, அச்சம், பிணி துயர்களெல்லாம் நமக்கு அன்னியம். வெளியிருந்து புகுவன. இவற்றை உள்ளே வர விடாயல் விழித்திருக்க வேண்டும். ஒரு தேசத்தில் சேனைகள் வைத்துப் பகைவர் உள்ளே வராமல் தடுப்பது போல், வைராக்யத்தைக் கொண்டு காமக் குரோதாதிகளைத் தடுத்து விரட்டினால், மனம் நிம்மதி பெறலாம். இந்த வைராக்யத்திற்கு உண்மை, திண்மை, நன்மை, நேர்மை, சீர்மை, தூய்மை, தெளிவு இவை உபாயங்களாகும். உடலுக்கு நோய் வராமல் சுகமாக வாழ, பஞ்ச பூத நிறைகாக்க வேண்டும். மனதிற்கு நோய் வராமல் நிம்மதிபெற பஞ்சேந்திரிய நிறைகாக்க வேண்டும். உடல் பிண்டம், உலகம் அண்டம், பிரமம் பிரமாண்டம், இந்த முப்பொருளும் பதி பசு பாசம் எனப்படும். பசுபாசம் நீங்கவே ஜீவனை சாதனத்தில் வாட்டவேண்டும். தீயில் தங்கத்தை வாட்டினால் மாற்றேறும்; வாழ்வை தியாகத்திலும் தெய்வ பக்தியிலும் பரோபகாரத்திலும் தவத்திலும் வாட்டினால், அருள்மேருகேறித் தெய்வப்பொலிவுறும், பௌதிகரசாயனம் போல் இந்த ஆத்மிக சாதனமும் கண்கண்ட பலனைத்தரும்.சிலர் யோகசாதனம். கடவுளடைவு, அறநெறி என்றால், இண்டல் செய்கிறார்கள். காணும் உலகம் எப்படியோ அப்படியே கண் மனங்களுக்கு அதிதமான நுண்ணிய தெய்வப்பொருளும் உண்மையாகும்.

கடவுள் என்பது மனதைக் கடந்த உள்ளுணர்வால்: உணரக் கூடிய தூயபொருளாகும், அது கண்ணால் காணக்கூடியதன்று, கடவுள் சக்தி பொருள். அதை சத்தசக்தி என்போம். அந்தச் சக்தியே உலகை ஆக்கியளித்து நீக்கி மறைத்து அருளுகிறது. அந்தச்சக்தி எல்லாருள்

ளும் உருக்கொண்டிருக்கிறது. சாதி மத நாடு நிறபேதமெல்லாம் உடல் விவகாரம்; மனவிகாரம். ஆத்மா எந்தக் கட்டும் இல்லாத சுதந்தர சுத்த சமரசப் பொருள். அதை அடையும் வழியும் சுத்தம், சுதந்தரம் சமத்துவம். மனம் மொழி மெய்களில் இந்த மூன்று தன்மைகளையும் நாட்டினால் வாழ்க்கை உயரும்; சுத்த சுதந்தர சமத்துவ சாதனத்தால் உள்ளே ஆத்ம சக்தியை வளர்த்தால், உலக வாழ்விலும் அதை விளக்கலாம். ஒவ்வொருவரும் அப்படிச்செய்தால் உலகவாழ்க்கையே சுத்த சுதந்தர சமத்துவ சக்தி வாழ்க்கையாகும். அந்த நிலையில் மனிதனை மனிதன் உடல்கொண்ட தெய்வமென மதித்து நடப்பான். தன் போல் பிறரை மதிப்பான். இதற்கே சுத்தயோக சாதனம் என்பது. இச் சாதனத்தால் உள் விடுதலைபெற்றால், உலக விடுதலை எளிதாகும். ஸ்வ ராஜ்யம் என்பதற்கே, தன்னுள் ஆத்ம சக்தியின் ஆட்சியை, தன்னாட்சியை நிலை நாட்டுதல். தன்னைத்தான் அடக்கியாளல் என்பதாம். அந்த ஆட்சி கைக்கு வந்தால் ஆத்ம சக்தி பெருகும். அதனால் உலகிலும் ஆத்மராஜ்யத்தை, சாம்ராஜ்யத்தை நாட்டமுடியும். கட்டும் கவலையும் கற்பனைப் பொய்கள், சஞ்சல மனச் சேட்டைகள். நம் இயல் நிலை இன்ப நிலை. தியாகத்தால் தேச சுதந்தரம் பெறலாம்; யோகத்தால் ஆத்ம சுதந்தரம் பெறலாம். இரண்டும் சேர்ந்தாலே மனித வாழ்க்கை பூரணமாகும். வேதாகம சித்தர் இந்தப் பூரண வாழ்வையே விளக்கினர். ஓம் சுத்த பரிபூரண சக்தி. ஓம் தத்ஸத்.

194. மேடை ஏறுகிறேன்

உலகநாதபிள்ளை வந்தனோபசாரம் சொன்னார். சந்நிதியில் தீபாராதனை நடந்தது. சிவப் பிரசாதம் பெற்று, நான் தியானத்திற்குச் சென்றேன். மறுநாள் சில வடநாட்டார் என்னைக் கண்டனர். அவர்களுக்கு இந்தியில் ஆத்மசாதனம் பற்றிப் பேசினேன். அவர்கள் ஒரு விருந்தளித்தனர். மறுநாள் எல்லாரும் தோணியில் தனுஷ்கோடிக்குச் சென்றோம். ஸ்ரீநிவாசையங்கார், முதலிய எல்லாரும் சமுத்திரத்தில் நீராடினோம். சிலர் தர்ப்பணம் செய்தனர். நான் என்னையே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தேன். நேற்று வரையில் நடந்த வாழ்விற்கு முழுக்குப் போட்டுப் புதிய வாழ்வு தொடங்கினேன். அன்று உபவாச மிருந்து நிரம்ப ஜபம் செய்தேன்.

நான் பாம்பனில் விவேகானந்தருக்கு பாஸ்கர சேதுபதி நாட்டிய வெற்றித் தூணைப் பார்த்து, தமிழுக்கு உலகில் இப்படி வெற்றி நாட்ட வேண்டுமென்ற உறுதியுடன் வண்டியேறினேன். உலகநாதபிள்ளை ஒரு கடிதம் காட்டினார். அதில் மதுரையில் நான் பேசவேண்டும், என்று கண்டிருந்தது. எல்லாரும் மதுரைக்குச் சென்றோம். அங்கே ஒரு தேசிய வித்யாசாலையின் ஆண்டுவிழா நடந்தது. அங்கும் சே. ஸ்ரீநிவாசையங்கார் தலைமை வகித்தார். நான் தேசியக் கல்வி பற்றிப் பேசினேன்: மதுரை சுப்பிரமணியர், பத்மாசனியம்மாள் ஸ்ரீநிவாச

வரதன், முதலியோர் பேசினர். தேசம் விடுதலை பெற்றாலே தேசியக் கல்வி தாராளமாக நடக்கும். எல்லாரும் இப்போது சுதந்தர முயற்சியில் கருத்துான்றவேண்டும், என்றார் ஐயங்கார். நான் அவருடன் தனியாக நீண்ட நேரம் பேசினேன். "பாரதியார் பேசாமல் காங்கரஸ் கைங்கர்யம் செய்யும்; உமது கனலை அடிமைத் தனத்தைச் சுட்டெரிப்பதில் பிரயோகியும்" என்று ஐயங்கார் விடை கொடுத்தார்.

என் வாழ்க்கை இப்போது அடியோடு மாறிவிட்டது. மதுரையில் நான் எந்த உறவினரையும் பார்க்கவில்லை. உலகெல்லாம் என் உறவே. என்னை வழி நடத்திய பாரதசக்தி அன்னையை மட்டும் தரிசித்து ரயிலேறினேன் :

ஓம்சுத்த சக்தி உலகிறைவி உன்னருளால்
ஆம்சித்தி; வாழ்க்கை யமுதாகும்—போம்கவலை
புண்ணியங்க ளாகும் புகழாகும்; பூமியிலே
எண்ணியது வாகும் இனி.

"புதுமை புதுமை புதுமை!" என்று ரயில் முன் செல்கிறது. என் எண்ணங்கள் வானோங்கிப் பறக்கின்றன. கீதை படிக்கிறேன்; யோக சித்தி படிக்கிறேன்; சிந்திக்கிறேன். மனக்கனவில் ஒரு கலைக் கோயில் வருகிறது....ஓம்!...இதோ திருநெல்வேலி ஜங்ஷன். "வாருங்கோ வாருங்கோ!" என்று அனந்த கிருஷ்ணையர் வண்டியேறி என்பக்கத்தில் அமர்கிறார். திருநெல்வேலி தாண்டினால் கூட்டமில்லை. அவரும் நானும் தாராளமாக அளவளாவினோம். ஐயர் நலன்களை ஆவலாகக் கேட்டேன். 'ஐயர் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்றார் அனந்தர். ஓம் ஓம்! சேரமாதேவி வந்தது; காலை ஒன்பது மணி; புதன்கிழமை சுபவேளையில் நான் பாரதத்வாஜ ஆசிரமத்துள் புகுந்தேன். இனி குருகுலப்படலம் தொடங்கும். ஒத்திகை முடிந்து உலகரங்கில் பிரவேசிக்கிறேன். வயது இருபத்தி மூன்று தான். இதோ மேடை யேறினேன்! எனது குருகுல நாடகத்தைப் பாருங்கள்!

கரு. தமிழ்க் குருகுலம்

195. கலைக் காந்தம்

தி. ரா. மகாதேவையர் 'வாருங்கோ பாரதி' என்று ஒரு கூரை வீட்டில் வரவேற்று மாணவருக்கு அறிமுகப்படுத்தினார். நான் மாணவரை மகிழ்ச்சியுடன் நோக்கி "வந்தேமாதரம் ஓம் சக்தி!" என்றேன். மாணவரும் "வந்தேமாதரம் பாரத மாதாவுக்கு ஜே!" என்றனர். இதற்குள் அனந்தகிருஷ்ணையர் ஐயருடன் வந்தார்.

ஐயர்: வாருங்கோ நமஸ்காரம்! ரொம்ப நாளாக எதிர் பார்த்தேன்.

நான்: ஓம் சுத்தசக்தி—வணக்கம் இன்று மாறிப் பிறந்தேன். இருவரும் புத்தகசாலைக்குச் சென்றோம்.

ஐயர்; பாரதசக்தி முடிந்ததா?

நான்: ஒருதரம் முடிந்தது. நகாசு செய்யவேண்டும். கலைச் சிற்பியான தாங்கள் வரிவரியாகப் பார்த்து மாற்றேறச் செய்யவேண்டும். நான் கவியுலகிலும் யோக சாதனத்திலும் வாழ்ந்தவன்; வெளியுலகை இனித்தான் தங்களால் அறியவேண்டும். இந்த மகா காவியத்தைத் தங்கள் திருவடியில் வைத்து வணங்குகிறேன்.

ஐயர்: மகா காவியம் போல் பாரதசக்தியாக வாழ்க!

நான் ஐயரைப் படம் பிடிப்பதுபோலப் பார்த்தேன். குரு கோவிந்த சிங்கனைக் கண்டேன். சிங்க முகம், நீலமணிக் குன்றுபோல் திண்ணுடல்; புளிய வைரம்போல் உறுதியான அங்கங்கள்; கர்லாவும் பஸ்கியும்செய்து இருகிய தசைகள்; செவ்வரிப்படர்ந்த கூர்விழிகள், அடர்ந்த தாடி வகுடெடுத்து ஒழுங்காகச் சீவிவிட்ட கேசம்; அகன்ற மார்பு பஞ்ச கச் வேஷ்டி, மேலே கதர் துப்பட்டா, நெற்றிநிரம்ப விபூதி, பிறைச்சந்தனத்தின் நடுவே குங்குவப்பொட்டு—இவற்றுடன் ஐயர் என்முன் வீராகாரமாக நின்றார், அவரது கிண் கிணிக் குரலுடன் நாணப் புன்னகையும் சேர்ந்து என் உள்ளத்தில் அன்பு மின்சாரம் பாய்ச்சின, பாரத சக்தியைத் திறந்தேன். வீரசிவாஜிப் படலத்தில் இந்தச் செய்யுளைப் படித்தேன்:

உண்ணும் ஊணினை, உயிர்த்திடும் உயிர்ப்பினை, உரையை
எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும் பணிகளை யெல்லாம்
கண்ணினும் அரி தாகிய கற்பக நாட்டின்
புண்ணி யப்பயன் வாழவே பூசனை புரிந்தான்.

'இது தங்களுக்குப் பொருந்தும்' என்று அவர் முகத்தைப் பார்த்தேன். ஐயர் மென்னகை புரிந்து, வாக்கு கம்பீரமாயிருக்கிறது.—''மகா காவிய வாக்கே. ஆம் வீரனே நமக்கு வேண்டும். கவிகள் வீரரையே பாடினார்கள்'' என்றார். ''நான் உலக வீரர்களைப் பாடினேன். என் உள்ளங் கவர்ந்த ஒரு வீரனைப் பாடப்போகிறேன். அந்த வீரர் கலா வீரன்; என்முன் நிற்கிறான்'' என்றேன். ஐயர் மறுபடியும் நாணப் புன்னகை ததும்ப மெல்லக் குரல் இழுத்தார்:

இல்லாத உலகத் தேங்கும் இங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும், வேதக் கடலுமே என்னும் காட்சி

சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொல்இச் சொல்லின்செல்
[வன்
வில்லார்தோள் இளையவீர, விரிஞ்சனோ விடைவல் லானோ.

ஹனுமாரைக் கண்டதும் ராமன் சொன்ன இதையே இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. தங்கள் கலையும் தவமும் இங்கே அமோகமாக "சித்தி யடையும்" என்றார். "எல்லாம் தங்கள் ஆசியால்" என்று இந்தச் செய்யுள் பாடினேன்.

கார்வரை மேனி யானைக் கலைவளர் கடல னானை
நேர்திரு நடையி னானை நேசருக் குயிரன் னானைக்
கூர்விழிக் கருணை யானைக் கொள்கைக்கே வாழுவானைப்
பார்புகழ் வீர வேளைப் பார்த்துளம் பூத்து நின்றேன்.

"பாரதி வாக்கு கம்ப வாக்குப் போல் விளங்கட்டும்" என்றார்.

டாண் டாண் என்று மணியடித்தது...பிரார்த்தனை மணி. ஐயர் "பாரதி இன்று பிரார்த்தனை நடத்தட்டுமே" என்றார்.

196. பிரார்த்தனை

பிரமசாரிகள் வட்டமாக மாமரத்தடியில் நின்றனர்; நானும் அவர்களுடன் நின்று 'ஸஹனவவது' என்ற உபநிஷத் பாசுரம் பாடிய பிறகு மத்யமாவதியில் பாடினேன் :

வானக் குடை நிழலில்—வளரும்
மாநில மாந்த ரெல்லாம்
ஞானச் சுடர் பெருகி—ஒருகுல
நண்பராய் வாழியவே !

வெய்ய பொறாமையின்றி—மன
வேற்றுமைத் துன்பமின்றி,
பொய்யகங் காரமின்றி—பொதுநலப்
புண்ணிய ராகுகவே.

வீரத் திருவுடனே—நல்ல
வினைத் திறலுடனே,
நேரத்தைப் பொன்னாக்கி—உலகிசை
நிலவ வாழியவே !

புண்ணிய பாரதத்தில் இன்பங்கள்
பொங்கித் தவழ்ந்திடவே,

எண்ணிய வெற்றியெல்லாம்—பரம்பொருள்
என்றும் அருளுகவே,

வருகுலவீரர்—ஒளிபெற
வளரும் பாரத்வாஜ
குருகுலம் செழிக்க—இறைவா
கொடுத்தருள் துணையே!

இதையே வசனத்தில் விளக்கினேன். பிறகு எல்லாரும் சாப்பிடச் சென்றனர். ஐயர் என்னைத் தம் பக்கத்தில் அமர்த்தி 'பாரதி புஷ்டியாகச் சாப்பிடட்டும்' என்றார். ஐயரின் வலதுபுறம் நான், இடது புறம் கும்பலிங்கம் பிள்ளை, பிறகு சாதிமத பேதமில்லாமல் எல்லாருமே வரிசையாக அமர்ந்துண்டோம். அப்போது கிணற்றருகே சமையல் குடில் இருந்தது. நான் சாப்பிட்ட அழகைக் கவனித்தார் ஐயர். "பாரதிக்கு என்ன ஆகார நியமம்?" என்று கேட்டார். கனிகடலை தயிர் தேங்காய், என்றேன் "ரொம்பச்சரி; ராத்திரி முதல் என்னுடன் சாப்பிடலாம்" என்றார். ஐயர் வாழ்வுடன் என்வாழ்வு ஐக்கியமானது. இருவரும் கனி கடலை சாப்பிட்டுக் கொண்டே அவர் அறையில் பல விஷயங்களைப் பேசினோம். இடையிடையே ஐயர் சரித்திரம் வரும்படியாகக் கேள்விகளைப் போட்டுவிடுவேன். முதலில் கொஞ்சம் சங்கோசப் பட்டார். பிறகு நான் கேட்டதெல்லாம் பிரியமாகச் சொன்னார். படிக்கும்போது, நாட்டு நடப்புகளைப் பேசும்போது, பாரதசக்தி பாடும் போது, உண்ணும்போது, உலாவும்போது மெல்லமெல்ல அவரது உண்மை வரலாற்றை அவர் வாயிலிருந்தே வாங்கிக் குறிப்பெழுதினேன். அதுவே வீரவிளக்கு வ. வே. சு. ஐயர் என்ற நூலாகப் பிற்காலம் வெளி வந்தது. ஆங்கிலத்திலும் ஐயர் வரலாற்றை எழுதினேன். என் ஆத்ம சோதனையைத் தீவிரப்படுத்திய ஐயர் கதையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

197. வ. வே சு. ஐயர்

ஐயர் வாழ்க்கை கலையில் ஊறி யெழுந்து, 1909 வரையில் சம நிலத்தில் ஓடியது. லண்டனில் புரட்சிப் புயலானது; புதுவையில் சண்டமாருதமானது காந்தி பக்தியால் மந்த மாருதமாகிச் சென்னையில் உலாவிச்சிறையில் புகுந்து, பிறகு குருகுலச்சோலையில் தமிழ் மலர்களுடன் கொஞ்சி விளையாடியது. இறுதியில் கம்பி மின்னல் போல் கல்யாண அருவியில் மறைந்தது.

திருச்சிராப்பள்ளியருகே வரகனேரியுள்ளது. அங்கே வேங்கடேசையர் காமாக்ஷியம்மாளுடன் இல்லறம் நடத்தி வந்தார். கல்வி இலாகாவில் வேலைபார்த்து, வந்ததைக்கொண்டு மானமாக வாழ்ந்தார் தந்தை. தாயின் ஊர் ஈரோடுக்கு அருகே சின்னாளம்பட்டி. அங்கேதான்

ஐயர் பிறந்தார், 2—4—1881, விக்ரம வருஷம், பங்குனி 22-ந் தேதி கார்த்திகை நட்சத்திரம், துலா லக்னம். வேங்கட சுப்பிரமணியன் மணிப் பிள்ளை. விளையாட்டிலும் வீரன்; படிப்பிலும் தீரன்; மிஷன்ரி பள்ளிக்கூடத்தில் படித்து மெட்ரிக் தேறியதும், யோசேப்பு கல்லூரியில் சேர்ந்து 1899ம் ஆண்டு பி. ஏ. பட்டம் பெற்றான். ஆங்கிலம், லத்தீன், சரித்திரம் பொருளாதாரம், கணிதம் இவற்றில் நிபுணன், தானாகத் தமிழ் பயின்று வள்ளுவர் குறளிலும் கம்பனிலும் மோகங் கொண்டான் மணி. 1891ம் ஆண்டு ஐயர் சட்டப் பரீட்சையில் தேறி முதல்தர வக்கீல் ஆனார். இதற்குள் கலியாணமாகிக் குடும்பப் பொறுப்பும் வந்தது. பாக்யலக்ஷ்மியுடன் திருச்சியில் இல்லறம் நடத்தினார் ஐயர். வக்கீல் தொழிலும் செழித்தது. மைத்துனர் கே. ஜி. பசுபதி ஐயர் பெரிய செல்வராகி, இரங்கூனில் வியாபாரம் நடத்தினார். அவர் ஐயரை அழைத்தார். ஐயர் இரங்கூனில் வசிக்க விரும்பினார். தகப்பனார் ''ஸால்போல் சென்று பால்போல் திரும்பு'' என்று ஆசீர்வதித்து அனுப்பினார். மகனும் வக்கீலாகச் சென்று வீரனாகத் திரும்பினான்.

இரங்கூனில் ஐயருக்கு நல்ல வரும்படி வந்தது. பசுபதி ஐயர் லண்டனில் உண்டியல் வியாபாரம் நடத்த விரும்பினார். ஐயர் அத்துடன் தாமும் பாரிஸ்டருக்குப் படிக்க முடியும், என்றார். சரி என்று, வேண்டிய பணம் தந்து பசுபதி, நம் ஐயரை லண்டனுக்கு அனுப்பினார்.

ஐயர் லிங்கன்ஸ் இன்னில் சேர்ந்து பாரிஸ்டருக்குப் படித்துக் கொண்டே உண்டியல் வியாபாரத்தையும் கவனித்தார். அத்துடன் சிறிது பிடிலும் நடனமும் கற்றார். அவர் முதலில் ஓட்டலில் சாப்பிட்டார், பிறகு ஒரு வீட்டில். ஆனால் வெள்ளைக்கார வுணவு அவருக்குப் பிடிக்கவில்லை. லண்டன் ஹைகேட், 65, கிராம்வெல் அவின்யூவில், இந்தியா வீடு இருந்தது; அது ஸியாமாஜி கிருஷ்ண வர்மா நாட்டிய சுதந்தரச் சங்க நிலயம். வர்மா தயானந்த சரஸ்வதியின் முதல் மாணவர்; வடமொழிப் புலவர், தன்னுறுதியால் ஆங்கிலப்பட்டம் பெற்று, லண்டன் சென்று ஆக்ஸ்போர்டில் கற்று பாரிஸ்டராகி, பம்பாயில் தொழில் நடத்தினார். பிறகு ஆஜ்மீர் திவானாயிருந்தார். பிறகு லண்டனிலேயே தொழில் நடத்திப் பணம் குவித்தார். அவர் தம் செல்வத்தையும் அறிவையும் இந்தியா சுதந்தரம் பெறவே அர்ப்பணித்தார். தீவிரமான இந்திய வாலிபர்களை லண்டனுக்கு அழைத்து கல்வியுடன் தேச பக்தியும் புகட்டிப் புரட்சிப்படை தயாரித்தார். அதற்காக ஸோஷியலாஜிஸ்டு என்ற பத்திரிகையும் நடத்தினார். இவருக்கு வலதுகைபோல் உதவிய பெண்மணி மாதாம் காமா; பார்ஸிச் செல்வி. வீரத் தியாகி, புரட்சி வீரரின் அன்புள்ள அன்னை. இவரே முதன்முதல் இந்தியாவிற்கு ஒரு வந்தேமாதரக் கொடி செய்து, ஐரோப்பாவில் பிரபலப்படுத்தினார். காமாவும் ஸியாமாவும் இந்திய

வீட்டை வீர வாலிபர்களிடமே ஒப்புவித்துப் பாரிஸில் இருந்து, புரட்சி ஜோடித்தனர். இவர்களுக்குக் கண்ணாயிருந்த இரண்டு வீர வாலிபர் சாவர்கரும் ஐயருமே.

ஸாவர்கர் ஆங்கில மராடியப் புலவர், கவி, வீரர், தியாகி, சிவாஜீ போன்ற தேசபக்தர், சமர்த்த குரு ராமதாஸ் உபதேசங்களைப் பின்பற்றி, ஹிந்து ராஜ்யம் நாட்ட ஆர்வங் கொண்டவர். திலகரின் மாணவரான சாவர்க்கரை அவரே சியாமாஜிக்கு சிபாரசு செய்து லண்டனுக்கு அனுப்பினார். சாவர்கர் மித்ரமேளா அபிநவபாரதி போன்ற சங்கங்களால் நாசிக் பம்பாய் பிராந்தியங்களில் புரட்சிப் புயலைக் கிளப்பி விட்டு லண்டன் சென்றார். இவர் சகோதரர் இருவரும் தேசத்திற்கே பலிதானமான புரட்சி வீரர். லண்டன் இந்திய வீட்டிலிருந்து கொண்டு மஃஜினி கரிபால்டி நானாசாகெபுபோல், தேசாபிமானத்தையும் வீரச் செயல்களையும் தூண்டி, இந்திய வாலிபர்களை ஆவேசப்படுத்தினார். சாப்பாடு தேடிப் போன ஐயர், சாவர்காரைக் கண்டார். சாவர்காரைக் கண்ட ஐயர் சரித்திரப் புகழ் பெற்றார். பிடில் நடனம் எல்லாம் ஒதுக்கித் தள்ளி, தியாக வேள்வியில் குதித்து, பாரதமாதாவின் விலங்குகளை முறிக்க வாள் வலி பெருக்கினார் ஐயர். ஐயருடன் டாக்டர் ராஜன், நிரஞ்ஜன்பால், கோவிந்தமேனன், ஹரிநாம்ஸிங், மித்ரா, திருமாலாசார்யா, சையத் ஐதர், முதலிய வீரர் இருந்தனர். இந்தத் தீவிரக் கனல்கள் குரு கோவிந்தன் சிவாஜீ, கரிபால்டி நானாசாகெபு போன்ற புரட்சிப் புலிகளின் வழியைப் பின்பற்றித் தம்மைத் துப்பாக்கி பிடிக்கப் பயிற்றிக்கொண்டனர். பஞ்சாப், மகராஷ்ட்ரம், வங்காளம் தமிழகம், ஆந்திரா நாடுகளில் புரட்சியும் கிளர்ச்சியும் தூண்ட வகை செய்தனர். பட்டினியிருந்து கூடப் பணம் சேர்த்து, துப்பாக்கிகளை வாங்கி வாங்கி, பணிகாரப் பெட்டிகளில் பதுக்கிப் பதுக்கி, பம்பாய்க்கும் புதுச்சேரிக்கும் அனுப்பினர். போர்க் கலை பயிலச் சிலர் ரஷ்யா ஸ்பெயின் பிரான்ஸ் தேசங்களுக்குச் சென்று வந்தனர். ரஷ்யாவில் ஜார் கொடுங்கோலை ஒழிக்க மறைமுகப் புரட்சிகள் நடந்தன. தாமும் அப்படியே செய்ய முனைந்தனர். பாரிஸிலிருந்து ஆயுதங்களைச் சேகரித்துச் சென்று, இந்தியாவில் பலாத்காரப் புரட்சி நடத்தி, சுதந்தரத்தை நாட்டவே பேசினர், எழுதினர், வாள் வீசினர், துப்பாக்கிப் பிடித்தனர். ஸ்காட்லண்ட்யார்டு ஒற்றரும் இவர்களைக் கவனித்தனர். சாவர்கர் 1857-ல் எழுந்த எரிமலைப் போரை, (Indian war of Independence) கனல்பெற வர்ணித்து ஓர் அற்புத நூல் எழுதினார். மராடியில் எழுதிய அந் நூலை அவரும் ஐயரும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 2000 பிரதிகள் அச்சிட்டு நாடெங்கும் மறைவாக அனுப்பினர். ரஷ்யா அமெரிகா, பிரான்ஸ் ஐர்லாந்து தேசங்களிலும், அந் நூலைப் புரட்சி வீரர் வரவேற்றனர். அந்நூல் புதுச்சேரிக்கு வந்து தமிழகத்தில் பரவிப் புரட்சித்தீ மூட்டியது. அதை ஐயர் தமிழில் மொழிபெயர்த்து பாரதியாரின்

இந்தியாப் பத்திரிகையில் நான்கு அத்தியாயங்கள் வெளியிட்டார். கரிபால்டி சரித்திரமும் வெளியிட்டார். லண்டன் இந்தியா வீட்டு நடைமுறைகளையும் தொடர்ந்து எழுதினர்.

1908 மே 10-ந் தேதி வீரவாலிபர், சுதந்தர பீடத்தில் பலிதான மான தியாகிகள் தினத்தைக் கொண்டாடினர். தியாக பலியாவீர் என்றொரு புரட்சிப் பிரசுரமும் வெளியானது. பிரசுரங்கள் எழுதுவது சாவர்கர் அல்லது ஐயர் "1857ம் ஆண்டுப் புரட்சி தோற்கவில்லை; அதன் கனல் குப்பென்று பற்றி எழுகிறது. 1908ல் அது வெற்றி பெறும். பாரதமாதாவின் பந்தனை சிந்தும், வீரத் தியாகிகளே முன் வாருங்கள்!" என்ற பாணியில் துண்டுப் பிரசுரங்கள் கிளம்பி நாடெங்கும் எப்படியோ பறந்து பரவின. சாவர்கர் கூட்டம் என்றால் மித வாதிகளுக்குக் கிலி; ஒருதரம் ஐயரும் சாவர்காரும் கோகலேயை வெஸ்ட்மின்ஸ்டரில் உள்ள நாஷனல் லிபரல் கிளப்பில் கண்டு, 1857ன் வெள்ளி விழாவுக்குப் பணம் கேட்டனர். அந்த மிதவாதி மறுத்து, "புரட்சி இயக்கத்தால் நாட்டுக்கு ஆபத்து" என்று குமுறினர். ஐயர் "கோழைகளாலேயே ஆபத்து. துப்பாக்கி முனையிலேதான் சுதந்தரம் வரும்" என்று நீளப் பேசிவந்தார். பிபின் சந்திரபாலும் லாலாஜியும் இந்த வாலிபரைப் பார்த்தனர். ஆனால் தைரியமாக இந்திய வீட்டில் வந்து சுதந்தரநாள் விருந்திலும் பங்குகொண்டு தமது அஹிம்ஸா தருமத்தையும் உபதேசித்தவர் மஹாத்மாகாந்தி ஒருவரே. அவரை ஐயரே அழைத்துவந்தார். ஐயரே அவரை முதன்முதல் மகாத்மா என்றறிந்தார். உண்மையும் அன்புமே உலகுக்கு நலமாகும். பலாத்காரத்தால் பகையே முற்றும். சாத்விக எதிர்ப்பே விடுதலைக்கு வழி" என்று உபதேசித்தார் காந்தி. ஐயருக்கும் சாவர்கருக்கும் அவர் செய்த உபதேசத் தொகுதியே இந்த்ஸ்வராஜ் என்ற நூலாக வந்தது. காந்தி சொற்படியே வாலிபர் சைவ உணவு தயாரித்தனர். அதில் காந்தியும் பங்குகொண்டார். அவரை இன்னார் என்று அறியாத டாக்டர் ராஜம் சக்கை வேலை ஏவினர். ஐயர் அறிவித்த பிறகு வணங்கினர். காந்தி "சேவை கிடைப்பது இன்பம்' என்றார். விருந்து முடிந்ததும் வாலிபருக்குத் தமது சாத்வீக தர்மத்தை உபதேசித்தார். சாவர்கார் தமது சண்டமாருதப் புயல் புரட்சியை இடியும் மின்னலுமாகக் கொட்டி வாள்முனைச் சுதந்தரத்தை நிலை நாட்டினர். வீர வாலிபர் சடசட வென்று கைதட்டி "மாரோ பரங்கிகோ!" என்று ஆரவாரம் செய்தனர்.

198. வீர வரிசைகள்

இப்படிப் பேசும் வீரரை ஒற்றர் விடுவார்களா! சர்க்கார் கண் அவர்கள்மேல் விழிப்பாயிருந்தது. நண்பர் போல் ஒற்றர் வந்தனர். கீர்த்திகர் என்ற ஒற்றன் பல் வைத்தியத்திற்குப் படிப்பவன்போல் அங்கே ஜாகை வைத்துக் கொண்டு, சாவர்க்கருடன் ஒட்டுறவாயிருந்

தான். ஒருநாள் ஐயர் அவனது ஒற்றறிக்கையைப் பார்த்துவிட்டார். அத்துடன் இந்திய வீட்டில் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு பெண்ணையும் அவன் இழுத்துக்கொண்டு திரிவதைக் கண்டார். ஒருநாள் இரவு அவன் நாடகம் பார்த்துத் திரும்பினன். ஐயர் அவனது ஒற்றறிக்கையைக் கண்டுபிடித்து, "சுட்டு விடுவேன் உள்ளதைச் சொல்" என்று துப்பாக்கியை நீட்டினர். ஆள் "பம்பாய் சர்க்கார் அனுப்பியே வந்தேன். சாவர்கரைக் கண்காணிக்கிறேன்" என்முன். அகப்பட்டுக் கொண்டது தெரிந்தால் அவன் வேலை போய்விடும். ஆள் கெஞ்சினன். "இந்திய சுதந்தரச் சங்கத்திற்கு மாதம் இரண்டு பவுன் தரவேண்டும்; ஒற்றறிக்கையை ஐயர் தணிக்கை செய்து அவர் சொன்னபடி எழுதியே போலீசுக்கு அனுப்பவேண்டும்" என்ற நிபந்தனையுடன் ஆள் தப்பினன். திருமாலாசாரி என்ற தமிழனை, ஐயர் போலீசிடம் மெல்ல ஒற்றுவேலை செய்வதாக அமரச் சொன்னர். ஐயர் எழுதித் தருவதையே ஆசாரி ஸ்காட்லாண்ட் யார்டுக்கு அனுப்பி மாதச் சம்பளமும் பெற்முன். அத்துடன் இங்கே சமயலும் செய்தான். இந்த வாலிபன் ஜெர்மனியில் நீண்டகாலம் இருந்தான். எனக்கும் கடிதம் எழுதினன். இப்படி எத்துக்கடைகள் செய்து, வீரர் போர் பயின்று, புரட்சி ஜோடித்தனர்.

இவருள் ஐயர் போற்றிய வாலிபன் திங்ரா: அவன் பஞ்சாபி, எஞ்சினீரிங் மாணவன். பார்த்தால் சாது, பாய்ந்தால் புலி. மற்றவர்கள் சளசளவென்று விருப்புப் பேசுவார்கள், திங்ரா சிந்திப்பான். 'பேசியென்ன? பொறுமையாகச் செய்கையில் இறங்குவோம்' என்பான். ஒருநாள் பொறுமையைச் சோதிப்போம் என்று கிளம்பினர் வீரர். புறங் கையில் ஊசியேற்றி உள்ளங்கைக்கு வர அழுத்தல்... அந்த வேதனையை முகம் சுளிக்காது பொறுக்க வேண்டும் என்பது சபதம், இச் சபதத்தில் ஐயர் வென்முர். ஐயரே திங்ரா கையில் ஊசியேற்றினர். ஊசி மேஜையையும் பொத்தது; ஆள் புன்னகைத்தான். எல்லாரும் சபாஷ் போட்டு அவனே தங்கள் காரியத்தை முடிக்க வல்லவன் என்றனர்,

மே, 1910; பரீட்சை முடிந்தது; ஐயர் முதன்மையாகத் தேறினர். ஆனல் சந்நதை மறுத்துவிட்டார். எந்த பிரிடிஷ் கோர்டிலும் தாம் தொழில் நடத்தப் போவதில்லை என்று ஒத்துழையாமை கூறினர். சாவர்கார் பாரிஸ் சென்று அன்னை காமாவுடன் தங்கியிருந்தார். திங்ரா ஜாகை மாற்றினன். ஐயர் மட்டுமே இந்திய வீட்டில் இருந்தார். எல்லாம் கப்சுப்!

டபார் டபார்! ஐயையோ, அலாஸ்! கர்ஸ்ஜான்வில்லி (Curzon-Willie) மாண்டான். திங்ரா சுட்டான் பயங்கரக்கொலை! லண்டன் பத்திரிகைகள் அலறுகின்றன. வில்லி ஐஸிஎஸ், இந்திய சமஸ்தானங்களில் வேலை பார்த்தவன். இந்தியக் காரியதரிசிக்கு மூளைபோன்றவன்,

இங்கே இந்தக் கர்ஸீஜான் சொல்லும் யோசனையே அங்கே அந்த கர்ஸீ ஜான் பிரபுவின் அடக்கு முறைகளுக்கு உலைக்களமானது. பேர்வழி ஜிஹாங்கிர் ஹாலில் விருந்து சாப்பிட வந்தான். திங்ரா அவனுக்கு சலாம் வைத்து, கைகுலுக்கி, இப்படி அப்படி உலாவி, பசக்கென்று துப்பாக்கி குதிரையைத் தட்டி விட்டான். வில்லி மல்லாந்தான். அவனைக் காக்க வந்த லால்காக்காவும் குண்டுபட்டு விழுந்தான். திங்ராவோ நிம்மதியாக "ஆள்மேல் எனக்குப் பகையில்லை; ஆங்கில அடக்குமுறை ஆட்சியைக் கண்டிக்கவே இப்படி என் கடமையைச் செய்தேன்; எனது தேச விடுதலைக்கு இதுவே வழி; இதை நானே செய்தேன்; யாரும் என்னைத் தூண்டவில்லை" என்ருன். அவனைத் தூக்கிலிட்டது சர்க்கார். "கடவுளே வந்தனம்; நாட்டிற்காக நான் தியாகபலியானேன். இதுவே என் மகிழ்ச்சி" என்று உயிர் நீத்தான். திங்கராவின் படத்தை ஐயர் எனக்குக்காட்டி 'இவனே தீரன்' என்ருர்.

இதன்பிறகு நாசிக்கில் ஜாக்ஸன் சுடப்பட்டான். இக்கொலை சம்பந்தமாக ஸாவர்கரை கைதுசெய்து பிரிஸ்டல் சிறையில் அடைத்தனர். ஐயர் அவரைச் சிறையில் பேட்டி கண்டு "நானும் உள்ளே வருவேன்" என்ருர். ஸாவர்கர் "ஐயரே போம் இந்தியாவுக்கு. அங்கே வேலையுள்ளது. நாடு விடுபட வீரரைத் திரட்டிச் செயல் புரியும்" என்று கட்டளையிட்டு, இரகசியமாக ஏதோ சாடைகாட்டினர். இருவரும் பிரியாவிடைகொண்டனர். ஐயருக்கும் வாரண்டு இதோ வருகிறது. 'தென்னிந்திய உச்சிக் குடுமிப் பார்ப்பானை பிடி' என்று ஒற்றருக்கும் அவசர அறிக்கை பறந்தது. ஒற்றர் லண்டனை அலசினர், ஓட்டல்களில் பார்த்தனர். ரயிலில் தேடினர், ஏமாந்தனர். அப்போது தான் ஒரு அகாலிகனவான் ரயில் தப்பிப்போய் தேம்ஸ் நதிக்கு ஓடுகிருர். அங்கே ஆம்ஸ்தர்தாம் கப்பல் ஊதுகிறது. விரைவாகச் சீட்டு வாங்கி அதில் ஏறுகிருர். அவரது கைப்பெட்டியில் வி. வி. எஸ். என்று எழுதப்பட்டிருக்கிறது. அது ஒற்றர் கண்ணில் படுகிறது. ஒரு ஸார்ஜெண்டு 'ஐயா வி. வி. எஸ். ஐயரே, உமக்கு இதோ தந்தி' என்று தருகிருன். ஐயர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். அறிந்தார். 'ஐயா நான் ஐயரில்லை; என் பெயர் வி. விக்ரமசிங்" என்ஞெரு உருது நூலைப் பிரித்துப் படித்தார். ஸார்ஜெண்டு "மன்னியுங்கள் ஸார்" என்று ஏமாந்து சென்ருன். உச்சுக் குடுமிப் பார்ப்பானைக் காணும். விக்ரமஸிங் ஆம்ஸ்தர்தாமில் இறங்கி, ஓர் இடத்திற்கு விரைகிருர். ஒற்றன் "ஐயா வாருங்கள்: நல்ல ஓடல் இருக்கிறது: சாப்பிட்டு இருவரும் பாரிஸ் செல்வோம்" என்று இழுக்கிருன். "ஐயா என் மதக் கடன் செய்து, நண்பர் வீட்டில் சாப்பிட்டுத் தெற்கே செல்வேன்" என்ற அகாலிகனவான் ஒரு வண்டியிலேறி விரைகிருர். ஊர்க் கோடிக்குச் சென்று அங்கிருந்து பாரிஸ் வண்டியில் ஏறிச் செல்கிருர்.

பாரிஸ் ஸ்டேஷனில் ஸ்ரீமதி காமாவும் நண்பரும் காத்திருக்கின்றனர். அகாலி கனவான் இறங்குகிறார். "சபாஷ் வ.வே.சு. ஐயரே!" என்று காமா கைகுலுக்கி மோடாரில் ஏற்றித் தன் மாளிகைக்குச் செல்கிறாள். அங்கே சியாமாஜி, திருமலாசாரி முதலியோர் வரவேற்றனர். எல்லாரும் ஏதோ மறைவாகப் பேசினர். சாமான்களை பலமாக வாங்கினர். புதுச்சேரிக்கு பெட்டிகளும் ரகசியக் கடிதங்களும் சென்றன. ஐயர் போர்ப் பயிற்சி பெறுகிறார். தாடி நீண்டது. உருது நன்றாகப் பழகினார். எல்லாம் தயார்.

அப்போதுதான் சாவர்கரை விசாரணைக்காக இந்தியா கொண்டு செல்கின்றனர். மோரியாக் கப்பல் மார்சேல் வருகிறது, காமா, சியாமா ஐயர் மூவரும் மார்சேல்ஸ் துறைமுகத்திற்கருகே மோடார் வைத்து ஆவலாகக் கடலை நோக்கி நிற்கின்றனர். அதோ கடலில் ஒரு தலை தெரிகிறது. வீரன் மார்நீச்சுப் போட்டு வருகிறான், அவனைத் துரத்தி ஸார்ஜெண்டுகள் அதி விரைவாக வருகிறார்கள். வீரன் கரை சேர்ந்து பிரெஞ்செல்லைக்குள் ஓடுகிறான். "ஆ அதோ நம் தலைவன்" என்று ஐயர் பாய்கிறார். காமா "சாவர்கர்கி ஜே" என்கிறாள். சாவர்கர் கப்பலிலிருந்து தப்பி வந்தார். எப்படி? காவல் புலிகள் கண்ணில் எப்படிப் பொடி தூவினர்? காலையில் வெளிக்குப்போக மல அறைக்குட் சென்றார். சட்டையைக் கழற்றிக் கண்ணாடி ஜன்னலை மறைத்தார். அந்த அறையில் இருந்த அடித் துவாரத்தில் புகுந்தார். கடலில் ஆழ்ந்தார். ஒரு பர்லாங் சென்றே தலைதூக்கி விரைவாக நீந்தினார். காவலர் லட்ரினுக்கு வெளியே துப்பாக்கி பிடித்து நின்றனர். "வா வெளியே! எத்தனை நேரம்? உனக்கென்ன கழிச்சலா, காலராவா?" என்று கூச்சலிட்டனர். பேச்சில்லை, ஆளில்லை. பதறினர். மேலிருந்து சிலர் "அதோ நிர்வாணமாக ஒருவன் கடலில் நீந்துகிறான்!" என்று கூச்சலிட்டனர். பிறகு தான் புலிகளுக்குத் தெரிந்தது. வேலை போய் விடுமே என்று பதறி ஆளைத் துரத்தினர். சாவர்கார் ஒரு பிரெஞ்சு சிப்பாயிடம் "ஐயா என்னை டிராமில் ஏற்று" என்று மன்றாடினார். "திருடன்! பிடி! பிடி!" என்று வெள்ளைப் புலிகள் துரத்தி வந்து கழுத்தைப் பிடித்தன. பிரெஞ்சு போலீஸ்காரனும் அவர்கள் பக்கம் சேர்ந்தான். ஐயரும் காமாவும் பாய்ந்து வந்து "இவர் பிரெஞ்சு நிலத்தை அடைந்தார். கைது செய்யக்கூடாது!" "சட்டமில்லை" என்றனர். "போய்யா" என்று முரடர் சாவர்கரைப் பற்றிச் சென்று மோரியாவில் பலமான காவல் வைத்துச் சித்தரவதை செய்தனர். ஒரு தரம் வதை பொறுக்கமுடியாமல் அவர்கள் துப்பாக்கியைப் பறித்தே அவர்களைச் சுடப்போனார் சாவர்கர். எப்படியோ ஆளை பம்பாய் சேர்த்து விசாரித்து அந்தமானுக்கு அனுப்பினர் அதிகாரிகள்.

இங்கே ஐயர் சாவக்கரைப் பிடித்தது அநியாயம் என்று கிளர்ச்சி செய்து, பத்திரிகையில் எழுதி, பிரெஞ்சுக் குடியரசில் புகார் செய்து, ஆங்கில சர்க்காருக்குப் புகார் செய்வித்தார். முடிவில் ஹேக் கோர்ட்டு

வரை சென்று, அந்த விவாதம் முடிந்தது. ஐயர் செய்த பத்திரிகைக் கிளர்ச்சியால் சாவக்கர் வீரமும் இந்திய சுதந்தர இயக்கமும் உலகப் பிரசித்தி பெற்றன. கம்பனை எப்படியாவது காக்க ஐயர் முயன்றார். நாசிக் சதி வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

ஐயர் பாரிஸிலிருந்து செய்யவேண்டியது, அனுப்பவேண்டியதெல்லாம் முடிந்தன. ஒற்றர் ஐயரைப் பிடிக்கச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காமா வீட்டைச் சுற்றிக் கண்ணுறங்காக் காவல்...

நள்ளிரவு; ஒரு பார்ஸிகனவான் காமாவிடம் ஒரு கட்டுக்காகிதங்களைக் கையெழுத்திட்டுத் தருகிறார். கச்சையில் நோட்டுகளை வரிந்து கட்டிக்கொள்கிறார். கனவான் ஒரு மூடு வண்டியில் ஏறிச் சென்று ரயிலேறுகிறார் மறுநாள் 'ஐயோ ஐயர் தப்பிவிட்டார்! எங்கே! எங்கே! பிடி!'' என்று போலீஸ் ரகளை செய்கிறது. ஒற்றர் திகைக்கின்றனர். மாதாம் காமா வீட்டிலிருந்து புறப்படும் கடிதங்களையெல்லாம் உடைத்துப் பார்க்கின்றனர். ஒரு கடிதத்தில் "என் அருமை பாக்யம், நான் கண்காணாச் சீமைக்குப் போகிறேன். இனி இந்தியா வரமாட்டேன்'' என்றிருந்தது; இன்னொரு கடிதம்; ''நான் பிரேஜில் நாட்டில் குடியேறி விவசாயம் செய்து வாழ்வேன். நீயும் வா'' என்றது. ஒற்றர் விழிகள் பிரேஜில் பக்கம் திரும்பின. மறுபடி ஓர் கடிதம். "நான் பிரேஜில் காடுகளில் குடியேறுவேன், வருக.'' ஒற்றர் பிரேஜில் காடுகளை அலசுகின்றனர். ஐயரைக் காணோம். எங்கே ஐயர்?

அந்தப் பார்ஸி கனவான் ரோமாபுரி கலையழகைக் கண்குளிரப் பார்க்கிறார். பெட்டியைத் திறந்து கம்பனைக் கொஞ்சம் படிக்கிறார். பிறகு தாந்தேயின் திவினா கொமேதியா (திருக்காட்சி) வாங்கி புதுச்சேரிக்கு அனுப்பிவிட்டு, நேபிள்ஸைக் கண்டு கப்பலேறுகிறார். கைரோ வருகிறது. கப்பலில் ஒற்றர் துளாவுகிறார்கள். ரஸ்டம் ஸேட் திடீரென்று மறைகிறார். மறுநாள் மெக்கா யாத்திரிகளுடன் அல்லாஹு அக்பர் போட்டுக்கொண்டு ஒரு பக்கிரி கப்பலேறுகிறார். அவர் போடும் அல்லாக் கூச்சலும் பிஸ்மில்லா ஜபமும் கண்டு ஜனங்கள் "அச்சா சாது! சச்சா பக்ரீ'' என்கின்றனர். கப்பல் பம்பாய்க்கு வருகிறது. பக்கிரி பந்தரில் இறங்கி மறைகிறார். சாவர்கர் சிறையில் எப்படியோ ஒரு சீட்டு வந்து விழுகிறது. அதில் "உம் புகழும் வீரமும் உலகம் அறிந்தது...தியாகம் வீணாகாது. வந்தேமாதரம்'' என்றிருந்தது. சாவர்கர் வழக்கையொட்டி நாற்பதுபேரைப் போலீஸ்காரர் கைது செய்தனர். பக்கிரி இன்னாரென்று தெரிந்தாலோ அந்த மான் தவறாது. ஆனால் பேர்வழி ஒற்றர் கண்ணை பிரேஜில் பக்கம் திருப்பிவிட்டு, இதோ பாருங்கள் புதுச்சேரியில் வந்து குதிக்கிறார்.

புதுச்சேரித் துறைமுகத்தில் கொளும்புக் கப்பல் வருகிறது. சில நண்பர் ஒரு புல்குட் பேர்வழியை எதிர்பார்க்கிறார். யாரையும்

காணும்; நண்பர் வீடு திரும்புகின்றனர். கடலூரிலிருந்து ஒரு சாகெபு வருகிறார். மண்டயம் ஸ்ரீநிவாஸாசாரியாரைப் பார்த்து, ஸலா மாலேகும் வைக்கிறார். ஆசாரியார் 'தாங்கள் யார் தெரியவில்லையே' என்று மயங்கும்போது "நாந்தே வந்ததோ" என்று தமிழில் கேட்கிறார். ஆசாரியருக்குப் புரிந்துவிட்டது. உள்ளே அழைத்துச் செல்கிறார். சாகெபு குல்லாவை எடுக்கிறார். சட்டையைச் சுழற்றுகிறார். "வ. வே. சு. ஐயரே; ஜயவீரச் சிங்கமே வாரும்" என்று பாரதி ஆசாரியார் முதலியோர் வியந்து போற்றுகின்றனர். தூமாஸ் நாவலில் அர்த்தாஞ்ஞன் செய்த வீர வேலைகள்போலிருந்தது ஐயர் உக்யம். அன்று ஐயர் வைத்துவந்த குல்லாவும் கட்டின லுங்கியும் பிற்காலம் கண்டு, நானும் அணிந்து பார்த்து ஐயர் சரித்திரம் எழுதினேன். ஒரு நாள் அந்தக் குல்லாவை வைத்துக்கொண்டு புத்தகசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். ஐயர் திடீரென்று வந்து களுக்கென்று சிரித்தார். அதைத் தொடர்ந்தே மேற்படி கதையைச் சொன்னார்.

199. புதுச்சேரியில் ஐயர்

ஐயரின் புதுச்சேரி வாழ்க்கை பிரதாபசிங்கனின் மலைவாழ்க்கை போன்றது. வந்து ஆறுமாதத்திற்குப் பிறகுதான், அவரே அறிவித்து சர்க்காருக்கு ஐயர் புதுவையில் இருந்தது தெரிந்தது. அன்று முதல் ஒற்றர் தொல்லை அபாயமாக வலுத்தது. குடும்பத்திலோ துயரச்சாயல் படர்ந்தது. அப்பா பிள்ளையின் போக்கைக் கண்டித்தார். அவர் வீட்டைச்சுற்றினர் ஒற்றர், ஐயர் பிதுரார்ஜித சொத்தை நிராகரித்தார்; தந்தை, மகனுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை, என்று போலிசுக்கு அறிவித்தார். ஐயர் மகள் பட்டு, லண்டன் அப்பா எழுதிய படியே, வந்தேமாதரம் சொல்லி வந்தாள். தாத்தா "சை அதிகப்ரசங்கி; போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு போவான்" என்று மிரட்டினார். ஐயர் குழந்தை அச்சம் அறியுமா? இன்னும் உரக்க வந்தேமாதரம் போட்டாள் குழந்தை. பாக்ய லக்ஷ்மி அம்மாள் ஒற்றர் தொல்லை தாங்காது பங்களூர் சென்று, பசுபதி ஐயர் பாதுகாப்பில் இருந்தாள். அங்கே பட்டு காய்ச்சல் வந்து வந்தேமாதர மந்திரம் ஜபித்துக் கொண்டே இறந்தாள். அந்தப் புண் ஆறுவதற்குள் கணவன் பிரேஜிலுக்குப் போகும் தகவல் வந்து கொண்டிருந்தது. ஒருதரம் 'வா பாரிஸ்' என்ற அழைப்பு வந்தது. எப்படிப்போவது? அம்மாள் துன்பச்சுழலில் தவித்தபோது, "வா புதுச்சேரிக்கு" என்று அழைப்பு வந்தது. வயிற்றில் பால் வார்த்தது. அம்மாள் வந்தாள்; சுபத்திரை பிறந்தாள். பிறகு கிருஷ்ணமூர்த்தி பிறந்தான், குடும்பம் ஒரு பக்கம். தேசம் ஒரு பக்கம். கலை ஒரு பக்கம்—ஐயரின் நேரங்களைப் பங்கு போட்டுக் கொண்டன. வந்ததைக் கொண்டு கட்டுச் செட்டாகக் குடும்பத்தைத் தாங்கினார் ஐயர். அதில் அவர் சமர்த்தர். நாட்டு

விடுதலைக்குக் கத்தி தீட்டுவதிலேயே பெரும்பொழுதை ஈந்தார். ஐயருக்குச் சில செல்வர் பணவுதவி செய்தனர். பத்து ஒற்றர் வட்ட மிட்டும், ஐயர் சூழ்ச்சிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்பா கெஞ்சினார்; கல்லூரி ஆசிரியர்களான பெட்ராம் முதலியோர் "அரசியலை விட்டால் சர்க்காரிடம் பேசி மன்னிப்பு வாங்கித் தருகிறோம். திருச்சியில் வந்திருக்கலாம்" என்றனர். "உயிரேபோனாலும் நாடே பெரிது; தேசசேவையே வாழ்வு" என்றார் ஐயர். ஐயர் ராணுவ நூல்களைப் படிப்பார். போர்முகம் வகுப்பார், சதுரங்கம் ஆடி எதிரியின் ஆனை குதிரைகளை அடித்து வீழ்த்துவார், பிமவேலைகள் செய்வார். ஆயுதங்கள் வரவமைப்பார், சாமான்கள் சேர்ப்பார், இரவில் வீர வாலிபர்களைப் பயிற்றுவார். காளியை தேசாவேச வரம் வேண்டுவார். பாரதியார் ஐயர் ஆவேசத்திற்கேற்றபடி பாடுவார். ஆடுவார், 17—6—1911-ல் அவரிடம் துப்பாக்கி கற்ற வீரவாலிபன் வாஞ்சி, ஒருநாள் மணியாச்சில் ஆஷ்துரையைச் சுட்டுக் கொலை செய்தான். இந்த ஆஷ்தான் சிதம்பரம் பிள்ளைக்குக் கடுங்காவல் தந்து, பல தேச பக்தர்களைச் சிறையிட்டுத் துன்புறுத்தினான். ஆஷ் ஆஷானான். சர்க்கார் அடக்கு முறை தர்பார் நடத்தி, திருநெல்வேலி கிடுகிடுக்கச் செய்தது. அத்துடன் புதுச்சேரியில் ஐயர் மேல் பாய்ந்தது. ஐயரைத் தூக்கிச் செல்ல ஒற்றர் முயன்றனர். ஐயர் தெருவில் நடப்பதுகூட ஆபத்தாயிருந்தது. ஒருநாள் மணக்கொள விநாயகருக்குப் பின்னே ஒளிந்து தப்பினார். மற்றொரு நாள், ஒரு வீட்டிற் புகுந்த ஐயரை ஒற்றர் வளைத்துக் கொண்டனர். வெளியே வந்தால் ஒரே தூக்கு; கூடலூர் சிறை! திடீரென்று வீட்டுக்குள் அழுகை; அரை மணி கழித்து பாடை! பாடையை நான்கு பேர் சுமந்து சுடுகாட்டுப் பக்கம் சென்றனர். ஓர் இருட்டுச் சந்து; பாடை இறங்கியது; போர்வை நீங்கியது; ஐயர் குதித்தெழுந்து வீட்டுக்கு விரைந்தார். ஒற்றர் ஏமாந்தனர். சிலநாட்கள் ஐயரை யாரும் காண முடியாது. மனைவி கவலைப்படுவாள். நள்ளிரவில் டக் டக் என்று கதவுச் சத்தம் கேட்கும்; எச்சில் துப்பும் சத்தம் கேட்கும். பிறகே மனைவி கதவைத் திறப்பாள். ஐயர் வீட்டு, வேலைக்காரி பருவதத்தை, ஒற்றர் பணத்தாசைக் காட்டி, பிறகு மிரட்டி, 'ஐயர் உளவுகளைச் சொல்' என்றனர். நன்றியுள்ள வேலைக்காரி; 'உன் பணத்தைக் குப்பையிலே போடையா" என்று மறுத்தாள். ஐயருக்குச் சூனியம் வைக்கவும் ஜக்கம்மா வித்தை நடந்தது அது பலிக்கவில்லை. ஒருநாள் காலை பருவதம் கிணற்றில் நீர் இறைத்தாள். வாளியில் ஒரு ஜாடி வந்தது. ஐயர் திறந்து பார்த்தார். அதில் காளிக்கு வெள்ளையரைப்பலி கொடுப்பதாக ஒரு படம், புரட்சிக்காரர் பெயர், வெடி குண்டுச் சாமான்கள் எல்லாம் இருந்தன. ஐயர் பாரதியாருடன் பிரெஞ்சு அதிகாரிகள் முன் அந்த ஜாடியை வைத்து, "எங்கள் மேல் வீண்பழி சுமத்த இப்படிச் சூழ்ச்சி செய்கிறார்கள் ஒற்றர்கள்" என்று முறையிட்டார். இனி அந்த மாதிரி நடக்காமல் பாதுக்காப்பதாக

அதிகாரிகள் வாக்களித்தார்கள். இது ஒற்றருக்குத் தெரியாது. அவர்கள் திமு திமு என்று வந்து, ஐயர் வீட்டைச் சோதித்தனர். கிணற்றை இறைத்தனர். ஏமாந்தனர். கடைசிப்பாய்ச்சல்: தேர்தல் அமளி பலமாயிருந்தது. இரவில் காலிகள் அட்டகாசக் கூச்சலுடன் ஐயர் வீட்டுக் கதவைத்தட்டினர். "ஐயர் சாப்பிடுகிறார். அதானதும் கதவைத்திறப்பார்" என்றாள் பாக்யலக்ஷ்மி. காலிகள் ஐயரை ஒழிக்கவே எக்களித்தனர். காசும் கள்வாடையும் வசவும் ஆத்திரமும் சேர்ந்தன. ஐயர் விளக்கை அணைத்தார். முக்கியமான சாமான்களை அப்புறப்படுத்தினார். மனைவியையும் குழந்தை சுபத்ராவையும் கூரை மேற் ஏற்றி மாடி வழியே அடுத்த வீட்டில் கொண்டு சேர்த்தார். அப்போது மாதுளைமுள் உறுத்தி அழுத குழந்தையை அம்மாள் சமாதானப்படுத்தி, எடுத்துச் சென்றாள். பிறகு ஐயர் சுழல் துப்பாக்கியை நீட்டி, மாடியில் இருந்தே ஆகாயத்தில் சுட்டார். "ஆத்தாடீ துப்பாக்கி டோய்; ஐயன் கொன்று போடுவான்" என்று காலிகள் பயந்தோடினார்கள். 1914 வரையில் இப்படி இடர்கள் ஐயரைச் சூழ்ந்தன.

200. கம்ப நிலையம்

1914-ல் ஜர்மன் போர் மூண்டது. இங்கே எம்டன் வந்து வங்காளக்கடலில் நாச வேலை செய்தது. அது சென்னை புதுவைக் கரைக்கும் வந்தது. ஐயர் எதிரிகளுக்கு உளவு சொல்லி ஏதாவது சூழ்ச்சி செய்வார்; அவரை அல்ஜீரியாவுக்கு அனுப்பிவிட வேண்டும், என்று பிரிட்டிஷ் சர்க்காருடன் பிரெஞ்சு சர்க்காரும் முனைந்தது. இதோ கப்பல் வருகிறது. "புதுவையில் உள்ள சுதேச பக்தர்கள் அல்ஜீரியாவுக்குப் புறப்படவேண்டும்" என்று தாக்கீதும் வந்தது. ஐயர் தமிழ் நாட்டுக்கு ஒரு நிலையான பணி செய்து செல்வோம் என்று பேனாப் பிடித்தார். திருக்குறளை அழகான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஒற்றர் தொல்லையும் ஊர்த்தொல்லையும் வறுமைத்தொல்லையும் நாடு கடத்தும் தொல்லையும் பொறுத்துக்கொண்டு, ஐயர் செய்த அந்த மொழி பெயர்ப்பு, இன்று வள்ளுவரை உலகிற்கு விளக்கியது. அதானதும் ஐயர் "புறப்படுகிறோம் எங்கள் செலவுக்கு ரூ. 20,000 தாரும்" என்றதும் சர்க்கார் "சரி சரி இங்கேயே இருந்து விட்டுப் போங்கள்" என்று மௌனமானது. அது முதல் ஐயர் இலக்கியப் பணியிற் புகுந்தார். அதற்குக் கம்ப நிலையம் கண்டார். ஐயர் தமது கைப் பொருளை அதற்கு விடு முதலாகத் தந்தார். பாரதியாரும் ஆசாரியாரும் இன்னும் சிலரும் அதிற் பங்குகொண்டனர். அதன் வெளியீடுகளை எனது நண்பரிடையே பரப்பினேன். தன்னம்பிக்கை, புக்கர் வாஷிங்டன், மங்கையர்க்கரசி காதல், சிறு கதைகள், கம்பராமாயணம், தாகூர் சிறு கதைகளைப்படித்து, ஐயருக்கு எழுதினேன்: "நாட்டு விடுதலை வந்து கொண்டிருக்கிறது; தமிழுக்கு விடுதலை வந்து விட்டது.

இரண்டிற்கும் பணி செய்த வீரருக்கு நன்றி. தமிழ் பழைய இலக்கணப்புதரில் சிக்கியிருக்கிறது. அதைச் சிக்கெடுத்துப் புதிய மெருகு தந்து, பொதுவுடைமையாக்க வேண்டும். இதற்குத் தங்கள் எளிய நடை நூல்கள் பயனாகும். வங்கமொழி வளர்ந்தது அதன் தாராளமான நெகிழ்ச்சியினாலேதான். அஃது இலக்கணத்திற்கு அடிமையில்லை. தாகூர் சரத்சந்திரர் நடைகள் பொது ஜனங்களின் உள்ளத்தைத் தொடுகின்றன. நமது தேசாவேசக் கவி சுப்பிரமணிய பாரதியார் நடையை இனி வரும் தமிழகம் பின்பற்றும். சிறு கதைகளுக்குத் தாங்களே வழிகாட்டி. ஐரோப்பிய இலக்கியத்தில் பண்பட்ட தங்கள் கம்பச் சுவை, தமிழுக்குப் புதிய கலையழகைத் தரும். தங்கள் பால காண்டத்தை கோடீச்வரையருக்குப் படித்துக் காட்டினேன். எனது நண்பர் கம்ப ராமாயணத்தைக் கருத்துடன் கேட்டாள். கம்பன் பழம் பண்டிதரின் தனியுரிமை; மற்றவர் கிட்டப் போக முடியாது. தொல் காப்பியம் படிக்காமல் கம்பனைத்தொட்டால் சுடும் என்று பயந்த நாளெல்லாம் போய்விட்டது. இப்போது படிக்கத் தெரிந்தவரெல்லாம் கம்பனைப் படிக்கலாம். காதுள்ளவர்களெல்லாம் கேட்டு ரசிக்கலாம், கம்பனைப் பொதுஜனச் செல்வமாக்கிய தங்களுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. வள்ளுவர் குறள் போல் கம்பனையும் தாங்களே ஆங்கிலமாக்கினால், உலகம் உலகக் கவியரசனை மெச்சும். கம்பநிலையம் வாழ்க! கம்பத்திருவுள்ளம் வாழ்க! எந்தாய் வாழ்க."

201. சத்யாக்கிரகி

1917 முதல் ஐயர் வாழ்க்கையில் புதியமாறுதல் உண்டானது லண்டனில் கண்ட மகான் காந்தியை ஐயர் புதுவையிற்கண்டார். அஹிம்ஸா தீக்ஷை பெற்று காந்தி பக்தராகி சத்யாக்கிரகவிரதம் கொண்டு இராட்டை சுழற்றி கதர் அணிந்தார். "தெய்வத்திற்கு அடுத்தபடி காந்தி; அவர் அவதார புருஷர் லோகோத்தாரகர்; அவர் வழியேவழி. தார்மிக ஜோதியான மஹாத்மாவை நான் திரிகரண சுத்தியுடன் பின்பற்றுவேன்" என்று ஒருதரம் என்னிடம் ஐயர் சொன்னார். நான் திலகர் சிதம்பரம்பிள்ளை சிவா ஐயர் இயக்கங்களில் ஈடுபட்டு பலாத்காரப்புரட்சியில் நம்பிக்கை வைத்திருந்தேன். இந்தியாவில் ஏழுலட்சம் வெள்ளையருக்கு மூப்பத்திரண்டு கோடி மக்கள் அடிமைப் பட்டிருப்பது அடி மடமையாகும். ஆளுக்கொரு வாள் பிடித்தால், தடி பிடித்தால் கூட, அன்னியரைத் துரத்தியடிக்கலாமே. துப்பாக்கி பிடித்தால் கேட்கவா வேண்டும்," என்று பேசினேன். ஒரு நாள் மதுரை ராணுவ நிலையத்தில் தற்காலப் போர்ப் படைகளைக் கண்டேன். ராணுவ நூல்களைப் படித்தேன், பிறகுதான் என் கண் திறந்தது. இதைப்பற்றி ஐயருக்கு ஒருகடிதம் எழுதினேன்:

"நான் தற்காலப்போர் நூல்களைப் படித்தேன்; ஒருதரம் போர்க் கருவிகளையும் பார்த்தேன். திகைத்தேன். நாம் இருக்கும் வறுமையில்

ஒரு பீரங்கி வாங்க முடியுமா? டாங்கு, விமானம், கப்பல், நாசகாரி, நீர் மூழ்கி, கண்ணிகள்—இவற்றைக் கனவிலாவது காணமுடியுமா? செய்ய முடியுமா? இந்தப் பயங்கரப் படைக்கலங்களைக் கொண்டு அடக்கியாளும் அசுர சக்தியை பலாத்காரம் காட்டி எதிர்ப்பது, தீயைப் பஞ்சு அணைப்பது போலாகும்; தீயைத் தீவட்டியால் எதிர்ப்பதாகும். தீயை அணைக்க நீரே தகும். பிரென் பீரங்கியின் திமிரை அடக்க தியாகக்கனலில் எழுந்து பொலியும் ஆத்மசக்தியே வேண்டும். காந்தியே ரக்ஷகன், சத்தியமே ஜயம்.''

1919-ல் ஜர்மனி தோற்று, போர் நின்றது. வெர்சேல்ஸ் உடன்படிக்கை நடந்தது. மாங்தெகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வந்தது. இரட்டையாட்சி தொடங்கியது. அரசியல் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்புக் கிடைத்தது. பாரதியார் சென்னைக்கு வந்தார். ஐயர் வந்தார். வடநாட்டில் யாத்திரை செய்து காசியில் கங்கையாடி திலகரையும் தரிசித்து வந்து, தேசபக்தனுக்கு ஆசிரியரானார். சம்பளம் நூறு; அதுவும் சரியாய் வராது. இன்னும் வறுமைதான். இருந்தாலும் தேசசேவையில் ஐயர் உலகத் துயர்களை மறந்தார். தேசபக்தனில் இருந்தபோது ஐயர் எனக்கு இரண்டு கடிதங்கள் எழுதினார். இருவரும் நெருங்கிவந்தோம். அதைக் குறித்து முன்பே சொன்னேன். கலியாண சுந்தர முதலியார் தேசபக்தனைத் தமிழ்மணம் கமழ, காந்தி ஒளி வீச, நடத்தினர். ஐயர் கலைமணமும் நாட்டுணர்வும் மறுமலர்ச்சி வேகமும் தூண்டினார். ஆனால் பத்திரிகை சரியாக நடக்கவில்லை. ஐயரும் பல்லாரி செல்ல நேர்ந்தது.

பல்லாரிச் சிறை ஏ வகுப்பில் நிம்மதியாகவேயிருந்து, ஐயர் ஆங்கிலத்தில் கம்பராமாயண விமர்ஸனம் எழுதினார். சிறையிலிருந்து வந்ததுமே, குருகுலம் காண அவர் உள்ளம் துடித்தது. அங்குமிங்கும் இடம்பார்க்கையில் கோயில்பட்டி அரசியல் மகா நாட்டிற்குத் தலைமை வகிக்க அழைப்பு வந்தது. மகா நாடு கூடியது; ஐயரும் தலைமை வகித்தார்; 144-ம் வந்தது. பிறகு பேச்சேது? ஐயரை நண்பர் கல்விடைக்குறிச்சிக்கு அழைத்துச் சென்றனர்.

202. குருகுலம்

கல்லிடைக்குறிச்சி போர்டு பள்ளிக்கூடம் திலகர் வித்யாலயமானது. ஆசிரியர் அனைவரும் ஒத்துழையாமையில் சேர்ந்து தேசத் தொண்டரானார். எல்லாரும் வேண்டிக்கொண்டபடியே ஐயர் வித்யாலயத் தலைமையை ஏற்றார். அதைச் சார்ந்து தமிழ்க் குருகுலம் நாட்டினார். அதை நடத்த பாரத்வாஜ ஆசிரமம் கண்டார். எனக்கும் அவருக்கும் பாரத்வாஜ கோத்திரம். இருவர் பெயரும் ஒன்று. தாயார் பெயரும் ஒன்று மனமும் ஒன்று ஆதர்சமும் ஒன்று. ஆதலால் குருகுலப் பணியில் ஒன்றுபட்டோம். ஐயர் குருகுலத்திற்குப் பத்திரிகை

விளம்பரங்கள் பறந்தன. பல செல்வர் பண முதவினர். ஆனால் ஐயருக்குத் தனியாக ஓர் இடம் வாங்கி, சாந்தி நிகேதனம்போல் நடத்த விருப்ப மிருந்தது. இடமும் கிடைத்தது—சேரன்மாதேவி ரயில் நிலையத்திற்கும், ஐயன் வாய்க்காலுக்கும், தெற்கே ஒருமைல் தூரத்தில், முப்பது ஏகரா நிலம்; அதன் அருகே கொளுந்திமலை யிருக்கிறது. வடக்கே மூன்றுமைல் போனால் தாமிரவருணி சலசலத் தோடுகிறது. இடம், மரம் அடர்ந்த சோலை: அந்த இடத்தை மூவா யிர ரூபா விலை பேசி, கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் வாங்கித் தந்தார். வள்ளலாருக்கு வடலூர் கிடைத்ததுபோல் ஐயருக்கு இந்தக் குருகுலம் கிடைத்தது. இங்கே தான் என் வாழ்க்கையும் ஐயர் வாழ்க்கையுடன் ஐக்கியமாகிக் கலைவளம் பெற்றது.

203. குருகுல அமைப்பு

குருகுலத்தை அமைத்தோம்; ஆம் எங்கள் கையால் அமைத் தோம். நிலத்தின் மேற்கெல்லையை முள்வேலி கட்டி பந்தோபஸ்து செய்தோம். தெற்கெல்லையிலும் வடக்கிலும் எல்லைக் கற்கள் நாட்டி, கள்ளிச் செடி வைத்தோம், கிழக்கே திறந்த வெளி. அருகேயுள்ள பகுதியில் நாங்களே உழுது நஞ்சைப்பயிர் விளைத்தோம். இதற்கு ஒரு பெரிய நடை கிணறு இருந்தது. அதில் ஏற்றச்சால் போட்டு நாங்கள் முறை வைத்து நீர் இறைத்தோம். கிணற்றைச் சூழ்ந்து மா தென்னை கூந்தற் பனைகள் வளர்ந்தன. காலையில் தென்னைக்கு மண்சுமந்து வந்து கொட்டுவதுண்டு. ரஸ்தாவை அடுத்த வாய்க்கால் மண்ணெல் லாம் ஆசிரமத்திற்கு வந்துவிடும். இரும்புச் சட்டிகளில் நாங்கள் எல்லாரும் மன் சுமந்து வரும் உற்சாகம் பார்க்கவேண்டும்! தோப்புச் சருகு, ஆசிரம குப்பை கூழங்களை அள்ளி மரஞ்செடி வயல்களுக்கு உரம் போடும்போது எங்கள் உள்ளம் குழந்தைக்கு அன்னமிடும் தாயுள்ளமாகும். நாங்கள் வந்தபோது ஆசிரமம் புல்லும் புதருமா யிருந்தது. களைக்கொத்தியாலும் மண்வெட்டியாலும் அரிவாளாலும் புதர்களைச் சிதைத்துத் தரையை நீவி, மண் கொட்டிப் பசந்து செய்யும் போது, எங்களைப் பெரிய லிவிஞ்ஸ்டன் என்றெண்ணிக் கொள்வோம். முதலில் போட்டது பதினைந்தடிக் கூரைக் குடில். அதிலேதான் ஐயர் மாணவர் எல்லாரும் வசித்தோம். பிறகு கிணற்றடியில் சமையற்குடில் அமைத்தோம். எப்படி? கொளுந்திமலையிலிருந்து தர்ப்பைப்புல் சுமந்து வந்தோம். தரையைத் தோண்டினோம். செங்கல் அறுத் தோம். மேடை இரண்டடி கட்டினோம். அதைச்சுற்றி ஓரடிக்குறடு; அதன்மேல் மூங்கில் பிளாச்சி சிவி மறைவு கட்டினோம். மேலே தருப் பைப் புற்களைக் கூரை போட்டோம். இதுதான் எனது தவக்குடி லும். கொஞ்சநாட் சென்று புத்தக சாலைக்கு கள்ளிக்கோட்டை ஓட்டுக் கட்டிடம் எழுப்பினோம். அதில் மூங்கில் பிளாச்சிதான் சுற்றி லும். தட்டிகளால் அறைகள் வகுத்தோம். புத்தகங்களை யெல்லாம்

அங்கே பரண்கள் கட்டி அடுக்கினோம். மாணவர் வகுப்பும் அங்கே நடந்தது. அதன் பிறகு சமையல் சாப்பாட்டிற்கு ஒரு கெட்டிக் கட்டிடம் எழுந்தது. எனக்கும் முன் சொன்ன கிணற்றடிப் பர்ணசாலை சுதந்தரமானது. இதைச்சுற்றி மரங்கள் அடர்த்தியா யிருந்தன. புதர்கள் நெருங்கியிருந்தன. அங்கே பாம்பு தேள் பூரான் ஜலமண்டலிகள் ஓடி விளையாடும். என் குடிலுக் குள்ளும் அவை தடையில்லாமல் வரும். நான் நிஷ்டையிலிருந்தபோது இரண்டு தடவை பாம்பு உள்ளே புகுந்து என் காலடியில் சுருண்டு கிடந்தது. என்னைப் பார்க்க வந்த முத்துக்குமாரசாமி தந்தை, "சாமி பாம்பு" என்றார். கண்ணைத் திறந்தேன். மாணவர் கல்லெடுத் தடிக்கப் போனார்கள். நான் தடுத்தேன். பாம்பு வெளியே பாய்ந்து ஒரு புதருக்குள் மறைந்தது. ராஜு அதை வேட்டையாடிக் கொன்று தீர்த்தான். "ஐயர் பலே க்ஷத்ரியன்" என்றார். நான் தினம் பாம்பை அங்கே காண்பேன் சும்மா விட்டுவிடுவேன். அதுவும் சாதுவாகப் போகும். ஐயர் கண்ணில் பட்டாலோ இரண்டு கல்; எமலோகம். அப்போது காந்தியின் அஹிம்ஸையை நினைப்பூட்டுவேன். "நம் கையில் குண்டு துப்பாக்கியில்லாத சமயம் காந்தி வழிதான் நல்லது. கொடுமையைக் குமைக்க குருகோவிந்தன் வழிதான் எனக்குப் பிடித்தது. விஷப் பாம்பைச் சும்மா விட்டால் வீட்டுக்கு ஆபத்து. அதற்குத் தடியும் கல்லும் தயாராக வைத்திருக்க வேண்டும்." என்பார். இப்படிப் பாம்பு தேட்களை அடித்து, புதர்களை அழித்து, தண்டகாரண்ய வாசம் செய்தோம். பிறகு சமயலறைக்கு மேல் மாடிகட்டி ஐயருக்குத் தனியாக உறையுள் எழுந்தது. அங்கேதான் நான் ஐயருடன் உண்பது படிப்பது. எனது குடிலில் தவம், எழுத்து வேலை, பஜனை என் மாணவர் படிப்பு எல்லாம் நடந்தன. இதுகாறும் மாணவர், கட்டிட வராந்தா, மர நிழல், மணல் சவுக்கங்களில் படித்தனர். எல்லாருமே வெட்டவெளியில் மணலில் பாய்விரித்துப் படுத்தார்கள். நான் அந்தக்காலம் தியான நித்திரை தவிரத் தூல நித்திரை கொண்டதில்லை. இரவெல்லாம் பகலே, தியானிப்பது, அதில் உதித்த கவிதைகளை எழுதுவது, பாரதசக்தி பாடுவது, ஆசிரமத்திற்கு வேண்டிய இலக்கியப் பணிகளைச் செய்வது, பிறகு ஆசிரமத்தைச் சுற்றி வந்து காவல்புரிவதுமாயிருந்தேன். மாணவர் படுக்கை யருகே பூச்சி புட்டை வராமல் காப்பேன். எனது சாரணரை இரண்டுமணிக் கொரு தரம் எழுப்பி, ரோந்து சுற்றுவேன். ஏனெனில் நாலுகால் நரி ஊளையிடும் அந்தக் காட்டில், இரண்டுகால் நரிகள் சத்தம் போடாமல் வந்து, திருடுவதுண்டு. சில மாதங்களுக்குப் பிறகு தென் பொட்டலில் நீளக் குடில்கள் கட்டி, ஆசிரமப் பள்ளிக்கூடமும் மாணவர் ஜாகையும் அங்கே அமைத்தோம். அதை அடுத்து ஒரு கூரைக் குடில் கட்டித் தறி நாட்டி நெய்தோம்: மற்ருெரு பெரிய குடில் கட்டி ஆசிரம விவசாயிகள் தங்கச் செய்தோம். இன்னெரு குடில் விருந்தாளிகளுக்கு அமைந்தது.

பிறகு இரண்டடுக்குக் குடில்; ஒன்றில் மகாதேவர் வசித்தார். முடிவில் புத்தகசாலைக்கு எதிரே அச்சகத்திற்கும் பாலபாரதிக்கும் கெட்டிக் கல் மேடைமேல் மூங்கில் மறைவுகட்டி, ஓடு போட்டுக் கட்டிடம் தயாரித்தோம். கம்பனிலையம் டிரெடில் அங்கே வேலை செய்தது. இன்னொரு பழைய யந்திரம் இடத்தை அடைத்துக்கொண்டிருந்தது. பத்து அச்சுப் பெட்டிகள் வைத்து நான்கு பேருக்கு வேலை கொடுத்தோம். இக் கட்டிடங்களை அமைக்க உள்ளூர் ஓவர்சியர் ராமகிருஷ்ணரும், ஆசரம அனந்த கிருஷ்ணரும் பாடுபட்டனர். செங்கல் சுண்ணாம்புக் களவாய்கூட நாங்களே வைத்தோம். இவ்வாறு ஆசிரமத்தில் கல்வி, விவசாயம், நூற்றல் நெசவு, அச்சுவேலை, சமையல்வேலை, இசை, பஜனை, நூலாராய்ச்சி உடற்பயிற்சி, சாரணப்பயிற்சி, வீடமைப்பு, கூட்டல், பெருக்கல், உரம் சேர்த்தல், பாம்புவேட்டை, எல்லாம் நடந்தன. இவற்றிற்குச் சிகரம்போல பாலபாரதி நடந்தது. ஐயருடன் பிரமசாரிகளின் அறிவை வளர்த்தல், புதிய இலக்கியங்கள் ஆக்கல், பாலபாரதி நடத்தல் வீரப்பயிற்சி ஆகிய பல வேலைகளில் நான் ஈடுபட்டேன். எங்கள் கனவு மிகப் பெரிது; கேளுங்கள்!

204. பாடுபட்டோம்!

குருகுல நிர்வாகத்திற்கு ஐயர் பாரத்வாஜ ஆசிரமசங்கம் கூட்டினர். அதன் தலைவர் ஐயர்; உபத்தலைவர் திரா. மகாதேவர், சுப்பையரும், அனந்த கிருஷணனும் காரியதரிசிகள்; நான் இலக்கியம் கல்வி விளம்பரம் பத்திரிகை காரியாலய நிர்வாகி. நாராயணையர், கும்பலிங்கம் பிள்ளை முதலியோர் ஆசிரியர்கள். முத்தையர் தமிழ்—இசையாசிரியர், வேங்கடாசல சாஸ்திரிகள் சமுஸ்கிரத ஆசிரியர், வெங்கு, ராமச்சந்திரர் திருத்தொண்டர், பணம் வசூலிப்பவர்; கண்ணபிரான் கணக்கர், இந்தி ஆசிரியர்; சிவராமன் சரித்திர ஆசிரியர், மகாதேவர் கணக்கில் புலி, நிர்வாகத்தில் கண்டிப்பானவர், போலீஸ் மோஸ்தரில் காரியம் நடத்துவார். செட்டி நாட்டிலும் மலேயாவிலும் குருகுலத்திற்காகப் பணம் திரட்டி உதவினர் அவர் பிள்ளைகள் சத்யானந்தம் ராமானந்தம் இருவரும் மாணவ மணிகள். இவர்களைத் தவிர வேதாரண்யம் நடராஜன், ஐயர் பிள்ளை கிருஷ்ணமூர்த்தி, மகள் சுபத்ரா, ஓமாந்தூர் சுந்தரம், கோ. மகாதேவன், பாலக்காட்டுச்சங்கரன், சங்கரி ஆகியோர் என்னிடமே எப்போதும் இருந்தனர். மன்னார்குடி சுப்பிரமணியன், வைத்தியநாதன், மேலூர் நமச்சிவாயம், ஓமலூர் ராமசாமி, பூதப்பாண்டி முத்துக்குமாரசாமி, சுசீந்திரம் ராமநாதன் மலையாளம் ராகவன், இலங்கை சிவப்ரகாசம், தைப்பிங் ரத்னம், ரங்கோன் கிட்டு, ஈரோடு ஆஷர்—ஆகிய பல மாணவர் படித்தனர். நானும் மாணவனே: என்றும் இன்றும் மாணவனே. நான் முத்தையரிடம் முறையாக வர்ணங்கள் கற்றேன். என்னுடைய பாடல்களையே ஒழுங்காகப் பாடக்கற்றேன். சாஸ்திரிகளிடம் பிரம்மசூத்திரமும்

ஸூதஸம்ஹிதையும் பாகவதமும் பாடம் கேட்டேன். ஓமர் ஷேக்ஸ் பியர், விர்ழில், தாந்தே, வால்மீகி, கம்பன் தாகூர் ஆகிய மகாகவிகளின் வாக்குகளை ஐயருடன் ஆராய்ந்தேன். பாரதசக்தியைப் புதுக்கியெழுதி அவரிடம் படித்து வந்தேன். ஐயர் என் மூளைக்கு ஓயாது வேலை கொடுத்தார். உயர்ந்த இலக்கியச்சோலையில் நாங்கள் உலாவினேம்.

பால பாரதிப்பொறுப்பு முழுதும், கட்டுரை முதல் கணக்கு வரையில் என்னிடம் இருந்தது. அத்துடன் மாணவருக்கு ஆங்கிலம் ஸயன்ஸ் சாரணப்பயிற்சி தருதல் என் வேலை. மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்களைப்பெரிய யாத்திரிரைகளுக்கு அழைத்துச்சென்று, நடை பள்ளிக்கூடமும் நடத்தினேன். குருகுல ஒழுங்கு முறை என்னிடமே இருந்தது.

காலை நாலரை மணிக்கு ஊதுவேன், காலைப்பாடல் பாடிக் கொண்டே ஆசிரமத்தைச் சுற்றி வருவேன்; பறவைகள் போல் மாணவரும்

> வீரப்ரதாபம் விளங்கிடும் பாரத
> மெய்த்தவ வீர எழுந்திராய்.

என்று பாடிக்கொண்டே ஓடிவருவார்கள். என் அனுட்டானங்கள் மூன்று மணிக்கே தீர்ந்து போகும். அவர்களை நடத்துவேன். வெளிக்கு என்பேன். எல்லாரும் மண்வெட்டியும் செம்பும் தூக்கிக்கொண்டு காட்டோரம் குழி பறித்து வெளிக்குச் சென்று சுத்தம் செய்து கொண்டு வருவார்கள். அரிகேன் விளக்கும் கொண்டு செல்வர். பிறகு பல் விளக்குதல். மாவிலை பறித்து பல்லைச் சுத்தமாக விளக்கி, நாக்கு வழித்து வாயலம்பி தொண்டையலம்பி என்னிடம் வருவார்கள். எல்லாருக்கும் சாரண கபாத்து தருவேன். இடம் வலம் நேர் பின், வளை, வட்டம். ஓடு ஒளி, வா, போ, நில் இரு, எழு செல் என்று தமிழிலேயே கட்டளை பிறக்கும். பிறகு கசரத் பஸ்கி; சிலநாள் யோகாசனம் பிராணயாமாதிகள் நடக்கும். அதன்பிறகு சட்டி சட்டியாக மணல் கொண்டு வந்து மரங்களுக்குக் கொட்டுவோம். அதன் பிறகு ஆசிரமத்தை நன்ருகக்கூட்டுவோம். இவை நல்ல தேகப்பயிற்சி யாகும். பிறகு குளித்தல்; சனிக்கிழமைகளில் எண்ணைக்குளியுண்டு. சிலநாட்கள் ஆசிரமக்கிணற்றில் குளிப்போம், சிலநாட்கள் ஐயன் வாய்க்காலில், சிலநாட்கள் தாமிரவருணிக்கே செல்வோம். எப்படி? மாணவர் என்பின் வரிசையாக நிற்பர். ஆசிரியர்களும் இடையிடையே நிற்பர். நான் முதலில் தமிழ் சமஸ்கிரதப்பாடல்களை ஓரடி சொல் வேன். எல்லாரும் திருப்பிச் சொல்லுவார்கள். வேறு பேச்சிராது. இப்படியே பாடல்களுடன் நீராடி மடியுடுத்து, சந்திஜபம் செய்து தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டே குருகுலத்திற்கு வருவோம். வந்ததும் ஆசாரியார் தேச சரித்திரம் சொல்லுவார். ராமாயண பாரதக்கதைகளும் நடக்கும். நாங்கள் சிலபேர் வரிசை

யாக பகவத்கீதை முறை வைத்துப் பாடம் பண்ணுவோம். அதன் பிறகு மாணவர் காலையுணவு—வாழைப்பழம் வேர்க்கடலை, மோர், அல்லது பழையது; பழையதை ஐயர் விரும்புவார். நான் காலை உண்பதில்லை.

பிறகு பள்ளிக்கூடம்; தமிழ், ஆங்கிலம், கணக்கு, ஸயன்ஸ், பூகோளம், பாட்டு, சித்திரம், இந்தி, சமுஸ்கிரதம், சரிதிரம்,இவையே பாடம். திண்ணை, மரத்தடிகளில் பாடம் நடக்கும்; மழைக்காலம் கொட்டகையில், மாணவர் தடுக்குகளில் அமர்ந்து பாடம் கேட்பர். ஆசிரியர் ஒரு பலகையில் அமர்ந்து பாடம் சொல்லுவார். நான் மட்டும் எனது பர்ணசாலையிலேதான் பாடம் சொல்வது. என் ஊதல் கேட்டதுமே மாணவர் ஓடி வருவார்கள். அவர்களுக்கு உடலுறுதி உடற்கூறு, இயற்கை வைத்தியம் இம்மூன்றும் முதலில் சொன்னேன். கொஞ்சகாலம் ஸ்ரீ லட்சுமணசர்மா இருந்து இயற்கைச் சிகிச்சை நடத்தினர். ஆசிரமத்திற்கு வைத்தியருமில்லை, நோயும் இல்லை. நான் சிலமாதங்கள் கம்பராமாயணம் நடத்தினேன். பிறகு முத்தையர் தமிழ்ப்பணி ஏற்ருர். ஆங்கில இலக்கியம் தொடர்ந்து நடத்தினேன். தாகூர் ஷேக்ஸ்பியர் கவிதைகளை அடிக்கடி படித்து விளக்கினேன். மாணவரை மலைக்கும் ஆற்றுக்கும் கிராமங்களுக்கும் இட்டுச்சென்று தரை நூல் போதித்தேன். மற்ற ஆசிரியரும் கருத்துடன் பாடம் சொன்ஞர்கள். மற்றப்பள்ளிக்கூடங்களில் ஓராண்டு கற்பதை, எங்கள் பிரமசாரிகள் இரண்டே மாதத்தில் கற்றனர். மணி பதினொன்று; எல்லாரும் தேக சுத்தி செய்து கொண்டு பிரார்த்தனைக்கு வந்து நிற்பர். தோத்திரம் ஆனதும் வசனத்தில் சர்ச்சில் நடப்பது போல் பிரார்த்தனை நடக்கும். நான் சொல்வதை மாணவர் திருப்பிச் சொல்வர். "ஆண்டவனே, பரம்பொருளே எங்களுக்கு அறிவும் திருவும் கலையும் பலமும் வளர்க. நாங்கள் பாரதமாதாவின் கர்மவீரராகுக!" என்று வேண்டுவோம். சிலமாணவர் கவனம் சாப்பாட்டில் இருக்கும். ஒரு பையன் "ஆண்டவனே எனக்கு ஒரு பச்சை மிளகாய் அருள் செய்யும்" என்று வேண்டிக்கொண்டான். ஒருவன் "கடவுளே எனக்கு வெங்காய சாம்பார் கிருபை செய்" என்ருன். மணியடிக்கும்; மாணவர் வரிசையாகக் குறித்த இடத்தில் வட்டிலை வைத்துக்கொண்டு அமர்வர். ஆலிலை தைத்துப் போடுதலும் உண்டு. அவரவர் வட்டிலை அவரவர் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சாப்பிடும்போது பேசக்கூடாது. ஐயரும் நானும் மாடியில் கடலைகனி தயிர் கொள்வோம், அப்போது பல விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். ஆசிரம உணவு, சாதம் கூட்டு மோர், கனி தேங்காய் இவையே. புளி மிளகாய் வெங்காயம் காப்பி டீ கிட்டவர முடியா. கேப்பை இட்டலி தயாரிப்பதுண்டு. பருப்பு நிரம்ப உண்டு. நன்ருக இருந்து மென்றுண்பர் மாணவர். உண்டதும் அவரவர் இடங்களைச்சுத்தி செய்து அறையைக் கூட்டிமெழுகிவைப்பர். சமையல் பாத்திரங்களையும் உடனுடன் தேய்த்

துத் துடைத்து வைப்பார். சாமான்கள் வாங்கிவரச் சந்தைக்கு மாண வரே செல்வர். சாப்பாடானதும் அவரவர் அறைகளில் இராட்டை வைத்து நூல் நூற்பர். நூற்ற நூலைச்சிட்டம் போட்டுத்தருவர். பெரிய கிருஷ்ணமூர்த்தியும் வெங்குவும் நூலைச்சேர்த்துத் தமிக்கு அனுப்புவர். நூற்ற பிறகு பாடம் படிப்பர். மூன்றரை மணிக்கு வகுப்புகள் தொடங்கும். நான் பால பாரதி வேலையில் ஈடுபட்டு அச்சகத்தில் இருப்பேன். ஆசிரியர்கள் சரித்திரம், கணிதம் ஆங்கிலம் போதிப்பர். ஐந்து மணிக்கு இசைப்பயிற்சி. முத்தையர் இசைபயிற்று வார். அரைமணி இசைப்பயிற்சியானதும் என் ஊதல் கேட்கும். மாண வர் உற்சாகமாக ஓடிவருவார்கள். சாரணப்பயிற்சி தருவேன். விளை யாட்டாகவே பல தொழில்களும் வீரப்பயிற்சிகளும் கற்கச் செய்வேன். உதாரணமாக, ஒரு வீடு தீப்பிடித்து எரிவதாகக் காட்டி, அதிலுள்ள வரைத் தூக்கி வருதல், டோலி கட்டித் தூக்குதல், காயம் கட்டுதல் முதலியவை நடக்கும். நானே புதிதாகப் பல விளையாட்டுகள் கண்டு பிடித்தேன். குஸ்தி சிலம்பம், வில்வித்தைகளும் நடக்கும். ஐயர் வில்லில் அர்ஜுனன். நாங்கள் தெறிக்கும் அம்பு ஐம்பதடி போகும். ஒருநாள் இந்த மூங்கிலம்பு என்ன செய்யும். துப்பாக்கியை மிஞ்சி ஆகாச குண்டு போடும் இந்நாளில் பழைய ஆயுதங்களால் என்ன பயன்? என்றேன். ஐயர் என் வில்லை வாங்கி ஒரு மரத்தைக் குறிவைத்து அம்புவிட்டார். டணூர் என்று இருநூறடி சென்று தைத்து, ஒரு மாங்கொத்து கீழே விழுந்தது. அதிலிருந்த கிளி, கீச் கீச் என்று கத்திக் கொண்டு பறந்தோடியது. “நீரே துரோணாசாரி” என்றேன். ஆனால் இந்தக்காலம் பாணாசாரி போதாது குண்டாசாரி வேண்டும்.

சிலர் பந்து விளையாடுவர் சிலர் கிணற்றில் நீர் இழுப்பர். சிலர் தோட்டவேலை செய்வர். நான் சிலநாள் ஏர் பிடித்து உழுவதுண்டு. இப்படி தேகப்பயிற்சி செய்து ஆறரை மணிக்குக் குளிப்போம். பிறகு எல்லாரும் என் அறைமுன் வட்டமாக அமர்ந்து, பக்திரச கீதங்களைப் பாடுவோம். முத்தையர் பிடில் இழுப்பார். நான் கடமடிப்பேன், பாடுவேன். சத்யானந்தம் ஜாலராப் போடுவான். எல்லாரும் இனிமை யாகப்பாடுவார்கள். என் பாடல்களையும் பாரதியார் பாடல்களையும் மாணவர் பாடுவர், யோகசித்திப் பாடமும் நடக்கும். பிறகு பத்து நிமிஷம் தியானம். நான் என் அறையில் பிரதிஷ்டை செய்த பராத சக்திக்குத் தீபாராதனை செய்து சில பாசுரங்கள் பாடுவேன். வாரம் ஒருநாளுடன், சிவராத்ரி, வீரர்நாட்கள், குருகுலநாள், கிருஷ்ணஜயந்தி நவராத்ரி, காந்திஜயந்தி திலகர்ஜயந்தி ஐயர்ஜயந்திகளில் அமோக மாக பஜனை நடக்கும்.

இரவு ஏழுமணிக்கெல்லாம் சாப்பாடு முடிந்து போகும், சாதம் கூட்டு கனி கடலைகளே உணவு: பால் இல்லாதது ஒருகுறைதான். சாப்பாடானதும், ஐயர் எல்லாருக்கும் நல்ல கதைகளைச் சொல்லுவார்,

பிறகு மாணவர் படிக்கச் செல்வர்; அல்லது நான் நாடகம் பயிற்று வேன். ஒருபது மணிக்கு நாங்கள் கூடி ஆசிரம நடை முறைகளை ஆராய்வோம். வாரம் ஒருநாள் வீரர் சங்கம் நடக்கும். நானே அதன் செயலாளன். சங்கத்தில் நான் வீரர் வரலாறு சொல்லுவேன். நான் சொன்ன கதைகள் வீர'விருந்தில் உள்ளன. ஐயர் உருக்கமாகத் தமது அரசியல் நோக்கங்களைச் சொல்லுவார். தொண்டு வீரம் இரண்டே வேண்டும். நாம் வீரத்தொண்டராவோம் என்பார். காந்தியின் அஹிம்சையே இப்போது வழி; ஆனால் நாம் பலத்தையும் வளர்த்து வீரதீரராகவேண்டும். உலகில் வீரனுக்கே மதிப்பு என்பார். இரவு பத்துமணிக்கு நான் அவரிடம் தனித்துப் பேசுவேன். பாரதசக்தியில் சில செய்யுட்களைப் படிப்பேன். அதன் பிறகு ஆசிரமம் பேச்சடங்கி உறங்கும். நான் தியானமும் கவிதையுமா யிருப்பேன், இது தான் குருகுல வாழ்க்கை. ஐயர் பூதக்கண்ணாடி வைத்து ஆட்களைக் கவனித் துச் சிறு சிறு பிழைகளையும் திருத்துவார். கெட்ட பேச்சு காதில் பட் டால் சீறுவார். தமிழன் ஆங்கிலத்தில் பேசினால் உடனே தமிழ் வார்த்தை சொல்லச்செய்வார். அடாபடா என்று பேசினால் "ஹும் ஜாக் ரதை; மரியாதையாகப் பேசவேண்டும் டாப்போடாதே; வாரும்போம் இரும் பேசும் சொல்லும் என்னவேண்டும்.'' என்பார். பொய் திருட்டு இருட்டுக்காரியம் நடந்தால் உபவாசமிருந்து மாணவர் வருந் தச்செய்வார். ஐயர் தம் ஒழுக்கத்தால் ஒழுங்குறுத்துவார், தாம் நடந்து நடைபயிற்றுவார். ஐயர் சரியான ஆசாரியார். நாள் முழுதும் எல்லாரும் வண்டு போல் உழைப்பார்கள். அனந்த கிருஷ்ணர் வயல் வரப்புகளிலும் சந்தைகளிலும், காரியாலயத்திலும் கடுமையாக உழைப்பார். பெரிய கிருஷ்ணமூர்த்தி சமையல் அறை, அச்சகம் இரண்டிலும் அல்லும் பகலும் பாடுபடுவார். கடினமான வேலைகளைச் செய்வார். ராமச்சந்திரையர் வெங்குவையர் பெருமாள் ஆகியோர் உண் டில் ஏந்தி ரயில் வசூலுக்குச் சென்று, நாலு ஐந்து கொண்டு வருவார் கள். இப்படித் தன் முயற்சியாலேயே குருகுலம் நடந்தது. என்னால் ஆன உதவி எனது பாங்கு பணம் முழுதையும் ஐயரிடம் தந்தேன். அதன் வட்டி இருபது ரூபா. எனது மாதச்செலவு ஐந்தே ரூபா. பஜனை வசூல் மாதம் நூறு வரும். நண்பர் அனுப்பும் பணம் கட்டுரைப் பணம் எல்லாம் ஆசிரமத்திற்கே. பால பாரதியில் சிப்பந்திச் செலவு கள் மிச்சம். நானே எல்லா வேலையும் பார்த்தேன். சிலநாட்கள் திருச்சி வாசுதேவன் வந்திருந்து, பிறகு ஸ்வராஜ்யாவுக்குச் சென்றார். இனி ஐயர் உறவால் நான் பெற்ற பயன்களைச் சொல்லுகிறேன்.

205. மகாகாவியம்

பாரதசக்தியில் ஐயர் கண்ணும் கருத்துமாயிருந்தார். எப்படி யாவது தமிழுலகிற்குப் புதிய காவியத்தை உருவாக்கித் தரவேண்டும் என்றார். நான் பாரதசக்தி உருவை என் குடிலில் வைத்து தியானித்து

தூய நிலையிலிருந்து ஒவ்வொரு வரியும் எழுதினேன். ஒருநாள் தானவ காண்டத்தில் சத்தியன் மாவலிமுன்னிலையில் ஒரு மகா காவியம் பாடும் காட்சியை வர்ணித்தேன். அது கற்பனை ராமாயணம். ஐயர் "ராமாயணம் முன்பே வந்துவிட்டது, பாரதமும் கௌரி காண்டத்தில் பாடி முடிந்தது. இந்தக் கட்டத்தில் இலியாதும் மில்தன் காவியமும் சம்க்ஷேபமாகச் சேர்க்கலாமே" என்றார். "பேஷான யோசனை. ஓமரின் காவியத்தை ஆங்கிலத்தில் போப் மொழிபெயர்த்தபடி படித்திருக்கிறேன். அதில் ஆழ்ந்த கவிச்சுவை இல்லை மூலத்தில் படித்தால் நல்லது என்றேன். ஐயர் "ஒருவாரம் பொறுங்கோ" என்று சென்னைக்குச் சென்றார். வரும்போது வழக்கம்போல் இரண்டு தோள்களிலும் பெரிய பைகள் தொங்கின. நான் எதிர்கொண்டழைத்து "நமஸ்தே" என்றேன். "பாரதி, அரிய பொக்கிஷங்கள் கொண்டுவந்திருக்கிறேன்" என்று பையை என்னிடம் தந்தார். மாடியில் வைத்துப் பிரித்தேன். ஸுஃபி சாதியின் குலிஸ்தான், ஓமரின் இலியாது ஓதேசி, விர்ஜிலின் ஏனீது பொகாசியின் தெகாமிரன், தாந்தேயின் திவீனு கொம்மேதியா, காளிதாஸன் சகுந்தலம், வியாச பாரதம் சாந்திபர்வம் ஆகிய நூல்களைக் கண்டு மகிழ்ந்தேன். ஐயர் உடனே குளித்து என்னை அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றார். இருவரும் கனி கடலை உண்ணும்போதே இலியாது காவியப்பேச் செடுத்தார். உணவு முடிந்ததும், ஹெக்டருக்கும் அச்சிலஸ்க்கும் நடந்த போர் வர்ணனையை மூலத்தில் படித்து, ஆங்கிலத்தில் விளக்கினார் பிறகு விர்ஜிலில், மகன் பெற்றோரைச் சுமந்து செல்லும் காட்சியைப் படித்தார். தாந்தேயில் காரே மொழிபெயர்ப்பே சிறந்தது. அதிலிருந்து பியாட்ரிக்ஸ் காட்சியை வர்ணித்தார். மகா காவிய வர்ணனைகள் இப்படி யிருக்கவேண்டும் என்றார். ஒருவாரம் அதே வேலை ஓமரைப் படித்தோம். பிறகுதான் தானவகாண்டம் மளமள வென்று ஓடியது. அக் காண்டத்தில் ஐரோப்பிய இலக்கியங்களின் சாயலைக் காணலாம்.

எனக்கு சிவாஜீ குரு கோவிந்தசிங் ஆகிய இரண்டு வீரர்மேல் காதல். இவர்கள் சரித்திரங்களை நன்றாக அறிய விரும்பினேன். ஐயரிடம் நான் முன்பே பாடிய குரு கோவிந்தனை அரங்கேற்றினேன். "இன்னும் விஷயங்களை நன்றாக விளக்கவேண்டும். பொறும்" என்றார். நான் மற்றப் பகுதிகளைப் பாடி குருவுக்கு இடம் விட்டு வைத்தேன். பெல்காம் காங்கரஸ் சென்றுவந்த ஐயர், என்முன் ஐம்பது சீக்கிய நூல்களை வைத்தார். பாரதி இந்தமாதிரி தமிழில் கிரந்த சாகெபு பாடவேண்டும். குரு கோவிந்தனை முதலில் பாடலாம் என்றார். நானும் அவரும் ஒருவாரம் அதேவேலையாயிருந்து சீக்கிய நூல்களைப் படித்தோம். அவர் வசனத்தில் குரு சரித்திரம் எழுதினார். நான் காவிய மாக்கினேன். அதிற் சில பகுதிகளை பாலபாரதியில் வெளியிட்டார். ஐயர் இப்படி என் இலக்கியப் பசிக்கு நல்லுணவளித்

தார். நான் பாடிய கவிக்கனவுகளை ஐயர் பார்த்து மகிழ்ந்து தாகூர் படிக்கச்சொல்லி ஒப்பிடுவார். தாகூரை நன்றாக அறிந்தேன்—ஐயரால். இரண்டு புலவர் சுவைக்கும்போதுதான் ஒரு காவியம் இனிக்கும்.

206. கம்பன்

கம்பன் எங்கள் மூச்சு, ஐயர் என்னிடம் தமது சிறைக் குறிப்புகளைத் தந்தார். பல அரிய விஷயங்களை அதில் கண்டேன். கம்பனை உலகிற்குத் தரவேண்டும் என்று ஐயர் ஆங்கிலத்தில் கம்பன் ஆராய்ச்சி எழுதினார். நான் கம்பனைப் படிப்பேன். அவர் ஆங்கிலம் படிப்பார். அனுமனைப்பற்றிய படலம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நரசிம்ம ஜயந்தியன்று பொதுக்கூட்டம் போட்டோம். நான் இரணியப்படலம் படித்தேன்; ஐயர் விளக்கினார்· அருமையான பொருள் சொன்னார். கம்பக் கவி யின்பத்தை அன்றே அனுபவித்தேன்.

திருநெல்வேலியில் முதல் கம்பர் விழா நடந்தது. இலக்குமணப் போற்றிகள் தலைமை தாங்கினார்கள். வையாபுரிப் பிள்ளை, பாஸ்கரத் தொண்டைமான், சேதுப்பிள்ளை, சிதம்பரநாத முதலியார், சாரங்கபாணி முதலியார், கோவிந்தராஜ ஐயங்கார், ஜகவீரபாண்டியன் முதலிய பல புலவர் உருக்கமாகப் பேசினர். சிதம்பரநாத முதலியார் பேச்சு ரசமாயிருந்தது. ஒரே பாட்டை அரைமணிநேரம் விளக்கினார். கூட்டம் முடிந்ததும் நானும் ஐயரும் ஆற்றுமணலில் அமர்ந்து தியானித்தபிறகு, கம்பன் பேச்சு வந்தது. புலவர்களும் வந்து வட்டமாக அமர்ந்தனர். ஐயர் காளிதாஸன் சகுந்தலைக்கும் கம்பனின் சீதைக்கும் உவமை கோலினார். பிறகு கம்பனின் காம்பீர்யமெல்லாம் இரணியப் படலத்தில் இருக்கிறது என்றார். "எண்ணினும் நெடியவன் ஒருவன் எண்ணிலான்," என்று வானளாவக் கைகளை உயர்த்தி உபநிஷத்துடன் ஒப்பிட்டுக் கம்பன் ஒரு ரிஷி என்றார். சாணினும் உளன் என்ற பாட்டையும், பிளந்தது தூணும் ஆங்கே பிறந்தது சியம் என்றதையும் விறுவிறுப்பாகச் சொல்லி எழுந்தார். நண்பரும் எழுந்து சென்றனர். பிறகு என் யோகக் கலையைப்பற்றிப் பேசினேன். "பாரதி குசாலாக யோக நிஷ்டாபரனாகவே இருக்கலாம்" என்றார்.

207. திலகர் ஜயந்தி

குருகுலத்தில் பெரியார் திருநாட்களைக் கொண்டாடினோம். திலகரிடம் ஐயருக்கு அந்தரங்க பக்தி; அமாவாசை தர்ப்பணத்தில் அவருக்கும் எள்ளுந்தண்ணீர் விடுவார். புத்தகசாலையில் கூட்டம் நடந்தது. வாழ்க திலகர் நாமம் பாடிய பிறகு, ஐயர் கட்டளைப்படி நான் திலகர் வரலாற்றைச் சொல்லி, "நம் ஐயர் திலகர் கனவுகளுக்குக் கோட்டை கட்டினார்' என்றேன். ஐயர் சிரித்துக்கொண்டே பேசினார். "திலகர் தீரர்; நெஞ்சுரம் அதிகம். சிவாஜியின் மறுமலர்ச்சியே

திலகரும் சாவர்கரும். பிரிடிஷ் அடக்குமுறைப் பூச்சாண்டி அவரிடம் பலிக்கவில்லை. மாந்தளைச் சிறைக்கு கீதையுடன் சென்றார். கீதா ரகசியத்தை வாழ்வில் காட்டி, கர்ம வீரனாக விளங்கிய மகான் திலகர். பாரத வேத தருமத்தை அறிந்து அனுஷ்டித்த ஸநாதன ஹிந்து திலகர். அவர் பெர்கூஸன் கல்லூரியிலிருந்து தேசசேவைக்கு வீர வாலிபர்களை அனுப்பினார். அப்படியே நாமும் நமது குருகுலத்தி லிருந்து அசகாய சூரர்களைப் பயிற்றி பாரதமாதாவின் சேவைக்கு அனுப்புவோம்.'' முடிவுரையில் 'உண்மைக்கே உயிர்த்தனை, உலாவும் கீதையாயினை. போற்றி போற்றி லோகமான்ய திலக போற்றி போற் றியே'' என்ற பாட்டைப்பாடி சிவாஜியின் மறுமலர்ச்சியான திலக ருக்கு ஜே! திலகர் மறுமலர்ச்சியான வ. வே. சு. ஐயருக்கு ஜே! என்ற ஜயகோஷத்துடன் கூட்டம் முடிந்தது. பிரமசாரிகள் கோதாவில் இறங்கி, திலக் மகராஜ்கி ஜே என்று குஸ்தி போட்டனர். ஐயர் ''இதுவே சரியான கொண்டாட்டம்'' என்று பார்த்தார். பாரத சமாஜம் சிதம்பரமும் எங்கள் பலபீம ராஜுவும் தொடை தட்டிப் பஞ்சா கொடுத்து சாரி திரிந்து முண்டாத் தட்டி குஸ்தி போட்டனர். அரைமணி நேரம் மல்லாடி எங்கள் ராஜு சிதம்பரத்தை மல்லாக்க அடித்து, முதுகுக்கு மண் காட்டிவிட்டான். ஐயருக்குச் சந்தோஷம் பொறுக்கவில்லை. நான் பர்ணசாலைக்குச் சென்றேன். என் பின்னே வந்து. ''பாரும் பாரதி, எதிரியை இப்படி ஒரு பிடிபிடித்து எற்றினால் மல்லாப்பான்'' என்று என்னை இடித்தார். நான் நாலடி போய் சாய்ந்தேன். சட்டென்று பிடித்து நிறுத்தினார். அன்றுமுதல் பிரம சாரிகளுக்கு குஸ்தி சிலம்பம் பயிற்றினோம். இரவில் பத்துமணி வரை யில் பஜனை நடந்தது.

208. பாரதி திருநாள்

சந்தி ஜபம் செய்து இருவரும் பர்ணசாலையில் பேசினோம். சிட்டுக் குருவிகள் ஓடி விளையாடின. நான் பாடினேன்;

சிட்டுக் குருவியைப்போல்—ஒரு
சிக்கின்றி வாழேனோ
கட்டுகளை உதறிக்—குயிலெனக்
காவியம் பாடேனோ.

ஐயர்: ஆம் கவிகளே இப்படிக் கட்டுகளை அறுத்துக் குயிலாகிப் பாட முடியும்.

நான்; கவியின் உடல் கவிதை; உயிர் கனவு. பாரதியும் கனவில் குயில் பாட்டை உருவாக்கினார்' சிட்டுக்குருவிபோல் சுதந்தரமா யிருக்க விரும்பினார்.

ஐயர்: அவர் பாட்டில் சுதந்தரமாகவே யிருந்தார்,

நான்: பாரதியார் அன்று சிறகில்லாக் குயிலாயிருந்தார். இன்று வானம்பாடிபோல் புகழ் விண்ணில் பறக்கிறார். இறந்த நாளே அவர் மாறிப் பிறந்தார், சிறந்தார். அவர் திருநாள் அடுத்த வாரம் வருகிறது. நாம் கொண்டாடுவோம்.

ஐயர்: ஆஹா என்றார். கொண்டாடினோம்

பாரதி பாடல்களுக்கு இனிய மெட்டுக்கள் அமைத்து நாங்கள் தினம் பாடி வந்தோம். அன்று முழுதும் அதே வேலைதான். காலை பஜனையுடன் ஆற்றில் குளித்து ஊரை வலம்வந்து, தெருத் தெருவாக பாரதி பாடல் பாடிப் பொருள் விளக்கினோம். மதியம் எல்லாரும் 100 கஜம் நூல் நூற்றோம். மாலை பிம வேலைகள், சாரணர் ஆடல்கள் நடந்தன. ஆறரை மணிக்கு ஆசிரம மைதானத்தில் பெரிய கூட்டம். சுமார் இருநூறுபேர் வந்திருந்தனர். ஐயர் தலைமை வகித்தார். நான் இரண்டுமணி நேரம் பாரதிவிளக்கம் பேசினேன் அது நூலாக வந்தது. அந்தச் சங்கீத உபந்யாசத்தை ஐயர் மெச்சினார். "பாரதி பெருமையை பாரதி பேசினார். இதை அன்று அவர் கேட்டிருந்தால் பரமானந்தராகியிருப்பார்" என்றார். இரவில் பத்துமணி வரையில் பாரதி பஜனை நடத்தினோம். முடிவில் பாரதியாரைக் கவிக்குயில் பாரதியார் என்றழைப்பதாகத் தீர்மானித்தோம். ஐயர் முடிவுரையில் "நமது சுத்தானந்த பாரதி பாடல்களையும் அச்சிட்டுப் பிரபலப் படுத்தவேண்டும்" என்றார். நான் "பாட்டே பாரதி; பாடப்பாட பாரதிக்கு உயிர் கொடுக்கிறோம். கவியின் இன்பம் அதுவே. வாழ்க கவிக் குயில்" என்று, உன்னை நினைக்கையிலே...என்ற பாட்டுடன் பாரதி ஜயந்திக்கு மங்களம் பாடினேன்.

209. காந்தி ஜயந்தி

நாங்கள் காந்தியைப் போற்றாத நாளில்லை. காந்தியே எங்கள் ராமன். அவர் கட்டளையே வேதம். தினம் 100 கஜம் நூற்பதை நாங்கள் சந்தி ஜபமாகக் கொண்டோம். ஐயர் நூற்கும்போது நான் யங் இந்தியா படிப்பேன் அல்லது பகவத்கீதை. பம்பாயில் நடந்த குழப்பங்களால் காந்திஜி ஒத்துழையாமையை நிறுத்தினார். அப்போதுதான் திங்கள் மௌனம் பூண்டார். காந்தி குடல் நோய்க்கு அறுவையாகி மெலிந்திருந்த சமயம். இந்து முஸ்லிம் கலகங்கள் நாடெங்கும் மூண்டு, இரத்தம் பெருகியது. கௌஹாதியில் நடந்த அக்கிரமம் காந்தி மனதைக் கலக்கியது. இருபத்தோரு நாட்கள்மகான் உபவாசமிருந்து, இந்தியாவின் ஒற்றுமைக்காகத் தவம் புரிந்தார். அந்த மூன்று வாரங்களும் நாங்கள் ஒருசந்தியிருந்து நூற்றோம், பஜனை செய்தோம். காந்திபாரணை செய்த நாள் 24—11—1924. அன்று சுத்தோபவாசமிருந்து, நாங்கள் நூற்று நெய்த கதரையே அணிந்து, நகர பஜனை நடத்தி, மாலை ஆறுமணிக்குப் பெரியகூட்டம் போட்டோம். "வாழிய காந்தி மகாத்மா" என்ற கீதம் பாடினேன். ஐயர்

உருக்கமாகப் பேசினர் : "அந்தக் காலத்தில் துருவாதி முனிவர் காத்த விரதத்தை காந்தி மகாத்மா இன்று காக்கிறார். கடவுள் நமக்கு அளித்த ரக்ஷகன் காந்தி. நமது சுதந்தரத்திற்குத் தாரகம் காந்தி. தாரக நாமத்துடன் ஜனசேவை செய்யும் புருஷோத்தமன் காந்தி. அவர் தவம் பலித்தது. இந்து முஸ்லிம் தலைவர்களான லாலாஜீ, ஹக்கிம் அஜ்மல்கான், நாரிமன், முகம்மதலி சௌகதலி முதலியோர் நாட்டில் சமூக ஒற்றுமை நாட்ட முனைந்திருக்கிறார்கள். மகாத்மாவின் அன்பும் உண்மையும் நம் உள்ளத்தில் துடிக்கட்டும். இன்று எல்லாரும் ஒற்றுமையாக காந்தி மார்க்கத்தில் நடக்க விரதம் பூண்போம். 2000 கஜம் நூல்சந்தா செலுத்தி காங்கரஸில் சேர்வோம். தேசம் சுதந்தரம் பெறுமட்டும் நமது சொந்த சுகபோகங்களைக் கட்டிவைத்து, தேச முன்னேற்றத்திற்குக் கர்மயக்ஞம் செய்வோம். வந்தேமாதரம் காந்தி வாழ்க." "வாழ்க நீ எம்மான் காந்தி" பாடிக் கூட்டம் முடிந்தது. இரவில் பெரிய பஜனை, பிடில் கடத்துடன் நடந்தது. அன்று எனது தேசிய கீதங்களை ஆவேசமாகப் பாடினேன்.

210. நவராத்ரி உற்சவம்

பொங்கல், தீபாவளி, சிவன்ராத்திரி, ஆடிப்பெருக்கு, நவராத்ரி முதலிய நாட்களை நாங்கள் அமோகமாகக் கொண்டாடினோம். மாணவர் கற்றகலைகளெல்லாம் அன்று அரங்கேறும். இசையும் நடனமும் நடக்கும். கீர்த்தனாஞ்சலியில் உள்ள சக்திப் பாடல்களையும் தேசிய கீதங்களையும் பாடி நான் பஜனையும் தீபப்ரதக்ஷிணமும் நடத்தி வந்தேன். ஐயரும் அழகாக நடனமாடினர். நவராத்ரி உற்சவம் பாரத மாதா உற்சவமாக நடந்தது, மாணவர் எனது பர்ணசாலைக்குமுன் பந்தல்போட்டு மணல் பரப்பினர். உள்ளே பாரதசக்திக்கு அலங்காரம் நடந்தது. ஒன்பது நாளும் அங்கே பஜனை. நிவேதனம் மிலக் கடலைதான். முத்தையர் பிடில் வாசித்தார். நான் சத்யானந்தன் எங்கள்கூட ஐந்தாறுபேர் பாட்டு. உள்ளூர் வீணைசகோதரர் கச்சேரி ஒருநாள் நடந்தது. இன்னொருநாள் மலையாளத்திலிருந்து வந்த ஒரு பலபீமரின் வீரவரிசைகள் நடந்தன. ஸரஸ்வதி பூஜையன்று "கலை வரந்தருவாய்" என்ற கீர்த்தனையுடன் பாரதசக்தி பிரதாபசிங்கன் சரித்திரம் நடந்தது. விஜயதசமியன்று பஜனை பாராயணம் நடந்தன. மறுநாள் ஒருகாரியத்தைச் சாதிக்க நினைத்தோம். சுற்றிப் பார்த்தோம்.

வேலையே பலம்.

ஆசிரமக் கிணறு சேர்நிறைந்து நாற்றமெடுத்தது. தண்ணீர்ப் பாம்புகள் அதில் பாய்ந்து விளையாடின. நான் கிணற்றைச் சுத்தி செய்வோம் என்றேன். உடனே சால்பிடித்தோம். எல்லாரும் கிணற்றில் இறங்கிச் சேற்றை அகற்றினோம். அதை வயல்களிலும் எருக்குழி

களிலும் கொண்டு சிலர் கொட்டினர். இப்படிச் சுத்தமான கிணற்றில் சலசலவென்று புதிய ஊற்றுப் பொங்கியதைக்கண்ட ஐயர்மனம் குதூகலப்பட்டது. நாங்கள் சேற்றில் தோய்ந்தவாறே ஐயன் வாய்க்காலில் போய் குளித்துவந்தோம். ஐயரும் உடம்பெல்லாம் சேற்றுடன் வந்தார். இப்படியே படம்பிடித்துப் பாலபாரதியில் போடலாம் என்ருர். அன்றிரவு சபர்மதியில் மகாத்மாவின் தொண்டுகளைப்பற்றி ஐயர் பேசினுர். இவ்வாறே வாரம் ஒருமுறை ஆசிரமத்தை முழுதும் சுத்தம் செய்தே உண்போம். நன்ருக வேலைசெய்தபின் குளித்து உண்பது எங்களுக்குப் பேரின்பமளிக்கும். வாரா வாரம் உவர்மண்போட்டு ஆசிரம ஆடைகளையெல்லாம் துவைத்து உலர்த்தி அணிவோம். நமக்குரிய வேலைகளை நாமே செய்துகொண்டால், அதுவே நல்ல தேகாப்யாசமாகும் என்பதை ஐயரே நடத்துகாட்டினுர். யாராவது வேலைக்குப் பின்வாங்கினுல், ஆசிரம ஒழுங்கை மீறினுல், ஐயருக்குக் கோபம்வரும். சனி புதன் எண்ணெய் தேய்த்துக்கொள்ளாவிட்டால் கண்டிப்பார். பட்பட் என்றும் கொடுத்துவிடுவார். நான் வில்வப்பழமே தேய்ப்பது. என்னைப்போல் ஒரு மாணவன் அபிநயித்தான். ஐயர் அவரெங்கே நீயெங்கே ஊஹூம்... ஒ...என்று ஒரு குட்டுக்குட்டி எண்ணெய் தேய்க்கச் செய்தார்.

211. ஐயர் அன்பு

ஐயர் தாயுள்ளம் படைத்த வீரர். சமயோபகாரி. குற்றங்களை உடனுடன் கண்டிப்பார். பையன்கள் கொல்லைக்குச் செம்புகொண்டு போகமறந்தால், வழியில் எச்சில் உமிழ்ந்தால், டா டீ போட்டுப் பேசினுல், ஆங்கிலம் கலந்தால், வைதுகொண்டால், திருடினுல் உடனே கண்டித்துத் திருத்துவார். ஒருதரம் சென்னையிலிருந்து தின்பண்டங்கள் வாங்கிவந்து ஒரு டப்பாவில் மூடிவைத்தார் ஐயர். அதை ஒரு சுட்டிப்பையன் திருடித் தின்ருன். யார் திருடியது? உம்...என்று கேட்டார். யாரும் முன்வரவில்லை. திருடினவன் ஒப்புக்கொள்ளுமட்டும் நான் உபவாசம் இருப்பேன்' என்ருர். இரண்டுநாள் முழுப் பட்டினி. நானும் பட்டினிதான். முடிவில் நான் பையனைக் கண்டு பிடித்தேன். என்னிடம் "தின்னவேண்டும் போலிருந்தது தின்றேன், ஐயா" என்ருன். நான் ஐயரைக் கொளுந்தினு மலைப்பக்கம் அழைத்துச்சென்று விஷயத்தைச் சொன்னேன். ஐயர் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி, திருட்டுப் பையனை முன்னே நிறுத்தினுர். திருட்டின் இழிவைச் சொன்னுர். பையன் அழுதான். திருந்தினுர்

இன்னெருநாள் இரண்டு பையன்கள் பிரமசாரி சேட்டை செய்துவிட்டார்கள். அவர்களை ஒருநாள் உபவாசம் போட்டு, தாமும் உபவாசமிருந்து மறுநாள் என்னை பிரமசரியத்தைப் பற்றிப் பேசச் சொன்னுர். மாணவருக்கெல்லாம் தாதுவின் அருமையை விளக்கினேன். பிராணுயாமம் ஆசனம் ஆகார நியமம், புலனடக்கம் ஆகிய சாதனங்களைச்

சொன்னேன். இனிமேல் சேட்டையே செய்யமாட்டோம் என்று பையன்கள் ஒப்புக்கொண்டார்கள். ஒருநாள் ஒரு பையன் ஆசிரமப் பெண்ணிடம் வாலாட்டினான். ஐயர் அவனை உடனே கூப்பிட்டு "ஜாக்ரதை! பெண்களை வாடி போடி என்னக்கூடாது. வாம்மா போம்மா என்று மரியாதையாக நடத்த வேண்டும். தொடக்கூடாது. கவனம் என்று கண்டித்தார்." ஒரு பெண் நாணமில்லாமல் நடந்தது. அவள் தந்தையை அழைத்து, அவருடன் பெண்ணை அனுப்பிவிட்டார். மற்றொரு பையன் அத்து மீறி நடந்ததற்காக ஊருக்குப் போகச் சொன்னார். நான் அவனைத்திருத்துவதாக என்னுடன் வைத்துக் கொண்டேன். என்னுடன் இருந்த ஐந்து பையன்களும் ஐயரின் முழு அன்பையும் பெற்றனர். சிலரை ஐயர் கணக்குத் தெரியவில்லையே எண்சுவடி படிக்கமாட்டேனென்கிறானே என்று குறை சொல்வார். கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிக்கூட நொந்து கொள்வார். நான் தேக சாஸ்திரத்தில் கவனமிருக்கிறது; ஆவன் டாக்டராவான்' என்றேன். அப்படியே ஆனான். ரங்கூனிலிருந்து வேங்கடராமன் என்ற சிறுவன் வந்தான். அவன் அடிக்கடி அம்மாவை நினைத்து அழுதான். ஐயர் ராரிரரோ ராராரோ பாடித் தாலாட்டினார். ஒருநாள் அழுகை வலுத்தது. நான் சென்று அவனைத் தூக்கி வந்து, 'அசடே ஆசாரியார் அம்மாவைக் காட்டிலும் அன்பாயிருக்கிறாரே ஏன் அழுகிறாய்.' என்றேன் 'பயம்மா யிருக்கே, உம் உம் அம்மா' என்று மீண்டும் அழுதான். 'ஓடிப்போ பயம்' என்று விபூதியிட்டு என்னுடனேயே வைத்துக் கொண்டேன். இருவரும் பலின் சடு குடு ஆடுவோம், பொம்மைவைத் தாடுவோம். அதனால் அவன் அழுகையே போய் விட்டது. குழந்தைகளுக்குப் பயனுள்ள ஆடல் பாடல் கற்பித்தால், முரட்டுத்தனம் ஒழியும். அல்லது நாய் பூனை மான் வளர்க்கச்சொன்னால் போதும் அன்பு தன்னால் வரும்.

யாருக்காவது நோய் வந்தால் ஐயர் அன்புடன் வந்து இயற்கை வைத்தியம் செய்தார். பெரிய கிருஷ்ணமூர்த்திக்குக் காய்ச்சல்; உபவாசம் போட்டு எனிமா தந்து தொட்டி முழுக்காட்டி குணப்படுத்தினார். நிலக்கடலையே சாப்பிட்டு எனக்குப் பித்தக்காய்ச்சல் 106 டிகிரி அடித்தது. நான் வெளியில் சொல்லவில்லை; எல்லா வேலையும் பார்த்து வந்தேன். ஐயர் என் கையைத் தொட்டுப் பார்த்து "ஐயோ பாரதி! காய்ச்சல் ஓய்வு கொள்ளும்" என்றார். அன்று எனக்கு மயக்கம் வந்துவிட்டது. ஐயர் என்னைத் தொட்டியில் வைத்து, அடிவயிற்றைப் பிசைந்து பிசைந்து தேய்த்தார். ரொட்டிக்கு மாப்பிசைவது போலிருந்தது. என்ன அழுத்தமானகைகள்! நான் இரவில் எனிமா வைத்துக்கொண்டு நௌலி செய்தேன். கடகடவென்று சரக்குகள் வெளியயாயின; பத்து கடலை உள்ளே அடைத்துக்கொண்டிருந்தது. அவை வெளியேறியதும் மறுநாள் உபவாசத்துடன் காய்ச்சல் நின்றது. ஐயர் பத்து நாள் நன்றாகச்சாப்பிடும் என்றார். என்னைத் தம் அருகில்

அமர்த்தி அவரும் உடனிருந்துண்டார். பிறகு எனக்காக முந்திரிப் பருப்பு மலை வாழைப்பழம் திராட்சையெல்லாம் வரவழைத்து மாடியில் உண்ணச்செய்தார். அப்போது தாகூரின் கார்டினரைப் படித்து, 'கவியின் வேலைகள் இவ்வளவுள்ளன. உடம்பைக் கவனிக்கவேண்டும்' என்றார்.

நாடகம்

நான் நிரம்ப நாடகங்கள் எழுதினேன். ஐயர் ஷில்லரின் நாடகங்கள் தந்து தமிழில் அப்படி எழுதச் சொன்னார். பிரதாபசிங்கன், குரு கோவிந்தன், ஜயவீரன் முதலியவற்றுடன் அப்பர் நாடகமும் எழுதினேன். ஜய வீரனை சிவாவின் பாரதசமாஜத் தொண்டர் மதுரையில் நடித்தனர், நான் மாணவருக்கு அப்பரைப் பயிற்றினேன். சத்யானந்தம் அப்பர், நான் மகேந்திரவர்மன்; மணி ராஜு மகாதேவன், நடராஜன் ஆகியோர் மற்ற வேடங்கள் போட்டனர். ஒரு மாதம் எல்லாரையும் பழக்கினேன். சிவன் ராத்திரியன்று அரங்கேற்றம். அப்போதுதான் எனக்குக் காய்ச்சல் வந்தது. ஐயர் "பாரதி, நாடகம் பிறகு, உடம்பு முன்பு பேசாமல் படுத்துக்கொள்ளும்" என்று தடுத்தார், நான் தடையை மீறிச்சென்று, நாடகத்தை நடித்தேன் நடத்தினேன், நன்றாயிருந்தது. பிறகு ஐயர் "உடம்பைக் கூடக் கவனிக்காமல் கர்மத்தை நிறைவேற்றுவது வீரமே; காந்தி அப்படியே செய்தார். சொல்லைக்காத்தது சரி." என்றார். மறுநாள் காய்ச்சல் அதிகமானது. பால பாரதி வேலையும் அதிகமே. என் உடம்பு குணமான பிறகு, ஐயர் எனக்கொரு குமாஸ்தாவை வைத்தார். அவருக்கு மாதம் பனிரண்டு ரூபா சாப்பாட்டுடன் தந்தோம்.

212. பால பாரதி

ஐயர் உயிர் பால பாரதியில் இருந்தது. அதற்கு நானே தலைப் பெழுதினேன். அப்படியே பிளாக்கு செய்தார் ஐயர். 1924 அக்டோபரில் அச்சகம் வந்தது. உடனே அச்சுக்காரர் நியமிக்கப்பட்டனர். ஆசிரமத்தொண்டர் அச்சு வேலை கற்றனர். நானும் கற்றேன். ஆசிரம கிருஷ்ணமூர்த்தி அச்சு வேலையை ஒரே மாதத்தில் கற்றுத்தேர்ந்தார். ஒருநாள் பாரதசக்தி பஜனையில்,

"கன்னித் தமிழ் மணம் பரவிட உலகில்
களைவீசி நிலவிடும் கலையிதழ் வேண்டும்'!

என்று வரம்வேண்டினேன். ஐயர் உள்ளே வந்தார். இதையே நான் நினைத்தேன். அச்சகம் வந்தது. மாசிகை நடத்துவோம். என்றார்.

நான்: மாடேன்ரிவ்யூ. பிரபாசி, பாரதி, ஸரஸ்வதி போன்ற உயர்வான பத்திரிகை தமிழ் நாட்டில் உலாவவேண்டும். இது பத்திரிகையுகம். பேனாப்புலவனுக்கே வெற்றி.

ஐயர் : ஆம் பாட்டில் கலை என்றதனால், கலைமகள் உருவை அட்டையில் போட்டு விடுவோம். அதற்கேற்ற பெயரும் வைப்போம்.

நான் . பாரதி என்ற அருமையான பெயர் நமக்குக் கிடைத்திருக்கிறது. கவிகுயில் பாரதியின் மறு மலர்ச்சி எண்ணங்களைப் பரப்புவோம். பாரதி என்றால் வேதசக்தி, சரஸ்வதி, வாணி என்றும் பெயர்.

ஐயர்: என் முன்னிருப்பதும் பாரதி தானே. பால பாரதி என்போம். எழுதும் தலைப்பு.

நான் பத்து நிமிஷத்தில் பால பாரதி என்று பூ எழுத்துக்கள் தீட்டிக் கொடுத்தேன். தொண்டைமான் கலைமகள் படம் எழுதித் தந்தார். சென்னை ஈஸ்டர்ன் ஸ்டுடியோவில் பிளாக்கு செய்து வந்தது. அதனிடையே கட்டுரைகளைத் தயாரித்தோம். ஐயர் எனது பாரத சக்திக்கு முதலிடம் தந்து, அதை விமர்சனமும் செய்தார். உலக இலக்கிய விமர்சனம், கம்பக் கவிநயம், தீர்க்கதரிசனவாக்குகள், ஸயன்ஸ் விளக்கம், புதிய காண்புகள். இயற்கை வைத்தியம், நல்ல கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஆத்யாத்ம ரகசியங்கள், யோக சாதனங்கள், அரசியற் கலைகள், உலக விமர்சனம், மறு மலர்ச்சிச் சிந்தனைகள் என்ற தலைப்புகளில் கட்டுரைகளை எழுதித் தயாராக்கினோம். கலைப்பயிற்சியுடன் ராணுவப்பயிற்சியும் தரத் திட்டம் போட்டோம். எல்லாம் தயார் ; புதன்கிழமை காலை எட்டு மணிக்கு பால பாரதி அங்கு ரார்ப்பணமானது.

ஓங்கு தமிழின் ஒளிபரவி யின்பநலந்
தாங்குகலை வாழ்வு தழைத்திடவே—பாங்கார்
நவபால பாரதியே நாடிசைக்க வாவா
சிவமங்களத்தேன் செழித்து.

என்று பால பாரதியை எனது கவிவாணி வரவேற்றது. அன்று பிடித்த பேனா இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. பத்திரிகைக்கலையை ஐயரே எனக்குப்பயிற்றினார். அவர் கம்பன் விமர்சனம், ராசகோபாலன் கடிதங்கள், ஆலோகனம், அவலோகனம், சிறு கதைகள் எழுதி வந்தார். மீதியெல்லாம் என் பொறுப்பு. ஐயர் அடிக்கடி வெளியே செல்வார். மாதம் பத்து நாட்களே ஆசிரமத்தில் தங்குவார். என்னிடம் அரிய நூல்களைத்தந்து, "பாரதி இதைப்படித்து பால பாரதியில் புதிய விஷயங்களை எழுதவேண்டும். குலிஸ்தான் சாரம், அடுத்த மாதம் வரட்டும். ஆத்மீக விஷயங்களைத் தங்கள் அனுபவத்திலிருந்து எழுதினால் நல்லது" என்பார். நான் உயர்ந்த பத்திரிகைகளையெல்லாம் படித்து பால பாரதி காலத்திற்கேற்ற கலைப்பண்புடன் விளங்கப் பாடுபட்டேன். தமிழ் நாட்டுச் சிறப்புச் செல்வங்கள், வீரர் வரலாறு, உலக தீர்க்கதரிசிகள் உள்ளமும் உரையும், வேதாகம ரகசியங்கள், கீதைகாட்டும் பாதை, அரசியற் குறிப்புகள், புத்தக விமர்சனம்,

இயற்கை விநோதங்கள், நாட்டு நடப்பு, காலக்கண்ணாடி, தேசபக்தர் வரலாறு, மொழி பெயர்ப்புகள்—இவை என் பங்கு. தமிழ்நாட்டு அறிஞர் சிலர் நல்ல கட்டுரை எழுதினார்கள். அச்சுமேற்பார்வை, அச்சுத்திருத்தம், கடிதப்போக்குவரவு, பத்திரிகை விநியோகம், எல்லாம் எனக்கு நாளெல்லாம் வேலை கொடுத்தன. அச்சுப்பொறிக்கு ஏதாவது வச்சிரம் ரோலர் முதலிய சாமான் வேண்டுமானாலும் நானே திருநெல்வேலி அல்லது மதுரை சென்று வாங்கிவர வேண்டும். ஆண்டவன் இரவை எனக்குத் தந்தான். அப்போது கட்டுரை வேலையெல்லாம் முடிந்து, பாரதசக்தியையும் எழுதி, பகலில் நிர்வாகம், படிப்பு, புருபு எல்லாம் பார்ப்பேன். இடையே மாணவருக்கும் பாடம் நடத்துவேன். காலையில் ஐயர் என் பர்ணசாலைக்கு வருவார்; கட்டுரைகளை ஏற்று அச்சிற் கனுப்புவார். மாலையில் நான் அவரிடம் சென்று கலந்து கொள்வேன். நிர்வாகம்பற்றிச் சிந்திப்போம். பெல்காம் காங்கரஸிற்குச் சென்று ஐயர் ஏராளமான அரசியல் இலக்கியம் அனுப்பினார். தை இதழ் முழுதும் நானே வெளியிட்டு அரசியற் குறிப்புகளும் எழுதியிருந்தேன். இதழ் கண்டு ஐயர் புன்னகைத்து, 'இனி பாரதி அரசியல் குறிப்புகளும் எழுதிவரலாம்' என்றார். எனது துறு துறுப்பு எல்லை மீறியது. குவாலியர்பற்றி எழுதியபோது, ராணி லக்ஷ்மீ பாய் வரலாற்றைக் கனல் பறக்க எழுதினேன். பாரம் அச்சிடும் சமயம் ஐயர் பார்க்க நேர்ந்தது. "அடடா! இப்படி எழுதினால் அச்சகம் பறிமுதலாய் விடுமே." என்று நான்கைந்து வரிகளை எடுக்கச்சொல்லி விட்டார். நான் சாத்விக வரிகளால் நிரப்பி பாரத்தை முடுக்கினேன். மற்றொரு சமயம் 'ரவலட்டுக்கு ரஸகுல்லா கொடுத்திருக்க வேண்டும். காந்தியுகத்தில் ரசகுல்லா அரிதாய் விட்டது. நமக்குத்தான் குண்டு பிரங்கி உண்டென்று வெள்ளையர் திமிர்பிடித்து, ஏழை இந்தியரைக் கொடுமை செய்கிறார்கள். நமக்கும் ஸயன்ஸ் மூளையுண்டு. பிக்ரிக் திராவகத்தை உபயோகிக்கத் தெரியும். காந்தியின் கட்டளைக்கே காத்திருக்கிறோம்" என்று காரமாகத் திட்டிவிட்டேன். ஐயர் "என்ன சாவர்கர் போல் எழுதினீர். இது வெளியானால் ஆசிரமமே குண்டுக்கிடங்கென்று உபத்திரவம் செய்வார்களே. நமக்கு எதிரே சர்க்கார் அதிகாரி அதோ பார்த்துக்கொண்டிருக்கிறார்." என்றார். பிறகு கனலை அணைத்துச் சாந்தமாக எழுதினேன். தலையங்கமும் அரசியல் குறிப்புகளும் எழுதும் வகையை ஐயர் எனக்குக் கற்பித்தார். விஷயங்களை நன்றாக ஆராய்ந்து, பலர் அபிப்பிராயங்களையும் பார்த்துக் குறிப்பெடுத்துக் கொண்டு, நிரம்பச் செய்திகள் பொதிய தான் காலவிமர்சனம் செய்தேன். ஐயரால் நான் ஆனந்தரங்கப்பிள்ளை தினசரியை ஆராய்ந்து, அவர் வரலாறும் எழுதினேன். பல கிரேக்கக் கதைகளை ஆராய்ந்து நமது இந்திய இதிகாசக்கதைகளுடன் ஒப்பிட்டெழுதினேன்]. பல நண்பர் எனது கட்டுரைகளைப்போற்றி ஐயருக்கு எழுதினர். ஐயரால் நான் தமிழுலகிற்கு அறிமுகமானேன். ஐயர் உலகை எனக்குக் காட்டினார். பாலபாரதி என் பேனாவுக்கு நிரோட்ட மளித்தது.

213. ஸ்ஸ் கவனம்

பாரதசக்தியில் 1857-ம் ஆண்டு சுதந்தரப் போரைப் பாடினேன். அதற்கு ஐயரிடமிருந்து நூலைக்கேட்டேன். ''மாடிக்குவாரும்'' என்று அழைத்துச் சென்றார். அங்கே சென்றதும் ''பாரதி இப்படியெல்லாம் வெளியிலிருந்து கேட்கக்கூடாது. வேலி யோரத்தில் நின்றவன் ஒற்றன். இந்தாரும் கவனமாக வைத்திரும். பதினைந்து நாட்களில் திருப்பித்தரவேண்டும்.'' என்று 1857ஐ தந்தார். நான் அதே வேலையாயிருந்து ''பலிபீடம்'' என்ற காவியம் எழுதினேன். அப்போது ஒருநாள் ஒரு வைதிக பிராமணன் வந்து நமஸ்காரம் போட்டு பெரியவாளைப்பார்க்கத்தான் வந்தேன். என்று பேச்சுக் கொடுத்தான். பேச்சுக்கிடையேகேட்டான். சுவாமிகள் ஊர் எது? கரூர்? சாதி? ஆண்சாதி—'' துறவிக்குச் சாதி ஏது? மனிதனுக்கே சாதிஏது? சாதி மதம் இல்லாத சன்மார்க்கி'' என்றேன். அதற்குள் ஐயர் ''பாரதி அந்தக்கட்டுரை எடுத்துக்கொண்டு உடனே வாரும். நாவலையும் கொண்டுவாரும், உடனே என்று கிணற்றடியிலிருந்து சத்தம் போட்டார். வைதிகன் அனந்த கோடி நமஸ்காரம் என்று அவர் பக்கம் கும்பிட்டு, ''மறுபடி வருகிறேன்'' என்று சென்றான். ஐயர் மாடிக்கு அழைத்துச் சென்று, ''என்ன பாரதி, எல்லாரிடமும் வெள்ளையாகப் பேசுகிறீர். அவன் ஒற்றன். எனக்காகப் பின்னே வருபவன். உம்மையும் கண்காணிக்கிறான். அவன் முன் அந்தப் புத்தகத்தை வைத்திருக்கலாமா? இனி இங்கிருந்தே அதை எழுதும்'' என்று புத்தகத்தைப் பசக்கென்று வாங்கிப்பெட்டிக்குள் வைத்தார். அதற்குள் ஒரு வாள் இருந்தது. அதுவே புதுவைப் புரட்சி ஜோடனையில் காளி உபாசனையிலிருந்த வாள். ஐயர் அதைக் கொஞ்சுவார். இரவில் தலையணைக்குக் கீழ் வைத்துப்படுப்பார். நான் கேட்பேன். ''காந்தியைப் பின்பற்றினாலும் க்ஷத்ரிய பலத்தை இழக்கக்கூடாது. வாளால் எதிர்க்கும் பகைவனை வாளால் விரட்டவேண்டும் குருகோவிந்தனே நம் ஆதர்சம்'' என்பார்.

இன்னொரு நாள் நீராடி வரும்போது ஒருவன் ''சாமி, வேட்டையாட வந்தோம் களைப்பாயிருக்கிறது. இந்த ஆயுதமும் மருந்தும் உள்ளே இருக்கட்டும்; சாப்பிட்டு வந்து எடுத்துச் செல்கிறேன்'' என்றான். நான் ''அதற்கென்ன? என் அறையில் வைத்துச் செல். வேண்டுமானால் என் வேர்க்கடலையைச் சாப்பிடு'' என்றேன். ஐயர் ஸ்ஸ் கவனம் என்றார். கண்சாடை யறிந்தேன். ''ஐயா, முடியாது எடுத்துக்செல்லும். இது சாது ஆசிரமம். நாங்கள் காந்திபக்தர்'' என்றேன். ''ஐயரும் ஐயா போம், இங்கே வரக்கூடாது'' என்றார். ஆள் திகைத்துச் சென்றான். பாரதி இந்தமாதிரி அசட்டுத்தனமாகக் கண்டபேருக்கு இடந்தரக்கூடாது. ஆசிரமத்தில் துப்பாக்கியும் வெடிமருந்தும் வைத்து, போலீஸைக் கூட்டிவந்து, ஐயர் குண்டுப்புரட்சி

பண்ணுகிறார் பாருங்கள், "என்று காட்டினுல் பிசகு. அவனும் பக்கா ஒற்றன்" என்ருர். இந்த உண்மை பிறகே தெரிந்தது. ஒருநாள் எனக்குச் சமன் வந்தது. சப்கலெக்டர் "நீர் 24 மணி நேரத்தில் அம்பா சமுத்திரம் கோர்ட்டில் இரண்டரை மணிக்கு ஆஜராகா விட்டால், கைது செய்யப்படுவீர்" என்று அவசர உத்தரவு போட்டார். மறுநாள் நான் சென்றேன். கோர்ட்டில் ஒருவருமே இல்லை. மூன்று மணி வரையில் ஜபம் செய்து பார்த்தேன். சாகெபு வரவில்லை. குமாஸ்தாவிடம் "ஐயா உம் உத்தரவுப்படி காத்திருந்தேன். நீர் வரவில்லை. இனி வேண்டுமானுல், சேரமாதேவியில் பார்த்துக் கொள்ளலாம்" என்று எழுதித் தந்து கிளம்பினேன். நான் ரயிலேறும் சமயம் ஆள் ஓடி வந்து, கூப்பிட்டான். சலாம் வைத்து நின்றேன்.

சாகெபு; நீர் எதற்காக குருகுலத்தில் ஐயருடன் இருக்கிறீர்?

நான்: எனக்காகத்தான். தேகசத்திற்காகத்தான் கலைக்காகத்தான்.

சாகெபு: என்ன செய்கிறீர்?

நான்: நான் செய்வதெல்லாம் பால பாரதியில் பார்க்கலாமே.

சாகெபு: சரி உமது சாதி என்ன?

நான்: ஆண் சாதி தான். முன்பே ஒற்றரிடம் சொன்னேனே.

சாகெபு: அதற்கே அழைத்தேன். நீர் சாதி மதத்தைச் சொல்ல வேண்டும். நான் முஸல்மான் என்பதில் குற்றமென்ன?

நான்: நீர் புமான், பிறகே முஸல்மான்.

சாதிமதபேதம் ஒழிந்தாலே மனிதர் உருப்படியாகலாம். அதனுலேதான், நான் சாதிமதப் பேச்செடுப்பதில்லை. துறவிக்கு சாதிமதமேது?

சாகெபு: சரி பிராமணன் என்று எழுதிக்கொள்கிறேன். போம் "சலாம்" என்று வந்தேன்.

இப்படியே பிரமசாரிகளை நீண்ட யாத்திரைகளுககு அழைத்துச் சென்றபோதும் அதிகாரிகள் சாதிமதம் கேட்டால் சொல்ல மறுத்தோம். கடவுளே தந்தை, பாரதசக்தியே தாய், மானிட ஜாதியே ஜாதி, மனச்சாட்சிச் சம்மதமே எங்கள் மதம், பாரே ஊர் என்போம்.

214. யாத்திரைகள்—கலியாண அருவி

குருகுல யாத்திரைகள் என் வாழ்விற்கு அரிய அனுபவங்களைத் தந்தன. என்னையும் உலகையும் மனிதர் இயல்பையும் காண அவை வாய்ப்பளித்தன. யாத்திரை என்பது நடைபள்ளிக்கூடமே. முதல் யாத்திரை கலியாண அருவிக்கு: காலை நாலரை மணிக்கே புல்விளக்கி

பிரார்த்தனைகளை முடித்துக்கொண்டு ஐயரின் ஆசிபெற்று தேசிய கீதங்களுடன் புறப்பட்டோம். கல்லிடைக்குறிச்சி பதினேரு மைல். வழிநெடுக யோகசித்தி, திருக்குறள், பாரதிபாட்டு எனது கீதங்களை முறைவைத்துக்கொண்டே சென்ருேம். ஆற்றில் குளித்து தியானம் செய்து, டாக்டர் சங்கரையர் வீட்டுக்கு ஏழுரை மணிக்குப் போனேம். அவர் மனைவி லக்ஷ்மி அம்மாள் எங்களை உபசரித்து உணவளித்தாள். உணவானதும், கம்பராமாயணம், உடலுறுதி, ஆங்கிலம் கணக்குப் பாடங்கள் நடந்தன. திலகர் வித்யாலயத்திற்குச் சென்ருேம். யக்ஞேச சர்மா சுற்றிக் காட்டினர். அங்கே மாணவர்களுக்குப் பூகோளம் சொல்லித் தந்தேன். திருநெல்வேலி ஜில்லா படத்தை விளக்கினேன். மாலை நான்கு மணிக்குப் புறப்பட்டு, பாபநாசம் போனேம். அங்கே கோயிலில் தங்கினேம். மலையைச் சுற்றிப்பார்த்தோம். இரவு கோவில் சாதம்வாங்கி, அத்துடன் மோர் சேர்த்து மிளகு தொட்டுக் கொண்டு பசிக்குச் சாப்பிட்டோம். மறுநாள் அருவியில் ஆனந்த நீராடினேம். மலைமேல் வெகுதூரம் சென்று, இயற்கையழகின் இன்பத்தை அள்ளிப் பருகினேம். நான்மட்டும் பாணதீர்த்தத்திற்குச் சென்று வந்தேன். அதற்கப்பால் அகஸ்தியமலையேறி, மலையாளத்தில் இறங்க விரும்பினேன். மாணவர் பொறுப்பு இருந்ததால், இன்னொரு தடவை பார்த்துக்கொள்ளலாம் என்று திரும்பினேன். வழியில் மணிமுத்தா நதிக்கரையில் முகாம் போட்டோம். அங்கே ஆசிரமம்நாட்ட விரும்பினேன். அது இனிய இயற்கைவனம். அந்த இடத்தில் சுதந்தரமாகப் பாடியாடிக் கனியுண்டு களித்தோம். நாங்கள் "பாருக்குள்ளே நல்லநாடு எங்கள் பாரதநாடு" என்று உச்சக் குரலெடுத்துப் பாடிக்கொண்டே ஆசிரமத்தை அடைந்தோம், ஐயர் ஓடிவந்து எங்களை வரவேற்று "இப்படியே அடிக்கடி யாத்திரை செல்லுங்கள். அதனுல் சக்தி வளரும்" என்ருர். சக்திமட்டுமன்று; ஒரு மாதம் நடக்கும் பாடத்தை மாணவர் மூன்றே நாட்களில் கற்றனர்.

215. குற்ருலத்தில்

அடுத்தபடி நாங்கள் பாண தீர்த்தம் அகத்திய மலையெல்லாம் சுற்றிக் குற்ருலத்திற்கு வந்தோம். அந்த யாத்திரை அனுபவங்களை ஐயருக்குக் கடிதமாக எழுதினேன். ஐயருக்கு பஜனைவசூல் அனுப்பும் போதெல்லாம் கடிதமும் எழுதினேன். அவற்றையே இங்கே தருகிறேன்.

அண்ணலுக்கு வணக்கம். ஓம்சுத்த சக்தி!

தாங்கள் என்னைக் கவியோகி என்பதை ஏற்ற நான், தங்களை அண்ணு அண்ணலே என்றழைக்க நேர்ந்திருக்கிறது. இங்கே வந்ததுமே சித்தூர் சி. ராஜகோபாலாசாரியார், தாங்கள் "வவேசு ஐயர் தம்பியா" என்று கேட்டார், நானும் "ஆம் அவர் என் அண்ணு" என்றேன்,

"தங்கள் அண்ணா மகாவீரர் சூரர்" என்று புகழ்ந்தார். எங்கள் யாத்திரையைப்பற்றி அவரிடம் சொன்னேன்.

ஏறினேம் பாபநாச மலைமேல். ஏராளமான கூட்டத்தைத் தாண்டினேம். காட்டைத் தாண்டலாம்; கூட்டத்தைத் தாண்டுவது எளிதன்று. எங்கள் பஜனைக்கே பெரியகூட்டம் சேர்ந்துவிட்டது. சொரிமுத்தன் கோயிலில் சன்மார்க்கப் பிரசங்கம் செய்தேன். அதற்கொரு தெம்மாங்கு புறப்பட்டது. பாமர ஜனங்கள் ரசித்தார்கள். அங்கே வந்திருந்த பாதிரிமார்கூடக் கேட்டு கீழே இறங்கிவிட்டார்கள். மாலை ஆறுமணிக்கே நாங்கள் அனைவரும் பாணதீர்த்தம் சென்றேம். கசகச என்று கூட்டம். பந்தல் காலியில்லை. சுகாதாரம் வழக்கம் போலத்தான். நாங்கள் பிரதாபசிங் படையல்லவா, காட்டிற்குள் பாய்ந்தோம். நாணல்களைக் கட்டுக்கட்டாகச் சீவினேம். கொச்சிக் கொம்புகளை ஒடித்தோம். எங்கள் சாரணத் தடிகளை நாட்டிப் பந்தல் போட்டுப் புல்வேய்ந்தோம். தரையில் மணல் பரப்பினேம். அதன் மேல் புல்விரித்துத் துண்டுவிரித்து அமர்ந்தோம். இவ்வளவும் ஒரே மணிநேரத்தில் நடந்தன. பிறகு பஜனை செய்தோம். காலையில் நாங்கள் முன்னே குளித்துவிட்டு யாத்ரிகர்களுக்கு உதவி செய்தோம். ஐந்தைந்து பேராகக் குளித்து வெளியேறச் செய்தோம். இரண்டு பேர் வழுக்கி விழாமல் பாதுகாத்தோம். ஒரு கிழவர் கால் தவறிவிட்டார். சட்டென்று நானும் கிருஷ்ணமூர்த்தியும் பிடித்துக் கரையேற்றிவிட்டோம். எங்கள் தொண்டை எட்டையபுரம் உத்யோகஸ்தர்கள் மெச்சினர்கள். நான் அங்கே வித்யா தானத்தைப்பற்றியும் நமது குருகுலத்தைப் பற்றியும் பேசினேன். உண்டியல் நிரம்பியது. ஒருவர் ஐந்து ரூபா போட்டார். இன்னொரு விசேஷம்: மத்யானம் சமாராதனை சம—ஆராதனையானது. குருகுலப் பிரமசாரிகள் அனைவரையும் சாதிமதம் பாராமல் நான் உள்ளே அமர்த்தினேன். யாரும் தடைசெய்யவில்லை. எல்லாரும் சாப்பிட்டெழுந்து, வெளியே காத்திருந்த பரதேசிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் சாதம் பிசைந்து போட்டோம். இரண்டாம் பந்திக்குப் பரிமாறினேம். இந்தக் கைங்கர்யம் எங்களுக்கு நல்லபேர் தந்தது.

பாண தீர்த்தத்திலிருந்து காலை நான்கு மணிக்கே புறப்பட்டோம். கடையம் வந்து குளித்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, பாரதியார் வீட்டிற்குச் சென்றேம். செல்லம்மாளைப் பார்த்தோம். பிறகு நான் பாரதியாரைக் கண்டுபேசிய இடத்திற்குச் சென்றேம். அங்கே இன்னும் "வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே" என்று பாரதி பாடிநிற்பதுபோல் உணர்ந்தேன்.

இனித் தென்காசி: கோவிலில் தங்கினேம். கோவில் பிரசாதம் சாப்பிட்டோம். அங்கே நான் நூறு விருத்தங்கள் எழுதினேன். பிறகு குற்றாலம்.

குற்ருலேசரைத் தரிசித்துத் தேவாரம் பாடினேம். பிறகு அருவியாடினேம். அங்கே எனது நண்பர் அருணுசலம், ராய். சொ. முதலானேர் தங்கள் விடுதியில் இருக்கலாம் என்று வரவேற்ருர்கள். நான் அன்று மௌனேபவாசமிருந்தேன். காரணம் கவிவெள்ளம் பெருகியது. ஒரு தனிமூலையில் எழுதிக் கொண்டிருந்தேன். ராயசோவும் காந்தி பிள்ளைத் தமிழ் பாடிக்கொண்டிருந்தார். மாலை ஆறுமணிக்கு அருவியாடி தியானுதிகளை முடித்து வந்தேன். ஸி. ராஜகோபாலாசாரியார் தங்களை என் அண்ணு ஆக்கினர். என் சொந்த அண்ணுக்களுடன் நான் பேசியது அபூர்வம். அவர்களால் எனக்கு எந்த உதவியும் இல்லை. தாங்களே என்வாழ்வை உருவாக்கிய தமயன். ஏழு மணிக்கு நண்பர் கூடினேம். குருகுல நடப்புகளை விளக்கினேன். பிறகு பிரமசாரிகள் சாப்பிட்டனர். இரவு எட்டரைமணிக்குச் சிலர் சீட்டாடத் தொடங்கினர். எனக்கு அது அருவருப்பு. ஆதலால் நான் என் அன்பரை அழைத்தேன். அப்பர் நாடகம்போட்டோம். நானும் நடித்தேன். சத்யானந்தம் தேவாரம் வெளுத்து வாங்கினுன். ராமானந்தம் நடிப்பு முதல்தரம். மணியின் குரல் அந்தக் கூடத்தைத் தூக்கியடித்தது. இந்த நாடகம் குருகுலத்திற்கு நல்ல பெயரைத் தந்தது. இப்படியே நமது நாடகத்தால் சன்மார்க்கத்தைப் பரப்பலாம் என்று கருதுகிறேன். காலை சண்பக அருவிமட்டும் சென்றுவந்தோம்.

இத்துடன் பஜனைவசூல் இருநூறு ரூபா அனுப்பியிருக்கிறேன். எங்கள் அன்புக்காணிக்கையுடன் ஏற்றருளுக. பாலபாரதிக்குப் பத்து சந்தாச் சேர்த்துள்ளேன். விலாசங்கள் உள்ளன. மலர் அனுப்பினுல், பணம் உடனே அனுப்புவார்கள்.

மறுதடவை நாங்கள் கன்யாகுமரியை நோக்கிப் புறப்படுவோம். எல்லாரும் மிகமிக உற்சாகமாகப் பாடிக்கொண்டே நடக்கிருேம். நடந்துகொண்டே கற்கிருேம், கற்றுக்கொண்டே பணி செய்கிருேம்.

216. நாகர்கோயில்

அண்ணுல், வணக்கம்,

கன்யாகுமரி யாத்திரை வெகு இன்பம்! தங்கள் ஆசிபெற்று எல்லாரும் நடந்து களக்காடு வந்துசேர்ந்தோம். வழியில் ஒரு நீரோடையில் குளித்து தியானம்செய்து மாணவருக்கு சங்ககாலத் தமிழரைப் பற்றிச் சொன்னேன். களக்காட்டில் பஜனை செய்துகொண்டே தெருக்களைச் சுற்றினேம். ஓர் அம்மாள் "எல்லாரும் இங்கே சாப்பிடுங்கோ" என்று அன்புடன் அழைத்து, தமது சத்திரத்தில் வடை பாயசத்துடன் விருந்தளித்தாள். அந்த அன்பை மறக்க முடியாது. நாங்குநேரியில் ஒரு தருமசாலையில் உண்டோம். கோயிலில் திருவாய்மொழி சாதித்தோம். பஜனை செய்தோம். பிறகு ஆரல்வாய் சேர்ந்தோம். அமோகமான வரவேற்பு. ஏராளமான கூட்டம். தேவார

மும் தேசாஞ்சலியும் பாடினோம். இரவு ஒரு மண்டபத்தில் நான் தமிழர் முன்னேற்றம்பற்றிப் பேசினேன். குருகுலத்தைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டனர். திருப்தியாக பதில் சொன்னேன். இரவில் பள்ளிக்கூடத்தில் தங்கினோம். நான் தியானம் செய்துகொண்டிருந்தேன். அந்த ஊர் நண்பர் வந்து என்னிடம் ஐம்பது ரூபா தந்தனர். காலை அனுட்டானங்களை முடித்துக்கொண்டு சிவன்கோயிலில் தேவார திருவாசகங்கள் பாடியபிறகு, சிவநாமாவளியுடன் புறப்பட்டு செண்பகராயன்புதூர் சோங்கிமங்கலம் தாண்டி, தாழைக்குடிக்கு வந்தோம். அங்கே அவலும் மோரும் உண்டு பூதப்பாண்டி சேர்ந்தோம். முத்துக்குமாரசாமி தந்தை அமோகமாக வரவேற்றார். எல்லாரும் சேர்ந்து சமைத்துச் சேர்ந்து உண்டோம். மாலை ஆறுமணிக்குப் பெரிய பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. உருக்கமாக தேவார பஜனை நடத்தியபிறகு, நான் சுத்த சன்மார்க்கத்தைப்பற்றிப் பேசி, பாதிரிமார்போல் அதைப் பரவச்செய்ய வேண்டும் என்றேன். பிறகு சுசீந்திரத்திற்கு அழைப்பு வந்தது. எழுத்தாளரும் ஆயுர்வேத வைத்தியரும் எங்களை மாலைசூட்டி வரவேற்றனர். கோயில் முன்னே கூட்டம்போட்டு, ஹரிஜன சுதந்திரத்தைப்பற்றிப் பேசினேன். "நாடு ஒரே வீடாக வாழவேண்டும். வீட்டிலுள்ளவர் தொழில் பலவாயிருக்கலாம். எல்லாரும் சரிசமானமாக வீட்டுக்கருத்துடன் சமரசம்பேணி வாழவேண்டும். உரிமைக்கு அடிப்படை ஒற்றுமை" என்று பேசினேன். சேரிகளில் பஜனை செய்தோம். சுத்தசுகாதாரவாழ்வை அங்கேவிளக்கினேன். பிறகு மாலை ஐந்து மணிக்குப் புத்தநேரி சென்றோம். இதுதான் புலவர் தேசிகவினாயகம் பிள்ளை வீடு என்றொருவர் காட்டினார். பசுமையழகு சூழ்ந்த வீட்டைப் பார்த்தோம். ஆனால் கவி திருவனந்தபுரத்தில் இருந்தார். இவருடைய குழந்தைப் பாட்டுகள் சில பார்த்து மகிழ்ந்தேன். வழியில் ஒரு மாதாகோயிலும் பள்ளிக்கூடமும் இருந்தன. இந்தமாதிரி நமது கோயில்களுடன் பள்ளிக்கூடங்களும் இணைந்து, கல்வியும் சன்மார்க்க சாதனமும் வளரவேண்டும்.

திருப்பதிசாரமும் கிருஷ்ணன் கோயிலும் தாண்டி நாகர்கோயில் சேர்ந்தோம். நாகர்கோயில் சுமார் 44,000 ஜனத்தொகை கொண்டது. தோப்பு துறவுகளுடன் விசாலமாக அமைந்தது. இது முற்றிலும் சைவபுரியாயிருந்து, பிறகு பௌத்தபுரியாகி, இப்போது இஸ்லாம் கிறிஸ்து மதங்களும் கலந்த சர்வமதக்கோட்டைபோல் விளங்குகிறது. இங்கே காந்திபக்தர் பலர் எங்கள் வந்தேமாதரப் பாட்டுக்கு வந்தேமாதரம் போட்டு வந்தனர். பஜனை ஊர்வலம் பிரமாதமாக நடந்தது. உள்ளூர் காந்திபக்தர்கள் அனைவரும், எம்பெருமாள், விசுவநாதன், மகாதேவன் முதலிய அனைவரும் கூடவந்தனர். எனக்கு வெகு உற்சாகம், புதிய புதிய தேசிய கீதங்கள்பாடி நடனமாடினேன், தெருக்கோடிகளில் நின்று ஜனக்கூட்டத்திற்கு தேசசேவை காந்தியம் சன்மார்க்க வாழ்க்கைப்பற்றிப் பதினைந்து நிமிஷம் பேசினேன். மாலை

ஐந்தரை மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு ஒன்பதரை மணிக்கே திரும்பியது. இடையே கோயிலுக்குச் சென்றோம். அங்கே பௌத்தச் சின்னங்களைக் கண்டோம். மற்றக் கோயில்களைப் போலவே இந்தக் கோயிலும் அழுக்கும் மெழுக்கும் எலியும் பெருச்சாளியுமாயிருந்தது. என்ன செய்வது? நம் அருட்கலையில் படர்ந்த அழுக்கை நீக்க வேண்டும்...காலம் வரும்.

இத்துடன் பஜனைவசூல் நானூறு ரூபா அனுப்பியிருக்கிறேன், எங்கள் அன்புக் காணிக்கையாக ஏற்கவும். ஸ்ரீவிசுவநாதையர் வீட்டில் நாங்கள் சமைத்துண்டோம், சேர்ந்துண்டோம்.

நாளை குமரிமுனைக்குப் பயணம், வழியே சுசீந்திரம், தாமரைக்குளம், மந்தாரம்புதூர், சாயல்ஏரி, அகஸ்தீஸ்வரம் ஆகிய ஊர்களுக்குச் செல்வோம். நடைபள்ளிக்கூடம் ஒழுங்காக நடக்கிறது. ஓம் சுத்த சக்தி!

217. குமரிமுனையில்

அண்ணல், வணக்கம்,

இத்துடன் திருக்காட்சி அனுப்பியுள்ளேன். நேற்றிரவு குமரிமுனைக்கோயில் சந்நிதியில் அமர்ந்து பாடியபாட்டு இது. இதன் தரத்தைக் கலாரசிக சிகாமணியே அறிந்துகொள்ள முடியும். ஆதலால் நான் வர்ணிப்பது மிகை. அகண்டமான இந்து சமுத்திரம் பதினாயிரக் கணக்கான வித்வான்கள் பக்கவாத்தியங்களுடன் ஸ்வரசஞ்சாரம் செய்வதுபோலப் பாடுகிறது. பரம்பொருள் அதோ வானத்தில் மௌனமாக விரிந்து விளங்குகிறது. மண்ணுலகில் கடலாக அலைவீசி ஆனந்த நடனமாடுகிறது. அது அமைதி, இது ஆடல். இரண்டும் சேர்ந்தே பூமியை வளர்க்கின்றன. அதன் கதிரும் இதன் ஆவியும் மழையாகி பயிராகி உயிராகி வளர்கின்றன. நாங்கள் மூட்டைகளை வைத்துத் தங்கிய சிறிய இரவல் மனை அதோ உள்ளது. அதைச் சுற்றிலும் மணல் வெளிதான். காற்றடித்தால் மணல் வீட்டிற் குவியும். இந்தச் சிறுவீட்டிற்கு முன்னே காலசமுத்ரம், கர்ஜித்துக் கொண்டிருந்தது; குமரிகண்டத்தை விழுங்கி ஏப்பம்விட்டது. கடல்முன், இந்தச் சிவன் சிந்தனைக் கடலில் நீந்துகிறது. குமரித்தாய் பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் தென்கோடியைக் காத்து நிற்கிறாள். தமிழர் அவள் நெற்றியிற் பதித்த வைரம் இன்னும் ஒளிர்கிறது. ஆனால் தமிழர் பழம்புகழ் எங்கே? தமிழ்க்கப்பல் உலகத்துறைகளை அளந்து சென்ற நாள் எங்கே? இப்போது அன்னியக் கப்பல்கள் நமது தாயை அலட்சியமாய்த் தாண்டிச் செல்கின்றன. நமதுநாடு தாழ்ந்துபோனதேன்? புண்ணியநாடு கண்ணீர்விடுவதேன்? கொலையே தொழிலான நாடுகள் செல்வம் கொழுப்பதேன்? அசுரர் சாதுக்களைக் கொடுமை செய்வதேன்? நமது பிரமசரிய குருகுலத்தையும் பகைப்புயல் சூழ்ந்து

கொண்டதேன்? எத்தனையோ ஏன்களுக்கு இங்கே குமரித்தாய் விடையளித்தாள்;

வானக்குடையின்கீழ் நாம் வாழ்கிறோம், வான் ஒன்று; பூமி ஒன்று. காற்று மழை வெயில் சூரியன் சந்திரன் எல்லாம், இயற்கை வளமெல்லாம் எல்லாருக்கும் பொது, ஒன்று. அவற்றால் வாழும் மாந்தர் ஏன் ஒன்றாயிருக்க முடியாது? முடியும்; மனமே இடர் செய்கிறது. நம்மவருக்கு மனப்பயிற்சி வேண்டும். ஐதிக வைதிக சாதிமத சாத்திர கோத்திரச் சிக்கல்களில்பட்டு வருந்தாமல், எல்லாரும் எல்லாமான சுத்தசக்திப்பொருளை உணர்ந்து எல்லாருக்கும் வாழவேண்டும். அவன் எதுவோ அதுவே நான். நான்யாரோ அவரே அவள் என்ற ஆன்மநேய உணர்ச்சிவந்தால், ஒற்றுமை இயல்பாகும். இது பிரமசரிய வாழ்விலேயே வரவேண்டும். பிரமசரியமே வாழ்வின் ஆணிவேர்; இல்லறம் அதன் கிளைகளே. எட்டுவயதிலேயே யோகமும் கல்வியும் தொடங்கவேண்டும். பாரதசக்தியில் இதை விளக்கியிருக்கிறேன். ஆத்மசக்தி, தேகசக்தி, தேசசக்தி, ஞானசக்தி, கர்மசக்தி, பிரேமசக்தி, வீரசக்தி, வீர்யசக்தி ஆகிய அஷ்டசக்திகளை சுத்தசக்தி யோகத்தால் வளர்க்கலாம். அறிவு, கலை, தொழில், ஆற்றல், உடலுறுதி மனவுறுதி செயலுறுதி எல்லாம் ஒருங்கே வளரவேண்டும். ஆண் பெண் அடங்கலும் சமமாக இந்தப் பயிற்சிகளைப் பெறவேண்டும்.

குருகுலத்துடன் கன்யாகுலமும் எழுப்புவோம். குற்றாலம், கல்யாண அருவி, முக்கொம்பு போன்ற இடங்களில் நிலம் கிடைத்தால் அழகான குருகுலம் அமைக்கலாம். ஆறும் மலையும் சேர்ந்திருத்தல் நலம், அங்கே சாந்திநிகேதனமும், சபர்மதியும் காங்கிரியும் கேம்பிரிட்ஜும் இந்து சர்வகலாசாலையும் சேர்ந்த கலைப்பயிற்சி தருவோம். மேற்கின் ஸயன்சும் கிழக்கின் சுத்தான்மாவும் சேர்ந்த ஒரு புதிய சாதனத்தை வகுப்போம். ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜிலிருந்து வரும் வாலிபரே பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தைத் தாங்குகிறார்கள். அத்தகைய வலிமைபொருந்திய வீரவாலிபர்களை நாமும் படைப்போம்.

மூன்றுமுதல் ஆறுவயதுவரையில் குழந்தைக்கல்வி தருவோம். சுத்தமான நடைமுறை, நல்லொழுக்கம், இனியபேச்சு, தன்னுதவி, காரியக்கருத்து, நாட்டன்பு, உயிரன்பு, உடல்நலம், போட்டிபொறாமை பொய்வஞ்சனையற்ற நேசம், பரோபகாரம் இவற்றைப் பயிற்றலாம். விளையாட்டாக எண் எழுத்து பயிற்றலாம். ஆறுமுதல் பனிரண்டு வரையில் தாய்மொழி, அருட்செல்வம், அருட்புலமையைத் தூண்டும் யோகப்பயிற்சி, இயல்புக்கேற்ற கலைகள், கணிதம், பௌதிக ரசாயன தாவரவிவசாய பூகோள நூல்களைப் பயிற்றலாம். தேசமொழியான இந்துஸ்தானியும் பயிற்றலாம் பனிரண்டிற்குமேல் உலகமொழியான ஆங்கிலம் கற்கலாம். மற்றக் கலைகளும் மாணவர் இயல்பிற்கு ஏற்றபடி பயிலவேண்டும். பதினான்காம் வயதில் தொழிற்பயிற்சி

தொடங்கலாம். குண்டூசி முதல் விமானம்வரையில் அவரவருக்கு இயன்ற ஒரு தொழிலோ கலையோ அவசியம் கற்கச்செய்வோம். பதினெட்டு வயது வாலிபன் தமிழ் இந்தி ஆங்கிலம், நல்லதொரு தொழில் வளம், ராணுவப்பயிற்சி, உடலுறுதி, தொண்டுணர்ச்சி, யோகசித்தி பெற்றிருக்கவேண்டும். பிறகு இரண்டாண்டுகள் உலகைச் சுற்றிப் பார்க்கவேண்டும். இரண்டாண்டுகள் தேசசேவை. பிறகே இல்லறம். ஒரு தொழிலில் ஊன்றிக்கொண்டே மணம்புரிய வேண்டும். பதினெட்டு வயதுக்குள் பெண்கள் நல்ல கல்வியும் லலிதகலை ஒன்றும் இல்லற ஒழுக்கமும் மருத்துவமும், யோகமும் பயிலவேண்டும். இத்தகைய கல்வி ஆயிரம்பேருக்காவது தரமுடியுமா? பார்ப்போம். காலம் விபரீதமாயிருக்கிறது,—என்றாலும், நம் எண்ணங்களை எழுதிவைத்தால், பிற்காலமாவது மனிதசமுதாயத்திற்குப் பயனாகும் அல்லவா?

எல்லா உலகும் இனியதோரு வீடாகி
எல்லாரும் ஆன்மவுற வேந்தியே—நல்லாராய்க்
கல்வி தொழிலுரிமை கண்ணான யோகசித்திச்
செல்வராய் வாழ்க செழித்து.
பண்டை முனிவர் பகரும் அருட்கலையும்
எண்டிசையும் போற்றும் இயற்கலையும்—கொண்டுதவி
இன்றுலகை வெல்லும் இணையற்ற தீரர்களை
நன்று பயிற்றுவோம் நாம்.

நாளை இங்கிருந்து திருவாங்கூர் புறப்படுகிறோம். முடிந்தால் வைக்கத்திற்கும் செல்வோம். இங்கே கோயிலில் நம்பூதிரி பட்டாசாரியருக்கு வேண்டிய உதவிசெய்தோம். அவரே எங்களை அன்புடன் ஊட்டுகிறார். அன்பும் உழைப்பும் இருந்தால் அன்னத்திற்கு என்னகுறை?

ஓம்சுத்தசக்தி. எந்தாய் வாழ்க!

218. மனோ தைரியம்

பத்மநாதபுரம்

வீரமணியே, இந்த யாத்திரையில் மனோ தைரியம் வளர்ந்தது. நாங்கள் கொட்டாரக்கரைக்கு வந்தோம். ஆற்றில் குளித்து பஜனை செய்தோம். கடைக்குக்கடை பணம் போட்டார்கள். அங்கே ஒரு நாடகமன்றம்: அதில் தமாஷாக நான் தனியாட்டம் போட்டேன். நாயர்கள் மெச்சினார்கள். ஒரு நாயர் சமைத்துண்ண இடந்தந்தார். சமைத்தோம். அச்சிகள் எங்களுக்கு வேண்டிய தொண்டு செய்தார்கள். அவர்களும் எங்களுடன் உண்டார்கள், பிறகு அவர்கள் தங்கள் கதையெல்லாம் மலையாளத்தில் அளந்தார்கள். சிலர் எழுத்தச்சனின் கிளி ராமாயணம் பாடினர். ஒருத்தி வள்ளத்தோலின் தேசிய கீதம்

பாடக்கேட்டேன். நாங்கள் புறப்படும்போது ஒரு அம்மாள் மரச் சீனிக்கிழங்கு பக்குவம் செய்து தந்தாள். நன்றியுடன் உண்டோம். எளிமை உழைப்பு, அகமகிழ்வு, சுத்தமான ஆடை இவை எங்களை வசீகரித்தன. அடுத்தபடி கொளச்சல்: இது செம்படவர் கிராமம்; அத்தனை பேரும் கத்தோலிக்கர்கள். டாண் என்று மணியடித்தது. எல்லாரும் மாதாகோயில் சென்றனர். நாங்களும் பஜனை பாடிச் சென்றோம். நான் ஏசுநாதர்மேல் ஒரு கீர்த்தனம் பாடினேன். பாதிரி பெர்னாண்டோ என்னை அன்புடன் கைகுலுக்கி வரவேற்றார். எல்லாரையும் முகமலர்ந்து ஏற்று அமர்த்தினார். நான் அவருக்கு மகாத்மா காந்தியின் எளிய, கிறிஸ்து போன்ற, வாழ்வை விளக்கினேன். பாதிரி மிக்க மகிழ்ந்து, தாமும் இராட்டை நூற்க விரும்பினார். அவருக்கு உடனே ஒரு ராட்டை அனுப்புவோம். அவர் குருகுலத்திற்குப் பதினைந்து ரூபா தந்து, நாங்கள் சமைத்துண்ணவும் இடமளித்து உபசரித்தனுப்பினார். இவரது பிரார்த்தனைக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். பியானோவின் கம்பீரமான இசை முழக்கத்துடன் ஆயிரம் குரல்கள் மலையாளத்தில் சுவிசேஷ கீதம் பாடின. இந்தப் பாதிரி போல் நானும் சன்மார்க்கப் பிரசாரமும் கல்விப் பணியும் செய்ய ஆசைப்பட்டேன். அந்தப் பாதிரி புண்ணியத்தால் குளச்சல் பரவர் அனைவரும் படித்து, தொழில் செய்து வறுமையில்லாமல் வாழ்ந்தார்கள்.

வழியில் வெயில் அதிகம். ஒரு சேரியில் தங்கினோம். சேரித்தையர் "ஐயோ ஸாமி இவ்டே வரலாமோ" என்று பயந்தனர். நான் அவர்களுக்கு அரை மணி நேரம் தீண்டாமை ஒழிப்புபற்றியும் மனித உரிமைபற்றியும் பேசி மலையாளத்திலும் மொழி பெயர்க்கச் சொன்னேன். எங்களிடம் இருந்த அவலை அவர்களுக்குத் தந்தேன். அவர்கள் எங்களைச் சந்தோஷமாக வழியனுப்பினார்கள்.

இனி நாங்கள் மலைமேல் செல்கிறோம். பேச்சிப்பாறை அணை வருகிறது. மலைக்காட்சி மாண்பெரும் அழகு! எங்கும் நீண்டுயர்ந்த மரங்கள்; புள்ளிசை, யானைக்கூட்டம் பிளிறல், நரிகளின் ஊளை, புலிகளின் உருமல். பாம்புகள் சுதந்தரமாக ஊர்கின்றன...நாங்கள் ரேஞ்சருடன் பேசினோம். ராயர் அன்புமயம். ஏரிக்கு எங்களை அழைத்துச் சென்றார். அங்கே படகேறித் துடுப்புத் தள்ளினோம். ஓடப்பாட்டு இயல்பாக வந்தது. ஏரியை ஒரு சுற்றுச்சுற்றி மாலை தங்க வெயிலில் குளித்தோம்; அடடா என்ன அழகான காட்சி...கந்தர்வலோகம் அதுதான்.

மணி ஆறு; தடதடவென்று போர்க்குதிரைகள் போலப்பாய்ந்தோடும் அருவிக்கு வந்தோம். அந்தச்சண்ட வேகத்தைக் கண்டாலே தலை கிறுக்கும். கவனமாக தேகசுத்தி செய்து, சந்தி ஜபங்களை முடித்து, மாலை பஜனை தொடங்கினோம்,

இதுகாறும் கவலை யற்றிருந்தோம். மலைக்காட்சியில் இரவின் கருந்திரை படர்ந்தது. எங்கும் பயங்கரக் காட்சிகள். புலிகள் உருமுகின்றன. யானைக்கூட்டங்கள் அருகே செல்கின்றன. பாம்புகள் காலைச் சுற்ற வருகின்றன. ராயர் தமது ஜாகையில் இடம் கொடுத்தார். அங்கும் பாம்புகள் ஓடி விளையாடின... மாணவர் ஐயா பசி என்றனர். நல்லதங்காள் நாடகம் நினைவு வந்தது. ராயர் ஏழை; அவர் அரிசியை நாங்கள் பறிக்கக்கூடாது. மாணவரைத் தூங்கச் செய்து, நான் கும்பலிங்கம் கிருஷ்ணமூர்த்தி ராகவன் ஆகிய நாலு பேரும் ராயருடன் ஹரிகேன் விளக்கேற்றிப் புறப்பட்டோம். வழியில் இரண்டு பாம்புகளைத் தாண்டிச் சென்றோம். நாம் மிதிக்காவிட்டால், அடிக்காவிட்டால், நம்முள் அன்பிருந்தால் அவையும் தீங்கு செய்ய மாட்டா என்பதை அறிந்தேன். நான் ஜபம் செய்து கொண்டேயிருந்தேன். நாங்கள் ஒரு மலையாளியிடம் சென்று மரச்சீனிக்கிழங்கு ஒரு கட்டு வாங்கினோம், பிறகு ஓரிடம் நிலக்கடலையும் அண்டிக் கொட்டையும் வாங்கினோம்.போதும்... திரும்பி வந்து சுள்ளி பொறுக்கி அடுப்பு மூட்டி, கிழங்குவேக வைத்தோம். கடலை வறுத்தோம். உடனே மாணவரை ஊதலால் எழுப்பினேன். சுடச்சுட மரச்சீனி தந்தேன். 'ஐயா பசி ஆறியது' என்றனர். பிறகு நிலக்கடலை கொறித்தனர். முடிவில் மரச்சீனி வெந்த வெந்நீரில் எங்களிடம் இருந்த கருப்பட்டியைப்போட்டுத் தந்தேன். பசி கப் என்று தீர்ந்தது... எல்லாரும் பஜனை செய்து விட்டு பிரதாபசிங் கதை கேட்டுக்கொண்டே படுத்துறங்கினர். நான் தடி வைத்துக்கொண்டு பூச்சி புட்டை வராமல் சுற்றிச் சுற்றிக் காவல் காத்தேன். திருவருளால் அபாயமில்லாமல் பொழுது விடிந்தது. அன்றிரவுக் காட்சியை என்றும் மறக்க முடியாது.

காலையில் அத்தனை ஆன்மாக்களுக்கும் உணவு தரவேண்டும், ரேஞ்சரைக் கேட்டேன். பத்மநாபபுரம் செல்லலாம் என்றார். நீங்கள் மாணவரைக் கீழ் அனுப்புங்கள் நான் முன்னே ஓடுகிறேன் என்றேன். மாணவரிடம் விடைபெற்று, நான் சாரண ஓட்டம் பிடித்து ஒரு டெலிபோன் நிலயத்திற்கு வந்தேன், அங்கிருந்து ரேஞ்சருக்குப்பேசினேன். மாணவர் அடிவாரத்திற்குச் சென்றதாகச் சொன்னார். நான் அதிவிரைவாக பதினைந்து மைல் ஓடி, பத்மநாபபுரம் அரண்மனைத் தெருவில் நின்றேன். மணி ஒன்பதிருக்கும்...ஒருநாயரைக் கண்டேன், ஆங்கிலம் தெரிந்தவர்; விபரம் சொன்னேன். அவர் இன்னொருவரைக் காணச் சொன்னார்: கண்டேன். அவர் இன்னொருவரிடம் காட்டிவிட்டார். இவர் ஆளுக்கு இரண்டணா தருவோம்...அரண்மனையில் சமைத்துண்ணலாம்; பாத்திரம் தருவோம் என்றார். நான் அவருடன் அரண்மனை சென்றேன். ஒரு காலம் மலையாளத் தலைநகராயிருந்த அந்த மாளிகை அலங்கோலமா யிருந்தது. இடிந்து தகர்ந்து புழுதியாகி உளுத்த அரண்மனையைக்கண்டு வேதாந்தம் வராமலிருக்குமா ?

மனிதன் கட்டிய கோட்டை காலத்தால் இப்படி அலங்கோலமாகி இடிந்து போவதை எண்ணினேன். அந்த அரண்மனையில் ஒரு கல்லூரி வைத்தால் என்ன? அதிகாரிகளுக்குத் தோன்ற வேண்டுமே. சரி பாத்திரங்கள் வாங்கினேன். கடைக்குச் சென்று ரவை, அரிசி பருப்பு காய்கறிகள் வாங்கி வந்தேன். இதற்குள் 'ஜனகண' பாடிக்கொண்டு என் பட்டாளமும் கணகண என்று தெருக்கள் அதிர வந்தது. நானும் ஒரு பாட்டுப் பாடினேன். ஊர் பிரமுகர் கூடினர். கும்பலிங்கம் பிள்ளை ஒருவருடன் சென்று இட்டலி வாங்கி வந்தார். உப்பும் மிளகும் பொடி பண்ணிப் போட்டுக் கொண்டு இட்டலி உண்டோம். பிறகு நகர சங்கீர்த்தனத்திற்குக் கிளம்பினோம். ராமச்சந்திரையரும் கிருஷ்ண மூர்த்தியும் சமையலில் புகுந்தனர். பஜனை வெகு ஜோராக நடந்தது. இந்துஸ்தானிப்பாட்டு முழங்கின. காங்கரஸ் அபிமானிகள் அனைவரும் எங்களுடன் வந்தனர், தேசியக் கொடிக்கு மாலை சூட்டினர். உண்டியலில் பணம் போட்டனர். பஜனை அரண்மனைக்கு வந்ததும் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். "அவடே நிக்கட்டும்" என்றொரு வைக்கம் பேர் வழி என்னைத் தடுத்து "தமிழ் குருகுலத்திலே பிராமணனுக்கு உள்ளே, மற்றவருக்கு வெளியே சோறு போடுவதா? ஜாதி பேதம் பாராட்டும் குருகுலத்தைச் சுட்டால் என்ன!" என்று வெளுத்து வாங்கினர். நான் மதிமதி என்று அவருக்கு முற்றுப்புள்ளி வைத்து, குருகுலம் இதோ இங்கேயே வந்துள்ளது. நாங்களெல்லாரும் எப்படிச்சாப்பிடுகிறோம், பார்த்துக் கொள்ளுங்கள். ஐயா நீரும் வாரும், உடனுண்ணும், என்று எல்லாரும் சாப்பிட்டோம். உடனே அவர் மன்னிப்புக்கேட்டு, பத்திரிகை பார்த்துப் பிசகாக நினைத்தோம். இப்போதே தெரிந்தது. என்றார். அப்படியானால் குருகுலத்தை மெச்சி ஒரு பிரசங்கம் நடக்கட்டும் என்றேன். அவர் பெரிய கூட்டம் கூட்டி, ஒரு மணி நேரம் எங்கள் குருகுலக்கல்வியை வானளாவப் புகழ்ந்தார். நான் ஆசாரியரைப்பற்றிப் பேசினேன். மறுநாளும் அதே ஊரில் பஜனை நடத்தினோம். மதியம் அரண்மனையிலிருந்த பழைய காட்சிப் பொருள்களைக் கண்டோம். சரித்திர ஆராய்ச்சி நடந்தது. ஸ்வாதித்திருநாள், வேலுத் தம்பி ஆகிய இருவர் வரலாறுகளும் பாட்டாகக் கேட்டோம். மலையாளச் சரித்திரக் குறிப்புகளைச் சேர்த்துக்கொண்டு நான் புறப்பட்டேன்.

பிரமசாரிகளை கபாத்து வாங்கிய பிறகு பிரார்த்தனை நடத்தி, தோவாளைக்கு அழைத்துச் சென்றேன். இரவை அந்த ஊரில் கழித்தோம். மரச்சீனி நேந்தரம்வாழை நிலக்கடலை, வேகவைத்து உண்டோம். காலையில் நெய்யாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தோம். பஜனை வசூல் நிரம்பக்கிடைத்தது. அரிசி பாசிப்பருப்பு சாமான்கள் வாங்கிக் கொண்டோம். இடம் தேடி அச்சிகள் வீடுகளில் புகுந்தோம். அவர்கள் வாழ்வைப் பார்த்தோம். பிறகு நல்ல இடம் தேடும்போது வள்ளத்தோலின் கலாபவனத்திற்குச் சென்றோம், அங்கே ஆடிப்பாடி நடித்துக்

கும்மாள மடித்தபோது, ஒரு கிழவி எங்கள் வீட்டில் சமைத்துண்ண லாம் என்று அழைத்தாள். சென்றோம் சமைத்தோம். அவள் பேர்த்திகள் சுற்றுக்காரியம் செய்தனர். எல்லாரும் எங்களுடனேயே உண்டனர். கிழவி தேங்காய் எண்ணெயில் பப்படாம் பொரித்துப் போட்டாள். பல அச்சிகள் அங்கே கூடிப்பாடினர். மலையாளக் கதைகள் சொன்னார்கள். நாங்களும் கண்ணன் கோயிலில் பாடினோம். பிறகு விடை பெற்றோம். இதற்குள் நான் மலையாள பாஷை கற்றேன். மலையாளப் பெண்களை, விவாகம் செய்து கொண்டு இல்ல றத்தில் வாழும்படி சொன்னேன். இனி நேராகத் திருஅனந்தபுரம்.- அடுத்த தபால் பத்மநாபஸ்வாமி சந்நிதியிலிருந்தே வரும். எப்படி யாவது நானூரு ரூபாயாகச் சேர்த்து அனுப்புகிறேன். நமஸ்காரம்.

219. திரு அனந்தபுரம்

அண்ணல், வணக்கம் ;

திருவனந்தபுரத்திற்கு வந்ததுமே தேசியக்கொடி பிடித்து திவ்ய நாமங்களுடன் பத்மநாபஸ்வாமி சந்நிதிக்குள் சென்றோம். நம் பூதிரிகள் எங்களைத்தடுத்து வைக்கம் சத்யாக்ரகப்படை என்று துரத் தினார்கள். நாங்கள் காந்தி சேனை என்று மறுபடி உள்ளே போனோம். நான் சந்நிதியிலிருந்து பண்டரி பஜனைப் பாடல்கள் பாடினேன். ஒரு பட்டருக்குப் பிரியம் வந்தது. விசாரித்தார். நாங்கள் பிரமசர்ய குருகுலத்தார் என்றேன். அவர் தயவால் நாங்கள் தேசியக்கொடியை மூலஸ்தானம் வரை கொண்டு சென்று வணங்கி, ஒரு பூமாலையுடன் திரும்பினோம். நல்ல வேளையாக திவான் ராகவையா அங்கே வந்தார். நான் அவரைக்கண்டு விஷயத்தைச் சொன்னேன். தெலுங்கில் பேசி னோம். சால ஸந்தோஷமண்டி என்று எங்களுக்கு இருக்க இடமும், ஊட்டுப்புரை சாப்பாடும் தந்தார். நான்கு நாட்கள் காலார திருவனந்த புரத்தில் தங்கினோம். காலை மாலை பஜனை வசூல் பெருமிதமா யிருந்தது. காப்பிக்கடைக்காரர் சிற்றுண்டி வழங்கி ஐந்து பத்து போட்டனர். இத்துடன் நானூற்றைம்பது ரூபா அனுப்பியிருக்கிறேன்.

இங்கே காந்தி கொள்கையைப் பிரசாரம் செய்தோம் தெருத் தெருவாக பஜனையுடன் பிரசங்கமும் நடந்தது. சிலர் காந்தி, காங்கரஸ் வைக்கம் சத்தியாக்கிரகம் என்ற பேச்சே கூடாதென்று தடுத்தார்கள். அவர்களை நண்பர் சத்தம் போட்டு அடக்கிவிட்டனர். நான் காந்தி ராஜ்யம் வந்து கொண்டிருக்கிறது. தீண்டாமை ஒழிகிறது. இதே பத்மநாபர் சந்நிதியில் திருக்குலத்தாரும் வணங்கக் காண்பீர்கள். என்று உரக்கக் கூவினேன். ஊட்டுப்புரையில் எல்லாருமே உண்டோம். யாரும் சாதி கேட்கவில்லை, முகக்களை அப்படியிருந்தது. ஆதலால் அன்னவிசாரமில்லாது ஊரைச்சுற்றினோம். முதலில் மிருகச்சாலை சென்றோம். மாணவருக்கு விலங்கு நூல் சொன்னேன். ஒரு சிங்கக்

கூட்டருகே நான் சென்று கேசரி முத்திரை வைத்துப் பார்த்து நின்றேன். சிங்கம் திடீரென்றெழுந்து அருகே வந்தது. கம்பி வழியே கை நீட்டிப் பிடரியைத் தடவிக் கொடுத்தேன். சிங்கம் இரண்டுதரம் கர்ஜித்தது, சபாஷ் ராஜாமணி என்று தட்டிக்கொடுத்துப் புலிக் கூண்டிற்கு வந்தேன். புலி குட்டிகளுடன் விளையாடியது. கரடி, சிறுத்தை வரிக்குதிரை, ஒட்டை, நரி, ஓநாய், பாம்பு, குரங்கு எல்லாம் பார்த்துப் பறவைகளைக்கண்டு மகிழ்ந்தோம். பிறகு நட்சத்திர சாலைக் குச் சென்றோம். அங்கே நீண்ட தொலை நோக்கி யிருந்தது. அதில் வானை நோக்கினோம். காலநிலை அறியக்கற்றோம். பிறகு ரவிவர்மா காட்சிசாலை கண்டோம். அடடா என்ன அற்புதமான சித்திரக்கோயில். அந்த மோகினிப்படமே போதும்...அரிய கலைக்காட்சிகள் கண்டு, மஹிளா மந்திரத்திற்குச் சென்றோம். ஒரு பெண்மணி அங்கே பல அனாதைப் பெண்களுக்குக் கல்வியும் தொழிலும் பயிற்றினாள். அவர் களுக்கு ஒரு பிரசங்கம் செய்தேன். மறுநாள் சீர்திருத்தச்சாலைக்குச் சென்றோம். அங்கே குற்றவாளிகளுக்கெல்லாம் கல்வியும் தொழிலும் பயிற்றி ஒழுங்காக நடக்கச் செய்திருக்கிறார்கள். நெசவு, அச்சு, தையல் முதலிய பல வேலைகளில் இளம் குற்றவாளிகள் ஈடுபட்டனர். அவர்களுக்கு அரை மணி நேரம் சன்மார்க்கப்பிரசங்கம் செய்தேன். பிறகு நடுத்தரக் கலாசாலைகளுக்குச் சென்றோம். தாய்மொழி நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. மறுநாள் திருவிதாங்கூர் கல்லூரிக்குச் சென்றோம். தலைவர் எங்களை வரவேற்றுச் 'சுற்றிப்பார்க்கலாம்' என்றார். நான் ஸயன்ஸ் ஹாலுக்கு மாணவரை அழைத்துச்சென்று உடற்கூறு பாடம் சொன்னேன். அதற்கேற்ற கருவிகள் அங்கிருந்தன. பிறகு மின்சாரப்பாடம் கற்பித்தேன். இந்த ஊர் எனக்குப் பிடித் திருக்கிறது: சுத்தமாயிருக்கிறது. மன்னர் அரண்மனை ஒரு கந்தர்வ லோகமாக விளங்குகிறது. எளிமையின் தூய அழகை இங்கே காண் கிறோம். பால பாரதிக்கு இத்துடன் முப்பது சந்தாதார்கள் பெயர் அனுப்பியிருக்கிறேன். வீபியில் அனுப்பினால் கௌரவிப்பார்கள். நான் அரிய சரித்திரக் குறிப்புகள் சேர்த்திருக்கிறேன். சரித்திரப்புலவர் கே. வி. ரங்கசாமி ஐயங்காரையும் கண்டு பேசினேன். உள்ளூர் ஆசிரியர்-கல்லூரிக்குச் சென்று பாடமுறைகளை அறிந்தேன். கல்விக்கு இங்கே பஞ்சமில்லை. இருபாலாரும் நன்றாகப்படிக்கிறார்கள்.

நாளை கோல்லம் சென்று விரைவில் வருவோம்.

220. கொல்லத்தில்

செங்கோட்டை

வீரவிளக்கு வாழ்க!

நாங்கள் நான்கு இடங்களில் கட்கடை மறியல் செய்தோம். சேரிகளில் புகுந்து திருக்குலத்தாருக்குத் தூய சன்மார்க்க உணர்ச்சி

புகட்டினோம். அழுக்கான இடங்களைக் கூட்டினோம். இப்படித் தொண்டு செய்து கொண்டே கொல்லம் சென்றோம். எங்கும் தென்னை எங்கும் பசுமை...மரக்காயர் தலைவர் எங்களை வரவேற்றார். அவர் காந்திபக்தர். புதியப் பானையில் நாங்கள் சமைத்துண்டு பஜனைக்குக் கிளம்பினோம். சாகெபு கூடவந்தார். ஐம்பது ரூபா வசூலானது. பால பாரதிக்கு நான்கு சந்தாச் சேர்த்தேன். மாலை பெரிய கூட்டம். மரக்காயர் தேசியக்கலாசாலை முன்பு இரண்டு மணி நேரம் குருகுல நடைமுறை பற்றிப்பேசினேன். சிலர் கேள்விகளுக்குப் பதிற்சொன்னேன். பேச்சின் முக்கியமான பகுதியை மலையாளத்தில் சொல்லச் செய்தேன். சாகெபு வீராவேசமாகப் பேசி, குருகுலத்தை மெச்சினார். தமக்கும் ஆதரவளித்தால் குருகுலம் வைப்பதாக அலறினார். இரவை அவர் பள்ளிக்கூடத்தில் கழித்துக் காலை புறப்பட்டோம். கிராமம் கிராமமாகப் பஜனை சன்மார்க்கப் பிரசங்கம் காந்தித் தத்துவ விளக்கங்களுடன் சென்றோம். ஒரு கிராமத்தில் ராட்டை சுழன்றது. பலருக்கு நூற்கப்பயிற்றினோம். ஒரு தறிபோட ஏற்பாடு செய்து முன் சென்றோம். ஒன்றில் நாட்டு நிலைமையும் நமது கடமையும் காட்டினோம். குடிமறுப்பு, திருக்குல முன்னேற்றம், சாதிமத சமத்துவம், கதரணி, சத்தியாக்கிரகம், காந்தியம், குருகுலக்கல்வி இவையே பேச்சின் பொருள். பொதுவாக மகாத்மாவிடம் எல்லாருக்கும் பக்தி யிருக்கிறது. நமது நாட்டிற்கு விடுதலை உண்டானால் அது காந்திஜியாலேதான் இயலும் என்பது என் உறுதி.

செங்கோட்டை பஜனையுடன் இந்தப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு ரயிலேறி விட்டோம். நாளை குருகுலம்.

இவ்வாறு பல ஊர்களைச்சுற்றி உலகானுபவம் பெற்றநாட்கள் எனது வாழ்வின் பொன்னுட்களாகும். அடுத்த பிரயாணம் திருச்செந்தூருக்கு.

221. திருச்செந்தூர் பிரயாணம்

வழக்கம் போல ஐயர் ஆசி கிடைத்தது. தேசிய கீதங்களுடன் கிளம்பினோம். கையில் ஒரு பைசா கிடையாது. மனோ தைரியமே வழித்துணை. இருபது பேர்கள் திருநெல்வேலி நெல்லையப்பன் கோயில் தரிசனம் செய்து, ஜாலராவைத்தட்டிக்கொண்டு கடைத்தெருக்களைச் சுற்றினோம். இருபத்தைந்து ரூபா வசூலானது. தி. ரா. மகாதேவையர் எங்களை உபசரித்தார். அம்மாமி அன்று போட்ட பழையதும் பழங்கறியும் இன்றும் வயிறு குளிர்ந்திருக்கிறது. மற்றொரு முறை பஜனை நடத்தினோம், பதினைந்து ரூபா வந்தது. ஐந்தே ரூபா வைத்துக் கொண்டு, மிச்சத்தை ஆசாரியாருக்கு அனுப்பும்படி திரா மகாதேவையரிடம் தந்து, பாளையங்கோட்டை சென்றோம். அங்கே கிறிஸ்துவர்

செய்துள்ள அற்புதக் கல்வித்தொண்டைக் கண்டோம். நூற்றுக் கணக்கான எளிய மாணவ மாணவிகளுக்கு உழைப்பும் பிழைப்பும் தந்து, பாதிரிமார் கல்வி புகட்டும் அரிய சேவையைச் சுற்றிப் பார்த்தோம். ஒரு பாதிரி எங்களுக்குச் சுற்றிக் காட்டி ஜேவியர் முனிவர் செய்த பணிகளை விளக்கினார். ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார் திருநகரி ஆகிய இரண்டு க்ஷேத்திரங்களிலும் நாங்கள் திருவாய் மொழி பாடினோம். நான் பட்டை நாமம் போட்டேன். ஏராளமான அன்பர் எங்கள் பஜனையில் கலந்து கொண்டனர். ஆழ்வார் திருநகரியில் நான் திருப் புளியடியில் நீண்ட நேரம் இரவில் தியானித்தேன். கண்ணன் மேல் பாடினேன். அங்கே ஓடும் பொருனை நதி என் செவியில் "என்னைப் போல் முன் செல்; தன்னைப்போல் நன்மை வரும்" என்பது போலி ருந்தது. உன் கடமையென்ன? நீ செய்வதென்ன! என்று மனச் சாட்சி கேட்டது. அந்த ஊரில் பரம பக்தர் ஒருவர், ராயர், திபப்ர தக்ஷிணத்துடன் பஜனை நடத்தினார், அதில் நானும் கலந்து கொண் டேன். என்னையறியாமல் கண்ணீர் வந்தது. நான் கடவுளை விலகி எங்கெங்கோ சுற்றுவது போல் உணர்ந்தேன்.

இராமகிருஷ்ணையங்கார் எங்களைத் தென்திருப்பேறுக்கு அழைத்துச் சென்றார். அங்கே காந்தி நிலையம் இருந்தது. கதர் நிரம்ப உண்டானது. நாங்களும் நூற்றோம். பிறகு பஜனை செய்து அரிசி வசூலித்துச் சமைத்துண்டோம். கதர்அன்பர்களும் எங்களுடன் உண்டார்கள். மாலையில் நான் காந்தியும் கதரும் என்பது பற்றிப் பொதுக்கூட்டத்தில் பேசினேன். கூட்ட முடிவில் கோயிலுக்குச் சென்றோம். அங்கே பாகவதர்கள் திருவாய் மொழி பாடினர். "நன்றாய் ஞானம் கடந்து போய்" என்ற பாசுரம் என் மனதைச் சுழற்றி விட்டது. என் கடமை வெளியேயில்லை. உள்ளே இருக்கிறது என்றுணர்ந்தேன். கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்றோம். அங்கே பாண்டியர் காலச் சிற்பங்களைக் கண்டோம். அவற்றின்மேற் படர்ந்த காலத்தூசியையும் கண்டோம். மனித சிருஷ்டிகளெல்லாம் ஒரு காலம் அழியும், அலங்கோலமாகும். மலைகளைக்கூட பூகம்பம் தகர்க்கிறது. என் அகங்காரத்தால் இப்படிச்செய்வேன் அப்படிச்செய்வேன் என்பதிற் பயனென்ன என்றெண்ணிக்கொண்டே பயணம் தொடர்ந்தோம். குலசேகர பட்டணத்தில் இராட்டினங்கள் சுழன்றன. அங்கே காந்தியத்தைப்பற்றிப் பேசினேன். கிராமங்களில் ஏழைகள் படும் பாட்டைக்கண்டு கண்ணீர் விட்டேன். இப்படியே உலகை உள்ளத்தில் படம் பிடித்துக் கொண்டும், உலகாதீதனான இறைவனைச் சிந்தித்துக் கொண்டும், திருச்செந்தூர் வந்து சேர்ந்தோம். அங்கே கிருஷ்ண சர்மா வீட்டில் தங்கினோம். வழக்கம்போல் பஜனை வசூல் ஆனது. ஐயருக்கு இருநூறு ரூபா அனுப்பினேன். திருநாட் கூட்டம் ஊர் முழுதும் கசகச வென்றிருந்தது. கடற்கரைதான் ஆறுதல் நாழிக் கிணற்றில் குளித்துக் கடற்கரையில் தியானித்துக் கோயிலுக்குச்

சென்று முருகன் புகழ்பாடி வணங்கினோம். நான் முருகனுக்குச் சங்கீதாஞ்ஜலி செய்தேன். எனக்குள் புதிய ஆவேச அலைகள் எழுந்தன. என் வாழ்வில் ஏதோ பெரிய பூகம்பம் நடக்கப்போவதை உணர்ந்தேன். ஒரு சமாராதனை நடந்தது; எல்லாரும் அங்கே உண்டோம். எங்களுக்கு எதிரே ஒரு பரதேசி அமர்ந்து "சாப்பாடு கூப்பாடு உன்பாடு என்பாடு அவரவர் பாடு." என்றார். உலகின் சுயநலத்தை அவர் விளக்கினார். பாதி சாப்பிடும்போது கணக்கு சரி...ஓடு வீட்டுக்கு என்று சொல்லி என்னைப்பார்த்து அவர் ஓடினார். நான் அதிவிரைவாக உண்டு, அவர் தடத்தைத்தேடிக் கொண்டு கடற்கரைக்குச் சென்றேன். அவர் மணல் வீடு கட்டி "ஹ ஹ வா வா இதுதான் வீடு; அலை வந்தால் மண்ணும் மிஞ்சாது." என்று என்னைக் குறித்துச் சொன்னார். அவர் பெரிய ஞானி, பக்குவிகளுடன் சாதாரணமாகப் பேசுவார், மற்றவர் முன் பைத்தியம் போல் நடிப்பார். நான் அவரை வணங்கி, என் மனத்தில் உள்ள கலக்கத்தைச் சொன்னேன். அவர் மயில் தோகை விரித்து தைதா என்றால், மனிதன் பார்த்துக் கவி எழுதுகிறான். ஒரு பெண் தத்தைதைதா என்று பாடி ஆடினால் மயங்குகிறான். பெண்ணின் தைதாவைக் கலை என்கிறான். மேலே பாரப்பா ஆகாயம் நட்சத்திரத் தோகை விரித்தாடுகிறது. முருகன் அதில் அமர்ந்திருக்கிறான். கல் கோயிலில் தேடித் தேங்காய் உடைக்கிறான் மனிதன், காலை அவன் சூரியனாகக்கடல் அலையில் எழுந்திருக்கிறான். அருணோதயம் போல் ஞானோதயம் ஆனால், இருள் ஓடிப்போகும். நமது தீவட்டியால் இரவு பகலாகுமா?" என்று அரிய உட்பொருள் பொதிந்த ஞானமொழி பேசினார் அப்பெரியார். நானும் 'சுவாமி குறிப்பறிந்தேன். நான் ஏதேதோ மனக்கனவில் மணல் விடு கட்டுகிறேன். காலவெள்ளம் அதை அரித்துச்செல்லும். வானும் கடலும் கதிரவனும் போன்ற நீடித்த பொருளைக்கண்டு அதனால் திருவருளை அடையச் சொல்லுகிறீர்கள். இப்போது நான் வவேசு ஐயருடன் குருகுலப்பணி செய்கிறேன். இதை விட்டு விடவா?" என் உள்ளம் உள்ளடங்கி லயித்திருக்கச் சமாதி நிலை தேடுகிறது. அதற்கேற்றபடிதான் குருகுலச்சண்டையும் கிளம்பியிருக்கிறது என்றேன்.

"தெரியுமப்பா ஐயரைத் தெரியும். புதுச்சேரியில் பார்த்திருக்கிறேன். வாஞ்சியுடன் நானும் அங்கே போயிருந்தேன். அவர் துப்பாக்கி சாம்பலைச் (ஆஷ்) சுட்டதுடன் சரி. குருகுலத்திற்குப் பக்குவம் இல்லை. சாதிமதப் பித்தம் ஒழிந்தாலே இந்தக் காரியங்கள் நிலைக்கும். அதுவும் மணல் வீடுதான். உன் பக்குவம் வேறு. நீ அதை விட்டுக் கிளம்புவாய். ஆனால் உறுதியாக உள்ளத்தானை நம்பு. வேறு எதிலும் நம்பிக்கை வைக்காதே. போ. மேன்மேலும் போ; வழி துலங்கும்."

இந்த ஞானி பேச்சு அரப்பளிசர் மலைமேல் தோன்றிய ஞானியின் பேச்சை நினைப்பூட்டியது. என் வாழ்வின் குறிக்கோள் புலனானது.

சட்டென்று அன்றே மாணவரை இட்டுக்கொண்டு திருநெல்வேலிக்கு வந்தேன். ரயிலில் புளி அடைத்ததுபோலக் கூட்டம். ஆலைக் கரும்பு போல் கசங்கிப்போனேம். உலக நெருக்கடியில் நான் சிக்கினலும் இப்படித்தானே. அதிலிருந்து தப்பவே வழி பார்த்தேன்.

222. "செய்யுங்கள் தவம்"

ஐயர் பெல்காம் காங்ரசுக்கு என்னையும் அழைத்தார் "நான் இந்து பத்திரிகையில் காங்ரஸைப் பார்ப்பேன். தாங்கள் செல்வதே முறை" என்றேன். ஐயர் பெல்காமிலிருந்து எழுதினர்: "காங்ரஸ் மஹாத்மா தலைமையில் சுருக்க விளக்கமாக நடந்தது பேச்சில் நேரத்தை வீணுக்காமல், செயலில் இறங்குவது காந்திஜியின் வழக்கம். மஹாத்மாவின் தேஜஸ் அதிகரிக்கிறது. பாரத தேசத்தை வாழ்விக்க வந்தவர் இவரே என்பதை ஒவ்வொரு நிமிஷமும் அறிகிறேம். நான் வி. சா. வைப் பார்த்து, சிலநாட்களில் வருவேன். பாலபாரதியைக் கவனித்துக்கொள்ளவும். குருகுலத்தை அதிகமாகக் காக்கவேண்டும். ஏதாவது இருந்தால் சென்னைக்கு எழுதவும்..."

எழுதினேன். "புயல் வலுக்கிறதே. தமிழன் பெரிய காரியந் தொடங்கினல் அதைத் தட்டி வீழ்த்த இப்படிப் பொருமைச் சூழ்ச்சி கிளம்புகிறதே. மனித முயற்சியால் இயன்றதெல்லாம் செய்தோம். அமைதி வரவில்லை. என் உள்ளம் சதாகால யோக நிஷ்டையில் தீவிரப்பட்டிருக்கிறது. நான் பூரணம் பெருமல் உலகைத் திருத்தப் புகுவது கேலிக்கூத்தெனப்படுகிறது. குருடனைக் குருடன் நடத்த முடியுமா? முடவனை முடவன் கரையேற்றுவானு? உலகம் பராசக்தி அரங்கம். அதில் ஒரு காரியம் செய்யவும் பராசக்தி பெறவேண்டும். அதற்கு வழி தெரியும். நடக்கவேண்டும். சுத்தயோக சித்தியால் மகாகுண்டலியைப் பெற்று, இறைவன் அருளால் தொண்டுசெய்ய விரும்புகிறேன். அதற்கு நீண்ட தவம் வேண்டும், மார்கோனி எலெக்ட்ரன் அணுக்கள் மூலம் உலகெங்கும் ஓசை யலைகளைப் பரப்ப வழி கண்டிருக்கிருன். அதுபோல் ஒரு யோகி தனது சக்தியையும் உலகிற் பரப்ப முடியும். முதலில் நான் சக்தி நிலையமாகவேண்டும். தமிழகம் பெரிய காரியங்களுக்குத் தயாராயில்லை என்பது தெள்ளத் தெரிந்தது. அச்சும் மேடையும் வசை புராணிகள் ஆதிக்கத்தில் உள்ளன. அபாரமான ஞானமும், தெய்வ கிருபையும், யோகபலமும், தியாகபலமும் கொண்டுதான் இந்த நாட்டை முன்னேற்றமுடியும். குரு கோவிந்தன், ராமதாஸ்—சிவாஜீ, துருவன் போன்ற மகான்கள் தெய்வத் திருவருளாலேதான் காரியசித்தி பெற்ருர்கள். மௌனம் தியானம் பக்தி அந்தரங்க சுத்தி, ஆத்ம சுதந்தரம் ஸர்வாத்ம ஸமத்வம் ஆகிய சாதனங்களால் யோகசித்தி பெற்றே இனி லோக சேவையை மேற்கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறேன். ஆதலால்

எனது வெளிக்கடமைகளைக் குறைக்க வேண்டும். பாரதசக்தியை முடித்துவிட்டேன். தகுதியிருந்தால் அது உலகில் உலாவும். அந்த ஆசைகூட எனக்கு இல்லை. யோகசித்தி ஒன்றே குறிப்பு. அதைத் தாங்களும் அறிவீர்கள். அதற்கு இன்னது செய்யவேண்டும் என்றும் தங்களுக்குத் தெரியும். தங்கள் வரவை எதிர் நோக்கியிருக்கும் அன்பன்.''

ஐயர் வந்தார். ''செய்யுங்கள் தவம்'' என்ருர். பர்ணசாலையிலேயே அமர்ந்து பாலபாரதியையும் கவனித்துக்கொண்டு தவத்தில் ஆழ்ந்தேன்.

223. கணபதி சாஸ்திரிகள்

குருகுலச் சண்டையில் நான் சிரத்தை காட்டவேயில்லை. அது எனக்குப் பிடிக்கவேயில்லை. சிறுபிள்ளைத்தனமாகவும் இருந்தது. எனக்குச் சாதிமதபேதம் இல்லை. எனது சொந்த மாணவர்கள் சாதி பேதமே அறியார். பிரயாணங்களின் போதெல்லாம் எல்லாரும் கலந்தே சமைத்துக் கலந்தே உண்டோம். சோற்றுப்பானை விவகாரமே என் வாழ்விற்குத் தேவையில்லை. நான் கனி கடலை உண்பவன். சமையலறையிலிருந்து விடுதலை வேண்டும் என்பவன். ஐயர் திருவண்ணுமலை மகாநாட்டிற்குச் சென்று சோக முகத்துடன் திரும்பினுர். நாம் தணிந்தாலும் பலனில்லை. குருகுலத்தை வீழ்த்தவே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிருர்கள், என்று அழமாட்டாத துக்கத்துடன் சொன்னுர். ''தமிழகமே உன் தலைவிதி இதுதான்'' என்று பெருமூச்செறிந்தேன். காந்தி மத்யஸ்தமும் பலிக்கவில்லை. சாந்தி னிகேதனிலோ, சபர்மதியிலோ காங்கிரியிலோ இப்படித் தகராறில்லை. அவை செல்வச் செழிப்புடன் உலகப் புகழ் பெறுகின்றன. தமிழன் கண்ட குருகுலம் ஏன் இப்படித் திணறுகிறது என்று கலங்கினேன். நாங்கள் வற்புறுத்தியதன்மேல் ஐயர் சமாதானம் ஒன்று பாலபாரதியில் எழுதினுர். ஆசிரமத்தில் எல்லாரும் பார்த்துண்கிருர்கள். கல்வியிலும் சாதிமத பேதமில்லை என்பதை விளக்கினுர். கும்பலிங்கம் பிள்ளை ஒரு திருக்குலப் பையனைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டே உண்டார். அவன் எச்சிலைக்கூட நாங்கள் சுத்தி செய்தோம். நான் காரசாரமாக எதிரிகளுக்குப் பதில் சொல்ல உத்தரவு கேட்டேன். ஐயர் சம்மதிக்கவில்லை. பாலபாரதியில் இடந்தரவில்லை. ஆதலால் நான் சமையல்கட்டையும் எல்லாருக்கும் பொதுவாக்கலாமே என்று சொன்னமட்டில் பேசாதிருந்தேன்.

ஐயர் எல்லாருக்கும் பூணூல் போட்டு துவிஜ ஸம்ஸ்காரம் செய்ய முயன்ருர். அதற்கு காவ்யகண்டம் கணபதி சாஸ்திரிகள் ஒப்புக்கொண்டார். அவரை வை. சு. ஷண்முகம் அழைத்துவந்தார். சாஸ்திரிகள் ''வேதகாலத்தில் யாதவர் சமைத்தே எல்லாரும் உண்பது''

என்று சுலோகம் சொன்னார். நான் அவருக்குப் பணிவிடை செய்து, என் வேட்டியையும் தானமாகத் தந்து துண்டு கட்டிக்கொண்டேன். அவரிடம் என் அந்தரங்கத்தைச் சொன்னேன். "நீங்கள் பேசாமல் திருவண்ணாமலை விருபாக்ஷி குகையில் தபஸ் செய்வது மேல். மஹர்ஷிகள் தங்களை அறிவார். தங்கள் வியாசங்களைப் படிக்கிறார். அவர் சந்நிதியால் யோகம் சித்தியாகும், வேதமும் படிக்கலாம், வாருங்கள்" என்று அழைத்தார். அது மஹர்ஷிகளின் அழைப்பாகவே தோன்றியது. "நானும் வருவேன், குகைவாசம் புரிவேன்" என்றேன். 'ஐயரும் "ரமண பரமஹம்ஸர் தரிசனமே சாந்தி யளித்தது. பாரதி அவசியம் பார்க்கவேண்டும்" என்றார். அப்போதுதான் என்மனம் நிம்மதியடைந்தது.

ஐயர் மனம் அலுத்து ஆசாரிய பதவியையும் மகாதேவையருக்குத் தந்துவிட்டு ஆங்கிலத்தில் கம்பன் விமர்சனத்தை நகாசு செய்வதில் முனைந்தார். நான் கம்பன் மூலம் படித்தேன். அவர் தமது மொழிபெயர்ப்பைப் படித்தார். அப்போது கவியரசனைப்பற்றி அரிய கருத்துக்களைச் சொன்னார். எல்லாம் எனக்கு அருமருந்தென உதவின. மலாய்நாட்டில் மகாதேவர் வசூலித்த இருபதினாயிரம் ரூபாவும் மறுக்கப்பட்டது. நாங்கள் ஸயன்ஸ்ஹால் கட்டி பௌதிகரசாயன ஆராய்ச்சிகள் நடத்தி எடிஸன்களையும் சூரிகளையும், மார்கோனிகளையும் மாக்ஸ்வெல்களையும் உண்டாக்கும் கனவு முறிந்தது. பாலபாரதிக்குப் பதினாயிரம் சந்தா எதிர்பார்த்தோம், எண்ணூறுகூடச் சேரவில்லை. ஐயர் தமிழை 'மணிப்ரவாளம்' என்று சிலர் கிண்டல் செய்தனர். பாலபாரதி என் பொறுப்பில் இருந்ததால் காலத்திற்கேற்ற நடையில் எனது கட்டுரைகளை எழுதிவந்தேன். இருந்தாலும் காலம் எங்கள் முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை. இடர்களைக் கடந்து இன்ப நாள் வரும் என்றே நம்பினோம். ஆனால் அதற்குள் குருகுலம் சோகநாடகமாக முடிந்தது. அதிகம் எழுதியென்ன; பக்கங்கள் வளர்கின்றன. இறுதிநாளைக்கு வாருங்கள்.

224. இறுதிநாள்

இரவு எனது தேசிய கீதங்களை ஐயர் கேட்டார். உடனே பாரதி பாடல்களைத் தமிழருக்கு நன்றாக அறிமுகப்படுத்தலாம். நாளை அ. ரங்கசாமி ஐயங்காருக்குக் கடிதம் எழுதுகிறேன் என்றார். சித்தம் என்றேன். குருகுலப் பிரமசாரிகள் அன்று காலைதான் கலியாண அருவிக்கு யாத்திரை சென்றனர். ஐயர் மகள் சுபத்ரா "அப்பா நானும் போவேன்" என்று பெண்ணுரிமை பேசினாள். ஐயர் இணங்கநேர்ந்தது. நான் பாலபாரதி அச்சுத் தாட்களைத் திருத்திக் கொண்டிருந்தேன். ஐயர் வந்தார். உடனே பாரதசக்தியில் புதிதாகப் பாடிச் சேர்த்த குருகோவிந்தசிங்கப் படலத்தையும் உரிமைப் போர்ப் படலத்தையும் படித்தேன். பின்னதில் ஐயர் வர

லாறும் சேர்ந்தது. குருவின் வீரத்தைக் கவியாகக் கேட்டு "பூவியல் வாழ்வை," "பிறப்பினுல்," "ஏங்குகின்ற காலம் ஏகி" ஆகிய மூன்று கவிகளைப் பாராட்டி அவரும் படித்தார். பிறகு இந்திய சுதந்தரப் போரைப் பாடும் படலத்தில், ஐயர் புகழை வர்ணித்தேன்:

வீரமே வடிவம் ஆனுன் வீரமே சேயலும் ஆனுன்
வீரமும் கலையும் வாழ்வில் விளக்கிடத் தமிழ்க்குலத்தை
வீரர்கள் ஆக்கவேண்டிக் குருகுலம் விரும்பிநட்டான்
பாரத வீரருக்குப் பரிதியே போன்றுன் மன்னே.

என்றதைக் கேட்டதும் நாணப் புன்னகையுடன் "சரியாய்ப் போச்சு" என்ருர். பிறகு "ஓடிக்குமேல் வடமேருவை வேரோடும் ஓடிக்கும்" என்ற கம்பன் வாக்கைப் பாடி, அத்தகைய வீரரைப் படைக்கவேண்டும். வீரராலேதான் தங்களைப்போன்ற கவியோகிகள் வாக்கும் சோபிக்கும். இன்று காந்தியாலேதான் பல கவிகள் வாக்கு விளங்குகிறது. நாம் வீரத் தொண்டரைப் படைத்து தாஸசிர் ஹர் என்போம். பாரத இதிஹாஸத்தை பாரதி விறுவிறுப்பாகப் பாடவேண்டும். குருகோவிந்தன் நடையில் இருக்கவேண்டும். செய்யுளுக்கே கலை மதிப்பு அதிகம். அதை பாலபாரதியில் வெளியிட்டு அச்சிட்டு ஊர் ஊராக திண்ணை திண்ணையாகப் படித்தால் தமிழகம் வீரபலம் பெறும்....அழகான படங்கள் வரையவேண்டும். பாலபாரதியில் பத்துப் படங்களாவது வரவேண்டும். சரி படியுங்கள் என்ருர். நான் பாரதசக்தியைத் தொடர்ந்து படித்தேன். ஐயர் பத்துமணி வரையில் கேட்டு, "இனிக் காலையில் பார்த்துக்கொள்வோம்" என்ருர். குருவின் மரணம் படித்தபோது, "எனது ஜாதகத்திலும் மாரகதசை வந்திருக்கிறது விதியின் விளையாட்டு எப்படியோ" என்று தமது அருமை வாளைத் தடவினுர். அதைத் தலையணைக்கிழ் வைத்துக்கொண்டு ஓம் சக்தி என்று படுத்தார். நான் தியானத்திற்குச் சென்றேன்.

காலையில் கீதை மூன்றும் அத்யாயம் சொல்லிக்கொண்டே குளித்து, எனது பர்ணசாலையில் ஜபம் செய்தார். இருவரும் பத்து நிமிஷம் தியானித்தோம். சுபத்ரா ஓடிவந்து "அப்பா மூட்டை தயார். இன்று நானே சாதம் போடுவேன்!" என்று மான்போலத் துள்ளினுள். ஐயர் அவளுடன் மாடிக்குச் சென்ருர்.

தபால்கள் வந்தன. குறிப்புத்தந்து "பாரதி பதில் எழுதட்டும்" என்ருர். நான் அவரது அனர்கலி புரூபைத் திருத்தி, அச்சனுமதி வாங்கினேன். அக்கதையே தமது கதைகளுக்கு அரசி என்பது ஐயர் எண்ணம். அதைத் தொடர்ந்து "ஹாம்லெட் ஒதெல்லோ போன்ற நாடகங்கள் பாரதி எழுதவேண்டும். ஓமர் தாந்தே மில்தன் போன்ற மகா காவியங்கள் தமிழில் தோன்றவேண்டும்" என்ருர்.

மணி பதினொன்று. நான் கீதைகாட்டும் பாதை எழுதிக்கொண்டிருந்தேன், "சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண" என்ற பகுதியை உரக்கப் படித்தேன். ஐயர் வந்தார். "ஆம் மனம் சஞ்சலமாகத்தான் இருக்கிறது. தைரியவானையும் காலம் சோதிக்கிறது. இரவும் பகலும் ஜனசேவை செய்யும் தீரருக்கே கஷ்ட நஷ்டங்கள் வருகின்றன. மனம் உடைகிறது. வைராக்கிய சாதனத்தால் மனதை வெல்லலாம். நமக்கு தேசோத்தாரண ஸாதனம் வேண்டும். ஆம் சோதனைகளை வென்றுதான் நமது தார்மிக வாழ்வை நிலைநாட்டவேண்டும்'. என்று பேசிக்கொண்டே ஐயர் என்னைச் சாப்பாட்டிற்கு அழைத்துச் சென்றார். அன்று கிருஷ்ணமூர்த்தி சமைத்திருந்தார். சுபத்ரா பரிமாறினாள். "பாரதி புஷ்டியாகச் சாப்பிடவேண்டும், உட்காரும்" என்று பக்கத்தில் அமர்த்தினார். அவருக்காகவே அன்று சோறுண்டேன். சுபத்ரா பரிமாறும் அழகை ஐயர் கண்டு மகிழ்ந்து "கம்பன் அழகை எப்படி சிருஷ்டிக்கிறான். உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்...நன்னோர் இல்லா மங்கையர் செங்கை தளிர்மானே ஆகிய கம்பன் வாக்கைப் பதம் பதமாகச் சொல்லி சுபத்ராவைப் பார்த்து மகிழ்ந்தார். நான் "கல்லும் புல்லும் கண்டுருகப் பெண் கனி நின்றாள்" என்றேன். சுபத்திரை சற்றே நின்றாள். ஐயர் புன்னகைத்தார். வாழ்வில் வள்ளுவர், வாக்கில் கம்பன் பேசவேண்டும்" என்றார். நான் உலகமே கம்பன் பாணியில் பேசவேண்டும் என்றேன். "அதற்குத் தங்கள் ஆங்கிலம் வெளிவர வேண்டும்" என்றேன். "வேண்டும்; இந்தப் புயல் இல்லாவிட்டால் சீதை ஆராய்ச்சியும் முடித்து நூலை வெளியிடலாம்." என்றார் ஐயர்.

எழுந்தோம்...கை கழுவினோம். ஆசமன்யம் செய்தோம். மாடிக்குச் சென்றோம். ஐயர் தம் ஆங்கிலத்தை உணர்ச்சியுடன் படித்தார். நான் கம்பன் மூலத்தைப் படித்துக்கொண்டு வந்தேன். இந்திரசித்தன் பிரம்மாஸ்திரம்பட்டு லக்ஷ்மணன் வீழ்ந்தான். ராமன் புலம்புகிறான். "எந்தை இறந்தான் என்று மிருந்தேன்" முதல் "மாண்டாய் நீயோ யான் ஒருபோதும் உயிர் வாழேன்" என்பதுவரையில் மொழிபெயர்ப்புப் படித்தார். எனக்கு பகீர் என்றது. இன்று இந்தக் கட்டம் வருவானேன்...என்று திடுக்கிட்டேன்.

மீண்டும் மூன்றரை மணிக்கு ஐயரை பாலபாரதி அலுவலாகச் சந்தித்தேன். ஐயர் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார். அது ஐயர் காலமான பிறகு 13—5—1925ல் சுதேசமித்திரனில் வெளிவந்தது.

அன்புள்ள ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்களுக்கு அநேக நமஸ்காரம். உபய க்ஷேமோபரி.

இப்பால் எனது நண்பரும் பாலபாரதி உபபத்திராதிபருமான ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் மிக அருமையான தேசிய கீதங்கள் எழுதியிருக்கிறார். அவைகளை அப்போதைக்கப்போது மித்திரன் மூலமாக

உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என நான் வேண்டிக்கொள்ள அதற்கிசைந்துள்ளார். இரண்டு கீர்த்தனைகள் இதனோடு தங்கள் பார்வைக்கு வருகின்றன. இவற்றைப் பிரசுரிக்க தயைசெய்ய வேணும்: இன்னும் அப்போதைக்கப்போது அனுப்புவதை அங்கீகரிப்பீர்கள் என நம்புகிறேன்.

இங்ஙனம் அன்பன்.
வ. வே. சுப்ரஹ்மண்ய ஐயர்.

இக்கடிதம் அப்பெரியார் எனக்களித்த இறுதி ஆசீர்வாதம். சில நிமிஷங்கள் என்கலைக் கனவுகளைச் சொன்னேன். "பாரதசக்தி மகா காவியம்; அற்புதமான சிருஷ்டி. அதை இன்னும் நகாசுசெய்து வெளியிடவேண்டும். கிரந்த சாஹெபுபோல் விறுவிறுப்பான பக்திரஸ கீர்த்தனங்கள். புதியகருத்துள்ள தேசிய கீதங்கள், பாரத இதிஹாஸப் பாடல்கள், கவிதை நாடகங்கள், கதைக்காவியங்கள் எல்லாம் பாரதி இயற்றித் தமிழை உலக இலக்கியங்களின் முன்னணியில் வைக்கவேண்டும். யோகம் கலை இரண்டிற்கே வாழ்வை வேள்வியாக்கும் தங்கள் நோக்கமே உயர்ந்தது'' என்றார். பிறகு பாரதசக்தி சுத்த விஜயத்தைப் படித்தேன். "மகாகாவியம். சுத்தானந்த விஜயமாயிருக்கட்டும்" என்று ஆசிர்வதித்தார். மணி ஐந்து. நான் புத்தகசாலையில் படித்தேன். "போய் வருகிறோம்" என்ற சத்தம் கேட்டது. ஐயர் சுபத்ராவுடன் கல்யாண அருவிக்குப் புறப்பட்டார்.

சிங்கம்போன்ற முகம்: நெற்றி நிரம்ப விபூதி; அழகாகச் சீவிக் கழுத்தில் படிந்த கேசம்; நீண்டுவளர்ந்த தாடி—இரவும் பகலும்போல் கறுப்பும் வெள்ளையும் காட்டுகிறது. வீரக்கனல் விழிகள். அரும்புன்னகை மலர்ந்த உதடுகள். நீர்க்காவி ஏறிய கதர் பஞ்சகச்சம்: மேலே பூப்போட்ட கதர் அங்கவஸ்திரம்; இறுகிப்புடைத்த தோளில், பை; அந்தியழகெல்லாம் ஐயர்மேல் வீசுகிறது. மஞ்சள் வெயிலில் அவர் வீரவடிவம் சோபிக்கிறது; அந்திமல்லிகைக் கொடிபோல் சுபத்ரா தவழ்கிறாள். நமஸ்காரம் என்றேன். அந்தோ அதுதான் கடைசி நமஸ்காரமானது!

225. அருவியின் அழைப்பு

மறுநாட்காலை; பாலபாரதி அரசியல் குறிப்புகள் எழுதிக் கொண்டிருந்தேன். அனந்தகிருஷ்ணையர் ஓடிவந்தார். "ஐயர் வருகிறாரா?" என்றேன். அனந்தர் "வாருங்கள்" என்று மாடிக்கு என்னை அழைத்துச்சென்றார். நான் ஐயர் க்ஷேமந்தானே என்று ஆவலாக வினவினேன். அவர் விம்மி விம்மி அழுதார். "சுபத்ரா கால்தவறி அருவியில் விழுந்தாள். அவளை எடுக்க ஐயரும் குதித்தார். இதுகாறும் உடல் கிடைக்கவில்லை'' என்றார். என்தலை சுழன்றது; குருகுலம் சுழன்றது; தமிழகம் சுழன்றது. உலகமே சுழன்றது, நேற்று

என்னுடன் அருமையாகப் பேசிய ஐயர், இன்று அருவியுடன் போனார். அந்த வாள் உள்ளது; கம்பன் உள்ளது, வள்ளுவர் உள்ளது, குருகுலம் உள்ளது, பாலபாரதி உள்ளது. நான் உள்ளேன்...ஐயர் போய்விட்டார். என்ன சோக நாடகம்! மறுபடியும் கொடியசாவு என்னை எச்சரித்தது. மறுபடியும் "அப்பனே உலக வாழ்க்கையைப்பார். உன் கடமையைச் செய்துக் கணக்கைமுடி. சும்மா காலம்போக்கினால், மறுபடியும் பிறவிநாடகம்வரும். தப்பிப்பிழை...எழுந்திரு? என்றது... சாவு.

கல்யாண அருவியைநோக்கி ஓடினேன். அப்போதுதான் ஐயர் உடலை எடுத்துப்போட்டிருக்கிறார்கள். பார்க்கச் சகிக்கவில்லை. தாடி மீசையெல்லாம் மறைந்தன. மீன்கள் முகத்தைக்கொத்தி விகாரப் படுத்தின. அழகான சுபத்திரை பிணமாகக் கிடக்கிறாள். இதைவிட வைராக்கியந்தர வேறு எந்த வேதாந்த நூல் வேண்டும்? மனைவி வந்துவிட்டாள். பாக்யலக்ஷ்மி அம்மாளுக்கு சாவின்மர்மத்தையும் ஜீவயாத்திரையின் போக்கையும் சொன்னேன். கிருஷ்ணமூர்த்திக்கு ஆறுதல் கூறித்திரும்பினேன். சவச் சடங்குகளெல்லாம் நடந்தன. கல்லிடை ராமலிங்கையர் தோட்டத்தில் அம்மாள் இருந்து கிரியைகள் முடிந்ததும் குருகுலத்திற்கு வந்தாள். நான் எழுதிய அருவியின் அழைப்பு பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்தாள். மறுநாள் திருச்சிக்குச் சென்றாள். பத்துரூபா தந்தனுப்பி, சமாதானம் சொன்னேன்.

மளமளவென்று பாலபாரதியில் ஐயர் மரணத்தைப்பற்றி ஒருகட்டுரை எழுதி பத்திரிகையை வெளியே அனுப்பினேன். பிறகு கல்யாண அருவிக்குத் தனியே சென்றேன். அமிர்த மதனம்போல் சலசலத்த அருவி வாட்கணை மின்னல்போல் கலகலத்தது. கோபாவேசக் கணைகள்போல் அம்புராசி துமி தெறித்துத் தாவியது. அதன்மேல் நிலக்குன்றுபோல் நின்ற ஐயர் எங்கே? மாணவருக்கு இயற்கையழகைக் காட்டிமகிழ்ந்த கலைச்சிற்பி எங்கே? அமேஜான் நதிக்கரையில் குடியேறியபின் கரிபால்டி குருகோவிந்தன் நெப்போலியன் யூலியகேசரிபோன்ற ஜயவீரரைப் படைக்கும் வீர விளக்கு எங்கே? மாணவர் ஆற்றைத்தாண்டி அக்கரை சென்றார்கள். வீரமகளும் சென்றாள், கால்தவறினாள். 'அப்பா' என்றாள். "சுபத்ரா" என்று ஐயரும் குதித்தார். ஒருநொடியில் வாழ்க்கை மறைந்தது. உடலைவிட்டு உயிர்கிளி பறந்தோடியது. எங்கே? என்ன ஆனது? இப்போ எந்தப் பிறப்புடன் எங்கே வாழ்கிறதோ...அதன் பேரூர் வடிவெதுவோ? யார் அறிவார்? நானும் ஜான்ஸி ராணிபோலிருப்பேன் என்றுபேசிய அந்தக்கிளி எங்கே? தாயைத் தவிக்கவிட்டுப் பறந்தோடியது. பத்திரிகைகள் அலறுகின்றன. ஐயர் கட்டிய ஸ்தாபனத்திற்குக் கடப்பாறைவைத்த எதிரிகள்கூட "அடடா போய் விட்டாரே" என்கின்றனர். ஐயர் வாழ்க்கை கின்லியர்போல்

சோகக்காடானது. ஐயரின் புரட்சியை, புதுச்சேரி லிலைகளை, சரித்திரம் புகழ்கிறது. பாரதநாட்டு சுதந்தரப்போரில் ஐயருக்கும் இடமுண்டு. வருங்காலத்தார் எழுதும் இந்திய சரித்திரத்தில் ஐயருக்கும் சிலவரிகள் உண்டு...என்றாலும் ஐயரை நமக்கு உருவாகக் காட்டுவது அவர் எழுத்தோவியங்களே : அவர் மொழிப்பெயர்த்த திருவள்ளுவர், கம்பன் ஆராய்ச்சி, சிறுகதைகள் முதலியன. தமிழ் மறுமலர்ச்சிக்கு பாரதி அன்னையும் ஐயர் அப்பனுமாக விளங்கினார்கள். ஐயருக்காக நான் கலியாண அருவியில் கவிக்கண்ணீர் வடித்தேன்.

சிங்கம்போல் வீறுடையான் சேய்போல வஞ்சமிலான்
தங்க மணிக்குரலான் சாவிற்தும் அஞ்சாதான் ;
முனிபோல் முகமுடையான் முத்து நகையுடையான்
கனிபோல் மொழியிடையான் கண்ணிலினிக் காண்பானோ!
எங்கொளித்துக் கொண்டுசென்றாய் என்னுயிராம் தோழனை நீ
சிங்கப் படைபோலச் சீறுகின்ற கல்யாணீ!
தாய்நாடு வாழத் தமிழாகுலச் சீரோங்க
ஓயாது பாடுபட்ட உத்தமனை உண்டனையோ?
கண்ணீர்முத் தாரம் கனமாகச் சூட்டியவன்
உண்மைவீ ரக்கனலை உள்ளியுள்ளிப் போற்றுகிறேன்!

226. ஐயருக்குப்பின்

இனி? கண்ணீர் விட்டென்னபயன்? உலகம் போர்க்களம். தலைவன் போரில் மறைந்தான். மற்றவர் அழுதுகொண்டிருப்பதா? நான் பாலபாரதியின் முழுப்பொறுப்பையும் ஏற்றேன். அச்சுக்கூடமும் என்பெயருக்கே மாறியது. அதற்காக மாஜிஸ்ட்ரேட் சாகெபிடம் டிக்ளரேஷன் செய்துகொண்டேன். அவர் கேள்விகளுக்கெல்லாம் பதிற்சொன்னேன். "ஐயர் மறைந்தார். குருகுலம் உள்ளது. பாலபாரதி இதோ என்கையில் உள்ளது. முடிந்தமட்டும் அதை வளர்க்க முன்வந்திருக்கிறேன். தமிழர் கைகொடுக்க வேண்டும்" என்று அறிக்கைவிட்டேன். பத்திரிகையைப் பன்மடங்கு சிறப்பாக நடத்த முயன்றேன். ஐந்தாறு மாதங்கள் மிகநன்றாக நடந்தது. இரவும் பகலும் அதேவேலை. கட்டுரைமுதல் கணக்குவரையில் முழுவேலையும் எனதே. சிலசமயம் அச்சுவேலைகூட வந்துசுமக்கும். எனக்கு உணவுகூடச் சரியாகக் கிடையாது. இரவும் பகலும் வேலைசெய்த உடம்பும் மெலிந்தது. எப்படியாவது ஐயர் தந்த காரியத்தை நிறைவேற்றவே முயன்றேன். ஆனால் குருகுலம் நான் நினைத்தபடி நடக்கவில்லை. ஐயருக்குப் பிறகு அந்தக் கலையும் கனலுமுள்ள ஆசாரியாரைக் காண முடியவில்லை. ஐயர் இறந்த விசனம் என்மனதில் கனத்துக் கொண்டிருந்தது. திடீரென்று சித்தரஞ்ஜனதாஸர் இறந்தார். மறுவாரமே

சுப்பிரமணியசிவா பாப்பாரப்பட்டியில் இறந்தார். தியாகத் தீயில் வெந்த ஐயரும், சுதந்தரவேள்வியில் புடம்வைத்த சிவாவும், இந்திர போகம் புசித்து காந்தியால் புனிதமாகி, தேசபந்துவாக இறந்த சித்த ரஞ்சனும் ஒரே ஈமத்தீயில் வெந்து சாம்பலாயினர். என் உடலையும் பார்த்தேன். இதுவும் சாம்பலாகுமுன் வந்தவினை தீர்க்கவேண்டி எழுந்தேன். அன்றுமுதல் மளமளவென்று எனக்குரிய சங்கற்பங் களை நிறைவேற்றினேன்.

குருகுலம் மூர்த்தியில்லாக் கோயில்போல விரிச்சிட்டது. நாயக் கரும் நாயுடுகாரும் வந்தனர். மகாதேவர் கல்லிடைக்குப் போய் விட்டார். நானே அவர்களை வரவேற்றேன். இருவரும் என்து சமர ஸக் கொள்கையைப் போற்றினார்கள். நாயக்கருக்கு என்மேல் இன் றும் பிரியமுண்டு. நாயக்கர் எளியவாழ்வுடையவர். நாயுடுகாரு கன வான் மோஸ்தரில் இருப்பார். இருவரும் என்னைப் பத்திரிகை நடத் துங்கள்...குடியரசு வரப்போகிறது. அதில் எழுதங்கள். தமிழ்நாட் டில் கட்டுரை எழுதுங்கள் என்றனர். நான் பாலபாரதியுடன் பேசு வேலையை நிறுத்திக்கொண்டேன். சுதேசமித்திரனிலும் லோகோப காரியிலும் பாட்டும் அனுபவக் குறிப்புகளும் எழுதி வந்தேன். முதன் மையாக ஐயரைத் தமிழர் நன்குக அறிந்துகொள்ளும்படி கட்டுரை கள் எழுதினேன். சபைகூட்டிப் பேசினேன். சேரமாதேவியில் முதல் கூட்டம் நடந்தது. மூன்றுமணிநேரம் ஐயரும் நமது சுதந்தரப் போரும் என்பதுபற்றிப் பேசினேன். திருநெல்வேலி வீரராகவபுரத் தில் பெரியகூட்டம் நடந்தது; "ஐயர் எங்கே?" என்பதுபற்றிப் பேசினேன். தூத்துக்குடி சஞ்சீவி அழைத்தார். நண்பர் சேலம் ஆதிநாராயணஞ் செட்டியாரும் அங்கே வந்தார். அங்கே ஒரு வாசக சாலைத் திருநாளில் தலைமை தாங்கிப் பேசினேன். பிறகு வட்டக் கோட்டை மைதானத்தில் 1906 முதல் 1925 வரையில் நமது சுதந்தர வேள்விபற்றிப் பேசினேன். திரும்பும்போது ஒட்டைப்பிடாரம் பாஞ் சாலங்குறிச்சி ஆகிய தியாக பலிபீடங்களைப் பார்த்தேன். ஆதிநாரா யணர் தமது ஐரிஷ் அனுபவங்களையும் குடும்பச் சள்ளைகளையும் சொன் னார். எவர் வாழ்விலும் அமைதியில்லை. வெளியே பார்த்தால் விச னக்காடு; உள்ளே பார்த்தாலே உண்மையின்பம் என்றேன். செட்டி யார் என்னை அடிக்கடி சந்தித்து அளவளாவினார்.

227. மேடையில்

மதுரை செளராஷ்ட்ரா கலாசாலை ஆண்டு விழாவில் பேச நண்பர் ஸ்ரீ சுப்பராமன் அழைத்தார். வண்டி நிலையத்திற்கு நண்பர் வந்தனர். முன்னே கோட்டும் பாகையும் வைத்த சுத்தானந்தர், இப் போது ஒரு துண்டுமட்டும் கட்டிக்கொண்டு வந்ததைக் கண்டனர். கதர்மாலை போட்டு ஏற்றனர். ஸ்ரீ சுப்பராமனது விசாலமான பங்க ளாவில் தங்கினேன். அங்கே எதிர்பாராமல் வை. சு. சண்முகம்

வந்திருந்தார். குருகுலம் குருக்ஷேத்திர மாய்விட்டது என்பதைச் சொன்னேன். செட்டி நாட்டுக்கே வாருங்கள் என்ருர். நாலைந்து தேசியக் கலாசாலைகளில் அழைத்தனர். மதுரையிலேயே எனக்கு ஏராளமான நண்பர் ஆதரவு இருந்தது. மதுரை வக்கில் வைத்திய நாதர் எனது அரிய நண்பர். அங்கே வந்த ஸ்ரீநிவாச ஐயங்கார். "சொன்னேனே; பேசாமல் காங்கரஸ் மேடைக்கு வாரும்" என்று அழைத்தார். "கடவுள் காட்டும் வழியே நடந்து வருகிறேன்" என்றேன். சும்மா எதற்கெடுத்தாலும் கடவுள் கடவுள் என்பது எனது அரசியல் தோழருக்குப் பிடிக்கவில்லை. உலக நிலையும் தேசநிலையும் ஆராய்ந்துவந்தேன். அன்று மாலை ஏழுமணிக்கு சுப்பராமர் துளசிராம் எல்லாரும் சௌராஷ்ட்ரா கலாசாலை மேடையில் என்னை வரவேற்றனர். மலரும் மணியும் மின்னொளியும் பட்டும் சரிகையும் தகதகாயமாயிருந்த அந்தச் சபையில் நான் "நாமும் நாடும்" என்பது பற்றி மூன்றுமணி நேரம் பேசினேன். கனம் பி. டி. ராஜன் எனது சொற்பொழிவை ரசித்துக் கேட்டார், பிரசங்கம் பலேஜோர் என்று புரட்சிவீரர் கிருஷ்ணகுந்து கோஷ்டி மெச்சினுல் பிறகு கேட்பானேன். இரவில் பாதுகா பட்டாபிஷேக நாடகம் நடந்தது. மறுநாள் பெரிய சமாராதனை. அனைத்திலும் நானும் கலந்துகொண்டேன். சௌராஷ்டிரரைப்பற்றி சமரஸ போதினியில் இரண்டுபக்கம் திட்டிவிட்டேன்.

மறுநாள் ஸ்ரீநிவாச வரதனும் சுந்தரமும் என்னை பாரத சமாஜத்தில் பேசும்படி வேண்டினர். நான் வீரவிருந்து என்ற பொருள்பற்றிப் பேசி, தமிழ்நாட்டின் மூன்று சுப்ரமணியர் வளர்த்த நாட்டன்புக் கனலையும் இளைஞர் உள்ளத்தில் பற்ற வைத்தேன். சுப்பிரமணிய சிவா பேச்சு வீரர், பாரதி பாட்டு வீரர், ஐயர் கலாவீரர். இந்த மும்மணிகளும் தமிழன்னையின் திரிசூலங்கள் என்றதை சமாஜத்தார் மெச்சினர்.

இன்னொரு தடவை மதுரை தேசியப் பள்ளி ஆண்டு விழாவில் பேசவந்தேன். தமிழ்ச்சங்கத்தில் திரு நாராயணர் ராகவையங்கார் முதலிய புலவர்களுடன் அளவளாவினேன். அவர்கள் "தங்கள் கவிதை புதுமைக்கும் பழமைக்கும் பொருத்தமாயிருக்கிறது" என்றனர். "எனது ஆத்ம நிலைக்குப் பொருத்தமாயிருப்பதே போதும்" என்றேன். ஒரு புலவர் "ஐயா தாங்கள் மதுரையிலேயே இருங்கள்; நக்கீரர் காலத்தை மீட்போம்" என்ருர். "ஐயா போனகாலம் வராது. கலிகாலம் திரும்பாமல், காந்தி காலத்தை நிலைநாட்டுவோம்" என்றேன், ஆண்டுவிழாத் தலைவர் எஸ் ஸ்ரீநிவாசர். நான் அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஸர் அண்ணாமலை செட்டியார் மகன் முத்தையா செட்டியார் வந்தார். இருவருக்கும் கதர்பற்றி விவாதம்

நடந்தது. பிறகு மதுரைக் கல்லூரித் தலைவர் சூரியநாராயணையரைக் கண்டு அளவளாவினேன். அங்கே ஹரீந்திரநாதரும் வந்திருந்தார்.

சூரிய நாரணர் வ. வே. சு. ஐயர் அருவியில் மறைந்ததை வேதாந்தப்படுத்தி, பஜகோவிந்த சுலோகங்களை விளக்கப் புகுந்தார், "நாமரூப பேதங்களான பஞ்சபூத விகாரங்கள் நிலையற்ற மேகச் சித்திரம் போன்றவை. அந்த உருக்களில் ஒரு ஆசாவாயு நடமாடுகிறது. அதையே வாழ்க்கை என்கிறோம். மனிதன் உள்ளபோதே இந்த ஆசாவாயுவைத் தாண்டி நிராசையடைந்து, நிர்விகல்பனாகி பிரம்ம லட்சியத்தை அடையவேண்டும். மறுபடியும் இந்த ஜன்மமே வராமல் எவன் ஜனனமரண ரஹிதமான பிரம்மத்தை அடைகிறானோ அவனே பாக்யசாலி. அந்த பாக்யத்தை அடைந்த சங்கராதி புண்ய புருஷர்களையே நாம் பின்பற்றி உய்வோம்" என்றார். பேச்சு ஆங்கிலத்தில். அவர் இப்படிப் பேசும்போதே "இந்த ஆசாவாயுவையே ஆனந்த அருவியாக்கப் பார்க்கிறேன்" என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது. ஹரீந்திரநாத சட்டோபாத்யாயரும் அவர் மனைவி கமலாதேவியும் வந்தார்கள். நமஸ்தே என்றேன். இருவரும் மதுரை விக்டோரியா ஹாலில் ஒரு கச்சேரிக்காக வந்து, சாஸ்திரியார் வீட்டில் தங்கியிருந்தனர். நல்ல சந்திப்பு. ஹரின் நாடகம் ஒன்றைச் சென்னையில் பார்த்தேன். இப்போது அவர் பேச்சும் குரலுமே நாடகக்கலை விளக்கமாயிருந்தன. கமலா அவர் கையைப் பிடித்துக்கொண்டே வந்தாள். ஹரின் "இவளே என் ஆசாவாயு. நானே ஆனந்தக் கனவு. என் கனவை இவள் கிறுகிறு என்று சுழற்றிவிடுகிறாள்" என்றார். ரசமான சம்பாஷணை! கவிச்சுவை ததும்ப நடந்தது. அதில் நானும் கலந்துகொண்டேன். "ஆசையருவியால் சுழலும் உங்கள் மின்சாரக் கனவுகளில் நான் ஆனந்த நீராடுகிறேன். அந்த மின்சாரத்தில் தெறித்தோடும் கவி மலர்களை மனம் குளிரக் காண்கிறேன்" என்றேன். சாஸ்திரியார் என்னைக் கவி என்று அறிமுகப்படுத்தி 'இன்னும் நடக்கட்டும்" என்றார். ஹரின் "கவி மலர்களில் தேனுண்ணும் வண்டுபோல் வாழ்ந்தால், அதுதான் பேரின்பம்" என்றார். "நான் வண்டு சிலசமயம் தாமரைக்குள் சிக்கிக்கொள்ளும். மலர் வாடினால் தேன் இல்லை. நான் புது மலர்களுடன் மந்தமாருதம்போல் கொஞ்சி விளையாடிச் செல்ல விரும்புகிறேன். மலர் மணத்தை அள்ளி உலகிற்கு வீசிப் பரப்பி எதிலும் பற்றில்லாமல் சுழன்றோட விரும்புகிறேன். மலரின் மணத்தைக் காற்று அடித்துச் செல்வதுபோலவே, இந்த உடலிலிருந்து உயிரைக் காலம் அடித்துச் செல்கிறது. பிறகு உடல் வாடி உதிர்ந்து மண்ணாகிறது. உடலுள்ளபோதே ஜீவசாரமான ஆத்ம சைதன்யத் தேனை உண்ணவேண்டும்."

இந்தமாதிரி எங்கள் பேச்சு அறிவும் கலையும் ததும்ப நடந்தது. ஹரின் பழுத்த கவி. அவர் கவிகள் சிந்தனைக் கனவில் மின்னுரு

வாகப் பளிச்சிட்டு வருகின்றன. அவர் கவிகளைப் படித்து மகிழ்ந்தேன். தமிழ் இலக்கியநயங்களை அவருடன் பேசினேன். நான் விடைபெறும்போது சாஸ்திரியார் இலக்கிய உலகைக் கலக்கியது போதும் லக்ஷ்ய ஞானத்தை அடையும் என்றார். தத் த்வம் அஸி, என்று வந்தேன்.

தேசியப் பள்ளிக்கூடத் திருநாளில் ஏராளமான கூட்டம். நமது கல்விமுறை எப்படி யிருக்கவேண்டும் என்பதுபற்றிப் பேசினேன். சுகாதார நடைமுறைகளுடன் கல்வி மூன்று வயதிலேயே தொடங்க வேண்டும். ஒரு தொழில்மூலம் வாழ்க்கை பண்படவேண்டும். எண்ணெழுத்துடன் ஒரு கலையும் வளரவேண்டும். ஆதர்ச வாழ்க்கை பள்ளிக்கூடத்திலேயே மலரவேண்டும். ஆசிரியர் தேசச்சிற்பி. அவரைச் சமுதாயம் ஆதரிக்கவேண்டும். அவர் இனி வரும் தேச வீரரை உருவாக்கவே வாழ்வை அர்ப்பணிக்கவேண்டும். நமது கல்வி முறையில் பிரமசரிய யோகமும் காலத்திற்கேற்ற கலையும் ஒன்று சேரவேண்டும். அதற்கு குருகுலங்கள் நாடெங்கும் நல்லமுறையில் நடக்கவேண்டும். ஐயர் குருகுலம் நமக்கு வழிகாட்டுகிறது. அதைத் தமிழர் போற்றி வளர்க்கவேண்டும் என்றேன்.

கூட்டம் முடிந்ததும் ஸ்ரீநிவாச வரதனும் அவர் மனைவி பத்மாசனியும் பாரத சமாஜத்திற்கு அழைத்தார்கள். சென்றேன் சிவாவைப் பற்றிப் பேசினேன்.

மற்றொருமுறை மதுரையில் பேசச் சென்றேன். வைத்திநாதர் வீட்டில் தங்கினேன். அவர் எளிய வாழ்வு வாழ்ந்துகொண்டு ஏராளமான வரும்படியை தேசத்திற்கே அர்ப்பணம் செய்தார். சிறந்த காந்தி பக்தர், அறிவாளி, தியாகி. சட்ட மந்திரியாக வர மிகவும் தகுந்தவர். ஜார்ஜ் ஜோஸபைக் கண்டேன். அவர் வீட்டிலேதான் முதன்முதல் நான் காந்திஜியைப் பார்த்தேன். "தங்கள் வீட்டில் காந்தி இருப்பதாகவே உணர்கிறேன்" என்றேன். "காந்தியும் இருக்கிறார் கட்சிக்காரரும் இருக்கிறார்கள். சர்க்காவும் உள்ளது. வயிறும் உள்ளது. தேசம் உள்ளது குடும்பமும் உள்ளது" என்றார். அவர் சுவையுள்ள பேச்சாளர். நாட்டு நிலைமையைப்பற்றி நீண்டநேரம் பேசினோம்.

மகாத்மா சபர்மதியில் அடங்கியிருந்தார். பார்தோலி சத்யாக்கிரகத்திற்குப் படேல் துடித்துக்கொண்டிருந்தார். தாஸ் இறந்த பிறகு, அவரது சுயராஜ்யக் கட்சிக்குச் சுக்ரதசைதான்! தென்னாட்டில் சத்தியமூர்த்தியும் சீனிவாசரும் அரசியலை ஆண்டனர். ராஜாஜி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் கதர்ப்பணி செய்தார். சட்டசபைப் பிரசாரமே கும்மாளமடித்தது. காந்தியம் அடங்கிப் போனது. இரட்டையாட்சி ஜஸ்டிஸ்காரர் கையில் அம்மனை ஆடியது. கோபுரம் தாங்கி பொம்மைகள் சட்டசபையில் கொலுவிருந்தனர். நாட்டைத்

தீவிரப்படுத்தி நடத்த கரம்சந்திரன் உதிக்கவேண்டும். அதை சந்தர்ப்பவாதிகளின் சுயநல மேகம் மறைத்து, சபர்மதியில் தள்ளிவிட்டது.

மதுரை அந்திப் பொட்டலில் பெரிய கூட்டம் நடந்தது. காலப்போக்கும் காந்தியின் உள்ளமும் என்பது பற்றிப் பேசினேன். "தேசரக்ஷகர் காந்தியடிகளே. அவரை பிரிடிஷ்காரன் எரவாடாச் சிறையில் வைக்கிறான். சுதேசத்தின் வக்கிர புத்தி அவரைச் சபர்மதியில் அடைத்து வைத்திருக்கிறது. நாம் ஆத்மசுத்தியும் அந்தக்கரண விசுவாசமும் காட்டி தியாகக்கனல் மூட்டி, காந்திஜியை சுதந்தர வேள்விக்கு மீண்டும் அழைத்து சத்தியாக்கிரக துந்துமி முழங்க வேண்டும்." என்று பேசினேன். "வரிகொடா இயக்கங்கூட உடனே வேண்டும்" என்றேன். ஒற்றர் குறிப்பெடுத்துக் கொண்டனர். நான் ரயிலேறும்போது "இங்கே இடமிருக்கிறது வாங்க" என்றான் ஒருவன். சென்றேன். நல்ல இடமே. அமர்ந்தேன். ஆள் இனிமையாகப் பேசினான். "புரட்சி வேண்டும் சாமி. சர்கா எந்த மூலே; வெடிகுண்டு பண்ணி நாலு மூலையிலும் வீசினால் வெள்ளையன் ஓடிப்போவான். ஐயர் வேலைதான் சரியான வேலை" என்றான். நல்ல வேளையாக நான் பதில் பேசாமல் எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன். "என்ன சொல்லுங்க குண்டு தயாரிப்போமா" என்று கேள்வி போட்டான். நான் ஆளை உற்றுப் பார்த்தேன். "அண்ணா, குண்டு தயாரிக்க வேண்டாம். காந்திக்கு உண்மையாயிரும் போதும். இன்று பீரங்கி காட்டி மிரட்டும் வெள்ளையர்கூட நாளையே நம்முடன் கைகுலுக்கி இத்தாருங்கள் சுதந்தரம் என்று தரப்போகிறார்கள்: காந்தி சக்தியால் அதுவும் நடக்கும். அண்ணா நான் சொல்வதை உண்மையாக எழுதிமேலே அனுப்புங்கள்" என்றேன். சட்டென்று பேர்வழி என்னை அறிந்து கொண்டான். பிறகு "தங்களைப்பற்றி நல்ல அறிக்கைதான் போயிருக்கிறது. விதயாசமாக நினைக்கவேண்டாம்" என்றான்.

இதுதான் நாட்டு நிலை; இதுதான் எனது நிலை.

228. கோப நாடகம்

மதுரையிலிருந்து ஆசிரமத்திற்கு வந்தேன். ரகளை, ரகளை! மகாதேவையருக்கும் கல்விடைக் கட்சிக்கும் தொந்த யுத்தம் நடக்கிறது. நீ யாரடா நாய், வப்! போடா வெளியே ஜொள்! உன்னை ஒழிக்கிறேன். பார் டும்! நீயார் மகன்டா கேட்பது உர்ர். பார் உன் சமர்த்தை குப்குப் பெரிய கிருஷ்ணமூர்த்தி, ஐயர் காலத்தில் தாசானுதாசனாயிருந்தவன், கோபப்புலியாய் விட்டான். திடீரென்று அச்சுக்கூடத்தில் பாய்ந்தான். அச்சுப்பெட்டிகளை எடுத்து வீசினான். மகா தேவயர் போலிஸ் பேர்வழி அவர் கிருஷ்ணமூர்த்தியைத் தள்ளி விரட்டியடித்தார். "சீ சீ ராஜபானையம் நாயே" என்று கோபாக்னி ஆத்திரமாகச் சென்று மறைந்திருந்தது.

மாணவர்கள் "ஐயா எப்படி இங்கே இருப்போம்" என்று பயந்தார்கள். பாதிக்குமேல் மூட்டை கட்டி விட்டனர். ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார் அன்பு மிக்க நண்பர்; அடிக்கடி என்னுடன் அளவளாவுவார். அவர் மகன் சுந்தரம் எனது மாணவன்; அறிவும் ஒழுக்கமும் நிரம்பிய சீலன். ரெட்டியாரும் காந்தி உபாசகர். அவர் கூட மனங்கசந்து பையனை அழைத்துச் சென்றார். மகாதேவையர் மாசற்ற தேசபக்தர், காந்தி பக்தர், கணக்கில் கச்சிதம், கண்டிப்பான பேர்வழி, தைரியப்புலி. போலீஸ் மோஸ்தரில் வேலை வாங்குவார். சண்டை வந்தாலும் சட்டப்படி போடுவார். ஆனால் மனிதர் இயல்பு அவர் அரியணையில் தேளும் ஜலமண்டலியுமாகப் புகுந்தன. நாராயண ஐயர் அன்புள்ள உழைப்பாளி. மாணவருக்குத் தாய் போல் உதவினார். அவர் குளிக்கும்போது "1857-ம் ஆண்டிலே நானா சாகெபு" என்று தொடங்கி "1925 லே காந்திமகான்" என்று சங்கல்பம் ஓதுவார். அதில் "ஐயருக்கப்புறம் அட்டகாசம் வலுத்து குருகுலம் அரோகரா!" என்று சேர்க்கச் சொல்லுவர் சிலர். வரதராஜுலுசேனை வரவில்லை. சோற்றுப்பானை கிளர்ச்சிகூட அடங்கியது. ஆனால் கல்விடைக்குறிச் சிப்படையெடுப்பும், ஆசிரம ஜிந்தாபாதும் அத்துமீறி அக்னிலீலையும் நடத்தின. "நீ யாரடா கேட்பது உர்" நான் தலைவனடா குர்! நான் தலைமை ஆசானடா டுப்" இப்படிப் பேச்சுத் தடித்து கைகலந்து புரட்டித்தள்ளி மாமரத்தடி மண்ணில் அங்கப்ரதட்சிணம் நடந்தது. இவர் தாடியில் நாலுமயிர் உருவினால், அவர் குடுமியில் நாற்பது மயிர் பிய்த்து லஞ்சம் தீர்ப்பார். இவர் "போடா நாயே" என்றால், அவர் "வாடா வெளியே" என்பார். கெல்தாப்போட்டி ஐயன் கால்வாய் வரையில் போகும். யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை. மனிதன் இயற்கை பண்படவில்லை. அர்ச்சகர் சண்டை பெருமாளுக்கே ஆபத்தானது.

நான் எதிலும் பட்டுக்கொள்ளவில்லை. இன்னது இப்படியாகும் என்பதை அறிந்தேன். கீதை பாராயணம் பாலபாரதி வேலை-இரண்டே குறிப்பாயிருந்தேன். பாலபாரதி வளம் பெற்றது. அறிஞர் மெச்சி எழுதினர். நன்கொடைகளும் வந்தன. குருகுலத்தையும் பால பாரதியையும் பொறுப்பாக நடத்த நினைத்தேன். ஆனால் நடக்க வேண்டுமே. மனச்சாட்சி "இது நடக்காது போ முன்னே" என்றது. நாளை என்ன நடக்குமோ என்ற திகில் எல்லார் நெஞ்சிலும் புகுந்தது. அனந்தகிருஷ்ணன் இரவு ஒரு மணிக்கு வேலிதாண்டி வந்து அங்குமிங்கும் சுற்றக்கண்டேன். கிருஷ்ணமூர்த்தி என்னிடம் "தங்களை ஆசாரியராக்கி குருகுலம் நடத்தலாம்" என்றான். "அப்பா அந்தப் பட்டம் எனக்கு வேண்டாம். குருபீடம் சிஷ்யக்கூட்டம் என்று விளையாட எனக்கு நேரமில்லை. நான் இங்கிருப்பது ஐயர் விருப்பத்தை நிறைவேற்றவே. நில கடுமையானால் வெளியிருந்தே அதை நிறைவேற்று வேன். பரம்பொருளே குரு என்பது என் கொள்கை" என்றேன்.

கிருஷ்ணமூர்த்தி "சரி பரம்பொருளும் நீருமாயிரும்; நாங்கள் செய்வதில் குறுக்கிட்டால் ஆபத்து" என்று சொல்லிச் சென்றான்.

தியானத்தில் என்னமோ பயங்கரக்காட்சிகள் வந்தன. குருகுலம் பைரவகுலமாய்விட்டது. இனி உருப்படாது. இதில் நமது காலத்தை வீணாக்குவதில் பயனில்லை என்று கண்டேன். பாலபாரதியைக்கூட விட்டு விலகவே தீர்மானித்தேன். அதுவும் நடக்காது. அதற்கு வேண்டிய பொருளாதாரமில்லை. அச்சகத்தை எதிரிகள் வட்டமிட்டனர்.

ஒருநாள் நள்ளிரவில் ஆசிரமத்தைச் சுற்றிவந்தேன். அச்சகத்தில் விளக்கெரிந்தது. சென்றேன். கிருஷ்ணமூர்த்தி உள்ளே புகுந்து அச்சுக்கோத்துக்கொண்டிருந்தான். "என்ன செய்கிறீர்? எப்படி உள்ளே வந்தீர்?" என்று கேட்டேன். கேட்டபோதே வெளியே வேலியோரத்தில் குரல்கேட்டது. சமயோசிதமாக நயந்து நடந்தேன். "நண்பா என்னவேலை நடக்கிறது?" என்றேன். கிருஷ்ணமூர்த்தி மளமள வென்று செஸ்ஸில் அச்சுக்களைப் பூட்டி டிரெடிலில் மாட்டி "பத்து நிமிஷம் இரும், சொல்லுகிறேன்" என்றான். வெளியே பேச்சுக்குரல் குசகுசவென்று கேட்டது. நான் அடக்கமாக ஜபம்செய்துகொண்டே அங்கே காத்திருந்தேன். கிருஷ்ணமூர்த்தி மளமளவென்று ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு, "பாரும்" என்று என்னிடம் ஒரு தாள் கொடுத்து "பாரதியாரே தேசகைங்கரியம். உமது கனல்பாட்டுக்கள் சில அச்சிட்டேன். "வெள்ளைக்காரா கொள்ளைக்காரா வெளியேபோ போடா" என்ற பாட்டை நாடெங்கும் பரப்புவேன்" என்று தாவிச் சென்றார். அவருடன் இரண்டு பேர்வழிகளும் சென்றனர். அச்சிட்டப் பாடல்களைப்பார்த்தேன். "ஆங்கிலப் பேய்களெல்லாம் இங்கே அடிக்கிற கொட்டத்தைப்பார்" என்ற பாட்டிருந்தது. இரத்தப் பலி என்ற தலைப்பில் நானுசாகெபு புரட்சியைத் தூண்டிய பேச்சைப் பாடியிருந்தேன். அதுவும் அச்சிட்டிருந்தது. இதை எதிரே காத்திருக்கும் அதிகாரி கண்டால், அச்சுக்கூடம் பறிமுதலாகும். நானும் செடிஷன் ஆக்டில் மாட்டிக்கொண்டு, பாளையங்கோட்டைச் சிறைகாக்க நேரிடும். மகாதேவையரும் மற்றோரும் இதுகாறும் உறங்கினர். ஐயரிடம் இதைப் பற்றிச் சொன்னேன். சொல்லியென்ன? அவர் கையில் சிக்கியிருந்தால் ஒருகை பார்த்திருப்பார். குருகுலத்தில் மறுநாளே சிவப்புத் தலைப்பாகைகள் புகுந்திருக்கும்.

இப்படிச்சில சம்பவங்களால் மனச்சாட்சி "உலகைப்பார்...உன்னைப்பார்...வீண்வேலையில் மூச்சைப்போக்காதே" என்றது.

229. முன்னே நடத்து!

ஏங்கே செல்வது? "நான் நடத்துகிறேன் புறப்படு" என்றது அந்தராத்மா. நான் மூன்று நாட்கள் உபவாசமிருக்க நேரிட்டது.

நான் குருகுலத்திற்குக் கொடுத்திருந்த தொகையை ஐயர் திருநெல்வேலி பாங்கில் போட்டிருந்தார். அதைவாங்கித்தர எத்தனை அலைச்சல், தொல்லை. முடிவில் அது சமயத்தில் கிடைக்கவில்லை. பணவிஷயத்தில் மனிதர் எப்படி நடக்கிறார்கள் என்பதையும் அறிந்தேன். நமக்கு வேண்டிய தொகையை எப்போதும் கைவசம் வைத்துக்கொண்டாலே உலகில் மானமாகப் பிழைக்கமுடியும் என்பதைக் கண்டேன். இடையே சில ஆண்டுகள் பணத்தைத் தொடுவதில்லை என்றிருந்தேன். என்பெயர் வைத்துப் பணம் சம்பாதித்துச் சாப்பிட்டு, என்னையே திட்டும் கூட்டத்தைக் கண்டேன். பணத்தை ஆளவேண்டும். அதை நாமே சன்மார்க்கப் பணிகளுக்குச் செலவிட வேண்டும். பிறர் கையில் தந்து அவர்களைக் கெஞ்சிக்கொண்டிருக்கக் கூடாது என்பதை உணர்ந்தேன்.

மனம் புண்பட்டது. இறைவனே வழிநடத்து என்று சரண்புகுந்தேன். அன்று பத்திரிகையில் தஞ்சை சமரசபோதினிக்கு ஆசிரியர் வேண்டும் என்ற விளம்பரம் கண்டேன். எழுதினேன். உடனே பதில் வந்துவிட்டது. சமரஸபோதினி காரியாலயத்திலிருந்து அவதானி வந்தார். அவர் ஆங்கிலப் புலவர். தங்கள் விருப்பப்படியே பத்திரிகை நடத்தலாம். வேங்கடராமையர் எதிர்பார்க்கிறார் என்றார். நான் நாள் குறித்துத் தந்துவிட்டு, பாலபாரதிக்கும் சமரஸபோதினிக்கும் எழுதிக்கொண்டிருந்தேன். என் எண்ணங்களைச் சுதந்தரமாக வெளியிடப் பத்திரிகை கிடைத்தது. காந்தீயத்திற்கு எழுதுகோலை அர்ப்பணித்தேன்.

இருபத்தைந்து நாட்கள் தீவிரமான தியானம்செய்து, சக்தியை வளர்த்துக்கொண்டு மகாதேவரிடமும் விடைபெற்றுப் புறப்பட்டேன். ஆசிரம வேலியைத் தாண்டும்போது ஒரு தேள் கொட்டியது. மந்திரித்துக்கொண்டு புறப்பட்டேன். கண்ணீர் வந்தது. ஐயர் ஆவிதான் தடைசெய்கிறதென்று நினைத்தேன். கலியாண அருவிக்குச் சென்றேன்.

ஓம்சுத்த சக்தி ஜபம் செய்தேன். ஐயர் ஆவி மறுபிறவி எடுத்துவிட்டதை அறிந்தேன்.

ரயிலேறி மதுரைக்குவந்து நண்பரைக் கண்டேன். என் வாழ்க்கையில் திரும்பு முனைகளிலெல்லாம் மீனாட்சி சந்நிதி வருவது வழக்கம். நான் அம்பிகை சந்நிதியில் தியானம் செய்து...

பொன்னும் புகழும் புலமையும் போர்வானில்
மின்னும் கொடிபோல் விரைந்தோடும்—அன்னையே
உன்னருளைப் போர்த்த உடலின் வினைதீர
முன்னடத்தி வெற்றி முழக்கு.

என்றுபாடி ரயிலேறினேன். ஆத்மசோதனை பதினாலாம் படலம் தஞ்சாவூரில். வாருங்கள்.

௧௪. தஞ்சாவூர் அனுபவம்

230. வரவேணும்

ஆசிரியர் ஜம் என்று சட்டையும் குல்லாயுமாக, இரண்டாம் வகுப்பிலிருந்து இறங்குவார் என்று நண்பர் எதிர்பார்த்தனர். நான் செட்டிநாட்டு நண்பரைப் பார்த்துக்கொண்டு, ஒரே ஆடையுடன் மோடாரில் வந்து இறங்கினேன். ஸ்ரீசிவாசநல்லூர் செல்வர் வேங்கடராமையர் 'நமஸ்காரம் வரவேணும்' என்று ஏற்றார். ஸமரஸபோதினியின் தோரண வாயலிற் புகுந்தேன். ஒரு மேஜைமேல் வெள்ளித்தட்டில் தாம்பூலம் கனி கற்கண்டு வைத்திருந்தனர். நான் "வந்தேமாதரம்" என்று நாற்காலியில் அமர்ந்தேன். ஐயர் எல்லாருக்கும் சந்தனம் வழங்கினார். நான் கனிகளை வழங்கினேன். உபசார வார்த்தைகள் வழக்கப்படி நடந்தன. நான் இரண்டு நிமிஷம் பேசினேன்: "நாம் எல்லாரும் சரிசமானம்; நமது பத்திரிகை ஸமரஸபோதினி. நாம் நமது நாட்டு விடுதலைக்கு மகாத்மாகாந்தியின் அறநெறியில் உழைக்கும் தொண்டர். நமது உள்ளம் அன்பினால், உயிர் சக்தியால், கைகால்கள் பொதுநலத்தால், மனம் கருணையால், வாக்கு உண்மையால் நிறைக! என் பேனாவும் உங்கள் கையுழைப்பும் சேர்ந்து, பத்திரிகை வெற்றி பெறுக! எந்தாய் வாழ்க!"

பத்திரிகை சிப்பந்திகளைப் பார்த்தேன். வேங்கடராமையரை முன்பே தெரியும்—பட்டுக்கரை வேட்டியும், ட்வில் ஷர்டும், சரிகை உருமாலும், ஹல்வா சரீரமும், குஞ்சர நடையும், அவரை சுகவாச கனவான் என்று காட்டும். அவர் மாமனார் சப்ஜட்ஜா யிருந்தவர். ஐயர் மாமனார் வீட்டிலேதான் இருக்கிறார். எப்போதும் மாப்பிள்ளைக் கோலத்துடனேதான் இருப்பார். பெரிய மோஸ்தரிலேதான் பேசுவார். தமிழ் என்றால் கம்பன், பத்திரிகை என்றால் மாடேன் ரிவ்யூ, தாவா என்றால் வக்கில் கிருஷ்ணமூர்த்தி ஐயர், எதிரி என்றால் சாட்சிக் கூண்டுதான். அவரால் நான் உலகை நன்கு அறிந்தேன். அவர் எனக்கு ஓர் அனுபவ அகராதியா யிருந்தார். என்னிடம் மரியாதையா யிருந்தார். ஆபீஸ் ரேழியில் மறைவுகட்டி, எனக்கு நிம்மதியான ஜாகை தந்தார். என்னை யாரும் பார்க்க வந்தால், சமயம் அறிந்து என் உத்தரவு கேட்டு, குறித்தநேரத்தில் அனுமதித்தார்.

துணையாசிரியருள் ஸ்ரீ தி. ஐ. ரங்கநாதன் அடக்கமான உழைப்பாளி. நீரோட்டம்போல் தமிழ் எழுதுவார். அவர் சிறு கதைகள் இனியன. செய்திக் குறிப்புகளை ரத்தினச் சுருக்கமாக எழுதுவார். எளிய நடை நூல்களைப் படிப்பார். அவர் பேனாத்தொழிலுக்கே

வாழ்வை அர்ப்பணித்தவர்; போதினிமுதல் மஞ்சாவரையில் அவர் பேனுவினுல் உயர்ந்தவர். என்னுடன் குருகுலத்தில் இருந்த ராம நாதன் சிலமாதம் செய்திகளைத் திரட்டித் தந்தார். பிற்காலம் வந்தார் ஸ்ரீ ரா. நாராயணசாமி எம். ஏ—அரிய அன்பர், தெய்வபக்தர், ஆங்கி லம் தமிழ் இரண்டிலும் எழுத்தாளர், இவர் இன்றும் எனக்குப் பிரிய மான நண்பரா யிருக்கிருர். இவர் என்னுடன் ஒட்டுறவா யிருந்தார். விளம்பரம் ரங்காச்சாரி சென்னையை அலசி கம்பெனி விளம்பரங்களைக் கொண்டுவரும்போது என்னையும் விளம்பரப்படுத்திவந்தார். ராஜ கோபாலர் கணக்கு வழக்குகளில் ஈடுபட்டு பேரேடுகளுடன் ஒன்றுபட் டிருப்பார். குப்பு, அப்பு, கல்யாணம், ரகு, சாம்பசிவம், ராமாநுஜம் முதலிய அச்சுத் தொழிலாளர் நாங்கள் தஞ்சாவூர் என்பதை ஒவ்வொரு வேலையிலும் காட்டுவார்கள். அச்சில் பலே கைகள், நான் எழுதியெழுதி அனுப்பிக்கொண்டே யிருப்பேன், அவர்கள் அடுக்கி யடுக்கி புரூப் எடுத்து அனுப்பிக்கொண்டேயிருப்பார்கள். கல்யாணம் எனது தலையங்கங்களை ஒரு பிழைகூட இல்லாமல் கோத்துத் தருவார்.

காரியாலயம் சுத்தமாயிருக்கும். முன்புறம் ஐயர், குமாஸ்தாக் கள் அமர்ந்து கணக்குவழக்கு, பத்திரிகைத் தபால், முதலிய அலுவல் களைப் பார்த்தனர். அடுத்த கூடத்தில் அச்சுக் கோப்பாளர் அச்சடுக்கி, பாரம் கட்டி சுறுசுறுப்பாயிருந்தனர். அதற்கடுத்த ரேழிதான் என் ஜாகை. அது பத்தடிச்சவுக்கம்; இப்புறம் நாலடியில் என் கார்கானு, அப்புறம் நாலடியில் எனது சாப்பாடு நிஷ்டை எல்லாம் நடந்தன. நான் படுப்பதற்கு ஒரு கித்தான் நாற்காலிதான்; அந்தக்காலம் பாயில் படுத்ததேயில்லை. என் அறையைத் தாண்டி ஒரு முற்றம். அங்கே வெயிலில் அமர்ந்தே நான் பத்திரிகைக்கு எழுதினேன். அங்கே மாலை யில் அச்சுத் தொழிலாளரைக் கூட்டிப் பிரார்த்தனை நடத்தினேன். அதைத் தாண்டினுல் யந்திரசாலை. அங்கேதான் டிரெடில் மெஷின் இரண்டிலும் அச்சுவேலை நடந்தது. அங்கே ஒரு தொட்டியில் தண்ணீர் இருக்கும். அதுதான் அச்சுக் கழுவவும் மற்ற வேலைகளுக் கும் பயனுனது. குழாயில்லை. தண்ணீர் கஷ்டந்தான். நான் வந்த துமே நேரே எனது மேசைக்குப்போய் பேனுப் பிடித்துத் தலையங்கம் கலையங்கம், கால நிலையங்கம் எல்லாம் எழுதி எழுதித் தந்தேன். ஐயர் 'சாப்பாடு' என்ருர். "வேலை முடிந்தபிறகு கனி கடலை" என் றேன். எல்லாரும் வியந்தனர். நான் கடலைக்காயும் பூவன்பழமும் உண்பது சிலருக்குக் கேலியாயிருந்தது. வந்ததுமே எல்லார் திறமை யும் சோதித்தறிந்து, எனது வேலையை முடித்து, வெண்ணுற்றங்கரைக் குப் போனேன். ஏனெனில் தவமே எனது உயிர்ப்பணி.

231. தஞ்சையில் தவ நிலையங்கள்

தஞ்சாவூரில் எனக்குப் பிடித்த இடங்கள் இவையே; வெண் ணுற்றங்கரை மண்டபம்; சோலையும் ஆற்றிசையும் புள்ளிசையும்

நிரம்பிய தனியிடம். இயற்கை வனப்பிற்குப் பொன் பூசி, ஆற்று நீரில் தகதகவென்று தணலும் பொற்கலசம் போன்ற சூரியனைப் பார்த்துப் பரவசமாவேன். அதனருகே படக் படக் என்று குமாய் நிலையம் நெஞ்சத் துடப்பைப்போல் வேலை செய்யும். என் உள்ளத்திலும் சைதன்ய அருவி 'ஓம் ஓம்' என்று துடித்துக்கொண்டிருக்கும். அந்த ஆற்றுப்பாட்டும் காற்றுப்பாட்டும் என் இதயப் பாட்டுடன் கலந்து தமிழிசையாகப் பொங்கும். அங்கிருந்து திரும்பும் வழியில், கருந்திட்டைக்குடி தமிழ்ச்சங்கம்; அங்கே சங்கநூல்கள் பார்க்கச் செல்வதுண்டு. உமாமகேசர், வேங்கடாசலனார் முதலியோர் எனது நண்பர், தனித் தமிழ் மணிகள்; எனது தமிழ்க் கனவுகளை உமாமகேசர் கேட்டு ஊக்குவார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு இப்பால் சேதுபாவாமடம். இங்கே சிவனடியார் இருந்தனர். பெரிய புராணம் நடந்தது. இங்கே ஒரு பாதாளக்குகை உண்டு. அதில் இறங்கி நான் நிம்மதியாக தியானிப்பதுண்டு. அதைத் தாண்டினால் பூர்ணானந்தர் தோட்டம். இங்கே பூரணானந்தர் (குப்புசாமி நாயுடு) வேதாந்த விசாரணை செய்தார். அவர் இருந்த இடம் இடிந்து மடிந்துபோனது. அங்கே ஓர் அரசமரத் தடியில் நான் தவமிருந்தேன் அங்கே குளிக்கவும் சௌகரியமிருந்தது. அங்கிருந்து கடைத்தெருக்களைத் தாண்டி வரும்போதே, "இவரா சுத்தானந்தபாரதியார். ஆண்டிப்பண்டாரமா யிருக்கிறாரே." என்ற பேச்சு காதில் விழும். ஊருக்குள் எனக்குப் பிடித்த இடம் பிருஹதீசர் கோயிலில் கருரார் சந்நிதி. இங்கே குளித்து தியானம் செய்வதுண்டு. பங்காரு காமாட்சி சந்நிதியிலும் பாடுவேன், ஜபம் செய்வேன். அங்கே சாமா சாஸ்திரிகள் மரபினரான நடேசக் குருக்களுடன் பேசுவேன். நான் தியானிக்கும் மற்றோர் இடம் நீலகிரித் தோட்டம். இங்கே சுவாமி கேவல்ராம் இருந்தார். அவர் ஸ்ரீ அரவிந்தரைப்பற்றி விளக்கினார். அவரது அந்தரங்க பக்தர் சிலர் எனது நண்பர். அவருள் பாமணி ராமச்சந்திரனே என்னை வந்து கண்டு, இந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே பால் போன்ற ஊற்றுள்ளது. அருகே கூரையில்லாக் கட்டிடம்; அதன் மேடை காரை பூசி நன்றாயிருந்தது. அங்கே கீதை படித்தால் எனக்குப் பரம சாந்தம் உண்டாகும்.

வெளியூர்களில் திருப்பூந்துருத்திக்குச் செல்வேன். அங்கே அப்பர் இருந்த திருமடம் இடிந்து கிடந்தது. அதனருகே ஒரு வேதாந்தச் சாமியார் இருந்தார்; பெரிய அத்வைதப் புலவர். அவரிடம் உபநிஷத்துக்களைப் படித்து வருவேன். ஆற்றங்கரைச் சோலைகளில் தியானிப்பேன். திருவையாற்றிற்கும் நடந்து செல்வேன். தியாகப்ரம்ம சமாதி ஏகாந்தமாயிருக்கும்; அங்கே கீர்த்தனங்கள் எழுதுவேன். கல்யாணமகால் சமுஸ்கிரதக் கல்லூரிப் புலவர்களுடன் அளவாவுவேன்.

நான் தவத்தையும் பத்திரிகையையும் கவனித்தேன். ஆதலால் வெளியே சென்று நண்பருடன் அரிதாகவே அளவளாவினேன். காலை நான்குமணிக்கு எழுந்து நேராக வெண்ணாற்றங்கரைக்குச் சென்று, குளித்து ஜபதபம் சூரியநமஸ்காரம் எல்லாம் முடித்துக்கொண்டு, கீதை யோகசித்தி மனனம் செய்துகொண்டே ஏழுமணிக்கெல்லாம் காரியாலயத்திற்கு வருவேன். உடனே சுறுசுறுப்பாக பத்திரிகைகளைப் பார்ப்பேன். குறிப்பெழுதுவேன்; தபால் வரும்; உடனுடன் கடிதங்களுக்குப் பதில் எழுதுவேன். பிறகு பத்திரிகைக்குப் பேனாப் பிடித்து, அச்சிற்கு உடனுடன் அனுப்பித் தீர்ப்பேன். எழுதிக்கொண்டிருக்கும்போதே பசிக்குக் கடலையும் கனியும் உண்பேன். காலை பனிரண்டிற்குள் கட்டுரைகளைத் தந்து மதியம் அச்சுத் திருத்தம் செய்வேன். ஒவ்வொரு வரியும் பார்த்தே அச்சிடச் சொல்லுவேன். வாரம் இருமுறை ஸமரஸபோதினி வந்ததால் திங்களும் வியாழனும் வேலை அதிகம். வெள்ளிக்கிழமை மௌனம், உபவாசம், நாள்முழுதும் நிஷ்டையும் கவிதையுமாகவே யிருப்பேன். மாலை ஐந்தரை மணிக்கு மேல் நண்பர் வந்தால் பார்ப்பது. இன்றேல் முன்சொன்ன இடங்களுக்குத் தியானத்திற்காகச் செல்வேன். காலை முக்கால்மணி இந்தி பண்டித பரிட்சைக்குப் படித்தேன். அப்போது ஸ்ரீ ரகுவரதயாளு மிஸ்ரா வருவார். அவருடன் துளஸி ராமாயணம், திலஸ்மாதி முந்திரி, ஸத்யதேவர் நூல்கள், சாகுந்தலம், கபீர் முதலியன படித்துப் பயன் பெறுவேன். நேரம் கிடைத்தபோதெல்லாம் ஸரஸ்வதிமகால் புத்தகசாலைக்குச் சென்று, ஆராய்ச்சிக் குறிப்புகள் எடுப்பேன். அந்தப் புத்தகசாலை எனக்குப் பெரும் துணையாயிருந்தது. சிலநாட்கள் வித்வான் ஸ்ரீநிவாசப் பிள்ளையுடன் தமிழிலக்கிய நயங்களைப் பேசுவேன்; எனது பாடல்களைப் படிப்பேன். வேறெவரையும் பாராதிருந்தேன். நேரமும் இல்லை.

ஒரு வெள்ளிக்கிழமை; மௌனமாக பாரதசக்தி எழுதிக்கொண்டிருந்தேன். நாற்காலிக்குப்பின்னால் இருவர் வந்து நின்றனர் — ஒருவர் பூவராக ஐயங்கார்; அவர் "இவரே வ. ரா. தங்களைப் பார்க்க ஆவலாக வந்திருக்கிறார்" என்றார். "வருக வருக வ. ரா. விருந்தாளி வருக." என்று எழுதிக்கொடுத்தேன். இருவரையும் நாற்காலியில் அமர்த்தி, அவர்கள் பேச்சைக் கவனித்தேன். வ.ரா. "தங்கள் கவிதைகளை நாங்கள் மிகவும் ரசித்தோம். ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்" என்றார். "தங்கள் பேனாச்சித்திரத்தையும் நான் அடிக்கடி ரசிப்பதுண்டு. நல்ல சந்திப்பு. வெண்ணாற்றங்கரையில் விருந்து நடத்துவோம்." என்று ஒரு ரூபா தந்தேன். பூவராகர் இனிய விருந்து தயாரித்தார். வ. ரா. டாக்டர் ராவ், திஜர, மூவருடனும் ஆற்றங்கரைக்குச் சென்றேன். நிறைமதி ஆற்றை வெள்ளிமயமாக்கியது. என் அனுஷ்டானங்களையும் தியானத்தையும் நிறைவேற்றினேன், வ. ரா.

எல்லாம் பார்த்துக்கொண்டேயிருந்தார். விருந்து நடந்தது. பகாள பாத்து, புளியோதரை, வருவல் அப்பளம் எல்லாம் நான் தின்று நீண்டகாலம் ஆனதால், இலையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். வ. ரா. "நன்றாகச் சாப்பிடுங்கோ, பாரதி இப்படிப்பட்ட பதார்த்தங்களை ரசித்துத்தின்பார்' என்று பாரதியார் பேச்சில் இறங்கினார். அவர் போட்ட அதட்டில் ஒரு கொத்தவரங்காய் வற்றல் தொண்டையில் குறுக்கே மாட்டிக்கொண்டது. அதை வெளியேற்ற இரண்டு நிமிஷம் ஆனது. அதற்குள் எனது வைதிகத்திற்கும் யோகத்திற்கும் அஷ்டோத்திரம் நடந்தது. சாப்பிட்டதும் ஆசமன்யம் செய்து பிராணயாமம் செய்து, நிம்மதியாக அமர்ந்தேன். "என்ன சும்மா மூக்கைப் பிடிக்கிறீர். பேசும்" என்றார் வ.ரா. நான் சில செய்யுட்களும் ஒரு தேசியகீதமும் பாடினேன். வ.ரா. தேசியகீதத்தையே விரும்பினார். "கவிக்கு அளவுகோல் பாரதி" என்று பேச்சுத்தொடங்கினேன். வ.ரா. பாரதி பேச்செடுத்ததும் என் வேலை எளிதானது. நான் கேட்டுக்கொண்டேயிருந்தேன். பத்து மணிக்கு வீடு சேர்ந்தோம். பிறகு ஒருநாள் பூவராகையங்கார் கிராமமான திட்டைக்குடிக்குச் சென்றோம். அன்று தேசியப்பேச்சு நடந்தது. எனது காந்தியக் கொள்கைகளை வ.ரா. மெச்சினார். ஆனால் எனது தெய்வப்பைத்தியத்தை மட்டும் மன்னிக்கவில்லை. எல்லாரும் உள்ளே போய் சாப்பிட்டுப்படுத்தார்கள். நான் இளநீர் மட்டும் பருகித் திண்ணையில் பத்மாஸனம் போட்டுக் கண்ணை மூடினேன். "விநோதப்பிறவி" என்றது கேட்டது. பூவராகருக்கு எனது ஆத்மீக வாழ்க்கை பிடிக்கும். அவருடன் நாலைந்துமுறை பேசியிருக்கிறேன். இந்த கோஷ்டியில் சிலநாள் நண்பர் கோபுவும் சேருவார். அவர் பழைய நண்பர்; சிலநாள் நான் இரவு ஒன்பதுக்கு, களநார் சந்நிதியில் இருப்பேன். இவர்கள் ரயில்வே உண்டிச்சாலையில் சாப்பிட்டு வந்து, அட்டகாசச்சிரிப்புடன் செல்வார்கள். அதன் எதிரொலி கோயிலில் கேட்கும். வக்கீல் ராமநாதையருடன் இந்தி படிப்பதுண்டு; ஆத்மநாதருடன் ஆகாசக் கப்பல் ரேடியோ மின்சார ஆராய்ச்சிகள் நடத்துவதுண்டு; பாலசுப்பிரமணியருடன் மந்திரதந்திர சோதிட சாஸ்திரங்களை ஆராய்வேன், ஆப்ரகாம் பண்டிதர் தோட்டத்தில் மூலிகைகளுக்காகச் செல்வேன். அங்கே ஒரு நண்பர் பண்டிதரின் இசையாராய்ச்சிகளை விளக்கினார். மராடியப் புலவர் ஒருவரிடம் சமர்த்தகுரு ராமதாசின் தாஸ போதத்தையும் துகாராமின் அபங்கங்களையும் கேட்டறிந்தேன். மித்திரன் எ. ரங்கசாமி ஐயங்கார் தஞ்சைக்கு வந்தால் கண்டு பேசுவேன். இவ்வளவுதான் எனது வெளிவேலை. மற்றப்படி உள்ளடங்கியே இருந்தேன். என் கடமைக்கே நாள் போதாது. ஒரு மூச்சைக்கூட நான் வீணாக்க முடியாது. ஒவ்வொரு மூச்சையும் செயலாக்க வேண்டும். பத்திரிகையை இனிப் பார்ப்போம்.

232. ஸமரஸ போதினியில்

போதினி திங்கள் வியாழன் வெளிவரும் வாரம் இருமுறைப் பத்திரிகை. அது வரிக்குவரி புதுப்புதுச் செய்திகளும் கலைச்சுவையும், அடங்கியிருக்க வேண்டும் என்று நான் பாடுபட்டேன். யங் இதாலி, யங் இந்தியா, மாடேன்ரிவ்யூ போன்ற உயர்தரப் பத்திரிகைகளை லட்சியமாகக் கொண்டேன். மஜினியின் நாட்டன்பு, காந்தியின் அறக் கருணை, எமர்ஸன் நடைகொண்ட புதுயுகப்பத்திரிகையாக போதினியை நடத்தினேன். அதிலேதான் திருநூலை வரிசையாக வெளியிட்டேன். திருநூலே போதினியின் சுத்த சன்மார்க்க போதம். முகப்புச்சித்திரமே போதினி கொள்கையைக் காட்டும்; சர்வமத சமரஸத்தைக் குறிக்கவே அதில், கோயில் மசூதி, சர்ச்சு, ஸ்தூபா, ஆகிய சமய நிலையங்கள் காணும்; கலப்பை இராட்டினம் தொழில் வளர்ச்சி, வீணை கலை வளர்ச்சி, நூல்கள் கல்வி வளர்ச்சி, தராசு வியாபாரம், இவற்றைக்குறிக்கும். மணற்கடிகாரம் வாழ்க்கை ஓடிக்கொண்டேயிருக்கிறது; உள்ளபோதே வீண் பொழுது போக்காமல் வந்த காரியத்தைக் கவனி என்பதைக் குறிக்கும். படத்தின் இப்புறம் ஒரு தாடி வளர்த்த வீரமுனிவன் நாட்டு விடுதலைக்காக விரதம்பூண்டு தொண்டு செய்தலைக் குறிப்பான். வலதுபுறம் ஒரு பெண் பெண்மையின் முன்னேற்றத்தைக் குறிப்பாள்; ஆண் பெண் சேர்ந்தே உலகம். இருவரும் காந்தத்தின் இருமுனை அனையர். இருவரும் சரிநிகர்சமானராக வாழவேண்டும். அந்த வாழ்க்கையில் கல்வி தொழில் கலை, வாணிகம், வீரம் தேசசேவை, சன்மார்க்க ஒழுக்கம் ஆன்மநேய ஒருமை பொலியும். தலையங்கத்தின்மேல், கடலில் பனிரண்டுகதிர்கள் வீசி எழும் சூரியன் காணும். எல்லையற்ற உலகவாழ்வென்னும் கடலில், யோகசித்தியின் பனிரண்டு இயல்களையும் கிரணங்களாக வீசி, எழுந்து விளங்கும் அருளுதயத்தைக் குறிக்கும். அக்கிரணங்களில் சுத்தம் சுதந்தரம் ஸமத்வம் என்னும் மொழிகள் காணும். மனோவாக்கு காயசுத்தம், ஆத்ம சுதந்தரம், ஸர்வாத்ம ஸமரஸம் ஆகியவையே இருள் வாழ்வை அருள் வாழ்வாக்கி, ஜீவனிற் சிவம் துலக்கி, உலக வாழ்வை மெய்யின்ப யோகமாக்கும். சுத்தமாக வாழ்! சுதந்தரமாயிரு! 'ஸமத்வம் போற்று!' என்ற சூத்திரங்கள் முகப்பில் காணும். உலகைக்காப்பது வானம்; வானொளி சூரியன். கதிரவனின் ஒளி சுத்தம், கதிர்கள் அதன் சக்தி. சுத்த சக்தி தியானமே, சுத்த சுதந்தர சமத்துவ வாழ்வைத்தரும். அன்பு, உண்மை இன்சொல், கருணை, ஒப்புரவு, வறுமை—மடமை—அடிமையற்ற செழிப்பு, அயராத நன் முயற்சி, சாதி மதநாடு நிறபேதமில்லாத அன்மநேய ஒருமை—ஆகிய சாதனங்களைச் செய்தலே உலகில் அமைதி நிலவும் வழி. உலகே கோயில், உயிர்த்தொகுதியே கடவுள், தூய தொண்டே வழிபாடு, ஒற்றுமையே வாழ்வு,

கோயில்உல கந்தனிலே கோதற்ற தொண்டுடனே
வாய்மனமெய்த் தூய்மையுடன் வாழ்வோம் ஒருதலமாய்.

இதுதான் ஸமரஸ போதினியின் சுருதி வாக்கியம். நடந்தமட்டும் இந்தக்கொள்கைகளையே அதில் விளக்கினேன். பொருள் பொதிந்த கட்டுரைகளே போதினியை அலங்கரித்தன. முதல் பக்கம் ஆத்ம சுத்திக்கு, இரண்டாம் பக்கம் ஜீவசுத்திக்கு; திருநூல் முழுதும் முதற் பக்கத்தில் வந்தது. அத்துடன் இயற்கை வைத்திய முறைகள், யோக ரகசியங்கள், அருட்சோதி வள்ளல் அரவிந்தர் விவேகானந்தர் ராம தீர்த்தர், பரமஹம்ஸர், மஹர்ஷிகள் போன்ற மகான்களின் உபதேசங் கள், உலகப்பெரியார் வரலாறுகள்—இவை இரண்டாம் அல்லது மூன்றும் பக்கம் வரும். லெனின் ரோமா ரோலான் சுன்யாத்ஸன், காரல்மார்க்ஸ், போன்ற சிந்தனைச்சிற்பிகளும் அரசியல் வீரரும் மூன்றும் பக்கத்தை அலங்கரித்தனர். பிறகு கலைப்பகுதி: உலகப் புதுமைகள், சயன்ஸ் விநோதங்கள், சாஸ்திரங்கள், நல்ல கவிதைகள், சரித்திர ஆராய்ச்சிகள் இப்பகுதியில் வரும். அதற்கேற்ற புலவர்களைக் கொண்டு இப்பகுதியை நிரப்பினேன். உதாரணமாக பி. வி. ஜகதிசை யர் மனையடி சாஸ்திரமும், ஆத்மநாதையர் விமான நுட்பங்களும்பற்றி எழுதினர். சாரணப்பயிற்சிபற்றி ஐ. அரங்கசாமி ஐயர் எழுதினர். நானும் சாரண விளையாட்டு, ராணுவப்பயிற்சி, படையணி முதலிய வற்றைக் குறித்து எழுதினேன். இலக்குமணசர்மா இயற்கை வைத்தி யக் கட்டுரைகள் எழுதினர். தென்னிந்திய சிற்பச்செல்வத்திற்கு ஒரு பகுதியுண்டு. அடுத்த நான்கு பக்கம் காந்திமகானுக்கே அர்ப்பணம். சத்தியாக்கிரக தத்துவங்களை அவற்றில் தொடர்ந்து விளக்கினேன். மகாத்மாவின் சத்தியசோதனை தொடர்ந்து வந்தது. அதற்கடுத்து குடிசைத்தொழில் விளக்கம்—நூற்றல், நெசவு முதலியன. பிறகு இந்திப்பயிற்சி. நமது நாட்டின் பொது மொழியை எல்லாரும் தமிழில் கற்கும்படி நானும் மிஸ்ராவும் பாடங்களை வகுத்து எழுதிவந்தோம். அடுத்தது சமுதாய ஒற்றுமை, சர்வசமய சமரஸம், ஸமத்துவ வாழ்க் கைக் கட்டுரைகள்—இவை யோகசித்தியை அடிப்படையாகக் கொண் டிருக்கும். பிறகு அரசியல் சாஸ்திர விளக்கம். இப்பகுதியில் உலகப் பத்திரிகைகளில் உள்ள அரசியல் தத்துவங்களும் தேர்ந்தெடுக்கப் படும். பிறகு செய்தி விளக்கம்; உள்ளூர், தமிழகம், இந்தியா, உலகம் என்ற தலைப்புகளில் ரத்னச் சுருக்கமாக வாரச்செய்திகள் மிளிரும். தலையங்கத்தில் காலவிமர்சனம் வரும். யங்இந்தியாக் குறிப்புகள், மாடேன் ரிவ்யூக்குறிப்புகள் அடுத்தபடி வரும். கவிக்குயில் பாரதியார் லீலைகளை சாத்தூர் விசுவநாதர் தொடர்ந்து எழுதிவந்தார். அக்குறிப்பு கள் எனது கவிக்குயில் பாரதியாரில் உள்ளன. நாகபட்டணம் ராவ் பகதூர் கே. எஸ். வே. நகரச்சிர்த்தம்பற்றி எழுதி வந்தார். ராச கோபாலர் உலகநாடுகளின் வரலாறுகளை எழுதினர். பாரதசக்திப்

பாடல்கள் சில இலக்கியப்பத்திகளில் வந்தன. கிராம சேவை என்ற பகுதியில் நான் கிராம—ஸ்வராஜ்யத்தையும் எனது அரசியல் திட்டங்களையும் எழுதி வந்தேன். திருநூலில் அவை வந்துள்ளன காண்க. நகரமேடைகளில் வாய்ப்பறையடித்து, மாலைக்குக் கழுத்தை நீட்டு வதிற் பயனில்லை. தேர்தல் அமளியில் வசைமாரியும் பொன்மாரியும் பொழிந்தும் பயனில்லை. சட்ட சபை பட்டம் பதவி மோகங்களால் சுதந்தரம் வராது. கட்சிச் சண்டையை விட்டு, காந்தி சேவைசெய்யுங்கள். மடமைதீரக் கல்வி, வறுமைத்தீரக் கைத்தொழில், அடிமை தீர சத்தியாக்கிரகம் ஆகிய மூன்று தொண்டுகளைச் செய்க. உங்கள் வேலை கிராமங்களில் உள்ளது, ஏழைகளிடையே உள்ளது என்று அச்சிலும் மேடையிலும் முறையிட்டேன். பொங்கல், தீபாவளி, காந்திஜயந்தி, காங்கரஸ் திருநாட்களில் அழகான புதுமலர்கள் வரும். அவற்றில் உயர்ந்த நல்ல கட்டுரைகள் சிறப்பாக வெளிவரும். சரோஜனி நாயுடு தலைமையில் நடந்த கான்பூர் காங்கரஸ் மலர் மிகச்சிறப்பாக வந்தது. நான் அங்கே போவதாக இருந்தேன். வேலை நெருக்கடி குறுக்கே நின்றது. இரவும் பகலும் ஓயாது பேனு ஓட்டினேன். தொழிலாளர் இரவு பனிரண்டு மணி வரையில் உற்சாகமாக வேலை செய்து, இரண்டேநாளில் அழகாகப் பத்திரிகையை முடித்தனர். மறுநாள் தேசிய பஜனை வழக்கப்படி நடந்தது. சரோஜனியின் தலைமையுரையை நானே மொழி பெயர்த்துப் பெரிய எழுத்தில் தலைப்பிட்டுப் போட்டேன். மஹாத்மா கவிக்குயிலை தலைமைவகிக்கப் பிரேரேபிக்கையில் ''எனக்கு நம்பிக்கையுண்டு; இன்றே சத்தியாக்கிரகம் தொடங்குவேன். ஆனல் ஜனங்களின் உள்ளத்தில் இன்னும் சக்தியாக்கிரகக்கனல் பற்றவில்லையே. பொறுத்திருப்போம், சத்தியம் வெல்லும். அஹிம்ஸைக்குத் தோல்வியில்லை'' என்றார். அதையே நான் தலையங்கத்தில் விளக்கி ஜனங்களைக் காந்தி வழிக்கு அழைத்தேன். அமெரிக்கப்பாதிரி ஓம்ஸ் ''காந்தி உலக தீர்க்கதரிசி. போர் வெறி கொண்ட உலகிற்கு அவர் வழியே வழி. இரண்டாம் போர் மூண்டு கொண்டிருக்கிறது. அது நாகரிகத்திற்கே உலைவைக்கும். போலி நாகரிகத்தில் மயங்கும் மேனுடு அதிகாரம், ஆட்சி படை பணம் என்று இரத்த வெறியெடுத்தலைகிறது. காந்தியம் பரவினாலே உலகம் கலகமொழியும்'' என்றார். அதை விளக்கி ஒரு முழுப்பக்கம் எழுதினேன். யார் கேட்பது? காலநிலை விபரீதமாயிருந்தது.

233. அந்தக்காலம்

அந்தக்காலம் மகாத்மாஜி, சர்க்காவும் தானுமாக ஸபர்மதியில் ஒதுங்கி நின்றார். அரசியலை மோதிலால் நேரு ஆண்டார். இங்கே எஸ். ஸ்ரீநிவாசரும் ஸத்யமூர்த்தியும், ஏ. ரங்கசாமி ஐயங்காரும் சட்டசபையே கதிமோட்சம் என்று பிரசாரம் செய்து, ஸ்வராஜ்யக்கட்சியை

நாட்டினர். வல்லபாய் படேல் ராஜாஜி முதலியோர் ஆக்கவேலைகளில் ஈடுபட்டிருந்தனர். ராஜாஜி திருச்செங்கோட்டில் கதர் உற்பத்தி செய்தார். மதுவிலக்கிற்காகப் பாடுபட்டார். சட்டப்புலிகள் சட்ட சபையில் புகுந்து முட்டிமானுடனும் பிளாகெட்டுடனும் வாய்ச்சிலம்பம் வீசினர். "ஆஹா என்ன பேச்சு. என்ன ஆங்கில நடை. பத்திரிகைப் பத்திகளெல்லாம் இவர்கள் பேச்சுமயமே! இந்தியருக்கு ராணுவப்பயிற்சி தரவேண்டும்; அதற்கு ஸ்கீன் கமிட்டி ஏற்பட்டு விஷயத்தைப் பரிசீலனை செய்துகொண்டிருந்தது. இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி தரவேண்டும்: அதற்கொரு வட்டமேசை மகாநாடு லண்டனில் கூட்டவேண்டும். அதற்கொரு கமிஷன். காகிதத் தீர்மானமும் கமிஷன் கண்துடைப்பும் நடந்தன. வட்டமகாநாடும் முட்டைமகாநாடானது. சுதந்திரம்? சுதந்தரமா! 144ம் போலீஸ் தடியுமே மிச்சம். இங்கே "நாங்கள் எங்கள் நாட்டை ஆண்டுக்கொள்வோம். தாருங்கள் விடுதலை" என்ற முறையிடு. அதற்கு எதிரொலி என்ன? 'உங்களுக்குள் ஒற்றுமையில்லையே. நாங்கள் போனால் இந்து—முஸ்லிம், பிராமண—அப்ராமணச் சண்டைவந்து நாடு இரத்தக்காடாகும். சேர்ந்து வாருங்கள்; பிறகு பார்ப்போம்" என்பர் வெள்ளையர். இங்கே கட்சிகள் மல்லகசெட்டி வாணம்போல் இழுத்துக் கரிந்து விழும். கனவான்கள் விருந்தில் சில ஏழை வக்கீல்கள் தாட்டான சாப்பாடு கிடைக்கும் என்று போனார்கள். மின்சார கந்தர்வலோகத்தில் ஆடல் பாடல் அமளியாக நடந்தன. செல்வக் கனவான்களுக்குப் பசி தெரியுமா? அவர்கள் நாகரிகமாக ஒரு கோப்பையில் சாராயம் ஊற்றி "விருந்திட்டவர் நீடுவாழ்க!" என்று குடித்தார்கள். ஆனால் ஏழைகளின் பசிக்கு வகையில்லை. அவர்கள் ஏமாந்து போனதுந்தவிர நடனமாதருக்குவேறு மதிப்பாகப் பணம்போட நேர்ந்தது. இவர்கள் பெருக்கத்தின்று தமக்கும் பணிகாரம் கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்த்த மனைவிமார் ஏமாந்தார்கள். சமைக்கவும் வசதியில்லை, ஆதலால் எல்லாருக்கும் பழஞ்சோறு போட்டனர். அது பசியாற்றியது. இதேகதைதான் அந்தக்காலச் செல்வர் அரசியல். சட்டம் என்றால் பட்டம் பதவி போட்டி பொறுமை அடிதடிகள் தொடர்ந்தன. மகாத்மா "சிங்கத்தைக் குகையில் எதிருங்கள்: ஆனால் அதன் வாயில் சிக்கி உத்யோகம் வகிக்காதீர்கள்" என்று எச்சரிக்கை செய்தார். இதை கேல்கார் கட்சி மீறியது. பலவந்த தம்பே பலவந்தமாக மத்திய மாகாண மந்திரிசபையில் பதவி ஏற்றார். பிற்பாடு சென்னையிலும் முத்துரத்தனங்கள் மந்திரி நாற்காலியில் மினுக்கின. அவர்களுக்கு நாடெல்லாம் வசவு, ஊரெல்லாம் கெடும்பாவி. தமிழ் நாட்டிலோ வசைக்கும்பல் வலுத்தது. ஜஸ்டிஸ் கட்சியே அதிகாரத்தில் இருந்தது. தலைவருக்குள் போட்டாபோட்டி. திருவிக, வரதராஜலு, இராமசாமி நாயக்கர் இவர்களே தமிழகத் தலைவர். இவர்கள் தாராவமாக வார்த்தை வீசிக்கொண்டு பத்திரிகைகளை நிரப்புவார்

கள். நாயுடுவின் தமிழ்நாடே ஒருகாலம் தமிழ்நாடாயிருந்தது. அவரது கிண்கிணிக்குரல் காஞ்சிமகாநாடுவரையில் ஓங்கி ஒலித்தது. பிறகு திருவிகவின் இனியதமிழ் காந்தியத்தைப் பரப்பி வந்தது. நாயக்கரின் குடியரசும் விடுதலையும் சுயமரியாதை குண்டுகள் போட்டன. தலையிருக்கிறவனெல்லாம் தலைவன், வாயிருக்கிறவனுக்கெல்லாம் கட்சி, கட்சிக்கொரு கும்பல், கும்பலுக்கொரு பத்திரிகை மேடை கூச்சல்; வசை புராணமாக நாடு சிந்திச் சிதறி வேற்றுமைக் கந்தலானது. இவற்றிற்கிடையே எஸ். ஸ்ரீநிவாசர் சுயராஜியக் கட்சியைத் தீவிரப் படுத்தி தேர்தலில் வெற்றிகண்டார். அவர் எல்லாரையும் அணைத்துச் சென்றார். ஓய்வில்லாமல் சுற்றுப்பிரயாணம் செய்தார். பணம் பணமாக அள்ளிவிட்டார். அவரே அந்தக்காலம் காங்கரஸாய் இருந்தார். நான் அவரைச் சென்னையில் கண்டேன். "எலெக்ஷனுக்காகப் பேசுமே. சுராஜ்யக்கட்சிதான் தற்கால காங்கரஸ். சும்மா சர்கா சுற்றிக்கொண்டு நாம் இங்கே ஒத்துழையாமைக் கனவுகண்டால், அங்கே எதிரிகள் சட்டசபையைப் பற்றிக்கொண்டு நமக்கு பாளுத்தடி தயாரிக்கிறார்கள். நீர் வாரும் சத்யமூர்த்தியுடனே சுற்றுப்ரயாணம் செய்யலாம்" என்றார். நான் இரண்டொரு கூட்டங்களில் கலந்து கொண்டு, பொதுவாக மகாத்மாவின் கொள்கை பற்றியே பேசினேன். சட்டசபைக் கட்சியை நான் ஆதரிக்கவில்லை. மனச்சாட்சி காந்தியே ரக்ஷகன் என்றது. ஸமரஸ போதினியில் கடுமையாகத் தேர்தல் அமளியைத் தாக்கினேன்' கட்சி வாதத்தைக் கண்டித்தேன். தஞ்சாவூருக்கு வந்த ஏ. ரங்கசாமி ஐயங்காரும் என்னை அழைத்து ஸ்வராஜ்யக் கட்சி இங்கே தேர்தலுக்கு நிற்கிறது. அதை ஆதரித்து எழுதவேண்டும் என்றார். மற்றும் இரண்டுபேர் எச்சரிக்கை செய்தனர். நான் தேர்தல் நாடகத்தையும் அதனால் பணம் போகும் போக்கையும் பலமாகக் கண்டித்தேன். இதனால் எனக்கு வந்த ஆபத்துக்கள் பல. பத்திரிகையே நின்றே போகும்படி செய்துவிட்டார்கள். நானும் எனக்கு விருப்பமான காந்தி சேவையை கிராமங்களிற் செய்யப் புகுந்தேன். நாடு அடிமையாயிருக்கிறது. அடிமை அரசாங்கச் சட்டசபையிற் புகுந்தால் பயனில்லை. முதலில் சுதந்தரம், பிறகு சட்டசபை. இன்று இரண்டே கேள்விதான் உண்டு; உமக்கு விடுதலை வேண்டுமா அடிமை வாழ்வு வேண்டுமா? என்பதே. நாட்டுக்குச் சுதந்தரம் நாடுவோர் ஒரு கட்சி, நாட்டு விரோதிகள் ஒரு கட்சி. எந்தக் கட்சியில் மானமுள்ள இந்தியன் சேரவேண்டும்? தற்காலத்தில் ஏழைகளின் வறுமை தீர, பொது ஜனங்களின் மடமை தீர, நாட்டின் அடிமைத்துயர் தீர ஆக்கவேலை செய்து, மகாத்மாவை மறுபடியும் சத்யாக்கிரகம் ஆரம்பிக்கத் தூண்டவேண்டும். பத்திரிகைகளெல்லாம் வீண் வம்புதும்புகளை விட்டு, மகாத்மாவின் கொள்கையையே போற்றவேண்டும். இதற்காக ஸ்ரீ காஞ்சியில் பத்திராதிபர் மகாநாடு கூட்டவும் முயன்றேன்.

234. காஞ்சி மகாநாடு

வண்டியில் தாமாஷ், தாக்குதல்—இரண்டும் சேர்ந்தன. நாங்கள் தேசிய கீதம் பாடினோம். ஐயங்கார் கும்பல் குலைக்குதடா என்று சிலர் அடுத்த வண்டியிலிருந்து சத்தமிட்டனர். நாங்கள் ஒருவர்கூட ஐயங்காரில்லை. நான் "சாதி வாதத்தை விடுவோம்—நாம்—சரிசமனாக வாழ்வோம்" என்று பாடினேன். அடுத்த வண்டியிலிருந்த தண்டபாணி இங்கே வந்துவிட்டார். பொழுது புலர்ந்தது. பாரதியார் பள்ளியெழுச்சி பாடினோம். ஒருவர் "பொழுதுவிடிந்தது; அழுது வடிந்தது; பொக்குனு பலகாரந் திண்ணுவோம்; புகையிலையைக் கொஞ்சம் மெல்லுவோம்" என்று பள்ளி யெழுச்சி பாடினார். ஒரு நண்பர் பூரி லட்டு மிட்டாய் தினுசுகளைக் கூடையில் வைத்திருந்தார். ஒருவர் "எல்லாரும் ஓர் நிறை எல்லார்க்கும் ஓர் பசி; எல்லாரும் சாப்பிடவேணும்" என்று கூடையைக் காலி பண்ணினார். தனியுடைமைப் பணிகாரம் பொதுவுடைமையானது. பல் விளக்காமற் கூடச் சிலர் தின்றனர். வழிநெடுக நாயக்கர் என்ன செய்வாரோ என்ற பேச்சுத்தான். ராமநாதன், "சுயநலக் கும்பலை விரட்டியடித்து, தமிழர் உரிமையை நாட்டுவோம்" என்றார். நான் விவாதங்களில் கலக்காமல் உள்ளே கவனமாயிருந்தேன்.

காஞ்சி நிலையத்தில் ஸ்ரீ முத்துரங்க முதலியார் எங்களைக் கதர் மாலை போட்டு வரவேற்று, உபசரித்தார். அன்றுமுதல் அவர் எனக்கு அரிய நண்பரானார். நல்ல கனவான், செல்வர், ஆஸ்திகர், தேசபக்தர், தாராளமான உள்ளங் கொண்டவர். முத்துரங்கம் எனக்கு இரண்டு தடவை நல்லுதவி செய்தார். எனக்கேற்ற இடமும் உணவுந் தந்தார். மகாநாட்டு ஏற்பாடுகளெல்லாம் பக்கா—சாப்பாடு முதல்தரம். பெரிய கொட்டகை, அழகான அலங்காரம்; விசாலமான இடம்; பதினாயிரம் பேர் அங்கே கூடினர். மேடைமேல் தலைவர் அமர்ந்தனர். நான் ஸ்ரீநிவாசையங்காருக்கும், சத்தியமூர்த்திக்கும் நடுவே அமர்ந்து குயிப் பெடுத்தேன். முத்துரங்கம் வரவேற்புரை படித்தார். அப்போதே கலாட்டா கிளம்பியது. ஸ்ரீநிவாஸையங்கார் எழுந்து தலைமைப் பதவிக்குக் கலியாணசுந்தர முதலியாரைப் பிரேரேபித்தார். முதலியார் தமக்கே உரிய தனித்தமிழில், அழகான தலைமை யுரையைப் படித்தார். அதற்குள் பொறுமையிழந்து "இழவு இலக்கணம்" என்று சிலர் முணுமுணுத்தனர். இரண்டு தலைவர்கள் பொறுமையால் கனைத்துக்கொண்டனர். முதலியார் வகுப்புப் பிரதிநிதித்வத்தைக் கண்டித்தார். "தமிழர் அனைவரும் ஒரே முகமாக காந்தியின் கருணை வழியையும் சத்தியாக்கிரகத்தையும் காங்கரஸையும் ஆதரிக்க வேண்டும்" என்றார். நாயக்கர் கண் சிவந்தது: ஆர்யா உதடு துடித்தது.

இரவு விஷயாலோசனை சபை கூடியது. அப்போது நான் திரு. வி. க. வுடன் நீண்டநேரம் பேசித் தமிழக நிலையை அறிந்தேன். திரு. வி. க. இனிய நண்பர், அறிஞர், காந்தியிடம் உள்ளன்பு கொண்டவர். நான் அவருடன் பேசியபோதே ஆரணி. ரங்கசாமி ஐயங்கார், மித்திரன் ஆசிரியர், நெல்லையப்பர், எம். எஸ். சுப்பிரமணியர், வரத ராஜுலு நாயுடுகாரு முதலிய பல தலைவர்களை அறிந்து பழக முடிந்தது. தமிழ்நாடு முழுதும் என்னை அறிந்தேயிருந்தது. நான் அப்போதே தமிழ் நாட்டை அறிந்தேன். ஜஸ்டிஸ் கட்சியினர் கூட எனது சமத்துவ வாழ்வைப் போற்றினர். எல்லாருடனும் நான் நெருங்கிப் பழகினேன். விஷயாலோசனைக் கூட்டம் சந்தைக் கூட்டமாயிருந்தது. பேச்சுக்குப் பேச்சு வாள் வீச்சாகச் சலசலத்தது. ஒருவர் பேச்சுக்கு மதிப்புத் தந்து கேட்டுப் பிறகு மற்றொருவர் பேசினால் முறையாகும். சலசலவென்று எல்லாரும் இறைந்தனர். நான் "நமது கடமை கிராமங்களில் உள்ளது. காந்தியுள்ளம் கிராம சேவையில் உள்ளது. கிராமத் தொண்டுபற்றி ஒரு தீர்மானம் கொண்டுவர அனுமதிக்கவும் என்றேன். தடையில்லாமல் அனுமதித்தனர். அத்துடன் நான் வேறிடம் சென்றேன். அங்கே அடக்கமாக ஒருவர் அமர்ந்திருந்தார்—ராஜாஜி. அவரிடம் எனது கிராம சேவைகளைச் சொன்னேன். அப்படியே செய்து வாருங்கள், கிராம வாழ்வுபற்றி நிரம்ப எழுதுங்கள் என்று அமைதியாகச் சொன்னார். அவரிடம் ஆரவாரமேயில்லை. ஆனால் ஒரு சிறந்த அறிவாளி எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடந்தார். அவரது திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திலிருந்து விளக்குப்படம் வந்தது. இராட்டை நூற்றலைப்பற்றிய படங்களை ஒருவர் காட்டினார். ராஜாஜி அங்கே சென்றார். நானும் சென்று கண்டு மகிழ்ந்தேன். அப்படித்தான் பொதுஜன சேவை செய்யவேண்டும்.

மறுநாள் கூட்டத்தில் ஏககலாட்டா! கிராமசேவை கதர் தீண்டாமை போன்ற தீர்மானங்கள் எளிதில் நிறைவேறின. சமுதாய ஒற்றுமைப் பேச்சு வந்தபோது தீப்பிடித்தது. நாயக்கர் வகுப்பு வாரியை அழுத்தினார். ஆரியா தண்டபாணி முதலியோர் அவரை ஆதரித்தனர். அவரை எதிர்த்து நின்றவரைக் கூச்சலிட்டுச் சிறிப் பேச முடியாது தடுத்துவிட்டனர். முடிவில் திரு. வி. க. ஆணித்தரமாகப் பேசித் தீர்மானம் நிறைவேற்றி, வகுப்புவாதத்திற்கு மதிப்பில்லாது செய்தார். நாயக்கர் கையை ஓங்கிச் சென்றார். அன்றுமுதல் அவரது சுயமரியாதைக் கட்சி சண்டமாருதம்போலக் கிளம்பியது. இளைஞர் மகாநாடு கூடியது. தலைவரையே ஒப்போம் என்று கூச்சல் கிளம்பியது. டக் என்று தலைவர் பீடத்தில் அமர்ந்தார். ரா. க. சண்முகம் செட்டியார். அவர் பேசத் தொடங்கியதும் கலாடா நின்றது. சண்முகம் செட்டியாரின் நாவன்மையும் வசிகரப் புன்னகையும் என்னைக் கவர்ந்தன. இவர் பெரிய பதவிகளை வகிப்பார் என்று அன்றே எழுதினேன். மறுநாள் காங்கரஸ் காரியக்கமிட்டி தேர்தல் நடந்தது.

வரதராஜுலு தேர்தலை நடத்தினர். திரு.வி.க, ஐயங்கார் முதல் தமிழகத்தலைவர் அனைவரும் அங்கிருந்தனர். நாயக்கர் கண்ணும் காதுமாயிருந்து 'இதை ஒப்பேன், அதை மறுப்பேன்' என்ருர். அவருக்கும் ரங்கசாமி ஐயங்கார் அடக்கமாகவே "ஏனையா எதற்கெடுத்தாலும் ஒரு சாதியையே கரிக்கிறீர்." என்று கேட்டார். நாயக்கர் சினந்தார். தலைக்குத்தலை மோதிக்கொண்டது. இந்த லட்சணத்தில் என் பெயரையும் மாகாண கமிட்டிக்கு ஒருவர் பிரேரேபித்தார். நான் எனது நண்பர் சிதானந்தருடன் இதை படித்தேன். கூச்சலிற் கலக்கவில்லை. அரசியல் உலகை காஞ்சி மகாநாடு படம்பிடித்துக் காட்டியது. மறுநாள் நான் காஷாயம் அணிந்து காமாக்ஷி சந்நிதியில் தியானித்தேன். மனம் ஏனோ கலங்கியது. இந்த மகாநாட்டிற்கு வந்து என்ன பயன் கண்டோம்? பிறரும் என்னபயன் பெற்ருர்கள்? ஆயிரக்கணக்கான பேர் கூடி மேடைப்பேச்சையும் வீச்சையும் பார்த்தனர். இந்தப்பேச்சு நாளையே பத்திரிகையில் வந்துவிடும். மாகாநாட்டின் பயன் நாடு பிளவுபட்டதுதான். தமிழ்நாட்டில் திரு.வி.க. படத்தைக் கறுப்படித்திருந்தது. செல்லாக் காசு என்ருெரு சொட்டும் இருந்தது. இதென்ன உலகம்? இந்தக் கரடிக் கூட்டத்தில் நாம் புகுந்து என்ன செய்யப் போகிருேம்? என்று தளர்ந்தேன். பத்திரிகை மகாநாடும் கூட்டாமல், பத்து பத்திராதிபர்களுடன் அளவளாவி ரங்கசாமி ஐயங்காரின் அனுபவங்களையும் கேட்டறிந்தேன். மகாநாடுகளில் எனக்கு மனம் செல்லவில்லை. அதற்கு ஆகும் செலவை இராட்டினமாக்கினல் ஆயிரக்கணக்கானபேர் பிழைக்கலாம். என்னுள் மனச்சாட்சி பேசியது. அதையே கவியாக்கி, காமாட்சி சந்நிதியில் இசைந்தேன்:

தன்னலமும் தற்புகழும் சாதிச் செருக்குடனே
பின்னிய போர்க்களமாம் பேயுலகில்—என்கடமை
செய்து கடைத்தேறும் திண்மை நலம்பெறவே
துய்யபரா சக்தி துணை.
வந்த வினையை வழுவின்றிச் செய்தேன்றும்
சிந்தைசுத்த சக்தி செயமேனவே—வந்தித்து
நல்யோக சித்தி நயக்கத் திருவருள்செய்
எல்லார்க்கும் அன்னையமு தே.

ஜாகைக்குவந்தேன். "தாங்கள் சென்னையில் ராமகிருஷ்ண மடத்தில் பேசவேண்டும்" என்று கடிதம்வந்தது. புறப்பட்டேன். வழியில் மாசிலாமணி முதலியார் அனைவரையும் வாலாசபாத்துக்கு அழைத்துச்சென்று தமது இந்துமத பாடசாலையைக் காட்டினர். அவர் தமயனர் பஞ்சாட்சர முதலியார் என்னை அன்பாக உபசரித்தார். வரதராஜு தலைமைவகித்துப் பள்ளிக்கூட ஆண்டு விழாவை நடத்தினர். மாணவர் பேச்சு பாட்டு, வீரப்பயிற்சி, குஸ்தி,

யோகாசனம் எல்லாம் பார்த்து மகிழ்ந்தோம். மாசிலாமணி மாடத்தில் நான் நாயுடுகாருடன் நீண்டநேரம் பேசினேன். மறுநாட்காலை வண்டியேறி சென்னைக்குவந்து, ராமகிருஷ்ணமடத்தில் சுவாமி ருத்ரானந்தரைக்கண்டேன். அவர் என்னை உபசரித்தார். தலைவர் சுவாமி சிவானந்தருடன் உபநிஷத்தைப்பற்றிப் பேசினேன். காஞ்சியில் அரசியல் கூச்சலைக்கேட்டு அலுத்த எனக்கு சாதுக்களின் இனிய பேச்சும் பாட்டும் உறவும் ஆத்மசாந்தியளித்தன. மாலை இராம கிருஷ்ண காலாசாலையில் பூரியும் பாலும் உட்கொண்டேன். ஏழரை மணிக்கு பிரார்த்தனைக் கூட்டத்தில் புலித்தோல் விரித்து என்னை அமர்த்தினர். நான் பாரதசக்தியில் உள்ள ராமகிருஷ்ண விவேகானந்தப்படலங்களைக்கொண்டு மூன்றுமணிநேரம் பிரசங்கம் செய்தேன். மறுநாள் மாலை மாணவர் கூட்டத்தில் எனது தேசியகீதங்களைப் பாடினேன். மாணவரும் கூடப்பாடினார்கள். ராமகிருஷ்ணர் உபதேசங்களை மறுநாள் படித்து தியானித்தேன். "மொட்டுமலர்ந்தால் தேனீக்கள் தம்மால் வரும். அகம்பாவத்தால் எதையும் செய்யாதே... நீ விரும்பிச் சூரியோதயம் ஆகுமா ?" என்றது மனச்சாட்சி. மறுநாள் எனது ஆந்திர நண்பர் பானுமூர்த்தி விருந்துவைத்தார். அவர் சென்னை ஆயுர்வேதமாணவர். அவருடன் இருந்த எல்லாமாணவரும் எனது நண்பரே. அவர்களுக்கு வைத்திய விஷயமாகப் பல குறிப்புகளைச் சொன்னேன். இந்திய மருத்துவக்கல்லூரிக்குச்சென்று சுற்றிப் பார்த்தேன். தலைவர் கிருஷ்ணராவ் அன்புடன் சுற்றிக்காட்டினார். சித்த யூனானி வைத்திய வகுப்புகளையும் கண்டேன். முடிவில் உடல் கூறு பயிலும் அறையில் நான்கு பிணங்கள் நீட்டியிருப்பதும் மாணவர் முள்ளால் குத்தி உடலியல் கற்பதும் கண்டேன். சித்த வைத்யம் கண்ணுச்சாமிபிள்ளை மூலிகை விளக்கம் செய்தார். பிணங்களை நீண்டநாள் வைத்திருக்கும் உபாயத்தையும் சொன்னார். "இந்த உடலை நீண்டநாள் பாதுகாத்தென்ன ? எகிப்து பிணக்கோபுரங்களில் செத்துக்கிடக்கும் மன்னரை யார் கருதுகிறார்கள் ? உள்ளமட்டும் உன் கடமையைச்செய்து செல்" என்றது மனம். காலையில் கடற்கரைக்குச் சென்றேன். சூரியோதயத்தைக்கண்டேன்...மனக்கடலில் ஞானக்கதிர் பரவக் கடவுளை வேண்டினேன். மறுநாள் தஞ்சாவூர் சென்று காரியத்தைப்பார்த்தேன். மனம்மட்டும் இங்கே ஒட்டிக்கொண்டிராதே முன்செல் என்றது.

235. வேதாரண்யம் மகாநாடு

வேதரத்னம்பிள்ளை அழைத்தார். வேதாரண்யம் மகாநாட்டிற்குச் சென்றேன். ஸ்ரீநிவாசர் தலைவர். நான் கதர் கண்காட்சியும் நூற்றல் போட்டியும் ஆரம்பித்துவைத்தேன் ! "ஆயுத பலமில்லாத நாட்டிற்கு மகாத்மா சத்யாக்கிரகவழியைக் காட்டினார். அவராலேதான் நாடு செயல்பெற்றெழுந்து நிற்கிறது. காந்தி நமது மானங்காத்தார்.

நமக்கு உணவு ஆடை இரண்டும் வேண்டும். கலப்பையும் ராட்டையும் சுதந்தர வாழ்வின் சாதனங்கள். மக்கள் புரட்சி வயிற்றின் புரட்சி. பசி தீர்ந்தால் பாதிக் கவலையிராது. தன்னுழைப்பாலேதான் அவரவர் பிழைக்கவேண்டும். அப்படி உழைப்பையும் பிழைப்பையும் தந்து மானங்காப்பது கைத்தொழில்; கைத்தொழிலுக்கு அரசு நூற்று நெய்தல். போட்டியில்லாமல், அதிக முதல் இல்லாமல், எல்லாரும் எளிதாகச் செய்து பிழைக்கத்தக்க இத்தொழில் காமதேனுபோல் ஏழைகளுக்கு உதவும். தேசத் தொண்டர்கள் கிராமங்களில் கல்வியும் கைத்தொழிலும் சுகாதாரமும் தேசபக்தியும் சன்மார்க்கமும் பரப்ப வேண்டும். கிராமமே தேசத்தின் ஆணிவேர். கதரே கிராமசேவையின் உயிர்; மஹாத்மாவே நமது சுதந்தரத்தின் உள்ளத்துடிப்பு. காந்தி கதர் கிராமசேவை இம்மூன்றையும் போற்றினால், நாம் சுதந்தரம் பெறலாம்...'' என்று பேசினேன். தியாகராஜ ஞானியார் என்னை ஆமோதித்தார். ஸ்ரீநிவாசையங்கார் வழக்கம்போல் ஸ்வராஜ்யக்கட்சியையும் சட்டசபைப் பிரவேசத்தையும் போற்றிப் பேசினார். ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவரை ஆமோதித்துப்பேசினார். இந்த இருவரே மகாநாடாயிருந்தனர். வேறெவர் சத்தமும் ஏறவில்லை. வேதரத்னம் சுப்பையா வேங்கடகிருஷ்ணபிள்ளை ஆகிய மூவரும் எனது தேவைகளை அன்புடன் உதவினர். தேவை? நிம்மதியான இடம் பால் பழம் இவையே. எனக்கு ஸ்ரீ ரமணசாஸ்திரிகள் நண்பரானார். இருவரும் திருமந்திர ஆராய்ச்சியில் புகுந்தோம். நாங்கள் பூரண சக்திபற்றிப் பேசுகையில், ஸ்ரீநிவாசையங்கார். "என்ன, பாரதியார் வேதாந்தம் அள்ளிவிடுகிறாரே?'' என்று வந்தார். "திருமந்திரம் ஆராய்ந்தோம்; தாங்கள் வந்துவிட்டதால் ராஜதந்திரம் ஆராய்வோம்'' என்று பேச்சைத் திருப்பித் தற்கால அரசியலிற் புகுந்தோம். ரமணர் பன்மொழிப்புலவர்; மதுரை நல்லசாமிபிள்ளையுடன் சைவசித்தாந்தப் பிரசாரம் செய்தவர். சோதிடப்புலி. அவர் ஸ்வராஜ்யக்கட்சிக்கும் காந்திக்கும் சோதிடம்பார்த்தார். ஐயங்கார் "இதெல்லாம் கட்டி வைத்து, காரியத்தில் இறங்கவேண்டும். மனோதைரியத்துடன் முன்னே சென்றாலே நாடு உருப்படும்'' என்றார். ரமணர் காந்தியாலேதான் விடுதலை கிடைக்கப்போகிறது'' என்றார். ஐயங்கார் "இவர் ஜாதகத்தைச் செல்லும்; இவர் ஏன் நான் சொன்னபடி கேட்காமல். சுற்றித் திரிகிறார். உபயோகமில்லாத வேலையிலெல்லாம் புகுந்து, ஏமாற்றமடைகிறார்.'' என்று கேட்டார். "இவரை யாரும் கட்டிவைக்க முடியாது; இவர் மலைக்குகைக்கே ஓடுவார்'' என்றார். ரமணசாஸ்திரி. அவரிடம் எனக்கு உள்ளன்புண்டு. இருவரும் கோயிலுக்குச் சென்றோம். நான் தாயுமானார் பாடல் பாடிக்கொண்டே வலம் வந்து சந்நிதிபுகுந்தேன். வேதாரண்யம் என்றால் தாயுமானாரும் அப்பர் சம்பந்தரும் முன் நிற்பார்கள். நான்சிவனைப்பாடி வரங்கேட்டேன்:

மறைக்கதவு போலென் மனக்கதவை நீயே
திறக்க வழிசெய் சிவனே—உறக்கமிலா
யோகங்கை கூடி உயர்தாயு மானார்போல்
தாகந் தணியமுதந் தா.

என்று வேதாரண்யம் கடற்கரையில் சுற்றித்திரிந்து, நண்பரிடம் விடைபெற்று திருத்தருப்பூண்டியில் சில அன்பரைப் பார்த்து, திருஆரூரில் சொற்பொழிந்து, தஞ்சாவூர் சேர்ந்தேன்.

236. எருக்கூரில்

பாரத சமாஜத்தார் அப்போது தஞ்சாவூரில் சுற்றிக்கொண்டிருந்தார்கள். எருக்கூரில் அவர்கள் ஒரு மகாநாடு நடத்தினார்கள். அதைத் திறந்துவைக்க என்னை அழைத்தார்கள். தீவிர வாலிபரிடையே நான் நின்றேன். எருக்கூர் புரட்சி நண்பன் நீலகண்ட பிரமசாரி பிறந்த ஊர். அங்கே புரட்சி வீரர் கூடினால் கேட்கவேண்டுமா! சோமயாஜி, ஸ்ரீநிவாசவரதன், சிதம்பரம், ராகவன், கிருஷ்ணசாமிப் பாவலர், ஞானியார், ஆதிநாராயணன் செட்டியார், முதலிய நூறுபேர் வந்தார்கள். ஆயிரம்பேர் கேட்டார்கள். பேச்செல்லாம் வாள் வீச்சு தான். முக்கியமாக என் பேச்சை ஒற்றர் இம்மிவிடாமல் எழுதிக்கொண்டார்கள். நான் 1857லிருந்து தேச சரித்திரத்தை அளந்தேன். "சுதந்தரப் புரட்சி சிவாஜி காலத்திலேயே தொடங்கியது. டில்லியில் மராட்டியர் இந்தியக்கொடியை நாட்டினர். பிரதாப் குரு கோவிந்தன், கட்டபொம்மு வேலுத்தம்பி மருது சகோதரர் ஆகியோர் அன்னியக் கொடியை அசைக்க முயன்றனர். துரோகிகள் அன்னியருக்குப் பக்கபலமாயிருந்தனர். நாட்டில் ஒற்றுமையில்லை. அதனால் முகம்மதிய ராஜ்யம் போனபிறகு, தந்திரப் புலிகளான பிரிட்டிஷார் கொடி போட்டுச் சுரண்டல் வேலையில் முனைந்தனர். சுராஜ் டௌலா, திப்பு சுல்தான் முதலியோர் அந்தக் கொடியைச் சுட்டெரிக்க முனைந்தனர். மராடியரும் முயன்றனர். தமிழர் வீராவேசமாக முயன்றனர். பிறகு நானா சாகெபு பெரிய எரிமலைப் புரட்சியைச் செய்தான். தாந்தியா தோபே ராணி லக்ஷ்மீபாய், குமார்சிங் முல்லா சாகெபு, அகமத் மௌல்வி, பகதூர் ஷா போன்ற வீரரை நாம் இந்தக்காலம் பார்க்கவே முடியாது. 1857 சுதந்தரப் போருக்காக முல்லா சாகெபு பிரான்ஸ் ரஷ்யா நாடெல்லாம் சென்று ஆயுதங்களை அள்ளி வந்தார். அந்தக் கால ஒற்றுமை இப்போதில்லை. அப்போது இந்து முஸ்லிம் வேறுபாடே இல்லை. ஆயுத பலமும் இருந்தது. இப்போது என்னிடம் ஒரு யோகதண்டம் இருக்கிறது; சோமயாஜுலு பென்ஸில் சீவச் சூரி வைத்திருக்கிறார். ஆதிநாராயணர் க்ஷவரக்கத்தி வைத்திருக்கிறார். இன்னொருவர் ஒரு மொட்டைக்கத்தி வைத்துக்கொண்டு நானே வாள் வீரன் என்கிறார். இவற்றால் நாம் பிரிடிஷ் பிரங்கியையும் ஆகாச

குண்டையும் எதிர்க்க முடியுமா? நமது கையில் துப்பாக்கி தந்தாலும் கொக்கைக் குறி வைத்து குட்டிச்சுவரைச் சுடுவோம். நாம் காலத்தை அனுசரித்துச் செல்லவேண்டும். குரு கோவிந்தன்போல சக்தியும், சிவாஜிபோல் தைரியமும், நானாபோல் முயற்சியும் ஐயர் போல் அறிவும், சிவாபோல் நெஞ்சுரமும் பாரதிபோல் வாக்கும் வேண்டும். ஆனால் இத்தனையும் கொண்டு நாம் காந்திமகான் சேவையைச் செய்தல் வேண்டும். நாகபுரியில் அவாரி வாள் ஊர்வலம் வரலாம். இங்கே சிலர் அவரை அபிநயிக்கலாம். இன்னொரு ஊரில் இரண்டொரு வேட்டுப் போடலாம்; ஒரு பயனும் இராது. ஆதலால் நமக்கு நல்ல வழி காட்டும் மகாத்மாவை முழுமனதுடன் இளைஞர் பின்பற்றினால் தியாக பலத்தால், சத்திய பலத்தால், சுதந்தரம் கிடைக்கும். வீர இளைஞர்கள் இப்போது கத்தி தீட்டுவதற்குப் பதிலாகக் கிராமங்களில் தங்கி கல்வியும் தொழிலும் சன்மார்க்கமும் பயிற்றுங்கள். சத்தியாக்கிரகப் போர் மீண்டதும், காந்தி சேனையில் சேருங்கள் என்று பேசினேன். மாலையில் பாரத சக்தியிலிருந்து குரு கோவிந்தசிங்கன் சரித்திரம் விளக்கினேன்.

237. ஐயோ உலகே!

தஞ்சாவூர் அஞ்சாவூர். ஒருவாரம் கோர்ட்டுக்குப்போய் கவனித்தால், உலகம் எவ்வளவு மோசம் என்பது தெரியும். கும்பகோணம் நாகேசர் சந்நிதிகள் ஏராளமாயிருக்கிறார்கள். கடன் பத்திரத்தில் பொய்க் கையெழுத்திடுதல், போலி நகையைப் பொன்மணியென்று பெருந்தொகை வாங்கிக்கொண்டு போதல், பிறகு என்ன "நான் நல்ல நகை தந்தேன்; நீ காக்காய்ப்பொன் தருகிறாய். கொடு ஆயிரம்" என்று மிரட்டிக் கோர்ட்டிற்கு இழுத்தல், பாங்கு மோசடிகள், ஆஷாடபூதித்தனங்கள், பொய்ச்சாட்சி சோடித்தல், கற்பழித்தல், பெண்கள் ஆண்களைப் படுகுழியில் தள்ள மாயவலை வீசுதல்—இப்படி ஆயிரம் மோசடிகள் கண்டேன். என் பாங்குப்பணத்தை மோப்பம் பிடித்து முகமன் கூறி முடிச்சவிழ்க்கப் பார்த்தோர் பலர். சுவாமிகளுக்கு அரையணா நிலக்கடலை பிக்ஷை பண்ணிவைத்து, அவசரமாகப் பத்து ரூபா கைமாத்து வாங்கிக்கொண்டு "அடுத்தவாரம் தருகிறேன்" என்று சுவற்றில் எழுதி வைத்தவர் சிலர். சுவாமிகள் புத்தகத்தை வெளியிடுகிறேன் என்று கையெழுத்துப் பிரதிகளை அடித்துக்கொண்டு போனவர் சிலர். பல அரிய இலக்கியங்கள் வைத்த கள்ளிப்பெட்டி. எக்காரணத்தாலோ கரையான் பிடித்து எல்லாம் மண்ணாயின. பாரதசக்தியே மிச்சம். அப்படிக் கரையான் அரித்த நூல்களிலிருந்த பல பாடல்களை ஒருவரிடம் கண்டு வியந்தேன். எப்படி அவர் கைக்கு வந்தது? ஒருவேளை கரையான் தின்றது என்று குப்பையைக் காட்டி நல்ல பிரதிகளை எடுத்துக்கொண்டார்களோ? ஓர் ஆசாமி வருகிறார்: "ஸார், உங்களுக்கு வேர்க்கடலையும்

வாழைப்பழமும் பிரியமாமே. நமது உபயமாக ஏற்கவேண்டும்'' என்கிறார். சரி. பிறகு அவசரமாக இரண்டு ரூபா தயவு செய்க. சரி இந்தாரும். அடுத்த வாரம் இரண்டு ரூபா திரும்பி வருகிறது. அடுத்த வாரம் "ஸார் ஸார் உங்கள் கைராசி அற்புதம். நீங்கள் தந்த ரூபாய்க்கு அலாதி மதிப்புள்ளது. இன்று பத்து ரூபா உதவினால் அரை வட்டி போட்டு அடுத்த மாதம் தருகிறேன். சரி தருகிறோம் அடுத்த மாதம் வருகிறார். ஸார் கூடப் பத்து தாருங்கள் அடுத்த மாதம் சேர்த்துத் தருகிறோம். அடுத்த மாதம் அடுத்த வருஷமானா லும் பணம் வராது; ஏமாற்றம். நெருங்கிய நண்பனாக ஒருவன் உற வாடுகிறான். பெட்டியைத் திறக்கும்போதும் மூடும்போதும் எட்டிப் பார்க்கிறான். அடுத்தநாள் அதிலிருந்த புரோநோட் காணோம். நோட் டெழுதிக் கொடுத்த பேர்வழியுடன் இந்த நண்பன் காப்பிக் கடைக் குப் போகக் காண்கிறோம். "சுவாமிகளே நமோநம: ஐம்பது ரூபா கிருபை செய்யவேண்டும். சம்பளப் பணம் வந்ததும் தருகிறேன்." என்றொருவன் வருகிறான். ஐயா எனது தேவையளவுதான் வைத் திருக்கிறேன். என் பணம் வருங்காலப் பணிக்கு. "என்ன சாமி துறவியாயிருந்தும் இப்படிப் பேசறே. உள்ளபோதே அறஞ்செய். வருங்காலத்தை நாம் என்ன கண்டோம். இன்றைக்கிருப்பாரை...இல் லையே'' ஐயா கடன்தர முடியாது. "நீ நாசமாய்ப் போ!'' பின்னால் கோளேற்றிக் குடி கெடுக்கும் பேர்வழி இவரே. "மகா கவியாம் மண்ணாங்கட்டியாம்...வதவதன்னு வேதாந்தம் எழுதுகிறான். இவன் பத்திரிகையைத் தோடுவதே பிசகு. கோவணாண்டி மடத்துக்குப் போகாமல் இங்கே வந்திருக்கான்'' என்று புறம்பேசுதல். இப்படிப் பேர்வழிகளைக் கண்டேன்.

நான் சிலநாள் வெண்ணாற்றங்கரையில் தெள்ளிய மண்ணைச் சாப் பிடுவதுண்டு. அது குடலைச் சுத்திசெய்யும் ஹடசாதனம், ஒரு கும்ப கோணம் பேர்வழி என்னுடன் அடிக்கடி வருவதுண்டு. நான் அவரிடம் பணம் தந்து மிந்திரியும் பேரிச்சம்பழமும் வாங்கிவரச் சொன்னேன். அவர் தாட்டாக காப்பிக்கடையில் சாப்பிட்டு, ஆற்றுமணலைப் பெரிய பொட்டணம் கட்டிக்கொண்டுவந்து என் மேஜைமேல் வைத்துச் சென்றார், திரும்பி வரவேயில்லை. மற்றொரு கும்பகோணம் "நான் அழகான சிற்பி. உங்களுக்கு வேண்டியதை செய்து தருவேன். தங்க ளைப்போல் சிலை யடிப்பேன்'' என்று வந்தார். வரும்போதெல்லாம் என்னிடம் காப்பிச்செலவுக்கு காலணா வாங்கிச் செல்வார். எனக்கு நடராஜாமேல் மோகம். "நடராஜா விக்ரகம் வார்க்கவேண்டும்'' என்றேன். "ஆஹா ஒரே வாரத்தில் எல்லாம் முடித்துக்கொண்டு. வருகிறேன் பளபளன்னு...ஐம்பது அடக்க விலை. என்றார். முன் பணம் வாங்கிச் சென்றார் நடராஜரை ஆவலாக எதிர்பார்த்தேன். ஆளையே காணோம். "இந்தக் கடிகாரம் நன்றாயிருக்கிறதே. ஆசைக்கு ஒருநாள் போட்டிருந்து தருகிறேன். சரி. சாயங்காலம் அது அடகு

போய்விடும். கேட்டால் மன்னியுங்கள் மறதிதாக எங்கோ வைத்து விட்டேன். புதுக்கடிகாரம் வாங்கித்தருகிறேன்'' என்பார், சிலர் தொணதொண என்று தமது பெருமைகளை அள்ளிவிட்டு நேரத்தைக் கொலை செய்வர். சிலர் அத்தனையும் பக்கம் பக்கமாக எழுதி நமது பத்திரிகையில் போட மன்றுடுவர். இடமில்லை என்றால் வசவு, கோள் எதிர்ப்பிரசாரம், மௌனதினத்தன்று வந்து என்னைக் கண்டபடி பேசுவது. இதற்காகவே நான் யாரையும் பார்ப்பதைக்கூட நிறுத்தி உள்ளடங்கினேன். ஒருவரிடம் நாம் கனிகள் வாங்கிவரப் பணம் தருவதுண்டு அவர் "சுவாமி கலிகாலம் முற்றிப்போச்சுது. பழம் காலணுவாம். அணுவுக்கு நாலு கந்திருக்கிறுன்'' என்று தருவார். இப்படியே மற்றச் சாமான்களும். ஒருநாள் நானே சந்தைக்குச் சென்றேன். அணுவுக்குப் பனிரண்டு பூவன்பழம் வாங்கினேன். அந்த ஆள் என்னை வஞ்சித்துச் சுருட்டு புகையிலை வாங்கியதாகத் தெரிந்தது. ஒரு தாசானுதாசர் வந்தார். "சுவாமிகளே உங்களுக்கு ஜீவன் முத்திதரவே சிவகுரு அவதரித்திருக்கிருர். அவருடன் ராமலிங்க சுவாமிகளும் இருக்கிருர் என்று நீளப் பேசினுர். வள்ளலார் வடலூர் சித்திவளாகத்திலிருந்து ஓடிவந்து உலகெல்லாம் சுற்றியபிறகு இங்கே வந்தாராம். அவர் உபாசித்த நடனசிகாமணியும் அருட்பா கேட்கவே பூலோகத்திற்கு வந்தாராம். நான் முதலில் பழைய வள்ளலாரைப் பார்க்கப்போனேன். அவர் ஒரு திருமடத்தில் மெத்தையில் படுத்துக் குறட்டைவிட்டார். நான் வருந்தருணப் பாட்டுப் பாடினேன். சட்டென்று எழுந்தார். ''சாமி வணக்கம்'' என்றேன். "நீ யாரடா முட்டாள் எங்கே வந்தாய், ஆத்தா அக்கா! கெட்ட பேச்செல்லாம் கொட்டி 'வள்' என்ருர் வள்ளலார். நான் அருட்பா பலே பேஷ்!" என்றேன். சாமி தாங்கள் ராமலிங்க வள்ளலார் என்ருர்கள். ஆமடா அதற்கென்ன? நித்திய சரீரம் காணவந்தேன். போடா அந்தப் பயலே இந்தப்பயலே. வந்தனம் சாமி...என்று நான் மற்ருெரு அவதாரத்திடம் போனேன். ஆள் பரங்கிப்பழம். வாய் நிரம்பப் புகையிலை அதுக்கிக்கொண்டு நீ யார் என்று கேட்டார். யார் என்று கேட்பவன் யாரோ அவனே நான். நான் நீ அவன் எல்லாம் ஒரே சுத்தான்மா என்றேன். "அதிக ப்ரசங்கி போபோ'' "சாமி போக்கிடந்தானே தெரியவில்லை." உலகில் நாம் உண்டுறங்கவா வந்தோம்? பிறவிப் பயன் என்ன? என்று கேட்டேன். முட்டாள் இதென்ன கேள்வி! நன்ருகச் சாப்பிடுவதே வாழ்க்கையின் பயன். இங்கே சும்மா ஏன் வந்தாய்?'' என்ருர். "சாமி உலகத்தொல்லை ஒழிந்து சும்மா இருக்கும் சூட்சுமம் அறியவே'' வந்தேன் என்றேன். இதற்குள் தாசானுதாசர் வந்தார். கண்காட்டி அழைத்தார். என் அனுமதியின்றி மகான்களைப் பார்த்திருக்கக்கூடாது. வள்ளலாரையும் பார்த்துவிட்டீர்களோ...'வள்ளலார் வள்ளென்று விழுந்தார். இங்கே கலியுக சிவம் வயிற்றை நிரப்பும் யோகம்'' சொல்லுது; இதென்ன அவதாராம்சம்'

என்றேன். தாசானுதாசன் "அடடா முறையாக வந்திருக்கவேண்டும்— ஒரு தட்டில் இரண்டு சீப்பு வாழைப் பழம் நாலு மாம்பழம், ஒரு தேங்காய், குடன் மலர் எல்லாம் கொண்டு கொஞ்சம் தட்சிணையும் வைத்து தீபாராதனை செய்தால், அதன் ஆட்டம் தெரியும்" என்ருர். பிறகு இரும் என்று உள்ளேபோய் கலியுகரிடம் ஏதோ சொல்லி வந்து என்னை அழைத்துச் சென்ருர். கலியுகர் "ஏண்டா பயலே கோபமா? சும்மா சோதித்தேன். உன்னை நாம் அறிவோம். நீ யோகசித்தி தேடுகிருய். பூர்வ ஜன்மத்தில் நமது சிஷ்யனுயிருந்தாய்; அதனுலே தான் இங்கே வந்தாய். நம்மைச் சரண்புகு. நித்தியதேகம் தருவோம். பார் நம் உடம்பை" என்ருர். சாமி பார்த்தாயிற்று ஓம் சிவம் என்று சென்றேன். விசாரித்ததில் "இவர் பழைய காப்பிக்கடை ஐயர் அவர் அக்னி உபாசகர் என்றனர். நித்திய தேகத்தை எமன் கொண்டுபோனுன். மடம் காலி! மஹா வரப்ரசாதி ஒருவர் என்னைச் சாமுண்டி உபாசனை பண்ணச் சொன்னுர். என்னை இறைவனிடமிருந்து பிரிக்காத வரமே போதும் கடவுளுக்கும் எனக்கும் இடையே யாரும் நிற்காமலிருந்தாலே போதும் என்றேன் "என்ன அப்படிச் சொல்லுகிருய். நாமிருக்கையில்" என்ருர் வரப்ரசாதி சாமி. ஆகாசத்தைப் பார்க்க யார் துணை செய்யவேண்டும்? ஆகாசத்திற்கும் பூமிக்கும் நடுவே வெட்டவெளி. அதுபோல் சுத்தான்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே எந்தத் தடையும் இல்லாமல், சுத்தமாயிருக்க விரும்புகிறேன். நான், அவன்; இடையே அவதார பரதார விகார மாயங்கள் புகாமல் கவனமா யிருக்கவேண்டும்" என்றேன். பிறகு அவர் நான் இருக்குமிடத்திற்கு வந்து, அருட்பா கேட்டார். இப்படிச் சிலரை கண்டேன்.

பொடி சீட்டு புகையிலை அரட்டை பெண்பேச்சு காமவேட்டைகளில் திரியும் சிலர் என்னை மௌனப்பசு என்று கேலி செய்தனர். நான் இதை படிப்பேன். அவர்கள் குட்டிராமாயணம் போடுவார்கள். நான் பிராணுயாமம் செய்வேன். அவர்கள் காரமான பட்டணம் பொடி உறுஞ்சி சுகமான சூர்ணுயாமம் என்பர்.

சீட்டும் பொடியும் சிவமற்ற சிற்றின்பப்
பாட்டும் பழிப்பும் பரதார—வேட்டையும்
தப்பிப் பிழைத்துத் தனியேன் ஒருநினையே
செப்பிப் பிழைக்கவருள் சேய்.

ஒரு யாப்பிலக்கணப்புலவர் வருவார். "இந்தக்காலக்கவி என்ன கவி; பாரதியாம் சாரதியாம் கவிபாட வந்துவிட்டான். நான் பாடுகிறேன் பாருங்கள். யாப்பிலக்கணத்தை வைத்து அளந்தால் கணக்காயிருக்கும்" என்பார். அவர் தற்காலக் கவிஞரைத் திட்டும் இமிசை தாங்காமல், ஒருநாள் சோதித்தேன். லொடக் லொடக் என்று அச்சுப்பொறி

வேலை செய்கிறதே, அதை வைத்து ஒரு கவிபாடும் என்றேன். அவர் ஒரு மணிநேரம் தலையெண்ணிக் கணக்குப்போட்டு, தேமாபுளிமா கருவிளம் கூவிளம் எல்லாம் போட்டு, சீர்பூத்த கார்பூத்த போர்பூத்த என்றுமட்டும் எழுதினர். நான் அடடா உங்களுக்கு அதிகசிரமம் தந்துவிட்டேன் என்று பாடினேன்.

படக்கு படக்கென்று பாய்ந்தடிக்கு நெஞ்சில்
நடக்கும் ஒருபொருளை நாடின்—லொடக்லொடக்
என்று நடக்கும் இயந்திரத்தை† அச்சகத்தை
நன்றறிய லாதுமென நாடு

"அடடா நன்றுகவின்றீர். தற்காலக்கவிகளில் உம்மை ஒப்புகிறேன்" என்றார். புலவரே அவரவர் கருத்தும் கவனமும் வெவ்வேறு. "சுப்பிரமணிய பாரதியார் இயற்கையான வரகவி. தேசத்தை அவர்கவி தட்டி எழுப்பியது. அவர் கவியை வணங்கிப்போற்றுவீராக!" என்று விடைகொடுத்தேன். சிலநாட்கள் இப்படிப்பட்ட நண்பர் தொல்லையிருந்தது. பிறகு எனக்குச் சாதுசங்கமும் தனிமையும் கிடைத்தன. "இவனிடம் வீண் அரட்டையடிக்க முடியாது" என்று தெரிந்தால், வம்பர் கிட்ட வருவதில்லை. எட்டிநின்று வம்படிப்பதை நானும் பாராட்டுவதில்லை. கோள் சொல்லிச் சிண்டுமுடிப்பவரிடம் எனக்கு அருவருப்பு. கோள்கடி தேள்கடியைவிடக்கொடிது. யாராவது எவரைப்பற்றியாவது கோளேற்றினல், அவர்களை ஒதுக்கி நடப்பது என் இயல்பு.

இறுதியாக ஒரு சோதனைவந்தது. இரவு ஒன்பதுமணி தடதடவென்று ஆபிஸ் கதவுச்சத்தம். திறந்தேன் அனந்த கிருஷ்ணையரும் இன்னொருவரும் புகுந்தார், "வாருங்கள் சாப்பிட்டீர்களா உட்காருங்கள்" என்று உபசரித்தேன். பேச்சு நடந்தது. "பாரதியாரே, குருகுல சத்தியாக்கிரகம் நடக்கப்போகிறது. உம்மை ஆசாரியராக்குவோம்; உடனே வாரும். அங்கே எல்லாரும் தயாராகநிற்கிருர்கள். அந்த ஆசாமியை வேலிக்கப்பால் தூக்கி எறியவேண்டும்." என்று நீளப்பேசினர். அந்த யமகாதகரை நீர் ஒன்றும் செய்யமுடியாது. வீண்முயற்சி ஏன்? நான் விட்டதைப்பற்றுவதில்லை. குருகுலம் போதும். இனி ஒருகுலமும் தேவையில்லை. ஆசாரியபதவி எதற்கு? இன்று ஆசாரியரே என்பீர்; நாளை என்மேல் கத்திதிட்டிக்கிளம்புவீர். உலகில் பட்டம்பதவி மாயம் வீண். தயவுசெய்து எனக்கும் என் அந்தராத்மனுக்கும் இடையே யாரும் நிற்காதிர்கள்." என்றேன். "உம்மைத் தூக்கிச் செல்வோம்." என்றார். ஐயா நான் சீதையில்லை, நீரும் ராவணனில்லை. இது பஞ்சவடியில்லை. பேசாமல் போய் குருகுலத்தை விவசாயப்பண்ணை அல்லது சபர்மதிபோல் குடிசைத் தொழிற்பண்ணையாக்க முயலும் என்றேன். அனந்தகிருஷ்ணையர் சென்றார். அடுத்த

ஆண்டு இவர் குருகுலத்தில் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்ததாகக் கேள்விப்பட்டேன். இவர் நல்ல எழுத்தாளர்; தலை எழுத்து அப்படி! இன்னொருவர் தஞ்சாவூரில் சேவல்ராம் ஆசிரமத்தை மறுபடி நடத்த மன்றுடினர். "நான் வீடுவீடாக அரிசி வசூலிக்கிறேன்" என்றார். ஐயா புல்முளைத்துப்போன நில் நெல்முளைக்க செய்ய வேறொரு விவசாயி வேண்டும். நான் நெஞ்ச உழவன். நானும் யோகமுமாயிருந்தால் போதும் என்றேன். அவரவர் வழியில் என்னை இழுத்தனர். நான் மனச்சாட்சி வழியிலேதான் போய்க்கொண்டிருந்தேன். மனச்சாட்சி "கிளம்பு சன்மார்க்க சேவைக்கு; போ கிராமங்களுக்கு" என்றது. 'உத்தரவு' என்றெழுந்தேன் :

தோன்றாத் துணைவனான இறைவன் என்னை எத்தனையோ ஆபத்தி லிருந்து காத்தான். அவனுண்டு நானுண்டு என்பதைத் தவிர இந்த உலகில் யாருண்டு எனக்குதவி?. ஆதலால் அவன் ஏவிய வழியே சென்றேன்.

238. சன்மார்க்க முயற்சிகள்

தஞ்சாவூரில் ஒரு நாடகசபை நாட்டி, அதன் மூலம் ஒரு பெரிய சன்மார்க்கப் பணிசெய்ய முயன்றேன். என் பெயரால் சுத்தானந்த நாடக மன்றம் நடத்தலாம் என்று சில நண்பர் வந்தனர். சுவாமிகள் பாங்கில் போட்டிருப்பதைத் தந்தால், கிடுகிடுவென்று வேலை செய்கி றோம் என்றார் ஒருவர். நெஞ்சைத் தொட்டுப்பார்த்தேன். 'ஏமாறாதே' என்றது மனச்சாட்சி. என்பணம் நடிகர் காப்பிச்செலவுக்கும் கட்டாது. நல்ல வேளையாக குமார கான சபை ஸ்ரீநிவாஸனைக் கண்டேன். அவர் என்னிடம் அடிக்கடி வருவதுண்டு. குமார கான சபை ஒத்திகைகளுக்கு நானும் சென்றேன். நல்ல நடிகர் அதிலிருந்தனர்; எனது நாடகங்களை அரங்கேற்ற முன் வந்தனர். விரதவைராக்கியம் என்ற நாடகம் தந்தேன். அதை உருக்குமாங்கதன் என்றபெயரால் போட்டார்கள். பிற்காலம் திரைப்படமாகவும் அது வந்தது. மிக நன்றாய் நடித்தார்கள். பிற்காலம் எனது ஜயமணியையும் நடித்தார் கள். இன்னொரு நாடக சபையிலும் புகுந்து பார்த்தேன். எனது அச்சுத்தொழிலாளர் ராமநாடகம் பழகினர். அதையும் பார்வை யிட்டேன். நாடகத்தில் சன்மார்க்க ஒழுக்கத்தைப் புகுத்த இன்னும் காலம் வரவில்லை என்று, மாணவர் குழுவிற் புகுந்தேன்.

நான் எங்கிருந்தாலும் மாணவர் என்னிடம் வருவார்கள். அந்த இளம் உள்ளங்களே எனக்கினிய நண்பர். எனக்கு அடுத்த வீட்டில் ஒரு மாணவன் இருந்தான். அவனுக்கு ஆங்கில-தமிழ் இலக்கியம் சொல்லத் தொடங்கினேன். பத்து மாணவர் அவனால் வந்தனர். எல்லாருக்கும் யோகசித்தி பாடம் சொன்னேன். பிறகு தஞ்சை ஆசிரியர் கல்லூரி மாணவர் வந்தனர், அவர்களை ஒரு சங்கமாகக்

கூட்டினேன். சங்கத்தை என்பெயரால் அழைத்தனர்; நான் சன்மார்க்கசங்கம் என்றே அழைத்தேன். விஜயதசமி, சிவன் ராத்திரி நாட்களில் நான் அங்கே பிரசங்கம் நடத்தினேன்: மாணவரை அழைத்துக்கொண்டு கருரார் சந்நிதி வண்ணாற்றங்கரைகளுக்குச் சென்று, என் உள்ளத்தை அவர்கள் உள்ளத்தில் வார்ப்பதுண்டு. "உடல்வாழ்க்கை பாவைக்கூத்து; உள்ளே ஒன்றிருந்து ஆட்டாதபாவைக்கு ஆட்டமில்லை. நான் உண்டுயிர்த்து வாழ்வது உள்ளப்பொருளான சுத்தான்ம சக்தியால். அந்தக்கரணங்கள் யந்திரச்சக்கரங்கள் போன்றவை. அங்கங்கள் யந்திர உருளை, கோல், கம்பிகள் போன்றவை. எலும்பும் தோலும் யந்திரக் கவசங்கள். இந்த யந்திரத்திற்குத் தெய்வசக்தியே மின்சாரம். தெய்வபக்தியே அந்த மின்சாரத்திற்கு ஊட்டம் கொடுப்பது. தெய்வமே இதை இயக்குகிறது. தெய்வபக்தியால் தெய்வ மின்சாரத்தைத்தூண்டி வாழ்வையே தெய்வசைதன்ய அருவியாக்கி, உலகப்பயிர் செழிக்க வைப்பதே கல்வியாகும். அறிவு, ஆற்றல், அன்பு, அருள், கலை, தொழில், ஒழுக்கம், யோகம், யோகசித்தி, தெய்வ ஜீவனம் ஆகிய பத்தும் கல்வியின் தசாங்கமாகும். ஒவ்வொரு ஆன்மாவும் தெய்வப்புலமை பெற்றது. புலமை பலவிதம், பலதுறை. அதைத்தூண்டி அத்துறையில் தொண்டு செய்க. இதுவே ஆசிரியர் கடமையாகும். புலமையைச் சாதனத்தால் தூண்டினால், கல்வி உள்ளிருந்தே மலரும். ஆசிரியன் அறிவுழவன்; நாட்டின் வருங்காலப் பயிர்களை வளர்ப்பவன். இளம்பயிர்களைத் தக்க இயற்கை நிலத்தில் நாட்டி, அறிவுரம் போட்டு, சன்மார்க்க நீர்பாய்ச்சி விளைவேற்ற வேண்டும். வேர் ஆழப்பாய்ந்தால் பிறகு அதுவே உணவைத் தேடிக் கொள்ளும். பல்லவி பழகியவனுக்குப் பாட்டு எளிதாகும். நல்ல நடையும் உயர்ந்த சிந்தனையும் மாணவருக்குப் பயிற்றுங்கள். கல்வி தன்னால் வரும்" என்றேன். பத்து மாணவர் என்னைப் பின்பற்றினர். மன்னார்குடி ரங்கு எப்போதும் என்னுடன் இருந்தார். சுப்பிரமணியம் என்ற ஆசிரியமாணவர் அரியகவிகள் எழுதி என்னிடம் காட்டினார். பிற்காலம் இவர் புகழ்பெற்று விளங்கினார்.

கொங்கணேச வித்யாலய வாசலில் புராணம் படிக்க ஏற்பாடு நடந்தது. ராமாயணம் நடந்தது. ஆனால் கூட்டம் வரவில்லை, புராணங்களில் மக்களுக்குக் கவர்ச்சியில்லை. அதை எதிர்த்துப்பிரசாரம் செய்யும் கூட்டம் வலுத்தது. வகுப்புவாதங்களை ஒழிக்க முயன்றேன். தமிழகமக்கள் அனைவரும் தமிழரே என்பதை வற்புறுத்திச் சொன்னேன். கரந்தைத் தமிழ்ச் சங்கப்புலவர் ஒருவர் என்னைப் போற்றினார். சங்கவிழாவிற்குச் சென்றேன். அது பண்டிதமணி கதிரேசனார் தலைமையில் நடந்தது. சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் சைவசித்தாந்தமும் முழங்கின. சிலப்பதிகாரம் கானல் வரியை நாடகமாக நடித்தனர். மணி திருநாவுக்கரசனார் திருக்குறளைப்பற்றி அரிய சொற்பொழிவாற்றினார், சபையில் பல தமிழறிஞர் எனக்கு அறிமுக

மானுர். உமாமகசேனுர் நண்பரானுர். அவருக்கு உடல் கரந்தைச்சங்கம், உயிர் தமிழ். அவர் நடத்திய தமிழ்ப்பொழில் எங்கள் அச்சகத்திலேதான் அச்சிடப்பெற்றது. அச்சுத்தாள் திருத்தவரும் வேங்கடாசலப் புலவர் என்னுடன் அளவளாவி சங்க நடைமுறைகளைச் சொல்லுவார். தமிழ் இலக்கியம்பற்றியும் வானளாவப் பேசுவோம். 1911 இராதா கிருட்டினர் தொடங்கிய சங்கம் உமாமகேசரால் விரிந்து பெருகிறது. உண்டி உறையுள் அளித்து யாணவருக்குத் தமிழும் ஆங்கிலமும் பயிற்றி, அவர் அரிய தொண்டு செய்தார். அத்தகையதொண்டு ஊர் தோறும் நடந்தால், தமிழ் வளம்பெறும். தனித்தமிழின்பத்தைக் கரந்தையில் துய்த்தேன். அக்காலமே அருட்செல்வமும் உருவாகி இன்று வெளிவந்தது. சன்மார்க்க சாதனத்திற்கென்றே அருட்செல்வம் எழுந்தது. தமிழும் தமிழரும் உலகிற்படும் சிறுமைகண்டு நாங்கள் ஆத்திரங்கொண்டோம். அதைத் தூண்டிவிடத் தென்னுப்பரிக்காவிலிருந்து பத்தர் வந்தார். அவர் தமது நண்பருடன் தென்னுப்பரிக்காத் தமிழர் நிலையைக் கண்ணீர் ததும்பப்பேசினுர். என்னை ஒருமுறை அங்கே வரும்படி அழைத்தார். போதினியில் பெரிய தலையங்கம் எழுதி "தமிழர் இனிக்கப்பலேறிக்கூலிகளாகச் சென்று பிறர் நிலத்தில் வாழ்வைக் கொட்டக்கூடாது. தமிழர் தமிழகம் செழிக்கப் பாடுபடுக. அதற்குத் தமிழ்நாடு தமிழர் கையில் இருக்கவேண்டும். இங்கே தமிழே வழங்கவேண்டும். இதன் கல்வி தொழில் வாணிகம், அறத்துறைகளெல்லாம் தமிழர் ஆட்சியில் இருக்கவேண்டும். தமிழகத்தில் முதலில் தமிழனுக்கு வேலை தரவேண்டும். தமிழர் பசி தீர்ந்த பிறகே உணவுப்பொருள்களை வெளியிடங்களுக்கு அனுப்பவேண்டும். இன்று சன்மார்க்கமான மெய்வழிக்கு நிலையமானது தமிழகமே. தமிழகம் திருந்திறல் அதனுல் உலகைத்திருத்தலாம். என்பதை எல்லாருக்கும் விளக்கினேன். இந்த விளக்கத்தில் மகிழ்ச்சி கொண்டவர் ஸ்ரீநிவாசப் பிள்ளை உமாமகேசர் போன்ற அறிஞரே. உள்ளூரில் சிவன் ராத்திரியன்று ஒரு பெரிய கூட்டத்தில் நமது சன்மார்க்கம் என்ற சொற்பொழிவாற்றினேன். ஏழுமணி முதல் பனிரண்டு மணி வரையில் பேசினேன். இவ்வளவுதான் தஞ்சையில் எனது தொண்டு. இனி வெளியூரில் சன்மார்க்கப் பிரசாரம் தொடங்கினேன்.

239. புரமும், பேட்டையும்

ஏன் உணவு எளிது, வாழ்க்கை மிக எளிது. யாருக்கும் என்னுல் தொந்தரவில்லை. அடுப்புமூட்டிச் சமைக்கவே தேவையில்லை. கனியும் கடலையும் எங்கும் கிடைக்கும். துண்டு விரித்துப் படுக்கத் திண்ணையுண்டு. ஆதலால் பல ஊர்களில் என்னை அழைத்தனர். நான் சன்மார்க்க அரசியலை எங்கும் விளக்கினேன். திருஆரூரில் பலர் எனது அரிய நண்பர்: தியாகராஜ ஞானியார், ராமன் பிள்ளை, சிவராம பிள்ளை, மாணிக்கம் பிள்ளை முதலியோர் பெயர் நினைவிலிருக்

கிறது. இவர்கள் என்னைப் பலமுறை வரவழைத்து பிரசங்கம் வைத்தார்கள். கதர் இயக்கம் இங்கே பலமாக நடக்கச்செய்தேன். காந்தியடிகளின் தூய வாழ்வை எல்லாருக்கும் விளக்கி, காங்கிரஸ் சபைக்கு ஆதரவு தேடினேன். எனது கூட்டத்தில் எதிர்ப்பேச்சிராது. மூவாயிரம்பேர் அமைதியாகக் கேட்பார்கள். அங்கே சன்மார்க்க சங்கம் நாட்டி மெய்வழி விளக்கினேன். கோயில் புத்தகசாலை வாசகசாலை பொதுத் தெருக்கள் மைதானங்கள் எங்கும் சொற்பொழிவு நடக்கும். அவற்றின் சாரம் திரு நூலில் சுத்த சன்மார்க்கம் என்றதில் உள்ளது. சிலநாட்களில் சன்மார்க்கத் திருவிழா நடத்துவோம். தலைமை வகிக்கும் எனக்குப் புதிய கதர் உடுத்தி ஊர்வலம் நடத்தி வரவேற்புரைகள் அச்சிட்டளித்து உபசரிப்பார்கள். நான் இவற்றையெல்லாம் பாராட்டுவதில்லை. ஊரில் அரிசி வசூல்செய்து ஆயிரம் இரண்டாயிரம் ஏழைப் பரதேசிகளுக்கு அன்னதானம் செய்து, எல்லாருக்கும் தூய வாழ்வை விளக்குவேன். நானே அன்னமிடும் தொண்டிலும் பங்கு கொள்வேன். தொண்டிலிருக்கும் இன்பம் பேச்சிலில்லை. திருஆரூரில் சுப்பையா சாமியார் நடத்திய தக்ஷிணாமூர்த்தி குரு பூசைக்குச் சென்று அவருடன் பேசினேன். சாமியார் எனக்கு அரிய தோழரானார். சென்னையில் அவர் சாதுசங்கம் கண்டார். நாட்டில் சும்மா நின்று திரியும் பரதேசிகளையெல்லாம் அசல் சுதேசிகளாக, சன்மார்க்க சேவகர்களாகச் செய்து, ஊர்தோறும் அருட் செல்வத்தைப் பாடி, தெருதோறும் அருளறிவையும் தூய ஒழுக்கங்களையும் பரப்பும் திருத்தொண்டராக்க நாங்கள் யோசனை செய்தோம். இனித்தான் அது நிறைவேற வேண்டும்.

விஜயபுரத்தில் ஞான பூபதிகள் என்ற இஸ்லாமியப் பெரியார் எனது நண்பரானார். இவர் மஸ்தான் வள்ளலார் ஆகிய இரண்டு பெரியாரையும் பின்பற்றினார். இவருக்கு நான் அன்புவழி போதித்தேன். அதுவே அன்புவழி என்ற நூலாகவும் வந்தது. இவர் பிற்காலம் இலங்கையில் அன்புமார்க்க சபை நாட்டி, அரிய பணி புரிந்தார். அச் சபைக்குத் தலைமை வகிக்க என்னை அடிக்கடி அழைத்தார்; போக முடியவில்லை.

நான் அடிக்கடி சென்ற மற்றொரு ஊர் ஜாலர்பேட்டை. அங்கே ரயில்வே பள்ளிக்கூட ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயர் தம் வீட்டையே சுத்த நிலையமாக்கினார். சுத்த சன்மார்க்க சங்கம் நடந்தது. வரதராஜ முதலியார் ஆதரவில் வளர்ந்தது. ஆண்டு விழா எனது தலைமையில் நடந்தது. செல்லும் வழியில் நான் ராமசாமி நாயககர் விருந்தாளியாயிருந்தேன். நாயக்கர் என்னிடம் பிரியமுள்ளவர். எனது சமரஸம் அவருக்குப் பிடிக்கும். அவர் ஈரோடு ஸ்டேஷனிலிருந்து என்னை அழைத்துவந்து தமது மனையில் உபசரித்தார். விருந்தோம்புவதில் அவரிடம் நாம் கற்கவேண்டும். காவேரியில் குளிக்கச் சென்ற எனக்கு வெந்நீர் ஆட்டினார். மனைவி நாகம்மாளிடம் "இவரு தெங்

கிரியாய ஊடாமாடு தாரே'' என்றதும், அந்த அம்மாள் தேங்காய் துருவி வெல்லம் போட்டு வாழைக்கனி வைத்து கூடத்தில் விளக்கு வைத்து ஆஸனம்போட்டு உபசரித்தாள். நான் பத்து நிமிஷம் தியானித்தேன். நாயக்கர் பார்த்துக்கொண்டே யிருந்தார். நான் சாப்பிடும்போதே அரசியல் விவகாரம் நடந்தது, அப்போது சட்டசபையிலிருந்து ஸ்வராஜ்யக் கட்சியினர், வெளியேற்ற நாடகம் நடத்தினர். அதை நான் போதினியில் வீரவெளியேற்றம் என்ற பாட்டால் புகழ்ந்தேன். வெளியேறின வீரர் மீண்டும் அரசாங்கக் குகையில் புகாமல் கிராமங்களுக்குச் சென்று, ஆக்க வேலையை நடத்தினால் நாட்டில் பஞ்சம் தணியும் என்றேன். நாயக்கர் அதை மெச்சினார். "வெளியேற்ற நாடகம் மறுதேர்தலில் ஓட்டு வாங்கச் சூழ்ச்சி. சாதிப் பித்தம் இருக்குமட்டும் காங்கிரஸ் உருப்படாது. காந்தியை மூலையில் தள்ளிய கட்சி ஒழியவேண்டும். காந்தி முன்வர வேண்டும்'' என்றார். அவரும் இராட்டையில் நூல் இழுத்துக் கொண்டே பேசினார். நான் உணவை முடித்து நூலிழுத்தேன். ஸமரஸ போதினியை அவர் போற்றினார். மூன்றுமணிக்கு மறுபடியும் வண்டியில் என்னுடன் வந்து ரயிலேற்றி விடைபெற்றார். நாயக்கர் ஒரு கொள்கைக்காக வாழ்ந்தார். பலமுறை அவரைச் சந்தித்தேன். சாதிமத வேறுபாடில்லாமல் மனித சமுதாயம் முழுதும் ஒரு குலமாக வாழவேண்டும் என்ற எனது கொள்கையை அவர் போற்றினார்,

இரவு பத்துமணிக்கு ஜாலர்பேட்டைக்கு வந்தேன். ஸ்டேஷனில் அன்பர் கதர்மாலை சூட்டி வரவேற்றனர். மறுநாள் பெரிய கூட்டம் நடந்தது. தலைமையுரை சுத்தசன்மார்க்கத் தொண்டு பற்றியது. வாணியம்பாடி நாயுடு, கிருஷ்ணகிரி முனிசாமி நாயுடு, நாட்ரம்பள்ளி கேதாரீச்வரானந்தர், ஊரிஸ் கல்லூரி பண்டிதர் முதலிய அறிஞர் பேசினர். முதலியார் வீட்டில் நான் தெலுங்கில் வேமனபத்யம் பற்றிப் பேசினேன். இரவில் பஜனை நடத்தினேன். மறுநாள் நாட்ரம்பள்ளி சென்றோம். ராமகிருஷ்ண மடத்தில் தங்கி அன்று திருவாசகம் பாராயணம் பண்ணினேன். அங்கே ஆற்றங்கரையில் ஒரு கிறிஸ்து சாமியார் இருந்தார். அவர் என்னைக் கண்டதும் தங்கள் ஏசுநாதர் சரிதை படித்தேன். ஸமரஸ போதினியில் வந்தது என்றார். அவருடன் பேசினேன். "பரமபிதாபோல் பூரணம் பெறு'' என்ற பைபிள் வாக்குப்பற்றியே பேச்சு. அவரைப்போல் சன்மார்க்கப் பாதிரிகளை நாம் படைக்கவேண்டும். கோபாலகிருஷ்ணன் என்ற கிறிஸ்துவ நண்பர் என்னை சேலத்திற் கருகேயுள்ள கிறிஸ்துகுல ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அடடா அந்தமாதிரி இடங் கிடைத்தால் எவ்வளவு காரியம் செய்வேன்! அங்கே எனது நண்பர் கிறிஸ்துதாஸர் உபசரித்தார். அங்கேதான் ஒரு ரஷ்யரை முதன் முதல் கண்டு பேசி சோவியத்தின் பொருளாதார சுபிக்ஷத்தை அறிந்தேன். அதே வழியில் அந்த ஆசிரம விவசாயப்பண்ணை நடக்கிறது.

வேண்டிய உணவு அங்கேயே விளைகிறது. அங்கே விளைந்த கனி கடலையே நான் உண்டேன். அங்கே ஒரு பெரிய வைத்தியசாலை நடக்கிறது. ஏராளமான ஏழைகளுக்கு இறும் வைத்தியம் கிடைக்கிறது. ஒரு பள்ளிக்கூடம்; அதில் கிராமப்பிள்ளைகள் நூறு பேர் படித்தார்கள். ஒரு பிரார்த்தனைக்கூடம்; அங்கே மாலையில் நான் சொற்பொழிந்தேன். திருப்புத்தூரில் ஒரு பெரிய கூட்டம்; ஏசுநாதர் சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்டு, நமது திருத்தொண்டுபற்றிப் பேசினேன். இரண்டு நாட்கள் பிரசங்கம் நடந்தது; ராணிப்பேட்டைக்கு இருமுறை சென்றேன். அங்கும் சன்மார்க்க மடம் உண்டு. ஏராளமான புலவர் கூடினர். கோ. வடிவேலு செட்டியார் என் நண்பராஞர். வேதாந்தமும் சித்தாந்தமும் என்ற பொருள்பற்றி ஒருநாள், உலக சமயங்கள் பற்றி ஒருநாள் பேசினேன். ஆற்காடு சென்று சரித்திரச் சின்னங்களைப் பார்த்தேன். ஊரீஸ் கல்லூரியைப் பார்த்தேன். கிறிஸ்துவப் பாதிரிமார்போல் நாமும் சேவை செய்யவேண்டும் என்ற எழுச்சி பலமானது. இப்படிப் பல ஊர்களைச் சுற்றிவிட்டுத் தஞ்சைக்கு வந்தேன்.

240. திருவையாறு

திருவையாறு சமுஸ்கிரதக் கல்லூரியில் எனது நண்பர் பலர் இருந்தனர்—உலகநாதபிள்ளை, சோமசுந்தர தேசிகர் முதலியோர். இவர்களுடன் தமிழாராய்ச்சிக்காக அங்கே செல்வதுண்டு. அப்படியே தியாக சமாதிக்கும் சென்றுவருவேன். லக்ஷ்மணுசாரியார் வீட்டுக்கும் போவேன். அன்பர் சுந்தரேசன் என்னை வரவேற்பார். தஞ்சை நகராதிபர் பன்னீர்செல்வம் எனது தமிழன்பை மெச்சுவார் அவரால் நான் உலகநாதருக்கு அறிமுகம் ஆனேன். பிள்ளையவர்கள் என்னை அன்புடன் உபசரித்தார். சமரஸபோதினியே என்னைப்பலர் அறியச் செய்தது. தியாகப்பிரம உற்சவத்திற்கு என்னை மாங்குடி சிதம்பர பாகவதர் அழைத்தார். அங்கே சின்ன பெரிய கட்சிகள் நடந்தன. பெண்களுக்காக நாகரத்னம் அம்மாள் பரிந்து வந்தாள். இவரே தியாகாலயம் கட்டினவர். நல்லபக்தை. இனிய பாடகி. பிடில் கோவிந்தசாமி பிள்ளை நாயினுபிள்ளை ஆகிய இருவரும் எனது நண்பர். எனக்குத்தக்க இடமளித்து உபசரித்தனர். தியாகையர் வீட்டில் ராமுடு பாகவதர் உபசரித்தார். அங்கே ஐயர் வழிபட்ட கோதண்ட பாணி படம் உண்டு. அங்கிருந்தே பவனி புறப்பட்டுச் சமாதிக்குவரும். காலையில் அரியக்குடி ராமானுஜர், டைகர் வரதாச்சாரி, சுபேசையர், சஞ்சீவிராவ், வீணை சகோதரர், நாகராஜர், கோவிந்தசாமி பிள்ளை, தட்சிணுமூர்த்தி எல்லாரும் தாளமேள வாத்தியங்களுடன் பஞ்ரத்ன கீர்த்தனங்களைப் பாடினர். வெகு இனிமையாயிருந்தது. பிறகு ஆராதனை நடந்தது. நாகரத்னம் அம்மையாரே தியாப்ரம்ம ஸகஸ்ர நாமம் பாடினர். ராமுடு பாகவர் பூஜை செய்தார். ஆராதனைக்குப் பிறகு சமாராதனை. அந்தமாதிரிச் சாப்பாடு இன்று கனவிலும் காண

முடியாது. எல்லாம் பிடில் கோவிந்தாமி பிள்ளை ஏற்பாடு. ஐயாயிரம் பேர் சாப்பிட்டனர். கல்யாணமகால் கொட்டகையில் பெரிய கச்சேரிகள் நடந்தன. மகாராஜபுரம் விசுநாதையரின் நிதிசாலசுகமா, நாயினு பிள்ளையின் சாந்தமுலேக, நாகரத்னத்தின் ராகரத்னம், முத்தையா பாகவதரின் சாதிஞ்சினே, சஞ்சீவியின் சேதுலார, கோவிந்தசாமியின் எந்தரோமகானுபாவுலு இன்னும் என்காதிற் சுழல்கின்றன, மாங்குடி சிதம்பர பாகவதர் பள்ளிக்கூடத்தில் கதை பண்ணினர். ஏராளமான கூட்டம். தியாகப்ரம்ம விஜயம் ஒப்பற்ற கலைச்சித்திரமாயிருந்தது. எந்துதாகினடோ என்ற பாட்டிற்கு அபிநயம் பிடித்ததும், சல்லரேபூலுக்கு நடனமாடியதும் இன்னும் கண்முன் நிற்கின்றன. கதைக்கு கோவிந்த பிடிலும் தட்சிணமூர்த்தி மிருதங்கமும் பாலுடன் தேனும் ரசமும்போல் இணைந்தன. அந்தமாதிரி கதையும் கச்சேரியும் அதன்பிறகு நான் கேட்டதேயில்லை. நான்குநாள் திருவையாற்றில் இருந்தேன். அங்கே ஒரு வேதாந்த சுவாமிகளுடன் ஞான விசாரம் செய்யும் பேறுபெற்றேன். அது எனது தஞ்சாவூர் கதையைச் சுருக்கமாக்கிவிட்டது.

241. தஞ்சைக்கு நன்றி !

இத்தனை பிரயாணங்களுடும் போதினிக்கு அரிய விஷயங்களும் கலை—தலை அங்கங்களும் எழுதிவந்தேன். நான் எழுதிவைத்ததே இன்னும் சில ஆண்டுகளுக்குக் காணும். சும்மா எழுதுவதில் பயனென்ன? நான் என் ஆயுட்காவியமான பாரதசக்தி ஒன்றையே எழுதக் கருதினேன் மற்றவை யெல்லாம் அதற்குத் துணையே. கிராம சேவை செய் என்றது மனச்சாட்சி. சமரஸபோதினி ஐயர் நல்லவரே அவருக்குக் கோர்ட்டு மூளை.

தொழிலாளருக்கு மாதச் சம்பளம் தர அவர் வீட்டு நகைகளை அடகுவைத்த பரிதாபம் எனக்குத் தாங்கவில்லை. அவர் ஒரு பாங்கு வைத்திருந்தால் நன்றாகச் செழித்திருப்பார். எனக்கும் வியாபாரத்திற்கும் வெகு தூரம். என்னால் முடிந்த தியாகத்தைச் செய்தே பத்திரிகையை நடத்தினேன். அதற்குப்பிராப்தமில்லை. அதைக் கவிழ்க்கச் சிலர் சூழ்ச்சி செய்தனர். நான் அதில் சாதிமத ஸமரஸம் பேசியதில் வைதிகர்களுக்குக் கோபம் வந்தது. கும்பகோணத்திலிருந்து எனக்குத் தாக்கீது வந்தது. அங்கே ஒரு வர்ணப் புலியுடன் நான் ஒருமணி நேரம் போராட நேர்ந்தது. காந்தியை அவர் திட்டியது எனக்குத் தாங்கவில்லை. சென்னையிலிருந்து எனது நண்பர், இந்து துணையாசிரியர் எம். எஸ். ராமசாமி ஐயர் அழைத்தார். அவர் பாலக்காட்டில் தமக்குரிய ஒரு தோட்டத்தில் ஆசிரமம் நடத்தலாம் என்றார் சென்னை சென்றேன்; கரெண்டுதாட் கணேசர் எங்களுக்கு விருந்து வைத்தார். நாராயணசாமி ஐயர் வீட்டில் பஜனை நடத்தினேன். நண்பரிடம் எனது சுத்தசன்மார்க்கப்பணியைச் சொன்னேன். மலையாளத்தில்

அதை நடத்தலாம் போய் எழுதுகிறேன் என்றார் ராமசாமி ஐயர். திரும்பிவந்தேன். எனது தகரப்பெட்டி திறந்திருந்தது. பகீர் என்றது. நல்லவேளையாக பகவான் காத்தார்—நான் பாங்கில் போட வைத்த பெருந்தொகை அப்படியே அடியில் சிக்கியிருந்தது. எதிர்-காலம் பற்றிச் சிந்தித்தபோது, பாமணி ராமச்சந்திரன் வந்தார். "திருஇடைமருதூர் ராமசாமி ஐயர் உடனே அழைத்துவரச் சொன்னார்" என்றார். பணத்தை தஞ்சாவூர் ஐக்கியநாணய சங்கத்தில் போட்டுக் கிளம்பினேன். ராமசாமி ஐயர் என்னிடம் அன்பும் மரியாதையுங்கொண்ட நண்பர். தன்முயற்சியால் ஆங்கிலம் கற்று எஞ்சினீரிங் தேர்ந்து யந்திரப் புலவராகிச் செழித்தார். அவர் அருளும்பொருளும் இணைந்த எனது பாடல்களைப் போற்றினார். என்னை உபசரித்து நல்லுணவு தந்து, ஸ்டேஷனுக்கெதிரேயுள்ள ஒரு தோட்டத்தில் வைத்தார். அது தவத்திற்குத்தக்க இடம். அதற்கு கௌதம நிலையம் என்று பெயரிட்டேன். அந்த இடத்தைச் சிறிது செப்பனிட வேண்டியிருந்தது. அதற்குள் என்னைத் திருவாரூரில் அழைத்தார்கள் சென்றேன். தேர்த் திருவிழாக் கூட்டம்; நான் இருந்த தெருவில் தேர் திப்பிடித்து அழிந்ததைக் கண்டேன். அந்தப் பழைய தேரின் சித்திர வேலைப்பாடுகள் கரிந்தன. மனிதக் கலையின் நிலையை உணர்ந்தேன். தேர்க்கூட்டத்திற்கு, பாட்டுடன் சன்மார்க்க உபதேசம் செய்தேன். பிறகு சென்றேன் நண்பருடன். திருத்தருப்பூண்டி தாலுக்காவில் சுற்றினேன். கிராமம்கிரமமாகச் சென்று சுத்தம் சுகாதாரம், காந்தியம் சமுதாய ஒற்றுமைபற்றி பேசித் தொண்டுபரவினேன். திருக்களாவூரில் திருக்குலச் சங்கம் நாட்டினேன். சுமார் 1500 திருக்குலத்தார் ஒரு மகாநாட்டில் கூடினர். இரண்டுமணிநேரம் அவர்களுக்குப் பேசினேன். சுத்தமும் சுகாதாரமும் கல்வியும் போற்றி, திருக்குலத்தார் முன்னேறும் வழியைச் சொன்னேன். உடனே சேரித் தெருக்களைச் சுத்தம் செய்யத் தொடங்கினோம். பிணங்களை ஊருக்கப்பால் கொண்டு சென்று, அறுக்கச் சொன்னோம். ஒரு பள்ளிக்கூடம் நாட்டினோம். இப்படிப்பல கிராமங்களைச் சுற்றித் திருவிடைமருதூருக்குத் திரும்பினேன். ராமசாமி ஐயர் சமரஸபோதினியிலிருந்து ரிஜிஸ்டர் நோடீஸ் வந்ததாகச் சொன்னார்...நாராயணசாமி ஐயர் வந்து விபரம் சொன்னார். நான் தஞ்சை சென்று வந்தேன். உலகியல்பைக்கண்டேன்... நல்லவேளை சுதேசமித்திரன் சீனிவாசையங்கார் கான் போதினியை வாங்கி நடத்துகிறேன்...நீங்கள் கௌதம நிலயத்திலிருந்தே கட்டுரை எழுதலாம் என்றார். அவர் என்னிடம் ரூ. 28 மட்டும் வாங்கிக்கொண்டு, கணக்குத் தீர்த்தார். தஞ்சாவூருக்கு நன்றி. தஞ்சாவூர் எனக்குத் தந்த அனுபவமும் ஆத்மசோதனையும் எனது சென்னை வாழ்விற் பயனாயின. என் அரசியல் கனவுகளை எழுத சமரஸபோதினி வாய்ப்பளித்தது. அக்கனவுகளை கிராமங்களில் நிறைவேற்றிப் பார்ப்பது அடுத்த வேலை. வாருங்கள் கௌதம நிலயத்திற்கு.

242. கௌதம நிலையம்.

எனக்குப் பிடித்த ஊர்களில் மருதூர் ஒன்று—திரு இடை மருதூர். காவிரியின் ஓங்காரத்தில் தழைத்த பசுவனம்; அந்த மருதக் காட்சியின் அழகில், அருட்கோயில்கள் எழுந்து விளங்குகின்றன. அக் கோயில்களில் வேதாந்த சித்தாந்தக் கலைகள் விளையாடுகின்றன. திரு ஆவடுதுறை, திருப்பனந்தாள், கோவிந்தபுரம் திருநாகேசுரம், சுவாமி மலை கும்பகோணம் முதலிய தலங்கள் தெய்வப் பெரியாரின் தவப் பள்ளிகள். மருதூர் என்றால் பட்டினத்தார், பத்ரகிரியார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், திருமூலர், சதாசிவப்ரம்மம் முதலிய மகான்களின் நினைவுவரும். கௌதம நிலையம் மருதூர் வண்டி நிலையத்திற்கு எதிரே இருந்தது. தென்னை வாழை செந்நெல், மா பலா, புன்னை சூழ்ந்த அந்த இடத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. அங்கே பால்போன்ற நன்னீர் வாவியுண்டு. அதன் அருகே ஓட்டுவில்லைக் கட்டிடம்; செமெண்டுத்தரை மேவியது. அதில் ஒரு பகுதியில் எனக்குத் தவ நிலையம்; மற்றொரு பகுகுதியில் தொழிற்குருகுலம் நடத்தினோம். பாமணி ராமச்சந்திரன் உள்படப் பத்துப்பேர் அங்கே வசித்தனர். கௌதமன் மாணவர் தலைவன். காலை நான்குமணிக்கு ஊதுவேன். எல்லாரும் தோத்திரம்பாடிக்கொண்டே எழுந்து வெளிக்குச் சென்று வந்து, பல்விளக்கியதும் தியானம் பஜனை செய்வோம். பிறகு இடத்தைச் சுத்தம் செய்து தேகப்பயிற்சி நடக்கும். பிறகு காவிரிக்குப் போய்க் குளித்து வருவோம்; கிணற்றில் ஆடை துவைத்து உலர்த்துவோம். அதன்பிறகு தமிழ் சமுஸ்கிரதம் கணக்கு ஆங்கிலம் முதலிய பாடங்கள் நடக்கும். எல்லாரும் உயர்பள்ளி மாணவர். பள்ளிப் பாடங்களையே படிப்பார்கள். சந்தேகம் கேட்டால் விளக்குவேன். ஒன்பதுமணிக்கெல்லாம் மாணவர் வீடுகளுக்குச் செல்வார்கள். பிறகு ஐந்துமணிக்கே வருவார்கள். அரைமணி நேரம் நூற்போம். பிறகு தோட்டவேலை செய்வோம். கிணற்றில் குளித்து, சுத்தமாக வந்து விளக்கேற்றி பஜனை செய்வோம் கீதாபாடம் யோகசித்திபாடம் இருபது நிமிஷம். அதன் பிறகு எல்லாரும் உணவுண்டு வருவார்கள். பூமி சாஸ்திரம் வானசாஸ்திரம், பௌதிகரசாயன சாஸ்திரம், நடக்கும். உலகப் பெரியார் வரலாறும் சொல்லுவேன். அதன்பிறகு எனது புதிய இலக்கியங்களைப் படிப்பேன். உலகக் கவிகளின் வாக்குகளைப் படிப்பேன். வகுப்புப்பாடங்களை நினைப்பூட்டுவேன். தேசசரித்திரத்தையும் மஹாத்மாஜியின் உபதேசங்களையும் விளக்குவேன். ஒன்பதரை மணிக்கு அருட்பாடல்கள் பாடி, சிறிது தியானம் செய்து, பத்து மணிக்கு மாணவர் பள்ளிகொள்வார்கள். பிரமசரியத்தின் மேன்மையை அவர்களுக்கு விளக்கியதால், எல்லாரும் தூயஉள்ளத்துடன் நடந்தார்கள்.

இந்த இடத்தை எனக்களித்த ராமசாமி ஐயர், மறக்க முடியாத அன்புமணி. என்னை அறிந்தவருள் அவர் ஒருவர். எனது கிராமத்

தொண்டு வெற்றி பெறஅவர் பெருமுயற்சி செய்தார். அவர் கொள்கைக்கே வாழும் தொழில்வீரர். எண்ணியதை உடனே சாதிக்கும் தீரர். மேடைமினுக்கும் மாலையும் கரகோஷமும் தேர்தல் வேட்டையுமாயிருந்த அந்தக்கால அரசியலை நாங்கள் வெறுத்து, நிலையான பணிசெய்யப் புகுந்தோம். ஐயர் தமது யந்திர மூளையால் ஒரு புதிய சர்க்காவை உருவாக்கினார். ஸிங்கர் தையல்யந்திரம்போல் அதைக் காலால் அழுத்தி விரைவாக நூற்கலாம். அதிலேதான் நாங்கள் நூற்றோம். நாட்டின் வறுமைமடடைப்பிணிகள் ஒழியத் தொழிலும் கல்வியும் பரவவேண்டும் என்று கருதினோம். ஓர் இரவு தமிழருக்குத் தொழிற்கல்வியும் ஸயன்ஸ் அறிவும் புகட்டவே பத்திரிகை தொடங்கலாம் என்றேன், மறுநாளே ஐயர் காகிதத்திற்குப் பணம் அனுப்பினார். கும்பகோணம் க்ஷேமளாம்பாள் அச்சகத்தில் குத்தகை பேசினார். நான் பேனாப்பிடித்தேன். ஐயர் யந்திரப்பகுதி எழுதினார். நான் பௌதிகம் ரசாயனம், உடல்நூல் உயிர்நூல், தாவரநூல், காலத்திற்கேற்ற முற்னேற்றப் பாடல்கள், தொழில்வளர்ச்சிக் கட்டுரைகள், கிராமசேவைத் திட்டம் எல்லாம் எளிய நடையில் எழுதினேன். ஒரே வாரத்தில் பத்திரிகை தயாரானது. நாடெங்கும் விளம்பரங்கள் பறந்தன. பத்திரிகை நல்ல செலவானது பத்திரிகை தொடங்கிய நாள் பஜனை செய்தோம். நான் பாடும்போது, அவர் குழந்தை என்மடிமேல் தாவியமர்ந்தது. கைத்தளம்போட்டது. அந்தக்குழந்தை பெரிய சங்கீத வித்வானாகும் என்றேன். அந்தக்குழந்தையே இப்போது புகழ்பெற்ற புல்லாங்குழல் மகாலிங்கம். இயற்கையாக அவனுக்குக் குழலிசை வந்தது. அதைத் தந்தை தகுந்தமுறையில் பேணி வளர்த்தார்.

தொழிற்கல்வி பள்ளிக்கூடங்களில் பரவியது. ஒரு பெரிய பொட்டலை தர்காஸ்துக்கு வாங்கி, குடில்கள்கட்டி, ஏழைகளைக்குடியேற்றுவது. அங்கே விவசாயபண்ணை, பால்பண்ணை, நூற்பு, நெசவு, பாயப்பின்னல், கூடைமுடைதல், சாயம்போடுதல், தோல்வேலை, உரம் சேர்த்தல், செடி கொடி வளர்த்தல், தொட்டி-பானை-வட்டில் வனைதல் பிஸ்கெட் பெப்பர்மெண்டு செய்தல், தக்காளிச்சாறு பிழிதல், கம்பு-கேப்பை- கோதுமை- அரிசி- உளுந்து- பாசிபருப்பு- மா அறைத்து டப்பாக்களில் அடைத்து விற்றல், தொழிலால் வரும் பண்டங்களை விற்க ஐக்கியநாணயசங்கம் காணல். ஏழைகளிடம் உணவுச்சாமான்கள் தந்து, பசும்பொருள் வாங்கிப் பண்டமாற்றுச் செய்தல், விவசாயத்திற்கேற்ற ஆர்டிஸியன் கிணறுவெட்டுதல். தொழிற்சாலை ஊழியருக்கெல்லாம் பள்ளிக்கூடம் வைத்தியசாலை பொதுவான உணவுச்சாலை காட்டல். இவை எங்களுடைய கிராமசேவாசாதனம். என்னிடம் 500000 இருந்தால் இதை நிறைவேற்றுவேன். அந்தக்காலம் இத்தகையகாரியங்களுக்கு ஆதரவில்லை. ஆதலால் பத்து மாணவரைக் கொண்டு, இயன்றமட்டும் கொள்கையை நிறைவேற்றினோம்.

மாணவர் நூற்பர், தோட்டவேலைசெய்வர், ரப்பர்ஸ்டாம்புகள் செய்வர், யந்திர நுட்பம் பயில்வர்

ஆத்மசோதனையில் இது முக்கியமான படலம். என்னை இறைவன் பணிக்கே அளித்துவிட்டேன். அவன் எப்படி என்னை ஊட்டுகிறான் என்று சோதித்தேன். என்பணம் பாங்கில் தவணைவட்டியில் இருந்தது. மற்றப்படி ஒருபைசாக் கிடையாது. இந்த நிலையிலே தான் இறைவன் "நான் இருக்கிறேன் உன்கடமையைச்செய்" என்று காட்டினான். ஐயர் பசு நிரம்பக்கறக்கும். எனக்கு ஒருசேர்பால் அனுப்புவார். நான் எதிர்பாராமலே அன்பர் கனிகளுடன் வருவார்கள். யாராவது கனி கொண்டுவந்து நான் தியானம் செய்யும்போது வைத்துச் செல்வார். நிட்டையிலிருந்து விழித்ததும் எதிரே அன்பரும் இருப்பார். உணவும் இருக்கும். இந்த அதிசயம் கண்டபிறகு நான் பாங்குப்பணத்தை தருமம் செய்யவே குறித்தேன். கைக்கு வந்த பணத்தையும் ஏழைகளுக்கே தந்தேன். ஐயர் எனது தேசியகீதங்களைச் சிறுநூலாக அச்சிட்டு ஏராளமாக விற்றார். ரயிலில் பாடிவிற்க ஏற்பாடுசெய்தார். சுதேசமித்திரனில் கட்டுரைகளும் பாடல்களும் எழுதினேன். மாதம் பத்து பதினைந்து வந்தது. அரியதுறவிகளும் புலவர்களும் வருவார்கள். அவர்களுடன் உயர்ந்த நூல்களைப்படிப்பதும் தியானிப்பதும் இன்பமளிக்கும். நான் காவேரியாடி வரும்போது ஒருமடத்தில் சந்தனத்தி முன் ஒருபெரியார் தியானித்தார். நான் அவர் அருகே அமர்ந்து தியானித்தேன். மகாகுண்டலி ஓட்டம் உணர்ந்தேன். அவர் அக்கினியைச் சிவமாக உபாசிக்கும் அக்னியோகி. அவரிடம் அடிக்கடி திருமந்திரரகசியங்களைக் கேட்டறிந்தேன்.

ஆறுருவி ஏழேறி ஆனந்தத் தேனுண்ணும்
சீறியெழும் ஆதாரத் தீ.

என்ற ஈரடி அப்போதெழுந்தது. திருநாகேசரத்தில் கலியுக முருகன் இருந்தார். பொன்மேனியும், வெண்கலக்குரலும், கட்டுமஸ்தான தசைகளும் உடையவர். அவர் அருட்சோதிவள்ளலார் சொன்னபடியே உடலைப்பேணும் வகையை விளக்கினார். நான் சில கற்பசாதனங்கள் செய்தேன். வல்லாரை பொன்னாங்காணி, மணத்தகாளி, தூதுளை இவற்றைப்பாலுடன் சேர்த்து உண்டேன். நூறு பிராணாயாமம் செய்து, மூன்று மணிநேரம் தியானித்த பிறகு உண்டால், அந்தராத்மாவின் மகிழ்ச்சியைக்காணலாம். கனிகள்கூட அரிதாகவே உண்டேன். அமிர்தலிங்கம் சுந்தரம் போன்ற ரமணபக்தர்கள் அடிக்கடி வந்தார்கள். மஹர்ஷிகளின் இதயவித்தையைப் பயின்றேன். அப்போது நான் எதுவோ அதுவே எல்லாம் என்ற ஏகரசம் உதித்தது நான் இருப்பது பலருக்குத் தெரிந்தது கும்பகோணத்தில் அப்போதிருந்த சோமயாஜி, ராகவன் முதலிய தேசபக்தர்கள் என்னைவந்து காண்பார்கள். கும்பகோணம் மகாமகக்குளத்திற்கெதிரே சாமிநாதன் ஓட்டல்

நடத்தினர். அவர் என்னைக்கனிகளுடன் வந்து கண்டு' "தங்கள் பாட்டை நாங்கள் கேட்கவேண்டும், வருக" என்று அழைத்தார். நான் ஏராளமான இசைப்பாடல்களும் வீரப்பாடல்களும் பாடிவைத்திருந் தேன், சென்றேன் கும்பகோணத்திற்கு, பெரிய கொட்டகைபோட்டு, முருகன் சிவன் கண்ணன் படங்கள் வைத்து அலங்கரித்திருந்தனர். பக்க வாத்தியங்கள் பக்காவாக அமைந்தன. நான் முழு ஆவேசத் துடன், கீர்த்தனாஞ்சலிப்பாடல்களும் தேசியகீதங்களும்பாடி, அபிநயம் பிடித்து நிப்பிரதட்சிணம் செய்தேன். ராகவன் என்னுடன் ஒத்துஆடி ஞன். பக்திகீதங்களுக்குப்பிறகு சுதந்திரநடனம் தொடங்கினேன். சிவா ஜி குருகோவிந்தசிங்கன் போர்களைப்பாடி ஆடினேன். பாடல்எல்லாரை யும் உருக்கியது. பிறகு சூரஸம்ஹாரப்பாடல்கள் நடந்தன. அவை நவரஸ நடனாஞ்ஜலியில் உள்ளன. இந்த பஜனை நாலைந்து தடவை நடந்தது. இதனால் கும்பகோணத்தில் பல அன்பர் கிடைத்தனர். நாமும் நாடும், நமது சமுதாயம், புதியவாழ்வு என்ற பொருள் பற்றி பொதுக்கூட்டத்தில். பேசினேன். ஒரு சமணர் என்னை வீட்டிற்கு அழைத்துச்சென்று உபசரித்துச் சிந்தாமணி படிக்கக்கேட்டார். இந்தச் சமணரிடமிருந்தே டாக்டர் சாமிநாதையர் சிந்தாமணியில் வரும் சமண சமயக் குறிப்புகளை அறிந்தார். ஒருதரம் அறிஞர் சுந்தரராமையரைக் கண்டு பேசினேன்; அழகான ஆங்கிலத்தில் தெளிவாகப்பேசினர் ஸ்ரீமத்சங்கரரின் அத்வைதத்தை அவர் சர்வசமரஸசன்மார்க்கம் என்று விளக்கியபோது, விவேகானந்தர் நினைவே வந்தது. விவேகானந்தரை நேரேகண்டு அளவளாவியதையும் அறிஞர் வர்ணித்தார், சுந்தரராம ரிடமும் அவரது மணிப்புதல்வர் ராமசாமி சாஸ்திரிகளிடமும் எனக்குப் பெருமதிப்புண்டு. ஒருநாள் வக்கீல் மகாலிங்கையர் என்னை வீட்டிற்கு அழைத்து உபசரித்து, தற்கால விபரீதங்களைத் தெளிவாகச் சொன் ஞர். குலதர்மம். கலிதர்மமானது. சீர்திருத்தம் என்று, பழைய கட்டுப்பாடுகளை உடைத்து, பாரததர்மத்தைக் கெடுக்கிறீர்கள். நீங்கள் சமரஸபோதினியில் எழுதிய சமத்துவத்தை ஒப்புகிறேன். ஆனால் பிராமணதர்மம் மறைந்து போகிறதே. காந்தியின் ஹரிஜன மோகத்தால் பிராமணனே சேரியில் தள்ளப்படுவான்போலிருக்கிறதே என்று வருந்தினர். எனது சமரஸபோதினிக் கொள்கை பிடிக்காத இரண்டு வைதிகரும் அவருக்குப் பின்பாட்டுப்பாடினர். நான் உப நிஷத்தையும் கீதையையும் ஆதாரமாகக்கொண்டு என்றுமுள்ள பண்டறத்தை மாற்றமுடியாது, யுகதர்மமான காலக்கடனை அவசியம் டேணியே தீரவேண்டும். கடிகாரத்திற்குத் தினம் சாவியேற்றுவது போல், சமுதாயத்திற்கும் புதிய ஓட்டமளிக்க வேண்டும். மனு ஆங்கிலம் படிக்கவில்லை என்று நாம் உலகமொழியைப் படிக்காமல் இருப்பதா? ஒருவர் கோர்ட்டில் வேதபாஷைபேசினால், கேஸ் என்ன ஆகும்? மானிட வாழ்வில் காலம் இடம் சந்தர்ப்பங்களுக் கேற்றபடி லௌகிகசம்பிரதாயங்கள் மாறும். அவையே யுகதர்மம்.

இந்தக்காலம் ஆண் பெண் சமம்; ஆணுக்குள்ள மணவுரிமை பெண்ணுக்கும் உண்டு. காலவெள்ளத்திற்குக் கரைபோட்டுத் தடைசெய்ய நம்மால் முடியாது. காந்திமகான் வழியேவழி பின்பற்றுவோம், என்றேன். கும்பகோணம் சங்கராசாரியார் மடத்தில் புலவர்சங்கம் கிடைக்கும். வேதம் ஓதக்கேட்பேன். இப்படிப் பலவழிகளில் தொண்டும், அறிவுவளர்ச்சியும் யோகமுமாக கௌதம நிலயத்தில் இருந்தபோது, ஒருவைராக்கியம் உதித்தது.

கும்பகோணம் கலாசாலை ஆண்டுவிழாவில். மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் தலைமைவகித்து மாணவரும் சமூகத்தொண்டும்பற்றிப் பேசினர். அவரது குழலினிய ஆங்கிலம் என்னை மகிழ்வித்தது. அவரைத் தனியாகச்சென்று கண்டேன். அவருக்கு காந்தியிடம் பரம பக்தி, ஆனால் கதர் சட்டமறுப்பு என்றால் அவர் எதிராடினர். நானும் சிறிது வாதாடி, காந்தியே தேசரக்ஷகன் அவர்வழியேவழி என்றேன். பிறகு எனது கிராம சேவைத்திட்டத்தைச் சொன்னேன். "தங்களைப் போன்ற சந்யாசிகள் கிராமம் கிராமமாகச்சென்று, உபதேசமும் சமுதாயசேவையும் செய்யவேண்டும்." என்றார். அப்படித்தான் உத்தேசம் என்று திரும்பியதும் ராமச்சந்திரன் வீராவேசமாக "கிளம்பும் பாமணிக்கு; அங்கே எல்லாம் தயார்" என்றார். நீண்ட மௌனத்தில் ஆழ்ந்தேன். ஒருமாதம் மௌனம். யோகசித்தி விளக்கம் எழுதியெழுதிச் சிந்தித்தேன். புதிய புதிய எண்ணங்கள் மௌனப்பொழிவில் பூத்தன. மௌனம் கலைந்ததுமே "புறப்படு சந்துரு" என்றேன் ஒரே ஆடை, ஒரு துண்டு. காகிதம் பேனா கீதையோகசித்தி-இவ்வளவே என் உடமை. பணம் இல்லை. கால் நடையாகவே சென்றோம். சந்துரு கீதைபடித்துக்கொண்டே வந்தார். வேறுபேச்சில்லை. கிராமம் கிராமமாகச் சென்றோம். கோயிலில் தங்கினோம். மாலை அனுட்டானம் ஆனதும் தியானம். பிறகு "மகாஜனங்களே" என்று பேசத் தொடங்குவது. கிராமஜனங்கள் கூடுவார்கள். இரண்டு பாட்டு நடக்கும். யாராவது சாப்பிட அழைத்துச் செல்வார். எந்த ஊரிலும் பொதுச்சாவடியோ மடமோ கோயிலோ உண்டு. சந்துரு சுவாமிகளுக்குப்பால்பழம் உணவு என்றதும், சுத்தமான பாலும் பூவன் பழமும் வரும். பக்குவத்திற்கேற்றபடி யோகசாதனம் பேசினேன். சிலர் சாதனமும் செய்தனர். காலை குளித்து ஜபதபம் முடித்து கீதை படித்து விளக்குவேன். மாலை யோகசித்திப்பேச்சு. இடையே காந்தி சேவை நடக்கும். இப்படியே திருவாரூர் தாலுக்காவைச்சுற்றி, மன்னார்குடிதாலுக்காவும் பார்த்துக்கொண்டு திருத்தருப்பூண்டி சென்றோம் கோமில்லா ஆசிரமத்தில் தொண்டுசெய்த ஒருவரும் எங்களுடன் வந்தார். முடிவில் பாமணிக்கு வந்தோம். கெட்டிமேளமும் கலியாணக்கோலமும் கண்டோம். சந்துரு தம்பிக்குக் கலியாணமாகி சமாராதனை நடந்தது. சுபதினத்தில் நானும் வந்தது அவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது. கிராமஜனங்களின் மாசற்ற உள்ளமே உள்ளம்.

243. பாமணியில் அறநிலயம்

நான் மறக்கமுடியாத கிராமம் பாமணி. பாமணியாற்றங்கரையில் மருதநிலம்; எங்கேதிரும்பினாலும் நெல்வயல். திருத்தருப்பூண்டி நிலயத்திலிருந்து மூன்றுமைல் நடப்பதே தெரியாது. ஐயனார் கோயிலைத் தாண்டினால், முத்துக்குருக்கள் சத்தம் கேட்கும்: "சந்துரு, கதவைத்தட்டடா. பால்கறந்து எத்தனைநாழியானது!" பால் யாருக்கு? எனக்கே. நான் எங்கே? முத்துக்குருக்களின் அன்பான வீட்டில் தனியறையில் நிம்மதியாகத் தியானிக்கிறேன். அது ஒரு குகைபோல், ஒரு அறைக்குள் அமைந்தஉள். எட்டடிச்சதுரம் உள்ள அதில்ஞானம்பிகை விக்ரகம் ஒருபுறம் உள்ளது. பாரதசக்தி அம்பிகை பாதத்தில் உள்ளது, தியானிப்பது பாடுவது. இரண்டேவேலை கதவுச்சத்தம்; திறக்கிறேன். பாலும் மணத்தக்காளி இலையும் வருகின்றன. மணத்தக்காளி இலையைக் கையால் கசக்கிப்பிழிந்து பால்சாப்பிட்டு, எதிரேயுள்ள ஊருணியில் கைகழுவி வாய்பூசி வருகிறேன். இதற்குள் அன்பர்கள் யோகசித்தியைப்பாராயணம் செய்கிறார்கள். வேதபாராயணம் போல் ஆரபியில் இனிமையாக முப்பது குரல்கள் சேர்ந்து பாடுவது பேரின்பம் அளிக்கிறது. அந்தமாதிரி அன்பர்கூட்டம் பாமணியிலே தான் காணமுடிந்தது. அன்புமணி ராமச்சந்திரன் மாசற்ற நேர்மையும் வஞ்சமற்ற உள்ளமும் எளிய நடையும் சேவாவிரதமும் கொண்ட உத்தமர். அவர் தந்தை சுந்தரமையர், தாய் சுப்புலட்சுமி, தம்பியார் குழந்தைகள் எல்லாரும் பக்தி சிரத்தையுடையவர்கள், முத்துக்குருக்கள் தாராளக்கையும் கரவற்ற நெஞ்சமும் சுதந்தர நடையும், அஞ்சா நாவுங்கொண்டவர்; ராசையா பழுத்த சைவர், ஈகைமிக்க செல்வர், சேஷையா ஆளும்பெருந்தவர் பேச்சும் பெரியதோரணை, செயலும் பிரமாதம்: ரங்கநாதர் ராமபக்தர், ராமாயணப்பிரியர்: இனிமையாகப் பாடுவார். ஐயாவு சிக்கனச் செல்வர், சைவசீலர், ராமசாமிபிள்ளை எளியநடையும் தொண்டுத்திறமையும் மிக்கவர், ஸ்ரீநிவாசமுதலியார் வைணவர், யோகசித்தியை இனிமையாகப் படிப்பார் அன்புமிக்க அனுபவக்கிழவர், சீனிமுதலியார் போட்டிபோட்டு நன்மை செய்பவர். பொறையார் காந்தி பக்தர்; எனது கதர்ப்பணியில் பெரும் பங்கு கொண்டவர். செங்கல் மூப்பனார் உழைப்பாளி அறவோர், ராதா, வெள்ளைச்சாமி மணி சண்முகம் வெங்கடாசலம் திருத்தருப்பூண்டி கிருஷ்ணமூர்த்தி முதலியோர் தொண்டர்— இப்படி இன்னும் பலர் காலை மாலை அங்கே கூடுவர். எல்லாரும் குளித்து, திருமண் அல்லது விபூதி இட்டுக்கொண்டு பக்தியுடன் ஜபம் செய்து, எனது பாடல்களைப் பாடுவார்கள். பாட்டுடன் ஹார்மோனியம் மிருதங்கம் வாசிப்பவர் திருக்குலத்தார் இவருள் எல்லாச்சாதியும் உண்டு சாதி வேறுபாடேகிடையாது. காலை ஏழரைமணிக்கு யோகசித்தி நடக்கும்; மாலை ஆறரைமணிக்கு பாரதசக்திப்படலங்கள் நடக்கும். பரமஹம்ஸ விவேகானந்த சரித்திரம் அப்போது நடத்தினேன். அத்துடன் காந்தி

பெருமையும் சொன்னேன். வாரம் இரண்டுநாள், சிவன்ராத்திரி, பௌர்ணமி, பொங்கல், தீபாவளி நாட்களில் தீபப்பிரதட்சிணத்துடன் பஜனை நடக்கும். அதில் கிராமபுனருத்தாரணப் பாடல்கள் பாடி ஆடுவோம். நான் பாடிய எல்லாப்பாடல்களையும் எல்லாரும் எழுதிக்கொண்டு இனிமையாகப் பாடினர். தெய்வபக்தியின் மூலம் ஆத்மநேயமும் அதனால் ஒற்றுமையும் அதனால் தூய வாழ்வும் அதனால் தேசசேவையும் படிப்படியாக உண்டாயின. பத்து நாள் இப்படி கோஷ்டிகானமும் பாராயணமும் ஆனபிறகு, எல்லாரும் ஞானம்பிகை சந்நிதியில் கூடினோம். நான் அம்பிகையைச்சுத்தம் செய்து, அபிஷேகம் நடத்தி, அலங்கரித்து தீபதூபம் காட்டி பஜனைசெய்து. அந்த ஆவேசத்தில் பேசினேன்.

பாமணி மணிகாள், நாம் எல்லாரும் ஞானம்பிகை சந்நிதியில் கூடியிருக்கிறோம். நாம் அவள் மக்கள். ஒருகுலச் சகோதரர்போல் நாம் வாழவேண்டும். சாதிமதபேதமே கூடாது. இந்தக்கோவில் சிறிது; இது பழையகோயில்; இதில் கல்லுருவை வணங்குகிறோம். இதைத் தாண்டி எல்லையற்ற உலகக்கோவில் உள்ளது; வானமே அதன் கோபுரம். இந்தக்கோயிலில் நாம் உள்ளன்புடன் ஒன்றாயிருப்பது போல், உலகக் கோயிலில் ஒற்றுமையாக வாழ்வோமாக! இங்கே அர்ச்சனை நிவேதனம் செய்கிறோம். சாமிக்குக் கைகாட்டி நாம் உண்கிறோம். ஆனால் உலகக்கோயிலில் உண்மையாகவே உயிர்க்கடவுள் உள்ளது. அதற்குத் தொண்டு செய்வோம், வீட்டுக்கு உழைப்பதுபோல நாட்டிற்கு உழைப்போம். அதற்கு நாமெல்லாரும் இன்று அறநிலையம் காண்போம். நாம் அனைவரும் சேர்ந்து, அறநிலையத்தொண்டர். கிராமம் முழுதும் அறநிலையமே. அதைச் சுத்தமாக சுகாதாரமாக செழிப்பாக வைத்திருப்பது நமது கடமை. இந்தக்காலம் எங்கும் வறுமையும் மடமையும் தாண்டவமாடுகின்றன. நோய்நொடி- கவலை மாந்தரை வாட்டுகின்றன. பஞ்சமா பாதகக் காடாயிருக்கிறது உலகம். காமம் வெகுளி மயக்கங்களால் மனம் அழிந்து வாழ்வு நரகமாகிறது. நமது முன்னோர் சொன்ன பக்தி சிரத்தை பரோபகாரம் ஒழுக்கம் எல்லாம் காற்றில் பறந்தன. இக்காலத்தீமைகளை மாற்றி, எல்லாருக்கும் நன்மையும் இன்பமும் அமைதியும் அறிவும் அருளும் துலங்கவேண்டும். அதற்குத்தகுந்த நடைமுறைகளை நாம் பழகுவோம். முதலில் நாம் திருந்தினாலே நம்மைப்பார்த்து பத்துப்பேர் திருந்துவார்கள். இதற்காக நாம் எல்லாரும் இந்தஊரில் அறநிலையம் நாட்டுவோம். இந்த அறநூலான யோகசித்தியைப் போற்றிவாழ்வோம். இதில் நல்வாழ்விற்கு வேண்டிய சாதனங்கள் உள்ளன, பக்தி பரோபகாரம். இரண்டே முதற்படிகள். நாடுவாழ வீடுவாழும். நாம் திருந்த நாடு திருந்தும் என்ற சுருதிவாக்கியத்தை அனுட்டிப்போம் நமது காலத்தை திவ்ய நாமத்திலும், தாயகினைவிலும், புண்ணியச்செயல்களிலும், தேசசேவையிலும் செலவிடுவோம், நமது குறைகளைக்கண்டு பிடித்துத் திருந்திக்

கொள்வோம். அறிவை வளர்ப்போம், அன்பை வளர்ப்போம். நல்ல தொழில்களைச்செய்து, மானமாகப்பிழைப்போம். இந்த ஊரையே அறநிலையமாக்குவோம், இங்கே சுத்தமும் சுகாதாரமும், கல்வியும். தொழிலும், பக்திகானமும் நிரம்பச் செய்வோம். முதலில் நமது நாட்டுக்கு வழிகாட்டும் மஹாத்மாவின் ஆணையைப் போற்றி, இராட்டினம் நூற்று, தறிபோட்டு எல்லாரும் கதர் அணிவோம். இந்தப்பேச்சு எல்லார் மனதிலும் பதிந்தது. உடனே ராசையா சேசையா ரங்கநாதம் அனைவரும் அறநிலையத் தொண்டரானார்கள். உடனே நூறு ருபா வசூலித்தனர். ஐயப்பா தமது தோட்டத்தைத் தந்தார். அதில் எனக்காக ஒரு பர்ணசாலை போட்டனர், காலை ஏழுமுதல் ஒன்பது வரை மாலைஆறுமுதல் இரவு ஒன்பதுவரைபஜனை பிரசங்கம், தியானம் நூற்பு, படிப்பு தேகப்பயிற்சிகள் நடக்கும். மற்றநேரங்களில் நிம்மதியாக எனது தியானமும் எழுத்து வேலையும் தனி அறையில் நடக்கும். யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். குறித்த நேரத்திலேதான் பார்ப்பது. மற்றநேரத்தில் யார் வந்தாலும் முத்துக்குருக்கள் "நெவர் மைண்ட் இப்போ பார்க்கமுடியாது" என்பார். சிந்து தெம்மாங்கு மெட்டுக்களில் கிராமஜனங்களுக் கேற்றபடி புதிய பாடல்கள் பாடி, ஆடி, பாட்டாலேயேஉணர்ச்சியும், உணர்வாலே நல்வாழ்வும், அதனால் தேசசேவையும் நடந்தன. எட்டுமாதத்தில் அரியகாரியங்கள்நடந்தன. சிலதலைவர்கள் வந்து பார்த்து மகிழ்ந்தனர். பத்திரிகைகளிலெல்லாம் எனது கிராமத்தொண்டுகள் வாராவாரம் வந்தன. லோகோபகாரி, மித்திரன், ஸ்வராஜ்யா, யங்மென் ஆப் இந்தியா, கார்டியன் முதலிய பத்திரிகைகளில் எனது கிராமசேவைக்கட்டுரைகள் வந்தன. தேசத்தொண்டர்கள் கிராமசேவை செய்ய எழுச்சிபெறவே இவற்றை எழுதுகிறேன்.

244. மக்கள் பரிதாபம்!

கிராமங்களைச் சுற்றிப் பார்த்தேன்; நகரமேடை என்னை நகைத்தது. நாட்டில் ஏழுலட்சம்கிராமங்கள்; 2316நகரங்கள்; கிராமங்களில் முப்பதுகோடி நகரங்களில் மூன்றுகோடி ஜனங்கள். நூற்றுக்குத் தொண்ணூறு கிராமவாசிகள். நாட்டின் ஆணிவேர் கிராமம். வேர் பூச்சியரித்து அழுகிப்போனால் மரம் என்னவாகும்? அந்தவேரைச் சீர்படுத்தி நீர்வார்த்துச் செழிப்புறுத்துவதே தேசசேவையாகும். பஞ்சை மக்கள் படும்பாடு... சிவனே!

ஊணுடை யில்லை ; உழைத்தும் பிழைப்பில்லை ;
நாணுடை யார்க்கு நலமில்லை—பேணுடலம்
வற்றி றெண்டு வயிறேக்கி வாழ்வெல்லாம்
சுற்றுங் கவலை சுழன்று.

ஆறுமாதம் வயல்வேலை: ஆறுமாதம் வேலையில்லை. வேலைசெய்து

வந்தது கடனுடனுக்குப்போகும். வீட்டில் வறுமை, நோய், கவலை. குடிக்க நல்ல தண்ணீர் இல்லை அழுக்குத்தேக்கத்தில் எருமைகுளிப்பாட்டி, சிக்குப்பிடித்த ஆடை தோய்த்து, ஆட்கள் முழுகி பாசம் பிடித்த அதையே சமைக்க குடிக்க உபயோகிக்கின்றனர். ஆயிரம் நோய்கள் அவர்களைப் பிடிக்கின்றன. வைத்திய உதவியில்லை. ஆயிரம் பேர் உள்ள கிராமத்தில் ஐந்து மிராசுதார்கள் ஆண்டைகள்; மற்றவர் அடிமைகள். அடிமைகள் படும் மானங்கெட்ட நரகவேதனை சொல்லி முடியாது. பெண்கள் கற்பிழக்கிறார்கள். ஆண்கள் குடிசூத்தி சூதாட்டங்களில் மதியிழந்து, கதியிழந்து பஞ்சையாகிறார்கள். வறுமைத்துயரால் பஞ்சமாபாதகங்கள் தலைவிரித்தாடுகின்றன. பள்ளிக்கூடமில்லை; இருந்தாலும் படிப்பில் கருத்தில்லை; படித்தாலும் பயனில்லை; கல்வியை வளர்க்க வழியில்லை. "ஏதாச்சும் நாலுகாசு சம்பாரிச்சு வவுத்தெ களுவிக்கிட்டாப் போதும்." என்கிற நிலைதான்! ஒரு கிராமத்திலாயினும் நல்ல நிலையும் அகமகிழ்வும் காணவேண்டும் என்று நான் முயன்றேன்.

245. ஆக்கவேலைகள்

பாமணி மிராசுதார்கள் என் மனமறிந்து நடந்தனர். ஆதலால் எனது கனவுகள் அங்கே நிறைவேறின. முதலில் சோம்பலை ஒழிக்கக் கதர்த்தொண்டு செய்தேன், காலை பஜனை பிரார்த்தனை ஆனதும். அறநிலையத்தில் எல்லாரும் ராட்டை நூற்று ஒரு சிட்டம் போடுவர். ஏழைகளுக்கெல்லாம் நானே நூற்கப்பயிற்றினேன். சேரிக்கெல்லாம் நானே சென்று காந்திமகான் கட்டளையைச் சொல்லி நூற்கச் செய்தேன். தீபாவளிக்குள் அறநிலையத்தார் பாமணியில் நெய்தகதர் உடுத்தவேண்டும் என்ற விரதம்பூண்டோம். அதற்கு நூல் போதாது. நான் திருச்செங்கோடு காந்திஆசிரமத்தில் அப்போது கதர்ப்மணிசெய்த ஸ்ரீராஜாஜிக்கு எனது கிராமசேவை பற்றியும் நூல் தேவைப்பற்றியும் எழுதினேன். அவர் "நல்லகாரியம்; வளரட்டும்." என்று ஒரு சாக்குக் கதர் அனுப்பினார்- ஐம்பத்திரண்டு ரூபா தந்து வாங்கினேன். சந்துரு வீட்டில் பழைய தறி இருந்தது. அதைச்சரிப்பண்ணி கிராமக் காத்தானைக்கொண்டு, எல்லாரும் சேர்ந்து பாவுபோட்டு ஊடுநெய்வித்தோம். தீபாவளிக்கு அன்பர் கதரே அணிந்தனர். நானும் என் கையால் நூற்று நெய்த ஒற்றைத்துண்டணிந்து கிராமமக்களையெல்லாம் கூட்டி பெரிய பஜனையும் பிரசங்கமும் நடத்தினேன். அப்போது பாடியபாடல்களையெல்லாம் காந்தி கீர்த்தனையில் சேர்த்திருக்கிறேன். "சக்கரம் சுழற்றிடுவோம்." "கதர்வாங்கலியோ" முதலியவை கிராம ஜனங்களுக்குப்பாடியவை. தீபாவளி விற்பனைப்பணத்தை முதலாக வைத்து, கதர் அபிவிருத்தி செய்தோம். அதற்குப் பொறையார் பொறுப்பேற்றார் சுற்றியுள்ள கிராமங்களில் பாட்டும் ராட்டுமாகச் சென்று செல்வச்சகரம் சுழலச் செய்தேன். செங்கல் அறுத்துவிற்றுச்

செழித்த ஒருசெல்வர், தமது கிராமத்திற்கு அழைத்தார். அவர் அங்கே கோயில் சத்தரம் வைத்து, குளம்வெட்டி தருமம் செய்தார். அவரிடம் ஒரு தச்சன் இருந்தான்; இராட்டைகள் செய்து அங்கே பஞ்சுதந்து கதர்நூல் உற்பத்தி செய்தேன். குமாரசாமிப் பொறையார் வெகு உற்சாகி. இரண்டு கிராமங்களில் முப்பது நாற்பது ராட்டைகள் செய்தார். கோயிலில் வைத்து நான் பஜனைசெய்து தீபதூபம் காட்டி தேவார முழக்கத்துடன் திறப்புவிழா நடத்தினேன். ஜனங்கள் தெய்வவிசுவாசத்துடன் ராட்டையை ஏற்றுச் சுழற்றினார்கள். நான் எல்லாருக்கும் பஞ்சுகொட்டி பட்டைபோட்டு நூற்றுப்பழக்கினேன். ஒரே நாளில் கற்றுக்கொண்டார்கள். ஒருபெண் பத்தேநிமிஷத்தில் கற்றுக்கொண்டு துளிக்கூட அறுக்காமல் மெல்லிய நூலிழுத்தாள். இப்படிச் சுற்றுக்கிராமங்களில் நூற்றசிட்டங்கள் பாமணிக்குவரும். பணந்தந்து வாங்கித் தறிபோடுவோம்.

கிராமசுகாதாரம்

பஜனையால் சன்மார்க்கமும் தேசியத்தொண்டும் நடந்ததுடன் சுகாதாரமும் சேரானது. அதற்குப்பாட்டுப்போட்டு அபிநயம் பிடித்தேன். நகைச்சுவைப்பாடல்கள் மக்கள் மனதைத்தொட்டன. மறுநாள்முதல் யாவரும் தெருக்களில் ஆபாசம் செய்ததில்லை. குளத்தில் கால்கழுவியதில்லை. குடிதண்ணீரில் ஆடைதுவைத்ததில்லை. குளத்திற்குக் காவல் போட்டோம். பஞ்சாயத்தொன்று கூட்டி சுகாதார விதிகளை எல்லாரும் அனுசரிக்கச் செய்தோம். மீறினால் அபராதம். தெருக்களை ஒழுங்காகக் கூட்டிக்கோலம்போட்டு மலர்வைத்து அழகு செய்தனர். திருக்குலத்தார் சேரிகள் வெகுசுத்தமாயின. அவர்களுக்கு நன்னீர்வாவி ஏற்பட்டது. சேசையாவைத் தூண்டிவிட்டு, தீண்டாமையை ஒழித்தேன். சாமியப்ப முதலியார் சட்டசபையார். அவரால் சேசையாவுக்குத் திருத்தருப்பூண்டி தாலுக்கா தலைவர் பதவி கிடைத்தது. என் அருகேயிருந்த சேசையாவைக் கொண்டு கிராமத்தில் அரியகாரியங்கள் நடத்தினேன். குப்பைகூழங்களெல்லாம் குழியுரமாயின. ஆடு மாடுகளுக்கு நல்ல தீவனம் கிடைத்தது. பசும்புல் மேய்ச்சல் கிடைத்து எல்லாம் கொழுகொழுவென்று வளர்ந்தன. இரண்டு மாடுகள் இறந்தன. காரணத்தைக் கண்டுபிடித்து எல்லாருக்கும் சொல்லவே, மற்றோர் கவனமாக மாடு வளர்த்தனர். வீடுகளில் கக்கூஸ் கட்டச்செய்தேன். கண்ட இடங்களில் நாய் பன்றிமாதிரி ஆபாசம் செய்யும் பழக்கம் ஒழிந்தது.

மதுவிலக்கு

அடுத்தபடி மதுபானத்தின் தீமைகளைத் தெருத்தெருவாக, வீடு வீடாகச்சொன்னேன். அதற்கு “கள்ளுக்கடைப்பக்கம் போகாதே

அண்ணே '' என்றொரு பாட்டுக்கட்டினேன். அது நல்லவேலை செய்தது. மிராசுதார்களின் உதவியும் மணியக்காரரின் ஒத்துழைப்பும் கிடைத்ததால், பொதுஜனங்கள் படிப்படியாக என்வழிக்குவந்து, மதுபானத்தை விட்டார்கள். இரண்டாயிரம்பேர் கூடிய ஒரு பெரியகூட்டத்தில் "ஏழைமக்காள் நீங்கள் கஞ்சிக்குத் திண்டாடுகிறீர்கள். கள்ளைக் குடித்து மயங்குகிறீர்கள். என் உள்ளம் வெடிக்கிறது: நீங்கள் நாளை முதல் கள்ளுக்கடைப்பக்கமே போவதில்லை, மதுபானம் செய்வதில்லை என்று உறுதி கூறவேண்டும். உறுதியை யாராவது மீறினால். நான் பட்டினியிருப்பேன் '' என்றேன். எல்லாரும் மதுபானம் செய்யமாட்டோம் என்று மனதாரச்சொன்னார்கள். பெண்கள் "சாமி நல்லா இருக்கணும்; ஆம்பிள்ளேங்கமட்டும் குடிக்காட்டி எங்க குடி வாழ்ந்து போகும்'' என்றனர், மறுநாள் முதல் மதுவிலக்கு மும்முரமானது. ராமசாமிபிள்ளையும் ராசையாவும் அரிய தொண்டுசெய்தனர். பொங்கலன்று யாரும் குடிக்கவில்லை. இரவில் பஜனைக்கு ஏரானமானபேர் வந்தனர்.

கல்வி

அறநிலையத்தார் அனைவரும் தமிழறிஞர். திண்ணையில் எனக்கு வரும் பத்திரிகைகளெல்லாம் போட்டேன். சில நூல்களையும் வைத்தேன். அறநிலையம் வாசகசாலை எழுந்தது; காலை மாலை பொழுது போகாத நேரமெல்லாம் அங்கே கிராமத்தார் வந்து படித்தனர். தினச்செய்தியறிந்தனர். எல்லாரும் காந்தி பக்தரானார்கள். அடுத்தபடி பள்ளிக்கூடம் வைக்க முயன்றோம். சேசையாவை அரசாங்கிராண்டிற்கு முயலச்செய்தேன். பயிற்சிபெற்ற நல்லாசிரியர் கிடைத்தார், அவருக்கு மாதம் பதினைந்து ரூபா ஒருகலம் நெல் பேசி, முதலியார் தெருவில் ஒரு கூரைவீடு கட்டிப்பள்ளிக்கூடம் வைத்தோம். விஜய தசமியன்று நான் பள்ளிக்கூடம் திறந்து வைத்து இரண்டுமணிநேரம் புதியகல்விமுறைபற்றிப் பேசினேன். தமிழ், எண்சுவடி, ஓலையெழுத்து, ஆங்கிலம், நாட்டுவரலாறு, கணக்கு, பூகோளம், தோட்டவேலை விவசாயம் முதலியபாடங்கள் நடந்தன. ஆசிரியர் தேசபக்தர்; ஆதலால் ராட்டையும் நூற்கச்சொன்னார்.

இவ்வாறு பல துறைப்பணிகளால் பாமணி புதுவாழ்வுபெற்றது. நான் காட்டியவழியில் ஜனங்கள் மகிழ்ந்து நடந்தனர். எனது பணிகள் தமிழகமெங்கும் பரவின. லோகோபகாரி மித்திரன் முதலிய பத்திரிகைகள் போற்றி எழுதின. சேலத்திலிருந்து நண்பர் கே. டீ. பால் எனது பணிகளைமெச்சி, சென்னையில் தாம் நடத்தப்போகும் கிராமசேவை மகாநாட்டிற்குத்தலைமைவகிக்கஅழைத்தார். அழைப்பை ஏற்றேன். இந்திய ஊழியர்சங்கம் வேங்கடசுப்பையா எனது தொண்டுகளைப்போற்றி எழுதினர். இவர்களுக்கு நான் எழுதிய ஆங்கிலக்கடிதங்கள் கல்கத்தா யங்மென் ஆப் இந்தியாவில் வெளி

யாயின. சில ஊர்களில் கிராமசேவை பற்றிப் பிரசங்கம் செய்து சங்கம் கண்டேன்.

இந்தச்சமயம் டில்லியில் சுவாமி சிரத்தானந்தரை ரஷீது சுட்டான். நோய்ப்படுக்கையில் சோர்ந்து கிடந்த பெரியாரைச் சுட்டான். இதைக்கேட்டதும் கௌஹாதி காங்கரஸ் ஊர்வலம்நின்றது. அதற்குத் தலைமை வகித்த ஸ்ரீநிவாசர் பதறிப்போனார். காந்தி கவலைக்கொண்டார். நான் சிரத்தானந்தரை நன்கறிவேன். நெட்டைத்திருமேனி, ஒள்ளிய முகம் தெள்ளிய உள்ளம்; திரவான்; தயானந்தரின் சத்தியக் கதிர். அவர் வேதசாதனத்திற்கே காங்கிரிகுருகுலம் அமைத்தார். அர்ஜுன், தேஜ், லிபரேடர்மூலம் தமது கருத்துக்களை வெளியிட்டார். ஹரிஜனசேவை செய்தார். பிரமசரியக்கல்விக்கு உறுதுணையானார் 1919 முதல் தீவிரமான காந்திபக்தரானார். டில்லியில் சத்தியாக்கிரகம் நடத்தினார்; இவரைச் சுடவந்த பிரிட்டிஷ் பீரங்கிக்கும் மார்பைக் காட்டினார். வைக்கம் சத்தியாக்கிரகத்தை நடத்தினார். சுத்தி ஸங்கடன் இயக்கத்தால் மதம்மாறிய பலரை இந்துவாக்கினார். அவருக்காகத் திருஆரூரில் இரண்டு பெரிய கூட்டம் நடத்தினேன். "தியாக பலி" என்பதுபற்றிப் பேசினேன். சிரத்தானந்தரின் இரத்தத்துளி இந்திய உள்ளத்தில் பேசுகிறது. நம்மவர் பலத்தை வளர்க்கவேண்டும்—ஆத்மபலத்தை. இனி நாட்டில் இந்த மாதிரி கொலை நடக்காமல் இந்தியர் ஒற்றுமையாக மனமொத்து வாழவேண்டும். இஸ்லாமியர் குரானறிந்து நடப்பதுபோல் இந்துக்கள் தமது சன்மார்க்கத்தை நன்றறிந்து சாதனம் செய்து திருவருட்சக்தி பெறவேண்டும், என்பதை விளக்கினேன்.

விஜயபுரம் சமரஸ சமாஜத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தேன். அன்று 3000 ஏழைகளுக்கு அன்னதானம் நடந்தது. அவர்களையெல்லாம் கூட்டி வறுமைதீரும் வழிகளைச்சொன்னேன். இரவில் ஏராளமான கூட்டத்தில் கிராமசேவைபற்றிப் பேசினேன். ஒரு பெருநிலத்தை வாங்கி ஏழையெளியவர்களைக் குடியேற்றி, அவர்களுக்கு விவசாயம் முதலிய தொழில்களை வகுத்து, பிச்சைத்தொழிலை ஒழிக்க விரும்பினேன். எனக்கு வரவேற்புக்கவிகளும் புகழுரைகளும் படித்தார்கள். ஆனால் என் உள்ளத்துடிப்பைச் செயலாக்க யாரும் உதவவில்லை. கோயில்களில் கூட்டம்போட்டு, திருக்குலத்தாரை மதித்து தம்முடன் சரிசமமாகச்சேர்த்துக்கொண்டு நாட்டில் ஒற்றுமையுண்டாக்கவேண்டும் என்றேன் ஒரு சாஸ்திரியர் சண்டைக்குவந்தார். நான் சாந்தமாக, அவருடன் வாதாடினேன். அவர் "காந்திதான் உங்கள் மூளையைக்கெடுத்தார். அவராலேதான் இந்துதர்மமும் கெட்டுப்போனது" என்றார். "அவராலேதான் இந்தியாவும் தர்மம் புனருத்தாரணமாயின. காந்தியின் சொல்லை நாடெல்லாம் கேட்கும். நீர் சொல்வதை உங்கள் மனச்சாட்சியே ஒப்பாதே" என்றேன். சபையை

நோக்கினேன்: சாஸ்திரிகள் நமது நாட்டில் தீண்டாமையே இருக்க வேண்டும் என்கிறார்...எத்தனை பேர் சரி என்பீர்கள்...கையைத்தூக்குங்கள் என்றேன் எல்லாரும் "சாதிப்பித்தம் ஒழிக." என்று ஆரவாரம் செய்தனர். பார்த்தீர்களா; காலம், வேறுபாட்டைச் சிறுகிறது. தமிழகத்தில் பிறந்தோர் தமிழர், இந்தியாவில் பிறந்தோர் இந்தியர் உலகிற்பிறந்தோர் உலகோர்—எல்லாம் மனிதர்—அறியும் என்றேன்.

அப்போது ஒரு தந்திவந்தது... பாலையூர் ராஜகோபாலையர் நன்னிலத்திற்கு வந்து கதர்சாலை திறந்து வைக்க அழைத்தார். அவரே திருவாரூருக்கு வந்து என்னை நன்னிலத்திற்கு இட்டுச்சென்றார். நன்னிலம் அழகான ஊர். அந்த ஊரில் இளநீரையே பருகினேன். வேறுணவில்லை. சக்தி கதர்சாலையைத் திறந்து வைத்து, மகாத்மாவின் வரப்பிரசாதம் என்பதுபற்றிப் பேசினேன். மாலை ஆறுமணிக்கு மணல் வெளியில் பெரியகூட்டம் நடந்தது. தலைமை தாங்கி விடுதலையும் நமது கடமையும் என்பதுபற்றிப் பேசினேன். மறுநாள் சிலகிராமங்களைச்சுற்றிக் கதர்பிரசாரம் செய்தோம். நான் நூற்றுக்கொண்டே பேசினேன். ராஜகோபாலர் சபர்மதியில் இருந்த காந்திபக்தர். அரிய தொண்டர். என்னைப் பாலையூருக்கு அழைத்தார்.

அவர் கடிதங்கள் வந்து கொண்டேயிருந்தன. நான் வழக்கப்படி ஒருமாதம் மௌனவிரதம் பூண்டேன், பாரதசக்தியைப்புதுக்கி எழுதினேன். சுத்தசக்தியின் அருளை உபாசித்தேன். செல்முன் என்று கட்டளை பிறந்தது. மௌனம் முடிந்த நாள் ராஜகோபாலையரும் வந்து சேர்ந்தார். நான் பாலையூர் செல்லும் செய்திகேட்டதும் பாமணியன்பர் "சாமி இங்கேதான் இருக்கவேண்டும்" என்று மன்றாடினர். அவர்களுக்கு பாரத சக்தியிலிருந்து கண்ணன் கதையும் கீதையும் படித்து விளக்கினேன். அப்போது அன்பர் களப்பாள் தொப்பையா முதலியார் வந்தார். வேதாந்தம் பேசக்கேட்டார். அவர் "பாலையூர் நம்ம ஊர் கிட்டதான். வேண்டியதெல்லாம் செய்கிறேன்." என்றார். கடவுளாணையைத் தடுக்கமுடியாது நான் பயணமானேன்...பாமணி முழுதும் கூடி உபசாரம் நடத்தியது. பெரிய கொட்டகைபோட்டு, தோரணங்கள் கட்டி, பஜனை நடத்தி, ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்கள். அன்று யோகசித்தி கோஷ்டிகானம் நடந்தது. அன்பர் அனைவரும் அறநிலையத்தின் முன்னே நின்று படம் பிடித்துக்கொண்டோம். நான் அக்காலம் கோவணமே அணிந்தேன்: படத்தில் காணலாம். இரவு ஏழுமணிக்கு மேளதாளங்களுடன் கொட்டகைக்கு அழைத்துச்சென்றனர். நான் இரண்டுமணிநேரம் பாமணயன்பர் சங்கத்திற்குப்பேசினேன். ஊர்முழுதும் அங்கேகூடியது.

பேச்சின் சுருக்கம் :

அன்புமணிகாள், எட்டுமாதம் உங்கள் பிள்ளையாயிருந்தேன். நீங்கள் என் விளையாட்டிற்கலந்து மகிழ்ந்தீர்கள், நான் பழக்கிவைத்ததை

என்றும் செய்துவாருங்கள். ஆண்டவனை நம்பி, அனைவருக்கும் அன்பாக நடந்து, சுத்தமாக வாழுங்கள். பஜனை ஜபம் கல்வி, தொழில், நூற்பு, சுகாதாரவாழ்வு இவற்றைப் பாதுகாத்து, நலம்பெறுங்கள். இங்கே நாம் வாசகசாலை, பள்ளிக்கூடம், பஜனை, கதர்வேலை எல்லாம் அறநிலையச்சார்பில் வளர்த்தோம். இனி அறநிலையத்தை நீங்கள் வளர்க்க வேண்டும். தகப்பனார் தந்த நிலத்தைப் பிள்ளைகள் பயிரிட்டு நன்மை பெறுதல் கடமை. தீண்டாமை வேண்டாமை; பாராமை, சேராமை. ஆகிய தீமைகளைப்போக்கி, எல்லாரும் சேர்ந்து வாழ்க! தீபப்பிரதட்சிணத்தில் நான் உங்களுடன் கைகோத்துக் கூத்தாடினேன், சாதி மதம் பாராமல் எல்லாரும் இறைவனைப்பாடியாடினோம். இந்த கிராமம் முழுதும் ஒருகுலமாக கடவுள் அன்பில் வாழ்க! ஒற்றுமைதான் உண்மையான பலம். நாம் ஏகாதசி விரதம் இருந்தோம். அன்றிரவெல்லாம் ருக்மாங்கதசரித்திரம் செய்தேன், அதனால் உடல்நலம் பெற்றதை நீங்கள் அறிவீர்கள். ஏகாதசி விரதத்தைக் காப்பாற்றுங்கள். உடம்பிற்குக் காய்ச்சல் மலசிக்கல் வந்தால், துளஸிநீர் உண்டு ஒருநாள் உபவாசமிருங்கள், வெயிலும் காற்றும்பட நன்றாக உழையுங்கள். உழைத்தவேர்வைபோகக் குளித்துக் கூழ்குடியுங்கள். உங்களுக்குக் கேப்பையுணவுபற்றிச் சொல்லியிருக்கிறேன். அரிசியை ஒழித்துக்கேப்பையே சாப்பிடுதல் நலம், பெண்களைப்பெருமைப்படுத்துங்கள். வயதுவந்ததும் மணம்புரிந்து ஒழுங்கான இல்லறமும் காக்கவேண்டும். பக்கம் பார்க்கக்கூடாது. காமக்குரோதங்களை அடக்கியாளவேண்டும். சுருட்டு புகையிலை, காப்பி தேயிலை பொடிகள் சாராயம் சீட்டு வம்பு வழக்குகளை அறவே ஒழிக்கவேண்டும். உங்களில் பலர் கட்குடிநிறுத்தினார்கள். நான் சென்றபிறகு அந்தச்சனியனை மறுபடி குடிப்பீர்களா? ["மாட்டவே மாட்டோம் சாமி...புத்திவந்தது,"] எல்லாரும் பாடுபட்டுப்பிழையுங்கள். பணமிருப்பவர் பணத்தைத் தொழிலில் போட்டுப் பலர் பிழைக்கச் செய்யுங்கள்.

இவ்வாறு நான் பேசி அன்பர்களைப் பிரியமுடியாதகம் அழுதேன், அவர்களும் கண்ணீர்விட்டனர். அந்தக்காட்சியை என்றும் மறக்க முடியாது. இன்னும் அந்த அன்பு என் உள்ளே துடிக்கிறது. எல்லாரும் எனக்கு நமஸ்கரித்தனர். நான் "அன்பர்காள் பாருங்கள் மேலே ஆகாசத்தை. அதில் சுழலும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் இந்த உலகம் ஒரு தூசிமாத்திரம். இதில் நான் ஒரு சைதன்யத்தூசி, என்னை வணங்காதீர்கள் எல்லாம் படைத்த இறைவனையே வணங்குங்கள். தியானிப்போம்...என்றேன். பத்துநிமிஷம் மௌனதியானம். பிறகு எனது கீர்த்தனங்களை உருக்கமாகப்பாடினர்.

காலையில் பெட்டிவண்டி வந்தது. தொப்பையா முதலியார் ஒரு வண்டியில் வந்தார். ராமகிருஷ்ணையர் பாலையூருக்கு என்னைத்தனி வண்டியில் அழைத்துச்சென்றார். பாமணியன்பர் ஒருமைல்வரைக்கும்

யோகசித்திகானம் செய்துகொண்டே வந்து, விடைபெற்றகாட்சி மறக்கமுடியாதது. இனிப்பாலையூருக்கு வாருங்கள்.

246. பாலையூர் சக்தி நிலையம்

இங்கே பாமணியாற்றின் ஓங்காரம்; இரண்டுமைல் தள்ளி காவேரியின் வேதகானம்—இடையே பாலையூர் பசுங்கோயில் போல் அழகாக விளங்குகிறது, கிழக்கிலும் மேற்கிலும் கோயிலும் குளமும் உள்ளன. அவற்றைச் சார்ந்து இரட்டைத்தெருவில் ஐம்பது அந்தணர் வீடுகள் காணும். மற்றப்பகுதிகளெல்லாம் வேளாளர் வீடுகளே எல்லாரும் பயிர்த்தொழிலாளர். ஊரில் நமது ராஜகோபாலையர் குடும்பமே செல்வச்செழிப்புள்ளது, மற்றவர் ஏழைகளே. இந்தக்கிராமத்தில் சபர்மதி போல் ஓர் ஆசிரமம் நடத்த என்னை ஐயர் அழைத்தார். நான் சக்தி நிலையம் திறந்துவைத்தேன், திறப்புவிழா சிறப்பாக நடந்தது. நான் ஆற்றில் குளித்துவந்து, தனியிடத்தில் தியானம் செய்தேன். இரண்டு மணிக்குப் பாலும் இளநீரும் அருந்தினேன். மூன்று மணிக்குப் பவனி புறப்பட்டது, மங்களவாத்தியங்களுடன் பெருமாள்கோயிலுள் சென்றோம். தீபதூபநிவேதனம் விதியோகம் நடந்தன. பிறகு பாமணியாற்றைத் தாண்டி அக்கரைத் தோப்பிற்குச் சென்றோம்; அதுவே சக்தி நிலையம். பெரிய கீற்றுக்கொட்டகையில் நாலைந்து அறைகள் தடுத்திருந்தன. சமையலறை, பிரார்த்தனையறை, வகுப்புகளுக்கு இடம், எனக்கெனத்தனியிடம். இருந்தன. நான் கீதையும் குறளும் ஒப்பித்து, ஒரு பாட்டுடன் நிலையத்தைத் திறந்தேன்.

கல்வியுந் தொழிலும் ஓங்கக் கடவுளின் கருணை ஓங்க
நல்வழிச் செல்வ மோங்க, நாட்டன்புத் தொண்டும் ஓங்க
வேல்அருள் வீரம் ஓங்க, வேதகா னங்கள் ஓங்கி
எல்லையில் சக்தி யோங்கு நிலையமிங் கெழுக நன்றே...

கெட்டிமேளம் கொட்டியது. வேதபாராயணம் நடந்தது. மேடைமேல் டி. கே. ஸ்ரீநிவாசையரும் ராஜகோபாலரும் ஏறினர், எனது வரலாறுகளைச்சொல்லித் தலைமைவகிக்கக்கோரினர். நான் தலைமைவகித்து, பிரமசரியக்கல்வியைப்பற்றிப்சபசினேன்: அதன் சுருக்கமாவது:

வனக்குடில்களிலிருந்து நமது நாட்டு நாகரிகம் பிறந்தது: அங்கே முனிவர் தவம் புரிந்து இயற்கையில் இறைவனைக்கண்டு, இறைவனை இதயத்திற் கண்டு, அந்தக் காட்சியைக் கலையாக்கினர். நமது கலைகளெல்லாம் மனிதனைப் புனிதனுக்கி, வாழ்விற்குத்தெய்வமெருகேற்றி நிறையின்பம் அளிப்பன. நமது கலை அருட்கலை. இந்தக் காலம் வழங்கும் நவநாகரிகக் கலைகள் பொருட்கலைகளே. கலையால் பொருள்குவிக்கும் வாணிகமே. இதில். வேகமும் ஊகமும் உண்டு; அமைதில்லை ஆத்மதாகந்தணிக்கும் சாதனமும் இல்லை. தற்போது கலாசாலை என்

ருல் பெரிய பெரிய சிமேண்டுக்கட்டிடங்களைக் காண்கிறோம். சட்டை நெக்டை போட்ட மாணவரையும ஆசிரியரையும் காண்கிறோம். யந்திரங்கள் போல் பட்டதாரிகளை ஆக்கித்தள்ளும் கல்வி முறையைக் காண்கிறோம். இதைப்போல வனமும் கூரைக்குடிலும் நவநாகரிகத்தின் நகைப்பிற்கிடமாகும். ஆனால் இப்படிப்பட்ட பர்ணசாலையில் கற்ற மேதாவிகளே ஆரணம், ஆயுர்வேதம், சங்கீதம், பரதம், காவியம் போன்ற கலைகளைத்தந்தனர்; அறவழிகாட்டி மனிதசமுதாயத்தைத் தூய்மையும் வாய்மையும் அன்பும் அழகும் அருளும் நிரம்பிய தெய்வக் கூட்டமாக்கினர். வியாசர் வால்மீகி மனு பராசரர், சாரகர் சுஸ்ருதர், கண்ணன் ராமன் புத்தர் விஜயன் போன்ற திருவாளரை ஆக்கியது வனக்குடிலில் வளர்ந்த பிரமசரியக்கல்வியே. அந்தக்காலம் இனித் திரும்பாது. நடையுடை பாவனை நினைப்பு செயல் பேச்சு விச்சு எல்லாம் மாறவிட்டன. காலம் புதிய கோலம் பூண்டுள்ளது. நமது நாடு உள்ளும் புறமும் திருந்தி விடுதலைபெற்று, உலகில் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும். நாகரிகத்தின் பெயரால் நம்மைப்பிடித்த அனாசாரங்கள் மாறி வாழ்க்கை சுத்தசன்மார்க்க நிலைபெற வேண்டும். மற்றநாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு படித்தவர்; நமதுநாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு படியாதவர். இந்த மடவிருளைப்போக்க வெண்டும். பஞ்சமும் பட்டினியும் மக்களை வாட்டுகின்றன. அறிவும் தொழிலும் பரவி, நாடு செழிக்கவேண்டும்.

நம்மவர் அன்னியமாயத்தில் விழுந்து, சுதர்மத்தை இழந்து, நமக்கே எதிர் செய்கிறார்கள். நமது ரிஷிஞானங்களும் யோகானுபவங்களும் மூலையில் உறங்குகின்றன. முற்காலம் சங்கராதி மகான்கள் கால் நடையாகச்சென்று வேதாந்த ஞானத்தை நாடெங்கும் பரப்பினார்கள், இக்காலம் யானை குதிரை ஒட்டகைகளுடன் வந்து பாதபூஜைபெற்று தீர்த்தம் கொடுத்து பிராமணபோஜனம் செய்வதுடன் சரி. இங்கே தீர்த்தம் சாதிக்கும்போதே, அங்கே தோல் தண்ணீர் கொடுத்து அஞ்ஞானியிடம் போகாதே என்கின்றனர் பிறமதத்தினர். நமதுநாட்டில் நம்முடன் பிறந்த சாமிவேல் இஸ்மேல் ஆகி நம்மையே அஞ்ஞானிகள் என்கிறான். சேரிச்சாம்பான் கிட்டவந்தால் "போடா தூர" என்று விரட்டுகிறோம். சாம்பன் சாமுவேல் ஆகிசட்டை தொப்பியுடன் வந்தால், எழுந்துநின்று மரியாதை செய்கிறோம் தீண்டாமைப்பேயை விரட்டி, நாம் எல்லோரும் சரிசமனாக வாழவேண்டும். நம்மவரை நம்மவரே தாழ்த்திமிதிக்கும் கொடுமை ஒழியவேண்டும். இப்படி எத்தனையோ தீமைகள் புகுந்து நம்மை அடிமைச்சிறையிட்டுக்கொடுமை செய்கின்றன.

தூய்மையான பிரமசரிய குருகுலங்களில்
சுதந்தரமாய்க்கல்விகற்று தீரர் மல்கவே

வாய்மையான தொண்டு செய்து வாழ்க நாட்டிலே
வறுமை மடமையடிமையைநோய் வராமல் ஓட்டியே,

ஆற்ற லோங்கும் புதிய கலைகள் ஆக்கம் பெருகவே
ஆத்மசக்தி யோங்கும் யோக மார்க்கம் பொலிகவே
காற்றைப்போலக்கடவுளுணர்வில் கலந்து வாழ்கவே
கதிரைப்போலப் பரவி எங்கள் கலைவிளங்கவே.

நேர்மையான அன்பினிலே நிலைத்து வாழ்வோமே
நிகரிலாத ஆத்மசக்தி நிலவ வாழ்வோமே
கூர்மையான மதிதுலக்குங் கலைவளர்ப்போமே
கூற்றையும் குமைத்திடும் பலம் படைப்போமே,

ஞாலம் வேண்டும் நன்னடையில் நடந்திடுவோமே
நாட்டை நமது வீட்டைப் போலக் காத்துநிற்போமே
காலம் வேண்டும் சீர்திருத்தங் கண்டிடுவோமே
கருணைத்தொண்டு நல்கும் அமுதை உண்டிடுவோமே.

நமது பிரமசரியகல்விமுறையில் ரிஷிஞானம் யோகசாதனம் இவற்றுடன் ஸயன்ஸ் அறிவும் தற்காலத் தொழில் தேர்ச்சியும் ஒன்றுசேர வேண்டும். கல்வி எல்லையற்றது உலகே பல்கலைக்கழகம்; வாழ்வே மாணவன். இயற்கையே ஆசிரியன் அந்தக்கரணங்களை நன்முகப் பயிற்றினால் அறிவுவளர்ச்சி மிகமிக எளிதாகும். உதாரணமாக யோக பலத்தால், ஓராண்டுகற்பதை ஒருமாதத்தில் கற்கலாம். ஆத்மதிருஷ்டி யுள்ளவன் ஒருபெரிய நூலை ஒருபார்வையில் அறிந்து கொள்வான். பிரமசரியத்தால் அருட்புலமையை வளர்த்தால் தமிழ், வடமொழி, இந்தி, கணக்கு, சரித்திரம் பூகோளம் சோதிடம், வானநூல், செடிநூல், பௌதிகம் ரசாயனம், வைத்தியம் எல்லாம் மளமளவென்று கற்கலாம். ஆசிரியர் தூண்டினால் போதும்; உள்ளறிவு சுடரோங்கிப் பொலியும் அத்தகைய கல்வியைத் தமிழ்க்குருகுலத்தில் பயின்றிேனம். இங்கே என்னால் முடிந்தமட்டும் மாணவரின் சக்திக்கேற்றதைப் போதிக்கிறேன். முக்கியமாக சன்மார்க்கசாதனமே தருவேன். காந்திபக்தரான ராஜகோபாலர், டி கே. ஸ்ரீனிவாசர் ராமகிருஷ்ணர் சுந்தரேசர் முதலியோர் இருக்கிறார்கள். அவர்கள் தேசசேவைக்கே வாழும் தியாகிகள் அவர்கள் முயற்சியால் வளரும் இந்த நிலையத்தை கிராம மக்கள் ஆதரித்து நலம் ஓங்குக.

247. எப்படி நடந்தது ?

நிலையம் சபர்மதிபோல் நடந்தது என்னலாம். அதன் நிர்வாகம் முழுதும் இருவரைச் சேர்ந்தது. ஸ்ரீ ராஜகோபால், ஸ்ரீநிவாசையர் இருவரையும் நான் மறக்கமுடியாது. இவர்கள் உருக்கமான பேச்

சாளர், உண்மையான செயலாளர். கடவுளுக்குச்சமமாகவே காந்தியை நேசிக்கும் பக்தர். ஸ்ரீநிவாசையரே எனக்குப் பாலும் இளநீரும் கொண்டுவந்து வைப்பார், சுந்தரமையர் வீட்டிலிருந்துதினம் பால் வரும். மற்ருேர் உள்ளன்பர் தொப்பையா முதலியார். களப்பாள் செல்வராகிய இவர், இன்றும் என் மெய்யன்பராயிருக்கிருர்—வேதாந்த உள்ளமும் வைராக்கிய மனமும் சாதுசங்கமும் சத்திய வாக்கும், கொண்ட உத்தமச்செல்வர். நான் காலை மாலை பாரதசக்தியிலிருந்து செய்யுட்கள் படித்து விளக்குவேன். செய்யுட்களை இவரே இனிமையாகப் படிப்பார். இரவு வேணுவீட்டுத்திண்ணையில் எனது பிரசங்கம் தினம் நடக்கும்; சுமார் நூறுபேர் கூடுவார்கள். தொப்பையாமுதலியார் முதன்மையாயிருந்து அதை நடத்திவைத்தார். இவரே எனக்கென நிலையத்தில் மாமரத்தின்கீழ் அழகான கூரைக்குடில்போட்டுத்தந்தார்—செலவு ரூ 75. இவர் என்னுடன் தியானித்தார். யோகவழியில் இவருக்குக் காதல். பெரிய குடும்பியாயிருந்தும் இவர் மனம் துறவியின் உள்ளம்போல் பற்றற்றிருந்தது. இவரிடமே என் கையிலிருந்த தொகையைத் தந்துவந்தேன். அது பிற்காலம் பயனுனது. நம்பிக்கையும் நன்றியும் ஞானதாகமும் கொண்ட இவரிடம் எனக்கு அன்பு அதிகம். இவர் தம்ஊரில் ஒரு கோயில் கட்டி, அரியதிருப்பணிகள் செய்திருக்கிருர். நான் எப்போது வெளியே செல்லவேண்டுமானுலும் இவரது பெட்டிவண்டி தயாராயிருக்கும். பாமணி ராமச்சந்திரனும் என்கூடவே இருந்தசர்—நல்ல உழைப்பாளி. உற்சாகமான தொண்டர். ராகிருஷ்ணர் கதர்விற்பனையில் கெட்டிக்காரர். இப்படிப்பட்ட ஊழியருடன் அன்பான மாணவ மாணவியரும் எங்களுக்கு வாய்த்தனர். மாணவர் இருபத்தைந்துபேரும் மாணவிகள் நால்வரும் என்னுடன் ஒட்டுறவாயிருந்தார்கள். நான் ஊதியதும் துள்ளிவந்து வந்தேமாதரம் போட்டு வரிசையாக நிற்பார்கள். காலை ஐந்துமணிக்குப்பள்ளியெழுச்சிப்பாடல்களுடன் வெளிக்குச்சென்றுவந்து, ஆசிரமத்தைச் சுத்தம் செய்வார்கள். பிறகு சாரண ஓட்டத்தில் காவேரிக்குச் சென்று குளித்து வட்டமாக அமர்ந்து தியானித்து பாசுரங்கள் பாடிக்கொண்டே வருவோம். மழைபனியானுல் நிலையக்குளத்தில் அல்லது பாமணி ஊற்றில் குளிப்போம். சிலநாட்கள் வெயில் காய்ந்து குளிப்பதுண்டு. பாமணியாற்றில் வெள்ளம் ஏறும்போது எல்லாரும் தோணியில் சென்றுவருவார்கள். என்னுடன் கப்பல் பாடுவார்கள். ஆளுங்கு ஒருபர்லாங் துடுப்புத்தள்ளுவோம். இதற்கே எழுபது ருபா போட்டுத் தோணிவாங்கினேம். ஆடைகளை உவர்மண்போட்டே துவைத்து உலர்த்தி அணிவோம். "என் ஆடை கொக்குப்போல், எனது மல்லிகைப்போல், எனது பனிக்கட்டிபோல்" என்று மாணவர் பெருமையாகச்சொல்லும்போது நான் மகிழ்ச்சியடைவேன். சமையலில் எல்லாரும் பங்குகொள்வார்கள். மாதம் இருமுறை கூட்டாஞ்சோறுபொங்கி, குளத்துப்படியில் எல்லாம் சேர்ந்து உண்ணச்செய்

தேன். சாதிமதபேதமே மாணவர் நெஞ்சில் இல்லை. அவர்கள் நீங்களும் சாப்பிடுங்கோ என்று தருவார்கள். சிறிதுஉட்கொண்டு "அடடா அமுதமாயிருக்கிறது உங்கள் சுளபாகம்" என்பேன் மகிழ்வார்கள். பாத்திரங்களைச் சுத்தமாகத் தேய்த்து இடத்தைக் கூட்டிமெழுகி, கோலம்போட்டு அழகுசெய்வார்கள். நிலையத்தில் ஒரு அழுக்கிராது, எல்லாம் பரிசுத்தமாயிருக்கும்; குழந்தைகளுக்கு இயற்கை வனப்பைக் காட்டி அதற்கேற்றபடி பாட்டுச்சொல்லித் தருவேன். நாட்டு நடப்புகளையும் பாட்டாகப்பாடுவேன். பாடிக்கொண்டே சிலநாள் நானே சாதம் பிசைந்து போடுவேன். எல்லாரும் சிந்திச்சிதறாமல் இருந்துமென்று தின்பார்கள். அவர்களே ஆலிலை தைத்துப்போட்டுக்கொள்வார்கள். எல்லாருக்கும் மாலை ஐந்தரைமணிக்குச் சாரணப் பயிற்சிதந்தேன். காலையில் யோகசனங்களும் புதிய தேகாப்பியாசங்களும் பயிற்றினேன். அதனால் எல்லாரும் திடமாயிருந்தனர். சிலநாட்கள் பக்கத்து கிராமங்களில் பஜனை செய்வோம், கதர்ப்பிரசாரமும் காந்திப்பிரசாரமும் செய்வோம் தெருக்களையும், கூட்டுவோம். எங்களுடன் கிராமஜனங்களும் சேருவார்கள். ஒருசமயம் பாலையூர்குடியானத்தெருவில்தீப்பிடித்தது. அன்று நான் மௌனம்: தீயைப்பார்த்தேன்; ஊதினேன். எல்லாரையும் மௌனமாகவே அங்கே இட்டுச்சென்றேன். வாளிவாளியாகத் தண்ணீர்கொண்டுவந்து தியணைத்தோம். தடிகளால் தீயை அடித்து அடக்கினேம். தீயில் அகப்பட்ட ஆடுமாடு கோழிகளையும் குழந்தைகளையும் பாய்ந்துசென்று காத்தோம். சாமான்களை முடிந்தமட்டும் வெளியேற்றினேம். அன்றிரவு ஏழைகளுக்கு நிலையத்தில் இடமளித்தோம். மறுநாள் தீயின் காரணத்தை வினவினேன். பெண்கள் சண்டை, ஆண்கள் சண்டையாகி, பொருமை பகையாகமுற்றி, தீயாக பற்றியது. மறுமாலை அந்தத்தெருவில் குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைத்த பொருமையைக் கண்டித்தேன். அன்புவாழ்வை விளக்கினேன். குடியானவர்கள் இரவு பஜனைக்கும் பிரசங்கத்திற்கும் ஒழுங்காக வந்தார்கள். அவர்களுள் ஒற்றுமை யுண்டானது. இப்படிப் பல சேவைகளோடு பாடங்களும் நடந்தன.

248. தொண்டு செய்தோம்

காலையில் எனது பாடல்களும் சபர்மதிப்பாடல்களும் பாடி அரைமணி பஜனை நடக்கும். அனுஷ்டானங்கள் முடிந்ததும் தியானம் நடக்கும். அதைத்தொடர்ந்து சன்மார்க்க உபதேசம், யோகசித்தியைக் கொண்டு நடத்துவேன். யோகசித்தியை எல்லாரும் ஆரபியில் பாராயணம் செய்வார்கள். அதன்பிறகு காலை கஞ்சிசாப்பிடுவார்கள். உடனே தமிழ்ப்பாடம், எண்சுவடி, சமுஸ்கிரதம், ஆங்கிலம் தேசசரித்திரம் நடக்கும். பத்தரைமணிக்கு நான் கீதாபாராயணம் நடத்துவேன். பிறகு உடம்பு சுத்தம் செய்துகொண்டு, பிரார்த்தனைசெய்து சாப்பிடுவார்கள். அதன் பிறகு நூற்றல்; எல்லாருக்கும் ராட்டினம்

உண்டு; போட்டி போட்டு நூற்பார்கள். சிலர் பட்டைபோட்டுக் கொடுப்பார்கள். சிலர் சிட்டம்போடுவார்கள். நூற்கும்போது ஒருவர் துளசி ராமாயணம், பாரதம், காந்திசரித்திரம் ஏதாவது படிப்பார். அல்லது எல்லாரும் கோஷ்டிகானத்துடன் நூற்போம். பக்கத்துக் கிராமமக்களும் மரத்தடியில் நூற்றுக் கூலிவாங்கிச் செல்வர். மன்னார்குடியில் நூலெல்லாம் தறிபோட்டு ஆடையாகவரும். இரவில் அடிக்கடி பக்கத்து கிராமங்களுக்குச் சென்று கதர்பிரசாரமும் மதுவிலக்குப் பிரசாரமும் செய்வோம். நான் பாடுவேன், ஸ்ரீநி பேசுவார். கோபால் உணர்த்துவார். உபரியாக திருப்பூர் கதர் வரவழைத்து கிராமம் கிராமமாகச் சுமந்து விற்பதும் உண்டு. ராமகிருஷ்ணையர் அதில் நிபுணர். மதியம் இரண்டரைமணிக்கு இந்தி, கணக்கு, பூகோளம், சுகாதாரம் ஆகிய பாடங்கள் நடக்கும். சுகாதாரவழிகளை நானே பழக்கினேன். மாணவர் பசித்தே உண்பர் ஏகாதசி விரதம், சத்தியாக்கிரக நாள் விரதம் காந்திஜயந்திவிரதம் காப்பர் மாலை சந்தோஷமாக கபாத்து செய்வோம் சடுகுடுபாய்வோம், ஒளித்தட்டுவிளையாடுவோம். பொதுக்கூட்டம்நடக்கும். மஹாத்மாகாந்தி இந்த நிலையத்தை ஆசீர்வதித்துக்கடிதம் எழுதுவார். அவர் கடிதம் வந்தநாளெல்லாம் ராஜகோபால் திருவிழா நடத்தி கிராமமக்களைக்கூட்டி, மகானின் திருவாசகத்தைப் படிப்பார். காந்தி ஜயந்தி அசல் தேர்த்திருநாள்போல் நடக்கும். காந்தியைப்பல்லக்கில் புறப்பாடு செய்வதும் உண்டு. காந்திசரித்திரம் காலக்ஷேபம் நடத்துவேன். அக்கிரகாரத்தில் தாஸ் வாசகசாலை திறந்தோம். அன்று சத்யாக்கிரகம் என்ற கதை செய்தேன் இப்படி நாள்முழுதும் தொண்டும் கலையும் பஜனையுமாகக் காலம்கழித்தது எனக்கு மகிழ்ச்சியளித்தது. சில நாட்கள் மன்னார் குடியிலிருந்தும் பக்கத்து கிராமங்களிலிருந்தும் தக்க அறிவாளிகள் வருவார்கள். உபநிஷத் விளக்கம் நடக்கும். அந்தக்காலம் சஹஜ அகண்டாகார நிஷ்டை பழகினேன்—அதாவது பரமாகாசமாக உள்ளே சுத்தசக்தியைக் கலந்து, அதே தியானத்தில் புறத்தே ஜீவசேவை செய்வது. உடல் நடந்தாலும் ஓடினாலும் வண்டியிற்சென்றாலும் நாற்காலியில் சாய்ந்தாலும் உள்ளம் சுத்தான்மாவுடன் லயித்து ஆனந்த அமுதை அனுபவிக்கும். இந்தச் சாதனமே என்னை சாந்தானந்தமாக்கியது.

இக்காலமே தியானமாலையும் ஞானமாலையும் புனைந்தேன். பகல் ஒன்பதுமுதல் இரண்டரை வரையில் எனக்கு எழுத்துவேலை அதிகம். பாபுலி, கே டி பால். சுத்தரேசன், ஸத்யமூர்த்தி, S. சீனிவாசையங்கார், பால் அப்பாசாமி முதலிய பலர் கடிதங்கள் வரும். உடனுடன் பதில் போக்கும் சுதேசமித்திரன், லோகோபகாரி ஜனமித்திரம், ஸ்வராஜ்யா, ஸ்காலர், யங்மென் ஆப் இந்தியா முதலிய பத்திரிகைகளுக்கு அடிக்கடி கட்டுரைகள் எழுதினேன் நிலையநடப்புகளை ஸ்ரீனிவாசையர் வாராவாரம் சுதேசமித்திரனில் எழுதிவந்தார். நண்பர்கள் எனது கிராம சேவையைப்போற்றி எழுதுவார்கள். ஒரு நாள் கே. சந்தானம் வந்

தார். அவரிடம் எனது கிராமஸ்வராஜ்யத்திட்டம் பற்றிப்பேசினேன். கிராமவாழ்க்கை பரிதாபமாயிருக்கிறது முதலில் ஏழைகளின் பசியைத் தீர்க்கவேண்டும். பயிர்த்தொழில் ஆடுமாடு வளர்த்தல் கைத்தொழில் பல பயிற்றவேண்டும். எழுத்தியக்கம் பலமாக நடக்கவேண்டும். கிராமங்களில் மடமையிருள் மண்டிக்கிடக்கிறது "இந்தியான்னு ஊராம் அது பட்டணத்திலே இருக்காம். அங்கே காந்திமவராசாவுக்கும் வெள்ளைக்காரனுக்கும் சண்டை நடக்குதாம்..." என்று சிலர் பேசுகிறார்கள். "மாரியாத்தாள் கோபத்தால் பேதிகாலரா வருகிறது. மாரிக்கு பலிபோட்டா மழைபெய்யும். ஐயனருக்குச்சாராயம் படைத்தால் பையனருக்கு வைகுரிதிரும். புளியமரத்துக்காட்டேறி மறுமகள் கர்ப்பத்தைக்கலைத்தது. தடுக்கி விழுந்தேன் சகுனத்தடையால்," இந்த மாதிரி மூடக்கொள்கைகள் மக்கள் மதியை மாய்க்குகின்றன. ஒருகிராமத்தில் ராட்டை நூற்றுக்காண்பித்தோம். இப்படி நூற்றால் தினம் இரண்டணுவரும் என்றார் ராஜகோபால். கூட்டத்திலிருந்த ஒருபெண் "கண்ணைக்காட்டினல் கைநிரம்பக்காசு: ராட்டையாம் ! நாளெல்லாம் ராட்டையிழுப்பதாம் ரண்டணுவருமாம் போய்யா போ" என்று இன்னெருவளிடம் பேசி நகைத்தாள். மக்கள் மதி இப்படிப்போனதே என்று வருந்தி, அம்மா கைநிரம்பக்காசு; உடம்பு நிரம்ப நோய் வருமே இந்த எண்ணத்தை விட்டு மானமாயிரம்மா. என்றேன். நாலணுவுக்கு மானமிழந்து நரகவேதனைப்படாதே என்றேன். அந்தப்பெண்ணே ராட்டை நூற்பதில் முதன்மை பெற்றாள். தினம் மூன்றணு சம்பாதித்தாள். பலபேர் ஒரே ஆடையைத், துவைக்காமல் அழுக்குப்பிடித்தபடியே மாதக்கணக்காக அணிந்தனர். வீடுகளில் குப்பையும் அழுக்கும் பாய் தலையணைகளின் மெழுக்கு நாற்றமும் வீசும். இந்த மாதிரி நிலையை மாற்றி, சுகாதாரமும் தூயவாழ்வும் தொழிற்கருத்தும் புகட்ட படச்சுருள்கள் தயாரித்து, தெருத்தெருவாக இரவில் காட்டி விளக்கினல் நல்லது என்று கே. சந்தானத்திடம் தெரிவித்தேன். கதர் மதுவிலக்கு இரண்டிற்கும் படம் இருப்பதாகச் சொன்னார். அனுப்பச் சொன்னேன். வந்திருந்தால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு விளக்கியிருக்கலாம். என்கையில் பணமிருந்தால் சித்திரத்தப்படங்கள் தயாரித்துக் காட்டுவேன்.

ஸ்ரீராமநவமி பத்து நாளும் பஜனையுடன் மகாத்மாவின் கட்டளையும் பாடிக்கொண்டாடினேம். மகாத்மா "சக்திநிலையம் கதர் மதுவிலக்கு ஹரிஜனசேவை இம்மூன்றில் ஊன்றிப் பணிசெய்க" என்றெழுதித் தமிழில் கையெழுத்திட்டிருந்தார். காந்தி தமிழ் ஜனங்களை சந்தோஷத்தில் ஆழ்த்தியது. சத்தியாக்கிரக வாரத்தில் ஆற்றுமணலில் பெரிய கூட்டங்கள் போட்டு சுதந்தரத்திற்கு காந்தி வழிகளைப்பற்றிப் பேசினேம். நான் நூற்றுக்கொண்டே பேசினேன். அதை ஒரு பழக்கமாகக்கொண்டேன்; பாடகன் சுருதிபோட்டுக்கொண்டே பாடுவது போல், ராட்டின ஓங்காரத்துடன் பாடினேன். டயரின் அநியாயக்

குண்டிற்குப் பதில் இராட்டையின் ஓங்காரமே. இதில் விளையும் கதர், நமது பொருளாதாரக்கொள்ளையைப் போக்கும். நாம் நூற்கும் ஒவ்வொரு சிட்டமும் சுதந்தரத்தை அருகே இழுத்துக்கொண்டுவரும். கதர் அணிக; சீமையில் மில்துணிக்குச் சலுகைகுறையும். கப்பலேறும் நமது பணம் உங்கள் கஞ்சிக்கு உதவும். காந்தியின் இன்னொருகட்டளை கள்ளுச்சனியை ஒழிப்பது. குடி குடியைக்கெடுக்கும்—இதைப்பல முறை சொல்லியிருக்கிறேன். நீங்கள் இன்னும் கள்ளுச்சனியன் முகத்தில் விழிப்பீர்களா? (மாட்டோம் என்றனர்) யாராவது குடித்தால் பஞ்சாயத்தில் அபராதம்விழும், சாதிக்கட்டுப்பாடுசெய்வோம்...குடிக்கிற காசைப் பஞ்சுவாங்கி நூற்றால் வீடுபிழைக்குமே (அதுதான் புத்தி என்றனர்.). நாங்கள் செய்த அடுத்ததொண்டு ஐக்கிய நாணயசங்கம், மன்னார்குடி. ஐக்கிய நாணயசங்கத்தலைவர் அதைத் திறந்துவைத்தார். ஐந்து ரூபாவீதம் பங்கு பிரித்து, ஏழைகளுக்குக்கடன் தந்து விவசாயம் தழைக்கச்செய்தோம்.

சத்தியாக்கிரக நாளுக்கு அடையாளமாக ஏழைகளுக்கு ஒருகிணறும் வெட்டத்தொடங்கினோம். ஐக்கியநாணயசங்கம் நல்லவேலை செய்தது. கடனைப் பயிர்பச்சையாகவும் வாங்கிக்கொண்டோம். ஜனங்களின் அழுக்கும் நோயும் கண்டு வருந்தி, இயற்கை சுகாதாரத்திட்டம் வகுத்து, பஞ்சபூத வைத்தியபிரசாரம் செய்தேன். நானே வெளிப்படையாக வெய்யிலாடி. ஆற்றுமணலில் தேகப்பயிற்சி செய்து தொட்டிஸ்நானமும் செய்து காட்டினேன். எளிய தூய இயற்கையுணவுகளைச்செய்து காட்டினேன். ஊன்மது வொழிக்க எவ்வளவோ பிரசாரம் செய்தேன், சிலரையே சைவமாக்க முடிந்தது. இதற்காக ஜீவகாருண்யப்பணியைமேற்கொள்ளக்கருதினேன். இயற்கைவழிவாழ்வை விளக்க விரும்பினேன். ஆண்டவன் சந்தர்ப்பம் அளித்தான். பல ஊர்களிலிருந்து அழைப்பு வந்தது. காஞ்சிபுரத்திலிருந்து பிரதிவாதி பயங்கரம் ரங்காசாரியார் அழைத்தார் அவர் ஸ்நான தர்மம் என்ற பத்திரிகைமூலம் இயற்கைவைத்தியப்பிரசாரம் செய்தார். அவர் அழைப்பை நான் ஏற்றுப்புறப்பட்டபோது நாகப்பட்டணத்திலிருந்து அழைப்புவந்தது. அதைத்தொடர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்தேன்.

249. சீர்திருத்த மகாநாடு

பலமகாநாடுகளில் நான் தலைமைவகித்தேன் கொடியேற்றினேன் பேசினேன்; பலர் உறவாலும் பல ஊர்களைப் பார்த்ததாலும் உலகநிலை தெரிந்தது: எனது கடமையும் தெரிந்தது. நாகபட்டினத்தில் சீர்திருத்தமகாநாட்டைத் திறந்துவைத்தேன். மாயவரம் சின்னையா பிள்ளை தலைமைதாங்கினார். அவர் அப்போது காங்கிரஸைவிட்டு நாயக்கரின் சுயமரியாதை இயக்கத்திற் சேர்ந்தார். இந்தமகாநாடு எனது கண்ணைத்திறந்து 'பார் உனது தமிழகத்தை' என்று காட்டியது.

உயரமான அலங்காரச்சாரட்டில் எனக்கும் சின்னையாபிள்ளைக்கும் ஊர்வலம் நடந்தது. பிறகு நான் காந்திப்படத்தைத்திறந்து மகாநாட்டையும் தொடங்கினேன். இந்தியாவின் சுயமரியாதையைக் காத்தவர் காந்திஜி. நமது சாதிமதக்கசப்புகளைவிட்டு காந்தியைப் பின்பற்றுதலே உய்யும் வழி என்று அரைமணிநேரம் பேசினேன். பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மாயவரம் நடேசன், சுப்பிரமணியபிள்ளை முதலியோர் சாதிப்பித்தம் ஒழிக என்று பேசினர். நான் ஒழிந்தது, செத்தப்பாம்பை அடிக்கத்தேவையில்லை. அது யாரையும் கடிக்காது என்றேன். சின்னையா தலைமையுரையில், நாயர்முதல் நாயக்கர்வரையில் சுயமரியாதை இயக்கத்தை வர்ணித்து, நாயக்கரின் முற்போக்கைப் போற்றினர். புகைப்படங்கள் பிடித்தபிறகு, மாயவரம் சுப்பிரமணியபிள்ளை வணக்கம் என்று என்னிடம் வந்தார். அவரை நெடுநாளாக நான் அறிவேன்—குருகுலப்போரில் நாயுடுக்கு வலதுகையாயிருந்து வருதுபார் படை' என்று மிரட்டிய ஆசாமி. வாரும் தோழரே நலமா...என்றுகேட்டு அளவளாவினேன். அவர் என்னை ஒரு தனித்தமிழ்ப்பாட்டுப் பாடச் சொன்னர்: "வையம் எங்கும் தமிழ்முழக்கம் செய்ய வாருங்கள்" என்ற சிந்தைப் பாடினேன். அவர் ஹார்மோனியத்தில் இனிதுவாசித்தார். அந்த உற்சாகத்தில் ஒருமணிநேரம் பாட்டு நடந்தது. கூட்டம் கூடியது. "பூணுல் ராஜ்யத்துக்கு ஒரு பாட்டு" என்ருர் மணி. நான் இன்பத்தூயன் எனக்குப்பூணுல் இல்லையே என்றேன். கிட்ட இருந்த ஒருவர் ஐயரே வடமொழி பாடும்என்ருர். இது தமிழ்க்கூட்டம் வேறுமொழி எதற்கு? என்றேன்... இன்னொருவர் பார்ப்பானை ஐயர் என்றகாலம் போச்சே என்று உரக்கச் சிரித்தார். "நான் பழிப்பானை மெச்சுகின்ற காலமாச்சே" என்றேன்... "நமது பாரதியாரிடம் நமக்கெல்லாம் மரியாதையுண்டு...அவர் சாதிமதப் பித்தரில்லை. அவர் தனித்தமிழர் நம்பர் ஒன்" என்ருர் சுப்பிரமணியம். மாலை ஆறுமணிக்குக் கடலோரமைதானத்தில் பொதுக்கூட்டம்; அதில் சின்னையாவுக்குப்பிறகு சுப்பிரமணியபிள்ளை பேசினர். அடடா என்னபேச்சு! என்ன நையாண்டி! பூணுல்ராஜ்யத்தின் திவசதர்ப்பணங்களைவர்ணித்தபோது கடகடவென்று கடல் அலையும் திகைக்கும்படி ஜனங்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். அதிலும் புரோகிதன் "ஹேமபலிஸ்தானிப்யாம் வைநாலணு...சரணுகதிப்யாமி விழுகாவிலே, பிண்டம் குண்டலாப்யாம் வை அரிசிபருப்பு" என்று கிண்டல் செய்தபோது யாருக்குத்தான் சிரிப்புவராது...? அடுத்தது நான்; சீர்திருத்தம் பற்றிப்பேசினேன். நகைச்சுவை கலந்தபேச்சு; அதன் சாரமாவது.

தலைவரே, தோழர்காள்,

எனக்கு முன்னே சீர்திருத்தத் தலைவர் 'பார்ப்பனியம் ஒழிக!' என்று பேசினர்கள். நான் ஒரு பார்ப்பான்; எதைப் பார்ப்பான் தெரியுமா? எல்லார் மனதையும் ஊடுருவிப் பார்ப்பான். சாதிமதமில்லாத சமரசத்தால் உங்களைப் பார்ப்பான். [கரகோஷம்] நான் ஓர்

ஆன்மப்புரட்டன். சிறுவயது முதலே ஆன்மாவைப் புரட்டிப் பார்த்துக் கண்டுபிடித்துவிட்டேன். அந்தக் காட்சியால் பேத புத்தியைப் புரட்டி, வேறுபாட்டை விரட்டி உள்ளே எனது கனவுகளை உருட்டி வைத்திருக்கிறேன். நானும் உங்களைப்போலப் பஞ்சாங்கன்—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து அங்கமுடையோன். பசி தாகம் நமக்கு ஒன்றுதான். தோலைத் தாண்டினால் உள்ளம் ஒன்று, உயிர் ஒன்று. நாம் இயல்பாகவே ஓரினம். இந்த ஒருமையைக் கெடுப்பது மனமயக்கம். மனக்கண்ணாடியால் உலகைப் பார்த்தால், பல பான்மை காணும். உள்ளறிவால் பார்த்தால் ஒருமையே காணும். இதையே அருட்சுடர் வள்ளலார் ஆன்மநேய ஒருமை என்றார். உலகின் தோற்றமும் மாற்றமும் பலவாகும். ஆனால் உள்ளப்பொருள் உள்ளபடி இருக்கும். மின்சாரம் நின்றால் படம் ஓடாது. உடலிலும் உணர்ச்சி மின்சாரம் உண்டு. அதுதான் நமது மேதையைத் தூண்டி நடத்துவது. உடல் அதன் சட்டையே. உடல், உயிர், மனம், உள்ளம், இன்பம் என்று ஐந்து உணர்ச்சி மண்டலங்கள் உண்டு. இவை உணர்வாகி வாழ்வு நிறைவாக மூன்று சாதனங்கள் உண்டு. சுத்தம், சுதந்திரம், சமத்துவம்: தூய்மை, விடுதலை ஒருமை, சுத்தி முக்தி ஸமதி. தூய்மை வாய்மையால் வரும். அன்பு கருணை சமநோக்குகளால் மனம் தூயதாகும். அருட்பணியால் காயசுத்தியாகும். செருக்கற்ற ஆத்ம தியானத்தால் சுதந்தரம் வரும். எனது யான் என்ற இறுமாப்பில்லாமல், உள்ளே ஒன்றிருக்கிறது என்றுணர்தலே ஸமத்துவ வழியாகும். உடல் மனம் உயிரின் மாசுகளை நீக்கித் தன்னைப்பார்ப்பானாகி உலகை உள்விழியால் பார்ப்பானாகி, நலம்பெறலே சீர்திருத்தமாகும். சீர் என்றால் அழகு, ஒழுங்கு நன்னடை, வாழ்க்கைப்பண்பு என்பது பொருள். அதைத் திருத்த வேண்டுமானால், அதனினும் மேலான ஒரு பண்பு வேண்டும். ஒரு சிற்பியின் சிலையைத் திருத்த அரட்டையடிக்கும் அப்பண்ணுவால் முடியாது. அதற்கு ஒரு சிற்பப்புலவன் வேண்டும். வெறும் பத்திரிகை வம்புகளாலும் வசை அம்புகளாலும் சமுதாயத்தில் பிரிவும் பகையும் உண்டாக்கலாம். ஆனால் சீர்திருத்தம் வராது. சீர்திருத்தம் உள்ளிருந்து வரவேண்டும். வெளியிலிருந்து ஆன்மநேயப் பெரியார் உதவி வேண்டும். முதலில் அவரவர் முகத்தைக் கண்ணாடி எடுத்துப் பாருங்கள். அதில் படிந்த மாசுகளை நீக்குங்கள். அவரவர் உள்ளத்தைத் தொட்டுப் பாருங்கள், அதிற் படிந்த சூது பொறாமை, வஞ்சம் கரவு அகம்பாவம் துராசை பகை சினங்களை மாற்றுங்கள். மனதில் அன்பும் அருளும் கருணையும் ஒருமையும் துலக்குங்கள். பிறகு அவன் அந்தச்சாதி இவன் இந்தச்சாதி என்று பேசவே தோன்றாது. நான் ஆண் பெண் ஆகிய இரண்டு பிரிவினையைத்தான் ஒப்புகிறேன். இயற்கையிலுள்ள பச்சை சிகப்பு ஊதா மஞ்சள் முதலிய வர்ணங்களைத்தான் ஒப்புவேன். வேறு சாதிநிறபேதத்தை நாம் ஏன் பாராட்ட வேண்டும்? அதைப்பற்றியே பேசாதீர்கள். அது தன்

னால் ஒழியும். வருங்காலத்தில் சேரியும் இராது, அக்கிரகாரமும் இராது. எல்லாரும் எங்கும் வசிப்பர். இன்றுள்ள சாதி வகுப்புப் பூசல்கள் நம்மைப் பிரித்தாலும் அன்னியரால் தூண்டப்பெற்றவை. அன்னியச் சூழ்ச்சியில் சிக்கினால் அடிமை நரகே கதி. முதலில் எல்லாரும் சேர்ந்து சுதந்தரம் பெறுவோம். நாடு நம்மதானால் நடக்கிற படி நடக்கிறோம். வீடு நம்மதானால் நாம் சுத்தம் செய்துகொள்ளுகிறோம். நிலம் நம்மதானால் களைபிடுங்கிப் பயிரிடுகிறோம். நிலத்தை அன்னியரிடம் விட்டு, மனதையும் அவர்களிடம் சிக்கவைத்தால், துயரமே கதி. முதலில் சன்மார்க்கப் புரட்சி வேண்டும். தனிமனிதர் திருந்த வேண்டும். எல்லாரும் அரசியல் விடுதலை பெற்று, சமுதாய விடுதலை பெறவேண்டும். அதற்கேற்ற மனவுறவும் இனவுறவும் கொண்டு முயல்வோம். உள்ளம் திருந்தினால் உலகும் திருந்தும்.

இந்தப்பேச்சு சிலருக்குப்புதிய உணர்ச்சியுண்டாக்கியது. காந்தி பக்தியைத்தூண்டியது. மறுநாள் நான் நாகப்பட்டினம் தொழிற்சாலையைப் பார்த்தேன். பிறகு ஒருகப்பலை உள்ளே சென்று சுற்றிப்பார்த்தேன். சில மரக்காயர்களுடன் பேசினேன். தமிழர்கள் தமிழ்நாட்டு வர்த்தகத்தைக்கைப்பற்றி, பணசக்தியைத் திரட்டி, ஆக்கவேலைகளில் பயன்படுத்துங்கள். உண்மைத்தமிழன் கூடப் பத்துத்தமிழனுக்கு உழைப்பும் பிழைப்பும் தந்து ஊட்டினால் அதுவே சிறந்த தொண்டு எனலாம். சிதம்பரம்பிள்ளைபோல் நம்மவர் கப்பல் நடத்தி, நமது துறைமுகங்களை ஆளவேண்டும் என்று அவர்களுக்குச் சொன்னேன். மரக்காயர்கள் என்னை நாகூருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே இந்துமுஸ்லிம் என்ற வேறுபாடில்லாமல், எல்லாரும் வணங்கினார்கள். காரைக்கட்டிடம் இன்றிருக்கும் நாளைக்குபோகும். உள்ளத்தையே தெய்வசந்நிதியாக்குங்கள். உள்ளத்தானை தியானத்தால் கலந்திருங்கள். ஆணவமின்றி மனம் உள்ளத்தானிடம் பணிந்திருத்தலே வணக்கமாகும். என்றுபேசி நாகூரானுக்குப் பாமாலை சூட்டினேன்:

> மனமொழி மெய்யில் யாங்கள் மாசறு தூயராகிச்
> சினமொழி, சிறுமை யின்றிச் சீரிய முயற்சி செய்து,
> நினைவினை உயர்த்தி, எந்தாய் நிலத்தினை உயர்த்தி வாழ
> உனதருள் பொழிவாய் நாகூர் ஆண்டவா ஒருவா போற்றி!

250. மங்கலம் பேட்டை மகாநாடு

மங்கலம்பேட்டைசன்மார்க்க மாநாட்டிற்குத்தலைமை வகித்தேன். கிருஷ்ணமாசாரியார் அன்புடன், திருவாய்மொழி பஜனையுடன், என்னை வரவேற்றார். ஆரியூர் பத்மநாபபிள்ளை, மணவாளன் ஆகியோர் நம்மாழ்வார் பாசுரங்களைப்படித்தனர்; செவிமடுத்தேன். மாலையில் பள்ளிக்கூடத்திருவிழாவில் மாணவர் ஆடல்பாடல் கண்டேன். தாலு

காத் தலைவர் பார்த்தசாரதிநாயுடு என்னைப்பேசும்படி வேண்டினர். நான் ஆதாரக்கல்விபற்றி அரைமணி பேசினேன். தொழிலாலும் சமுதாயசேவையாலும் தன்னுதவியாலும் கல்வியறிவுபுகட்ட வழிசொன்னேன். இரவில் பலநல்லறிஞர் உறவு கிடைத்தது; திருக்கோயிலூர் குமாரசாமி பிள்ளை காந்தியத்தைப்பற்றிப்பேசினர். இடையே தமது நீரிழிவைத் தீர்க்க வழிகேட்டார். சர்க்கரை காப்பியை ஒழித்து, ஆவாரம்பூக் காஷாயம் சாப்பிடும் என்றேன். விருத்தாசலம் கந்தசாமிப் புலவர் நித்தியதேகம்பற்றி வாதாடினர். மறுநாள் காலை தாளமேளங்களுடன் திவ்யநாமசங்கீர்த்தனம் நடத்தினேம். அருட்பாவும் திருவாய் பொழியும் முழங்கின. எனது ஹரிகீர்த்தனங்களைப்பாடி நர்த்தனமாடினேன். பரமானந்தமாயிருந்தது! நல்ல பஜனைகோஷ்டி!

பெரிய கொட்டகையில் இரண்டாயிரம்பேர் கூடினர். நான் தலைமைவகித்து, சுத்தசன்மார்க்கம்பற்றிப் பேசினேன். பேச்சில் சைவவைணவ சமரசம்பற்றி வற்புறுத்தினேன்; இந்த ஊர் வைஷ்ணவ புரிதான். எல்லாரும் நெற்றி நாமமும் ஹரிநாமமுமாயிருக்கிறார்கள். எங்கும் ஆழ்வார்பாசுரங்கள் ஒலிக்கின்றன. நீங்கள் சைவத்தையும் மதிக்க வேண்டும். விபூதி நாமம், வில்வம் துளசி, சிவம் விஷ்ணு, நடராஜன் அரங்கன், என்று கட்சிகட்டிப் பிரிவினை பாராட்டக்கூடாது. பெயர்வடிவபேதமில்லாமல் எல்லாருக்கும் பொதுவான பரம்பொருளை வணங்கவேண்டும். சைவம் வைணவம் இரண்டும் பிரபத்திமார்க்கம்; இரண்டும் ஆண்டவனையே தலைவனாக ஒப்பும். ஆசையாணவங்களை ஒழித்து அன்புசெய்தலே இரண்டிலும் உள்ள சாதனம். அன்பு, அறம், வாய்மை, தூய்மை, சமநோக்கு ஆகிய ஐந்தையும் இரண்டும் ஒப்பும். "அவரவர் தமதமது அறிவறி வகை வகை, அவரவர் விதிவழி அடைய நின்றனரே" என்பது நம்மாழ்வார் வாக்கு. சைவர் நாரணன் ராமன் கண்ணன் என்று பெயர்வைத்துக்கொள்வர். எந்த வைணவருக்காவது சிவன் முருகன் சங்கரன் என்றபெயர் உண்டா? இனி நீங்கள் சைவவைணவ சமநோக்குடன் வாழவேண்டும்...ஆழ்வார்களும் நாயன்மார்களும் நமக்குத்தந்த தெய்வச்செல்வத்தை சாதனத்தால் பாதுகாப்போம். என்றேன். ஒரு வைணவர் தமக்கு நல்ல ஆண் குழந்தை பிறந்தால் ராமநாதன் என்று பெயர் வைப்பதாகச் சொன்னர்.

கந்தசாமிப்புலவர் நித்தியதேகம் காயசித்தி சுத்தசாதனம் பற்றிப் பேசினர். காளமேகம் காந்தியமழை பொழிந்தது. மறுநாள் திலகர் ஜயந்தி, நான் பக்கவாத்தியங்களுடன் திலகர் கதாகாலக்ஷேபம் செய்தேன். அன்றுமாலை காயசித்திபற்றிப் பேசினேன். புலவர் மெச்சி என்னை விருத்தாசலத்திற்கு அழைத்துச் சென்றர்.

251. இறைவனுக்கே வணக்கம்!

விருத்தாசலத்தில் குமாரதேவர் சமாதுள்ளது. அவர் இயற்றிய சுத்தசாதனம் அரிய நூல்; கந்தசாமிப்புலவர் எனக்கு ஒரு பிரதி அளித்தார். தேவாரபாடசாலையில் இனியதேவாரம் செவிமடுத்துக்கொண்டு நான் சுத்தசாதனத்தை தியானபரமாயிருந்து ஆராய்தேன். பிறகு பாடசாலையில் சிவபூஜை நடத்தினேன். புலவர் என் உணவிற்குப் பாலும் இளநீரும் கொடிமிந்திரிப்பழங்களும் தந்தார். குமாரதேவர் சமாது, கோயில் எல்லாம் பார்த்து, இரவு எட்டுமணிக்கு விசாலமான சத்திரத்திண்ணைக்கு வந்தோம். அங்கே ஏராளமான கூட்டம். நான் அமரத்தன்மைபற்றிப் பேசினேன். அதன் சுருக்கம்:

அன்புமணிகாள், விருத்தாசலம் முதுகுன்றம்; இதில் குமரதேவர் சுத்தசாதனம் செய்தார். அவர் அரசர்; உலகைத்துறந்து யோகியாகி ஞானசித்தி பெற்றார். அவர் இயற்றிய மகராஜன் துறவைப் படித்தால் உடலின் பொய்மை தெரியும். இந்தத் தாலுகாவில் வடலூர் வள்ளலார் வாழ்ந்தார். அவரும் நித்தியதேகம் பாடினர். நான் சில ஆண்டுகள் காயகற்பங்களுண்டு, யோகசாதனத்தால், நித்திய தேகசோதனை செய்தேன். அருட்பா திருமந்திரம் தாந்திர தத்துவம்போன்ற சக்தி நூல்களையும்ஆராய்ந்தேன். எனக்கு நித்தியதேகம் தருவதாகச் சில தாந்திரப்புரட்டர் மோசடி செய்தனர். இவர்கள் அன்னியர் மனைவிகளை இழுத்து காளி, பவானி என்று விளம்பரம் செய்து பணம்பறிக்கிறார்கள். குண்டுணிகளையும் முகத்துதிப்பட்டாளத்தையும் வைத்துக்கொண்டு, தற்பெருமையைத் தமுக்கடிக்கிறார்கள். சாதுக்களைக் கொடுமை செய்கிறார்கள். இவர்கள் வணங்கும் பத்திரகாளிகள் அது கொண்டா இது கொண்டா என்று அடிமைக்கும்பலை மிரட்டுவார்கள். கொண்டுவராவிட்டால் சூனியம்வைப்பேன் கண்ணைக்கெடுப்பேன் என்று உருமுவார்கள். வானையும் அண்டகோளங்களையும் படைத்த இறைவனெங்கே இந்தத் தாசிகளெங்கே? இந்த உலகம் அண்டத்தில் ஓர் அணு; அதில் ஒட்டிய உயிரணு மனிதன். அவன் உடல் உயிரால், உயிர் சுத்தான்மாவால், சுத்தான்மா பரமான்மாவால் இயங்கும். என் உடல் நிலை, நானே கடவுள்,...அப்படிப்பண்ணுவேன் இப்படிப்பண்ணுவேன் என்பதெல்லால் ஆணவத் தடிப்பாகும். நீங்கள் கடவுளிடமே நம்பிக்கை வைத்து, மனச்சாட்சி மகிழ நல்வழிச் செல்வராயிருங்கள். மற்றவை இறைவன் அருளால் உண்டாகும். இந்த உலகில் யாரையும் இறைவனுக்குச் சமானமாக வணங்கவேண்டாம். அது பாபம். உடலையே பெரிதுபண்ணி, உள்ளத்தானை மறவாதீர்கள். ஒருவர் ராமலிங்கசுவாமிகள் சாகாவுடல்பற்றிப்பேசினரே என்கிறார். விளக்குகிறேன்: வள்ளலார் பேசியசாகா உடல் அருளுடல், சைதன்யதேகம், சக்தியுடல், என்பு தோல் போர்த்த தன்று; அன்புபோர்த்த ஆன்மவுடல். அது சாகாது வேகாது, சாம்பலாகாது, அதன் பெயரே சுத்தசக்தி சைதன்யம் என்பது.

அதைஅடையவேண்டுமானால், பரமசக்திமானாகிய இறைவனையேஅடைக்கலம் புகுந்து, அவனிடம் நமது உடல்பொருள் ஆவியனைத்தையும் விடுத்து, அவனே நினைவாயிருக்க வேண்டும். மாணிக்கவாசகர் அப்பர், சம்பந்தர் வள்ளலார் அருணகிரியார் ஆகியமகான்கள் அப்படி வாழ்ந்தார்கள், அந்நிலையை எட்டச் சாதனங்கள் உண்டு. முதலில் ஜபசாதனம், இறைவன் திருநாமத்தை எப்போதும் மனனம் செய்வது—ஓம் சுத்த சக்தி ஓம் என்பது மகாமந்திரம். அதற்கு அனுகூலமான பஜனை, பாராயணம், சாதுசங்கம், தெய்வகைங்கரியங்களைச் செய்தல். எத்தொண்டையும் உலகநாதன் வழிபாடாகச் செய்தல்—இவற்றால் படிப்படியாக தியானம் சித்திக்கும், மனம் உள்ளே திரும்பும். உள்ளுணர்வைத் தொட்டபிறகு சுத்தசக்தி எழும். அதையே கவனித்துக்கொண்டிருந்தால், வேறுசாதனம் தேவையில்லை, அதுவே அருளும் அறிவும் இன்பமும் ஒருமையும் தரும்: உடலைச் சிவாலயமாகக்கருதி, உள்ளமட்டும் கள்ளமின்றி இறைவனுக்கே ஆளாகவாழ்வோம்.

நித்திய தேகம் என்னே நிலந்தரு புகழும் என்னே
வித்தகச் செருக்கு மென்னே வேந்தரின் வேந்தும் என்னே
சுத்தசன் மார்க்கி யாகிச் சுதந்தர யோகியாகி
பத்தியால் உன்னைக் கூடும் பரிசருள் பரமே போற்றி !

பேச்சுமுடிந்ததும் தேவாரபாடசாலையில் திருவாசக ஆராய்ச்சி நடந்தது. புலவர் வாரும் வடலூருக்கு என்று அழைத்தார்.

252. வடலூர் வாழ்க்கை

வடலூர் அன்பர் என்னை மிக்க அன்புடன் வரவேற்றனர். வள்ளலார் தியானம் செய்த அறைக்குள்ளேயே நானும் தியானித்திருந்தேன். உணவே எடுக்கவில்லை. வள்ளலாருக்கும் எனக்கும் உள்ளுறவுண்டு. சிலசமயம் அவர் என்னுள் இருந்து பாடுவதுபோல் உணர்வேன். அவரது ஞானசரீரத்தை தியானத்தில் உபாசித்தேன். பல உண்மைகள் புலப்பட்டன. அனைத்தையும் இங்கே சொல்ல இடமில்லை. பாலாற்றில் நீராடி, சத்தியஞான சபையைக் கண்டேன். குருக்கள் எழுதிரையும் காட்டினார். தன்னைமறைக்கும் தூலம், வீரியம், சூக்குமம், விஞ்ஞானம், ஆனந்தம் சத்து சித்து ஆகிய எழு உணர்வுத்திரைகளையும் கடந்து, ஜீவாத்மா சுத்தபரமாத்மனுடன் ஐக்கியமாவதுதான் அருட்பெரும் ஜோதி சித்தியாகும். அந்த ஐக்கிய ஜோதியே சாகாநிலை, நித்தியதேகசித்தியாகும். இந்த ரகசியம் தியானத்திற் புலப்பட்டது. அருட்பா ஆராய்ச்சியாலும் வள்ளலாரின் கையெழுத்துப் பிரதிகளைப்பார்த்ததாலும் பல அரிய உண்மைகளை அறிந்தேன். திருமடத்தில் இனிமையாக அருட்பா பஜனை நடந்தது. நானும் கலந்துகொண்டேன். மேட்டுக்குப்பத்தில் தியானித்தேன். அப்போதே

அருட்சுடர் வள்ளலார் மகாத்மா ராமலிங்கம் ஆகிய நூல்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டேன். வள்ளலாரை நேரேபார்த்த ஒருமுதியாரிடம் பல விஷயங்களைக் கேட்டறிந்தேன். "வள்ளலார் சாமி உயரந்தான் இருப்பார், இப்படியே மெல்லிய உடல்" என்றபோது என் உடம்பையும் பார்த்துக்கொண்டு, எனது நெஞ்சைக் கொள்ளை கொண்ட வள்ளலாரை உள்ளேவணங்கினேன். மாலை, மகாதேவமாலை படித்து விளக்கினேன். அன்பர் கேட்டனர். இரவில் தியானித்த போது, சுத்தசன்மார்க்கப்பணிசெய்யக் கட்டளை பிறந்தது. காலையில் சத்தியஞானசபையிற் பாடினேன் :

உரைகடந் தோளிரும் சோதிக் கடவுளே உண்மைத்தேவே,
கரைகடந் தோளிரும் இன்பக் காட்சியே எழு மாயத்
திரைகடந் தமைதி யான துரியமேற் சிகர மேறி
வரைகடந் துன்னோ டின்ப வளநகர் வாழச் செய்வாய்!
இருட்பெருங் கடலைத் தாண்டி, என்னையுந் தாண்டி, மாயச்
சுருட்பெரும் வினையைத் தாண்டிச் சொல்லோடு
செயலுந் தாண்டி
அருட்பெருந் துரியானந்த முடிமிசை அமரு கின்ற
திருப்பெரும் வாழ்வை. யிவாய் சிவமய ஜோதிக் குன்றே.

மகனை வள்ளலைக்கண்டாயிற்று; இனி அப்பன் சிதம்பரசிவனைக் காணவேண்டும்.

253. சிதம்பரத்தில்

காலையில் கால் நடையாகக் கிளம்பினேன். கிராமங்களைப் பார்த்துக் கொண்டே சிதம்பரம் சேர்ந்தேன். அப்ப என்ன இன்பம்! சிற்சபாநாதனைக்கண்டதுமே சிதம்பரகீதம் உதித்தது. "நடராஜா சரணம்" "அபயக்கரத்தை, இதயவெளியினிலே" முதலிய கீதங்கள் பாடிப்பரவசமாக வலம்வந்தேன். சிற்சபைதரிசனமானது. பஞ்சாட்சரப்படியில் அமர்ந்தேன். தியானம் பற்றிக் கொண்டது. அப்போது தான் எனதுவாழ்வின் கடமைபுலனனது. பாரதசக்தியை முடி; பரமனைப்பாடு, யோகசித்தி பெறு; ஓரிடம் ஊன்றிக்கொண்டு சுத்தசன் மார்க்கப்பணி செய்—சங்கம்கூடும். அருள்விளங்கும்-இவையேகட்டளை. தில்லையப்பன் முன் பரவசமாக நின்று பசிதாகம் மறந்து பாடினேன்:

அப்பனே மகனைக் கண்டேன் யானும்உன் மகனுய்வந்தேன்
ஒப்பிலா மணியே, உள்ளத் தொருவனே குருவனே நீ
செப்பிய வழியிற் சென்று திருத்தொண்டு செய்வதல்லால்
எப்பிறவழியும் எண்ணேன் என்னையாட் கோண்ட தேவே,

பண்பனே பரமா தில்லைப் பதியொளிர் மணியே ஆன்ம
நண்பனே நானென் றுள்ளே நடம்புரி புலவா போற்றி!
அன்பெனும் சிவனே! என்னை அன்பருள் வைத்துக்காவாய்
உன்பணி யணிந்து வாழ உருகினேன் கருணை யப்பா.

சிதம்பரத்திலிருந்து வைதீசுரன் கோயில் முதலியதலங்களைப் பார்த்துக்கொண்டு, பாலையூர் சேர்ந்தேன். நிலையம் ஒழுங்காக நடந்தது, எனது ஏசுநாதர் சரிதையை கிறிஸ்துசங்கத்தில் பாபுலி வெளியிட்டனுப்பி, "தாங்கள் அரசியலைவிட்டு ஊர் ஊராக கிறிஸ்துநாதர்போல் சன்மார்க்க சேவை செய்வீராக" என்றெழுதினர். ஒருவாரம் குழந்தைகளுடன் விளையாடினேன். புதுக்கோட்டையி லிருந்து அழைப்புவந்தது, சென்றேன்.

254. ஜனமித்திரனுடன்.

புதுக்கோட்டை புத்தகசாலை ஆண்டுவிழாத் தலைமைக்கே என்னை அழைத்தனர். நான் ஜனமித்திரனைக்காணவே சென்றேன். எனது கட்டுரை, கவிதை, நாடகம், நாவல்கள் மித்திரனில் தொடர்ந்துவந்தன. மித்திரன் விசுவநாதரும் சுப்பிரமணியரும் என்வாழ்வில் மறக்கமுடியாத அன்பர். அவர்கள் என்னை ஆர்வமுடன் உபசரித்து, மித்திரன் காரியாலயமாடியில் அமர்த்தினர். அவர்கள் சாரட்டு எனக்கு ஊர் சுற்றப் பயனானது. பொங்கல் நாளாதலால் காரியாலயம் விடுமுறை; எனக்கு ஏகாந்தவாசம். அரசர் அரண்மனை, தோட்டம், கல்லூரி, சிறைச்சாலை இவற்றைச் சுற்றிப் பார்த்தோம். கல்லூரியில் தலைவர் தியாகராஜையர் சுற்றிக் காட்டினர். சிறைச்சாலைக் கைதிகளுக்கு நான் சன்மார்க்கப் பிரசங்கம் செய்தேன். கைதிகளின் விலங்குகளைக் கழற்றச் சொல்லி என்னைச் சுற்றி வட்டமாக நிற்கச் செய்து, "உங்களுக்கு மனச்சாட்சி இருக்கிறது; அது திருடு சிறையிலிரு என்று சொல்லுகிறதா? இல்லை. ஒழுங்காயிரு நல்லவனாயிரு என்றுதானே" சொல்லுகிறது? என்று தொடங்கி, நான்பேசியது கைதிகளின் நெஞ்சில் ஆழப்பதிந்தது. அவர்களை எப்போதும் சிவநாமம் ஜபிக்கச்சொன்னேன். காட்சிசாலைக்குச் சென்றோம். பல அரிய பொருள்களைக்கண்டோம். பிறகு பல்லவன் குளத்தில் ஜலஸ்தம்பனம் செய்தேன். ஒரு மணிநேரம் அப்படியே தியானம் செய்து வந்து, ஆடையை உலர்த்தியணிந்து, பிரகதம்பிகை சந்நிதிக்குச் சென்றேன்.

தெய்வமே வணக்கம் எங்கள் தேச சுதந்தரத்தை
எய்திடத் திறமை தாராய். எழில்பெறு விளக்கங் காட்டி
உய்வகை அருளாய் தாயே ஓம் சுத்த சக்தி யென்று
செய்சேபம் பலித்தேன் சீவம் சிவம்பெறச் சித்தி யீவாய்.

என்று வணங்கி வந்தேன்.

பாலையா பள்ளிக்கூடத்தில் பூஜையறையில் வரவேற்ருர்கள். வழி பாடு நடத்தி. தீபாராதனை காட்டி நமப்பார்வதிபதயே என்றேன் “ஹரஹர மஹாதேவ” என்று ஆயிரம் குரல்கள் ஆர்த்தன. நான் ஒரு மேடைமேல் அமர்ந்து, பாரதசக்தியில் பரமஹம்ஸ விவேகானந்தப் படலங்களைக் கொண்டே பாரததர்மத்தை விளக்கினேன். பத்து மணிவரையில் சபை அமைதியாகக் கேட்டது. மறுநாள் அதேமாதிரி வீரசிவாஜிப்படலத்தைக் கொண்டு நாமும் தேசமும் என்பதுபற்றி விளக்கினேன். நமது புண்யபூமிதான் உலகின் தர்ம பீடம், சக்தி நிலையம். இதில் எத்தனையோ யோகசித்தர் விளங்கினர். அவர்கள் சக்திதான் பாரதசக்தி. சங்கரர் ராமகிருஷ்ணர் வள்ளலார் சதாசிவர் போன்ற மகான்கள் பாரதசக்தி மின்சாரமாயிருந்து தர்மத்தைக் காத்தார்கள். இந்த மின்சாரத்தை நீங்களும் வளர்க்கவேண்டும். உடல் இயற்கை' அதனுள் உயிர்ப்பது சுத்தான்மா. இரண்டையும் இணைக்கும் அந்தக்காரணம், மனம்புத்தி சித்தம் அகங்காரம், ஆகிய நான்காயிருப்பது. அது புலன்கள் வழியே வெளியே சென்று திரிந்தால், நமது சக்தி சிதறிப்போய் வாழ்க்கை வீணுகும். அது உள்ளடங்கி தியான மோனசமாதிகளில் லயித்தால், சக்தி பெருகி வாழ்க்கை தெய்வப் பொலிவேறும். இதற்காகவே சித்தவிருத்திகளை நிரோதித்து யமநியம ஆசனபிராணுயாம பிரத்யாகார தியான தாரணை சமாதி ஆகிய அஷ்டாங்கயோகத்தைப் பதஞ்ஜலி அருளினுர். மனம் சலித்தால் பந்தம்; நிலைத்தால் சுதந்தரம். உள்ளடங்கி ஆத்மசித்திபெற்ற முனிவரே தன்யர். அவர்களே வாழ்வின் பயனடைகிருர்கள். பால்கறக்க வேண்டுமானுல், பசுவைக்கட்டிப்போட வேண்டும் அருள்கறக்க வேண்டுமானுல் மனதை உள்ளத்தில் கட்டிப்போட வேண்டும். அப்படியே நம்மாழ்வார் திருப்புளிப்பொந்தில் மனமடங்கியிருந்தார். பரமஹம்ஸர் காளிகோயிலில், வள்ளலார் வடலூரில், மஹர்ஷிகள் விருபாக்ஷிகுகையில் இருந்தனர். நானும் இதயகுகையில் இருந்தே இங்கும் அங்கும் இருக்கிறேன். தெய்வசக்தியால் மனிதசமுதாயம் இன்புறும். பரமஹம்ஸரின் தெய்வசக்தியே விவேகானந்தர் நாவில் பேசி, உலகிற்கு ஞானஒளி காட்டியது. சமர்த்தகுரு ராமதாஸின் ஜபசித்தியே சிவாஜியின் வீரக்கனலாகி, இந்தியாவில் தார்மிகயுத்தத்தை வென்றது. இன்று பரமஹம்ஸர், நாளை சிவாஜி உங்கள் மனக்கண்முன் நிலவுவார்கள். என்று தொடங்கிப்பேசினேன். பாரதசக்தியின் காவியரஸத்தை அன்றே நான்கூட அனுபவித்தேன். பிரசங்கம் முடிந்தது. தீபாராதனை காட்டி ஓம் சுத்தசக்தி! ஓம் ஸ்வதந்த்ர ஜோதி! ஓம் ஸமத்வ நீதி! ஓம் சாந்தி! என்றேன். எல்லாரும் என்னை நமஸ்கரித்தனர். “நமஸ்காரம் அந்தர்யாமியான பரமேஸ்வரனுக்கே ஆகுக! அவனருளால் எல்லாரும் மங்களமாக வாழ்க” என்றேன்.

அன்று ஜனமித்திரன் வீட்டில் நான் பால் பழம் புசித்தேன். மித்திரன் குடும்பம் ஒற்றுமையாக, அன்யோன்யமாக வாழ்ந்தது.

விசுவநாதர், கமலாஸனர், சுப்ரமணியர் அவர்கள் தாய் லலிதாம்பாள் எல்லாரும் ஆஸ்திக சிகாமணிகள். என்னிடம் பேரன்புடையவர்கள். அந்தக் காலம் புதுக்கோட்டை மன்னர் பைரவத்தொண்டமான் இறந்தார். அவர் அரசையும்விட்டுக் காதல் வலைப்பட்டு ஓர் ஆஸ்திரேலிய மாதைக்கூடி ஸிட்னி மார்த்தாண்டனையும் பெற்று, பணத்தையெல்லாம் வெள்ளை மோகத்தில் அள்ளி வீசினார். அவருக்குப் பிறகு ஸிட்னியை அரியணையில் வைக்க சர்க்கார்கட்சி முயன்றது. அதை எதிர்த்து ராஜகோபாலத் தொண்டமானையே அரசனாக்க வேண்டும் என்று ஜனமித்திரன் போராடினான், இதனால் அந்தக் குடும்பத்திற்கு வந்த தொல்லைகள் பல. மித்திரன் ஆசிரியர் இருமுறை சிறைகாக்கவும் நேர்ந்தது. அவர் தாயார் "தர்மநியாயம் எங்கள் பக்கம் உள்ளது. எங்கள் எல்லாரையும் சிறையிட்டாலும் பயப்படமாட்டோம். உள்ளதை உண்டு என்றே சொல்லுவோம். நமது நாட்டை ஒரு வெள்ளைக்காரன் ஆளுவதாவது" என்றாள்! சபாஷ் பெண்சக்தி என்றேன். இரவில் ஏ. வைத்தியநாதையர் விஸ்வநாத அய்யர் முதலிய பிரமுகர் எனக்குக் கனிவிருந் தளித்தனர். மறுநாட்காலை எல்லாரும் என்னை மோட்டார் ஏற்றித் தஞ்சாவூருக்கு அனுப்பினர். பிறகு...

255. சிவாஜி திருநாள்

சென்னையில் வீர சிவாஜியின் முன்னூறாண்டைத் திருநாள் சிறப்பாக நடத்தினோம். எனது நண்பர் சஞ்சீவி காமத் அதற்குத் தலைமை வகிக்க என்னை அழைத்தார்; சென்றேன். தாங்கள் சிவாஜியின்மேல் காவியம் செய்திருக்கிறீர்களா? ஆம். அதை கோகலே ஹாலில் கதைபண்ண வேண்டும். சரி. காப்டன் மணிலால் தமது படைகளுடன் வந்து நமஸ்தே என்றார். ஜயபாரத் என்றேன். ஆரிய ஸமாஜிகள் அனைவரும் எனது நண்பராயினர். மணிலால் அடிக்கடி என்னை அழைத்து அங்கே பிரசங்கம் வைத்தார். காட்கில் என்ற மராட்டியச் சிங்கம் "சிவாஜி சத்திரபதிகு ஜே" என்று வந்தார். 'ஸ்வாமிஜி மோடார் தய்யார் ஹை' என்றார். "ஜய பாரத் என்று புறப்பட்டேன். முன்னே சிவாஜி குதிரைமேல் ஏறி வாளுருவிச் செல்லும் படம்; அதற்கு மாலைசூட்டி அலங்கரித்துப் பவனி நடக்கிறது. பின்னே ஹிந்துஸ்தான் பஜனை: ஹார்மோனியம் தபேலாவுடன் பத்துக் குரல்கள் "பாரத வர்ஷ ஹமாரா ப்யாரா" முழங்குகின்றன. நான் மோடாரில் அமர்வது சரியன்று, என்று படத்துடன் நடந்து பாட்டுப் பாடிக்கொண்டே கோகலே ஹாலையடைந்தேன். அங்கே கைகால் கழுவிக்கொண்டு தியானித்து, மேடையேறினேன். பார்த்தேன்; ஹால் முழுதும் கூட்டம். சிவாஜி சரித்திர காலக்ஷேபம் என்று சென்னை மராடியர்களும் ஆந்திரரும் மார்வாடிகளும் கூடினர். சிலரே தமிழர். மேடைமேல் எனது நண்பரான ஆதிநாராயணஞ் செட்டியார், ஹரிஹரசர்மா, ரிஷிகேச சர்மா,

தர்மதேவர், மணிலால், சுப்பராய காமத், தேவதூத வித்யார்த்தி, கோட்பாலே, எம். எஸ். சுப்ரமணிய ஐயர் ஆகியபலர் இருந்தனர். நான் தோடைமங்களம் ஆரம்பித்து ஸாதுகீர்த்தனாரம்பத்திலே என்று தொடங்கினேன். "போலோ ஹிந்தி" என்று இடிமுழக்கம் செய்தார் கோட்போலே. "தெலுகுதோ செப்பண்டீ" என்றார் பானுமூர்த்திகாரு. "இங்கிலீஷ் பிளீஸ்" என்றனர் கல்லூரி மாணவர். "தமிழில்" என்று யாருமே சொல்லவில்லை. இங்கிலீஷ் என்று கத்தினவருள் பலர் தமிழரே. நான் எனக்குத் தெரிந்த ஸமுஸ்கிரதம் இந்தி தெலுங்கு கன்னடம் ஆங்கிலம் எல்லாம் சேர்த்துக் கதம்பக் கச்சேரியாகச் செய்தேன். பாரதசக்தி சிவாஜிப் படலப் பாடல்களுக்குப் இனியமெட்டுக்கள் அமைத்தேன். பின்பாட்டு பக்கஜமாக்கள் பரவாயில்லை. சப்ளாக்கட்டையும் பேஹாக் ராகமும் என்னைக் காத்தன. இடையிடையே மராடிய பக்திமான்கள் கதைகளும் சொன்னேன். சிவாஜியின் போர்ப்பாடல்கள், டில்லிச் சிறைதப்பிய கட்டம் எல்லாம் சிறப்பாயிருந்தன. பட்டாபிஷேகம் முடிந்தது. "பகவதி காளி பராசக்தி; பவானிதேவி மஹாசக்தி" என்ற நாமாவளியைச் சபைமுழுதும் என்னுடன் பாடியது. கதை முடிந்ததும் ஆதிநாராயணஞ் செட்டியார் ஆங்கிலத்திலும், கோட்போலேயும் மணிலாலும் இந்தியிலும் என்னைப் புகழ்ந்தார்கள். ஊர்தோறும் பாரதிஜீ கதைகள் வைத்து வீரந்தூண்ட வேண்டும் என்று துள்ளினார் கோட்போலே.

மறுநாட்காலை நான் பஜனை நடத்தி வீரப்பாடல்கள் பாடினேன். மாலை திலகர் கட்டத்தில் பெரிய கூட்டம். ஆரியஸமாஜத் தொண்டர் அணிவகுத்து நின்று என்னை வரவேற்றனர். ஜயபாரத் என்று வந்தனத்தை ஏற்று மேடையேறினேன். 20,000 பேர் கூடியிருந்தனர். தூரத்தில் தொழுகை நடத்திய முஸல்மான்களும் வந்தனர். அவர்களை முன்னே அமர்த்தினேம். நான் அரைமணி நேரம் "சிவாஜியாயிருங்கள்" என்று பேசினேன்:— சிவாஜியை நாம் ஏன் கொண்டாடுகிறோம்? அவன் நாட்டிற்கு விடுதலை தந்தான். பாரதஸாம்ராஜ்யத்தை நாட்டினான், அறங்காத்தான், தீமையை வீழ்த்தினான். வீரமே அவன் உடல், தேசமே உயிர், சேவையே மூச்சு. பனிரண்டு வயதில் சிவாஜி படைநடத்தி பிஜபூர் அதில்ஷாவைக் கலக்கினான். அவன் மேடைப் பேச்சில் காலங்கழிக்கவில்லை. கிராமம் கிராமமாகத் தொண்டரை அனுப்பி, வீரரைக் கூட்டிப் பொதுநலம் புரிந்தான். பகைவர் வாள் முனையில் துடித்த மக்களுக்கு அபயமளித்தான். பஞ்சத்தால் வருந்தும் மக்களின் பட்டினி தீர்த்தான். கோழைகளுக்கு பலமும் தைரியமும் ஈந்தான். கல்வியும் தொழிலும் வளர்த்தான். இந்தியைப் பரப்பினான். அன்னியர் வலையை அறுத்தெறிந்து, நம்மவர் நிமிர்ந்துநிற்கச் செய்தான். இந்தக்கால நிலையென்ன? பனிரண்டு வயதில் நமது சிறுவர் எப்படியிருக்கிறார்கள்? பதினெட்டு வயதிலேதான் எப்படியிருக்

கிறார்கள்? கூட்டுநெஞ்சும் குழிந்த கண்ணும் ஏங்கிய முகமும் தூங்கிய பார்வையும்...பரிதாபம்! இந்தக்கால சிவாஜி மகாத்மாஜிதாம். அவர் வழியைப் பின்பற்றி சத்தியவாளையும் அஹிம்ஸாதர்ம பீரங்கியையும், தியாகப் படையையும், ஆத்மசக்தி குண்டையும்கொண்டு சுதந்தரம் பெறுவோம். சத்தியாக்கிரகத்தில் சிறைசென்ற 25,000 தியாகிகளின் விலங்குச்சத்தம் உங்கள் நெஞ்சைப் பிளக்கவில்லையா? நெஞ்சில் ராம தாசும், செயலில் சிவாஜியும், வாழ்வில் காந்தியுமாக முன்னேறுவோம். ஓம் சுத்தசக்தி."

எனக்குப் பிறகு இந்தி ஆங்கிலம் தெலுங்கு மொழிகளில் பலர் பேசினர். முடிவில் நான் மணிலாலின் வீரப்படையை நடத்தி, பஜனை ஊர்வலத்துடன் கடற்கரை வழியாகவே தங்கசாலைக்குச் சென்றேன். ஆரியசமாஜத்தில் இரவு அரைமணிநேரம் வீரபாரதம் என்பதுபற்றி இந்தியில் பேசினேன். மறுநாள் சென்னைத் தலைவரைப் பார்த்தேன். ஸ்ரீனிவாசையங்கார் "புறப்படும் எலெக்ஷன் காம்பிற்கு. சத்திய மூர்த்தி ரங்கசாமி எல்லாரும் போகிறோம்" என்றார். மனச்சாட்சி "உன்வேலை இதுவன்று" என்றது. அப்போது சத்தியமூர்த்தி வந்தார். "என்ன பாரதியார் காஷாயமும் நிலக்கடலையுமாயிருந்தால் போதுமா? நன்றாகப் பேசுகிறீர், வாரும் என்னுடனே" என்றார். நான் அவருடன் சென்று தற்கால அரசியலை விவாதித்தேன். முடிவில் "காந்தி கிளம்பினால் நானும் கிளம்புவேன்" என்றேன். "காந்தி இங்கே வருகிறார் கதர்ப்பணிக்கு. அதற்குள் நாம் தஞ்சாவூர் மதுரை திருநெல்வேலியில் சுற்றி வரலாமே" என்றார். பகவான் சித்தம் நடக்கட்டும்... நான் திருவாரூர் போகிறேன்; அங்கிருந்து வருங்காலத்தைத் தீர்மானிப்பேன் என்று விடைபெற்றேன்.

பலகிராமங்களைச் சுற்றிப் பார்த்தேன். கண்ணீர் கண்ணீர்! குடி களவு சூதாட்டம், விபசாரம், நோய் வறுமை, கடன், கவலை நரகம் நரகம்! வாழத்தெரியவில்லை. இயற்கைவழி தெரியவில்லை. ஏழை மக்கள் ஓரிடம் அழுகிய மாட்டுணைப் பிடிபிடியாக எடுத்து உண்ணக் கண்டேன். ஓரிடத்தில் காளி மூளிகருப்பன் என்று ஆடு மாடு எருமைகளை அறுத்துக் குவித்துக் கசாயிசாகெபிற்கு விற்கக்கண்டேன். "இயற்கை வாழ்வை விளக்கு" என்றது மனச்சாட்சி. அழைப்பும் வந்தது.

256. பாலையூருக்கு வந்தனம்

பாலையூருக்கு வந்தேன். காஞ்சிபுரத்திலிருந்து ரங்காசாரியார் "உடனே வரவேண்டும்" என்றழைத்தார். 'போ' என்றது மனச்சாட்சி. "சக்தி நிலையத்தை நடத்திக்காட்டினேன். நீங்கள் தக்க புள்ளிகள். என்னைவிடத் திறமையாக நிலையத்தை நடத்த முடியும். நான் ஒரே இடத்தில் இருக்க முடியாதவன். ஆதலால் அடுத்த சேவை

யை நாடிக் காஞ்சிபுரம் செல்கிறேன். எங்கிருந்தாலும் உங்கள் அன்பை மறவேன்'' என்று விடைபெற்றேன். டி. கே. ஸ்ரீக்கு என்னை விட மனமில்லை. மாணவ மாணவிகள் கலங்கினர்கள். "அமைதியா யிருங்கள். கடவுளை நம்புங்கள். பக்தி செய்யுங்கள். அந்த இடத்தில் என் உள்ளம் இருக்கும்'' என்றேன். அன்று அமோகமாக அர்ச்சனை பஜனை நாமாவளிகள் நடத்தினேன். காலை ஐந்து மணிக்குப் புறப்பட்டேன். தோப்பையா முதலியாரின் பெட்டிவண்டியில் ஏறினேன். அவரே வண்டியை ஓட்டிவந்தார். களப்பாள் வந்ததும் அவர் தமயனர் வந்துவணங்கி இரண்டு காஷாயக் கதராடைகள் தந்தார். பெட்டியில் வைத்துக்கொண்டு பாமணிக்கு வந்தேன். அன்பர் குதூகலமாக வரவேற்றனர். இரவில் பஜனைநடத்தி, காலையில் ஐயப்பாவின் பெட்டிவண்டியிற் சென்று ரயிலேறினேன். நான் எதிர்பாராமலே திருஆரூர் ஸ்டேஷனில் சிவராமபிள்ளை கண்டு வரவேற்று "விஜயபுரத்தில் ஒருபிரசங்கம் செய்ய அழைத்தார்: சென்றேன். மாலை ஆறுமணிக்கு, கோயிலில் பிரசங்கம் நடந்தது. அதில். இயற்கை வாழ்வும் ஜீவகாருண்யமும் மிளிர்ந்தன. எனது நாளைத் திட்டத்தையும் அன்பருக்கு விளக்கினேன். காலையில் சிவதரிசனம் செய்தேன்.

கருவிலே எனைக் கவர்ந்த கதிரொளிப் பிழம்பே போற்றி!
உருவென உலக மெல்லாம் உயிர்த்திடும் ஒன்றே போற்றி!
குருவெனக் கொண்டேன்; ஆண்டு கொண்டெனை நடத்துவாயே
திருவெனக் குனது தொண்டே சிதாகாச சிவமே போற்றி!

௬௬. இயற்கை வழியே

257. ஆஷாடபூதித்திருடர்!

என் வண்டியில் கூட்டமில்லை; டிரங்கை பெஞ்சில் வைத்து அதன் மேல் சாய்ந்துகொண்டு சிந்தனைக்கனவில் ஆழ்ந்தேன். என் டைரி பெட்டிமேல் இருந்தது. உதிக்கும் கவிதைகளை அதில் எழுதினேன். ஓம்...எஞ்சின் ஊதியது. தடபுடலாக இருவர் ஓடிவந்து உள்ளே இடித்துப்புகுந்தனர். குப்குப் என்று வண்டிபுறப்பட்டது. அந்த இருவர் எதிர் பெஞ்சில் வணக்கமாக அமர்ந்து, என்னையே பார்த்தனர். ஒற்றர் என்றிருந்தேன். ஆனல் என் ஒற்றர் இன்னும் மறைவாகவே கண்காணித்தனர். "சுவாமிகளே சாஷ்டாங்க நமஸ்காரம்'' என்றனர் இருவர். கனவு கலைந்தது; திரும்பினேன்...

ஆசாமி—1: (பாடினர்) திருவடி தரிசனந்தேடிவந்தோம்...ஜன்ம சாபல்ய மடைந்தோம்...ஹஹ...ஆ...

ஆ—2: தம்பி, தேடிய குருநாதர் தரிசனம் அளித்தார்,

நான் : ஐயா நான் குருவல்லன்: சிஷ்யவேட்டையும் ஆடியதில்லை; இறைவனே குரு.

ஆ—1 : அப்படி அருளலாமா...மகானே, ஸம்ஸாரபந்தத்தில் வெந்து நொந்து, பந்தவினை தீர்க்கும் குருவைக் கண்டுபிடித்தோம்.

ஆ—2 : நீ பரவாயில்லையப்பா...நான் அவள் கையில் பட்டபாடு ...சிவசிவா.

ஆ—1 : அவளை ஏனப்பா நினைக்கிறாய். குருநாதர் திருவடியை நினையப்பா...சாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தி.

நான் : அன்பீர், தக்ஷிணாமூர்த்தி இதயகுகையில் இருந்தபடியிருக்கிறான். அவனை நினையுங்கள்.

ஆ—1 : மகோபதேசம... இதயகுகை; எல்லாம் அங்கே. சுவாமிகள் எங்கே செல்வதோ.

நான் : வந்த இடத்திற்கு ; எந்தாய் காமாக்ஷியிடந்தான்...

ஆ—2 : திருமடம் எங்கோ ? ஊர் எதுவோ ?

நான் : இடமெல்லாம் மடமே. யாதும் ஊரே. அகமடங்கினால் அமைதியே இருக்கை.

ஆ—1 : ஆஹா திவ்யவாக்கு! சுவாமி அகம் அடங்க ஒரு சாதனம்.

நான் ; எனது யான் என்று எதையும் கருதாதே. எல்லாம் திருவருள் உரிமை என்று நினை. உள்ளே பார்த்திரு. அதுதான் யோகம் நிஷ்டை எல்லாம். தியானியுங்கள். பேச்சில் பயனென்ன ?

ஆ—2 : உபதேசம் ஆனது...ஸ்வாமி, பார்த்துக்கொண்டே இருப்போம்.

நான் தியானத்தில் ஆழ்ந்தேன். டைரியைப் பெட்டிக்குள் வைத்தேன். ஆட்களும் தியானம் நடித்தார்கள். மாயவரம் வந்தது. ஒருவன் "டே, சுவாமிகளுக்கு காப்பி இட்டலி வாங்கிவாடா" என்றான். நான் மறுத்தேன். "சுவாமிகளே வாருங்கள் பால் பழமாவது. சாப்பிடலாம்! என்று வற்புறுத்தினான். மற்றொருவன்" நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன். சுவாமிகளுக்கு பிக்ஷைபண்ணிவை" என்றான். நானும் உடம்பு சுத்தம் செய்துகொள்ளப் போனேன். அந்த ஆள் சுவாமி, "தாஸன் உபசாரத்தை ஏற்கவேண்டும்" என்றான். நான் ஐந்து நிமிஷத்தில் வண்டிக்குத் திரும்பினேன்...அங்கிருந்த ஆளையும் காணோம். பெட்டி திறந்திருந்தது. சாவியைக்காணோம். திறந்தேன்...படுமோசம், டைரியில்லை, ஆடைகளில்லை, ஸ்வராஜ்யசித்தி என்று நான் எழுதிவைத்த காவியம் இல்லை. திகைத்தேன். பரிசோதகன் "எடு டிகெட் பைராகி,, என்றான். நான் "ஐயா இருவர் என் ஐம்பது ரூபா, டிகெட், ஆடை எல்லாம் கொள்ளை கொண்டார்கள்,

இந்தப் பெட்டியை வைத்துக் கொள்ளுங்கள்...அல்லது விலாசம் தருகிறேன்: ஊருக்குச்சென்று பணம் அனுப்புகிறேன். "என்றேன். அவர்கள் "வா போலீசுக்கு" என்று அழைத்துச் சென்றனர். சென்றேன். ஸ்டேட்மெண்டு தரும்போது என் பெயரைக்கேட்ட இன்ஸ்பெக்டர், "சமரஸபோதினி ஆசிரியரா" "அடடா தங்களையும் அவர்கள் மோசம்பண்ணினார்களா...வாரும் வண்டியைப் பார்ப்போம் என்று என்னை அழைத்தார். நான் வந்த வண்டி தனியே நின்றது. அதில் அலசினோம். லட்ரினில் டைரியிலிருந்து ஒருகிழிசல் துண்டு கிடைத்தது.

பேத்தம் நீங்கிப் பிழைத்திடவே பேசாப் பெருமை கிடைத்திடவே
சித்தம் உன்னிற் கரைந்திடவே சீவன் சிவமாய் மாறிடவே
சத்த மற்ற துரியத்தில் சாந்தமாக வாழ்ந்திடவே
சுத்தசக்தி மின்சாரம் சுழன்று நிட்டை கூடுகவே.

இதைக்கண்டதும் தெய்வசோதனை என்றறிந்தேன். என்வாழ்வில் திடீர்மாறுதல் ஏற்பட்டது. நான் காஞ்சீபுரம் சென்று இயற்கைப் பத்திரிகை நடத்தி, நாடெல்லாம் சுற்றிச் சொற்பொழிந்து, அரசியல் மேடையையும் கைபற்ற நினைந்தேன். சிந்தனைக்கனவில் நான் சத்திய மூர்த்தியுடன் சுற்றுப்பிரயாணம் செய்வதாக உணர்ந்தேன். "உன் கடமை வேறு" என்பதை இறைவன் காட்டினன். போலீஸ் இன்ஸ்பெக்டர் மரியாதையாக "சுவாமிகளே நீங்கள் செல்லுங்கள். அல்லது என் வீட்டிற்கு வாருங்கள்" என்றார். நான் மாயவரத்தில் எனக்கு ஒரு வீடிருக்கிறது என்று கிளம்பினேன். எந்த வீடு? மயூரநாதர் பங்களாதான்...

258. குறைசொல்லேன்.

இரவு ஒன்பது மணி; கையில்பைசா இல்லை. யாரிடமும் கை ஏந்துவதும் இல்லை. "இப்போது என்ன செய்வாய்" என்று விண்மீன்கள் கண்சிமிட்டி நையாண்டி செய்கின்றன. உலகமே என்னைக் கைவிட்டதென நினைத்தேன். "நான் இருக்கிறேன்? போ முன்!" என்றது ஜீவசாட்சி. மாயவரம் சின்னையாபிள்ளை, நடராசன் முதலியோரைத் தெரியும். ஆனால் நான் நேரே கோயிலுக்கே சென்றேன், அப்போது ரிஷிபாருடராக சத்திசிவம் புறப்பட்டார். நாட்டை ராகம் அலைவீசிப் பறந்தது. உத்ஸவ மூர்த்தியைக் கும்பிட்டு, மூலவர் சந்நிதி சென்றேன். தனிமை கிடைத்தது. சிவனே, என்னைத் தடுத்தாண்டு உன் சந்நிதிக்குக் கொண்டு வந்தாயா...

கள்வராய் வந்து கனிமொழிகள் பேசிநீ
கொள்ளை யடித்த குறைபேசேன்—வெள்ளிமலை
அப்பா வுனதருளே ஆனந்தச் செல்வமெனில்
இப்பாரே போனாலும் என்?

வஞ்சர் வழிபறித்தும், வன்னெஞ்சர் தூற்றியும்,
கொஞ்சமும் உன்மேற் குறைசொல்லேன்—எஞ்சுபொருள்
எல்லாம் இழந்தாலும், எனக்குன் புகழ்பாடும்
செல்வமே போதும் சிவம்.

உன்னைப் பொருளா யுணரவே அக்கள்வர்
என்னைப் பொருள்கவர்ந் தேகினரோ—மின்னைப்போல்
ஊனுயிரைக் கொண்டாலும் உன்னிச்சை என்பதலால்
ஏனென்றும் கேளேன் இனி.

எவரிடமுங் கேட்பதில்லை என்னும் செருக்கைக்
கவரவே வந்தாரோ கள்வர்—சிவனேநான்
பிச்சை யெடுத்துப் பிழைப்பதெனில் உன்கண்ட
நச்சை யிடுவாய் நயந்து.

இப்படிப் பாட்டுந் தியானமுமாயிருந்தேன். என் சங்கற்பங்களெல்லாம் பறந்துபோயின. காலை நான்குமணிக்கே எழுந்து காவேரியில் மூழ்கினேன். பெட்டிகூடத் தொல்லையாயிருந்தது. ஒருமண்டபத்தில் அதை வைத்துவிட்டுத் தியானித்தேன். அப்போது குளிரில் நடுங்கிக் கொண்டு ஒரு பெண் தன் குழந்தையை அழைத்துக்கொண்டு அங்கே தோன்றினாள். என்னைச் சோதிக்க ஆண்டவன் அனுப்பினான் போலும்; குழந்தை நிர்வாணமாயிருந்தது. என்பெட்டியில் சிவாஜித்திருநாளுக் குத்தந்த பதக்கம் இருந்தது அதைத் தாயிடம் தந்து, பெண்குழந் தைக்கு அரைமூடிகட்டச் சொன்னேன். ஏழைப்பெண் "தங்கராசா நல்லாயிருக்கணும்" என்று புகழ்ந்தாள். புகழாதே; கடவுள் தந்ததென்றுபினை என்று, நான் சின்னையாபிள்ளையைக் காணச் சென்றேன். அவர் கோயமுத்தூர் மகா நாட்டுக்குச் சென்றார். இதுவும் ஒருபாடம். "யாரையும் வலுவில் பார்க்காதே...கடவுள் துணையை நம்பியிரு." என்றது மனச்சாட்சி. நடேசனாரைச்சந்தித்தேன். அவர் ஒரு பலசரக் குக்கடையில் என்னை அமர்த்தி, பத்து நிமிஷத்தில் வருவதாகச்சென்றார். கடைக்காரன் என் பெயரைக்கேட்டதும் "சாமிக்கு என்ன வேண்டும்...காப்பிபலகாரம் வாங்கிவரவா" என்று வினவினான். "வேண்டாமப்பா; ஒரு கார்டு தா போதும்" என்றேன் தந்தான்; தொப்பையா முதலியாருக்கு எழுதினேன். அவரிடம் நான் கொடுத்துவைத்த ரூ225ல் பத்துருபா அனுப்பச்சொன்னேன். ஆனால் எந்த விலாசத்திற்கு? யோசிக்கும்போது, நடேசன் பரபரப்புடன் "உங்கள் ஐயங்கார் கும்பல் பாடசாலையில் வந்திருக்கிறதே...போம்..." என்றார். சென்றேன். எஸ். ஸ்ரீநிவாசர்... "என்னபாரதியாரே பரிவ்ராஜகமா?" என்றார். ஏ. ரங்கசாமி ஐயங்கார் "வாருங்கே என்ன செய்தி" என்று வினவினார். மருதவனம்பிள்ளை "வாருங்கோ உட்காருங்கோ" என்றார். நான் சம்பவத்தைச் சொன்னேன், யாசகம் கேட்பதாக

யினைத்து "நாங்கள் சும்மா வந்திருக்கிறோம். இங்கே பணமேது?" என்றார் நண்பர். ஐயா பணம் கேட்கமாட்டேன் உங்கள் மனமே வேண்டும். "இந்த ஊரில் நான் சிலநாள் இருக்கவேண்டும். எனக்குப் பணம் வரும். அதை உங்கள் விலாசம் போட்டு அனுப்ப உத்தரவு தாருங்கள்" என்றேன். சரி என்று ஒப்பினார் மித்திரன் ஆசிரியர். ஐயங்கார் மறுபடியும் "காங்கரஸ் வேலை செய்யும். இன்று எலெக்ஷன் கூட்டம்; பேசும்" என்றார். நான் காந்தி விஷயமாக வேண்டுமானால் பேசுவேன் என்றேன். அவர்கள் அரசியல் சதுரங்கத்தில் இறங்கினார்கள்.

ஸ்ரீநிவாசர் க்ஷவரம் செய்துகொண்டார். சரியாக ஒருமணிநேரம். சற்று உட்காருவார். ஆள் கத்திபோட்டு ஒருவழிப்பு வழிப்பதற்குள் எழுந்து "அந்த பிரகாசம் செய்வது இப்படி அப்படி" என்று புனுகுப் பூனைபோல் இங்குமங்கும் நடப்பார்; பிறகு அமர்வார். மீண்டும் "சத்தியமூர்த்தி பேச்சு." மறுபடி ஒரு வழிப்பு. மோதிலால் இப்படி படேல் அப்படி"; ஐந்து நிமிஷம் உலாவுதல். இப்படியாக க்ஷவரம் முடிவதற்குள் நாட்டு விவகாரங்களெல்லாம் காரமாகப் பேசி முடித்தார். இடையிடையே "என்ன கிராம நிர்மாணம்?" என்று எனக்கும் சன்மானம் கொடுத்தார். பிறகு எல்லாரும் சாப்பிடச் சென்றனர். சிலர் திண்ணையில் உல்லாசங்களில் இறங்கினர். நான் பேசாமல் கீதைபடித்துக்கொண்டும் தியானித்துக் கொண்டும் சுவர்பக்கம் திரும்பியிருந்தேன். ஒருவர் "சுவாமி சாப்பிடட்டும்" என்று மாங்கனி தந்தார். அப்படியே வைத்துவிட்டேன். அன்பினால் வராததை நான் தொடமுடியாது. அன்று உலகை இன்னும் நன்றாக அறிந்து, இறைவன் ஒருவனே துணை என்றிருந்தேன். அவன் எப்படி நம்மை ஆதரிக்கிறான் பார்ப்போம் என்று கீதையிற் சரண்புகுந்தேன்.

மணி ஐந்து; எதிர்பாராமல் ஒரு பள்ளி ஆசிரியர் வந்தார். "நமஸ்காரம். தாங்கள் இங்கே இருக்கவேண்டும்; நல்ல மடம் இருக்கிறது. நிர்மலானந்த சுவாமிகள் இருக்கிறார் வாருங்கோ" என்றார். அப்படியே சென்றேன். கண்டேன் நிர்மலானந்தரை. அவரும் என்னை மகன்போல நேசித்தார். பத்துநாட்கள் அவருடன் இருந்தேன். அவை என் வாழ்வின் பொன்னாட்கள். என் பணத்தைப் பறித்த அன்புத் திருடரை வாழ்த்தினேன், இறைவனே அப்படித் தடுத்தாண்டான்.

என்னினும் என்னை இதமாகப் பேணுகிறாய்
உன்னினும் இல்லை உயர்துணையே—என்னின்
விருப்பேன்? வெறுப்பேன்? வினையேன்? அருளடியில்
இருப்பேன் இருந்தபடி யே.

259. வேதாந்த முழக்கம்

நிர்மலானந்தர் பழுத்த வேதாந்தக் கிழவர். நிரம்பப் படித்த புலவர். பெரிய புத்தகசாலை அவரிடம் இருந்தது. அதில் ஏராளமான ஸம்ஸ்க்ருத புத்தகங்கள் இருந்தன. காவேரி மண்டபத்தின் அருகே அவர் மடம். ஆற்றில் நீராடிவந்து, ஜபதபங்கள்செய்து, அவர் ஞான நூல்களைப் பாடம் சொன்னார்.

நான் கீதையும் பிரம்மசூத்ரமும் பாடங்கேட்டேன். அவருக்குப் பல மாணவர் இருந்தனர். அவருள் லக்ஷ்மி என்ற பெண்மணி மகா பண்டிதை. தர்க்கசாஸ்திரத்தில் வல்லவள். அவளே அன்னைபோல் என்னை உணவுதந்து ஆதரித்தாள். இரண்டுவேளை உண்பது, மூன்று வேளை தியானிப்பது, மற்றநேரமெல்லாம் சுவாமிகளிடம் வேதாந்தம் கேட்பதுவே எனதுவேலை. அத்துடன் ஹடயோக தீபிகையும் படித்தோம். அவர் நௌலி பஸ்தி, ஆஸனாதிகளில் நிபுணர். நானும் அவருடன் காலையில் ஹடயோகமும் பிராணாயாமமும் செய்தேன். ஐயங்கார் எதிரே ஆற்றுமணலில் அரசியல் கூட்டம் போட்டார். பல்லாரி ராமசாமி ஐயரே தலைவர். நான் போக அடியெடுத்தேன். சுவாமிகள் "உள்ளே இரும். அந்தத் தெருக்கூட்டம் உமக்கேன்? உள்ள பொருளில் ஊன்றிக்கொள்ளும். அனாத்ம வியாபாரங்களை ஒதுக்கும்." மனப்பாம்பிற்கு வீட்டில் இடந்தரக்கூடாது. சித்தத்தை அடக்கி யாளவேண்டும். தனக்கு அன்னியம் ஏதும் இல்லை தானுண்டு தியானமுண்டு என்றிரும்; ஞானம் பழுக்கும். நீர் ஸங்யாசி; ஏகாங்கி, பரமஹம்ஸபாரதி. இந்த ஆசிரமம் மிக்க அரிது. அதற்கேற்றபடி சித்திபெற்றால் உயர்ந்த நிலைவரும், சதாசிவப்ரம்மம் போலிருக்கலாம். மனித ஜன்மத்தில் அடைய வேண்டியதை அடைந்து சுத்த சுதந்தரம் பெறலாம். குணாதீதர் விகாரமற்ற பரமாத்ம சைதன்யனாயிருக்கலாம்" என்றார். நான் அப்படியே உள்ளே லயித்து, இமயமலைக்குப் போய் சமாதியில் ஆழ்ந்துவிடவே நினைத்தேன். ஆனால் இன்னும் விளையாட்டிருக்கிறதே.

தொப்பையா முதலியார் பத்துரூபா அனுப்பினார். நிர்மலானந்தருக்கு நமஸ்காரம் செலுத்தி, ஞானசாரம் பாடினேன்:

ஊனார் உடலும் யானல்லேன் உருவும் பெயரும் கொண்டு வளர்
நானா வுலகும் யானல்லேன்; நலிவும் பிறப்பும் எனக்கில்லை.
யானார் என்றே ஆராயின், யானே பிரமம் என்றறிந்தேன்,
வானார் விரிவும் என்விரிவே; வாழும் உயிர்கள் என் உயிரே.
யாதே மனிதர் உள்ளத்தில் மனிதனாக உள்ளதுவோ,
யாதே அகிலம் எங்கிலுமே அகண்டமாக விரிந்ததுவோ,
யாதே வேத முனிவர்களால் அதுநான் என்னப்பட்டதுவோ
யாதே அறிவாய் இருப்பது நான் அதுவே; இதயக் குகைக்கனலே,
விரிந்த மோக நிலத்தினிலே வினையை நட்டு வேட்கைநீர்

பரிந்து வார்த்து வளர்த்துமனப் பாசம் என்னும் இலை படர்ந்து,
செறிந்த காமம் பூத்துநிதம் திதிப்பும் கசப்பும் கனியும் என்றே
அறிந்து துறந்த நிரந்தரமும் அகமே கிளம்பா யானுனேன்.
யானே யன்றி உலகில்லை ; யானே யன்றி வான் இல்லை ;
யானே யன்றிப் பூதமில்லை ; அந்தக் கரண உணர்வில்லை
யானே யன்றிக் கோவில் இல்லை, ஆவி யாக்கை யாவுமில்லை ;
யானே சுத்த சக்தி மயம் இதுவே ஞானம் ; அதுநானே...

நிர்மலானந்தர் 'வியாச பூஜைக்கு இரும்' என்றார். இங்கே அத்வைதம் அறிந்தேன். காஞ்சியில் பாஞ்சராத்ரம் அழைக்கிறது, ஓம்தத்ஸத் என்று விடைபெற்றேன். அன்பின் அடையாளமாக இந்தி உரையுடன்கூடிய எனது கீதையை அவருக்குத் தந்தேன் ; நடந்தேன். ஒரு கிராமத்தில் ரயிலேறினேன். ரயிலும் தத்ஸத் தத்ஸத் என்று குபுகுபுத்தது. ஓம். காஞ்சிநகர்! பயப்படாமல் வாருங்கள் பிரதிவாதி பயங்கரர் மடத்திற்கு.

260. வைஷ்ணவ சாதனம்

"ஓம் நமோ நாராயணாய! எழுணும்...எம்பெருமான் சித்தம் இந்த பாக்யம் கிடைத்தது!" என்று ஒரு முதியிளைஞர் என்னை வரவேற்றார். அவரே பிரதிவாதிபயங்கரம் மடத்துக் காரியதரிசி, நல்ல அனுபவக் கிழவர், வைஷ்ணவதாஸர், இயற்கை யன்பர். அவர் ஆயுர் வேத வைத்தியராயிருந்தார். ஒருநாள் அவர் மருந்துக்கு வைத்த நேர்வாளத்தைப் பசுமாடு தின்று இறந்தது. அன்றுமுதல் மருந்து வைத்தியத்தை விட்டு, இயற்கை வைத்தியம் செய்தார். இவரால் நான் (பிரதிவாதிகள் நடுங்கும்படி தர்க்கம் செய்யவல்ல) பரம வைஷ்ணவ சிகாமணியான அனந்தாசாரியாரை அறிந்தேன். நானும் வைஷ்ணவ சாதனம் செய்தேன். ஆழ்வார் பாசுரங்களை முறையாக ஓதினேன். பாஞ்சராத்ரதத்வமும், ராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யமும் ஆராய்ந்தேன். தென்கலை நாமம் போட்டேன். ஒன்று இரண்டா! பன்னிரண்டு! அதற்குமேல் கன்னம், பிடரி, முதுகு இன்னும் பாக்கி இடங்களிலும் சேர்ந்து 24 நாமமும் போடுவதுண்டு. கோயிலில் வடகலை தென்கலைச் சண்டை வந்தபோதுகூட, நான் நாமம் போட்டபடியே பல்லாண்டு பாடிக்கொண்டிருந்தேன். எனது நண்பர் ஒருவர் வடகலையார் கை வலுத்தால் சட்டென்று பாதத்தை அழித்துவிடுவார் ; தென்கலை வலுத்தால், தென்கலையாருடன் இவரும் ஒரு தருமக்கல் போடுவார். "விநியோகம் யார் தண்டியாகச் செய்கிறார்களோ அந்தக் கலையே கலை" என்பார். நான் நாராயணக் கலையைப் பின்பற்றினேன். தேசிகர் ராமாநுஜர் பிள்ளை லோகாசாரியார் ஆளவந்தார் எல்லாரும் எனக்கு ஒன்றே. ஆதலால் தக்காரிடம் தேசிகப்பிரபந்தமும் ஓதினேன். முக்கியமாக காலைமாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் தியானித்

துக் கொண்டே பிரபந்த பாராயணமும் கேட்டேன், வேதபாராயண மும் கேட்டேன். அல்லது அண்ணங்கராசாரியாரின் தோட்டக் குடி லில் தியானித்தேன். வைஷ்ணவதாஸர் "வைஷ்ணவன் என்பதி லிருந்தே வைடமின் வந்தது; மதங்களின் வைடமின் வைஷ்ணவம் என்பார். இதேமாதிரி ஒருகொண்டி நாமக்காரர் வட என்பதிலிருந்தே வைடமின் வந்தது. வடகலையை வைடமின்மதம் என்பார். நான் வட+மன் (வடவிருட்ச நிழலில் உள்ள சிவன்)=வைடமின் என்பேன். தாஸர் என்னைப் பக்கா வைஷ்ணவனுக்க வெகுபாடுபட்டார். நான் ஹரி என்பேன். அவர் சிவம் என்னமாட்டார். எனது சௌசங்களையும் வாய்கொப்புளிப்பதையும் கணக்கிடுவார். பாத்திரம் பண்டம் வைக் கும்போது "கொஞ்சம் ஜலம் தெளித்து சுத்திபண்ணி வைக்கவேண் டும்" என்பது அவர் கட்டளை. ஒருநாள் அவர் மதப்படி கீழே கொஞ் சம் நீர் ஊற்றினர். அதன்மேல் கடையில் வாங்கிய சர்க்கரைப் பொட்டணத்தை வைத்துவிட்டேன். அடநாராயணு என்ருர். சர்க்கரை அவர் பாலில்போய்ச் சேர்ந்து உள்ளே போய்விட்டது. காந்திஜிக்கு இராட்டினத்தில் எப்படியோ அப்படி தாஸருக்கு உலக் கையில் பிரியம். திருவுலக்கையாலேதான் சுதந்தரமும் கிடைக்கும் என்பார். திருவுலக்கையால் வெள்ளைக்காரனைப் போடவா? இல்லை. "உலக்கையால் உரலில் அரிசி இட்டி, எல்லாரும் வைடமின் அரிசி சாப்பிட்டால் பலம்வரும்; சுதந்தரமும் வரும்" என்பார் தாஸர். அவ ருடைய அடுத்த கொள்கை பாலைக் கறந்து வைத்துக் குடிக்கக் கூடாது என்பது பிறகு? மாட்டு மடியில் வாயைவைத்து, அப்படியே உறுஞ் சிக் குடிப்பதுதான் பக்கா இயற்கைமுறை என்பார்—அதாவது தாய்ப் பாலைக் குழந்தை சாப்பிடுவதுபோல் ஆனல் அவர் கறந்தபாலைத் தேங் காய்ப்பாலுடன் காய்ச்சித் திரட்டுப்பால் சாப்பிடுவார். அப்போது நான் பார்க்கக்கூடாது. இருந்தாலும் கடைக்கண்ணுல் பார்த்து விடு வேன். சாப்பிட்ட பிறகு "பாரதியாரே ஒருவன் மனைவியுடன் அனு பவிப்பதை இன்னொருவன் பார்ப்பது தகாது; அதுபோலவே ஒருவன் உண்பதையும்" என்பார். நாய் பூனை பார்த்தால் தடுக்கமாட்டார். அவருடன் இருந்தமட்டும் நான் கடுமையான வைஷ்ணவ ஆசார விதி களை அனுஷ்டித்தேன் என் உணவு பால் பழமே. தாஸருடன் பல வகையான இயற்கை வைடமின் உணவுகளைச்செய்து பரிசோதித் தேன். கோதுமை மா அல்லது அரிசிமாவுடன் வாழைப்பழம் பிசைந்து, கொஞ்சம் தேங்காய்த்துருவல் சேர்த்து, வைஷ்ணமின் அடைதட்டி உண்டோம். தூய நல்லுணவு ஒன்று கண்டேன். வைஷ்ணவ சாத னம் எனக்கு பக்திசிரத்தையை உண்டாக்கியது. ஆசாரம் சுகாதாரமே. ஸ்நான சௌசவிதிகள் உடல்நலமே தந்தன. எதை மேற்கொண்டா லும் அதில் கருத்தூன்றுவேன். ஆதலால் நான் ரங்காசாரியாருடன் இருந்த காலத்தில், ராமபக்தியும் திருவாய்மொழியுமா யிருந்தேன்.

ஸ்ரீ ராமாநுஜர் உபாசித்த எம்பெருமானையே சகுணமாக உபாசித்தேன். பாமாலையும் சூட்டினேன் :

அப்பனே வரதா போற்றி! அன்பினால் உனையடைந்தேன்
ஒப்பிலாக் கருணை மாலே உலகெலாம் உனதரங்கம் ;
எப்படி எந்த வேடம் ஈந்தெனை நடத்து வாய் நீ
அப்படி நடித்துன் உண்மை யறிவினிற் கூடுவேனே.
பாருக்கு மன்னா, சக்தி பங்கயத் திரும ணாளா
பேருக்கும் புகழினுக்கும் பேதமை யுடனே வாழேன்
ஊருக்கும் உலகினுக்கும் உன்புகழ் சொல்லி வாழ்வேன்
யாருக்கும் அடிமை யல்லேன் இறைவநின் அடியனேனே.

இப்படி விஷ்ணுபக்தி செய்த வேகத்தில் எனது பேனாவும் இயற்கைப் பத்திரிகையில்குடக்கூத்தாடியது.

261. இயற்கை இதழ்

நான் இருந்த பெருமாள் கோயிலே இயற்கை யில்லம். அங்கே ஓர் சிறிய அறையில் என் பேனா ஓடியது. தமிழில் இயற்கை வாழ்வே இன்பவாழ்வென விளக்கிப் பலகட்டுரைகள் எழுதினேன். இயற்கை வாழ்வின் சாரம் யோகசித்தி யோகவியலிலும், உடலுறுதியிலும் உள்ளது. பெஜவாடாவில் எனது நண்பர் பைரவமூர்த்தியும் ஹனுமையாவும் நடத்திய நாசுரோபாத் (Naturopath) என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு மாதக்கட்டுரைகள் எழுதினேன். அவை மஹாத்மா காந்தியின் பார்வையைக் கவர்ந்தன. மஹாத்மாவுக்கே இன் ட்யூன் வித் நேசர் (In Tune With Nature) என்ற விரிவான நூலும் எழுதி அனுப்பினேன். மனிதனும் இயற்கையும், இயற்கைவழியே, நம் உணவு, நோய் ஏன்? சத்துணவு, பச்சை உணவு, பொதுசிகிச்சை, மருந்தின்மாயம், சூரியநமஸ்காரம், தொட்டிமுழுக்கு, வேதுவைத்தல், உருவித்தேய்த்தல், ஹடசாதனம், கிதாசாரம் முதலிய பல கட்டுரைகள் இயற்கையில் எழுதினேன். ஒரு நண்பர் "எனக்குப் பல நூல்கள் படிக்க நேரமில்லை. இயற்கைமுறை அனைத்தையும் இரண்டு பாடல்களில் சொல்லும்" என்றார், சொன்னேன் :

பஞ்சபூத நிறை காத்தல், பசிக்கும்போது சத்துணவு,
கொஞ்சுங் காற்று வெயிலினிலே வேர்வை கொட்ட வேலைசெயல்
நெஞ்சு நிரம்ப மூச்சிழுத்தல், நீரில் ஆடி ஜபம் செய்தல்
வஞ்ச மற்ற ஒழுக்க முடன் வாழும் இயற்கை வழியிதுவே
உடலைச் சுத்தம் செய்திடுவீர் உபவாசாதி நியமத்தால்
குடலைச் சுத்தம் செய்திடுவீர் கோபதாப மில்லாமல்,

கடமை காத்துக் களிப்புறுவீர் ; கருணைக் கடவுளை உணர்வீர் ;
மடமை வறுமை அடிமை யற்ற இயற்கை வாழ்க்கை
[இதுவாமே.

இயற்கை வாழ்வையே சன்மார்க்க சாதனமாக நான் பிரசாரம் செய்து தமிழகமெங்கும் சுற்றினேன். அகச்சுகாதாரம் புறச்சுகாதாரம் என இரண்டுவகை; வாய்மை தூய்மை பொறுமை, செம்மை, தியானம் அன்பு திருப்தி இவை அகச்சுகாதாரம்; உழைப்பு, பட்டினி, பசித் துண்ணல், காய் கனி கடலை பாலுணவு, வெயில்முழுக்கு, நீராடல் பிராணாயாமம் இவை புறச்சுகாதாரமாம். இதன் விரிவு இயற்கை மகாநாட்டில் வரும். மேலே செல்லுகிறேன். எங்கே ? சென்னைக்கு

262. இன்ப மாளிகை

சென்னையில் எனக்குப் பிடித்தது மைலாப்பூர், மைலாப்பூரிலும் ஸாந்தோம் தெரு சாந்தமாயிருக்கும். அதில் அந்தப்பக்கம் கல்விக் கடல்; நமச்சிவாய முதலியார் வீடு; இந்தப்பக்கம் செல்வக்கடல், மைசூர் மகாராசா பங்களா; மற்றொருபுறம் அருட்கடலான ஏசுநாதர் பெயரால் நடக்கும் சர்ச்சு, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், கன்னிமடம் முதலியன, கிழக்கே பார்த்தாலோ எல்லையற்ற அலைகடல் வானைத் தழுவிக்கொஞ்சிக் குலாவும். அருணப்பொன் பூத்து இளங்கதிர் ஏழும் போது அடடா ! இந்தக்காட்சியைக்கண்டு மகிழ எனக்கு ஒரு மாளிகை கிடைத்தது—மைசூர் மகாராஜா பங்களாவுக்கு இப்புறம் உள்ள டவர் ஹவுஸ் மாளிகை. அதை ஐதராபாது ராஜா புருஷோத்தமர் வாடகைக்கு எடுத்திருந்தார். அவர் பிரதிவாதி பயங்கரமடத்து சிஷ்யர். அனந்தாசாரியாரிடம் பரமபக்தியுள்ளவர். ஆசாரியார் பம்பாயில் பாலாஜி கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தார். அங்கே சுவாமிக்குத் தங்கக்கவசமும் திருவாட்சியும் வேண்டும் என்று எழுதினர். அதைச் செய்ய ரங்காசாரியார் ஒப்புக்கொண்டார். தமது மாளிகையை அதற்காகவே ராஜா கொடுத்தார். நானும் ராங்காசாரியாரும் அதில் வசித்தோம். அவர் இரண்டாம் மாடியில் இருந்தார். நான் மூன்றும் மாடியில் எட்டடி உள்ளில் இயற்கையின்பத்துடன் தியானசுகமும் கலந்து வாழ்ந்தேன். கோதுமைமாவும் வாழைப்பழமும் பிசைந்து தட்டிய வைடமின் ரொட்டிதான் என் உணவு. அதை ஆசாரியாரே செய்து தருவார். நான் அவர் சமைக்குமிடத்திற்குப் போகக்கூடாது நான் மைசூர் ராஜா பங்களாவிலும் இருந்தேன். அரசரை எனக்குத் தெரியும் காரியதரிசிகளும் நண்பர். சேவகர் மரியாதையுடன் என்னை ஏற்பர். ஸரஸ்வதி பூஜை நவராத்திரி பொங்கல் தீபாவளி நாட்களில் நான் அங்கே பூஜை பஜனை நடத்தி, விநியோகமும் செய்வதுண்டு. குழாயில் தண்ணீர் சரியாக வராது. நான் கடலில் குளித்துவந்து, மைசூர்பங்களா கிணற்றிலும் குளித்தேன். தக்கார் வந்தால் கீதை படித்தேன். ராஜாபுருஷோத்தமர் வந்தால் நாளெல்லாம் பக்தி பா

வசமே. ராமஜபம் கல்யாண்பத்திரிகை துளஸிராமாயணம் பாகவதம் இவை எங்கள் நேரத்தைப்பங்கு கொள்ளும். அவர் அரிய பெரிய அறிஞர், செல்வர் பக்தர்; சீதாராம்பாகில் அவருக்கு மாளிகையும் கோயிலும் உண்டு. ஆனால் ஒரு வழக்கிற்காக அவர் சிகந்தராபாது ஆக்ஸ்போர்டு தெருவில் வசித்தார். அங்கும் ஒரு பெரிய பஜனைமடம் கட்டி, அதில் ஆசாரியார் படம் வைத்து உபாசித்தார். பாகவதர்களுக்கும் யாத்திரிகளுக்கும், பக்தருக்கும் அவர் தாராளமாக உதவி செய்தார், என்னைக்கண்டால் "பல்லாண்டு பல்லாண்டு" என்பார். நான் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜய சீதாராம் என்பேன். அவருக்கு அரசியல் பிடிக்காது. இருந்தாலும் நான் காந்திமகானின் ராமபக்தியைச் சொல்லி, சத்தியாக்கிரகமே வைஷ்ணவ சாதனம் என்பேன். இயற்கைச்சிகிச்சை ஹடயோகம் ராஜயோகம் பற்றிப் பேசினால் அவர் இனிது கேட்பார். அவரால் நான் சில நல்ல இந்தி நூல்களைப்படித்தேன்.

நமச்சிவாயமுதலியார் எனது நட்பை நாடுவார். காலை அல்லது மாலை ஏழுமணிக்கு அவருடன் தமிழ் வளர்ச்சிபற்றிப் பேசுவேன். எனது நாடக இலக்கியங்களை அவர் போற்றினார். நான் ஸாந்தோம் சர்ச்சுக்கு அடிக்கடி செல்வதுண்டு. இங்கேதான் ஏசுதாஸரான தோமாமுனிவர் வந்து பைபிள் உபதேசம் தொடங்கினார். சர்ச்சில் தியானிப்பது நிம்மதிதரும். சிலுவையன்பரின் அரிய தொண்டுகளைக் கண்டு கண்டு வியப்பேன். அப்படி நமது நாட்டில் நாம் செய்யமுடியவில்லையே என்று ஏங்குவேன். மாளிகைக்கு எதிரேதான் கான்வென்டு கலாசாலை. அதில் வசந்தமலர்கள்போல் சிறுவர் பூந்தோட்டம் போட்டு விளையாடுவதைக்கண்டு பேரானந்தப்படுவேன். கத்தோலிக்கன்னியர் ஜபம் செய்வதும், ஒழுங்காக வந்து செல்வதும் கண்டு, கபாலிகோயிலையும் பார்ப்பேன். சர்ச்சின் டிங்டாங், கோயில் மணியுடன் போட்டி போடும். என் ஏசுநாதர் சரித்திரத்தைப் பல கிறிஸ்துவருக்குப்படித்தேன். சிந்தாதிரிப்பேட்டையில் ஒருவாரம் பிரசங்கம் செய்தேன். கிறிஸ்து சங்கத்தில் வாரன் முதல் பால்வரையில் எனது நண்பர். அவர்களுக்கு பைபிளின் ஞானரகசியங்களை விளக்குவேன். பேச்சே பிரசங்கமாகும். இது சென்னையில் என் முதல் அலுவல். பால் அப்பாசாமி தமிழ்ப்பாசுரங்களை ஆங்கிலத்தில் வேண்டினார். கெல்லெட் உயர் பள்ளியில் அமர்ந்து தமிழ் நூல்களைப்படித்து ஒரே நாளில் காரியத்தை முடித்துக்கொண்டு தாமரத்திற்குச் சென்று அப்பாசாமியைப் பார்த்தேன். அங்கே காந்திபக்தரான குமரப்பா மனைவியையும் கண்டேன். அப்பாசாமி கனிவிருந் தளித்தார். நான் கவிவிருந்தளித்தேன்; மாணிக்கவாசகர், அப்பர், பட்டினத்தார், தாயுமானர் வள்ளலார் ஆகிய தெய்வப்புலவர் வாக்குகளை ஆங்கிலத்தில் படித்தேன். அப்பாசாமி கையசைத்தார். அந்தமொழிபெயர்ப்பு அவர் தொகுத்த கோயில் மணி (Temple Bells) என்ற நூலில் இடம் பெற்றது. அன்று முதல் இருவருக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. அவர் சாதுசுந்தரசிங்குடன்

உலகைச் சுற்றியவர். சுந்தரசிங்கின் உபதேசங்களை எனக்குச் சொல்லி வந்தார். சாதுசுந்தரசிங் இமாலயப் பிரயாணம், என்னை இமாலயத்திற்கு அழைத்தது. அவர்கண்ட ஐக்கிய சர்ச்சு எனக்குப்பிடித்திருந்தது. அதைப்போல் சைவ வைணவ வேதாந்த சித்தாந்த ஐக்கியாலயம் நாட்ட நினைத்தேன். சென்னையில் திரிமதஸ்தரையும் சந்தித்தேன். நெற்றியைப் பார்த்தார்களேயொழிய நெஞ்சைப் பார்க்கவில்லை. அவர்களை ஒன்றுசேர்க்க ஹரியும் சிவனும் சேர்ந்து வந்தாலும் முடியாது போலத் தோன்றியது. ஒருசபையில் ஏசுநாதரும் காந்தியும் என்பது பற்றிப் பேசினேன். பேச்சுமுடிந்ததும் "நமஸ்காரம் சாமி" என்றொரு கனவான் முன்னே நின்றார்—பார்த்தேன் எனது மதுரைநண்பன் கிருஷ்ணமூர்த்தி, பால் லாரென்ஸ் ஆகி யூனிபாரத்துடன் நின்றான். மகிழ்ச்சிகூறினேன். அன்றிரவு நான் அவன் விருந்தாளியாயிருந்தேன். அவன் மதம்மாறி கல்கத்தாசென்று படித்து மணம் புரிந்த கதையெல்லாம் சொன்னான். அவனது வங்கமனைவி பிடில் வாசித்தாள். பாருங்கள், ஒன்பதாம் வகுப்பு மாணவனை மதமாற்றி, ஊர் சலசலப்பிற்கு அஞ்சாமல், கல்கத்தாவில் படிக்கவைத்து, எம். ஏ, டிகிரி தந்து, கிறிஸ்து சங்கத்தில் ரூ. 500 சம்பளத்தில் பெரியவேலையும் தந்தார்கள். இந்தமாதிரி நாம் செய்ய முடியவில்லையே. மறுநாள் அவன் என்னைக் கிறிஸ்து சங்கத்தில் பைபிள் நிலையத்திற்கு அழைத்துச் சென்றான். அடடா ஒரு பைபிளின் எத்தனை அழகான பதிப்புகள், கட்டுகள் படங்கள், விரிவுரைகள். எனக்குத் தன் கையெழுத்துடன் ஒருபைபிள் தந்தான் நண்பன். கிறிஸ்து சங்கங்கள் ஏசுநாதர் சரித்திரஞ் சொல்ல ஊர் ஊருக்கும் அழைத்தன. ஆனால் வேறு பல வேலைகள் குறுக்கிட்டன.

என் இன்பமாளிகைக்கு அரியநண்பர் வந்தனர். சாத்தூர் சுப்பிரமணிய நயினார் அடிக்கடி வந்தார். அவர் சிதம்பரம் பிள்ளையுடன் சேர்ந்து ஒரு தீவிரமான சுதந்தரக்கட்சியை உருவாக்க விரும்பினார். நான் காந்தியின் சத்தியாக்கிரகக்கட்சி ஒன்றே சுதந்தரம் தரும் என்றேன். K. T. பால் கிராமசேவைபற்றி யோசனைகள் கேட்டுச்செல்வார். அவர் கூட்டும் கிராமசேவை மகாநாட்டிற்கு நானும் தக்க உதவி செய்தேன். தினம் என்னைக்காணும் நண்பர் இந்து துணையாசிரியரான விசுவநாதையர், M. R. ராமசர்மி ஐயர், அவர் ஷட்டகரான நாராயணசாமி ஐயர், இஸ்லாமியகலாசாலை ஸயன்ஸ் புலவர். இவர்கள் தந்த தம்பூராவை மீட்டியே நான் பஜனை செய்தேன். மாளிகை தார்வான் பஜனாவளி வைத்திருந்தான். அதிலிருந்து மீரா, துளசி, ஹரி, கபீர்தாஸ் பாடல்களை நான் பாடுவேன். புதிய தமிழ்ப் பாடல்களும் முழங்கும். சிலநாள் அவர்கள் வீட்டிற்குச் சென்று பாடுவேன். அடுத்த வீடுதான் கீர்த்தனாசாரியார் ஸி. ஆர். ஸ்ரீநிவாசையங்கார் வீடு. ஐயங்கார் பழைய நண்பர்; எனது கீர்த்தனங்களை ரசிப்பவர். ஒருநாள் அஷ்டபதி பாடினார், அமுதமாயிருந்தது. நாராயணசாமியும் ராமசாமியும் பாலக்காட்டில் ஆசிரமம் நடத்த என்னை அழைத்தனர். நாராயணர்

ஸயன்ஸ் வாத்தியார் வேலையை விடத் தீர்மானித்தார். மாமனர் சேஷையர்வந்து தடுத்தார். ஆசிரமக்கனவும் மறைந்தது.

அக்காலமே நான்அறநூல்முதலியசிலவற்றை, கணேசனின்கரண்ட் தாட் அச்சகத்தில் வெளிட்டேன். அதற்காக அடிக்கடி பைக்ராப்ட்ஸ் ரோடுக்குச் சென்றேன். கணேசன் அச்சக மாடியில் தங்கி அச்சுத் திருத்தினேன். என்கூட வைத்திநாதன் இருந்தான். இருவருக்கும் வைட மின் அடைதான் உணவு. நான் பையில் மாவும் வாழைப்பழமும் கடலையும் வைத்திருப்பேன். கோயம்புத்தூர் கிருஷ்ணையர் தமது ஓட்டலில் அடைதட்டிக்கொண்டுவருவார். நண்பர் "சஞ்சயன முட்டை" என்று நகைப்பர். நான் ஆளுக்குக்கொஞ்சம் தந்து சாப்பிடுவேன். நன்ருயிருக்கிறதே என்பர். சஞ்சயன முட்டை; சாப்பிட்டால் கட்டை என்பேன். வைத்திக்கு குக்கர் வாங்கிதந்து, சமைத்துண்ணச்சொன்னேன். அவன் "வைஷ்ணவ அடையே சாப்பிடுவேன்" என்ருன்.

கணேசன் அச்சகத்தில் என்னைப்பார்க்க மகாணக்கல்லூரி மாணவர் வருவார்கள். அவர்கள் சங்கக்கூட்டத்திற்கு நான் போவதுண்டு. ஒருதரம் ஸர். சங்கரநாயர் அங்கே பேசினர். டாக்டர் சுப்பராயன் தலைமை வகித்தார். மாணவர் அரசியலிற் புகக்கூடாது என்ருர் நாயர். மாணவர் அவர் சென்றபிறகு பெஞ்சுகளை அடித்துக் கூச்ச லிட்டு, "நாங்களே நாட்டை ஆளும் மன்னர். இன்று அரசியலில் பங்குகொண்டாலே நாளை நாட்டை ஆளலாம்...என்று தடபுடலாகப் பேசினர். ஒருசாரார் காங்கிரஸ் அரசியலை எதிர்த்தனர். ஒருமாணவன் காந்திக்கு ஜே என்ருன். இதற்குள் கலாசாலையைப்பூட்ட நேரமானது. சேவகன் "வெளியேபோய் ஆலமரத்தடியிலே பேசையா" என்ருன்...கூட்டம் கலைந்தது. அங்கே எனது மாணவர் சிலர் படித்தனர். அவர்கள் என்னிடம் அடிக்கடிவந்து, ஷேக்ஸ்பியர் படித்தனர். எல்லாருக்கும் நான் பொதுவாக இயற்கைவழிவாழ்வைச் சொன்னேன். கடற்கரையில் மாணவரிடையே அமர்ந்து பேசத்தொடங்கினல், கூட்டம் கூடும். பிரமசரியத்தைப்பற்றிப்பேசுவேன். பொடி சுருட்டுபுகையிலை காப்பி டீ, லாகிரிவஸ்துக்களை விடச்செய்வேன். காலைமாலை சுத்தமாக அமர்ந்து பஜனையும் தியானமும் செய்யத் தூண்டினேன். கற்கடரைமணலில் தியானமும் நடத்தினேன். மாணவர் உறவே எனக்கு இன்பமளிக்கும்.

நான் பயன்பெற்ற மற்ரேர் நட்பு நீதிபதி ராமேசத்தின் நட்புறவு. நாங்கள் இயற்கை மகாநாடு நடத்தத் தீர்மானித்தோம். வைஷ்ணவ தாஸர் என்னை ராமேசத்திடம் அழைத்துச் சென்ருர். லஸ்சர்ச் ரஸ்தாவில் அவரது ஸ்ரீபாக் உள்ளது. உள்ளே புகுந்து திண்ணையில் அமர்ந்ததுமே "பதாரண்டி! ரண்டி லோபல" என்ரொருகுரல்கேட்டது. ராமேசம் வரவேற்ருர். "நமஸ்தே" என்று அமர்ந்தோம். நான் ஆங்கிலத்தில் என் இயற்கை வைத்திய அனுபவங்களைச் சொன்னேன்,

அவர் படபடமடமடவென்று கொட்டினர். ஆளா நீர்வீழ்ச்சியா என்று சந்தேகம் வந்துவிட்டது. அப்படி ஆங்கிலம் பொழிந்தார். அப்பப்ப நாங்கள் வாயெடுக்க முடியுமா? இதை உபநிஷத்து ஹடயோகதீபிகை, லூயி கூன், டூயி, லிண்ட்லார், ஒஸ்லர், மாக்பெடன் இப்படி அப்படி என்று மேற்கோள் அடுக்கி, வெகு உணர்ச்சியுடன் பேசினர். பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். இடையே முன்சிப்வேலைக்கு மூவர் மனுச்செய்தனர். ஒருவர் எனக்கு ஆறு குழந்தைகள், பெரிய குடும்பம். வேலைதந்தால் புண்ணியம் உண்டு என்ருர். பிடித்தது கர்ப்பத்திற்கு. கற்பத்தடைபற்றி ஒருமணிநேரம் கொட்டித்தீர்த்தார். "உலகில் பஞ்சமும் வறுமையும் ஒழியவேண்டுமானல், கர்ப்பத்தடை வேண்டும். கர்ப்பதானம் பண்ணுமுன்பு பாங்கில் ஒரு குழந்தைக்குத் தக்க பணம் கட்டவேண்டும். அப்படி நான் செய்தேன். இன்றேல் கர்ப்பதானமே கூடாது." என்ருர். உலகத்துயரை அவர் உருக்கமாக வர்ணித்தார். இயற்கைமகாநாடு கூட்டலாம் என்ருர். தாஸர் முதலில் மில் அரிசி ஒழித்து சத்துணவு மளிகை வைக்கலாம் என்ருர். அதற்கு உடனே ஏற்பாடு செய்தோம். அரசியல் வம்பில் ராமேசம் மாட்டிக்கொள்ளமாட்டார். ஆனல் தேர்தல் அமளியை அருவிநடையில் கண்டித்தார். அவர் பெசண்டின் பிரமஞானசபை அங்கத்தினர். தமது மோட்டாரில் அவர் என்னை அடையாறுக்கு அழைத்துச் சென்ருர்.

263. அடையாற்றில்

நான் பலதடவை அடையாறு சென்றிருக்கிறேன். அன்னை பெசண்டையும் பார்த்திருக்கிறேன். இந்தத்தடவை அதை என் சொந்த வீடுபோல் உணர்ந்தேன். ஜஸ்டிஸ் ராமேசம் என்னைத்தமது நண்பருக்கு அறிமுகப்படுத்தினர். அருண்டேல் கடிதம் மூலம் என்னை அறிவார். அவருடன் அளவளாவினேன். அவருக்கு ராமலிங்க வள்ளலார் சரித்திரத்தையும் ஆன்மநேய சங்கத்தையும் சொன்னேன். அவர் ஒரு மகாத்மா என்ருர். ஆங்கிலேயருக்கு வள்ளலாரைப்பற்றித் தெரிவதற்கே மகாத்மா ராமலிங்கம் எழுதினேன். அடுத்தபடியாக ராமேசம் என்னை ராஜாராவுக்கு அறிமுகப்படுத்தினர். அவர் திருவையாறர், முதியாராயினும் வாலிபத் தெம்புடையவர். எல்லாருடனும் ஒட்டுறவாயிருப்பார். அவரே புத்தகவிற்பனையைக் கவனித்தார். அவர் மனையிலேதான் நான் தங்குவது. அவர் பாரததர்மம் என்ற ஆங்கில மாதமலர் நடத்தினர். அதில் நானும் கட்டுரை எழுதிவந்தேன். அவரிடமிருந்தே பிரமஞானசங்கவிபரங்களைத் தெளிவாக அறிந்தேன். பார்த்தேன், வியந்தேன். முன்பெல்லாம் பெசண்டம்மையை அறிவுச் செல்வியாகக் கருதினேன். இப்போது அவரைப் புதுஉலக அரசியாகக் கண்டேன். அங்கே பௌத்தர், ஜைனர், கிறிஸ்துவர், இஸ்லாமியர், ஜரதுஷ்டிரர் ஆலயங்களுக்கு நடுவே தீபம் வைத்த இந்துக்கோயில்

உள்ளது. அதில் தியானம் நடந்தது. சுமார் நூறுபேர் கூடி தியானித்தனர்; நானும் ஒரு ஐரோப்பியருக்கு அருகேயிருந்து தியானித்தேன். ஒற்றைக்காஷாயம் கட்டிய என்னை எல்லாரும் விநோதமாகப் பார்த்தனர். ராஜாராவ் இவர் ஒரு முனிவர் என்று அறிமுகப்படுத்தினர். அத்யாத்மவிஷயமாகப் பேசவேண்டும் என்று சிலர் தங்கள் ஜாகைக்கு என்னை அழைத்துச் சென்றனர். எல்லாருக்கும் உள்ளொன்றினுல் உலகொன்றும் என்ற உண்மையை விளக்கினேன்.

ஆல்காட் ஹாலில் வெண்டாமரைத்திருநாள் நடந்தது. ஜினராஜதாஸர் அருண்டேல் உள்படப் பலர் பேசினர். பேச்சுமுடிவில் "அடுத்த வாரம் அன்னை வருகிருள். ஆலமரத்தடியில் சங்கம் கூடுவோம்" என்ருர்கள். அதற்கு நானும் வர உத்தரவுபெற்றேன். வந்தார் அம்மையார்; ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த அம்மையார் முகத்தில் புன்னகையும் புத்துணர்வுங் குடிகொண்டன. அடையாறு கலாமண்டபத்தில் வரவேற்பு நடந்தது. அங்கேதான் நான் ஜே. கிருஷ்ணமூர்த்தியைச் சந்தித்தேன். வசிகரமான ஞானி; அந்த விழிகளே ஞானவுறுதியையும் தன்னம்பிக்கையையும் பேசின. மாலை ஆறரைமணிக்கு ஆலமரம் மின்னணி விளக்குகளால் கந்தர்வலோகம்போற் பொலிந்தது. சென்னைப்பிரமுகர்கள் அனைவரும் அங்கே வந்திருந்தனர், ஜஸ்டிஸ் சதாசிவையர் பெஸண்டைப்பற்றி அழகாகப்பேசினுர். ராமேசம் அருவிநடையில் பிரமஞானசேவைபற்றிப் பேசினுர். ஜினராஜர் கலைவாழ்வு பற்றிப்பேசினுர். ஜே. கிருஷ்ணமூர்த்தி "வாழ்வின் ஊற்று உள்ளிருந்து பொங்கிவந்து, இன்பப்பயிரைவளர்க்க வேண்டும். தன்னறிவே தனக்குறுதி" என்று பேசினுர். அவர் பேச்சை எல்லாரும் பயபக்தியாகக் கேட்டனர். பெசன்டம்மையார் கம்பீரமான குரலில், அழுத்தமாகப் பேசினுர். அதன் சாரமாவது: "மனுகுலம் ஒன்றே; கிழக்கிலும் மேற்கிலும் ஒன்றே. மகாத்மாக்கள் எட்டுத்திசையிலிருந்தும் அதற்காக வேலை செய்கிருர்கள். மகாத்மா குதூமி சக்தியனுப்புகிருர். மைத்ரேயி அவதரித்திருக்கிருர். இதோ வெளிப்படுகிருர். எல்லாச்சமயங்களையும் ஒரே குலமாக இணைத்து நிற்கும் நமது சகோதரக்கூட்டம், உலகிற்கே ஐக்கிய வாழ்வின் நிலையமாக விளங்குகிறது. அது உலகை உள்ளத்தில் இலக்குகிறது. எல்லாரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரும் எல்லாருக்கும் வாழ வகை செய்கிறது. ஆஸ்திரேலிய சகோதரர் தங்கள் அன்பை உங்களுக்கு அனுப்புகிருர்கள். நம் உள்ளம் அன்புமயமாகப் பொலிந்து விரிந்து விளங்குக!" ருக்மிணி அருண்டேல் முதலியோர் பேசிய பிறகு கூட்டம் கலைந்தது. மறுநாள் பெரிய சமபந்திவிருந்து நடந்தது. என்னை ஸ்டார் மெம்பராக அங்கிகரித்தனர். மற்றொருசமயம் ஆலமரத்தில் நிகழ்ந்த ஆடல் பாடலுக்குச் சென்றிருந்தேன். கலையும், அன்பும் அறிவும் ஒருமையும் வாழும் பிரமஞானசங்கம் வாழ்க! ஒரு நாள் பெசண்டம்மையுடன் பேசும் வாய்ப்புக்கிடைத்தது. என்னை அடையாளம் கண்டு,

அதே மேதாவி The same genius என்றார். "முன் செல்; வழி துலங்கும்" என்பது அவர் கட்டளை, முன்சென்றேன். கவிமணியின் இனியகவிதைகளும், இலக்கியப்பேச்சும், கிருஷ்ணமூர்த்தியின் சுத்தஞானமும், ஜஸ்டிஸ் சதாசிவரின் சுத்ததர்மகீதையும் ராமேசத்தின் கர்ப்பத்தடையும் மறக்க முடியாதவை. அடையாறு புது உலகம். கலையுலகம். அதை இன்றும் நினைத்து மகிழ்கிறேன்,

264. இந்தி பிரசாரசபை

மற்றொரு நண்பர் நிலையம் இந்திபிரசாரசபை; அப்போது அது திருவல்லிக்கேணி ஹைரோடு சந்தில் இருந்தது, அங்கே எனது சிவாஜி விஜயம் அச்சானது. ஹரிஹரசர்மா, ரிஷிகேசசர்மா, சத்யநாராயணு, தேவதூதவித்யார்த்தி, அவதநந்தர், ரகுவரத்யாளு முதலியோர் நண்பர். ஒருநாள் இந்திசங்கீர்த்தனம் நடத்தினோம். மறுநாள் ஒரு பிரசங்கம் வைத்தார்கள். இந்தியும் தமிழும் என்பதுபற்றிப் பேசினேன். பல தடவை இந்தி ப்ரேம மண்டலில் நான் பேசியிருக்கிறேன். ஹமாரா கர்தவ்ய, தேசசேவா, கீதாஜீவன், புருஷார்த்தம், மஹாத்மாஜி முதலியன விஷயங்கள். மேவாட் பதன் என்ற இந்தி நாடகம் நடந்தது. நாடகக் கலைப்பற்றிச் சிலவிமிஷங்கள் பேசினேன். துளஸிதாஸ் ஜயந்தி அமோகமாக நடந்தது. கோஸ்வாமி தலைமை வகித்தார். புலவர் மணிகள் துளஸிதாஸின் அருமை பெருமைகளை அழகாக விளக்கினர்கள். இடையிடையே பக்கவாத்யங்களுடன் துளஸிதாஸ் பாடல்களும் முழங்கின. நான் கம்பனும் துளஸியும் என்ற விஷயமாகப்பேசி இருவர் உவமைகளுக்கும் ஒப்புக்காட்டினேன். தமிழர் துளஸிராமாயணமும், வடநாட்டார் கம்பராமாயணமும் கற்கவேண்டும். "குகனொடும் ஐவரானோம்" என்ற கவியை இந்தியில் விளக்கினேன். வடநாட்டார் கூட்டங்களுக்கெல்லாம் என்னை அழைத்துச் சென்று பேசச்சொன்னர்கள். முக்கியமாக ஆரியசமாஜம் மணிலால் எங்கிருந்தாலும் என்னைக் கூட்டத்தலைவனுக வரவேற்பார். சிரத்தானந்த தினத்தன்று நான் தலைமைவகித்து வேதமும் புதுவாழ்வும் என்பதுபற்றி முதலில் இந்தியிலும் பிறகு ஆங்கிலத்திலும் பேசினேன். ஆங்கிலத்தை தேவதூத வித்யார்த்தி அழகாக மொழிபெயர்த்தார். ஒரு மார்வடிக்கூட்டத்தில் தார்மிக ஜீவன் பற்றிப் பேசினேன். "வர்ண தர்மம் இனி இல்லை; சமதர்மமே இருக்கும். வேரும்கிளையும் போல் நாம் ஆன்ம ஒருமையும் குணகர்மப்பன்மையும் கொண்டு, உலக வாழ்க்கை அன்புமலரும் அறிவுக்கனியும் குலுங்கச் செய்வோமாக! வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு என்பதெல்லாம் நாமாகக்காண்பதே. வட்டவானம் எங்கும் ஒன்றே. ஒருமையேபெருமை." என்பதை விளக்கினேன். குருகோவிந்த ஜயந்தி நடந்தது. வீராஞ்ஜலி பற்றிப் பேசினேன். குருகோவிந்தர் குருவியை வல்லூருக்கினர். கொடிய பகைவரை மனோபலத்தால் எதிர்த்தார். தர்மத்திற்கே உயிர்கொடுத்தார். அவர் ஆவி நம் உள்ளத்தில் துடிக்கிறது. பகைவர் நம்மைச்

சோதாக்கள் என்று ஏளனமாக நினைக்கக்கூடாது. நாம் அர்ஜுன ராக வேண்டும். சிரத்தானந்தரைச் சுட்டதுபோல் இனி நடக்காது தற்காப்புடனிருக்க வேண்டும். முன்ஸ்ரீராம் மார்பில் பாய்ந்த குண்டு நமது நெஞ்சைப்பிளக்க வேண்டும். நமது துர்பலத்தைத் தூ என்று தள்ளி, பலவான்களாவோம். பிரித்தாளும் சூழ்ச்சி, பீரங்கி மிரட்டல், எதற்கும் அஞ்சோம். நம்மைமிதிக்கவரும் பூட்ஸ்காலை இரும்புக்காலால் மிதிப்போம். இப்படிப்பட்ட திருநாட்களில் நாம் தேகபலப்போட்டிவைக்க வேண்டும். திருநாளுக்குத்திருநாள் நமது பலம் பெருகிக்காட்டவேண்டும்—புத்திபலம் ஐக்ய பலம், தேகபலம், யோகபலம், தர்மபலம், கர்மபலம் எல்லாம் நமக்குவேண்டும் என்றேன். கீதாஜயந்தி நடத்தினோம். பெரியகூட்டம்; நான் கீதாயோகஜீவன் என்பதுபற்றிப்பேசினேன். பேசி மேடையிலிருந்து இறங்கியதும் "ஸ்வாமி ஜீ. எங்கள் கடைக்கு வரவேண்டும் என்று ஒரு ஜைனமார் வாடி" அழைத்தார். கூட்டம் முடிந்ததும் சென்றேன்.

265. ஜீவரக்ஷணம்

தேவஜிபாய்—இனிய நண்பர், கபடாவியாபாரி, ஸ்வேதாம்பரி ஜைனர், என்னிடம் அன்புமிக்க கனவான். அவரே என்னைத்தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அங்கே சாந்திபாய், தயாபாய், அத்தர் வியாபாரி மோதிபாய் ஆகியோர் கூடியிருந்தனர். முதலில் எனக்குக் கனிவிருந்து நடந்தது. பிறகு இந்தியில் பேச்சு. பேச்சின் கருத்தாவது: தங்கசாலைத்தெரு 436-ல் ஜீவரக்ஷணப்பிரசாரசபையுள்ளது. அதில் நான் முதன்மையாயிருந்து பலிநிறுத்தப் பிரசாரம் செய்ய வேண்டும். நாடெங்கும் உயிர்க்கொலை ஒழியச் செய்யவேண்டும்.

அதற்காக எனக்கு வேண்டிய சௌகரியங்கள் தருவார்கள். சமீபத்தில் பெரியபாளையத்தில் பலிநிறுத்த வேண்டும். இது இயற்கை வழியில் நான் செய்து கொண்டிருக்கும் பணியே. கொலையுணவை ஒழித்து, எல்லாரும் இயற்கையில் கிடைக்கும் தாவரவுணவே கொள்ள வேண்டும் என்பது எனது முயற்சி. அடுப்பின் உதவிகூட இல்லாமல், இயற்கைதருவதை இயற்கையாக உண்ணல் எனது கொள்கை. ஆதலால் இந்தப்பிரசாரத்தை சொந்தப்பணியாகக் கொண்டு சம்மதித்தேன்.

ஜீவரக்ஷண சபைக்கு நண்பருடன் சென்றேன். அங்கே ஜகதீச ராமநாதன் இருந்தார். அவர் ஜீ. சுப்பிரமணி ஐயர் பேரன். அப்துல் ராம் என்ற புனைபெயருடன் புதுச்சேரியில் தேசசேவகன் பத்திரிகையில் இருந்தார்; எனக்குத் தெரிந்த நண்பர், அன்பர். அவருடன் சென்னை வாலிபர் சங்கத்தொண்டரான கே. எஸ். கோபால கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, ராஜகோபாலன், ஒ. பி. ராமசாமி, நாராயணன், ஆசார்யா முதலியோர் சேர்ந்தனர். நான் அன்றிரவே ஜீவரக்ஷணப்பாடல்கள் எழுதினேன். மறுநாளே அதை அப்துல்ராம்

அச்சிட்டார். ஹார்மோனியம்—தபேலாவுடன் அதைப்பாடினேன். "கொலைசெய்யாதே இரத்தச்சோறு பாபம் ஆடுகோழிகள் நம்மைப் போல் ஜீவர்களே. எல்லாரும் ஒரே கடவுளின் குழந்தைகள்," என்று அறிக்கைகளை அச்சிட்டோம். பலிஇடுதல் மூடக்கொள்கை என்றொர் அறிக்கை காரசாரமாக வெளியிட்டோம். அஹிம்ஸாதர்மக்கொடி பிடித்தோம். மறுவாரம் எல்லாரும் மோடாரில் பெத்தபாளையம் சென்றோம். எங்களுடன் ஜைனகெஜட்பத்திராதிபர் ஸ்ரீ மல்லிநாதரும், திருவி கலியாணசுந்தர முதலியாரும், இன்னொரு சாதுவும் வந்தார். மூவரும் எனக்கு நண்பர். எல்லாரும் கூடி 25 தொண்டர்கள் சென்றோம். எல்லாருக்கும் மார்வாடிச்சமையலே—ரொட்டி பூரி, பால் மிட்டாய் தர்காரிகள். என் உணவு எப்போதும் பையில் இருந்தது—கனிகடலை. பெரியபாளையத்தைப் பார்த்தாலே போர் நடந்த கொலைக்களம்போல் வறண்டு பயங்கரமாயிருக்கும். அங்கே இருக்க வசதியில்லை. ஒரு சிறு கூரைவீட்டில் எல்லாரும் அடைந்தனர். நான் ஒரு நாயுடு வீட்டில் இடம்பெற்றேன். அந்த நாயுடு "ஒரு ரசவாதச்சாமியார் சட்டிபானை யெல்லாம் தங்கமாக்குவதாகப் பூசைபோட்டு, பணம் பறித்து, ஒரு இளம்விதவையையும் கடத்திக்கொண்டு போய், சென்னையில் ரசவாதக் கடைவிரித்திருக்கிறான். காஷாயங்களை நம்பமுடியவில்லை," என்றார். நீர் ஏன் ரசவாதப்பொன்னை வேட்டீர்? பாடுபட்ட பயனையே மனிதன் உண்ணவேண்டும். வாதப்பொன் வஞ்சப்பொன். அதில் ஆசைவைத்த பயனே இப்படியானது என்றேன்.

மாலை ஐந்துமணி; நாங்கள் ஏற்பாடாக பெத்தலம்மா கோயிலுக் குச்சென்றோம். அந்த நட்டகல்லின் முட்டைவிழிகளே எங்களை விழுங்கிவிடுவதுபோல் இருந்தன. பேசாமல் இந்தப்பாதகக்கல்லைத் தூக்கி உடைத்தெறிந்தால், கோடிக்கணக்கான ஆடுகோழிகள் பிழைக் குமே எனக்கருதினேன். அந்தப்புறம் இதைப் பாதிரிமார் கேலிசெய்து மதம் மாற்றுகிறார்கள். இந்தப்புறம் போலீஸ்காரர் துப்பாக்கிபிடித்து கிட்டவராதே என்கிறார். இடையே பூசாரி இரத்த வாள்பிடித்து நிற்கிறான். அவனுக்குப்பின்னால் கறிக்கடை காதர்மியான் நிற்கிறான். பலிகூடாது என்றால் பாமரமக்கள் ஐயோ பெத்தலம்மா கண்ணைக்கெடுப் பாள், பேதிகாலராவரும்...என்று நெஞ்சைப்புடைத்துக் கொள்ளுகிறார் கள். பெரியபள்ளம் வெட்டியிருக்கிறது. நாளை அது நிரம்ப ஆயிரக் கணக்கான ஆடுகோழிகள் பிணமாய்க் குவியும். பூசாரிக்குப்பணமும் போட்டுச் சிறு மாமிசத்துண்டைப் பொங்கல்வைத்து, பெத்தலம்மாவுக் குக் கைகாட்டி ஏழைமக்கள் உண்டுசெல்வர். மிச்சத்தைக் கசாப்புக் கடை ராவுத்தர் குத்தகைக்கெடுத்து, மொட்டைவண்டியில் போட்டுச் சென்று சந்தையில் விற்பார். பெத்தலம்மா பிதுக்கிய விழியால் பேசா மல் பார்த்துக்கொண்டேயிருக்கும்...இந்த பலிப்பொங்கலுக்கு என்ன ஆர்பாட்டம்! கொடுமை! கொட்டுமுழக்கு! பெண்களும் ஆண்களும் வேப்பங்குழைகட்டிக் குதித்துவரும் அநாகரிகக் காட்சியைப் படம்பிடிக்

கும் அன்னியர் "அஞ்ஞானிகளே!" என்று அறைகூவுகிறார்கள். அதைப் பத்திரிகைகளில் வர்ணம் திட்டிப்போட்டு இந்தியரின் அநாகரிகத்தை வெள்ளையர் சித்தரித்து இவர்களுக்குச் சுதந்தரம் தகவில்லை என்கிறார்கள்.

நான் ஜீவரக்ஷணப்பாடல்களை ஆவேசமாகப்பாடினேன். தொண்டர் சேர்ந்து பாடினர். பாட்டுக்கே கூட்டம் கூடியது. "பலிகொடுக்காதே அண்ணே கொலைபுரியாதே" என்றபாட்டைச் சேர்ந்து பாடினோம். பாமரமக்கள் அனைவரையும் பாட்டு இழுத்தது. பிறகு நான் ஒரு பெஞ்சின்மேல் நின்று ஒருவனை அழைத்து, தம்பீ இந்தச்சிறு கத்தியை உன் கையில் அழுத்தவா என்றேன். "ஆத்தாடீ செத்துப் போவேன், வலிக்கும்" என்றான். தம்பீ ஆடுகோழியும் உன்போல் உயிர்தானே. அதன் கழுத்தில் கத்திவைத்து அறுக்கும்போது எப்படியிருக்கும்? அதற்கு வலிக்கும். உனக்கு ஒரு ஊமைத்தம்பியிருந்தால், அவனைக்கொன்று சாப்பிடுவதா? ஆடுகோழிகள் நம்மைப்போல் உயிர்கள். வாயில்லா உயிர்கள். நம்மைப்படைத்த கடவுளே அவற்றையும் படைத்தான். கடவுளின் சக்தியே அம்பிகை. பெத்தலம்மா பெரியம்மை. உயிர்களுக்குத் தாய். அவள்முன் அவள் குழந்தைகளை அறுத்துக் குவிப்பது பூசையாகுமா, பலியாகுமா? உயிர்களை அறுக்கும்போது அவை கண்ணீர் விட்டுக்கதறி உங்களுக்குச் சாபம் வைக்கின்றன. அச் சாபமே நோய் நொடி கவலை பிணியாகி உங்களை வாட்டுகிறது. பலிக்கடாவை பெத்தலம்மா சாப்பிடுகிறதா? இல்லை. அது கல்: கல்லுச்சாமி பெயரால் ஆடுவெட்டி, நீங்கள் சாப்பிடுகிறீர்கள் இதுகாறும் செய்தபாபம் போதும் அண்ணமாரே இனிக்கொலை வேண்டாம் புலைவேண்டாம்...

கொலையும் புலையும் வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாபமும் வேண்டாம் அண்ணமாரே
ஆண்டவன் ஒருவனன்றோ அண்ணமாரே
அன்பும் அருளும் அன்றோ அண்ணமாரே
எள்ளுக்குள் எண்ணேயென அண்ணமாரே
எங்கும் இருப்பவனும் அண்ணமாரே
ஆரை வருத்திடினும் அண்ணமாரே
அவனை வருத்துவதாம் அண்ணமாரே.

இந்தமாதிரி அரைமணிநேரம் பக்கவாத்யங்களுடன் பாடினேன், பாமரமக்கள் மனம் கரைந்தனர். பலர் "பலிபோடமாட்டோம் சாமி" என்று ஆட்டைத் திருப்பிக்கொண்டு சென்றார்கள். திரு. வி. க. இந்தப் பாட்டை மிகவும் மெச்சினார். தமது சரித்திரக்குறிப்பிலும் எழுதினார். பாமரஜனங்கள் கலந்து கொண்டிருப்பதைக்கண்ட பூசாரிக்கும்

புலால் உண்ணிகளுக்கும் கோபம் பிய்த்துக்கொண்டது. சில குடிவெறியர் என்னை வளைத்துக்கொண்டனர். "டே நான் ருசாமவண்டா நீ அடாணு வெட்டிக்குளம்புவச்சு ர்ர்ட்...ட்'' என்று வந்தனர்; பறையடித்தனர். ''அண்ணமாரே, நீர் ஆடாகி உங்களைக்குளம்புவச்சா சம்மதிப்பீர்களா? என்றேன். ஒரு குடிவெறியர்... 'நான் ஆடானு எங்கிட்டவந்தா மூட்டிக் குடலைக் கிழிச்சுடமாட்டேன்'' என்ருன். சவாஸ் அண்ணே அப்படித்தானே இந்த ஆட்டுக்கும் இருக்கும்'' என்றேன். எல்லாரும் கைதட்டினர். நான் பெத்தலம்மா கோயில்முன் நின்று "படுகொலையோ படுகொலையோ, பஞ்சமா பாதகர்காள்!'' என்று தெம்மாங்கு பாடினேன். என்குரலும் நடிப்பும் பலர்மனதைத் திருப்பின. இரவில் பலிக்கடா வைத்திருக்கும் ஒவ்வொருவரிடமும் சென்று "அப்பா உயிரைக்கொல்லாதே. அம்மன் கருணைமயம்'' என்று பிரசாரம் செய்தோம். திரு. வி. க. பத்துநிமிஷம் தெளிவாகப் பேசினுர், ஒரு முரட்டுக்கூட்டம் பறையடித்து எங்களை எதிர்த்தது. அது கொணர்ந்த ஆடுகளில் ஒரு குட்டியாடு, என்னிடம் துள்ளிவந்தது. அதைநான் தோளில் தூக்கிக்கொண்டு "இரக்கமில்லாப் பாவிகளா ஏன் எம்மைக் கொலைபுரிவீர்'' என்ற தெம்மாங்கை உருக்கமாகப்பாடினேன். அந்த ஆட்டுக்காரன் எங்களுடன் சேர்ந்து விட்டான். ஆட்டுக்குட்டியுடன் நான் சுற்றிவந்து, பிரசாரம்செய்தேன். திரு. வி. க. இந்தக்காட்சியை புத்தர்காட்சி என்று தமது வரலாற்றிற் குறித்திருக்கிருர்.

மறுநாட்காலை பூசாரி பெரியவாள்பிடித்து எமன்போல நின்ருன். ஆடுகோழிகளைக் குளிப்பாட்டி வந்தனர் பாமரமக்கள். குழைக்கட்டி கூத்தாடிப் பறைகொட்டிக்கொலைசெய்யவரும் அந்தக்காட்சி கொடுமையாயிருந்தது. நாங்கள் கோயில் முன் நின்று தடுத்தோம்.

என்னுயிரைக் கோண்டேனும் இந்தவா யில்லாத
மன்னுயிரைக் காக்க மனம்வைப்பாய்—அன்னையே
கோன்றுண்ணும் பாவிகளின் கோட்ட மடக்கிடுவாய்
ஒன்றுண்மை காண உலகு.

என்று சுத்தசக்தியைத் தியானித்து, சந்நிதியில் நின்றேன். அன்பர் என்னைச்சுற்றி நின்றனர். பலியாடுகளைவெட்டப் பூசாரி வாள் ஓங்கினுன். நான் குறுக்கே பாய்ந்து தடுத்து, அண்ணு வாயில்லா உயிர்களை வெட்டாதே பாபம். என்னை வேண்டுமானுலும் கொல்லு...என்று நின்றேன். ஒரு ஆடு தப்பி ஓடிப்போனது. அதற்குள் முரடர் பறையடித்து வந்து, பெத்தலம்மா கண்ணைக்கெடுக்கும் சந்ததியை அழிக்குமடா...என்று பேய்க்குரலெடுத்தனர். போலீஸ்காரர் தடுத்தனர். நாங்கள் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் முறையிட்டோம். எங்களுடன் கசாப்புக்காரர்களும் முறையிட்டார்கள். நான் பலி பெத்தலம்மாவுக்கா, உங்கள் தொந்தியம்மாளுக்கா என்றேன். இது சர்க்கார் வருமானம்

நீங்கள் தடைசெய்யக்கூடாது என்றனர். ஐயா உங்கள் சர்க்காரில் ஒரு அநியாயக்கொலை நடக்கிறது: அதைத்தடுக்க எங்களுக்கு உரிமையில்லையா? என்றேன். சரி நீங்கள் பிரசாரம் செய்யலாம் என்றார். செய்தோம், பலமாகச்செய்தோம். பலர் இரக்கங்கொண்டு ஆடுகளைத் திருப்பிக்கொண்டு சென்றனர். பூசாரி "டே நான் பெத்தலம்மா... என் நேத்துக்கடனைக்கொடு இல்லாட்டி, பேதிவரும்" என்று அலறினான். "நீயும் பெத்தலம்மா இல்லை. நீ மீசைமுளைத்த ஆண்பிள்ளை. அந்தக்கல்லும் அம்மனில்லை. அது உன் கைவேலை" என்றேன். எங்கள் பிரசாரத்தால் ஏராளமான ஆடுகள் அன்று பிழைத்தன. ஊர் எல்லையைத்தாண்டி அவற்றைக்கொண்டு விட்டதும், அவை துள்ளிக்குதித்துச் சந்தோஷமாக நன்றி கனைத்தன. கடவுளே எங்களை வாழ்த்துவது போல் உணர்ந்தேன். மறுநாள் கமலாதேவி சடோபாத்யாயா வந்தாள். பத்து நிமிஷம் பேசினாள். நான் பாடினேன். துண்டுப்பிரசுரங்கள் பறந்தன. மைலை இரத்தினசாமி முதலியார் உருக்கமாகப் பேசினார். நல்ல பலன்கிடைத்தது. ஆயிரக்கணக்கான உயிர்கள் பிழைத்தன. பத்திரிகைகள் புகழ்ந்தன. மார்வாடிகளுக்கு உச்சி குளிர்ந்தது. அன்றுமுதல் தென்னிந்தியாவில் எங்கே பலிநிறுத்தம் வேண்டுமானாலும் சென்றுதவினேன்.

266. ஜைனசாதனம்

ஜைன்மார்வாடிகள் என்னிடம் சிறந்த அன்புகாட்டினர். "இங்கேயே இருங்கோ ஸாமி" என்று ஒரு பெரிய தர்மசாலையை எனக்குத் தந்தனர்—எண் 111 தங்கசாலைத்தெரு. மாளிகையில் நானே; யாராவது சமணர் வந்தால் அங்கே தங்குவதுண்டு; அதன் இப்புறம் ஸ்தானக்வாசிகள் மந்திரம்; அதற்குமேல் ஸ்வேதாம்பர ஜைனமந்திரம்; எப்போதும் ஜைனகீதங்கள் கேட்டுக்கொண்டேயிருக்கும். நானும் சமணனாகி திட்சைபூண்டு ஜைனநூல்களை முறையாக ஓதினேன். ஜைனகெஜெட் ஆசிரியர் மல்லிநாதரும், சமணப்புலவர் பார்ஸ்வநாதரும், சக்ரவர்த்தி நாயனாரும், வசுபாலநயினாரும் எனக்கு அரிய துணை செய்தனர். மகாபுராணம், தத்வார்த்தசூத்திரம், பஞ்சாஸ்திகாயம், ஸர்வார்த்த சித்தி, புருஷார்த்த சித்யோபாயம், மேருமந்திரம், சிந்தாமணி ஆகிய கருவி நூல்களும் பல ஆங்கில நூல்களும் கற்றேன். காலை ஆறுமணிக்குள் அனுட்டானங்களை முடித்துக்கொண்டு, ஜைன மந்திரத்திற்குச் சென்று வந்து, ஜீவரக்ஷணப்பிரசாரந் தொடங்குவேன். சென்னையில் தினம் ஒரு பகுதியாகச் சென்று கருணைப்பாடல்பாடி, அஹிம்ஸா தர்மோபதேசமும் சன்மார்க்க உபதேசமும் செய்வோம். பக்கவாத்யங்களுடன் பாடும்போதே ஜனங்கள் கூடுவார்கள். தெருமுனைகளிலிருந்து பிரசங்கம் நடக்கும். இதன் பயனாகச் சிலர் மதுமாமிசங்களை விட்டார்கள். எங்கள் துண்டுப்பிரசுரங்கள் நல்ல பலனைத் தந்தன. படிக்கத்தெரிந்தவர்கள் பத்துப்பேருக்குப் படித்துக்காட்டத்

தூண்டினேன். வரும்போது கடலை கனிகள் வாங்கிவருவேன். சபைக்கு வந்து தபால்களைக் கவனித்த பிறகு, மல்லிநாதர் என்னைத் தமது வீட்டிற்கு அழைத்துச் செல்வார், பிறகு ஜைனமத ஆராய்ச்சி நடக்கும். இருபத்து நான்கு தீர்த்தங்கரர் வரலாறையும் குறிப்பெடுத்துக் கொண்டேன். மஹாவீரரைப்பற்றி இந்தி சம்ஸ்க்ருதபாஷைகளில் உள்ள எல்லா நூல்களையும் பயின்றேன். பார்ஸ்வநாதர், ஆரணி வசுபால நயினுர் இருவரும் என்னிடம் அன்புகொண்டவர். வசுபாலர் சென்னைக்குவரும்போதெல்லாம் என்னைக்கண்டு ஜைனதத்துவம் ஆராய்வார். ஜைனர்வீட்டு விசேஷங்களுக்கெல்லாம் நான்சென்று பூஜைகாண்பேன், பாடுவேன். எல்லாரும் மகாவீரர் சரித்திரத்தையும் ஜைனமத தத்துவத்தையும் சாதனத்தையும் ஒரு மகாகாவியமாகப்பாட என்னை வேண்டினர். அதற்குத்தகுந்த சாதனங்களுடன் நான் சுக்லத்தியானம் செய்தேன். ஜைனசமயச் சொற்பொழிவுகள் ஆற்றினேன். நல்லறிவு, நல்லொழுக்கம், நற்காட்சிகளால் தீமையொழிந்து, தூய்மையாகி, சுத்தான்மசித்தியும் பந்த நிவர்த்தியும், ஸர்வாத்ம ஸமத்வமும் பெறுதலே ஜைனசமயசாரமாகும். ஜைனர் உயிர்க்கருணையும், நல்ல தொழில் முயற்சியும் செல்வத்திரளும் கல்விப்பெருக்கும், ஈகைத்திறனும் கொண்டவர்கள். ஜைனதத்துவரகசியங்களை நிஷ்டையிலிருந்து அனுபவித்து, நான் சுக்லத்யானசித்தி பெற்றேன்.

267. ஜினுனந்தம்

பிரேம்ஸாகர் விஜயஜீ என்ற துறவியும் "தங்களுக்கு தத்துவ ஞானமும் அனுபவஞானமும் இருக்கிறது. இனி ஜினுனந்தம் எழுதலாம்" என்ருர். நான் மறுநாள் கதவை அடைத்தேன். என்னுடன் இருந்த சந்துருவுக்கு யாரையும் உள்ளே விடக்கூடாது, உணவும் கிட்டே வரக்கூடாது ஜலபானங்கூட கிடையாது, கதவு திறக்கிற வரையில் யாரும் தட்டக்கூடாது என்று கட்டளையிட்டேன். தனி அறையில் மௌன ஏகாந்த சுக்லத்யானத்தில் ஆழ்ந்தேன். அதற்கு முன்பே குடலை நன்ருகச் சுத்திசெய்து, நிர்மலமாக்கியதால் அல்ப சங்கைக்குப்போகும் அவசியமும் இல்லை. பத்து நாட்கள் அதே நிலையில் இருந்து, ஜினுனந்தத்தை முடித்தேன். அருளால் காவியம் எழுதும்போது எனக்குப் புறநினைவே யிராது. உரைகடந்து மனங்கடந்து நினைவுகடந்த சைதன்யக் கனவில் நான் லயித்திருப்பேன். அங்கிருந்தே எனது கலையும் கவிதையும் பிறக்கும். காவியம் ஒரு வாரத்தில் முடிந்தது. பிறகு நான்கு நாட்கள் அதைத் திருப்பிப்பார்த்து நல்ல பிரதி செய்தேன். தான் பெற்ற குழந்தையை அழகு பார்க்கும் தாய்போல், எனது காவியத்தை ரசித்து, என் மனம் மகிழ்ந்த பிறகே உலகிற்குக் காட்டுவது வழக்கம். இத்தனைகய மஹோபவாசம் ஜைனர்கள் கொண்டாடும் சம்பவம். பாரணையன்று எத்தனையோ ஜைனர் போட்டிபோட்டு முதல் கனிவிருந்தளிக்க நின்றனர். ஆனுல் நான் திடீரென்று

காலை ஆறு மணிக்கே கதவு திறந்து வெளியேவந்து அருணோதயத்தைக் கண்டேன். பிறகு பல் விளக்கினேன். நான் எதிர்பாராமல் ஒரு மார்வாடி கனவான். ஆரஞ்சுப் பழங்களை என்முன் வைத்தார். நான் இரண்டு உட்கொண்டு நன்னீர் அருந்தினேன். பிறகு ஜைன மந்திரத்திற்குச் சென்று பஞ்சநமஸ்காரம் ஜபித்து, அருஹத் பரமேஷ்டிமுன் காவியத்தை வைத்து ஓம் என்று வணங்கினேன். அப்போது தேவ்ஜிபாய் வந்தார். சந்தோஷம்: நம்வீட்டில் பாரணை செய்ய வேண்டும், என்றார். பாரணை முடிந்தது என்றதும் "அடடா அந்தப் புண்ணியம் எங்களுக்குக் கிடைக்கவில்லையே" என்றார். மல்லிநாதர் வந்து அதேமாதிரிவிசனித்தார். வசுபாலநாயனர் கனிகடலை வாங்கிவந்து என் அறையில் வைத்தார். நான் அன்று ஆரஞ்சுக் கனிகளுடன் திருப்தியடைந்தேன். சந்துரு பத்துநாளும் அங்கிருந்த ஆடாவை ரொட்டி தட்டி நிலக்கடலையுடன் உண்டான். அவனை நன்றாகச்சாப்பிடச் சொன்னேன். மறுநாள் இரவு ஜைனபக்தர் கூடினர். நான் பஞ்சநமஸ்கார தியானம் செய்து ஜீனனந்தத்தைப் படித்தேன். நான்கு நாட்களில் காவியபடனம் முடிந்தது. வசுபாலநயினர் மிகவும் கொண்டாடினர். மல்லிநாதர் அதை அச்சிட வேண்டும் என்றார். அதற்காகக் குறிப்புகளும் எழுதினர். நண்பர் எனது நூல்களையும் வெளியிட ஓர் அச்சகம் நிறுவ விரும்பினர். மல்லிநாதர் அதற்கு ஸ்யாத்வாதா ப்ரஸ் என்று பெயரிட்டார். "ஸ்வாமிஜீ மௌனமாக இங்கிருந்து பேனாவை அசைக்கட்டும். நாங்கள் மற்றக்காரியங்களைப் பார்த்துக் கொள்ளுகிறோம் என்றார் மல்லிநாதர். பங்குக்குப் பத்துரூபா என்று முடிவு செய்தனர். 25 பங்கெடுப்பவர் நிர்வாகக் குழுவில் சேரலாம். நான்25 பங்கெடுத்து, பணமும் தந்தேன். மல்லிநாதரிடம் அது சேர்ந்தது. அச்சகம் பேச்சுடன் சரி; காரியம் நடக்கவில்லை. ஜீனனந்தத்தின் அருமையறிந்த திருப்பறம்பூர் தருமசாகர சுவாமிகள் தமது செலவில் அதை அச்சிட்டார்கள். மல்லிநாதர் ஆங்கிலமுன்னுரையும், அடிக்குறிப்புகளும் எழுதினர். ராம்பால் அச்சகத்தில் நூல் அச்சானது. 2—4—1928 மகாவீர ஜயந்தியன்று நூல் வெளியானது. அன்று எனக்கு நிலக்கடலை விருந்து நடந்தது. அவ்வளவுதான். எலுமிச்சம் பழ வியாபாரியான ஆதிநயினர் இந்நூலில் மிகவும் சிரத்தைக் காட்டினர். அதன் லாபம் என் பணம் எல்லாம் தீர்த்தங்கரருக்கே அர்ப்பணமாய்விட்டன! நான் ஜைன தர்மத்தைக் கற்றுக் கொண்டதற்காக தட்சிணை என்று நினைத்துக்கொண்டேன். நாடெங்கும் இந்நூல் பரவியது. ஜைனக் குருமார் பலர் என்மேல் அன்புகொண்டு அழைத்தனர். குருமாரில் மிகவுயர்ந்தவர் கம்பீர விஜயஜீ. அவர் பங்களூருக்கு வந்திருந்தார். தேவ்ஜிபாய் என்னையும் அழைத்துக்கொண்டு போனர்.

268. கம்பீர விஜயம்

பங்களூர் ஜைனமடத்தில் எனக்கு நல்ல ஜாகை கிடைத்தது. ஸ்ரீ கம்பீரவிஜயஜியுடன் நெருங்கிப் பழகினேன். பேருக்குத்தக்கபடி ஆள் வீரகம்பீரமானவர்; தூய பிரமசாரி, இந்தியிலும் வடமொழியிலும் நிகரற்ற புலவர். அருவிபோல் பிரசங்கம் செய்தார், காலை எட்டுமணிமுதல் பத்துமணிவரையில் அவர் உபதேசம் நடத்தினார். சுமார் எழுநூறு ஜைனர்களிடையே நானும் அமர்ந்து உபதேசம் கேட்டேன். அஹிம்ஸாதர்மம், அணுவிரதம், ஜைனதத்துவம், மோக்ஷசித்தி முதலிய அரிய விஷயங்களைப்பற்றி அவர் தெளிவாகப் பேசினார். பிரசங்கம் முடிந்ததும் அவர் சில தர்மங்களைக் குறிப்பிட்டார். மார்வாடிகள் நீ நான் என்று பணம்கொட்டி, அந்தத் தருமகைங்கரியங்களை ஏற்று நடத்திவைத்தனர். கோசாலை, பிஞ்சிராபோல், ஜைனஅச்சகம், ஜீவரக்ஷணப்பிரசாரம், ஜைனமந்திரம், கிரந்தப் பிரசுரம் என்று பல தர்மங்களை குருமகராஜ் வாய்ப்பேச்சில் நடத்திவைத்தார். ஒருஜீவரக்ஷண சபைக்கு ரூ. 5000 வேண்டும். இது மகத்தான புண்ணியம் என்று ஐந்து நிமிஷம் பேசினார் குரு. உடனே டுங்காபாய் 500, முல்க்ராஜ் 400, குலாப்சந்த் 600, சாந்திபாய் 1500, லல்லுபாய் 2000 என்றுபோட்டுத் தொகையை குருபாதத்தில் வைத்தனர். தக்கசிர்வாகிகள் கையில் ஒப்பித்து அந்தக் கைங்கரியம் நிறைவேறச் செய்தார் குரு. எனது நண்பர் ஹைதராபாது பாக்யரெட்டியார் ஜீவரக்ஷணப்ரசாரத்திற்காக ஒரு அச்சகமும் பத்திரிகையும் நடத்த வேண்டினார். குருமகராஜ் பத்துநிமிஷம் இந்தப் புண்ணியம் மகத்தானது என்றுபேசியதும், கலகலவென்று பணம் கொட்டியது. இந்தமாதிரி நமது தமிழ்ச்செல்வர் முன்வந்தால் எனது கலைக்கோயில் கட்டிமுடிந்திருக்கும். உழைப்பிற்கு உரிய தொகைகூட எனக்குக் கிடைக்கவில்லை; என்காலத்திற்குப் பிறகாவது என்கனவை நிறைவேற்றத் தமிழ்மணிகள் முன்வரட்டும்.

பனிரண்டுமணிக்கு பிரம்மாண்டமான சமாராதனை பூரி லட்டு மிடாய்களுடன் நடந்தது—மாலை நான்குமணி வரையில். நெய், கோதுமைமா, சர்க்கரை, சேமியா, பாதாமி, பிஸ்தா, மிந்திரி, உருளைக் கிழங்கு முதலிய பண்டங்கள் உக்கிராணத்தில் குவிந்து கிடந்தன. வாளிவாளியாகச் சாமான்கள் செலவாயின. ஐம்பதுபேர் சமயல் காரியம் பார்த்தனர். அண்டா அண்டாவாகப் பாயசம், காய்கறிகள்! மலைமலையாக பூரிலட்டு, பேணி மைசூர்பாகுகள்! எனது பங்களூர் நண்பர்களையெல்லாம் அழைத்து, திருப்தியாக உண்ணச் செய்தேன். நான் பூரியும் பாலும் ஆபிளும் உட்கொண்டேன். கம்பீரவிஜயருடன் தனித்துப் பேசினேன். அவர் எனக்கு அரிய உபதேசங்கள் செய்தார். குடம் நிரம்பப் பால் உள்ளது. அதில் ஒரு தேள்கொட்டினால் குடம் பொத்தலாகிப் பாலெல்லாம் வழிந்துபோய்விடும். அதுபோல் பெண்

ணுசைபுகுந்தால் தவசக்தி கெடும். பெண்ணிடம் சக்திபெறுவதாகச் சிலர் நடிக்கிருர்கள். அவர்கள் பெண்வலேயில் சிக்கி அவர்களால் ஆட்டப்படுகிருர்கள். நீ எப்போதும் உள்ளேபார். சுக்லத்யானத்தில் இரு. மனம் உலகில் திரிந்து கஷாயங்களே அள்ளிவந்து வாழ்வை வீணைக் குப்பையாக்க வீடாதே. ஆத்ம சித்திக்கேற்ற காரியங்களேயே செய். மற்றவை வீண்வேலேயாகும். நீ எழுதுவதெல்லாம் ஆத்மபரிசுத்தத்திற்கே யாகுக!'' என்ருர். ஜினனந்தம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருடன் ஒருமணிநேரம் தனியாகப்பேசி தியானித்துப் பயன்பெற்றேன். கம்பீரவிஜயஜீ சென்னைக்கு ஒரு முறைவந்து எனது ஏகாந்த மாளிகைக்கு அருகே, ஜைனமந்திரத்தில் வசித்தார். அவருடன் இன்னும் நெருங்கிப் பழகினேன். "மஹாவீரர் போல் வாழ்; அவர் உபதேசங்களேப் பரப்பு'' என்று பணித்தார் கம்பீரர்.

269. பங்களூர் பிரமசாரிகள்

பங்களூரில் சன்மார்க்க சங்கம் உண்டு. அதில் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். அதற்கு சத்திய நாராயணன் வந்தார்—ஹடாசனப்புலவர். அவர் என்னை ஊர்சுற்றிக்காட்டி, லால்பாகருகேயுள்ள பிரமசரிய ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்ருர். அங்கே பிரமசாரி ராமச்சந்திரன் மகிழ்ந்து வரவேற்ருர். இவர் எனது நண்பர். திருவையாறர். எனது மற்ருெரு நண்பர் தாரநாதர், கொடியர், அழகர், இந்தி கன்னடப் புலவர், ஆயுர்வேதி, நாடகாசிரியர். இவர் துங்கபத்ராக்கரையில் பிரேமாசிரமம் நடத்தினர். அதிலேதான் வவேசு ஐயர் தமது மனைவி மக்களைவிட்டு பல்லாரிச் சிறை சென்ருர். பங்களூரில் தாரநாதர் ஒரு மாடிவீடமர்த்தி பிரமசாரிய ஆசிரமம் நடத்தினர். அதில் ராமச்சந்திரன் தலைமையில் பத்துப் பிரமசாரிகள் இருந்தார்கள். சந்திரன் பி.ஏ. எஞ்சினீரிங் தேறியவர், சிரத்தானந்தரிடம் இருந்தவர், பிரமசரியக் கலேக்கே வாழ்ந்தவர். வஞ்சமற்ற பொதுநலத் தொண்டர், நான்கு நாட்கள் இந்த பிரமசரியாசிரமத்தில் நான் தங்கினேன். பங்களூரில் கே. வி, ஐயர், சாண்டோ நாயுடு, ஆகியோரைப் பார்த்தோம். கிராமங்களில் சுற்றினேம். வேர்க்கடலேயும் பனங்கிழங்கும் சீமைத்தக்களியும் சாப்பிட்டோம். டாடா தொழிற்சாலேயைக் கண்டோம். எங்களுடன் சத்திய நாராயணுவும், ஆஸனம் சுந்தரமும் இணைபிரியாதிருந்தனர். எல்லாரும் ஆரியசமாஜத்திற்குச் சென்ருேம்; அங்கே தர்மதேவர் உபசரித்தார். தயானந்தரைப்பற்றிப் பேசினேன். ராமகிருஷ்ணுசிரமத்திற்குச் சென்ருேம். அங்கே ஒரு சுவாமிஜீ வரவேற்ருர். அவர் ஓமியோபதி வைத்தியம் செய்தே ஆசிரமத்தை நிர்வகித்தார். இன்னும் பல பொதுநிலேயங்களுக்குச் சென்ருேம். ஆசிரமத்தில் ஆஸனம் பிராணுயாமம் செய்தோம். சப்பாத்தியும் தக்காளிக்கூட்டும் சாப்பிட்டோம்,

மாதம் ஐந்துரூபாதான் செலவு. கெங்கேரியிலும் மல்லேஸ்வரத்திலும் சேவாஸ்ரமம் நாட்டி, ஏழைகளுக்குப் பலவகைத் தொண்டுகள் செய்யக் கருதினேம். கெங்கேரிக்குப் புறப்பட நினைத்தேன். அப்போது குருமகராஜ் கூப்பிட்டு தந்திகாட்டினார்: தென்னாலியில் "பலி நிறுத்த சுத்தானந்தர் தேவை. உடனே அனுப்புக." "சென்று ஜீவ சேவை செய்து ஜயமுடன் வாரும்" என்றார் கம்பீரர். தேவ்ஜிபாய் இரவு வண்டியில் என்னை ஏற்றிவிட்டார். மறுநாள் இரவு தென்னாலி சேர்ந்தேன்.

270. தென்னாலி வெற்றி

இரவு பனிரண்டு மணி. தென்னாலி ஸ்டேஷன் இருளில் புதைந்திருந்தது. ஊர் இரண்டு மைல் தூரம் உள்ளது. கிருஷ்ணாநதி ருத்ரவீணைபோல் தானம்பாடுகிறது. தவளைகள் முகர்சிங் அடிக்கின்றன. எல்லாரும் வண்டிவைத்துச் செல்கிறார்கள். நான் தனிவழியே நடக்கிறேன். சிலகுடிகாரர் "ரே பாபையா!" என்று பாடிச் செல்கின்றனர். பனிவாடையில் நடந்து ஊருக்குள் வந்தேன்; "கொட்டெனு ஹனுமந்துடு! கோபாவேசமுதோ" என்று அண்டம் பிளக்கத் தொண்டை கிளப்பி, லங்காதகன நாடகம் நடிந்தது. பார்த்தேன். ஐந்து நிமிஷத்தில் மங்களம்பாடி எல்லரரும் வெளியே வந்தனர். சுருட்டுப்புகை குப்குப் என்று கருமேகம்போல் இருட்டைக் குலாவியது. "அரே புல்லையா, சிக்கையா, அக்கட வெள்ளு இக்கட வெள்ளு" என்று சத்தமிட்டு ஜனங்கள் செல்லும்போது, நாய்களும் வெள்ள்ள்...என்று புல்லவி பாடின. ஒருபெட்டி வண்டி வந்தது. "ஐயா மார்வாடித் தெரு எது?" என்று கேட்டேன். உள்ளிருந்தவர் டார்ச் விளக்கில் என்னை உற்றுநோக்கினர். "சுவாமிகாரா ரண்டி" என்று வண்டியில் ஏற்றிக்கொண்டார். காஷாயத்தை அப்போது வாழ்த்தினேன். மார்வடித் தெருவில் ஜல்ஜல் என்று சத்தம் கேட்டதுமே, தூங்கிய விழிகள் திறந்தன. "முனிமஹராஜ் அயேஹைங்" என்ற சத்தம் எழுந்தது நான் கீழே குதித்தேன். இந்தியில் பேசினேன். உடனே "ஆயியே பதாரியே மகராஜ்! நமஸ்தே!" என்று பத்துப்பேர் என்னை ஜைனமந்திரத்திற்கு இட்டுச் சென்றனர். செய்தியறிந்து ஒரு பெருங்கூட்டம் கூடியது. சத்தம் கேட்டு பாக்யரெட்டி ஓடிவந்தார். ஐதராபாது நண்பர் வந்தனர். எல்லாரும் அன்புரை மாற்றிக்கொண்டோம். ஒருவர் பூரியும் லட்டும் கொணர்ந்தார். நான் இரவில் ஜலபானம் செய்வதில்லை. காலையில் பார்த்துக் கொள்வோம் என்று அன்பருக்கு விடைதந்து, நான் உடம்பு சுத்தம் செய்து கொண்டு மஹாவீரர் முன்பு தியானத்தில் ஆழ்ந்தேன்: எனக்குத் தெலுங்கில் கவனசக்தியுண்டு. நாலைப் பிரசாரத்திற்கு பத்து தெம்மாங்குகள் எழுதினேன். காலையில் நண்பர் வந்தனர். தெம்மாங்குகளைப் படித்தேன். அச்சிட்டார்கள். ஊரெங்கும் பறந்தன பாட்டு.

பாக்யரெட்டியுடன் பலிநிறுத்தச் செய்யவேண்டிய தெல்லாம் தீர் மானித்தோம். நான் பெத்தலம்மா கோவிலுக்கு பஜனையுடன் செல்ல முடிவுசெய்தேன். தாளமேள மிருதங்கத்துடன் எனது பாட்டைப் பாடினேன்.

கோட்ட ஒத்து கோய ஒத்து அன்னலாரா
கோபசுவு கோர்ரலனு—அன்னலாரா
ஜகமந்தா சக்தி தல்லி அன்னலாரே
ஜீவுடில்லு தேவுடில்லு அன்னலாரே

என்று தொடங்கும் நீண்டபாட்டைப் பாடவே தென்னுலி ஜனங்க ளெல்லாரும் பாடம் பண்ணிக்கொண்டு மூலைமுடுக்கெல்லாம் அந்தப் பாட்டைப் பாடினர். ஐதராபாது பாண்டுக்காரர் வந்திருந்தனர். அவர்களும் இனியபாட்டு முழக்கினர். ஊர்முழுதும் எட்டுத்திசையும் கொட்ட ஒத்து கோயஒத்து என்று எதிரொலித்தது. தெலுங்கில் ஜீவகாருண்ய விளம்பரங்கள் பறந்தன. காலைமாலை பஜனையுடன் சென்று தெருத் தெருவாக சன்மார்க்க போதனை செய்தோம். மாலை ஆறுமணிக்குப் பெரிய கூட்டம் கூட்டி, நான் மூன்றுமணி நேரம் பேசி னேன். முதலில் சிறிது தெலுங்கில்பேசி, பிறகு ஆங்கிலத்தில் பேசி னேன். என்பேச்சை சட்டசபை மெம்பர் ஆஞ்சநேயலு பந்துலு மொழிபெயர்த்தார். அவர் எனக்கு அரிய துணைசெய்தார். அவர் தாந்திரிகசாதனம் என்று சிலர் மதுபானத்தில் விழுந்தழிந்த கதை யைச் சொன்னார். நான் உண்மையான சக்திபூஜையை விளக்கினேன். மற்றொரு நண்பர், முனிஸிபல் சேர்மனான ராமசாமி சௌத்ரி, தெலுங் குப் புலவர், ஆங்கிலமேதாவி, சுயமரியாதைச் சிங்கம், ராவணபக்தர். தேவாரங்களில் ராவணனைப்பற்றிச் சொல்லிய வரிகளையெல்லாம் என் னிடம் எழுதிக்கொண்டார். அவர் ஒருவரே 'தெலுங்கு தமிழின் சேய் என்றவர். ராமனை இறக்கி ராவணனை ஏத்தி அவர் ஒரு நாடகம் எழுதினார். அதை எனக்குப் படித்துக் காட்டினார். என் அறநூலைப் படித்துத் தெலுங்கில் விளக்கினேன். சிலவரிகளைக் குறித்துக்கொண் டார். இவர் எனக்கு அருந்துணை புரிந்தார், நான் கலெக்டருக்கு ஒரு மனுச் செய்தேன். "ஜைனர் அஹிம்சா தர்மிகள். அவர்கள் தெருவில் ஆடுவெட்டும் கொடுமை அக்கிரமம். மேலும் கல்லைவைத்து பெத்த லம்மா என்பது முழுமடமை. இது காட்டுமிராண்டி வேலையாகும். வேதத்தில் விக்கிரகாராதனைக்கே இடமில்லை. இத்தகைய மூடக் கொள்கை இந்துமதத்தில் இல்லை. இது ஊனுண்ணும் பூசாரி சிருஷ்டி. நாகரிகமுள்ள அரசாட்சி, இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நிறுத்த வேண்டும். இங்கே நாளை பலிநிறுத்தாவிட்டால் நான் உபவாசமிருப் பேன்." என்றெழுதினேன். சௌத்ரி அதைக்கொண்டு கலெக்டரிடம் பேசினார். கலெக்டர் யோசிப்பதாகச் சொன்னார். நான் மறுநாள் உபவாச விரதம் தொடங்கினேன். அப்போது சென்னையிலிருந்து

கே. எஸ். கோபாலகிருஷ்ணனும் ராஜகோபாலனும் வந்து நல்ல தொண்டு செய்தார்கள். கலெக்டருக்கு மறுபடியும் மனுச்செய்தோம். நான், பள்ளித்தலைவர், ரெட்டிமார்குரு, பலிதரும் வகுப்புத் தலைவர்களைக் கண்டேன். உயிர்க்கருணைபற்றிப் பேசினேன். அனைவரும் பலிமறுத்தனர். எங்களுடன் சேர்ந்துகொண்டனர். மூன்றாவது நாள் நாங்கள் பெரிய ஊர்வலம் நடத்தினோம். பூசாரிகளும் பறைக் கொட்டுடன் வாளேந்தி பயங்கரமாக வந்தனர். ஒரு பூசாரி எங்களை ஆபாசமான பாஷையில் அரைமணிநேரம் வைதார். எனக்குப் பலமான சாபமும் வசவும் கிடைத்தன. பெத்தலம்மா சாபத்தால் இரத்தம் கக்கி, மூன்றுநாளில் இறப்பேனும். நான் "கொட்டஓத்து கோய ஒத்து" பாடிக் குதித்தேன். கூட்டம்பூரா அதைப்பாடிக் கரகோஷம் செய்தது. பூசாரிக் கும்பல் ஓடிப்போனது. மறுநாள் "பலிபூஜை தொன்றுதொட்ட பழக்கம்; அதை நிறுத்தினால் ஊரில் பேதிவரும்" என்று பூசாரிகள் ஒருவக்கிலைப் பிடித்து, கலெக்டரிடம் மனுச் செய்தனர். நாங்கள் கும்பலாகச் சென்று பலிநிற்காவிட்டால் சத்யாக்கிரகம் நடக்கும் என்றோம். சௌத்ரி எனது உபவாசத்தைச் சொன்னார். கலெக்டர் மறுநாள் முடிவாகச் சொல்லுவதாக வாக்களித்தார். நான் அன்றுமாலை உருக்கமான ஒரு சொற்பொழிவாற்றினேன். பலர் பலி போடுவதில்லை. நான் சத்யாக்கிரகம் செய்தால், ஊர்முழுதும் எனக்கு உதவிசெய்யும் என்றார்கள். இரவில் நான் தியானத்தில் அமர்ந்து சுத்தசக்தியிடன் முறையிட்டேன்.

கதறக் கதறக் கழுத்தறுக்கும் காதகர்கள் உன் பெயரால்
பதறப் பதறப் பலியிட்டுப் பாபச் சோற்றை யுண்கின்றார்.
நிதமும் இந்தக் கொடுமைகளை நினைத்து நினைத்து
நெஞ்சழிந்தேன்;
பதமாய் இவர்க்குப் புத்திசொல்லிப் பழியைத் தீராய் பரதேவி.

கொடிய நெஞ்சர் கொல்லுகையில் கூவும் உயிரின் முறைகேட்டே
ஒடிய நெஞ்சந் துடிதுடித்தேன்; உயிரைக் கொடுத்தும் இப்
பழியைக்
கடிய உறுதி கொண்டுவிட்டேன்; கருணை யமுதே என்கண்ணீர்
வடியவடியக் கதறுகிறேன்; வாயில் உயிர்க்கு மனமிரங்காய்.

அதிசயம்! மறுநாட்காலை தான் கொலை...ஆடுகள் வந்து குவிகின்றன. பூசாரிகள் எங்களைத் திட்டிக்கொண்டே வாளைத்திட்டினர். நான் சௌத்திரியிடம் ஓடினேன். சௌத்திரி கலெக்டரிடம் ஓடினார். கலெக்டர் "ஜைனத்தெருவில் பலியிடக்கூடாது. அது பொதுசுகாதாரத்திற்கே கெடுதல்" என்று உத்தரவு போட்டார். பெத்தலம்மா முழிபிதுங்கியபடியே கல்லாயிருந்தாள். பூசாரி வாள் ஏமாந்தது. ஆடுகள் திரும்பிச்சென்றன. பலிநின்றது. நாங்கள் வெற்றி ஊர்வலம்

நடத்தினோம். இரவில் நான், ஐதரபாது நண்பர் பக்கவாத்தியங்களுடன் பாடி நடனமாடினேன். மறுநாள் பெரியகூட்டம்கூட்டி, சாத்விக பூஜா விதிகளைச் சொல்லிச் செய்து காட்டினேன். சென்னை நண்பர் ஊர்சென்றனர். சமணர் எங்களுக்குப் பெரிய விருந்து வைத்தனுப்பினர். நான் பாக்யரெட்டியுடன் ஆந்திரதேசத்தைச் சுற்றினேன்.

271. ஹரிஜன ஆசிரமம்.

மசூலிபட்டணத்தில் ராம்ஜிராவின் ஹரிஜனசேனை எங்களை ராம நாமத்துடன் வரவேற்றது. ராம்ஜீ பிராமணர், படித்தவர், தயாளு, காந்திபக்தர் சட்டசபையர்; ஹரிஜனசேவைக்கே வாழ்வை அர்ப்பணித்தவர். அவர் தமது சம்பாத்யத்தைக்கொண்டு நிலம் வாங்கி, ஹரிஜன மாணவரைக்கூட்டி, உணவு உறையுள்கல்வி தொழில் அளித்தார். அரசாங்கம் அவர் தொண்டை மெச்சி, மானியம் வழங்கியது. ஹாஸ்டல் ஹரிஜனர்களாலேயே நிர்வகிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்தில் மூன்று ஆசிரியர் இருந்தனர். எல்லா மாணவரும் நூற்றனர். ஒரு தறி ஓடியது. நான் ஒருமணிநேரம் மாணவருக்கும் ஊர்பிரமுகருக்கும் ஒரு கூட்டத்தில், ஹரிஜனர் ஸர்வஜன உரிமைக்குப் பாத்திரமாக வேண்டும் என்று பேசினேன். நந்தனார் திருப்பாணாழ்வார் சரித்திரம் சொன்னேன். மூன்று மணிக்கு நாங்கள் ஊரைசுற்றிப் பார்த்தோம். சர்க்கரை செய்யுமிடம் சாயம் போடும் இடம் தோல் பதனிடும் இடம், எல்லாம் பார்த்துக்கொண்டு, ஜாதியகலாசாலைக்கு வந்தோம். தலைவர் ஸ்ரீநிவாசராவ் எங்களை வரவேற்றார். அக்கலாசாலை மகாத்மாவின் ஆவேசத்தால் எழுந்தது, டாக்டர் பட்டாபி சீதாராமையா அங்கே சரித்திரம் போதித்தார். அவருடைய சரித்திரக்குறிப்புகளே பிற்காலம் காங்கிரஸ் சரிதித்ரமாக வெளிவந்தன. பட்டாபி தாஸ்கட்சியை ஒப்பவில்லை. "காந்திஜீ தான் சுதந்தரகர்த்தா; அவர் வழியேவழி" என்றார். கலாசாலையில் சித்திரக்கலை, யந்திரக்கலை, கைத்தொழில்கள், நூற்பு, நெசவு, இலக்கியவளர்ச்சி எல்லாம் உண்டு. ஆனால் குறைபாடுகளும் கணக்கில. அந்தக்காலம் தேசியஸ்தாபனங்களே பொதுஜன ஆதரவோ சர்க்கார் சலுகையோ இல்லாமல், தென்னாலி ராமன் குதிரைவளர்த்த கதையாயின. தமிழகம்போல் ஆந்திரத்திலும் பனகரல்-பொப்லிமயந்தான். அப்ராமண இயக்கம் ஊர்தோறும் வீறிட்டது. எல்லாம் இரட்டையாட்சியின் சிண்டுமுடிப்பே. நான் கலாசாலைக்குறிப்பில் எழுதினேன்: மஹாத்மாவின் அருளால் பலதுறைகளில் தேசம் முன்னேறியது. தேசியக்கல்வி அவற்றில் ஒன்று. நான் சில தேசியக்கலாசாலைகளில் பணி செய்திருக்கிறேன். இந்தக் கலாசாலை தற்காலத்திற்கு அவசியமான யந்திரசாதனங்களுடன் அமைந்திருக்கிறது. நமக்குச் சர்க்காவும் வேண்டும், ஸயன்ஸ் மூளையும் வேண்டும். யந்திரயுகத்தில் நாம் மற்றநாடுகளுடன் அடிவைத்து முன்னேறவேண்டும். அதற்கேற்ற கல்வி இங்கே தொடங்கி யிருக்கிறது, டாக்டர் பட்டாபியின் சரித்

திரக்குறிப்புகள் மாணவருக்குப் பெரும்பயனாகும். சித்திரக்கலை விசித்திரக்கலையாக வளர்கிறது. பொருளாதாரம் தந்து பொதுஜனங்கள் இந்த முயற்சியை ஊக்கி நடத்துவார்களாக!" மறு நாள் பாக்கிய ரெட்டியின் படத்தை ஹரிஜனப்பள்ளிக்கூடத்தில் நான் திறந்து வைத்து, அவர் செய்த ஆதிஹிந்து சேவையைப்பாராட்டினேன். ஹரிஜனசேவையில் என் அனுபவங்களையும் சொல்லி, ராம்ஜியின் பணிகளைப் போற்றினேன். பாக்யரெட்டி தென்னாலியில் பேசியதுபோலவே அருவிநடையில் அழகாகப் பேசினார். ராம்ஜி ராமநாமத்துடன் எங்களை ரயிலேற்றி அனுப்பினார். நாங்கள் பெஜவாடா சென்றோம். அங்கே எனது நண்பர் பைரவமூர்த்தி ஹனுமையா புத்சா வேங்கட ராமர் முதலியோரைக் கண்டோம். இயற்கைப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதித்தந்தேன். பெஜவாடா நண்பர் கிருஷ்ணாநதி தீரத்திலேயே ஆசிரமம் அமைத்துத்தருவதாக என்னை இருக்கச்சொன்னார். ஹனுமந்தையா தமது ஆஸ்திமுழுதும் என்பெயருக்கு எழுதி (ஒரு இயற்கை நிலையம் நடத்த) வைப்பதாகச்சொன்னார். உள் அழைப்பில்லை. ஆதலால் ஜைனகுரு சாந்திசாகர விஜயஜீயைக் கண்டேன். தத்துவப்பேச்சும் சுக்கிலத்தியானமும் நடந்தன. ஜைனருக்கு ஒரு உரை நிகழ்த்தி, பணத்தைப் பயனுள்ள கைத்தொழில்களில் போட்டு, பலருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணச் சொன்னேன். மார்வாடிகள் மிக்க அன்புகாட்டினர், ஆந்திர நாட்டில் பலஊர்களைப் பார்த்துவிட்டு ஐதராபாது சென்றேன், அது என் முன்னோர் வசித்த நகரம்.

272. ஐதராபாதில்

பாக்யரெட்டி என்னைச் சிறப்பாக வரவேற்றார். நான் செல்வச் சமணரான கணேஷ்மல் வீட்டில் தங்கினேன். அவரும் அவர் மகன் ரகுநாத்மல்லும் என்னிடம் அன்பு கொண்டவர்கள். அவர்களுடன் தத்வார்த்த சூத்ர ரகசியங்களைப்பேசினேன். ஒரு ஜைனசாது எனக்குக் கிடைத்தார். இருவரும் நைஜாம் தோட்டத்தில் இருந்த மசூதியில் தியானித்தோம். பெரிய ஏரியில் குளித்து உலாவினோம். கணேசமல் மோட்டார் எங்கு வேண்டுமானாலும் தயாராகவரும். அவர் தீவிரமான பக்தர், வாயைக்கட்டிக் கொண்டு பூஜைசெய்து, சாதுக்களுக்கு அன்ன தானம் செய்வார். அவர் பெரியவட்டிக்கடை நடத்தி, லட்சக்கணக்காகச் சம்பாதித்தார். அவர் மகன் சினிமாக்கொட்டகைகளைக் குத்தகை வாங்கினார். மகனிடம் வியாபாரத்தைவிட்டு, கணேசர் முதுமையை பக்திபரோபகாரங்களிற் கழித்தார். ஜீவரக்ஷணப் பிரசாரத்திற்கும் சாதுக்களுக்கும் அள்ளி அள்ளித் தந்தார். நான் மட்டும் ஆசிரமம் வைக்கவேண்டும் என்றால், உடனே பணவுதவி செய்வார். மனச்சாட்சி தடுத்தது. நாங்கள் பாக்யரெட்டி வீட்டுக்கு வந்தோம்; தூயசிறுமனை; மனைவிமக்கள் சுத்தமாயிருந்தனர், பாக்யரெட்டியார் ஹரிஜனருக்கு

ஒரு கலாசாலை கட்டினார். கண்டேன், மகிழ்ந்தேன். அவர் ஜீவதயைக்கும் ஆதி இந்துக்களுக்கும் செய்த தொண்டு அளப்பரிது. தெலுங்கிலும் உருதிலும் அவர் தடதட வென்று ஜனங்கள் பிரமிக்கும்படிப்பேசுவார். ஐதராபாது சர்க்காரும் அவரை ஆதரித்தது. என் உள்ளன்பருள் அவர் ஒருவர். அவரைப்பார்த்த பிறகு, நாங்கள் செகந்திராபாது சென்றோம். அங்கே நான் எனது நண்பர் ராஜா புருஷோத்தமரைக் கண்டு பக்திபரமாகப்பேசினேன். அவரது பஜனைமடத்தில் ஒரு பாகவதர் வந்தார். அவர் காஞ்சீபுரம் ஐயங்கார்; தமது வடநாட்டு யாத்திரானுபவங்களைச் சொல்லி, இது நல்லபருவம்: செல்லலாம் என்றார். நான் வடநாட்டைச் சுற்றத் தீர்மானித்தேன். நண்பரிடம் விடைபெற்றேன்.

நான் முதலில் ஐதராபாது சமஸ்தானத்தைச் சுற்றினேன். 82,000 சதுரமைல், ஒன்றரைக்கோடி ஜனத்தொகை கொண்ட அந்த சமஸ்தானம், நாட்டுக்கு நடுநாயகமானது. கோதாவரியும் கிருஷ்ணாவும் இதன் எல்லையைத் தழுவிச்செல்கின்றன. உள்நாடு வானம்காத்தபூமி. காடுகளும் மலைகளும் உண்டு. நைஜாம் ஏராளமான தோட்டங்களை உண்டாக்கியிருக்கிறார். அழகான சிற்பச்செல்வங்கள் உள்ளன. நைஜாம் கல்லூரி, மசூதி, அரண்மனைகள் சீதாராம்பாக் கோயில், தாலாப், முதலியன கண்டு, ஹம்பியும் கண்டு, ஒரு சாது "நாசிக் சலேங்" என்றார். "சலியே" என்று சீட்டு வாங்கி வண்டியேறினேன்.

273. வடக்கே சுழன்றேன்.

ஓரு காற்றுடிப்பிரயாணம்: கிறுகிறுவென்று சினிமாச்சுருள்போல் சுற்றினேன். இந்தப்பிரயாணத்தை வர்ணிக்க முடியாது. வடநாட்டு நிலைமையைப்பார்க்கவும், சிறிது இமாலயக்காற்றை முகரவுமே சென்றேன். இதோ நாசிக்; என் மூதாதை தவம்புரிந்த இடம். நருமதை நதிக்கரையில் அரிய யோகிகளைத்தரிசித்தேன். "சுத்தியும் சக்தியும் உள்ளது; சித்தியும் முக்தியும் உண்டு; "செய் சாதனம்" என்றார் ஒரு ஞானி, பைராகிக் கூட்டத்துடன் புறப்பட்டு, பூனாவுக்கு வந்தோம். சிவாஜியும் திலகரும் வாழ்ந்த அந்த நகரில் ஒரு வீரவிறுவிறுப்பைக் கண்டேன். பம்பாய் வந்தேன்; பழைய அம்பாபுரி நவநாகரிகக் கோட்டையாயிருந்தது. அம்பாள் எங்கே? கம்பீரமான கட்டிடங்களும் மாபெரும் தொழிற்சாலைகளும், வியாபாரப் பெருக்கமும் உள்ள அம்பாபுரியில் மாதுங்கா, கோட்டை, மலபார், பந்தர், துறைமுகாதிகளைப்பார்த்தேன். துறைமுகத்தில் நாட்டுச்சரக்குகள் ஏற்றுமதியாயின. தங்கமும் பருத்தியும் கப்பலேறின. துணியும் சாராயமும் சீமைச்சரக்குகளும் பெட்டி பெட்டியாக வந்து இறங்கின. மேயோ ரோடில் வானளாவிய மாளிகைகள் கண்டேன். தெருவில் வயிறெக்கித் திண்டாடும் பஞ்சைகளையும் கண்டேன், கோட்டையில் கண்காட்சியும் கண்டேன். பிணிசுமந்த பரிதாப ஜன்மங்களையும் எங்கும் கண்டேன். செல்வரின் மோட்டார்தூசி, ஏழைகளின் கந்தலிற்படிந்தது.

ஆமதாபாது வந்தேன்; மில்மயம்! ஆலைத்தொழிலாளிகளைக் கண்டேன். கவலை முகங்களையே கண்டேன், சபர்மதி சென்றேன். வாய்மையும் தூய்மையும் கண்டேன். மஹாத்மா கதர்நிதிக்காக நாட்டைச் சுற்றிக்கொண்டிருந்தார். சமர்மதி ராட்டின ஓங்காரமும் ராமநாமமும் நிரம்பியிருந்தது. சமர்மதி தீரத்தில் தியானித்தபோது, எனது செல்வத்தை மஹாத்மா கையில் தந்து, இமயமலை செல்லத்தோன்றியது. பிறகு சிர்தியில் சாயிபாபா சமாதைக்கண்டேன். சகோரியில் உபாசனிபாபாவைக் கண்டேன். அக்காலம் அவர் பெயர் நாட்டில் தெரியாது. அவர் ராதா உபாசனை செய்தார். அங்கிருந்து சில பாகவதர்களுடன் பிருந்தாவனம் சென்றேன். என்னையே ராதையாகப்பாவித்து ராதானந்தனுனேன். கண்ணனை அன்பு செய்தேன். ரூபசநாதனரும் மீராவும் பரமஹம்ஸரும் இருந்த இடங்களைக்கண்டு பரவசமானேன். ஒரு பண்டிதர் பாகவதம் படித்தார். எனக்கும் அன்றே பாகவதத்தில் ஆர்வமுண்டானது. ஆனுல் இந்தஸ்தலங்களில் பிச்சை வாங்கித்திரியும் சோம்பேறிப்பரதேசிகளை நாட்டுக்கு நலமான சேவைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பது எனது விருப்பம், ஸ்தலங்களைப் பின்னிக்கொண்டிருக்கும் கட்டுக்கதைகளும் ஒழியவேண்டும். சில இடங்களில் தங்கி ஆக்ராசென்றேன். தாஜ்மகாலைக் கண்டேன். சலவைக்கல்லில் அமைந்த சிற்பக்கவிதை அது...அதன்காட்சியை அனுபவித்து மேலே சென்றேன். டில்லி வந்தது. சந்துபொந்தாயிருக்கும் பழையடில்லி வசிகரமாயில்லை. புதுடில்லி காணத்தக்கது. லால்கில்லாவைக்கண்டேன்; சர்க்கார் மாளிகைகளை தூர இருந்தே வந்தேமாதர ஜபத்துடன் கண்டு, இக்கட்டிடங்களில் நமது கொடிபறக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொண்டு, ஹரித்வாரம் சென்றேன். காங்கிரி குருகுலம் என்னை வசிகரித்தது. உண்மையான வேதநிலையம் அதுவே. அங்கிருந்து சுவர்காசிரமம் சென்றேன். ஏராளமான சாதுக்கள் அன்னவிசாரமில்லாமல் வேதாந்த விசாரம் செய்யக்கண்டேன். லக்ஷ்மண ஜூலாவில் தியானித்தேன். இமாலயக்காற்றை நிரம்பப்பூரித்தேன். "இமாலயமே என் கருமங்களை ஒழித்து, மறுபடிவருகிறேன்" என்று விடைபெற்று, பிரயாகைக்குவந்தேன். திரிவேணிசங்கமத்தில் மூழ்கினேன். புத்தகயாவில் அரசடியமர்ந்து தியானித்தேன். அங்கிருந்து காசிக்கு வந்தேன், குமாரசாமி கட்டத்தில் இறங்கினேன். கங்கையாடி, விசுவநாதரைத் தரிசித்தேன், இந்து சர்வகலாசாலையைக் கண்டேன். கேதாரிநாத் தசாஸ்வமேதம் முதலிய கட்டங்களைச் சுற்றினேன். விசுவநாதர் ஆலயத்தைவிட மாளவியா நாட்டிய விசுவகலாலயமே எனக்குப் புண்ணியஸ்தலமாகத் தோன்றியது. காசியிலிருந்து பட்ன வந்தேன். இந்தியாவின் குருக்ஷேத்திரத்தைக் கண்டேன். இங்கே நடந்த போர்களே நாட்டின் தலைவிதியை மாற்றின. அங்கிருந்து கல்கத்தா; வங்கவாழ்வையும் மார்வாடிகளின் செல்வச்செழிப்பையும் கண்டேன். போல்பூரில் சாந்திநிகேதனத்திற்கு வந்தேன். கவி

வரர் தாகூர் மாணவருக்கு நடத்திய பிரார்த்தனை வகுப்பைக்கண்டேன். தாகூர்வாணி மெல்லிய யாழிசைபோல் என்காதைக் கொஞ்சியது. பெண்குரல், ஆண்மை நிரம்பிய நடை; பலதிசை மாணவர் அந்தக்குரலில் மோகித்திருந்தனர். சாந்தி நிகேதனம் கவிக்கனவில் எழுந்த கலைக்கோயில். ஸ்ரீநிகேதனத்தில் நடந்த கைத்தொழில்களைக் கண்டேன். பூரிக்கு வந்தேன்: சைதன்யரும் சங்கரரும் வாழ்ந்த மகாக்ஷேத்ரம் அது. ஜகந்நாத தரிசனம் செய்து சங்கர மடத்தைப் பார்த்துக்கொண்டு கடற்கரையில் தியானித்தேன். அங்கிருந்து ஆந்திரதேசம் வந்தேன். கோகிநாடா ராஜமகேந்திரபுரம் வால்டேர் எல்லாம் பார்த்துக்கொண்டு பெஜவாடா வந்தேன். நண்பரைக்கண்டு, தென்னுலி சேர்ந்துமீண்டும் தேவிபூஜையைப்பற்றிவிளக்கிச் சென்னைக்குவந்தேன். வடநாட்டில் பக்தி சிரத்தை காரியத்திறமை உள்ளன, அங்கே காங்கிரியும் சாந்தி நிகேதனமும் சபர்மதியும் இன்றும் நடக்கின்றன. இங்கே? நாங்கள் கட்டிய தமிழ்க்குருகுலம் எங்கே? தமிழர் காரிய வீறுபெற வேண்டும். வடநாட்டு ராமகிருஷ்ணரை உலகம் அறியும்; நமது ராமலிங்கத்தை...? சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, உலகில் நாம் முன்னேற வேண்டும்... இது தான் வடயாத்திரை தந்தபாடம்.

274. கிராமசேவை மகாநாடு

சென்னைக்கு வந்ததும் நான் ராணிப்பேட்டையில் பலிமறுப்புச் செய்யச் சேன்றேன். பலி நின்றது. அப்படியே திருப்புத்தூருக்கு அடுத்த கிறிஸ்துகுல ஆசிரமம் சென்று, எனது நண்பர் ஏசுதாசரைக் கண்டேன். மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் மனிதரின் பொதுச் சமயத்தைப் பற்றிப் பேசினேன். திருப்புத்தூரிலும் கூட்டம் நடந்தது. சென்னைக்குத்திரும்பியதும் நண்பர் என். எஸ். ரங்கசாமி ஐயங்காருடன் திருவள்ளூருக்குச் சென்றேன். அவர் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தின் பிரசாரகர். அவர் விளக்குப்படம் கொண்டு வந்தார். ஊரில் ஜீவகாருண்யப் பிரசாரம் செய்ததும், நாங்கள் புதுப்பட்டிக்குச் சென்றோம். அங்கே சில வெள்ளைக்காரர் குடியேறி விவசாயப்பண்ணை, மாட்டுப்பண்ணை, கைத்தொழில், பள்ளிக்கூடம் முதலியன வைத்து, அரிய பெரிய கிராமசேவை செய்தனர், கண்குளிரக்கண்டேன். அவர்கள் என்னை அடையாளம் கண்டுபிடித்தனர். நான் கிறிஸ்துசங்கத்தில் கிராமசேவைபற்றிப் பேசியபோது, என்னைப்பார்த்திருந்தார்கள். அவர்கள் கதர்த்தறி போட்டு நெய்த ஓர் துண்டை எனக்களித்தனர். ஒரு கிராமம் முழுதும் அவர்களை வாழ்த்தியது. இரவில் எல்லாரும் ஒரு புளியமரத்தடியில்கூடி எங்கள் விளக்குப் படத்தைப்பார்த்து, பிரசங்கம் கேட்டனர். சுகாதாரவாழ்க்கை, உயிர்க்கருணை, பொதுநலம் பற்றிய அந்தப்படம் கிராமவாசிகளுக்குப் புதிய உணர்ச்சியளித்தது.

சென்னைக்கு வந்தேன். எனது நண்பர் K. T. பால்வந்து "கிறிஸ்து இளைஞர் சங்கத்தில் கிராமமகாநாடு நடக்கிறது. தாங்கள் தலை

மைவகிக்க வேண்டும்'' என்று அழைத்தார். மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு, என்னையும் தயாரித்துக்கொண்டேன். அப்போது நான் சில நாள் இயற்கைப்பணிக்காக ஸாங்தோம் மாளிகையில் இருந்தேன், அங்கே மோட்டார் வந்தது. மகாநாட்டிற்குச் சென்றேன். பெரிய கூட்டம். முதலில் கிராமக்கண்காட்சியைப் பார்த்தேன். குடிசைத் தொழில்கள், நூற்றல், நெசவு, பாய்பின்னல், கூடைமுடைதல், எண்ணெய்பிழிதல், வெல்லம் காய்ச்சல், சுகாதாரத்தொழில்கள், வீடமைத்தல், மலஅறை அமைப்பு, காய்கனித் தோட்டப்பயிர், பூச்சியழிப்பு, பயிர்ப்பாதுகாப்பு, எழுத்தியக்கம், கிராமப் பள்ளிக்கூடம், மதுவிலக்கு, முதலிய பல காட்சிகளை அங்கே கண்டு பெருமகிழ்ச்சி யடைந்தேன். எனது கிராம நிர்மாணக்கனவு நிறைவேறியதென உணர்ந்தேன்.

மகாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து பலமாகாணப்பிரதிநிதிகள் வந்திருந்தனர், அவருள் கோயமுத்தூர் விவசாயக்கல்லூரித்தலைவர் ராமசாமி சிவம், இந்தியத்தொண்டர் சங்கத்தலைவர் வேங்கடசுப்பையா, ஆந்திரபுரம் சத்தியநாராயணா, கும்பகோணம் கல்லூரித்தலைவர் கே. ஜீ, சேஷையர், ராமகிருஷ்ணத்துறவிகள், அடையாறு சகோதர சகோதரிகள் ஏராளமான வெள்ளைக்காரர் இருந்தனர். டாக்டர் சுப்பராயன் ஆரோக்யசாமி, ரங்கநாத முதலியார் முதலிய மந்திரிமாருக்கு என்னை கே. டி. பால் அறிமுகப்படுத்தி, மேடைக்கு அழைத்துச் சென்றார். எல்லாரும் ஆங்கிலந் தெரிந்தவர்கள். ஆதலால், பால் விரும்பியபடியே எனது பேச்சை ஆங்கிலத்தில் நிறைவேற்றினேன். அது கார்டியன் பத்திரிகையில் அப்படியே வந்திருந்தது. அதில் கிராமத் தொண்டிற்குத் தக்க திட்டமும், என் அனுபவக்குறிப்புகளும் சேர்த்தேன். அனுபந்தத்தில் காண்க.

செங்கல்வராயர், என் உரையைப்போற்றிப்பேசினார். வறுமைதீர இதுவே வழி. என்றார், ராமசாமி சிவம் தமது விவசாய அனுபவங்களை ரசமாகப்பேசினார், சத்யநாராயணா மதுவிலக்கிற்காகத் தாம் செய்ததைச்சொன்னார், வேங்கடசுப்பையா ஐக்கியநாணச்சங்கம் பற்றிப் பேசினார். இன்னும் சிலர் பேசியபிறகு முடிவுரை கூறினேன். "பேசுவது எளிது. செய்வது அரிது. மகாநாடுகள் கூடித் தீர்மானங்கள் செய்யலாம்; ஒரு தீர்மானத்தையாவது கொண்டுசெலுத்தினாலே நலமாகும் இப்போது இரட்டையாட்சி நடக்கிறது. நமது மந்திரிகள் இருக்கிறார்கள். ஆனால் பணப்பை சர்க்காரின் இருப்புகையில்உள்ளது. குடிகளின் பணம் கஜானாவுக்குள் போகிறது. வெளிவருவது ஸாங்தோம் பைப்தண்ணீர் மாதிரித்தான். சிலசமயம் தண்ணீருக்குப்பதில் தண்ணீர்ப்பாம்பும் வருகிறது. தேசம் சுதந்தரமடைந்தாலே கிராமம் சுதந்தரமடையும். தற்போது நாம் கல்வி தொழில் சுகாதாரம் சன்மார்க்கம் ஆகிய துறைகளில் பணிசெய்வோம். முதலில் பசிதீரத் தொழில்களை உண்டாக்குவோம். தொழில் மூலம் கல்வியும் தரு

வோம். அதற்கேற்ற சர்க்கார் உதவியையும் நாடுவோம். மற்றவை எனது தலைமையுரையில் உள்ளன.'' கே. டீ. பால் அரைமணி நேரம் அழகான ஆங்கிலத்தில் வந்தனோபசாரம் சொல்லிக் கனிகள் தந்தார். சுமார் நூறு நண்பரை அடைந்தேன். பல கிராமசேவா நிலையங்கள் என்னை அழைத்தன. முடிந்தமட்டும் சுற்றித்திரிந்து, சென்னைக்கு வந்தேன். அப்போதே மஹாத்மாகாந்தி கதர்ப்பணிக்காகச் சென்னைக்கு வந்தார்.

275. மஹாத்மா தரிசனம்

சென்னை அரசியலிலும் நான் பங்கு கொண்டேன். அரசியல் என்வாழ்வில் ஒரு பகுதியாகும். சன்மார்க்க அரசியலே நான் வேண்டியது. காந்தியடிகளின் வழியே எனக்குப் பிடித்தது. ஆதலால் காந்தி சம்பந்தமான கூட்டங்களில் பேசினேன். அப்போது நண்பர் சோமயாஜி நீல்சிலையில் உளிவைத்துத் தட்டினார். அது ஒரு சத்தியாக்கிரகமாக வளர்ந்து, பலதொண்டரைச் சிறைக்கனுப்பியது. நீல்சத்தியாக்கிரகக்கூட்டத்தில் நான் 1857ம் ஆண்டுப் புரட்சிபற்றிப் பேசினேன். காந்தியும் அந்த சத்தியாக்கிரகத்தை ஆமோதித்தார். அப்போது தொடங்கிய இயக்கம் ராஜாஜி காலத்திலேதான் வெற்றி பெற்றது. அவர் அமைச்சிலேதான் நீல் சிலை காட்சிசாலைக்குப் போய்ச் சேர்ந்தது, அந்தகாலம் ராஜாஜி காந்தி ஆசிரமத்தில் கதர்ப்பணி செய்தார். சென்னையில் அவர் குரல் கேட்கவில்லை. சென்னை அரசியலை எஸ். ஸ்ரீநிவாசரின் செல்வக் கை ஆண்டது. சத்தியமூர்த்தியே அவரது எதிரொலி. இவர்கள் மோதிலாலைப்பின்பற்றிச், சட்டசபையில் ஆங்கில அதிகாரக்கோட்டையை வளைத்துக்கொண்டு சொல்வெடி வீசினின்றனர். எங்கும் தேர்தல் ஆமளி. முத்துரங்கம், பக்தவத்ஸலம், பாஷ்யம், குழந்தை, கந்தசாமி செட்டியார், கத்தே ரங்கையா, ஷாபிமுகமது, ஏ. ரங்கசாமி ஐயங்கார், சபாபதி முதலியார், டி. பிரகாசம், கொண்டவேங்கடப்பையா, அன்ன பூர்ணையா, சாமி வெங்கடாசலம், நாகேஸ்வரராவ், புலுசு சாம்ப மூர்த்தி—இவர்களே திலகர் கட்ட மேடையை ஏகபோகமாக உரிமை கொண்டனர். எனக்கும் சிலநாட்கள் வாய்ப்புக்கிடைக்கும். எம். எஸ். சுப்பிரமணியரும் பேசுவார். ஆங்கிலப்பேச்சே அதிகம். அடுத்தபடி தமிழ்; அரிதாகத்தெலுங்கு. அந்தக்காலம் நகரசபைத் தேர்தல் சட்ட சபைத்தேர்தல் கூட்டங்களில் பேச்சுப்போட்டி நடந்தன. நானும் போட்டி போடாமல் பேசினேன். என் உள்ளமெல்லாம் மஹாத்மாவிடமே இருந்தது. சிலர் கதரையும் காந்தியையும் எதிர்த்துக் கூச்சலிட்டனர். பேச்சில் வசைபுராணமே அதிகம். அதைக்கேட்டு என்மனம் சலித்தது. வெறும் கூச்சலில் என்வாழ்வைக்கொட்டி வீணாக்க முடியாது. ஆதலால் தேசத்திற்கும் உலகிற்கும் உய்வழிதேடவே இமயமலையில் தவம்புரிந்து சக்திபெற

விரும்பினேன். என்பாங்கு ரசீதை அப்படியே மஹாத்மா பெயருக்கு மாற்றி அர்ப்பணம்செய்துவிட்டு வடக்கே போக விரும்பினேன்.

மஹாத்மாவும் வந்தார். அவரை வரவேற்கும் குழுவில் என்பெயரும் உண்டு. என். எஸ். வரதாசாரியாரிடம் காந்தியைத் தனியாகக் காண ஏற்பாடு செய்யச்சொன்னேன். அவர் ராஜாஜிக்கு எழுதச் சொன்னார். எழுதினேன்...பதில் இல்லை. ஆனால் மஹாத்மா கூடவே தான் நான் சுற்றித்திரிந்தேன். அவர் அருகிலேதான் இருந்தேன். அவர் ஸ்ரீநிவாசையங்கார் வீட்டில் இறங்கியிருந்தார். நான் அங்கேயே கீதை படித்துக்கொண்டிருந்தேன். திலகர்கட்டத்தில் மேடைபோட்டு ஒலிப்பெருக்கிவைத்துக் கூட்டம் போட்டனர். பதினாயிரம்பேர் கூடினர். காந்தி "கதர்சேவையே தரித்திர நாராயணசேவை" என்று பேசினார். அவர் பேச்சு பத்துப் பேருக்குக்கூடக்கேட்காது. உடம்பு சந்தனக்கட்டையாகத் தேய்ந்தது. அவர் சொற்களை இப்புறம் ராஜாஜியும் அப்புறம் சத்தியமூர்த்தியும் மொழி பெயர்த்தனர். நான் அவர் நாற்காலியருகே அமர்ந்து குறிப்பெடுத்தேன். இருபதே நிமிஷம் பேசினார். கூட்டம் கலைந்தது...உடனே நாங்கள் சிலர் பேசத்தொடங்கினோம், நான் தற்கால அரசியல்பற்றிப் பேசினேன். எம். எஸ். சுப்பிரமணியர் நீல்சத்தியாக்கிரகத்தைப் பேசிப் பணம் வசூலித்தார். பேச்சுக்குத் துடிக்கும் வாலிபக்காளைகள் அனைவரும் பேசிய பிறகு, கூட்டம் கலைந்தது...சந்திரன் புன்னகைத்தது. நான் கரம்சந்திரனைப்பின்பற்றினேன். மறுநாள் ஒருதொழிற்சாலை மைதானத்தில் கூட்டம்; பிறகு மேரிகல்லூரியில், பிறகு தங்கசாலைத்தெருவில் குஜராத்திகள் காந்தியை உபசரித்து ஆயிரம் ரூபா தந்தனர். தேவ்ஜிபாய்தான் வரவேற்புத் தலைவர். அவர் மகள் லீலாவதியே காந்திக்கு மாலைசூட்டினாள். காந்தி "பணக்காரர் ஏழைகளுக்கு ஜீவனம் கிடைக்கும் தொழில்களில் பணத்தைப் போடவேண்டும். கதர் அணிவதை மதக்கடனாகக் கொள்ள வேண்டும்" என்று குஜராதியில் பேசினார். கூட்டம் முடிந்ததும் பக்கத்தில் நின்ற என்னை அடையாளம் கண்டு கொண்டு புன்னகைத்தார். நான் இந்தியில் சத்தியாக்கிரகத்திற்கு நாட்டை நடத்துங்கள்... மேடைக்கூச்சல் நாட்டைப் பிளக்கிறது" என்றேன். "தையார் ஹோகா" என்றார். அன்று மாலை ஆந்திர கலாசபையார் நாடகம் போட்டனர். காந்திஜி விஜயம் செய்து இந்நிப்பகுதி மட்டும் பார்த்து மெச்சினார். ரூ250 அளிக்கப்பட்டது. பிறகு வரசுல்கம் என்ற நாடகம் நடந்தது. நான் தெலுங்கு பத்யங்களுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்தபோது, எனது நண்பர் ஞானானந்தர் முதுகைச் சுரண்டினார். அவர் விவேகானந்தருடன் இருந்தவர். வேதாந்தப்புலவர், தியானி, ஞானி, அவருடன் கடற்கரைக்குச் சென்றேன். அவர் என் வாழ்க்கையைக் கவனித்து வந்தவர், "ஏன் அரசியலில் தீவிரப்பட்டிருக்கிறீர்கள்?. காந்தி பேச்சையே கேளாத நாடு உம்பேச்சையா கேட்கும்?

நிஷ்டையைவிடக் கூடாது. நான் இமயமலை செல்கிறேன். நீரும் கர்மங்களை முடித்து வாரும்" என்றான். இமயமலை என்முன் நின்றது. பாரதசக்தியில் அதை வர்ணித்திருக்கிறேன். ஏதோ ஒன்று அழைத்தது.

மறுநாள் இந்திப்பிரசாரசபையில் காந்தி வந்து பேசினார். நான் பாங்குநோட்டை இடுப்பில் வைத்துக் கொண்டிருந்தேன். அதை அவர் பெயருக்கு எழுதிக்கொடுத்து, இமயமலைக்குப் போக நினைத்தேன். என் பக்கத்தில் ராஜாஜீ இருந்தார். அவருக்கு என்ன தோன்றியதோ, "மன்னார்குடியில் காந்தியைப் பாருங்கள்" என்றார். நான் பேசாமல் பாங்குநோட்டை காந்தி கையில் எடுத்துத்தர எழுந்தேன். ராஜாஜீ நான் காந்தியுடன் பேசப்போவதாக நினைத்து உஷ்ஷு என்றார். அந்த உஷ் என்னை உஷார் படுத்தி "பொறு" என்றது. பாங்கு ரசீது இடுப்புப்பைக்குள் சென்றது. நானும் கூட்டம் முடிந்ததும் தனியிடம் சென்றேன். காந்தி கடிகாரம் எனது நெஞ்சில் டக்டக் என்று துடித்தது. எனது ஏகாந்தமாளிகைக்குச் சென்று வேமனபத்யம் படித்துக் கொண்டு சிந்தித்தேன். "பேசலாம்; செய்ய முடியாது; செய்யலாம் மனதை அடக்க முடியாது; மனதை அடக்கி உள்முகமானவனே யோகி. மனதில் தேடினாலே உண்மை விளங்கும். இன்றேல் கக்கத்தில் ஆடுவைத்துக் காதவழி தேடிய இடையன் கதையாகும். மனங்குவிந்து உள்ளக்கோயிலில் சுத்தான்ம உபாசனைசெய். உலகைப் பார்த்தால் கலகம். அதைத் திருத்தப்புகுந்தால் சள்ளை. ஆற்றுக் கோணலை யார் நேராக்க முடியும்? செருப்புத்தின்னும் நாய் கரும்பு ருசியறியுமா? உலகம் ஞானிகளை அறியாது. உலகின் அறிமுகத்தை வேண்டாதே. உன்னுள் நீயாயிரு". இந்த உபதேசங்களில் உட்குவிந்து தியானித்தபோது, தேவநாயகையா வந்தார். அவர் நல்ல தேசபக்தர், பேச்சாளர், அரிய நண்பர். "திருப்பாதிரிப்புலியூரில் அரசியல் மகாநாடு நடக்கிறது. வரதராஜர் தலைமைவகிக்கிறார். தாங்கள் தேசக்கொடி ஏற்ற வேண்டும்" என்றார்: சென்றேன். கொடியேற்றி "ஒற்றுமையாய்ப் பணிவோம்" என்றபாட்டைப் பாடினேன். வரதராஜுலு சட்டசபைப் பிரவேசத்தின் அவசியம், நாட்டில் கட்சிப் பிணக்கு, பிராமண அப்ராமணவாதம், தீண்டாமை விலக்குகளைப் பற்றித் தலைமையுரை நிகழ்த்தினார். நானும் புலுசு சாம்பமூர்த்தியும் அவருடன் தனியே அளவளாவினோம். புலுசு மகாநாட்டில் சத்தியாக்கிரகத்தைப் பற்றி ஆங்கிலத்தில் வீரிட்டார். நான் நான்கு தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றினேன். காந்தி வழியே வழி; அதற்கு வழி துலக்கலே கடமை. கதர் இந்தி இரண்டையும் வளர்ப்போம். சாதிமதப்பித்தம், தீண்டாமை இரண்டையும் ஒழிப்போம். சத்தியமூர்த்திகள் சட்டசபை குஸ்தி போடட்டும். நாம் கிராமங்களில் ஆக்கவேலை செய்வோம். நாட்டை சத்தியாக்கிரகத்திற்குத் தயாரிப்போம்" என்றேன். அண்ணாமலைப்பிள்ளை என்னை ஆமோதித்தார். புலுசு

"சேயண்டி ஆக்கவேலை" என்றார். "ஆலாகே" என்று நான் சென்னைக்கு வந்தேன்.

276. சென்னை காங்கரஸ்

என் வாழ்க்கையின் அரிய நிகழ்ச்சி சென்னை காங்கரஸ். கௌஹாதி காங்கரஸ் தலைவரான நமது எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காரே அதை அவ்வளவு அற்புதமாக நடத்திவைதார். ஏ. ரங்கசாமி ஐயங்கார், பாஷ்யம் ஐயங்கார், வரவேற்பு தலைவரான முத்துரங்க முதலியார், நிதியாளரான வா வெள்ளா வேங்கடேசர், தொண்டர் படைத் தலைவரான சஞ்சீவி காமெத், இவர்களுடன் நானும் நிர்வாகியாகச் சேர்ந்து என்னால் இயன்ற தொண்டு செய்தேன். காங்கரஸ் நடைமுறைகளைக் கூர்ந்து கவனித்தேன். எஸ். ஆர். வேங்கடராமையரின் பேரேடுகள் நிரம்பிப் பெட்டி பெட்டியாக நோட்டுகளும் நிரம்பக் கண்டேன். பணத்தின் நவரச நாடகங்களையும் கண்டேன். நான் இயற்கை மகாநாடு, இளைஞர் மகாநாடு, மாதர் மகாநாடு, ஜீவரக்ஷண மகாநாடுகளில் பங்கு கொண்டேன். முத்துரங்க முதலியர்(இயற்கை மகாநாட்டிற்கு இடமும், இயற்கை வைத்தியசாலைக்கு ஒரு கொட்டகையும் தந்து எனக்கு வேண்டிய உதவி செய்தார். அந்த நன்றியை நான் எக்காலமும் நினைப்பேன். இப்போது மந்திரியாயிருக்கும் பக்தவத்ஸலமும் எனக்கு நல்ல சமயங்களில் அரிய துணை செய்தார். காங்கரஸ் பந்தல் மலைபோல் எழுந்தது. அங்கே தலைவர் மேடை, பிரசங்கமேடை. ஒலி பெருக்கிகள், விளக்கணிகள், பிரதிநிதிகளுக்கும் பார்ப்பவருக்கும் தக்க இடவசதிகள், வாயில்களில் தொண்டர் பாதுகாப்புடன் பக்கா ஏற்பாடுகள் செய்திருந்தனர். பெரிய பந்தலுக்கருகே காரியாலோசனைக் கொட்டகையிருந்தது. காரியாலயம், போஜனசாலை, குளிக்க அறைகள், மல அறைகள், பிரதிநிதிகள் ஜாகை, தொண்டர் ஜாகை, காங்கரஸ் அலுவலகம், நீதிபதி நிலையம், தொண்டர் அணிவகுப்பு நிலையம், வைத்தியசாலை, தபால்தந்தி நிலையம், ரயில்வே நிலையம், பல மகாநாடுகளுக்கும் பந்தல், இந்தியாவின் தொழிற் செல்வமும் கதர்க்காட்சியும் விளங்கும் காண்காட்சி எல்லாம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தன. அம்ஜிக்கரைப் பொட்டல் பட்டணமாய், அதில் காங்கரஸ் கொடி பறந்தது. ஸ்ரீநிவாசையங்கார் மாலையில் வந்து சுற்றிப் பார்க்கும்பொழுது, "பொட்டலில் பூரண சுதந்தர நகரம் எழுந்துவிட்டதே...என்பேன். "பூரண சுதந்தரத் தீர்மானம் நிறைவேற்றியே தீருவேன்" என்பார். அவர் மனம் அதில் வேலை செய்தது.

நெருக்கடியான காலம்: வடக்கே முஸ்லிம் வாள்வீச்சு; தெற்கே திராவிட வாய்வீச்சு. ஆதலால் எல்லாரும் ஒப்பிய டாக்டர் அன்ஸாரியைத் தலைவராக்கினர்; முத்துரங்க முதலியாரை வரவேற்புத் தலைவராக்கினர். காங்கரஸுக்கு மஹாத்மா முதல் மாளவியா வரையில்

எல்லாத் தலைவர்களும் வந்தார்கள். அனைவருடனும் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. இந்தியாவையே காங்கரஸ் நகரில் சந்தித்தேன். அதன் வர்ணனை பிறகு. இப்போது இளைஞர் மகாநாட்டிற்கு வாருங்கள்.

277. சாதுவாஸ்வானியுடன்

இளைஞர் மாநாட்டிற்கு சாதுவாஸ்வானி தலைமை வகித்தார். நான் முதலில் சமுஸ்கிரதத்தில் தோத்திரம்பாடி, கீதைபாடி, மகாநாட்டைத் தொடங்கினேன். வாஸ்வானி என்னைத் தழுவிக்கொண்டு "தங்களைக் கண்டு மகிழ்கிறேன், நமஸ்தே" என்றார். அவர் என் அரிய நண்பரானார். வாலிபர் இயக்கம் (யூத் லீக்) பற்றி இனிய குரலில் இந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசினார். இளைஞர் சங்கம்கூடி தேசசேவையும் தீனசேவையும் செய்ய வேண்டும். ஒரு நாட்டின் செல்வம் இளமைச் செல்வமே என்பது பேச்சின் சாரம். கோபால கிருஷ்ணன், பிரமசாரி ராமசந்திரன், சத்யநாராயணன், சுந்தரம் ஆகியபலர் பேசினர். ராமமூர்த்தி சாண்டோ "பிசிகல் எச்சர்சைஸ்" பற்றி வெளுத்துவாங்கினார். சாண்டோவுடன் நான் நெடுநேரம் தெலுங்கில் அளவளாவினேன். "நண்பரே, உமக்குப் பலம் செல்வம் புகழ் எல்லாம் உள்ளன. மன்மகிழ்ச்சியுண்டா! வாழ்வில் திருப்தியுண்டா?" என்று கேட்டேன். "அதுதான் இல்லை; தேகபலம் தள்ர்கிறது. செல்வம் கரைகிறது. புகழ் மங்குகிறது. இவை இந்த உடலுடன் போய்விடும். தங்களைப்போன்ற பக்தியும் சித்த சுத்தியும் பரமபாக்யம்" என்றார் பலசாலி. சாதுவாஸ்வானி சென்னையில் ஒரு மாதம் தங்கினார். நான் அவருடன் நெருங்கிப் பழகினேன். இளைஞர் இயக்கத்தில் ஈடுபட்டேன். கீதாப்பிரசாரம் செய்தேன். வாஸ்வானி கிருஷ்ணபக்தர். இருவரும் காலை கீதை படித்தோம். மாலை பொது விஷயங்களைப் பேசினோம். அவர் இனிய பேச்சாளர், பரமசாது. தூய பிரமசாரி, கருணைக்கடல், ஏழைகளின் துயரம்கண்டு இரங்கும் தயாளு, படாடோபமேயில்லாத எளிய தூய நடையுடையினர். ஒரு நீண்ட ஜிப்பா, தலையில் காந்திக் குல்லா, இடுப்பில் ஒரு கதராடை இவையே அவர் உடுப்பன. சப்பாத்தி தற்காரி கனிகள் பால் இவையே உணவு. கண்ணன் குழலும் கிறிஸ்துவின் சிலுவையும், புத்தரின் சாந்த முகமும், குருநானக்கின் சமரஸமும் அவருக்குப் பிரியமானவை. காந்தியின் அஹிம்ஸா தர்மத்தில் அவருக்கு அபார நம்பிக்கையுண்டு. நான் சாதுஜீ என்று வணங்குவேன், அவர் நான் சாதுதாஸ் என்று பணிவார். பெருமையின் பணிவு அருமையாகும். வாஸ்வானி நிரம்பப் படித்தவர், அவர் பஞ்சாப் கல்லூரித் தலைவராயிருந்தார். ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர் அனைத்தையும் துறந்து, கீதையைக் கையில் எடுத்துக்கொண்டு ஜனசேவைக்குக் கிளம்பினார். அப்போது பலர் அவரைக் கேலிசெய்து இகழ்ந்தனர். பிற்காலம்

புகழ்ந்தனர். "தீனசேவையே என் அரசியல்; அன்பே என் செல்வம், பராசக்தியே துணை" என்பார் சாது. அவரை ஆண் மீரா என்னலாம் அவ்வளவு கிருஷ்ணபக்தி! இரண்டு செப்புக்காசுடன் அவர் மீரா கல்லூரி தொடங்கினர். இப்போது அது வளம்பெற்று விளங்குகிறது.

வாஸ்வானி என் ஏகாந்த மாளிகையில் தங்க ஏற்பாடானது. அவர் வருவதற்குள் நான் ஸ்வராஜ்யா ஆசிரியராகி அங்கேயே வசித்தேன். அவரும் கணேசர் வீட்டில் அமர்ந்தார். அவர் நூல்களை காப்பிக் கொட்டை கணேசரே அச்சிட்டார். அவர் எனது நூல்களையும் கேட்டார். ஒருநாள் கடற்கரையில் அதற்கேற்ற ஒப்பந்தங்கள் பேசினேம். வாஸ்வானி சென்றபிறகு அவரை நான் காணமுடியவில்லை. வாஸ்வானி எங்கே பேசினாலும் என்னையும்கூட அழைத்துச் சென்றார். முதலில் ஜீவரக்ஷணப் பிரசாரசபையில் பேசச் செய்தோம். பிறகு மூல்டானி சங்கம், ஆரியசமாஜம், இந்து உயர் பள்ளி, இந்தி சபை, கோகலே ஹால்களில் அவரது தங்கமணிக் குரல்கேட்டது. கோகலே ஹால் கூட்டத்தில் நானும் 'சக்தியை வளருங்கள்' என்று பேசினேன். ஸர் சி. பி. ராமசாமி ஐயர் தலைமை தாங்கினர்.

"சக்தியை வளருங்கள். ரிஷி ஞானமே ஞானம், சாதனத்தால் அதைப்பெறுங்கள். தியாகசேவையே ஜன்மசாபல்யம். சாதிமத வாதங்களைவிட்டு, எல்லாரும் உள்ளன்பில் ஒன்று சேருங்கள். பாரத சக்தி முழக்கம் செய்யுங்கள்" என்பது அவர் பேச்சின் சாரம்.

ஆம்; பாரதசக்தியை அவருக்கு விளக்கினேன். மகாகாவியக் கதைகேட்டு வியந்து பாராட்டினர். பாரதசக்தி என்ற பத்திரிகை நடத்த வேண்டும் என்றார். சுத்தமே சக்தி, சுத்தமே முக்தி, பாரத சக்தியான யோகசக்தியே உலகை உய்விக்கும் என்பது எங்கள் உறுதி. ஸ்வராஜ்யாவில் அவரைப்பற்றிப் பல கட்டுரைகள் எழுதினேன். நான் சக்தி நிலயம் நடத்தியதைச் சொன்னேன். சாது சென்னையில் சக்தி ஆசிரமம் காணமுயன்றார். டாக்டர் லக்ஷ்மீபதி தமது ஆவடி ஆரோக்கிய ஆசிரமத்தையே தருவதாகச் சொன்னார். எல்லாரும் அங்கே சென்றோம். பிஷக்ரத்னம் லக்ஷ்மீபதி எனது அரிய நண்பர்; இயற்கை மகாநாட்டிற்குத் துணை செய்தவர். அவர் அல்லோபாதி பட்டம்பெற்று ஆயுர்வேதந்தேர்ந்து, தாமே மூலிகை மருந்துகள் செய்து செழித்தார். இயற்கை வைத்தியத்திலும் அவருக்கு விருப்பம். ஆவடியில் அவர் நாட்டிய ஆரோக்ய ஆசிரமத்திற்கு நான் அடிக்கடி சென்று வந்தேன். அவர் மனைவி ருக்மணி பொதுநல ஊக்கம் நிரம்பிய தேசபக்தை. ஆவடிக்கருகே பெரிய ஏரியுண்டு; அதில் நான் மணிக்கணக்காக ஜலஸ்தம்பனம் செய்து கொண்டே தியானிப்பேன். சாது வந்த நாளும் அப்படிச் செய்தேன். பிறகு சாது யுவர் சங்கம் பற்றியும் சக்தி ஆசிரம நோக்கங்கள் பற்றியும் பேசினர். நான் கீதையை ஆதாரமாகக்

கொண்டு யோகசக்தி பற்றிப் பேசினேன். ஆசிரம நிர்வாகிகளுள் என் பெயரும் உண்டு. சாது வாஸ்வானி விடைபெற்றபோது, "இரண்டுள் ளங்களில் துடிக்கும் அன்பு பாரதசக்தியாகப் பரிணமிக்கட்டும்" என் றேன். தமது நூல்களை எனக்களித்து, "அன்பு சக்தியாகுக" என்றார் சாது. அவர் என் வாழ்வில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கினர். யோகத்துடன் பொதுநலம் புரியத் தூண்டினார். அவர் நூல்களை யெல்லாம் நான் கற்றுப் பயன்பெற்றேன். Hindu Culture, The Vision of India, Youth and the Nation, My Mother Land, Sikh Sanctuary—இவை அரிய நூல்கள்.

278. மதன்மோகன மாளவியா

ஜீவரக்ஷண மகாநாட்டை கோகலே ஹாலில் இரண்டு நாட்கள் நடத்தினேம். அதற்குவேண்டிய துண்டுப் பிரசுரங்கள் கடிதப் போக்குவரத்துகள் எல்லாம் என் பொறுப்பில் இருந்தன. பல தலைவர் களை அது சம்பந்தமாகக் கண்டு பேசினேன். அவருள் என் மனதைக் கவர்ந்தவர் பண்டித மாளவியாவே. இரவு நெடுநேரம் காங்கிரஸ் காரியசபைக் கூட்டம் நடந்தது. நான் தலைவர் பேச்சையும் பாய்ச் சலையும் பார்த்து ரசித்தேன். அதைப் பேச்சு ஸர்க்கஸ் என்னலாம். நான் முந்தி நீ பிந்தி என்று சிலர் வாய்ச்சிலம்பம் வீசினர். "நீயில்லை நானே" என்ற தோரணையில் சிலர் நாப்பறையடித்தனர். மஹாத் மாஜீ எங்கே? அவரும் ராஜாஜியும் ஒத்துழையாமை கோஷ்டியும் மற்றோரிடத்தில் சாந்தமா யிருந்தனர். ஸ்ரீநிவாச ஐயங்காரின் கோஷ் டியே காரிய கமிட்டியில் முதன்மை வகித்தது. பிரகாசம் அன்ன பூர் ணையா ஆகியோர் அவரை எதிர்த்தார்கள். மாளவியா, அன்சாரி, முகம்மதலி சரோஜனி ஆகியோர் நகைச்சுவை ததும்பப் பேசினர். அவர்களாலேதான் கூட்டம் வெற்றிபெற்றது. மாளவியா இரவு பதி னேருமணிக்கே ஜாகைக்கு வந்தார் நான் 'நமஸ்தே' என்று நின்றேன். "ஆயியே மஹராஜ் நமஸ்தே பைடியே" என்று அமர்த்தி இனிய இந்தியில் பேசினர், "நாழியானதே; சாப்பாடானதா" என்று கேட் டேன். "சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே. நீங்கள் நிம்மதியா யிருங்கள்" என்றார். வெந்நீரால் உடம்பு துடைத்துக்கொண்டு, பல கையில் அமர்ந்து சப்பாத்தி சாப்பிட்டுக் கொண்டே பேசினர். "ஜீவ ரக்ஷண மகாநாட்டிற்கு நாளை நான்கு மணிக்கு வருகிறேன்" என்று அலுவலைச் சுருக்கமாக முடித்து, "தங்களைப் போன்ற ஸந்யாசிகள் ஹிந்து தர்மத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்றார். நான் எனது ஸன்மார்க்க சேவைகளைக் சொல்லி, "கீதையும் கையுமாக வடக்கே புறப்படத்தயார்" என்றேன். பிறகு "இந்து சர்வகலா சாலையே நான். அது நான் சேர்த்த ஞானதானம். நமது நாட்டுக்கு வேண்டியது அறிவும் தொழிலும் பலமும் மனோதைர்யமுமே. இந்த நான்கையும் நாம் வளர்க்க வேண்டும். தர்மஸம்பத்தே ஸம்பத்து.

அதன் அடிப்படைமேல் சமுதாயவாழ்க்கையைப் புதிதாக அமைக்க வேண்டும்'' என்றார். நான் 'வாழ்வே யோகமாக வேண்டும்' என்றேன். அவர் பாகவதத்தைப் பொழிந்து, அரைமணி நேரம் ஹிந்து தர்மத்தைக் குறித்துப் பேசினார். பிறகு விடைபெற்றோம்.

மறு நாள் நான்கு மணிக்கு மகாநாடு தொடங்கியது. மாளவியாஜி அஹிம்ஸா தர்மத்தையும் ஸாத்விக ஆகாரத்தையும்பற்றி இரண்டு மணிநேரம் இந்தியில் வெளுத்து வாங்கினார். பிறகு நான் ''உலகில் அமைதி வேண்டுமானால் போர்வெறி நிற்க வேண்டும்; அதற்குக் கொலை வெறிநிற்க வேண்டும். அதற்குக் கொலையுணவு நின்று, எல்லாரும் தாவரமே உண்ணவேண்டும். ஆட்டைக் கொல்கிறவன் ஆளைக் கொல்லக் கத்தி தீட்டுகிறான். கத்தி துப்பாக்கியாகி, அது பீரங்கி ஆகாசகுண்டாகி எல்லாம் உலகை அழிக்கின்றன. உலகவாழ்விற்குப் பசுந்திரு பசுத்திரு இரண்டும் வேண்டும். பசுக்களைக்கொல்லக்கூடாது என்று சட்டமியற்ற வேண்டும்.'' எனப் பேசினேன். என்னைத் தொடர்ந்து பாக்ய ரெட்டியார், மல்லிநாதர், வி. ரங்கசாமி முதலியோர் பேசினார்கள். மறுநாள் விஜயராகவாசாரியாரும் சாதுவாஸ்வானியும் தலைமை தாங்கினர். நான் காந்தியின் அஹிம்ஸாதர்மத்தைப் பற்றிப் பேசினேன். மகாநாட்டிற்கு வந்தனோபசாரமும் கூறினேன். அத்துடன் ஜீவகாருண்ய சபையிலிருந்து விலகி ஸ்வராஜ்யாவுக்குச் சென்றேன். பெண்டிர் மகாநாட்டில் சரோஜினி தேவி பேசக் கேட்டேன். அவர் குரலும் நடையும் ஆங்கிலப்புலமையும் கம்பீரமாயிருந்தன. கூட்டம் முடிந்த பிறகு அவருடன் பத்து நிமிஷம் பேசினேன். அப்போது நான் சென்னையில் மாதர் மறுமணத்திற்காகவும் சம்மதவயது உயரவும் கிளர்ச்சி செய்தேன். விபரம் பிறகு.

279. இயற்கை மகாநாடு

சென்னையில் சிலருக்கு நான் இயற்கை வைத்தியம் செய்தேன். அவருள் டாய்ஸியன் அச்சகத்தலைவர் கென்னத் ஒருவர். இவருக்கு வயிற்றில் பொறுக்கமுடியாத வலியிருந்தது, அச்சு நிபுணரான இவர் உட்கார்ந்து புரூப் திருத்தக்கூட சிரமப்பட்டார். நான் ஒருமணிநேரம் இயற்கைவாழ்வைப் பற்றிப் பேசினேன். உணவை மாற்றச்செய்தேன். மதுமாமிசங்களை முதலில் விடச்சொன்னேன்: விட்டார். பிறகு வெயிலில் வேர்க்க நடந்து, தொட்டி முழுக்கெடுக்கச் செய்தேன். மறுநாள் உபவாசம் போட்டேன். மூன்றுநாளும் உபவாசம். பிறகு குடலை நன்றாகத் தேய்த்துவிட்டுத் தொட்டிமுழுக் காட்டினேன். நாலாம் நாள் இளநீரும் ஆரஞ்சுரசமும் தேனும் சேர்த்துக் கொடுத்தேன். மாலை ஏழுமணிக்கு எனிமாவைத்தேன். குடலழுக்கெல்லாம் வெளியேறி, வயிற்றிலிருந்து சிறிய எலும்புத்துண்டுகள் விழுந்தன. வலி தீர்ந்தது. மறு நாள் நான் "இயற்கை உணவே கொள்வேன்" என்றார். நான் மெத்தக்காளி, காருட், பிஞ்சுவெண்டை, புடல்

கொத்துமல்லிக்கீரை, வெந்தயக்கீரை, முட்டகோஸ் இந்துப்பு, ஜீரகம், மிளகு, எலுமிச்சம்பழம், இஞ்சி: மா, வாழை, பலா, ஆரஞ்சு, பேரீச்சை; தேன், மிந்திரிப்பருப்பு, சாரப்பருப்பு, வால்நட், வாதாமி, நிலக்கடலை எல்லாம் வாங்கிவந்து உப்பும் இனிப்புமாக முப்பதுவகை இயற்கையுணவுகளைத் தயாரித்தேன். கென்னெத், தமது குடும்பத்துடன் அமர்ந்து ருசித்து உண்டார். அவர் மனைவி இசை ஆசிரியை, ஹார்மோனியத்தில் இன்னிசை முழக்கினாள், கென்னெத் கூத்தாடி "இயற்கைவாழ்க! மதுமாமிசம் ஒழிக!" என்று பாடினார். என்னிடம் இந்த இயற்கையுணவுகளை எழுதிவாங்கி, அச்சிட்டு இங்கிலாந்து—நண்பருக்கும் அனுப்பினார். அவர் தமது மாடியில் தட்டிவைத்து மறைவுகள் கட்டி, தொட்டியும் குழாயும் வைத்து மனைமக்களுடன் வெயிலாடி தொட்டிமுழுக்காடி வந்தார். சிறு சிறு தகரக்கொட்டகைகள் போட்டு, மணல்பரப்பி மேலே பாய்விரித்துப் படுத்தார். மின்சார விசிறிச்செலவு லாபம் என்றார். பிறகு "ஸாமி; வேதாந்தம்" என்றார் இரவு தோறும் ஒருமணி நேரம் யோகசித்தியை அடிப்படையாகக்கொண்டு பிரசங்கம் செய்தேன். "ஸாமி, யோகம்" என்றார். யோகாசனம் பிராணாயாமம் பழக்கினேன். இவர் மோடாரிலேதான் நான் சென்னையைச் சுற்றினேன். ஜே. கிருஷ்ணமூர்த்தி பிரசங்கம், ஒரு வெள்ளைக்கார தத்துவஞானி பிரசங்கம் இரண்டிற்கும் சென்றோம். உடனே நான் ஆத்மாவைக் காணவேண்டும் என்றார். "இங்கே காணும்" என்று நெஞ்சைக்குத்தினேன். எப்படி? "இப்படி பேசாமல், வேறுசிந்தையின்றி டக் டக் என்று நெஞ்சத்துடிப்பையே கவனியும்; ஆத்மா புலனாகும்" என்றேன். இந்த நண்பர் எனக்கு நூறு ரூபா தந்து, "ஸாமி இயற்கை வைத்தியம் செய்யுங்கள்" என்றார்.

அதேசமயம் எனது நண்பர் சென்னை காங்கிரஸில் இயற்கை மகாநாடு நடத்தச் சொன்னார்கள். பைரவமூர்த்திகாரு என்னை வரவேற்புத் தலைவராக்கினார். இருபது தொண்டரைத் தந்தார். எல்லாரையும் சஞ்சீவி காமத் உதவியால், காங்கரஸ் தொண்டராக்கி, இடம் உணவெல்லாம் தந்து, மகாநாட்டிற்கும் பயன்படுத்திக்கொண்டேன். இந்து, சுதேச மித்திரன், ஸ்வராஜ்யா, டுடே ஆகிய பத்திரிகைகள் நான் இயற்கை வைத்தியம்பற்றியும மகாநாடுபற்றியும் எழுதிய கட்டுரைகளைத் தொடர்ந்து அச்சிட்டன. பெஜவாடா நாகரோபாத்தில் கட்டுரை எழுதினேன். ஆதலால் மகாநாட்டிற்கு இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் சுமார் நூறுபேர் வந்தனர். இயற்கை வைத்திய நேயர் ஆயிரத்திற்குமேல் வந்தனர். முத்துரங்க முதலியார் மகாநாட்டிற்கு இடமும் வைத்தியசாலைக்கு இடமும் தந்தார். டாக்டர் லக்ஷ்மீபதி, வானமாமலைப் பிள்ளை, P. D. ராஜு முதலியோர் வைத்தியக் கருவிகள் உதவினர். சந்தாவும் தந்தனர். டாக்டர் நம்பியார் பிரதிநிதிகள் இருக்கத் தமது மாளிகையைத் தந்துதவினார். டாக்டர் கிருஷ்ணராவ், சாலமன், ஓமியோபதி

வேங்கடாசாரியார், கிருஷ்ணராவ், D. ராமகிருஷ்ணராவ், கே. எல். சர்மா, ராமச்சந்திரன், பைரவமூர்த்தி, புத்ஸா வேங்கடராமையா, வைஷ்ணவதாஸர், வேபா ராமேசம் முதலியோர் மகாநாட்டில் பேசினர். ஸ்வராஜ்யா நிர்வாகி குமாரசாமி செட்டியார் செய்த உதவியை மறக்க முடியாது. சென்னையில் பல பிரமுகரிடம் என்னையும் அழைத்துச்சென்று ஐந்தைந்து ரூபா சந்தா வசூலித்துத் தந்தார். பிரதிவாதி பயங்கரம் அனந்தாசாரியார், வானமாமலைப் பிள்ளை சுராஜ்மல் லல்லுபாய் மூவரும் பதினைந்து ரூபா தந்தனர். கோபதி நாராயணசாமி, சாமி வேங்கடாசலம், பிரகாசம், திரு. வி. க. நெல்லையப்பர் முதலியோர் ஐந்தைந்து தந்தனர். முல்டானி ஜஸ்வந்த்சிங் ஒரு டின் ஆடாமாவும் பத்து ரூபாயும் தந்தார். இப்படி சுமார் இருநூறு ரூபா வசூலானது. பிரதிநிதிகளுக்கு இயற்கை விருந்து, மாலைகள், இடவசதி, வண்டிச்சத்தம், மகாநாட்டுச் செலவு, அச்சுச்செலவு, கடிதச் செலவுகள் சேர்ந்து 205 ரூபா செலவு. ஐந்து ரூபாதான் கைப் பொறுப்பு. மகாநாடு வெற்றிபெற நடந்தது.

மகாநாட்டு அலங்காரங்கள், சித்திர விளக்கங்கள் எல்லாம் தேவகோட்டை வேங்கடராமன் அழகாகச் செய்து முடித்தார். வைத்தியும் கூட இருந்து உதவினான். சூரியக்கொடி உயர்த்தினோம். அதன் நடுவே ஓம் சுத்த சக்தி மந்திரம் பளிச்சிட்டது. இயற்கைப் பொருட் காட்சிக்குப் பலர் அரிய சாமான்கள் அனுப்பினர். டாக்டர் வானமாமலையும், லக்ஷ்மிபதியும் பொருட்காட்சியை அமைத்தார்கள். லக்ஷ்மண சர்மா, வானமாமலை, இயற்கைதாஸர், நான், எச். எல். சர்மா முதலியோர் இயற்கை வைத்தியசாலையில் பணிகாத்தோம். லக்ஷ்மணசர்மா பிள்ளைகள் தியாகு காமேசன் மணி மூவரும் என்னுடனேயிருந்து வேண்டிய காரியங்களை ஊக்கமாகச் செய்தனர்; அப்படியே பாமணி ராமச்சந்திரனும். இயற்கை உணவு தயாரிப்பதில் எல்லாரும் மளமள வென்று பங்குகொண்டோம். ஒருமணி நேரத்தில் நூறுபேருக்கு உணவு தயார்.

மகாநாட்டுக்கு நான் நமது தமிழ்நாட்டு இயற்கை வைத்தியப் புலவரான லக்ஷ்மணசர்மாவையே தலைவராகத் தேர்ந்தேன். பெஜவாடா நண்பர் கல்கத்தா இயற்கைப்பத்திரிகை ஆசிரியரான ராகால் சந்திரசடர்ஜியைத் தேர்ந்து அவரும் ஒப்புக்கொண்டு மகனுடன் வந்தார். சர்மா அவரையும் அவர் மகன் நிர்மல் சந்திர சடர்ஜியையும் சென்ட்ரல் ஸ்டேஷன் சென்று மாலைசூட்டி அழைத்து வந்தார். இருவரும் மலேரியாவுடன் வந்து படுத்தனர். ராகால் சந்திரர்முகம் பிணக்களையானது. நம்பியார் வீட்டு மாடியில் அவர்களைப்படுக்க வைத்தோம். நிர்மல் சிறிது குணமானார்; ராகால் நினைவுமறந்தார். காப்டன் கணபதிராயை அழைத்துப்பார்த்தோம். இயற்கை வைத்தியத் தலைவருக்கு அல்லோபதி வைத்தியர் சிகிச்சை செய்ய நேர்ந்ததே வெட்

கம்! ராகாலே பதமாக மோட்டாரில் வைத்து, மகாநாட்டிற்கு சர்மா அழைத்து வந்தார். அப்போது தான் பைரவமூர்த்தி கொடியேற்றினார். நான் பக்கவாத்யங்களுடன் அரைமணிநேரம் இயற்கை கீதங்கள் பாடினேன். தலைவரை நாற்காலியில் அமர்த்தி, ஆவேசமாக வரவேற்புரை படித்தேன். கென்னெத் அனிபெசண்டு, அருண்டேல், முதலியோரும் காங்கரஸ் தலைவரும் வந்திருந்தனர். ராகால் பேசமுடியவில்லை. அவர் பேச்சை சர்மாவே படித்தார். அவரே முடிவில் நான் விரும்பியபடி தலைமை வகித்தார். அவர் மளமளவென்று படம் பிடிக்கச் சொன்னார். இரண்டு கூட்டப் படம் பிடித்து, தலைவரை வீட்டிற்கொண்டு சேர்த்தோம். மறுநாள் அவர் காலம் சென்றார். மாடியிலிருந்து அந்தப் பெரிய உடலை டோலி கட்டி வெகு சிரமப்பட்டுக் கீழே இறக்கினோம். கீதாபாராயணத்துடன் அதை மயானத்திற் கொண்டு எரித்து, சாம்பலை மகனிடம் தந்து கல்கத்தாவுக்கு அனுப்பினோம். சர்மா கூடச் சென்றார். சர்மாவின் சமயோபகாரம் அற்புதமானது. இந்தச் சம்பவம் என்வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்டது. உடல் இருக்கும்போதே மளமளவென்று யோகசித்தியும் சக்தியும் பெற்று வந்த வினையைத் தீர்த்து, விடுதலை பெற்று, இறைவனுடனே கலந்துபோகும் பணியில் ஈடுபட்டேன். இனி மகாநாட்டிற்கு வாருங்கள்.

தலைவர் சாவைச்சுட்டிக்காட்டி "இயற்கை வைத்தியம் மயானப்ராப்தி" என்று கேலி செய்தவர்களும் வாயடைக்கும்படி மகாநாட்டு நடவடிக்கை நடந்தது. சர்மாவை நாற்காலியில் அமர்த்தினேன். பன்னிரண்டுமணிமுதல் மாலை ஆறுமணிவரையில் பிரசங்கமும் இயற்கை வைத்தியக் காட்சிகளும் நடந்தன. பல மேதாவிகள் பேசினார்கள். சர்மா தொட்டி வைத்தியம்பற்றி வெளுத்து வாங்கினார். சபையோர் கேட்ட கேள்விகளுக்கு பட் பட் என்று பதில் வீசினார். பிரமசாரி சத்யநாராயணன் யோகாசனம் செய்தார், ராமச்சந்திரன் விளக்கம் கூறினார். அன்னிபெசண்டு இதைக்கண்டு வியந்தார். ஆ. எஸ். ஆசாரியார் ஜலவைத்தியம் பற்றிப் பேசினார். டாக்டர் கிருஷ்ணராவ் தன்வந்திரியின் மூலிகை வைத்தியம் பற்றி ரசமாகப்பேசினார். புத்ஸா வேங்கடராமையர் முகக்குறிகள் பற்றியும் வர்ணவைத்தியம் பற்றியும் பேசினார். டாக்டர் எச். எல். சர்மா சூரிய சிகிச்சைபற்றி வர்ணக்கண்ணாடிகளுடன் பேசினார். வானமாமலைப்பிள்ளை தமது ஆவிமுழுக்கு யந்திரத்தை வர்ணித்து, காய்ச்சல் நிவாரணம் பற்றிப் பேசினார். டாக்டர் சாலமன் மணல் படுக்கைப்பற்றி, துவ்வூரி ராமகிருஷ்ணராவ் இரத்த சுத்திபற்றி, டாக்டர் பி. டி. ராசு தமது கருவிகளைக்கொண்டு ஜலதோஷசிகிச்சைபற்றி தமாஷாகப்பேசினார், முரஹரிராவ் இயற்கை உணவுபற்றி, பி. எஸ். கோபாலராவ் பச்சையுணவுபற்றிப் பேசினார். அப்போது வைஷ்ணவதாஸர் நீதிபதி ராமேசத்தை அழைத்து வந்தார். உடனே சண்டமாருதம் தடதட

சடச்சடவென்று பொழிந்தது. சத்துணவைப்பற்றி சூருவளிநடையில் ஒருமணிநேரம் ராமேசம் பேசினர். ராமேசத்தை உபசரித்தனுப்பிய தும், பண்டிதை அசலாம்பிகையைப் பேசச்சொன்னேன். காளமேக மாகப் பொழிந்து தீர்த்தார் அம்மையார். தமிழ் அறியாதவரும் வியந்து போற்றினர்கள். நான் இயற்கை நிலையம் காணவேண்டும் என்று பேசித் தீர்மானம் கொண்டுவந்தேன்.

பெஜவாடா நண்பர் ஆமோதித்து அங்கே நிலயம் கண்டு நான் நடத்த வேண்டும் என்று தீர்மானித்தனர். பிறகு பல தீர்மானங்கள் விவாதத்திற்கு வந்தன. இயற்கைதாஸர் உலக்கைத் தீர்மானத்தை வற்புறுத்தி, வைடமின் அரிசிக்கடை திறக்கவேண்டும் என்றார். அப் படியே திறந்துவைத்தோம். ஆறுமாதம் நடைபெற்றது. பள்ளிக் கூடங்களில் இயற்கை வைத்தியம் கற்பிக்க வேண்டும், மில் அரிசி, வெள்ளைச்சர்க்கரை, டப்பா மருந்து, காப்பி டீ புகையிலை இவை ஒழிய வேண்டும். சத்துணவு மளிகை தொடங்கவேண்டும், இயற்கை வைத் தியக்கல்லூரி நாட்டிப் பட்டந்தர வேண்டும், குத்தம்மையை ஒழிக்க வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேறின. முடிவில் நான் பிரகி ருதி ஆஸ்ரமத்திற்கு நடைமுறைகள் கூறி பிரதிநிதிகளுக்கும் சபைக் கும் வந்தனம் சொல்லி, தேவிபூஜை செய்து, மங்களம் பாடினேன். கென்னெத் "மகாநாடு மிகவும் வெற்றிபெற்றது" என்று மெச்சினர்.

அன்றிரவு எல்லாரும் இயற்கை விருந்து நடத்தினேம். ராமேசம் அதற்குத் தலைமை வகித்தார். எல்லாம் பச்சை உணவுகளே. உட லுறுதியில் அவற்றைக்காண்க. தித்திப்பு ஐந்து, உப்புவகை ஐந்து தந்து, கனிரசம் ஒருகோப்பை தந்தோம். கென்னெத்திற்கும் அதே உணவு தந்தேன். ரசித்துண்டார். பிறகு பிரதிநிதிகள் கூடி என்னை அகில இந்திய பிரகிருதி சங்கத்தின் (All India Naturopathie Association) தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். சர்மா, பைரவமூர்த்தி, ஹனுமையா, ராமேசம் எல்லாரும் அமோதித்தனர். நான் பைரவமூர்த்தியைத் துணைத்தலைவராக்கினேன். ஹனுமையாவும் புச்சா வேங்கடராமையா வும் காரியதரிசிகளாயினர். லக்ஷ்மணசர்மா, நிர்மல்சந்திரர் முதலி யோர் நிர்வாகசபையினராயினர். அடுத்த இயற்கை மகாநாடு நெல்லூ ரில நடத்தத் தீர்மானமாகி, என்னை அதற்குத் தலைமைவகிக்க வேண்டி னர். பெஜவாடாவில் பிரகிருதி ஆஸ்ரமம் நாட்டி விட்டார் ஹனு மையா, ஆனுல் நான் போக முடியவில்லை. கடவுள் என்னை வேறு வழியில் இழுத்துச் சென்றார். நான் அங்கே சென்றிருந்தால், பெஜ வாடா குன்றில் தவம்புரிந்துக் கொண்டிருப்பேன். பாரதசக்தி முடிந் திராது. நான் ஒருவருக்கோ ஓர் இடத்திற்கோ ஒரு சங்கத்திற்கோ கட்டுப்பட்டிருக்க முடியாது. எனது பணிவேறு... ஆதலால் கடவுள் "வா இப்புறம்" என்று ஏகாந்தமாளிகைக்கே அழைத்தார். சென் னையிலிருந்தே ஏராளமான இயற்கை சம்பந்தக் கடிதங்களுக்குப்பதில்

எழுதி, வைத்திய சேவைகளையும் நடத்தினேன். வைஷ்ணவதாஸர் மைலாபூரில் சத்துணவுமளிகை நடத்தினர். நான் பெஜவாடா கல்கத்தா பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிவந்தேன். நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்தபோதெல்லாம் இயற்கை முறைகளைப் பொது ஜனங்களுக்கு விளக்கினேன். உணவுவகைகளைச் செய்து காட்டினேன். அவையெல்லாம் பத்திரிகைகளில் வந்தன. இங்கே விரித்தால் பெருகும். அடுத்த படலத்திற்குத் தாவுகிறேன்—ஸ்வராஜ்யசேவை!

கஎ. ஸ்வராஜ்ய சேவை

280. காங்கிரஸ் மேடை

சென்னை காங்கிரஸ் நடக்கிறது. ஒலிப்பெருக்கிகள் பேச்சலைகளை வீசுகின்றன. மேடைதலைவர்களுடன் நான் சுபாஷ்போஸ் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். ஜவஹர்லால் அவருக்கு அடுத்திருக்கிறார். தேசீயக்கொடியை அவரே காலையில் உயர்த்தி, "இந்தக் கொடிக்கு உயிர்தருவோம்" என்று வீறிட்டார். கதர்க்கண்காட்சியை காந்திஜி திறந்தார். அதற்கே ராஜன்பாபு, ராஜாஜி, ஜம்னுலால் முதலிய காந்தி பக்தர் வந்து சென்றனர். டாக்டர் அன்சாரி தொண்டர் படைசூழ ஜயகோஷத்துடன் மேடையேறினர். சரோஜனி, முகம்மதலி சௌகதலி, சியாமசுந்தர சக்ரவர்த்தி, பட்டாபி, கொண்டவேங்கடர், மாளவியா, ஸ்ரீநிவாசர், சத்தியமூர்த்தி, ஷாபிமுகம்மது, யாகுப் ஹாஸன், பஷீர் அஹமது, சுபாஷ் முதலியோர் மேடைமேல் அமர்ந்தனர். முதன்மையான பிரதிநிதிகள் பின்னல் அமர்ந்தனர். சுமார் 2694 பிரதிநிதிகள் வந்தனர். கமலாதேவி பெண்தொண்டருடன் "ஜயபாரத துமிகோஸல" என்று கீதம்பாடினள். எங்கள் தொண்டர் ஜனகணவும் வந்தேமாதரமும் பாடினர். முத்துரங்க முதலியார் வரவேற்புரை படித்தார். தலைவர் அன்சாரி தெளிவாகப் பேசினர். மஹாத்மாவைப் போற்றினர். "ஒத்துழையாமை நம்மைக் கைவிடவில்லை. நாமே ஒத்துழையாமையைக் கைவிட்டலைகிறோம். காந்தியின் தீர்க்கதரிசனமே சுதந்தரம்தரும். நாமெல்லாம் வகுப்பு வாதத்தைவிட்டு ஒற்றுமையாயிருந்து காங்கரஸ்கொடிபிடித்துத் தியாகம் செய்து சுதந்தரம் பெறுவோம்" என்றார். மறுநாள் தீர்மானக்கூட்டம் தொடங்கும்போது சத்தியமூர்த்தி என்னை "பாடும் பாரதி ஜம்மென்று, போம்மேடைக்கு" என்றார். ஷாபி முகம்மது என்னை மேடையில் மைக்முன் நிறுத்தினர். நான் பதினைந்து நிமிஷம் எனது தேசியகீதங்கள் இரண்டு பாடினேன் :

> வீரர் ஆவேசத்தோ டெழுவோம்
> வெற்றி இங்கே பெறுவோம்.
> யாருக்கும் நாம்குடி அல்லோம்—சக்தி

அன்னையின் ஆட்சியில் உள்ளோம்—இந்தத்
தாரணியே எதிர்த்தாலும்—ஆத்ம
சக்தி இருக்குது வெல்வோம்...
கோழைத்தனங்களை விடுப்போம்—கொடுங்
கூற்றினுக்கும் உதை கொடுப்போம்
வாழையடி வாழை யாக—தாயின்
மணிக்கொடியினைப் பிடிப்போம்...

என்று பாடும்போது அப்ளாஸ் கிடைத்தது. சத்யமூர்த்தி "நன்றாயிருக்கிறதே; இதெல்லாம் அச்சுப்போட்டுத்தாருமே" என்றார். தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர்கள் அழகாகப்பேசினார்கள் முஹம்மதலியின் ஹாஸ்யம் ஜவஹரின் உணர்ச்சி, சரோஜனி, ஆவேசம் மாளவியாவின் இலக்கியம், பட்டாபியின் கணக்கு, சியாமசுந்தரர் அனுபவம், ஸ்ரீநிவாசையங்காரின் சீனிவெடிகளோடு தீர்மானங்கள்நிறைவேறின. அவற்றுள் சைமன்கமிஷன் பகிஷ்காரம், பூர்ண சுதந்தரம் ஆகிய தீர்மானங்கள் பலத்த விவாதப்புயல்களுடே நிறைவேறின. "இந்தத்தீர்மானம் தோற்றால் நான் காங்கிரஸை விலகிவிடுவேன்" என்று கண்டிப்பாகச் சொன்னார் ஐயங்கார். அவர் எண்ணமே பலித்தது. அவர் குறித்த சுதந்தரமே இப்போது வந்துள்ளது. சுபாஷ் அதை மிகமிகப் போற்றி பலமான கரகோஷம் செய்தார், முடிவில் ஜவஹர்லால் அரைமணிநேரம் ஆங்கிலத்தில் அழகாகப் பேசினார். அவர் அப்போதுதான் ரஷ்யா பிரான்ஸ் முதலிய நாடுகளைச் சுற்றிவந்தார். அவர் பேச்சில் சோவியத்மணம் வீசியது. பெசண்டம்மையும், தொழில் மெம்பரான மார்டி ஜோன்ஸும் ஜவஹர்பேச்சை ரசித்துக் கேட்டனர். "உங்களுக்கு எதுவேண்டும்: அடிமை விலங்கா, ஆண்மையான பூரணசுதந்தரமா" என்று அவர் கேட்டபோது, சபைமுழுதும் "பூரண சுதந்தரம்" என்று கரகோஷம் செய்து கூவியது. முடிவாகத் தொண்டர் மகாநாட்டில் சரோஜனி பேச்சு உணர்ச்சிப்புயலின் காவியமாயிருந்தது. இவ்வாறு சென்னை காங்கிரஸ் எனக்கு அனுபவக் கழகமாயிருந்தது. அரசியல், பொருளாதாரம், தொழில், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், சமுதாயம், சீர்திருத்தம், பெண்மை, ஆண்மை, வீரம் ஆகியதுறைகளில் உலகம் எந்த நிலையில் இருக்கிறது, இருக்க வேண்டும் என்பதைச் சென்னை விளக்கியது.

281. ஸ்வராஜ்யா ஆசிரியர்

காங்கரஸ் நகரில் நான் இப்படித் தொண்டு செய்தபோதே குமாரசாமி செட்டியார் ஸ்வராஜ்யாவுக்குக் கட்டுரைகள் எழுதச் சொன்னார். காங்கரஸ் நடப்பு முழுதையும் நானே விமர்சனம் செய்தேன். எல்லாரும் எனது நடையை விரும்பினர். பிரகாசம் "ஸ்வாமிஜி நடத்துங்கள் ஸ்வராஜ்யாவை... இந்த மாடியிலேயே இருங்கள்"

என்று தாம் இருந்த மாடியை எனக்குத் தந்தார். ஏகாந்தமாளிகையை விட்டு ஸ்வராஜ்யா ஆபீஸ் மூன்ரும் மாடியில் காற்ருட வசித்தேன். பிரகாசத்தின் தியாகத்தில் எனக்குப் பெருமதிப்புண்டு. ஆதலால் நானும் தியாகபுத்தியுடன் பத்திரிகையை நடத்தினேன். பிராட்வே யில், மிகப்பெரிய மாளிகையில், ஸ்வராஜ்யா காரியாலயம் இருந்தது. முதல்தளத்தில் முன்புறம் இரண்டு லைனேக்கள் வேலை செய்தன. அங் கேயே புருப்பார்க்க இடமுண்டு. அதில் மற்ருெருசரகில் தபால் இலாகாவும் மொச்சியிலாகாவும் உண்டு. பத்திரிகைகளை ஒட்டி அனுப் பும்வேலை அங்கேதான். அடித்தளத்தில் பின்புறம் பெரிய ஆங்கில யந்திரம் ஆங்கிலஸ்வராஜ்யாவை அடித்துத்தள்ளும்.. மற்ருெருசரகில், தமிழ் ஸ்வராஜ்யா அச்சுநடக்கும். அதைத்தள்ளி குழாய்... அச்சுக் கழுவுதல், எல்லாம் அங்கே: இரண்டாம் தளத்தில் படியேறிச் சென் ருல் ஸ்டோர்ரும் துணையாசிரியர் மேஜைகள், கிருபாநிதியின் ஆசிரிய பீடம், இப்புறம் ரமணையா, ஹமீத்கான், செட்டியார் அனைவரும் கணக்கு வழக்கு விளம்பரங்களை நிர்வகிக்கும் அலுவலறைகள் இருக் கும். இதன் பின்புறம் தமிழ் ஸ்வராஜ்யாவுக்கு ஒரு சிறு அறை, அதைத்தாண்டி அச்சுக்கோப்பாளர் அறை இருக்கும். தமிழ் ஸ்வ ராஜ்யாவேலை அங்கேதான் நிறைவேறும். படியேறி மூன்ரும் மாடிக் குச்சென்ருல், சுத்தானந்தரைக் காணலாம். ஒரு கோவணம் கட்டிக் கொண்டு, மின்னல்வேகத்தில் பேனு ஓட்டிக் கொண்டிருப்பார். செய் தித்தந்திகள் தபால்கள், கேள்விகள், புருப்கள் கட்டுரைகள் எல்லாம் பார்த்து, ஓம் என்று ஊதுவார். வேலையாள் ஓடிவந்து வாங்கிச் செல் வான். அப்படியே கொண்டுவர வேண்டியதையும் சிலைப்படியில் வைப் பான். ஒருசத்தமில்லாமல் ஊதலிஞலேயே காரியத்தைச் சாதித்து அவர் தியானிப்பார், கவிபுனைவார், படிப்பார். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, எம். பி. ஸ்ரீநிவாசன், ஆகிய துணையாசிரியர் தேர்ந்த உழைப்பாளிகள். எம். பி. செய்திகளை திட்பநுட்பமாகத் திரட்டித் தருவார். பாமணி ராமச்சந்திரன் என் உணவு சௌகரியங்களைக் கவனித்தார். அவர் சென்ற பிறகு குருகுல மகாதேவன் வந்தான். அவன் புருபும் திருத்தி ஞன். அருகிலேதான் சந்தை, ஆதலால் எனக்கு வேண்டிய கனி கடலை ஏராளமாக வாங்கிவரலாம். மகாதேவனும் என்னுடனே உண்டு யோக சித்திபயின்ருன். ஐந்துமணி முதல் எட்டுமணி வரை யில் நான் நண்பர் மோட்டாரில் சென்று, அரசியல் மேடையிலும் சீர் திருத்தக் கூட்டங்களிலும் சொற்பொழிவேன். மற்ற நேரமெல்லாம் மாடியிலேதான் இருப்பது வழக்கம்—அழகானமாடி; வானும் கடலும் கதிரவனும் காட்சியளிக்கும் காற்ருேட்டமான மாடி. அங்கேயே எனது தொட்டியில் தண்ணீர் கொண்டுவந்து நிரப்பி விடுவேன்—கவலை யில்லை. காலை மூன்றுமணிக்கே எழுந்து அனுஷ்டானங்களை முடித்து, தியானம் செய்வேன். பிறகு கீழே லைனேவில் அடித்த செய்தித்தந்தி கள் வரும். தலைப்பிட்டுத் துணையாசிரியர் மேஜைகளில் விபரம் எழுதி

வைப்பேன். மாமூல்விஷயங்களை கம்பாஸிடர்களுக்குத் தயாராக வைப்பேன். தினசரி அலுவல்களைக் குறித்துக் கொண்டு நடப்பேன். ஐந்துமணிக்குக் குளித்து மேலே வந்து, கீதை யோகசித்தி பாராயணம் நடக்கும். உடனே தினசரிகளையும் தந்திகளையும் புரட்டி, விஷயங் களைக் குறித்துக் கொண்டு தலையங்கங்களை எழுதியெழுதி, கம்பாஸிடர் களுக்கு அனுப்பிக்கொண்டேயிருப்பேன். புரூப் வந்து கொண்டேயிருக் கும். எதையும் அடிக்குமுன் நானே பார்வையிட்டு, உத்தரவு தருவேன். பனிரண்டு மணிக்கெல்லாம் என் வேலை முடியும். பிறகு உடம்பு சுத் தம்செய்து தியானித்து, பாராயணம் செய்வேன். பிறகு உணவு கொள்வேன். காசாசுப்பராவ், ஈச்வரதத்தர். கிருபாநிதி, குமார சாமி செட்டியார் முதலியோர் அங்கே சில நாள் சாப்பிட வரும்போது அரசியல் பேச்சு நடக்கும். காசாவின் ஆங்கிலம் கவர்ச்சியாயிருக்கும். அவர் பேனாதான் ஆங்கில ஸ்வராஜ்யாவிற்குப் பெருமையளித்தது. கிருபாநிதியின் தலையங்கங்களும் கம்பீரமாயிருக்கும். உண்டதும் நண் பருடன் ஒருமணி அளவளாவிய பிறகு சிறிது நூற்பேன். அதன்பிறகு மளமளவென்று எனது கடிதங்களுக்குப்பதில் எழுதித் தபாலுக்கு அனுப்புவேன். நல்ல இலக்கியங்கள் படிப்பேன். நான்கு மணிக்குப் பத்திரிகை வரும். ஒரு முறைபார்ப்பேன். அப்போதுதான் சில அரிய நண்பர் வருவார்கள். துவ்வூரிராமகிருஷ்ணராவ் பி. ஏ. ஷேக்ஸ்பிரயர் மில்தன் கொண்டுவருவார்; நான் படிப்பேன்; கேட்பார். சங்கு சுப்ர மணியன் வருவார். பாரதசக்தி படிப்பேன், அல்லது கம்பன். அவர் இனிமையாக எனது பாடலையும் பாடுவார்; நல்ல மேதாவி. அப் போது அவர் கதர்க்கடையில் இருந்தார். தந்தி வடிவேலு சர்க்கார் விஷயங்களையெல்லாம் அள்ளிவந்து கொட்டுவார். என்னுடன் இயற் கைவிருந்தும் உண்பார். சிலநாள் வைடமின் அடையும் கூட்டும் செய் துண்பதுண்டு; சந்துரு தயாரிப்பார். புருஷோத்தமநாயுடு வந்தால் கிராம நிர்மாணம், வாலிபர் இயக்கம் முதலியபேச்சு நடக்கும். குமார சாமி செட்டியார் வந்தால் சங்கரவேதாந்தம் பேசித்தீர வேண்டும்: கீதை அவர் கையில் இருக்கும்; விவேக சூடாமணியும் படித்தாகவேண் டும். மல்லிநாதர் சமண சாஸ்திர சம்பந்தமாகப் பேச வருவார். வர கவி சுப்பிரமணிய பாரதியார் நாடக விஷயமாகப் பேசுவார்; பி. வி. ஜகதீசையர் சிற்பவிஷமாக, அலெயன்ஸ் குப்புசாமி ஐயர் புத்தகவெளி யீடு பற்றி, இக்னேஷஸ் ஒத்துழையாமை, அண்ணாமலைப்பிள்ளை காங் கரஸ், சித்திரசர்மா ஓவியம், ஹரிஹரசர்மா இந்தி, கோபாலகிருஷ் ணன் யூத் லீக், ராமபத்ரசர்மா வேதக்கலை, சிங்காரவேலு செட்டியார் பொதுவுடமை பற்றிப்பேசுவார்கள். ஒற்றர்களும் தவறுமல்பலவேடம் பூண்டு நுழைந்து என்னைக் கிண்டுவார்கள். நான் அவர்களைக்கிண்டி அனுப்புவேன். துறவிகள் பலர் என்னிடம் வருவதுண்டு. வைரம்முருகேச முதலியார் மோட்டார் கொண்டுவருவார். அதில் அவர் மாளிகைக்குச் சென்றால், நாகரத்னம் அம்மாள் பாட்டுக்கேட்கலாம். ஏராளமான

பயிராகிகள் சங்கம் கிடைக்கும். சில நாகசந்யாசிகள் எனக்கு அரிய யோகரகசியங்களைச் சொன்னார்கள். இமயமலை பாலசந்யாசி ரசவாதம் செய்து காட்டினார். அரிய மூலிகை மருந்துகளும் செய்தார். அக் காலம் அரசியலில் சைமன்கமிஷன் பகிஷ்காரம், தேர்தல் இரண்டே முக்கியம். இரண்டு கூட்டங்களிலும் நான் காந்தியமுழக்கமே செய் தேன். மதுவிலக்கு, கதர், தீண்டாமை ஒழிப்பு, கல்வி, பெண்சக்தி முன்னேற்றம், மாதர்மறுமணம், இந்தி வளர்ச்சி, தமிழ்வளர்ச்சி, பிரம சரியப்பிரசாரம், யோகாசனப் பிரசாரம், சுத்தசங்கம், இயற்கை வைத் தியம்—இத்துறைகளில் நான் பேசினேன். வழக்கம்போலச் சன் மார்க்க சபைகளிலெல்லாம் பேசினேன். சுப்பையாசாமியாரின் சாது சங்கம், தேவாரசங்கம், கிறிஸ்துசங்கம் திருக்குல சங்கங்களில் அடிக் கடி பேசினேன்.

கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் ஒரு மாடியில், சத்தியநாராயணா இருந்தார். தினம் இருபது கல்லூரி மாணவர் வந்து, அங்கே யோகாசனம் பயின்றனர், நான் பிரமசரியக்கலையை விளக்கி னேன். சுத்தசங்கத்தில் ஐந்துவயதுக்குழந்தையும் யோகாசனம் பயின் றது. பிறகு சென்னைக் கல்லூரிகளில் மாணவருக்கு யோகாசனமும் பிரமசரியக்கலையும் விளக்கினோம். பாண்டுரங்க முதலியாரும் எங் களுடன் சேர்ந்து பிரசாரம் செய்தார். புரோக்ரசில் யூனியன் கலா சாலையில் பெரிய கூட்டம் கூட்டி, எல்லாருக்கும் யோகாசனப்பயிற்சி நடத்தினோம். வண்ணாரப்பேட்டை நடராஜ சபையில் நான் அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் சரித்திரம் பக்கவாத்யங்களுடன் செய்தேன். அங்கே தேவாரபஜனை நடந்தது. திருவட்டீசுரன் பேட்டை சச்சிதானந்த சங்கத்தின் ஆண்டுவிழாவில் தலைமை தாங்கி வேதாந்தமும் சித்தாந்தமும், என்பதுபற்றி இரண்டு மணிநேரம் பேசி னேன். பெரம்பூர் தமிழ்நாட்டு இளைஞர் மன்றத்தில் திறப்புவிழாத் தலைமை தாங்கி "தொழில் உலகம்" என்பது பற்றிப் பேசினேன். பதினாயிரம் தொழிலாளர் கேட்டனர். தொழிலாளர் எனக்கு நண்பரா னார். சுதேசமித்திரன் அச்சுத்தொழிலாளர் சங்கத்தில் தலைமைதாங்கி அச்சுத்தொழில் பற்றிப் பேசினேன். புதுப்பேட்டை யூனியனில் சமயசாரம்பற்றிப் பேசினேன். கிறிஸ்துசமய தத்துவங்களை விளக்கி னேன். இந்திப்பிரசாரசபையில் புருஷார்த்தம், நமது ராஷ்ட்ர பாஷை, துளசியும் கம்பனும் பற்றிப்பேசினேன். இந்திப்ரேமி மண் டலியில் அடிக்கடி என்பேச்சு நடந்தது. சமுதாய சீர்திருத்தக் கூட்டங்களில் தவறாது பங்குகொண்டேன்.

282. பெண்ணுரிமைப்பணிகள்.

கோகலே ஹாலில் பெண்டிர் மகாநாடு கூடியது. ஸர். டி, விஜயராகவாசாரியார் தலைமை வகித்தார். டாக்டர் முத்துலக்ஷ்மி காலம்க்அங் பொட்டுக்கட்டொழிப்பு, சம்மதவயது உயர்வுகளுக்கு தம்

மாசோதா கொண்டு வந்து, சட்டசபை உப அக்கிராசனராயிருந்து வாதாடினாள். நான் ஸ்வராஜ்யாவில் அதை ஆதரித்து எழுதினேன். ருக்மணி அருண்டேல், மார்க்ரெட் கஸின்ஸ், ருக்மணிலக்ஷ்மிபதி, அம் புஜம்மாள், சதாசிவையர் மனைவி, கமலாதேவி சடோபாத்யாய, முதலியோர் பெண்ணுரிமைக்காகப் போராடினார்கள். அவர்கள் அன்று ருக்மணி அருண்டேல் பேசியபிறகு என்னைப் பேசச்சொன்னார்கள். நான் ஒரு கற்பனையாகப்பேசினேன் : சிலவரிகள் இங்கே குறிக்கிறேன்.

அன்பர்காள், எனது மீசைதாடியை மறந்து விடுங்கள். என்னைப் பெண் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறேன். ஆனால் பெண்ணுக்குப்பேச வாயும் உண்டோ ? உண்டு. பெண் குரல் ஐந்துகட்டை பேசும். ஆண்குரலைவிடப் பெண்குரலுக்கு சுருதி அதிகம் வேண்டும். சரி நான் பெண்ணானேன் ; அதில் பெருமை கொள்கிறேன். ஏனென்றால் நான் பெற்ற பிள்ளைகளே தேசம், உலகம். எனக்கு ஐந்து வயதாகிறது. நான் பள்ளிக்கூடம் செல்வேன். யாரவது தடுத்தால் சத்யாக்கிரகம் செய்வேன். ஆண்போல் பெண்ணும் படிக்க உரிமையுண்டல்லவா ? எனக்குப்பதினான்குவயதாகிறது. என் அப்பா அம்மா மாப்பிள்ளைச்சந்தையில் ஜாதகக்கட்டுகளை அலசிக்கொண்டிருக்கிறார்கள். நான் நன்றாகப்படித்து எனக்கு விருப்பமான வாலிபனையே காதல் மணம்புரிவேன். மனு அந்தக்காலப் பெண்களுக்குச் சட்டம் செய்தார். பல நூற்றாண்டுகள் ஓடி எத்தனையோ அரசுகளை உருட்டிச் சென்றன. நான் புதுயுகப்பெண்மணி. எனக்கொரு மனச்சாட்சியுண்டு. அதன் படியே நடப்பேன். நான் ஒரு டாக்டர் பட்டம் பெறுவேன். என் வயது, கல்வி, உடம்பு, மனவுணர்ச்சி அந்தஸ்துகளுக்கேற்ற வாலிபன் அதோ வருகிறான்... அவனையே பதினெட்டு வயதில் மணம்புரிவேன். டாக்டர் நானும், அட்வெகேட் அவனும் ஒற்றுமையாகக் குடித்தனம் செய்வோம். பொடி சுருட்டு புகையிலை மதுபானம் போன்ற ஆபாசப்பழக்கங்கள் அவனிடம் இருந்தால் அவற்றை ஒழிப்பேன். அவன் விபசாரம் செய்தால், கண்டித்துத் திருத்துவேன். திருந்தாவிட்டால் சத்யாக்கிரகம் செய்வேன். அவனுடன் பேசமாட்டேன். அவனை முத்தமிடமாட்டேன். என்கணவன் உள்ளும்புறமும் சுத்தமாயிருக்க வேண்டும். விதிவசத்தால் அவன் இறந்துபோனால், மொட்டையடித்து முக்காடுபோட்டு மூலையில் அழச்சொல்லித் தோசை சுட்டுப்போடுகிறார்களே—அந்தக்கொடுமைக்கு உள்ளாக மாட்டேன். நான் தராளமாக மறுமணம் புரிந்து இல்லறமே காப்பேன். எனக்குப் போதியமக்கள் இருந்தால், பொதுநல சேவை செய்வேன். எதற்கும் கலங்கமாட்டேன். நான் தலைநிமிர்ந்தே நடப்பேன். ஆனால் பௌடர் போட்டு லிப்ஸ்டிக் தடவி போலிமினுக்குக் காட்டமாட்டேன். மஞ்சள் நாகரிகமே எனக்குப்போதும். பெண்மையின் கற்பைக்காப்பேன். யாராவது சேட்டை செய்தால் ஒரு அறை வைக்க எனக்குப் பலமுண்டு.

இப்படியே அரைமணி நேரம் ஆங்கிலத்தில் பேசினேன். பெண்ணுரிமைத் தலைவிகள் என்னைப் பல கூட்டங்களுக்கு வந்து பேச வேண்டினார்கள். அடுத்த தடவை கோகலே ஹாலில் பெருங் கூட்டம் கூடியது. நான் தலைமை வகித்து, ஆண் பெண் தத்துவங்களை விளக்கினேன். ஆண் தங்கம்; பெண் அதை நகாசு செய்து விளக்கும் ரத்னாபரணம். ஆண் அன்னம்; பெண் அறுசுவை. இவன் கவி; அவள் கலை. பெண்ணே ஆணை நகாசு செய்யும் சிற்பி என்றதை அருண்டேல் கஸின்ஸ் இருவரும் ரசித்தனர். இந்தியா பெண் சக்தியைக் கலை, திரு, காளி என்று வணங்குகிறது. அடுப்பங்கரை முதல் அரசியல் உலகம் வரையில் பெண்ணின் சக்தி பரவி ஆளுகிறது. அந்தச் சக்தியை அடிமையாக்கினால் நாடே அடிமையாகும். பெண்ணுரிமை நாட்டுரிமை; பெண் சுதந்தரம் தேச சுதந்தரம். பெண்கொடியை இப்போது கொடிய மாமூல் பழக்கங்கள் அரித்துக்கொண்டிருக்கின்றன. கட்டாயத்தாலி, விதவைக் கண்ணீர், கல்வியில்லா மடமை, கட்டைவிரல் சட்டம் முதலிய பீடைகள் ஒழிந்து, ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழ்க! என்றேன். சில எதிரிகள் கலாடாசெய்து சத்தமிட்டனர். சத்தம் அடங்கியபிறகு ருக்மணி அருண்டேல் பாலிய விவாகத்தைக் கண்டித்துப் பேசினார். ஸ்ரீமதி லக்ஷ்மிபதி பெண் கல்வி, பண்டிதை கிருஷ்ணவேணி பெண்பிறவி, டாக்டர் முத்துலக்ஷ்மி சம்மத வயதுபற்றிப் பேசினர். பெண்கள் விழித்தெழுந்து சம உரிமை பெறவேண்டும் என்று அருண்டேல் பேசினார். முடிவில் "பெண்மணிகள் சமுதாய அணிகள். பெண்மை உணர்ச்சியுடன் பேசுகிறேன். நான் பெண்ணானால், இப்போது சட்டசபையின் உதவியில்லாமலே சீர்திருத்தங்களை நடத்திக் காட்டுவேன். சமுதாயம் கொடுமை செய்தால் எதிர்த்துப் போராடி, பெண்ணுரிமைக்கு உயிர் கொடுப்பேன். அடக்குமுறை நடக்கு முறையில்லை. சுதந்தரமே இதந்தரும்" என்று தலைமையுரையை முடித்தேன். எனது நண்பர் "சபாஷ் ஸ்ரீமதி சுத்தானந்தம்" என்றனர். அன்று நடந்த கூச்சலும் கலாட்டாவும் வெறுக்கத்தக்கன. தேவதாசிச் சட்டம்பற்றிப் பேசும்போது சில தேவதாசிகள் தூண்டிவிட்ட கலாட்டாவே அது. அவர்களுக்கு வேண்டிய வாலிபர்கள் சீழ்க்கையடித்து, ரகளை செய்தனர். மற்றொரு கூட்டத்தில், வரதட்சிணைக் கொடுமையை நாடகம்போல் நடித்துக் காட்டினேன்.

இதேசமயம் சில வைதிகப்புலிகள் பண்டித கிருஷ்ணமாசாரியைக் கொண்டு, சுதர்சன் ஹாலில் பிரசங்கம் வைத்தனர். அவர்களும் என்னை அழைத்தனர். தலைமை வகித்தேன். சனாதன தர்மக் கோடையிடியான ஆசாரியார், ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினார். பாலிய மணமே மணம்; மற்றது விபசாரத்திற்குச் சமம் என்றமட்டில் பேச்சு நீட்டினார். கணவனை இழந்தவர் விதவா தருமத்திற்கே லாயக்கு என்றார். சீர்திருத்தங்களை நாசக்கும்பலின் அபத்தங்கள் என்று கண்டித்

தார். அவரது ராகம் போட்ட ஆங்கிலத்தைப் பலர் ரசித்தனர். சீர் திருத்தக்காரர் அவர் கூட்டத்திற்கு வருவதில்லை. ஆதலால் அவர் தாஸர்களிடையே தனிச் செங்கோல் நடத்தினார். நான் ஆசாரியரின் கல்வி கேள்வி, நாவன்மைகளைப் போற்றிப் பேசினேன். "நமது ஆசாரியார் சநாதன தருமத்தை நூதன பாஷையில் பேசினார். சனாதனமான சம்ஸ்கிரதத்தில் பேசினால் இங்கே எத்தனை பேருக்குப் புரியும்? காலத்திற்கேற்றபடி பாஷை மாறுவதுபோல், நடையுடை பாவனைகளும் மாறுகின்றன. தர்மம் இரண்டுவகை; என்றுமுள்ள பண்டறம்; காலத்திற்கேற்ற புத்தறம், யுகதர்மம். இரண்டையும் போற்றினாலே நாம் வாழமுடியும். பழைய ரிஷி தர்மத்துடன் புதிய கலைகளும் சேர்ந்தாலே நாடு முன்னேறும். அந்த முன்னேற்றத்தில் இருபாலாருக்கும் பங்குண்டு. ஏனெனில் இருபாலார் செய்யும் குடித்தனமே உலகம். ஸரஸ்வதியின் கலையும் லக்ஷ்மியின் திருவும் காளியின் வீரமும் மகேச்வரியின் சாந்த கம்பீரமும், மனோன்மணியின் ஆனந்தமும் சேர்ந்தே சக்தி தத்துவமாக முன்னோர் உருவாக்கினர். அதை நாம் காப்பாற்றவேண்டும். ஆசாரியார் இந்தக் கூட்டத்தில் பாலிய விவாகத்தைப் பேசினார். மறுமணத்தைக் கண்டித்தார். ஆனால் இதைப் பெண்சமூகம் ஒப்புமா என்று பார்க்கவேண்டும். இங்கே பெண்கள் இல்லை. சீர்திருத்தக்காரரும் இல்லை. அடுத்த மாதம் கோகலே ஹாலில் பெண்கள் கூடுவார்கள். அவர்களுக்குமுன் வந்து, ஆசாரியார் பேசட்டும். பெண்சக்தி ஒப்பினால் அந்த முடிவை நாம் ஏற்போம். ஏனெனில் இது பொதுஜன வாக்கினால் நடக்கும் யுகம்" என்றேன். ஆசாரியார் ஒப்புக்கொண்டார். அந்தக் கூட்டத்திற்கு டி. ஆர். வேங்கடராமர் வந்தார். அவர் சர்க்கார் தந்த சட்ட மந்திரி பதவியை உதறித் தள்ளியதற்காக சபாஷ் போட்டேன். உருவும் நெட்டை உள்ளமும் நெட்டை பேச்சும் நீண்டது— ஐயரின் சட்டமூளை அபாரம். ஹிந்துதர்ம ஆசாரங்களில் அவருக்கு ஆழ்ந்த பற்றுதல் இருந்தது மகிழத்தக்கது.

கோகலேஹாலில் மாபெரும் கூட்டம்; சென்னைப் பெண்கள் ஏராளமாகக் குழுமினர். மேடையில் பெண்ணுரிமைத் தலைவிகள் வீராவேசமாகக் காட்சியளித்தனர். ஸர். டீ. விஜயராகவாசாரியாரே தலைவர். சீர்திருத்த இளைஞர் பெருவாரியாகக்கூடினர். பத்து வைதிகரும் ஒரு மூலையில் இருந்தனர். ருக்மணி, அருண்டேல், முத்துலக்ஷ்மி வரதராஜுலு நாயுடு முதலிய பீரங்கிகள் சீர்திருத்த முழக்கம் செய்த பிறகு எழுந்தார் கிருஷ்ணமாசாரியார். பத்து நிமிஷம் என்றார் தலைவர். ஆசாரியார் தும்பிக்கையாழ்வாருக்குக் குட்டிக்கும்போதே, அஸ்க் என்று தும்மல், உட்கார் என்று கூச்சல். அவர் தொண்டையைப் புயலாகக் கிளப்பி, "இங்கே பேசிய பேச்செல்லாம் அபத்தம் சாஸ்திர விரோதம், நமது தேசாசாரத்திற்கு ஹானி என்று கூச்சலிட்டார். உட்கார் உட்கார் வெட்கம் வெட்கம் என்று சபை நகை செய்

தது. ஆசாரியார் விடவில்லை. உங்களுக்கே வெட்கம். நீங்கள் என்ன காரியம் சாதிப்பீர்கள். பெண்ணுக்கு எட்டு வயதிலேயே தாலி முடிக்க வேண்டும். அதுவே சாஸ்திரம். விதவை மறுமணம்புரிந்தால் விப சாரமாகும். அது பாபம்'' [சைசை உட்கார்]. நாள் நட்சத்திரம் பொருத்தம், புரோகிதம், அக்னி சாட்சியாகக் கலியாணம் என்னும் போதே கலாடாக் கும்பல் ''வைதிகப் பஞ்சாங்கம் போ வெளியே!'' என்று ஆரவாரித்து, அவர் மேலேவேட்டியில் கைபோடத் தொடங்கி விட்டது. பாபம்; அவரை நான் மரியாதையாக வெளியே அழைத்துச் சென்றேன். ஹைகோர்ட்டு வரையில் அவருக்கு ஆபத்துத்தான். பார்த்தீர்களா கலிகால வாலிபர் உணர்ச்சியை; யுக தர்மம் அப்படி யிருக்கிறது என்று அவரை பஸ் ஏற்றி அனுப்பினேன். ஆசாரியார் "வம்பருக்கு வாய்ப்பூட்டு" (Critics Mouth sealed) என்று கண்டன நூல் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். நான் பெண்ணுரிமைபற்றி ஸ்வராஜ்யாவில் தொடர்ந்து எழுதிவந்தேன். திருநூலில் அவற்றின் சுருக்கம் காண்க.

எங்களுக்கும் சில கூட்டங்களில் வைதிகரின் 'ஸ்ஸ்ஸ்கள்' கிடைத் தன. ஜஸ்டிஸ் கட்சியின் புஸ்புஸ்களும் கிளம்பின. வகுப்புவாதப் பச்சைக் கண்ணுடியாலேதான் அரசியல் புலிகள் மனிதரைப் பார்த்த னர். எங்களுக்கு இருபுறமும் இடி. கேளுங்கள்:

நாங்கள் சீர்திருத்தச் சபை கூட்டிப் பெண்ணுரிமை ஆணுரிமை இரண்டிற்கும் வேலை செய்தோம். ஒருதரம் எல்லாரும் மோடாரில் ஸ்ரீ பெரும்புதூர் சென்றோம். அது ராமானுஜர் பிறந்த ஊர். வீர வைணவபுரி. வேதப்புலவர் ராமபத்ர சர்மா, ஹரிஜன கோகுலம் நடத்திய சங்கரநாராயணர் விசாலாக்ஷியம்மாள், வக்கீல் சத்யநாரா யணன், ஸ்ரீநிவாசன் முதலியோர் அரிய நண்பர். நல்ல பேச்சாளர். 25 மைல் சிரமப்பட்டுவந்த எங்களைக் கண்டதுமே வைதிகர் கதவை அடைத்தனர். ஒரே ஒரு வக்கீலே எங்களுக்கு ஜாகையளித்து ஆதரித்தார். அந்த ஊரிலே இளம் விதவைகள் தொகை அதிகம். பாலிய விவாகத்தின் கொடுமை சொல்லி முடியாது.

மாலை நான்கு மணிக்கே நாங்கள் கோயில் வெளி மண்டபத்தில் கூட்டம் போட்டோம். சில பெண்கள் அங்கே கன்னத்தில் கைவைத்து நின்றார்கள். வைதிகர் அவர்மேல் பாய்ந்து "புருஷாள் கூட்டத்தில் பெண்களுக்கு என்னவேலை போங்கோ என்று விரட்டி யடித்தனர். பெண்கள் வீட்டுத் திண்ணைகளில் கூடிக் கேட்டனர். வைதிகர் எங்கள் முன் வரிசையாக நின்று, "கலிகாலம் கலிகாலம்" என்றனர். உள் ளூர் பேர்வழி யாரும் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க முன் வரவில்லை. பெருமாளே தலைமை என்று நான் பேசத் தொடங்கினேன். நான் பராஸர ஸ்மிருதியையும் வேதத்தையும் பகுத்தறிவையும் ஆதாரமாகக் கொண்டு, அரைமணி பேசினேன். கோதை காதல் மணமே புரிந்தாள்.

விபரம் தெரிந்து வினைத் தெரிந்தே திருமங்கை மனைவி மணந்தாள். என்றேன். எனக்குப் பிறகு ராமபத்ர சர்மா வேதோக்தமாக அழகாகப் பேசினார். வைதிகர் புயல்போலக் கிளம்பி, கோதை எட்டு வயதில் ரங்கநாதனை மணந்தாள், சீதை பத்து வயதில்'' என்றெல்லாம் கணக்குப் போட்டு "நீங்களே கலிகால தூதர்கள். உங்களாலே தான் மழை பெய்யவில்லை. கம்மனாட்டிகளுக்குக் கலியாணமாம். திரண்டு குளித்த கொம்பேறிமூக்கனை மனையில் வைப்பதாம், காதலாம் கத்தரிக்காயாம் போங்காணும்; கோயில் மண்டபத்தில் அபசாரம் பேசக்கூடாது'' என்று உச்சலிட்டனர். விசாலாட்சி பேசத் தொடங்கினாள். "ஹோ அம்மா! பெண்கள் புருஷாள் முன் பேசக் கூடாது'' என்றார். சங்கரநாராயணருக்குக் கோபம் வந்தது. "ஹே அவள் மகா சரஸ்வதி. ஹேராதா ஹே க்ருஷ்ணா'' என்று குதித்தார். வைதிகர் கூச்சலிட்டு, கூட்டத்தைக் கலைத்தனர். நான் ஊரில் கோயில் முன்னே ஆயிரம்பேரைக் கூட்டி, ஒரு நாற்காலிமேல் நின்று, ஒருமணி நேரம் நிதானமாகப் பேசினேன். "நாங்கள் வைதிகருக்குப் பயந்தோடவில்லை. அவர்கள் காலம் மலையேறிவிட்டது. இந்தக் கோவில் சந்நிதிமுன் சொல்லுகிறேன், அடுத்த வருஷமே சம்மத வயது மசோதா சட்டமாகும். பெண்களுக்கு வினைத்தெரிந்தே மணம் நடக்கும். மறுமணம் புரியும் உரிமையும் பெண்களுக்குக் கிடைக்கும். பிறகு இந்த வைதிகர் என்ன செய்வார்களோ பார்ப்போம். நீங்கள் தைரியமாக ருதுமதி விவாகமே செய்யுங்கள். இளங் கைம் பெண்களுக்கு மறுமணம் செய்து மங்கலமாக வாழச் செய்யுங்கள் என்றேன். கலிகாலம் கலிகாலம் என்று கோயில் மணியடி சத்தம் கேட்டது. அன்று தொடங்கிய போர் இன்று வெற்றிபெற்றது. பெண்கள் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். சட்டம் சமவுரிமை தந்தது. நான் செய்த அடுத்த சீர்திருத்தம் தேவதாசி ஒழிப்பு. கோயிலுக்குப் பொட்டுக்கட்டும் பழக்கம் ஒழிய டாக்டர் முத்துலக்ஷ்மி சட்டம் கொண்டுவந்தாள். அதை எதிர்த்து தேவதாசிகளும் அவர்கள் விசிறிகளும் கூக்குரலிட்டனர். என்னிடம் சிலர் வந்து கனிகள் வைத்துக் கும்பிட்டு, தங்களுக்கு அனுகூலமாக எழுதச் சொன்னார்கள். நான் "பெண்ணின் கண்ணீர்'' என்ற கட்டுரை எழுதினேன். அதைப் படித்த இளங் கைம்பெண்கள் சிலர் பரிதாபக் கடிதம் எழுதினர். "வயதின் உணர்ச்சி தாங்காமல் நான் வேசை விடுதிகளில் புகுந்து அங்கு வரும் ஆடவருடன் கெடுகிறேன். மறுமணம் புரிந்தால், மானமாக வாழ்வேன்'' என்றொரு செல்வி எழுதினாள். விதவா விவாக சங்கத்தில் இப்படி நூற்றுக்கணக்கான கடிதங்கள் கண்டேன். தேவதாசி முறையை ஒழித்து, நாளைமுதல் எல்லாரும் ஒருவனுடன் இல்லறம் புகுதலே நலம் என்று எழுதினேன். அதைப் படிக்கக் கேட்ட ராமையா என்பவர் யாமினி பூர்ண திலகம்மாளுடன் என்னிடம் வந்து, "நாங்கள் சிறுவயது முதல் சேர்ந்து வாழ்கிறோம்:

ஒரு பெண்ணும் உண்டு. தாங்களே கலியாணம் நடத்தி வைக்க வேண்டும் என்றார்கள். யாமினி பூர்ணம் காந்தி பக்தை, தெலுங்கில் இனிது பேசினாள். அவள் காங்கரஸ் சேவகி. அவள் களவந்துல சரணுலயம் நடத்தி, தேவதாசிகளுக்கு அடைக்கலம் அளித்தாள். நான் ஒரு முறை சரணுலயத்தைப் பார்த்தேன். ராமதாஸ் பந்துலுவும் அங்கே வந்தார். அங்கே இருபது இளம்பெண்கள் இருந்தனர். இருவர் மணம் புரிந்தனர். மற்றவர் தாங்கள் பட்ட கஷ்டங்களைக் கண்ணீர் விட்டுரைத்தனர். "செல்வ வேசை—வாழ்வா, எளிய இல்லறமா—எது இன்பம்?" என்று கேட்டேன். எல்லாரும் "எளிய இல்லறமே இன்பம்" என்றனர். எல்லாரையும் ராமஜபம் செய்து வந்தே மாதர கீதம் பாடச் சொன்னேன். அனைவரும் இனிமையாகப் பாடினர், ஆடினர், கலைத் தேர்ச்சி காட்டினர். இந்தமாதிரி தேவ தாசிகளுக்கு அடைக்கலம் தந்து, கல்வியும், பிழைக்க மானமான தொழிலும் பயிற்றி, தக்க மணவாளனைக் கூட்டி இல்லறம் நடத்தச் செய்யவேண்டும்" என்று பேசினேன். முதலில் எனக்கு இல்லற தீக்ஷை தாருங்கள் என்றாள் யாமினி. பிடாரியார் கோவில் தெருவில் ஸரஸ்வதி சங்கம் உண்டு. பிக்ஷு ஸ்வாமிகள் அதை நடத்தினார். சென்னையில் அதற்கு நல்ல பேர் உண்டு. எனது நண்பர் டாக்டர் மாசிலாமணியும் குமாரசாமி செட்டியாருமே அதன் காரியதரிசிகள். அவர்கள் உதவியால் ராமையா—யாமினிபூர்ணம் திருக்கலியாணத்தை சங்கத்தில் நடத்தினேன். நூறு நண்பர் வந்தனர். கீதையும் யோகசித்தியும் பாராயணம் நடந்தது. நான் தெலுங்கில் இல்லறம் பற்றிப் பேசினேன். மந்திரம் சொல்லி ஓமம் வளர்த்து, மாங்கல்ய தாரணம் செய்வித்தேன். பஜனை நடந்தது. கலியாணம் முடிந்தது. பழகிய தம்பதிகள் அன்புடன் வாழ்ந்தனர். இப்படிச் சீர்திருத்த மணங்களும் மறுமணங்களும் நடந்தன. பெண்ணியல்பு ஒருவனைச் சார்ந்து மானமாக மனையில் வாழவே விரும்புகிறது. விபசாரத்தை வெறுக்கிறது என்பதை நன்று தேர்ந்தேன்.

மற்றோர் இயக்கம்: ஒரு மனிதன் ஒரே தாரத்துடன் வாழ வேண்டும்; தாரமிருக்கத் தரங்கெட்டு அலையக்கூடாது என்பது. இந்த விஷயத்தில் மனைவி வருந்த பிற மாதரைக் கூடி வாழும் பல வாலிபரை மனம் மாற்றிச் சொந்த மனைவியுடன் வாழச் செய்தேன். விபசாரத்தையும் காமச் சேட்டைகளையும் ஒழிக்க என்னால் ஆன பிரசாரம் செய்தேன். புதுக்கோட்டை மன்னர் ஆஸ்திரேலிய மாதை மணந்து ஸிட்னி மார்த்தாண்டனை ஈன்றார். அவனுக்குப் பட்டம் கட்டச் சிலர் முயன்றனர். அதைக் கண்டித்து, ஜனமித்திரனுக்குத் துணைசெய்து இப்போதிருக்கும் ராஜகோபாலத் தொண்டமானுக்கே முடிசூட்ட வேண்டுமென்று சுராஜ்யாவில் தீவிரமாக எழுதினேன். தமிழரசிற்குத் தமிழ் மன்னனே வாய்த்தான்.

இப்படிச் சமுதாயப் பணிகளுக்கிடையே அரசியல் சேவையும் மும்முரமாக நடந்தது.

283. அரசியல் சக்கரம்

ஸ்வராஜ்யாவில் நான் எழுதிய தலையங்கங்களும் எனது சென்னை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. நான் பங்கு கொண்ட இயக்கங்களில் பேசியதெல்லாம் ஸ்வராஜ்யத்தில் வந்தன.

கற்றவர் ஓங்க நல்ல கலைதொழில் ஓங்கச் செல்வம்
பெற்றவர் ஓங்க, ஏழை பேதையென் றெவரும் இன்றி
ஒற்றுமை யாக மக்கள் உள்ளன்புத் துயராக
வெற்றியின் இன்பம் ஓங்க விடுதலை முரசை ஆர்ப்போம்
சொல்லொடு செயலும் போற்றும் சுராஜ்யமாம் சக்தி யிங்கே
அல்லலை ஓட்டித் தெய்வ அருளொளி காட்டித் தீமை
இல்லையென் றாக்கி, உண்மை அன்பினை வாழ்வில் ஊக்கி,
எல்லையில் அமைதி யின்பம் ஈந்திட மலர்வ தாமே.

இதுதான் சுராஜ்ய சங்கற்பமாகும்.

தமிழகம்

எனது முதல் எண்ணம் தமிழை, தமிழரை, தமிழகத்தை உயர்த்த வேண்டும் என்பதே. நாட்டை மொழிப்படியே பிரித்து வங்காளம் போல் தமிழகத்தையும் உருவாக்க வேண்டும். அதற்கு ஒரு தனியாக பல்கலைக் கழகம் வேண்டும். அக்காலம் அண்ணாமலை செட்டியார் நாட்டிய சர்வகலாசாலைச் சட்டத்தைப் போற்றித் தலையங்கம் எழுதினேன். ஆனால் தமிழருக்குத் திருச்சி அல்லது மதுரையில் கலையும் தொழிலும் வளரக் கழகம் காண விரும்பினேன். தமிழர் சாதிமத வகுப்புப் பேச்சே இல்லாமல், தம்மைத் தமிழர் என்றே கருதி ஒற்றுமையாக வாழவேண்டும். சாதிமதங்களைக் குறிக்கும் வால்களை யெல்லாம் பெயர்களிலிருந்து அகற்ற வேண்டும். தமிழைச் சிறப்பாகவும் இந்தியைப் பொதுவாகவும் ஆங்கிலத்தை நயமாகவும் தமிழர் கற்கவேண்டும். காலத்திற்கேற்ற தொழில் வளம்பெற்று, தமிழகம் வேண்டும் பொருள்களை நாமே செய்ய வேண்டும். பாட்டாளிகளை வெளியே அனுப்பாமல், இங்கேயே வேலைதந்து காக்க வேண்டும். நாட்டின் வாணிகம் நம்மவர் கையிலிருக்க வேண்டும். பணத்திறனை வளப்படுத்தி நம்மவர் ஆளவேண்டும். அப்போதுதான் இங்கிலாந்து அமெரிக்காபோல் முன்னேறலாம் என்று கருதி, அன்னியரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இடந்தராமல், ஒத்து வாழவேண்டும். இதையே பலமேடைகளிலும் கட்டுரைகளிலும் எழுதிவந்தேன்.

இந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி எப்போதும்போல் குரான் கோட்பாடுகளுடன் பேசினேன். முகம்மது நபியின் குர்பானியைச் சொல்லி எல்லாரையும் ஒற்றுமைக்கு அழைத்தேன். பல இஸ்லாமியர்

எனது நண்பரானர். அடுத்தபடி திருக்குலத்தாரை அரசாங்கம் பயன் படுத்திக்கொண்டு பிரிவினைச் சூழ்ச்சி செய்தது. ஆரியதிராவிட—ஆதி திராவிட-இந்து முஸ்லிம் பிணக்குகளைத் தூண்டிவிடுவதும், இந்தியா சுயாட்சிக்குத் தகுதியில்லை. ஆங்கிலர் நீங்கினால் இரத்தம் பெருகும் என்பதும் அதிகாரவர்க்கப் பல்லவியானது. அதற்கேற்றபடியே சைமன் கமிஷன் வரும்போது, ஹரிஜனங்களைக் கிளப்பிவிட்டு, மொட்டைக் கத்திகளைத்தந்து எங்களை யெல்லாம் மிரட்டச் செய்தனர் சுதந்தரப்பகைவர். ஐயவேலு, ஸ்ரீநிவாசன் முதலியோர் உதவிகொண்டு நான் ஆதிதிராவிடருக்கும் உணர்ச்சி யூட்டினேன். ஐந்தாறு தலையங்கம் எழுதினேன். இந்தியா உடல், இந்தியர் உயிர். உயிரில் ஆரிய உயிர், திராவிட உயிர் ஆதிதிராவிட உயிர் என்பதில்லை. எல்லா உயிரும் ஒன்றே. தீண்டாமை ஒழிந்தது. காந்தி மகானே அதற்காகப் பாடுபட்டார். விடுதலை வந்தால் சட்ட மியற்றிச் சமஉரிமை தருவார்கள் என்றேன். கோகலே மண்டபத்தில் ஆதிதிராவிட மகாநாடு கூடியது. முப்பதேபேர் வந்தனர். ஆங்கிலேயரே ஆதிதிராவிட ரக்ஷகர் சைமன் கமிஷன் முழுவதும் ஆங்கிலராயிருப்பது நன்று என்று தீர்மானம்செய்தனர். நான் இந்தத் தீர்மானம் தமிழருக்கே அவமானம். கப்பலில் வந்த வெள்ளையர் நாளையே கப்பலேறிச் செல்ல வேண்டியவர்கள். இந்நாட்டின் இன்பதுன்பம் நமது கையில் உள்ளது. அரசனை நம்பிப் புருசனையிழந்த கதையாகாமல், கவனம் என்று எச்சரித்துப் பல திருக்குலத்தாரைக் காங்கரஸ் பக்கம் திருப்பினேன்.

சத்தியாக்கிரக நாள்

சத்தியாக்கிரக நாளில் நான் உபவாசமிருந்தேன். புலுசுசாம்பமூர்த்தி நீல்சிலை சத்தியாக்கிரகத்திற்காகச் சென்னையில் இருந்தார். அவர் என்னிடம் தினம் வருவார் அவரும் நானும் லோன்ஸ் சதுக்கத்திலும் திருவல்லிக்கேணியிலும் கூட்டம் கூட்டி சத்தியாக்கிரக தத்துவம்பற்றிப் பேசினோம். காந்திமகான் கதையைச் சொன்னோம். கதர் அணியத் தூண்டினோம்.

கோகலே ஹாலில் சத்தியமூர்த்தி தலைமையில் ஒருகூட்டம் நடந்தது. நானும் பேசினேன். 6—4—1919உ சத்தியாக்கிரகச்சங்கநாதம் கேட்டது, அதுதான் நமது பாஞ்சஜன்யம். ஜலியன்வாலாபாகில் இந்தியரும் இஸ்லாமியரும் சீக்கியரும் சிந்திய ரத்தம், நமது உள்ளத்தில் துடிக்கிறது. அத்துடிப்பு ஒற்றுமையாகிச் செயலாகி, சுதந்தர வெற்றிதர வேண்டும். நமது வேற்றுமைகளாலேதான் அடிமைச் சங்கிலி பின்னப்பட்டிருக்கிறது. நமது ஒற்றுமையே அதை உடைக்கும் சம்மட்டி. இன்று நமக்கு 144 வந்திருக்கிறது. எனக்கும் வாய்ப்பூட்டுதான். நான் வாயைப் பூட்டவில்லை. சென்னைத்தலைவர் தம்மையே வீடுகளில் பூட்டிக்கொண்டதுதான் வியப்பு! அரசியல் கூட்டங்களில் ஐம்பது பேர்கூட இல்லை. இந்த மந்தம் ஒழிக! காந்தியின்

சங்கநாதத்தை மறுபடி கேட்போம். நாடெல்லாம் சத்தியப்போருக்கு எழுவோம். ஆக்கவேலைகள் செய்வோம். தாக்கவேலைகளை நீப்போம்" என்றேன். திலகர் கட்டத்தில் பெரிய தலைவர் பேசினர். காலிகள் கல் எறிந்ததும், கூட்டம் ஐந்தே நிமிஷத்தில் கலைந்தது. பிரகாசம், புலுசு, நான் மூவரும் அங்கேயே நின்றோம். காலிகள் ஓடுகிறவர்களையே ஓடிந்த துப்பாக்கியால் துரத்திமிரட்டினர். சென்னை அரசியல் மாமூல்பேர்வழி கள் கையில் சிக்கியது. வாய்ப்பந்தலில்! 144 நுழைந்தால், எல்லாம் கப்சுப்! மகாஜனசபையிலும், பத்திரிகை காரியாலயத்திலும் தலைவர் பேருக்குக் கூட்டம் கூடி ஊருக்கு நடிப்பார்கள். ஸர். ஸி. பியும், டாக்டர் சுப்பராயனும் சென்னையைக் கடுமையாக ஆண்டனர். ஆங்கிலேய ரின் செல்லப்பிள்ளைகள் தேசபக்தருக்குத் திருவுலக்கை தயாரித்தனர். காங்கிரஸ் பெயரால் சுயநல மீர்ஜாபர்கள் பட்டம்பதவி வேட்டை யில் போட்டி போட்டனர். கட்சிகட்டி வசைபுராணம் பாடுதலே தேர்தல்—அரசியலின் ஜயமுரசு. மனச்சாட்சியுள்ளவர் மந்திரிசபை யில் புகமாட்டார். ஆரோக்யசாமியும் ரங்கநாதனும், சுப்பராயன் மந்திரிசபையை விலகினர். அவர்களுக்குப் பதிலாக காங்கிரஸ் சலு கையில் சட்டசபையில் நுழைந்த முத்தையா முதலியாரும், சேதுரத்ன மையரும் மந்திரிபதவியேற்றனர். இப்படி ஏறிய ஏணியை உதைத் துத்தள்ளிய துரோகத்தை, நாடு பலமாகக் கண்டித்தது. காங்கரஸ். மந்திரிசபைமேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. அதற்குக் கூட்டத் தொகையே இல்லாமற் சூழ்ச்சி செய்தது சர்க்கார் மந்திரிசபை. சத்தியமூர்த்தி கனல் பறக்கப்பேசி, கமிஷன் பகிஷ் காரத் தீர்மானத்தை நிறைவேற்றினர், இருந்துமென்ன? மந்திரிகள் சிண்டு கவர்னர் கையில் இருந்தது. நான் டாக்டர் சுப்பராயனைக் கண் டித்தே பலமுறை எழுதினேன். எனினும் இருவருக்கும் நட்புரிமை யும் மரியாதையும் குறையவில்லை. அவர் மனசாட்சி சர்க்கார் அடிமைக் கூண்டில் இருக்காது என்பதை அறிந்தேன். அவர் ராஜாஜீ அரசியல் முக்யத்வம் அடைந்ததுமே காங்கரஸ் மேடைக்கு வந்து, இன்று சுதந் தர வீரராக விளங்குகிறார். சமீபத்தில் என்னைக்காண வந்தபோது, பழைய நிகழ்ச்சிகளை நினைப்பூட்டினேன். மகான் காந்தி அவரைப் புதிய மனிதனாக்கினார். சென்னை மக்கள் துரோகக் கும்பலைக் கண்டித் துக் கொடும்பாவி எரித்தார்கள். ஆனால் அதை நான் கண்டித்தேன். நம்மவருக்கு நாமே சாபம்வைக்கக் கூடாது. அமைதியாக அவர்களுக்கு உணர்ச்சிவரச் செய்யவேண்டும். பூரண மதுவிலக்கிற்காக நான் போராடினேன். சட்டசபை விவாதமும் பலமாக நடந்தது. சர்க்கார் 'மெல்ல மெல்ல மெல்ல' என்றது. கட்டாய இலவசப் படிப்பு மசோ தாவை ஆதரித்தோம். மசோதா மசமச வென்று பேச்சளவில் நின் றது. 'பணமில்லை' என்ற பல்லவிதான் வந்தது. 'சென்னை நகரை யாவது சுகாதாரபுரியாக்க ஏற்பாடு செய்யுமையா' என்றால். அது வரவரக் குப்பை நகரமானது. சந்துபொந்துகளில் ஆள் அடிவைக்க

முடியாது. நாற்றம் குப்பென்றடிக்கும். பைப்தண்ணீரில் கூவம்வாசனை கமகமக்கும். அத்தர் விட்டால்கூட பினைல் நாற்றமாய்விடும். சட்ட சபையில் உருப்படியான காரியம் நடக்கவில்லை. "ஆத்திரந்தீர, சுடச் சுடக்கொடுப்பதே ஒரு திருப்தியல்லவா? வெளியே சர்க்காரை அப்படி நேரடியாகத் தாக்கமுடியா தல்லவா?" என்பார் சத்தியமூர்த்தி.

284. ஹர்தால்

ஸைமன் கமிஷ பகிஷ்காரக் கூட்டங்களே அக்கால அரசியல் நிகழ்ச்சி. நான் எல்லாக் கூடங்களிலும் பேசினேன். சிலகூட்டங்களுக் குத் தலைமைவகித்தேன். மாமூல் தலைவர் மாமூல்படி பேசினர். தியாக ராயநகர் கூட்டத்தில் நாம் கேட்பது சுயேச்சை : பிச்சையல்ல. சைமன் எழுவரிடம் நாம் காவடி தூக்கிச் செல்லோம். நம்மைக் கசக்கிப் பிழிந்து, பணமுறுஞ்சும் பூதத்திற்குச் சாம்பிராணி போடோம். பல கமிஷன்களை முன்னே பார்த்தோம். எல்லாம் இந்தியாவின் செலவில் வந்து, குலாமிகள் சொல்லைச் குறித்துச் சென்று, பிரிவினையைத் தூண்டி விட்டு, இந்தியாவுக்கு விடுதலை தந்தால் வகுப்புக்கலகம் மூளும் என்று கையைவிரிக்கும் பாவைக் கூத்தாகவே முடிந்தன. மாண் டேகு வந்தார்; இரட்டையாட்சி வந்தது; ரௌலட் சட்டமும் டயரின் ஆகாச குண்டும் உடனே வந்தன. மோதிலாலும் ஐயங்காரும் சட்ட சபையில் புகுந்து வாய்ப்போர் புரிந்து, வட்டமேஜை மகாநாடு கேட் டிருக்கின்றனர். சைமனின் வரப்பிரசாதம் லண்டன் வட்டமேஜை மகாநாடாக முடியும். வட்டமகாநாடும் முட்டை மகாநாடுதான். அடக்கு முறையும் ஒடுக்குமுறையும் தடியடியும் வஞ்சச் சூழ்ச்சியும் கொண்ட பிரங்கி வர்க்கமா நமக்கு விடுதலை தரும்? விடுதலை நமது கையில் உள்ளது. காந்தியின் சாந்தவழியில் உள்ளது. நமது ஒரே கடமை காந்தி காட்டியபடி நடப்பதே. அவர் வழிகாட்டுகிறார்; நாம் நடக்கத் தயங்குகிறோம். அவர் சத்தியாக்கிரகம் என்கிறார்; நாம் சட்ட சபை என்கிறோம். அவர் கதர் என்கிறார் நாம் வெறும்[பதர்களைத் திட் டிப் பணிகாரம் செய்யப் பார்க்கிறோம்" இவ்வாறு நான் பேசினேன், சத்தியமூர்த்தி "சைமன் கமிஷன் வெறும் கண்துடைப்பு, அது வரும் போதே சட்டசபையில் நடக்கும் கபட நாடகம் சொல்லி முடி யாது. துரோகிகளையும் குலாமிகளையும் கைக்குள் போட்டுக்கொண்டு இன்னும் நம்மைப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உடன்படோம்" என்று பேசும்போதே பத்துக் குடிவெறியர் பிராமணன் ஒழிக! பார்ப்பான் சூழ்ச்சி அழிக! சுயாட்சி பார்ப்பான் ஆட்சி; திராவிடச் சிங்கமடா நான் ர்ர்ட்ட்!" என்று கல்லெறிந்தனர். மண்ணை வீசினர்; விளக்கு உடைந்தது. சத்யமூர்த்தி குழந்தை முத்துரங்க முதலியார் அனைவரும் சட்டென்று ஒரு வீட்டிற்குள் புகுந்து கொண்டனர். நான் பாடினேன்.

சுதந்தரத் தமிழ்ராய் வாழ்வோம்—அன்னியர்
சூழ்ச்சியில் ஏன் இனி வீழ்வோம்?

நிதமோரு நன்மையைச் செய்வோம்—நம்
நெஞ்சினின்று வஞ்சனையைக் கொய்வோம்.

பத்து நிமிஷம் பாடினேம். கலாட்டா நின்றது, பிறகு சத்தியமூர்த்தி கர்ஜித்தார். குடிவெறியர் பெருங்கூட்டமாக வந்து "ஹாஹூ" என்று சத்தமிட்டுக் கூட்டத்தைக் கலைத்தனர். எல்லாரும் ஓடினர். நாங்களும் உடைந்த பெட்ரோமாக் விளக்குமே மிச்சம்.

ஏழுகிணற்றில் எனது தலைமையில் கூட்டம் நடந்தது. சத்திய மூர்த்தி வாட்ட சாட்டமாகப் பேசினர். எதிரிகள் பல கேள்வி போட்டனர். சத்தியமூர்த்தியும் எதிர்க்கேள்வி போட்டார்; "உங்களுக்கு அடிமை வாழ்வு வேண்டுமா? சுதந்தர வாழ்வு வேண்டுமா! நமது நாட்டை நாம் ஆளவேண்டுமா? பதினையிரம் மைல் தூரத்திலிருந்து வரும் வெள்ளையர் ஆளவேண்டுமா? நமது நாட்டுப்பொருள் பகல் கொள்ளை போக வேண்டுமா? அல்லது நமது பொருள் உள்நாட்டிலேயே சுழன்று, தொழில்களை வளர்த்து நாம் வறுமை தீர வாழவேண்டுமா?" எதிரிகள் வாயடைத்தனர், ஒருவன் வெள்ளையர் ஆட்சியே வேண்டும் என்ருர். வெட்கம் வெட்கம் என்று அவனைக் கூட்டம் அவமானப் படுத்தியது. நான் "தம்பி, நாங்கள் காந்தி ராஜ்யத்திற்காகப் பேசுகிறேம்; உனக்கு வெள்ளையரசு வேண்டுமானல், நீல்சிலையுடன் போய் அழு" என்றேன். எல்லாரும் கைதட்டினர். இப்படிக் கூட்டங்கள் நடந்தன.

ஒருநாள் திலகர் கட்டத்தில் அமைதியாகக் கூட்டம் நடந்தது. நாகேசராவ் தலைமை வகித்தார். எஸ். ஸ்ரீநிவாசர், சத்தியமூர்த்தி, அனிபெசண்டு, பிரகாசம் எல்லாரும் பேசினர். மறுநாள் பகிஷ்கார தினத்திற்குத் தயாராேம். சத்தியமூர்த்தி தலைமையில் ஐம்பது தொண்டர் சென்னையின் பல பாகங்களில் பகிஷ்கார தினத்திற்காக எல்லாக்கடைகளும் அடைக்கச் செய்தோம். நான் தேசியகீதங்கள் பாட, எல்லாரும் தொடர்ந்து பாடினர். கூட்டம் கூடும் இடங்களிலெல்லாம் நின்று சத்தியமூர்த்தியும் நானும் பேசினேம். இதேமாதிரி மைலாபூர், திருவல்லிக்கேணி ஆகிய எல்லாப்பகுதிகளிலும் பிரசாரம் நடந்தது. போலிகளும், துரோகிகளும், குலாமிகளும் மதிற்பூனைகளும் சிரித்தனர். காலிகள் கல்லும் மண்ணும் கண்ணாடியும் மடியில் கட்டித் திரிந்தனர். "கச்சேரிகளெல்லாம் மூடவேண்டும். ஐகோர்ட்டில் வக்கீல்கள் புகக்கூடாது; ஒருநாள் நூறு ரூபா பீசுக்காக 180 கோடி ரூபா வருமானமுள்ள தேசத்தைக் காட்டிக் கொடாதீர்கள்" என்று கூவினேம்.

பம்பாயில் சைமன் கமிஷன் இறங்கியது; இங்கே பகிஷ்காரம் நடந்தது 3—2—1828; ஹார்த்தால் நாள்; நான் கண்விழித்த நாள், காலையில் ஜார்ஜ் டௌனை ஒரு சுற்றுச்சுற்றி வந்து ஸ்வராஜ்யா ஆபீஸி

விருந்து டெலிபோன் பேசினேன். மஹாஜன சங்கத்தில் சத்தியமூர்த்தி இருந்து பதிலளித்துக் கொண்டிருந்தார். 'காலிகள் 'காந்தி குண்டு' என்று கல்லைச்சேர்க்கிறார்கள். ஐகோர்ட்டு முன் அபாயம் நடக்கும் போலிருக்கிறது, தாங்கள் வந்து கூட்டத்தை ஒழுங்கு செய்தாலே நலம்'' என்றேன். யாரும் வரவில்லை. நகரில் மோட்டார், டிராம், வண்டிகள்—ஒன்றும் நகரவில்லை. கடைகளெல்லாம் அடைபட்டன. வீடுகளில் தேசியக்கொடி ஆடியது. ஸ்வராஜ்யாவில் நான்கொடியேற்றி ஜயபாரத் என்று வணங்கினேன். மாணவர் கலாசாலைக்குப் போக வில்லை. சைமனுக்குக் கறுப்புக்கொடி பிடித்தனர். அரசாங்கம் சும்மா இருக்குமா; தொடையைக் கிள்ளித் தொட்டிலாட்டும் வேலை நடந்தது. காலிகளுக்கும் குடிவெறியருக்கும் கொண்டாட்டம்! நான் பிராட்வே கடைகளை மூடச்சொல்லி மன்றாடினேன், ஹாரிசன் கம்பெனி பிடிவாதமாக விருந்து நடத்தியது. குடியும் கொட்டும் குதியும் கும்மாளமுமாயிருந்தது கம்பெனி. தடதட வென்று கற்கள் விழுந்தன, கம்பெனி ஜன்னல்கள் உடைந்தன. சாப்பாட்டு மேஜைகளில் கல்நிறைந்தது, கம்பெனிக்காரர் பயந்துபோய் மூடிவிட்டார். சில மாணவரைப் போலீஸ் கைது செய்தது, ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆத்திரம் மூண்டது. ஐக்கோர்ட்டுக்குள் ஒரு வக்கீல் புகுந்தார். விழுந்தது கல். போலீஸ் தலைவர் குதிரையை அங்கு மிங்கும் ஓட்டிக்கூட்டத்தைக் கலைத்தார். கூட்டம் கட்டுமீறி, போலீஸ்மேல் கல்மாரி பொழிந்தது. தலைவருக்கு நல்ல அடி. இரத்தம் ஒழுகியது. கோர்ட்டும் சட்டகல்லூரியும் உடனே மூடப்பெற்றன. ஒரு வெள்ளைக்காரன் மோட்டார், கூட்டத்தைத் துருவிச் செருக்குடன் சென்றது. இருவர் மேல் அது ஏறியது. ஒருவன் இறந்தான், கூட்டம் ஆத்திரங் கொண்டது. மோட்டார் சுக்கு நூறானது; அதில் சென்ற மார்ஸ்பி அடிபட்டான். அபாயம்! ராணுவம் லாரியில் வந்தது... இளங் கிறிஸ்துவர் சங்க மாடியில் ஏறி, ஆகாசத்தில் சுட்டது. கூட்டம் கலையவில்லை. அஞ்சவில்லை! "வந்தேமாதரம்! மஹாத்மா காந்திக்கு ஜே! வெள்ளை கமிஷனுக்கு கூ... வெள்ளையா வெளியேறு'' என்று கூச்ச லிட்டது கும்பல். கமிஷனர் சுடு என்றார். ராணுவப்புலிகள் இரக்கமில்லாது சுட்டன. நான் 'அபாயம் யாராவது வாருங்கள் என்று டெலிபோன் பேசினேன். சத்தியமூர்த்தி எத்தனைபேர் செத்தார் என்று மட்டும் கேட்டார். ஒரு ஏழை இறந்தான். ராணுவம் இதோ தொடர்ந்து சுடப்போகிறது. பிரகாசத்திடம் நிலைமையைத் தெரிவித்தேன். அவர் ஒருவரே துணிந்து ஓடிச்சென்று "சுடாதே சுடாதே'' என்றார். ராணுவம் கிட்டவராதே சுடுவோம் என்றது. பிரகாசம் "சுடு என்னை...'' என்று மார்பைக் காட்டினார். துப்பாக்கியும் அவர் தைரியங்கண்டு வெட்கியது. பிரகாசம் இறந்தவர்களைத் தமது மோட்டாரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். ஊர்வலத்துடன் அவர்கள் உடல் புதைக்கப்பட்டது. அன்று சென்னை முழுதும் கல்லெறியும் கலாட்டாவுமா யிருந்தது.

மாலை ஐந்தரை மணிக்குத் திலகர் கட்டத்தில் மாபெருங்கூட்டம். நானும் பிரகாசத்துடன் சென்றேன். சத்தியமூர்த்தி, "பாரதி, நடந்ததெல்லாம் எழுதுங்கோ" என்றார். வந்தேமாதரம் போட்டோம். மூர்த்தி ஸ்ரீநிவாசரை அக்கிராசனம் வகிக்கச் சொன்னார். ஐயங்கார் அருமையான ஆங்கிலத்தில் "ஹர்தால் வென்றது. சைமனுக்கு ரோசமிருந்தால் திரும்பிப் போக வேண்டும்." என்றார். எல்லாரும் "சைமனே போ திரும்பி" என்று கூச்சலிட்டோம். தடதட வென்று கல்லெறி. தொழுகை நடத்திய யாகூப் ஹாஸன் தலையில் மண்மழை. கூலிக்குண்டர் கூட்டத்திற் புகுந்தனர். அடிதடி, அடிதடி! பழஞ் செருப்புகள் பலருக்குச் சடகோபம் சாத்தின. விளக்குகள் சுக்கலாயின, பகிஷ்கார விளம்பரங்கள் கிழிந்து காற்றில் பறந்து வங்கக் கடலில் சங்கமமாயின, மேஜை நாற்காலிகள் ஒடிந்து விறகுகளாயின. கூட்டத்தலைவர் ஓட்ட மெடுத்து, மோட்டாரில் சத்தியமூர்த்தியுடன் தப்பினார். மற்றதலைவர் எடுத்த ஓட்டம் பார்த்தசாரதி சந்நிதியில் நின்றது. கோயிலையும் மூடிக்கொண்டனர். ராணுவ வீரர் முரட்டுத்தனமாகக் குதிரைகளைக் கூட்டத்தில் விட்டடித்தனர். எங்கே நான்குபேர் கூடினாலும் அங்கே மிலிடரிக் குதிரைகள் புகுந்து மோதும். சிலர் குதிரைக் குளம்பில் நசுக்குண்டனர். பேசாமல் கூட்டம் முழுதும் அப்படியே அமைதியாக அமர்ந்து, ரகுபதி ராகவ பாடினால் எதிரிகள் ஒன்றும் செய்திருக்கமாட்டார்கள். மக்கள் பயந்தோடியதால், எதிரிகளும் துரத்தியடித்தார்கள். அம்மாமிகள் டெலிபோன் பேசுகிறார்கள். ஐயாக்கள் சௌக்கியமா யிருக்கிறோம் என்கிறார்கள். சென்னையெங்கும் மிலிடரி லாரிகள். அதற்குச் செலவு லட்ச ரூபா, பொதுப்பணம்! நான் நீலக்கடலோரத்தில் நிம்மதியாயிருந்து, எல்லாம் பார்த்தேன். கூட்டம் கலைந்தபிறகு மரீனாவுக்கு வந்தேன். "நமஸ்தே ஸ்வாமி ஜீ" என்றொரு பண்டாரம் பின்னே வந்தான். அவன் வழக்கமாக ஸ்வராஜ்யாவில் வந்து, என்னிடம் அபிமானமாகப் பேசி, ஏதோ எழுதிச்செல்லும் பண்டாரமே. ஹார்தால் எப்படி? "பலே ஜோர்! எங்கள் தேசபக்தியை ராணுவக் குதிரைகள் எப்படி நசுக்குகின்றன என்று கண்டோம். அதுவே போதும்" ஸ்வாமீ, நம் ஐயரும் சிவாவும் இருந்தால், இன்று கல்லுக்குப் பதில் ராணுவத்தின்மேல் வெடிகுண்டு பறந்திருக்கும்" என்றார் பண்டாரம். "முதலில் ஒற்றர்மேல் வெடிகுண்டு போடவேண்டும்" என்றேன்.

ஆம்; பண்டாரம் நம் ஒற்றரே. அவர் காஷாய ஜிப்பாவுக்குள் வெள்ளைச்சட்டையில், கடிகாரம் டக் டக் என்கிறதே தெரியவில்லையா! இப்படிச் சில ஒற்றர் எனக்குண்டு. அக்காலம் ரங்கூன் சுதந்தரம் ஆசிரியர் சுப்பையா நாயுடு அங்கே வெடிகுண்டு வீசி புதுச்சேரிக்கு வந்தார். அவருக்கு உதவி தேட என்னிடம் ஒபய்துல்லாவை அனுப்பினார். நான் வேண்டிய துணை செய்தேன். அதை மோப்பம் பிடித்து என்னிடம் ஒற்றர் வெடிக்காய் பேச்செடுத்தனர். நான் வெளிக்

கிளம்பினால் இருபதடி தூரத்தில் ஒற்றன் வருவான் வரட்டுமே, அவனும் நம்மவனே. பிழைத்துப் போகட்டும்; மாதம் எண்பது ரூபா. ஒருதரம் மட்டும் 'ஒற்றரே என்மேல் உமக்கென்ன அவ்வளவு காதல்'' என்று கேட்டேன். அவன் வயிற்றைத் தடவிக் காட்டினான்.

திருவல்லிக்கேணி எமகண்டத்திலிருந்தது. எங்கும் கதவடைப்பும் கல்லெறியும் 'அடி பார்ப்பானை' என்ற கூச்சலுமே! ஏன்? ஊரார்த்தால் பார்ப்பனச் சூழ்ச்சியாம்! சுயராஜ்யம் ஐயங்காரின் சுய சாதி ராச்சியமாம். ஐயோ தமிழ் நாடே! சிரிப்பதா அழுவதா?

மறுநாள் எங்களுக்கெல்லாம் நவக்ரகப் பார்வை 144 (1+4+4=9) தலைவரெல்லாம் ஆமைபோல் அடங்கினர், ஒடுங்கினர், பதுங்கினர், ஏங்கினர், தூங்கினர், பின்வாங்கினர். "தியாக புத்தியுடன் பகிஷ்கார இயக்கத்தை நடத்துவோம். வீரத்திற்கு நேரம் இதுவே'' என்று எழுதினேன். தலைவர் நான்கு சுவர்களுக்குள் தேர்தல் பேச்சுப் பேசினார். ஒரு கூட்டத்தில் "இப்போதாவது காந்தியைப் பின்பற்றுவீர்களா'' என்றொருவர் கேட்டார். பதிலில்லை. சென்னை கலாடாவுக்குத் தலைமை வகித்தார் அப்துல் பரூகி. அவரே ராணுவத் தாண்டவத்தையும் நவக்ரகப் பார்வையையும் கண்டித்தார். ''அச்சா பரூகி ஐஸா கரோ'' என்றொரு குறிப்பெழுதினேன், எல்லாரும் ரசித்தார்கள்.

285. பர்தோலி சத்யாக்கிரகம்

இப்போது என் மனங்குளிர வந்தது பர்தோலி வரிகொடாக் கிளர்ச்சி. அதை நடத்திய வல்லபாய் பட்டேலை வாழ்த்தி, ஆவேசமாகத் தலையங்கங்கள் எழுதினேன். நானும் அங்கே செல்ல நினைத்தேன். அதற்குள் ராஜாஜி ''அங்கே குஜராதித் தொண்டர் ஏராளம். வேண்டுவது பணமே...தாருங்கள் முடிந்ததை'' என்று அறிக்கை விடுத்தார். அதைக் கொட்டை எழுத்தில் போட்டுத் ''தியாக மணி'' என்ற தலையங்கம் எழுதினேன். விவசாயப்பண்ணை, கூட்டுறவு விவசாயம், ஏழைகளின் கண்ணீர், குடியும் கோனும், வரி எதற்கு?'' முதலிய கட்டுரைகளில் என் எண்ணங்களை விளக்கினேன். பர்டோலி நிதி வசூலுக்கு இயன்றதைச் செய்தேன். சத்தியாக்கிரகம் வெகு மும்முரமாக நடந்தது. யாரும் வரி கொடுக்கவில்லை. சர்க்கார் பட்டாணித் துருப்பைக்கொண்டு மிரட்டியது. நிலங்களை ஜப்தி செய்தது. சொத்துக்களை ஏலம் போட்டது. ஆயிரம் ரூபா சொத்தை ஐம்பது ரூபாவுக்குத் தள்ளிவிட்டது. நூறு ரூபா மாட்டைப் பத்து ரூபா என்று ஏலம் போட்டது. (உள்ளூரில் யாரும் ஏலமெடுக்கவில்லை.) ஏலம் எடுக்கக் கூலி குலாமிகளைப் பிடித்துவந்தது. மாடுகளைக் கசாயிக்காரருக்குத் தள்ளிவிட்டது. ஒருவர் செலுத்தவெண்டிய பத்து ரூபா கிஸ்திக்கு ஆயிரம் ரூபா சொத்து பறிமுதலானது. இருந்தும் கிராமவாசிகள் படேலுடன் சத்தியாக்கிரகக் கொடியைப் பிடித்து

னின்றனர். மஹாத்மாவும் "அது தாலுகா சத்தியாக்கிரகமன்று; அகில பாரத சத்தியாக்கிரகம்" என்றார். பிறகு சொல்லவேண்டுமா?

என் மனச்சாட்சி 'எழுதியது போதும், காந்திப்பிரசாரம் செய்' என்றது. ஸ்வராஜ்யாவும் ஆட்டம் கொடுத்தது. பிரகாசம் தைரியவான், தியாகி, ஆனால் நிர்வாகத் திறமையில்லை. ஆட்களுக்குச் சம்பளம் சரியாகத் தரவில்லை. என்னைப்போல் மற்றவர் வேர்க்கடலையும் வாழைப்பழமும் சாப்பிட்டிருக்க முடியாது. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். நான் அடிக்கடி அவர்களுக்காகப் பரிந்து பேசிப் பணம் வாங்கித் தந்தேன். ஒருநாள் பத்திரிகைக்குக் காகிதம் வாங்கக்கூடப் பணம் தட்டியது. நானும் குமாரசாமி செட்டியாரும் ஸ்ரீநிவாசையங்காரிடம் சென்றோம். செட்டியார் பணம் கேட்டார். ஐயங்கார் கூடத்தில் அங்குமிங்கும் புனுகுப்பூனைபோல் உலாவினார். செட்டியார் ரூ. 500 கேட்டார். "இந்த பிரகாசம் அன்னபூர்ணையா பேச்சு இங்கே பேசாதேயும்" என்று உள்ளே போய்விட்டார். நான் செட்டியாரை அனுப்பிவிட்டுக் காத்திருந்தேன். ஐயங்கார் மறுபடி வந்தார். உம்மைச் சொல்லவில்லை பாரதியார். அது சரியா நடக்காது. மறுபடி நீர் பேசாமல் புறப்படும் காங்கரஸ் சேவைக்கு." என்று தூண்டினார். மனச்சாட்சி 'புறப்படு' என்றது. அதுமுதல் நான் அநேகமாக தமிழ் நாட்டில் ஊர் ஊராகச் சுற்றிக் காந்தி வழிக்கு நாட்டை அழைத்துவந்தேன். ஸ்வராஜ்யா நடந்த வரையில் அதற்காக எழுதினேன். என் சாமான்களையெல்லாம் சுப்பிரமணியத் தெருவில் உள்ள ஜைன தர்மசாலையில் போட்டேன். இனி அங்கே ஜாகை. அங்கே எனது தியானத்திற்கும் சௌகரியம் இருந்தது. அங்கே ஜீனானந்தமும் படித்தேன். மாடியில் இரவில் உலாவுவேன். அப்போது தனம்மாள் வீணை கேட்கும்! நாகரத்னம்மாள் பாட்டு காற்றில் மிதந்து வரும். குழலோசை காதைக் கொஞ்சும். என்னுடன் சிவானந்த சுவாமிகள் இருந்தார். வேதாந்த ஆராய்ச்சி செய்தோம். பாலசந்யாசி, ரசவாதமும் வைத்தியமும் செய்தார். அவருக்கு மந்திர சித்தியும் உண்டு. அவர் வித்தைகளையும் கண்டேன். அங்கே சில வைத்திய மாணவர் இருந்தனர். அவர்களுடன் வைத்திய நூல்களைப் படித்தேன். அனைத்திற்கும் மேல் காங்கரஸ் நண்பர் அங்கே வந்தார்கள். பார்டோலிப் பேச்சே நடந்தது. ஒருநாள் யாத்திரை கிளம்பினேன். தஞ்சையில் பந்துலு ஐயரைக் கண்டேன்; பாபநாசம் தாலுகா மகாநாடு நடத்தி, காந்தி கொள்கைக்கு ஆக்கந்தர வேண்டினேன். அவர் நானே சத்தியாக்கிரகக் கொடியேற்றவேண்டும் என்றார், ஒப்பினேன். மகாநாட்டுக்கு காந்தி பக்தரான திருகூட சுந்தரனாரைத் தலைவராகத் தேர்ந்தோம். மகாநாட்டுக்குத் தயாரிப்புகள் நடந்தன. இதற்குள் சத்தியமூர்த்தி "பாரதி புறப்படும் திருநெல்வேலிக்கு" என்றார். புறப்பட்டேன். அக்காலம் நடந்த அரசியல் மகாநாடுகளில் நான் கொடி ஏற்றினேன்.

286. நாங்குநேரி மகாநாடு

நாங்குநேரி மகாநாட்டிற்கு நான் கொடியேற்றச் சென்றேன். அதற்குத் தலைவர் சத்தியமூர்த்தி. கதர் கண்காட்சி திறப்பவர் திருகூட சுந்தரம் பிள்ளை. சத்தியமூர்த்தியும் நானும் திருநெல்வேலியில் சாது கணபதி பந்துலு விட்டில் தங்கினோம். பந்துலு சக்தி பூஜைபற்றி என்னிடம் கேட்டார். வர்ணித்தேன். மாலை வீரராகவபுரத்தில் மாபெரும் கூட்டத்தில் சத்தியமூர்த்தியும் நானும் பேசினோம். அவர் சட்டசபை நாடகம் பற்றிப் பேசினார். நான் கம்பனில் அங்கதன் தூதுப் படலத்தைக்கொண்டு, காந்தியின் தீரத்தைப்பற்றிப் பேசினேன். இரவில் திருநெல்வேலி சந்நிதித் தெருவில் பெரிய கூட்டத்தில் சத்தியாக்கிரகமே சுதந்தரந் தரும் என்று இசையுடன் பேசினேன். சத்தியமூர்த்தி என் பேச்சை மெச்சினார். அவர் என் உணவு தியானம் கவிதை அனைத்தையும் கவனித்து சுத்தானந்த ரிஷி என்றார். "நீர் குஷி, இவர் ரிஷி" என்பர் நண்பர். காலையில் திருகூட சுந்தரமும் வந்தார். எல்லாரும் நாங்குநேரி சேர்ந்தோம். எங்களுக்கு மேளதாளங்களுடன் பெரிய ஊர்வலம் நடந்தது. பந்தல் ஏற்பாடுகளெல்லாம் வெகு சிறப்பு. நான் "ஒற்றுமையாய்ப் பணிவோம்" என்ற கொடிப்பாட்டுப் பாடி, அரைமணிநேரம் பேசிக் கொடியேற்றினேன். பிறகு திருகூடசுந்தனார் கதர்க் கண்காட்சியைத் திறந்து காந்தியத்தைப்பற்றிப் பேசினார். நான் மகிழ்ந்தேன். ஜாகைக்குச் சென்றதும் அவருக்கும் சத்தியமூர்த்திக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர், சட்டசபைக்குப் போனாலே எதிரிகளை அடக்கலாம். வயிற்றெரிச்சல் தீர சர்க்காரை நாலு டோஸ் கொடுக்கலாம் என்றார். "சத்தியாக்கிரகம் செய்தால்தான் சுதந்தரம் பெறலாம். சட்டசபையே நமதாய்விடும்; பிறகு நீங்கள் விடியவிடியப் பேசலாம்" என்றோம் நாங்கள். சத்தியமூர்த்தி தலைமையுரை கம்பீரமாயிருந்தது. சைமன் பகிஷ்காரம் பிரிடிஷ் சாமான் பகிஷ்காரம், கலப்புத் தொகுதி, சட்டசபைப் போர் இவற்றை அவர் வலியுறுத்தினார்.

நான் தேசத்தொண்டர் மகாநாட்டிற்குத் தலைமைதாங்கி, "சுபாஷ் ஜவஹர் போன்ற இளைஞர் நமக்கு வேண்டும். அவர்கள் சாதிமத பேதமில்லாமல், நிலையான தேசப்பணி செய்யவேண்டும். அதற்கேற்ற அறிவும் திறனும் வளர்க்கவேண்டும். இளமை சக்தி; சக்தியைப் பெருக்கி தேசப்பணியில் ஈடுபடுத்துக" என்று ஒருமணி நேரம் சரித்திரக் கோட்பாடுகளுடன் பேசினேன். மறுநாள் தீர்மானங்களில் நான் பார்டோலி சத்தியாக்கிரகத்தை ஆதரித்தேன். கிராம நிர்மாணமே தேச நிர்மாணம் எனப் பேசினேன். அன்று எங்களுக்குக் கோயில் சேவை செய்து வைத்தார்கள். திருவாய் மொழி பாராயணம் கேட்டேன். நான் பகவத் கீதை பாராயணம் செய்தேன். எனது தேசியகீதங்களை ஒரு வித்வான் இனிமையாகப் பாடினார். மறுநாட்

காலை சத்தியமூர்த்தியும் நானும் திருநெல்வேலிக்குச் சென்றோம். அங்கே நான் திருகூடசுந்தரனாரைக் கண்டு பாபநாசம் தாலூகா மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டினேன். அவர் உடனே தலைமை உரை எழுதத் தொடங்கிவிட்டார். நான் கல்லிடை குற்றாலம் சுற்றிச் சென்னை சென்று, ஸ்வராஜ்யாவில் ஒத்துழையாமை தத்துவம் என்ற தொடர் கட்டுரைகளை எழுதினேன்.

287. பாபநாசம் மகாநாடு

பந்துலு ஐயர் பாபநாசம் மகாநாட்டிற்கு அழைத்தார். சென்றேன். மனங்குளிர எல்லாம் நடந்தன. எல்லாம் காந்திமயமே. திருகூடசுந்தரனாரும் நானும் சேர்ந்தே அதை நடத்தினோம். அவர் தலைமையுரையில் 'காந்தி தர்மமே விடுதலை தரும்' என்றார். நான் காலையில் காவிரியாடி தியானித்து ஒன்பது மணிக்கு மங்களவாத்யம் முழங்க கொடிப் பாட்டுடன் ஜண்டா உயர்த்தி, அரைமணி பேசினேன். "மகாநாடு என்பது நாடக மேடையில்லை. நாங்கள் இங்கே பந்துலு ஐயரின் விருந்தாளிகளாகச் சாப்பிட வரவில்லை. மகாநாடு சேவா நிலையம்; நாங்கள் சேவைத் திட்டம் வகுத்து, நடத்தவே வந்தோம். காந்தி சேவையே தற்காலம் தேசம் வேண்டுவது. சத்தியாக்கிரகமாகிய பலிபீடத்தில் சுயநலத்தைப் பலிகொடுத்து, தியாக திட்சை பூண்டு, பொதுநலம் புரிவோம். அதற்கு அறிகுறியாகவே இந்தக் கொடியை உயர்த்துகிறேன். இது காந்திதந்த மூவர்ணக் கொடி. இது தியாகவீரம், ஆத்மசாந்தம், தேசச் செழிப்புகளைக் குறிக்கும். தேசம் சுதந்தரச் செழிப்படைய தியாகம் செய்து, அமைதியாக, ஒற்றுமையாக, எல்லாரும் சேர்ந்து பலனை அனுபவிப்போம். இந்தக் கொடி இன்று காங்கரஸ் மாளிகையில் பறக்கிறது. இது ஒரு நாள் டில்லி செங்கோட்டையிலும் சிம்லா உச்சியிலும், கௌரிசங்கரத்திலும் பறக்கும் நாளை மனக்கண்ணால் காண்கிறேன். இந்த தர்மக் கொடியை உலகெல்லாம் வணங்கி காந்தி நாமம் சொல்லும் நாளையும் காண்கிறேன். மகாத்மா காந்திகு ஜே" இது என் பேச்சின் சுருக்கம்.

பிற்பகலில் ஒரு வீட்டில் ராட்டினங்கள் வைத்து இருபதுபேர் நூற்கும் காட்சியைக் கண்டேன். அங்கே அரைமணி பேசினேன். மறுநாள் தீர்மானங்கள் விவாதத்திற்கு வந்தன. ஒத்துழையாமைத் தீர்மானத்தைச் சட்டசபைக் கட்சி பலமாக எதிர்த்தது. நான் எழுந்து ஒருமணிநேரம் பேசினேன். அதன் சாரம் இதுவே, "காங்கரஸ் என்றால் முன்னே டிசம்பரில் கூடி ஆங்கிலத்தில் உள்ள வார்த்தையெல்லாம் கொட்டியளந்து, யூனியன் ஜாக்கை வணங்கி வரங் கேட்டும் நாடகமாயிருந்தது. காந்தி புகுந்தபிறகுதான், அதற்குச் செயல் வேகம் ஏற்பட்டது. 1920-ல் தேசமே காந்தியமானது. இத்தகைய பொதுஜனக் கிளர்ச்சி யாங்கும் இல்லை. காந்தி எரவாடா சிறை

சென்றதும் தாஸ் மோதிலால் சுயராஜ்யக் கட்சியைக் கிளப்பி, சட்ட சபைக்குள் புகுந்தனர், பேசினர், குஸ்தி போட்டனர். காரியம் நடக்க வில்லை; வெளியே வந்தனர்; மறுபடி உள்ளே போகின்றனர். நிலை யான பணி எதுவும் இல்லை. தேர்தலில் இப்படிக் கொட்டும் பணத்தை ஆக்கவேலையில் போட்டால், பஞ்சம் தெளியும், பட்டினி நீங்கும், மானம் தக்கும் அறிவு பெருகும் ஆற்றல் வளரும், ஒற்றுமை உண்டாகும். சுதந்தரம் தானே வரும். சிலர் "இன்று காந்தி காலம் மீளுமா?" என்கின்றனர். காந்திவந்தாலே சுதந்தரம் வரும். உப்பு வரி நீங்க, சட்டசபையில் மன்றாடுகிறார்கள். காந்தியும் அதுபற்றிப் பேசியிருக்கிறார். அதைக் காரணமாகக் கொண்டு இரண்டாம் சத்தி யாக்கிரகப் போர் தொடங்கும். தஞ்சாவூர் ஜில்லாக்காரர் தயாரா யிருங்கள். மகாத்மாவுக்கு உண்மையாயிருங்கள். சுதந்தரம் பறந்து வரும்." மகாநாடு இனிது முடிந்தது.

288. மனம் சலித்தது

சென்னைக்கு வந்ததுமே காங்கரஸ் ஆபீஸ் போன் அழைத்தது, சென்றேன். ஸ்ரீ வேங்கடராமர் "பாரதியார் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். காங்கரஸ்—ஸ்வராஜ்யக் கட்சிக்காகப் பேசி, தேர்தல் வெற்றிபெற ஆதரவு தேடவேண்டும்" என்றார். ஆஹா தேசத்திற்காகப் பேசுகிறேன் என்று புறப்பட்டேன். நான் வருவதாகப் பத்திரிகைச் செய்தி பார்த்ததும், ஏராளமான சங்கங்களும் சபைகளும் அழைத்தன. இருபது இடங்களுக்கு வருவதாகத் திட்டம் வகுத்து அனுப்பினேன். இதற்குள் சென்னை அரசியல் எனக்குப் புளித்தது. அது வெறும் வசைபுராணமாக மாறிவிட்டது. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் லண்டனுக்குக் கிளம்பினார். பெசண்டம்மையாரும் தமது காமன் வெல்த் திட்டத்தைப் பிரசாரம் செய்யக் கிளம்பினார். இருவருக்கும் கோகலே ஹாலில் உபசாரங்கள் நடந்தன. ஸ்ரீநிவாசருக்கு உபசாரம் நடந்தபோது எனக்கு கோகலே ஹால் மாடியில் ஒரு நண்பர் பலமாக உபசாரம் நடத்தினார். அகராதியில் இடம்பெற முடியாத வசவுகளையெல்லாம் அன்று கொட்டித் தீர்த்து, "நீர் ஏன் ஸ்வராஜ் யாவை ஒப்புக்கொண்டீர்? பிரகாசம் தொழிலாளிகளுக்குச் சம்பளம் சரியாய்த் தருவதில்லை. தமிழ் ஸ்வராஜ்யாவில் இப்போது நீர் வந்தபின் நல்ல லாபம். பத்திரிகை நன்றாகச் செலவாகிறது. அதன் லாபமெல் லாம் ஆங்கிலத்திற்குப் போகிறது. தமிழ்நாடு காங்கிரஸ் பதினாயிரம் ரூபா அதற்காகத்தந்தும், இப்படி ஊழலாக நடத்துகிறான் மனிசன். உமக்கு மானம் வெட்கம் ரோசம் மீசை, இருந்தால், வாரும் வெளியே. நீர் நிலக்கடலை தின்று தண்ணீர் குடித்திருக்கலாம். தொழிலாளர் அப்படி இருக்க முடியுமா? மூன்று மாதம் சம்பள பாக்கியானால், ஏழைகள் எப்படிப் பிழைப்பது? நீர் நாசமாய்ப்போக..." இனி வசை புராணம். நான் பேசாமல் கேட்டுக்கொண்டு "வந்தனம்; என் மனச்

சாட்சி சொன்னபடி நடப்பேன். நான் இப்போது தனியாகவே இருக்கிறேன். பத்திரிகை நடக்கு மட்டும் பொதுஜன சேவையாக எழுதுவேன்.'' என்று விடை பெற்றுக்கொண்டேன். மறு நாள் அரசியல் கூட்டம் ஒன்று காங்கரஸ் காரியாலயத்தில் நடந்தது. அதில் அதே பேச்சு வீரருக்கு டோஸ் விழுந்தது. என்னைப் பேசியது போலவே அவர் பாஷ்யமைய்யங்கார் முதலியோரைப் பேசி, இன்னும் என்னென்னவோ செய்தார் என்று அவர்மேல் குற்றம் சாட்டினர். அவர் காங்கரஸிலிருந்து விலகிநிற்க நேர்ந்தது. மறுநாள் ஒரு தனிக்கூட்டம்; அதில் "அவன் இப்படி இவன் அப்படி. அவன் இருந்தால் நான் விலகுவேன். இவன் வாடை என்கிட்ட வரக்கூடாது. என்றெல்லாம் இழிபுராணங்கள் காதைத்துளைத்தன. இதனிடையே "பாரதியார் உமது பிரசங்கங்களில் அந்தப் பயலைப்பற்றி உயர்வாகப் பேசுகிறீர். அப்படிப் பேசினால் உம்மைத்திட்டுவேன்.'' என்றொரு மிரட்டல். தலைவருக்குத் தலைவர் பொறாமை, போட்டி; கோள்கடியோ தேள்கடியை விடக் கொடிது. இங்கே ஒன்று அங்கே ஒன்று பேசுவது. பணந் தருபவருக்கு ஐந்தாங்காலமாக உதவி, நல்லவர்களைப் பற்றியும் கோளேற்றி, மித்திரபேதம் செய்வது. மகாநாடுகள் என்று ஆர்ப்பாட்டம் செய்து, பணம் வசூலித்து அபக் பண்ணி, தேர்தல் நாடகம் நடத்துவது. வகுப்புத்துவேஷம் ஆலகால விஷம்போலப் பரவியது. இவற்றிற்கிடையே ஸ்வராஜ்யாவில் என் உத்தரவில்லாமல் ஒரு செய்தி வந்துவிட்டது. அது திராவிடன் ஆசிரியர் கண்ணப்பரைப் பற்றியது. அவர் எனக்கு லாயர்நோடீஸ் தந்து, மானநஷ்டிக்குப் பிராது போடுவேன் என்று மிரட்டினர். நல்லவேளையாக பிரகாசம் தக்க லா பாயிண்டு சொன்னர். சமாதானமானது.

பிரகாசத்தின் தியாகத்தில் எனக்கு நல்லமதிப்புண்டு. என்னிடம் அவருக்கு உயர்ந்த எண்ணமுண்டு. ஒரு நாள் அவரிடம் பத்திரிகை நன்ருக நடக்க வேண்டுமானுல் பணம் வேண்டும். ஐந்தாறு பேர்களைக் கமிட்டியாக நியமித்து, பதினயிரம் ரூபாயாவது சேர்த்து காகிதம் நிரம்பவாங்கி அடுக்கி, காரியம் செவ்வனே நடத்தினல், என் பேனு சந்தோஷமாக ஓடும்'' என்றேன், ''அந்தா சேஸ்தாமண்டி'' என்ருர். அப்போது ஒரு தந்தி வந்தது. டில்லிக்குச் செல்லவேண்டும். உடனே பீரோவைத் திறந்தார். ஒரு பெரிய வெள்ளித்தட்டை எடுத்தார். மனைவி ஐயோ என்று முறையிட்டழுதாள். பிரகாசம் பேசாமல் மோடாரில்ஏறினுர். நானும்கூடவே சென்றேன். மந்திரி முத்தையா முதலியாரிடம் தட்டை அடகுவைத்துப்பணம் வாங்கினுர். அப்படியே ஸ்வராஜ்யாவுக்கு வந்து, ''ஸ்வாமிகாரு, பார்டோலி காம்பரன்ஸ்'' என்று ரயிலேறிப் பறந்தார். இப்படி அவர் பலதடவை தம் பொருளை தேசசேவையில் அள்ளிக் கொட்டக் கண்டிருக்கிறேன். பெருந்தன்மை என்ருல் பிரகாசம். அதைரியமான பேச்சே அவரிடம் இல்லை. அந்த வாரம் பத்திரிகை வறுமையால் தள்ளாடியது. குமாரசாமி முதலி

யோர் எனது பாங்குப்பணத்தை அதில்போடும்படி வேண்டினுர்கள். தியானித்தேன்; "இது நடக்காது. செல்முன்" என்றது அந்தராத்மா. என் வாழ்வின் லட்சியம் பத்திரிகையன்று. இதெல்லாம் எனது வினைகள் தீர இறைவன் அளிக்கும் சந்தர்ப்பங்களே. "சரி; இந்த ஆசை தீர்ந்ததா; போ முன்னே. இன்னெரு ஆசையும் தீர்த்துக்கொள். திரும்பிமட்டும் பாராதே" என்பது கட்டளை. ஒரு தினசரிக்கு ஆசிரியனுயிருக்கும் விருப்பம் நிறைவேறியது. இனிக் காங்கரஸ் தலைவனுகச் சுற்றுப்பிரயாணம் செய்து, மேடைமாலை சுமக்கும் ஆசையும்தீர்கிறது.

289. பாதசக்கரம்

பாதசக்கரம் என்னை எங்கெங்கோ இழுத்துச் சென்றது. எல்லாம் என் வைராக்கியத்தைத் தீட்டிக் கூராக்கவே பயனுயின. புறப்படும்போதே "சாமி சலாம்" என்றொரு சாகெபு வந்தார். "நானும் சலாமாலேகும் பிள்ளைவாள்" என்றேன். அவரே என் ஒற்றர் ராமநாதம்பிள்ளை. அவருடன் இருப்பவரே என் ஆங்கிலத்தை எடுக்கும் ஸ்ரீநிவாசாசாரியார். இருவரையும் பல இடங்களில் பல மேடைகளில் சந்திப்போம். இப்போது வாருங்கள் கருங்கல் பாளையம்.

கருங்கல் பாளையம் வாசகசாலை

ஈரோடில் நாயக்கரைக்கண்டு பேசிவிட்டு, இரவு கருங்கல் பாளையம் சென்றேன். கம்பராமாயணியும், சிறந்த காந்தி பக்தருமான தங்கப்பெருமாள்பிள்ளை எனது அத்யந்த நண்பர். அவர் இங்கே சமரஸ சங்கம் நாட்டிச் சென்ருர், காலமானுர். கவிக்குயில் பாரதியார், திரு வி. க. முதலியோர் அங்கே தலைமை வகித்து, ஆண்டுவிழா நடந்ததை அறிவேன். நானும் தலைமைவகிக்கக் கிடைத்தது. ஊர் காவேரிக்கரையில் அழகாக அமைந்தது. அங்கேதான் நீர்க்குழாய் நிலயம் உள்ளது. ஊரார் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்று ஊர்வலம் நடத்தினுர்கள். எனது பாடல்களை இனிமையாகப்பாடி பஜனையும் நடத்தினுர்கள். நானும் அதில் சேர்ந்து பாடினேன். என் உணவு ஒழுக்கங்ளெல்லாம் அறிந்து, பாலும் இளநீரும்தனியிடமும் ஏராளமான நூல்கள் நிரம்பிய புத்தகசாலையும் அளித்தனர். நான் எட்வின் ஆர்நால்டின் லைட்ஆப் ஆசியாவைப் படித்து முடித்தேன். மாலையில் பள்ளிக்கூடத்தில் சபை நடந்தது. உபசார பத்திரத்திற்குப் பிறகு நான் கம்பனில் குகப்படலத்தை எடுத்துக்கொண்டு, காந்தியே தற்கால ராமன், நேரு படேல் போன்ருேர் பரத லக்ஷ்மணர். நாமெல்லாம் குகன் ஜடாயு விபீஷணுதியர் போல் சேவைசெய்து, சத்யாக்கிரகத்திற்கு வெற்றி தந்து, சுதந்தர சீதையை அதிகாரவர்க்கத்திட மிருந்து மீட்க வேண்டும் என்று பேசினேன். மறுநாள் மாலை அரசியல் பொதுக்கூட்டம் நடந்தது. நான் அருட்பாவைக் கொண்டு, ஆன்மநேயம், ஒற்றுமை, உலகசேவை மகாத்மாவின் சத்யாக்கிரகம் பர்டோலி இயக்கங்கள் பற்றிப்பேசினேன் பிரமஞான சங்கத்

தினர் இரவில் என்னை உபசரித்தனர். உலகசகோதரத்வம் பற்றி அவர்களுக்குப் பேசினேன். மறுநாள் வாழ்த்துகள்பாடி என்னை அன்பர் அனுப்பினர். பல ஊர்களைச் சுற்றிக்கொண்டு திண்டுக்கல் போய்ச் சேர்ந்தேன்.

திண்டுக்கல்லில்

திண்டுக்கல் தியாகி டி.ரா. மகாதேவையர் தேசியக்கொடிபிடித்து, "வந்தேமாதரம்" என்று வரவேற்றுக் கதர்மாலை சூட்டினார். அவர் எனது நண்பர், வக்கீல் வேலையைவிட்டு சத்தியாக்கிரகியாகிச் சிறை காத்தவர். அவர் ரமணபக்தர், விடுதலைப்பட்டியில் அவரது ரமணாச்ரமக்குடிலில் இளநீர் பருகிக் கொண்டே நான் மஹர்ஷிகளைப் பற்றிக் கேட்டேன். ரமணகீதையும் படித்தேன். இரவில் வெட்டவெளியில் கயிற்றுக்கட்டிலில் அமர்ந்து, அகண்டாகாரதியானம் செய்தேன். அதோ அந்த ஆகாசம்போல் இருந்தபடி விசாலமாயிரு. காற்றும் கதிரும் ஒளியும் அதனின்றுவந்து உலகைக் காப்பதுபோல், கடவுள் அருளால் எல்லாம் நடக்கும் என்றது ஜீவசாட்சி. மறுநாள் திப்புசுல்தான் மலைக்கோட்டையைப் பார்த்துச்சிந்தித்தேன். அரசியல் வாழ்வின் போக்கைக் கண்டேன். சத்தியாக்கிரகத்தில் சிறைசென்று வறுமையால் வருந்தும் தேசபக்தரையும் கண்டேன். மகாதேவையரே மனைவி மக்களுடன் வீட்டு வாடகை பதினைந்து ரூபாயிலிருந்து காலட்சேபம் செய்வதைக் கண்டேன். மாலை அமோகமாக பஜனை நடந்தது. எனது தேசியகீதங்களைப் பாடினேன். இனிய குரல்கள் பின்னே பாடின, அப்போது ஒரு கிழவன் அரைடஜன் ஆன்மாக்களுடன் தள்ளாடிவந்து, கடைகளில் பிச்சை கேட்பதைக் கண்டேன். அங்கே நின்றேன். "மகாஜனங்களே இந்தியா இதோ இருக்கிறது. இதுதான் நமதுநிலை" என்று கண்ணீருடன் நாட்டு வறுமையைப் பற்றிப்பேசி, வறுமைதீர வழி சொன்னேன். "பாரததர்மமும் பரதர்மமும்" என்பது பற்றி இரண்டு மணிநேரம் பெரிய மைதானத்தில், பதினாயிரம் ஜனங்களுக்குப்பேசினேன். அப்போது என்னருகே மேஜை நாற்காலி போட்டுக்கொண்டு கறுப்புக்கோட்டும் டர்கிகுல்லாவும் அணிந்து, இருவர் அமர்ந்தனர். "நான் வாருங்கோ; கிட்ட வாருங்கோ. சந்தித்த காதலருக்குச் சங்கோஜமேன்" என்றேன். என் ஒற்றரான துரைசாமி பிள்ளையும் ஸ்ரீநிவாசாரியாரும் புன்னகைத்தனர். இனி அவர்கள் என்னை இணைபிரிய மாட்டார்கள். மறுநாள் நாட்டு நிலைமையும் நமது கடமையும் என்பது பற்றிப் பேசினேன். பேச்சின் சாரமெல்லாம் இப்பகுதி முடிவில் வரும். மறுநாள் காலை மதுரைக்குச் சென்றேன். எனது அன்பர் கதர்மாலை சூட்டி வரவேற்றனர். சுப்பராமன் மாளிகையில் ஆனந்தமாக வசித்தேன்:

மதுரையில்

சுப்பராமர் வைத்தியநாதர் ஆகிய இருவரும் மதுரையின் இரண்டு நெஞ்சத்துடிப்புகள். இருவரும் மாசற்ற காந்தி பக்தர், தாராளச்செல்

வர். சுப்பராமன் இனிய அன்பும், செயல்வீறும் படைத்தவர்; அவருக்காகவே நான் மதுரையில் நான்குநாள் தங்கினேன். எனது பிரசங்கத்திற்காகத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கிக் கூட்டம் போட்டார்கள். இரண்டு கூட்டம். ஒன்று அந்திக்கடைப் பொட்டலில்; மற்றொன்று பிளாக்பர்ன் விளக்கடியில். மௌலானா சாகெபும் துளசிராமும் முறையே தலைமைவகித்தார்கள். பாரதசமாஜம் ஸ்ரீநிவாச வரதன் என்னுடனேயே இருந்து, கிணீர் என்று பாரத சமுதாயகீதம் பாடினார். தமிழர் நிலைமை, அரசியல் சூதாட்டம், வெள்ளையன் வெளியேறவேண்டும்—என்பனபற்றிப் பேசினேன். சட்டசபை பட்டம்பதவி நாடகங்களை நகை ததும்பச் சித்தரித்தேன். அக்காலமே மோதிலால் குடியேற்ற நாட்டந்தஸ்து போதும் என்று வாதாடினார். ஜவஹர்நேரு பூரண சுதந்தரம் வேண்டும் என்றார். "சபாஷ் மகனே" என்றொரு பிரசங்கத்தில் ஜவஹரைப் போற்றி, இந்தியா குடியரசாகி, உலகிற்கும் விடுதலை தரும் என்றுரைத்தேன். உலகம் உலகோர் உரிமை. உலகை ஆள்வோர் உலகோரே; தனிமனிதனன்று. என்பதைவிளக்கி உலகசரித்திரத்தைக் கொண்டு, மாணவருக்கு ஒரு சொற்பொழி வாற்றினேன். மறுநாள் மாலை பள்ளிக்கூடத்தில் இருநூறு பேருக்கு இயற்கை வைத்தியமும் யோகாசனங்களும் செய்து காட்டினேன். ஒற்றரும் "இது தான் சரியான தேசசேவை. இவர் வெறும் அரசியல் வாதியன்று; சன்மார்க்க போதகர்" என்று எழுதினர். மதுரையிலிருந்து நான் சிலகிராமங்களைப் பார்த்துக்கொண்டு திடீரென்று விருதுநகர் வந்தேன். ஒற்றர் இங்குமங்கும் தேடித்திகைத்தனர். பிறகு நானே போலீசுக்கு அறிவித்தேன். துரைசாமி பிள்ளையும் வந்து சேர்ந்தார்.

விருதுநகரில் காமராஜ நாடார் என்னை அன்புடன் வரவேற்று ஒரு சைவமடத்தில் அமர்த்தினார். நான் நீண்ட சமாதியில் ஆழ்ந்தேன். எல்லாரும் வெளியே காத்து நின்றனர். விழித்தபோது பல நண்பரைக்கண்டேன். மடத்தில் அப்போது கைவல்யம் நடந்தது. நான் அன்பர்களுக்கு சுத்தாத்வைதசாதனம் பற்றிப் பேசினேன். காமராஜர் எனக்குப் பால் பழந்தந்தார். பிறகு தமிழ் நாட்டு அரசியலைப் பேசினோம். என்னைப்போலவே அவரும் காந்தி பக்தர், பார்தோலி சத்தியாக்கிரகமே இப்போது தேசசேவை என்பவர். நான் சத்தியாக்கிரகத்தைப்பற்றி இரண்டு நாள் பெருங்கூட்டத்தில் இசைநயத்துடன் பக்கவாத்தியங்கள் முழங்கப் பேசினேன். தேசிய பஜனையும் சன்மார்க்க பஜனையும் நடந்தன. மறுநாள் ரயில்வேத் தொழிலாளர் பெருந்திரளாக வந்து, நாங்கள் வேலை நிறுத்தக் கூட்டம் போடுகிறோம். தாங்கள் தலைமை வகிக்க வேண்டும் என்றனர். தலைமை தாங்கி ஒரு மணி "தொழிலாளர் கூக்குரல்" என்பது பற்றிப் பேசினேன். அப்பேச்சில் மார்க்ஸிஸம் லெனினிஸம் காந்தியம் ஆகிய தத்துவங்களை விளக்கினேன். ரயில்வே வேலைநிறுத்தம் பற்றிக் குறிக்கவேயில்லை. அதன் பயன் மறுநாள் தெரிந்தது. ஒற்றர் "இவர் அரசியல் சாஸ்திரம்

பேசுகிறார். குற்றங்காணமுடியாது '' என்றனர். நான் அப்பர் கதை பண்ணி தேவாரம்பாடியே காந்தி சத்தியாக்கிரகத்தையும் பர்டோலி வரிகொடா இயக்கத்தையும் விளக்கினேன். வரிகொடாக் குடியான வர்களுக்குத் தமிழர் வாரிக்கொடுங்கள் என்றேன். காமராஜர் வந் தனுபசாரம்கூறி, வழியனுப்பினார். எல்லாரையும் காந்தி சேவையே செய்யத் தூண்டி, திருநெல்வேலிக்குச் சென்றேன். சிந்திபூந்துறையில் குளித்து, திருகூடசுந்தரனார் வீட்டிற்குச் சென்றேன். அவர் அன்புடன் வரவேற்று, தற்கால அரசியல் பற்றி அளவளாவினார். நான் பிற்கால அரசியல் பேசினேன். பாளையங்கோட்டைக் கோவிலில் இரண்டுநாள் பிரசங்கம் நடந்தது. கதர், தீண்டாமை ஒற்றுமை கிராமசேவை பற்றிப் பேசினேன். முதல்நாள் கதர்கட்டாதவர்களெல்லாம் கைதூக்குமின் என்றார் பிள்ளை. கட்டாதவர் வெட்கினர். மறுநாள் பலர் கதர்கட்டி வந்தனர். பாளையங்கோட்டையில் எனது கிறிஸ்து நண்பரைக்கண்டு அளவளாவினேன். பிறகு தூத்துக்குடியிலிருந்து அழைப்பு வந்தது, சென்றேன்.

290. சிதம்பரம் பிள்ளையுடன்

தூத்துக்குடியில் மாசிலாமணிப்பிள்ளை என்னை வரவேற்றார். அரசியல் உலகின் கோழிச்சண்டையைத் தூத்துக்குடியில் கண்டேன். அங்கே இரண்டு கட்சிகள். ஒத்துழையாமைக் கட்சி என்னைத் தலை வனுக்கி விளம்பரம் செய்திருந்தது. ஸ்வராஜ்யக்கட்சி வரதராஜலு நாயுடுவைத் தேர்ந்தது. அதை நானும் ஆமோதித்து, எழுதினேன். நான் வந்ததுமே ஒத்துழையாமைக்கட்சி, நமது தலைவர் வந்துவிட்டார் என்று தண்டோராப் போட்டது. காங்கரஸ் மகாநாட்டைக் கூட்டிய வர் "என்ன சுவாமிகளே" என்றனர். சில்லரைக் கட்சியாட்கள் எங் கள் பக்கமே பேசவேண்டும் என்றனர். நான் தேசமாதாபக்கம் எல் லாருக்கும் பொதுவாகப் பேசுவேன் என்றேன். ஊரில் கட்சிபேதம் அதிகம். இருந்தாலும் மாசிலாமணிப் பிள்ளையுடனேதான் இருந் தேன். நண்பர் வீட்டில் தங்கினேன்.

நான் வந்தநாளே சிதம்பரம்பிள்ளை மகிழ்ச்சியுடன் என்னை வர வேற்றுப் பழைய கதைகளெல்லாம் பேசினார்—உரம்பெற்ற வீரவுள் ளம், கம்பீரமான கருமேனி, முரசம்போன்ற தமிழ்ப்பேச்சு, பேச்சுக் கேற்றபடி துடிக்கும் மீசை, வக்கில் உடை, அன்பான மனம், புலமை நிரம்பிய சொல் எல்லாம் என் மரியாதையை அதிகரிக்கச் செய்தன : "வீரச் சிதம்பரம் பிள்ளை" என்ற பாட்டைப் பாடினேன்.

நான் : தங்களைக் காணவே மகாநாட்டிற்கு வந்தேன், எந்தாய் வாழ்க!

சித : பாட்டு கம்பீரமாயிருக்கிறது. பாரதி கேட்டால் மகிழ் வான், ஸ்வராஜ்யாவில் தங்கள் தலையங்கம் பார்த்தேன். நடையில்

பழைய விறுவிறுப்பும் புதிய மறுமலர்ச்சியும் உள்ளன. ஆனால் எல்லாம் காந்தி வழியே செல்கிறது.

நான் : அதுவே வழி என்று நம்புகிறேன். எனக்குத் திலகரிடமும் உள்ளன்புதான். அந்த மராடியமீசையில் தங்கள் தமிழ் மீசையின் வீரம் துடிக்கக் கண்டேன். வெள்ளையரை விரட்டியடிக்க அவர் வீரம்பேசினர். தாங்கள் வெள்ளையன் வெட்கக் கப்பல் விட்டீர்கள். தங்கள் தியாகத்தை சுதந்தர பாரதம் பொன்னெழுத்தில் பொறிக்கும்.

சித : நான் சிறையை விட்டு வந்தபோது, எனக்கு மாலை சூட்டி வரவேற்கக்கூட ஒரு தமிழன் இல்லை. எண்ணெய்க்கடை வைத்தும் பிழைத்தேன். வறுமையால் வாடினேன். வாலஸ்துரை எனது சன்னதை மீட்டுத்தந்தார். அந்த நன்றிக்கே என் பிள்ளைக்கு வாலேசன் என்று பெயரிட்டேன். அதற்கொரு குறள்

> கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
> ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

இன்றும் எனக்கு மாதம் முன்னூறு ரூபா தந்தால், இப்படியே அரசியல் மேடையில் குதிக்கிறேன். நான் ஒருவன் கிளப்பினால் தமிழ் நாட்டை உரிமைக்கு அழைத்துச் செல்வேன்.

நான் : இந்தக் காலம் கதர்கட்டினாலே மேடையில் மதிப்பு.

சித : ஹார்வி மில்முன் ராட்டையும் கதரும் எந்த மட்டு ஐயா? இந்தியர் மாஞ்செஸ்டருடன் போட்டிபோட மின்சார யந்திரம் வேண்டும். கொட்டை நூற்று முப்பது கோடிக்கு மானங்காக்க முடியுமா? நான் என் ஊரில் நூற்று நெய்த கைத்தறி ஆடையை அணிகிறேன். நான் காந்தியை வெறுக்கவில்லை. திலகரை மதிக்கிறேன். எனது குருநாதன் சுதந்தரச் சங்கூதினான். விடுதலை பிறப்புரிமை என்று உணர்த்தினான். பாரதி வாக்கில் திலகர் உணர்ச்சியே தவழ்ந்தது.

நான் : தங்கள் உணர்ச்சிதான் பாரதி வாணியாகப் பாடியது. தங்கள் பேச்சு, பாரதிபாட்டு, ஐயர் எழுத்து, சிவாவின் ஆவேசம் இந் நான்கும் தமிழுலகைத்தட்டி எழுப்பின.

> சிறுமைக்கும் ஏனைப் பெருமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்.

சித : எனது குருநாதன் காலத்தில், வகுப்புவாதமே கிடையாது. இன்று நாடு வகுப்புக் கந்தலாயிருக்கிறது. இந்து முஸ்லிம், பார்ப்பான்—அல்லான், வைதிக ஒத்துழையாமை, ஸ்வராஜ்யக்கட்சி என்ற பிரிவெல்லாம் தற்கால அரசியல் ஊழலையே காட்டுகின்றன. எனக்கு மட்டும் வாய்ப்பளித்தால், தமிழரை ஒன்று சேர்ப்பேன். நாயக்கரும்

நாயுடுவும் ஐயங்காரும் ஐயரும் என்னுடன் கைகோத்து நடக்கச் செய்வேன்.

நான்: தடையென்ன? தமிழன் தன்னாட்டு வீரரை மதிக்கத் தொடங்கினாலே, அந்த அற்புதம் நடக்கும். இப்போதுள்ள நிலையை இங்கே வந்ததுமே கண்டேன். பொதுக்கூட்டத்தில் பேசவேண்டாம் என்று பார்க்கிறேன். நீங்கள் பேசினாலே போதும்.

சித: தாங்கள் பேசவேண்டும். நான் கேட்கவேண்டும்.

இச்சமயம் டாக்டர் வரதராஜுலு வந்தார். குசலப்ரஸ்னம் நடந்தது, எல்லாரும் வட்டக் கிணற்றிற்குப் பவனி சென்றோம். அங்கே பதினாயிரம்பேர் கூடினர். சிதம்பரம்பிள்ளை தலைமைவகித்தார். நாயுடுகாரு எம. எஸ். சுப்பிரமணிய ஐயர், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப்பிள்ளை, சுப்பையர்—எல்லாரும் பேசினர். கடைசியில் "சுவாமி சுத்தானந்த பாரதியார் பேசுகிறார், பேசத்தான் வேண்டும், பேசும் பாரதியார்" என்று அழைத்தார் தமிழ்ச் சிங்கம். நான் ஒருமணி நேரம் பேசினேன். அதன் சுருக்கம்:

291. நமது நிலைமையும் கடமையும்

என் அருமைத் தமிழர்காள், வணக்கம். வந்தேமாதரம். நமது தமிழ்ச் சிங்கம் அழைக்கிறது. அதன் கர்ஜனையைக் கேட்டீர்கள். என் அருமை நண்பர் நால்வர் பேசக் கேட்டீர்கள். இனிப்பேச என்ன இருக்கிறது என்று நினைத்தபோது "நாடு இருக்கிறது. காலம் இருக்கிறது" என்று மனச்சாட்சி சொன்னது. இங்கே நான் கட்சிவாதம் பேசவில்லை. அதற்கு வேண்டியபேர்கள் உண்டு. நாட்டு நிலை என்ன நமது கடமை என்ன என்பதையே விளக்குகிறேன். இந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள் எத்தனைபேர் வயிறார மூன்றுவேளை உண்கிறீர்கள்? எத்தனை பேருக்குத் தாராளமாக உடுத்த ஆடையுள்ளது? வசிக்க நல்ல வீடுள்ளது? மனதிற்கு மகிழ்ச்சியுள்ளது? கையைத் தூக்குங்கள். பதினாயிரத்தில் ஐம்பது பேருக்கு நிலைமை சுமாராயிருக்கிறது. மற்றவர்கள் வறுமையில் வருந்துகிறார்கள். தேசத்திற்கே சர்வத்தியாகம் செய்த நமது சிதம்பரம்பிள்ளை வறுமையால் வருந்துகிறார். "என் குடும்பச் செலவுக்குத் தாருங்கள்; தேசசேவையில் குதிக்கிறேன்" என்கிறார். யார்கேட்பது? நான் கிராமம்கிராமமாகச்சுற்றி, மக்கள் நிலையை அறிந்திருக்கிறேன். பசி, பஞ்சம் பட்டினி, வறுமை வெறுமை நோய் நொடி, அழுகை, கண்ணீர்! —இதுவே மக்கள் நிலை. அவர்களுக்குக் கல்வி தருவாரில்லை. நூற்றுக்குத்தொண்ணூறுபேர் தற்குறிகள். கள்ளும் அபினும் தருகிறது சர்க்கார். வேலை தருவாரில்லை; போதை தருவாருண்டு. இந்திய வருமானம் 180 கோடி; 60 கோடி சேனைக்கு, 35 கோடி வெள்ளையர் சம்பளத்திற்கு 5 கோடி. கள் விற்றகாசில் கல்வி நடக்கிறது. இரண்டணாவில் நமது மக்கள் காலட்சேபம் செய்கின்றனர். மற்ற

நாடுகளில் ஆளுக்கு இரண்டு ரூபா தினம் கிடைக்கும். மடமையிருளில் அடிமைச்சங்கிலிபூட்டி, அடக்கு முறையால் வாயை அடைத்து, சுயேச் சாதிகாரம்கொடுங்கோல் புரிகிறது. அடிமைச்சங்கிலியை அறுத்தெறிய 1857 முதல் முயல்கிறோம். நானாசாகெபு சுட்டான். திலகர் கர்ஜித்தார். சிதம்பரம் வீறிட்டார், தேசபக்தர் தியாகவேள்வி செய்தனர். மிண்டோ மார்லி சீர்திருத்தம் வந்தது. பெஸண்டு கிளர்ந்தாள். திலகர் போராடினர்; மாந்தெகு—செம்ஸ்போர்டு திருத்தம் வந்தது. இரட்டையாட்சி பணப்பையை இறுக்கிப்பிடித்துக் கொண்டு, இந்திய மந்திரிகள் குதிரை ஓட்ட, வண்டியில் ஜம் என உட்கார்ந்தது. பிச்சைக்காரனை எழுப்பிச் சோறில்லை போடா என்பது போலத்தான் சீர்திருத்தம். பொய்க்கன்றை வைத்துப் பால் கறந்து, உயிர்க்கன்றை ஏங்கவிடுவது போல், அதிகாரவர்க்கம் பட்டம் பதவி தந்து ஆசைகாட்டி, பணத்தை இறுக்கிக் கொண்டு அனுபவிக்கிறது. காந்திமகான் நாட்டுநிலையை மாற்றினர். புதிய விழிப்பைத் தந்தார். குண்டு பீரங்கியைக் கண்டு நடுங்கிய ஏழை நாட்டிற்கு, ஆத்மசக்தியும் சத்தியாக்கிரகமும் காட்டி தைரியமளித்தார். அதிகாரவர்க்கம் ஸ்தம்பிக்கச் செய்தார். இந்தியா என்றால் காந்தி என்பதை உலகம் அறியும். அந்த மகான் கட்டளையை மீறிச் சிலர் மலையைக்கெல்ல சட்ட சபைக்குள் புகுந்தனர்; எலியைக்கூடப் பிடிக்கவில்லை. கண்ணில் கணவன் கருத்தில் கள்வனை கதைதான். பதவிமோகம், கட்சிச்சண்டை, போட்டி, வசைபுராணம், பகைத்தி இவையே வலுத்தன. இப்போது நாம் சுதந்தரத்திலிருந்து வெகு தொலை இருக்கிறோம். சைமன் எழுவர் நாட்டை நமது செலவில் வந்து பார்த்துச் சென்றனர். ஏதாயினும் வட்டமேஜை முட்டைமேஜை கூடும். இன்னொரு கண்துடைப்புச் சீர்திருத்தம் வரும். சுதந்தரம் வராது. அது மகாத்மா வழியிலேயே வரும். சிவாஜியை மராடியர் பின்பற்றியதுபோல், சீக்கியர் குருவைப் போற்றியது போல், கிராம்வெல் பின்னே இங்கிலாந்து நின்றதுபோல், லெனினுடன் ரஷ்யாபோல், காந்தியுடன் நாம் கருத்தொன்றித் தொண்டு செய்தால், விடுதலை உறுதி. இப்போது பர்டோலி சத்தியாக்கிரகம் அதை விளக்குகிறது. அங்கே யாராவது ஒரு குண்டு போட்டிருந்தால், கிராமமே சாம்பலாயிருக்கும். பிரிடிஷ் படை ஜனங்களை அழித்திருக்கும். சத்தியாக்கிரகத்தின் அன்பு நம்மைக்காத்தது. கதர், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, ஒற்றுமை அன்னியமாயம் விலக்கல்—ஆகிய காந்தி திட்டங்கள் பக்காவானவை. ஸைன்ஸ் மூளைசெய்த கொலைக்கருவிகளைக் குவித்து, உலகை மிரட்டும் அசுரபலத்தை எதிர்க்க நமக்குக் கையில்லை, கத்தியில்லை துப்பாக்கிப் பழக்கமில்லை, பலாத்காரத்தை விட்டு தியாகத்தைக் கொண்டே நாம் காரியத்தைச் சாதிக்க வேண்டும். நாடு நம்மதாகி, வீடு நம்மதாகி, நமக்குச்சரியான நிலைமை வந்ததும், நாமும் வல்லரசுகள் போலப் பலம் பெறுவோம். இப்போதைக்கு எல்லாரும் காந்தியைப் போற்றுவதே அறிவாகும். சில நண்பர் என்னை காந்தி—

மகாநாடு நடத்தச் சொன்னார்கள். இதோ செலவில்லாமல் நடத்தி விட்டேன். இனி நாளை மகாநாட்டிற் சந்திப்போம்.

மகாநாடு சிறப்பாக நடந்தது: எம். எஸ். மணி கொடியேற்றினார், சிதம்பரம் பேசினார். நாயுடுகாரு தலைமை வகித்து இனிது சொற்பொழிந்தார். காலத்திற்குரிய அரசியலை நாம் ஒப்புவோம் என்றார். சட்டசபைப் பிரவேசம் அவசியமே, என்றார்.

மாலை இளைஞர் கூட்டத்திற்குத் தலைமைவகித்து, சுன்யாட் ஸன்னும், கெமால்பாஷாவும் நாட்டு இளைஞரைக் கொண்டு செய்த வேலைகளைச் சொன்னேன். இக்கால இளைஞர் காந்திவழியே நடக்கவேண்டும் என்றேன். சில வீரவாலிபருக்கு ஆவேசரோஷம் வந்தது. குடிராம் போஸ், ராஷ்பிஹாரிகோஷ் தினுசில் புரட்சி பேசினர். அவர்கள் பேச்சை துரைசாமி பிள்ளை அழுத்தமாக எழுதிவைத்துக் கொண்டார். மறுநாள் தீர்மானங்கள்; நான் சாதிமத பேதமில்லாத சமரஸவாழ்வைப் பற்றிப் பேசினேன். தீண்டாமை விலக்கு, இந்துமுஸ்லிம் ஒற்றுமை, கதர் இந்தி ஆகியவை பற்றிப் பேசினேன். ஸ்ரீநிவாசவரதன், எம். எஸ். மணி, குப்புசாமி முதலியார், அண்ணாமலைப்பிள்ளை எல்லாரும் தீவிரநடையில் வெளுத்துவாங்கினார்கள். இர்வின் உட்டை மரக்கட்டையே என்று குப்புசாமி முதலியார் அறைகூவும்போது, சபை குஷியாகக் கைதட்டியது. பலாத்காரப்பேச்சு இங்கே. அங்கே சட்டசபைப்பேச்சு. இன்னொரிடம் இந்து மகாசபைப்பேச்சு. மற்றொரிடம் முஸ்லிம்லீக்பேச்சு. ஒருவரை ஒருவர் தாக்குதல்; எல்லாம் பார்த்தேன். ஒரு பலாத்காரவாதி என்னிடம் வந்தார். காந்தியைத் திட்டினார். பிறகு என்னைப் பழித்தார். நான் கண்ணை மூடிக்கொண்டிருந்து, இன்னும் ஏதாவது பாக்கியிருந்தால் கொட்டித்தீரும் என்றேன். மீண்டும் ஐந்து நிமிஷம் வசவு. சபாஷ் இன்னும் என்றேன். "என்ன இழவு: நான் வைகிறேன். நீர் பொறுத்துக் கொண்டு, இன்னும் என்கிறீரே சரி, இனி உம்மை வையமாட்டேன். நீர் சாமியார்" என்று சொன்னார். நான் தியானத்தில் ஆழ்ந்தேன். புதிய ஆவேச அலைகள் என்னுள் எழுந்தன. மாலைப் பிரசங்கத்திற்கு அழைத்தனர்; சென்றேன்.

292. அருணோதயம் வரும்

என்முன் பதினாயிரம்பேர்; சுற்றிலும் இருட்டு ஆட்சிசெய்கிறது. காந்தவிளக்குகள் அமாவாசை மேகத்தூடு நட்சத்திரங்கள்போல் விளங்குகின்றன. அவை நமது நிலையை நகையாடுகின்றன. சிதம்பரம் பிள்ளை என்னைப் பேசச்சொன்னார். ஒன்றரைமணி நேரம் பேசினேன். அதுதான் இறுதியான அரசியல் பேச்சு. அதன் சுருக்கம் இதுவே:

தோழர்காள், உலகை இருள் சூழ்ந்திருக்கிறது. காந்தவிளக்குகள் வெளிச்சம் தரும்; உலகிருள் அனைத்தையும் நீக்காது. நாம் அருணோதயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். அருணோதயம் வரும்; அதை

வேண்டாதவர் உண்டோ? ஆந்தைகூட அப்படி இப்படிப் பறந்து அதைப் பார்க்கும். இருள் என்று ஏங்கி நிற்பது வீண். விளக்கேற்றி நமது காரியத்தைப் பார்க்க வேண்டும். ஆனால் இருளில் வழிகாட்ட நமக்கு ஒரு கரம்சந்திரர் கிடைத்தார். இடியும் புயலும் வசையும் பொறாமையும் கொடுமையும் கொலையும் சூழும் அரசியல் வானில், அவர் அன்புக்கிரணங்களை வீசி, நம்பிக்கை யுண்டாக்கினார். ராக்ஷஸ பீரங்கிகளும் நாசகாரிகளும், ஒரு வீச்சில் ஊரை அழிக்கும் ஆகாச குண்டுகளும் கொண்டது வெள்ளையரசு. அதனுடன் குண்டுக்குக் குண்டு கொடுத்துக் கைகலக்க நமக்கு இப்போது திறனில்லை, ஒற்றுமை கூட இல்லை. நாடு பஞ்சப்பட்டாளமா யிருக்கிறது. முதலில் சாந்த மாக நமது கைக்கட்டை அவிழ்த்து, தலைநிமிர்ந்து, நிற்கவேண்டும். நமது உள்நாட்டுக் குறைகளைத் தீர்த்துக் கொண்டு, காலத்திற் கேற்ற கல்வியும் கலையும் தொழிலும் வளர்த்து முன்னேறவேண்டும். பாராமை தீண்டாமை, வாராமை தாராமை, பெண்ணடிமை, ஆணடிமை, சாதிப் பித்தம் மதச் செருக்கு, இனவேற்றுமை மனவேற்றுமைகளைப் போக்க வேண்டும். இந்தியாவில் பிறந்தவன் இந்தியன், அவன் எங்கும் உரிமை யுடன் வாழலாம், மனச்சாட்சி கோணாது நடக்கலாம். வீட்டில் எந்த மதம் எந்த இனமானாலும், நாட்டில் நாம் ஒன்று, பாரதசக்திபெற்ற ஒரே குலம் என்பதை உணரவேண்டும். அந்த உணர்ச்சியின் சமதளத் திலேதான் சுதந்தரவாழ்வை நாட்ட முடியும். அன்பின் உச்சியில் ஆத்மசக்திக் கொடியைப் பறக்கவிட்டு, அதன் கீழ் ஆன்மநேயராக வாழ்வோம். நமக்கு இன்னும் இந்த ஆன்மநேயம் வரவில்லை. ஒரே மேடையில் ஒன்பது கட்சி பேசுகிறோம். நேற்று நான் ஒற்றுமைத் தீர் மானம் பேசும்போது, எத்தனை வேற்றுமைப்புயல்கள் என்னைச் சூழ்ந் தன! சாதிப்போட்டி, சமயப்பொருமல், தலைமைப் போட்டி, தன்னலப் பொறாமை, பெருமதிப்பு, அவமதிப்பு நாடகங்களைக் கண்டோம். இந்த மகாநாடுகளால் என்னதான் பயன்? ஐயாயிரம் பத்தாயிரம் இப்படிக் கும்பலில் அள்ளியிறைப்பானேன் என்றும் தோன்றுகிறது. இந்தத் தொகைக்கு ஒரு கைத்தொழிற்சாலையோ கலாசாலையோ வைத் தால், நாட்டின்வறுமையிருளைப் போக்கலாமே என்று தோன்றுகிறது. மகாநாடு வேற்றுமைக்காடாகக் கூடாது. அது நாம் அனைவரும் ஒரே மகாநாடான பாரததேசவாசிகள்,நாம் ஒன்றுபட்டு, சுதந்தரம்பெற்று, சேர்ந்துவாழவேண்டும் என்று உணர்த்த வேண்டும். தேசமெல்லாம் கூடிக் காந்திக்கு, கைகொடுத்தால், ஓராண்டில் சுதந்தரம் காணலாம். வாஷிங்டன் பின்னே அமெரிக்காபோல், கண்ணன் பின்னே பாண்டவ சேனைபோல், ராமனுடன் வானரப் படைபோல் நாம் காந்திபின்னே ராமநாமத்துடன் சென்றால், நம்மைஅடக்கி ஒடுக்கும் அரக்கபலம் அழி ந்து, சுதந்தரம் பெறலாம். இப்போது நாம் கத்திதுப்பாக்கி பிடித்தால், நாஜிசாகெபு பாஷையில் பேசினால், இதோ டயரின் ஆகாசகுண்டு டாம் என்கிறது. நானும் ஒருகாலம் பலாத்காரத்தை நம்பினேன்.

இப்போது காந்தியின் சாந்தவழியேவழி என்று காண்கிறேன். அது கோழையின் வழியன்று; ஆத்ம திரரின் வழியாகும். சிவாஜியின் வீரம், பாஜியின் தைரியம், பிரதாபசிங்கன் தியாகம், குருகோவிந்தன் தவம், சங்கரரின் ஞானம், அப்பரின் அன்பு, வள்ளலாரின் சமரஸம் எடிஸனின் முயற்சியெல்லாம் சேர்ந்து, காந்தியின் சாந்தமுடன் பொருந்தி, நாம் முன்னேறவேண்டும். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகக் கூட்டத்தை முதலில் ஒழிக்க வேண்டும். சிக்கந்தருக்கு ஜீலம் நதியில் பாதைகாட்டிய துரோகிதான், இன்றும் சதிசெய்து, நமது முயற்சிகளைச் சிதறடிக்கிறான். இந்தியனைக் காட்டிக்கொடுக்கும் இந்தியனைப் பதரென ஒதுக்குங்கள். 500 ஆண்டுகளாக நம் நாடு அன்னியருக்கு அடிமையாயிருப்பது இந்தக் கோட்சொல்லிக் குண்டர்களாலேதான். நம்மவரிற் சிலர் அன்னியர் பக்கம் சேர்ந்து, அன்னைமார்பில் வாளைப் பாய்ச்சினர். கைக்கெட்டியது வாய்க்கெட்டுமுன் தட்டிவிடும் வஞ்சர், உண்ணும் சோற்றில் மண்ணைப்போடும் கொடியர், கூட்டைப்பிரித்து இரண்டகம் செய்யும் கோளர்களாலேதான் நாடு இந்தநிலைக்கு வந்தது. நாம் அடிமை; அடிமையில் ஆரிய அடிமையென்ன, திராவிட அடிமையென்ன, தென்னாட்டு அடிமையென்ன, வடநாட்டு அடிமையென்ன? சாதிக்கலப்பும் சமயகலப்பும் மனக்கலப்புமாகி மனிதசமுதாயம் கலந்து போகும் இந்த நாளில், வகுப்புவாதம் பேசுவது அறியாமை. நாம் தமிழர், பாரதர், உலகோர் மானிடர் என்ற உணர்ச்சியுடன் ஒன்றுபட்டு வாழ்வோம். இந்த ஒற்றுமையே வெற்றிதரும்.

தானன்றி உலகில்லை, உலகின்றித் தானில்லை. தன்னை அடக்கியாளுதலே சுயாட்சி. உலகைச் சன்மார்க்க நெறிப்படுத்தலே உலகாட்சி. என்னுள் எதுவோ அதுவே உன்னுள், உன்னுள் கோயில் கொண்ட சுத்தான்மா தான் என்னுள்ளும்; உயிர்க்குயிரான கடவுள் எங்கும் ஒன்றே. பெயர்வடிவ பேதங்களால் கலங்காமல் இந்த ஒருமையை உணர்ந்தால், மனதை உள்ளே திருப்பி ஒருமை கண்டால், வெளிவேறுபாடுகளால் மயங்கோம். சர்ச்சு, மசூதி, கோயில் ஸ்தூபி எல்லாம் கொத்தன்வேலை. உண்மையான மந்திரம் உள்ளமே. அவரவர் உடலே அவரவர் கோயில். அவரவர் அந்தராத்மாவே பொதுக் கடவுள். இந்த ஆலயத்தின் விரிவே உலகாலயம். உயிர்த்தொகுதியான இறைவன் ஆடலே அதன் வாழ்க்கை. வாருங்கள் இந்த உலகக் கோயிலில், உள்ளப்பொருளை, தியானத்தால் வழிபடுவோம். இதில் எல்லாரும் கலந்து கொள்ளலாம்,

தினம் அரைமணிநேரம் இப்படித்தியானித்தால், எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவன்; எல்லா உடலும் இறைவன் ஆலயமே, எல்லா உலகும் வான்சூழ் வீடு என்பது புலனாகும். நம்மைப்போலப் பிறரை மதிப்போம். இது தான் சுத்தயோக ஐக்கியம், சுத்தான்ம—நேயம் என்பதாகும்.

இந்த ஐக்கியத்தால் உலகாலயத்தில் அருட்பணி செய்வோம். சுத்தான்மநேயம் சர்வாத்மயோகம் இரண்டையும் பயில்வோம். இது தான் பாரதசக்தி உலகிற்குத்தரும் ஞானப்பிரசாதம். தூலமான ஆயுத-யந்திர அரசியல் சக்தியைவிட, நுட்பமான ஆத்மசக்தி கோடி மடங்கு பலமுடையது. அதை வளர்க்க யோகப்பயிற்சி வேண்டும். யோகம் என்ருல் மூக்கைப்பிடித்து மூலையில் இருப்பதன்று. நெஞ்சில் இறைவனை உணர்ந்து, அவன் மயமான உலகிற்கு அன்பு செய்தலே யோகம். உள்ளமும் உலகும் இறையும் உயிரும் ஒன்றுபடுதலே யோகம். மின்சாரத்தின் இருகம்பிகள் ஒன்ருகி, சக்திபிறக்கிறது. அது போல், நம் உயிரும் உயிர்க்குயிரான சுத்த சக்தியுடன் உள்ளத்தில் ஒன்ருனல், ஆத்மசக்தி பிறக்கிறது. இதை விளக்கியே நான் பாரத சக்தி மகா காவியம் எழுதினேன். இதை வளர்க்கவே நான் இன்றுமுதல் தீவிரமான யோகம் பயில்வேன். சில ஆண்டுகள் மௌனம் பூண்டு, சக்தியை வளர்த்து, ஆண்டவன் அருளாணையைப் பெற்று, மனிதசமுதாயத் தொண்டில் ஈடுபடுவேன். அதற்குமுன் உங்களுக்கு வற்புறுத்திச் சொல்லுகிறேன். காந்திமகான் உபதேசங்களைப் பின்பற்றுங்கள். கல்வியைப் பரப்புங்கள். படித்தோர் பத்துப்பேருக்குப் படிப்புச் சொல்லித்தாருங்கள். சரித்திரம் தத்துவம் பூகோளம், பௌதிக ரசாயன தாவர கணித—ஞானத்தை எளியநடையில் பொதுஜனங்களுக்குச் சொல்லிக் கலையறிவை வளருங்கள். மடமையிருளைப் போக்குங்கள். கட்சிவாதம் குரட்டுவாதம் வகுப்புவாதங்களை விட்டு, தமிழர் தமிழராக, இந்தியர் இந்தியராக ஒன்றுபட்டு வாழப் பழகுங்கள், மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கும் சைத்தான் பழக்கங்களை ஒழியுங்கள். மனசாட்சியை மதித்து நடந்தால், வேறு மதமே தேவையில்லை. குருபீடங்கள் தம்மையே கடவுள் என்று கோட்டை கட்டாமல், எல்லாரும் இறைவனை அடைய வழி காட்ட வேண்டும். குருமாரைச் சுற்றியே நமது நாட்டின் சாபமான வகுப்பு வாதங்கள் கிளம்புகின்றன. தனிச் செருக்கை ஒழித்து, சர்வாத்ம நேசத்தை வளர்க்க வேண்டும். நமது நாட்டின் சிறப்பான வேதாகமசாதனங்களை எல்லாருக்கும் பொதுவாக்க வேண்டும். சுத்த சன்மார்க்க சாதனமே தனிவாழ்வும் பொதுவாழ்வும் ஆகவேண்டும். கீதை குறள் யோகசித்தி போன்ற நூல்களைக் கற்றெழுகினுல், வேதாகம விதிகளை அறியலாம். பத்திரிகை, கதை, நாடகம் பாட்டு நடனம் அனைத்திலும் வேதாகம தத்துவங்களையும் சுத்தசமரஸ சன்மார்க்க சாதனங்களையும், தேசபக்தியையும், உலகாலயப்பணிகளையும் சர்வாத்ம நேசத்தையும் புகுத்தவேண்டும். பிரிவினைகளை எழுப்பும் நாச வேலைகளை மறுக்க வேண்டும். கிராமங்களை நிறைவாக்கினுல் தேசம் நிறைவாகும். கிராமமே தேசத்தின் வித்து. கிராமமக்களுக்கு, சுகாதாரமான வாழ்க்கை, பசிதீரத் தொழில்வளமை, பாடுபட்டவருக்குப் பட்டினிதீர உணவு, தரவேண்டும். ஐக்கிய நாணயச் சங்கம் வைத்து,

தொழிலாளிகளுக்கு முதல் உதவவேண்டும். பண்டகசாலை வைத்து, கிராமத்தில் பண்டமாற்றுல் வாழ்வு நடக்கச் செய்யவேண்டும். கூட்டுறவுப் பண்ணைகள் கண்டு, ஜீவாதாரத் தொழில்களைப் பொதுஜன நலத்திற்காக வளர்க்க வேண்டும். ரஷ்யாவில் அப்படி நடக்கிறது. வேலை நிறுத்தங்கள் இந்த நாட்டிற்குக் கேடே சூழும். வேலையை அதிகமாகச் செய்யவேண்டும். சோம்பலே கூடாது. பாட்டாளிகளுக்குப் பசிதீர உதவவேண்டும். தொழிலாளர் சங்கம் நாட்டி, புதுப்புதுத் தொழில் துறைகளைக்கண்டு, உழைப்பும் பிழைப்பும் பெருகச் செய்ய வேண்டும். இதுதான் ஆக்கவேலை. நீக்கவேலைகள் சில உண்டு—மது விலக்கு, காப்பி தேயிலை புகையிலை அபின் விலக்கு, தீண்டாமை சாதி மதபேத—விலக்கு, முதலியன. நலத்தை ஆக்கித் தீதை நீக்கினுல். நாடு நலம்பெறும். தேசபக்தி வேண்டும்; தேச இறுமாப்பு வேண்டாம்; சீர்திருத்தம் வேண்டும், வசைபுராணம் வேண்டாம்; வீரம் வேண்டும், கொடுமை வேண்டாம். பேசவேண்டும், கலகம் வேண்டாம். ஸயன்ஸ் வேண்டும்; ஆனுல் பிறர் தலையில் குண்டுபோட வேண்டாம். நாம் நமக்குரிய அத்யாத்மக் கலையுடன், யந்திரக் கலைபயில்வோம். ஸைன்ஸை மனிதர் நலத்திற்கும் முன்னேற்றத்திற்குமே பயனுக்குவோம். நவநாகரிக மினுக்கில் விழாதீர்கள். நமது நாட்டிற்குரிய ரிஷிநாகரிகமே மனிதனைப் புனிதனுக்கும். இந்தியா இழந்தது அரசன்று; ஆத்ம சக்தி, பூரணஞானச்சுடர். அதை மறுபடியும் தவத்தால் பெறவேண்டும். மறுபடியும் நமது நாட்டில் முப்பத்து முக்கோடி தேவர்கள் உலாவக் காண்போம். பாரதசக்தியே உலக ரக்ஷகி. அன்னிய ராகு பீடிக்கும் இப்போதும், பாரத சூரியன் காந்திக்கதிர் வீசிப் பொலிகிறது. ராகு விலகும். பாரதஜோதி உலகிற்குப் புதுயுகச் சுடர்வீசும். தியானக்காட்சியில் இந்தியாவின் விடுதலையைக் கண்டேன். ஆம் இன்னும் இருபதாண்டுகளில் சுதந்தரம் உதயமாகும். இருபதாண்டுகளில் நமது பாரதவர்ஷம் உலகிற் சிறந்த ஜனநாயகமாகும். ஒரு பரமசக்தி அதன்பால் வேலை செய்கிறது. புண்ணிய சக்தியான பாரதமாதாவை யார் இனிக் கட்டிவைப்பார்? அவள் கைவிலங்குகள் 1920-ம் ஆண்டிலேயே அறுந்தன. அவள் இன்று தர்மயுத்தம் செய்கிருள். அவள் வீரக்காளியாயிருக்கிருள். நாளையே ஸ்வராஜ்ய லக்ஷ்மியாக விளங்குவாள். பாரத சக்தி அன்னியருக்கு அடிமையாயிருக்கக் சம்மதிக்க மாட்டாள். ஏனெனில் உலகநாடுகளுக்கெல்லாம் தாயகமும் தாரகமும் மார்க்கதரிசியும் தீர்க்கதரிசியும் பாரதசக்தியே. அதுவே போர்வெறியாலும் ராக்ஷஸகுண்டுகளாலும் துன்புறும் நாடுகளுக்குத் தருமசஞ்சீவியாகும். பாரதசக்தியின் அருட்காந்தமே மனிதசமுதாயத்தை தெய்வ சேதனத்தில் நிலை நிறுத்த வல்லது. ஒருவரை யொருவர் விழுங்கி, பகாசுர வேலைசெய்யும் உலகிற்கு, முடியரசும் குடியரசும் தடியராசாகி வருந்தும் அரசியல் உலகிற்கு, அன்பொளிவீசி அருளாட்சி தருவது பாரத சக்தியே. பாரதசமுதாயம் தர்மலட்சிய வடிவமாகும். தர்மம் இருக்குமட்டும், பாரதம் இருக்கும். தர்மம் எந்நாளும் அழியாது. இந்த அடிமை

நிலையிலும் அது ஞானரத்னங்களை உலகிற்குத் தருகிறது, சென்ற 500 ஆண்டுகளாகவே இந்த நாடு அன்னியமாயத்தால் வருந்தியது. இது அதன் கற்ப காலத்தில் ஒருசிறு கனவுபோலாகும். கனவு கரைந்தது. இன்று நம்மை வாட்டும் தீமைகளெல்லாம் பிசு பிசு வாணம்போல உதிரும். காலத்தால் படர்ந்த வேற்றுமைச் சாம்பலை ஊதியெறிந்து, ஆத்ம சக்திக்கனல் பொலிகிறது. அதை யார் சிறையிட முடியும்? சீதையை ராவணன் எத்தனை நாள் சிறைவைக்க முடியும்? ஹனுமான் வந்தான். கணையாழி தந்தான். ராமன் வந்தான். மாதா அசுரபலங்களைச் சுட்டெரித்து விடுதலை பெறுகிருள். உலகிற்கும் சுதந்தரம் தருகிருள். நம்புங்கள். மனிதசமுதாய மாசுகளை ஊதியெறிய ஒரு தெய்வசக்தி உதிக்கிறது. அருணேதயத்திற்கு முன் இருள் அடரும். ஒரு தெய்வப் புன்னகை இருளை ஓட்டும். பாரதசக்தி விளக்க மாகிறது. அதைத் தடுக்கப் பல அசுரசக்திகள் இடர்செய்கின்றன, பகல் எழுந்தால் இரவின் ஆட்டமேது? அசுரபலங்கள் பாரதப் பாஞ்சாலியைத் துயிலுரிகின்றன. காந்திகதரால் மானம் காக்கிருர். ராம் ராம் என்று அவர் முறையிடுவது சும்மா போகுமா? கண்ணன் பாஞ்ச ஜன்யம் முழக்கி அர்ஜுனரை ஏவிவிட்டான். நவபாரதப்போர் சத்தியாக்கிரகமான பாசுபதாஸ்திரத்தால் வெற்றிபெறும். அதர்மத்தின் சாம்பலில் தர்மம் வேரூன்றி, பொருள் கிளைத்து, இன்பம் மலர்ந்து அருள்பழுக்கும். அசோகன் வரையில் நமது நாட்டுக்குக் கோடை; பிருதிவிராஜனுக்குப் பிறகு இலையுதிர்காலம், இப்போது மாரிகாலம்; வசந்தகாலம் மறுமலர்ச்சிக்கலைகளுடன் ஆத்மானந்தத் தாண்டவமாடி வருகிறது. ஞானக் கமலங்கள் பூத்தன. அன்புக்குயில்கள் அகவின. சோர்வு தளர்கிறது. தைரியம் வளர்கிறது. தர்மசாந்தமும், பீமபலமும், விஜயவீரமும், சகாதேவ—அறிவும், கிருஷ்ணயோகமும், கர்ணதியாகமும் ராம பராக்ரமும், சீதாசக்தியும், சாவித்திரி சுத்தமும் கொண்டு, பாரத சக்தி அவதரிக்கிறது. உலகெல்லாம் பாரதமந்திரத்தில் கூடி வணங்குகிறது. அந்தக் காட்சியை யோகத்திற் காண்கிறேன். பாரதசக்தியை வளர்க்கும் யோகத்திற்கே எனது வாழ்வைப் பலிதானமாக்குவேன்' நண்பர்காள் இதுதான் எனது இறுதிப்பேச்சு. நல்விடை! ஓம் சுத்தசக்தி. ஜய பாரதசக்தி!

293. வழியில் ரகளை

இரவில் சிதம்பரம் பிள்ளை "என்ன பாரதியார் ஆவேசம் கரை புரண்டு போனது. யோகத்திற்கே வாழ்வை நிலைக்களனக்கியவர் என்று ஐயர் ஒருதரம் சொன்னர். இன்றே கண்டேன். சித்தாந்த தத்துவங்கள் பல தங்கள் வாழ்வில் விளங்குகின்றன" என்ருர். 'வீர சிகாமணியே, இது என்னை எதிர்காலம். நான் என் எதிர் காலத்தை நோக்கித் தவம் புரிவேன். என் உள்ளம் அரசியல் மேடையை விலகி, மலைக் குகையை நாடுகிறது. எனது தவம் நிறை

வேற நல்லெண்ணங்களை அனுப்புங்கள்'' என்று விடை பெற்றேன். மற்றவர்கள் என்னைப் பைத்தியமென்றே கேலி செய்தனர். இவருக்கு யோகமே பெரிது தேசம் பெரிதல்ல என்றனர். நான் எதையும் பாராட்டாமல், வண்டியேறித் திருநெல்வேலிக்கு வந்தேன். அனந்த கிருஷ்ணையர் கண்டு சேரமாதேவிக்கு அழைத்தார். ஷண்முகனார் 'குற்றாலம் வாருங்கோ; நமது தேர்தலுக்கு பிரசாரம் செய்யலாம்' என்றார். ஒற்றர் 'சுவாமிஜீ, தொழிலாளர் வேலை நிறுத்தம் இதோ தொடங்கும். உடனே சென்னைக்குப் புறப்படுங்கள்'' என்றார். நான் நண்பருக்கு வந்தனம் கூறிப் புறப்பட்டேன். கட்சிப் புயல் வீசும் அக்கால அரசியலை நீத்தேன். துரைசாமி பிள்ளை எனது சொற் பொழிவைக் குறுக்கெழுத்தில் எழுதினர். ''சாமிகளே தப்பினீர்கள். பலாத்காரம் வராமல் வேதாந்தம் பேசிவிட்டீர்கள். இன்ஸ்பெக்டர் ஜெனரலே இப் பேச்சை வியந்தார். பர்டோலியில் ஒரு துப்பாக்கி வெடித்திருந்தால், ஊரே பீரங்கிக்கு இரையாயிருக்கும். தியாக வழியே வழி என்றது எங்களைத் தப்பச் சரியான வழி'' என்றார். மதுரையில் மங்கம்மாள் சத்திரத்தில் தங்கி நண்பரைப் பார்த்துக் கொண்டு வண்டி யேறினோம். கலாட்டா தொடங்கிவிட்டது. ஆயிரம் குரல்கள் ''வாழ்க தொழிலாளி! வீழ்க முதலாளி! ஏழைகள் ஏமாறோம். பாடுபட்டும் பசித்திரோம்!'' என்று குமுறின. இரவு செல்லச் செல்ல வழிநெடுகக் கூச்சல், கைகலப்பு, தடியடி, வசை. தொழி லாளர் தலைவரான சிங்காரவேலுவும் முகுந்தலாலும் சிறைப்பட்டனர். தொழிலாளர் ஆத்திரம் எரிமலையானது. எல்லாரும் கூச்சலிட்டு அட்டகாசம் செய்து, வெளியே நின்றனர். பலாத்கார வேலைகளும் நடந்தன. போலீஸ் தடிக்கும் நல்ல வேலை. வண்டி, நத்தைக்கும் பிந்தியது. கைகாட்டி நீட்டியபடியே இருந்தது. இறக்க ஆளில்லை. விளக்கில்லை. இருள் கும் என்றிருந்தது. ''ஆர்ப்பாட்டமுள்ள ஸ்டேஷன்களுக்கு இரண்டு மைலுக்கு இப்பாலே வண்டி நின்றது. ஸ்டேஷன் மாஸ்டரே எல்லா வேலையும் செய்ய நேர்ந்தது. செங்கற் பட்டில் நான்குமணி நேரம் தாமதம். ஒற்றர் எனக்குத் தண்ணீர் தந்து உதவினர். ஏழைத் தொழிலாளரைப் போலீஸார் விலங்கு மாட்டி உதைத்துக்கொண்டுபோன காட்சி என்னை உருக்கிவிட்டது. ஐயோ வயிற்றுக்கொடுமை தாங்காமல், நாலுரூபா கூடக் கேட்கும் ஏழைகளுக்கோ இந்தக் கொடுமைகள்! தொழிலாளிகளுக்கு ''வெற்றி வெற்றி'' என்றொரு பாட்டெழுதினேன். ஒற்றர் பார்த்துக்கொண்டே யிருந்தனர். ஐயா என்னைச் சிறையிட்டால் ஒரு தனிச் சிறையில் தவம் புரியும்படி வைக்கவேண்டும் என்றேன். தங்களைச் சிறையிட எங்க ளால் முடியாது என்றனர். சென்னை வந்தது. பிரகாசத்தையும் சத்தியமூர்த்தியையும் பார்த்து விடை பெற்றேன். மறுநாள் எனது ஜாகையில் ஒரு லப்பை சாகெபு நுழைந்து, அறநூல் கேட்டார். என் பெயரால் சித்தானந்த புத்தகாலயம் நடந்தது. அங்கே வாங்கிக் கொள்ளச் சொன்னேன். லப்பை நாளை எங்கே என்றார். கடவுள்

விட்ட வழியே என்று கண்ணை மூடினேன். லப்பை, துரைசாமி பிள்ளையே.

நான் விருபாட்சி குகையிலிருந்தபோதே தூத்துக்குடி ராஜத்ரோக வழக்கு நடந்தது. என்னைப்பற்றி பத்திரிகையில் தினம் கேள்வி வந்தது. என்னிடம் ஒற்றர் வரவில்லை. சாமியாரைத் துரத்திப் பயனில்லை என்று விட்டுவிட்டார்கள். தூத்துக்குடியில் பேசிய நாலைந்து பேர்களுக்குச் சிறை கிடைத்தது. நான் அரசியல் சிறையை அஞ்சவில்லை. ஸ்வராஜ்யாவில் இருந்தபோது, காந்தி, சத்தியாக்கிரகமோ' தண்டி யாத்திரையோ நடத்தியிருந்தால், அவசியம் தொண்டனாகச் சேர்ந்து உப்பள்ளிச் சிறை சென்றிருப்பேன். ஆனால் அந்தக் காலம் தேர்தல் கும்மாளமே கண்டேன். குப்பை அரசியலில் கோழிச் சண்டை கண்டேன். இதில் நாம் வாழ்வை வீணாக்கக்கூடாது என்றே உயர்ந்த யோக காரியத்திற்காக மேடையைத் துறந்தேன். இருந்தாலும் சில மாதங்கள் சன்மார்க்கப் பணி செய்தேன். மௌனமாகப் பொதுநலம் புரிந்தேன். என்னுள் ஸ்வராஜ்ய சித்தி பெறலே இனி வேலை.

294. குகையை நோக்கி

திருப்பறம்பூரில்

பணத்தை காந்திக்குத் தர முடியவில்லை. ஷண்முகம் பிள்ளை வந்தார். தமது கோவாபரேடிவ் பாங்கில் போடச் சொன்னார். போட்டேன். அதை ஒரு மகானுக்குத் தரவே குறித்தேன். கையில் ஐம்பது ரூபா எடுத்துக்கொண்டேன். ஒரே காஷாயம், தோள் பையில் கீதை, யோகசித்தி, பாரதசக்தி, ஒரு துண்டு, பென்ஸில் நோட்டுடன் கிளம்பினேன், மற்றச் சாமான்களெல்லாம் தானம் வழங்கினேன். காற்றைப்போல் கிளம்பினேன். ஒரு சங்கற்பமும் இல்லை. கடவுள் இச்சை எங்கே அழைத்ததோ அங்கே சென்றேன். அவன் என்னை நடத்துகிறான் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டேன். என்னைச் சூனியம் ஆக்கி, அவனை என்னுள் நிரப்பினேன். தர்ம சாலையிலிருந்து கிளம்பியபோது அன்பர் ஸ்ரீபால் வந்தார். ஜீனானந்தத்தை திருப்பறம்பூரில் அரங்கேற்ற வேண்டினார். சரி; புறப்பட்டேன். காஞ்சிபுரத்தில் ஜைனர் என்னை உபசரித்தனுப்பினர். திருப்பறம்பூர் வாசிகள் மேளதாளத்துடன் பவனிசெய்து, தருமசாகரர் சாஸ்திர பாடசாலையில் உபசாரபத்திரம் அளித்தனர். அன்றிரவு எட்டு மணிக்கு பாரத சக்தியில் உள்ள மகா வீரப் படலத்தைப் படிக்கத் தொடங்கினேன். அதுதான் ஜீனானந்தம். தினம் பத்துமணி வரையில் பிரசங்கந்தான். புதுப்புது எண்ணங்களும் சாஸ்திர விளக்கங்களும் ஏராளமான உப கதைகளும் சொல்லி, நாலை எட்டு நாட்களில் முடித்தேன். ஜைனர் தவத்தை மதிப்பவர். ஆதலால் கோயிலில்

எனக்கெனக் கூடாரம் கட்டித் தவத்திற்குச் சௌகரியம் அளித்தனர். பகலெல்லாம் மௌனத்தவம்; இரவு எட்டுமுதல் பதினோரு மணி வரையில் சமய சன்மார்க்கப் பிரசாரம். ஒரே வேளை பால் உணவு. இதுவே இனி எனது நிகழ்ச்சி நிரல். திருப்பறம்பூரில் இரண்டு ஜைனாலயங்கள் உண்டு. இரண்டிலும் பஜனை நடத்தினேன். மகா வீரரின் துறவு, கேவலஞானம், பரிநிர்வாணம் ஆகிய கட்டங்களில் திரளான மக்கள் கூடித் திருவிழாக் கொண்டாடினார்கள். தீப நடனத்துடன் பஜனை இனிது நடந்தது. கிராம வாசிகளுக்கு பஜனையில் பெரிய உள்ளக் கிளர்ச்சி. கடைசிநாள் அன்பர் நன்றி கூறி, ஒரு மைல் வரையில் நடந்துவந்து என்னைக் கரந்தைக்கு அனுப்பினார்கள். அதை நான் அன்பூர் என்றழைத்தேன். ஊரார் அன்புமயம். முதல்நாள் என்னை ஒரு வீட்டில் அமர்த்தினர். இரவில் வாசல் பூட்டப்பட்டது. அங்கே நெல்லும் சாமான்களும் அடைத்திருந்தனர். கொசு, அலுங்கு, மூட்டை, பூரான், பாச்சை. பல்லி எல்லாம் எனது நியான உடலைப் பங்கு போட்டுக்கொண்டன. கோவணத்துடன் இருந்த எனது உடலில் இரத்தமும் வந்தது. காலையில் மௌனம். என் உடலைப் பார்த்த கோயில் பட்டர் "அடடா" என்று என்னைக் கோயிலில் கொண்டு வைத்தார். அங்கே வெகு சுகமாகத் தியானித்தேன். அதன் அருகே வயல்கள்; வயலைத் தாண்டிப் பால்போலக் குளம். அதில் ஜலஸ்தம்பனம் செய்தேன். கோயிலில் ஒரு பழுத்த சமணத் துறவியுடன் தத்வார்த்த சூத்திரம் ஆராய்ந்தேன். இரவில் ஜினனந்தம் படித்து விளக்கினேன். பஜனையும் முறைப்படி நடந்தது. இங்கே பின்பாட்டு பக்கமேளம் நன்றாக வாய்த்தன. நான் ஓரடி பாடி, எல்லாரும் சேர்ந்து பாடினர். சுமார் முன்னூறுபேர் கூடினர். பனிரண்டு மணி வரையிலும் பஜனை நடந்தது பிறகு குளித்து நான் தியானம் செய்தேன். அப்போது யாரும் கிட்ட வரார். பட்டர் எனக்குக் காவல். விஜயதசமியன்று சித்தாமூர் கிராமத்திற்குச் சென்றேன். அங்கே மடத்தில் பிரசங்கம் செய்து, பொன்னூர் மலைக்கு வந்தேன். அங்கே ஒருகாலம் ஹேளாசாரியார் தவம் செய்தாராம். அவரே திருக்குறள் ஆசிரியரான வள்ளுவர் என்பர் சமணர். அங்கொரு குகையுண்டு, அடிவாரத்தில் மடம் உண்டு. அங்கே எப்போதும் இருந்து தவம்புரிய அன்பர் வேண்டினர். இருந்திருந்தால் அங்கே ஒரு பெரிய நிலையம் ஆக்கி வடநாட்டு மார்வாடிகளையெல்லாம் வசிகரித்திருக்கலாம். மனச்சாட்சி உத்தரவளிக்கவில்லை. ஒருநாள் அங்கே தியானித்து வந்தவாசிக்கு வந்தேன். அரசியல் நண்பர் காங்கிரஸ் பிரசாரம் செய்யச் சொன்னார்கள். திருமடத்தில் இரவு பிரசங்கத்துடன் மஹாத்மாவின் அஹிம்ஸா தருமத்தைப்பற்றிப் பேசினேன். இன்னும் சில கிராமங்களைப் பார்த்துக்கொண்டு, ஆரணிக்கு வந்தேன். வசுபாலநயினார் வெகு சிறப்பாக வரவேற்றுபசரித்தார். அங்கே சுத்த யோக திட்சை பூண்டேன். அந்த ஊரில் எனக்குப் பல நண்பர் இருந்தனர்—சுகோ

தயம் ஆசிரியர் என். ரங்கசாமி ஐயங்கார், சுதேச மித்திரன் நிருபர், பரசுராம முதலியார், சக்கரவர்த்தி நாயனார் முதலியோர். இரண்டு பெரிய பிரசங்கம் செய்தேன். ஒன்று கோயிலில் சுத்த தர்மம்பற்றி, மற்றொன்று பரசுராம விலாசத்தில் ஸர்வாத்ம சித்தி பற்றியது. சமண நூல்களுடன் பாரதசக்தியையும் கோட்பாடு செய்து, நான்குமணி நேரம் பேசினேன். இனி செஞ்சிக்கோட்டைக்குச் சென்றேன். அதுவும் தவத்திற்கு நல்லது. அடுத்தபடி? சலோ மைசூர்? கோலார் தங்கவயலில் சன்மார்க்க சபையுண்டு. ஆண்டு விழாவிற்கு என்னைத் தலைமையாக்கி முன் பணமும் முன்பே அனுப்பியிருந்தனர்.

295. கோலாரில்

கோலாருக்கு நீண்டகாலமாக என்னை அன்பர் அழைத்துக் கொண்டிருந்தனர். வந்ததும் பெரிய ஆரவாரத்துடன் வரவேற்பு நடந்தது. அங்கே ஏராளமாக மார்வாடி ஜைனர் என்னை முனிமஹா ராஜ் என்று உபசரித்தனர். அங்கே குளிர் அதிகம். நான் ஒரே ஆடை அணிந்திருந்தேன். ஆதலால், வெயில் கண்டதும் நீண்டதூரம் நடந்து, தங்க வயல்களைச் சுற்றி வந்தேன். வேர்த்தால் குளிர் போகும். காலையில் மார்வாடிகள் தமிழருடன் கூடி வரவேற்புப் பத்திரம் அளித்தனர். நான் இந்தியில் பதினைந்து நிமிஷம், தமிழில் பதினைந்து நிமிஷம் சன்மார்க்க சாதனம்பற்றிப் பேசினேன். இரவு ஏழு மணிக்கு நாடகக் கொட்டகையில் மாபெரும் கூட்டம். புத்தர் பலர் வந்திருந்தனர். பிக்ஷுக்கள் என்னுடன் அமர்ந்தனர். நான் தலைமை வகித்து, அஹிம்ஸா தர்ம சாதனம் பற்றி மூன்றுமணி நேரம் பேசினேன். புத்தர், ஏசுநாதர், மகாவீரர், காந்தி, வள்ளுவர், வள்ளலார் ஆகிய ஐந்து சன்மார்க்க மூர்த்திகளின் உதாரணங்களை இடையிடையே சொல்லி, பாரதசக்திப் பாடல்களையும் பாடினேன். எனக்குப்பிறகு வேங்கடாசலம் பிள்ளையும், குமாரசாமிப் பிள்ளையும் இனிய தமிழில் உருக்கமாக, கொலை மறுப்புப்பற்றிப் பேசினர். ஒரு புத்த பிக்ஷு என்னைப் புத்தனூருக்கு அழைத்தார், சென்றேன். அவர் பர்மாக்காரர். நல்ல துறவி. கோலார் ஆதிதிராவிடரையெல்லாம் புத்தராக்கி, கோயில் கட்டி, தம்ம பாதம் சொல்லிவைத்து, அரிய தொண்டு செய்தார். நான் புத்தசமாஜத்திற்கு பாரதசக்தியிலிருக்கும் புத்த ஞாயிறுப் படலம் படித்து விளக்கினேன். பிக்ஷுக்கள் மகிழ்ச்சி யடைந்தார்கள். அங்கே எனது நண்பர் ஞான சூரியன் தோன்றினார். அவர் மலையாளி; வேத தர்மத்திலிருந்து புத்த தர்மத்திற்குத் தாவி, என்னிடம் தாவி வந்தார். புத்த ஆகம மந்திரங்களையும் ஜபங்களையும் அவரிடம் கேட்டேன். மறுநாள் திரு. வி. க. தலைமையில் கூட்டம் நடந்தது. நான் கொஞ்சநேரம் இருந்து, பிறகு அப்பாதுரையுடன் ஹரிஜன ஹாஸ்டலுக்குச் சென்றேன். அங்கே மாணவருக்கு சன்மார்க்க ஒழுக்கம் போதித்தேன்.

மறுநாட் காலை முழுதும் தங்கச் சுரங்கத்தைப் பார்த்தோம். துரைகளிடம் உத்தரவு பெற்று, சுரங்கத்தில் இறங்கினோம். என்ன அற்புதமான உழைப்பு! ஆ, பொன்னை எவ்வளவு ஆழத்திலிருந்து எடுக்கிறார்கள்! எத்தனை யந்திரங்கள் வேலை செய்கின்றன! பார்த்தால் ஞானம் உதிக்கும். இவ்வாறே இதய குகையில் மனம் ஆழ்ந்து, ஆத்மானந்தமான தங்கத்தை அடையவேண்டும். சாதாரண ஜீவன் சுரங்கக் கட்டிபோல் களிம்பு மேவியது. சுரங்கக் கட்டியை மேலே கொணர்ந்து தூளாக்கி, யந்திரசாலைகளில் உருக்குகிறார்கள். ஹோ என்று ஆயிரம் மலையருவிபோலக் கூச்சலிடும் யந்திரங்கள், தலை கிறுக்கும் வேகத்திற் சுழல்கின்றன. அவை வெள்ளி தாமிரம் பித்தளைகளைப் பிரித்து, ஒதுக்கித் தங்கத்தைத் தனியே தருகின்றன. அதை மாற்றேற்றி செங்கல் செங்கல்லாகச் செய்து முத்திரை போட்டு இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதேமாதிரி நமது ஜீவாத்மாவையும் அந்தக்கரணத்தால் பக்திக் கனலில் உருக்கி, ஞான மெருகேற்றி, சுத்தான்மாவாக்கிப் பரமாத்மனுக்கு அணியாக்கவேண்டும். சுரங்க மின்சார ஏற்பாடுகள் அற்புதமானவை. மின்சக்தியால் ஒரு பெரிய சக்கரம் சுழல்கிறது. அதுதான் சுரங்கத்திற்குக் காற்றனுப்புவது. அது நின்றால் ஆள் உள்ளே வாழமுடியாது. கோலார் தங்க வயல்களில் ஊர்காம் 4,978, மைசூர் 8,500. சாம்பியன் 6,390, நந்திதுர்கம் 7.872 ஔன்ஸ் தங்கம் தந்தன. இந்தமாதிரி எனது ஆன்மாவையும் தவக்கனலில் உருக்கிப் பரமாத்ம சைதன்யமாக்க விரும்பினேன்.

சுரங்கத் தொழிலாளர் நிலைமைமட்டும் பரிதாபமாயிருந்தது. சொற்பக் கூலி; அதுவும் கள்ளுக்கும் கடனுக்கும் போய், கஞ்சிக்கும் வருந்தும் ஏழைகளை நினைத்தால் ஹா சிவனே! தங்கச்சுரங்கம் பார்த்து வரும்போது எனக்கு 144 வந்தது—சென்னை சர்க்கார் நான் இங்கிருந்ததை அறிந்து, சன்மானம் அனுப்பினார்கள். இனி எனக்கு 144 வந்தால் என்ன, 124 ஏ வந்தால் என்ன? கோலார் துரைகளுக்கு மட்டும் நான் எங்கே தொழிலாளரை கிளப்பிவிடுவேனோ என்று பயந்தான்!

ஜீவகாருண்ய சங்கத்தலைவர் என்னை வழியனுப்பினர். நான் பெங்களூருக்கு வந்தேன். லால்பாகிற் கருகிலுள்ள பிரமசர்யாசிரமத்திற்குச் சென்றேன். சத்யநாராயணா வரவேற்றார். அங்கே நேபாளத் துறவி ஒருவர் வந்தார். ஹட ராஜயோகி. அவரிடம் பல காயகற்ப ரகசியங்கள் கற்றேன். ஒரு கற்பம் சாப்பிட்டு உடலைச் சுத்தி செய்து கொண்டேன். கெங்கேரியிலிருந்து அழைப்பு வந்தது; சென்றேன்.

296. கெங்கேரி ஆசிரமம்

என் அன்பர் பிரமசாரி ராமச்சந்திரன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். கெங்கேரியில் டாக்டர் ராமச்சந்திர ராவ் தந்த நிலத்தில், அவர்

குருகுலாச்ரமம் நடத்தினர். பத்துப்பேர் அங்கேயிருந்தனர். நண்பர் ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியாரைக் கண்டேன். அவர் மகன் சுந்தரராசன் அங்கே படித்தான். ஹடாசன சுந்தரமும் அங்கிருந்தார். ராமச்சந்திரன் ஆங்கிலத்தில் பிரமசரியா பத்திரிகை நடத்தினர். ஆசிரியர் குழுவில் நானும் உண்டு. பத்திரிகையில் மாதக் கட்டுரைகள் எழுதி வந்தேன். யோகசாதனம் பற்றித் தொடர்ந்தெழுதினேன், அன்று திலகர் ஜயந்தி. மாணவருக்கு நான் திலகர் வரலாறு சொன்னேன். மூன்று நாட்கள் கெங்கேரியிலிருந்து மைசூர் சென்றேன். கல்லூரி மாணவர் வரவேற்றுப் பிரசங்கம் வைத்தனர்—எல்லாரும் பி. ஏ. மாணவர், என்னை முன்பே அறிவர். அவர்களுக்கு பிரமசரியம்பற்றி ஒருமணி நேரம் பேசினேன். ஆசனம் பிராணாயாமம் பயிற்றினேன். அக்காலம் மைசூரெங்கும் கணபதித் திருநாள். அதில் கலகம் நடந்தது. மாணவர் வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தக்கூடாது என்று மாணவருக்குச் சொன்னேன். மறுநாள் சிவசமுத்திரம் சென்றேன். நான் மைசூரைச் சுற்றிப் பார்த்தேன். சாமுண்டிமலையேறி ஈச்வரி கோயிலில் ஒருநாள் இருந்தேன். கல்லூரியைப் பார்த்தேன். தலைவர் ரோலோ, ஷேக்ஸ்பியர் புலவர். அவர் பிரசங்கம் கேட்டு மகிழ்ந்தேன். அரண்மனைக்குச் சென்றேன். அழகாபுரி என்றால் அதுதான். எங்கே திரும்பினாலும் சிற்ப அழகு, தோட்ட அழகு அரண்மனையைச் சுற்றிய போது, ஒரு ஜைன மாணவன் 'நமோத்து' என்று ஜைன ஹாஸ்டலுக்கு அழைத்துச் சென்றான். அங்கே இரவில் சமண ஒழுக்கம்பற்றிப் பேசினேன். அங்கே வெளிகுள சாஸ்திரியார் ஒருவர் வந்திருந்தார். அவர் என்னை அழைத்துச் சென்றார்.

297. வெளிகுளத்தில்

வடக்கே அபு; தெற்கே வெளிகுளம்—இரண்டும் சமண ஸ்தலங்கள். இங்கே சிக்கதேவராயர் தோண்டிய கல்யாணி புஷ்கரணிதான் வெண்குளம் அல்லது வெளிகுளம் என்றாகி, ஊருக்குப் பேரானது. வெகு தொலையில் இருந்து பார்த்தாலும் கோமடேசர் சிலை தெரியும். அது 400 அடி உயரமுள்ள விந்தியகிரியில் ஐம்பத்தாறடி உயரம் எழுந்து நிற்கிறது. கால் ஒன்பதடி மார்பு, இருபத்தாறடி, ஒரே பாறையில் செதுக்கிய சிற்ப அற்புதம். பாகுபலி என்ற ஜைன மன்னனே திக்விஜயம் செய்துவென்ற அரசை, தம்பி பரதனுக்குத் தந்து, இங்கே தவஞ்செய்து சித்தி பெற்றான். அவனே கோமடன் என்ற பெயரால் சிலை பெற்றான். கோமடன் என்றால் மகிழ்விப்பவன் என்பது பொருள். இரண்டாவது ராஜமல்லன் மந்திரி, சாமுண்டராஜனே இச் சிலையை நாட்டினான். அதைச்சுற்றி அழகான கோயில்களும் தீர்த்தங்கரர் சிலைகளும் உள்ளன. பத்தாண்டுகளுக் கொருதரம் அங்கே மண்டலாபிஷேகம் நடக்கும். அடிக்கடி பூஜை நடக்கும். சந்திரகிரி அடுத்துள்ளது; அதில் 21 ஜைனாலயங்கள் உண்டு. அரிய

சிற்பச் செல்வம் உள்ளது. சந்திரகுப்த மௌரியன் இங்கேதான் தவம்புரிந்து தென்னடெங்கும் சமணத் துறவிகளை அனுப்பி, மதப் பிரசாரம் செய்தான். சுருதகேவலி. பத்ரபாகு ஆகிய இரு குருமார்களுடன் 12,000 முனிவர் இந்தப் பணியைச் செய்தனர். பாகுபலி தவஞ் செய்த குகையில் நானும் தியானித்தேன். சந்திரகுப்தன் இருந்த சந்திரகுப்த பந்தியில் வசித்தேன். 12 ஆண்டுகள் சந்திரகுப்தன் இங்கிருந்து, 20 நாட்கள் ஸல்லேகனம் செய்து முக்தி பெற்ருன். பத்திர பாகு 8000 ஜைன முனிவரை மதுரைக்கனுப்பி, பாண்டிநாடெங்கும் சமண மாக்கினன்.

இங்கே சமண மடம் உள்ளது, புகழ்பெற்றது. அதன் தலைவர் அப்போது நேமிசாகர சுவாமிகள். அவர் ஜினனந்தம் பார்த்திருந்தார். என்னை முகமலர்ந்து வரவேற்று, வேண்டிய சௌகரியங்களெல்லாம் தந்தார். பாதாமி வாழைப்பழம் இரண்டும் அப்போது உணவு, பசித்தால் உண்பது. மீதி நேரம் தியானிப்பதும் சமுஸ்கிரதம் படிப்பதும், சுவாமிகள் உபதேசங்களைக் கேட்பதுமாயிருந்தேன். சுவாமிகள் இந்தி, கன்னடம், சமுஸ்கிரதங்களில் மகா பண்டிதர். நான் அங்கே கன்னடம் கற்றுக்கொண்டு பேசினேன். இந்தியிலும் பேசினேன். பலர் சாஸ்திரம் படித்தவர்கள். ஊரெல்லாம் கல்வி முழக்கமே. மடத்திற்கு எதிரே பாடசாலை. இருபது ஜைன மாணவருக்குச் சாப்பாடு போட்டு சுவாமிகள் சமுஸ்கிரதம் சொல்லி வைத்தார். நானும் மாணவனுகவே யிருந்தேன். நான் நித்திய மாணவனே, இன்னும் மாணவனே; அறிவிற்கு எல்லை ஏது? அங்கே ஸர்வார்த்த சித்தி, (சிந்தாமணிக்கு மூலகாவியமான) சச்சந்த புராணம் ஆகிய இரண்டும் படித்தேன். ஜைன பாகவதம் கேட்டேன். பாடசாலை பண்டிதர் நிரம்பப்படித்தவர், எனக்கு அரிய துணை செய்தார். ஊரில் தோர்பிலி சாஸ்திரியார் தமிழர், பெரும்புலவர். அருவிப் பேச்சர். தத்வார்த்த சூத்திரங்களைக் கடகடவென்று அவர் ஒப்பித்து விளக்கினர். அவர் சிஷ்யர் சிகாமணி சாஸ்திரி ஜினனந்தம் படிக்கச்சொல்லி, கன்னடத்தில் எல்லாருக்கும் விளக்கினர். ஆனல் இவர்கள் நேமிக்கு எதிரிகள். அவர் பல்லக்கில் புறப்பட்டால், இவர் கதவடைத்தனர். நான் வம்பில் சிக்காமல், கலையில் கருத்தூன்றினேன். நேமி ஒருநாள் கோமடேச பூஜைக்கு மலைமேல் வந்து, எனக்கு எல்லாம் விளக்கினர். நான் அங்கேயே ஏகாந்த வாசம் செய்தேன். என்னுடன் ஒரு நிர்வாணச்சாமி இருந்தார். நான் சுக்லத்யானம் செய்தேன். அவர் பஞ்ச நமஸ்காரம் செய்தார். "நீயும் ஆகாசம்போலத் துற என்ருர். சரி என்று கோவணம் அவிழ்த்தெறிந்து அவதூதனுகி குளிர், வெயில் தாங்கி, அங்கேயே தியானித்தேன். அப்போது சாத்திர ஆராய்ச்சிகூட வீண் வேலையாகத் தோன்றியது. சுத்த சக்தி ஒட்டத்தையே உள்ளே சுத்த யோகத்தால் உணர்ந்து நின்றேன். அப்போது 'மேலே செல்' என்

றது மனச்சாட்சி. நான் அப்படியே அங்கேயே கோமடேசர்போல் இருக்க முடியாது. எனது காரியம் வேறு ஆதலால் எங்கே செல்வது என்று உள்ளே கேட்டேன். முன்பின் வாழ்வுப் படலங்களும் அனுபவங்களும் சித்தச் சுருளில் விளையாடின. இந்தப் படக் காட்சிக்குப் பின் சாட்சியாயுள்ள சுத்த ஜோதியை தியானித்தேன். வாழ்வில் வந்த சுக துக்கங்களை, இடர்களை, அனுபவித்தவன் யார்? எல்லாம் தப்பி அனைத்தையும் துறந்து, சுத்த சுதந்தர சமத்துவசித்தனுயிருப்பவன் யார்? என்னுள் பாரதசக்தி பாடினவன் யார்? உலகத்தொண்டு செய்கையில், எனக்கு வந்த இசை வசைகளை, இன்ப துன்பங்களைச் சுமந்தவன் யார்? அனைத்தையும் உதறித்தள்ளியவன் யார்? எத்தனை இடங்களுக்கு அவன் என்னை இழுத்துச் சென்முன்! என்னென்ன அனுபவங்களைத் தந்தான்! எதிலும் பற்றில்லாமல் 'போ முன்' என்று மேன்மேலும் நடத்திய தலைவன் யார்? நான் மன்னர் வாழ்வைப் பார்த்தேன். மந்திரி வாழ்வைப் பார்த்தேன். மானிட வாழ்வைப் பார்த்தேன். ஆண் பெண் இயல்பைக் கண்டேன். குருமார் பலரைக் கண்டேன். அவதாரங்களைக் கண்டேன். ஆடம்பரப் புகழைக் கண்டேன், இப்போது சாந்தமான தனிமை கண்டேன். இன்பமான என்னையும் கண்டேன். என்னினும் இனியான், என் இறைவனை, இதயக் குகையில் கூடவேண்டும். அந்த இதய வித்தை உபநிஷத்தில் உள்ளது. பிரமானந்தவல்லி படித்தேன். அப்போது தான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளின் திவ்ய ரூபம் எனது தியானத்தில் வந்து கொண்டிருந்தது. ஆகாசமே லிங்க வடிவாகக் கண்டேன். எனது சிதாகாசத்தில் லிங்க ஜோதி கண்டேன். பாட்டெழுந்தது:

வானம் சூழ்ந்த வையகமே வன்னஇயற்கை மந்திரமாய்
ஞானஞ் சூழ்ந்த சந்நிதியே நானுன் என்னும் உள்ளமதாய்
தியானஞ் சூழ்ந்த நல்லுணர்வே தெளிந்த வாழ்வின் ஊற்றாக
மோனஞ் சூழ்ந்த பேரின்ப முத்தி யருளேன் முதல்வோனே.
நீயே குருவுந் தெய்வமும்; நீயே யோக சாதனமும்;
தாயே அறிவுத் தந்தையே சக்தி வெள்ளத் தடங் கடலே,
சேயேன் ஆத்ம தாகத்தைத் தணித்துன் அன்பு விளங்கிடவே
தேயமெங்கும் பணிசெய்யத் திறமை யீவாய் சிவபரனே.
சாதி சமய பேதமில்லாச் சத்தியத்தில் வேரூன்றி
ஆதிப் பொருளின் அருள்செழிக்கும் அன்பு வாழ்வை உலகினிலே
ஓதிப் பரப்பி உயிர்க்குலங்கள் ஒன்றாய் நன்று வாழ்ந்திடவே,
வேதப் பொருளே எனை நடத்தி, வெற்றிதந்து துணைசெய்வாய்.
சுத்தமான சமரஸசன் மார்க்க சங்கங் கண்டு, நிதம்
உத்தமர்கள் கூடியங்கே உன்னை நினைந்து பணி செய்யச்

சத்தியத்தின் ஒளிகாட்டித் தருமமான வழிகாட்டி
இத்தலத்தில் உன்பெருமை இலக என்னுள் இலகிடுவாய்!

என்று நான் இறைவனிடம் முறையிட்டபோது, திகம்பரசாமி 'தவமே கண்ணு யிரு; வைராக்கியமே கருத்தா யிரு' என்றார். அவரிடமும் நேமியிடமும் விடைபெற்றுக்கொண்டு, நான் நேரே மோடார் ஏறி மைசூருக்கு வந்தேன். ஜைன லாட்ஜில் இறங்கினேன். அதனருகே யிருந்த ஒரு நாடக மன்றில் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் உலக சரித்திரம்பற்றி ஆங்கிலத்தில் பேசினார். எனது நண்பர் பலர் அங்கே வந்தனர், பேச்சு முடிந்ததும் அவர்கள் என்னை உபசரித்தனர். எனது வருங்காலம்பற்றி அவர்களிடம் சொல்லி, வண்டியேறி பங்களூர் சென்றேன். நேபாளத்துறவியைச் சந்தித்தேன். அவரிடம் சில மூலிகைப் பயன்களை அறிந்தேன். மறுநாள் புறப்பட்டேன். திருவண்ணாமலையில் இறங்கியதுமே, அண்ணாமலைப் பிள்ளையும் ஜானகிராமையரும் வேங்கடாசலம் பிள்ளையும் வரவேற்று, கூட்டம் போடுகிறோம். பேசும் என்றனர். கூட்டத்தினின்றே தனிமைக்குச் செல்கிறேன். அரசியலைவிட்டு அருளியலிற் புகுந்தேன்; என்று மலைமேல் ஏறி, விருபாக்ஷிகுகைக்கு ஓடினேன். ஏனெனில் அங்கேதான் மகர்ஷிகள் முன்பு இருந்தார். இத்துடன் எனது புற வாழ்க்கை முற்றிற்று. இனி மௌனமான அக வாழ்க்கை.

கஅ. குகை வாசம்

298. ரமணப்ரகாசம்

இளங்கதிர் மலையைத் தாண்டுகிறது. என் மனம் கலையைத் தாண்டுகிறது. நாத விந்து கலாதீதனான பரம்பொருளை வேண்டுகிறது. மலை அருணாசல சிவம்; அதிலிருந்து சிவோஹம் அருவி வருகிறது. அதில் நீராடி ஆடையை உலர்த்திவிட்டு, விருபாக்ஷி குகைத் திண்ணையில் தியானித்தேன். அமைதி, அமைதி! ஆத்ம சோதனை தீர்ந்தது; இனி ஆத்ம சாதனை. நான் உலகைச் சோதித்ததும், உலகம் என்னைச் சோதித்ததும் முடிந்தன. புறவாழ்வுச் சுருள் ஓடி ஒழிந்தது. இனி அக வாழ்வுக் காட்சிகள் தொடங்குகின்றன. அதை இயக்கும் சக்தி யந்திரத்தில் எனது வாழ்வுப்படத்தை இணைக்கிறேன்... ஆடை உலர்ந்தது; ஆசை உலர்ந்தது. புதுமை புலர்ந்தது.

நேரே ரமணாசிரமம் சென்றேன். எனது நண்பர் காவ்யகண்டம் கணபதி சாஸ்திரிகள் குரல் கேட்டது. மாதுர் பூதேசர்கோயிலுட் சென்றேன். அவரை வணங்கினேன். "ஆஹா அங்கே பகவான்!" என்றார். பார்த்தேன்; ஒரு விபூதிக் குவை. பிறகு சிவலிங்க ஜோதி. பிறகுதான் ரமணபகவான் காலைமடக்கி நிமிர்ந்து உட்கார்ந்து. பாரதி! பாரத சக்தி எழுதியிருக்கிறீர்! என்றார். சாஸ்திரிகளும் "ஸந்தோ

ஷம். இனி எங்களுக்கு பாரதசக்தி சொல்லலாம்!'' என்றார், நீண்ட காலம் பழகிய நண்பன் போல் மகர்ஷிகள் பேசினர்.

அருவும் உருவும் அருவுருவும் அன்புக்
குருவும் இருகுணமும் ஒன்றாய்—மருவும்
இதயேசன் உள்ளே யிலங்குமெஞ் ஞான
உதயேச னுக்கென் னுயிர்.

முன்—பின் வாழ்வு மறைந்தது. உடல், உயிர், மனம், அறிவு, இன்பம் ஆகிய ஐங் கோசங்களும் பூவின் இதழ்கள் போன்றன. இதயமலரில் புதிய பேரின்பத் தேன் ஊறியது. நான் என்ற வண்டு தேனுண்டது. சிதாகாசத்தில் ஓம், இதயத்துடிப்பில் தத்ஸத். ஓம் தத்ஸத்வடிவானது ஜீவன். பேச்சிறந்தது. கேவலகும்பகம் பிறந்தது பன்னிலைச் சுட்டிறந்தது, முன்னிலைச் சுட்டிறந்தது. ஓம் தத் ஸத்; தத் த்வம் அஸி, அது மெய், அது நீ, அதுவாயிரு. அன்னியமென்றுதே! என்றது இதயம். பரசாந்த மோனத்தில் சொல்லாமற் சொல்லி, நினையாமல் நினைக்கும் சாதனம் நிறைவேறியது. ஒரு மணிநேரம் தியானம். மணியடித்தது; விழித்தேன். மஹர்ஷிகளின் காந்தக்-கனல்-விழிகள் என்னையே பார்த்தன. சித்தாந்த வேதாந்த சமரஸம் எப்படி இயலும், என்று நீ அன்று நான் என்பதன் அனுபவம் என்ன என்பதை உணர்ந்தேன். அதற்கே வந்தேன், வந்ததும் அடைந்தேன். அதுதான் ரமணப்ரகாசத்தின் பெருமை.

நான், நான் என்ற தற்போதம் ஒழிந்தது. தான் என்ற அருட்போதம்எழுந்தது. அது இது என்றுபேசத்தொடங்கியது மனம்.

ஓம் சுத்தசக்தி என்ற மந்திரப்பொருள் துலங்குகிறது. சுத்தசிவமும் ஆதார சக்தியும் தத் ஸத். அது சச்சிதானந்த சக்தியாக விளங்குகிறது. ஆகாசமெல்லாம் அதன் சரீரம். ஆடும் பரம்பொருள் சக்தி; அடங்கிய சாட்சியாகத் தன் நிலையில் நிற்கும் பரம்பொருளே சுத்தம். இரண்டும்.லயமான அனுபவமே ஓம் என்ற மஹாப்ரணவம். இந்த ரகசியத்தை வியப்புடன் உணர்ந்தேன். சோதனைக்கூடத்தில் பௌதிக ரசாயன ஆராய்ச்சி நடப்பது போலவே, இதயசாலையில் சுத்தாத்ம ஆராய்ச்சி செய்யப்புகுந்தேன். என்னுள் நடப்பதெல்லாம் பகவான் கவனித்துக்கொண்டேயிருக்கிறார், அதை உணர்கிறேன். திடீரென்று கணபதி சாஸ்திரிகள் "பாரதசக்தி மகா காவியக்கதையைச் சொல்லுங்கோ'' என்றார்.

உள்ளே சென்ற உணர்ச்சி அப்போது தான் நான் பாரதசக்தி பாடியதை நினைத்தது. பகவான் "நடக்கட்டுமே'' என்றார். கதை நடந்தது. பரமாத்ம யோகசக்தியே பாரதசக்தி, அதை அடைந்த சுத்த யோகிகள் உலகில் கலிநீங்கி சத்தியயுகம் வரத் தொண்டுசெய்கிறார்கள். இந்த எண்ணம் சாஸ்திரிகளுக்குப் புதிய உணர்ச்சியளித்தது.

"இது மகா காவியசிகரமாக விளங்கும். சத்தியனும் சுத்தனும் சாந்தனும் சக்தியும் ராக்ஷஸபலங்களை யோக சக்தியால் வென்று, உலகில் ஸ்வர்கராஜ்யத்தை நாட்டும் நாளை எதிர்பார்க்கலாம்" என்றார். ஸ்வராஜ்யத்திற்குப் பிறகு ஸ்வர்கராஜ்யமே நமது குறிப்பு? என்றேன். தீபாராதனையானது. மஹர்ஷிகள் "பாரதி இங்கே சாப்பிடலாமே" என்றார். "ஞானமிர்தம் போதும்; என் உள்ளம் உருக உபாயம் செய்த பிறகு, பசியேது, தாகமேது. எல்லாம் மோனம்" என்றேன். சாஸ்திரிகள் "பாரதிவாழ்வே மௌனப் படகுதானே" என்றார். ஆம் முன்னே தினம் மூன்று மணி நேரமே பேசினேன். வாரம் இரண்டு நாள் பேசாதிருந்தேன். இன்று முதல் நித்திய மௌனமே; மஹர்ஷிகளிடம் பாடும்போதே வாய்திறப்பது.

கணபதி சாஸ்திரிகள் என்னைப் பலாக் கொத்திற்கு அழைத்துச் சென்று, தமது உமாஸஹஸ்ரத்தை இனிமையாகப் படித்தார். பிறகு வேதரகசியங்களைப் பேசினோம். அவரிடம் நான் வந்த போதெல்லாம் ருக்வேதம் பற்றியே பேசச்செய்வேன். வேறு பேச்சிராது. இரவெல்லாம் சுத்த சக்தி ஆதாரங்களில் சுழன்று சுழன்று விளையாடியது. காலை நான்கு மணிக்கே தேகசுத்தி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, நான் மஹர்ஷிகளைத் தரிசித்தேன். அவர் குளித்து வந்து ஐந்துமணிக்குப் பீடத்தில் அமர்ந்தார், நான் மௌனமாகத் தியானத்தில் ஆழ்ந்தேன். கேள்வி கேட்பது வழக்கமில்லை. பேசாத காரியம் பேசினார் முனிவர். உள்ளுறவு நன்றாக ஊன்றிக் கொண்டது. பிறகு வெளிப் பேச்சு நடந்தது—உபதேசம்.

பகவான்: இந்த மௌனமே ஸ்வரூபஞானம். நான் அடங்கினால், தான் என்றெழும்; அது தான் ஸத்வஸ்து.

நான்: மௌனமணிப் பெட்டகத்திலே தான் இந்த ஞானமணி இலகும். தாயுமானாரின் பராபரக்கண்ணியை இப்போதே அனுபவிக்கிறேன்.

பக: தாயுமானார் முழுதுமே மௌனமயமே. சும்மா இருக்கும் சூக்ஷ்மத்தையே அவர் பாடினார்.

நான்: அலைந்து திரிந்து ஓடி ஆடி, பாடி, எழுதி, பேசி-தொண்டு செய்வதே செயல் என்று நினைத்தேன். இப்போது கருவிகரணங்கள் உள்ளடங்கித் தானே தானாகி அன்னியமின்றி, சும்மா இருப்பதுதான் சக்தி, சித்தி முக்தி என்றறிகிறேன். கர்மத்தின் பலன் பக்தி, பக்தியின் பலன் ஞானம், ஞானத்தின் பலன் மோனம். மோனத்தின் பலன் சுத்தானந்தம்.

பக: சுத்தசைதன்ய சொரூபமான தன்னுள் இன்புறுதலே சுத்தானந்தம். அந்த ஆனந்தம் வெளியே இல்லை. அகம் கிளம்பினால் ஜகம். அகம் அடங்கினால் சுகம்.

நான் : சங்கரர் 'நாஹம் கோஹம் ஸோஹம்' என்று மூன்று கேள்விகளில் வேதாந்தத்தை உணர்த்துகிறார். நான் யார்? நான் உடலில்லை உலகில்லை, நான் அவனாகிய சுத்தவஸ்து. இந்த வஸ்து விளக்கமானதுமே சுத்தசக்தியான பிரம்மாகாரமும் சுழல்கிறது. அதையே கவனித்தால் போதுமா?

பக : இதயகுகையில், தான் என்றெழும் பொருளே பிரம்மாகாரமாக உணர்வாகிறது. அதைக் கவனித்தாலே போதும். இதயகுகையில் அன்னியமின்றி நிலைப்பதே நிஷ்டை. ஆத்ம விசாரத்தின் முடிவும் அதுதான்.

நான் : ஆம் விருபாக்ஷி குகையில் இருந்து, என் இதயக் குகையில் ஊன்றி, நிஷ்டாபரனாயிருப்பதே இனி வாழ்க்கை. பூர்வஸம்ஸ்காரம் வந்தால்?

பக : அது எனக்கில்லை. நானார்? நான் சுத்தானந்தம் என்றிருக்கவும்.

நான் : ஆம் தெரு நாய் குலைக்கிறது; குடியர் வெறியாடிச் செல்கிறார்கள். வீட்டுள் இருப்பவனுக் கென்ன? தெருவில் மனம் விட்டாலே வம்பு- மனதையே சுத்தசக்திக்குப் பலிகொடுத்து விட்டது. இனி அது ஒன்றே இதனுள் விளையாடும். வேறு விளையாட்டிராது.

இப்படி நாங்கள் பேசும்போது நாயனா (கணபதி சாஸ்திரிகள்) ஒரு கடிதம் படித்தார். அது அட்வகேட் எஸ் துரைசாமி ஐயரிடமிருந்து வந்தது. அவர் நாயனாவை ஸ்ரீ அரவிந்த தரிசனத்திற்கு அழைத்தார், நாயனாவும் மஹர்ஷிகளிடம் உத்தரவு பெற்றுப் புறப்பட்டார். ஸ்ரீ அரவிந்த தரிசனம் செய்து வந்து எல்லாம் சொன்னார். இதுவும் திருவருள் அழைப்புத்தான். என் பாங்குப் பணத்தை அரவிந்தருக்கு அர்ப்பணம் செய்யவே தீர்மானித்தேன். நான் சென்னையில் சில அன்பர்களைப் பார்த்து, செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்கு செய்து சன்மார்க்கப் பிரசாரம் செய்துக் கொண்டே திருவண்ணாமலை சேர்ந்தேன்.

299. விருபாக்ஷிகுகையில்

நடு நிசியில் வந்து, ரமணாசிரமத்தில் வெட்ட வெளியில் நிட்டை கூடினேன். மஹர்ஷிகள் திடீரென்று தோன்றினார். "பாரதி சாப்பிடட்டுமே. சாதம் இருக்கு, வரட்டும் உள்ளே" என்றழைத்தார். நான் உள்ளே சென்று, சாதம் தேவையில்லை; போதம் வேண்டும். தூக்கிய திருவடியே துணையென நம்பி வாழவேண்டும். இனி மனக்குரங்கு அங்குமிங்கும் அலையக்கூடாது. இனிக்குகையில் வாசம் என்றேன். பகவான் என்னைக்காணும் போதெல்லாம் சாப்பிட அழைப்பார். நான் மௌனமாக வயிற்றைத் தொட்டு இந்தப்பசியில்லை. இதயந்தொட்டு இந்தப்பசிக்கே ஞானப்பிரசாதம் வேண்டும் என்று குறிப்பேன். பக

வான் அரிய உபதேசங்கள் புரிவார், அல்லது தமது அனுபவங்களைச் சொல்லுவார்.

உதித்த இடத்தில் ஒடுங்கியிருப்பதே ஸஹஜநிஷ்டை என்று உபதேசித்து, மஹரஷிகள் விரூபாக்ஷிகுகைச் சாவி தந்தார். அப்போது தான் பாரதசக்தியில் அருணஜோதிப்படலத்தில் உள்ள ஊனுகி என்ற பாடல்கள் உதித்தன, பாடி வணங்கிக் குகைக்குச் சென்றேன். பிறகு அடிக்கடி இரவில் ஏகாந்தமாக வந்து, திருமுன்னர் தியானிப்பதுண்டு. சில நாட்கள் குகையில் எழுதிய பாடல்களைப்பாடி பஜனையும் செய்வதுண்டு. சில நாட்கள் ரமணவிஜயத்தில் காணும் இசைப்பாடல்களைப் பாடி கிரிப்ரதட்சிணம் செய்வேன். ஆனந்த நடனம் நடக்கும். என் உணவு வில்வத்தழையும் வேர்க்கடலையுமே. அரிதாக அன்பர் கனிதந்தால் நிவேதித்து உண்பேன். பசிக்கும்போது உணவு எதிரே நிற்கும். ஒரு மூட்டை வேர்க்கடலை குகைக்குள் கொண்டுவந்து ஒரு மூலையில் போட்டால், இரண்டு மாதத்திற்குக் கவலையில்லை. குகையில் இரண்டு மாதங்கள் வெளிவராமல் சமாதியில் இருந்தேன். தேகசுத்தி செய்யவே காலையில் வருவேன். அக்காலம் நான் நீட்டிப்படுத்ததே யில்லை. தியானமே, மோனமே, நிட்டையே வேலை

மூன்ரும் மாதத்திலேதான் அருள்வாக்கு மலர்ந்தது. எழுந்த கவிதையை எழுதப்புகுந்தேன். நிஷ்டையே கலை; மோனமே நிலை. இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டியபடியே இருந்தேன்.

300. ஸ்ரீ ரமண விஜயம்

பிரம்மானந்த வல்லியில் சொல்லிய பரம ஞானமான ஹ்ருதய வித்தை அல்லது தகரயோகத்தை பாகவான் எனக்குக்காட்டினர். ஒரே தியானத்தில் அது ஸஹஜமாகச் செய்து குகையில் இருத்தினர். இந்தப் பெருந்துணையை நான் மறக்க முடியாது. எனது நன்றியை ஸ்ரீ ரமண விஜயம் என்ற நூலாகச் செய்து, பகவானுக்கு அர்ப்பணித்திருக்கிறேன். நான் தினக்குறிப்புகளில் பகவான் என்னுடன் பேசியது நான் கண்டது எல்லாம் குறித்தேன். அந்தக் குறிப்புகளைக் கொண்டே ரமண விஜயம் எழுதினேன். அந்நூல் எழுதியபோது பகவான் என்னுள் உயிர்த்ததை உணர்ந்தேன். அதன் ஒவ்வொரு பக்கமும் ஸ்வானுபவத்தின் உணர்ச்சிப் பட்டயமேயாகும். நான் சுமார் 500 பெரியார் வரலாறுகளை எழுதினேன். ரமண விஜயம்போல் வேறெந்த நூலிலும் அவ்வளவு ஆவேசக்கனல் இல்லை. அதில் ரமணரின் சைதன்யப்ரகாசத்தையே சித்தரித்திருக்கிறேன். பிறந்தார் இருந்தார், துறந்தார் கண்டார் விண்டார் உண்டார் உறங்கினர் வந்தார் சென்ருர் என்ற உடல் விவகாரங்கள் ஒரு முனிவர் வாழ்வின் மேல் தோலே. பேர்புகழ் பட்டம் பதவி படாடோப பயங்கரங்களெல்லாம் தூசிபோல் ஒதுக்கி, விருப்பு வெறுப்பான மனக்காட்டைச் சுட்டெரித்து, சுத்தாத்ம சேதனத்தில் நிலைத்த ஞானியே பிறவியின் பயனைப் பெறுகிருன். இத்

தகைய ஞானி எப்படியிருப்பான் என்றால், இதை உபநிஷத்து தாயுமானார் படிக்கத் தேவையில்லை. ரமண மஹர்ஷிகளைப் பார்த்தாலே போதும். தாம் அடைந்த நிலையைப் பிறர் அடையத் தூண்டும் தூய தன்மை அவரிடமே உள்ளது. திருச்சுழியில், அழகும் அழகும் பெற்ற அழகன் வேங்கடராமன். மதுரையில் படித்தபோது, அண்ணாமலைக் காதல் உண்டானது. சாவின் கேள்வி உள்விழிப் பளித்தது, சாவது எது? உடலில் இருந்தது எது? நான் யார்? என்ற கேள்விகள் சொரூப ஞானந் தந்தன, இந்த ஞானத்தை இயல்பாக்குவதே சாதனம். பள்ளிக்கூடச் சம்பளத்தைக் கொண்டு சீட்டு வாங்கி, பையன் ரயிலில் கிளம்பித் திருவண்ணாமலை சேர்ந்தான். அத்துடன் உடல் விவகாரங்களை ஒழித்தான். சடத்தை மறந்து, தானாகிய சித்தில் லயித்தான். உடலை உடையான் கவனித்துக் கொண்டான். ஞானி உள்ளே கவனமாயிருந்தான். எந்த இடத்தில் இருந்தாலும் இதய குகையில் ஊன்றிய ஞானிக்குப் பரமசாந்த சக்தி தன்னால் எழுந்தது. விருபாக்ஷி குகையிலே தான் ஸஹஜநிஷ்டை சித்திபெற்றது. யாரும் அறியாமல் எவர் அறிமுகமும் இல்லாமல், தானே தானாக மோனமயமாக இருந்த மூர்த்தியை உலகம் அறிய, உள்ளத்தானே பல அன்பரை இழுத்து வந்தான். அவருள் தலைசிறந்தவர் கணபதி சாஸ்திரிகள் அவர் ஆரியம், எனது தமிழ் நரசிம்மஸ்வாமியின் ஆங்கிலம்—இம்மூன்றும் ரமண விஜயத்தை உலகிற்கு விளக்கின. கற்பகச் சோலை மணத்தை அன்புக்காற்று உலகிற் பரப்பியது. தன்னை அறி. அறிந்த படி இரு எல்லாம் தம்மால் நடக்கும்.

> சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
> பற்றற்று நிற்கப் பயில்

என்பது தான் ரமணோபதேசம். சிறுவயது முதலே என்னுள் எழுந்து விளங்கிய சுத்தாத்ம ஞானத்தைப் பரமாத்ம நிஷ்டையாக்கி, அதிலேயே கரைந்து போகச்செய்தது ரமண சம்பந்தம். பிற்காலம் என் வாழ்வில் அபாயமான சோதனைகள் வந்தன. அவை ஆத்ம சோதனையை மிஞ்சிய பரமாத்ம சோதனைகள். இந்த நூலில் அவற்றை எழுதமுடியாது. அத்தகைய சோதனைகளையும் வேதனைகளையும் மாந்தர் கொடுமைகளையும் தாங்கி, எனது வாழ்வின் லட்சியத்தை அடையப் பொறுமையும் உபசாந்தமும் ஏகாக்ர சித்தமும், ஓயா உழைப்பிற்கு வேண்டிய யோக பலமும் தந்தது நான் குகையில் வளர்த்த சுத்தான் மக்கனலே, அதனாலேதான் ஜீவப்படகு தேவதேவன் அருளால், அருட்பெருந்துறை சேர்ந்தது, என் வாழ்வின் அணுவணுவையும் சோதித்து மாசறுத்து, பக்குவப்படுத்தி சோதனைகளால் முறியாமல், பாதுகாத்த, அருள் வாழ்க! அருட்சக்தியை வளர்த்த விருபாட்சி குகை வாழ்க! குகைக்கு வழிகாட்டிய ரமண பகவான் வாழ்க!

301. குகை அனுபவங்கள்

கடவுள் உண்டா என்பவருக்கு உண்டு என்று என் வாழ்வின் அனுபவங்களே சொல்லும்.

நான் நான்கு மாதங்கள் சமாதியில் ஊன்றியிருந்தேன். பசிக் கனல் எழுந்தால் வில்வத்தழையும் வேர்க்கடலையும் உண்பது. அருவி யிற் பருகுவது கண்ணை மூடி நிஷ்டையில் ஆழ்வதுமாயிருந்தேன். ஒரு நாள் " உத்திஷ்டத ! (எழுந்திரு) என்றொரு சத்தம் உள்ளிருந்து கேட் டது. அதிலிருந்த உள்ளம் எழுந்திருந்து முன்னிலை யுலகைக் கண் டது. உலகம் புதிய காட்சி சாலையாகத் தோன்றியது. உலகைக் கண்டதும் இந்த உடல் உணர்ச்சி வந்தது. உடல் நினைப்பு வந்ததும், பசிவந்தது, நல்லபசி. இறைவன் எப்படி இன்று ஊட்டுகிறான் பார்ப் போம் என்று பேசாமல், என் ஆத்மானுபங்களைப் பேரின்பக்கவிகளாக எழுதிக் கொண்டே யிருந்தேன். "நமோத்து" என்று வந்தார் ஆரணி சக்கரவர்த்தி நயினார். அவருடன் இன்னொரு ஜைன நண்பர் வந்தார். இருவரும் ஒரு கூடையை என் முன் வைத்து வணங்கினர். பார்த் தேன் ; முத்து முத்தாக வேர்க்கடலை உருண்டைகளும், ஆரஞ்சுக் கனி களும் வாழைக்கனிகளும் இருந்தன. இவையே என் உணவு. இது திரு வருட் செயலன்றி வேறென்ன? நயினாரை நான் எதிர்பார்க்கவேயில்லை. மற்றொரு நண்பர்" அடிக்கடி எனக்கு வேர்க்கடலை கொண்டு வந்தார். நான் அதற்காகக் கீழே இறங்கும் வேலையும் இல்லை.

தியானம், தியானம்; மோனம் மோனம் !

ஸலாம் ஸாமி

ஒரு நாள் சில இஸ்லாமியர் மலையேறி எனது குகை வாசலில் கூடி னர். அவர்கள் சோற்று மூட்டையை அவிழ்த்து உண்டனர். பிறகு மானேமயிலே என்று காமப்பாடலில் கிளம்பினர். நான் யோகதண் டத்தால் சத்தமிட்டேன். ஒருவன் கதவுள் எட்டிப்பார்த்தான். " அந் தர் ஏக் சாம்பலாண்டி ஹை" என்றார். நான் கதவைத் திறந்து வந்து, நீங்கள் அமைதியா யிருங்கள் என்று மேலே ஸ்கந்தாசிரமத்திற்குச் சென்றேன். ஒரு ஸாகெபுக்கு மனதில் ஏதோ தோன்றி, " ஸாமி நீங்க பாட்டுக்கு இருங்கோ" என்றழைத்தான். நான் அதைக் கேளாமல் மேலே சென்றேன். எல்லாரும் சாப்பிட்டபிறகு, குகைக்குள் புகுந்து, எனது பாட்டுப் புத்தகத்தைப் புரட்டினார்கள். என் பெயரைக் கண்ட தும், " ஹஹா சுத்தனந்த பாரதியா. நம்ம முகம்மதைக்கூடப் பாடி யிருக்கிறாரப்பா." என்று அந்த அறிவாளி என்னைப்பற்றி நண்பருக்குச் சொல்லவே, அத்தனைபேரும் குகையில் உள்ளும் புறமும் தண்ணீர் விட் டுச் சுத்தம் பண்ணித் துடைத்து, ஸ்கந்தாசிரமத்திற்கு என்னைத்தேடி வந்தனர். நான் தியானத்தில் இருந்தேன். கண்விழிக்கு மட்டும் காத் திருந்து " மாப்கீஜியே மஹராஜ்" என்று குகைக்கு அழைத்துச்சென்று " எல்லாம் சுத்தமாக்கினோம். உள்ளே இருங்கோ" என்றனர். எல்

லாரையும் கலிமா ஓதச்சொன்னேன். எல்லாரும் பிஸ்மில்லாஹி ஓதி னர். இஸ்லாமியர் எனக்கு அரிய நண்பராயினர்.

விலங்குகளுடன்

நான் விலங்குகளுடன் அன்பாகப் பழகினேன். நான் கடலை சாப் பிடும்போது திண்ணைக்கு வருவதுண்டு. எதிரே புளிய மரம்; அதில் ஐந்து குரங்குகள் ஒற்றுமையாக வாழ்ந்தன. ஒரு தாய்க்குரங்கு தந்தைக்குரங்கு, மூன்று குட்டிக் குரங்குகள்-நான் சாப்பிடும்போது கர் புர் என்று சத்தமிட்டு, திண்ணைக் கம்பிகளின் முன் வந்து அமைதி யாக உட்காரும். நான் நிலக்கடலை தருவேன்; குரங்குகள் கையை நீட்டி வாங்கி என்னைப்போலவே ஒவ்வொன்றாகச் சாப்பிடும். குட்டிக் குரங்கின் முதுகில் தட்டிக்கொடுப்பேன். அது பல்லை இளித்து உர்புர் என்று மகிழும்.

ஓர் இரவில் நான் அருவிக்குச் சென்றேன். பளபளவென்று பாஸ் வரக் கட்டிகள்போல் தெரிந்தது. உற்றுப் பார்த்தேன், புலி. நான் மெதுவாக குகைக்குத் திரும்பினேன். அதுவும் ஒரு நிமிஷம் கழித்து அந்தப் பக்கம் மெதுவாக வந்தது. நான் திண்ணையில் அமர்ந்து கேசரிமுத்தரைவைத்து அதையே பார்த்தேன். அதுவும் கம்பி வழியே பார்த்து, அதிவிரைவாக மலைமேல் ஓடி மறைந்தது. இரண்டு தரம் நான் வேங்கையைப் பார்த்தேன். நாம் சாதுவாயிருந்தால், அது சாதுவாகப்போய்விடும்.

மலைமேல் பாம்புகள் சாதாரணம். அதிலும் ஸ்கந்தாசிரமம், பாம்புப் பண்ணைதான். பாறைச் சந்துகளில் பாம்புகள் சுருண்டு கிடக்கும். ஸ்கந்தாசிரமத்தில் நான் சில நாட்கள் தங்கினேன். ஒரு நாள் ஒருபாறைமேல் தியானித்தேன். ஒரு நாகம் என் முன்னே படுத்திருந்தது. நான் எழுந்ததும் படம் தூக்கி ஆடியது. நான் சுத்த சக்தி ஜபம் செய்துகொண்டே அதைப் பார்த்தேன். அங்கிருந்த சுவாமிகள் "நாகா போ பொந்துக்குள்" என்றார். நாகம் சாதுவாக சரசரவென்று போய்விட்டது. ஒருநாள் அவர் நாகத்திற்குப் பால் வைத் தார்; குடித்து ஒரு நிமிஷம் படமெடுத்தாடிச் சென்றது. நம் அன்பை விலங்குகள் நன்றாக அறிகின்றன.

காக்கை, கிளி, மைனா, ஊர்க்குருவிகள் எல்லாம் அங்கே பறந்து திரியும். கடலை போடவேண்டியதுதான். பசக்கென்று கொத்திச் செல்லும். கிளிகள் கிச்சிட்டுவரும். மஹரிஷிகள் பிராணிகளிடம் பேரன்புடையவர்கள். லக்ஷ்மி என்ற பசுவை அவர் ஒரு மகள்போலவே பாவித்தார். காலை மாலை புள்ளிசையும் அருவியிசையும் காற்றிசையும் மலர்மணமும் கலந்து என் இதய வீணையில் ஜங்காரம் செய்யும் இந்த இயற்கை வாழ்க்கையில் நான் கண்ட இன்பமே பேரின்பம்.

302. துறவிகள் உறவு

எனது தவத்திற்கேற்ற துறவிகள் நண்பரானார். உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் என்னிடம் வருவார்கள். அவர்களே எனக்கு ஒற்றர் இனி இல்லை என்றனர். அவருள் ஒரு சமணர், எனக்கு எழுதக் காகிதங்கள் தந்தார். வடாற்காட்டுச் சமணர்கள் அடிக்கடி வருவார்கள். ஊரில்வரும் சாமியார்கள் மலைக்கு வரும்போதெல்லாம் என்னையும் காண்பார்கள். பக்குவிகளிடம் புதிய சாதனமுறைகள் கேட்டறிவேன். சிலர் கேள்வி கேட்பார்கள். அகவலாகவே பதில் எழுதித் தருவேன். அப்படி எழுதிச் சேர்த்ததே பிற்காலம் இன்பமாலையாக வந்தது, சிலர் வம்படிக்கவும் வருவதுண்டு. சவடால்சாமி புருடாக்களை அவிழ்த்துவிடுவார். நான் அங்கே பேசினேன் இங்கே பேசினேன் என்பார். சாமி இங்கே உள்ளத்தில் பேசும் என்பேன். ராங்கிநாதர் அவனுக்கென்ன தெரியும் இவனுக்கென்ன தெரியும் என்று தொடங்கி ரமணருக்கென்ன தெரியும் என்று பேச்சு மிஞ்சும்போது, "சாமி ரமணருக்குத் தன்னைத் தெரியும். சும்மா இருக்கத் தெரியும்." என்பேன் ஆள் பேசாமற் செல்வார். சைவச்சாமி வேதாந்திகளை வெறுப்பார். வேதாந்தச்சாமி சித்தாந்திகளை வெறுப்பார். நான் விருப்பு வெறுப்பற்ற நிலையே அறிவு என்பேன். காஷாயக் கும்பலில் கள், அபின், கஞ்சாச் சாமிகளும் உண்டு. அவர்களுக்கு இந்தக் கெட்டபழக்கங்களை விடச் சொல்லுவேன். பரிசுத்தமான சில துறவிகளையும் கண்டேன்

யோகி ராமையா

யோகி ராமையா நெல்லூர் செல்வர்; என்னுடனேதான் மௌனம் பூண்டார். சொரூபதியானம் செய்தார். அவருக்கு மாமரத்துக் குகையில் இடம் கிடைத்தது. ராமகிருஷ்ணசாமி சமையல் செய்து போட்டுதவினார். அதற்காக ஒரு குக்கர் வைத்திருந்தார். நான் வந்ததுமே ஸ்ரீராமையா சாப்பிடச் சொல்லுவார். அத்யாத்ம ராமாயணம் ரமணோபதேசம்-இரண்டே படிப்பார். உண்பது, குகைக்குள் தியானிப்பது—இரண்டே அவர் வேலை. ஸ்ரீராமையா அரியதுறவி, அன்புமயமானவர்.

நரசிம்ம சுவாமிகள்

புகழ்பெற்ற B. V. நரசிம்மையர் நீண்ட உலகானுபவம் உடையவர். வக்கீலில் வாரிக்கொட்டியவர். சட்டசபையில் தமிழில் பேசிய சிங்கம். ஓம்ரூல் இயக்கத்தில் பங்குகொண்டவர். திலகர்—காந்தி நண்பர். குடும்பத்தில் நேர்ந்த துக்கத்தால் உலகியல்பறிந்து துறந்து, ரமணாசிரமம் சேர்ந்தார். அவர், ஆங்கிலம் தமிழ், ஆரியம் தெலுங்கு மொழிகளில் வல்லவர். அழகான ஆங்கிலம் பேசுவார், எழுதுவார். ராமஜபத்திலும் ராமாயணத்திலும் பிரியங்கொண்டவர், வேதாந்த நூல்களை ஓயாமல் படிப்பவர். திலகருடன் அவர் மதுரை வழியாக

சீமைக்குச் சென்றபோது, நான் பார்த்தேன். பிறகு எங்கள் ஊரிலேயே அவர் பிரசங்கம் நடந்தது. அவர் துறவிகளிடம் பேரன்பு கொண்டவர். நாராயணவரம் சித்தர், ரமணபகவான், உதாசினிபாபா சாயிபாபா சரித்திரங்களை அவர் தெளிவாக எழுதினர். அவரை நான் தினம் காண்பதுண்டு. மலையிலிருந்து கீழே இறங்கும் வழியிலேதான் அவரது ஓட்டுக் கட்டிடம். இருவரும் எழுத்தால் அளவளாவினேம். ரமணுசிரமத்திலும் இருவரும் சந்திப்போம். நான் பஜனைபண்ணும் போது அவரும்கூட இருப்பார். அவர் பிற்காலம் சாயிபாபாவிடமே ஈடுபட்டு, சாயிஸமாஜம் கண்டு, தலைமை வகித்து நடத்தினர். சாயி சுதா பத்திரிகை நடத்தினர். அவர் சாயிநாதசேவைக்கே பிறந்தவர். பாபா அவர் வாழ்வை நடத்தினர். அவருடன் இன்றும் நான் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஜோதிசாமி

ஸ்கந்தாசிரமத்திற்குச் செல்லும்போதெல்லாம் ஜோதிபிரமானந்தர் முகம்மலர்ந்து வரவேற்று உபசரிப்பார். அவர் குருக்களாயிருந்தவர், சித்தாந்தி, அருட்பா நேயர், நான் ஒருநாள் பசியுடன் சென்றேன். திடீரென்று என்முன் கடலையும் கனிகளும் வந்தன. வியந்தேன். பிறகு சுவாமிகள் உபாசிக்கும் ராஜேஸ்வரியை வணங்கினேன். திடீரென்று என் தலைமேல் குங்குவம் விழுந்தது. சாமிக்கு அம்பிகை அருள் கூடிவிட்டது என்று தீபாராதனை செய்தார். தீபாவளியன்று நான் அவருடன் இருந்தேன். பாம்பு படமெடுத்து வந்தது...'நாகப்பா போ' என்ருர். அது பாறைக்குள் சென்றது. அவரே அருணகிரி உச்சிக்குப் பாதை காட்டினர். அங்கே அடிக்கடி சென்று தியானித்தேன்.

நாயனு

நான் உள்ளன்புகொண்டு பழகிய வேதப் புலவர்—காவியகண்டம் கணபதி சாஸ்திரிகள். அவர் தாமே படித்து, தெலுங்கிலும் ஆரியத்திலும் வேதக்கலையிலும் பெரும் புலமைபெற்ருர், கோடி பஞ்சாக்ஷரி ஜபித்து சித்தி பெற்ருர். அவர் சமுஸ்கிரதசாகரம். அவர் பல நூல்களைச் செய்தார். அவற்றுள் உமாஸஹஸ்ரமே தலைசிறந்தது. அவரே ஸ்ரீரமணரை மஹரிஷிகள் என்று பெருமைப்படுத்தினர்; மஹரிஷிகளின் உபதேசங்களை ஸ்ரீரமணகீதையாகத் தொகுத்தார். அவரை நாங்கள் நாயனு (அப்பா) என்றழைத்தோம். அவருக்கு நாடெங்கும் பல சீடர் உண்டு. எனக்குப் பல மந்திர ரகசியங்களையும், வேதரகசியங்களையும் அவரே சொன்னர். அவர் சிறந்த தேசாபிமானி. தேச விடுதலைக்கும் பாடுபட்டவர். அரசியல் கூட்டங்களில் அவர் பேசினர். அவர் சாதிமதபேதமில்லாத வேதியர். அவர் எனக்கு மான்தோல் தந்து, குகையில் வந்து இரண்டுமணி நேரம் என்னுடன் தியானித்தார்.

303. சேஷாத்திரி பரமஹம்ஸர்

மஹர்ஷிகளைப் பார்த்து குகைக்குச் செல்லும் வழியில் கோயில் முன் நின்றேன். ஒரு திருமேனி எதிர்ந்தது. அழுக்குமயம்; தெருப் புழுதியெல்லாம் அவர் ஆடையிலும் உடம்பிலும் படிந்திருந்தன. இந்த உடம்பில் இந்த ஜீவன் எப்படித்தான் இருக்கிறதோ என்று தோன்றியது. சிறிது தியானித்திருந்தேன். "சுத்தானந்தம் வந் திருக்கு" என்று கிண்கிணிக் குரலில் பேசினர். அவரே சேஷாத்திரி சுவாமிகள் என்றறிந்தேன். அவர் மந்திர சித்தர். சக்தி உபாசகர். வேதவித்து. இசைவாணர். என்னை நன்முக அறிந்து கொண்டிருந் தார். நான் எப்போது மலையிலிருந்து வந்தாலும் எதிரே காண்பார். "மேலே மேலே போ" என்பார். "சாமி மேலேதான் போகிறேன். கீழே இறங்கவும் வேண்டியிருக்கிறதே" என்பேன். ஒருநாள் எனது நெஞ்சைத்தொட்டு "சுத்தானந்தம் இங்கே யிருக்கிறது; இங்கே ஏறிப் போ" என்று உச்சியைத் தொட்டார். அதுதான் மேலேபோ என்ற தன் பொருள். ஒருநாள் நான் அவருடனேயே கிரிப்ரதட்சிணம் செய் தேன். அவர் மூகபஞ்சாசதி பாடினர். இருவரும் கோயில் மண்டபத் திற்கு வந்தோம். அவருக்காகப் படுக்கை போட்டிருந்தார்கள். பால் வைத்திருந்தார்கள். அவர் ஒன்றையும் கவனிக்கவில்லை. ஒரு தூணில் சாய்ந்து, "உனக்குத் தீப்பிடிச்சிருக்கு. இது பஸ்பமாகும், அது பானு வாகும்" என்று கால்மணி நேரம் மெல்லப் பேசினர். "மகோப தேசம்! சாமி சிவக்கனலில், இதுவான தேகவாசனை சாம்பலாகும். அதுவான சுத்தாத்மஜோதி சூரியன்போல் ஒளிரும். இதுதானே பொருள்" என்றேன். "ஆமாம் ஆமாம்...அதைப்பற்று, அதுவாயிரு. அப்படியே இரு. சுத்தானந்தமாயிரு" என்ற அவர் உபதேசம் இன் னும் உள்ளே ஒலிக்கிறது. நான் புதுச்சேரிக்குப் புறப்பட்டபோதும் அவர் "சுத்தானந்தமாயிரு" என்று சொல்லிப் புன்னகைத்தார். அவ ரைக் கடைசிமுறையாக வணங்கியே ரயிலேறினேன். பாரதநாட்டு ஜீவன்முக்தருள் அவர் சதாசிவப்ரம்மேந்திரர் போன்றவர்.

304. அருள் வாக்கு

யோகசித்தியில் உள்ள ஸஹஸ்ரார சித்தியே நான் குகையில் அடைந்த சித்தி. அதை அடைந்த நாள் விஜயதசமி. ஒரு மாதமாக நான் கீழே இறங்கவில்லை. குகையிலேயே இருந்தேன். சுத்த சக்தி ஸஹஸ்ரார ஜோதியாக எழுந்த நாள் எனக்குப் பசி தாகமேயில்லை. ஒரு வெது வெப்பான கடலில் என் உயிர் இன்ப நீராடித் திளைப் பதுபோலிருந்தது.

உச்சியிலே பேரின்ப ஊற்றைக் கண்டேன்
உளஞ்சிலிர்க்க உயிர் அமுதம் ஊறக் கண்டேன்

அச்சமில்லை, ஐயமில்லை அடிமை யில்லை
அகண்டாத்ம சுதந்தரத்தின் அரசைக் கண்டேன்
மிச்சவினை முடிய ஒரு வீறு கண்டேன்
விண்ணின்பம் என்னுள்ளே விளங்கக் கண்டேன்
இச்சையுள சித்தியெலாம் எதிரே கண்டேன்
இறைவன் எனை நடத்துகின்ற விதங்கண் டேனே.

இனி என்ன செய்வது? அப்படியே குகையில் தன்னுள் லயித்திருப்பதா? இந்த உடலைச் சுமந்து எத்தனைநாள் அலைவது? இது வந்தவினை என்ன என்று சிந்தித்தேன். மளமளவென்று சில இசைப் பாடல்களை எழுதி ரமண சந்நிதியில் பாடினேன். ஆடினேன். பகவான்முன் தியானித்தேன். இரவில் குகைக்குவந்து, "இறைவா இனி வழியென்ன? ஆணை யென்ன?" என்று முறையிட்டேன். காலை நான்கு மணிக்கு "பாரதசக்தியை உலகிற்குத்தா. வாக்கினால் மௌனமாகப் பணிசெய்" என்ற ஆணை பிறந்தது. இந்த ஆணை நிறைவேற இடந்தேடினேன்.

அப்போது எனக்கு ஸ்ரீ அரவிந்தரின் நினைவே வந்தது. ஆரியா கர்மயோகி, வந்தேமாதரம் இம் மூன்றையும் நான் படித்து அவரிடம் அன்பு கொண்டேன், காலை ஏழு மணிக்கு நாயனு The Mother (அன்னை) என்ற நூலைத் தந்து "அரவிந்த ஆசிரமத்தில் இருக்கலாம்" என்றார். அதுதான் கடவுள் ஆணை. உடனே நவம்பர் தரிசனத்திற்கு விண்ணப்பம் எழுதினேன். அதில் நாயனு எழுதினார்: 'சுவாமி சுத்தானந்த பாரதியை நீண்ட காலமாக நான் அறிவேன். அவர் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசிக்கத் தகுந்தவர்." நான் எனது விண்ணப்பத்தில் "நீண்டகாலம் பராசக்தி உபாசனையால் சக்தி யெழுச்சி பெற்றேன். பராசக்திக்கே என் வாழ்க்கை நிவேதனம். அன்னை திருவடி நிழலில் விருந்து தவம்புரிய ஆர்வ முற்றேன். என்னிடம் உள்ள தொகையை அர்ப்பணிக்கிறேன். தரிசனத்திற்கு உத்தரவாகவேண்டும்" என்றெழுதினேன். அரவிந்தாசிரமத்திலிருந்து உத்தரவு வந்தது.

305. பலாக்கொத்தில்

என் இச்சை இனி இல்லை. ஓரிடத்தில் இருப்பதும் போவதும் அவனிச்சை. ஒருநாள் குகையில் சமாதிஸ்தனாயிருந்தேன். ஒரு பண்டாரம் வந்தார். கும்பிட்டார்; "சாமி இங்கேயே இருக்கலாம், இது எங்கள் குகை. ஆனால் ஒன்று செய்யவேண்டும்." "என்ன?" "திருக்கார்த்திகை வருகிறது, கூட்டம் அதிகம் வரும். தாங்கள் உள்ளேயே நிஷ்டையில் இருக்கவேண்டும். சாப்பாடு தருவோம். வெளி வாசலுக்குப் போகச் சட்டி வைப்போம். வெளியே நாங்கள் பறை கொட்டி, உள்ளே சித்தர் இருக்கிறார் மகாமுனிவர் பாருங்கோ என்று பணம்

வருவிப்போம், அதனால் எங்களுக்கு நல்ல வரும்படியாகும்" என்றார். "மஹர்ஷிகளிடம் கேட்டுச் சொல்லுகிறேன்" என்று எழுதித்தந்தேன். "நீங்க இருக்காட்டி நாங்களே காவிகட்டி உட்காருவோம். உங்க பெயரைச் சொல்வோம்'' என்றார். இதேதடா வம்பு நமது பெயரைச் சூதாடுவதா என்று நான் பகவானிடம் வந்து தெரிவித்தேன். "யாரது அப்படிச் சொன்னது'' என்று அவர் கண்டித்து, "பாரதி இங்கேயே இருக்கட்டும்" என்றார். நாயனா தமது பலாக்கொத்தில் இடந்தந்தார். நான் பகவான் கட்டிலின் கீழேயே மான் தோல் விரித்து நிஷ்டை கூடியிருந்தேன். பெரும்பாலும் உபவாசமே; பகவான் "பாரதி சாப்பிடலாமே" என்பார். நெஞ்சைத் தொட்டு "ஞான உணவே போதும்" என்பேன். ஒருநாள் ஒரு வெண்கலப் பானை நிரம்ப சர்க்கரைப் பொங்கலை என் முன் வைக்கச் செய்தார். நான் அதில் பத்து மிந்திரிப்பருபுமட்டுமே உட்கொண்டேன். நான் இரவும் பகலும் பிரம்மாகார சக்தியையே உண்டு ஆங்கே இருந்தேன். பலாக்கொத்தில் நாயனா ருக்வேத விளக்கம் செய்தார். அவருடன் பேசுவதே பேரின்பம். எனது கொள்கைகள் முழுதும் வேதத்திற் கண்டேன். அப்போதே வேதபுரிப்படலமும் வேதசாரப்படலமும் உருவாயின. இரண்டையும் கேட்டு நாயனா மிக்க மகிழ்ச்சியடைந்தார். நாங்கள் சும்மா இருப்பதில்லை. ஏதாவது யோசனை செய்வோம். இருவரும் ரமணாசிரமத்தை ராமகிருஷ்ண மடம்போலும் காங்கிரிபோலும் பெரிய அத்யாத்ம நிலையமாக்கப் பார்த்தோம். அப்போதுதான் ஆசிரமத்திற்காகப் பெரிய நிலம் தர்காஸ்து வாங்கினார்கள். அதற்கு ஒரு நிர்வாகக் குழுவும் ஏற்பட்டது. அதில் என் பெயரும் பி. வீ. நரசிம்மர் பெயரும் இருந்தன. அன்று மாலை நான் நாயனாவிடம் பேசியபோது சொன்னேன் :

பாரதசக்தியை வளர்த்து நானூறு யோகிகளைப் பூரண சக்திமான்களாக்கி, நாடெங்கும் அனுப்பி, யோக சங்கம் நிறுவுவோம். ரிஷி ஞானத்தையும் தற்காலக் கலை ஞானத்தையும் பரப்புவோம். அதற்கு வேண்டிய எல்லா நூல்களையும் எழுதி வெளியிடலாம். சுத்த நிலையத்தில் கல்வி, தொழில், கலை, சன்மார்க்க சாதனம், யோகம், தேசசேவை, எல்லாம் நடக்கும். சங்கத்தொண்டர் பிறர் உதவியில்லாமல், தங்கள் தேவைகளைத் தாமே உழைப்பால் அடையவேண்டியது. உழவு நூற்றல் நெசவு சமையல் எல்லாம் அவர்களே செய்யவேண்டியது. யாசகம் வாங்காமல், தொழில் முயற்சியால் பிழைக்கவேண்டியது. எல்லாரும் ஆங்கிலம், ஆரியம், இந்தி, தமிழ் கற்கவேண்டும். பெண்களும் சங்கத்தில் சேரலாம். ஆனால் பிரமசரியம் வேண்டும். நாயனா "ஆஹா புதுச்சேரி சென்று வாருங்கோ அப்படிப்பட்ட சுத்த நிலையம் நாட்டுவோம்'' என்றார். ஆனால் அவரே ரமணாசிரமத்தை விட்டுக் கிளம்ப நேர்ந்தது. எங்கள் எதிர்காலம்பற்றிப் பேசினோம். வாருங்கள் இமாலயம் என்றேன். பாரதசக்தி ஐந்தாங் காண்டக்

காட்சிகளைச் சொன்னேன். "அது பிற்காலம்" என்றார். பாரத சுதந்தரம்பற்றி ஒருநாள் ரசமான பேச்சு நடந்தது. இப்போது நிகழும் கண ராஜ்யத்திற்கு அப்போதே நாங்கள் திட்டம் வகுத்தோம், அது பாரதசக்தி சாசனப்படலத்தில் உள்ளது. அதை அப்படியே நாயனுவிடம் அரங்கேற்றினேன். இப்படி வேதமும் பாரதசக்தியும், சிந்தனையுமாயிருந்த எனக்குப் புதுச்சேரி நினைவும் மறந்திருந்தது. அதைத் தூண்ட துவ்வூரி ராமகிருஷ்ணராவ் வந்தார்.

306. எடுத்துக்கொண்டு போம்

கார்த்திகைக் கூட்டம். பாவான் அரியணை வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். நான் அவர் திருவடியில் தியானம் செய்தேன். புதுவை கந்தர்வபுரிக்கு நாளைச் செல்வேன். செல்லும் காரியம் சித்திக்கவேண்டும். பாரதசக்தி நிறைவேறி வெளிவரவேண்டும். ஆயிரம் நூல்கள் எழுதித் தமிழையும் இந்தியக் கலைகளையும் வளப்படுத்தவேண்டும். சமாதி சித்தியும் ஸஹஸ்ரார சித்தியும் இப்போதுபோல் நிலைத்து, ஜீவ தத்துவங்களெல்லாம் பூரணமாகவேண்டும். இவற்றிற்கு இருபத்தோறு ஆண்டுகள் மௌனவிரதம் பூணவேண்டும். அப்போது வரும் இடர்களை வெல்லவேண்டும். இவையே அந்தரங்க சங்கற்பங்கள். பகவான் என்னையே பார்த்தார். புன்னகைத்தார். நான் புதுச்சேரி செல்வது யாருக்கும் பிடிக்கவில்லை. 'ஏன் போகிறீர்? அங்கே அப்படி இப்படி, அவர்கள் இப்படி அப்படி; அதைச் சாப்பிடுகிறார்கள். உள்ள யோகமும் போய்விடும்.', என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் மனச்சாட்சியின் உத்தரவை நான் மீறலாமா? உள் அழைப்பு வந்தது. பகவான் திருக்கரத்தில் ஒரு பெரிய பேரீச்சம்பழ உருண்டையை வைத்துப் பிரசாதம் கேட்டேன். அவர் என்னையே ஒரு நிமிஷம் பார்த்து, "கோஷை முன்பே பார்த்ததுண்டோ இல்லையோ" என்றார். நான் கண் பார்வைக்காகச் செல்லவில்லை. "ஆண்டவன் போ அங்கே" என்கிறான். அவன் அழைப்பை மறுக்கமுடியுமா? கொஞ்சம் பிரசாதம் என்றேன். "எடுத்துக்கொண்டு போங்காணும்" என்று என் கையைத் தட்டினார். சிறிது பேரீச்சம்பழம் எடுத்துக்கொண்டு வணங்கினேன். அப்போது உள்ளது நாற்பது நடந்தது. சிறிது ஞானோபதேசமும் நடந்தது. அதன் சாரம் பாரத சக்தி அருண ஜோதிப்படலம் 516ம் பக்கத்தில் உள்ளது. நாள் குட்டிய இறுதிப் பாமாலை 518ம் பக்கத்தில் உள்ளது. நாயனு என்னை அன்புடன் உபசரித்து "சுத்த நிலையம் அவசியம் நடத்தலாம். எங்காவது நடத்தலாம் போய்வாரும், சுபமஸ்து" என்று என் கையைப் பிடித்துக்கொண்டு ஒருமணி நேரம் தியானித்தார். இருவர் யோக சக்தியும் கலந்தன. நான் ரயிலுக்கு செல்கிறேன். சேஷாத்ரி சுவாமிகள் எதிரே வந்தார்; வணங்கி, விஷயத்தைச் சொன்னேன். சுத்தானந்தமாயிரு; பேசாமல் உன் காரியத்தைப் பாரு; என்ன இடர் வந்தா

லும் பொறு; எல்லாம் நல்லதுக்கே" என்றார். இந்த உபதேசம் சமய சஞ்சீவியாயிருந்து வெற்றி தந்தது.

வண்டியில் அமர்ந்தோம். அரவிந்தாசிரமப் பேச்சு அங்கும் எழுந்தது. நான் யாரிடமும் வாதாடாமல் உள்ளடங்கியிருந்தேன். விழுப்புரத்தில் ஒரு வெள்ளைக்காரி எங்கள் வண்டியில் ஏறினாள். அதுவும் இறைவன் இச்சையே. ஆசிரமத்தில் ஐரோப்பியரிடம் பழகவேண்டும். எப்படி என்று தெரிந்துகொள் என்பதுபோலிருந்தது. இந்தியரிடம் தனக்குப் பிடிக்காத பழக்க வழக்கங்களை அவள் சொன்னாள். இந்தியாவில் நான் விரும்புவது காந்தி கீதை இரண்டுமே என்றாள். பிறகு நான் எழுதிய ஆங்கிலக் கவிதையைப் படித்தேன். அந்த அம்மையார் மணம்புரியவேயில்லை. ஏன் என்று கேட்டேன். "கடமையே என் கடவுள். வேறு எவருக்கும் நான் ஆளில்லை. மணம் புரிந்து ஓர் ஆடவனுக்குப் பணிந்து......" என்று வெகு நீளம் வாய் நீட்டிக் குடும்ப வாழ்க்கையை ஏசினாள். பதிற் பேசாமல் நான் சும்மா இருந்தேன், அவள் பேசித் தீர்த்தாள்.

புதுச்சேரி வந்தது. இயற்கை சர்மா மகன் தியாகு, வண்டி வைத்து அழைத்தான். சர்மா வீட்டிற்குச் சென்றேன். நன்னைய பாகவதர் வணங்கினார். சர்மா துள்ளிக்குதித்து வரவேற்றார். ஒற்றரும் உள்ளே நுழைந்தனர். என் பழைய நண்பர் வந்தனர். "அங்கே என்ன இருககிறது" என்றெல்லாம் பேச்சு. அங்கேதான் எனக்கு எல்லாம் இருக்கிறது என்று சுருக்கமாகப் பதிற்சொல்லி, நான் மௌன விரதம் பூண்டேன். இரவில் பலர் பார்க்க வந்தனர். பேசாமல் பத்மாசனம் போட்டு தியானித்தேன். மறுநாட் காலை பத்து மணிக்கு அரவிந்த தரிசனம் செய்தேன்.

கூசா. நிறைவேற்றம்

307. அரவிந்தாசிரமத்தில்

தரிசனம்: கந்தர்வலோகத்துள் புகுந்தேன். அடியார்கள் பட்டும் சரிகையும் அணிந்து மலர்களுடன் வீற்றிருந்தனர். ஒற்றைக் காஷாயம் கட்டிய நான் அவர்களிடையே பத்மாஸனம் போட்டு தியானித்தேன் மௌனம் தீவிரமானது. "ஷுட்டானந்த்" என்ற சத்தம் கேட்டது. மேலே வரிசை நடந்தேன்.

ஸ்ரீ அரவிந்தர்—மலைபோல் வீற்றிருந்தார்—அன்னை வலப்புறம் அல்லிமலர்க் குவியல்போல் அழகாக விளங்கினாள். அரவிந்தர் புன்னகைத்துத் தலையசைத்தார். நான் மாலை தந்து மலரால் அர்ச்சித்து வணங்கினேன். ஆசியளித்தார். முன்னே அவரைக் கண்டிருந்தேன். இப்போது ஆள் பழுத்துப்போனார். அன்று நான் பார்த்த அர்விந்தர்

வேறு, இன்றிருக்கும் அரவிந்தரே வேறு. அன்று திவ்ய தேஜஸ்வி யாகத் தோன்றிய அரவிந்தரையே நான் அரவிந்த ப்ரகாசத்திலும், (Sri Aurobindo the Divine Master) என்ற நூலிலும் வர்ணித் தேன். எனது கவிதை மலரை அர்ப்பணித்துவந்து, நேராக சர்மா வீட்டு மாடியேறி தியானத்தில் அமர்ந்தேன். மறுநாள் தனியாக அரைமணிநேரம் தியானித்தேன். அன்னை என்னை ஏற்ருள். ஆசிர மத்தில் இடம் பெற்றேன். என் பாங்குப் பணமெல்லாம் அன்னைக்கே அர்ப்பணித்தேன். என் கைக்கு வந்த பணங்களெல்லாம் அன்னைக்கே தந்தேன். சுமை ஒழிந்தது. அகண்ட மௌனம் பூண்டு, இருபத்தி ரண்டாண்டுகள் ஸஹஸ்ரார நிஷ்டையிலிருந்து துரிய சித்தி பெற் றேன். தெய்வப்புலமை எழுந்தது. பாரதசக்தி முதல் ஆத்ம சோதனை வரையில் ஆயிரம் நூல்கள் மலர்ந்தன. எல்லாம் தமிழன் னைக்கு நிவேதித்தேன்.

1908ம் ஆண்டுமுதல் ஸ்ரீ அரவிந்தரிடம் எனக்கு அன்புண்டு' அவரை 1918ம் ஆண்டு தரிசித்தேன். அப்போது சாதாரணமாயிருந் தார். இப்போது ஆள் மாறிப்போனர். முன் பழக்க வழக்கங்களெல் லாம் மாறின. நான் நான்காண்டுகள் அவருக்கு உணவு தயாரித் தேன். சந்தேஸ் ரசகுல்லா, கிச்சடி, பூரி முதலியன நிவேதித்தேன். அக்காலம் என்னுடன் நளினீசர் உதவிக்கிருந்தார். அவரிடம் வங்காளம் கற்று, பங்கிம் டாகூர் காவியங்களைப் படித்தேன். பங்கிம் நாவல்களை யும் கற்றேன். அவற்றுள் ஆனந்தமடம், தேவி சௌத்ராணி ஆகிய இரண்டையும் படித்தபோது, அரவிந்தாசிரமம் முன்னின்றது. ஸ்ரீ அர விந்தர் பாரதச் சுடர். தந்தையின் ஆங்கிலப் பண்பும், பாட்டன் ராஜ நாராயணவசுவின் பாரதக் கலைப் பண்பும் அவரிடம் சேர்ந்தன. அவர் பதினன்காண்டுகள் (1879—93) இங்கிலாந்திலேயே கல்வி பயின்ருர். ஆங்கிலம், கிரீக்கு, லத்தீன் ஆகிய மும்மொழிப் புலமை பெற்று, கேம்பிரிட்ஜ் பட்டதாரியாக இந்தியா திரும்பினர். பதின் மூன்ருண்டுகள் அவர் பரோடா சமஸ்தான ஊழியராயிருந்தார். மகாராஜா கல்லூரியில் ஆங்கிலம் போதித்தார். இந்தக்காலமே அவர் வடமொழி பயின்று, கீதை உபநிஷத்தில் அடங்கிய கருத்துக்களைச் சாதகம் செய்யத் தொடங்கினர். கீதையின் பிரபத்தி மார்க்கமே அவரைக் கவர்ந்தது. கண்ணன் அன்பு அவரைப் பற்றிக்கொண்டது. 1907ம் ஆண்டுமுதல் மூன்ருண்டுகள் அவர் வங்காளத்தில் தேசசேவை செய்தார். திலகரின் சுதேசக் கிளர்ச்சியை அவரது வந்தேமாதர கட்டுரைகள் சுடரோங்கத் தூண்டிவிட்டன. திலகரின் தீவிரத்திற் கும் கோகலேயின் மிதத்திற்கும் ஒத்து வரவில்லை. சூரத் காங்கிரஸில் இரண்டிற்கும் பிளவு ஏற்பட்டது. அரவிந்தர் திலகரையே போற்றி, கோகலேயின் மிதவாதத்தைப் பலமாகக் கண்டித்தார். இதனிடையே புரட்சிக்காரர் குண்டடெறிந்து இரண்டு வெள்ளைத் திருமேனிகளை ஒழித்தனர். கல்கத்தாவில் போலீஸ் தர்பார் கடுமையாக நடந்தது.

வரீந்திரர் முதல் அரவிந்தர் வரையில் பல தேசபக்தர் அலிபூர் சிறையில் அடைபட்டனர். ஆண்டவன் புண்ணியத்தாலும் சித்தரஞ்சனர் நாவன்மையாலும் அரவிந்தர் தலை தப்பியது. 5-5-1909ல் அவர் விடுதலையடைந்து உத்தர பாராவில் தர்மப் பிரசாரிணி சபையில் சநாதன தர்மத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அந்த ஆவேசப் பிரசங்கமே அவர் வாழ்வின் கண்ணுடியானது. கர்ம யோகி என்ற பத்திரிகைமூலம் நாட்டுக்கு வழிகாட்டி 4-4-1910ல் அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். இங்கே குப்புசாமி ஐயர் வீட்டில் சிலகாலம் தங்கி அவர் மாப்பிள்ளை அருணாசல ஐயர் உபசரணையில் இருந்தார். பிறகு சங்கரச் செட்டியார் வீட்டில் இருந்து, பிறகு வெள்ளைக்காரத் தெருவில் குடியேறினர். 1915ல் அவர் ஆரியா என்ற ஆத்மீகப் பத்திரிகையைத் தொடங்கி, 1921 வரையில் நடத்தினர். பிறகு உள்ளாராய்ச்சியில் அடங்கினர். இச்சமயம் அரிய அறிவாளிகள் அவரைச் சூழ்ந்தனர். பாரிஸிலிருந்து பால் ரிஷார்டு தமது மனைவி அல்பாஸாவுடன் வந்தார். மனைவி அன்னையானள். ஆசிரமம் எழுந்தது. அன்னையின் குப்த சக்தியாலும் அரவிந்தரின் தாந்திரிக சக்தியாலும் ஆசிரமம் செல்வச் செழிப்புற்று அற்புதமாக வளர்ந்தது. அரவிந்தாசிரமம் நவயுக உலகமாக விளங்கியது. பல நாடு பல சாதி பல மதத்தினர் அங்கே வாழ்ந்தனர். அழகும் துப்புரவும் ஆசிரமத்தில் எங்கும் காணும். ஆசிரமிகள் அன்னையின் அடித்தொண்டு பரவுகிருர்கள். அன்னை, திருக்கரத்தால் மலர் தந்தும் ஆசியளித்தும் அடியார்களை ஆளுகிருள். ஸ்ரீ அரவிந்தர் ஆண்டுக்கு நான்கு நாட்கள் தரிசனம் தந்தார்: உத்தரவு கிடைத்தால் ஒரு நொடி கண்டு காணிக்கை செலுத்தி வரலாம். ஸ்ரீ அரவிந்தர் திருவுள்ளம் (Life Divine, Synthesis of Yogas, Essays on Gita, Savitri) ஆகிய நான்கு நூல்களில் அடங்கும். சாவித்திரி, சாவித்திரி-சத்யவான் கதைமூலம் உலகிற்கு அமரத் தன்மையை விளக்கும் மகா காவியமாகும. உலகம் உண்மை. உடலும் உண்மை. வாழ்வே யோகம். மானிடத்தில் தெய்விகத்தையும் உலகில் விண்ணரசையும் நாட்டலாம். மனதிற்கு மேலோங்கி, விஞ்ஞான சேதனம் அடைதலே வழி. விஞ்ஞான ரூபாந்தரத்திற்கு அன்னையைச் சரண்புகுதலே வழி. உடல், பொருள். உயிர் எல்லாம் அன்னை திருவடிப் பணிக்கே நிவேதித்து, அவள் இச்சைப்படி நடந்தல் ஒன்றே இங்கே சாதனம். ஸ்ரீ அரவிந்தரே தெய்வம் அன்னையே பராசக்தி—அவர்கள் தாஸனுவதே உய்யும் வழி என்பது அரவிந்தாசிரம யோகமாகும். இந்த யோகத்தை உலகிற்கு விளக்க ஏராளமான பத்திரிகைகளும் புத்தகங்களும் குவிந்து கிடக்கின்றன. ஆண் பெண் இருபாலாரும் சரி நிகராக அன்னையின் கொடி பிடித்து ராணுவ நடை போட்டு விண்ணரசை நோக்குகிருர்கள் பல வகை மாந்தர் ஒன்றுகூடி இப்படிக் கலியுகத்திலிருந்து கிருதயுகத்திற்குச் செல்லும் சமயம், ஸ்ரீ அரவிந்தர் இறந்தது வருந்தத்தக்கது. சில

நாட்களாக மகா துரிய சமாதியில் ஆழ்ந்திருந்த நான் இதை உள்ளே உணர்ந்தேன். என்னுள் அவர் ஆவி இறங்கியதுபோல் உணர்ந்தேன். திடீரென்று 5—12—50 செவ்வாய் காலை எட்டு மணிக்குச் சென்னியப்பர் கதவைத் தட்டினர். திறந்தேன்; "ஸ்ரீ அரவிந்தர் காலஞ்சென்றார்" என்றார். திகைத்தேன். உடனே மாலையுடன் சென்று முகதரிசனம் கண்டேன். ஆ, உயிரோடிருந்தபோது அவரைக் காண முடியாது மறைத்த மாயத்திரை அங்கே இல்லை. ஊரெல்லாம் அவரை வரிசையாகப் பார்த்தது. ஆசிரமம் சோகமயமான மௌனத்தில் புதைந்திருந்தது. ஸ்ரீ அரவிந்தர் முகத்தில் மட்டும் உயிர்க்களை பொலிந்தது. மௌனமாக பூமாலையும் பாமாலையும் வைத்துத் திரும்பினேன் :

யாராரும் காணு அரவிந்த, நின்னுடலைப்
பாராரும் காணப் பறந்தாயோ—சீராரும்
யோகத்தாற் போக முவந்தாய் அரவிதா,
ஏகத்தால் என்னுள் இரு.

எண்ணி எழுதி யியற்றுமுன் போற்கனவால்
மண்ணுடலும் பொன்னுக மாறு முன்னே—விண்ணரசு
விண்ணிலே என்று விரைந்தாய் அரவிந்தா !
புண்ணியஎன் நெஞ்சிற் புகு.

நித்தியமே தேகமேன நீளப் பறையடித்த
சித்தர்களும் ஊனுதறிச் சென்றுவிட்டார்—இத்தலத்தில்
எந்தை இறையருளே எண்ணி எனதுயிரே
வந்தவினை செய்து மகிழ்.

இச்சம்பவம் என் ஆத்மசாதனையிலும் சோதனையிலும் ஒரு புதிய சகாப்தத்தை ஊக்கியது. பதியன்பு பலமானது. மகாதுரிய சமாதியால் நாதவிந்து கலாதீதமாய் உன்மனிசமனிக் கப்பாலாய், எட்டாம் நிலை கடந்த பரம் பரம்பொருளைக் கலந்துணரும் பரமானந்தம் பெற்றேன். இனி அரவிந்தாசிரமத்தில் என் யோக வாழ்வு எப்படி நடந்தது என்பதைச் சொல்லுகிறேன்.

308. சுத்தயோக சித்தி

சுத்தயோகம்—இதுவே என் வாழ்க்கை. சுத்தம், சுதந்தரம், சமத்துவம் இவையே சாதனம். சுத்தசக்தி யுணர்வு—இதுவே என் மூச்சு. எனக்கும் சுத்தசக்தி யிறைவனுக்கும் இடையே எதையும் யாரையும் நான் குறுக்கிட விட்டதில்லை. அவன் எனக்கென ஓர் உள்ளுலகைத் தந்தான். பரமாகாசத்தில் அது அமுதப் பிழம்பாகச் சுழலும். அதன் அரசும் சுத்த பரமாத்மனே. அரசி அருட்சக்தியே. அதன் சட்டதிட்டமெல்லாம் மனச்சாட்சியே. அதில் சாதிமத நாடு நிற சாத்திர கோத்திர இன மன வேறுபாடுகள் இல்லை. எல்லாம்

அகண்ட ஏகரசமே. அங்கே யோகமே மூச்சு, கலையே பேச்சு. எனது கலைக்கோயில் சுத்த யோக சக்தியின் சிற்பச் செல்வமே. யோகமின்றிக் கலையில்லை, கலையின்றி யோகமில்லை. எனது கலைக்கோயிலின் கோபுரமே பாரதசக்தி, மண்டபமே ஆத்மசோதனை, ஆயிரம் இலக்கியங்கள் உள் பிராகாரங்களாக அமைந்தன. அனைத்தும் மௌனத் தனிமையில் என் காதலனும் நானும் அமைத்த சிற்பங்களே. அவன் என்னைச் சுற்றி ஒரு முள்வேலி போட்டான். அதைத் தாண்டி யாரும் உள்ளே வர முடியாது. வெளியே சீறும் சினப்பாம்புகள், கோள்நரிகள் சூழ்ச்சிப் புலிகளை நான் மதித்ததேயில்லை. நீலகண்ட சிவன் பாதுகாப்பு எனக்கு என்றும் உண்டு. அப்பரையும் சம்பந்தரையும், மாணிக்க வாசகரையும், பாதுகாத்த அருள் வள்ளலின் கையில் ஒப்படைத்தபிறகு, நான் எதிர்காலத்தைப்பற்றி ஏன் கவலை கொள்ளவேண்டும்? என்னைச் சூழ்ந்த பகைப்புயல்களே மந்தமாருதமாயின; சண்டமாருதக் கருமேகங்களே காவிய வெள்ளமாயின. என் கண்ணீரெல்லாம் முத்துமாலைகளாயின. இடிக்கும் புயலுக்கும் ஒரு வைராக்கியக் குடையைக் கண்டேன். பொறுமைச் சூறுவளி இரத்தத் தூசி யெழுப்பி, என் மனதைக் கலக்கும்போதெல்லாம், ஒரு புன்னகை அபயக்கரம் காட்டி ''செய் கடமை; நான் இருக்கிறேன்'' என்று ஊக்கும், ஆம் நடராடாஜப் பெருமானின் அபயக்கரத்தைக் கண்டதும், அச்சம் ஒழிந்தேன். நான் யாரையும் வெறுத்ததில்லை. அவரவர் உள்ளம் அறிந்துகொண்டு நானும் என்னுயிர்த் தலைவனுமாகவே வாழ்வேன்; நான் யாரையும் பகைத்ததில்லை. கொடுமை செயதவருக்கும் இனிமையே செய்தேன். கோபப் புயலுக்கும் குளிர் முகமே காட்டிப் பொறுமையாயிருந்தேன். ஏனெனில் உலகில் சோக்ரதனுக்கும் ஏசுநாதருக்கும் காந்திக்கும் கொடுமை செய்தவர் போன கதியை நான் அறிவேன். திருவருள் காட்டிய வழியே நடந்தேன். துன்பமே இன்பமானது. இருபத்தோராண்டுகள் மௌனக் குகைக்குள், ஓர் இருட்டறையில் காற்றும் வெளிச்சமுங்கூடப் புகாத தனிமையிலிருந்து கலைக்கோயில் கட்டி என்னை யாளுடைய அந்தராத்மனுக்கே நிவேதித்தேன்.

முதல் ஏழாண்டுகள் முழுதும் ஸ்ரீ அரவிந்தர் நூல்களையே ஆழ்ந்து கற்றுக் குறிப்பெடுத்தேன். பல நூல்களை மொழி பெயர்த்தேன். அவர் கவிதைகளை வரி வரியாக ஆராய்ந்து மகிழ்ந்தேன். ஆரியா முற்றிலும் நான்குதடவை படித்தேன். ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிமட்டும் அரவிந்தப் பிரகாசம் முதல் Integral yoga வரை பல நூல்கள் எழுதி வெளியிட்டேன். அவருக்குரிய சேவை தீர்ந்ததுமே பாரத சக்தியை மறுபடியும் புதுக்கி எழுதத் தொடங்கினேன். சுத்த சக்தி மின்சாரச் சுழலில் அதன் ஒவ்வொரு வரியும் கனலிட்டெழுந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான காவியங்களும் இசைப் பாடல்களும் வசன நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் கதைகளும் நாட

கங்களும் எழுந்தன. இவற்றிற் பல நான் முன்பே எழுதி இங்கே செப்பனிடப் பெற்றவையே. ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலி, ஜெர்மன், ஜப்பான், இந்தி, வங்கம், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிரதம் ஆகிய பல மொழி நூல்களை ஆராய்ந்து ஆராய்ந்து நயமான பகுதிகளைத் தமிழாக்கி, தமிழைப் பலவிதத்திலும் செழிக்கச் செய்தேன். எனது கலைக்கோயிலைக் கட்டி முடித்தபிறகுதான் கும்பாபிஷேகத்திற்கு அன்பரை ஆண்டவன் கொணர்ந்தான். பதினைந்தாண்டுகள் யாரையும் நான் பார்க்கவில்லை. மௌனத் திரைக்குப்பின்னே மூலஸ்தானத்திலிருந்தே உலகுடன் பேனாவால் அளவளாவினேன். தேசத்தை நான் என்றுமே மறந்ததில்லை. பேனாமுனையில் எனது தேசபக்தியும் தீவிரமாகவே பணிசெய்தது. பாரதசக்தி என்ற பத்திரிகை நடத்தினேன். அதன் மூலம் நாட்டு விடுதலைக்குப்பணி செய்தேன். சுதேசமித்திரன். தினமணி, லோகோபகாரி, கலைமகள், ஆனந்த விகடன், கல்கி, தமிழ் நேசன், ஈழகேசரி, பாரதமணி, ஸண்டேடைம்ஸ், கல்யாண், கல்பதரு, டிவைன் லைப், விஷன், முதலிய ஏராளமான பத்திரிகைகள் மூலம் என் உள்ளம் உலக இயக்கங்களில் துடித்தது. காலை மூன்று மணிக்கே எழுந்து அனுட்டானங்களை முடித்து, ஐந்து மணிநேரம் நாட்டிற்காக எழுத்துப்பணி செய்தே நான் உணவு கொள்வது வழக்கம். எனக்கிசைந்த பால் பழம் கடலையே என்றும் உட்கொண்டேன். என் உணவை வழக்கம்போல் நானே சம்பாதித்தேன். நான் சுதந்தரனாகவே என்றும் இருந்தேன். சுத்தம் சக்தியளித்தது: சுதந்தரம் முக்தியளித்தது. சமத்துவம் சித்தியளித்தது.

309. காலசக்கரம்

நான் மௌனத்தவத்தில் தேசவிடுதலைக்காக இறைவனைத் தினந்தினம் வேண்டினேன். எதிர்பார்த்தபடியே மஹாத்மா காந்தியும் நாட்டை நடத்தத் தொடங்கினார். 1929-ல் உப்பு சத்தியாக்கிரகம் எழுந்தது. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வென்றது. மஹாத்மாவுடன் பல்லாயிரம் தொண்டர் சிறைப்புகுந்தனர். தீண்டாமை ஒழிய மகாத்மா உபவாசம் இருந்தார், பிறகு காந்தி-இர்வின் ஒப்பந்தம் நடந்தது. காந்திஜீ ஒப்பந்தப்படியே லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்று, இந்திய விடுதலைக்காக மன்றாடினார். இடுப்பு வேட்டியுடன் சென்ற இந்த மகானை, வெள்ளையர் வணக்கமுடன் வரவேற்றனர். ஆனால் அதிகார வர்க்கம் காரமான அடக்கு முறைகளைப் போட்டது, வட்டமகாநாடு முட்டை மகாநாடானது. உலகப் போர் வலுத்தது. இட்லருக்குக்கூட காந்திஜீ அஹிம்ஸா தர்மோபதேசம் செய்தார் அதிகாரவர்க்கத்திடம் நாட்டுக்கு விடுதலை கோரினார். பலன் சிறைவாசமே. சுபாஷ் சந்திரபோஸ் நாட்டினின்று தப்பி, ஜர்மனி சென்று, இட்லருடன் நட்புறவுகொண்டு. அங்கிருந்து. நீர்மூழ்கியில் விரைந்து, ஜப்பானியருடன் கலந்துகொண்டு, அவர் உதவியால் இந்தி

யப்படை திரட்டி, வெள்ளைக்காரருடன் போர் தொடுத்து விட்டார். இங்கே மகாத்மா காந்தி இந்தியாவை விட்டுத்தொலை என்ற பேரியக் கம் தொடங்கினர். அது மக்கள் மனதைப் பலமாகப் பற்றிச் சூறு வளியாகக் கிளம்பிச் செயலை ஊக்கியது. ஆசியாவை விட்டுத்தொலை என்ற அனுபல்லவியும் கிளம்பியது வெள்ளையர் அடக்குமுறை, நடக்கு முறையாயில்லை. போர் முனையில் ஜப்பான்—ஜர்மனியர் கைஓங்கி நின் றது. இந்தியாவைச் சமாதானப்படுத்த வந்தது கிரிப்ஸ் தூது. கிரிப் சுடன் கூப்லாந்தும் வந்தார். நாட்டைப் பிரிக்கும் சூழ்ச்சியும் நடந்தது. கிறிப்ஸின் உடைசல் திட்டம் பலிக்கவில்லை. மீண்டும் அடக்குமுறை களும் ஒடுக்குமுறைகளும் சீறி எழுந்தன. 1941—45 இந்தியாவுக்குப் பிரளயகாலம். புரட்சிக்கனல் பரவியது. நான் பாரதசக்தி பத்திரிகை வாயிலாக எனக்கியன்ற கடமையைச் செய்தேன். பெதிக்லாரன்ஸ் தூது வந்தது: பாகிஸ்தான் ரகளையும் கிளம்பியது. இரத்த வெறி யாட்டத்திற்குப்பிறகு நாடு பிரிந்தது. காங்கரஸ் மந்திரிசபை டில்லி யில் ஆண்டது. மௌண்ட்பாடன் நாட்டைப்பிரித்து உரிமை தந்தார். ஒயிட் ஹால் உள்ளம் இளகியது. இங்கிலாந்து இந்தியாவை இந்திய ரிடம் விட்டு விலகியது. தமிழ்மணியான ராஜாஜி, முதல் கவர்னர் ஜென ரல் ஆகி, நேருமந்திரி சபையைக் கொண்டு நாட்டைப் பரிபாலித்தார். தவம்பலித்தது ; தியாகிகள் மனம் குளிர்ந்தது. ஆனால் சமூகக் கலகம் நாட்டை இரத்தக் களமாக்கியது. காந்திஜியின் நவகாளியாத்திரைக் குப் பிறகும் கலகம் நிற்கவில்லை. சாதிமதத்திமிர் உள்ளமட்டும், வேற் றுமைப் பித்தமும் வெறியாட்டமும் இருக்கும். காந்தி உபவாச மிருந்த நாட்களில் நானும் உபவாச மிருந்தேன். தேசநலக் கட்டுரைகளும் பாடல்களும் எழுதினேன். சாதிமத பேதமில்லாத சுத்த சன்மார்க் கத்தை விளக்கும் பாடல்களை ஏராளமாகப்பாடினேன். ஆசிரமத்தில் அச்சகம் ஏற்பட்டது. பாரதசக்தியும் அதிவிரைவில் வெளிவந்தது திரு வருட் செயலாகும். சுதந்தர பாரதத்தில் அது வெளிவந்தது, காந்திஜி சுதந்தர பலிபீடத்தில் சமுதாய ஒற்றுமைக்கே தம்மைப் பலிகொடுத் தார். நான்கு நாட்கள் உபவாசமிருந்து, காந்தி கீர்த்தனம் பாடினேன். இந்தியா குடியரசானது. தாராளமான சட்ட திட்டங்கள் வகுக்கப் பெற்றன. ராஜேந்திரர் குடியரசுத் தலைவரானர். பாரதகணராஜ் யத்திற்கும் உலக ஒற்றுமைக்குமே புதுயுகப் பாட்டும் பாரதகீதமும் பாடி வெளியிட்டேன், இவ்வாறு நான் மௌனத்தனிமையில் இருந்தே தேசப்பணியும் தொடர்ந்து செய்தேன். 1948-ம் ஆண்டு விரதம் நிறை வேறியது. பாரதி விழாத்தலைமை பூண்டு மூன்று மணிநேரம் சங்கீத உபந்யாசம் செய்தேன். அதன்பிறகு புதுச்சேரியில் பல கூட்டங்க ளுக்குத் தலைமைவகித்துத் தமிழுணர்ச்சி, தமிழர் முன்னேற்றம், சமயம் சன்மார்க்கம் யோகம் பற்றிப் பேசினேன். இக்காலமெல்லாம் ஏராள மான கடிதங்களால் நான் ஆயிரக்கணக்கான அன்பருடன் அளவளாவி னேன். அக்கடிதங்களே எனது வாழ்வின் அத்தாட்சிப் பத்திரங்கள்.

ஆதலால் இங்கே கதையைச் சுருக்கி விடலாம். எனது புதுச்சேரி வாழ்க்கையில் அரிய துணைசெய்த அன்பருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

310. எல்லாருக்கும் நன்றி

ஸ்ரீ அரவிந்தருக்கும் அன்னைக்கும் என் வணக்கமுள்ள நன்றி என்றும் உரியது. மகா சக்திமானும், மகாகவியும், உலகப் பெரியாருமான ஸ்ரீ அரவிந்தர் திருவடி நிழலில் எனது தவமும் கலாசிருஷ்டியும் நடந்தன. ஏராளமான நூல்களில் என் அன்பை நிவேதித்தேன். அவை உள்ளமட்டும் என் உள்ளத்தையும் உண்மையன்பையும் உலகம் அறியும்.

பாரதசக்தி நிலையம் என் நூல்களை முதலில் அச்சிடத் தொடங்கியது. அரவிந்த சம்பந்தமான நூல்களெல்லாம் அதில் வெளி வந்தன. கீதை உபநிஷத்து போன்ற அரிய சில நூல்களும் வந்தன. பாரதசக்தி பத்திரிகை வெளிவந்தது. இந்நிலையத்தை என் எழுதுகோலால் போற்றினேன். அதற்கு உறுதுணையாயிருந்து பணிபுரிந்தவர் பாலு முதலியார் ஆவார்.

அன்பு நிலையமே எனது நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்கு வழங்கியது. நான் தேவகோட்டையில் தொடங்கிய அன்பு நிலையம் ராமச்சந்திரபுரத்தில் மலர்ந்து கனிந்தது: இந்நிலையத்தைத் திறம்பட நிர்வகித்தவர் நடராஜபிள்ளை, பழநியப்பா, மோகனம், சாமிநாதஞ் செட்டியார், இராமசாமி பிள்ளை, வீ. ஆர். எம். செட்டியார், வை. கோவிந்தன் முதலியோர். வை. கோவிந்தன் சக்தியச்சகம் நிறுவி சக்தி இதழும் நடத்தினார். எனது கட்டுரைகள் பல அதில் தொடர்ந்துவந்தன. சக்தி அச்சகத்தில் எனது நூல்களும் வெளிவந்தன. இவர்களுக்கு எனது நன்றி என்றும் உரியது.

புதுயுக நிலையம்: புதுச்சேரியில் நானே இந் நிலையத்தை நாட்டி அரவிந்தாசிரம அச்சகத்தைக் கொண்டு அரிய நூல்களை என் செலவில் வெளியிட்டேன். நிலையம் இன்றும் செழித் தோங்குகிறது. அதையும் என் இலக்கியக் குவியலையும் சொத்துக்களையும் இன்று சுத்த நிலையத்தாருக்கே தந்து, சுதந்தரமாக அருட்பணி செய்கிறேன்.

சுத்தானந்த ஸமாஜம்: சிவகங்கையில் சுமார் பதினையாயிரம் ரூபா செலவில் கட்டிடம் கட்டி இந்த சமாஜத்தைப் பதிவு செய்தேன். ஸ்ரீ. ஐ. ரங்கசாமி ஐயர், ராமாநுஜம், பெரிநாகு, நல்லசாமி பிள்ளை. அழகிரிராஜா முதலியோர் பாதுகாப்பாளராகி, சமாஜம் நடக்கிறது. இங்கே கீதை உபநிஷத், பாரதசக்தி யோகசித்தி ஆகிய நன்னூல்கள் முழங்கும், எனது பிறந்த நாட்களை ஊரார் கொண்டாடுகிறார்கள், பெரியார் திருநாளும் கொண்டாடப்பெறும். ஸமாஜக்கிணற்றில் குளித்து அனுட்டானம் செய்து அன்பர் பாராயணம் நடத்துகிறார்கள்.

சுத்தஸமாஜம்: அன்பர் சுவாமி சத்யானந்தர் கோலாம்பூரில் இதை நாட்டி அரிய சேவை செய்கிறார். யோகசித்தியும் பாரதசக்தியும் பாடம் நடக்கின்றன. தர்மா என்ற ஆங்கிலப்பத்திரிகை நடக்கிறது. அங்கே எனக்காக நிலம்வாங்கி, சமாஜத்தை நிலையாக நாட்டியிருக்கிறார்கள். மலாய் நாடுமுழுதும் ஸமாஜத்தை ஆதரிக்கிறது. தமிழ் நேசன் பத்திரிகை பல்லாண்டுகளாக என் உள்ளத்துடிப்பைத் தமிழருக்கு விளக்கிவருகிறது.

ஆத்மஜோதி: இலங்கை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலயம் ஆத்மஜோதி பத்திரிகை மூலம் எனக்கு அரிய உதவி செய்கிறது. இலங்கைமணி ராமச்சந்திரனார், மூத்தையா புலவர் முதலியோர் செய்த தொண்டுகளை மறக்க முடியாது. இவர்களால் என் இலங்கைப் பணி வெற்றி கண்டது. நன்றி.

சுத்தானந்த நிலயம்: புதுக்கோட்டையில் இந்த நிலயம் என் இலக்கியங்களைப் பளபளப்பாக வெளியிடுகிறது. இதன் தலைவர் குமரப்ப செட்டியார் தமது ரிப்பன் அச்சகத்தில் எனது நூல்களை நன்கு வெளியிடுகிறார். காரியதரிசி அன்புராஜன் செய்த உதவி மிகப்பெரிது. இவரே பாரதசக்தி அச்சுத் தாட்களைத் திருத்தினார். அச்சுக் கலையில் மிகத்தேர்ச்சிபெற்ற இவர், பிரமசரியவிரதம் பூண்டு அருட்பணி புரிகிறார். இவருடன் நிலயத் தொண்டுபுரியும் முத்துவுக்கு நன்றி,

தமிழிசை யியக்கம்: என்வாழ்வை என்னுயிர்க் காதலனான இறைவனுக்கே கீர்த்தனாஞ்ஜலி யாக்கினேன். என் இசைப்பாடல்களும் நாட்டுப் பாடல்களும் மூட்டை மூட்டையாகக் குவிந்து கிடந்தன. வந்தது தமிழிசை இயக்கம். அண்ணாமலை இசைக்கல்லூரிப் புலவர் சிதம்பர கீதங்களைக்கண்டு மெச்சினார்கள். அன்புவள்ளலான ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார், என் அர்ச்சனை மலர்களை அச்சிட்டுத் தமிழகமெங்கும் பரவச் செய்தார். சிதம்பரகீதம், தேவகானம், மாணிக்கப்பாட்டு சாதனகீதம் முதலியன அவர் ஆதரவால் தமிழகத்திற் பரவின. அண்ணாமலையரசர் வல்லம்படுகைக்கருகே எனக்காகவே ஓர் ஆசிரமம் அமைக்க விரும்பினார். ஆனால் அப்போது நான் மௌனம், வெளியே வரமுடியவில்லை.

அண்ணாமலை சர்வகலாசாலை எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க முடியாது. பதிவாளர் என். விசுவநாதையர் என் ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகளைக் காலமறிந்து செய்தார். காளஹஸ்திப் புலவர் அடிக்கடி இங்கே வந்து அரசரின் உள்ளத்தைச் சொல்லி, என் உள்ளத்தைக்கொண்டு தூதுரைத்தார். கோமதி சங்கரர் என் பாடல்களுக்கெல்லாம் ஸ்வரம்போட்டுப் பாடிப்பயிற்றினார். மஹாவைத்திநாதையர் பரம்பரையில் வந்த இந்த மகாவித்வான் செய்த இசைத்தொண்டு அற்புதமானது. டைகர் வரதாசாரியார், நீலமேகம்பிள்ளை, சிவவடிவேல்பிள்ளை, சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, தண்டபாணி தேசிகர்

முதலிய பலர் என் பாடல்களுக்கு ஸ்வரம் அமைத்துப் பாடிப்பரப்பி னர். இசையரங்குகளில் எனதுபாடல்களைப் பாடிவரும் எம். எஸ். சுப்புலக்ஷ்மி, வசந்தகோகிலம், பட்டம்மாள் முதலியோருக்கு நன்றி.

இன்னும் எத்தனையோ இசைப்புலவர் என் பாடல்களைப்பாடிப் பரப்பினர். அவர்களுக்கெல்லாம் நன்றி.

வானொலி: என் பாடல்கள் நாடகங்கள் எல்லாம் இன்று தமிழுல கில் புகழ்பெற்று விளங்கும் பெருமையில் திருச்சி—சென்னை வானொலி நிலையங்களுக்குப் பெரும்பங்குண்டு. நாள் தவருமல் எனது பாடல்களை ரேடியோ நிலையத்தார் ஒலிபரப்பி வருகின்றனர். தமிழகத்தில் உள்ள இசைமணிகள் அனைவரும் அவற்றை இசைக்கக்கேட்டு, இறைவன் கருணையை வணங்குகிறேன். எல்லாப் புகழும் அவனுக்கே. முதன் மையாக திருச்சி நிலையத்தார் என்னிடம் அவ்வப்போது பாட்டும் நாட கமும் எழுதி வாங்கி ஒலிபரப்பி வருகின்றனர். குயிலிசையும், பாரத கீதமும் வானொலிப் பதிவாயின.

கிராமபோன் கம்பெனிகள் என் பாடல்கள் பலவற்றை இசைதட் டெடுத்தன. மாஸ்டர்ஸ் வாய்ஸ் கிராமபோன் கம்பெனியும், கொலம் பியா ஸரஸ்வதி ஸ்டோர்சும் அரியபல பாடல்களைத் தக்க புலவர்களைக் கொண்டு பதிவுசெய்து, நாடெங்கும் என் உள்ளம் ஒலிக்கச் செய்தன. மிக்கநன்றி. என்குரலும் பதிவாகி ஒலிக்கிறது.

படக் கம்பெனிகள் சில எனது நாடகங்களையும் பாடல்களையும் பதிவுசெய்தன. ஆண்டாள், போஜன், கிருஷ்ணபக்தி, ஆபூர்வசிந்தா மணி, ஏழைபடும்பாடு முதலியவற்றில் எனது பாட்டும் உரையும் வழங்குகின்றன. ரஷ்யா அமெரிக்கா நாடுகளில் வளரும் படக்கலை நுணுக்கங்களை நான் பயின்று, நமது நாடு முன்னேறக்கூடிய பல பட நாடகங்களைப் புதுமுறையில் எழுதி வைத்திருக்கிறேன். எனது நாடகக் கலைக்கும் தமிழர் ஆதரவளித்தனர். எனது நாடகங்கள் பல மேடை களில் அரங்கேறின. பல கழகங்களும் எனது நாடகங்களைநடித்தன. அனைவருக்கும் நன்றி.

ஆரியஸமாஜ்ம்: நீண்டகாலமாக நான் ஆரியஸமாஜத்துடன் தொடர்புகொண்டேன். சத்யார்த்தப்பிரகாசம் என் கண்ணைத் திறந்த நூல். அதை மொழிபெயர்த்தேன். தயானந்தஜோதி எழு தித் தந்தேன். ஆரியமணிகள் பலர் என் மெய்யன்பரானுர்கள். அவ ருள் சென்னை சமாஜக் காரியதரிசி நாராயணன் செய்த உதவிகள் மிகப்பல. குமாரசாமி, கங்காப்ரசாதர், தர்மதேவர், சந்திரகாந்தர், மாணிக்லால் சர்மா முதலியோர் என் அரிய அன்பரானுர். சதுர்புஜ் ஆஷர், சோடுராம், ஹனுமான் பிரசாதுபோன்ற பல வடநாட்டு நண் பர் எனக்குக்கிடைத்தனர். கல்யாண் கல்பதரு இரண்டிலும் நான் பல கட்டுரைகள் எழுதினேன். அவற்ருல் எனக்குக் கிடைத்த நண் பர் பலர்.

ஆனந்தாசிரமம் ராமதாஸ் சுவாமிகளின் விஷனில் எனது பாடல்களும் கட்டுரைகளும் அடிக்கடி வரும். அவற்றால் பலர் எனக்கு நண்பரானார்.

டிவைன் லைப் சொஸைடி: என் மனத்திற்கு மிகவும் பிடித்த இயக்கம் இதுவே. இதன் தலைவர் சுவாமி சிவானந்த சரஸ்வதி என் ஆப்தநண்பர். தற்காலம் யோகம் திவ்யஜீவனம் சாதனம் வேதாந்தம் என்றால் உலகம் இவரையே மதிக்கும். எளிய இனிய ஆங்கில நடையில், இவர் பாரதக் கலையான ஆத்மீகச் செல்வத்தை உலகிற்குத் தந்திருக்கிறார். இவர் நூல்கள் உலகெங்கும் பரவின. என் ஆங்கிலக் காவியங்களையும் கட்டுரைகளையும் இவர் அன்புடன்போற்றி வெளியிட்டார். காலத்திற்கேற்றமுறையில் கர்ம பக்தி ஞானயோகங்களைப் பயின்றும் பயிற்றியும் இப்பெரியார் அரிய தொண்டு செய்கிறார். இவரைச்சேர்ந்த பக்தகோடிகள் அனைவரும் எனது நண்பர். அனைவருக்கும் வணக்கமுள்ள நன்றி. பல்லாண்டுகளுக்குமுன் சிவானந்தர் என்னைக்காண வந்தார். நேற்று அவரைக்காண நான் தருமபுரம் சென்றேன். விபரம் பிறகு வரும். வாழ்க சிவானந்தர்!

புலவர் உலகம்: தமிழ்ப்புலவர் உலகம் என் உள்ளன்பிற்கு உரியது. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை எனக்குச் செய்துள்ள உதவி என்றும் மறக்கமுடியாதது. கவிமணிக்கு நன்றி. ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் டாக்டர் திருமூர்த்தி, வையாபுரிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, திருவி. கலியாணசுந்தர முதலியார், கோ. வடிவேலு செட்டியார், நமச்சிவாய முதலியார், நாமக்கல் கவிஞர்—ரா. க. சண்முகனார் புதலிய பல புலவர் என் அரிய நண்பர். அனைவரையும் இங்கே நினைத்துப்போற்றுகிறேன், கலைமகள் கல்கி, ஆனந்தவிகடன் சுதேசமித்திரன், தினமணி, தினத்தாள் ஆசிரியர்கள். கல்கத்தாபாரதி சங்க மணிகள், பம்பாய் டில்லி தமிச்சங்கமணிகள் அனைவருக்கும் நன்றி, நன்றி. என் உள்ளத்தைத்தொட்ட மூான் எர்பேர், ரோமா ரோலான், கெப்ரியேல், மடில்டா, கொம்மிங், ஹாரி டிக்மன், கிறிஸ்த பெல், வியோமூரா முதலிய பல ஐரோப்பிய அமெரிக்க நண்பருக்கு நன்றி. என் ஆங்கில நூல்களைப்போற்றிய நண்பருக்கெல்லாம் நன்றி.

311. சுத்த நிலையத்தார்

சுத்தநிலையம்: நான் சில நண்பருக்குப் பாரதசக்தி பாடம் சொன்னேன். ஒருநாள் ஒருசாக்கு இளநீரைக்கொண்டு ஒரு நண்பர் வந்தார்—அன்பர். பாரதசக்தியை மிகவும் கருத்துடன் கேட்டார். அதில் சிலபகுதிகளை மனப்பாடமாக ஒப்பித்தார், தமிழ்ப்பண்பும் சிவநேசமும்கொண்ட இந்த மெய்யன்பரே சென்னியப்பர், பாரதியில், ஆஷர்மில் காவேரிமில் ஆகிய மூன்றின் செல்வர். அவரிடம் அப்பரின் அன்பைக் கண்டேன். அப்பர் என்றே அவரை அழைக்கிறேன். நான்

வாழ்க்கையில் எத்தனையோ செல்வரையும் நண்பரையும் கண்டிருக்கிறேன். சுமார் பதினாயிரம் பேரின் அந்தக்கரணத்தைத் தொட்டுப் பார்த்திருக்கிறேன். ஆனால் அப்பர் அப்பரே. உயிரும் உயிர்ப்பும் போல் இருவரும் நட்டோம். அன்று முதல் எனது புத்தகச்சுமை, எழுத்துச்சுமை உடற்சுமை எல்லாம் அவரிடமே ஒப்பித்தேன். அப்பர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்தபோது நான் அறிந்ததுண்டு. அவர் சேலம் மாவட்டம் காளிப்பட்டியிற் பிறந்து, ஈரோடில் வளர்ந்தவர். தந்தை பெயர் செங்கோடு, தாய் மகமாயி இவருக்கு கிருஷ்ணசாமி என்ற தம்பியும் வள்ளி, நஞ்சம்மா என்ற தங்கைகளும் உண்டு. இவர் மனைவி பொன்னுத்தாயி செல்வக் குடும்பத்தில் பிறந்த மகராசி. இருவரும் நிறைமுறையான இல்லறம் காத்து மணிப்புதல்வரைப் பெற்றனர்—கௌசல்யா, சகுந்தலை, மணிமேகலை ஆகிய மூன்று செல்விகளும் தக்க கல்வியும் திருவும், ஒழுக்கமும் கொண்ட உத்தமிகள். இவர்கள் உயர்ந்த இடத்தில் வாழ்க்கைப்பட்டுச் சீரோங்கி வாழ்கிறார்கள். தியாகராஜன் ஜயாமணி ஆகிய இருபுதல்வர்களும் பி எஸ். ஸி தேறிய அறிவாளர், காலத்திற்கேற்ற நாகரிகம் படைத்த கனவான்கள், தமிழ்ப்பண்புடைய திருவாளர். தம்பி பாலசுந்தரமும் மணிப்பிள்ளை, இவ்வாறு அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பாலும் நிறைந்த அப்பர், உள்ளம் எப்போதும் சிவன்பால் செல்லும் தூய்மையுள்ளது. அவர் தன்முயற்சியால் ஆளானவர்: அவர் முதலில் ஜவுளி வியாபாரம் செய்தார். பிறகு திருப்பூர் ஆஷர் டெக்ஸ்டைல்ஸில் பங்கு கொண்டார். 1947-ல் புதுக்கோட்டையில் காவேரி மில் நாட்டினார், 1946.ல் புதுச்சேரி முதலியார் பேட்டையில் பாரதிமில் நாட்டினார். தம்மைச் சேர்ந்தவர்களை யெல்லாம் கைதூக்கிவிட்டு ஆளாக்கினார். அப்பர் ஓயா உழைப்பாளி; தளராத் தாளாளர். மனத்திட்பமும் வினைத்திட்பமுங் கொண்ட கர்மயோகி. ஹென்ரிபோர்டுபோல் இவரும் எப்போதும் மோடார் பிரயாணத்திலேயே இருப்பார். "ஆயிரம் மைலா, இவ்வளவு தானே" என்று தாவுவார். இவரிடம் தைரியலக்ஷ்மி விளங்குகிறாள். அதைரியம் இவரைக் கண்டாலே பயந்தோடும். இவரைக் கண்டவுடனேயே ஆண்டவன் உத்தரவும் கிடைத்தது. தியானத்தில் முன்செல்ல ஆணை பிறந்தது. ஸ்ரீ ஐயாவு நடத்தும் புதுவை பாரதிமில்ஸ் பசுங்காட்சியும் அன்பும் சீரும் திகழும் நன்னிலம். அரவிந்தாசிரமத்தில் நான் செய்ய வேண்டிய கடமைகள் முன்பே முடிந்தன. இனி அங்கே வேலையில்லை அதற்கேற்றபடி சம்பவங்களும் சூழ்நிலையும் மாறின. எனது நூல்களை எல்லாம் லாரி லாரியாக வாரி வாரி பாரதிமில் கட்டிடத்திற்கு அனுப்பினேன். பாரதிமில் புதுயுக நிலயமானது. மில் மானேஜர் ஸ்ரீ வெங்கடராமர் நேசவுப்புலவர் உத்தம பக்தர், பரந்த உள்ளமும் ஆழ்ந்த அறிவும் கொண்ட மேதாவி. அவர் தாய்போல் எனக்கு உதவினார். என் உணவைக் கொண்டு வருவது முதல், என் தவத்திற்கேற்ற சௌகரியங்களைச்

செய்வது வரையில், எல்லாக் கைங்கரியங்களையும் கவனித்தார். இவர் குடும்பமே என்பால் அன்பு கொண்டு என் உள்ளத்துடன் ஐக்கிய மானது. மில் காரியதரிசி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் எனது நூல்களின் விற்பனையைத் திறம்பட நடத்தினர். இவரது அறிவும் சொல்லும் இனிய தன்மையும் எனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கும். எஞ்சினியர் நாக ராஜன் கலாநிபுணர். இவர் என் தேவைகளைக் கலைச்சுவையுடன் செய்தளித்தார். கோவிந்தசாமி செட்டியார் எப்போதும் என்னுட னேயே இருந்து செய்த உதவி மிகப்பெரியது. இன்னும் அருணசலையர் கருடாழ்வார் குப்புசாமி முதலியார், நடேசமுதலியார், மீனட்சி சுந் தரப் புலவர், அன்சாரி, முதலியோர் சிறந்த நண்பரானர்கள்.

இவர்களெல்லாரும் சேர்ந்து என் பிறந்த நாளை மிகச்சிறப்பாகக் கொண்டாடினர்கள். ஒலிம்பியா தியேடர் நிரம்பியிருந்தது. ஓ. பி ராமசாமி ரெட்டியார் தலைமை தாங்கினர். கல்கி, காளத்திப்புலவர், குபேர், வரதன், சிவம், வியோ மூரா, முத்துப்பிள்ளை, சூரியநாராயண முதலியோர் பேசினர். வசந்த கோகிலம், ராணி, பேபி, பாலா, எல் லாரும் பாடினர், சின்னி ஆடினள். விகடமணி நடித்தார். இலங்கை ரேடியோ புகழ்ந்தது, ஆசிகள் குவிந்தன. மாலைகள் குவிந்தன. நானும் என் உள்ளத்துடிப்பைத் தமிழுலகிற்கு விளக்கினேன். கல்கி என்னைத்தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய அழைத்தார். ஒப்புக் கொண்டேன். ராமசாமி ரெட்டியார் எனக்கு வடலூர் அருகே குருகுலம் நாட்ட முயல்கிருர்.

அன்பர் எனக்காக ஒரு சுத்தநிலையம் கண்டு பதிவுசெய்தனர். அதன் தலைவர் இந் நூலாசிரியர். உபதலைவர் சென்னியப்பர். காரிய தரிசி அறிவும் ஆற்றலும் அன்பும் கொண்ட நண்பர் பி. சூரியநாராயண வும் கல்வித்துறையில் பெரும்புலமையும் அனுபவமும் படைத்த அன் பர் மீனட்சி சுந்தரரும். நிதிக்காப்பாளர் ஸ்ரீ கிருஷ்ணசாமி முதலியார். மற்றும் நிலைய நிர்வாகத்தில் பெருந்தொண்டு செய்பவர் நடராஜன், பால சுப்பிரமணியர், கோவிந்தசாமி, நாகராஜன், முதலியோர். ஆண்டவன் அருளால் வந்த இந்த அன்பருக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? உலகில் என்னது என்றிருந்த அனைத்தையும் இவர் களிடம் தந்துவிட்டேன். சிவனும் சிவமுமாக இன்று புதுயுக நிலையக் கட்டிடத்தில் தவம்புரிகிறேன்.

312. விடுதலை

வேளை வந்து விட்டது. புறப்படு என்று உள்ளாணை எழுந்தது. 30—8—50: காலை எழுமணிக்கு அன்னையிடம் மிச்சமிருந்த பணத்தைக் கொடுத்துவிட்டு மலர் பெற்றுக் கொண்டு

காற்றைப்போல விடுதலை கட்டில்லாத விடுதலை
ஆற்றையுண்டு நடனமாடும் ஆழிபோல விடுதலை.

நேற்றைக்கவலை ஏனினி? நெற்றிக்கண்ணன் அருளுவான்;
கூற்றை எட்டி உதைத்தபாதம் கும்பிட்டோர்க்கு விடுதலை

என்றுபாடிக்கொண்டே ஆனந்தமாக எனது சுத்தசுதந்தர சமத்துவ நிலையத்திற்கு வந்தேன். தமிழுலகம் முழுதும் மகிழ்ச்சி தெரிவித்து எழுதியது, பத்திரிகைகளெல்லாம் என்னைத் தமிழ்நாட்டிற்கு நல்வர வேற்றன. எட்டுத்திசையிலு மிருந்து அழைப்புகள் குவிந்தன. இலங்கை மலாய், முதலிய பிற நாடுகளிலிருந்தும் அழைப்பு கள் வந்தன. கடவுளாணையை எதிர்நோக்கி மகாதுரியசமாதியில் ஆழ்ந்திருந்தேன். அரிய பெரிய அன்பரும் சர்க்கார் அதிகாரிகளும் காணவந்தனர். "எங்கள் ஊருக்கு, எங்கள் ஊருக்கு வாருங்கள்" என்று அழைத்தனர். உள்ளுத்தரவை நோக்கியிருந்தேன். ராஜா ஸர் முத்தையா செட்டியாரின் அன்புக் கடிதமும், அண்ணாமலை சர்வ கலாசாலை உப அத்யக்ஷகர் அழைப்பும் வந்தன. நடராஜப் பெருமான் ஆணையளித்தான். அண்ணாமலை நகரில் ராஜாஸர் அண்ணாமலை செட்டி யாரின் பிறந்தினக் கொண்டாட்டத்தில் நான் பேசவேண்டும். நட ராஜாவின் அருட்கோயில் அண்ணாமலைகலைக்கோயில் இரண்டிலும் என் முதல் பிரசங்கம் நடக்கும் சந்தர்ப்பம் இதோ. இதைவிட நல்வாய்ப்பு வேறென்ன? புறப்பட்டேன்.

கடலூர் என்னை அமோகமாக வரவேற்றது. ஏராளமான கூட் டம். நகரத்தலைவர் இராமசாமிப் படையாட்சியார் வரவேற்புரை வழங்கினார். அன்பர் மலர்மாலையும் சூட்டினர். நான் அரைமணி நேரம் பேசினேன். தேடலூரிலிருந்து, புதுவையைப் பாடலூராக்கி, கூடலூரில் அன்பருடன் கூடி, ஆடலூரான சிதம்பரத்திற்குச் சென் றேன்.

313. நடராஜதரிசனம்

சிதம்பரம் என்றாலே என் உள்ளம் சிலிர்க்கும். தில்லைக்கூத்தன் என்னுள் நடம்புரிகிறான். அவனே என்னுள் உயிராய் உயிர்க்கிறான், அவனைக்காண அன்பருடன் சென்றேன், கோயில் நிரம்ப அடியார் கூட்டம். சுவர்ணவேங்கடேச தீக்ஷிதர் தில்லைவாழ் அந்தணருடன் பூர்ணகும்பம் தந்து என்னை வேதகானத்துடன் வரவேற்றார். நானும் வேதமுழக்கம் செய்து கொண்டே நடராஜா சந்நிதி சென்றேன். அப் பனைக்கண்டேன். அர்ச்சனை திபாராதனைகள் நடந்தன. சிதம்பர ரகசி யங் கண்டேன், ஆவேசங்கொண்டேன். கோவிந்தராஜப் பெருமாள் சேவைசெய்தேன். ஏராளமான அன்பர் என்னைச் சூழ்ந்து கொண்ட னர். நர்த்தன மண்டபத்தில் பஜனை செய்தோம். வேதவல்லியும் சகோதரியும் எனது பாடல்களை இனிமையாகப் பாடினர். தேவாரம் நடந்தது. அப்போது நான் எதிர்பார்த்த மகான் சிவானந்தர் "எங்கே சுவாமிகள்" என்று தேடிக்கொண்டு தொண்டர் சூழ வந்தார். "ஓம்

சிவம்" என்று மாலை சூட்டினார், நான் ஸஹநாவவது சொல்லிக் கொண்டே மாலை சூட்டினேன். அன்பர் நாமாவளி பாடினர். நீண்ட காலமாக அன்புகொண்ட உள்ளங்கள் கூடிக்குழைந்த காட்சியே காட்சி! என் வாழ்வின் பேரின்பத்திருநாள் இதுவே. சிவானந்தர் உடல் நலமின்மையால் ஜாகைக்குச் சென்று ஓய்வுகொண்டார். சிற்சபையில் அடியார் திரளாகக்கூடி என்னைப் பேச வேண்டினர். நான் தேவாரமுழக்கத்துடன் நடராஜதத்துவம் பற்றிப்பேசினேன். தீக்ஷிதர் உபசாரங்கூறினார். நேராக அண்ணாமலை நகருக்கு வந்தேன்.

நான் ராஜாவின் விருந்தாளி. என்னுடன் மோடாரில் அப்பர் குழாம் வந்தது. அனைவருக்கும் ராஜோபசாரங்கள் நடந்தன. சென்னியப்பர் என்னுடனேயே இருந்தார்.

314. அண்ணாமலை நகர்

இரவெல்லாம் நண்பர் பேட்டியும் தியானமுமாயிருந்தேன். இலங்கை அன்பர் க. ராமச்சந்திரன் வந்தார். இலங்கைக்கு நான் வருவதற்குத்தக்க ஏற்பாடுகளைப்பேசி முடித்தோம். தருமபுரம் ஆதினத்தி விருந்து கட்டளைத் தம்பிரான் சோமசுந்தர சுவாமிகள் வந்தார். தருமபுரத்திற்கு என்னை வரும்படி வேண்டினார். ஒப்புக்கொண்டேன்.

காலையில் குளத்தில் ஜலஸ்தம்பனத்துடன் தியானம் செய்தேன். ஏழுமணிக்குத் திருவேட்களம் கோயில் தரிசனம் நடந்தது. அங்கும் கோமதிசங்கரர் எனது பாடலை இனிமையாகப் பாடினார். பிறகு பாலும் கனிரசமும் உண்டேன். அப்பர் சுந்தரர், ஐயாமணி தியாகராசர் அர்த்தநாரி அனைவரும் புடைசூழ, நாங்கள் அண்ணாமலை நகரைச் சுற்றிப் பார்த்தோம். உப அத்யக்ஷகரும் தத்துவப் புலவரும், பதிவாளர் சச்சிதானந்தரும் உடன்வந்து சுற்றிக்காட்டினர். எல்லாம் அற்புதம்! புற்புத வாழ்வில், இந்த அற்புதம் செய்த வள்ளலின் உள்ளம் ஒவ்வொரு பகுதியிலும் துடித்தது. ஆங்காங்கு வரவேற்புக்கவிகளும் முழங்கின. காளத்திநாதர் காளமேகம்போல் வெண்பாப் பொழிந்து வரவேற்றார். இசைக்கல்லூரியில் வித்வான்கள் யாழ்பிடில் முழவுடன் இசைபாடினர். மாணவர் இசைநயங் காட்டினர். புத்தகசாலையில் நாகராஜர் வரவேற்றார். சுற்றிப் பார்த்து மகிழ்ந்தேன். ஆராய்ச்சி மாணவருக்கு இந்தப் புத்தகசாலையே பல ஆசிரியர் செய்யும் உதவியைச் செய்யும், எனது நூல்களைப் புத்தகசாலைக்கு அன்பளித்தேன். பிறகு ஸயன்ஸ் பகுதியைப் பயனுறக் கண்டேன். சேஷையா, விசுவநாதர் போன்ற மேதாவிகள் இப்பகுதியில் போதிக்கிறார்கள். பௌதிகம் ரசாயனம், தாவரம் உயிரியம் முதலிய கலைகள் சிறப்பாக விளங்குகின்றன. அவற்றிக்கேற்ற கருவிகரணங்களை அழகாக சுத்தமாக அணியுற வைத்திருக்கிறார்கள். மாணவர் சிலர் செடிநூல் ஆராய்ச்சியும், சிலர், அணு ஆராய்ச்சியும், சிலர் பௌதிக ரசாயன

ஆராய்ச்சிகளும் செய்கிறார்கள். அனைவரும் தங்கள் கடமையில் கருத்தூன்றி உழைக்கிறார்கள். இரண்டு பெண்மணிகளும் தாவர ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது போற்றத்தக்கது. சரித்திராசிரியர் சத்தியநாதர், ஆங்கிலப்புலவர் துரைசாமி ஐயர் அனைவரையும் கண்டு பேசினேன். வடமொழி ஆசியரைக் கண்டேன். தத்துவ ஆசிரியருடன் அளவளாவினேன். எல்லாரும் மேதாவிகள். வந்தேன் தமிழ்ப் பகுதிக்கு. டாக்டர் சிதம்பரநாதர் வரவேற்றார். தமிழ் ஆசிரியர் அங்கே கூடினர். பேச்சும் புன்னகையும் தமிழும் இன்பமுமாகச் சிறிது நேரம் இருந்து, தமிழ் ஆராய்ச்சிக் கழகத்திற்குச் சென்றோம். அங்கே புலவர்மணி வரதராஜையர் பாமாலை சூட்டி என்னை வரவேற்றார், இவர் ஆங்கிலத்திலும் மேதாவி. சங்க இலக்கியப்புலி. தமிழர் பண்பாட்டை விளக்கிப் பல ஆங்கில நூல்கள் எழுதியிருக்கிறார். இவருடன் ஜி. சுப்பிரமணியர், ஔவை துரைசாமி, வெள்ளை வாரணர் முதலியோர் கூடித் தமிழர் வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவகுப்புகளையும் மாணவர் விடுதிகளையும் பார்த்துக் கொண்டு பத்தரை மணிக்கு, நாங்கள் தொழில் நுணுக்கக் கல்லூரிகளைக் காணச் சென்றோம். இரண்டு மூன்று எஞ்சினியர்கள் எனக்கு எல்லாப்பகுதிகளையும் காட்டினார்கள். அரிய பெரிய வேலைகள் அங்கே நடந்தன. நவபாரதத்தின் செல்வத்திருவே அங்கே எழில் கொண்டு விளங்கியது. நவீன சிற்பத்தொழில்களுக்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தும் அங்கே இருந்தன. மாணவரும் ஆசிரியரும் தொழிலாளரும் வண்டுபோல் சுறுசுறுப்பாயிருந்தனர். மரவேலை, இரும்புவேலை, உலோக வேலை, சுரங்கவேலை, மண்வேலைகள் பல கைத்தொழில்கள் யந்திரத் தொழில்கள் எல்லாம் கண்டு வியந்தேன். இந்தப்பகுதியை இன்னும் விரிவாக்கி, மாணவர் தொழில் செய்து கொண்டே படிக்கும்படி செய்தால் நல்லது. அண்ணாமலை நகரைச்சுற்றி வருவதே கல்விப்பயனாகும். நான் பாராது பாடிய அண்ணாமலை நகர் காவடிச்சிந்து நகரைச்சுற்றிப் பார்த்த பிறகு எவ்வளவு பொருத்தம் என்பதை உணர்ந்தேன். சிறிது ஓய்வு கொண்டபின் அன்பர் சிதம்பரத்தில் உள்ள பல கலாசாலைகளுக்கு என்னை அழைத்துச் சென்றனர். பலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் உள்ள நான்கு பள்ளிக்கூடங்களில் வரவேற்புகள் நடந்தன. குழந்தைகளின் அன்பும் ஆசிரியர் அன்பும் என் அன்புடன் கூடிக்குழைந்தன. மாணவருக்கு அன்புமொழி கூறினேன். ஆசிரியருக்கு உள்ளன்பை அளித்தேன். அவர்கள் சூட்டிய பாமாலைகளும் பூமாலைகளும் நான் கொண்ட அருட்பணிக்கு ஜயமாலைகளென்று கருதினேன். கோமதி சங்கரையர் வீட்டில் எனது பாடல்களுக்கு அவர் செய்துள்ள ஸ்வரஸாஹித்யங்களைக் கண்டேன். அச்சகம் நாட்டுவோம் வெளியிடலாம் என்று சொல்லி வந்தேன்.

மணியாயிற்று. குளித்து தியானத்தில் இருந்தேன், பதிவாளர் சச்சிதானந்தம்பிள்ளை நண்பருடன் வந்து என்னை மோடாரில் பவனி

யாக அழைத்துச் சென்றார், ஸ்ரீநிவாச சாஸ்திரி ஹால் முன் உபஅத்ய க்ஷகரும் புலவர்களும் பொன்மாலை சூட்டி என்னை வரவேற்றினர். சாரணர் வரவேற்றனர். மாணவர் கரகோஷம் செய்து வரவேற்றனர். சர்வகலாசாலைப் புலவருடன் அமர்ந்து படம் பிடித்துக் கொண்டோம். அப்படம் பத்திரிகைகளில் வந்தது. அந்த மகாசபை என்னைக் குதுகலமாக வரவேற்று மாலை சூட்டியது. உபஅத்யக்ஷகர் அண்ணாமலை அரசரின் கலாசிருஷ்டியைப் போற்றிய பிறகு, அவருக்கு மரியாதை தெரிவிக்கச் சபை ஒரு நிமிஷம் நின்றது. பிறகு என்னைக் குறித்து கவியோகி, துறவி, முனிவர், தேசபக்தர். கலைச்செல்வர், பொதுநல வீரர். என்றெல்லாம் உபஅத்யக்ஷகர் அள்ளிவிட்டு, என் ஆங்கில உரையை நிகழ்த்தச் சொன்னார். அந்தக்கம்பீரமான சபையில் மேடையேறி என்னை அறியாமல் பேசினேன். ஆங்கிலச் சொற்பொழிவானதும் கோமதி சங்கரர் எனது பாடல்கள் இரண்டை இனிது பாடினார். பிறகு எனது தமிழ்ச் சொற்பொழிவை ஆற்றினேன். எனது பேச்செல்லாம் அச்சு நூல்களாக வரும். ஆதலால் இங்கே நிகழ்ச்சிகளை மட்டும் சொல்லிச் செல்கிறேன். மாணவர் அடிக்கடி குதுகலமாகக் கரகோஷம் செய்து பேச்சை ரசித்தனர். பாமாலைகளும் வந்தனங்களும் ஆசிச் செய்திகளும் ஆனபிறகு, மாணவருக்கு என் கையால் பரிசுகள் வழங்கப்பெற்றன. டாக்டர் சிதம்பரநாதர் அழகான தமிழில் வந்தனோபசாரம் சொன்னார். நாங்கள் விருந்துக்குச் சென்றோம். கழகத்தலைவர் நீண்ட நேரம் தமது கலைக்கருத்துக்களை என்னிடம் பேசினார். அவர் சிந்தனைகள் மிக உயர்ந்தவை. சர்வகலாசாலை முன்னேற்றத்தில் அவர் கண்ணும் கருத்துமாயிருக்கிறார். விருந்தானதும் நாடகம் நடந்தது. பல்கலைக்கழக ஆசிரியர் அனைவரும் என்னை வரவேற்று தனிக்கூட்டம் கூட்டிப் பேசச்சொன்னார்கள். என் கவிதைகளைப்படிக்கச் சொன்னார்கள். நான் ஆங்கிலத்தில் அரைமணி நேரம் பேசி, அரைமணி நேரம் எனது தமிழ், ஆங்கில பிரெஞ்சுக் கவிகளைப் படித்து விளக்கினேன். காரியதரிசி மயிலேறு வந்தனோபசாரம் சொன்னார். பிறகு திருவேட்களத்தில் சன்மார்க்கக் கூட்டம் நடத்த சச்சிதானந்தம் பிள்ளை அழைத்துச் சென்றார். அங்கே ஒருமணி நேரம் சன்மார்க்க ஒழுக்கம் பற்றிப் பேசினேன். அதன் பிறகு பல நண்பர் வந்து பல விஷயங்களைப்பற்றி அளவளாவினர். இரவு இரண்டு மணிக்கே தியானத்தில் அமர்ந்தேன். நான்குமணிக்குக் குளித்து அனுட்டானங்களை முடித்து அன்பரிடம் விடை பெற்று, ஜயகோஷத்துடன் தருமபுரத்திற்குப் புறப்பட்டோம்.

315. சாது சங்கம்

இயற்கையின் பசுமுகமும் ஆற்றுப் பாட்டும் வழிநெடுக எங்களை வரவேற்றன. தருமபுரத்தில் எங்கள் மோடார் ஊதியதுமே ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் மாலை சூட்டி மரியாதைகளுடன் வரவேற்றுத் தேவாரப்பண்முழங்கச் செய்தார். அன்பர் பலர் என்னைக் கனி

வுடன் வரவேற்றனர். அவருள் பாரதமணி ஆசிரியர் வேங்கடரமணியைக்கண்டு அளவளாவினேன். பிறகு சுவாமி சிவானந்தா கோஷ்டி என்னை பஜனையுடன் வரவேற்றது. தம்பிரான்கள் வரவேற்றனர். நான் அருட்செல்வத்திலுள்ள தேவாரங்களைப் பாடக்கேட்டுக்கொண்டே காவேரியாடி தியான காரியங்களை முடித்து, பால் பழம் உண்டேன். தேவார விளக்கமும் இடையிடையே நடந்தது. பன்னிரண்டு மணிக்கு மகாசந்நிதானம் எங்களை ஒரு தனி அறையில் வரவேற்றது. சிவானந்த சரஸ்வதி ஓங்காரத்துடன் வரவேற்றார். மூவரும் வேதாந்த சித்தாந்த சமரஸம் பற்றிப் பேசினோம். யோகக்கலையை நாட்டில் எல்லாருக்கும் பயிற்ற வேண்டி நான் போட்டுள்ள திட்டத்தை விளக்கினேன். காலத்திற்கேற்ற முறையில் சமயப்பிரசாரம் செய்யவேண்டும் என்பதை இருவரும் ஒப்பினர். அவர்களும் அப்படியே செய்கிறார்கள். சிவானந்த ஆசிரமக்காட்சிகளும், ஹடயோக விளக்கமும் படச்சுருளாகக் காட்டினர். பிறகு நான் ஆதீனத்தைச் சுற்றிப்பார்த்தேன். ஆதீன அச்சகம் சைவத்தின் உள்ளத்துடிப்புபோல் வேலை செய்கிறது. ஆதின நூலகம் பயனுள்ள அறிவுக்களஞ்சியமாக விளங்குகிறது. ஆதீனக் கல்லூரி ஆசிரியரும் மாணவரும் தம்பிரான்களும் வந்து அளவளாவினர்.

மாலை காவிரியாடி தியானித்த பிறகு, தம்பிரான்கள் அழைத்துச் சென்றனர். சுவாமி சிவானந்தரும் நானும் மகாசந்நிதானத்துடன் பிரசங்க மண்டபத்திற்கு வந்தோம். மண்டபம் ஜகஜ்ஜோதியாயிருந்தது. ஒலிப்பெருக்கிகளும் ஒலிப்பதிவிகளும் தயாராயிருந்தன. கூட்டம் ஏராளம். பல ஊர் மக்கள் கூடிக்குழுமியிருந்தனர். தேவார கோஷம் ஆனபிறகு எனக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். இந்த நூற்றாண்டின் சிவயோகி என்று என்னை அதில் குறித்தனர். மகாசந்நிதானம் எனக்குச் சொன்ன புகழ்மொழிகளை நடராஜப் பெருமானின் ஆசிமொழிகளாகக் கொண்டேன். சிவயோகமே வாழ்வாகக் கொண்ட தூய தவசிலர் என்ற கேட்டதே என் தவவாழ்விற்கு நற்சாட்சிப் பத்திரம் போலானது. பிறகு ஒன்றரை மணிநேரம் நான் பேசினேன். சிவானந்தரும் மகாசந்நிதானமும் என்பக்கத்தில் இருக்க, முன்னே பலபுலவரும் துறவிகளும் இருக்க, என்னுள் நடராஜப்பெருமான் பேசு பேசு என்று உந்த, என் பேச்சு நடந்தது. அதை ஒலிப்பதிவு செய்து இரவில் மீண்டும் கேட்டேன். மனச்சாட்சி மகிழ்ந்தது சிவானந்தர் "தாங்கள் மேற்கு நாட்டுக்குச்சென்று பிரசங்கம் செய்ய வேண்டும்" என்றார். "சமயம் வரும்போது செல்" என்றது மனசாட்சி சிவானந்தருடன் அளவளாவிய பிறகு மகாசந்நிதானம் தனிமையில் நீண்டநேரம் சைவசமயம் பற்றி அளவளாவியது. பிறகு எனக்குத்தமது பொன்கட்டி உருத்திராக்ஷ ஜபமாலை தந்தனர் பண்டாரசந்நிதிகள். எனது நெற்றியில் திருநீறிட்டு, சிவமந்திரம் ஓதி மாலையை அணிவித்த மகாசந்நிதானத்தின் அன்பை உள்ளத்தில் கொண்டு உறைவிடம் வந்தேன், சோமசுந்தரத்தம்பிரானுடன் மற்,

றும் பல துறவிகளும் தொண்டரும் என்னைத் தருமையிலேயே இருந்து சைவத்திற்குப் பணிசெய்யுமாறு வேண்டினர். திருவருள் இச்சைக்கு அதை விடுக்தேன். என்பேச்சின் ஒலிப்பதிவை எல்லாரும் செவிமடுத்தனர். பிறகு தியர்னம்.

காலை நான்கு மணிக்குக் குளித்து தியானம் செய்து, தேவாரம் பாடிப்புறப்பட்டோம். அப்பாருக்கு வெகுமகிழ்ச்சி. மோடாரில் சோமசுந்தரத்தம்பிரான் எங்களுடன் வந்தார். அவர் அரிய அறிவாளி. உள்ளன்பர். சிவப்பழம். எல்லாரும் வைத்தீசுரன் கோயிலுக்குச் சென்றோம். அங்கே கோயில் மரியாதையுடன் எங்களை வரவேற்று வேத கோஷமும் தேவார முழக்கமும் செய்து சந்நிதிக்குச் சந்நிதி அழைத்துச் சென்று, அர்ச்சனை தீபாராதனை காட்டிப் பிரசாதங்களைத் தந்தனர். கோயில் யானை எனக்கு அடிபணிந்தது. அதற்கு வாழைச் சீப்புத்தந்தோம். பிறகு தம்பிரான் மடத்தில் அடியார் மரியாதை செய்தனர். அவர்களுக்குத் திருநீறு தந்து திருப்புன் கூருக்குச் சென்றோம். நந்தனர் வணங்கி, கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய அந்தக்கோயில் சுத்தமாயிருந்தது. கோயில் குருக்களே தேவாரம் இனிமையாகப் பாடினர். அர்ச்சனை தீபாராதனைகள் நடந்தன. கைலாசநாதர் உத்தரவு தந்தார். நேராகப் புறப்பட்டோம். சிதம்பரம்...கடலூர்...புதுச்சேரி.

சுதந்தர பாரதத்தில் எனது முதல் சுற்றுப்பிரயாணம் வெற்றி பெற்றது. கடிதங்கள் பல ஊர்களுக்கு அழைத்தன. ஆனால் மகா துரியசமாதியில் ஆழ்ந்த என்னை, இன்னும் இரண்டு மாதங்களுக்கு யாரும் அசைக்கமுடியாது. சுத்த நிலைய அன்பர் திருவான்மியூரில் எனக்காக நிலையம் அமைக்க நிலம் வாங்க ஏற்பாடு செய்கிறார்கள். அப்பர் இங்கே புதுயுக நிலையத்திலேயே சுத்தானந்த அச்சகம் நாட்டி, சுத்தானந்தம் என்ற பத்திரிகையும் நடத்தி எனது நூல்களையும் வெளியிட முனைந்துள்ளார். என் ஆத்மசோதனையும் முடிந்தது, பரமாத்ம சோதனையும் முடிந்தது. ஆத்மநாதனைக் கூடிய பிறகு சோதனை ஏது? பதியைப் பசுகலந்து கொண்ட பிறகு, பவனியையார் கவனிப்பர்! இனி என் வாழ்க்கை வரலாறு பேச்சு எழுத்து எல்லாம் அச்சில் வரும். நான் தமிழருக்காக, உலகிற்காக சுத்த நிலையத்தாரிடம் தந்துள்ள நூல்களை இங்கே குறித்து ஆத்மசோதனைக்கு மங்களம் பாடுகிறேன்.

316. இந்த நூல்களே போதும்

எனது வாழ்வையே நூல்களாக வார்த்து உலக மாதாவுக்குச் சூட்டியிருக்கிறேன். பல மாலைகள் உண்டு. அடியிற்கண்ட நூல்கள் எனக்குப் பிடித்தவை பல நண்பரும் போற்றியவை. இவற்றை உலகம் எனக்குப் பிறகு பாதுகாக்க வேண்டுகிறேன்.

க. காவியங்கள்

1. பாரதசக்தி—மகா காவியம், ஆதாரமானது. மறு பதிப்பும் இப்படியே இருக்க வேண்டும்.

2. யோகசுத்தி—தியானத்தில் உருவானது. என் வாழ்வின்கண்ணுடி; மூன்று ரூபா பதிப்பே ஆதாரமானது. புதுயுக நிலையப் பதிப்பு.

3. கீர்த்தனாஞ்ஜலி—508 இசைப் பாடல்கள்; சிதம்பர கீதம், தேவகானம், சக்தி பரவசம், முருகோபாசனை, சாதன கீதம், ஹரி பஜனை, ஐக்கிய கீதம், அன்பு மாலை, சுத்த சன்மார்க்கம் ஆகிய ஒன்பது இசை நூல்களின் தொகுப்பு.

4. மேளராக மாலை—72 மேளகர்த்தா ராக கீர்த்தனங்கள்.

5. நவரஸ நடனாஞ்சலி—நாட்டிய சாஸ்திர விளக்கத்துடன், அபிநயப் பாடல்கள்.

6. கவிக் கனவுகள்—அழகும் இன்பமும் சுவையும் கொண்ட கலைச் சித்திரங்கள். (திருக்காட்சியுடன்)

7. புதுயுகப் பாட்டு—புதிய உலகப் பாடல்கள்,

8. தமிழ்க்கனல்—புதிய வீறுபெற்ற தமிழகப் பாடல்கள்.

9. பாரத கீதம்—பாரதகணராஜ்ய கீதங்கள்.

10. நாட்டுப்பாட்டு—சமுதாயச் சித்திரங்கள்; தொழிலாளர் பாடல்கள்.

11. பாப்பா பாட்டு—குழந்தைகளுக்குப் பயனுள்ள பாடல்கள்.

12. குழந்தை யின்பம்—இளஞ் சேய்களுக்காக இனிய பாடல்கள்.

13. கதைப் பாட்டு—சிறு கதைகளைக் கொண்ட இனிய பாடல்கள்.

14. மாணிக்கப் பாட்டு—மாணிக்க வாசகர் சரித்திரம்.

15. அருட்செல்வம்—(நம் வேதம்). அருட்கவிகளின் உள்ளம். தொகுப்பு நூல்.

16. ஜோதிமாலை—ராமன், கண்ணன், புத்தர், மகாவீரர், ஏசுநாதர், ஜரதுஷ்ட்ரர், நானகர், பரமஹம்ஸர், விவேகானந்தர், வள்ளலார், மஹாத்மாகாந்தி ஆகிய அருட் பெரியார் வரலாறும், உபதேசமும். பாரதசக்தியிலிருந்து தொகுத்தவை.

17. வீரவிருந்து—சிவாஜி, பிரதாபசிங்கன், குரு கோவிந்தன், கரிகாலன் போன்ற பல வீரர் செயல்களை வர்ணிக்கும் ஆவேசப் பாடல்கள்.

18. வளையாபதி அகவல்.

19. குண்டலகேசி அகவல்.

20. அமுதம்—புதுயுக மனித சமுதாயக் கதைச் செய்யுள்.

21. பாரத சரித்திரக் கும்மி—பாரதநாட்டு வரலாற்றைப் பாடும் பாடல்;

22. வீரர் பாட்டு.

23. திருமணப் பாட்டு.

24. அர்ச்சனை மாலை. நடராஜா முருகன், பாரசக்தி அருச்சனை மாலை.

25. தியானமாலை—தோத்திரப் பாடல்கள்.

நாடகங்கள்

26. காலத்தோர்—சீர்திருத்த நாடகம்— செய்யுள்.

27. முல்லைமணம்—இசை நாடகம்.

28. ஆனந்தம்—29. இவளும் அவளும்—30. மீரா விஜயம்—31. அன்பின் அற்புதம் (அப்பர் நாடகம்)—32. வசந்த சுந்தரி—33. புத்தர் கருணை—34. ஜயமணி—35. ராணி மங்கம்மாள்—36. புதுமையும் பழமையும் 37. ஆஷாடபூதி—38. புத்தர் கருணை—39. சிவாஸ்திரம்—40. சுபத்ரா கலியாணம்—41. ஜயவீரன்—42. நக்கீரர்—43. வளையாபதி—44. குண்டலகேசி—45. ராணு பிரதாப்—46. பத்மாவதி. 47. தேவகுமாரி 48. ஏழை முருகன்—49. ராமர் தியாகம் 50 மாயமான்—51. ராமதூதன். 52. கலியுகம்—53. கண்காட்சி 54. கனவு 55. காந்தம்—56. சிரிப்பும் எரிப்பும் 57. கலாபவனம். 58. சீர்திருத்தம் 59. சுதந்தரா அல்லது விடுதலை 60. அவதாரம் 61. தாமரைக்குளம். 62. உலகம் 63. ஒற்றையங்க நாடகங்கள்—64. நாடகக்கலை விளக்கம் 65. சகுந்தலம் 66. காமதிலகன் 67. தாமரைக்குளம் முதலிய கதைகள்.

சிறு கதைகள்

68. கதை விருந்து—69. கலிமா முதலிய கதைகள் 70. காலக்கண்ணுடிக் கதைகள்—71. நல்ல குடும்பம்—72. கஸ்தூரி 73. பெரியவாள் கதை—74. குஞ்சுக் கதைகள் 75. மறுமலர்ச்சிக் கதைகள்.

தொடர் கதைகள்

76. கலைக்கோயில்—77. அன்பு நிலையம்—78 சுகுணு—79. இது தான் உலகம்—80. தீப ஜோதி—81. புரட்சி 82. எதிர்காலம் 83. ஏழை படும்பாடு 84. இளிச்சவாயன். 85. அகஸ்தியர் யாத்திரை. 86. பரம சாது 87. அவள் தர்பார் 88, தடபுடல் தாமோதரன். 89. முன்னேற்றம்.

கட்டுரைகள்

90. பைந்தமிழ்ச் சோலை 91. தமிழ் உணர்ச்சி 92. இன்றைய மனிதனும் இனி வரும் மனிதனும் 93. கல்விக் கதிர் 94. அன்பு வழி—95. இந்தி ஏன்? 96. சன்மார்க்க போதினி 97. திருநூல். 98. உலகறிவு. 99. கலையுலகம். நாட்டியக் கலை—நாடகக் கலை—இசைக் கலை.

பெரியார் வரலாறுகள்

100. தமிழ்ப் பெரியார்—தொல்காப்பியர் முதல் பாரதியார் வரையில் தமிழ் மேதாவிகளின் வரலாறுகள். 101. கவிக்குயில் பாரதியார்.

102. வீரவிளக்கு வ. வே. சு. ஐயர். 103. கோபாலகிருஷ்ண பாரதியார், 104. அருணாசலக் கவிராயர்—105. வேதநாயகம் பிள்ளை 106. மகரிஷி தாயுமானுர்—107. அருட்சுடர் வள்ளலார் 108. ஆழ்வார்கள்—109. நாயன்மார்கள்—110. நாவலர் பெருமான்—111. ஸ்ரீநிவாச நாவலர்—112. நமது ராஜாஜி—113. சங்கர விஜயம்—114. ஸ்ரீ ராமானுஜர்—115. மத்வாசாரியார்—116. தியாகராஜா—117. முத்துசாமி தீட்சிதர்—118. சாமாசாஸ்திரிகள். 119. அப்பர்—120. திருவள்ளுவர்—121. உலக விஞ்ஞானிகள்—நியூடன் முதல் மார்கோனி வரையில்—122. ஸ்ரீ ரமண விஜயம்—123. தயானந்த ஜோதி—124. ஸ்ரீ அரவிந்த ப்ரகாசம். 125. வ்ரகவி தாகூர் 126. மகாகவி காளிதாஸன் 127. மகாகவி தாந்தே—128. ஷேக்ஸ்பியர் 129. ஓமர்—130. மகாகவி கம்பன்—யுத்தகாண்ட ஆராய்ச்சி. 131 உலகப் பெரியார் 132. வால்ட் விட்மன் 133. பிரான்ஸிஸ் தாம்ஸன் 134 எமர்ஸன் 135. வில்லியம் பிளேக் 136. அற்புதப் பெண்மணி—மேரி கூரி. 137. சதாசிவ ப்ரம்மம், 138. ராமதீர்த்தர் 139. விவேகானந்தர் 140. பரமஹம்ச லீலை. 141. சிவானந்த ஜோதி—142. மோலியர் 143. மகாகவி ராஸீன்.

ஆராய்ச்சி நூல்கள்

144. திருக்குறளின்பம் 145. சிலம்புச் செல்வம் 146. திருமந்திர விளக்கம் 147 கீதாயோகம்—148. உபநிஷத் ரகசியம் 149. பிரமஞான தீபிகை 150. வேதசாரம் 151. சிவஞான தீபம்—152. தியான மாலை—153. யோகசாதனம்—154. தேவஜீவனம்—155. பூர்ணயோகம்—156. சுத்த சன்மார்க்கம்.

மொழிபெயர்ப்புகள்

157. ஸ்ரீ அரவிந்தரின் அன்னை, 158. யோக தீபிகை, 159. யோகத்தின் அடிப்படை. 160. உத்தர் பாரா பிரசங்கம், 161. யோகத் தொகுப்பு முதலியன. 162. பகவத்கிதை மூலத்துடன் 163. மகா வாக்கியம்.

மாணவர் நூல்கள்

164. இனிய தமிழ் இலக்கணம் 165. கலைச் செல்வம் 166. உடலுறுதி 167. அறிவு நூல் பௌதிக ரசாயன தாவர உயிர் நூல்கள்—168. பாரத வாசகம்—புதிய பாட புத்தகங்கள் பாரதக் குடியரசிற்கும் தமிழரசிற்கும் இசைந்தவை—பாகங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10...178. உலக சரித்திரம்.

தெலுங்கு நூல்கள்

179. சுத்தானந்த க்ருதுலு (தெலுங்கில் இசைப் பாடல்கள்) 180. யோகசித்தி (க. ராமசாமி கவி மொழி பெயர்ப்பு).

இந்தியில்

181. மகாத்மா ராமலிங்கம்—182. பூர்ணயோகம் 183. தர்மசதன் இந்திப் பாடல்களுடன்.

பிரெஞ்சு நூல்கள்

184. Renaissance (100 poems) 185. Vers L'avenir (50) 186. L'Appelle 187. O LIMIERE (50) 188. L'Esprit Chante (50) 189. Sri Aurobindo Le Yogui.

English Works

190 Mahatma Ramalingam 191. Maharshi Tayumanar 192. Alvar Saints 193. Sadasiva Brahman 194. Revelations of Meikandar 195. St. Thyaga Raja 196. St. Valluvar 197. Sri Aurobindo, The Divine Master, 198. The Integral Yoga 199. Yogic culture— 200. Towards Godhood 201. Divine India 202 V.V.S. AYYAR— 203. Gospel of of Perfect Life (Yoga Siddhi) 204. A Spiritual Pilgrim and His diary 205. Epistles of a Seeker. (Collection of Letters) 206. Thus spoke my Heart (Collection of Poems) 207. A Text Book of Yoga. 208. Yogi Shudhanahda (K. S. Ramaswami Sastrigal) (Bharata Shakti story included).

சுயசரித்திரக் குறிப்புகள்

209. ஆத்ம சோதனை விரிவான சுயசரித்திரம்—210. சுத்தானந்தரின் கடிதங்கள், 211. எனது கனவுகள். 212. சுத்தவாசகம்—மணிமொழிகள். சம்பாஷணைகள். 213. சொற்பொழிவுகள்.

போதும் இந்த இருநூற்றைந்து நூல்கள் உலகிற்குப் பயனானால் போதும். காலவெள்ளத்தில் எது நிற்கிறதோ! பாரத சக்தி யோக சித்தி (தமிழ் ஆங்கிலம் இரண்டும்) நின்று நிலவினாலும் போதும். மற்றவெல்லாம் உலகப் பெருமானுக்கே அர்ப்பணம்!

வானக் கருணை தரு முகிலை, வையம் வளர்க்கும் தாயமுதை
தேனைக் குழைத்த தீங்கனியாய்ச் சித்தத் தினிக்கும் சின்மயத்தை
ஞானக் கொழுந்தை சுத்தசக்தி ஞாயிறான தவச் சுடரை
மோனக் குகையின் அருளூற்றை முத்திப் பொருளை நினைவோமே.
தாயின் அன்பு தழைத்திடவே தருணமழைபோல் உதவிடுவோம்
சேயின் உள்ளம் பூண்டிடுவோம், சேர்ந்துவாழப் பழகிடுவோம்
நேய ராகப் பொதுநலமே நேர்மையாகப் புரிந்திடுவோம்
தூய ராக வாழ்ந்திடுவோம் சுத்தநிலையத் தோழர்களே.
நித்தானந்தக் கடலினிலே நீந்தும் அன்புப் படகினைப்போல்
ஒத்தானந்தந் துய்க்கின்ற உண்மை யறிஞர் உள்ளம்போல்
முத்தானந்த முனிவர்கனின் மொழியின் வளருமந்திரம்போல்
சுத்தானந்த சுதந்தரத்தில் வாழ்க உலகத் தோழர்களே.

ஓம் சுத்த சக்தி ஓம் சிவம்!
சிவோஹம்! சிவமயம்! ஓம் சச்சிதானந்தம் ஜயம்!

ஆத்ம சோதனை முற்றிற்று.